நூல் தேட்டம்

[தொகுதி 10]

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பெற்ற
ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய குறிப்புரையுடனான
நூல் விபரப்பட்டியல்

என். செல்வராஜா

வெளியீடு
அயோத்தி நூலக சேவைகள்
&
குமரன் புத்தக இல்லம்
2015

நூலின் தலைப்பு	-	நூல் தேட்டம் (தொகுதி 10)
ஆசிரியர்	-	என். செல்வராஜா
பதிப்பு	-	முதற்பதிப்பு, 28 ஜூன் 2015
வெளியீடு	-	அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் & குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை
அச்சுப்பதிப்பு	-	குமரன் அச்சகம், கொழும்பு - 06
அட்டை வடிவமைப்பு	-	செல்வராஜா கௌதமன்
சர்வதேச தராதர நூல் பதிவெண்	-	ISBN 978-955-659-477-5
பக்கங்கள்	-	xvi, 500
பதிப்புரிமை ©	-	என். செல்வராஜர், 2015
குமரன் வெ.எண்	-	665

Title	-	Nool Thettam (Volume 10) An Annotated Bibliography of 1000 Published Writings in Tamil Language by Sri Lankan Tamils, Home and Abroad.
Compiler	-	N. Selvarajah
Edition	-	First Edition, 28 June 2015
Publishers	-	Ayothy Library Services (48, Hallwicks Road, Luton, Beds, LU2 9BH, United Kingdom) and Kumaran Book House (39, 36th Lane, Colombo - 06, Sri Lanka, E.mail: kumbhlk@gmail.com)
Printers	-	Kumaran Press (Pvt) Ltd. (39, 36th Lane, Colombo - 06, Sri Lanka, Tel.: 011 2364550)
Cover Design	-	Selvarajah Gauthaman
ISBN	-	978-955-659-419-5
Pages	-	xvi, 500
Price	-	£ 15.00, Euro 20.00, SLRs 2000.00

© Copyright 2015 by N.Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

நன்றி

நூல்தேட்டத்தின் பத்தாவது தொகுதியை உங்கள் கரங்களில் இன்று கையளிப்பதற்குத் தோன்றாத் துணையாக இருந்த அனைவருக்கும் முதலில் நன்றிகூறுவது என் தலையாய பணியாகும்.

நூல்தேட்டம் அன்று என் மனதில் கருக்கொண்ட வேளை, தன் பல்கலைக்கழக வாழ்வின் நெருக்கடிகளுக்குள்ளும் ஓடித்திரிந்து நூல்களைத் தேடித்தந்து என்னை ஆர்வத்துடன் செயற்படவைத்து மகிழ்ந்துவிட்டு இன்று எம்மிடையே இல்லாது இளமையிலேயே காலன் வசப்பட்டு, என்றும் இளமையாக எங்கள் மனதில் நிலை கொண்டுவிட்ட எம் இனிய மருமகள் சுகந்தியையே எப்பொழுதும் முதலில் நினைவுகூர்வதுண்டு.

பத்தாவது தொகுதிக்கான தேடலில் இறங்கியிருந்த வேளையில் தமது நூற்சேர்க்கையைப் பார்வையிட மனமுவந்து அனுமதியளித்தவர்கள், தமது நூல்களை பதிவின்பொருட்டு, அன்பளிப்பாக வழங்கியவர்கள், எனது பணிகள் பற்றிய கட்டுரைகளை எழுதி தாயக, புகலிட ஊடகங்களில் பதிவாக்கியவர்கள், எழுத்தாளர்களுடனான ஒன்றுகூடல்களை தன்னார்வ முனைப்புடன் ஒழுங்கு செய்தவர்கள் என்று இப்பட்டியல் நீளும். இவர்கள் அனைவருக்கும் என்உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒன்பதாவது தொகுதியை உரியகாலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்ததுடன், அத்தொகுதியை இலங்கையில் பரவலாக அறிமுகம் செய்யும் பொறுப்பினையும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல அதிபர் கணேசலிங்கம் குமரன் ஏற்றிருந்தார். பத்தாவது தொகுதியையும் அச்சேற்றி விநியோகித்துத் தரும் பொறுப்பினையும் அவரே ஏற்றிருந்தார். அவருக்கு என் நன்றி.

ஒன்பதாவது தொகுதிக்கான நூல்தேடலுக்கான எனது இலங்கை, இந்தியப் பயணங்களின் இரு வாரங்கள் வரையில் பல்கலைக்கழக, தனியார் நூலகங்களிலும், பதிப்பகங்களிலும் தமிழ்ச் சேர்க்கைகளைப் பார்வையிட்டு அரிய பல ஈழத்து நூல்களைப் பதிவுசெய்ய முடிந்தது. யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் சேர்க்கைகளே இத்தொகுப்பில் முக்கிய இடம் வகிக்கின்றது. யாழ்ப்பாணப் பொது நூலகச் சேர்க்கையிலிருந்து அரிய பல நூல்களைப் பார்வையிட்டுப் பதிவுசெய்வதற்கு மனமுவந்து அனுமதியளித்த பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரன் அவர்களுக்கும் அவரது நூலகக் குடும்பத்தினருக்கும் முதலில் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளேன். யாழ்ப் பாணப் பொது நூலகத்தை நேரடியாகப் பயன்படுத்தமுடிந்த அந்தக் குறுகிய நாட்களில் அதிகளவில் நூல்களைப் பதிவுசெய்ய உதவியளித்த நூலகவியல் துறை மாணவி ஜெட்சினி அவர்களுக்கும், அவரது தொடர்பினை ஏற்படுத்தித்

தந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கல்பனா சந்திரசேகருக்கும் எனது நன்றிகள்.

தனிப்பட்டமுறையில் அக்கறையுடன் அவ்வப்போது மலையக வெளியீடு களைத் திரட்டித் தந்துவரும் நண்பர் அந்தனி ஜீவாவுக்கும் எனது நன்றிகள்.

தாயகத்திலும், புகலிடத்திலும் காலத்துக்குக் காலம் எனது நூல்தேட்டம் தொகுப்பு முயற்சிகளுக்கு ஆதரவான செய்திகளைப் பிரசுரித்தும், விமர்சனக் கட்டுரைகளை வெளியிட்டும் எனக்கு ஆதரவை வழங்கிவரும் சிறுசஞ்சிகை ஆசிரியர்களுக்கும், தேசிய, பிராந்தியப் பத்திரிகையாளர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது வாழ்வின் பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிடும் நூல்தேட்டம் தொகுப்புக் கடமைகளின்போது எமது குடும்பச்சுமைகளை முழுமையாகத் தாங்கி என்னைச் சுதந்திரமாக இயங்கவிட்டதுடன் எனக்குத் துணையாகவிருந்து நூலாக்கக் கடமைகளிலும் முடிந்தவரை உதவிவரும் என் அன்புத் துணைவி விஜிக்கு நன்றி செலுத்தத் தவறினால் மிக முக்கியமான பதிவொன்றினை இங்கு மேற்கொள்ளத் தவறியவனாவேன். குடும்பத்தின் நிதி நிலைமையை மிகச் சிக்கனமாகக் கையாண்டு ஒவ்வொரு நூல்தேட்டம் தொகுதிக்கும் தேவையான மேலதிக நிதியை சேமித்து வழங்கும் இமாலயப்பணியும் இவருடையதாகும்.

இறுதியாக, நிறுவனரீதியான நிதியுதவிகள் ஆதரவுகள், எதுவுமின்றி, தனிமனிதமுயற்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்பதிவின் அவசியத்தையும், ஆழத்தையும் புரிந்துகொண்டு, இந்நூலைக் கொள்வனவு செய்து எனது முயற்சியின் நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தங்களாலான பங்களிப்பை நல்கிவரும் இனிய தமிழ் உறவுகளுக்கு என் மனம் கனிந்த நன்றிகள். உங்கள் ஆதரவில் நம்பிக்கைவைத்து, நூல்தேட்டத்தின் பதினொராவது தொகுதியுடன் விரைவில் உங்களைச் சந்திப்பேன் என்ற உறுதியுடன் விடை பெறுகிறேன்.

என். செல்வராஜா
28.6.2015

முன்னுரை

நூல்தேட்டம் (ஓர் அறிமுகம்)

ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியலான நூல்தேட்டத்தின் முதலாவது தொகுதி 2002இலும், இரண்டாவது தொகுதி 2004இலும், மூன்றாவது தொகுதி 2005இலும், நான்காவது தொகுதி 2006இலும், ஐந்தாவது தொகுதி 2008 இலும், ஆறாவது ஏழாவது தொகுதிகள் 2011இலும், எட்டாவது தொகுதி 2012இலும், ஒன்பதாவது தொகுதி 2014இலும் வெளியிடப்பட்டன. அதன் தொடர்ச்சியான பத்தாவது தொகுதி இதுவாகும். இதில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களினதும், வெளியீட்டாளர்களினதும் ஆயிரம் நூல்கள் பற்றிய அடிப்படை நூலியல் குறிப்புகளும் அதனையடுத்து நூல் பற்றிய சிறு அறிமுகக் குறிப்பும் இடம்பெற்றுள்ளன. தொடர் இலக்கங்கள் முதலாவது தொகுதி யிலிருந்து தொடர்ச்சியாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில் பத்தாவது தொகுதியில் இடம்பெறும் நூல்களுக்கு 9001இலிருந்து 10000வரை தொடரிலக்க மிடப்பட்டுள்ளன.

தொகுப்பும் தவிர்ப்பும்

இது ஒரு தேர்ந்த நூற்பட்டியலன்று. இங்கு பட்டியலாக்கப்பட்டுள்ள தனி நூல்கள் (Monographs) எவையும் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படவில்லை. இன்று பார்வையிடக்கூடிய ஈழத்துத் தமிழ் நுல்கள் அனைத்தையும், ஒரு தொகுதிக்கு 1000 நூல்கள் என்ற எண்ணிக்கையில் பட்டியலிடுவதே நூல் தேட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். வெளியீட்டின் பௌதிகத் தன்மை கருதி சில பிரசுரங்கள் நூல்தேட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதிகள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள், இறுவெட்டுகள் என்பன இத்தொகுப்பில் சேர்க்கப்படவில்லை.

பெரும்பான்மையான கல்வெட்டுகள், ஞாபகார்த்த மலர்கள், சஞ்சிகைகள், என்பனவும் இத்தொகுதியில் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆயினும், தனி ஆவண மாகக் கருதும்வகையில் வெளியிடப்பட்டிருக்கும் சஞ்சிகைகளின் சிறப்பு மலர்கள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. மேலும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் தனிநூலின் வகைக்குள் அடங்கக்கூடியதான கனதியான அம்சங்களுடன் வெளிவந்திருப்பதால் அவற்றையும் இத்தொகுதியில் சேர்த்துக் கொண்டுள்ளோம்.

இதில் தொகுக்கப்பட்டுள்ள நூல்கள் எவ்வித கால எல்லைகளுக்கும் வரையறுக்கப்படவில்லை. ஒரு நூலின் பின்னைய பதிப்புகள் வெளிவரும்போது

அவை புதுக்கியோ, சுருக்கியோ, வெளிவரும் வாய்ப்பிருப்பதாலும், முற்றிலும் வேறான நூலியல் தகவல்களை அவை கொண்டிருப்பதாலும் குறித்தவொரு நூலின் பல்வேறு பதிப்புகளும் இங்கு ஒரே பதிவிலக்கத்தின் கீழ் இடம் பெறுகின்றன.

முன்னைய பதிவிலக்கத்தைப் பெற்ற மீள்பதிப்புக்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

பதிவுகளின் ஒழுங்கமைப்பு

நூல்தேட்டம் ஒரு உசாத்துணை நூலாகும். ஒரு நூலைப் பற்றிய நூலியல் தகவல்களைக் குறுகிய நேரத்தில் வாசகர் கண்டறிய வகைசெய்யும் வண்ணம் இத்தொகுதி மூன்று பிரிவாகப் பதியப்பட்டுள்ளது.

முதற்பிரிவில், நூல் பற்றிய பிரதான பதிவுகள் பாடஒழுங்கில் வகைப் படுத்தப்பட்டு தொடரெண்கள் மூலம் அடையாளமிடப்பட்டுள்ளன. பாட வாரியாக ஒரு நூலைத்தேடும் வாசகர் இப்பிரிவின் மூலம் பயனடைவர்.

இரண்டாவது பிரிவு, தலைப்பு வழிகாட்டியாகும். முதற்பகுதியில் நூல்கள் பாடவாரியாக முதலில் ஒழுங்குபடுத்தப்பட்டு, பின்னர் அகர வரிசையில் காணப்படுவதால் ஒரு நூலின் தலைப்பைக் கொண்டு நூலைத் தேடவிழையும் வாசகர் இரண்டாவது பிரிவில் அகரவரிசையில் காணப்படும் தலைப்பு வழிகாட்டியின் வாயிலாக நூலின் தொடர் இலக்கத்தைக் கண்டறிந்து முதற்பகுதியில் உள்ள பிரதான பதிவைப் பார்வையிடமுடியும். இங்கு தலைப்புக்கள் அகரவரிசை எழுத்தொழுங்கில் அல்லாது சொல்லொழுங்கிலேயே அகரவரிசைப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

ஆசிரியர், பதிப்பாசிரியர், தொகுப்பாசிரியர், மூல ஆசிரியர் ஆகியோரின் விபரங்களைக் கொண்டு ஒரு நூலைத்தேடும் வாசகர் மூன்றாவது பிரிவின் மூலம் பயனடைவர். இங்கு ஆசிரியர் அகர வரிசையில் நூல்களின் தொடர் எண்களைக் கண்டறிந்து அதன் மூலம் தான் தேடும் நூலைச் சென்றடைய முடியும். ஆசிரியர் அகரவரிசையில் புனைபெயர்களும் இடம்பெறுகின்றன. ஒரு நூலாசிரியர் இயற்பெயரிலும் புனைபெயரிலும் நூல்களை எழுதுவதால் புனைபெயரின் கீழ் நூலைத்தேடும் வாசகர் ஆசிரியரின் இயற்பெயரிலும் அவற்றைத் தேட உதவும் வகையில், பார்க்க, மேலும் பார்க்க போன்ற வழிகாட்டி அம்சங்கள் தேவை கருதிச் சேர்க்கப்பட்டுள்ளன. இரு ஆசிரியர்கள் ஒரே புனைபெயரில் வலம் வருவதையும் இங்கு காணமுடிவதால் புனைபெயரில் நூலைத்தேடும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும். வாசகரின் தேடுகை நேரத்தை குறைக்கும் வகையில் புனைபெயரிலும் இயற்பெயரிலும் எழுதும் ஆசிரியரின் பிரபல்யமான ஒரு பெயரின்கீழ் மட்டும் இயன்றவரை அவரது நூல்களின் தொடர்எண்களைக் குறித்துள்ளோம்.

நூலியல் பதிவுகள்

பிரதான பகுதியில் நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு, உப தலைப்பு, அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வ உரித்துடைய ஆசிரியர், தொகுப்பாசிரியர், பதிப்பாசிரியர் விபரங்கள், வெளியீட்டு விபரம், பதிப்பு விபரம், ஆகியனவும் அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்ட நூலின் குறித்த பதிப்பிற்கான அச்சகத்தின் விபரமும் தரப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறுமிடத்து சர்வதேச தராதர நூல் எண்களும் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

ஆசிரியர் பற்றிய தகவலில் ஆசிரியரின் இயற்பெயர், புனை பெயர் பற்றிய குறிப்புகளும் அறியமுடிந்தால் தரப்பட்டுள்ளன. பதிவுக்குள்ளாகும் நூலின் உரித்தாளர் மூலநூலாசிரியராக இல்லாதவிடத்து, அவரின் பங்களிப்புப் பற்றிய தகவல் அவரது பெயரையடுத்து அடைப்புக்குறிக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலின் வெளியீட்டாளர் பற்றிய தகவல் குறிப்பில் வெளியீட்டாளரின் இயங்குதளம், வெளியீட்டகத்தின் பெயர், முகவரி என்பன குறிப்பிடப் பட்டுள்ளன. ஒரு வெளியீட்டகம் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளைப் பரப்பியிருக்கும் வேளை, பதிவுக்குள்ளாகும் நூலில், குறிப்பாக ஒரு இயங்கு தளத்தை மட்டும் வெளிப்படுத்தியிருந்தாலன்றி, பதிவுத்தேவை கருதி, நூல் அச்சிடப்பட்ட நாட்டில் உள்ள வெளியீட்டகத்தின் கிளை அமைந்த ஊரே அதன் இயங்குதளமாகப் பதியப்பட்டுள்ளது. ஆசிரியரே வெளியீட்டாளராகவும் இருக்கும் போது, நூலில் காணும் ஆசிரியரின் முகவரி வெளியீட்டக முகவரியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

நூலின் பதிப்பு விபரத்தில், பதிவுக்குப் பெறப்பட்ட நூலின் பதிப்பு விபரமும், அப்பதிப்பு வெளியிடப்பட்ட திகதியும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்ட நூல் முதற்பதிப்பு அல்லாதவிடத்து முன்னைய பதிப்புகள் பற்றிய திகதி விபரங்களும் நூலில் தரப்பட்டவாறாகப் பதியப்பட்டுள்ளன. சில வெளியீட்டாளர்கள், மறுபதிப்பு நூல்களையும் முதற்பதிப்பாகக் குறிப் பிட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வெளியீட்டாளரின் முதற் பதிப்பாகவே அது கொள்ளப்பட வேண்டியுள்ளது. இவ்விபரங்கள் நூலியல் நேர்மை கருதி, பதிப்பு நூலில் குறிப்பிடப்படவேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை இங்கு வலியுறுத்துதல் அவசியமாகின்றது. பெரும் பான்மையான தமிழக மீள்பதிப்புக்களில் இத்தவறுகள் காணப்படுகின்றன.

நூலின் அச்சக விபரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது. இந்த விபரம் பதிவுக்குரிய நூலின் குறித்த பதிப்புக்கு மட்டும் உரியதாகும் என்பதும் கவனத்துக்குரியது.

நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதிகத் தகவல்களாகும். இதில் நூலின் பக்கங்கள், சிறப்பம்சங்கள், விலை, அளவு, தராதர எண் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நூலின் பக்கங்கள் மூன்று வகையில் குறிப்பிடப்படுகின்றன. அவை ரோமன் இலக்கமிடப்பட்ட பக்கங்கள், இலக்கமிடப்படாத பக்கங்கள், அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்கள் என்பனவாகும். ரோமன் இலக்கமும், அரேபிய இலக்கமும் இடப்பட்ட பக்கங்களின் எண்ணிக்கை அவ்வவ்விலக்கங்களாலேயே சுட்டப்பட்டுள்ளன. இலக்கமிடப்படாத பக்கங்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன. (உதாரணம்: VII, (12), 243 பக்கம்). பெரும்பான்மையான தமிழ் நூல்களில் முகவுரைப் பக்கங்கள் இலக்கமிடப்படாவிடினும் அவை பின்னர் அரேபிய இலக்கங்களாகத் தொடர்கின்றன. அத்தருணங்களில் அவை அரேபிய இலக்கமிடப்பட்ட பக்கங்களாகவே கருதப்பட்டுள்ளன.

பக்கங்கள் பற்றிய குறிப்பை அடுத்து அமைவது சிறப்பம்சங்களாகும். இங்கு வரைபடங்கள், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், தகடுகள் பற்றிய குறிப்புகள் காணப்படும். விலை விபரம் காலவரையறைக்குட்பட்டதாக அமைவதாயினும் வரலாற்றுத்தேவை கருதி மட்டுமே நூல்தேட்டத்தில் அவை சேர்க்கப்பட்டுள்ளது. நூலில் குறிப்பிடப்படும் விலை அந்நாட்டு நாணய அலகின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவுக்கு மாத்திரம் நாடு குறிப்பிடப்படவில்லை. இது ஒரு வர்த்தக நூற்பட்டியல் இல்லையென்பதால் தேவைப்படுமிடத்து நூலின் தற்போதைய விலை பற்றிய தகவலை அதன் விற்பனையாளர்களிடமே வாசகர் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

நூலின் பௌதிக விபரங்களில் அடுத்ததாக வருவது, நூலின் அளவாகும். இது சதம மீற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் இறுதியாக அமைவது நூலுக்கான சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பற்றிய தகவலாகும். ஈழத்துத் தமிழ் நூல்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய நூல்களே இவ்விலக்கத்தைத் தாங்கி வெளிவந்திருப்பினும் அதிகரித்து வரும் அதன் முக்கியத்துவம் கருதி இவ்விலக்கம் இப்பிரிவில் இடம்பெறுகின்றது. எழுத்தாளர்கள், வெளியீட்டாளர்களின் பயன்பாடு கருதி ISBN பற்றிய விரிவான கட்டுரையொன்று முதலாவது தொகுதியில் xiv-xviii பக்கங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நூலியல் தகவலின் மூன்றாவது, இறுதிப்பிரிவு நூல்பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இது ஒரு திறனாய்வுக் குறிப்பாகவோ, விளம்பரமாகவோ அல்லாது நூலினதும் நூலாசிரியரினதும் சிறு அறிமுகமாக மாத்திரம் அமைவது குறிப்பிடத்தக்கது. அரியநூல்களின் வைப்பிடம் பற்றிய குறிப்பு 3வது தொகுதியிலிருந்து வழங்கப்படுகின்றது. உதாரணமாக பெறுதற்கரிய சில ஈழத்து நூல்கள் பிரித்தானிய நூலகங்களிலும், மலேயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல்துறையிலும் காணமுடிந்தது. அவை பற்றிய இருப்பு விபரம் இப்பகுதியில் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

பகுப்பாக்கம்

இந்நூலின் பிரதான பகுதியில் நூல்கள் பாட ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன. இதற்கென நாம் தேர்ந்தெடுத்துள்ள பாட ஒழுங்கு வரிசை, டூவியின் தசாம்சப் பகுப்பு முறையாகும். (Dewey Decimal Classification Scheme) தென்னாசியாவிலும் ஐரோப்பாவிலும் நூலகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் இப்பகுப்பு முறை தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமானதொன்றென்ற வகையில் இப்பகுப்பாக்கத்தைப் பின்பற்றத் தீர்மானித்தோம். இப்பகுப்பாக்கத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று பிராந்தியத் தேவைகருதி இப்பகுப்பு முறையில் தேவைப்படும் மாற்றத்தைப் புகுத்தமுடியும் என்பதாகும். ஈழத்துத் தமிழ் நூல்களின் பகுப்புத்தேவை கருதி இப்பகுப்பு முறை சில மாற்றங்களுடன் பயன்படுத்தப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பகுப்பாக்கம் அறிவுத்தேட்டத்தை முதலில் பத்துப் பெரும்பிரிவுக்குள் அடக்குகின்றது. பின்னர் ஒவ்வொரு பெரும்பிரிவும் பத்து உபபிரிவுகளாகின்றன. அந்த உப பிரிவுகள் மேலும் பத்து உபபிரிவுகளாகின்றன. இத்தகைய ஒரு தசாம்சப்பகுப்பு முறை பற்றிய விரிவான விளக்கத்தை இங்கே தரமுடியாவிடினும் வாசகரின் தேவை கருதி இந்நூலில் பயன்படுத்தும் பகுப்புத் திட்டம் சுருக்கமாக இந்த அறிமுகப் பகுதியையடுத்துத் தரப்பட்டுள்ளது.

வாழ்க்கை வரலாறு

பகுப்பாக்க ஒழுங்கில் இறுதிப்பிரிவாக அமைவது வரலாறாகும். இதில் பிரதேச வரலாற்றுடன், வாழ்க்கை வரலாற்று நூல்களும் ஞாபகார்த்த மலர்களும் இடம்பெறுகின்றன. பகுப்பாக்கத்தின் போது பன்முகத்தோற்றம் பெற்ற பெரியார்களின் வரலாற்று நூல்களைத் தரம்பிரிக்கும்போது பிரதான பதிவை ஏதாவது ஒரு பிரிவுக்குள் பதிய வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டது. ஒருவரது ஆளுமை எத்துறையில் பிரகாசித்தது என்பதை விட குறிப்பிட்ட நூலில் அவரது பன்முகப் பட்ட ஆளுமையின் எப்பகுதி ஆய்வுக்கெடுக்கப் பட்டது என்ற அடிப்படையிலேயே அவரது நூலுக்கான பகுப்புப் பிரிவு தேர்ந்தெடுக்கப்பட்டது. அதனால் இப்பிரிவைப் பார்வையிடும் வாசகர்கள் தயவு செய்து பல்வேறு வாழ்க்கை வரலாற்றுப் பிரிவுகளிலும் கண்ணோட்டம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்கள்

இரண்டாம் தொகுதியிலிருந்து மேலதிக அம்சமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பகுதி இதுவாகும். இன்றைய ஈழத்து இனப்பிரச்சினையின் சர்வதேச மயப்படுத்தல் காரணமாக ஈழத்தமிழரல்லாத பன்நாட்டவர்களிடையே உருவாகிவரும் ஈழத்தமிழர் சிக்கல் பற்றிய தேடலின் விளைவாக, தமிழகத்திலும் மலேசியாவிலும் ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர் பற்றிய நூல்களின் வரவு

அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இதன்விளைவாக, நூல்தேட்டத்தில் இவ்வாக்கங் களுக்கான ஆவணமாக்கலும் அவசியம் என்று கருதியதால், தனியானதொரு பிரிவாக அவை இடம்பெறுகின்றன.

முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்கள்

நூல்தேட்டம், ஈழத்தமிழரின் நூலியல் முயற்சிகளில், இயன்றவரை நிறைவான ஆவணமாக்கலையே மேற்கொள்ள விழைகின்றது. முன்னைய தொகுதியில் இடம்பெற்ற ஒரு நூல் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டால், அதுபற்றிய தகவலையும் இத்தொகுதியில் தந்திருக்கின்றோம். தொகுப்பு முயற்சியில் குழப்பங்களைத் தவிர்க்கும் பொருட்டு இவை கொள்கையளவில் புதிய பதிவாகக் கருதப்படமாட்டாது. இதனால் அப்பதிவிற்குத் தனியான தொடர் இலக்கத்தை வழங்காது, அதை பின்னிணைப்பாகச் சேர்த்துள்ளோம். வாசகர்களின் பயன்கருதி குறிப்பிட்ட இந்நூற்பதிவின் மூலப்பதிப்பின் தொடர் இலக்கத்தையும் குறிப்புப் பகுதியில் தந்துள்ளோம்.

நிறைவுக் குறிப்பு

நூல்தேட்டத்தின் முன்னைய தொகுதிகளை எமது சக்திக்கெட்டியவரை சர்வதேச நூற்பட்டியல்களின் சிறப்பம்சங்களைக் கூர்ந்து கவனத்துக்கெடுத்துத் தொகுத்திருந்தோம். இத்தொகுதிகளில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, காத்திரமான ஆலோசனைகளைப் பலர் வழங்கியிருந்தனர். அவற்றில் நாம் ஏற்றுக்கொண்ட பல விடயங்களை இத்தொகுதியிலும் சேர்த்திருக்கின்றோம். அடுத்து வரவுள்ள எட்டாவது தொகுதி மேலும் சிறந்ததாக அமைய உங்கள் மேலான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இத்தொகுதி வர்த்தக நோக்கமற்றதொரு தனிமனித முயற்சியாகும். நிறுவன ரீதியில் மேற்கொள்ளப்படவேண்டிய இத்தகைய உசாத்துணை வெளியீட்டு நடவடிக்கைகள் தனிமனித முயற்சியாக மலரும்போது நிதி, காலம், நிபுணத்துவ உதவி என்பன எப்பொழுதும் வரையறைக்குட்பட்ட தாகவே அமைகின்றன. இதை மனதில் கொண்டு, இத்தொகுதியின் பரந்துபட்ட அறிமுகத்திற்கும் விநியோகத்திற்கும், விற்பனைக்கும் உங்களாலான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று நம்புகின்றோம். இதன் விற்பனை மூலம் பெறப்படும் நிதி எமது அடுத்த தொகுதியின் துரித உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்க்கின்றோம். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள நூலகங்களையும் நூல்தேட்டத்தின் அனைத்துத் தொகுதிகளும் சென்றடை வதற்குத் தங்களாலான பங்களிப்பினை நல்குவதைத் தார்மீகக் கடமையாகக் கொள்வீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

நூல்தேட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வகுப்புப் பிரிவு
(டுவி தசாம்சப் பகுப்பை அடிப்படையாகக் கொண்டது)

பிரதான பிரிவுகள்

000-099	*பொதுப்பிரிவு*
100-199	*மெய்யியல்துறை*
200-299	*சமயங்கள்*
300-399	*சமூக விஞ்ஞானங்கள்*
400-499	*மொழியியல்*
500-599	*தூய விஞ்ஞானங்கள்*
600-699	*பிரயோக விஞ்ஞானம், தொழில்நுட்பம்*
700-799	*கலைகள், நுண்கலைகள்*
800-899	*இலக்கியம்*
900-999	*புவியியல், வரலாறுகள்*

விரிவான பிரிவுகள்

000 பொதுப்பிரிவு

000	*பொது அறிவு 9001-9012*
001	*கணினியியல் 9013-9014*
010	*நூலியல், நூல்விபரப்பட்டியல் 9015*
020	*நூலகவியல், தகவல் விஞ்ஞானம் 9016-9019*
050	*பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள் 9020*
051	*பருவஇதழ் சிறப்பிதழ்கள் 9021-9027*
070	*ஊடகவியல், வெளியீட்டுத்துறை 9028-9029*

100 மெய்யியல்துறை

100	*மெய்யியல் (தத்துவவியல்) 9030*
150	*உளவியல் 9031-9035*
158.1	*மானிட மேம்பாடு 9036-9042*

158.3 உளவளத்துணை (counseling) *9043-9044*
160 தர்க்கவியல் (அளவையியல்) *9045-9062*
170 ஒழுக்கவியல் *9063-9070*
180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்) *9071-9105*
190 சோதிடம், வானசாஸ்திரம் *9106-9109*

200 சமயங்கள்

220 கிறிஸ்தவம் *9110-9127*
220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள் *9128-9129*
294.3 பௌத்தம் *9130-9131*
294.5 இந்து சமயம் *9132-9167*
294.5(1) இந்து சமய பாடநூல்கள் *9168-9186*
294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள் *9187-9198*
294.5(4) பக்தி இலக்கியங்கள் *9199-9227*
297 இஸ்லாம் *9228-9241*

300 சமூக விஞ்ஞானங்கள்

301 சமூகவியல் *9242-9251*
301.1 பண்பாடு *9252-9258*
305 மானிட சமத்துவம் *9259*
305.31 ஆண்கள், ஆண்நிலைவாதம், ஆணாதிக்கம் *9260-9261*
305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம் *9262-9272*
305.5 சாதியம் *9273*
320 அரசறிவியல் *9274-9276*
324 தேர்தல்கள் *9277-9278*
327 சர்வதேசத் தொடர்புகள் *9279-9280*
330 பொருளியல் *9281-9288*
331.21 சம்பளம் *9289*
335 சோசலிசம், அது தொடர்பான பிரிவுகள் *9290*
335.4 கம்யூனிசம் *9291*
336 நிதியியல், வங்கியியல் *9292*
338 பொருளாதார வளங்கள், மீன்வளம் *9293*
340 சட்டவியல் *9294-9298*

340.59 இஸ்லாமியச் சட்டங்கள் *9299*
342 அரசியலமைப்புச் சட்டம் *9300-9304*
350 பொது நிர்வாகம் *9305*
360 சமூக சேவை நிறுவனங்கள் *9306*
363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல் *9307-9309*
370 கல்வியியல் *9310-9327*
370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள் *9328-9332*
380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து
381 வர்த்தகம் *9333*
391.7 அணிகலன்கள், உடல் அலங்காரங்கள் *9334*
392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள் *9335-9338*
395 நாட்டார் வழக்காற்றியல் *9339*
398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துகள் *9340-9350*

400 மொழியியல்

491.2 சமஸ்கிருத மொழி *9351-9352*
491.48 சிங்கள மொழி *9353-9354*
494.8 தமிழ் மொழி *9355-9364*
494.8(1) தமிழ் இலக்கணம் *9365-9378*
494.8(2) தமிழ்ப் பாடநூல்கள் *9379-9390*

500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம் *9391-9392*
510 கணிதம் *9393-9394*
519 பிரயோக கணிதம் *9395*
520 வானியல் விஞ்ஞானம் *9396*
527 விண்வெளிப்பயணம் *9397*
530 பௌதிகம் *9398-9401*
537 இலத்திரனியல் *9402-9404*
540 இரசாயனம் *9405-9412*
550 புவியியல் விஞ்ஞானம்
551 சூறாவளி *9413*
551.47 சுனாமி *9414*

570 *உயிரியல் 9415-9419*

580 *தாவரவியல் 9420-9426*

590 *விலங்கியல் 9427-9434*

600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

610 *மருத்துவம் 9435*

612 *உடற்கூற்றுத் தொழிலியல் 9436*

613 *பொது உடல்நலவியல் 9437-9438*

613.7 *யோகக்கலை 9439-9441*

614 *பொதுச் சுகாதாரம் 9442-9445*

615.942 *நஞ்சூட்டலும் சிகிச்சைமுறையும் 9446*

616 *நோய்கள் 9447-9452*

618 *பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம் 9453-9454*

618.92 *குழந்தைகள், சிறுவர் மருத்துவம் 9455*

618.97 *மூப்பியல் மருத்துவம் 9456-9457*

619 *கீழைத்தேய மருத்துவம் 9458*

619.1 *சித்த மருத்துவம் 9459-9470*

630 *விவசாயமும் அது சார்ந்த துறைகளும் 9471-9476*

636.5 *கோழிப்பண்ணை 9477-9478*

642 *உணவும் பரிமாறலும் 9479-9483*

646 *தையற் கலை, உடையலங்காரம் 9484-9485*

646.7 *உடல் வாகு, சிகையலங்காரம் 9486*

649 *குழந்தைப் பராமரிப்பு 9487*

650 *முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம் 9488-9492*

657 *கணக்கியல் 9493-9511*

700 கலைகள், நுண்கலைகள்

730 *சிற்பக்கலை 9512*

791 *நாட்டியக் கலை 9513*

792 *அரங்கியல், நாடகக்கலை 9514-9522*

793 *திரைப்படக்கலை 9523*

796 *உடற்பயிற்சி, விளையாட்டுகள் 9524*

800 இலக்கியம்

801.(1)	*சிறுவர் பாடல்கள், கவிதைகள் 9525-9536*
801.(2)	*சிறுவர் நாடகங்கள் 9537-9539*
801.(4)	*சிறுவர் சிறுகதைகள் 9540-9545*
801.(5)	*சிறுவர் நாவல்கள் 9546-9550*
801.(6)	*சிறுவர்க்கான கட்டுரைகள் 9551-9555*
801.(7)	*சிறுவர்க்கான பலவின நூல்கள் 9556*
894.8(1)	*தமிழ்க் கவிதைகள் 9557-9643*
894.8(2)	*தமிழ் நாடகங்கள் 9644-9650*
894.8(3)	*தமிழ்க்கவிதை / இசை நாடகங்கள்-காவியங்கள் 9651-9659*
894.8(4)	*தமிழ்ச் சிறுகதைகள் 9660-9715*
894.8(5)	*தமிழ் நாவல்கள், குறுநாவல்கள் 9716-9739*
894.8(61)	*தமிழ் இலக்கியப் பாடநூல்கள் 9740-9768*
894.8(62)	*இலக்கிய வரலாறுகள் 9769-9774*
894.8(63)	*சங்க இலக்கியங்கள் தொடர்பானவை 9775-9785*
894.8(64)	*சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள் 9786-9819*
894.8(65)	*இலக்கிய நூல் தொகுப்பும், மீள்பதிப்பும் 9820*
894.8(7)	*பலவினத் தொகுப்பு 9821-9825*
899	*பிறமொழி இலக்கியங்கள்*
899.(1)	*பிறமொழிக் கவிதைகள் 9826-9827*
899.(2)	*பிறமொழி நாடகங்கள் 9828-9830*
899.(4)	*பிறமொழிச் சிறுகதைகள் 9831-9832*
899.(5)	*பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள் 9833-9834*

900 புவியியல், வரலாறுகள்

901	*பொது வரலாறுகள், பாடநூல்கள் 9835-9840*
910	*பொதுப் புவியியல் 9841-9854*
910.(1)	*அபிவிருத்திப் புவியியல் 9855-9857*
911	*பிரயாண நூல்கள், வழிகாட்டிகள் 9858-9859*
912	*தேசப்படங்கள் 9860*
915	*பிரதேசப் புவியியல் 9861*
920	*வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள் 9862*
920.01	*துறைசாரா வாழ்க்கை வரலாறுகள் 9863*

920.1 *ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர் 9864-9867*

922 *சமயத் தலைவர், சிந்தனையாளர் 9868-9879*

923 *சமூகவியல்துறை சார்ந்தோர் 9880*

923.1 *பெண்ணியவாதிகள் 9881*

923.2 *அரசியல் துறையினர் 9882-9888*

923.4 *சட்ட அறிஞர்கள் 9889*

923.6 *சமூக சேவகர்கள் 9890-9891*

923.61 *விடுதலைப் போராளிகள் 9892*

923.7 *கல்வியியலாளர்கள் 9893-9898*

924 *மொழியியலாளர்கள் 9899-9900*

926 *பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள் 9901-9903*

927 *கலைஞர்கள் 9904*

927.92 *நாடகக் கலைஞர்கள் 9905-9906*

928 *இலக்கிய அறிஞர்கள், புலவர்கள் 9907-9927*

940 *ஐரோப்பிய வரலாறு 9928*

954.93 *இலங்கை வரலாறு 9929-9936*

954.93(1) *இலங்கை வரலாறு-பாடநூல்கள் 9937-9944*

954.93(2) *இலங்கை இனப்பிரச்சினை வரலாறு 9945-9962*

954.93(3) *இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள் 9963-9979*

954.93(4) *பிரதேச வரலாறு 9980-9993*

954.93(5) *தொல்லியலாய்வு 9994*

972.91 *கியூபா வரலாறு 9995*

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

999 *பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள் 9996-10000*

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு 10A01-10A24

000 பொதுப்பிரிவு

000 பொது அறிவு

9001

அறிவுக் களஞ்சியம். *அ.சி.உதயகுமார். மானிப்பாய்: அ.சி.உதயகுமார்,* Tamil Institute of Strategic Studies, Tamil Institute of Strategic Studies, *உடுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (யாழ்ப்பாணம்: அருண் பிரிண்டர்ஸ்).*

ix, *88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x14 *சமீ.*

வட பகுதியின் பொருளாதாரத் தடையால் பத்திரிகைத்தட்டுப்பாடு நிலவிய வேளையில் பயிற்சிக் கொப்பித்தாளைப் பயன்படுத்தி வெளியிடப்பட்ட நூல். மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோம், மனதில் உறுதி வேண்டும், ஜெயராஜ் சொன்ன கதை, உங்கள் சந்தேகம், சுப்பர்சோனிக், டென்னிஸ் விளையாட்டுப் பற்றி, தத்துவம் தந்த ஆக்கிமெடீஸ், என்னைப் பின்பற்றி வாருங்கள் - கரிபோல்டி, பெற்றோலிய அரசியல், புவியின் மரணம், நாம் விடும் மூச்சு, ஐபல் கோபுரம், சுத்தமான நகர் சிங்கப்பூர், உருளைக் கிழங்கு, மாங்காய் புளிப்பதேன் மாம்பழம் இனிப்பதேன், சிந்தனையாளர் பிளேட்டோ ஆகிய 16 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் இந்நூலை சஞ்சிகை உருவில் தொடராக வெளியிட எத்தனித்தமையை இந்நூலின் அறிமுகம் குறிப்பிடுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 89764).

9002

உங்கள் பொது அறிவு. *பிரியா பாலேந்திரன் (தொகுப்பாசிரியர்), க.குணராசா (மீள்பார்வை). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளுமெண்டால் வீதி).*

133 பக்கம், புகைப்படங்கள், படங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 *சமீ.*

வரலாற்றுச் சுவடுகள், இலங்கை, பலதும் பத்தும் 1-3, உலக நிகழ்வுகள், தொலைத்தொடர்புகள் ஆகிய ஏழு பிரிவுகளில் பொது அறிவு வினாக்களும் விடைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்புகளாக உலக சுதந்திரப் போராளிகள், சர்வதேச நினைவில் ஆகிய இரு பிரிவுகளில் தகவல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 155430).

9003

உங்கள் பொது உளச்சார்பு. க. குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2005. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

I Q என்று சுருக்கக் குறியீடாகவும் Intelligence Quotients என்று விரிவுச் சொல்லாகவும் அழைக்கப்படும் நுண்ணறிவுத்துறை, இன்று உலகெங்கும் மனிதனது உளவாற்றலை Mental Ability அளவிட உதவும் துறையாக வளர்ந்துள்ளது. ஆல்பிரெட் பினே Alfred Binet என்ற பிரான்சிய அறிஞரால் இந்த அளவிடும் முறை முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நூல் பொது உளச்சார்புப் பயிற்சிகளை வழங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 155442).

9004

சிறுவர் பொது அறிவு. தரம் 4-7 வரையிலான மாணவருக்குரியது. வேதநாயகம் தபேந்திரன். யாழ்ப்பாணம்: சிவகாமி பதிப்பகம், தேன் தமிழ் இல்லம், கைதடி வடக்கு, கைதடி, 1வது பதிப்பு, மே 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டேர்ஸ், இல. 424, காங்கேசன்துறை வீதி).

v, 167 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x14.5 சமீ.

புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான விசேட வழிகாட்டி நூல். இலங்கை, மற்றும் சர்வதேச பொதுஅறிவுத் தகவல்களை உள்ளடக்கியது. எமது நல்வாழ்வு, எமது நாடு, எமது உலகம், விநோத உயிரினங்கள், விளையாட்டுக்கள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகள், உணவுப் பொருட்களைப் பாதுகாத்தல், நிறங்கள், மரங்கள், இசைக் கருவிகள், தாவரங்களும் பூக்களும், பறவைகள், அலகுகள், கால்கள், நிறுவனங்களும் இலச்சினைகளும், வீட்டுப்பாவனைப் பொருட்கள், தொழில்கள்-பயன்படுத்தும் உபகரணங்கள், தரத்தை உறுதிப்படுத்தும் குறியீடுகள், மானிகள்-கருவிகள், தகவல் தொடர்பு சாதனங்கள், பண்டிகைகள், வீதிப்போக்கு வரத்துக் குறியீடுகள், இரேகைச் சித்திரங்கள், தையல் வகைகள், நட்சத்திரங்களின் வடிவங்கள் ஆகிய 23 தலைப்புகளில் பொது அறிவுத் தகவல்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. நூலாசிரியர், சமூக சேவைகள் அலுவலராக கோப்பாயிலுள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 228518).

9005

பஞ்சவர்ணக் கதம்பம். இ.சிறிஸ்கந்தராசா. கொழும்பு 6: இராமசாமி சிறீஸ்கந்தராசா, 93, பீட்டர்சன் ஒழுங்கை, ஈ 15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2003. (வெள்ளவத்தை: ரெக்னொ பிரின்ட், 581, 2/1 காலி வீதி).

120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.

வாசகரின் அறிவு, நினைவாற்றல், சாதுரியம் ஆகியன விருத்தியடைவதற்காக தேர்ந்த ஐந்து துறைகளிலிருந்து பொறுக்கித் தொகுத்த பஞ்சவர்ணக் கதம்பம் இதுவாகும். விடுகதைகள், கடி ஜோக்ஸ்கள், பொது அறிவுக் கேள்வி பதில்கள், பொது அறிவுப் பயிற்சிகள், கணக்குப் புதிர்கள் என இவை வேறுபடுகின்றன. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் வழித்தோன்றலான நூலாசிரியர் ஒரு பன்னூலாசிரியருமாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 150916).

9006

பொது அறிவு. ஏ.சீ. ஜோர்ஜ் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம்).

70 பக்கம், படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

அரச சேவைப் போட்டிப் பரீட்சைகளுக்கான 400க்கும் மேற்பட்ட வினாக்களையும் விடைகளையும் கொண்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 150958).

9007

பொது அறிவு. ஏ.எல்.எம். பளீல். ஸ்ரீலங்கா: பல்கலைக் கல்வி நிலையம், திருத்திய 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

200 பக்கம், விலை: ரூபா 168.50, அளவு: 21x14 சமீ.

போட்டிப் பரீட்சைகள், நேர்முகப் பரீட்சைகள், தடை தாண்டல் பரீட்சைகள் உள்ளிட்ட சகல பொது அறிவுப் பரீட்சைகளுக்குமான வழிகாட்டி நூலாக இது வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 131685).

9008

பொது அறிவு. காஞ்சனா இரத்தினம். வவுனியா: காஞ்சனா இரத்தினம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2005. (வவுனியா: ஜெய்னிக்கா பிரின்டர்ஸ்).

v, 258 பக்கம், விலை: ரூபா 390., அளவு: 25x18 சமீ.

அனைத்துத் துறைசார்ந்த விடயங்களையும் உள்ளடக்கிய 600 இற்கும் மேற்பட்ட வினா விடைகளுடனும், விடய விழிப்புக்கள் பலவற்றை உள்ளடக்கியும் இந்நூல் வெளிவந்துள்ளது. மருத்துவமும் கண்டுபிடிப்புகளும், நாடுகளும் அவற்றின் சிறப்புகளும், உலகின் முக்கிய வரலாற்றுப் பதிவுகள், விண்வெளியியலும் நவீன கண்டுபிடிப்புகளும், உயிரினங்களும் சிறப்பியல்புகளும், துறைசார் விடயங்களில் தடம்பதித்தவர்கள், உலகப் பொது அமைப்புகள், தகவல் தொழில்நுட்பங்கள், உலக விளையாட்டுக்கள், நோபல் பரிசு, உலகின் முதலாவது நிகழ்வுகள், தாய்நாடு பற்றியவை, பெண்கள் உலகம், கலை கலாச்சாரம், தமிழ் இலக்கிய எழுத்தாளர்கள், தத்துவ ஞானிகளும் சிந்தனாவாதிகளும், புவியியல், தாவரவியல், உலக நாடுகளும் அதிபர்களும், உலகக் கோப்பைக் கால்பந்தாட்டம், இயற்பெயரும் புனைபெயரும்,

உலக விமானப் போக்குவரத்துகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், முக்கிய தினங்கள், ஆண்டுகள், என இன்னோரன்ன 46 தலைப்புகளில் இந்நூல் தகவல் களைப் பொதிந்துவைத்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158852).

9009

பொது அறிவு. முத்துக்குமாரு மகேந்திரா. யாழ்ப்பாணம்: காயத்திரி வெளியீடு, 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங்காடு).

(2), 40 பக்கம், விலை: ரூபா 77., அளவு: 20.5x14.5 சமீ.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கும் போட்டிப் பரீட்சையில் கலந்து கொள்பவர்களுக்குமான வழிகாட்டி நூல் இது. இளங்கலைஞன் முத்துக் குமாரு மகேந்திரா அறியாமை, இருபெண் மலர்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகளை முன்னர் வெளியிட்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 157051).

9010

பொது அறிவு: கபொ.த. உயர்தரம். வேதநாயகம் தபேந்திரன். கொழும்பு 6: சரசு பதிப்பகம், 257/1 E, காலி வீதி, வெள்ளவத்தை, 4வது பதிப்பு, பெப்ரவரி 1999, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1996, 2வது பதிப்பு, ஏப்ரல் 1997, திருத்திய மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 1997.(அச்சக விபரம் தரப்படவில்லை).

160 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

இது போட்டிப் பரீட்சைகளுக்கான ஒரு வழிகாட்டி நூல். க.பொ.த. உயர்தர புதிய பாடத்திட்டத்திற்கும் ஏற்றது. அண்மைக்கால இலங்கை நடப்புக்கள், அண்மைக்கால உலக நடப்புக்கள், அண்மைக்கால உலக விடயங்களில் பிரபலமானோர், நாடுகள்-ஆட்சித் தலைவர்கள், இலங்கை, இலங்கையின் கல்வித்துறை, சர்வதேச நிறுவனங்கள், உலக விருதுகள், விண்வெளி அறிவியல், சர்வதேச நாள்கள், மருத்துவம், சினிமா, விஞ்ஞானம், கலை இலக்கியம், உலக விளையாட்டுக்கள், சுருக்கப் பெயர்கள்- நிறுவனங்கள், பல்துறைக் களஞ்சியம், மாதிரி வினாத்தாள்கள் 1-4 ஆகிய 18 தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வணிகப் பட்டதாரியான நூலாசிரியர் திருகோணமலை மாவட்டத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 127884).

9011

பொது அறிவுப் பூங்கா. ஆ.சண்முகலிங்கம். யாழ்ப்பாணம்: உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை, 52, ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, ஆனி 1998. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசாயி அச்சகம்).

(2), 44 பக்கம், விலை: ரூபா 33., அளவு: 20.5x14.5 சமீ.

உலகத்தமிழர் குரல் இதழின் ஆசிரியரான ஆ.சண்முகலிங்கம் எழுதிய இந்நூல் பல்துறை சார்ந்த அறிவுத் தகவல்களைக் கொண்டது. மாணவர்களுக்கும், பெரியவர்களுக்கும், பொது வாசகர்களுக்கும் தேவையான பல தகவல்களை இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123961).

9012

பொது உளச்சார்பும் பொது அறிவும். வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புகள் கல்லூரி, 148/1 ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

76 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 40., அளவு: 21.5x18 சமீ.

ஆசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றிய வேளையில் எழுதி வெளியிட்ட நூல் இது.

001 கணினியியல்

9013

கணினியின் வரலாறு. க.கமலசேகரம். யாழ்ப்பாணம்: மகேஸ்வரி கணினி மூலவள நிலையம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (யாழ்ப் பாணம்: கங்கை ஒப்செற் பிரின்டர்ஸ்).

viii, 50 பக்கம், புகைப்படத் தகடுகள், விலை: ரூபா 50., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-98081-0-9.

இந்நூலில் மனித வரலாற்றுப் பின்னணி, பண்டமாற்றம், எழுதுதல், ஆகியவற் றினூடாக கணனி உருவாகிய வரலாறு விபரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158837).

9014

கணிப்பொறி 2000. கு.இராயப்பு (புனைபெயர்: கலையார்வன்). யாழ்ப்பாணம்: Neo Cultural Council, 28/1, St. James West Street, 1வது பதிப்பு, பங்குனி 2001. (யாழ்ப் பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

xv, 546 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 20.5x14.5 சமீ.

முக்கியத்துவம், ஆணைத் தொடர்கள் (Program), மைக்ரோசொப்ட் வேர்ட் 2000 (Microsoft Word 2000), மைக்ரோசொப்ட் எக்செல் 2000, (Microsoft Excel 2000), மைக்ரோசொப்ட் பவர்பொயின்ட் 2000 (Microsoft Powerpoint 2000) போன்ற கணனி மென்பொருள்கள் பற்றிய விபரங்களை அறிமுகப்படுத்தும் இந்நூல், தமிழ்மூலம் கணினிக் கல்வியில் ஈடுபடுவோருக்கு ஏற்றவகையில் விளக்கப் படங்களுடன் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

010 நூலியல், நூல்விபரப்பட்டியல்

9015

நூல்தேட்டம் தொகுதி 9. என்.செல்வராஜா. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், இணை வெளியீட்டாளர், கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xviii, 520 பக்கம், விலை: ரூபா 2000., அளவு: 21.5x15.5 சமீ., ISBN: 978-955-659-419-5.

தாயகத்திலும் புகலிடத்திலும் வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்நூல்களுக்கான குறிப்புரையுடன் வெளிவந்துள்ள நூல்விபரப்பட்டியலின் ஒன்பதாவது தொகுதி இதுவாகும். இத்தொகுதியில் மேலும் 1000 நூல்களுக்கான பதிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன. பிரதான பதிவு தூவி தசாம்சப் பகுப்புமுறையைத் தழுவிப் பகுப்பாக்கம் செய்யப்பட்டு, பாடவாரியாகப் பதியப்பட்டுள்ளது. பதிவுகள் 8001-9000 வரை தொடர் இலக்கமிடப்பட்டுள்ளன. நூல் தலைப்பு வழிகாட்டி, ஆசிரியர் வழிகாட்டி என்பவற்றுடன் இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் படைப்புக்களும், முன்னைய தொகுதியின் பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பம்சமாகும். நூலின் பின்னிணைப்பாக "நூல்தேட்டம்: ஓர் மதிப்பீட்டு ஆய்வு" என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் கலாநிதி கல்பனா சந்திரசேகர், கோண்டாவில் பொது நூலகர் செல்வி அனிதா கந்தசாமி ஆகியோர் இணைந்து, 2013 தமிழ் ஆவண மகாநாட்டில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரை இடம்பெற்றுள்ளது.

020 நூலகவியல், தகவல் விஞ்ஞானம்

9016

அறிவுலக சொத்துரிமைச் சட்டமும் உலகமயமாதலில் நூலக தகவல் விஞ்ஞான அபிவிருத்தியும். வை.விவேகானந்தன். செட்டிபாளையம் (கிழக்கு மாகாணம்): வை. விவேகானந்தன், சிவபவனம், சிவன் கோவில் வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55, E.A.கூரே மாவத்தை).

xiv, 90 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 1-955-99117-3-2.

இலங்கை நூலகச் சங்கம் நடத்தும் நூலக தகவல் விஞ்ஞானத்திற்கான டிப்ளோமா கற்கை நெறிப் பயிலுநர் முன்னிலையில் மட்டக்களப்பு, வின்சன் மகளிர் தேசிய உயர் பாடசாலையில் 25.3.2006 அன்று நிகழ்த்திய உரையின் நூல்வடிவம். Intellectual property rights Law and Library Information Science development in globalization என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ளது. அறிவுலக சொத்துரிமைச் சட்டம்: ஓர் அறிமுகம், பிரசுர உரிமைச் சட்டம், உலகமயமாதலில் நூலக தகவல் விஞ்ஞான அபிவிருத்தி, ஆராய்ச்சி முனைகளும் விவாத நிலையும், சர்வதேச நூலகம்: ஆராய்ச்சி பொருண்மைகள், சர்வதேச நூலக முயற்சி நிர்மாணத்திற்கான

எதிர்கால ஆராய்ச்சி, முடிவுரை ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 39836).

9017

சொற்கருவூலம்: உருவாக்கம், பராமரிப்பு, பயன்பாடு. அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி. யாழ்ப்பாணம்: நூலக விழிப்புணர்வு நிறுவகம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: லலிதா கிராப்பிக்ஸ், இணுவில் கிழக்கு).

viii, 88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

Thesaurus என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் சொற்கருவூலம் ஒன்றின் உருவாக்கம், அதன் பராமரிப்பு, மற்றும் பயன்பாடு பற்றிய நூலகவியல் அறிவை மாணவர் களுக்கு வழங்கும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அறிமுகம், தகவல் மீள்பெறுகை, சொற்றொகுதிக் கட்டுப்பாடு, சொற்கருவூலம், சொல்லடைவுச் சொற்கள், கட்டமைப்பு, காட்சியமைவு, வடிவமைப்பு, நூல்விபரப்பட்டியல் ஆகிய ஒன்பது பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225348).

9018

முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில்நுட்பம். வே. ஈஸ்வரன். யாழ்ப்பாணம்: வே. ஈஸ்வரன், வணிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: S.S.R.Computer and Offset Printers, 537, சிவன்கோவில் வீதி, திருநெல்வேலி).

x, 222 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

தகவல் தொழில்நுட்பமும் உற்பத்தித் திறனும், தகவலும் முகாமைத்துவமும், முறைமை, தகவல் முறைமை, நிறுவன தொழிற்பாடுகளுக்கான தகவல் முறைமைகள், தந்திரோபாய நன்மைக்கான தகவல் தொழில்நுட்பம், அலுவலக தன்னியக்கமாக்கல், இலத்திரனியல் வர்த்தகம், கணினி வன்பொருள், கணினி மென்பொருள் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131439).

9019

மொழியிடைக் கலைச்சொற்கோவை: தகவல் தொழில்நுட்பவியல்: தமிழ்-ஆங்கிலம். சி.கேதீஸ்வரன். யாழ்ப்பாணம்: அமரர் அன்னபூரணம் சிவபாக்கியநாதன் குடும்பம், 1வது பதிப்பு, பங்குனி 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 681, காங்கேசன்துறை வீதி).

(2), 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-4983-00-7.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கலைச்சொல் அகராதி. பல்வேறு ஆங்கில தமிழ் அகராதிகளிலுமிருந்தும் கலைச்சொற் கோவைகளிலிருந்தும் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலப்பதங்கள் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

050 பொதுப் பருவஇதழ்கள், சிறப்பிதழ்கள்

9020

தமிழ்த் தென்றல்: சிறப்பு மலர். மலர் வெளியீட்டுக் குழு. சுவிட்சர்லாந்து: சூரிச் தமிழர் கலாச்சார மன்றம், சூரிச், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (இலங்கை: ஜே.ஜே. பிரின்டெக்).

182 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x20 சமீ.

சூரிச் தமிழர் கலாச்சார மன்றம் என்ற அமைப்பின் இவ்வெளியீடு சூரிச் தமிழர் கலாச்சார மன்ற வாழ்த்து, சூரிச் சிவசுப்பிரமணிய ஆலய குருக்கள் சத்திய சிவகுமார சர்மாவின் ஆசியுரை, தென்னாபிரிக்கா ஸ்ரீமுத்துலிங்கநாத ஈஸ்வரர் ஆலய குரு சாம்பசிவ ஸ்ரீதணிகாசல குருக்கள், நாடகப் புலவர் வி.பி.வேலாயுதனார் ஆகியோரின் வாழ்த்துரைகள் உள்ளிட்டதாக பல்வேறு துறைகளிலும் எழுதப் பெற்ற 54 படைப்புக்களுடன் வெளியிடப்பட்டுள்ளது. போதிய நூலியல் தகவல்கள் அற்ற நிலையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நூல் வெளியிட்ட காலப்பகுதியோ, வெளியீட்டாளர்களின் முகவரி விபரமோ, மலராசிரியர் குழு பற்றிய விபரமோ நூலில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை. கட்டுரைகளில் இடம்பெறும் சில புள்ளிவிபர அட்டவணைகளின்படி இந்நூல் 2005க்கும் - 2014க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வெளியிடப்பட்டிருக்கின்றது.

மேலும் பார்க்க: 9524

051 பருவஇதழ் சிறப்பிதழ்கள்

9021

இந்து ஒளி: சிவயோக சுவாமிகள் ஐம்பதாவது குருபூசை சிறப்பிதழ் 2014. ஆசிரியர் குழு. கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், ஏ.சீ.எச்.சீ. கட்டிடம், 91/5, சேர். சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x22 சமீ.

அகில இலங்கை இந்து மாமன்றம் யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினத்தையொட்டி 10.4.2014 இல் வெளியிட்ட இந்து ஒளி சிறப்பிதழ் இது. கந்தையா நீலகண்டன், ஆறு. திருமுருகன், முத்தையா கதிர்காமநாதன், ம.பாலகைலாசநாத சர்மா, த. மனோகரன், அ. கனகசூரியர் ஆகியோரை உள்ளடக்கிய ஆசிரியர் குழுவினால் தொகுக்கப்பெற்ற இம்மலரில் நூலகவியலாளர் என். செல்வராஜாவின் சிவயோகர் சுவாமிகளைப் பற்றி ஈழத்தில் எழுந்த சில

நூல்கள் என்ற கட்டுரை உள்ளிட்ட ஈழத்துச் சித்தர்கள் பற்றியும் யோகர் சுவாமிகள் பற்றியதுமான ஏராளமான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

9022

கலசம் 75ஆவது சிறப்பிதழ். சதாசிவம் ஆனந்த தியாகர் (மலர் ஆசிரியர்). லண்டன்: சைவ முன்னேற்றச் சங்கம், 2, சலிஸ்பரி ரோட், மனர் பார்க், லண்டன் E12 6AB, 1வது பதிப்பு, சித்திரை-வைகாசி-ஆனி 2014. (லண்டன்: ஜே.ஆர். பிரின்ட்).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x19 சமீ.

இலண்டனிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழின் சித்திரை-வைகாசி-ஆனி 2014 இதழ் 75வது சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. பல்வேறு இந்து சமயக் கருத்துக்களையும் தத்துவங்களையும் விளக்கும் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். ஆன்மீகத்தை நோக்கி ஒரு பார்வை-நான் யார்?, ஒன்றும் நீயில்லை அன்றியொன்றில்லை, தமிழும் சுவையும், நான் பார்த்த தேர்த்திருவிழா (முதற் பரிசுக் கட்டுரை), பக்தி இலக்கியங்களில் தமிழ், அழைப்பிற்கு முன்னர் நாம் செய்யவேண்டிய உழைப்பு, ஆவுடையார் கோயில் - பயணக்கட்டுரை, தமிழில் பக்தி இலக்கியம் வளர்ந்த வரலாறு, இறப்பும் பிறப்பும், வாழ்க்கை முறையும் சமய வழிபாடும், எனது வீட்டில் சமய வாழ்க்கை (முதற்பரிசுக் கட்டுரை), மனித நேயம், உபநிடதமும் சைவசித்தாந்தமும், சமய வாழ்க்கையும் எனது எதிர்காலமும் (முதற் பரிசுக்கட்டுரை), திருமுறைப் பெருமை, என்னை ஏன் இறைவன் படைத்தான் (முதற் பரிசுக் கட்டுரை), கண்ணனும் தாத்தாவும், அறத்தால் வருவதே இன்பம், மிருசுவில் கொட்டிகை அம்மன் கோவில், வினைப்பயன், சைவமுன்னேற்றச் சங்க அறப்பணி, மூத்தோர் நிலையமும் சிவபூமியும், நமது சமயமும் இன்றைய தலைமுறையும், Sakthi- the all pervasive kinetic Energy of Lord Siva, Hard Work-key to the gold mine, Kunkiliya kalaya Nayanar ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

9023

ஞானம் 175ஆவது இதழ்: ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்: சிறப்பிதழ். தி.ஞானசேகரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2014. (மகரகம: தரஞ்சி பிரின்ட்ஸ், நாவின்ன).

xxvi, 950 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 1800., அளவு: 25.5x18 சமீ., ISBN: 978-955-8354-48-3.

06.06.2000 அன்று தனது முதலாவது இதழை வெளியிட்டுவைத்த ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகையின் 175ஆவது இதழ் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழாக 976 பக்கங்களில் வெளிவந்துள்ளது. தாயகத்திலும் புகலிடத்திலும் வாழும் படைப்பாளிகளை எவ்வித வேறுபாடுகளுமின்றி அரவணைத்துப் பயணிக்கும் இச்சஞ்சிகையின் 175ஆவது இதழில், ஈழத்தமிழரின் புலம்பெயர் வாழ்வியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும், பதிவுசெய்யும் 50 கட்டுரைகள், 127 கவிதைகள், 85 சிறுகதைகள், 22 ஓவியங்கள் என்பன இடம்பெற்றுள்ளன. இந் நூலின் இறுதியில் என்.செல்வராஜா எழுதிய ஈழத்தமிழரின் புலப்பெயர்வு

இலக்கியச் செல்நெறியின் சில தடப் பதிவுகள் என்ற சிறப்புக் கட்டுரை (பக்.909-928) இடம்பெற்றுள்ளது.

9024

தமிழர் தகவல்: 23ஆவது ஆண்டு மலர்: இளமுகைச் சுவடு. *எஸ்.திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2014.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4).

160 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 *சமீ.,* ISSN:1206-0585.

பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 23ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. பெப்ரவரி 2014இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின் போது இம்மலர் வெளியிடப்பட்டது.

9025

தமிழர் தகவல்: 24ஆவது ஆண்டு மலர்: இளங்கதிர்ச் சுவடு. *எஸ். திருச்செல்வம் (பிரதம ஆசிரியர்),* Canada: Tamil's Information, Ahilan Associates, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4, *1வது பதிப்பு, பெப்ரவரி 2015.* (Canada: Ahilan Associates, Printers and Publishers, P.O.Box 3, Station F, Toronto, Ontario M4Y 2L4).

160 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x21.5 *சமீ.,* ISSN:1206-0585.

பெப்ரவரி 1991 முதல் கனடாவிலிருந்து வெளிவரும் தமிழர் தகவல் மாத சஞ்சிகையின் 24ஆவது ஆண்டு நிறைவு மலர். அமெரிக்க, கனடியத் தமிழ் மக்களினதும், ஐரோப்பியத் தமிழர்களினதும் 100க்கும் மேற்பட்ட அறிவியல் ஆக்கங்களைத் தாங்கி இது வெளிவந்துள்ளது. தமிழர் தகவல் ஆண்டுதோறும் வழங்கும் விருதுகளைப் பெறுவோர் பற்றிய விபரங்களும் இம்மலரில் முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. பெப்ரவரி 2015இல் கனடாவின் ரொரன்ரோ நகரசபையின் அங்கத்தவர் சபா மண்டபத்தில் இடம்பெற்ற ஆண்டு விழாவின் போது இம்மலர் வெளியிடப்பட்டது.

9026

தமிழருவி 2012. *மலர் வெளியீட்டுக் குழு. மொரட்டுவை: தமிழ் இலக்கிய மன்றம், மொரட்டுவை பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

76 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ.

மொரட்டுவைப் பல்கலைக்கழகம் நடத்திய தமிழ் விழா கலை நிகழ்வு 4.3.2012 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இதழாசிரியர் குழுவில் சி.ஹரிஷநாத், ச.சர்வகுமார், நீதிராஜா வர்ணன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

9027

ஜீவநதி ஏழாவது ஆண்டு மலர். க.பரணீதரன் (பிரதம ஆசிரியர்). பருத்தித்துறை: ஜீவநதி, கலையகம், சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி, அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆடி 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

136 பக்கம், விலை: ரூபா 275., அளவு: 29.5x21 சமீ.

அல்வாய் கலையகத்தினால் வெளியிடப்படும் கலை இலக்கிய இருதிங்கள் ஏட்டின் ஏழாவது ஆண்டின் நிறைவாக வெளியான சிறப்பு மலர் இது. ஜீவநதியின் 70ஆவது இதழாக, வழமையான கதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றுடன் இம்மலர் வெளிவந்துள்ளது.

070 ஊடகவியல், வெளியீட்டுத்துறை

9028

கருத்துக் கொலைக்கு இரையானோர். சீதா ரஞ்சனி. கொழும்பு 5: சுதந்திர ஊடக இயக்கம், இல. 96, கிருள வீதி, நாரஹேன்பிட்டி, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 10: சமயவர்தன அச்சகம், இல.53, மாளிகாகந்தை வீதி).

(2), 131 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-0583-02-7.

இலங்கையில் ஊடக அடக்குமுறை உச்சகட்டத்தில் இருந்த 1981-2009 காலப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள், கலை, கலாசாரச் செயற்பாட்டாளர்கள் பற்றிய தகவல்களை இந்நூல் கொண்டுள்ளது. முதலாம் பிரிவில் அறிமுகம் இடம்பெறுகின்றது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள், ஊடக ஊழியர்கள் மற்றும் கலை, கலாசார செயற்பாட்டாளர்களின் பெயர்ப்பட்டியல் இரண்டாவது பிரிவில் தரப்பட்டுள்ளது. படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான சிறு குறிப்புகள் மூன்றாம் பிரிவில் தரப்பட்டுள்ளது. பிரதான பட்டியலில் இடம்பெற்றவர்கள் கொலையுண்ட முறை தொடர்பான சில ஆய்வுகள் நான்காம் பிரிவிலும், சில பொது முடிவுகள் இறுதிப்பிரிவான ஐந்தாம் பிரிவிலும் தரப்பட்டுள்ளன. 30 வருடங்களுக்கும் மேலாக ஊடகத்துறையில் பணியாற்றிவரும் சீதா ரஞ்சனி சுதந்திர ஊடக இயக்கத்தின் செயலாளராகப் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 222720).

9029

பத்திரிகையியல் வழிகாட்டி. *த.சபாரத்தினம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 5: இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இல. 96, கிருல வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2009. (தெகிவளை: கிரசன்ட் பப்ளிக்கேஷன்ஸ், 156, ஆஸ்பத்திரி வீதி, களுபோவில).*

640 பக்கம், விலை குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-1734-03-9.

பத்திரிகையியல் நுட்பங்களை இந்நூல் இரண்டு பாகங்களில் 26 இயல்களில் பதிவுசெய்கின்றது. முதலாவது பாகம் ஊடகத்துறைக்கென உள்ள கோட்பாடு சார்ந்த விளக்கங்களைக் கூறுவதாய் இதழியல் கோட்பாடுகள் என அமைந்துள்ளது. இரண்டாம் பாகம், செய்தி எழுதும் நுட்பங்கள் பற்றிய தகவல்களைக் கொண்டமைந்துள்ளது. நூலாக்கக் குழுவில் த.சபாரத்தினம், பரராஜசிங்கம் பாலசிங்கம், என்.எம்.அமீன், தாஹா முஸம்மில், கோ.றுஷாங்கன் ஆகிய பணிக்குழுவினருடன் நா.செல்வகுமாரன், வி.ஏ.திருஞானசுந்தரம், ஆனந்தி பாலசிங்கம், எம்.எஸ். தேவகௌரி, எஸ்.ரி. ஸ்ரீபிரேந்திரன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 229460).

மேலும் பார்க்க: 9259, 9269

100 மெய்யியல்துறை

100 மெய்யியல் (தத்துவவியல்)

9030

ஆதி கிரேக்க மெய்யியல். *யோன் பேணற்று (மூலம்), செ.வே.காசிநாதன் (தமிழாக்கம்). இலங்கை: வெளியீட்டுப் பிரிவு, அரச கரும மொழித் திணைக்களம், கொழும்பு 7, 1வது பதிப்பு, 1965. (இலங்கை: இலங்கை அரசாங்க அச்சகம், கொழும்பு).*

xi, *402 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21.5x13.5 *சமீ.*

பிரித்தானியாவின் புனித அன்ட்ரூ பல்கலைக்கழகத்தின் கிரேக்க மொழிப் பேராசிரியரான John Burnet *அவர்கள் எழுதிய* Early Greek Philosophy *என்ற நூலின் நான்காம் பதிப்பின் தமிழாக்கம் இதுவாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில், மெய்யியல் பயிலும் மாணவர்களின் தேவைக்காகத் தயாரிக்கப் பட்டது. இதிகாசங்களிலிருந்து ஆரம்பித்து அணுவாதிகள் வரையிலான கிரேக்க மெய்யியல் பற்றிய வரலாற்றை இந்நூல் விரிவாக எடுத்துக்கூறுகின்றது. தேலிசு முதல் லியுகிப்போசு வரை மெய்யியல்துறையில் ஈடுபட்ட பிரதான சிந்தனையாளர்கள் பலரைப் பற்றியும், இப்போன், இடையோசினிசு போன்றோர் பற்றியும் வரலாற்றுரீதியாக இந்நூல் ஆராய்வதுடன், இச்சிந்தனையாளர்களுடைய*

கொள்கைகளை அறிவதற்கு ஆதாரங்களாகப் பயன்பட்ட நூற்பகுதிகளும் நூலில் பொருத்தமான இடங்களில் தரப்பட்டுள்ளன. ஆதி கிரேக்க மெய்யியல் பற்றிய விரிவான தேடலுக்கு இந்நூல் வழிகாட்டுவதாயுமுள்ளது.

150 உளவியல்

9031

துளிர்: உளவியல் கட்டுரைகள். *ச.யேசுதாசன். மன்னார்: கலையருவி, மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம், 1வது பதிப்பு, மே 2013. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். அச்சகம், 27/2, புங்கன்குளம் வீதி, பாண்டியன் தாழ்வு).*

137 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-54804-1-3.

அன்றாட வாழ்வில் உளவளத்துணை, சுமை பகிர்ந்து சுகம் பெறுவோம், துன்பத்தை எதிர்கொள்வோம், இழப்புக்கள், வழிதேடும் விழிகள், அழுகை அனைத்திற்கும் தீர்வாகுமா?, பாதிக்கப்பட்டோருடன் பணியாளர்கள், தாய்மையின் சிறப்பு, இன்றைய இளையோர், குடிவெறி, சுனாமி ஒரு தீமை, பயம் பயனுள்ளது, வாழ்க்கை ஓர் போர்க்களம், இறப்பு ஆகிய 14 உளவியல்சார் உளவளத்துணைக் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர், 2006-2008 காலப்பகுதியில் சொலிடார் நிறுவனத்தின் இணைப்பாளராக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234593).

9032

பயணங்களில். *க.சண்முகரத்தினம். கொழும்பு 15: க.சண்முகரத்தினம், 1/27, பாம் வீதி, மட்டக்குளி, 1வது பதிப்பு, ஜனவரி 2011. (கொழும்பு 12: வக்மி அச்சகம், 258/3, டாம் வீதி).*

viii, *81 பக்கம், விலை: ரூபா 200., அளவு:* 17.5x12.5 *சமீ.,* ISBN: 978-955-53178-0-1.

ஆசிரியர் தன் மதப்பற்றுக்கு உட்படாத ஆன்மீக நாட்டத்தில் எழுதிய அனுபவப் பதிவுகள் இவை. இதனை இலக்கிய வகையறாக்கள் என்ற வடிவத்துக்குள் அடக்கமுனைந்தால் ஏமாற்றமே மிஞ்சும். இதில் கற்பனை இல்லை. ஆசிரியரின் ஆன்மீக நாட்டத்தின் அனுபவக் குறிப்பேடாக இது அமைந்துள்ளது. நான் ஒரு பைத்தியக்காரக் கடவுள், வழக்கு, பிரார்த்தனை, என்ன தீர்ப்பு, வேட்டை, விழிப்பு, அவள் ஒரு அழகிய குழந்தை, உதவி, மாயை, அவள் மாயை அல்ல, சீடன் எங்கே, அந்த மணியை அடிக்காதீர்கள், மாளிகை, அந்த விண்கலம், காதல், ஞானம், சிலை, அன்பு, கடவுள், தர்மம், எண்ணங்கள், விடுதலை உணர்வு, துணைவிக்கு ஆகிய 23 தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 219401).

9033

மனம் ஒரு புதிர்: வில்லங்கமும் விளக்கமும். தி.கணேஸ்வரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2002. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

80 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 20., அளவு: 17.5x12.5 சமீ.

மனநல மருத்துவராகப் பணியாற்றும் வைத்திய கலாநிதி தி.கணேஸ்வரன் அவர்கள் எழுதிய நூல். மனமும் மூளையும், டேகாட்ரேயின் சிந்தனைகள், உலகாயதர் கொள்கை, மனம்-மூளைத் தொடர்பு, குணதுவைதக் கொள்கை, சர்வசமன் கொள்கைகள், தொழிலாயதம், வெளிப்படும் புதுக் குணக்கொள்கை, விளக்கும் துவைதம், உணர்வு நிலைகள், வேதாந்தக் கொள்கை, முடிவுரைஆகிய 12 இயல்களில் இந்நூல்வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 180564).

9034

மனித காந்தம். ஆர்.கே.முருகேசு சுவாமிகள் (மூலம்), கார்.முரளிதரன் (பதிப்பாசிரியர்). நுவரெலியா: காயத்ரி பீட வெளியீடு, ஸ்ரீநகர், 82, லேடி மக்கலம்ஸ் டிரைவ், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (நீர்கொழும்பு: சாந்தி அச்சகம், 20/8, சிலாப வீதி).

40 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

மனிதரில் உள்ள காந்தசக்தி பற்றிய ஆன்மீக விளக்கத்தை இந்நூல் வழங்குகின்றது. மனிதனில் உள்ள காந்த சக்தியை பேணி வளர்க்கும் சாதனைமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன.

9035

வித்தியாசமானவர்கள். வி.பி. (இயற்பெயர்: வின்சன்ற் பற்றிக்ஸ்). யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: மணி ஓசை, 12, பற்றிக்ஸ் வீதி).

(4), 102 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 21.5x14 சமீ.

19ஆவது "நான்" வெளியீடாக மலர்ந்துள்ள உளவியல் நூல். மகிழ் மனவியல், ஆளுமை வளர்ச்சி, உறவுச் செயல்களின் ஆய்வுமுறை, நான் வாழ விரும்புகின்றேன், மனநிலைச் சமத்துவம், நல்வினை மனநோக்கு, மரணிக்காத மனிதத்துவம், உந்தல், உந்தலும் உணர்வும், சிந்தனையும் மொழியும், திறமை மதிப்பீடும் நுண்ணறிவும், சமுதாயத்துவச் சமநிலை, நானாக நான் இல்லை, ஆளுமை சிறைப்படுத்தப்படுகின்றது, அழகினை இரசிக்கிறேன், என்னை நானே உருவாக்குகின்றேன், இதயத்தில் ஓர் இடம், பயணம் தொடர்கின்றது ஆகிய மனித மேம்பாட்டு நோக்கம் கருதிய 18 உளவியல் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

158.1 மானிட மேம்பாடு

9036

ஆன்மீக வாழ்க்கைக்கு 101 பயனுள்ள வழிகாட்டிகள். விசுவலிங்கம் செல்வரத்தினம்.

வட்டுக்கோட்டை: செல்வி விஜயதெய்வேந்திரன் திருவருள்சோதி, அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, 1வது பதிப்பு, 2009. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ்.பிறின்றேர்ஸ்).

52 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ.

பர்மா நாட்டில் புகையிரத நிலைய அதிபராக இருந்த தம்பர் விசுவலிங்கம் அவர்களின் மகனான அருள்நெறிச் செல்வர் வி.செல்வரத்தினம் தன் பெற்றோருக்கு சமர்ப்பணமாக்கிய ஆன்மீக நூல் இது. அளவெட்டியைச் சேர்ந்த இந் நூலாசிரியர் விஞ்ஞான, கணித பாடநூல்கள் பலவற்றின் ஆசிரியருமாவார். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204320).

9037

ஏணிப்படிகள். டேவிட் வி. பற்றிக். யாழ்ப்பாணம்: அமலமரித் தியாகிகள் வெளியீடு, யாழ்ப்பாண மாகாணம், 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு 14: ட்ரான்ஸென்ட் பிரின்டர்ஸ்).

63 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 75., அளவு: 21x14 சமீ.

மானிடத்தின் இயற்கை மனப்போக்கு, அதனை எவ்விதம் நெறிப்படுத்தினால் மானிடம் வெல்லும், அன்பு ஆட்சி செய்ய வழிபிறக்கும் என்று நூலாசிரியர், பல்வேறு மனோதத்துவக் கோட்பாடுகளின் கண்ணோட்டத்தில் இந்நூலில் ஆராய்ந்து கூறியுள்ளார். மானிட வாழ்வின் நெறிமுறைகளையும் பருவப்படி முறைகளையும் கருத்திற்கொண்டு இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார். அழகு தமிழில் பல்வேறு மனோதத்துவ அறிஞர்களின் மேற்கோள்களுடனும் எடுத்துக் காட்டுகளுடனும் தனது படைப்பை விரிவாக்கியுள்ளார். ஆசிரியர் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தின் குருவானவராக மன்னார் பிரதேசத்தில் பணியாற்றியவர். வி.பி., வின்சன்ற் பற்றிக் ஆகிய பிற பெயர்களிலும் எழுதிவருபவர். உள்ளத்தின் உணர்வலைகள், உங்களால் ஆகுமே, நீங்கள் நீங்களாகவே இருங்கள், உள்ளகச் சக்தியை அதிகரியுங்கள், ஆற்றுப்படுத்தல் வரலாற்றுப்பார்வை, உள்ளதை உள்ளவாறே பேசுங்கள், நல்லோராய் வாழுங்கள், முயலுங்கள் முன்னேறுங்கள், கொடுத்துக்கொண்டே இருங்கள், மன்னித்து இன்புறுங்கள் ஆகிய பத்து தலைப்புகளில் மானிட மேம்பாட்டுக் கட்டுரைகளாக இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 180042).

9038

கடவுளோடு பேசுதல்: சில ஆன்மீகக் குறிப்புகள். தாட்சாயணி (இயற்பெயர்: பிரேமினி சபாரத்தினம்). கொழும்பு 6: மீரா பதிப்பகம், 5/3 ஏ, மயூரா கோர்ட் -4, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (மஹரகம: தரஞ்சி பிரின்ட்ஸ், நாவின்ன).

viii, 72 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

2004இல் ஞானம் இலக்கிய விருதுபெற்ற ஒரு மரணமும் சில மனிதர்களும் என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுப்புடன் ஈழத்து இலக்கிய நூல் வெளியீட்டுத் துறையில் அறிமுகமானவர் தாட்சாயணி. இளவேனில் மீண்டும் வரும், தூரப் போகும் நாரைகள் ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களை இதுவரை வெளியிட்ட இவரது ஆன்மீகம்சார்ந்த 16 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. உயிராஞ்சலி, மாற்றம், பாதை, வழித்துணை, தாகம், விடுதலை, புகழின் பிடிக்குள், அலைதலின் காலம், யாசகம், வழிகாட்டி, பூக்களின் வாசம், மாறாத இளமை, மாயத்தீவு, வருகையின் தடங்கள், கடைசி விருந்தாளி, மரணத்தின் வாசலில் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 211271).

9039

புத்தாண்டு வாழ்த்துக்கள். பெனி யே.ச. அட்டன்: அட்டன் சமூக நலநிறுவன வெளியீடு, இல.30, புகையிரத நிலைய வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (அட்டன்: செனித் அச்சகம்).

92 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

அட்டன் சமூக நலநிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றும் ஆசிரியரின் சமயப்பணியும் சமூகப்பணியும் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி வந்துள்ளன. இந்நூலில் 14 தலைப்புகளில் அறிவுரைக் கட்டுரைகளை எழுதியுள்ளார். புத்தாண்டுப் பரிசாக இந்நூலை வழங்கியுள்ள இவர், இனவாதம், குழுவாதம், பிரதேசவாதம், மதவாதம் முதலியவற்றால் மனித இதயங்களைப் பிழிந்தாலும் நாம் உண்மையானவராய் நாம் சார்ந்த சமூக மக்கள்மீது அக்கறைகொண்டவராய் இருப்போம் என்று கனிவாகக் குரல் எழுப்புகிறார். இயற்கையை இங்கிதமாக ரசிக்கும் இவர் இயற்கையில் இறைவன் படைப்பின் அதிசயங்களைக்கண்டு வியக்கிறார். சமூகத்தைச் சீரழிக்கும் சினிமா, செல்லிடத் தொலைபேசி, முக நூல் (Face Book) போன்றவற்றால் இளையோர் சமூகம் சின்னாபின்னமாவதைக் கண்டு குமுறுகின்றார். தற்காலிக இன்பத்திற்காக இளையோர் கல்வியை புறக்கணிப்பதைக்கண்டு தவிக்கிறார். இளையோர் வாழ்வுசிறக்க வழிகாட்டும் மானிட மேம்பாட்டு நூல் இது.

9040

மலர்ந்த முகம். சி.அருணகிரிநாதன். வட்டுக்கோட்டை: சிஅருணகிரிநாதன், பரிதி அகம், சிவன்கோவிலடி, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(2), 44 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற எண்ணத்துடன் தத்தமது பிரச்சினைகளைத் தாமே கண்டறிந்து அதனைக் களைந்து மகிழ்ச்சியுடன் வாழ வழிசொல்லும் வகையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் மென்சிரிப்பு, இப்படித்தான் வாழவேண்டும்,

மனவளமும் உடல் ஆரோக்கியமும், கிராமிய ஓய்வூதிய வங்கி, முடிவெடுத்தல், நிகழ்காலத்தில் வாழ்வோம், ஏறுநடை, மலர்ந்த முகம் ஆகிய எட்டு அத்தியாயங் களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123853).

9041

மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும். வின்சென்ற் பற்றிக். (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, அமலமரித் தியாகிகள் சபை, 1வது பதிப்பு, நவம்பர் 1985. (அச்சக விபரம் தரப்படவில்லை).

82 பக்கம், விலை: ரூபா 8.00, அளவு: 20.5x14 சமீ.

உளவியல் சார்ந்த மனித மேம்பாட்டுக் கருத்துக்களைக் கொண்ட 18 கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும் (வி.பி), குழந்தை உருவாக்கலும் பயிற்சி முறைகளும் (எம்.எஸ்.குரூஸ்), குழந்தைப் பருவமும் வளர்ச்சிப் படிமுறைகளும் (சி.சாந்தலட்சுமி), இளமையின் இராகங்கள் (ஆர்.பி.ஜே.பாக்கியராஜா), இல்லறத்தை இனிமையாக்குங்கள் (ராஜன் மங்களா), மனம் விமர்சிக்கப்படுகிறது (ஜீவனதாஸ் பெர்னாண்டோ), மன மருத்துவ முறை (எஸ்.டேமியன்), அன்பில்லா உலகில் மனித நோவுகள் (எஸ்.டேமியன்), பழிவாங்கல் (செம்பியன் செல்வன்), பருவங்கள் மாற உருவங்கள் சந்திக்கின்றன (செபஸ்தி நீக்லஸ்), தாழ்வு மனப்பான்மை (ர.ஜெ.கொன்சன்ரைன்), தழுவுகின்ற தோல்விகளும் தொடர்கின்ற தாழ்வு மனப்பான்மையும் (ஆர்.சுரேந்தினி), முயற்சியே முன்னேற்றத்தின் வழி (அருந்ததி மகாதேவன்), மதுவெறியின் விளைவுகளும் சிகிச்சை முறைகளும் (எஸ்.டேமியன்), குடிக்காதே தம்பி குடிக்காதே (ரூபன் மரியாம்பிள்ளை), விரக்தியும் அதன் விளைவுகளும் (ஆ. சௌந்தரலிங்கம்), குடித்தனமும் குடிப்பழக்கமும் (வின்சன்ற் பற்றிக்), தாழ்வுமனத் தூண்டல்கள் (சி.சாந்தலட்சுமி) ஆகிய 18 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87038).

9042

மனித வாழ்க்கை விழுமியங்கள். குமாரசாமி சோமசுந்தரம். தெகிவளை: ரஜி வெளியீடு, 16, 6/2, வண்டவேர்ட் பிளேஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

viii, 216 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-51144-3-1.

வாசகர்களிடையே அறிவு, திறன், மனப்பாங்கு, ஒழுக்கம் என்பவற்றில் நல்ல நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட மனித விழுமியங்கள் நூல் வரிசையில் ஆசிரியரின் ஐந்தாவது நூல் இதுவாகும். உயர்திணையில் மனிதர்கள், ஒப்புரவு எனும் மனித விழுமியம், நற்பழக்க வழக்கங்கள், சொன்ன சொல் தவறாமை, நன்மக்கட்பேறு எனும் அறம், அமைதிக்குப் பகை வெறுப் புணர்வு, நேரமுகாமைத்துவம் என இன்னோரன்ன தலைப்புகளில் இக்கட்டுரைகள் விரிகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் வானொலியில்

இவை வாரம்தோறும் வாசிக்கப்பட்டவை. அத்துடன் ஞாயிறுதோறும் தினக்குரல் பத்திரிகையிலும் எழுத்துருவில் பிரசுரமானவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218031).

158.3 உளவளத்துணை (counseling)

9043

உள நெருக்கீடும் மனநலனும். *சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1998. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

xii, *174 பக்கம், விலை: ரூபா 90., அளவு:* 21.5x14 *சமீ.*

நூலாசிரியர் வைத்தியர் சே. சிவசண்முகராஜா சுன்னாகம், கந்தரோடையைச் சேர்ந்தவர். 1993-95 காலப் பகுதிகளில் உள நெருக்கீடுகள் பற்றிய பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்களின் ஆய்வு முயற்சிகளில் இவரும் ஈடுபட்டவர். அக்காலகட்டத்தில் வலுவடைந்து வந்த போர்ச் சூழலில் சாதாரண மக்கள் உளநெருக்கீடுகளை எதிர்கொள்வதில் அவர்களின் பாரம்பரிய சமய சமூக கலாசார பழக்க வழக்கங்கள் எவ்வளவுதூரம் துணை நிற்கின்றன என்பது பற்றி வரலாற்று இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் கண்டறியும் நோக்கில் இந்நூலை எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 125006).

9044

துடுப்பு. *சுரனுதா அன்ரன் சுதாகரன். வல்வெட்டித்துறை: ம.அன்ரன் சுதாகரன், 9/8, பழைய ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2008. (யாழ்ப்பாணம்: ஜோய் பிரிண்டேர்ஸ்).*

viii, *66 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-51337-0-8.

உளநோயால் பாதிப்புக்குள்ளான ஒருவரை உள மருத்துவ விடுதியில் அனுமதிப்பது முதல் அவரது புனர்வாழ்வில் குடும்பத்தினர் எவ்விதம் நடைமுறை ரீதியாகப் பங்கேற்கலாம் என்பதை இந்நூலில் காணமுடிகின்றது. உளநோயுடையவர் விடுதியில் அனுமதிக்கப்படும் போது வழங்கப்படும் சிகிச்சைகள் பற்றிய பொதுவான அறிமுகம், உளநோயுடையவரை வீட்டில் பராமரித்தல், உளநோயுடை யவருடன் தொடர்புள்ள சில பிரச்சினைகளும் தீர்வுகளும், உளநோயுடையவரது குடும்பத்தினர் நெருக்கீடுகளை எதிர்கொள்ளச் சில அடிப்படை உத்திகள், என நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 221241).

9045

அளவை விளக்கம்: ஒரு தர்க்க நூல். த.இராமநாதபிள்ளை. பருத்தித்துறை: திரு.த.இராமநாதபிள்ளை, அதிபர், புலோலி ஆண்கள் கல்லூரி, புலோலி, 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).

(2), 144 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21.5x14 சமீ.

பத்து அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ள இத் தர்க்கவியல் நூலில், பதங்கள், சிந்தனை நியமங்கள், உடனனுமானம் (உடன் கருதல்), திட்டாந்தமும் உள்ளுறையும், வரைவிலக்கணம், வகுத்தல், காட்சியளவை, ஆராய்ச்சி முறை, வழியளவை, சில அந்நுவயங்களும் போலிகளும் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் வகை பிரித்து விளக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் கலைச்சொற்றொகுதியொன்றும் காணப் படுகின்றது.

9046

அளவையியல் மற்றும் மெய்யியல் பல்தேர்வு வினாக்கள் MCQ. க.கணேசராஜா. தஞ்சாவூர் 4: மகாவீர் பதிப்பகம், 70, மருத்துவக் கல்லூரி சாலை, 2வது பதிப்பு, ஜூலை 2011. 1வது பதிப்பு விபரம் இல்லை. (தஞ்சாவூர் 1: மாணிக்கம் பிரிண்டர்ஸ்).

120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ., ISBN: 978-955-53673-1-8.

மெய்யியல், அளவையியல் சிந்தனைகளை அறிந்துகொள்ள பல்தேர்வு வினாக்களின் வடிவில் இந்நூல் பயிற்சியளிக்கின்றது. ஐரோப்பிய மெய்யியல், இந்திய மெய்யியல், ஐரோப்பிய அளவையியல், இந்திய அளவையியல், குறியீட்டு அளவையியல், முஸ்லிம் மெய்யியல், ஒழுக்க மெய்யியல், கலா மெய்யியல், உளமெய்யியல் ஆகிய துறைகளுக்குரிய வினாக்கள் என்பன தனித்தனி அலகுகளாகவும் ஏனைய மெய்யியல் சார்பான வினாக்கள் தனியொரு அலகாகவும் இந்நூலில் தரப் பட்டுள்ளன. கலைச்சொற்களும், மேலைத்தேய மெய்யியலாளர்கள் எழுதிய நூல்களும் நூலின் இறுதியில் பட்டியலாகத் தரப்பட்டுள்ளன. நூலாசிரியர் ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 222047).

9047

அளவையியல்: வினாவிடைக் களஞ்சியம் பகுதி 2. க.கேசவன். அம்பனை: யுனைற்றெற் கல்வி நிலையம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம்தரப்படவில்லை. (வடலியடைப்பு: நித்தி அச்சகம்).

106 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20.5x13 சமீ.

அளவையியல் கல்வியின் அடிப்படைகளை வினாவிடை மூலம் இந்நூலில் விளக்குகின்றார். அளவையியல் தொடர்பாகப் பல நூல்களை எழுதியுள்ள இந் நூலாசிரியர், கொழும்பு - வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85795).

9048

அளவையியலும் விஞ்ஞான முறையும்: முதற் பகுதி. *ஆர்.டி.குணரத்தின (மூலம்), கு.உதயகுமார் , எம்.பி.எச்.முகம்மது (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, 2வது பதிப்பு, 1976, 1வது பதிப்பு, 1976. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).*

(3), 30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 *சமீ.*

தேசிய உயர் கல்விச் சான்றிதழ்ப் பரீட்சைக்குரிய நூல். அளவையியல்: தன்மையும் நோக்கெல்லையும், அளவையியலின் கருத்துப் பொருள் இயல்பு, உண்மையும் வாய்ப்பும், அளவையியலும் தொகுத்தறிவும், அளவையியலும் மொழியும், அளவையியல், மொழி, வரைவிலக்கணம், அளவையியலின் நிறைவான இயல்பு, அளவையியலும் கணிதமும், அளவையியலும் உளவியலும், அளவையியலின் பயன்பாடு, நியமமில் போலிகள், விஞ்ஞான முறை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் இறுதியில் இரு பயிற்சிகளும் காணப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225991).

9049

அளவையியலும் விஞ்ஞான முறையும்: இரண்டாம் பகுதி. *ஆர்.டி.குணரத்தின, எஸ்.வி.காசிநாதன். கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1977. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).*

(2), 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.*

கல்விப் பொதுத் தகுதிப் பத்திரம்(உயர்தர) வகுப்புக்கேற்ற வகையில் தயாரிக்கப் பட்ட இந்நூலின் ஆசிரியர்களான இருவரும் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாவர். நவீன அளவையியல், பாரம்பரிய அளவையியல் ஆகிய இரு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102478).

9050

அளவையியலும் விஞ்ஞான முறையும்: சிறு குறிப்புகள் பகுதி 1. *எஸ்.எஸ். மனோகரன். சுன்னாகம்: எஸ்.எஸ்.மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில், 1வது பதிப்பு, ஆனி 1994. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், மவுண்காமல் ரோட், குருநகர்).*

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 *சமீ.*

அளவையியலும் விஞ்ஞான முறையும்: சிறு குறிப்புகள் பகுதி 1. *எஸ்.எஸ். மனோகரன். சுன்னாகம்: எஸ்.எஸ்.மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில், 2வது திருத்திய பதிப்பு, ஆவணி 1996, 1வது பதிப்பு, ஆனி 1994. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L.1-14, *டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

82 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21.5x14.5 *சமீ.*

Logic and Scientific Methods *என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள நூல். அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடநெறிக்குரிய பயிற்சிக் கைநூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119860).*

9051

அளவையியலும் விஞ்ஞான முறையும்: GAQ வகுப்புக்குரியது: மெய்யியல் 2 கடந்தகால வினா-விடை. *க.கேசவன். கொழும்பு 6: க.கேசவன், ஆசிரியர், இந்து மகளிர் கல்லூரி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

80 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21.5x14.5 *சமீ.*

அளவையியல் கல்வியின் அடிப்படைகளை கடந்தகாலப் பரீட்சைகளின் வினா விடை மூலம் இந்நூலில் விளக்குகின்றார். அளவையியல் தொடர்பாகப் பல நூல்களை எழுதியுள்ள இந் நூலாசிரியர், கொழும்பு- வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126900).

9052

அளவையியற் சுருக்கம்: பகுதி 1. *எஸ்.எஸ். மனோகரன். யாழ்ப்பாணம்: பிறைற் சென்ரர், 1வது பதிப்பு, மார்ச் 1978. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம், யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்கம்).*

(3), 152 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 *சமீ.*

அளவையியல் ஆராயும் விடயம், அளவையியலும் ஏனைய இயல்களும், சிந்தனையின் தொழிற்பாடுகள், பதங்கள், பதங்களின் வகைகள், சிந்தனை விதிகள் அல்லது எண்ண விதிகள், பயனிலைத் தகவுகள் அல்லது பயனிலைத் தகவு அட்டவணை, வரைவிலக்கணம், பிரிப்பு முறையும் வகையீட்டு முறையும், எடுப்புக்கள், நியாயத்தொடை, நியாயத் தொடையின் உருவும் பிரகாரமும் ஆகிய 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122546).

9053

அளவையியற் போலிகள். *வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: மெய்யியற் கல்வி அகம்,* Academy of Philosophy, *46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புகள் கல்லூரி, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, 1998. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

40 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 *சமீ.*

அளவையியல் கற்கும் மாணவர்கள் போலிகள் பற்றிய அறிவில் எழும் குழப்பங்களைத் தெளிவுறக் களைந்து கொள்வதற்கு இவ்வாக்கம் உதவுகின்றது. நியமமில் போலி (அறியாமை நியாயப் போலி, முடிபு மேற்கோடற் போலி, அசித்தப் போலி), நியமப் போலி (அனுமான வடிவப் போலி, வரைவிலக்கண

முறையில் எழும் போலி, சொற்போலி) ஆகிய இரு பிரதான தலைப்புகளின் கீழமைந்த உப தலைப்புகளிற்கேற்ப இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126872).

9054

ஆய்ந்தறிதல் திறன். க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1993. (யாழ்ப்பாணம்: டினேஷ் பதிப்பகம், 64, புதுச் செம்மணி வீதி, கல்வியங்காடு).

34 பக்கம், விலை: ரூபா 20.00, அளவு: 20x14.5 சமீ.

நுண்மதி என்பது ஒருவரது இயல்பான ஆற்றலாகும். தன்னையும் தான் வாழ்கின்ற சூழலையும்பற்றிய பூரணமான விழிப்புணர்ச்சியே அதுவாகும். ஒருவரின் நுண்மதியைக் கணக்கிட நுண்மதி ஈவுப் பரீட்சைகளில் பல்வேறு அறிவுத்திறன்கள் பரீட்சிக்கப்படும். எண் அறிவு, மொழி அறிவு, சொல்லறிவு, தர்க்க அறிவு, கணித அறிவு, கட்புலனறிவு, எனப் பலவாறான புலமைகள் பரீட்சிக்கப்படும். அவ் வகையில் ஆய்ந்தறிதல் திறனும் (Reasoning Ability) ஒன்றாகும். இவை ஒருவனின் அறிவு, விவேகம், ஆளுமை, பொறுப்பேற்கும் திறன் என்பனவற்றை இனம் காட்டுகின்றன. இந்நூல் ஆய்ந்தறிதல் திறன் பற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றது. இதன்மூலம் ஒருவர் தனக்குள் குறிப்பிட்ட திறனை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகளை இனம்காணமுடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 92794).

9055

இந்திய அளவையியலில் அனுமானம்: தருக்க சங்கிரக அடிப்படையில். க.கணேச ராஜா. தஞ்சாவூர் 4: மகாவீர் பதிப்பகம், 70, மருத்துவக் கல்லூரி சாலை, மருத்துவக் கல்லூரி நடுவாயில் எதிர்ப்புறம், 1வது பதிப்பு, ஜூலை 2011. (தஞ்சாவூர் 1: மாணிக்கம் பிரிண்டர்ஸ்).

vi, 228 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 300., அளவு: 20.5x13.5 சமீ., ISBN: 978-955-53673-0-1.

இந்திய தத்துவ வரலாற்றில் நியாயத் தத்துவத்தின் பங்களிப்பு என்பது அளவையியல் அல்லது அறிவாராய்ச்சியியலில் முக்கியமாக அமையும். நியாயத் தத்துவத்தினை முறையாகப் பயின்ற சிறப்புடைய நையாயிக்கரானஅன்னம் பட்டர் அவர்கள் எழுதிய தர்க்க சங்கிரகம் எனும் நூல் இந்திய தத்துவஅளவையியலைத் தமிழ் மொழியில் முழுமையாக வெளிப்படுத்திய நூலாகும். அநநூலில் கூறப்பெறும் அனுமானக் கோட்பாட்டைப்பற்றி ஆசிரியர் இந்நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான க.கணேசராஜா முதுதத்துவமாணிப் பட்டத்தின் பொருட்டு மேற்கொண்ட ஆய்வு இதுவாகும். அறிமுகம், தருக்க சங்கிரகத்தின் முக்கியத்துவம், அனுமானத்தின் அறிவாராய்ச்சியியல் அம்சங்கள், தருக்க சங்கிரக அனுமானக் கோட்பாடு, பௌத்த அனுமானக் கோட்பாடு ஒப்பீட்டாய்வு, முடிவுரை ஆகிய இயல்களில் இந்நூல்

எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 222043).

9056

ஊடக அனுமானம்: ஓர் அறிமுகம். வே.யுகபாலசிங்கம். யாழ்ப்பாணம்: மெய்யியற் கல்வி அகம், Academy of Philosophy, 46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, இணை வெளியீடு, யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).

(2), 26 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20.5x14.5 சமீ.

An Introduction to Mediate Inference என்ற ஆங்கில உபதலைப்புடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அனுமானம், அறிவினைப் பெறும் வாயில்களில் ஒன்று. அனுமானம் பற்றிய ஆய்வு அளவையியலில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்நூலில் அனுமானத்தில் ஓரம்சமான ஊடக அனுமானம் பற்றியும் அதன் வடிவங்கள், அவற்றிற்கான விதிமுறைகள் பற்றியும் விளக்கப்படுகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129699).

9057

குறியீட்டுஅளவையியல். எஸ்.கே.கேசவதாசன். யாழ்ப்பாணம்: எஸ்.கே.கேசவதாசன், கம்பனை, சுழிபுரம், 1வது பதிப்பு, நவம்பர் 1989. (யாழ்ப்பாணம்: நித்தி அச்சகம்).

64 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21x14 சமீ.

அளவையியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களின் கற்றல் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட நூல். கணித அளவையியலின் அறிமுகம், அதன் வளர்ச்சிப் போக்கு, குறியீட்டு வாய்ப்பாட்டின் அமைப்பும் பயன்பாடும் ஆகியவற்றின் பின்புலத்தில் நின்று இந்நூல் குறியீட்டு அளவையியலை விளக்குகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85789).

9058

குறியீட்டு அளவையியல்: பெறுகைமுறை துணைப்பெறுகை. எஸ்.கே.கேசவதாசன். தெகிவளை: க.கேசவன், 219/8, காலி வீதி, இணைவெளியீடு, கார்த்திகேயன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (கொழும்பு: கார்த்திகேயன் பிரைவேற் லிமிட்டெட்).

iii, 63 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

இந்நூல் க.பொ.த. உயர்தர வகுப்பிற்குரிய அளவையியலும் விஞ்ஞான முறையும் என்னும் முதலாம் பகுதியில் பகுதி ஒன்றில் வரும் பெறுகைமுறை, துணைப் பெறுகைமுறை என்னும் பாடத்திட்டத்தை அனுசரித்து செய்கை முறைப் பயிற்சி, தரமாக வகுக்கப்பட்ட பயிற்சி வினாக்களை உள்ளடக்கியதாக ஆக்கப்பட்டுள்ளது. அளவையியல் தொடர்பாகப் பல நூல்களை எழுதியுள்ள இந்நூலாசிரியர்,

கொழும்பு - வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119017).

9059

விஞ்ஞானமுறை: நிகழ்தகவு, புள்ளிவிபரவியல், சிறுகட்டுரைகள். எஸ்.எஸ். மனோகரன். சுன்னாகம்: எஸ்.எஸ்.மனோகரன், உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில், 1வது பதிப்பு, ஆவணி 1996. (வவுனியா: விசாலா அச்சகம்).

100 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ.

Logic Part 2 A/L என்ற ஆங்கிலத் தலைப்புடனும் வெளிவந்துள்ள நூல். அளவையியலும் விஞ்ஞான முறையும் என்ற பாடநெறிக்குரிய பயிற்சிக் கைநூல். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119161).

9060

விஞ்ஞான முறைச் சுருக்கம்: பகுதி 2. க.கேசவன். தெகிவளை: க.கேசவன், கோபிகா பதிப்பகம், 219/8, காலி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1996. (கொழும்பு 5: சரசு பப்ளிக்கேஷன்ஸ், 215, D 2/8, பார்க் வீதி, நாரஹென்பிட்டி).

(2), 88 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 18.5x12.5 சமீ.

அளவையியலும் விஞ்ஞான முறையும் என்னும் பாடநெறிக்கு ஓர் அறிமுகமாக இந்நூல் அமைகின்றது. விஞ்ஞான முறை, விஞ்ஞானம், விஞ்ஞான வகைகள், பொய்ப்பித்தல் கோட்பாடு, கருதுகோள், அவதானமும் பரிசோதனையும், காரண-காரியத் தத்துவம், நிகழ்தகவு, உய்த்தறிவு அனுமானம், உய்த்தறிவு அல்லாத அனுமானம், பிரிப்பு முறை, வகையீடு, வரைவிலக்கணம், சமூக விஞ்ஞானம், அளத்தல், புள்ளிவிபரவியல், சோடிப்பதங்கள், சிறு குறிப்புகள், மில்லின் முறைகள், விஞ்ஞான முறையியலாளர், விஞ்ஞானிகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், கட்டுரைக் குறிப்புக்கள் ஆகிய 23 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர், கொழும்பு- வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119216).

9061

விஞ்ஞான முறையியல்: புதிய பாடத்திட்டம். செ.சந்திரராஜா. கொழும்பு 5: சரசு வெளியீட்டகம், 215, D 2/8, பார்க் வீதி, நாரஹென்பிட்டி, 2வது பதிப்பு, ஏப்ரல் 1994, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (கொழும்பு 13: லக்சு கிராபிக் பிறைவேட் லிமிட்டெட், 98 விவேகானந்தா மேடு).

104 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 21.5x14 சமீ.

Scientific Methodology எனப்படும் விஞ்ஞான முறையியல் பாடநெறிக்கான அறிமுகம். சமூக விஞ்ஞான முறையியல், இயற்கை விஞ்ஞான முறையியல் ஆகிய இரு பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பிரிவில்

உளவியல், பொருளியல், அரசியல் விஞ்ஞானம் ஆகிய தலைப்புகளிலும், இரண்டாம் பிரிவில் பிரபஞ்சவியல், மருத்துவ விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிகவியல்-இரசாயனவியல், விஞ்ஞான முறையியலாளர், மெய்யியல், விஞ்ஞானக் கட்டுரைக் குறிப்புகள் ஆகிய தலைப்புகளிலும் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104733).

9062

விஞ்ஞானிகளும் விஞ்ஞான விளக்கங்களும்: அளவையியலும் விஞ்ஞான முறையும். A.S.H.*சந்திரராஜா. யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).*

vi, *68 பக்கம், விலை: ரூபா 15., அளவு:* 21.5x14.5 *சமீ.*

க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தில் அளவையியலும் விஞ்ஞான முறையும் முக்கியமான ஒன்றாகும். விஞ்ஞான முறையின் வளர்ச்சியினையும், பிரயோகத் தினையும் தெரிந்திருப்பதற்கு விஞ்ஞானிகள் பற்றியும், அவர்களது கண்டுபிடிப்புகள் -அதன் முறையியல் முக்கியத்துவம் பற்றியும் அறியவேண்டியது அவசியமாகின்றது. சமூக விஞ்ஞான விதிகள், கொள்கைகள் பற்றியதான இந்நூலில் உளவியல், பொருளியல், அரசியல், இயற்கை விஞ்ஞான விதி-கொள்கைகள், விஞ்ஞானிகள் ஆகிய பிரிவுகளின்கீழ் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் என்ற பிரிவின்கீழ், மெய்யியலாளர்கள், உளவியலாளர்கள், மருத்துவ விஞ்ஞானிகள், இரசாயனவியலாளர்கள், பௌதிகவியலாளர்கள், வானியலாளர்கள், உயிரிய லாளர்கள் ஆகியோர் பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102490).

170 ஒழுக்கவியல்

9063

அறநெறிப் பாமஞ்சரி. *சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: திருவாட்டி சின்னம்மா இராமலிங்கம் அவர்கள் ஞாபகார்த்த வெளியீடு, நாயன் மார்கட்டு, 1வது பதிப்பு, மே 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்).*

ix, *184 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 18.5x12.5 *சமீ.*

தமிழறிஞர் சொக்கன் கருத்துரை, விளக்கவுரைகளுடன் தொகுத்தளித்துள்ள அறநெறிப்பா மஞ்சரி. சேர்.பொன் இராமநாதன் அவர்களின் ஆத்திசூடி மந்திர விளக்கம் என்ற சிறு நூலும் சேர்ந்தது. சிறுவர்கள் கருத்தறிந்து மனனஞ் செய்வதற் கேற்ற வகையில் இப்பாமஞ்சரி உருவாக்கப்பட்டுள்ளது. கல்வியின் சிறப்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர், மானவீரம், நல்லாரைப் பொறுத்ததே நானிலம், யாதும் ஊரே யாவருங் கேளிர், உழவும் வாணிகமும், மாட்சிபெறு மன்னன், முனிபுங்கவர்களின் தவநிலை மாண்பு, நன்மக்களைப் பெற்றோரை நாடுஞ்சிறப்பு, நயனில் மாக்கள், பெற்றோர்க்குப் பெண்களில் ஏதுரிமை,

மண்ணாசை அழிவிற்கே வித்து, இளங்கோவடிகளின் இன்னுரை, சாத்தன் வகுத்துரைத்த நல்லறம், வள்ளுவன் வாய்மொழி, சமண முனிவர்களின் சால்புரை, இனியவை எவை, கணிமேதையாரின் அணியுரை, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, வெற்றிவேற்கை, நன்னெறி போன்ற 35 இன்னோரன்ன தலைப்புகளின்கீழ் இவை தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135032).

9064

எங்கள் ஆசான் அருள்மொழிகள்: யோக சுவாமிகள் தம் அன்பர்களுக்குக் கூறியவை. அ.செல்லத்துரை (தொகுப்பாசிரியர்). செங்கலடி: அ.செல்லத்துரை, சிவதொண்டன் நிலையம், 2வது பதிப்பு, மார்ச் 1986, 1வது பதிப்பு, 1976. (யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம், 411/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார் பண்ணை).

viii, 116 பக்கம், தகடு, விலை: ரூபா 12., அளவு: 19x12.5 சமீ.

யாழ்ப்பாணத்துச் சிவயோக சுவாமிகள் தன்னை நாடி வரும் அன்பர்களுக்கு உபதேசித்தருளிய அருள்மொழிகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. சுவாமியுடன் கூடி வாழ்ந்த காலங்களில் தொகுப்பாசிரியரும் வேறு சில அணுக்கத் தொண்டர்களும் நேரில் கேட்டனவும், பல பழைய அன்பர்களால் தெரிவிக்கப் பட்டவையுமாகிய சுவாமிகளின் அருள்மொழிகளே இவை. கிழக்கு மாகாணம், செங்கலடியில் உள்ள சிவதொண்டன் நிலையத்தைச் சேர்ந்த அ.செல்லத்துரை என்பார் தொகுத்தளித்த இந்நூல் சுவாமிகளின் 22ஆவது குருபூசை நினைவு வெளியீடாக 22.3.1986 அன்று இரண்டாவது பதிப்பாக வெளியிடப்பட்டது.

9065

ஔவையார் அருளிய மூதுரை என அழைக்கப்படும் வாக்குண்டாம் மூலமும் உரையும். சி.குமாரசாமி. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

பூபாலசிங்கம் புத்தகசாலையின் நீதிநூல் வரிசையில் மூன்றாவது நூலாக வெளி வந்துள்ளது. சிறுவர்க்கேற்ற எளிய உரைநடையில் வித்துவான் சி.குமாரசாமி உரைவழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 120084).

9066

சுவாமி சதானந்தர் நற்போதனை. சபா சிவாநந்தன் (தொகுப்பாசிரியர்). ஒன்ராரியோ: ஆத்மஜோதி நிலையம், இந்து சமயப் பேரவை, 80, Barbados Blvd, Unit 4, Scarborough, Ontario, M1K 1K9, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (கனடா: விவேகா அச்சகம், ரொரன்டோ).

x, 55 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 21.5x14 சமீ.

தவசீலர் சதானந்த சுவாமிகள் 6.5.1896இல் புங்குடுதீவில் பிறந்தவர். அகவை 87இல் 30.1.1983இல் அமரத்துவம் அடைந்தவர். இவர் சுவாமி சிவானந்தரைக் குருவாகக் கொண்டவர். அவரிடம் ஞானோபதேசம் பெற்றுத் துறவுபூண்டவர். சப்த தீவுகளின் தெய்வநெறிக்கழகத்தை வழிநடத்தியவர். சுவாமிகள் தானே எழுதிவைத்திருந்த அருள்மொழிகளைத் தேடிப் பெற்று புங்குடுதீவு மத்தி திரு. சபா சிவாநந்தன் (கு.ச.நந்தனார், தாட்சாயணி) இத்தொகுப்பை தொகுத்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133641).

9067

பசுவின் கதை. ஸ்ரீ லங்கா புத்தகசாலை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப் பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்-புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

கர்நாடக மாநிலத்தில் வழக்கிலிருந்த "தரணி மண்டல மத்ய தொலகே..." என்று தொடங்கும் ஒரு கன்னட மொழி நாட்டார் பாடல் புண்யகோடி என்ற பசுவின் கதையாகும். இந்திய நீதிக்கதையாக வழிவழியாகப் போதிக்கப்பட்ட இக்கதையின் படி காளிங்கன் என்ற இடையன் பராமரித்த பசுக்களில் ஒன்றான புண்யகோடி ஒரு நாள் பசித்திருந்த புலியிடம் அகப்படுகின்றது. பசுவோ புலியிடம் இரந்து தன் கன்றுகள் பசியால் வாடுவதாகவும், இருப்பிடம் சென்று அவற்றிற்குப் பால் வழங்கிவிட்டு புலியின் பசிபோக்க மீள வருவதாகக் கூறுகின்றது. புலியோ பசு திரும்பி வருவதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்கிறது. பசுவும் தான் செய்த சத்தியம் தவறித் திரும்பி வராவிட்டால் 70 வகையான பாவங்களைப் பட்டியலிட்டு அப்பாவங்களைச் செய்தவர்கள் செல்லும் நரகத்திற்கே தான் போய்ச்சேர்வே னென்று கூறுகின்றது. புலியும் புண்யகோடி என்ற அப்பசுவை நம்பி வீடுதிரும்ப விட்டுவிடுகின்றது. பசுவும் தன் கன்றுகளிடம் மீண்டு அவற்றிற்குப் பால் வழங்கிவிட்டு, தன்நிலையை எடுத்துக்கூறி, தான் புலிக்குப் பலியாகச் செல்ல முடிவெடுத்துள்ளதைத் தெரிவிக்கிறது. கன்றுகளும் காளிங்கனின் மற்றைய பசுக்களும் புண்ணியகோடியை புலியிடம் திரும்பவிடாது தடுக்க முயல்கின்றன. சத்தியம் தவறாத பசு அவர்களுக்கு உரிய ஆறுதல் சொல்லிப் புலியிடம் இரையாகச் செல்கின்றது. பசுவை மீண்டும் கண்ட புலியோ மனம்மாறி, சத்தியம் தவறாத உன்னைப் புசித்துத் தான் பாவம் தேடி நரகத்திற்குச் செல்வதைவிட பட்டினியால் தன்னுயிரையே மாய்த்துக்கொள்வது மேல் என்று மலையுச்சியிலிருந்து வீழ்ந்து மடிகின்றது. இக்கதையே தமிழ் வடிவில் சிறு மாற்றங்களுடன் இந்நூலில் பசுவின் கதையாக இடம்பெறுகின்றது.

9068

விவேகானந்த தத்துவ வித்துக்கள். வெற்றிவேல் விநாயகமூர்த்தி. மட்டக்களப்பு: முத்தமிழ்ப் பண்ணை, 2, வன்னியனார் தெரு, 1வது பதிப்பு, மார்கழி 1994. (மட்டக்களப்பு: நியூ கீன், 73, முனைத்தெரு).

xii, *(7), 93 பக்கம், விலை: ரூபா 60., அளவு:* 18x12 *சமீ.*

எளிய முறையில் சுவாமி விவேகானந்தரின் தத்துவங்களை விளக்குவதாக அமையும் 34 சிறு கட்டுரைகளினதும் இரு பாடல்களினதும் தொகுப்பு இதுவாகும். சுவாமி நூற்றாண்டு விழாக்கள், தலையெடுத்தாடும் தகாத செயல்கள், சந்தர்ப்ப சமயவாதிகள் சிலர், சமயமும் ஆன்மீகமும், ஆன்மாவின் நிலை, உள்ளத்தே உள்ளது, துணிந்துசெல்ல எழுச்சியூட்டல், பரம்பொருள், ஆன்மா பரம்பொருளே, சொர்க்கம் நமக்குள்ளே, சச்சிதானந்தம், மனித தெய்வத்தன்மை, மூடநம்பிக்கை, ஒடுக்கமும் விரிவும், அறிவு-மனம்-ஆவி, விதி என்பதெது, மனிதப் பிறவியும் மறுபிறவியும், பிராணன், அழியா மனப்பதிவு, கடவுள் எங்கே?, இணையற்ற பாடல், மனங்களைப் புரட்டிய மதப்பிரசங்கம், கவித்துவம் மிகுந்த கவிஞர்கள், விவேகானந்த அலைக்குள் விபுலானந்தர், உணவும் உடம்பும், ஏழைக்கிரங்கும் இதயங்கள், கடவுளைத் தேடி, பிணம் என்று இகழாதீர், ராஜயோகத்தில் சில, விவேகானந்தர் சம்பாஷணைகள், சுவாமியை வலியுறுத்தும் வசனங்கள் சில, சுவாமி விவேகானந்தர் ஜீவிதத்தில் சில, சுவாமியின் பொன்மொழிகள் சில, இராமகிருஷ்ண மிஷன் (பாடல்), இல்லறத் துறவற இயல்பு (பாடல்), மீண்டும் நினைவுகூர்தல் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 111531).

9069

திருக்குறள் ஆய்வுரை: பாகம் 1. *ஆ.வடிவேலு. பருத்தித்துறை: ஆ.வடிவேலு, ஓய்வுநிலை அதிபர், 1வது பதிப்பு, ஆனி 2013. (பருத்தித்துறை: தீபன் பதிப்பகம், பிரதான வீதி).*

xxviii, *113 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 350., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-44548-0-4.

திருக்குறள் பற்றிய ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய நூல். அறநூல்களைப் படிப்பதிலிருந்து பின்வாங்கிவரும் ஒரு இளைய தலைமுறையினரை மீளவும் அந்நூல்களின்பால் அக்கறைகொள்ளச்செய்யும் நோக்கம் இந்நூலின் உருவாக்கத்தின் பின்புலமாயமைந்துள்ளது. இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ள குறட்பாக்களும் பெரும்பாலும் எமது அன்றாட வாழ்வோடு தொடர்புபட்டவையாக அமைந்துள்ளன.

9070

நளோபாக்கியானமும் இதோபதேசமும். *கே.எம்.செல்வரத்தினம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1965. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).*

x, *126 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு:* 21.5x14 *சமீ.*

சித்தன்கேணியைச் சேர்ந்த கே.எம். செல்வரத்தினம் அவர்களின் மொழிபெயர்ப்பும், இலக்கணக் குறிப்புகளும் கொண்ட நூல். முகவுரை, குறிப்புச் சொற்கள், கதை விளக்கம் ஆகிய பகுதிகளை அடுத்து நூலின் பிரதான பகுதியான நளோபாக்கி

யாயனம் சர்க்கம் 4, சர்க்கம் 5 ஆகியவற்றுடன் இதோபதேசத்தின் தொடக்கத்தில் அமைந்த முதல் ஆறு கதைகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87162).

180 இந்து தத்துவம் (சைவ சித்தாந்தம்)

9071

இந்து நாகரிகத்தில் நுண்கலைகள்: பாகம் 1. *சின்னத்துரை சோதிலிங்கம். யாழ்ப்பாணம்: தேன்மொழி சோதிலிங்கம், செல்வகம், இணுவில் கிழக்கு, காரைக்கால் வீதி, இணுவில், 1வது பதிப்பு, 2003. (இணுவில்: யோகநாதன் கிரபிக்ஸ்அன் ஒப்செட் பிறின்ரேர்ஸ், காங்கேசன்துறை வீதி).*

iv, *250 பக்கம், விலை: ரூபா 250., அளவு:* 20x14.5 *சமீ.*

மல்லாகம் மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராகப் பணியாற்றிய சி.சோதிலிங்கம் அவர்கள் எழுதியுள்ள இந்நூல் இந்துநாகரிகத்தில், குறிப்பாக நுண்கலைகள் பற்றிப் பேசும் நூலாகும். நுண் கலைகள் ஓர் அறிமுகம், நுண்கலைகளில் கட்டடக்கலை, பல்லவர் காலக் கட்டடக்கலை, சோழர்காலக் கட்டடக்கலை, விஜயநகர காலக் கட்டடக்கலை, நாயக்கர்காலக் கட்டடக்கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, தென்னாட்டு ஓவியங்கள் ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9072

இந்து நாகரிகத்தில் வேதங்கள். *சோமாஸ்கந்தராஜக் குருக்கள். பருத்தித்துறை: நெல்லண்டையான் வெளியீடு, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குருவும் அர்ச்சகரும், தும்பளை, 1வது பதிப்பு, தை 1992. (கொழும்பு 11: ஸ்டான்கார்ட் பிறின்டர்ஸ் லிமிடெட்).*

52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.*

வேதங்கள் பற்றிக்கூறும் இந்நூலில் ஒன்பது இயல்களில் முறையே வேதங்கள், இருக்கு வேதம், இருக்கு வேதத்தில் வணங்கப்பட்ட தெய்வங்கள், இருக்குவேத பொதுவான அம்சங்கள், இருக்குவேத கால சமயநிலை, இயசூர வேதம், சாம வேதம், அதர்வண வேதம், வேதங்களின் பெருமை ஆகிய ஒன்பது இயல்கள் உள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 99052).

9073

இந்து நாகரிகத்திற் கலை. *காரை செ.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம்).*

xviii, *228 பக்கம், விலை: ரூபா 140., அளவு:* 21.5x14 *சமீ.*

இந்நூல் இந்தியப் பெருங்கண்டத்தில் சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்து வளர்ச்சி பெற்று வந்த கலைகள் பற்றி ஆராய்கிறது. சமயஞ்சாராத கலைகள் பற்றி ஓரளவு சொல்லப்பட்டபோதும், இந்து நாகரிகத்துடன் தொடர்புடைய சமயஞ் சார்ந்த கலைகள் பற்றியே ஆழமாக விபரிக்கப்பட்டுள்ளது. தோற்றுவாய், சிந்துவெளி நாகரிகம், மௌரியருக்கு முற்பட்ட கலை, மௌரியர் கலை, இந்தியக் கலை (கி.மு.200-கி.பி.300 வரை), குப்தர் காலக் கலை, முற்காலச் சாளுக்கியர் கலை, எல்லோரா எலிபந்தா குகைகள், சோளங்கிக் கலை, ஹொய்சளர் பாணி, தமிழகக் கலைகள் (சங்ககாலம், சங்கம் மருவிய காலம்), பல்லவர் காலம், அதியமான் கோயில்கள், சோழர் காலம், பாண்டியர் காலம், விஜயநகரர் காலம், நாயக்கர் காலம், உலோகத் திருமேனிகள், ஓவியங்கள், இசைக்கலை, நடனக் கலை, நாடகக் கலை, தமிழகமும் நாடகமும், நிறைவுரை ஆகிய 24 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104856).

9074

இந்து நாகரிகம்: இந்து சமயம் ஜீ.சீ.ஈ., உயர்தரம், ஜீ.ஏ.கியு, பீ.ஏ. *எம்.எம். ரதன். வவுனியா: எஸ்.ஆர்.ஏ. பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (வவுனியா: டிஜிட்டல் பிரின்டர்ஸ்).*

100 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 22x14 *சமீ.*

இந்து நாகரிகம் பற்றிய பல தகவல்களை சிறுகுறிப்புகளின் வழியாக இந்நூல் வழங்குகின்றது.

9075

இந்து நாகரிகம்: இரண்டாம் பாகம். *க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், 235 காங்கேசன்துறைச்சாலை, 1வது பதிப்பு, ஜனவரி 1996. (யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய அச்சகம்).*

(5), 189 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x15 *சமீ.*

இந்து சமய பக்தி நெறி, இலங்கையில் இந்து சமயம் ஆகிய இரு பாடப்பிரிவுகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. இந்து சமய பக்தி நெறி என்ற முதற் பிரிவில் தென்னிந்திய சைவநெறி, சைவ பத்தி இயக்கம், தென்னிந்திய வைணவநெறி, வைணவ பத்தி இயக்கம் ஆகிய பாடங்களையும், இலங்கையில் இந்துசமயம் என்ற இரண்டாம் பிரிவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், அனுராதபுரக் காலம், பொலநறுவைக் காலம், இடைக்காலம், ஐரோப்பியர் காலம், இக்காலம் ஆகிய பாடங்களையும் உள்ளடக்குகின்றது. வித்துவான் க.சொக்கலிங்கம், சொக்கன் என இலக்கிய உலகில் நன்கு அறியப்பெற்றவர்.

9076

இந்து நாகரிகம்: ஈழத்து இந்துமத வரலாறு. *சி.கணேஷ் (தொகுப்பாசிரியர்). குப்பிளான்: கற்பகம் கலைக்கூடம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: கஜனி அச்சகம்).*

192 பக்கம். விலை: ரூபா 330., அளவு: 20x14.5 *சமீ.*

அறிமுகம், புராதன காலம், அனுராதபுரக் காலம், பொலன்னறுவைக் காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்தானியர் காலம், இருபதாம் நூற்றாண்டு, இலங்கையில் இந்து ஆலயங்கள், சமயப் பெரியார்கள், இலங்கையில் இந்து சமய நிறுவனங்கள், ஈழத்துச் சித்தர் வரலாறு, ஈழத்து நாட்டார் சமய வழக்காறுகள், ஈழத்தில் கண்ணகி வழிபாடு, ஈழத்து இந்து மன்னர்கள், இராசதானிகளில் சைவப் பரம்பல், சைவ பௌத்த உறவு, இலங்கையில் இந்து சமயமும் பிற சமயங்களும், ஆகிய 19 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9077

இந்து நாகரிகம்: 852 வினா-விடை: பகுதி 1. *செ.கந்த சத்தியதாசன். யாழ்ப்பாணம்: திகழ் கல்வி நிலையம், காங்கேசன்துறை வீதி, இணுவில், 1வது பதிப்பு, 1999. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).*

(5), 86 பக்கம், விலை: ரூபா 69., அளவு: 21.5x14 *சமீ.*

இந்து நாகரிகம் பயிலும் மாணவர்களுக்கேற்ற 852 வினா-விடைகள் அடங்கிய தொகுப்பின் முதலாவது பகுதி இதுவாகும். சைவசித்தாந்த பண்டிதரான நூலாசிரியர், யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியராவார். பலாலி ஆசிரியர் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியராகப் பயிற்சிபெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரியாக இந்து நாகரிகத்துறையில் சிறப்புப் பட்டமும் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129116).

9078

இந்து நாகரிகம்: ஏ.எல். 723 வினா-விடை. *செ.கந்த சத்தியதாசன். யாழ்ப்பாணம்: நியூட்டன் உயர் கல்வி நிறுவனம், ஆரியகுளம் சந்தி, 342 ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், நல்லூர்).*

(3), 62 பக்கம், உருவப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 21.5x14.5 *சமீ.*

அருட்சொல்வாரி, சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் செ.கந்தசத்தியதாசன், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் ஆசிரியராவார். தாம் கற்றதனூடாகவும், கற்பித்தலினூடாகவும் இந்து நாகரிகம் என்னும் துறையில் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைத் திரட்டி மாணவர் நலன்கருதி 723 வினாக்களைத் தேர்ந்து அவற்றுக்கான விடைகளையும் பதிவுசெய்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131790).

9079

இந்து நாகரிகம் A/L, G.A.Q., B.A. ஈழத்து இந்துமத வரலாறு பாகம் 4. *சி.கணேஷ். குப்பிளான்: கற்பகம் கலைக்கூடம், 1வது பதிப்பு, மார்ச் 2008. (வவுனியா: சூரியா அச்சகம், கந்தசாமி கோவில் வீதி).*

iv, *184 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 20x14.5 *சமீ.*

இருபது அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலில், அறிமுகம், புராதன காலம், அனுராதபுரக் காலம், பொலநறுவைக்காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், பிரித்தானியர் காலம், இருபதாம் நூற்றாண்டு, இலங்கையில் இந்து ஆலயங்கள், சமயப் பெரியார்கள், இலங்கையில் இந்து சமய நிறுவனங்கள், ஈழத்துச் சித்தர் வரலாறு, ஈழத்து நாட்டார் சமய வழக்காறுகள், ஈழத்தில் கண்ணகி வழிபாடு, ஈழத்து இந்து மன்னர்கள், இராசதானிகளில் சைவப் பரம்பல், சைவ பௌத்த உறவு, இலங்கையில் இந்து சமயமும் பிற சமயங்களும் ஆகிய தலைப்புகளில் ஈழத்து இந்துமத வரலாறு விபரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 200037).

9080

இந்து நாகரிகம்: க.பொ.த. உயர்தரப் பரீட்சை. *எம்.மனோகரன். கொழும்பு 13: குளோபல் பப்ளிக்கேஷன்ஸ், 195, ஆட்டுப்பட்டித் தெரு, 1வது பதிப்பு, 2000. (அச்சக விபரம் தரப்படவிலலை).*

43 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 27.5x21 *சமீ.*

1997-1999 ம் ஆண்டுகளுக்கான மூன்றாண்டுகளுக்குரிய வினாத்தாள்களையும் அவற்றுக்குப் பொருத்தமான விடைகளையும் உள்ளடக்கிய இந்நூல், 2000ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் இந்து நாகரிகம் பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டுள்ளது. மேல்மாகாண இந்து சமய ஆசிரிய ஆலோசகரான நூலாசிரியர், பீ.ஏ. கல்வியியல் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்.

9081

இந்து நாகரிகம்-சில பார்வைகள்: க.பொ.த. உயர்தரம். *சின்னத்துரை சோதிலிங்கம். யாழ்ப்பாணம்: தேன்மொழி சோதிலிங்கம், செல்வகம், இணுவில் கிழக்கு, காரைக்கால் வீதி, இணுவில், 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி கணினி அச்சகம், 1227,கே.கே.எஸ் வீதி, பூநாறி மரத்தடி).*

(3), 157 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20x14.5 *சமீ.*

மல்லாகம் மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரிஆகியவற்றில் ஆசிரிய ராகப் பணியாற்றிய சி.சோதிலிங்கம் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவைகருதி எழுதிய நூல் இது. இந்து நாகரிகம் பற்றிய பல்லவர்கால சமய வரலாறு, காஷ்மீர சைவம், தோத்திரமும் சாஸ்திரமும் ஆகிய பிரதான நான்கு கேள்விகளுக்கு விரிவான விடையளிக்கும் நான்கு கட்டுரைகளுடன், சித்தாந்த சாஸ்திர நூல்களிலே திருவருட்பயன், இந்துக்களின் ஒழுக்கவியல் பண்புகள், காரைக்கால் அம்மையார், மனுதர்ம சாஸ்திரம், தஞ்சைப் பெருங்கோயில், ஸ்ரீ தக்ஷண கைலாசபுராணம், வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயம், வானவன் மாதேவி ஈஸ்வரம், இலிங்கோற்பவ மூர்த்தமும் வழிபாடும், தட்சிணா மூர்த்தமும் அதன் வழிபாடும், திருமந்திரமும் அதன் வழிபாடும், திருமந்திரமும் அது காட்டும் வாழ்வு முறையும், நாயக்கர்கால கோபுரங்கள், சிவஞானபோதம்,

சிவஞான சித்தியார், நம்மாழ்வார் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 15 கட்டுரைகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

9082

இந்து நாகரீகம்: சுருக்க வினாவிடை: க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது. சின்னத்துரை சோதிலிங்கம். இணுவில்: தேன்மொழி சோதிலிங்கம், செல்வகம், இணுவில் கிழக்கு, 1வது பதிப்பு, ஜுன் 2003. (யாழ்ப்பாணம்: கலையகம் கம்பியூட்டர் சேவையும் ஸ்கிரீன் பிரின்டிங் சேவையும், சுண்டிக்குளி).

(3), 200 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14 சமீ.

இணுவில் மத்திய கல்லூரியினதும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினதும் பழைய மாணவரான இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இளங்கலை மாணி, கல்விப்பின் டிப்ளோமா பட்டங்கள் பெற்றவர். ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட இவர், கடந்த காலங்களில் தாம் கற்றதனூடாகவும், கற்பித்தலினூடாகவும், விடைத்தாள்களை புள்ளியிடுவதினூடாகவும் இந்துநாகரிகம் என்னும் துறையில் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைத் திரட்டி மாணவர் நலன்கருதி இந்நூலை வெளியிட்டுள்ளார். இதில் சிந்துவெளி நாகரிகம், வேதம் காட்டும் நாகரிகம், ஆகமம் காட்டும் நாகரிகம், இதிகாசங்கள் காட்டும் சமயம், புராணங்கள் சித்தரிக்கும் சமயம், தர்ம சாஸ்திரங்கள், சண்மதப் பிரிவுகள், சித்தாந்த சாஸ்திர நூல்கள், விக்கிரகவியல், நுண்கலைகள், சமய குரவர்கள் நால்வர், வடநாட்டுப் பத்திநெறி, வேதாந்தவாதிகள், சித்தாந்தக் கோட்பாடுகள் ஆகிய 14 பாடப்பரப்புகளில் இந்நூல் உள்ளடக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 191002).

9083

இந்து நாகரீகம்: சுருக்கமான வினாவிடைகள். வெ.யுகசீலன். பருத்தித்துறை: வெ.யுகசீலன், கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, 1வது பதிப்பு, 2010. (பருத்தித் துறை: தமிழ்ப் பதிப்பகம், பிரதான வீதி, மருதடி).

(3), 122 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20x14.5 சமீ.

இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு ஏற்றவகையில் எழுதப்பட்டுள்ளது. சிந்துவெளி நாகரிகம், வேதம். ஆகமம், புராணம், உபநிடதம், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள், சைவசித்தாந்தம், வேதாந்தம், சாஸ்திர நூல்கள், சந்தான-சமய குரவர்கள், திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம், தோத்திரப் பாடல்கள், அறுவகைச் சமயங்கள், தமிழக வரலாற்றுக் காலங்கள், பெரியபுராணம், ஆறுமுக நாவலர், விபுலானந்தர், விவேகானந்தர், ஈழத்துச் சமய நிறுவனங்கள், குப்த, குஷரண, மௌரியர்காலம், இந்துவிக்கிரகவியல், ஆச்சிரம தர்மம், நடனக் கலையும் இசைக் கலையும், ஈழத்து சைவாலயங்கள், இந்துசமய கோட்பாடுகள், வடநாட்டு வைணவபக்தி இயக்கம், தென்கிழக்காசியாவில் சைவம், இலங்கையில் சைவம், இந்து சமூக சீர்திருத்த இயக்கங்கள், தமிழ்நாட்டில்

சைவ, வைணவ பக்தி இயக்கம், ஈழத்துச் சமய இலக்கியங்கள், பொதுவானவை ஆகிய 32 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9084

இந்து நாகரீகம்: பகுதி 1. *இ.க.சிவஞானசுந்தரம். கொழும்பு 6: தென்றல் பப்ளிக் கேஷன்ஸ், 135, கனல் பாங்க் வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2002. (சென்னை 600001: மாணவர் மறுதோன்றி மையம், 9, கங்குராம செட்டி வீதி).*

(5), 140 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 160., அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 955-8621-32-3).

சிந்துவெளி நாகரீகமும் சமயமும், சிந்துவெளி நாகரீகத்தில் மக்களின் சமூகநிலை, சிந்துவெளி நாகரீக தொல்பொருட்கள் இந்து சமயத்தின் புராதன நிலையைப் பிரதிபலிக்கும் பாங்கு, சைவத்தின் அடிப்படை நூல்கள் (வேதம், ஆகமங்கள், உபநிடதங்கள், தர்மசாஸ்திரங்கள் (ஸ்மிருதிகள்), புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள் - சித்தாந்த நூல்கள்), சித்தாந்த சாஸ்திரங்கள் - சைவ சித்தாந்த சாஸ்திரங்கள், குப்தர்கால இந்துசமய வளர்ச்சியும் கலைப்பெருக்கமும், தீட்சை, ஆன்மீக விடுதலைக்குச் சைவ சித்தாந்தம் கூறும் வழிவகைகள், வழிபாட்டுக்கான நெறிகள் (காணபத்திய நெறி, சௌர நெறி, வைணவ நெறி, சைவ நெறி, சாத்த நெறி, கௌமார நெறி, அநுபூதி நெறி), சித்தாந்தக் கோட்பாடுகள், சைவ சித்தாந்தம், வேதாந்தம் (அத்துவைதம், விசிட்டாத்துவைதம், துவைதம்), வீரசைவம், காஷ்மீர சைவம், புறச்சமயத் துறைகள், சமய தத்துவங்கள், நாம் போற்றும் சான்றோர் (ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், மகாத்மாகாந்தி அடிகள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்), சமய குரவர் நால்வர் வளர்த்த பக்தி இயக்கம் ஆகிய 18 பிரிவுகளின்கீழ் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 136788).

9085

இந்து நாகரீகம்: பாகம் 1: வேதங்கள், குப்தர் காலம், பல்லவர் காலம். *சிவபாதம் கஜேந்திரகுமார். வவனியா: சிவ.கஜன், கற்பகம் கலைக்கூடம், 172, கண்டிவீதி, 2வது பதிப்பு, ஏப்ரல் 2010, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (வவுனியா: எவரெடி பதிப்பகம், இல.24, 2ம் குறுக்குத் தெரு).*

xiv, *80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 20.5x14.5 *சமீ.*

இந்நூல் வேதங்கள், குப்தர் காலம், பல்லவர் காலம் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் எழுதப்பட்டுள்ளது. வேதங்கள் என்ற முதற் பிரிவில் இருக்கு வேதம், யசூர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம், வேதகால வினாக்களும் விடைகளும் ஆகிய உபதலைப்புகளும், குப்தர் காலம் என்ற இரண்டாவது பிரிவில் இலக்கியங்கள், சைவ-வைணவ-கௌமார சமயங்களின் வளர்ச்சி, அரசியல் நிலை, கோயில்கள், தத்துவ சிந்தனை, கட்டிட சிற்பக் கலை வளர்ச்சி ஆகிய உப தலைப்புகளும், பல்லவர் காலம் என்ற மூன்றாவது பிரிவில், தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் தோன்றி வளர்ந்த வகை, அரசர்கள் பின்பற்றிய கொள்கைகள்,

ஆலய வழிபாடு, பக்திநெறி, சமுதாய மாற்றம், சைவ சமய வளர்ச்சிப் போக்கு, வைஷ்ணவ சமய வளர்ச்சிப் போக்கு ஆகிய தலைப்புகளும் இடம்பெற்றுள்ளன.

9086

இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டம்: வினா-விடை. இளங்கோ. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1998. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

100 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 28x20 சமீ.

1997 முதல் நடைமுறைப்படுத்தப்படும் இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டத்திற் கமைய உருவாக்கப்பெற்ற வினா-விடை நூல். பரீட்சையில் மாணவர்கள் உச்சப் புள்ளி பெற உதவிடும் வழிகாட்டி.

9087

இந்து நாகரிகம் மாதிரி வினாவிடை: பகுதி 1. பொன் சக்திவேல். கொழும்பு 11: பிரைற் புக் சென்டர், எஸ்.27, 1வது தளம், த.பெ.எண் 162, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

154 பக்கம், விலை: ரூபா 147.50, அளவு: 26x18.5 சமீ., ISBN: 955-9387-30-8.

1997ம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான இந்து நாகரிகம் என்ற பாடப்பரப்பின் பத்து வினாப்பத்திரங்களுக்கான வினா-விடைகள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

9088

இந்து நாகரிகம்: முதலாம் பாகம். க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், 235 காங்கேசன்துறைச்சாலை, 1வது பதிப்பு, ஜூன் 1995. (யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ.தம்பி வீதி).

(5), 112 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

காணபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம், வேதாந்தம், சைவசித்தாந்தம் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்து நாகரிகப் பாடப்பரப்பில் சிறப்பாக இந்து சமயநெறிகள் பெறும் முக்கியத்து வத்தினை உணர்ந்து அவை பற்றி இந்நூலில் விளக்கம் தரப்பட்டுள்ளது. இந்து தத்துவ மரபில் சிறப்புப் பெறும் இருபெரும் தத்துவங்களாகிய வேதாந்தம் பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் பல அடிப்படை விடயங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பரந்துபட்ட விடயங்களைக்கொண்ட இத்துறைகள் பற்றிய ஒரு பரிமாணத்தை மாணவர்கள் அறிந்துகொள்வதற்குச் சொக்கனின் இந்நூல் துணைபுரியவல்லது. வித்துவான் க.சொக்கலிங்கம், சொக்கன் என இலக்கிய உலகில் நன்கு அறியப் பெற்றவர்.

9089

இந்து நாகரிகம்: வினா-விடை (க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது). சின்னத்துரை சோதிலிங்கம். இணுவில்: தேன்மொழி சோதிலிங்கம், செல்வகம், இணுவில்

கிழக்கு, 2வது பதிப்பு, ஜனவரி 2001, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், பூநாறி மரத்தடி, காங்கேசன்துறை வீதி).

(7), 197 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ.

இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டம் 1997இல் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் இடம்பெற்ற பரீட்சை வினாக்களின் தன்மைகளைக் கருத்திற்கொண்டு இம் மாதிரிப் பயிற்சிகள் 14 பிரிவுகளில் தரப்பட்டுள்ளன. 1997, -98, -99, 2000 ஆம் ஆண்டுகளுக்குரிய பரீட்சை வினாத்தாள்களை இந்நூலில் ஆசிரியர் பயன்படுத்தி யுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132130).

இந்து நாகரிகம்: வினா-விடை (க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது). சின்னத்துரை சோதிலிங்கம். இணுவில்: தேன்மொழி சோதிலிங்கம், செல்வகம், இணுவில் கிழக்கு, 3வது பதிப்பு, 2002, 1வது பதிப்பு, 1995, 2வது பதிப்பு, ஜனவரி 2001, (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், பூநாறி மரத்தடி, காங்கேசன்துறை வீதி).

(5), 222 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 20x14.5 சமீ.

வரலாற்றுப் பின்னணி, ஈழத்து இந்து மதம் பற்றி வரலாற்றுரீதியாக ஆராய்தல், சைவசித்தாந்தம் பற்றிய கடந்தகால வினாக்கள், இந்துக் கல்வி மரபு சமுதாயத்தில் பெறும் இடத்தினை மதிப்பிடுதல் ஆகிய நான்கு பிரிவுகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இணுவில் மத்திய கல்லூரியினதும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினதும் பழைய மாணவரான இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இளங்கலைமாணி, கல்விப்பின் டிப்ளோமா பட்டங்கள் பெற்றவர். ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்திக்கொண்ட இவர், கடந்த காலங்களில் தாம் கற்றதனூ டாகவும், கற்பித்தலினூடாகவும் , விடைத்தாள்களை புள்ளியிடுவதினூடாகவும் இந்துநாகரிகம் என்னும் துறையில் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களைத் திரட்டி மாணவர் நலன்கருதி இந்நூலை வெளியிட்டுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132126).

9090

இந்து நாகரிகம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம். பரஞ்சோதி ஜோதீஸ்வரன். பருத்தித்துறை: மொடேர்ண் கல்வி நிலையம், நெல்லியடி, 2வது பதிப்பு, புரட்டாதி 2000, 1வது பதிப்பு, புரட்டாதி 1998. (பருத்தித்துறை: எஸ்.பி.எம். கணினிப் பதிப்பகம், வி.மு.தெரு).

110 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20x15 சமீ.

க.பொ.த. உயர்தரப் பாடநெறியாக இந்துநாகரிகத்தை பயில்பவர்களுக்கான பயிற்சிகளை இந்நூல் உள்ளடக்கியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129956).

9091

இந்து நாகரீகம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம்: சிறு குறிப்புகள். பரஞ்சோதி ஜோதீஸ்வரன். யாழ்ப்பாணம்: பீ.ஜோதீஸ்வரன், 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம்).

47 பக்கம், விலை: ரூபா 38., அளவு: 22x13.5 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்புக்குரிய இந்து நாகரிகப் பாடப்பரப்பிற்குரிய சிறுகுறிப்புகள் அடங்கிய நூல்.

9092

இந்து மரபில் வர்ணதர்மமும் சைவசித்தாந்த ஒழுக்கவியலும். கலைவாணி இராமநாதன். யாழ்ப்பாணம்: பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன், இந்து நாகரீகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 2வது பதிப்பு, 2010, 1வது பதிப்பு, 1997. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

xvi, 158 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-52420-0-4.

இந்நூல் இந்து தர்மமும் வருண தர்மமும், திருமந்திரத்தில் மனித நேயம், இந்து சமயக் கிரியைகளின் அடிப்படையும் சைவசித்தாந்தக் கிரியை மரபும், சைவ சித்தாந்தத்தில் ஒழுக்கவியல் அடிப்படைகள், சைவசித்தாந்த அறவிழுமியம், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் சமுதாயச் சீர்திருத்தங்களும், விவேகானந்தரின் மனிதநேய விழுமியங்கள் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 213567).

9093

இறந்தபின் எங்கு செல்கின்றோம்? அ.குமரகுரு. யாழ்ப்பாணம்: அ.குமரகுரு, 1வது பதிப்பு, 1990. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

vi, 78 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 18x12.5 சமீ.

இந்த தூல உடலைவிட்டு உயிர் பிரிவதையே நாங்கள் மரணம் அல்லது இறப்பு எனக் கூறுகின்றோம். தூல உடலை விட்டுப் பிரியும் உயிர் நல்வினை தீவினை முதலியன தொடர்ந்து நிற்கும் சூக்குமஉடல் காரண உடல் ஆகிய இரண்டினையும் கூட்டிக்கொண்டே செல்கின்றது. தனது நல்வினை தீவினைக்கேற்ப இன்ப-துன்ப அனுபவங்களை அனுபவித்தபிறகு மறுபடியும் இந்த நிலவுலகிற்கே வருகிறது என்று கூறும் சைவ சித்தாந்த கருத்துக்களை இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84753).

9094

சமரச ஞானக் கோவை. க.இராமச்சந்திரன். நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 1967. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).

xx, 389 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 5.00, அளவு: 17.5x12 சமீ.

நான்கு பாகங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் முதலாம் பாகமான தத்துவ ஞானம் 18 கட்டுரைகளையும், பின்னை பாகங்கள் முறையே மெய்ஞானிகள் 26 கட்டுரைகயும், உலக யாத்திரை 4 கட்டுரைகளையும், பொது 3 கட்டுரைகளையும் கொண்டுள்ளன. நான்கு பிரிவுகளுக்குள்ளும் மொத்தம் 52 ஆன்மீகக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 83524).

9095

சருவஞானோத்தர ஆகம ஞானபாத வசனம். சிவதொண்டன். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 434, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1998. (கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

vii, 90 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x15 சமீ.

சைவசித்தாந்தத்தை பொதுவகையாகக் கூறும் காமிகம் முதல் வாதுளம் ஈறாகிய 28 ஆகமங்களையும் ஸ்ரீகண்ட பரமேசுவரன் இருடிகளுக்கும் முனிவர்களுக்கும் உபதேசித்ததாகவும், சருவ ஆகமங்களின் சாரத்தைச் சிறப்பாக எடுத்துக்கூறும் சாருவஞானோத்தர ஆகமத்தை சீகண்டநாயனார் முருகனுக்கு உபதேசித்த தாகவும் கர்ணபரம்பரைக் கதையுண்டு. கடவுளுக்கே உபதேசித்த பெருமைமிக்க இவ்வாகமத்தைக் கூறும் நூல் இது. சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயத்தின் இக்காலநிலையைச் சிந்தித்துச் சமகாலத்தின் தேவைக்கேற்றபடி தமிழ்மூலமான உரையை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123996).

9096

சிவஞானசித்தித் திறவுகோல். மு.கந்தையா. சென்னை 5: குமரன் பதிப்பகம், 13/2, கஜபதி தெரு, 1வது பதிப்பு, அக்டோபர் 1991. (சென்னை 600015: துர்காதேவி பிரிண்டர்ஸ், 13, குமரன் காலனி).

255 பக்கம், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

சைவசித்தாந்தத்தை முழுநிலையில் விளங்கிக் கொள்ளப் பயன்படும் நூல் அருணந்தி சிவாச்சாரியாரால் எழுதப்பட்ட சிவஞான சித்தியார் என்ற நூலாகும். அந்நூலின் சாரத்தைப் பிழிந்து இலகு தமிழில் சிவஞானசித்தியாருக்கு விளக்கவுரை யாக சைவசித்தாந்த தத்துவஞானியான ஏழாலையூர் பண்டிதர் மு.கந்தையா இந்நூலை எழுதியுள்ளார். இன்றைய அறிவியல் அணுகுமுறைக்குப் பொருத்தமான வகையில் தர்க்கரீதியான விளக்கங்களுடனும் இலகுவாக விளங்கிக்கொள்ளத்தக்க எடுத்துக்காட்டுகளுடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூற்பொருள் முழுமையும் 36 பகுதிகளாகப் பகுக்கப்பட்டு நூலில் கிடந்த முறையே ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. பின்னாளில் பண்டிதர் மு.கந்தையா நூல்வெளியீட்டுக் கழகம் இந்நூலை 2006இல் மீள்பதிப்பு செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இப் பெரியாரின் சித்தாந்தச் செழும் புதையல், அரியவும் பெரியவும் ஆகிய நூல்கள் அறிஞர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 93157).

9097

சிவஞானபோதம். மெய்கண்டதேவ நாயனார் (மூலம்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை, 1வது பதிப்பு, மே 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x11.5 சமீ.

சைவர்கள் ஓதி, உணர்வதற்கு அத்தியாவசிமாய் இருக்கும் நூல்கள், திருமுறைகளும் சைவ சாஸ்திரங்களுமாகும். சைவ சாஸ்திரங்கள் பதினான்கினுள் முதல் நூலாகச் சொல்லப்படுவது மெய்கண்ட தேவநாயனார் அருளிய சிவஞானபோதமாகும். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரின் அழைப்பை ஏற்று பாரத நாட்டி லிருந்து ஈழநாட்டிற்கு வருகை தந்த காஞ்சிபுரம் சைவசித்தாந்தக் கலைச்செல்வர் க.வச்சிரவேலு முதலியார் அவர்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் சைவ வளர்ச்சிச் சங்கம் ஆகிய இரு சபைகளினதும் ஆதரவில் 10.5.1967 தொடக்கம், 7.6.1967 வரையுள்ள நாட்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் சைவ சித்தாந்த வகுப்பு நடத்தியிருந்தார்கள். சிவஞான போதம் அவர்களின் பாடநூலாக அமைந்துள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225470).

9098

சிவஞான விளக்கம். ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான். இலங்கை: ஸ்ரீமத் ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள், மெய்கண்டார் ஆதீனம், கொழும்பு, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு 12: தாளையான் அச்சகம், 115, மெசெஞ்சர் வீதி).

vi, 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 15x13 சமீ.

சைவ சித்தாந்தம் பற்றிய விளக்கம் தரும் இந்நூல் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற விடயங்களைத் தெளிவாக விளக்குவதாயமைகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 82246).

9099

சின்மய தீபம். பிரமச்சாரி வியக்த சைதன்யா. கொழும்பு 3: சின்மயா மிஷன், எண். 15, மைல் போஸ்ட் அவென்யூ, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

82 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

அமைதி எங்கே, மனிதனைச் சித்தனாக்கும் உயர் நெறிகள், அதம்பித்வம், அஹிம்சை, சாந்தம், ஆர்ஜவம் - நெஞ்சுறுதி, அசார்ய உபாசனம் அல்லது குரு வணக்கம் போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் பிரம்மச்சாரி வியக்த சைதன்யா அவர்கள் வானொலியில் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பாக இந் நூல் அமைந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 98451).

9100

சுருதி நூல்முறை: அத்வைத வேதாந்தம். வ.சிவசுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்). மட்டக்களப்பு: சி.சிவகுமாரன், 75/1 நல்லையா வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

xvi, 129 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x13 சமீ.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வழக்கிலிருந்துவந்துள்ள ஒரு ஏட்டுச்சுவடி சுருதிநூல் முறையாகும். மூலநூலாசிரியர் பெயர் அறியப்படாத இந்தத் தொன்மையான ஏட்டுச்சுவடியின் மீள் பதிப்பு இதுவாகும். இந்து மத ஆய்வு பற்றிய வேதாந்தம் என்னும் உபநிஷதத்தை எளிய உரைநடையில் இவ்வேடு பொதிந்துவைத்திருக்கின்றது. வேதாந்த பரிபாஷைச் சொற்களை ஆசிரியர் சம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கத் துணியாதபோதிலும், வேதாந்த மரபு தவறாது, பேச்சுத் தமிழில் வெளிவந்ததொரு அத்வைத நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130607).

9101

சைவ சித்தாந்த வினாவிடை. க.கணேசலிங்கம். கொழும்பு 6: கலாநிதி க.கணேசலிங்கம், திருவருள் வெளியீடு, 54-5/4 சென். லோரன்ஸ் வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2005. (சென்னை 600005: மாசறு அச்சகம், பு.எண்45, மசூதி தெரு, சேப்பாக்கம்).

120 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 955-99208-04.

சைவ சித்தாந்தம் பற்றிய கேள்விகளும் அவற்றுக்குரிய பதில்களும் 14 பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. சைவசித்தாந்தம், கடவுள், உயிர், ஆணவம், கன்மம் அல்லது வினை, மாயை, தத்துவங்களின் தோற்றமும் செயற்பாடும், சிவனின் அருட்டிருமேனி, இறை உயிர் உறவு, பந்தமும் வீடும், திருவைந்தெழுத்து, ஞானச்செயல், சைவசித்தாந்த நூல்கள், சில விளக்கங்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் இவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218523).

9102

சைவ சித்தாந்தமும் கலையும். தயாளினி நவநீதகிருஷ்ணன். யாழ்ப்பாணம்: நவநீதகிருஷ்ணன் பதிப்பகம், 5ஆம் வட்டாரம், நயினாதீவு, 1வது பதிப்பு, தை 2008. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டேர்ஸ், காங்கேசன்துறை வீதி).

x, 74 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 18.5x13 சமீ.

விநாயகர் வழிபாடு, சைவசித்தாந்தத்தில் பதி பற்றிய கோட்பாடு, சைவசித்தாந்தத்தில் பாசமும் சிவப்பேறும், நாவுக்கரசர் காட்டும் சிவ சின்னங்கள், ஓவியக் கலை மரபில் சித்தன்னவாசல் ஓவியங்கள், பனைமலைக் கோவில் ஓவியங்கள், கோயிலும் இசைக் கலையும் ஆகிய இயல்களில் எழுதப்பட்ட நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 199191).

9103

திருமூலர் திருமந்திரம். மௌனாச்சிரம். கொழும்பு 6: மௌனாச்சிரம், 19, ஐ.பீ.சீ. வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (கொழும்பு 13: லட்சுமி பிரின்டர்ஸ்).

xliv, 466 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13 சமீ.

வெள்ளவத்தை மௌனாச்சிரம வெளியீட்டுத் தொடரில் நான்காவதாக வெளி வந்துள்ள ஆன்மீக அறிவியல் நூல். திருமூலர் மக்கள் வாழ்வு மலர, வறுமை நீங்க, கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகளைத் தனது திருமந்திரத்தில் கூறி யுள்ளார். வாழ்க்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, என்பன பற்றி எல்லாம் கூறி உய்ய செய்யவேண்டிய கருமத்தையும் கூறியுள்ளார். சிறந்த குருவினை அடைந்து ஆசிபெற்று அவர்வழிநின்று வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்கிறார். கல்லாத மூடரைக் காணாதே கல்லாத மூடர்சொல் கேளாதே என்றும் போதிக்கிறார். திருமூலரின் அரிய பெரிய கருத்துக்களை இந் நூல் கொண்டுள்ளது.

9104

திருவருட்பயன் மூலமும் உரையும். சி. கணபதிப்பிள்ளை. உரும்பிராய்: பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை, உரும்பிராய் மேற்கு, 1வது பதிப்பு, ஜூலை 2007. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிரிண்டர்ஸ், பலாலி வீதி).

x, 127 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.க. அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். ஆசிரிய, மாணவர்களோடு - சாதாரண பாடசாலை மாணவர்களோடு கற்பித்தல் வழிகளில் ஈடுபட்டு உழைத்தவர். பாஷை, இலக்கணம், இலக்கியம் என்ற துறைகள் பற்றிய தமது கருத்துக்களை பேச்சு, கட்டுரை வழியாக ஏற்கெனவே பதிவுசெய்துள்ளவர். அவரது பார்வையில் திருவருட்பயனுக்கு இந்நூலில் உரைவழங்கியிருக்கிறார்.

9105

நைடத மூலமும் விருத்தியுரையும். அதிவீரராம பாண்டியனார் (மூலம்), நா. கதிரவேற்பிள்ளை (விருத்தியுரை). சென்னை: வித்தியாரத்நாகர அச்சுக்கூடம், 1வது பதிப்பு, 1930. (சென்னை: வித்தியாரத்நாகர அச்சுக்கூடம்).

680 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 4., அளவு: 22.5x13.5 சமீ.

அரசகுல திலக புலவரேறு, அதிவீரராம பாண்டியனார் இயற்றிய நைடதமூலமும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் மாணாக்கரின் மாணாக்கரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், அத்துவித சித்தாந்த மதோத்தாரணரும் ஆகிய யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் புதுக்கியும் திருத்தியும் விலக்கியுஞ் சேர்த்துக் கொடுத்த விருத்தி உரையும் அடங்கிய நூல்.

மேலும் பார்க்க: 9252

190 சோதிடம், வானசாஸ்திரம்

9106

எண்களில் உங்கள் அதிர்ஷ்டம். மூளாய் அருணாசலம். யாழ்ப்பாணம்: அருணா பப்ளிக்கேஷன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, மூளாய், சுழிபுரம், 1வது பதிப்பு, கார்த்திகை 1997.(கொழும்பு 14: ஸ்டார்லைன் பிரின்டர்ஸ், 213, கிராண்ட்பாஸ் வீதி).

(2), 55 பக்கம், விலை: ரூபாய் 95., அளவு: 21x14 ச.மீ.

மனிதனும் கிரகமும்-கிரகமும் எண்ணும்-எண்ணும் மனிதனும், எண் - நட்பு பகை எண்கள், சூரியன், சந்திரன், குரு, இராகு, புதன், சுக்கிரன், கேது, சனி, செவ்வாய், பிறப்பு எண்ணும் பெயர் எண்ணும்ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது.

9107

சந்தானமணி. செ.சபாபதி சோதிடர். யாழ்ப்பாணம்: செ.சபாபதி சோதிடர், அச்சுவேலி தெற்கு, 1வது பதிப்பு, சித்திரை 1935. (பருத்தித்துறை: கலாநிதி யந்திரசாலை).

(8), 103 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

இது அச்சுவேலி தெற்கு செகநாத சோதிடரின் புத்திரன் சபாபதி சோதிடர் அவர் களால் பல சோதிட நூல்களிலிருந்து திரட்டி எவரும் இலகுவில் விளங்கக்கூடிய உரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள் ருதுவாகுங்காலம், கருப்ப உற்பத்திகாலம், ஸ்திரீ புருஷ சங்கமம், கர்ப்பசம்பவகாலம், கர்ப்போற்பத்தி முதற் செனனமளவுமுண்டாகுமங்கம், ஆண் பெண் கிரகநிலை, கர்ப்பச் சிதைவு, கர்ப்பமுதல்மாதாதிபதி, இரண்டு மூன்றாம் மாதாதிபதி, நாலைந்தாறாம் மாதாதி பதி, ஏழாம் மாதாதிபதி, எட்டாம் மாதாதிபதி, ஒன்பதாம் பத்தாம்மாதாதிபதி, கர்ப்பாரிட்டமும் சுகமும், பிரசவகாலம், மாதாப்பிணி, பிதாப்பிணி, அரிட்டங்கள், சுகப்பிரசவம், ஆண்பெண், ஆண் உற்பவம், பெண் உற்பவம், இரட்டைச் சென்மம், பெண்சென்மம், ஆண்சென்மம், அலிசென்மம், புத்திரதோஷம், முகூர்த்த சுபாசுபவிளக்கம், வர்ஷசுபாசுபம், முக்குணவேளை, நவகுணவேளை, திதிவிளக்கம், யோகநாமங்கள், கரணசுபாசுபம், நட்சத்திரசுபாசுபம், நாசயோகம், கிழமைபிறந்த நட்சத்திரம், மாததினம், கர்ப்பாதானத்துக்கு நாள், அச்சுவினி முதல் ஜனனநாளின் சுபாசுப நட்சத்திரங்கள், தம்பதிகளுக்கன்யோன்யமான நட்சத்திரங்கள், கர்ப்பாதானத்துக்கு அத்தியாவசியகம் நீக்கவேண்டியன, நிஷே கலக்கினமாதியன, கர்ப்பாதானசுபராசிகள், சுபமுகூர்த்தகிரகநிலை, புட்கரபாதம், மிருத்துமுகூர்த்தம், கர்ப்பம் நிறைந்து பிறத்தல் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 135016).

9108

சோதிட வாசகம்: இரண்டாம் புத்தகம். த.கணபதிப்பிள்ளை, மு.சின்னப்பு. யாழ்ப்பாணம்: த.கணபதிப்பிள்ளை, மு.சின்னப்பு, அளவெட்டி, 1வது பதிப்பு, சித்திரை 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

vii, 67 பக்கம், தகடு, விலை: ரூபா 2.25., அளவு: 21.5x14 சமீ.

ஒரு பிள்ளை பிறந்த நேரத்தைக்கொண்டு இராசிநிலை, நவாம்சநிலை, சென்னகால தசாபுத்தி இருப்பு ஆகியனவற்றைக் கொண்ட சாதகக் குறிப்பொன்றினைக் கணிக்கும் முறை பற்றி இந்நூலின் முதலாம் புத்தகத்தில் விளக்கப்பட்டிருந்தது. இவ்விரண்டாம் புத்தகத்தில், ஒரு சாதகக் குறிப்பிற் காணப்படும் கிரகராசி நிலை, பாவநிலை ஆகியவற்றின் பலன்களையும், கிரக காரகங்களையும் ஆராய்ந்து பொதுப்பலன் காணும் முறை விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் இலக்கின பாவம், தன பாவம், சகோதர பாவம், மாதுரு பாவம், புத்திர பாவம், சத்துரு பாவம், களத்திர பாவம், ஆயுட் பாவம், தன்ம பாவம், கன்ம பாவம், இலாப பாவம், விரய பாவம், ஆகிய 12 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135002).

9109

சோதிட வினா-விடை. சி.அகிலேஸ்வர சர்மா (மூலம்), இ.சி.வெங்கடேச ஐயர் (பதிப்பாசிரியர்), வெ.இரகுநாதையர் (துணைப் பதிப்பாசிரியர்). கொக்குவில்: சோதிட பரிபாலன மடம், 4வது பதிப்பு, ஆவணி 1997, 1வது பதிப்பு, வைகாசி 1933, 2வது பதிப்பு, ஆனி 1942, 3வது பதிப்பு, சித்திரை 1956. (கொழும்பு 11: அஷ்டலட்சுமி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

xix, 335 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22.5x14 சமீ.

யாழ்ப்பாணம், மண்டைதீவு சி.அகிலேஸ்வர சர்மா அவர்கள் வைகாசி 1933 இல் இயற்றிய சோதிட நூலின் மீள்பதிப்பு இதுவாகும். பதிப்புரையும் நூலாசிரியர் வரலாறு / முகவுரை என்பவற்றுடன் தொடங்கும் இந்நூல், கடவுள் வணக்கம், ஆரம்ப கணிதம், பன்னிரு பாவ பலன்கள், பொதுப்பலன், விஷய அட்டவணை ஆகிய பிரதான பகுதிகளை உள்ளடக்குகின்றது. அமரர் சி.அகிலேஸ்வர சர்மா (21.3.1893 - 26.2.1953), யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்மஸ்ரீ சிதம்பரநாதையரின் ஏக புத்திரர். கொழும்புத்துறை பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரைத் தனது சமய குருவாக ஏற்றவர். இளம்பிராயத்திலேயே மண்டைதீவு சித்திவிநாயகர் கோவிலில் அருச்சகராகக் கடமையேற்றபின் அவ்வூரிலேயே வாழ்ந்து மறைந்தவர். அவர் வாழ்ந்த காலத்தில் மண்டைதீவில் ஒரு சைவப் பாடசாலையை நிறுவியவர். பண்ணைத் தாம்போதியின் உருவாக்கத்திற்கு பல வழிகளிலும் உதவியவர். திருவெண்காட்டந்தாதி, பண்ணைப் பாலக் கும்மி, மதுரை மீனாட்சி பேரின்பக் கீர்த்தனை, முருகன் கீர்த்தனைப் பதிகம், தற்கால நாகரீக வேடிக்கைப் பாக்கள், தெய்வாராதனை விளக்கம் ஆகிய நூல்களை இயற்றியவர். சோதிடத்தில் இவரது அதீத ஈடுபாட்டின் விளைவாக, இந்நூல் இவரால் உருவாக்கப்பட்டது. சோதிட சாஸ்திரத்தில் எழும் சந்தேகங்களுக்கு கேள்வி-பதில் வடிவில் இந்நூலில்

விளக்கமளிக்கின்றார். சோதிட பரிபாலினி இதழில் ஒன்றரை வருடங்களாக வெளிவந்த கேள்வி பதில் பகுதியின் நூல் வடிவம் இதுவாகும்.

மேலும் பார்க்க: 9335

200 சமயங்கள்

220 கிறிஸ்தவம்

9110

அர்ச். மத்தேயு எழுதிய யேசுக் கிறிஸ்துநாதருடைய பரிசுத்த சுவிசேஷம். அர்ச். மத்தேயு. யாழ்ப்பாணம்: அர்ச்.சூசைமாமுனிவர் பதிப்பகம், 2வது பதிப்பு, 1965. 1வது பதிப்பு, செப்டெம்பர் 1959. (யாழ்ப்பாணம்: அர்ச்.சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை).

110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

மத்தேயு என்பது கடவுளின் கொடை என்ற கருத்தையுடைய எபிரேய பெயராகும். இப்பெயர் மத்தேயு சுவிசேஷத்தின் 10ம் அதிகாரம் 9ம் வசனத்தில் முதலில் காணப்படுகின்றது. இவரே பின்னாளில், மாற்கு , லூக்காஸ் சுவிசேஷங்களில் லேவி என்று அழைக்கப்படுகின்றார். முதலாம் சுவிசேஷம், அர்ச் மத்தேயுவினால் எழுதப்பட்டதென்பதையும், சுவிசேஷகர் தம் நாட்டு மக்கள் யேசுநாதரின் தெய்வத் தன்மையை அறிந்து, அதன்பேரில் நம்பிக்கைகொள்ளச் செய்வதற்காகவே எழுதினார் என்பதையும் பரிசுத்த பாரம்பரியம் முதலாம் நூற்றாண்டு தொடக்கமே காப்பாற்றி வருகின்றது.

9111

அருளாளர் அந்தோனியார். வாகரைவாணன் (இயற்பெயர்: ம.அரியரத்தினம்). மானிப்பாய்: வாகரைவாணன், பழனம், உடுவில் தெற்கு, உடுவில், 1வது பதிப்பு, ஆனி1993. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், 89, மவுண்ட் கார்மல் வீதி, குருநகர்).

v, 26 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணம் இறைவாக்குப் பணியகத்தின் அனுசரணையுடன் விரியும் இந் நூலின் ஆசிரியர் கவிஞர் வாகரைவாணன், யாழ்ப்பாணம், புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில் எழுதப்பெற்றது. புனித அந்தோனியாரின் வாழ்வை கவிதை உருவில் வழங்கியிருக்கிறார். அறவழியில் ஆன்மீகப் பாதையில் மக்களை அழைத்துச் சென்ற கிறீஸ்து பெருமானின் உண்மையான சீடராக வாழ்ந்த ஒருவரின் வாழ்க்கை சுவைமிகு இலக்கியமாக அமைந்திருக்கிறது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 97166).

9112

ஆண்டவர் நல்லவர் சுவைத்துப்பார்: சுவை 2. அருட்திரு. ச.யோ.பிரான்சீஸ் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: அமல உற்பவம், சுவாமியார் வீதி, கொழும்புத் துறை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1988. (யாழ்ப்பாணம்: மணிஓசை அச்சகம், 12, சென். பற்றிக்ஸ் வீதி).

84 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 21.5x14 சமீ.

கிறிஸ்தவ இறைவழிபாட்டு நூல். நூலாசிரியர் அமலமரித் தியாகிகள் சபையின் உறுப்பினர். யாழ். ஆயர் இல்ல மறைமாவட்ட முதல்வர் அருள்திரு எஸ்.ஏ. மைக்கல்சாமியின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85130).

9113

இயேசு கானங்கள் (கிறிஸ்தவ கவிதைகள்). அம்புறோஸ் பீட்டர். கொழும்பு 13: அம்புறோஸ் பீட்டர், 53, 1/6, நியூனம் சதுக்கம், 1வது பதிப்பு, 1994. (கொழும்பு: பயனியர் அச்சகம்).

(6), 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

1968ஆம் ஆண்டிலிருந்து கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயப் பாடற்குழுவில் அங்கம் வகித்துவந்த அம்புறோஸ் பீட்டர் ஆலய வழிபாடுகளில் பயன்படுத்தும் வகையில் பல கிறிஸ்தவ கீர்த்தனைகளை எழுதியவர். 1990 முதல் 1993 வரை தொடர்ச்சியாகச் சிறந்த இறையியல் பாடலாசிரியருக்குரிய விருதினைப் பெற்றுவந்தவர். தான் எழுதிய பாடல்களுள் சிறந்தவற்றை இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளார். ஒளிவிழா, மறையாசிரியர் கீதம், சிறுவர்தின கீதம், இன்னிசை இராக மேடையில், இதயத்தில் எழுந்திட்ட, இயேசுவின் இராகங்களே, போன்ற இன்னோரன்ன பாடல்களை இந்நூலில்காணமுடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104175).

9114

இயேசுவின் பின் செல்லல். யோ.இரசல் சந்திரன் (மூலம்), சி.தேவநேசன் (தமிழாக்கம்). கொழும்பு: இலங்கை கிறிஸ்தவ கலைத் தொடர்பு நிலையம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை, (கொழும்பு 13: லிபேர்ட்டி அச்சகம், 478 புளுமெண்டால் வீதி).

69 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14.5 சமீ.

அருள்திரு கலாநிதி யோ.இரசல் சந்திரன் அவர்களின் ஆங்கில மூலத்தில் எழுதப் பட்ட கிறிஸ்தவ மதப் பிரச்சார நூல். அருள்திரு சி.தவநேசன் அவர்களால் தமிழாக்கம் செய்யப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84664).

9115

இயேசுவே இறைவன். சிலோன் விஜயேந்திரன். சென்னை 5: சோனம் பதிப்பகம், 243 டி.எச்.ரோடு, ரத்னா கபே அருகில், திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 2003. (சென்னை 5: சோனம் பதிப்பகம்).

110 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 12x17.5 சமீ.

என் வாழ்வில் இயேசு நிகழ்த்திய ஆறு அற்புதங்கள், இறைவனின் புகழ் மலர்கள், பிற்சேர்க்கை ஆகிய மூன்று பிரிவுகளை இந்நூல் கொண்டுள்ளது. முதலாவது பிரிவில் இருதய நோய்க் கொடுமையும் இறைவன் அளித்த விடுதலையும், கொடிய சர்க்கரை வியாதியிலிருந்து என்னை மீட்ட இயேசு, புயல், மழையிலிருந்து எனைக் காத்த தேவன், பாம்பு கொத்தியதும் பரமன் காத்ததும், இருட்சிறையிலிருந்து மீட்ட மகிபன் இயேசு, அவளை எனக்களித்த அற்புத இயேசு ஆகிய தலைப்புகளில் இயேசு நிகழ்த்திய ஆறு அற்புதங்களை விபரிக்கிறார். இறைவனின் புகழ் மலர்கள் என்ற இரண்டாவது பிரிவில், இறைவனும் நானும், இறைவனைப் பாடுவேன், தேவ சுகம், இயேசுவை அறிவாயா? இறைவன், உயிரில் கலந்தார், நான், அழியாத ஆனந்தம், எனது ராகம் ஆகிய கிறிஸ்தவ பாடல்களைத் தருகின்றார். பின்னிணைப்பில் ஆண்டவர் இயேசுவும் மக்தலேனாவும் என்ற கட்டுரையும், சிலோன் விஜயேந்திரனின் நூற்பட்டியலும் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 151718).

9116

இரட்சணிய யாத்திரீகம்: முதலாவது பருவம் - கடை திறப்புப் படலம்: மூலமும் உரை விளக்கமும். அடியவன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப் பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).

64 பக்கம், விலை: ரூபா 37.50, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் கல்வித்துறையில் கிறிஸ்தவக் கல்விப் பாடத்தின் முக்கிய பாட நூலாக அமைந்துள்ள இரட்சணிய யாத்திரீகம் க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களின் தேவைக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 116338).

9117

இரட்சணிய வரலாறு: பரிசுத்த ஏடுகள் பாடநூல் க.பொ.த.(உ..த). அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ. மட்டக்களப்பு: சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (மட்டக்களப்பு: சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).

(5), 108 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14 சமீ.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சையில் கிறிஸ்தவ சமயத்தை ஒரு பாடமாகக்கொண்டு கற்கும் மாணவரின் தேவை கருதி இந்நூல் வெளிவருகின்றது.

மாணவர்களின் ஆர்வத்தைத்தூண்டும் வகையில் விவிலியப் பகுதிகள் சிறு சிறு கதைகளாக விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியும் உப பிரிவுகளாக வகுக்கப் பட்டு தலைப்பிடப்பட்டு விளக்கமளிக்கப்பட்டுள்ளன. கடந்தகால பரீட்சை வினாக்களின் தொகுப்பும் இடம்பெற்றுள்ளது. விடயங்களைப் புரிந்துகொள்ள பூகோள அறிவும் முக்கியம் என்பதால் மறை பரவிய நாடுகளின் தேசப்படங்கள் விளக்கப்படங்களாகப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132186).

9118

இலங்கைத் திருச்சபைக் காவலராம் யோசேவ் வாஸ் முனிவர் அம்மானை. ம.விக்டர் (புனைபெயர்: அமுதகவி யாழ். ஜெயம்). யாழ்ப்பாணம்: யாழ். கத்தோலிக்க இலக்கியக் கழகம், 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

30 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21.5x14 சமீ.

அமுதகவி யாழ். ஜெயம் என அழைக்கப்படும் இளைப்பாறிய ஆசிரியர் ம.விக்டர் அவர்களால் பாடப்பெற்ற அம்மானை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103040).

9119

இறை உண்மை (இறையியல் கட்டுரைகள்). அருட்பணி அ.ஸ்ரீபன் (மூல ஆசிரியர்), வி.பி.தனேந்திரா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: முரண்பாட்டுக் கற்கைநெறி மன்றம், இலங்கைத் திருச்சபை, 1வது பதிப்பு, வைகாசி 2010. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).

xiv, 124 பக்கம், தகடு, விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

இயேசுவின் பிறப்பில் புலப்படும் இறை உண்மை என்ற பிரிவின்கீழ் 6 கட்டுரை களும், இயேசுவின் போதனையில் புலப்படும் இறை உண்மை என்ற பிரிவின் கீழ் 18 கட்டுரைகளும், இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்த்தெழுதலில் புலப்படும் இறை உண்மை என்ற பிரிவின்கீழ் 7 கட்டுரைகளுமாக மூன்று பெரும் பிரிவுகளின்கீழ் ஆசிரியரின் 31 இறையியல் கட்டுரைகள இந்நூலில் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன. இலங்கைத் திருச்சபையின் இளம் திருப்பணியாளர் அ.ஸ்ரிபன், 2010 தை முதல் இலங்கை இறையியல் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றிய 2004-2009 காலப்பகுதியில் பல்வேறு கிறிஸ்தவ அமைப்புகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர். இவரது முதலாவது நூல் இறை விழுமியம் 2009இல் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினைப் பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 223981).

9120

இறை ஞான ஈர்ப்புகள். *பற்றிக் ஞானப்பிரகாசம். யாழ்ப்பாணம்: அருள்திரு பற்றிக் ஞானப்பிரகாசம், 1வது பதிப்பு, 1996. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).*

(10), 114 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 *சமீ.*

அமைதித்துளி, ஆழ்கடலின் முத்துக்கள், சிந்தனைத் திரட்டு, ஆகிய நூல்களைத் தந்த நூலாசிரியரின் மற்றுமொரு இறையியல் கட்டுரைகளின் தொகுப்பு. கடவுள் இருக்கின்றாரா மனிதன் கேட்கின்றான், தெய்வம் என்றால் அது தெய்வம் சிலையென்றால் வெறும் சிலைதான், கடவுளைக் கண்டேன் மனித வடிவிலே என்பன போன்ற இன்னோரன்ன கவர்ச்சிகரமான தலையங்கங்களில் எழுதப்பட்ட 50 கிறிஸ்தவ இறையியல் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118321).

9121

இறை தொடுவானம். *சா.பி.கிருபானந்தன். யாழ்ப்பாணம்: யாழ்.மறைமாவட்ட குருக்கள் மன்று, ஆயர் இல்லம், 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: ஜே.எஸ். பிறின்ரேர்ஸ், பண்டத்தரிப்பு).*

xiv, *132 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 150., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-0068-00-5.

ஜனவரி, 2008இல் மறைந்த அருட்பணியாளர் அமரர் சாமிநாதர் பிரான்சிஸ் கிருபானந்தன் (14.11.1956-04.01.2008) அவர்களின் நினைவாக அவர் வழங்கிய கிறிஸ்தவ இறையியல் உரைகளின் தொகுப்பு இதுவாகும்.

9122

இறை விழுமியம்: இறையியல் கட்டுரைகள். *அருட்பணி அ.ஸ்ரீபன். யாழ்ப்பாணம்: முரண்பாட்டுக் கற்கைநெறி மன்றம், இலங்கைத் திருச்சபை, 1வது பதிப்பு, ஜுன் 2008. (யாழ்ப்பாணம்: ஏ.சி.எம்.அச்சகம்).*

xvi, *168 பக்கம், தகடு, விலை: ரூபா 250., அளவு:* 20.5x14.5 *சமீ.*

இந்நூலில் திரித்துவம் பற்றிய பன்முகப் பார்வை தொடங்கி அங்கிலிக்கன் திருச்சபை வரலாறு ஈறாக ஆசிரியரின் 29 இறையியல் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இலங்கைத் திருச்சபையின் இளம் திருப்பணியாளர் அ.ஸ்ரிபன், 2010 தை முதல் இலங்கை இறையியல் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் நல்லூர் புனித யாக்கோபு ஆலயத்தின் பங்குத் தந்தையாக பணியாற்றிய 2004-2009 காலப்பகுதியில்பல்வேறு கிறிஸ்தவ அமைப்புகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர். 2009இல் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதினைப் பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 197720).

9123

காற்றில் கலந்தவை. கரவையூர்ச் செல்வம். யாழ்ப்பாணம்: அமலமரி தியாகிகள் சபை வெளியீடு, 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: வஸ்தியான் அச்சகம், 392 பிரதான வீதி).

xxiv, 238 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 18x12.5 சமீ.

இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிப் பிரிவில் ஆசிரியர் ஆற்றிய 54 உரைகளின் தொகுப்பு. யாழ். ஆயர் எமிலியானுஸ் ஆண்டகை அவர்களின் மறைவையொட்டி வானொலியில் 20.7.1972 அன்று ஒலிபரப்பப்பட்ட சிறப்புரை முதலாவதாக நினைவுகள் சாவதில்லை என்ற தலைப்பில் இடம்பெறுகின்றது. தொடர்ந்து, பொங்கலோ பொங்கல், அ.ம.தி.125, நத்தார் எமக்கொரு சவால், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், பொருளாதாரம் போதாது, இயுஜின் டி மசெனெட், அன்பு நாகரிகம், கடமையா கடவுளா, அன்பு, மீட்பு, உயிர்த்த இரவு, செபம், மன்னிப்பு, என இன்னோரன்ன தலைப்புகளில் இவ்வுரைகள் அமைந்துள்ளன. தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் இந்நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் "ஒவ்வொரு பேச்சிலும் பொருள் பொதிந்து கிடக்கின்றது. உணர்ச்சி வீறிட்டுப் பாய்கின்றது. உண்மைகள் துலக்கப்படுகின்றன. குற்றங்கள் கடியப் படுகின்றன. உவமைகள் சொல்லப்படுகின்றன. இங்கே யான் காட்டியவை கரவையூர்ச் செல்வம் வழங்கியவை. என் உள்ளத்தைக் கவர்ந்தவை." என்று குறிப்பிட்டுள்ளார். அருட்திரு கரவையூர்ச் செல்வம் புதிய உலகம் என்ற பெயரில் சமூகத் தொடர்பு நிலையத்தால் வெளியிடப்பட்ட ஒரு சமூக இறையியல் சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 77254).

9124

கிறிஸ்தவ இல்லற நல்வாழ்வு. டேவிட் வி.பற்றிக். மன்னார்: மன்னார் மறைமாவட்ட வெளியீடு, ஆயர் இல்லம், 1வது பதிப்பு, வைகாசி 1999. (கொழும்பு 13: ராஜ் என்டர்பிரைசஸ், இல. 108/2, ஸ்ரீ கதிரேசன் வீதி).

48 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21x14.5 சமீ.

கிறிஸ்தவ இல்வாழ்வின் அர்த்தம் அன்பு செய்வதிலும் அன்பு செய்யப்படுவதிலுமே தங்கியுள்ளது. அன்பில் ஆரம்பிக்கும் இல்வாழ்க்கை தொடர்ந்து அன்பில் ஆழப்படுத்தப்படவும், அன்புச் சமுதாய உருவாக்கலுக்கு வித்திடுவதாய் நல்ல குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளவும் வழிவகுக்கின்றன. இத்தகைய கருத்துக் களை விதைப்பதற்காக கிறிஸ்தவ இல்லற நல்வாழ்வு என்னும் இந்த நூலின் கட்டுரைகள் துணைசெய்கின்றன. இந்நூலில் மூவொரு இறைவன், திருச்சபையும் திருவருட் சாதனங்களும், திருமண அன்புறவு, இல்லற இடர்ப்பாடுகள், இல்லற இன்பம், பெற்றோர் பிள்ளைகள் உறவு, இல்லற அப்போஸ்தலிக்கம் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட இறையியல் கட்டுரைகள் ஏழு இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 128834).

9125

கிறிஸ்து தத்துவம். வாகரைவாணன். மானிப்பாய்: வாகரைவாணன், பழனம், உடுவில் தெற்கு, உடுவில், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

(4), 30 பக்கம், விலை: ரூபா 25., அளவு 18x12.5 சமீ.

கிறிஸ்துவின் போதனைகள், தத்துவங்கள் நம் வாழ்விற்கு இன்றியமையாதன. கிறிஸ்துவின் தத்துவங்களை புதுக்கவிதை வடிவில் மனதில் படியக்கூடிய வகையில் கவிஞர் வாகரைவாணன் இயற்றியிருக்கிறார். அவதாரம், மறைந்த வாழ்வு, போதனை, மரணம், உயிர்ப்பு என்னும் பகுதிகளைக்கொண்ட யேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை எளிய நடையில் அனைவரையும் கவர்ந்திழுக்கும் வகையில் கவிதையாக்கித் தந்திருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86661).

9126

பதுவைப் புனிதர் அந்தோனியாரின் வரலாற்றுச் சுருக்கமும் அற்புதங்களின் தொகுப்பும். சு.அடைக்கலம் (புனைபெயர்: தமிழமுதன்). யாழ்ப்பாணம்: சு. அடைக்கலம், இல. 111, டேவிற் வீதி, 1வது பதிப்பு, 2008. (யாழ்ப்பாணம்: ஜோய் பிரின்டர்ஸ், 394, பிரதான வீதி).

xii, 132 பக்கம், படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

புனித அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு, அவரின் மறை போதகப் பணி, குருவாகத் திருநிலைப்படுத்தப்படல், மற்றும் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் என விரிவாகவும் சுவைமிக்கதாகவும் இந்த கிறிஸ்தவ பக்தி இலக்கியத்தை ஆசிரியர் 83 அத்தியாயங்களில் எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 201464).

9127

வேதநூற் பாடங்கள்: முதலாம் புத்தகம். அமெரிக்க இலங்கை மிஷன். மானிப்பாய்: அமெரிக்க இலங்கை மிஷன் வெளியீடு, 1வது பதிப்பு, 1962. (மானிப்பாய்: அமெரிக்க இலங்கை மிஷன் அச்சகம்).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

இயேசுவின் இல்லம், அறையின் தோற்றம், இயேசுவின் அறை, சினேகிதனை வரவேற்றல், இயேசுவும் சிமியோனும் யோவானும், பெற்றோருக்கு உதவிசெய்தல், இயேசு பாடசாலைக்குச் செல்லல், எலியாவும் விதவையும், பாலன் மோசே, தாவீதும் சிங்கமும் முதலான முப்பது தலைப்புகளில் பெரிய எழுத்துக் கதைகளாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பள்ளிச்சிறுவர்களுக்கான கிறிஸ்தவ பாடத்தை இயேசுவின் இளமைக்கால வாழ்க்கை முறையின்மூலம் ஊட்டிவிடும் முயற்சி இதுவாகும்.

மேலும் பார்க்க: 9706

220.1 கிறிஸ்தவ நிறுவனங்கள், மாநாடுகள், மலர்கள்

9128

ஆசியத் திருச்சபை வரலாறு: பாகம் ஒன்று (கி.பி.40-1800 ஆண்டுகள் வரை சில பதிவுகள்). *ஜெ.இ.ஜெயசீலன். யாழ்ப்பாணம்: வளன் ஆச்சிரமம், 47, 6ஆம் குறுக்குத்தெரு, 1வது பதிப்பு, மாசி, 2007. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், நாவலர் வீதி).*

xiv, *214 பக்கம், விலை: ரூபா 200., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-50109-0-0.

கலாநிதி சுவாமி ஜெ.இ.ஜெயசீலன் அடிகளார் கலைமாணிப் பரீட்சைக்கு ஆசிய வரலாற்றை ஓர் அலகாக்கிப் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு (1997), ஆசியத் திருச்சபை வரலாறு (2007), இலத்தீன் அமெரிக்கத் திருச்சபை வரலாறு ஆகிய நூல்களின் ஆசிரியர் இவர். யாழ்ப்பாணம், வளன் ஆச்சிரம வெளியீடான "தேவதாயின் குரல்" சஞ்சிகையில் 1997ம் ஆண்டு முதல் வெளிவந்த வரலாற்றுத் தொடரே இங்கு நூலுருவாகியுள்ளது. பலஸ்தீனம்: ஆரம்பகாலத் திருச்சபை, அந்தியோக்கியாவின் திருச்சபைகள், பாலைவனத்துத் திருச்சபைகள், இந்திய, மத்திய ஆசிய, சீனத்திருச்சபைகள், ஐரோப்பியர்கால சீன இந்தியத் திருச்சபைகள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் கால தமிழ்நாட்டில் திருச்சபைகள், மதுரை மிஷன்: தத்துவ போதகர் றொபேட் தே நொபிலி, மதுரை மிஷன்: சுவாமி வீரமாமுனிவர், யப்பானிய ஆரம்பகால திருச்சபை வரலாறு, யப்பானிய அரசியல் நிலையும் கிறிஸ்துவமும், பிலிப்பைன்ஸ் திருச்சபை வரலாறு, சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசிய திருச்சபைகள் ஆகிய 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 180036).

9129

இலங்கைத் திருச்சபை வரலாறு: க.பொ.த.உயர்தர பாடநூல். *எஸ்.ஏ.ஐ.மத்தியு. மட்டக்களப்பு: அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியு, ஓய்வுபெற்ற வலயக் கல்வி இயக்குநர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (மட்டக்களப்பு: சென்.ஜோசப் கத்தோலிக்க அச்சகம்).*

94 பக்கம், வரைபடம், விலை: ரூபா 150., அளவு: 22x14.5 *சமீ.*

இந்நூலானது மறையினை அறிவோம் அறிவிப்போம் எனும் சிறந்த நோக்கில் க.பொ.த. உயர்தர மாணவர்களின் கிறிஸ்தவ பாடநெறியை இலகுவாக்கி, ஒரு முழுமையான ஆன்மிக அனுபவம் அளிக்க மேற்கொள்ளப்பட்ட சிறந்த முயற்சி யாகும். இங்கு விவிலிய ஞானம் உண்டு. திருச்சபையின் பாரம்பரியப் படிப் பினைகள் உண்டு. இறையியல் கூர்மை உண்டு. இரண்டாம் வத்திக்கான் சங்கப் போதனைகள் உண்டு. நூலாசிரியர் அருட்சகோதரர் கலாநிதி எஸ்.ஏ.ஐ.மத்தியு ஏழாண்டுகள் ஆசிரியராகவும், 22 ஆண்டுகள் அதிபராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 132198).

294.3 பௌத்தம்

9130

சித்தார்த்தர் (கௌதம புத்தர்). நவாலியூர் சோ.நடராசன். சென்னை 600 017: ராஜராஜன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2003. (சென்னை 600021: சக்தி பிரின்டர்ஸ்).

152 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.

கௌதம புத்தரையும் அவரது பௌத்தக் கொள்கைகளையும் இந்நூல் விளக்க முனைகின்றது. புத்தர் தம்மை ஒரு தீர்க்கதரிசி என்றோ, தேவதூதர் என்றோ சொல்லிக்கொண்டதில்லை. அவரது போதனைகள் குறைகள் எதுவும் அற்றவை என்றுகூட அவர் சொல்லவில்லை. தாம் புரிந்துகொண்ட அளவில் இதுதான் மானிட விடுதலைக்கான வழி என்றும் இவ்வழி மனுக்குலத்தின் அனுபவங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்றும் அவர் கூறினார். சுருங்கக்கூறின் அவரே ஒரு திறந்த புத்தகமாக இருந்தார். தந்தை சுத்தோதனருக்கும் மஹாமாயா என்னும் தாய்க்கும் பிறந்த ஒரு தத்துவஞானியான புத்தரை பினபற்றியவர்களே பின்னாளில் அவரைக் கடவுளாக்கிவிட்டார்கள். பிற மதங்கள் சொர்க்கத்தை அடைய வழிசொன்ன வேளையில் புத்தர் இவ்வுலகிலேயே சொர்க்கத்தை நமது நீதி வழுவாத நெறிமுறைகளால் நிறுவிக்கொள்ள முடியும் என்றார். கௌதம புத்தரின் போதனைகளையும் வாழ்வுநெறியையும் இந்நூல் வாசகருக்கு எளிய தமிழில் வழங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 165290).

9131

தம்மபதம்: தமிழ்ப் பதிப்பு. எம்.என்.மொஹிதீன் (மொழிபெயர்ப்பாளர்). கண்டி: பௌத்த பிரசுர வெளியீட்டுக் கழகம், தபால் பெட்டி எண் 61, 54, ஸங்கராஜ மாவத்தை, 1வது பதிப்பு, 2004. (கண்டி: டிஜிட்டல் நிறுவனம்).

x, 126 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-24-0260-3.

கி.மு. 500களில் தொகுக்கப்பெற்ற அறவழி என்னும் அர்த்தத்தைத் தரும் தம்மபதம் என்ற இந்நூல் பௌத்தர் மத்தியில் மிகவும் பிரசித்தமான தர்மநூலாகும். இது பௌத்த பீடகங்களில் ஒன்றான சுத்தபீடகத்தைச் சேர்ந்த குத்தக நிகாயம் என்ற நூலின் ஒரு பகுதியாகும். பாளி மொழியில் 423 சூத்திரங்களாக 26 அத்தியாயங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புத்தர் பெருமான் அவ்வப்போது கூறிய வாக்கி யங்களாலான இது பௌத்த மதத்தவரின் பாராயண நூலாகவும், பிரமாண நூலாகவும் அமைகின்றது. வளர்ச்சியடைந்த பல உலக மொழிகளில் தம்மபதமானது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இரட்டை வர்க்கம், நுண்ணவதான வர்க்கம், மனோ வர்க்கம், புஷ்ப வர்க்கம், மூடர் வர்க்கம், அறிஞர் வர்க்கம், அரஹத் வர்க்கம், ஆயிரம் வர்க்கம், பாவ வர்க்கம், தண்ட வர்க்கம், முதுமை வர்க்கம், ஆத்ம வர்க்கம், உலக வர்க்கம், புத்த வர்க்கம், சுக வர்க்கம், பிரிய வர்க்கம்,

குரோத வர்க்கம், மல வர்க்கம், நியாய வர்க்கம், மார்க்க வர்க்கம், பலவித வர்க்கம், நரக வர்க்கம், யானை வர்க்கம், இச்சை வர்க்கம், பிக்கு வர்க்கம், பிராமண வர்க்கம் ஆகிய 26 தலைப்புகளில் இந்நூலில் தம்மபதத்தின் பாளிச் செய்யுள்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 197741).

294.5 இந்து சமயம்

9132

அக்னிகார்ய விளக்கம். ப.சிவானந்த சர்மா (புனைபெயர்: கோப்பாய் சிவம்). அவுஸ்திரேலியா: ஸ்ரீவத்ஸ கோத்ரம் செல்வன் சங்கர்சர்மா குருஷியாம்சர்மா அவர்களின் உபநயன பிரம்மோபதேச தினச் சிறப்பு வெளியீடு, 1வது பதிப்பு, மாரச் 2014. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ வித்யா கணினி அச்சகம், இணுவில்).

120 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

வைதிக-ஆகம அக்னி கார்யங்களின் தமிழ்க் கருத்தும், கிரியா நெறிகளின் விரிவான விளக்கங்களும் தத்துவார்த்த அடிப்படையிலும் அறிவியல் ரீதியிலும் ஆழ்ந்த பொருள் விளக்கமும் அடங்கிய நூல்.

9133

அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும். சி.பத்மநாதன், க.இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன், (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xx, 494 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-9233-18-3.

1992ஆம் ஆண்டுமுதல் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், வருடாந்த இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்குகளை நடத்திவருகின்றது. 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 முதல் நான்கு நாட்கள் நீதிநூல்கள் எழுந்த காலமாகிய கி.பி. 300-600 ஆண்டுக்காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஆய்வரங்கு இடம்பெற்றது. இவ்வாய்வரங்கின்போது சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். தொல்லியலும் வரலாறும் என்ற முதற் பிரிவில் புதிய அரசுகளும் சமய மரபுகளும்: தமிழகத்தில் பௌத்தம் (சி.பத்மநாதன்), களப்பிரர் வரலாறு (சொ.சாந்தலிங்கம்), Memorial Stones of Tamil Nadu-A Case Study of life After Death (K.Rajan), Archaeological Excavations of Porunthal (K.Rajah), ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமயமும் சமூகமும் என்ற இரண்டாம் பிரிவில் அறநெறிக் கால இலக்கியங்களில் வைணவம் (சு.வேங்கடராமன்), பலதேவன் வழிபாடு (சு.வேங்கடராமன்), சிலப்பதிகாரம் மணிமேகலை சித்திரிக்கும் விழாக்கள் (வசந்தா வைத்தியநாதன்), அறநூல்களில் பெண்கள் (செ.யோகராசா), சிலப் பதிகாரம் புலப்படுத்தும் சைவ நெறி (மா.வேதநாதன்), பக்தி இலக்கிய மரபில்

காரைக்கால் அம்மையார் (ம.நதிரா), சங்கம் மருவிய காலத்தில் சைவம் (விக்னேஸ்வரி பவநேசன்), களப்பிரர் ஆட்சியில் வைதீக சமயம் (சு.துஷ்யந்த்), நாலடியாரில் பெண்கள் (செல்வகுமார் சிவலிங்கம்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியமும் கலையும் என்ற பிரிவில் அறநெறிக்கால இலக்கியங்கள் - சில விவாதங்கள் (சு.வேங்கடராமன்), கவிதையாக்க நோக்கில் அற இலக்கியங்கள் (பழ.முத்து வீரப்பன்), அறநெறிக்கால அழகியற் சிந்தனை (ஏ.என்.கிருஷ்ணவேணி), அறநெறிக்கால இலக்கியங்களின் அழகியல் அரசியல் (க.இரகுபரன்), ஆய்வு நோக்கில் திருக்குறள் அதிகாரங்கள் (ஸ்ரீ பிரசாந்தன்), திருக்குறளில் இழையோடியுள்ள அறிவாராய்ச்சியியல் நுட்பங்கள் (ச.முகுந்தன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இலக்கியமும் அறமும் என்ற இறுதிப் பிரிவில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் காட்டும் அரசியல் அறம் (பழ.முத்து வீரப்பன்), நான்மணிக் கடிகை (பழ. முத்துவீரப்பன்), அறம்: தமிழிலும் வட மொழியிலும் (வி.சிவசாமி), ஆசாரக் கோவையும் அறமும் (வ.மகேஸ்வரன்), பழமொழி நானூறும் சமூக நோக்கும் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), அற இலக்கியங்களில் நட்பு (றூபி வலன்ரீனா பிரான்சீஸ்), சிறு பஞ்சமூலம் சித்திரிக்கும் ஒழுக்கவியல் (சுகந்தினி சிறிமுரளிதரன்), அறநெறிக்கால இலக்கியங்கள் காட்டும் விருந்தோம்பற் பண்பு (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் (ம.பாலகைலாசநாத சர்மா), ஏலாதியும் மனித நேயமும் (சாந்தி கேசவன்), நன்றே வாழ்க அன்றேல் மாழ்க (மா.ரூபவதனன்), சிங்கள இலக்கியங் களில் தமிழ் நீதி இலக்கியங்களின் செல்வாக்கு (தம்மிக்க ஜயசிங்க) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

9134

ஆலய வழிபாடும் தத்துவமும். *தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள். பருத்தித் துறை: நெல்லண்டையான் வெளியீடு, நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் பிரதம குருவும் அர்ச்சகரும், தும்பளை, 1வது பதிப்பு, ஆவணி 1983. (பருத்தித்துறை: குமார் அச்சகம்).*

xxx, *30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21.5x14 *சமீ.*

ஆலய வழிபாடு பற்றி சைவ சமயத்தின் ஆழமான கருத்துக்களை எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98823).

9135

இது இந்து மதம். *சாமிஜி (இயற்பெயர்: சு.குமாரசாமி). யாழ்ப்பாணம்: சாமிஜீ, 138, இராசாவின் தோட்டம், 1வது பதிப்பு, ஐப்பசி 1999. (கொழும்பு 6: அரவிந்தன் பதிப்பகம், 25, பாமன்கடை வீதி).*

v, *56 பக்கம், விலை: ரூபா 50., அளவு:* 20.5x14 *சமீ.*

அறிவிலே தெளிவு ஏற்படும்போதுதான் உண்மைச் சமயநெறியை தெரிந்துகொள்ள முடியும். அத்தெளிவுக்கு இச்சிறு பிரசுரம் உதவுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129553).

9136

இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்: தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம். சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 199/1, கில்னர் ஒழுங்கை, 1வது பதிப்பு, பெப்ரவரி 2006. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, கே.கே.எஸ்.வீதி).

xxiv, 148 பக்கம், படங்கள், விலை: ரூபா 175., அளவு: 18x12.5 சமீ.

ஆலயங்களில் வெறும் சம்பிரதாயம், சாஸ்திரம், வழக்கம் என்று கூறிப் பின்பற்றப் படும் பல விடயங்களுக்கு விஞ்ஞானரீதியில் விளக்கங்கள் கொடுப்பதன் மூலம் இவற்றை மூடநம்பிக்கைகள் என்ற தவறான கருத்துக்களைத் தகர்த்தெறிந்துள்ளார். இந்துக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய பல விடயங்கள் இந்நூலில் தெளிவான எளிய உரைநடையில் எழுதப்பட்டுள்ளன. ஆலய அமைப்பு (அறிமுகம், ஆலயச் சூழல், ஆலய அமைப்பு, விக்கிரகங்கள், அஷ்டபந்தனம்), கிரியைகள் (ஹோமம், தருப்பை, அபிடேகத்தின் மகிமை, பாத்தியம், அர்க்கியம், ஆசமனீயம், பஞ்ச கௌவியம், முத்திரைகள்), வழிபாட்டு முறைகள் (வணக்க முறைகள், அரசமர வழிபாடு, உளவளத்துணை, திருவிழாக்கள்), பிரசாதங்கள் (விபூதி, சந்தனம், குங்குமம், நைவேத்தியம்-போசாக்குணவு, விரதங்கள்), திருநந்தவனங்கள் (திருக் கோவில் நந்தவனங்கள், மூலிகைகளின் மருத்துவப் பயன்கள்), முடிவுரை ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158860).

9137

இந்து சமயமும் அவைதிக நெறிகளும். க.இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன் (பதிப் பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xvi, 512 பக்கம், விலை: ரூபா 700., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-9233-28-2.

1992ஆம் ஆண்டுமுதல் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், வருடாந்த இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்குகளை நடத்திவருகின்றது. 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இந்து சமயமும் அவைதிக நெறிகளும் என்ற தலைப்பில் இவ்வாய்வரங்கு இடம்பெற்றது. இவ்வாய்வரங்கின்போது சமர்ப் பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். சமய மரபுகள் என்ற முதற் பிரிவில், தென்னிலங்கையில் இந்து சமயம்: கி.பி.1300-1600 (சி.பத்மநாதன்), தமிழகத்தில் ஆசிவகம் அன்றும் இன்றும் (சொ.சாந்தலிங்கம்), தென் தமிழ் நாட்டில் சமணசமயம் (வெ.வேதாசலம்), இந்து சமயமும் பௌத்தமும்: பரஸ்பர தொடர்புகள் (ந.வாமன்), பௌத்த மரபில் பத்தினி வழிபாடு (கவிதா சிவாகரன்), பண்டைத் தமிழகத்தில் கொற்றவை (சு.துஷ்யந்த்), பண்டைய தமிழகத்தில் திருமால் (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), இலங்கையில் இந்து சமயமும் பௌத்தமும்: சோழர் காலம் வரை (சுகந்தினி சிறிமுரளிதரன்), பண்டைய தமிழகத்தில் சிறு தெய்வங்களும் தேவர்களும் (ந.சுபராஜ்), இலங்கையில் இந்து

- பௌத்த சமய மரபுகளில் சிறுதெய்வ வழிபாடுகள் - ஓர் ஒப்பியல் நோக்கு (வ.குணபாலசிங்கம்), சிங்கள தூதுக் காவியங்களில் இந்து சமயம் (தம்மிக்க ஜயசிங்க), இந்து மரபில் கண்ணகி வழிபாடு (சாந்தி கேசவன்), ஈரின இணைப்புத் தலமாக முன்னேஸ்வரம் (மல்லிகாதேவி நாராயணன்)ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சிந்தனை மரபுகள் என்ற இரண்டாவது பிரிவில், இந்திய சமயங்களில் வைதிக சிந்தனைகள் (வி.சிவசாமி), இந்து பௌத்த சமயங்களின் அறக்கோட்பாடுகள் (வசந்தா வைத்தியநாதன்), அத்வைதமும் பௌத்தமும் (நா.ஞானகுமாரன்), சங்கரரது அத்வைதமும் மாத்தியாமிக பௌத்தமும் (கிருஷ்ண வேணி நோபேட்), தம்மபதம் காட்டும் பண்பாட்டுச் சிந்தனைகள் (விக்னேஸ்வரி பவநேசன்), நீலகேசியில் நியதிவாதம் (ச.முகுந்தன்), பண்டைய தமிழகப் பட்டினங்களில் நிலவிய பன்முகப் பண்பாட்டுச் சூழல் (க.இரகுபரன்), பெரிய புராணத்தில் சைவமும் பௌத்தமும்: சாக்கியநாயனார் புராணத்தை முன்வைத்து ஓர் ஆய்வு (ஸ்ரீ பிரசாந்தன்), இந்திய அரசியல் வரலாற்றில் பௌத்தத்தின் செல்வாக்கு (சொ.சாந்தலிங்கம்), சிலப்பதிகாரத்தில் சமண சமயச் சிந்தனைகள் (றூபி வலன்ரீனா பிரான்சிஸ்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இறுதிப் பிரிவான கலைமரபுகளின் கீழ் தமிழகத்தில் பௌத்தப் படிமங்கள், ஓவியக் கலையும் பௌத்தமும்(வெ.வேதாசலம்), வேங்கி பகுதியில் பௌத்த சிற்பக்கலை (கு.சேதுராமன்), இலங்கை பௌத்த சிற்பங்களில் தென்னிந்தியச் செல்வாக்கு (சு.இராஜகோபால்), இந்துக் கலையில் பௌத்தத்தின் தாக்கம் (கு.சேதுராமன்), இலங்கை பௌத்தக் கட்டடக் கலை மரபில் இந்துக் கட்டடக் கலையின் செல்வாக்கு (சு.இராஜகோபால்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

9138

இந்து மத வரலாறு பகுதி 1. *தி.மதிவதனன். யாழ்ப்பாணம்: பட்டப் படிப்புக்கள் கல்லூரி, 101/10, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, தை 1999. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).*

x, *50 பக்கம், விலை: ரூபா 50., அளவு:* 21.5x14 *சமீ.*

சமயம், கலை, தத்துவம், சமூகம், வாழ்வியல், அறிவியல் போன்ற பல்துறைப் பரிமாணங்களைக் கொண்டதும் சத்தியம், தர்மம், அன்பு, பக்தி, நீதி, ஒழுக்கம் போன்ற விழுமியங்களைத் தன்னகத்தேயுடையதுமான இந்து நாகரிகம் ஒரு பாடநெறியாக கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படுகின்றன. இந்நூல் இந்து நாகரீகத்துறையின் முக்கிய அம்சமான இந்து சமய வரலாற்றை மாணவர்களுக்கேற்றவிதத்தில் விளக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126888).

9139

இந்து விரதங்களும் உடல்நலமும். *சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 199/1, கில்னர் ஒழுங்கை, 1வது பதிப்பு, மே 2007. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

xx, *168 பக்கம், படங்கள், விலை: ரூபா 325., அளவு:* 18.5x12.5 *சமீ.*

இந்து சமய விரத அனுஷ்டான முறைகளை மருத்துவ அறிவியலுடன் தொடர்பு படுத்தி, விரத அனுஷ்டானங்களில் உடல் ஆரோக்கியத்துக்குரிய வழிமுறைகள் பல அடங்கியிருப்பதை நூலாசிரியர் தெளிவுபடுத்துகின்றார். அறிமுகம், விரதமும் உடல் நலமும், விரத வகைகள், மாதவாரியாக அனுஷ்டிக்கப்படும் விரதங்கள், மாதப் பொது விரதங்கள், விரத காலத்துக்குரிய முக்கிய உணவுகள் தயாரிப்பு முறை என 17 இயல்களில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 182903).

9140

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி எட்டு: தி-தோ. *சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன் (உதவி ஆசிரியர்), எஸ்.தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

x, *337 பக்கம், தகடுகள், விலை: ரூபா 500., அளவு:* 28x21.5 *சமீ.,* ISBN: 955-9233-11-4.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப் பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது எட்டாவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் தி முதல் தோ வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான நூலாக்கக் குழுவின் எழுத்தாளர்களாக பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், பேராசிரியர் தி.ஞானகுமாரன், கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி, திரு க.இரகுபரன், திரு. வேல் சுவாமிநாதன், திருமதி இந்திராதேவி சதானந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், செல்வி க.ஹேமலோஜனி, செல்வி ச.நந்தினி, திருமதி சா.விஜயந்தி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

9141

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஒன்பது: ந-நௌ. *சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன் (உதவி ஆசிரியர்), எஸ்.தெய்வநாயகம் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 15: தினக்குரல் பப்ளிக்கேஷன்ஸ், இல. 68, எலி ஹவுஸ் வீதி).*

iv, *322 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 600., அளவு:* 28x22 *சமீ.,* ISBN: 978-955-9233-12-1.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ

வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது ஒன்பதாவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் ந முதல் நௌ வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான நூலாக்கக் குழுவின் எழுத்தாளர்களாக பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் சோ.கிருஷ்ண ராஜா, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், திரு க.இரகுபரன், கலாநிதி ப.கணேசலிங்கம், திருமதி இந்திராதேவி சதானந்தன், திரு. வேல் சுவாமிநாதன், திரு. ச.முகுந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், திருமதி ஹேமலோஜனி குமரன், செல்வி ச.நந்தினி, திரு.சு.துஷ்யந்த் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

9142

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி பத்து: ப-பௌ. *சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன், தேவகுமாரி ஹரன் (உதவி ஆசிரியர்கள்), சாந்தி நாவுக்கரசன் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினசோதி சரவணமுத்து மாவத்தை).*

(22), 330 பக்கம், தகடுகள், விலை: ரூபா 600., அளவு: 28x21.5 *சமீ.,* ISBN: 978-955-9233-14-5.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது பத்தாவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் ப முதல் பௌ வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான நூலாக்கக் குழுவின் எழுத்தாளர்களாக பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், திரு க.இரகுபரன், திரு. ஸ்ரீ பிரசாந்தன், திருமதி இந்திராதேவி சதானந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், திருமதி ஹேமலோஜனி குமரன், செல்வி ச.நந்தினி, திரு.சு.துஷ்யந்த், கலாநிதி ப.கணேசலிங்கம், கலாநிதி வ.மகேஸ்வரன், பேராசிரியர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

9143

இந்துக் கலைக் களஞ்சியம்: பதினோராம் தொகுதி: ம-மௌ. *சி.பத்மநாதன் (பிரதம ஆசிரியர்), க.இரகுபரன், தேவகுமாரி ஹரன் (உதவி ஆசிரியர்கள்), சாந்தி நாவுக்கரசன் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளூமெண்டால் வீதி).*

xii, 280 பக்கம், தகடுகள், விலை: ரூபா 650., அளவு: 27.5x21.5 சமீ., ISBN: 978-955-9233-19-0.

இந்து சமயத்துக்கானதொரு பல்தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியத்தைத் தமிழில் உருவாக்கும் முன்முயற்சியாக இலங்கையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1990இல் வெளியான முதலாவது தொகுதியில் அ முதல் ஈ வரையிலான சைவ சமயச் சொற்களின் விளக்கங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வெளியீட்டுத் தொடரில் இது பதினோராவது தொகுதியாகும். இதில் இந்து சமயம் தொடர்பான தகவல்கள் ம முதல் மௌ வரையிலான அகரவரிசையில் தரப்பட்டுள்ளன. இத்தொகுதிக்கான நூலாக்கக் குழுவின் எழுத்தாளர்களாக பேராசிரியர் சி.பத்மநாதன், பேராசிரியர் வி.சிவசாமி, கலாபூஷணம் வசந்தா வைத்தியநாதன், திரு க.இரகுபரன், திரு. ஸ்ரீ பிரசாந்தன், திரு. ச.முகுந்தன், திருமதி தேவகுமாரி ஹரன், திருமதி இந்திராதேவி சதானந்தன், திருமதி ஹேமலோஜனி குமரன், திருமதி நித்தியவதி நித்தியானந்தன், செல்வி ச.நந்தினி, திரு.சு.துஷ்யந்த், திரு.நா.வாமன், திரு.எஸ்.சுதாகரன், திரு.தம்மிக்க ஜயசிங்க, திரு.எஸ். கோபிநாத், திரு.ம.ப.மகாலிங்கசிவம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

9144

இமயத்தின் குரல்: முதற் புத்தகம். ஸ்ரீ சுவாமி சிவானந்த குருமகராஜ். திருக்கோணமலை: ஸ்ரீ சிவானந்த தபோவனம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (நாவலப்பிட்டி: ஆத்மஜோதி அச்சகம்).

50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12 சமீ.

சேவை செய், அன்பு செய், கொடு, தியானி ஆகிய நான்கு மகாவார்த்தைகளையும் கொண்டு பசித்தவர்க்குணவாக, பிணியுற்றோர்க்கு மருந்தாக, கவலையில் அழுந்துவோர்க்கு ஆறுதலாக, ஆன்மீகத்தை எளிய உபதேசமாக ஸ்ரீ சுவாமி சிவானந்த குருமகராஜ் இந்நூலில் வழங்கியிருக்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135036).

9145

உருத்திர கணிகையர் கதாசாரத் திரட்டு. க.அஞ்சுகம் (மூலம்), வ.மகேஸ்வரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xlviii, 220 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-9233-21-3.

1910இல் வெளிவந்த மூலநூலின் மீள்பதிப்பு இதுவாகும். முற்காலத்தில், தேவர் அடியார்களாக (பிற்காலத்தில் தேவடியாள் எனக் கொச்சைப்படுத்தப்பட்டு) வாழ்ந்த பொட்டிட்ட மங்கையர் பற்றியும் அவர்களின் வாழ்க்கை அமைப்புப் பற்றியும் கூறும் வரலாற்றுச் சான்றாதார நூலாக இந்நூல் அமைந்துள்ளது. இலங்கையின் தலைநகரான கொழும்பில் அமைந்துள்ள பிரசித்திபெற்ற சிவாலயமான ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு அடிமை பூண்டவர்களாக அபிஷேகவல்லியாரும், அவர்தம் குடும்பமும் வாழ்ந்தமை பற்றியும்

அவர்கள் ஆற்றிய பணிகள் பற்றியும் விளக்கும் வகையில் அக்குலத்தில் உதித்த அஞ்சுகம் என்பவரால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கோவிலில் நிவந்தம் அல்லது கூலி பெற்று ஆடுபவர் களான உருத்திர கணிகையர் என்னும் குலத்தவர் மலரும் இறையடியார்களாக வாழ்ந்தவாறு, மற்றும் சமய இலக்கியச் சான்றுகள் என்பன தூய தமிழில் இந் நூலில் விளக்கப்பட்டுள்ளன.

9146

கணபதி கடாட்சம் (தொகுப்பு நூல்). *கணேசலிங்கக் குருக்கள். தெல்லிப்பழை: காசி விநாயகர் தேவஸ்தானம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1992. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம்).*

(4), 24 பக்கம், படங்கள், விலை: ரூபா 40., அளவு: 20x14 *சமீ.*

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபைத் தலைவர் சிவஸ்ரீ சிவகடாட்ச கணேசலிங்கக் குருக்கள் தொகுத்து வழங்கிய இந்து சமய விநாயகர் வழிபாட்டியல் பற்றிய நுல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86337).

9147

கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். *நா.முத்தையா. நாவலப்பிட்டி: நா. முத்தையா, ஆத்மஜோதி வெளியீடு, 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: சிவா பிரிண்டர்ஸ், கைதடி).*

xxi, *178 பக்கம், விலை: ரூபா 30., அளவு:* 17.5x12 *சமீ.*

ஆத்மஜோதி நா.முத்தையா அவர்கள் எழுதிய சமயக் கட்டுரைகளின் தொகுப்பு. கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம், கதிரமலைக் கந்தன் செய்த அற்புதங்கள், கந்தனுக்கு வேர்க்குமா?, வயிற்றுவலி நீக்கிய பெருமான், கட்ட பொம்மனைத் திருத்திய கந்தன் கருணை, நேர்த்திக்கடனை மறந்த குடும்பம், பாம்பன் சுவாமிகள் பரவிய முருகன், ஊமையும் பேசுவான், முருகன் சரிதையை முருகனே சரிபார்த்தான், நக்கீரருக்கருளிய முருகன், அயனுக்கு ஆணவம் போக்கிய முருகன், செந்தூர்த் தல புராணம் பிறந்த கதை, டச்சு வர்த்தகரும் செந்தூர் முருகனும், செந்தில் ஆண்டவனும் பாளையக்காரரும், பகழிக்கூத்தர் குறிப்பிடும் மூன்று அற்புதங்கள், எனது தந்தையார் கண்ட கதிர்காம முருகன், அரிவைக்குக் கரம் உதவிய முருகன், தேவதாசிக்கருளிய வெற்றிவேல், ஆதிசங்கரருக்கு அருளிய முருகன், விஸ்வாமித்திர முனிவருக்கு பிரசாதம், ஐந்தொழில் புரியும் செந்தூர் முருகன், வல்லூர்த் தேவராயர், பழநிமலை பக்தர்கள், சுவாமிமலை அடியார்கள், சுருளிமலை அற்புதங்கள், இலஞ்சி முருகன் பெருமை, குறைகள் தீர்க்கும் குன்றக்குடிப் பெருமான், விராலிமலையுறை வீரவேல் முருகன், வயலூரில் முருகன், வைத்தீஸ்வரன் திருவிளையாடல், நினைக்க நோய்தீர்க்கும் திருத்தணி, ஔவைக்கருளிய முருகன், அகத்திய முனிவருக்கு அருளிய முருகன், நல்லூர்த் தேரடி, செல்லச்சந்நதியானின் சீரிய அற்புதங்கள் ஆகிய 41 கட்டுரைகளை இந் நூலில் காணலாம். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 77300).

9148

கோயிலமைப்பும் கிரியையும் வழிபடுமுறையும். பொன். கந்தசாமி. யாழ்ப்பாணம்: ஆ.பொன்னம்பலம், கணபதி களஞ்சியம், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, 1வது பதிப்பு, வைகாசி 1990. (யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம்).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

மாதகல் இந்துசமய அபிவிருத்திச் சங்க வெளியீட்டு வரிசையில் 19வது பிரசுர மாகவும், கணபதி களஞ்சிய வெளியீட்டு வரிசையில் இரண்டாவது நூலாகவும் வெளிவந்துள்ள நூல். திருக்கோயில், கடவுள், பிரதிட்டை செய்தல், திருவிழா, திருக்கோவில் வழிபாடு, விரதம், பஞ்சபுராணம் ஆகிய ஏழு இயல்களில் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84109).

9149

சம்பந்தர் படைப்பாளுமை. க.இரகுபரன். கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xiii,216 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-9233-25-1.

இன்றைய தமிழ் மரபில் தமிழர் போற்றிப் பின்பற்றும் சைவநெறி, சமய குரவர் நால்வரின் பாடல்களை அடிப்படையாகக் கொண்டது. சமய குரவர்களுள் ஒருவரான சம்பந்தர் தமிழிலக்கிய வரலாற்றிலும் தமிழர் வரலாற்றிலும் தடம் பதித்தவர். அவரைப்பற்றிய இலக்கியங்களையும் அவர் பாடிய பதிகங்களையும் ஒப்பியல் நோக்கில் ஆய்வு செய்தமையின் பயனாக அமைந்த இந்நூல் அறிமுகவுரை அடங்கலாக ஏழு அத்தியாயங்களை உள்ளடக்கியது. பக்தி இலக்கிய வடிவமான தேவாரம், சம்பந்தர் பதிகங்களின் பொதுப்பண்பு, அவரின் திருக்கடைக் காப்புச் செய்யுள்கள், சம்பந்தரின் மிறைக் கவிகள், அவரது அற்புதப் பதிகங்கள், அவரது ஆளுமை ஆகிய பிரதான விடயங்கள் இந்நூலில் இலக்கிய நோக்கில் ஆராயப் பட்டுள்ளன. புலமை மிகு ஆய்வாளர், இரகுபரன் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவில் 1995இல் ஆராய்ச்சி உத்தியோகத்தராக இணைந்தது முதல் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றார். பின்னாளில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறை விரிவுரையாளராகக் கடமை யேற்றதன் பின்னரும் திணைக்களத்தொடர்பினைப் பேணிவருபவர். இந்துக் கலைக்களஞ்சியத்தின் உருவாக்கப்பணிகளிலும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பதிப்புத்துறைப் பணிகளிலும் தம்மை ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொண்டவர்.

9150

சமய நோக்கில் தமிழ் இலக்கியச் சிந்தனைகள். சோமசுந்தரம் பரமசாமி. இணுவில்: சோ.பரமசாமி, மருதா மனை, இணுவில் தெற்கு, 1வது பதிப்பு, 2010. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிரின்டர்ஸ், பலாலி வீதி).

viii, *84 பக்கம், விலை: ரூபா 200., அளவு:* 20x14.5 *சமீ.*

துன்ப விடுதலை, எல்லாம் சிவன் செயலென் றெண்ணாரோ, ஞானத்தின் திருவுரு, வாடா மல்லிகை, பட்டினம் பெறினும் வாரேன், இளங்கோவின் குரல், உறுதியே உயர்ந்த குறிக்கோள், பைந்தமிழ்ச் சோலையில் பௌத்த நெறி, எங்கெழிலென் ஞாயிறு, சிவராத்திரி மகிமை, அம்மானுக்காளான ஆரூரன், அன்பு நெறியை நயந்த காளத்தி அப்பரின் அற்புதக் காட்சி ஆகிய 12 கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்நூலாசிரியர், காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் தன் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்கவரும் விஞ்ஞானப் பட்டதாரியும் ஓய்வுபெற்ற அரசாங்க மொழி பெயர்ப் பாளரும் சைவசமயக் கோட்பாடுகளில் பற்றுறுதி கொண்டவருமாவார். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 213412).

9151

சிவநெறி அடியார்கள். *நா.முருகையா. சுன்னாகம்: நா.முருகையா, ஊரெழு கிழக்கு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிரின்டர்ஸ், பலாலி வீதி).*

iv, *108 பக்கம், விலை: ரூபா 130., அளவு:* 17.5 x12.5 *சமீ.*

சைவ சமயத்தில் இறைவனின் அருள்பாலிக்கப்பெற்ற அடியார்களின் கதைகளை இந்நூலாசிரியர் சுவையாக இந்நூலில் வழங்கியுள்ளார். துன்பம் துடைத்து நன்மை அருள்வான் ஈசன், உள்ளத்தில் எழுந்த உன்னத ஆலயம், மானிடக் காதலுக்கு மகேசன் தூது, பகைவனுக்கருளிய பண்பு நெஞ்சம், இல்லை என்ற சொல்லை அறியாத இயற்பகை நாயனார், அருள் உள்ளம் கொண்ட அப்பையர் தீட்சிதர், கந்தன் அருள்பெற்ற கச்சியப்ப சிவாச்சாரியார், மனித முகத்தை மறுத்த முசுகுந்த சக்கரவர்த்தி, பரமன் மடிமீது அமர்ந்த பசுபதி நாயனார், திருவருள் பெற்ற குருஞான சம்பந்தர், சீடனை குருவாய் ஏற்ற செம்மல், ஆசாரமா இன்பமா, அன்னை மீனாட்சி அருள்பெற்ற நீலகண்ட தீட்சிதர், ஆடற் பெருமானின் கால் நோகுமே என்று வருந்திய இராஜசேகர பாண்டியன், இளைக்காத கொடையுள்ளம் கொண்ட இளையான்குடிமாறன், ராஜபொக்கிஷம், சாட்சிக்கு வந்த சர்வேஸ்வரன், தாயுமான ஈசனுக்குத் தாயானவள், கந்தன் அருள்பெற்ற கட்டபொம்மன், திரௌபதி ஏன் சிரித்தாள் ஆகிய 20 தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225342).

9152

சிவபெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரும். *வி.செல்வரத்தினம். வட்டுக்கோட்டை: திருமதி கௌரி செல்வரத்தினம், அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, அராலி, 1வது பதிப்பு, ஜூலை 1998. (யாழ்ப்பாணம்: திருமொழி அச்சகம்).*

viii, *71 பக்கம், விலை: ரூபா 75., அளவு:* 21 x14 *சமீ.*

சுந்தரமூர்த்தி நாயனார் பற்றி விரிவாகக் கூறும் இந்நூலில், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சுந்தரர் எப்படி சிவபெருமானுடன் தோழமைகொண்டு இருந்தார் என்பது பற்றியும் அவர் சென்று திருப்பதிகம்பாடி அற்புதம் நிகழ்த்திய ஆலயங் களைப் பற்றியும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றையும் விரிவாக இந்நூலில் எழுதியிருக்கிறார். நூலாசிரியர் அருள்நெறிச் செல்வர் திரு. விசுவலிங்கம் செல்வரத்தினம் அராலி, ஆனைக்கோட்டை பிரதேசங்களின் பல அமைப்பு களுடனும் இணைந்து சேவையாற்றியவர். தனியார் கல்வி நிறுவனமொன்றில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். பல்வேறு விஞ்ஞான, கணித அறிவியல் நூல்களையும் எழுதியவர். சமயத்துறையில் அவரது ஈடுபாடு இந் நூலுருவில் துலங்குகின்றது. ஒக்டோபர் 1995இல் வலிகாமம் புலப்பெயர்வின்போது இடம்பெயராது மத நம்பிக்கையுடன் தனது சிவநம்பிக்கைக்குரிய வண்ணபுரம் சிவன் ஆலயத்தின் சுற்றாடலில் தங்கி வாழ்ந்தவர். ஆலயப் பூந்தோட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கான நிதியுதவி பெறும்பொருட்டு இந்நூலின் விற்பனையை ஒதுக்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 131022).

9153

சிவபெருமானை திருக்கயிலாயத்தில் கண்டேன். வி.செல்வரத்தினம். வட்டுக் கோட்டை: திருமதி கௌரி செல்வரத்தினம், அப்புக்காத்து வளவு, அராலி மத்தி, அராலி, 1வது பதிப்பு, சித்திரை 2009. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ்.பிரிண்டர்ஸ்).

xxiii, 157 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5 x14.5 சமீ.

சிவபக்தரான, நூலாசிரியர் அருள்நெறிச் செல்வர் திரு. விசுவலிங்கம் செல்வரத்தினம் அராலி, ஆனைக்கோட்டை பிரதேசங்களின் பல அமைப்புகளுடனும் இணைந்து சமூக சேவையாற்றியவர். தனியார் கல்வி நிறுவனமொன்றில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர். பல்வேறு விஞ்ஞான, கணித அறிவியல் நூல் களையும் எழுதியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 204312).

9154

சைவ ஆலய வழிபாட்டுமுறை. ஆறுமுகம் கந்தையா (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி வெளியீடு, அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு).

32 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 22x14.5 சமீ.

சைவ சமயத்தில் வழிபாட்டுக்கான நெறிகளாவன காணபத்திய நெறி, சௌர நெறி, வைணவ நெறி, சைவ நெறி, சாத்த நெறி, கௌமார நெறி, அநுபூதி நெறி எனப் பலவகைப்பட்டன எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறுகின்றன. இந் நூலில் சைவ முறைப்படி ஆலய வழிபாடு எவ்வாறு பேணப்படவேண்டும் என்பதை ஆசிரியர் தொகுத்து வழங்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129092).

9155

சைவ சமயம்: அன்றும் இன்றும் இங்கும். ஆ.வேலுப்பிள்ளை (மூலம்), முருகேசு கௌரிகாந்தன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 102 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-389-1.

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் சமயக்கட்டுரைத் தொகுப்பொன்று தமிழர் சமய வரலாறு என்ற தலைப்பில் 1980இல் வெளிவந்தது. அடுத்த பத்தாண்டுகளில் அவர் எழுதிய சிறந்த சமயக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. இதில் மக்களும் மதங்களும், சிந்துவெளியிலிருந்து திருகோணமலை வரை தென் கீழ்த்திசை வழிவந்த பாசுபதம், சோழநாட்டுப் பத்தியிலக்கியமும் பாண்டிநாட்டுப் பத்தியிலக்கியமும், திருகோணமலைத் தமிழ் மந்திரமாலை, தேவாரம் காட்டும் மாதோட்ட வரலாறு, அண்ணல் கேதீச்சரத்து அடிகள், திருவாசகரும் இலங்கைப் பௌத்தமும், திருவிளையாடற் புராணம்: சில குறிப்புகள், குமரகுருபரர் பாடிய அம்மை வழிபாடு, சன்னதி முருகன் வழிபாட்டு வரலாற்றுப் பின்னணி, பிள்ளையார் வழிபாடு: ஓர் ஆய்வு நோக்கு, ஈழநாட்டில் வயிரவர் வழிபாடு ஆகிய 12 தலைப்புகளில் இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

9156

சைவ நெறி அல்லது தமிழ் வழக்கு- எதிர்-வேதநெறி அல்லது ஆரிய வழக்கு. கணபதி மகேசன். யாழ்ப்பாணம்: க.மகேசன், இல. 6, இராணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜுன் 1995. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

86 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

வரைவிலக்கணமும் காலமும், தமிழர் சமயம்-தென்னாடுடைய சிவன், தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன், சைவ வேதாந்திகள், வடமொழி வேதம்-தமிழ்மொழி வேதம் இருவேறு, வேதாந்தத்தின் வளர்ச்சி, கற்றவர் தத்துவம் பேசுவர், வேதாந்திகளிடையே ஒன்றுக்கொன்று முரண்பாடு, தமிழ் வேதம், பிராமணியம், பிராமண எதிர்ப்பு இயக்கங்கள், இன்றும் பிராமணியம் நிலைத்து நிற்பதற்கான ஏதுக்கள், சிவபெருமானே பெரியவர், சைவசமயத்தவரின் தலையிடாக் கொள்கை, சிறுதெய்வ வழிபாடு, தோற்றம், சீர்திருத்தம், சிறுதெய்வ வழிபாடு - ஆரிய வழக்கு, உள்ளிருந்தே கொல்லும் வியாதி, அன்புநெறி - தமிழ் வழக்கு, அச்சநெறி - ஆரிய வழக்கு, சித்தாந்தம் தெளிவு, வேதாந்தம் கழிவு, சிவபூசை வழிபாட்டு மொழி, பண்ணிசை, என இன்னோரன்ன 45 தலைப்புகளின் கீழ் சைவ - ஆரிய மரபுகளிடையே உள்ள வேற்றுமைகளை நூலாசிரியர் ஒரு விவாதமாகக் கொண்டுசெல்கின்றார். ஆரிய எதிர்ப்பு, பிராமணீய எதிர்ப்பு என்பன பற்றிய நூலாசிரியரின் கருத்துக்கள் நூலிடையே விரவிக்கிடக்கின்றன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115285).

9157

சைவக் களஞ்சியம்: சைவ சமயக் கட்டுரைகளின் தொகுப்பு. க.வைத்தீசுவரக் குருக்கள். யாழ்ப்பாணம்: வியாவில் ஐயனார் தேவஸ்தானம், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: தேவி அச்சகம், 140/1, மானிப்பாய் வீதி).

xxvi, 322 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18.5 சமீ.

பண்டிதர் கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்கள் எழுதிய சைவசமயம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும்.

9158

சைவத்தின் தோற்றம். ஆ.பத்மாவதி. சென்னை 600026: குமரன் பப்ளிஷர்ஸ், 3. மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, 7ஆவது தெரு, வடபழநி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (சென்னை: அச்சக விபரம் தரப்படவில்லை).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 18x12 சமீ.

ஆசிரியர் எழுதிய 10 பக்தி இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சைவத்தின் தோற்றம், தில்லையும் சாங்கியத் தத்துவமும், தமிழகத்தில் காரோஹண சைவம், காவியங்கள் கூறும் புறஞ்சேரி, காரைக் காலம்மையாரின் சுடுகாட்டு வருணனை, தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியின் தோற்றம், பேரரசை உருவாக்கும் சிற்றரசு, கௌளாச்சாரத் தத்துவத்தில் திருவொற்றியூர்க் கோவில், காஞ்சி காமாட்சி கோயிலின் பௌத்த ஆதாரங்கள், சப்தமாதர் - நதிப்பெண்களே ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 177454).

9159

சோபகிருது வருஷ நவராத்திரி-சிவராத்திரி விரத நிர்ணயம். ச.குமாரசுவாமிக் குருக்கள், எஸ்.சுவாமிநாத சிவாசாரியார், அரு.இராமநாதக் குருக்கள், க.சுவாமிநாத சிவாசாரியார் (இணைஆசிரியர்கள்). திருக்கேதீச்சரம்: சிவானந்த குருகுலம், 1வது பதிப்பு, 1964. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சோதிட அடிப்படையில் சோபகிருது வருடத்துக்கான (1963-64) நவராத்திரி, மற்றும் சிவராத்திரி தினங்களை நிர்ணயிப்பதில் ஏற்பட்ட சிக்கலைத் தொடர்ந்து அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், தருமபுரம் சிவஸ்ரீ எஸ்.சுவாமிநாத சிவாசாரியார், கண்டனூர் சிவஸ்ரீ அரு.இராமநாதக் குருக்கள், திருவாவடுதுறை சிவஸ்ரீ க.சுவாமிநாத சிவாசாரியார் ஆகய நால்வரும் இணைந்து கணிப்பிட்டு இந்நூலை வெளியிட்டிருந்தார்கள். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135000).

9160

ஞானத் தமிழ். வ.குகசர்மா. தெல்லிப்பழை: இந்து சமய விருத்திச் சங்கம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1979. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).

xvi, *88 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x14 *சமீ.*

பௌராணிக வித்தகர் வ.குகசர்மா அவர்கள் "ஈழநாடு" பத்திரிகையில் எழுதிய ஞானத்தமிழ் என்ற தலைப்பிலான கட்டுரைத் தொடரின் நூல்வடிவம் இதுவாகும். சைவமும் வைஷ்ணவமும் தமிழில் கலந்து ஞானத்தமிழாக உருவானவகையை இக்கட்டுரைகளின் வாயிலாக ஆசிரியர் புலப்படுத்தியிருக்கிறார். ஆசிரியர் "பாவான்ஸ் ஜேர்னல்" என்ற ஆங்கில ஆன்மீக இதழில் எழுதிய சில கட்டுரைகளும் இந்நூலில் தமிழாக்கம் செய்யப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 97998).

9161

தவ முனிவனின் தமிழ் மந்திரம். *சிவ மகாலிங்கம். யாழ்ப்பாணம்: சிவ.மகாலிங்கம், சிவஜோதி, பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, ஜூலை 2013. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 681, காங்கேசன்துறை வீதி).*

xvi, *232 பக்கம், விலை: ரூபா 490., அளவு:* 22.5x15 *சமீ.,* ISBN: 978-955-44645-0-6.

சிவத்தமிழ் வித்தகர், திருமந்திரவாரிதி, கலாபூஷணம் ஆகிய பட்டங்களைப்பெற்ற சிவ மகாலிங்கம் அவர்கள் தான் எழுதிய 45 ஆன்மீகக் கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். தவயோகியின் திரு அவதாரம், சித்த புருஷர்களில் மூலவர் திருமூலர், சிவனே முழுமுதற் தெய்வம், குருவருளின்றித் திருவருள் இல்லை, கூத்தன் புறப்பட்ட கூடு, கொல்லாமையே சிறந்த அறம், அன்பே சிவம், ஞான ஒளி, போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் எழுதப்பட்ட இக்கட்டுரைகளில் பெரும்பாலானவை திருமூலரின் திருமந்திரத்தை விளக்குவதாய் அமைந்துள்ளமையை அவதானிக்கமுடிகின்றது. நூலாசிரியர் ஏற்கெனவே திருமுறைச் செல்வம், சிவஜோதி, முருக மந்திரம், ஞானதீபம், தரிசனங்களும் வாழ்வியலும் ஆகிய 5 நூல்களை எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233285).

9162

திருவடிப் பெருமை சிந்திப்பரியன. *சிவ.சண்முகவடிவேல். ஏழாலை: ஆத்மஜோதி தியான மணிமண்டப வெளியீடு, 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: ஜய்ராம் பிரின்டர்ஸ், வெலிங்டன் சந்தி).*

(8), 116 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 *சமீ.*

சிவத்தொண்டர் சிவ.சண்முகவடிவேல் அவர்கள் எழுதிய ஆன்மீகக் கருத்துக்கள் பொதிந்த நூல் இதுவாகும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் மாவை ஆதினம் மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் இந்நூலுக்கு வழங்கிய ஆசியுரையில் இறைவனிடம் அழகு தமிழில் பாடி ஆனந்தக் கண்ணீர் சிந்தி அன்புக் கடவுளின் திருவடி நிழல் வேண்டி தியானம் செய்யும் ஒருவராக நூலாசிரியரைக் காண்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 190382).

9163

திருவாதவூரரும் சைவத் திருநெறியும்: ஆய்வரங்கச் சிறப்புமலர் 2014. *சாந்தி நாவுக்கரசன், தேவகுமாரி ஹரன் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

viii, *182 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 25x19 *சமீ.*

மேற்படி திணைக்களத்தினால் 18.7.2014 முதல் 20.7.2014 வரை கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஒழுங்குசெய்யப்பட்ட ஆய்வரங்கத்தில் விநியோகிக்கப்பட்ட மலர். மாணிக்கவாசகரது அருட்பனுவல்களான திருவாசகம், திருக்கோவையார் ஆகிய நூல்களும் அவற்றில் காணப்படும் பக்தி சுவை, இலக்கியச் சுவை, சைவசித்தாந்த, தத்துவக் கருத்துக்கள், மாணிக்கவாசகர்கால சைவநெறி என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு பல்வேறு கட்டுரைகள் இவ்வாய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாய்வரங்கின் முன்னோடியாக வெளியிடப்பட்டுள்ள இம்மலர், பல்வேறு நூல்கள், மலர்களில் இருந்து தேர்ந்த 10 ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கியதாக அன்றைய தினங்களில் விநியோகிக்கப் பட்டது. இதில் க.கணபதிப்பிள்ளை அவர்களின் மணிவாசகர் வரலாறு என்ற கட்டுரை முதலாவதாக அமைகின்றது. தொடர்ந்து பேராசிரியர் கா.வெள்ளை வாரணன் எழுதிய மாணிக்கவாசகர் காலம் என்ற கட்டுரையும், முரு.பழ.இரத்தினம் செட்டியார் எழுதிய திருவாசகத்தில் சைவசித்தாந்தம், திருவாசகத்தில் இலக்கியச் சுவை, திருவாசகத்தில் பக்திச் சுவை ஆகிய 3 கட்டுரைகளும், பேராசிரியர் ஞானா குலேந்திரனின் திருவாசக இசை, இசைமணி கா.சங்கரனார் எழுதிய திருவாசக நிருத்திய நாட்டியம் ஆகிய கட்டுரைகளும், முனைவர் இரா.சுந்தரமூர்த்தி எழுதிய திருவாசக மூலப் பதிப்புகள், திருவாசக உரை வரலாறு ஆகிய இரு கட்டுரைகளும், பேராசிரியர் ஆ.சிவலிங்கனார் எழுதிய திருக்கோவையார் என்ற கட்டுரையும் ஆக மொத்தம் பத்து கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

9164

தெய்வீக வாழ்வு வாழ 500 இறை சிந்தனைகள். *வி.செல்வரத்தினம். அராலி: செல்வி விஜயதெய்வேந்திரன் திருவருள் சோதி, 1வது பதிப்பு, 2009. (பண்டத்தரிப்பு: ஜே.எஸ்.பிரின்டர்ஸ்).*

52 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 *சமீ.*

அருள்நெறிச் செல்வர் வி.செல்வரத்தினம் அவர்கள் சேகரித்துத் தொகுத்து வழங்கியுள்ள இந்நூல் ஆன்மீகவாதிகளின் சிந்தனைகளை சுருங்கக் கூறுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204316).

9165

பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும். *க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி*

வீதி, 1வது பதிப்பு, 2008. (கொழும்பு-13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxiv, *444 பக்கம், தகடுகள், படங்கள், விலை: ரூபா 500., அளவு:* 22.5x15 *சமீ.*

2007இல் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றில் சமர்ப்பிக்கப்பட்ட உரைகளின் தொகுப்பு. அரசியலும் சமூகமும் (முதலாம் பாண்டியப் பேரரசு காலச் செப்பேடுகளும் வரலாறும், பல்லவர் ஆட்சி நிர்வாகமுறை, பல்லவர் காலத்து தேவதானங்களும் பள்ளிச் சந்தங்களும், பல்லவர் காலத்துப் பெண்கள், நவகண்டம்-பகுப்பாய்வு உளவியல் நோக்கு), சமயமும் தத்துவமும் (சைவசமய மரபில் வேதாகமங்கள், தமிழ்நாட்டுப் பௌத்தம், தமிழகத்தில் சமண சமயமும் வைதிக சமயங்களும், தேவாரங்களில் சைவசமயக் கோட்பாடுகள், திருமுறைகளில் சைவசித்தாந்த சிந்தனைகள், பக்தி இலக்கியங்களில் சைவசித்தாந்தம்), கோவில்களும் கலைகளும் (திருஎவ்வளூர் திருக்கண்ணபுரம், திருவாலி திருநகர்க் கோயில்கள், திருக்காளத்தி, மாமல்லபுரத்துச் சிற்பங்கள், திருஞானசம்பந்தர் பாடிய புதிய பண், பல்லவர் காலப் பண்ணிசை, பக்தி இலக்கியங்களில் அணிகல வகைகள்), இலக்கியமும் அழகியலும் (பக்தி இலக்கியம்- ஒரு அறிமுகம், பல்லவர்கால பக்தி இலக்கியங்களில் பக்தி ரசம், பக்திப் பாடல்களில் இராவணன், இலங்கையில் பல்லவர்கால சம்ஸ்கிருத மொழிச் செல்வாக்கு, தமிழ்ஞான சம்பந்தர், காரைக்காலம்மையாரும் ஆண்டாளும், நம்மாழ்வார் பாசுரங்கள்) ஆகிய நான்கு பெரும்பிரிவுகளின்கீழ் எழுதப்பட்ட பல்வேறு கட்டுரைகளினதும் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. கட்டுரைத் தலைப்புக்கள் அடைப்புக் குறிக்குள் காணப்படுகின்றன.

9166

மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு: ஓர் அறிமுகம். *க.மகேஸ்வரலிங்கம். கொக்கட்டிச் சோலை: தில்லை வெளியீடு, மகிழடித் தீவு, 1வது பதிப்பு, 1996. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம்).*

xiii, *129 பக்கம், விலை: ரூபா 100., அளவு:* 21.5x14.5 *சமீ.*

கிராம அபிவிருத்தி அலுவலராகப் பணியாற்றிய க.மகேஸ்வரன் இந்நூலின் ஆசிரியர். தெய்வப் பாகுபாடும் சிறுதெய்வ வழிபாடும், மட்டக்களப்பும் சிறுதெய்வ வழிபாடும், பெண் தெய்வங்கள், ஆண்தெய்வங்கள், சிறுதெய்வங்களுள் சிறு தெய்வங்கள், பிதிர் வழிபாடு, பிற சமயத்தவரும் சிறுதெய்வ வழிபாடும், வழி பாட்டு முறைகள் ஆகிய எட்டு இயல்களில் இவர் இந்நூலை எழுதியிருக்கிறார். பின்னிணைப்பாக கோயில்கள் அமைந்துள்ள ஊர்களின் அட்டவணையொன்றும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 127471).

9167

வைதிக சந்தியாவந்தன விதி. *ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: கு. வைத்தீசுவரக் குருக்கள், 1வது பதிப்பு, 1960. (பருத்தித்துறை: கலாநிதி யந்திர சாலை).*

8 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x12.5 *சமீ.*

இந்நூல் அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்களவர்களால் தொகுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கி.சீதாராம சாஸ்திரிகள், கண்டனூர் அரு.இராமநாதக் குருக்கள், தருமபுரம் எஸ்.சுவாமிநாத சிவாசாரியார் ஆகிய மூவரினாலும் பார்வையிடப் பெற்று வெளியிடப்பெற்றுள்ளது.

மேலும் பார்க்க: 9338, 9512

294.5(1) இந்து சமய பாடநூல்கள்

9168

இந்து சமய பாடம்: தொகுப்பு நூல்: இரண்டாம் பாகம். *க.வேந்தனார். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

(2), iv, *207 பக்கம், விலை: ரூபா 2., அளவு:* 21x14 *சமீ.*

1959 மார்கழி தொடக்கம் பொதுத் தராதர G.C.E. *வகுப்புக்குரியது. சைவசித்தாந்த சமய நூல்கள், சைவசித்தாந்த கோட்பாடுகள், சைவசித்தாந்த சாதனைகள் என்பவற்றின் தெளிவான விளக்கமும், வினாக்களும் அடங்கியுள்ளன. நூலாசிரியர் வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் க.வேந்தனார் யாழ்ப்பாணம், பரமேசுவராக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135003).*

9169

இந்து சமய பாடம்: பாடத்திட்டம் முற்றும் அடங்கிய முழுநூல்: க.பொ.த. 1971-1973 வகுப்புக்குரியது. *க.வேந்தனார், நா.கணபதிப்பிள்ளை (இணை யாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 10வது பதிப்பு, 1971, 1வது பதிப்பு, 1959. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).*

(6), iv, *394 பக்கம், விலை: ரூபா 4.25, அளவு:* 21x14 *சமீ.*

இலங்கை வித்தியாபகுதியாரின் ஜீ.சீ.ஈ.சாதாரண தரத்தின் 1969-1971 ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்திற்குரிய புதிய பகுதிகள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், திருப்புகழ் ஆகிய புதிய பகுதிகள் 1969-1971 ஆம் ஆண்டுப்பாடத்திட்ட ஒழுங்கின்படி சேர்க்கப்பட்டுள்ளன. புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு வித்துவான் சைவப்புலவர் நா.கணபதிப்பிள்ளை அவர்கள் விரிவுரை எழுதி வழங்கியுள்ளார். திருவருட்பயன் முதல் ஐந்து அதிகாரங்களுக்கும் சிறப்பான விளக்கவுரை தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 82261).

9170

இந்து சமயம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம் பகுதி 1. காரை.செ.சுந்தரம்பிள்ளை (மூலம்), செ.சங்கரதாஸ் (தொகுப்பு). யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

42 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 21.5x14 சமீ.

கடந்த பத்து வருடகால வினா-விடைகளைக் கொண்ட நூல். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114388).

9171

இந்து மதப் பொது அறிவு. ஏ.எஸ்.ஏ.தரங்கனி. மூளாய்: அருணா பப்ளிக்கேஷன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு-13: விக்ரம் பிரின்டர்ஸ், இல.19, Wolfendhal Lane).

122 பக்கம், விலை: ரூபா 145., அளவு: 22x14.5 சமீ.

இந்நூலின் முதல் ஆறு அத்தியாயங்களிலும் இந்து மதத்தின் பிரிவுகளான சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம், என்னும் ஆறு பிரிவுகள் பற்றிய அடிப்படை அறிவினை வழங்கும் வகையில் வினா-விடைகளாகத் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. ஏழாவது அத்தியாயத்தில் இந்து மதம் சம்பந்தமான கலாச்சாரப் பண்புகள் பற்றிய தகவல்கள் வினா-விடைகளாகத் தரப்பட்டுள்ளன. க.பொ.த.சாதாரண, உயர்தர மாணவர்களுக்கேற்ற வகையில் இந்நூல் தயாரிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 136784).

9172

இரண்டாம் சைவ வினாவிடை. ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1974. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

(4), 134 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அருளிச்செய்த இரண்டாம் சைவ வினா-விடை என்ற இந்நூல் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தின் 24ஆவது வெளியீடாக வெளிவந்துள்ளது. சைவ வினா விடையும் தோத்திரத்திரட்டும் இந்நூலில் உள்ளடங்குகின்றன. பதியியல், பசுவியல், பாசவியல், வேதாகமவியல், சைவ பேதவியல், விபூதியியல், உருத்திராட்சவியல், பஞ்சாட்சரவியல், சிவலிங்கவியல், நித்திய கருமவியல், சிவாலய கைங்கரியவியல், சிவாலய தரிசனவியல், குருசங்கம சேவையியல், மாகேசுர பூசையியல், விரதவியல், அன்பியல் ஆகிய 16 தலைப்புகளில் வினா விடைகள் அடங்கியுள்ளன. விநாயகர், சிவன், உமாதேவியார், சபாபதி, சிவகாமியம்மையார், வைரவக் கடவுள், சூரியமூர்த்தி என 21 பேரின்மீது பாடிய தோத்திரப்பாடல்களும், திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், திருவெம்பாவை,

மாகேசுர பூசையில் ஓதத்தக்க பெரியபுராணச் செய்யுள், மாகேசுர பூசை யாசீர்வாதம், அரும்பதவுரை என்பனவும் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 80735).

9173

க.பொ.த. உயர்தரப் பரீட்சை: கடந்தகால வினாத்தாள்கள்: இந்து சமயம் பகுதி 1-பகுதி 2. கா.யோ.கிரிதரன். யாழ்ப்பாணம்: காந்தம் வெளியீடு, 5, அத்தியடி புதிய வீதி, 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி அச்சகம், 2/5 துரைராசா வீதி, வண்ணார்பண்ணை).

18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x22 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளுக்கான மீட்டல் பயிற்சிகள் கொண்ட இந்நூலில் 1987 முதல் 1993 வரை நடைபெற்ற ஒன்பது பரீட்சை களிலும் இடம்பெற்ற கடந்தகால வினாக்களையும் அதற்கான விடைகளையும் கொண்டுள்ளது. நூலாசிரியர் கா.யோ.கிரிதரன், யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரியின் இந்து சமய ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104168).

9174

க.பொ.த. ஜீ.சீ.ஈ. (சாதாரணதர) வகுப்புக்குரிய இந்து சமய பாடம். நா.கணபதிப் பிள்ளை. யாழ்ப்பாணம்: வித்துவான் சைவப்புலவர் நா.கணபதிப்பிள்ளை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).

64 பக்கம், விலை: சதம் 90, அளவு: 21.5x14 சமீ.

க.பொ.த. G.C.E. (சாதாரணதர) வகுப்புக்குரிய இந்துசமயபாட நூல். 1971-1972 ஆம் ஆண்டுப் பாடத்திட்டத்திற்குரிய புதிய பகுதிகளையும் உள்ளடக்கியது.

9175

சைவ சமய பாடம்: ஆறாம் வகுப்பு. கலைவாணி புத்தக நிலையம். யாழ்ப்பாணம்: கலைவாணி புத்தக நிலையம், 1வது பதிப்பு, 1971. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

iv, 122 பக்கம், படங்கள், விலை: சதம் 80., அளவு: 18x12.5 சமீ.

அரசினரின் 1969ஆம் ஆண்டு சைவ சமய பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டது. கடவுளின் பெருமையை உணர்த்தும் சிறுகதைகள், இனிய பக்திப் பாடல்கள், பாடக் குறிப்புகள், நீதி வாக்கியங்கள், இளையான்குடிமாற நாயனார், பூசலார் நாயனார், தண்டியடிகள் நாயனார், கண்ணப்பர், திலகவதியார், மார்க்கண்டேயர் ஆகிய சமய குரவரின் சரித்திரங்கள், நயினாதீவு, முன்னேஸ்வரம், சித்திரவேலாயுத சுவாமி கோவில், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் கோவில் ஆகிய கோவில்களின் வரலாறுகள் ஆகியன இருபத்தேழு பாடங்களாக, ஆங்காங்கே தேவையான அளவுக்குப் படங்களுடன் இடம்பெற்றுள்ளன. கொழும்பு விவேகானந்த சபை

யாரால் நடத்தப்படும் சமய பாடப் பரீட்சைக்கு ஏற்பவும் விடயங்கள் சேர்க்கப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104688).

9176

சைவ சமய போதினி: ஐந்தாம் வகுப்பு. குரும்பசிட்டி சன்மார்க்க சபை. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 5ஆம் பதிப்பு, 1963, 1வது பதிப்பு, 1957, 2வது பதிப்பு, 1957, 3வது பதிப்பு, 1958, 4வது பதிப்பு, 1960. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 74 பக்கம், படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 18x14 சமீ.

இலங்கை அரசாங்கத்தின் கல்வித்திட்டத்திற்கு அமைவாக சைவ சமயம் கற்பிப் பதற்காக வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம் சைவ சமய போதினி என்ற தொடரில் நான்கு பாடநூல்களை வெளியிட்டது. அதில் ஒன்றாக ஐந்தாம் வகுப்புக்கேற்ற இந்நூல் அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87291).

9177

சைவ சமய வினா-விடைத் தொகுப்பு: தரம் 10,11 மாணவர்களுக்கானது. கேதீஸ்வரி வாமதேவன் (தொகுப்பாசிரியர்). சுழிபுரம்: இந்து மாமன்றம், யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: அச்சகவிபரம் தரப்படவில்லை).

84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கை கல்விப் பொதுத் தாராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தயாராகும் தரம் 10, 11 வகுப்பு மாணவர்களின் சைவ சமயபாடக் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த வினா-விடை வடிவிலான நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135387).

9178

சைவ நெறி: தரம்9. சாந்தையூரான். கொழும்பு-11: பொன் சக்திவேல், பிரைற் புக் சென்டர், எஸ்.27, 1வது தளம், த.பெ.எண் 162, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

80 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 60., அளவு: 21.5x14.5 சமீ.

சைவநெறி - தரம் ஒன்பது நூலானது, வாழ்வியல் அனுபவங்களையும் அன்றாட வாழ்க்கையை வளம்படுத்தக்கூடிய முறையில் வகுக்கப்பட்டுள்ளது. இதனை மிக எளிமையாக கற்று, கற்றனவற்றை மனதில் நிலைநிறுத்திக்கொள்ளக்கூடிய முறையில் வகுத்துத் தொகுத்து வழங்கியுள்ளார் நூலாசிரியர். ஒழுக்க நெறி, மனித விழுமியம், மக்கள் பண்பு ஆகியவற்றினை வளர்த்தெடுக்கக் கூடிய முறையில் பாடத்தொகுதி வகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129363).

9179

சைவ போதினி-நான்காம் வகுப்பு. விவேகானந்த சபை. கொழும்பு-13: விவேகானந்த சபை, 34, விவேகானந்த மேடு, 14வது பதிப்பு, ஜனவரி 1979, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1960. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை).

80 பக்கம், விலை: ரூபா 1.80, அளவு: 18.5x12 சமீ.

விவேகானந்த சபையினர் தாங்கள் அகில இலங்கை அடிப்படையில் ஆண்டு தோறும் நடத்திவரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனுற வேண்டியும், இலங்கை அரசாங்க கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந்நூல் எழுதப்பட்டது. திருஞான சம்பந்தர் தேவாரம், சைவ சமயம், திருக்கேதீசுவரம், அகத்தியரும் பிள்ளையாரும், திருநாவுக்கரசர் தேவாரம், திருநீறு, திருக்கோணேசுவரம், முருகக் கடவுளும் ஔவையாரும், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், நித்திய கருமம், கதிர்காமம், சம்பந்தர் ஞானப்பாலுண்டது, மாணிக்கவாசக சுவாமிகள் தேவாரம், கோயிலுக்குச் செல்லுதல், மாவிட்டபுரம், அப்பர் சூலை நோய் தீர்ந்தது, பெரிய புராணம், கோயில்களைச் சுத்தஞ்செய்தல், சுந்தரரைத் தடுத்தாட்கொண்டமை, அருணகிரிநாதர் திருப்புகழ், பூந்தோட்டம், செம்மனச் செல்வியார், திருமந்திரம், மூதுரை ஆகிய 24 பாடங்களாக இந்நூல் வகுத்துத் தரப்பட்டுள்ளது.

9180

சைவ போதினி-எட்டாம் வகுப்பு. விவேகானந்த சபை. கொழும்பு: விவேகானந்த சபை, திருத்திய பதிப்பு, 1973. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

(3), 136 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12 சமீ.

விவேகானந்த சபையினர் தாங்கள் அகில இலங்கை அடிப்படையில் ஆண்டு தோறும் நடத்திவரும் சைவ சமய பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் களுக்குப் பயனுற வேண்டியும், இலங்கை அரசாங்க கல்வித்திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந்நூல் எழுதப்பட்டது. சைவ சமயப்பிரமாண நூல்கள், சைவ நாற்பாதங்களும் நால்வகை முக்திகளும், திருக்கோவில் அமைப்பு, இறைவன் மூர்த்தங்கள், திருக்கோயில் வழிபாடு, சரியை வழிபாடு, திருக்கோயிற் கிரிகைகள், பசு (ஆன்மா), பாசம், திருஞானசம்பந்தர் தேவாரம், திருநாவுக்கரச நாயனார் தேவாரம், அப்பர் தேவாரம், சுந்தரர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ், கந்தர் அலங்காரம், நீதிப்பகுதி -திருக்குறள், மங்கையர்க்கரசியார், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார், கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள், தாயுமான சுவாமிகள், சிவஞான முனிவர், மன்று தொழுத பதஞ்சலி, சிதம்பரம் ஆகிய 30 பாடங்களாக வகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104687).

9181

சைவ வினாவிடை: முதலாம் இரண்டாம் புத்தகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (மூலம்), ஆறுமுகம் கந்தையா (பதிப்பாசிரியர்). கொழும்பு 11: அஷ்டலக்ஷ்மி வெளியீடு, அஷ்டலக்ஷ்மி பதிப்பகம், 320, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு-11: கௌரி அச்சகம்).

158 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 22x14 சமீ.

கேள்வி-பதில்களின் வடிவில் பாமரருக்கும் சைவ சமய தத்துவங்களை எளிய முறையில் பரப்புவதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவ-வினாவிடை அந்நாளில் வெற்றிகண்டிருந்தது. இன்றளவில் சைவசமயம் கற்போருக்கான விருப்பு நூலாக இது இருந்து வருகின்றது. முதலிரு புத்தகங்களை உள்ளடக்கிய இப்பதிப்பு, தோத்திரத் திரட்டுடன் வெளிவந்துள்ளது. இந்நூலின் முதலாம் பிரிவு, கடவுளியல், புண்ணிய பாவவியல், விபூதியியல், திருமூல மந்திரவியல், நித்திய கருமவியல், சிவாலய தரிசனவியல், தமிழ் வேதவியல், தோத்திரத்திரட்டு ஆகிய ஏழு பாடங்களை உள்ளடக்குகின்றது. இரண்டாவது பிரிவு, பதியியல், பசுவியல், பாசவியல், வேதாகமவியல், சைவபேதவியல், விபூதியியல், உருத்திராட்சவியல், பஞ்சாட்சரவியல், சிவலிங்கவியல், நித்திய கருமவியல், சிவாலய கைங்கரியவியல், சிவாலய தரிசனவியல், குருசங்கம சேவையியல், மகேசுர பூசையியல், விரதவியல், அன்பியல் ஆகிய 16 பாடங்களையும், தோத்திரத்திரட்டு, திருநீற்றுப்பதிகம், கோளறு பதிகம், திருவெம்பாவை, பெரியபுராணச் செய்யுள் ஆகிய தோத்திரத் திரட்டையும் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 122901).

9182

சைவ வினாவிடை: முதற் புத்தகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (மூலம்), அ. பஞ்சாட்சரம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சமய கலாசாரக் குழு, யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவை, 1வது பதிப்பு, 1986. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 13.5x10.5 சமீ.

யாழ் மாவட்டக் கலாசாரப் பேரவையின் மூன்றாவது பிரசுரம். பதிப்பாசிரியர் அ.பஞ்சாட்சரம், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையின் பிரதி அதிபராகப் பணியாற்றியவர். கேள்வி-பதில்களின் வடிவில் பாமரருக்கும் சைவ சமய தத்துவங் களை எளியமுறையில் பரப்புவதில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவ-வினாவிடை அந்நாளில் வெற்றிகண்டிருந்தது. இன்றளவில் சைவசமயம் கற்போருக்கான விருப்பு நூலாக இது இருந்து வருகின்றது.

9183

சைவ வினாவிடை: இரண்டாம் புத்தகம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (மூலம்), சிதம்பரம்: முதலியார் ஜீ.சுப்பிரமணியம், தருமபரிபாலகர், சைவப்பிரகாச வித்தியா சாலை, 16வது பதிப்பு, ஆடி 1953. (சென்னைபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை).

282 பக்கம், விலை: 10 அணா, அளவு: 12.5x9.5 சமீ.

பதியியல், பசுவியல், பாசவியல், வேதாகமவியல், சைவபேதவியல், விபூதியியல், உருத்திராட்சவியல், பஞ்சாட்சரவியல், சிவலிங்கவியல், நித்திய கருமவியல், சிவாலய கைங்கரியவியல், சிவாலய தரிசனவியல், குருசங்கம சேவையியல், மகேசுர பூசையியல், விரதவியல், அன்பியல் ஆகிய 16 பாடங்களையும், 26 தோத்திரத் திரட்டுகளையும் உள்ளடக்கியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14055).

9184

சைவப் பிரகாசிகை: இரண்டாம் புத்தகம். ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ச.குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி, 4வது பதிப்பு, விரோதி வருடம் தை 1950. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).

(4), 40 பக்கம், படங்கள், விலை: சதம் 50, அளவு: 21.5x14 சமீ.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மானேசர் சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் அவர்களால் எழுதப்பெற்று வெளிவந்துள்ள சமயக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. விநாயகக் கடவுள் வல்லாளனுக்கு அருள்செய்தது என்பதில் தொடங்கி, பொன்னாலயம் ஈறாக, சைவ சமய அறிவினை வழங்கும், 31 கட்டுரைகளை இது உள்ளடக்கியது. தான் தோன்றியீஸ்வரர், வல்லிபுரக்கோயில், போன்ற இடங்கள் பற்றியும், நகுல முனிவர், மாருதப்பிரவல்லி, மார்க்கண்டேய முனிவர், உபமன்யு முனிவர், புகழ்த்துணை நாயனார், கணம்புல்ல நாயனார், சுசங்கீதன், ஞானப்பிரகாச முனிவர் ஆகியோர் பற்றியும் தனித்தனிக் கட்டுரைகள் உள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 97732).

9185

சைவப் பிரகாசிகை: ஐந்தாம் புத்தகம். ச.குமாரசுவாமிக் குருக்கள். யாழ்ப்பாணம்: ச.கு.வைத்தியேசுவரக் குருக்கள், அச்சுவேலி, 7வது பதிப்பு, நந்தன வருடம் தை 1953, 1வது பதிப்பு, மார்ச் 1933. (பருத்தித்துறை: கலாநிதியந்திரசாலை).

(4), 48 பக்கம், படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 21x13.5 சமீ.

அச்சுவேலி சரசுவதி வித்தியாசாலை மனேசரான சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள், சிவனடியார் பெருமைகளையும், சிவதலங்களின் பெருமையையும், சைவசமயக் கருத்துக்களை உள்ளடக்கிய உபகதைகளையும் எளிய நடையில் இளையோரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் சுவையாக எழுதி சைவப் பிரகாசிகை என்ற தொடர்நூல் வழியாக அவ்வப்போது வழங்கிவந்துள்ளார். அவ்வகையில் வெளிவந்துள்ள ஐந்தாம் புத்தகம் இதுவாகும். விநாயகக் கடவுள், நம்பியாண்டார் நம்பி, சிவபெருமான், விட்டுணு பிரமர் அடிமுடி தேடியது, உமாதேவியார், சுப்பிரமணியக் கடவுள், சிவதூஷணம், வீரபத்திரக் கடவுள் சர்பவடிவம் கொண்டது, வைரவக் கடவுள், தவம், அன்புடைமை, திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் ஞானப்பாலுண்டது, பாண்டியன் சுரந்தீர்த்தது,

அப்பூதியடிகள் நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலைவாய்ப்பட்ட பிள்ளையை மீட்டது, மாணிக்கவாசக சுவாமிகள் புத்தரை வாதில் வென்றது, மெய்கண்ட தேவர், உமாபதி சிவாசாரியார், கோச்செங்கட் சோழநாயனார், மனுநீதிகண்ட சோழர், ஆலய வழிபாடு, சிவாலயத் திருத்தொண்டுகள், திருவிளக்கிடுதல் சிவநின்மாலியம், சிவத்திரவியங் கவர்தல், குருசங்கம வழிபாடு, நக்கீரர், சுப்பிரமணியக் கடவுளும் ஔவையாரும், முசுகுந்தச் சக்கரவர்த்தி, கரிக்குருவி உபதேசம்பெற்றது, விட்டுணு, சைவாசாரியரும் வைணவனும், சண்டேசுர நாயனார் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98562).

9186

சைவ போதம். *சு.சிவபாதசுந்தரம் (மூலம்), ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, மீள் பதிப்பு, 2011. (கொழும்பு-13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).*

xvi, *182 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 22x14.5 *சமீ.,* ISBN: 978-955-9233-22-0.

சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் சைவபோதம் என்ற பெயரில் எழுதி வெளியிட்ட சைவ போதம் என்ற நூலின் இரண்டு பாகங்களும் இங்கு தனி நூலாக மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இந்நூல்கள் சிறுவர்களுக்கும் எளிதில் விளங்கத்தக்க வகையில் சைவ சமயக் கருத்துக்களை மிக எளிமையாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. நமது சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை எளிதில் விளங்கிக்கொள்ள இந்நூல் துணைசெய்கின்றது. அறநெறிப் பாடசாலை களின் பாவனைக்காக இந்நூல் திணைக்களத்தினால் மீள்பிரசுரம் செய்யப் பட்டுள்ளது.

294.5(2) இந்து நிறுவனங்கள், ஆலய வரலாறுகள்

9187

அருள் மிகு ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலய வரலாறு. *சுந்தரமதி வேதநாயகம். மட்டக்களப்பு: ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலய பரிபாலன சபை, நாவலடி, 1வது பதிப்பு, ஆனி 2010. (மட்டக்களப்பு: ஆதவன் அச்சகம், அரசடி).*

xxx, *107 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 195., அளவு:* 15x20 *சமீ.*

தாய்த்தெய்வ வழிபாடு, கிழக்கில் அம்மன் வழிபாடு, ஆலய அமைவிடத்திற்கான வரைபடம், ஆலய அமைவிடம், கடல் நாச்சியம்மன் ஆலயங்கள், கிராம சமூகங்களின் பண்பாட்டுப் பின்புலத் தொடர்பு, நாவலடி கடலாச்சியம்மன் ஆலய தோற்றமும் வளர்ச்சியும், கடலாச்சியம்மன் நாமம், திவ்வியகரணி கூறும் காவிய வரலாறு ஒரு பார்வை, சடங்கு-சடங்கு முறைமை-வழிபாடு, கோயில் நிர்வாக முறைமை, கும்பாபிஷேகம், இயற்கை அநர்த்தமும் சமூக நிலையும், அற்புதங்கள், ஆலயத் தொண்டன், மூக்குத்தி ஒளி, ஆலய வளர்ச்சிக்கு உதவியோர்,

கடலாட்சியம்மன் பேரில் பாடப்பெற்ற காவடிப் பாடல்கள், சிறப்பித்துப் பாடப்பட்ட பாடல்கள், குளித்திப் பாடல்கள், கடலாச்சியம்மன் கும்மி, கடலாச்சியம்மன் காவியம், ஆலயம் சம்பந்தப்பட்ட படங்களும் விளக்கமும், சுனாமிக்குப் பின்னரான ஆலயத்தின் தோற்றம் ஆகிய 24 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 212852).

9188

ஆபுத்திரனும் அமுதசுரபியும். சி.ஆ.கதிரித்தம்பி. நயினாதீவு: சி.ஆ.கதிரித்தம்பி, கணேசபதி, நயினார்தீவு - 6, 1வது பதிப்பு, ஆனி 1980. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 411/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை).

xvi, 137 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

64 சக்திபீடங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் பிரதிஷ்டை வரலாறும், இப்புண்ணியதலம் பற்றி விரிவாக எடுத்துரைக்கும் மணிமேகலை வரலாறும் பிந்திய வரலாறுகளும் அடங்கிய நூல். மதுரையில் வாழ்ந்த அடியாராகிய ஆபுத்திரனுக்கு, எடுக்க எடுக்கக் குறையாத அமுத சுரபியொன்றை சிந்தாதேவியாகிய கலைவாணி வழங்கியதாக ஐதீகமுண்டு. மதுரையிலிருந்து (இன்றைய இந்தோனேசியாவின் ஜாவா தீவாகக் கருதப்படும்) சாவக நாட்டுக்குச் செல்லும் வழியில் மரக்கலம் புயலில் சிக்குண்டு மணி பல்லவத்துக்கு ஆபுத்திரன் அமுதசுரபியுடன் வந்தடைகின்றான். புயல் நீங்கி மரக்கலம் புறப்பட்ட வேளையில் ஆபுத்திரனும் அவனது அமுத சுரபியும் மணிபல்லவத்திலேயே தங்கிவிடநேர்கின்றது. ஆபுத்திரன் அங்கேயே உயிர்நீத்ததான ஐதீகம் இந்நூலில் சுவையாக விளக்கப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122963).

9189

ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள். விசுவலிங்கம் செல்வரத்தினம். கனடா: ஜெயகுமார் ஜனுசன், 1வது பதிப்பு, சித்திரை 2004. (யாழ்ப்பாணம்: மேனகா அச்சகம், 342, காங்கேசன்துறை வீதி).

xvi, 136 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x13.5 சமீ.

விநாயகர் வணக்கம், ஆறுபடை வீடுகள், படைவீடு வீட்டின் தத்துவம், முதற் படை வீடு திருப்பரங்குன்றம், திருப்பரங்குன்றக் கவசம், இரண்டாவது வீடு திருச்செந்தூர், திருச்செந்தூர் கவசம், மூன்றாவது படைவீடு பழநி, பழநி கவசம், நாலாவது படைவீடு சுவாமிமலை, சுவாமிமலை கவசம், ஐந்தாவது படைவீடு திருத்தணிகை, திருத்தணிகை கவசம், ஆறாவது படைவீடு பழமுதிர்ச்சோலை, பழமுதிர்ச்சோலை கவசம் ஆகிய 15 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அளவெட்டியைச் சேர்ந்த இந் நூலாசிரியர் விஞ்ஞான, கணித பாடநூல்கள் பலவற்றின் ஆசிரியருமாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 150403).

9190

கதிர்காமத் திருமுருகன்: வரலாற்று ஆய்வு நூல். எஸ்.எஸ்.நாதன் (இயற்பெயர்: சோணாசலம்பிள்ளை சிவகாமிநாதன்). கல்முனை: சி.சிவகுருநாதன், நற்பிட்டி முனை-01, 4வது பதிப்பு, ஜூலை 2012, 1வது பதிப்பு, நவம்பர் 1953, 3வது பதிப்பு, ஜூலை 1964. (கல்முனை: கோல்டன் அச்சகம்).

xv, 33 பக்கம், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

பதுளை சமத்துவ சங்கத் தலைவர் வ.ஞானபண்டிதன் அவர்களால் சேகரிக்கப் பட்ட குறிப்புகளின் உதவியுடனும் தனது தனிப்பட்ட ஆய்வுமூலங்களைப் பயன்படுத்தியும் தொண்டன் பத்திரிகைஆசிரியர் எஸ்.எஸ்.நாதன் அவர்களால் எழுதப்பட்டு தமிழாசான் கந்த முருகேசனாரின் மதிப்புரையுடன் 1953ஆம் ஆண்டில் வெளிவந்த வரலாற்று நூலின் மீள்பதிப்பு இதுவாகும். இந்நூலில் தமிழர் சிங்களவர் தொடர்பினை விஜயன், பாண்டியன் மகளை விவாகம் செய்த தொடர்பினை அடிப்படையாகக் கொண்டு நிறுவுகிறார். தமிழின் அடிப்படை யிலேயே சிங்களம் தோன்றியதெனவும், கதிர்காம வழிபாட்டு முறைகளில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சமவுரிமை உண்டென்றும் வாதிடுகிறார். ஆலய நிர்வாகத்தில் சைவசமயிகளே உரித்துடையவர்களென ஆதாரம் காட்டும் ஆசிரியர் பால்குடிவாவா பள்ளியை பக்கீர் மடமென்றும், 135 வருடங்களுக்கு மேற்பட்ட அம்மடம் இந்திய பக்கீர் சாய்புகள் வந்து தங்கும் மடமென்றும் குறிப்பிடுகின்றார் மேலும் அதை கொழும்பு தாவூஸ் என்பவர் பதுளை நீதிமன்றில் வாதாடி முஸ்லிம்களுக்குரிய பள்ளியாகப் பெற்றாரென்றும் விளக்குகின்றார். மதுரகவி எஸ்.எஸ்.நாதன் என்றும் அழைக்கப்பட்ட இந்நூலாசிரியர் சிறந்ததொரு கவிஞருமாவார்.

9191

கதிர்காமம் கந்தன் கோவில்: அன்றும் இன்றும். செ.சுந்தரலிங்கம். கீரிமலை: செ.சுந்தரலிங்கம், மகாலிங்க வாசா, 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

(6), 46 பக்கம், தகடு, விலை: ரூபா 97.50, அளவு: 21.5x14 சமீ.

ஏழுமலைவாழ் கந்தன், கந்தபுராணத்தில் கதிர்காமம், கதிர்காமமும் கீரிமலையும், தெய்வயானை-முருகன்-வள்ளி, புத்தரின் கதிர்காம விஜயம், அநுராதபுரம் போதிமர நாட்டுவிழாவும் கதிர்காமப் பிராமண விருந்தினரும், கந்த-முருக வழிபாடு, கதிர்காம யாத்திரைக்கு ஆங்கில அரசு விதித்த தடையை நீக்குதல், கதிர்காமத்தைப் பௌத்த சிங்களமயமாக்கும் முயற்சிகள், நூற்றாண்டுகாலமாக, கதிர்காமக் கந்தனாலய நிபந்தங்கள், முடிவுரை ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. சிறப்பு அம்சங்கள்-மேற்கோள்கள் என்ற பிரிவில், வீரவாகு தேவரும் குமரிக் கண்டமும், கடல்கோளும் குமரிக்கண்டப் பகுதிகள் மறைவும், பேரழிவு களும் மக்கள் துயரங்களும், கதிர்காமக் கோவில் ஆதிக் கட்டடம், கதிர்காமக் கோயில் வழிபாடு, கதிர்காமத்தில் துட்டகைமுனுவின் விரதம், கடவுள் நம்பிக்கையும் அற்புதங்களும், அரசாங்க நில அளவையும் குடியிருப்பாளர்

விவரமும், பாரெங்கும் பரவிய கந்த வழிபாடு, ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தில் கதிர்காமக் கந்தன் கோவில் வழக்குகள், முடிவுரை ஆகிய 11 விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

9192

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம். சுபாஷிணி பத்மநாதன். கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2012. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

128 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 3500., அளவு: 29.5x23.5 சமீ., ISBN: 978-955-0811-00-7.

கொழும்பு, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம் பற்றிய விவரணம் செறிந்த நூல். இலங்கையில் சிவவழிபாட்டு முறைமை, திருத்தலம் அமைந்துள்ள பகுதி: கொச்சிக்கடை எனப் பெயர்பெறக் காரணம், திருத்தல வரலாறு, ஆலய பரிபாலன சபையும் அதன் வரலாற்றுப் பின்னணியும், திருத்தலம் மீது ஒரு சிறப்புப்பார்வை, திருத்தலச் சிற்பக்கலை நுணுக்கங்கள், திருத்தல நித்திய நைமித்தியக் கிரியைகள், ஆலய உற்சவங்கள், ஆலய மஹோற்சவத் திருவிழா, நாட்டிய அரசன் நடராஜரின் நாட்டிய தத்துவத்தின் மகிமையும் பெருமையும் ஆகிய பத்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234899).

9193

சக்தி சிவனின் அருளாட்சி. ஆ.கதிர்காமத்தம்பி. தொண்டைமானாறு: சைவ கலை பண்பாட்டுப் பேரவை, சந்நிதியான் ஆச்சிரமம், 1வது பதிப்பு, ஆவணி 2001. (தொண்டைமானாறு: சந்நிதியான் அச்சகம், சந்நிதியான் ஆச்சிரமம்).

xviii, (3), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

சக்தி சிவனின் நவபேத ஆட்சிச் சருக்கம், சக்தி சிவனின் அருள்மூர்த்தங்களின் சருக்கம் (தட்சணாமூர்த்தி, அர்த்த நாரீஸ்வரமூர்த்தி, கல்யாண சுந்தரமூர்த்தி, சோமாஸ்கந்தமூர்த்தி, இலிங்கோற்பவமூர்த்தி, பிக்ஷாடணமூர்த்தி, உமாமகேசுவர மூர்த்தி, நடராசமூர்த்தி), சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம்-இந்தியாவில் (காசி, திருக்காளத்தி, திருத்தில்லை, திருஆலவாய்-மதுரை, இராமேசுவரம், திருத்தோணிபுரம்-சீர்காழி, திரு அருணாசலம்-திருவண்ணாமலை, திருப் பெருந்துறை, திருவாரூர், திருக்கச்சியேகம்பம், திருவீரட்டானம், திருவையாறு, திருமறைக்காடு), சக்தி சிவனின் அருளாட்சிச் சருக்கம்- ஈழத்தில் (திருக்கோ ணேசுவரம், நகுலேசுவரம், முன்னேசுவரம், திருக்கேதீசுவரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீசுவரம், கொக்கட்டிக்சோலைத் தான்தோன்றீசுவரம், வண்ணை வைத்தீசுவரம், சட்டநாதர் கோவில், கொழும்பு பொன்னம்பலவாணேசுவரம், வல்வை வைத்தீசுவரம்), ஈழத்துச் சிதம்பரம்- காரைநகர் ஆகிய விடயத் தலைப்பு களில் ஆலயங்கள், அவை சார்ந்த அதிசயங்கள் போன்ற தகவல்களுடன் இந்

நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 131203).

9194

தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்: பாகம் 1. *என்.கே.எஸ்.திருச் செல்வம். கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு-11: அனுஷ் பிரிண்டர்ஸ்).*

xx, *384 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 22x15 *சமீ.*

தென்னிலங்கையில் சிறந்து விளங்கிய புராதன இந்துக் கோயில்கள் பற்றி இந் நூல் விளக்குகின்றது. கோயில் கட்டிட அழிபாடுகளின் எச்சங்கள், இலக்கிய ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் தென்னிலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தற்பொழுது முழுமையாகவோ அன்றி, பகுதி களாகவோ உருமாறிவிட்ட பல இந்து ஆலயங்களின் புராதன சிறப்புகளை விளக்கமுற்படுகின்றார். வாசகருக்கு நிச்சயம் நீண்ட பெருமூச்சினை ஏற்படுத்தும் வரலாற்றுச் சான்றாதாரங்கள் வண்ணப் புகைப்படங்களாகக் காட்சியளிக்கின்றன. ஒருகாலத்தில் பெருமைமிகு சைவாலயங்களாக இருந்த பல கட்டிடங்களின் அழிபாடுகள் ஏக்கப் பெருமூச்சை வரவழைக்கின்றன. கோட்டே, இரத்மலானை, ஹோமாகம, களுபோவில, மொரட்டுவை, கொழும்பு, ஹங்வெல்ல, பிலியந்தலை, கொட்டாவ, நவகமுவ, கொச்சிக்கடை, பத்தரமுல்ல, நீர்கொழும்பு, வத்தளை, களனிய, களுத்துறை, காலி, மாத்தறை, கேகாலை, மாத்தளை, கண்டி, நுவரெலிய எனப் பல்வேறு இடங்களில் இவ்வாய்வுப்புலம் விரிவுகண்டுள்ளது.

9195

நகுலேசுவர மான்மியம். *ச.சிவப்பிரகாச பண்டிதர் (மொழிபெயர்ப்பு). யாழ்ப்பாணம்: ராஜராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர், கீரிமலை, 2வது பதிப்பு, ஆண்டுவிபரமில்லை, 1வது பதிப்பு, கலியுகம் ரு0கஉ (5012). (யாழ்ப்பாணம்: அச்சக விபரம் தரப்படவில்லை).*

viii, *166 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 20.5x14.5 *சமீ.*

ஸ்காந்த புராணத்திலே தக்ஷிண கைலாச மான்மியத்திலுள்ள நகுலேசுவர மான்மியம் முதலில் நீர்வேலி ஸ்ரீ ச.சிவப்பிரகாச பண்டிதரவர்கள் செய்த மொழிபெயர்ப்புடன் அ.குமாரசுவாமிப் புலவரினால் யாழ்ப்பாணம், வித்தியாநு பாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது. அந்நூலின் மீள்பதிப்பு, பின்னாளில் ஞானம் - கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் திரு. தி.ஞான சேகரனின் துணைவியார், திருமதி ஞானம் ஞானசேகர ஐயர் அவர்களின் அன்னையின் சிவபதப்பேற்றின் போது மீள்பிரசுரம் கண்டுள்ளது.

9196

யாழ்ப்பாணம், இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில். *வை.அநவரதவிநாயகமூர்த்தி. யாழ்ப்பாணம்: வை. அநவரதவிநாயகமூர்த்தி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2003. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

80i, *180 பக்கம், தகடுகள், விலை: ரூபா 200., அளவு:* 22x15 *சமீ. - தொகுதி 10*

செந்தமிழும் சிவநெறியும் செழித்து வளரும் இணுவைமாநகர், ஆலயத்தின் தோற்றமும் அமைப்பும், மூலமூர்த்தியின் அருட்பொலிவும் மகத்துவமும், வேழமுகத்து விநாயகன், வழிபாட்டு மரபுகள், மகோற்சவத்தில் முதன்மைபெற்று விளங்கும் கொடியேற்றம், அருள்மணம் கமழும் மகோற்சவ விழாக்கள், நித்திய நைமித்திக பூசைகள், மஹா கும்பாபிஷேகம், ஆலய வரலாற்றில் முதன்முறையாக நடைபெற்ற 1008 கலசாபிஷேகம், சிவாசாரியார் பரம்பரை, பரராஜசேகர மன்னனுக்கும் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பு, அடியார் அல்லல் தீர்க்கும் விநாயகர் விரதங்கள், ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயிலில் விநாயக விரதங்கள் அனுஷ்டிக்கப்படும் முறைகள், பிள்ளையார் கதைப் படிப்பும் புராண படனமும், பரராஜசேகரப் பிள்ளையாருக்கு கற்கோயில் அமைக்கும் திருப்பணி, ஏனைய திருப்பணிகள், ஆலயத்தில் நடைபெறும் சரியைத் தொண்டுகள், இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார்மீது பாடப்பெற்ற அருட்பாடல்கள், அடியார்களுக்கு அருள்புரியும் வண்ணம் விநாயகப்பெருமான் எடுத்த எழில்மிகு திருக்கோலங்கள், ஆலயத்தின் உள்சுற்றுப் பிரகாரங்களை அலங்கரிக்கும் ஓவியங்கள் ஆகிய 21 தலைப்புகளில் இந்நூலில் கட்டுரைகள் காணப்படுகின்றன. தொடர்ந்து, பிள்ளையார் கதை, விநாயகர் அகவல், விநாயகர் கவசம், ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் துதி, விநாயகர் புராணம், பஞ்சமுக விநாயகரே ஆடீரூஞ்சல் ஆகிய ஆறு பாமாலைகளும் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 150399).

9197

வல்லியக்கனும் வல்லிபுரநாதரும். பொன்னம்பலம் இரகுபதி. யாழ்ப்பாணம்: என்.குகபரன், ஆசிரியர், புலரி ஆண்டிதழ்-2006, 1வது பதிப்பு, 2006. (யாழ்ப் பாணம்: ஐ.சங்கர், பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

32 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 30., அளவு: 20x14.5 சமீ.

கலாநிதி பொ.இரகுபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர். ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டவர். பெருங்கற்கால யாழ்ப்பாணம் என்ற பாரிய தொல்லியல், வரலாற்று ஆவணத்தின் வருகைக்குப் பின்புலமாக நின்றவர். இச்சிறு கட்டுரைநூலில் வல்லியக்கன் என்ற பெயரில் புராதன வள்ளுவக் குடிகளால் (இவர்கள் பறையர் என பின்னாளில் அழைக்கப்பட்டவர்கள்) தொழப்பட்ட புராதன சிறுதெய்வ வழிபாடு, பின்னாளில் ஏற்பட்ட பிராமணிய ஆதிக்கத்தினால் வல்லிபுர நாதராக உருமாற்றப்பெற்ற வரலாற்றை யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் அமைந்த சிறு கோவில்களின் வரலாறுகளினூடாகப் பதிவுசெய்கின்றார். பின்னிணைப்புகளாக கோவும் மடைப்பறையும் (1983ம் ஆண்டு மயிலிட்டி கலைமகள் வித்தியாசாலை மலரில் வெளியான கட்டுரை), மயான உருத்திரன் (1984ம் ஆண்டு ஈழநாடு வாரமலரில் வெளியான கட்டுரை) ஆகிய இரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

9198

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி தேவஸ்தானக் கட்டளைச் சட்டம். *நா.குமாரஸ்வாமிக் குருக்கள். சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், 2வது பதிப்பு, 2012, 1வது பதிப்பு, 1927. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

vi, *26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-0877-00-3.

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீமுன்னைநாதப் பெருமானின் சேவை புரியும் திருப்பணியாளர்களின் பண்பும் பணியும் பற்றிய சட்டபூர்வமான ஆவணம் இதுவாகும். சிவஸ்ரீ நா.குமாரஸ்வாமிக் குருக்கள் அவர்களால் இது 1927இல் உருவாக்கப்பட்டது. பழமை மரபுகளை ஆலயத்தில் பேணும் வகையில் இது மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. சிவாலய வழிபாட்டின் சீரிய சிந்தனைகள் மேம்படுவதற்கும் இறை பணியாளர்களின் கடமைகள் தெய்வீகப் பணியாக மிளிர்வதற்கும் செய்யத்தக்கன, செய்யத்தகாதன என்பனவற்றை உணர்ந்து கொள்வதற்கும் ஏற்றவகையில் சிறப்பாக முன்னேஸ்வரம் ஆலயத்திற்கென்றே வடிவமைக்கப்பட்ட தனித்துவமான விதிமுறைகள் பலவற்றை இந்நூல் கொண்டுள்ளது. இது சைவக் குருமணிகள் அச்சகாலயம், 208, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வடிவமைப்புச் செய்யப்பட்ட பதிப்பாகும்.

மேலும் பார்க்க: 9869

294.5(3) ஆலய சிறப்பு மலர்கள்

மேலும் பார்க்க: 9021, 9022

294.5(4) பக்தி இலக்கியங்கள்

9199

அதிவீரராம பாண்டியரால் பாடப்பட்ட காசி காண்டம். *அதிவீரராம பாண்டியர் (மூலம்), தி.பொன்னம்பலவாணர் (உரையாசிரியர்). சுழிபுரம்: சுழிபுரம் சைவ நன்நெறிக் கழகம், 1வது பதிப்பு, 1997. (கரணவாய்: கணாதிபன் அச்சகம், மூத்த விநாயகர் கோவிலடி).*

xx, *220 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x13.5 *சமீ.*

சிவத்தலங்களுள் பெருமை பெற்றதும் கங்கா தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்ட பெருமைமிக்கதும் காசித் திருத்தலமாகும். காசித் திருத்தலத்தைப் பற்றிய பெருமைகளை செய்யுள் வடிவில் பாடியவர் அதிவீரராம பாண்டியர் எனப்படுபவர். அச்செய்யுள்களின் எளிய உரைநடையாக சைவக்குருமார் பாரம்பரியத்தில் வந்த பண்டிதர் பொன்னம்பலவாணர் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்.

9200

இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ். ச.வே.பஞ்சாட்சரம். யாழ்ப்பாணம்: இளந்தொண்டர் சபை, கந்தசுவாமி கோவில், இணுவில், 1வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

25 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x22 சமீ.

இந்நூலில் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள், காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலாட்டுப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில் பருவம், சிறுபறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்து தலைப்புகளில் இணுவையூர் செகராசசேகரப் பிள்ளையார் கோவிலில் எழுந்தருளியுள்ள விநாயகர் மேல் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84629).

9201

ஈழத்துத் திருப்புகழ். சிவதொண்டன். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 1வது பதிப்பு, தை 2004. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி).

96 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 14x10 சமீ.

கதிர்காமம், நல்லூர், கந்தவனம், திருகோணமலை ஆகிய முருகன் திருத்தலங்களின் மீது பாடப்பெற்ற திருப்புகழ் பாடல்களின் தொகுப்பு இந்நூலாகும். முருகன் அருள்பெற்ற நாயன்மார் அருளிச்செய்த திருப்புகழ்கள் திருமுறைகளுக்கு நிகரானவை. திருமுறைப் பாடல்களுக்கு அடுத்து ஓதப்பெறுபவை.

9202

கடவுள் மாமுனிவர் அருளிய திருவாதவூரடிகள் புராணமும் புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்களது படனவிளக்க உரையும். ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி. கொழும்பு: உலக சைவப் பேரவை, இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, ஜுன் 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xviii, 315 பக்கம், விலை: ரூபா 225., அளவு: 22x14.5 சமீ.

பாயிரம், மந்திரிச் சருக்கம், திருப்பெருந்துறைச் சருக்கம், குதிரையிட்ட சருக்கம், மண்சுமந்த சருக்கம், திருவம்பலச் சருக்கம், புத்தரை வாதில் வென்ற சருக்கம், திருவடி பெற்ற சருக்கம் ஆகிய ஏழு அத்தியாயங்களின் கீழ் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இதுவரை 17 நூல்களை எழுதிய மாதாஜி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். நாவலப்பிட்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் தமிழ், சைவசமய சிறப்பாசிரியராகக் கடமையாற்றியவர். காரைநகர் வர்த்தாக் கல்வி நிலைய குருகுலம், கிளிநொச்சி குருகுலம் ஆகியவற்றின் பாதுகாவலராகப் பணியாற்றியவர். குப்பிளானில் 1931இல் பிறந்த இந்நூலாசிரியர், இந்தியாவில் திருச்சி மாவட்டத்தில் திரு ஈங்கொய் மலை ஸ்ரீ லலிதா சமாஜத்தில்

சந்நியாசம், ஸ்ரீ வித்யா மந்திரம் ஆதியன பெற்று ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி என்ற சந்நியாச நாமம் பெற்றுக்கொண்டவர். ஆசிரியரின் இயற்பெயர் நூலில் குறிப்பிடப்படவில்லை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236614).

9203

கந்தசஷ்டிப்புராணம். நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் (மூலம்), ச.பத்மநாபன் (பதிப்பாசிரியர்). சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 1895. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

xix, 97 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0877-15-7.

ஈழத்துப் புராண மரபில் விரத புராணங்கள் தனித்துவமானவை. ஈழத்தில் சிறப்பாக யாழ்ப்பாணத்து சைவத் தமிழ்ப் பண்பாட்டில் ஊறித் திழைத்த கலாசாரம் கந்தபுராண கலாசாரமாகும். கந்த புராணத்துக் கலாசாரத்தில் மேன்மைபெறும் சைவமரபில் முருக வழிபாடு தனித்துவமானதாக விளங்குகின்றது. இந்து சமய விரத மரபில் கந்த சஷ்டி விரதம் மிகவும் முக்கியத்துவமுடையதாகும். இக் கந்தசஷ்டி விரதத்தினைப் புராணமாகப் பாடிய பெருமைக்குரியவர் வட்டுக் கோட்டை வரகவி பிரம்மஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் ஆவார் .இவர் 30.07.1848இல் பிறந்து 10.10.1929இல் மறைந்தவர். சுன்னாகம் வரத பண்டிதருக்கு நிகராகப் பல்வேறு விரத புராணங்களையும் புராணங்களையும் பாடியுள்ளார். அவற்றுள் தென் கோயிற் புராணம் ஏட்டு வடிவிலிருந்து நூல்வடிவில் வெளிவர ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. கந்த சட்டிப் புராணம் இரண்டாம் பதிப்பாக இப்பொழுது வெளிவந்துள்ளது. மூல நூலாசிரியர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யைச் சேர்ந்தவர். பதிப்பாசிரியர் பத்மநாபனின் தாய்வழிப் பாட்டனாராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத்துறை விரிவுரையாளரும், மேற்படி முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் அவர்கள் இச்சிறுநூலைப் பதிப்பித்துள்ளார்.

9204

கந்தபுராணம்-யுத்தகாண்டம்: அக்கினிமுகாசுரன் வதைப்படலம் உரை. பொன். கந்தசாமி. யாழ்ப்பாணம்: இந்து சமய அபிவிருத்திச் சங்க வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1989. (யாழ்ப்பாணம்: திருமொழி அச்சகம், சங்கானை).

(8), 111 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

மாதகலைச் சேர்ந்த வித்துவான் பொன் கந்தசாமி அவர்களால் எழுதப்பட்டுள்ள இந்நூல் இந்து சமய அபிவிருத்திச் சங்க வெளியீட்டுத் தொடரில் வெளிவந்த 17ஆவது நூலாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 87100).

9205

கருடபுராணமென்று வழங்குகின்ற ஸ்ரீ கருடபுராண வசனம். துரைசாமி மூப்பனார். காரைநகர்: வியாவில் ஐயனார் தேவஸ்தானம், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: தேவி அச்சகம், 140/1, மானிப்பாய் வீதி).

vi, 128 பக்கம், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

காரைநகர், வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தின் இரண்டாவது வெளியீடாக இந்நூல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. முன்னர் பண்டிதர் க.வைத்தீசுவரக் குருக்களின் சைவக்களஞ்சியம் இவர்களது முதலாவது வெளியீடாக ஏப்ரல் 2013இல் வெளியிடப்பட்டிருந்தது. கவித்தலம் ஸ்ரீமான் துரைசாமி மூப்பனார் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு அச்சியற்றப்பட்ட பிரதிக்கிணங்க கருடபுராண வசனமாகிய இந்நூல் இலங்கையில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234757).

9206

சிவயோக சுவாமிகள் அருளிச்செய்த நற்சிந்தனை: செய்யுள் உரைத் திரட்டு. சிவயோக சுவாமிகள் (மூலம்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறை வீதி).

vi, (2), 48 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தின் 18ஆவது பிரசுரமாக சர்வதேச புத்தக ஆண்டையொட்டி 1973இல் வெளிவந்துள்ள நூல். மாவிட்டபுரத்தில் வைகாசி 1872இல் பிறந்தவர் சிவயோக சுவாமிகள். பள்ளிப் படிப்பை முடித்து கிளிநொச்சி நீர்ப்பாசன அலுவலகத்தில் களஞ்சியப் பொறுப் பாளராகப் பணியாற்றியவர். நல்லூர் கோவிலில் செல்லப்பா சுவாமிகளின் தரிசனம்பெற்றபின்னர் முழுமையான ஆன்மீகவாதியாகியவர். அவர் தன் வாழ்நாளில் அவ்வப்போது பாடல்களாகவும், உபதேசங்களாகவும் கவிதை களாகவும் உரைகளாகவும் பக்தர்களுக்கு அருளிய நற்சிந்தனைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது.

9207

சிவயோக சுவாமிகள் நற்சிந்தனையிற் பாடியருளிய முருகன் திருப்பாடற்றிரட்டு. சிவயோக சுவாமிகள். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், 1வது பதிப்பு, ஜனவரி 1989. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம், 432, காங்கேசன்துறை வீதி).

34 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5 x14 சமீ.

மாவிட்டபுரத்தில் வைகாசி 1872இல் பிறந்தவர் சிவயோக சுவாமிகள். பள்ளிப் படிப்பை முடித்து கிளிநொச்சி நீர்ப்பாசன அலுவலகத்தில் களஞ்சியப் பொறுப் பாளராகப் பணியாற்றியவர். நல்லூர் கோவிலில் செல்லப்பா சுவாமிகளின் தரிசனம்பெற்றபின்னர் முழுமையான ஆன்மீகவாதியாகியவர். அவர் தன் வாழ்நாளில் அவ்வப்போது பாடல்களாகவும், உபதேசங்களாகவும் கவிதை

களாகவும் உரைகளாகவும் பக்தர்களுக்கு அருளியவை பின்னாளில் நற்சிந்தனைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டன. நற்சிந்தனை நூலிலுள்ள முருகப்பெருமானைப் பற்றிய திருப்பாடல்களை மாத்திரம் திரட்டித் தொகுத்து தனிநூலாக்கியுள்ளனர் சிவதொண்டன் சபையினர்.

9208

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத் தமிழ். மு.கந்தையா. மானிப்பாய்: மு.கந்தையா, சுதுமலை, 1வது பதிப்பு, ஜூலை 1987. (யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம், 411/1, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை).

xxiv, 177 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

பண்டிதர் மு.கந்தையா அவர்கள் இயற்றிய பிள்ளைத்தமிழ் இது. தமிழிலக்கியத்தில் பிரபந்த வகைகளில் ஒன்று பிள்ளைத்தமிழ். இது கடவுள், குரு, வள்ளல் முதலான வரை குழந்தையாகக் கொண்டு காப்பு முதலாகப் பத்துப் பருவங்களமைத்துப் பாடப்பெறுவதாகும். இந்நூலில் அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத் தமிழ், காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலாப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வராணைப் பருவம், அம்புலிப் பருவம், அம்மானைப் பருவம், நீராடற் பருவம், ஊஞ்சற் பருவம் ஆகிய பத்துப் பிரிவுகளில் பாடப்பெற்றுள்ளது. இறுதியில் உரை விளக்கக்குறிப்புகள் காணப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87151).

9209

சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம்: இரண்டாம் பாகம். நவாலியூர் வை.நல்லையா (உரையாசிரியர்). கொக்குவில்: வை.நல்லையா, இலங்கைமணி சைவநூற் பதிப்பகம், உயரப்புலம், கொக்குவில் மேற்கு, 1வது பதிப்பு, நளவருடம், வைகாசி மாதம், மே 1977. (அச்சக விபரம் தரப்படவில்லை).

பக்கம் 194-424, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ.

பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்திற்கான உரை, தேவாரப் பதிகங்களுடன் கூடியதாக வெளிவந்துள்ளது. இவ்விரண்டாம் பாகத்தில் இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம் ஆகிய இரு சருக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இலைமலிந்த சருக்கத்தில் எறிபத்த நாயனார் புராணம், ஏனாதிநாத நாயனார் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம், மானக்கஞ்சாற நாயனார் புராணம், அரிவாட்டாய நாயனார் புராணம், ஆனாய நாயனார் புராணம் ஆகிய புராணங்கள் இடம்பெற்றுள்ளன. மும்மையால் உலகாண்ட சருக்கம் என்ற இரண்டாவது பகுதியில் மூர்த்தி நாயனார் புராணம், முருக நாயனார் புராணம், உருத்திர பசுபதி நாயனார் புராணம், திருநாளைப் போவார் நாயனார் புராணம், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம், சண்டேஸ்வர நாயனார் புராணம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி என்பனவும் இடம்பெற்றுள்ளன.

9210

சேக்கிழார் விருந்து. ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி (தொகுப்பு). கொழும்பு: ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி, 1வது பதிப்பு, 2004. (கொழும்பு-13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xii, 137 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x14 சமீ.

சேக்கிழார் சுவாமிகள் உள்ளிட்ட இறையடியார்கள், நாயன்மார்கள் பற்றிய கதைகளை வளர்ந்தோருக்கும் சிறுவருக்கும் ஏற்ற விதத்தில் சுவையாகவும் எளிமையாகவும் இந்நூலில் உள்ள 92 கட்டுரைகளின் வழியாகப் பதிவு செய்திருக்கிறார். மாதாஜி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர். நாவலப்பிட்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் தமிழ், சைவசமய சிறப்பாசிரியராகக் கடமையாற்றியவர். காரைநகர் வர்த்தாக் கல்வி நிலைய குருகுலம், கிளிநொச்சி குருகுலம் ஆகியவற்றின் பாதுகாவலராகப் பணியாற்றியவர். குப்பிளானில் 1931இல் பிறந்த இந்நூலாசிரியர், இந்தியாவில் திருச்சி மாவட்டத்தில் திரு ஈங்கொய் மலை ஸ்ரீ லலிதா சமாஜத்தில் சந்நியாசம், ஸ்ரீ வித்யா மந்திரம் ஆதியன பெற்று ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி என்ற சந்நியாச நாமம் பெற்றுக்கொண்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 209510).

9211

சைவத் திருமுறைத் திரட்டு. சிவதொண்டன் சபை. யாழ்ப்பாணம்: சிவதொண்டன் சபை, 434, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, 1983, 2வது பதிப்பு, 1990. (கொழும்பு-13: பிரின்டெல் மீடியா, 283, புளுமெண்டால் வீதி).

(16), 240 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.

இத்தொகுதி பன்னிரு திருமுறைகளிலிருந்தும் தொகுக்கப்பெற்ற தேர்ந்த தனிப் பாடல்களுடன் திருப்பதிகங்களையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது. அத்துவிதப் பொருள், பன்னிரு திருமுறைகள் பற்றிய குறிப்புகள் என்பன பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன. பாட்டு முதற்குறிப்பு அட்டவணை நூலின் இறுதியில் தரப் பட்டுள்ளது. இது நூலில் இடம்பெற்றுள்ள பாடலை இலகுவில் கண்டு, சென்றடை வதற்கு உதவுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 218532).

9212

தாயுமான சுவாமிகள் பாடல்: பொழிப்புரை, குறிப்புரைகளுடன். சிவதொண்டன். செங்கலடி: அ.செல்வத்துரை, சிவதொண்டன் நிலையம், 1வது பதிப்பு, பதிப்பு விபரம் தரப்படவில்லை. (மட்டக்களப்பு: கீன் அச்சகம், 75 ஏ, முனை வீதி).

ix, 568 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14 சமீ.

தாயுமானவர் சுவாமிகளின் தந்தையார் கேடிலியப்பிள்ளை வேதாரணியத்தை (திருமறைக்காடு) சேர்ந்தவர். திருச்சிராப்பள்ளி அரசன் முத்துக்கிருஷ்ணநாயக்கரின் சம்பிரதியாக (தலைமைக் கணக்கர்) பணியாற்றியவர். தாயுமான சுவாமிகளின்

தாயார் கஜவல்லி அம்மையார். நீண்டகாலமாக மகப்பேறற்றிருந்து, திருச்சிராப் பள்ளி தாயுமான பெருமானை நிதமும் வணங்கிவந்துள்ளார். அவரருளால் தான் நீண்டகாலம் ஏங்கிப் பெற்ற மகவுக்கு தாயுமானவர் என்று பெயரிட்டார். பின்னாளில் தாயுமானவர், பக்தி இலக்கியத்தில் பெரும் புகழ் பெற்றார். தாயுமான வரின் பாடல்களை இந்நூல் பொழிப்புரை, குறிப்பரைகளுடன் வழங்குகின்றது. சிவதொண்டன் என்ற பெயரில் இவ்வரிய உரையை எழுதியவரின் உண்மைப்பெயர் குறிப்பிடப்படவில்லை.

9213

திருக்கரைசைப் புராணம். *க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு-4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (கொழும்பு-13: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் பிரின்டர்ஸ், 94, பரமானந்த விகாரை மாவத்தை).*

99 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 *சமீ.*

திருகோணமலை மாவட்டத்தில் கருங்குவேலி என்னும் இடத்தில் மாவலி கங்கைக் கரையில் அமைந்துள்ள தொன்மைவாய்ந்த சிவாலயங்களுள் ஒன்று திருக்கரசையம்பதி. திருமங்கலாய்ச் சிவன்கோவில் என்றும், அகஸ்தியஸ்தாபனம் என்றும் வழங்கப்பெறும் இத்தலம் பழைமைவாய்ந்த தலபுராணம் ஒன்றினைக் கொண்டிருக்கும் சிறப்பினைப் பெற்றது. திருக்கரைசைப் புராணம் என்னும் பெயரிலான அப்புராணம் (13ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 14ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவரான உமாபதி சிவாசாரியாரின் சீடர் என ஊகிக்கப்படும்) பெயரறியாப் புலவர் ஒருவராற் பாடப்பெற்றது. திருக்கரைசைப் புராணம் முன்னே கடவுள் வாழ்த்து அமைய அதனையடுத்து இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் என்னும் நான்கு சருக்கங்களில் அமைந்த 170 பாடல்களில் அமைந்த சிறியதொரு புராணமாகும். திருக்கரைசைப் புராணம் பாடப்பட்ட காலம் எது எனத் தெளிவாகத் தெரியவில்லை. அதன் ஆசிரியர் யார் என்பதும் தெரியவில்லை. ஆனால் ஆசிரியர் தமது குருவைப் பற்றிக் கூறுவன வற்றைக்கொண்டு அதன் காலத்தை ஓரளவு தீர்மானிக்கலாம். இலக்கிய நயமும் பக்திச் சிறப்பும் வாய்ந்த திருக்கரைசைப் புராணத்திற்கு சுன்னாகம் அ.குமார சுவாமிப் புலவர் உரை எழுதியிருக்கிறார். ஏட்டுப்பிரதிகளிலிருந்த இந்நூலை புலவரவர்களுக்கு வழங்கி அவரது உரையுடன் முதன்முதலில் 1893இல் அச்சுவாகன மேற்றியவர் திருகோணமலை தந்த தமிழறிஞர் வே.அகிலேசபிள்ளையவர் களாவார்.

9214

திருவருட் செற்றம்: செய்யுளுங் குறிப்புரையும். *புலவர் சிவங்கருணாலய பாண்டியனார். கொழும்பு 4: பாண்டியனார் நினைவுக் குழு, 18, ஆர்தர்ஸ் பிளேஸ், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சகம்).*

xv, *63 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு:* 18.5x12.5 *சமீ.*

இந்நூல் திருவருட் செற்றம் (சீருத்திரம் எனும் சிறீ சூத்திரத்தின் பெயர்த்துரை), நெடுமால் பெயராயிரம் (விஷ்ணு சகஸ்ரநாமத்தின் பெயர்த்துரை) ஆகிய இரு செய்யுள்களையும் அவற்றுக்கான பொழிப்புரையையும் உள்ளடக்கியது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118870).

9215

திருவாசகப் பதிகங்கள். *மாணிக்கவாசக சுவாமிகள் (மூலம்), வ.சோமசுந்தரன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீமதி மீனாட்சியம்மையின் ஞாபகார்த்த வெளியீடு, 1வது பதிப்பு, 1938. (சென்னை: செங்குந்த மித்திரன் அச்சுக்கூடம்).*

84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 *சமீ.*

சைவசமயாசாரியாராகிய மாணிக்கவாசக சுவாமிகள் தில்லைச் சிதம்பரத்திலே திருவாய் மலர்ந்தருளிய எட்டாந்திருமுறையாகிய திருவாசகப் பதிகங்களின் தொகுப்பு. இவை யாழ்ப்பாணத்தைச் சார்ந்த சரவணையூர் பொலிஸ் விதானை ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளை அவர்களது பாரியார் ஸ்ரீமதி மீனாட்சியம்மையின் ஞாபகார்த்தமாக அவர்களின் மருமகன் பிரம்படி வல்லிபுரம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

9216

திருவூடல். *ச.கணபதீஸ்வரக் குருக்கள் (தொகுப்பாசிரியர்). காரைநகர்: ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானம், 1வது பதிப்பு, ஜனவரி 2012. (அச்சக விபரம் தரப்பட வில்லை).*

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 *சமீ.*

ஈழத்துச் சிதம்பரம் என வழங்கப்படும், யாழ்ப்பாணம்-காரைநகர், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோவிலிலே மார்கழி மாதத் திருவாதிரையிலே ஓதப்பெற்றுவரும் "திருவூடல்" நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி ஆலயத்தின் முன்னாள் பிரதம சிவாசாரியாரும் ஈழத்துச் சிதம்பரம் என்ற நூலாசிரியரும், அகில இலங்கை சைவசமயக் குருமார் சபை முன்னாள் தலைவரும், அகில பிராமண குரு சமூகசேவா சங்க முன்னாள் போஷகரும், திருக்கேதீச்சர சிவானந்த குருகுல பஞ்சாய முன்னாள் உறுப்பினருமாகிய சிவ ஸ்ரீ சரவணபவக் குருக்கள் கணபதீஸ்வரக் குருக்கள் (10.3.1888-13.3.1967) இந்நூலைத் தொகுத்துள்ளார்.

9217

தினசரி வழிபாட்டுப் பாடல்கள். *பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சமித்தி. திருக்கேதீஸ்வரம்: பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சமித்தி, 1வது பதிப்பு, 1971. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 *சமீ.*

திருக்கேதீஸ்வரம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சமித்தி பஜனை மண்டபத்தின் கட்டட நிதிக்காக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. விநாயகர், சுப்பிரமணியர்,

சிவன், சக்தி, திருமால், நவக்கிரகங்கள் ஆகியவற்றின் பேரில் பாடப்பட்ட பக்திப் பாடல்களும் வழிபாட்டுப் பாடல்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன.

9218

தெய்வீக அருட்புகழ். சீ.விநாசித்தம்பி. யாழ்ப்பாணம்: ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம், நாகேஸ்வரம், 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

xviii, 96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள், அனைத்துத் தெய்வங்களையும் பரம் பொருளாகக் கண்டு இந்நூலில் அருட்புகழ் பாடியுள்ளார். இவரது தெய்வீகப் பாடல்கள் திருப்புகழ் போல அமைந்திருப்பினும் அவற்றை அருட்புகழ் எனப் பெயரிடுகின்றார். இந்நூலில் இக்கவிஞரின் 184 பக்தி இலக்கியங்கள் பாடல்களாக இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 155540).

9219

தெய்வீகமும் சமாதானமும். கதிர் சரவணபவன். வவனியா: தோணிக்கல் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் (ஆதிசிவன்) ஆலய பரிபாலன சபையினர், 1வது பதிப்பு, மே 2003. (வவுனியா: ஜெய்னிகா கிராப்பிக், 71, வைரவ கோவில் வீதி, வைரவ புளியங்குளம்).

iv, 123 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 215., அளவு: 25x18 சமீ.

சிவசித்தாந்த வித்தகர், கலைமணி கதிர்-சரவணபவன், வவுனியா, தோணிக்கல், ஆலடி வீதியைச் சேர்ந்தவர். அவர் எழுதிய சில ஆன்மீகக் கட்டுரைகளும், பல்வேறு திருவூஞ்சற் பாடல்கள், இடர் நீக்கு பாடல்களும் தொகுக்கப்பெற்று இந்நூல் வெளிவந்துள்ளது. விதிவிலக்காக இத்தொகுப்பில் பாடசாலை கீதங்களும், நடிகர் சிவாஜி கணேசன், ஓவியக் கலாஜோதி நடராசா போன்றோரை வாழ்த்திப் பாடிய பாடல்களும் இடம்பெற்றுள்ளன. மொத்தமான 24 படைப்புகளிலும் பெரும்பாலானவை வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார், திருக்கேணமலைப் பிரதேசத்துக் கோவில்களின் மேற் பாடப்பெற்றவையே. பிராங்போர்ட் (ஜேர்மனி) கற்பக விநாயகர் மேற் பாடப்பெற்ற பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135554).

9220

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள். சின்னத்தம்பிப் புலவர் (மூலம்), க.இரகுபரன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு-13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xxii, 353 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 22.5x15 சமீ.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் நான்கு நூல்களின் தொகுப்பு இது. ஒல்லாந்தர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வில்லவராய முதலியார் என்பவர் தேசவழமைச் சட்டத்தை எழுதும் சபைக்குத் தலைவராக விளங்கியவர். அவரது மகனாரே நல்லூர் சின்னத்தம்பிப் புலவராவார். இவர் ஏறக்குறைய கி.பி.1730ம் ஆண்டளவில் பிறந்து கி.பி.1787ம் ஆண்டுவாக்கில் மறைந்தவர் என்று கருதப்படுகின்றது. தெளிவான வரலாற்றுப் பதிவில்லை. இந்நூலில் புலவரின் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு ஆகிய நான்கு நூல்கள் இடம்பெற்றுள்ளன. மறைசையந்தாதி, வேதாரணியத்தில் எழுந்தருளியுள்ள வேதாரணியேஸ்வரர் மேற் பாடப்பட்ட அந்தாதியாகும். கல்வளை அந்தாதி, கல்வளை விநாயகர் மேற் பாடப்பட்ட யமக அந்தாதியாகும். சுழிபுரம் பறாளை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெற்ற பிரபந்தமாக பறாளை விநாயகர் பள்ளு அமைகின்றது. கரவெட்டி என்னும் ஊரில் வாழ்ந்த வேலாயுத பிள்ளை என்னும் பிரபு பற்றிப் பாடப்பெற்ற கோவைப் பிரபந்தமே கரவைவேலன் கோவையாகும்.

9221

நவராத்திரி பாமாலை. நா.முத்தையா. சாவகச்சேரி: ஆத்மஜோதி வெளியீடு, குருபவனம், கண்டி வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: சிவா பிரிண்டர்ஸ், கைதடி).

iv, 44 பக்கம், தகடுகள், விலை: ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

நவராத்திரி என்னும் சொல்லுக்கு ஒன்பது நாட்களில் செய்யப்பெறும் நோன்பு அல்லது உற்சவம் என்று பொருள். உற்சவம் முடியும் பத்தாம் நாளையும் கணக்கெடுத்து வடநாட்டினர் அதை தசரா என வழங்குவர். புரட்டாதி மாதத்துப் பூர்வபக்க பிரதமைத் திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும் பத்தாம் நாள் விஜயதசமி எனவும்படும். இந்துக்கள் அனைவரும் இப்பூஜையை சிறப்பாகச் செய்து வருகின்றனர். கிருதயுகத்திலே பக்தியிற் சிறந்த சுகேதன் என்ற அரசன் தனது இராச்சியத்தை இழந்து மனைவியோடு வனவாசம் சென்றபோது அங்கிரசன் என்னும் இருடி நவராத்திரி பூஜையின் மகிமையையும் அதன் வழிபாட்டு முறையையும் உபதேசித்ததாகக் கதையுண்டு. அவ்வரசன் அவ்வாறே நவராத்திரி பூசையைப் பக்தியோடு செய்து தனது இராச்சியத்தை மீளவும் பெற்று வாழ்ந்ததாக புராணக்கதை கூறுகின்றது. அதன் காரணமாக பின்னாளில் அக் காலத்தில் துர்க்கை, இலக்குமி, சரசுவதி இம் மூவரையும் முறையே ஒவ்வொரு வருக்கும் மூன்று தினமாக ஒன்பது நாளும் பூசித்து வருவதுண்டு. தாய்க்கும் பிள்ளைக்குமான இணக்கமாக உருவகித்து பாடப்பெற்ற பக்கி இலக்கியமான நவராத்திரி பாமாலை அந்நாட்களில் பாடப்பெறுவதுண்டு. இந்நூல் அப்பா மாலையை உள்ளடக்கியுள்ளது.

9222

பக்தி மலர். கனகசபாபதி நாகேஸ்வரன் (மலராசிரியர்), வே. திருநீலகண்டன் (பதிப்பாசிரியர்). திருக்கேதீஸ்வரம்: ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் நூற்றாண்டு விழாச் சபை, 1வது பதிப்பு, 2003. (கொழும்பு 13: லக்ஷ்மி அச்சகம், 195, ஆட்டுப்பட்டித் தெரு).

v, 138 பக்கம், தகடுகள், விலை: ரூபா 100., அளவு: 21.5x13.5 சமீ.

இந்து சமயம் தொடர்பான பல்வேறு சமயப்பெரியார்களின் படைப்புக்களையும் உள்ளடக்கியதாக இம்மலர் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் நூற்றாண்டு விழாச் சபையினரால் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 151709).

9223

பக்திப் பஜனைப் பாடல்கள். நூல் வெளியீட்டுக் குழு. தெல்லிப்பழை: ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், குரும்பசிட்டி, 1வது பதிப்பு, 1958. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

68 பக்கம், விலை: சதம் 65, அளவு: 18x11.5 சமீ.

சைவசமயத்தின் பக்தி இலக்கியவகையுள் அடங்கும், பஜனைப்பாடல்களின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும். கோவில்களிலும், வீடுகளிலும், கல்வி நிறுவனங் களிலும் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனைகளின்போது பாடக்கூடியவகையில் ஒழுங்கமைக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

9224

பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்திலுள்ள திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம். ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் (உரையாசிரியர்), மு.கந்தையா (உரை விளக்கம்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற் பதிப்பு விற்பனைக் கழகம், 411/1, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1972, 1வது பதிப்பு, 1970. (யாழ்ப்பாணம்: ராஜ் அச்சகம்).

(2), 183 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12.5 சமீ.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தின் தயாரிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில், கல்விப் பொதுத்தராதர வகுப்புக்கான பரீட்சைக்குத் தேவையான திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் பற்றிய பகுதியை தனி நூலாக 1970இல் வெளியிட்டிருந்தனர். சர்வதேச புத்தக ஆண்டு நினைவாக அந்நூலின் இவ்விரண்டாம் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகத்தின் ஆறாவது வெளியீடு இதுவாகும்.

9225

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட பிரபந்தங்கள். ச.பத்மநாபன் (பதிப்பாசிரியர்). சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம்

*தேவஸ்தானம், 2வது பதிப்பு, 2012, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2*B, *முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xii, *71 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-0877-05-8.

பக்தி மேலீட்டால் முன்னைநாதப் பெருமான் மீதும் ஸ்ரீவடிவாம்பிகை அம்பாள் மீதும் பல்வேறு பாவலர்களால் பாடப்பெற்று, காலத்திற்குக்காலம் சிறு பிரசுரங்களாகப் பதிப்பிக்கப்பெற்றுவந்த பாடல்களைத் தொகுத்து வெளியிடும் நடவடிக்கையில் மற்றுமொரு முயற்சி இதுவாகும். முன்னேச்சரப் பிரபந்தத் திரட்டு என்ற பெருநூலுக்கான முன்னோடி நடவடிக்கையாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத்துறை விரிவுரையாளரும், மேற்படி முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் அவர்கள் இச்சிறுநூலைப் பதிப்பித்துள்ளார்.

9226

முனீசுரவந்தாதி. *அ.வயித்திலிங்கம் (தொகுப்பாசிரியர்). சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், 2வது பதிப்பு, 2012, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2*B, *முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xii, *18 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-0877-09-6.

கொழும்பு அ.வயித்திலிங்கம் அவர்கள் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் முன்னைநாதப் பெருமான் மீது பக்தி மேலீட்டால் பாடிய நூறு பாடல்களைக் கொண்ட தொகுதி இதுவாகும். முன்னேச்சரப் பிரபந்தத் திரட்டு என்ற பெருநூலுக்கான முன்னோடி நடவடிக்கையாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத்துறை விரிவுரையாளரும், மேற்படி முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் அவர்கள் இச்சிறுநூலைப் பதிப்பித்துள்ளார்.

9227

வண்ணை வைத்தீஸ்வர வாலாம்பிகா தோத்திரக் கீர்த்தனம். *ஸ்ரீமத் பாரத்துவாச பரமஹம்ச ஸ்ரீ தாசபிரம்மம் (மூலம்), ச.பத்மநாபன் (பதிப்பாசிரியர்). சிலாபம்: ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 1899. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2*B, *முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xi, *37 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-0877-16-4.

சைவத்தமிழ்ப் பண்பாட்டின் சொத்துக்களாக விளங்கும் ஆலயங்கள் பலவற்றிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு வகையான பிரபந்தங்களைச் சார்ந்த இலக்கியங்கள் தோற்றம்பெற்றன. அத்தகைய மரபில் வண்ணார்பண்ணைப் பதியில் உறையும் ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான்மீது பாடப்பெற்ற தோத்திர கீர்த்தனைகள், வாலாம்பிகை ஊஞ்சல், முத்துக்குமார சுவாமி ஊஞ்சல், பத்ரகாளி

ஊஞ்சல் என்பன ஸ்ரீமத் பாரத்வவாச பரமஹம்ஸ ஸ்ரீ தாசபிரம்மம் அவர்களால் இயற்றப்பட்டு கி.பி. 1899இல் விவேகானந்த யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 115 ஆண்டுகளின் பின்னர் மீள்பதிப்புக் கண்டுள்ளது. பதிப் பாசிரியர் ச.பத்மநாதன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சம்ஸ்கிருதத் துறை விரிவுரையாளராவார்.

297 இஸ்லாம்

9228

அல்லாஹ்வின் முழக்கம்: நூறின் அருளின் அறிவின் பிரகாச விளக்கம். சேக் முகையுதீன் குருபாவா. கொழும்பு: இலங்கை சூபி (ஞான) விளக்கக்குழு, 139, தர்மபால மாவத்தை, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxxi, 602 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

சங்கைக்குரிய சேக். முகையுதீன் குருபாவா அவர்களின் இஸ்லாமிய உபதேசங்கள் கொண்ட நூல். சரித்திரம், உம்முடைய பிறவிக்கு ஓர் அறிவித்தல், உன்னுடைய உள்ளத்தின் நற்சிந்தனைக்கு ஓர் அறிவிப்பு, அல்லாஹ்வின் ஆதியின் தோற்றத்தின் விளக்கம், இஸ்லாத்தின் துலக்கம் ஈமானின் விளக்கம், சரீஅத்து, றூஹின் (உயிர்) விளக்கம், பிஸ்மில்லாஹி, மெய்ஞ்ஞானக் குருவின் விளக்கம், இன்ஸானின் அறிவின் விளக்கத்தின் நுட்பம் என்பன உள்ளிட்ட 31 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 30132).

9229

இறசூல் சதகம். அப்துல் காதர் லெப்பை. மட்டக்களப்பு: மணிக்குரல் பதிப்பகம், 20, ஆமன் கோர்னர், 1வது பதிப்பு, ஜனவரி 1966. (மட்டக்களப்பு: ராஜன் அச்சகம், முனைத்தெரு).

x, 99 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 16.5x12 சமீ.

மட்டக்களப்பு மாவட்ட இஸ்லாமிய வளர்ச்சி பற்றிய முன்னுரையுடன் கூடியது. சிறந்த சிந்தனையாளரும், கவிஞருமான ஆசிரியர் திலகம் அப்துல் காதர் லெப்பை (1913-1984) கிழக்கிலங்கையின் காத்தான்குடிக் கிராமத்தைத் தாயகமாகக் கொண்டவர். ஒரு ஆசிரியராகப் பணியாற்றிய இவர், கல்வித்துறையினரால் பெரிதும் போற்றப்பட்டவர். சதகம் என்னும் யாப்பு முறையைக் கையாண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இறசூல் சதகம் முஸ்லிம்களுக்கு மாத்திரம் உரியதன்று. உயிர்ப்புள்ள மரபுக்கவிதை நேசர்கள் அனைவருக்கும் உரியது. தீமை தரும் உறவு, பல்வகைப் பாபங்கள், மாற்றமுடியாதது, சாந்தி இல்லை, ஆச்சரிய அச்சம், அடிமைப்பெண், அநாகரிகப் பெண், இன்னது வரும் இன்னது இருப்பின் போன்ற இன்னோரன்ன 99 பாடல்களை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87298).

9230

இஸ்லாம் ஐந்தாம் தரம். முக்தார் ஏ.முஹம்மது (பதிப்பாசிரியர்). கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1986. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

(6), 116 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

நற்குணங்கள் என்ற முதலாம் பிரிவில் ஒற்றுமை, சகோதரத்துவம், மன்னித்தல், விட்டுக்கொடுத்தல், மற்றவரை மதித்தல், பிறர் நலன் பேணல், கூட்டுப் பொறுப்பும் ஒத்துழைப்பும், நோயாளரைத் தரிசித்தல், மரணித்தபோது, தீமையை வெறுத்தல், உணவு-பானம்-உடை, சிக்கனமும் உலோபித்தனமும், பொறாமை கொள்ளாதே, புறம் பேசாதே, கொடிய பாவங்கள், பெற்றோர், சூனியம், மதுபானம் ஆகிய பாடங்களும், நம்பிக்கை என்ற இரண்டாம் பிரிவில் ஸூறத்துல் மாஊன், ஈமான், யா அல்லாஹ் இலாஹி லஸ்து, அல்லாஹ் தஆலா, அஸ்மாஉல் ஹுஸ்னா, மலாயிக்கத்துல்லாஹ், ஸூறத்துல் குறைஷ், குத்துபுல்லாஹ் ஆகிய பாடங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் ஆலோசனைக் குழுவில் மௌலவி ஏ.எம்.எல். எம்.பழீல், ஜனாப் ஏ.எம்.ஸமீம், ஜனாப் ஏ.ஆர்.எம்.அப்துல் காதிர் ஆகியோரும் விசேஷ ஆலோசகராக ஜனாப் ஏ.ஆர்.எம். அப்துல் காதிரும் பணியாற்றியுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85462).

9231

இஸ்லாம்: 9ம் 10ம் தரங்கள். நூலாக்கக் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1980. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

(7), 506 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

இந்நூல் அல் ஈமான், அல் இபாதத், அத்தாரீக் ஆகிய மூன்று பிரதான இயல்களைக் கொண்டுள்ளது. இந்நூலாக்கக் குழுவில் மௌலவி S.S.ஸாஹிப், மௌலவி A.C.A.M. புஹாரி, மௌலவி M.I. அப்துல் லத்தீப், மௌலவி M.J.M. றியாழ், ஜனாப் A.M. ஷாஹுல் ஹமீத், ஜனாப் M.C.M. ஸலீம், ஜனாப் M.H.M. நாளிர், ஜனாப் A.N.M. ஷாஜஹான், ஜனாப் M.I. அப்துல் லதீப் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். விசேட ஆலோசகராக ஜனாப் A.R.M. அப்துல் காதிர் பணியாற்றியிருந்தார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85186).

9232

இஸ்லாம் மதபாடம்: 8ம் வகுப்பு. A.M.கனி. யாழ்ப்பாணம்: புஷ்பமணி தம்பித்துரை, கலைவாணி புத்தக நிலையம், இல.10, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1975. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, மெயின் வீதி).

(4), 80 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

அல்குர் ஆன், அல்ஹதீஸ், கலிமா, தொழுகை, ஸக்காத், நோன்பு, ஹஜ்ஜு, அமீர் முஆவியா (ரலி) ஆகிய எட்டு தலைப்புகளில் இந்நூல் எட்டாம் வகுப்பு இஸ்லாமிய பாட மாணவர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. இந்நூல் கல்வி அமைச்சினால் 1975-77ஆம் ஆண்டுகளுக்கான சமய பாடத்திட்டத்துக்கமைய எழுதப்பட்டது. நூலாசிரியர் கலாநிதி ஏ.எம்.கனி, கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தின் உடத்தலவின்ன மடிகே முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

9233

இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள். எம்.ஏ.ரஹ்மான். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1972, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (கொழும்பு-13: ரெயின்போ பிரிண்டர்ஸ்).

112 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 1.90, அளவு: 18x12.5 சமீ.

சிறுவர் இலக்கியத்துறையில், இளமைப்பருவத்திலே, காந்தி போதனை ஆகிய இரு நூல்களை எழுதிய ஆசிரியரின் மூன்றாவது நூல் இது. பல்வேறு இஸ்லாமியப் பெரியார்களால் காலத்துக்குக் காலம் சொல்லப்பட்டு வந்த கதைகளை "இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள" என்ற தலைப்பில் வீரகேசரி வார வெளியீட்டில் 27.2.1966 முதல் 19 வாரங்களாகத் தொடர்ந்து எழுதிவந்தார். அத்தொடரின் நூலுருவே இதுவாகும். நோன்பு, ஏக்கம், காருண்யம், தகுதி, துயர், நேர்மை, தொழுகை, மரணம், தயாளம், கொடை, சத்தியம், வசதி, பாங்கு, சபதம், வீரம், தாகம், ஆதாயம், கொள்கை, அறிவு, வீரம், நீதி, நோக்கு, பண்பு, மன்னிப்பு, எழுத்து, சாதனை, நிலம், பதவி, முறைமை, நேர்மை, கழுதை, முட்டை, புகழ்ச்சி, விருந்து, படுக்கை, பிரயாணி, பங்கு, தானம், தியாகம், முற்றும் ஆகிய தலைப்புகளில் அமைந்த 40 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. முதற்பதிப்பை 8.10.1972 இல் 2500 பிரதிகள் கண்ட இந்நூல் விற்பனையில் வரலாறு படைத்து அதே மாதம் 31ம் திகதி இரண்டாவது பதிப்பையும் கண்டிருந்தது. ஏக விநியோகஸ் தராக கொழும்பு வீரகேசரி நிறுவனம் இயங்கியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118844).

9234

சமுதாயங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும். மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி (ரஹ்) (மூலம்), மௌலவி ஏ.எல்.எம். இப்ராஹீம் (தமிழாக்கம்). கொழும்பு 9: இலங்கை ஜமாஅதே இஸ்லாமி, 204/1, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, 1வது பதிப்பு. ஏப்ரல் 1981. (கொழும்பு 9: எஸ்.எச்.நிலாப்தீன், IPC பிரின்டிங் பிரஸ்).

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x12.5 சமீ.

Rise and Fall of Nations என்ற நூலின் தமிழாக்கம். ஒரு காலத்தில், உலகில் கோலோச்சி வாழ்ந்த சமூகங்கள், அவை கடைப்பிடித்த தீமை பயக்கும் செயல்கள் காரணமாக எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதை பெரும் இஸ்லாமிய சிந்தனை யாளரும் மார்க்க மேதையுமான மௌலானா செய்யித் அபுல் அஃலா மௌதூதி

அவர்கள் திருக்குர் ஆன் ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 7767).

9235

சாந்தி மார்க்கம். மௌலவி முஹம்மது பளீல். வெளியீட்டு விபரம் தரப்படவில்லை, 7வது பதிப்பு, 1966, 1வது பதிப்பு, 1957. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 413 பக்கம், விலை: ரூபா 6.25, அளவு: 21x14 சமீ.

க.பொ.த ப. பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட இஸ்லாமிய பாட நூல் இது. ஈமான், இஸ்லாம், நபிகள் நாயகம், ஏனைய நபிமார்களிற் சிலர், நான்கு கலீபாக்கள், தோழர்கள் (ஸஹாபாக்கள்), இஸ்லாமிய மூலாதாரங்கள், பிக்ஹும் சட்ட நிபுணர்களான நான்கு இமாம்களும் ஆகிய எட்டு அத்தியாயங்களில் இஸ்லாமிய அறிவியல் தகவல்கள் மிக விரிவாக இந் நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 87297).

9236

சீறாப் புராணம்: நபி அவதாரப் படலம். திக்குவல்லை ஸப்வான் (தொகுப்பாசிரியர்). காரைநகர்: காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, 1990. (காரைநகர்: பாலா அச்சகம்).

26 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 21.5x14 சமீ.

க.பொ.த. (சா.த.) 10ஆம், 11ஆம் ஆண்டு மாணவர்களுக்குரிய தமிழ் இலக்கியம் என்னும் பாடநூலில் வரும் தேர்ந்த சீறாப்புராணச் செய்யுள்களின் பொருள் முதலியன இந்நூலில் இடம்பெறுகின்றன. உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணம் இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களுள் முக்கியமானது. இப்புராணம், முகம்மது நபி(ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரது பிறப்பு, திருமணம், வெற்றி முதலியவற்றின் வரலாற்றைக் கூறுகின்றது. சீறத் (வாழ்க்கை வரலாறு) என்னும் அரபிச் சொல்லிலிருந்து சீறா என்னும் சொல் தோன்றியது. சீறாப்புராணம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களைப் பற்றிக் கூறும் காவியமாகும். இந்நூல் விலாதத்துக் (பிறப்புக்)காண்டம், நுபுவத்துக் (தீர்க்கதரிசனக்) காண்டம், ஹீஜ்ரத்துக் (மக்காவை விட்டு மதீனாவுக்கு இடம் பெயர்தல்) காண்டம் ஆகிய மூன்று காண்டங்களைக் கொண்டது. மேற்படி மூன்று காண்டங்களும் 92 படலங்களையும் 5027 விருத்தப் பாக்களையும் கொண்டன. 19.5.1954இல் பிறந்த நூலாசிரியர் முகம்மது முகம்மது ஸப்வான் வெலிகம பிரதேசத்தில் கிராமசேவையாளராகப் பணியாற்றுகின்றார். உம்மாவுக்கு ஒரு சேலை என்ற சிறுகதைத் தொகுதி உள்ளிட்ட பல இலக்கிய உப பாட நூல்களின் ஆசிரியர். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 80449).

9237

தப்தர் ஜெய்லானி. எம்.எல்.எம்.அபுசாலி. பலாங்கொடை: எம்.எல்.எம்.அபுசாலி, 1வது பதிப்பு, 2002. (அச்சக விபரம்தரப்படவில்லை).

xix, 136 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-97801-2-3.

பலாங்கொடையில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள தப்தர் ஜெய்லானி பிரதேசம் தொல்பொருள் ஆய்வுக்குரிய பாதுகாப்புப் பிரதேசமாக இலங்கை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டது. அங்குள்ள பிரபல்யமான பள்ளிவாசல் நீங்கலாக மற்றைய கட்டிடங்கள் அகற்றப்பட்டு அகழ்வாராய்வுக்கு உட்படுத்தத் திட்டமிடப்பட்டது. இத்தகைய பின்புலத்தில் தப்தர் ஜெய்லானி பற்றிய வரலாற்றுப் பதிவாக இந்நூல் அமைகின்றது. இஸ்லாமிய வரலாற்றில் மாபெரும் இறைநேசர், இறைநேசரின் அற்புதங்கள், இலங்கையும் இஸ்லாமும் மத்திய கிழக்கும், தப்தர் ஜெய்லானி, மீள்கண்டுபிடிப்பு, தரிசித்தவர்களும் அறிக்கைகளும், பாதுகாப்பதற்கும், காப்பதற்குமான வழக்காடல், ஜெய்லானி கந்தூரி, தப்தர் ஜெய்லானியைப் பற்றிய மரபுவழிக் கதைகள் ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் தப்தர் ஜெய்லானி பற்றிய விளக்கத்தினை வழங்குகின்றது. பின்னிணைப்பு களாக ஒழுங்கு முறைப்படி சூபிமாரின் பெயர்ப்பட்டியல், மேன்மைதங்கிய ஹஸ ருத் கௌசுல் அஸாம் ஜீலானி, டிரஸ்டிமார்களின் பெயர்ப்பட்டியல் (1890-2001), வரலாற்று ஆதாரங்கள் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. நூலசிரியர் அபுசாலி சுயேட்சை வேட்பாளராக பலாங்கொடைப் பிரதேசத்திலிருந்து அரசியலில் இறங்கியவர். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக 50 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றுகின்றார். 1977இல் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டவர். இரத்தினபுரி மாவட்ட அமைச்சராகவும் (1978-1982), மகாவலி அபிவிருத்தி பிரதி அமைச்சராகவும் (1982-1988), பெருந் தோட்ட சேவைகளுக்கான இராஜாங்க அமைச்சராகவும் (1990-1993), தொழில் தொழில் பயிற்சி அமைச்சரவை அமைச்சராகவும் (1993-1994) சேவையாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204062).

9238

தஃவாப் பணியில் பெண்கள். யூசுப் அல் கர்ழாவி பைஸல் மௌலவி - லெபனான் (மூலம்), எம்.ஏ.எம்.மன்சூர் (தொகுப்பாசிரியர்). மல்வானை: தாருல் அர்க்கம் பதிப்பகம், 26 சீ, ரக்ஸபான, 2வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, 1994. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், இல.1 B, P.T.De Silva Mawathe).

(6), 52 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21x13.5 சமீ.

Women in Islamic Propaganda என்ற தலைப்பில் வெளியான நூலின் தமிழாக்கம். பெண் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் அதி உன்னத பொறுப்பு வாய்ந்தவள். அவளது உடல், உள, இயற்கை அமைப்புகள் அனைத்தும் இந்தப் பணிக்கு ஏற்பவே ஆக்கப்பட்டுள்ளன. இதன் பொருள் வீட்டில் அவள் அடைபட்டுக்

கிடக்க வேண்டும் என்பதல்ல. அவள் வீட்டைவிட்டு போர்க்களம் வரை செல்லக் கூட அது அனுமதிக்கின்றது. ஆனால் வீட்டில் அவளது பணிக்கு அது பாதகம் விளைவித்து விடக்கூடாது என இஸ்லாம் வேண்டுகின்றது. சமூகக் களம் ஆணின் முதன்மையான பணி. வீடு, குடும்பம் இவை அவனது இரண்டாவது பகுதி. வீடும் குடும்பமும் பெண்ணின் முதன்மையான பணி. சமூகக் களம் அவளின் இரண்டாவது பகுதி. இவ்வாறு இஸ்லாம் ஆண்மீதும் பெண்மீதும் விதித்துள்ள கடமைகளையும் பொறுப்புக்களையும் இந்நூல் விரிவாக ஆராய்ந்து பொதுப் பணியில் இஸ்லாமியப் பெண்ணின் பாத்திரம் என்ன என்பதைக் கூறுகின்றது. கலாநிதி யூசுப் அல் கர்ழாவி இஸ்லாமிய உலகின் முக்கிய சட்ட வல்லுநர்களுள் ஒருவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 23810).

9239

திருக்குர் ஆன் கட்டுரைகள். முஸ்லிம் வாலிபர் இயக்கம். ஏறாவூர்: ஏறாவூர் முஸ்லிம் வாலிபர் இயக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1961. (ஏறாவூர்: அடானா அச்சகம்).

(10), 94 பக்கம், விலை: ரூபா 1.20, அளவு: 18.5x13 சமீ.

ஏறாவூரில் நடைபெற்ற திருக்குர் ஆன் மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகளையும் பிற இஸ்லாமிய அறிஞர்களின் உரைகளையும் தொகுத்து 13 கட்டுரைகளுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. நான் போற்றும் நூல் (மௌலானா மௌதூதி), திருக்குர் ஆன் கூறும் அறவாழ்வு (மௌலவி முஹம்மது உமர்), குர் ஆன் கூறும் சமதர்மம் (ஸஹ்றான் இப்றாஹீம் முகம்மதலி), இன்றைய முஸ்லிம்களும் குர் ஆனும் (ஏ.எம்.ஏ.அஸீஸ்), திருக்குர் ஆனும் பெண்ணினமும் (ஜே.எம்.ஹுஸைன்), இறையருள் இலக்கியம் (ஏ.எல்.மஜீத்), குர் ஆன் கூறும் பொருளாதாரம் (அல்ஹாஜ் வி.எம். சம்சுதீன்), குர் ஆன் கூறும் ஆட்சிமுறை (பேராசிரியர் சையத் இப்றாஹீம்), திருக்குர் ஆனின் தனிச் சிறப்பு (ஐ.எல்.எம். மஷ்ஹூர்), வான்மறை காட்டும் வண்ண உவமைகள் (எச்.எம்.பி. மொஹீதீன்), திருக்குர் ஆனின் சிறந்த சாதனை (மௌலவி எம்.ஜே.கலீலூர் ரஹ்மான்), அற்புத வேதம் (ஆ.கா.அப்துஸ் ஸமது), குர் ஆன் கூறும் இறைவணக்கம் (எஸ்.எல்.எம். அப்துல் காதிர்) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. எமது கட்டுரையாளர்கள் என்ற பகுதியில் கட்டுரை யாளர்களின் அறிமுகம் இடம்பெற்றுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87294).

9240

நற்செய்தி பெற்ற நபித் தோழியர். எஸ்.எச்.எம்.இஸ்மாயில் ஸலபி. பறகஹதெனிய: ஐம்இய்யது அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதியா, வேஉட, 1வது பதிப்பு, மார்ச் 2002.

(அச்சக விபரம் தரப்படவில்லை).

64 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 25., அளவு: 17.5x12 சமீ., ISBN: 955 -8732-00-1.

இஸ்லாமிய எழுச்சியில் ஆண்களைப்போன்றே பெண்களும் பெரும் பங்களிப்பை நல்கியுள்ளனர். இன்றைய முஸ்லிம் பெண்கள் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்க அண்ணல் நபியின் அருமைப்புதல்வி அன்னை பாதிமா(ரழி) உள்ளிட்ட நபித்தோழியர் சிலரின் வாழ்வையும் அது தரும் படிப்பினைகளையும் இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 202895).

9241

மௌலானா ரூமியின் சிந்தனைகள். ஏ.இக்பால். கொழும்பு-12: ஸபீனா பதிப்பகம், 20, பிரைஸ் பிளேஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1969. (கொழும்பு-12: ஸபீனா அச்சகம்).

60 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

புகழ்பெற்ற பாரசீக சூபிக் கவிஞர் மௌலானா றூமியின் கிதாபுல் மஸ்னவியில் உள்ள கவிதைகள் சிலவற்றின் மொழிபெயர்ப்பு இதுவாகும். கவிஞர் இக்பால் 1956இலிருந்து கவிதை, சிறுகதை, விமர்சனக்கட்டுரை, இஸ்லாமியக் கட்டுரை ஆகியவற்றை இலங்கையிலும், தமிழகத்திலும் வெளிவரும் ஊடகங்களில் எழுதி வருபவர். முஸ்லிம் கலைச்சுடர் மணிகள் என்ற நூலுக்குப் பின்னர் வெளிவரும் இவரது இரண்டாவது நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87293).

மேலும் பார்க்க: 9344

300 சமூக விஞ்ஞானங்கள்

301 சமூகவியல்

9242

அமைதியின் குரல்: சம்பவத் தொகுப்பு. ஜனசங்சதய (ஆங்கில மூலம்), திக்வல்லை கமால் (தமிழாக்கம்). பாணந்துறை: ஜனசங்சதய, 81/2, ஆர்தர் வீ. டயஸ் மாவத்தை, 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 121 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1687-27-4.

டெய்லி மிரர் பத்திரிகையில் Voice of Voiceless என்ற பத்தியில் தொடராக வெளிவந்த உண்மைச் சம்பவங்களின் தொகுப்பு இதுவாகும். ஜனசங்சதய என்ற அமைப்பின் மூலம் உலகுக்கு வெளிக்கொண்டுவரப்பட்ட 39 உண்மைச்சம்பவங்கள் இவை. சமூகத்தின் மூலை முடுக்குகளில் இடம்பெறுவதுடன் எவரது கவனத்தையும் கவராதுபோன உண்மை மனிதர்களின் கதைகள் இவை. தமக்கு நேர்ந்த சில சம்பவங்களை, பயம், வெட்கம் காரணமாக வெளிப்படுத்தத் தயங்குபவர்களுக்கு உதவும் அமைப்பு ஜனசங்சதய என்பதாகும். இவ்வமைப்பினைப்பற்றித் தாமே கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்கள். "பொதுமக்கள் பயம் வெட்கம் காரணமாகத்

தமக்கு நேர்ந்த சம்பவங்களை, தமது வாழ்க்கையையே சீரழித்த நிகழ்வுகளை வெளியே சொல்லத் தயங்கி வாழ்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஜன சங்சதய நிழல் கொடுக்கிறது. மோசடி, இலஞ்சம், அச்சுறுத்தல், துஷ்பிரயோகம், அகங்காரம், பயமூட்டல் போன்றவற்றுக்குள்ளானவர்கள் எந்தத் தடையுமில்லாமல் ஜனசங்சதயவுக்குத் தங்கள் கதையைச் சொல்கிறார்கள். இப்படியானவர்கள் கிராமம் நகரம் என்று வேறுபாடின்றி பலபக்கங்களிலிருந்தும் வருகிறார்கள். சட்ட உதவி, உளவியல் ஆலோசனைகள், தேவைப்படுமிடத்து நிதியுதவி போன்ற வற்றையும் ஜனசங்சதய அவர்களுக்கு வழங்குகின்றது. எமது தொண்டர்கள் அவர்களைத் தேடிக்கொண்டு பின்தங்கிய கிராமங்களுக்குக் கூடச் செல்கின்றார்கள். அவர்களோடு கலந்துரையாடி அவர்களுக்கு எவ்வாறு உதவவேண்டுமென்பதைக் கண்டறிவார்கள். அதன்பின்னர் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் ஜனசங் சதயவின் பிரச்சினையாக மாறிவிடும். ஜனசங்சதய பல்வேறு கண்காட்சிகளையும் விழிப்புணர்வுக் கூட்டங்களையும் நடத்திவருகின்றது. ஜனசங்சதயவுடன் சம்பந்தப் பட்ட இந்தச் சம்பவங்களைப் பொதுமக்கள் கோணத்திலிருந்து இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன."

9243

ஏக்கத்தில் ஆக்கம்: தொகுப்பு. நிமலன் (இயற்பெயர்: அரியபுத்திரன் நிமலன்). சுவிட்சர்லாந்து: அரியபுத்திரன் அறக்கட்டளை, 1வது பதிப்பு, 2013. (சென்னை 600002: டாப் ஸ்டார் பிரஸ், இல.20, இராஜகோபாலன் தெரு, சிந்தாரிப்பேட்டை).

72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தனது மகளின் பூப்புனித நீராட்டு விழாவின்போது அன்பளிப்பாக வழங்குவதற்காக ஏழு நாட்களில் எழுதி முடிக்கப்பட்ட நூல் எனவும், நண்பர்களோடும் உறவினர் களோடும் நடைமுறையில் நாம் செய்யும் சமூகத் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதெனவும் தன் முன்னுரையில் குறிப்பிடும் நூலாசிரியர், கதையாக எழுதத் தொடங்கி அதனை முடிக்கும் வேளை கட்டுரையாக அமைந்துவிட்ட நிலையையும் கண்ணுறுகின்றார். வரலாற்றில் புங்குடுதீவின் ஒரு கண்ணோட்டம், கல் தோன்றி..., தமிழில் வழிபாட்டை மறுக்கும் தமிழ் நிர்வாகங்கள், விநாயகர் வழிபாடும் விமலாவின் வாழ்வும், இரண்டும் உண்டு, வேதனையிலும் சாதனை, ஊரும் உறவும், எதற்கு வந்தாய், தரிப்பிடமும் தமிழரும், பேதங்கள், தந்தையும் தென்னையும், புழுக்கம், சாமத்தியச் சடங்கு, விழித்திட வேண்டாம் ஆகிய 14 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

9244

ஓயாத கிளர்ச்சி அலைகள்: 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிகள். குமாரி ஜயவர்த்தன (ஆங்கில மூலம்), மு. பொன்னம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு-6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, இணை வெளியீடு, கொழும்பு-5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(14), 222 பக்கம், விலை: ரூபா 750., அளவு: 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-367-9.

Perpetual Ferment: Popular Revolts in Sri Lanka in the 18th 19th Centuries *என்ற தலைப்பில் கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா எழுதிய நூலின் தமிழாக்கம். முதலாவது பாகத்தில் அறிமுகம், பொருளாதார சமூக மாற்றங்கள், அதிகார வர்க்கங்களும் சமூகக் குழுக்களும், குடியான்கள், கறுவாப்பட்டை உரிப்போர் மற்றும் வேடர்கள், ஆரம்ப கிளர்ச்சியாளர்கள் ஆகிய 5 இயல்களும், இரண்டாவது பாகத்தில் கறுவாப்பட்டை உரிப்போர், குடியான்கள் மத்தியில் போர்க்குணம், மக்களின் பொறுமையைச் சோதித்தல், ஆங்கில ஆட்சிக்கெதிராகக் கிளர்ந்தெழுதல் 1817-1818, சங்கிலித் தொடராய் நீண்டெழுந்த எதிர்ப்பு 1820-1846, 19ஆம் நூற்றாண்டின் கடைசிக் கிளர்ச்சி 1848 ஆகிய 5 இயல்களும், மூன்றாம் பாகத்தில் கருத்தியல் மூலோபாயம் மற்றும் தலைமைத்துவம், எல்லாவற்றையும் தலைகீழாக்குதல், முடிவுரை ஆகிய மூன்று இயல்களும் இடம்பெற்றுள்ளன.*

9245

சமூக அறிவியல். *சி.மகாலிங்கம். யாழ்ப்பாணம்: சி.மகாலிங்கம், ஆசிரியர், யாழ்ப்பாண மத்திய கல்லூரி, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: ஈழநாடு லிமிட்டெட்).*

(6), 310 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 18.5x14.5 *சமீ.*

ஆறாம், ஏழாம், எட்டாம் வகுப்புகளுக்கு ஏற்றமுறையில் வடிவமைக்கப்பட்ட நூல். கொழும்பு ஆசிரியர் சங்கத்தினதும், வட மாகாண ஆசிரியர் சங்கத்தினதும் கனிஷ்ட தராதரப் பத்திர சமூக பாட பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. மனிதரின் அடிப்படைத் தேவைகள், தொழிலும் வியாபாரமும், இலங்கையின் பொருளாதாரம், இன்றைய சமூக வாழ்க்கை, நாமும் எமது ஆட்சியும், நாம் வாழும் உலகம், நல்வாழ்வு ஆகிய ஏழு பகுதிகளிலும் உள்ளடக்கப்படும் 28 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120912).

9246

நேற்றுப் போல இருக்கிறது. *கே.எஸ்.பாலச்சந்திரன். தெகிவளை: கனகா பதிப்பகம், 1வது பதிப்பு, மே 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

x, *221 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 450., அளவு:* 22x14 *சமீ.,* ISBN: 978-955-0210-05-3.

இந்த நூலில் 36 உரைச் சித்திரங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் நமது இழப்பையும் கடந்த காலத்தின் இனிமையையும் சுட்டுகின்றன. சிறு வயதில் நாடகம் நடத்தும் ஆசைகளையும், சைக்கிள் பழகும் நாடகத்தையும், அந்தக் காலத்து எலக்சனையும், விசிலடித்த காலத்தையும், கிராமத்தில் நடந்த பணச் சடங்குகளின் ஏமாற்றத்தையும், திருவிழாக் கேளிக்கைகளையும், கிராமபோன் களையும் சுவையாகச் சித்திரிக்கின்றார். நாம் இழந்துவிட்ட நம் இளமைக் காலத்தை நினைவு படுத்த ஆசிரியர் இந்த 36 உரைச்சித்திரங்களையும் திருப்தி கரமாகப் பயன்படுத்தியுள்ளார். இயல்பான நகைச்சுவை உணர்வினை வெளிக்

காட்டும் இவரது படைப்புகள் புகலிடமெங்கும் அண்ணை ரைட் பாலச்சந்திரனின் நூல்களை ஆர்வத்துடன் விரும்பி வாசிக்கவைத்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218708).

9247

போரின் தாக்கத்துடன் வளர்ச்சி: இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள். சேரா விமலதர்ம, அமரசிறி டி சில்வா, நிலக்ஷி டி சில்வா. கொழும்பு-7: வறுமை ஆராய்ச்சி நிலையம், Centre for Poverty Analysis, 29, Gregory's Road, 1வது பதிப்பு, ஜுன் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3), 36 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 300., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1040-35-2.

அறிமுகம், ஆய்வின் அணுகுமுறையும் ஆராய்ச்சி வழிமுறைகளும், குடும்பங்களின் மீது மோதல்களினால் ஏற்படும் தாக்கங்கள் (கிழக்கு மாகாணத்தின் மீதான ஓர் பார்வை, மோதல்கள் தொடர்பாக குடும்பங்களின் கண்ணோட்டம், முரண்பாடுகள் மற்றும் வறுமை பற்றிய கண்ணோட்டம்), சிறுவர்களும் ஆயுத மோதல்களும் (மோதலும் கல்வி நடவடிக்கைகளும், மோதலும் சிறுவர்களின் உழைப்பும், மோதலும் சிறுவர்களின் உடல்நலமும், சிறுவர்களும் அவர்களுக்கு பக்கத் துணையாயிருக்கும் முறைகளும்), சிறுவர்களின் கண்ணோட்டம், முடிவுரையும் பரிந்துரைகளும், உசாத்துணை ஆகிய ஏழு பிரிவுகளின்கீழ் இவ்வாய்வு எழுதப் பட்டுள்ளது. பின்னிணைப்பாக இலங்கையின் தேசப்படம், மதிப்பாய்வு செய்யப் பட்ட கிராமங்களின் பெயர்கள் என்பன இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218333).

9248

மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள். கே.எஸ்.சிவகுமாரன். திருகோணமலை: கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, மார்ச் 1999. (திருகோணமலை: அச்சகப் பிரிவு, Ministry of Education, Cultural Affairs & Sports N.E.P.)

(2), 25 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21.5x15 சமீ.

17ஆம், 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளின் மேலைச் சிந்தனைகளும் அறிவியல் வளர்ச்சியும் பற்றி இந்நூல் விளக்குகின்றது. ஆசிரியரின் பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுகளும் தொடரில் ஐந்தாவது நூல் இது. நூலாசிரியர் விளக்கமும் நன்றி நவிலலும், 17ஆம் நூற்றாண்டில் மேனாட்டு விஞ்ஞானம்: சில முக்கிய செய்திகள், 17ஆம் நூற்றாண்டு கண்ட ஐரோப்பிய விஞ்ஞானப் போக்கு, 18ஆம் நூற்றாண்டு: பெருந்தத்துவ ஞானிகளின் யுகம், 18ஆம் நூற்றாண்டு விஞ்ஞானம்: மதமும் அறிவியலும் தர்க்கித்த காலம், 19ஆம் நூற்றாண்டு விஞ்ஞானம்: முக்கியமான சிந்தனைப் போக்குகள், 19ஆம் நூற்றாண்டுத் தொழில்நுட்பம் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 128885).

9249

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் (1920களில்). அ.கௌரிகாந்தன். United Kingdom: எழுநா ஊடக நிறுவனம், 4, Kettering Road, Isham, Kettering, NN14 1HQ, 2வது பதிப்பு, மே 2013, 1வது பதிப்பு, பெப்ரவரி 1992. (சென்னை 6000005: சுவடி).

86 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 978-93-80244-98-3.

1920களில் யாழ். குடாநாட்டில் நிகழ்ந்த சமூக உருவாக்கத்தினை முதன்மை மையப் பொருளாகக் கொண்டு, அச்சமூக உருவாக்கத்தில் பங்காற்றிய சிந்தனைப் போக்குகளின் பிரதிநிதிகளில் கனதியான பாத்திரத்தை வகித்த யாழ்.வாலிபர் காங்கிரஸ் குறித்தும் அவ்வமைப்பின் பங்களிப்பாளர்களுள் ஒருவராக இருந்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த விபுலானந்தரின் பங்கு குறித்தும் இந்நூல் பேசுகிறது. இந்நூலின் முதற்பதிப்பு வெளிக்கொண்டுவரப்பட்ட 1992 ம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் அந்நிய நேரடி இராணுவத் தலையீட்டை எதிர்கொள்வதின் போதான பேரிழப்புகளின் பின்னால், தமிழீழ அரசு மீளவும் நிலைநிறுத்தப்பட்டிருந்தது. அந்நிய இராணுவத் தலையீடும் அதை வெற்றிகொள்ள புலிகள் இயக்கத்தால் கடைப்பிடிக்கப்பட்ட இராணுவ, அரசியல் வழிமுறைகளும், பல படிப்பினைகளை தமிழ் பேசும் மக்களுக்கும், புலிகள் இயக்கத்திற்கும் கொடுத்திருந்தன. இப் படிப்பினைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் அரசியல் சிந்தனைப் போக்குகளை தமிழ்பேசும் மக்களிடையேயும், புலிகள் இயக்கத்திற்குள்ளேயும் தோற்றுவித்தன. புலிகள் இயக்கத்துள் ஆக்கபூர்வமான, சுமுகமான ஓர் உட்கட்சிப் போராட்டம் ஆரம்பமானது என்றும் கூறலாம். இது புலிகள் இயக்கத்திற்கு முற்றிலும் புதியதோர் மரபாகும். புலிகள் இயக்கமும் இதைப் புரிந்துகொண்டிருந்தது. மறுபிறப்பெடுக்க முயற்சித்தது. அதற்கான வழிமுறைதான் மேற்குறிப்பிட்ட உட்கட்சிப் போராட்டமாகும். இம்முயற்சிகளின் வெளிப்பாடுகளில் ஒரு துளிதான் இந்நூல் எனலாம்.

9250

வணிகர் வரலாறு. மு.வே.சீவரத்தினம். வட்டுக்கோட்டை: பாட்டா வமிசவழியினர் சங்கம், சிந்துபுரம், 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

குலம் நான்கு, தமிழர் நாகரிகம், வணிகர் வரலாறு, உணவு, சமயம், தாய்மொழிப் பற்று, குணங்குறிகள், வேண்டுதல், உலக அரங்கிலே, முடிவுரை ஆகிய பத்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. காந்தீயவாதியான நூலாசிரியர் கொழும்பு சாகிராக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி போன்ற உயர் கல்லூரிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். கல்வித் திணைக்களத்தில் வித்தியாதரிசகராகக் கடமையாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84565).

9251

வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள் (நடைச் சித்திரம்). மாவை வரோதயன் (இயற்பெயர்: சிவகடாட்சம்பிள்ளை சத்தியகுமாரன்). கொழும்பு-6: தேசிய கலை இலக்கியப் பேரவை, 571/15, காலி வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2010. (கொழும்பு -13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

94 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-8637-28-9.

ஆசிரியரின் மறைவின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்டுள்ள அவரது நூல். இது முன்னர் தாயகம் சஞ்சிகையில் 2006 ஜுன் முதல் 2008 டிசம்பர் வரை தொடராக வெளிவந்திருந்தது. நூலுக்கான முன்னுரையையும் அவரே எழுதிச்சென்றுள்ளார். திறந்த பொருளாதாரம், பூகோளமயமாதல், என்பவற்றின் பாதிப்பிற்குள்ளாகாத யாழ்ப்பாணக்குடாநாட்டின் 1970-80 காலகட்டத்து மனிதர்களின் வாயிலாக சில சுவையான சம்பவங்களைப் பதிவுசெய்யும் நடைச் சித்திரங்கள் இவை. நுளம்பு நாகரத்தினம், சுருட்டு சங்கரப்பிள்ளை, கண்பரிகாரி கனகம்மா, மேசன் மகாலிங்கம், மாங்கண்டு மதியாபரணம், சகலகலா சுந்தரமூர்த்தி, பெரியவ பொன்னம்மா, பரந்தன் பாலசிங்கம், குழந்தை குமாரசுவாமி, தலைவர் தவராசா ஆகிய பத்து பாத்திரங்களின் வழியாக ஈழத்தமிழரின் சமூக வரலாற்றின் பல சுவைமிகு சம்பவங்களை நடைச்சித்திரங்களாகப் பதிவுசெய்கின்றார்.

301.1 பண்பாடு

9252

இந்துப் பண்பாடு: அன்றும் இன்றும். வி.சிவசாமி (மூலஆசிரியர்), ப.கணேசலிங்கம் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் அறுபதாம் அகவை நிறைவு நினைவு வெளியீடு, இந்து நாகரிகத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2005. (தமிழ்நாடு: மீரா பைன் ஆர்ட்ஸ், சிவகாசி).

xxi, 213 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 350., அளவு: 22x14 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சம்ஸ்கிருதத்துறைத் தலைவரான பேராசிரியர் விநாயகமூர்த்தி சிவசாமியின் கட்டுரைகளின் தொகுப்பு. யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதியும், இந்து நாகரிகப் பேராசிரியரும், சம்ஸ்கிருத அறிஞருமான கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயரின் அறுபதாம் அகவை நிறை வினைப் பாராட்டுமுகமாக இந்நூல் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப.கணேசலிங்கம் அவர்களால் தொகுத்துப் பதிப்பிக்கப் பட்டுள்ளது. இந்நூலில், இந்து சமயம்: சில பொதுக் கருத்துக்கள், எல்லோரும் இன்புற்றிருக்கவே, ஹரப்பா பண்பாட்டில் இந்து சமயம், வேதங்கள் கூறும் சமய, வாழ்வியல் கருத்துக்கள், வட மொழிச் சைவசித்தாந்த மரபும், உமாபதி சிவாச் சாரியாரின் சதரத்ன சங்கிரகமும், சைவசமய மரபும் சிவாச்சாரியாரும், விநாயகர் தத்துவம், முருக வழிபாடும் தத்துவமும், அம்பிகையின் மகத்துவம் கூறும் நூல், பக்தி-சில குறிப்புகள், சிவதோத்திரங்கள் - ஒரு குறிப்புரை, இந்து சமய வழிபாட்டில்

இயற்கை, மணிவாசக நெறி, வர்ணாச்சிரம தர்மம், கௌடில்யர் கூறும் அரசும் சமூகநல சேவையும், பரத நாட்டியம் - ஒரு பொது நோக்கு, இலங்கையிலே பண்ணும் பரதமும்-சில குறிப்புகள், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் கண்ட இராமபிரான், தேர் பற்றிய சில கருத்துக்கள், காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள், இலங்கைச் சிற்பங்கள், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்து சமயம் - சில வரலாற்றுக் குறிப்புகள் (கி.பி.1800 வரை), நவீன இந்துமதச் சிந்தனையாளர் வரிசையில் ஆறுமுக நாவலர், இலங்கையின் இந்துப் பண்பாட்டு மரபும் சேர் பொன்னம்பலம் இராமநாதனும், இன்றைய உலகில் சைவம் ஆகிய 25 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 165492).

9253

இலக்கியத்தில் சமூகம்: பார்வைகளும் பதிவுகளும். *இ.இராஜேஸ்கண்ணன். யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

xii, *107 பக்கம், விலை: ரூபா 250., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-4676-14-5.

கலையின் சமூகவியல்-சில சிந்தனா கூடங்களின் வழியான தேடல், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் "காதலியாற்றுப்படை" - ஒரு பண்பாட்டுக் கோலப் பதிவு, திருக்குறள் புலப்படுத்தும் மக்கள் பங்கேற்றலின் கூறுகள்: ஒரு சமூகவியல் நோக்கு, யாழ்ப்பாணத்துச் சமூக பண்பாட்டு அசைவியக்கத்தில் பண்பாட்டு ஆளுமைகளின் வகிபாகம்: பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை குறித்த ஒரு சமூக மானுடவியல் நோக்கு, ஔவையை மறுதலிக்கும் அவ்வைகள்-பெண் கவிஞர் தொடர்பான இருதுருவ நோக்கு, ஈழத்துக் கவிதைத் தடத்தில் ஹைக்கூ கவிதைகள், கவிதை மொழி உணர்வுத்தளமும் கருத்தியல் தளமும், யுகசந்தி-ஒரு சமூக வரலாற்றுப் பதிவின் புனைவாக, புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் குறித்த ஒரு உசாவல், ஆத்திசூடி: ஔவையார்-பாரதி-முருகையன் ஒரு கருத்துநிலை ரீதியான ஒப்பாய்வு ஆகிய பத்து கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236660).

9254

இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்: பாகம் 1: கி.பி.1500 ஆண்டுகள் வரை. *செல்லையா கிருஷ்ணராஜா. யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு, 2ஆம் கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, புரட்டாதி 2012. (கொழும்பு 6:* AB Creator and Publishers, 8A-4/2, *புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை).*

viii, *744 பக்கம், விலை: ரூபா 1500., அளவு:* 24.5x18 *சமீ.,* ISBN: 978-955-4568-02-0.

கி.பி.1500 ஆண்டுகள் வரை இலங்கையில் காணப்பட்ட வரலாறு, கலை, கலாச்சாரம், அரசியல், சமயங்களின் வளர்ச்சி, போன்றவற்றின் உண்மைத் தன்மையின் அடிப்படையிலான ஒரு பண்பாட்டு வரலாற்றுத் தொகுப்பு இந் நூலாகும். முன்னர் ஆசிரியரால் எழுதப்பட்ட இலங்கை வரலாறு-பாகம் 1 என்ற நூலினைத் தளமாகக் கொண்டு இந்நூல் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. 15 இயல் களில் எழுதப்பட்ட இந்நூலில் வரலாற்றின் பொருள் விளக்கமும் பரப்பும் நோக்கமும் அணுகுமுறையும், இலங்கை வரலாற்றைக் கற்பதற்குரிய மூலா தாரங்கள், வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமூகங்களின் இருப்பும் பண்பாடும், பெருங்கற்கால இலங்கையும் பண்பாடும், புராதன நதிக்கரையோர நாகரிகங்களும் இலங்கையின் நீரியல் நாகரிகத்துடனான பண்பாட்டு வழித் தொடர்புகளும், விலங்கு வேளாண்மைக் குதிரைக் குழுமங்களின் வருகையும் கீழைத்தேயத்தில் அவர்களது குடியேற்ற நடவடிக்கைகளும், ஆக்ககால இலங்கையின் அரசியல், பண்பாடு (பௌத்த மதத்துடன் இணைந்த பெருங்கற்காலம்), ஒருமைய அரசின் பரிணாமமும் பன்மத சமூக நிறுவனங்களின் எழுச்சியும் (ஆக்ககால வளர்ச்சி தொடர்பான சாசனவியல் மூலங்கள் ஊடான சிறப்பாய்வு), நிலப் பிரபுத்துவ சமூகமும், அரசின் மேனிலையாதிக்கமும் (தேரவாத பௌத்த பீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு), நிலப்பிரபுத்துவ சமூகமும் அரசின் மேநிலை ஆதிக்கமும் (இந்துமதம் மற்றும் மகாயான பௌத்தபீடங்களின் பண்பாட்டுச் செல்வாக்கு), இராசரட்டை நாகரீகத்தின் வீழ்ச்சியும் தென்மேற்கு, வடக்கு, கிழக்கு நோக்கிய அரசியல் பண்பாட்டுப் புலப்பெயர்ச்சியும், அரசியற் கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும் (அநுராதபுரம், பொலநறுவைக் காலங்கள்), அரசியற்கோட்பாடுகளும் வெளிநாட்டுக் கொள்கைகளும் (தென்மேற்கு, வடகிழக்கு இடப்பெயர்வுக் காலங்கள்), இலங்கை கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம் (சிங்களப் பௌத்தப் பண்பாடு), இலங்கையின் கலை மற்றும் இலக்கிய வளர்ச்சிப் பாரம்பரியம் (இந்து திராவிடப் பண்பாடு) ஆகிய தலைப்பு களில் இவை எழுதப்பட்டுள்ளன.

9255

இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு. *க.சண்முகலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *111 பக்கம், விலை: ரூபா 400., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-435-5.

இலங்கையின் சமகால வரலாறு, இலங்கையின் சமூகவியல் என்ற இரு விடயங்கள் பற்றிய சிறப்புமிக்க ஆய்வுநூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் என்பவற்றை விமர்சன நோக்கில் அறிமுகம் செய்யும் பத்து கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. சித்சிறி மலல்கொட, ஜொனதன் ஸ்பென்சர், பற்றிக் பீப்பிள்ஸ், ஜனிஸ் ஜிஜின்ஸ், குமாரி ஜயவர்த்தன, மைக்கல் றொபர்ட்ஸ், றொபர்ட் ஹோம்ஸ், சசங்க பெரேரா, அதுலசிறிகுமார சமரக்கோன் ஆகியோரின் நூல்களையும் ஆய்வுகளையும் இந் நூல் அறிமுகம் செய்கின்றது. மேற்குறித்த எழுத்தாளர்களின் ஆய்வுகள் வரலாற்று நோக்கிலும் சமூகவியல் நோக்கிலும் அமைந்தவை. இலங்கையில் பௌத்த சமய

மறுமலர்ச்சியும் மாற்றமும்: 1750-1900, இலங்கையின் கிராமப்புறங்களில் அரசியலும் மாற்றமும் பற்றிய ஓர் ஆய்வு, இலங்கையின் மேற்கு மாகாணத்தின் முதலியார்கள், இலங்கையின் அரசியலில் சாதியும் குடும்பமும் 1947-1976, ஏ. பீ.டீ.சொய்சா: போர்க்குணமிக்க சோஷலிஸ்ட் ஜனநாயகவாதியும் பௌத்த சீர்திருத்தவாதியும், சாதி முரண்பாடும் மேலோர் குழாம் உருவாக்கமும்: இலங்கையில் கராவ உயர் குழாத்தின் தோற்றம் 1500-1931, றொபர்ட் ஹோம்ஸ் பார்வையில் யாழ்ப்பாணத்தின் சாதி முறை, கிராமிய சமூகவியல்-முக்கிய எண்ணக்கருக்கள் சில, சசங்க பெரேராவின் எனது பார்வையில் உலகம், பத்தினித் தெய்வமும் சுனாமியும்: கிழக்கிலங்கையின் பாணமைக் கிராமம் பற்றிய ஓர் ஆய்வு ஆகிய பத்து தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. நூலாசிரியர் இலங்கை நிர்வாக சேவையில் 1971-2004 காலகட்டங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்ற கணிப்புப் பெற்றவர்.

9256

யாழ்ப்பாண வாழ்வியல். பரமு புஷ்பரட்ணம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 14: கலைக்கேசரி, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட் பாஸ் வீதி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

464 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15 சமீ., ISBN: 978-955-0811-02-1.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, வரலாற்றுத்துறையினர், வீரகேசரி நிறுவனத்தின் கலைக்கேசரி வெளியீட்டாளர்களின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் 2011 செப்டெம்பர் 24-27ம் திகதிகளில் ஒரு கண்காட்சியையும் கருத்தரங்கையும் நடத்தினார்கள். யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய மரபுரிமைகளை அடையாளப்படுத்த பலதரப்பட்ட தொல்லியற் சின்னங்களைத் தேடிக் கண்டுபிடித்தும், பொது மக்களிடம் இருந்து சேகரித்தும் அவற்றைப் பொருட்காட்சியூடாக மக்களுக்கு வெளிச்சம்போட்டுக் காட்டிய வரலாற்றுத்துறையினர், கலைக்கேசரியுடன் இணைந்து பொருட்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட பல மரபுரிமைச் சின்னங் களின் புகைப்படங்களையும், யாழ்ப்பாணப் பண்பாட்டை மையப்படுத்தி எழுதப்பட்ட பல ஆய்வுக் கட்டுரைகளையும் ஆவணப்படுத்தி அவற்றை இந் நூலாக வழங்கியிருக்கிறார்கள். தமிழ்மொழியின் தொன்மை, மொழிக்கூறுகள் புலப்படுத்தும் யாழ்ப்பாணப் பண்பாடு, யாழ்ப்பாணத்தவரிடையே உறவுப் பெயர்களின் முதன்மைப் பயன்பாடு, மரபுரிமைச் சின்னங்களைப் பேணல், ஆவுரஞ்சிக் கற்களும் சுமைதாங்கிக் கற்களும், சின்னமேளம், பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை, கலிங்க மாகோன், ஈழகேசரி, ஈழத்தமிழரின் அரசியல் கலாச்சாரம், மரபுசார் சட்டங்கள், செங்குந்தர் மரபு, பெண்கல்வியும் பயன்பாடும், பிரித்தானியர் காலத்தில் கல்வி, இந்து சமயக் கல்வி, குடும்ப பொருளாதார சூழலும் மாணவர் கல்வியும், பண்டிதர் சச்சிதானந்தனின் யாழ்ப்பாணக் காவியம், சிறுகதைப் பெண்படைப்பாளிகள், தீண்டாதான் ஆங்கில நாவல், அமெரிக்க மிஷனரியின் வகிபாகம், மூலிகைகளின் பாவனையும் பயன்பாடும், இனத்துவ

இசை வரலாறு, பனையின் சிறப்பு என இன்னோரன்ன விடயப்பரப்புகளில் யாழ்ப்பாணத்தைப் பின்னணியாகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட 44 ஆய்வுக் கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8 ஆங்கிலக் கட்டுரை களாகும்.

9257

யாழ்ப்பாணப் பண்பாடு: அன்றும் இன்றும். அனித்தா யோகராசா. கொழும்பு-6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு-6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 135 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 500., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-427-0.

இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையின் சிறப்புக் கலை இறுதி வருடப் பரீட்சையின் ஒரு பகுதியை நிறைவுசெய்யும் பொருட்டு மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் நூல்வடிவமாகும். இவ்வாய்வு, பண்பாடு-ஓர் அறிமுகம், யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற காரணிகள், மிருசுவில் கிராமத்தின் பண்பாடு: அன்றும் இன்றும், யாழ்ப்பாணப் பாரம்பரிய பண்பாட்டின் எதிர்காலம் ஆகிய நான்கு பிரதான தலைப்புகளின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்பாட்டு அடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத தொன்மையான, தொடர்ச்சியான பாரம்பரிய வரலாறுண்டு. இந்நூலாசிரியை மறைந்துபோகும் எமக்குரிய பாரம்பரிய மரபு களையும், சடங்குகளையும், நம்பிக்கைகளையும், எமது பாரம்பரிய பாவனைப் பொருட்களையும் அவற்றிற்குரிய பழைமையான தமிழ் சொற்களையும் தனது ஆய்வினூடாக வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளார். சமகாலத்தில் எமது சமூகத்தால் மறக்கப்பட்டுவரும் தொட்டுணர முடியாத மரபுரிமைகள் (Intangible Heritage) பலவற்றை இந்நூலில் விரிவாகத் தொட்டுச் சென்றிருக்கிறார். நூலாசிரியை, யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாழைச் சேர்ந்தவர். அங்கு ஸ்ரீகணேச வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியையும் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்று, அங்கு உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

9258

யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும். எஸ்.சிவலிங்கராஜா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 201 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-421-8.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப் பேருரையாக வாசிக்கப்பட்டு யாழ்ப் பாணத் தினசரிப் பத்திரிகையில் தொடராக வெளிவந்த ஆய்வுக்கட்டுரையின் விரிவான வடிவம். பின்னர் வீரகேசரி பத்திரிகையின் மாத வெளியீடான கலைக் கேசரியில் தொடராக வெளியிடப்பட்டது. அத்தொடரின் நூல்வடிவமே இதுவாகும். அறிமுகம், உணவு, உறையுள், ஆடை அணிகலன், புழங்கு பொருட்கள், போக்கு

வரத்து, மொழிசார் பண்பாட்டுக் கூறுகள், ஆட்பெயர் வழக்காறுகள், உறவுமுறைச் சொற்கள், மரபுவழிச் சீர்மியம், பாரம்பரிய விளையாட்டுக்கள், பாரம்பரியத் தொழில்கள், திட்டுக்கள், யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப்பாடல்கள், யாழ்ப்பாணத்து வாய்மொழி இலக்கியம், யாழ்ப்பாணத்துக் கோயிற் திருவிழாக்கள், பிறப்பு முதல் ஏடு தொடக்குதல் வரையான சடங்குகள், பூப்பு நீராட்டற் சடங்கு, திருமணச் சடங்கு, மரணச் சடங்கு முறைமைகள், ஒப்பாரிப் பாடல்கள், யாழ்ப் பாணத்து வாழ்வியலிற் பஞ்சாங்கம் ஆகிய 22 தலைப்புகளில் இக்கட்டுரை விரிகின்றது. சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா தனது இளமாணி, முதுமாணிப் பட்டங்களையும் கலாநிதிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராக, துறைத் தலைவராகப் பணியாற்றுகின்றார்.

மேலும் பார்க்க: 9133

305 மானிட சமத்துவம்

9259

மின் ஊடகங்களில் பால்நிலை சமத்துவத்தைப் பேண கையாளப்படவேண்டிய ஒழுக்காற்று விதிகள். நிறைவேற்றுப் பணிப்பாளர் (பதிப்பாசிரியர்). கொழும்பு-6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

15 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12 சமீ.

தொலைக்காட்சி நிலைய முகாமையாளர்களுக்கும் கொள்கை வகுப்பாளர் களுக்கும் சில ஆலோசனைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களுக்கு உதவும் வழிமுறைகள், விளம்பரங்களை கொள்கைரீதியில் நெறிப்படுத்த பின்பற்றவேண்டிய வழிமுறைகள், ஊடகங்களில் பால்நிலைச் சமத்துவத்தைப் பேணுவதற்கான செயற்திட்டம் ஆகிய நான்கு சிறு இயல்களின் வாயிலாக இவ்வொழுக்காற்று விதிகள் பற்றிய ஆலோசனைகள் இந்நூலில் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இலங்கையில் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக தமிழ் சிங்கள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டுப் பெறப்பட்ட அவதானிப்புகளை ஆய்வுசெய்து அதன் அடிப்படையில் ஊடக முகாமையாளர்கள், ஊடகத் தொழில்புரிவோர், ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவில் ஆய்வின் பரிமாணங்கள் அலசி ஆராயப்பட்டன. தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், பிரித்தானிய பீ.பீ.சி. போன்றவற்றின் ஒழுக்காற்று விதிகளும் அங்கு பரிசீலிக்கப்பட்டன. அதன் பின்னர் உள்வாங்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் கருத்துக்களே இக்கட்டுரைகளாகும். இச்சிறுநூல் கனடிய சர்வதேச அபிவிருத்திப் பிரிவின் நிதியுதவியுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

305.31 ஆண்கள், ஆண்நிலைவாதம், ஆணாதிக்கம்

9260

ஆண் தலைமை ஆட்சி என்றால் என்ன? *கம்லா பஷின் (ஆங்கில மூலம்), புஷ்பா சிவகுமாரன் (தமிழாக்கம்). கொழும்பு-5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 425/15, திம்பிரிகஸ்யாய வீதி, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு-10: கருணாரத்ன அன் சன்ஸ்).*

(2), 74 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 *சமீ.*

What is Patriarchy? *என்ற தலைப்பில்* Kamla Bashin *அவர்களால் எழுதப் பெற்று 1994இல் டெல்லியிலிருந்து* Kali for Woman *என்ற அமைப்பினால் வெளியிடப் பெற்ற நூலின் தமிழாக்கம் இதுவாகும். பெண்ணிலைவாதம் தொடர்பான சில பிரச்சினைகளும் தென் ஆசியாவில் அதன் பொருத்தமுடைமையும் என்ற மிகப் பிரபல்யமான நூலின் ஆசிரியர் எழுதிய இச்சிறுநூலில், துல்லியமான, எளிதில் கிரகித்துக்கொள்ளக்கூடிய நடையில் ஆண் தலைமை ஆட்சிச் சமுதாய முறைமை யின் பல்வேறு இழைகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கேள்வி-பதில் வடிவில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன. பெண்கள் கீழ்ப்படிவானவர்களாக இருக்கின்றார்கள் என்ற பெண்ணிலைவாதிகளின் சிந்தனைப் பகுப்பாய்வைக் கொண்டு ஆண் தலைமை ஆட்சிச் சமுதாய முறைமையை இச்சிறு நூல் அறிமுகம் செய்கின்றது. பெண் அடிமைத்தனம் எவ்வாறு அமைகின்றது? எவ்வாறு தோன்றியது? எவ்வாறு வரலாற்றுரீதியாக உலகின் பல பாகங்களிலும் அது உருவாகியதென்பதையும் இந்நூல் விளக்குகின்றது. ஆண் தலைமை ஆட்சிச் சமுதாய முறைமையானது, முக்கியமான சமூக நிறுவனங்களையும் அரசியல் நிறுவனங்களையும் கட்டுப் படுத்துவதன் மூலம் பெண்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டும் விஷேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இவற்றுக்கெதிராக, சமூக மாற்றங்கள் கோரிப் பெண்கள் மேற்கொண்ட போராட்டங்களை இனங்காண்பதற்கும் இந் நூல் முயல்கின்றது. நூலாசிரியர் புதுடில்லியிலுள்ள உணவு விவசாய அமையத்தின்* (FAO) *வறுமை ஒழிப்பு இயக்கம்/அபிவிருத்திக்கான செயற்பாடு என்ற பிரிவில் கம்லா பாஷின் பணிபுரிகிறார். பெண்கள் இயக்கங்களில் தீவிர ஈடுபாடுடைய இவர், மகளிரும் அபிவிருத்தியும், மகளிரும் ஊடகங்களும், மகளிரும் கல்வியும் பற்றி விரிவான முறையில் எழுதியிருப்பதுடன் சிறுவர்களுக்கான பாடல்களையும் நூல்களையும் எழுதியிருக்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 17905).*

9261

ஆண் நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல். *கம்லா பஹாசின் (மூலம்) மு.பொன்னம்பலம் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் றெரஸ், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (கொழும்பு 6: டெக்னோபிரின்ட், 55, டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை).*

(4), 90 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 *சமீ.,* ISBN: 955-9102-81-8.

கம்லா பஹாசின் 2004இல் எழுதிய Exploring Masculinity என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு இதுவாகும். இந்நாட்களில் எல்லோரும் ஆண்நிலை இயல்புபற்றி ஏன் கதைக்கிறார்கள்? அதன் மூலம் நாம் எதைக் கருதுகின்றோம்? ஒரே வகையான ஆண்நிலை இயல்புதான் இருக்கிறதா அல்லது அனேக ஆண் நிலை இயல்புகளுக்கு நாங்கள் முகம்கொடுக்கவேண்டுமா? மிகத் துலக்கமுடன் எழுதப்பட்டுள்ள இப்பிரசுரம் ஆண் நிலை இயல்பின் கருத்து, பால்நிலைத் தொடர்புகள், சமூக ஒழுங்குகள், அரசியல் பொருளாதார முறைமைகள், சமய குடும்பக் கோட்பாடுகள் ஆகியவை தொடர்பான அதன் முக்கியத்துவம் பற்றி ஆழமான தேடுதலை மேற்கொள்கின்றது. அது மேலோங்கிய ஆண்நிலை இயல்பு, பேராண்மை ஆண்நிலை இயல்பு, தொழிலாளர் முதலாளித்துவ ஆண்நிலை இயல்பு ஆகியவற்றில் தன் பார்வையைச் செலுத்துகின்றது. நூலாசிரியர் இருபது வருடங்களுக்கும் மேலாக FAOவின் பசியிலிருந்து விடுதலை என்ற பிரச்சார அமைப்போடு வேலை செய்தவர். அத்தோடு நன்கு அறியப்பட்ட பால்நிலைத்துறை பயிற்றுநருமாவார்.

305.4 பெண்கள், பெண்ணியம், பெண்ணிலைவாதம்

9262

சமாதான முயற்சிகளில் பால்நிலை பிரதிநிதித்துவம். டில்ருக்ஷி பொன்சேகா (ஆங்கில மூலம்), நவாலியூர் நடேசன் (தமிழாக்கம்). கொழும்பு-6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

x, 29 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையுடன் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்ற ஐவரின் பங்களிப்புடன் ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட ஐந்து நூல்களில் ஒன்று இதுவாகும். இந்நூலில் ஒரு சமாதான நிகழ்வுத் தொடரில் பால்நிலை சார்ந்த பிரதிநிதித்துவப்படுத்துகை பற்றி நாம் என்ன அர்த்தம் கொண்டுள்ளோம், யுத்தகாலத்தில் சாதாரணமாக நிகழும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளையும் அதன் அர்த்தத்தையும் நாம் எவ்வாறு விளங்கிக் கொள்ளலாம்/விளக்கலாம், சமாதான நிகழ்வுத் தொடர்களில் பால்நிலை சார்ந்த பிரதிநிதித்துவப் படுத்துகையை மேம்படுத்துவதற்கு தடைகள் என்ன?, இலங்கையில் பால்நிலை சார்ந்த பிரச்சினைகளுக்கான உபகுழு சமாதான நிகழ்வுத் தொடரில் பால்நிலை சார்ந்த பிரதிநிதித்துவப் படுத்துகைக்கு எதிரான சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளும்? இலங்கையில் சமாதான நிகழ்வுத் தொடரில் பால்நிலை சார்ந்த விடயம் பற்றி நாம் என்ன முடிவுகளுக்கு வரலாம்? ஆகிய ஐந்து கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கான தெளிவான கருத்துக்கள் பதிலாக வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40415).

9263

சீடோவின் நிழலாக அரசைக் கண்காணித்தல். சூலனி கொடிகார, குமுதினி சாமுவேல், சேபாலி கோட்டேகொட (ஆசிரியர் குழு). கொழும்பு 8: பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு, 174, அல்விஸ் அவென்யூ, காசல் வீதி, 1வது பதிப்பு, ஆனி 2011. (கொழும்பு-10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ், 5, ஸ்டோக் பிளேஸ்).

v, 110 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x17 சமீ., ISBN: 978-955-1770-08-2.

பெண்களுக்கெதிரான எல்லாவகையான பாரபட்சங்களையும் இல்லாதொழிப்பதன் மீதான சமவாயம் என்ற பெயரில் இலங்கை அரசசார்பற்ற நிறுவனங்களால் தொகுக்கப்பட்ட நிழல் அறிக்கையும், படிமுறைப்படுத்தப்பட்ட தகவல்களும் கேள்விகளும் மற்றும் வேறு ஆவணங்களும் உள்ளடங்கிய பிரசுரம் இதுவாகும். இந்நூலை தமிழாக்கம் செய்வதில் எஸ்.சிவகுருநாதன், ஆர்.சுரேஸ்வரன், எம். மர்சூக், சர்வம் கைலாசபதி, பவித்ரா கைலாசபதி, குகநிதி குகநேசன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். CEDAWவிற்கான இலங்கை நிழல் அறிக்கை முகவுரை, நிறைவேற்றுச் சுருக்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து சமத்துவம் (உறுப்புரை 2), அரசியல் பங்கேற்பும் பிரதிநிதித்துவமும் (உறுப்புரை 7), கல்வி (உறுப்புரை 10), தொழிலாளர் (உறுப்புரை 11), சுகாதாரம் (உறுப்புரை 13), கிராமியப் பெண்கள் (உறுப்புரை 14), சட்டத்தின் முன் சமத்துவம் (உறுப்புரை 15), திருமணமும் குடும்ப உறவுகளும் (உறுப்புரை 16), பொதுவான விதிப்புரைகள் 19, பெண்களுக் கெதிரான வன்முறை, பெண்களும் ஆயுத முரண்பாடும் படிமுறைப்படுத்தப்பட்ட தகவல்களும் கேள்விகளும், பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப் பினரால் வழங்கப்பட்ட பதிலளிப்பு, பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்கான குழுவின் முடிவான அவதானிப்புகள் ஆகிய தலைப்பு களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9264

நோக்கிலான பெண்கள். சென்வோர். கொழும்பு 5: பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்), 225/4, கிருள வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு-5: பெண்கள் ஆராய்ச்சி நிலையம், 225/4, கிருள வீதி).

(6), 168 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9052-93-4.

ஆசிய மன்றத்தினால் நிதிப்படுத்தப்பட்ட வெளியீடு. இவ்வெளியீட்டில் அடக்கப் பட்டுள்ள கட்டுரைகள் பெண்களுக்கு கரிசனைமிக்க ஆறு துறைகள்மீது, இத்தகைய பிரச்சினைகளில் பிரஜைகளின் விழிப்புணர்வை ஊட்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது. கல்வியும் பயிற்சியும் (சுவர்ணா ஜயவீர), பெண்களும் சூழல் விளைவுகளும் (கமினி மீதெனிய விதாரண), இலங்கையில் பெண்களும் ஆயுதப் பிணக்கும் (குமுதினி சாமுவேல்), சிறுவர் துஷ்பிரயோகம் (கமீனா குணரத்ன), பெண்களுக்கு எதிரான வன்முறை (குமுதினி சாமுவேல்), பெண்களும் ஊடகமும் (சுனிலா அபேசேகர) ஆகிய ஆறு கட்டுரைகள் இதில் அடங்குகின்றன. (இந்

நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48022).

9265

பாரதியின் பெண் விடுதலை: இலக்கியம்-கருத்து-காலம். சித்திரலேகா மௌனகுரு. மட்டக்களப்பு: விபுலம் வெளியீடு, 7, ஞானசூரியம் சதுக்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1996. (தெகிவளை: டெக்னோ பிரின்ட், 83, ஆஸ்பத்திரி வீதி, களுபோவிலை).

(6), 58 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தென்னாசியாவில் பெண்களது தாழ்த்தப்பட்ட நிலை பற்றியும் அதில் முன்னேற்ற கரமான மாற்றங்களை ஏற்படுத்துவது பற்றியும் 19ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து அக்கறை காட்டிய எழுத்தாளர்களில் சுப்பிரமணிய பாரதியார் மிக முக்கியமானவர். பெண்ணுடைய வாழ்க்கை, அவளது அந்தஸ்து நிலை, அவள் பற்றிய சமூகநோக்கு ஆகியவற்றில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படவேண்டும் என பாரதியார் மிகவும் வற்புறுத்தி வந்தார். பாரதியின் சமகாலத்தில் உலகின் பல்வேறு பாகங்களிலும் நடந்தேறிய நிகழ்வுகள் பாரதியின் இக்கருத்துக்களுக்கு வலுவூட்டுவனவாக அமைந்துள்ளன. அவற்றைக் கோடிட்டுக்காட்டுவதும் தமிழ்ச் சூழலில் பாரதியை அவரது சமகாலத்தவருடன் ஒப்பிடுவதன்மூலம் அவரது தனித்தன்மையை வெளிப்படுத்துவதும் இச்சிறுநூலின் நோக்கமாகும். இவ்வகையில் நூலாசிரியர் எழுதிய பாரதியின் பெண் விடுதலை: காலமும் கருத்தும், பாரதியும் பெண் விடுதலையும், சுப்பிரமணிய பாரதியும் பெண் விடுதலைக்கு உழைத்த சீனத்து ஜியுஜினும், துரையப்பாபிள்ளையும் பாரதியாரும்: சமகாலக் கருத் தோட்டங்களில் ஒற்றுமையும் முரண்பாடும் ஆகிய நான்கு விரிவான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சித்திரலேகா மௌனகுரு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறையின் பேராசிரியராவார்.

9266

புரையை அகற்றாமல் புற்றுநோய்க்கு வைத்தியமா? நய்லா கபீர் (ஆங்கில மூலம்), ஸ்டெலா விக்டர் (தமிழாக்கம்). மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், இல.20, டயஸ் ஒழுங்கை, 1வது பதிப்பு, 2007. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).

iv, 39 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 25x18 சமீ., ISBN: 978-955-8695-02-9.

அபிவிருத்தியில் பெண்கள் என்ற கருத்தாக்கத்தின் கோட்பாட்டுப் பின்புலங்கள் பற்றிய இவ்வுரை ஆங்கிலத்தில் “Treating Cancer with Bandaid? The Theoritical Underpinnings of Women in Development Translation of Reversed Realities Gender Hierarchies in Development Thought” என்ற தலைப்பில் நய்லா கபீர் (Naila Kabeer) அவர்களால் ஆற்றப்பட்ட உரையின் தமிழாக்கமாகும். நய்லா கபீர் சசெக்ஸ் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்தி கற்கைகள் நிறுவனத்தின் அங்கத்தவர். இவர் பங்களாதேஷ், இந்தியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் பால்நிலை அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் செயலாற்றியுள்ளார். அபிவிருத்தியானது பெண்களை வேலைச்

சுமையிலிருந்து விடுவிப்பதுடன் வீட்டில் தனித்திருப்பதிலிருந்து பெண்களை வெளியில் கொண்டுவந்து முழுமையான மனிதஜீவியாகும் வாய்ப்பைத் தருகின்றது. ஆண்களைப் போன்ற வழிகளில் பெண்களும் தமது மனங்களையும் திறமைகளையும் செயற்படச் செய்கின்றது. பொருளாதார வளர்ச்சியானது ஆண்களுக்குச் சாதகமானதா அல்லது பாதகமானதா எனும் வாதத்தை நடத்த கதவுகளைத் திறந்து விடுகின்றது. ஆனால் பெண்களுக்கோ பொருளாதார வளர்ச்சி பற்றிய விவாதமானது, பெண்கள் விலங்குகள் போல் சுமைகளை சுமப்பதிலிருந்து விடுபட்டு மனித இனத்தில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது பற்றிய விவாதமாகும். இதனை இவ்வுரை விளக்கமாகப் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 50560).

9267

பெண் என்றால்: செயற்பாட்டு எழுத்தறிவிற்கான கைநூல் 3. திலகா விவேகானந்தன். கொழும்பு-5: பெண்கள் ஆராய்ச்சி நிலையம் (சென்வோர்), 12-1/1 அஸ்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1995. (கொழும்பு 10: யூனிவோக்கர் பக்கேஜிங் லிமிட்டெட், 114, நொரிஸ் கனால் வீதி).

14 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 955-9052-35-7.

ஓவியர் ரஜினி கணேசரட்ணத்தின் விளக்க ஓவியங்களுடன் வெளிவந்திருக்கும் இந்நூல், பெண்களின் எழுத்தறிவினை விருத்திசெய்வதனை நோக்காகக் கொண்டு சென்வோர் செயற்பாட்டு எழுத்தறிவிற்கான கைநூல் தொடரில் மூன்றாவதாக வெளியிடப்பட்டதாகும். ஆண்-பெண் சமத்துவத்தை வலியுறுத்தும் கருத்துக்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. எமது சமூகங்களில் பாரம்பரியமாக உள்ள நம்பிக்கைகள், நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஒரு நவீன அணுகுமுறையில் நோக்கும் எண்ணத்துடன் தலையங்கங்கள் தேர்வுசெய்யப் பட்டுள்ளன. இக்கதை வீட்டில் பெண்கள் கணவன்மாரால் கொடுமைப்படுத்தப் படுவதையும் அதனால் குடும்பத்தில் ஏற்படும் கஷ்டங்களையும் விளக்குகின்றது.

9268

பெண் விடுதலையும் சமூக விடுதலையும். புதிய பூமி. கொழும்பு 11: புதியபூமி வெளியீட்டகம், சவுத் ஏஷியன் புக்ஸ், வசந்தம் பிரைவேற் லிமிட்டெட், 47, மூன்றாம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2002. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

vi, 91 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 21.5x14 சமீ.

புதியபூமி வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூலில் பெண்கள் இயக்கத்திற்கு என்ன நடந்தது? என்ற ஆங்கில மூலக்கட்டுரை முதலாவதாக உள்ளது. பாரொ எப்ஸ்ரைன் எழுதிய இக்கட்டுரையை பேராசிரியர் சி.சிவசேகரம் தமிழாக்கம் செய்துள்ளார். தொடர்ந்து சிவசேகரம் எழுதிய மாக்சியமும் பெண்ணியமும்

இலங்கையிற் பெண்ணுரிமையும் என்ற கட்டுரையும், க.தணிகாசலம் எழுதிய பெண் விடுதலை வேண்டும், சீதனமும் பெண்ணடிமையும் ஆகிய இரு கட்டுரைகளும், வெகுஜனன் எழுதிய பெண் விடுதலைக்கான இயக்கம் என்ற கட்டுரையும், ந.இரவீந்திரன் எழுதிய பண்பாட்டுத் தளத்தில் பெண் ஒரு முன்னுரை என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. இறுதியாக சோ.தேவராஜா எழுதிய நாம் என்ன செய்யவேண்டும் என்ற கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. மேற்குறிப்பிட்ட ஏழு கட்டுரைகளும் பெண்நிலைவாதம் சார்ந்தவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 188885).

9269

பெண்களும் தொடர்பு ஊடகங்களும். சாந்தி சச்சிதானந்தம் (பதிப்பாசிரியர்). கொழும்பு-8: முஸ்லிம் மாதர் ஆராய்ச்சி செயல் முன்னணி, 159, கின்சி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1991. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

x, 112 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ.

ஜனவரி 1990, 19/21ம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர்களுக்கான கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு. அன்பெரியா ஹனீபாவின் வரவேற்புரையுடன் தொடங்கிய இக் கருத்தரங்கு ஆறு அமர்வுகளில் இடம்பெற்றுள்ளது. தமிழ் இலக்கியமும் பெண்களும்: சில சவால்கள் (மௌ.சித்திரலேகா), காண்பதும் கேட்பதும்: வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பெண்களின் உருவகங்கள் (சாந்தி சச்சிதானந்தம்), பால் அடிப்படையில் அமைந்த தொழிற் பாகுபாடு (மௌ.சித்திரலேகா), வெளிநாட்டுச் செலாவணிச் சம்பாத்தியத்தில் பெண்களின் பங்களிப்பும் சமுதாயத்தில் அவர்கள் பெறும் கணிப்பும் (சிரோன்மணி இராஜரத்தினம்), பெண்களும் இம்சையும்: ஒரு கலந்துரையாடல் (யோகா பாலச்சந்திரன்) ஆகிய ஐந்து கட்டுரைகள் ஐந்து அமர்வுகளிலும் வாசிக்கப்பட்டதையடுத்து அமர்வு ஆறு குழுநிலை விவாதமாகவும், வினா விடை நிகழ்வாகவும் அமைந்தது. இவை அனைத்தும் இத்தொகுப்பில் எழுத்துருவில் இடம்பெற்றுள்ளன.

9270

மலையக மக்களுடைய இனத்துவ இருப்பில் பால்நிலை. கமலினி கணேசன். கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, ஆனி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 253 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ.

மூன்று பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வின் முதற்பகுதியில் மலையகப் பெண்கள் என்ற பொருள் வகுப்பு, ஆய்வின் முறையியலும் ஆய்வனுபவமும், கடந்தகால ஆய்வுகளும் அவற்றின் தாற்பரியமும் ஆகிய மூன்று விடயங்கள் பேசப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் மலையக மக்களும் இனத்துவமும், மாறிவரும் மலையகமும் பெண்களும் ஆகிய இரு விடயங்களும், மூன்றாம் பகுதியில் அரசியற் பொருளாதாரமும் பால்நிலையும், பால்நிலைக் கருத்தியற்பாற்பட்ட தொழிற்படி முறைமை, கட்டுப்பாடுகளும் அடக்குமுறைகளும்

அர்த்தப்படல், வேலை: காலநேரமும் ஊதியமும்: ஒரு பால்நிலைக் கணிப்பீடு, குடும்ப அமைப்பில் பால்ரீதியான தொழிற்பிரிவு, தொழிற்சங்கங்களும் பெண் தொழிலாளர்களும் வரலாறு, தொழிற்சங்கங்களின் இயக்கமும் அவற்றில் பெண்களின் இருப்பும் ஆகிய விடயங்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39487).

9271

மாற்றுச் சிந்தனையும் விரிபடு களமும். *செல்வி திருச்சந்திரன். கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

vi, *206 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 22x14 *சமீ.,* ISBN: 955-9261-32-0.

சமூக அரச நிலைகளினூடு வேறுபட்டு விளங்கும் பால்நிலைத் தோற்றங்கள்: ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம், பெண் வெறுப்பும் அவற்றின் ஐதீக வெளிப் பாடுகளும், தமிழ் இலக்கியத்தில் பெண் வெறுப்பு-ஓர் விளக்கம், மொழியும் ஆண்வழிச் சமூக அமைப்பும், கிழக்கு இலங்கையில் யுத்தகாலத்தில் பெண்களின் குடும்பமும் வீடுசார் கட்டமைப்பும் சிதைவுறுகின்றனவா அல்லது மீளமைக்கப் படுகின்றனவா?, பெண்மை தொடர்பான கருத்தியலில் பெண்ணின் பாலுணர்ச்சி, பெண்களினது ஆளுமை விருத்திக்கு மனித உரிமைகள் பற்றிய பிரக்ஞையும் விளக்கமும், புதிய கொம்யூனிஸ்ட் பிரகடனம் ஒன்றிற்கான தேவையை நோக்கி, நவீனத்துவப் பெண்ணியத்தை விளங்கிக்கொள்ள ஆகிய தலைப்புகளில் அமைந்த ஒன்பது கட்டுரைகளையும், முறியாத சங்கிலித் தொடர்: யாழ்ப்பாண சீதனமுறை பற்றிய ஆய்வு, வாழ்தல் என்பது மீதான அனுபவப் பகிர்வு, பெண் நிலைவாத விமர்சனக் கண்ணோட்டத்தில் மங்களநாயகம் தம்பையாவின் நொருங்குண்ட இதயம்- ஒரு மீள்பார்வை ஆகிய மூன்று நூல் விமர்சனக் கட்டுரைகளும், தேடல், புரிந்தால் சரி, உரிமை கற்பு அரசி, மதமும் பெண்ணும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட சிந்தனைச் சிதறல்களும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவை செல்வி திருச்சந்திரன் அவ்வப்போது ஊடகங்களுக்கு எழுதிய கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 34959).

9272

வாழ்வியல் சமதர்ம கோட்பாடுகளுடன் முரண்பட்டு நிற்கும் மேட்டுநிலை பண்பாட்டுக் கோலங்கள்: ஒரு பெண்நிலை விசாரணை. *செல்வி திருச்சந்திரன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

viii, *102 பக்கம், விலை: ரூபா 200., அளவு:* 22x14 *சமீ.,* ISBN: 955-9261-30-4.

இந்நூல் ஆண்-பெண் என்னும் பால் அடிப்படையில் எழுந்த தொழிற்பாகுபாடு உயிரியல் இலக்கணரீதியாகவா அல்லது பண்பாட்டின் அடிப்படையிலானதா? சமூகவியல் நோக்கில் ஒரு விமர்சனரீதியான ஆய்வு (செய்தி உதயகலா ஐயாத்துரை), பால்நிலை அடுக்கமைவு ஒரு மானிடவியல் நோக்கு (பகீரதி ஜீவேஸ்வரா), பண்பாடு, குடும்பம், பெண்நிலைவாத முரண்பாடுகள் (ஜானகி சங்கரப்பிள்ளை), இந்துப் பண்பாட்டில் பெண்களின் பரிணாம வளர்ச்சி (கலாநிதி சே. அனுசூயா), செ.கணேசலிங்கனின் நாவல்களில் பெண்கள் (செ.யோகராசா), பெண்களுக்கு இழைக்கப்படும் குடும்ப வன்செயல்கள் இனங்காணலும் தீர்வுகாணலும் (வை. கா.சிவப்பிரகாசம்) ஆகிய ஆறு ஆய்வுக்கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 9260

305.5 சாதியம்

9273

தென்னிந்தியக் குடிகளும் குலங்களும். *ந.சி.கந்தையா. சென்னை 1: காமராஜ் பதிப்பகம், 1, கந்தப்பன் தெரு, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1999, 1வது பதிப்பு, ஜனவரி 1938. (சென்னை: உதயம் அச்சகம்).*

xii, *148 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு:* 20x13.5 *சமீ.*

மக்களினம் சம்பந்தமான ஆய்வுக்குப் பயன்படும் இந்நூல் அரைநூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலத்தில் வெளிவந்த நூல்களைத் தழுவிச் சுருக்கி எழுதப்பட்டதாகும். தென்னிந்திய மக்களின் பொதுவான பழக்க வழக்கங்களைக் கூறுவதுடன், ஒவ்வொரு கூட்டத்தினரிடையேயும் உள்ள தனித்துவமான பழக்கவழக்கங்களை விரிவாக இந்நூல் கூறுகின்றது. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், வட இந்தியக் குலங்களும் குடிகளும் ஆகிய இரு இயல்களைத் தொடர்ந்து மூன்றாவது இயலாக ஆசிரியர் இலங்கைத் தமிழர் பழக்கவழக்கங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இப்பிரிவில் திருமணம், மரணம், புத்தளம் கரையார், அணிவகை, ஆடவர் அணிபவை, பெண்கள் அணிகள், இலங்கைத் தமிழரிடையே காணப்படும் சாதிகள், மாட்டுக் குறிசுடும் அடையாளங்கள், சாதிகளின் பட்டப்பெயர்கள் ஆகிய உப தலைப்புகளில் இப்பிரிவு விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 46001).

320 அரசறிவியல்

9274

அரசறிவியல்: எவ்வாறு வினாக்களுக்கு விடை அளிப்பது. *ஆனந்தராஜன் கியுபேட். யாழ்ப்பாணம்: ஆனந்தராஜன் கியுபேட், அரசறிவியல் விரிவுரையாளர்,*

புதிய உயர் கல்லூரி, 1வது பதிப்பு, மார்ச் 2004. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

வினாவிடை வடிவில் விளக்கப்பட்டுள்ள இந்நூல் க.பொ.த. உயர்தர வெளிவாரி கலை முதல் தேர்வு (ஜீ.ஏ.கியூ) மாணவர்களுக்கு உதவும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. வினாக்களுக்கு எவ்வாறு விடை அளிப்பது என்பது தொடர்பாகவும் இந்நூல் விபரிக்கின்றது. வினாக்களுக்குப் பொருத்தமாக விடைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற குறிப்பும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. இவ்வாறான அமைப்பில் மாணவர்கள் கூடிய விபரங்களைத் தொகுத்து எழுதுவதன் மூலமாக அதிகூடிய புள்ளிகளைப் பெறமுடியும் என்பது ஆசிரியரின் நம்பிக்கையாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 33386).

9275

அரசியல் விஞ்ஞான கோட்பாடுகள் நிறுவனங்கள். ச.எரிக் கென்றிசன் (நிலான்). மன்னார்: ச.எரிக் கென்றிசன், முருங்கன்பிட்டி, முருங்கன், 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

vi, 126 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கும், பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் உகந்ததாக வினா-விடைமூலம் கற்றல் என்ற உத்தியைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ள நூல். இதன் முதற்பகுதியில் 21 தலைப்புகளின் கீழ் அரசியல் விஞ்ஞான கோட் பாடுகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்ததாக பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, முன்னாள் சோவியத் குடியரசு, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, சீனா ஆகிய நாடுகளின் அரசியலமைப்புக்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. இறுதிப் பிரிவில், UNO, SAARC, கொமன்வெல்த், ஆசிய அபிவிருத்தி வங்கி, ஒபெக், அணி சேரா நாடுகளின் அமைப்பு, ஐரோப்பிய பொருளாதார சமூகம், வட அத்திலாந்திக் உடன்படிக்கை ஸ்தாபனம் (நேட்டோ) ஆகிய சர்வதேச நிறுவனங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. கலைச்சொற்றொகுதி ஒன்றும் பின்னிணைப்பில் காணப் படுகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 51381).

9276

குடிஇயலும் அரசியலும்: முதலாம் பாகம். ஏ.ஜே.வில்சன் (ஆங்கில மூலம்), நவாலியூர் சோ.நடராசா (தமிழாக்கம்). பேராதனை: ஏ.ஜே.வில்சன், இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 1965. (கொழும்பு 2: வரையறுக்கப்பட்ட கொழும்பு கூட்டுறவு அச்சகம், 72, கியூ வீதி).

(8), 206 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு 21x14 சமீ.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் சாத்திர விரிவுரையாளர் கலாநிதி ஏ.ஜே.வில்சன் அவர்கள் இயற்றிய இந்நூல், குடிஇயல் படிப்பிப்பதற்கு ஒரு

பாடப்புத்தகமாக க.பொ.த.வகுப்பில் உபயோகிப்பதற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இந்நூலில் இலங்கை மக்கள், இலங்கைச் சமூகம்-அதன் வளர்ச்சியும் செறிவும், கூட்டு வாழ்க்கை, சட்டமும் ஒழுங்கும், சனசமூகத்தின் தேவைகள், கூட்டுறவு, இலங்கையின் அரசியல் வளர்ச்சி, பொதுநலவாயத்துக்கு உட்பட்ட நாடுகள், குடியேற்ற நாட்டந்தஸ்து என்பதன் பொருள், பொதுநலவாய நாடுகள் தம்முட் கலந்தாலோசித்தல் ஆகிய 10 தலைப்புகளின் கீழ் விளக்கமளிக்கப் பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30722).

324 தேர்தல்கள்

9277

இலங்கை அரசியல் வரலாறும் பதின்மூன்றாவது பொதுத் தேர்தலும். எஸ். அரசரெத்தினம். கல்முனை 02: எஸ்.அரசரெத்தினம், ராஜ்பதி, வ.வீ.ரோட், 1வது பதிப்பு, ஜூலை 2004. (கல்முனை: குட்வின் ஒப்செட் அச்சகம்).

v, 105 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் அரசியல் வரலாறு, பன்னிரெண்டாவது பாராளுமன்றக் கலைப்பு, பதின்மூன்றாவது பொதுத் தேர்தலும் பங்குபற்றிய கட்சிகளும், மாவட்டங்களும் வேட்புமனுக்களும், தேர்தல் விஞ்ஞாபனங்களும் பிரச்சாரங்களும், வாக்களிப்பு முறையும் அங்கத்தவர் தெரிவும், தேர்தல் முடிவுகளும் காரணங்களும், புதிய அரசாங்கமும் பொறுப்புகளும் ஆகிய எட்டு இயல்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. நூலாசிரியர் முன்னதாக வளமான வாழ்வைத் தேடி, விழிகளால் கதைகள் பேசி, இலங்கைப் பாராளுமன்ற அரசியலும் பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலும் ஆகிய நூல்களை எழுதியவர். இது இவரது நான்காவது நூலாகும். தீவிர வாசிப்புத் தேடல் கொண்ட நூலாசிரியர் அரச வங்கியொன்றின் அதிகாரியாகப் பணியாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 50523).

9278

இலங்கைப் பாராளுமன்ற அரசியலும் பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலும். எஸ்.அரசரெத்தினம். கல்முனை 2: எஸ்.அரசரெத்தினம், ராஜ்பதி, வ.வீ.வீதி, 1வது பதிப்பு, சித்திரை 2002. (கல்முனை: கோல்டன் ஒப்செட் அச்சகம்).

104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18x14 சமீ.

இந்நூல் இலங்கைப் பாராளுமன்ற அரசியல் வரலாறு என்ற முதலாவது இயலுடன் தொடங்கி, பதினொராவது பாராளுமன்றக் கலைப்பு, பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலும் பங்குபற்றிய கட்சிகளும், மாவட்டங்களும் வேட்பு மனுக்களும், தேர்தல் விஞ்ஞாபனங்களும் பிரச்சாரங்களும், தேர்தல் வன்முறைகளும் பின்னணிகளும், தேர்தல் முடிவுகளும் காரணங்களும், புதிய அரசும் பொறுப்புகளும் ஆகிய தலைப்புக்களில் மொத்தம் எட்டு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

பதினொராவது பாராளுமன்றம் தனது ஆயுட்காலத்திற்கு முன்னதாகவே கலைக்கப் பட்டதன் காரணங்களை விரிவாக இரண்டாவது இயலில் ஆசிரியர் ஆராய்கின்றார். மூன்றிலிருந்து ஐந்தாவது வரையிலான அத்தியாயங்களில் தேர்தலில் போட்டி யிட்ட அரசியல் கட்சிகள் பற்றியும் தேர்தல் வரை அவற்றின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்கின்றார். பொதுத்தேர்தலின் பொழுது இடம்பெற்ற வன்முறைகள் பற்றி ஆறாவது இயலில் பட்டியலிடும் ஆசிரியர் பின்னைய இறுதி இரு இயல்களில் பொதுத்தேர்தல் முடிவுகள் பற்றியும், புதிய அரசுக்குள்ள பொறுப்புக்கள் பற்றியும் எடுத்துக் கூறுகின்றார். வளமான வாழ்வைத்தேடி (சமூகவியல்), விழிகளால் கதைகள் பேசி (இலக்கியம்) ஆகிய நூல்களை முன்னர் எழுதியுள்ள ஆசிரியரின் மூன்றாவது நூல் இது. தீவிர வாசிப்புத் தேடல் கொண்ட நூலாசிரியர் அரச வங்கியொன்றின் அதிகாரியாகப் பணியாற்றுகிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 29019).

325 சர்வதேச புலப்பெயர்வுகள், காலனித்துவம்

மேலும் பார்க்க: 9986

327 சர்வதேசத் தொடர்புகள்

9279

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை: 1948-2010. கே.ரீ.கணேசலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 118 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-436-2.

அரசியல் வரலாற்று நோக்கை அடிப்படையாகக் கொண்டு, வெளியுறவுக் கொள்கை: ஓர் அறிமுகம், சுதந்திரத்தின் பின் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை (1948-1977), திறந்த பொருளாதாரக் கொள்கையின் கீழ் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை:1977-1986 வரையான காலம், புதிய உலக ஒழுங்கும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும்: 1989-2002, சமாதானப் பேச்சுவார்த்தையும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையும்: 2002-2010 ஆகிய ஐந்து பிரதான அத்தியாயங்களைக் கொண்டதாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயமும் வரலாற்றின் முதன்மையை நிலைப்படுத்தியிருப்பதுடன் அக்காலகட்டத்தில் ஆட்சிபுரிந்த தலைமையையும் அரசாங்கத்தை அமைத்த கட்சியையும் சார்புநிலைக் காரணியாகக் கொண்டுள்ளது. வரலாற்றை அப்படியே ஒப்புவிக்காது, தர்க்கத் தையும், விமர்சனத்தையும் அவற்றின் தேவை கருதி வெளிப்படுத்தியுள்ளது. கே.ரீ. கணேசலிங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை கிராமத்தில் பிறந்தவர். ஆசிரியராகவும், ஊடகவியலாளராகவும் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் அரசியல் விஞ்ஞானத்தை சிறப்புப் பாடமாகக் கற்றவர். 2001 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகின்றார்.

9280

கழுகு நிழல்: கட்டுரைத் தொகுதி. கோவை நந்தன். பாரிஸ்: நிச்சாமம் பதிப்பகம், 1வது பதிப்பு, ஜனவரி 2013. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

310 பக்கம், விலை: இந்திய ரூபா 195., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம் கோப்பாயில் பிறந்து, ஈழவிடுதலைப் போராட்டத்தில் இணைந்து பின்னாளில் பாரிசில் புலம்பெயர்ந்து வாழும் கோவை நந்தனின் 45 அரசறிவியல் கட்டுரைகளின் தொகுப்பு இது. பல்வேறு நாடுகளில் பல தளங்களில் ஏற்பட்ட அதிர்வுகளையும் ஆச்சரியங்களையும், கொடுமைகளையும், மோசடிகளையும், முகத்திரைகளையும் தன் பார்வையில் விமர்சனமாகப் பதிவுசெய்திருக்கிறார். இவை தினமுரசு, தமிழ் லெமூரியா ஆகிய பத்திரிகைகளிலும் எறிகணை, தேனீ, எங்கள் தேசம், சலசலப்பு ஆகிய இணையத் தளங்களிலும் வெளியானவை. போலித்தனமான மேற்பூச்சற்ற வகையில் ஈழத்தமிழரின் யதார்த்த அரசியல் விழிப்புணர்வில் அக்கறைகாட்டுவதுடன் மட்டும் நில்லாது சர்வதேச நிலைமைகளையும் தமிழ்மக்களின் அறிவுத்தேடலுக்காக முன்வைக்கின்றார். அமெரிக்க மேலாதிக்க நோக்கங்களை பல கட்டுரைகளில் பட்டியலிடும் இவர் அதே நோக்கில் பொதுவுடைமை ஆட்சியில் கேரளம் முல்லைப் பெரியாறு அணையில் நடந்தகொண்ட முறைமையைச் சாடுகிறார். பண்டைய நூபியா என்ற இன்றைய தென் சூடான் நாடு புதிதாக அமைந்த காரணங்கள், ருவாண்டாவின் இனப் படுகொலைகளின் பின்னணி என ஆபிரிக்க நிகழ்வுகளையும் அலசுவதுடன் ராஜீவ் காந்தியின் கொலையில் அராஜகப் பின்னணி இருந்ததையும் காட்டுகிறார். பரந்த உலக அறிவை அறிந்து தமது சிந்தனையை விரிவாக்க முனையும் தமிழ் வாசகரை நோக்கியதாக இக்கட்டுரைத்தொகுப்பு அமைகின்றது.

330 பொருளியல்

9281

1981-1985 ஆண்டுகளுக்கும் 1990இல் முடிவடையும் காலகட்டத்திற்கும் சோவியத் யூனியனின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கான வழிகாட்டுநெறிகள். என்.ஏ. திக்கனோவ். கொழும்பு: தகவல் பிரிவு, சோவியத் தூதரகம், 1வது பதிப்பு, பெப்ரவரி 1981. (கொழும்பு-10: பிரகதி அச்சகம், 93, மாளிகாகந்தை வீதி, மருதானை).

67 பக்கம், விலை: ரூபா 37.50, அளவு: 17.5x11 சமீ.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொருளாதார வளர்ச்சியும் மக்கள் நலவாழ்வின் வளர்ச்சியும், பதினொன்றாவது ஐந்தாண்டுக் காலகட்டத்தில் நாட்டின் பொருளாதார, சமூக வளர்ச்சியின் பிரதான இலக்குகள், வெளிநாட்டுப் பொருளாதார உறவுகளின் வளர்ச்சி, கட்டுப்பாடு, நிர்வாகத்தின் தரத்தைத் துரிதமாக அபிவிருத்தி செய்தல் ஆகிய நான்கு கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 30705).

9282

இயற்கை மூலவளங்களும் பொருளாதார வளர்ச்சியும் (வட பிரதேசம்): ஆறாம் வகுப்புக்குரியது. வ.கிருஷ்ணசாமி. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(3), 52 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

இலங்கை கல்விப் பாடத்திட்டத்தில் ஆறாம் வகுப்புக்குரிய முன்தொழில் அறிமுறைப் பாடமான இயற்கை மூலவளங்களும் பொருளாதார வளர்ச்சியும் என்ற பாடத்தை சுற்றாடலை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் வழங்குகின்றது. இயற்கை மூலவளங்கள், எமது சுற்றாடலிலுள்ள பொருட்கள், வடபிரதேசத்தின் இயற்கை மூலவளங்கள், தரைத்தோற்றம், காலநிலை, சுண்ணாம்புக் கல், மண்வளம், நீர், நிலத்தின்கீழ் நீர், இலங்கையின் கனிப்பொருள்கள், வலு, இயற்கைத் தாவரங்கள், பனை, இலங்கையின் இயற்கைத் தாவரங்கள், விலங்குகள், பட்சிகள், கடற் செல்வம், உப்பு, மீன், மக்கட் செல்வம் ஆகிய பத்தொன்பது தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87310).

9283

இலங்கை: ஆசியாவின் மலர்ந்துவரும் ஆச்சரியம்: மகிந்த சிந்தனை-எதிர்காலத்திற்கான தொலைநோக்கு. அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகம். கொழும்பு: தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு, 1வது பதிப்பு, 2010. (இலங்கை: அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 308 பக்கம், படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27.5x20.5 சமீ.

இலங்கை அரசின் அபிவிருத்தி பற்றிய விளக்கமளிப்பு நூல். இலங்கை: மிளிரும் ஆசியாவின் ஆச்சரியம், செழிப்பான ஒரு நாடு: தாராளமான நிலம், உலகத்தை வெற்றிகொள்வதற்கு உறுதியுடன் கூடிய தொழில்முயற்சிகள், பாதை வலையமைப்பு மற்றும் போக்குவரத்து முறைமை அபிவிருத்தி, விண்ணையும் மண்ணையும் இணையவெளியால் வெற்றிகொள்ளும் எதிர்காலத் தலைமுறை, சுகாதாரமான ஒரு சமூகம், வசதியான, சொகுசான மற்றும் திருப்தியான வாழ்க்கைமுறை, பகிர்ந்துகொள்ளப்பட்ட நம்பிக்கைகளும் துரித அபிவிருத்தியும் ஆகிய எட்டு அத்தியாயத் தலைப்புகளில் இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்கள் பற்றிய விபரங்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6445).

9284

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் திட்டமிடல் செம்முறை. கொட்பிரே குணதிலக (ஆங்கில மூலம்), சி.அம்பிகாதேவி (தமிழாக்கம்). கொழும்பு 5: மார்கா நிறுவனம், தபால் பெட்டி எண் 601, 61, இசிப்பத்தான மாவத்தை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(4), 102 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x14.5 *சமீ.*

Planning Process in the Economic Development of Sri Lanka *என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் இது. அம்பிகாதேவி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறையின் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இந்நூல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதாரம்: செயலாற்றமும் அமைப்பு மாற்றங்களும், சமூக குடிசனவியல் மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள், இலங்கையில் திட்டமிடல் செய்முறையின் தோற்றம், நிறுவனமயப்படுத்தப்பட்ட திட்டமிடல் செய்முறை, திட்டமிடல் முறைமைகளும் நுட்பங்களும், திட்டமிடல் அனுபவம்: கட்டுப் பாடுகளும் வரையறைகளும், நிச்சயமற்ற நிலையில் திட்டமிடல் பிரச்சினைகள், தேசியரீதியான முக்கிய விடயங்களும் திட்டமிடலும், முடிவுரை ஆகிய பதினொரு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24850).*

9285

இளைஞரும் அபிவிருத்தியும்: கருத்தரங்க அறிக்கை. *இலங்கை மன்றக் கல்லூரி. கொழும்பு 7: இலங்கை மன்றக் கல்லூரி, 100, சுதந்திரச் சதுக்கம், 1வது பதிப்பு, 1979. (கொழும்பு 2: அகிலம் வெளியீடு, வற் அச்சகம்).*

(8), 98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17 *சமீ.*

இளைஞரும் அபிவிருத்தியும் என்ற தலைப்பில் இலங்கை மன்றக் கல்லூரி ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். இதில் இளைஞரும் கல்விச் சீர்திருத்தங்களும் (எஸ்.சந்திரசேகரம்), இளைஞரும் ஆக்கமும் (என்.கனகசூரியர்), இளைஞர் தலைமையும் அபிவிருத்தியும் (ஏ.சிவராஜா), இளைஞரும் தலைமையும் (க.குகதாசன்), பண்பாடு-அபிவிருத்தி-இளைஞர் (கா.சிவத்தம்பி), கிராமப் பகுதியில் சமூக மாற்றத்தில் இளைஞர் பங்கு (எம்.கந்தையா), இளைஞரும் விவசாய அபிவிருத்தியும் (இரா.சிவச்சந்திரன்), இளைஞரும் வேலைவாய்ப்பும் குடியேற்றத் திட்டங்களும் (எம்.எம்.மக்பூல்), கூட்டு விவசாய முறையும் இளைஞரும் (ஜி.கிருஷ்ணமூர்த்தி), விவசாய விரிவாக்க சேவைகள் (எஸ்.எஸ்.கணேசானந்தன்), இளைஞர்க்கான கடன் வசதியும் நிதி உதவியும் (கே.ஜெகநாதன்), இளைஞர்களும் சுயதொழிற் திட்டங்களும் (ரி.குமாரதாசன்), ஜனநாயக மரபுகளைப் பேணி வளர்த்தல் (ஆர்.சிவகுருநாதன்), சூழலைப் பாதுகாத்தல் (சோ.செல்வநாயகம்) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

9286

உலகமயமாதல்: வாஸ்கொடகாமா முதல் ஒபாமா வரை. *சி.குமாரலிங்கம். யாழ்ப்பாணம்: சி.குமாரலிங்கம், 149, செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, டிசம்பர் 2011.(யாழ்ப்பாணம்: ஆந்திரா டிஜிட்டல் பிரிண்டர்ஸ்).*

vii, *50 பக்கம், விலை: ரூபா 100., அளவு:* 21x15 *ச.மீ.,* ISBN: 978-955-51477-2-9.

வங்கி மேலாளரான சி.குமாரலிங்கம், இலக்கியத்திலும் ஈடுபாடுகொண்ட முற்போக்குச் சிந்தனையாளர். இந்நூலில் உலகமயமாதல், முதலாம் உலகப்போர்,

இரண்டாம் உலகப்போர், உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், அபிவிருத்தி, கர்லோ குய்லானி, உலகமயமாதல்-நன்மைகள் பெருத்தன-தீமைகள் மலிந்தன, சோளம், செவ்விந்தியர், பட்டினி உலகம், குளிர்பானங்கள், ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி கண்ணே, சொர்க்கத்திலிருந்து நரகம் வரை, மார்க்கோ போலோ, வாஸ்கொடகாமா, Online Computer, மூளை உருவானது, சாதி உருவானது, உயர்ந்தவர்கள், அழகின் விதிகள், அழகின் பெருமை, BRIC, பெண் விடுதலை, அமர்த்திய சென், பொன்னான வாழ்வு மண்ணாகிப் போனால், நான்காவது உலகம், Jack of all trades Master of None, உலக வங்கியின் இரண்டு முகங்கள், பயிற்சிப் பட்டறை, சாலை நெடியது, சோறு, பாலஸ்தீன கவிதை, திருமதி டில்மா றவுசெல்ப், வேகநடை, கார்ள் மார்க்ஸ், ஜோர்ஜ் வாஷிங்டன், சேர். வின்ஸ்ரன் சேர்ச்சில், மார்க்கிரட் தச்சர், ஜெனரல் சார்ள்ஸ் டி கோல், சைக்கிள் செயின் ஆகிய 41 தலைப்புகளில் அறிவியல் தகவல்களை கவிதைவடிவில் நம்முடன் பகிர்ந்துகொள்கின்றார். உலகமயமாதல் உலகைக் குக்கிராமமாக மாற்றியுள்ளதை மேலோட்டமாகப் பார்த்தாலும், அதனால் அபிவிருத்தி அடைந்திராத வறிய நாடுகள் கண்ட இழப்புகளே அதிகம் எனக்காண முடிகின்றது. பெண்களின் விடுதலை பற்றி மிக அவதானமாக எழுதுகின்றார். உலகத்தலைவர்கள் சிலரின் ஆக்கபூர்வமான பங்களிப்புகளைப் பதிவுசெய்கிறார். சோவியத் ரஷ்யா முதலாளித்துவவாதிகளின் கபட நடவடிக்கைகளால் சிதைந்துபோனதையும் பதிவுசெய்கிறார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 51170).

9287

உலகைச் சூறையாடும் உலகமயம். பி.இரயாகரன். சென்னை 600002: கீழைக்காற்று வெளியீட்டகம், 10 அவுலியா தெரு, எல்லீசு சாலை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (சென்னை 24: எழில் பிரிண்ட்ஸ், 63, என்.எஸ்.கே.சாலை, கோடம்பாக்கம்).

176 பக்கம், விலை: இந்திய ரூபா 85.00, அளவு: 21.5x14 சமீ.

பிரான்சில் வசிக்கும் பி.இரயாகரன், "தேசியம் எப்போதும் எங்கும் முதலாளித்துவ கோரிக்கையே ஒழிய பாட்டாளி வர்க்கக் கோரிக்கையல்ல" என்ற பெயரில் 1998இல் எழுதிய தனது முதலாவது நூலுடன் ஈழத்து சமூக அறிவியல்தளத்தில் பல வெளியீடுகளைத் தொடர்ந்தவர். இந்நூல் உலகமயமாதல் பற்றிய பல அறியப்படாத செய்திகளைத் தெரிவிக்கின்றது. நிதி மூலதனம் சமூக சாரத்தையே உறிஞ்சுகின்றது, ஏகாதிபத்தியத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றுதான் நிதி மூலதனம், கடனும் வட்டியும் இன்றி உலகமயமாதல் ஒரு கணம்கூட உயிர்வாழ முடியாத நிலை, உலகைச் சூறையாடும் நிதி மூலதனம் எப்படி உருவானது, கூலியற்ற அடிமை உழைப்பும் மூலதனத்தை உருவாக்கியதும், அடிமை ஒழிப்பு காலனிய உருவாக்கத்தை வேகப்படுத்தியது, ஆபிரிக்காவின் இன்றைய இழி நிலைமைக்கு அந்த மக்கள் காரணமல்ல, லத்தீன் அமெரிக்காவின் முதுகில் செதுக்கியுள்ள அடிமைத்தனம், மனித இரத்தத்தையே உறிஞ்சி வெற்றுடலாக்கும் கடன் என்ற பேய், கடனும் வட்டியும் மனிதகுல முன்னேற்றத்துக்காக உதவுகின்றதா? பிராந்திய ரீதியாக கடன் ஏற்படுத்தும் அவலம், ஐ.எம்.எப்.

போன்ற புல்லுருவி அமைப்புகள், கடனே நாடுகளை மறுகாலனியாக்குகின்றது, எகாதி பத்திய நலன்கள்தான் உதவிகள், தேசங்கள் திவாலாவது அன்றாட நிகழ்ச்சிப் போக்காகியுள்ளது, நிதி மூலதனமே உற்பத்திகளையே உறிஞ்சுகின்றது, தேசிய சொத்துக்களையே அபகரிக்கும் நிதி மூலதனம், ஏகாதிபத்திய நாடுகளின் கடன்கள், மக்களின் சேமிப்புகளை அபகரிப்பதே பங்குச்சந்தை, குமிழிப் பொருளாதாரம் மிதக்கும் அமெரிக்க சூக்குமம் ஆகிய 20 கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

9288

பிரதேச அபிவிருத்தி: கோட்பாடுகளும் உபாயங்களும். மா.செ.மூக்கையா. கண்டி: சமூக அபிவிருத்தி நிறுவனம், 1வது பதிப்பு, அக்டோபர் 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

ix, 61 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.

பிரதேச அபிவிருத்தியும் திட்டமிடலும், பிரதேசம், பிரதேச அபிவிருத்தி பற்றிய தத்துவங்கள், பிரதேச அபிவிருத்திக்கு செயற்பாட்டுரீதியிலான விளக்கங்கள், பிரதேச வருமான சமன்பாடின்மை பற்றிய கோட்பாடுகள், பிரதேச அபிவிருத்தி பற்றிய மறுபரிசீலனை, பிரதேச அபிவிருத்தி உபாயங்கள், ஆற்று வடிநில அபிவிருத்தி நிகழ்ச்சிகள், வளர்ச்சிமுனை உபாயம், பின்தங்கிய பிரதேசங்களின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவித்தல், நெருக்கடிப் பிரச்சினைகள் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பெருநகரப் பகுதிகளுக்கு நிவாரணம் வழங்குதல், நகர படிமுறை ஒழுங்கினை அபிவிருத்தி செய்தல், பிரதேச திட்டமிடலுக்கான மாற்று அணுகுமுறைகள், விவசாயம்சார் கிராமிய பொருளாதாரம் ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் மா.செ.மூக்கையா அவர் களின் இந்நூல் புவியியல் மாணவர்களின் அவதானத்தைப் பெரிதும் ஈர்க்கவல்லது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236856).

மேலும் பார்க்க: 9841-43

331.21 சம்பளம்

9289

இலங்கையில் சம்பளமும் தொழில் நியதி நிபந்தனைகளும். பீ.நவரத்ன (சிங்கள மூலம்), பீலிக்ஸ் டீ.பிலிப் (தமிழாக்கம்). கொழும்பு 3: பிட்ரிஹ்-எபர்ட்-ஸ்டிவ்டுங், 14, ரொட்டுண்டா கார்டின்ஸ், 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1987. (அச்சக விபரம் தரப்படவில்லை).

172 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

இது சிங்கள மொழிநூலின் நேரடி தமிழ் மொழிபெயர்ப்பாகும். இந்நூலாசிரியர் சம்பளச் சபை, வேதனாதிகள் நியாய சபைகளின் செயலாளராகப் பணியாற்றியவர். மொழிபெயர்ப்பாளரான பீலிக்ஸ் டீ.பிலிப் சட்ட வரைஞர் திணைக்களத்தைச்

சேர்ந்தவர். சட்டவாக்கங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதில் கைதேர்ந்த அனுபவமும் ஆற்றலும் விவேகமும் கொண்டவர். இந்நூல் வெளியிடப்படுவதன் பிரதான நோக்கமாக அமைவது, இலங்கையின் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் அலுவலர்களுக்கு ஒரு கைநூலாகப் பயன்படுத்துவதேயாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48599).

335 சோசஷலிஸம், அது தொடர்பான பிரிவுகள்

9290

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம். குமாரி ஜயவர்த்தன (ஆங்கில மூலம்), க.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 50 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-369-3.

The Origins of the Left Movement in Sri Lanka என்ற தலைப்பில் கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா 1979இல் எழுதிய நூலின் தமிழாக்கம். தேசிய எழுச்சியும் தொழிலாளர் இயக்கமும், வர்க்கமும் அரசியலும், சர்வதேச நிலைமை, இலங்கையின் சோஷலிஸ்ட் மாணவர்கள், அரசியல் சீர்திருத்தங்கள் பற்றிய நிலைப்பாடு, ஏ.ஈ.குணசிங்க பற்றிய நிலைப்பாடு, பிரிட்டிஷ் தொழிற்கட்சி மீது கண்டனம், இலங்கையில் இளைஞர் இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, பொருளியல் பிரச்சினைகளும் சோஷலிஸமும், சூரியமல் இயக்கம், தொழிற்சங்க நடவடிக்கை, மலேரியா தொற்றுநோய் (1934-35), சட்டசபையில் புரட்சிக் குரல், லங்கா சமசமாஜக் கட்சியின் உதயம் ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

335.4 கம்யூனிசம்

9291

தமிழ் மக்களின் எதிர்காலம். எஸ்.நடேசன். கொழும்பு 2: சாந்தி வெளியீடு, 71, மலே வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1971. (கொழும்பு: நேரு அச்சகம்).

56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 16.5x10.5 சமீ.

மலையக மக்களின் தொழிற்சங்கத் தலைவரும் சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான தோழர் எஸ்.நடேசன் எழுதி அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளையும், பொது மேடையில் நிகழ்த்திய உரைகளையும் உள்ளடக்கியுள்ள தொகுப்பு இதுவாகும். தமிழ் மக்களின் எதிர்காலம், தொழிற்சங்க இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் தோட்டத் தொழிலாளரும், தோட்டப்பாடசாலைகள், நானறிந்த இராஜலிங்கம், மேதினம் ஆகிய ஆறு கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

336 நிதியியல், வங்கியியல்

9292

அரச நிதி. *மா.சின்னத்தம்பி. கொக்குவில்: சசிலேகா சின்னத்தம்பி, அபிவிருத்தி நிறுவகம், சம்பியன் ஒழுங்கை, 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).*

iv, *140 பக்கம், அட்டவணை, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 18.5x13 *சமீ.*

க.பொ.த உயர்தர மாணவருக்கும் ஏனையோருக்கும் அரச நிதி (Public Finance) *பற்றிய பின்புல அறிவை வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நூல். அண்மைக்காலத்தில் இலங்கை அரச நிதியில் நிகழ்ந்துள்ள கணிப்பு முறை சார்ந்த மாற்றங்களின்படியும் விபரங்களை அதிகம் கொண்டதாயும் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முன்னர் சிறுநூலாக வெளியிடப்பட்ட ஒரு நூலின் விரிவான பதிப்பு இதுவாகும். மாணவர் வசதி கருதி இந்நூலின் பின்னிணைப்பில் கடந்தகால க.பொ.த. உயர்தர பரீட்சை வினாத்தாள்களின் வினாக்கள் பலவற்றுக்கு விபரங் களுடன் விடையளிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13448).*

338 பொருளாதார வளங்கள், மீன்வளம்

9293

ஆசியாவில் வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்களுக்கான சிறந்த நடைமுறை அணுகுமுறைகள். *சேன எஸ்.டி.சில்வா, உபாலி எஸ்.அமரசிங்க, துய்* T.T.*நுயென். (தொகுப்பாசிரியர்கள்),* M.M.M.*நாஜிம்,* M.S.N.*ஹுஸ்னா (தமிழாக்கம்). அவுஸ்திரேலியா:* Australian Centre for International Agricultural Research, GPO Box 1571, Canbera ACT *2601, 1வது பதிப்பு, 2009.(சிறீலங்கா: குவாலிட்டி பிரின்டர்ஸ், 17/2, பெங்கிரிவத்தை வீதி, கங்கொடவில, நுகேகொட).*

118 பக்கம், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 *சமீ.*

வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்கள் அபிவிருத்தியும் முகாமைத் துவமும் என்ற முதலாம் பகுதியில், வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்கள் ஏன், வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்கள் என்றால் என்ன?, வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்கள் எங்கே அபிவிருத்தி செய்யப்படுகின்றன, சிறந்த நடைமுறை அணுகுமுறை என்றால் என்ன மற்றும் ஏன் அது அவசியப்படுகின்றது என்பன பற்றி விளக்கப்படுகின்றது. கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கியமான நடவடிக்கைகளாக, சமூக ஆலோசனைகள், நீர்நிலைகளைத் தேர்ந்தெடுத்தல், இனங்களைத் தேர்ந்தெடுத்தல், வைப்புச் செய்வதற்கு முன்னர் தயார்படுத்துதல், வைப்புச் செய்தல் பருமன், வைப்புச் செய்தல் அடர்த்தி, குறைநிரப்பி உணவும் உணவூட்டலும், அறுவடை உபாயங்கள், சந்தைப்படுத்தல் என்பன விளக்கப்படுகின்றன. பாதுகாப்பு முறைகள் பற்றி

விபரிக்கையில் முற்கூற முடியாத சந்தர்ப்பங்களிலிருந்து பாதுகாப்பு, அனுமதியின்றி மீன்பிடித்தலிலிருந்து பாதுகாப்பு, ஊனுண்ணி விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு, சந்தைப் பாதுகாப்பு ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் மூன்று முன்னாய்வுகள் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில் அபிவிருத்தி: ஓர் முன்னாய்வு, வியட்நாம் வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில் அபிவிருத்தி: ஓர் ஆய்வு, சந்தைப்படுத்தற் சந்தர்ப்பம்: மீனிற்கான கேள்வியைப் புரிந்துகொள்ளல் ஆகிய மூன்று முன்னாய்வுகள் இதில் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6345).

340 சட்டவியல்

9294

கைத்தொழில் பிணக்குகள் சட்டம். ஜீ.வீரக்கோன் (தொழில் ஆணையாளர்). கொழும்பு: தொழிற்தரப் பகுதி, தொழிற் திணைக்களம், இணை வெளியீடு, Fredrich Ebert Stiftung, 1வது பதிப்பு, மே 1989. (கொழும்பு: சிலோன் பிரின்ரேர்ஸ் லிமிட்டெட்).

98 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையின் போதனா மொழிகளாக தமிழும் சிங்களமும் பயன்படுத்தப் படுவதாலும், பெரும்பாலான முக்கிய தொழில்சார் சட்ட நூல்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருப்பதாலும், சுதேச மொழிகளைப் பயின்ற தொழிலாளர்களும் தொழில் தருநர்களும் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அதனால், அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் அவர்களின் கைத்தொழில் சட்டங்கள் பற்றிய அறிவை வளர்த்தெடுக்கும் வகையில் இந்நூல் தொழில் ஆணையாளரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் உருவாக்கத்தின் பின்புலமாக சட்டவரைஞர் நாயகம் நளின் அபயசேகரவும் தொழில் தரப் பகுதியின் பிரதி ஆணையாளர் கே.விஜயரத்தினமும் இயங்கியுள்ளனர்.

9295

சட்டமறுப்பு. எஸ்.டி.சிவநாயகம், எஸ்.வி.பி.பிள்ளை (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு-11: தமிழ் ஆட்சிப் பதிப்பகம், 156, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 1957. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம்).

84 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 17.5x12.5 சமீ.

தமிழ் ஆட்சிப் பதிப்பகத்தின் முதலாவது பிரசுரம். சட்ட மறுப்பு பற்றி காந்தி மகாத்மாவின் கருத்துக்களையும், ஈழத்து, தமிழகத்து, அரசியல் தலைவர்களின் கருத்துக்களையும் ஒன்று திரட்டி தமது கருத்துக்களுடன் இந்நூலில் பகிர்ந்திருக்கிறார்கள். இனி யாது, பொதுஜனச் சட்ட மறுப்பு, காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டம், ஒத்துழையாமை இயக்கத்திலுள்ள பல அம்சங்கள், சுதந்திரப் பிரகடனம், செய் அல்லது செத்து மடி, சட்ட மறுப்பு ஒரு பூகம்பம், சௌரி சௌரா, காந்திஜியின்

விண்ணப்பம், சிறீ எதிர்ப்பும் சட்ட மறுப்பும், எதற்காகச் சட்ட மறுப்பு, எந்தச் சட்டத்தை மறுப்பது (இரு அத்தியாயங்கள்), காந்தி மறுத்த உப்புச் சட்டம், சட்ட மறுப்பில் தலைவர்கள், எதிர் நடவடிக்கை, சட்ட மறுப்பு - அமைப்பு, பொறுமையும் தியாகமும் ஆகிய 18 தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37985).

9296

சிவில் அரசியல் மற்றும் தொழில் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களின் இலங்கை பிரயோகம் பற்றிய விமர்சன மதிப்பீடு. *ரொஹான் எதிரிசிங்க, அசங்க வெலிகல (ஆங்கில மூலம்), எஸ்.துரைராஜா (தமிழாக்கம்). கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 24/2, 28ஆவது ஒழுங்கை, பிளவர் வீதி, இணை வெளியீடு, கொழும்பு 4: பிறெட்றிச் ஈபர்ட் மன்றம், இல.4, அடம்ஸ் அவென்யு ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

ix, *119 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21.5 x14.5 *சமீ.*

இவ்வெளியீட்டின் ஆங்கிலத் தொகுப்பு முன்னதாக, ஒக்டோபர் 2008இல் வெளியிடப்பட்டது. இத்தொகுப்பின் அறிமுகத்திலும், மற்றைய பகுதிகளிலும் அதன் ஆசிரியர்களின் அழுத்தம் வழங்கும் நடவடிக்கைகளில் தெளிவுபடுத்தப்பட்ட விடயமாக ஐரோப்பா சங்கத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் நிகழ்ச்சித் திட்டத்தினை மீள நீடிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்து பொதுமக்கள் தலையீட்டுடனான கலந்துரையாடல்களுக்கான வினைத்திறன்மிக்க பங்களிப்பினைப் பெறுவது என்பதாகக் காணப்படுகின்றது. இலங்கைக்கு, குறிப்பாக அதன் ஆடைத் தொழில்துறைக்கு கிடைக்கும் பொருளாதார நன்மைகளைக் கருத்திற்கொண்டு ஆரம்பம் முதலே முழுமையாக விளங்கப்படுத்தப்பட்ட விடயம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிகழ்ச்சித் திட்டம் நீடிக்கப்படவேண்டும் என்பதாகும். அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான அரசியல் யாப்பு மற்றும் அதன் வரையறை, குறிப்பாக சிவில் அரசியல் உரிமைகள் மற்றும் சீரான தொழிலாளர் தரக்கட்டுப்பாடுகள், உடன்படிக்கையின் ஊடாக நிறுவப்பட்டுள்ள சர்வதேச தர நிர்ணயங்கள் என்பவற்றுடன் இணங்கிச் செல்லும் வகையில் பலப்படுத்துவதற்கு இநத வாய்ப்பினைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என நூலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுவே இந்த நூலின் நோக்கமுமாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 50429).

9297

சிறுவர் உரிமைகள்: இலகுவான முறையில். *சாறுக்க சமரசேகர. கொழும்பு 3: நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம், இல. 310, காலி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (கிரிபத்கொட: சரசவி பிரின்டர்ஸ், இல. 243/1, தலவத்து ஹேன்பிட்டிய, மாகொல வீதி).*

viii, *60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 955-1258-05-03.

நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டம் என்பது ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டமாகும். துன்பத்திற்கு உள்ளாகக்கூடிய பெண்கள் மற்றும் சிறுவர்களுக் காகவுள்ள சட்டம் சார்ந்த உருவமைப்பைப் பலப்படுத்தல் என்பது கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. அவ்வகையில் சிறுவர் உரிமைகள் பற்றிய சட்டங்கள் பற்றிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. 1995 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 1998ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க நீதிமன்ற அமைப்பு (திருத்தச்) சட்டம், 1995ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவை (திருத்தச்) சட்டம், 1998ஆம் ஆண்டின் 29அம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 1995ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம், 2005ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க விலைமாதர் தொழிலுக்காகப் பெண்களையும் சிறுவர்களையும் ஈடுபடுத்தல் பற்றிய உடன்பாட்டுச் சட்டம், 2005ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க இல்லத்து வன்முறைகளைத் தடுக்கும் சட்டம், 2006ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம், ஆகியவற்றை இந்நூல் எளிய முறையில் விளக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 229776).

9298

சிறுவர் சட்டங்கள். செ.செல்வகுணபாலன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

x, 238 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-417-1.

குடியியல்சார் விடயங்கள், குற்றவியல்சார் விடயங்கள் ஆகிய இரு பாகங்களில் இந்நூல் இலங்கையிலும் சர்வதேசத்திலும் உருவாக்கப்பட்ட சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான 33 சட்டங்களை விபரிக்கின்றது. சிறுவர் தொடர்பாக பெரும்பாலும் அனைத்துச் சட்டங்களிலும் காணப்படும் சட்ட ஏற்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலின் நோக்கமானது, பொதுமக்களிடையே சிறுவர் சட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், பொலிஸ் அலுவலர்கள், நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலர்கள் மற்றும் சிறுவர் தொடர்பான சட்ட அமுலாக்கல் அலுவலர்களுக்கு உதவுவதுமாகும். இந்நூல் குடியியல்சார் விடயங்கள், குற்றவியல்சார் விடயங்களென இரண்டு பாகங்களைத் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. குடியியல்சார் விடயங்களில் குழந்தைப் பிறப்பைப் பதிதல், மகவேற்றல், கல்வி கற்றல், பராமரித்தல் மற்றும் குடும்ப வன்முறைகளில் சிறுவர் நிலை போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. குற்றவியல்சார் விடயங்களில் சிறுவருக்கெதிராகப் புரியப்படும் தவறுகள், சிறுவரால் புரியப்படும் தவறுகள் தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கை முறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. ஒரே பார்வையில் எத்தவறுக்கு எச்சட்டத்தின்

கீழ் எத்தகைய தண்டனை விதிக்கப்படலாம் என இலகுவாக அறியக்கூடிய முறையில் அட்டவணைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. சாதாரண மொழிநடையில் அதேவேளை சட்டத்தின் பொருள் மற்றும் கருத்து பாதிக்கப்படாமல் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் செல்லத்துரை செல்வகுணபாலன், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தையும் ஐரோப்பாவிலுள்ள சர்வதேச கடல்சார் சட்ட நிறுவகத்தில் சட்ட முதுமாணிப் பட்டத்தையும் பெற்றவர். இலங்கை சட்ட வரைஞர் திணைக்களத்தில் சிரேஷ்ட உதவிச் சட்ட வரைஞராகவும் இலங்கைச் சட்டக் கல்லூரியில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார்.

340.59 இஸ்லாமியச் சட்டங்கள்

9299

காஸி நீதிமன்ற நடைமுறைகளும் செயற்பாடுகளும். *ஏ.எச்.ஜீ.அமீன் (மூலம்), என்.எம்.எம்.றெஸீன் (தமிழாக்கம்). கொழும்பு 12: அல்-அமீன் சட்ட மத்திய நிலையம், 34, 1/5 சென். செபஸ்தியன் மேடு, 1வது பதிப்பு, மே 2001. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xi, *128 பக்கம், விலை: ரூபா 250., அளவு:* 21.5x14 *சமீ.,* ISBN: 955-8430-01-3.

காஸி நீதிபதியின் பணிகள், விண்ணப்பங்கள், விவாகரத்து, உரிமை கோரல், ஆவணங்கள் (பதிவுகள்), பல்வேறு விண்ணப்பங்களும் மேன்முறையீடும், முஸ்லிம் விவாகப் பதிவாளர், துணை ஆவணங்கள் ஆகிய 8 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. காஸி சபையின் உறுப்பினர்கள், காஸிகளின் பெயரும் விலாசமும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. நூலாசிரியர் அப்துல் ஹமீத் கவுஸுல் அமீன் ஒரு சட்டத்தரணியாவார். கொழும்பு வடக்கு காஸியாக 3 வருடகாலம் சேவை புரிந்துள்ளார். முஸ்லிம்களின் இரு மேன்முறையீட்டுத் தாபனங்களான வக்பு சபையிலும் காஸி சபையிலும் அங்கத்தவராகப் பணியாற்றியவர். திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பிற்கான பிரிவில் விரிவுரையாளராகவும், முகாமைத்துவப் பிரிவில் சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றுகின்றார். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 30370).

342 அரசியலமைப்புச் சட்டம்

9300

அரசியலமைப்பு: ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய. *மு.திருநாவுக்கரசு. யாழ்ப்பாணம்: மு.திருநாவுக்கரசு, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1994. (யாழ்ப்பாணம்: மாறன் பதிப்பகம்).*

(22), 50 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17.5x10.5 *சமீ.*

ஓர் இன மத மொழி நோக்கு, கடின யாப்பு முறை, ஜனாதிபதிக்கும் நாடாளு மன்றத்திற்கும் இடையில் மோதலுக்கான ஏற்பாடு, ஜனாதிபதியின் அதிகாரமும் அவரைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடும், பிரேமதாசாவை ஓரம் கட்டவும் சிறிமாவை களத்திலிருந்து அகற்றவும் யாப்புரீதியான ஏற்பாடுகள், ஐ.தே.க.வினைப் பாதுகாக்க விகிதாசாரப் பிரதிநிதித்துவம், ஜே.ஆரின் சாதக நிலையை உறுதிப்படுத்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு, அரசியலமைப்பால் உருமறைப்புச் செய்யப்பட்ட நவீன முடியாட்சி, புதிய நிலைமைகளின்கீழ் ஜே.ஆரின் அரசியலமைப்பு உள்நாட்டு யுத்தம்தான் வழியா? ஆகிய ஒன்பது அத்தியாயங்களில் 1994களின் தேர்தல்கால அரசியல் நிலைமைகள் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. மு. திருநாவுக்கரசு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறையின் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104421).

9301

இலங்கை அரசியல் யாப்புக்களின் பரிணாம வளர்ச்சி. ரஜித்த பண்டித்தசேகர, நிரோஷ் பண்டார (தொகுப்பாசிரியர்கள்), எஸ்.சிவகுருநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 3: சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான பிரிவு, அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு, 310, காலி வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (கொழும்பு 10: பிரிண்ட் அன்ட் பிரிண்ட் கிரப்பிக்ஸ், இல.6. போதிராஜராம மாவத்தை, மாளிகாவத்தை).

(8), 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1194-07-9.

அரசியலமைப்பு (அரசியல் யாப்பு) பற்றிய வரைவிலக்கணம், அரசியலமைப்புகளின் வகையீடுகள், இலங்கை அரசியலமைப்புகளின் பரிணாம வளர்ச்சி (கோல்புரூக் யோசனைகள், குறூ மக்கலம் யோசனைகள், மானிங் அரசியலமைப்பு, சோல்பரி யோசனைகளும் சோல்பரி அரசியலமைப்பும்), டொமினியன் அந்தஸ்து, 1972 குடியரசு அரசியலமைப்பு, 1978 அரசியலமைப்பு ஆகிய ஆறு இயல்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44772).

9302

இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்புகளும். சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(4), 42 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-402-7.

பிரித்தானியர் இலங்கையர் கைகளில் வழங்கிய அதிகாரங்கள் அனைத்து மக்களிடமும் வழங்கப்படவில்லை. மாறாக, சிங்கள சமூகத்தின் அதிகார வர்க்கத் திடமே வழங்கப்பட்டது. இதனால் அதிகாரக் கைமாற்றத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க தமிழ் மக்கள் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பிலிருந்து அகற்றப்படும் நிலையும் அதிகரித்தது. இந்த அதிகாரத்திலிருந்து அகற்றும் செயன்முறை 1921ஆம்

ஆண்டு மானிங் அரசியல் சீர்திருத்தத்தில் தொடங்கி 1972ஆம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியல் யாப்பில் உச்சநிலை பெற்றது. 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினைப் பொறுத்தவரை ஒரு மூடிய யாப்பாகவே உள்ளது. யாப்பில் பன்மைத்தன்மையை உருவாக்க வேண்டுமாயின் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு, வாளேந்திய சிங்கக் கொடி, பௌத்த மதம் முதன்மை மதம் என்பவற்றில் திருத்தங்கள் தேவை. ஆனால், இதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையும், மக்கள் தீர்ப்பு ஒன்றின்மூலம் மக்களின் சம்மதமும் அவசியம். இவை நடைமுறையில் சாத்தியமற்றவையாகும். எனவே, அரசியல் யாப்பு மூடப்பட்ட நிலையில் யாப்பிற்கு வெளியே பேச்சு வார்த்தை மூலமான அரசியல் தீர்வு முயற்சிகளில் இறங்கவேண்டியுள்ளது. இந் நூல் அறிமுகம், டொனமூர் அரசியல் யாப்பு (1931), சோல்பரி யாப்பு (1947), முதலாவது குடியரசு அரசியல் யாப்பு (1972), 2வது குடியரசு ஆட்சி யாப்பு (1978), முடிவுரை ஆகிய ஆறு இயல்களில் இவ்விடயங்களை ஆழமாக ஆராய்கின்றது. நூலாசிரியர் யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல்துறை பட்டதாரி. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றவர்.

9303

பதின்மூன்றாவது திருத்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-410-2.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 13ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எந்தவகையிலும் உதவமுடியாத இத்திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதற்கு இந்திய அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றபோதிலும், ஈழத்தமிழ் மக்களால் ஆரம்பம் முதலே 13வது திருத்தச்சட்டமூலம் ஏற்றுக் கொள்ளப்படமுடியாததாக எதிர்க்கப்பட்டு வந்துள்ளது. இந்தப் பின்னணியில் இந்நூல் 13வது திருத்தச்சட்டத்தின் சாதக பாதகங்களைப்பற்றி ஆய்வுசெய்கின்றது. இந்நூலில், அறிமுகம், மாகாணசபை முறையின் அடிப்படைத் தவறுகள், 13வது திருத்தமும் இனப்பிரச்சினை தீர்விற்கான அடிப்படைகளும், அரசியல் தீர்விற்கான சர்வதேச அனுபவங்கள், முடிவுரை ஆகிய 5 அத்தியாயங்கள் இடம்பெறுகின்றன. பின்னிணைப்பாக இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள், 13வது திருத்தம் பற்றி சிங்கள ஆய்வாளர் சிலரின் கருத்துகள் ஆகிய இரு கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

9304

மதச் சார்பற்ற ஒரு அரசியலமைப்பு சமாதானத்திற்கு இன்றியமையாதது. ஜீ.அன்டன் பெர்னாண்டோ. கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

ix, 55 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையுடன் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்ற ஐவரின் பங்களிப்புடன் ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட ஐந்து நூல்களில் ஒன்று இதுவாகும். மொழிபெயர்ப்பினை இந்திராணி கோவிந்த சாமி, ஏ.ஜே.கனகரத்தினா, கே.நடேசன், வைரமுத்து சுந்தரேசன் ஆகியோர் இணைந்தும் தனித்தும் மேற்கொண்டார்கள். இந்நூல் மதச்சார்பற்ற அரசியலமைப்பு சமாதானத்திற்கு இன்றியமையாதது, மனித சுதந்திரத்துக்கான உரிமைகளை பாதுகாக்கும் சர்வதேச சட்டவாக்கங்கள், வெளிநாட்டு அரசியலமைப்புக்கள், இந்தியாவில் மதச்சார்பின்மை, இலங்கை அரசியலமைப்பு உருவாக்கத்திலுள்ள தவறுகள், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம், கண்டிய உடன்படிக்கையும் அதன் பிறகும், கலாநிதி ஜே.ஜீ.எல். குறேயின் மேலதிக அவதானிப்புகள், இலங்கையில் பெரும்பான்மைவாதம் வலியுறுத்தப்படல், சிறுபான்மையினரைப் பாதுகாப்பது சமாதானத்திற்கு இன்றி யமையாதது ஆகிய பத்து கட்டுரைகளை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40415).

350 பொது நிர்வாகம்

9305

ஓம்புட்சுமானின் பணி. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (ஆங்கில மூலம்), சே.ரவீந்திரன் (தமிழாக்கம்). கொழும்பு 7: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், 32/3, பிளவர் வீதி, 1வது பதிப்பு, பங்குனி 1999. (கொழும்பு 10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ்).

80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 சமீ., ISBN: 955-8037-11-7.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கொழும்பு BMICH மண்டபத்தில் 1998 ஏப்ரல் 24இல் ஒழுங்கு செய்த ஒரு மாநாட்டின் பின்னணியில் எழுதப்பட்ட நூல் இது. முன்னுரை, அறிமுகம், இலங்கையின் நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்சுமான்), ஓம்புட்சுமானின் பணி தொடர்பான கலந்துரை யாடலின் நடவடிக்கைகள், சுவீடனில் ஓம்புட்சுமானின் பங்கு, இலங்கையில் ஓம்புட்சுமானின் பங்கு பற்றிய ஒரு கண்டன ஆய்வும் தென்னாபிரிக்காவுடன் சில ஒப்பீடுகளும், குழு ஆய்வரங்கு ஆகிய பிரிவுகளின் கீழ் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இந்நூலின் பின்னிணைப்புகளாக நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் பதவியை உருவாக்கிய அரசியல் அமைப்பின் உறுப்புரை 156, 1981ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம், 1991ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம், 1994ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க நிர்வாகத் திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (திருத்தச்) சட்டம், நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் 1995, 1996, 1997 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்

கையின் சில பகுதிகள், தென்னாபிரிக்காவின் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் ஆகிய ஆறு ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 25583).

360 சமூக சேவை நிறுவனங்கள்

9306

எழுச்சிப் பாதை. *சு.செல்லத்துரை (பிரதம தொகுப்பாசிரியர்). கொழும்பு: சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம், 1வது பதிப்பு, ஜூலை 2013. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).*

465 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x19.5 *சமீ.*

பேராசிரியர் சபா.ஜெயராசா, உடுவை சி.தில்லைநடராஜா, க.சண்முகலிங்கம் ஆகியோரை மதியுரைஞர்களாகவும், வி.இராஜேந்திரம் அவர்களை உதவி ஆசிரிய ராகவும், செ.சந்திரகுமாரை நிழற்படத் தொகுப்பாளராகவும், பன்னிரு நூற்குழு அங்கத்தினர்களையும் இணைத்துக்கொண்டு கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்து இந்த நூலை உருவாக்கி யுள்ளார். அணிசேர் விடயங்கள், எழுச்சித் தந்தை ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் கல்வி, தொழில், தலைமைத்துவப் புலமைகள், எழுச்சி இயக்கம் பற்றிய சிந்தனைகள், கோட்பாடுகள், செயற்பாடுகள், எழுச்சி இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள், சான்றோர்கள், சாதனையாளர்கள், புலமைப் பரிசில் பெற்றோர், இணைப்புகள் ஆகிய ஐந்து பகுதிகளில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234208).

363 சுற்றாடல், சூழல் மாசுபடுதல்

9307

சூழல் மாசடைதல். *சின்னத்தம்பி நோபிள் சுரேந்திரன், கணபதிப்பிள்ளை பாலசிங்கம் பாபு. கொழும்பு 6:* V.J.P.International Book Shop, Inter Mod, 240, Galle Road, *1வது பதிப்பு, ஜூலை 1997. (கொழும்பு 4: சிரசு பப்ளிக்கேஷன்ஸ், எம் -1, பம்பலப்பிட்டி தொடர்மாடிக் குடியிருப்பு).*

vii, *78 பக்கம், படங்கள், விலை: ரூபா 65., அளவு:* 21x14.5 *சமீ.*

க.பொ.த. உயர்தர (புதிய பாடத்திட்டம்) இரசாயன மாணவர்களுக்கான உசாத்துணை நூல். அறிமுகம், இரசாயன வளமாக்கிகள், விவசாய இரசாயனப் பொருட்கள், தொழிற்சாலை இரசாயனப் பொருட்கள், கனியங்கள் அகழ்ந் தெடுக்கப்படுதல், கல் உடைக்கும் தொழிலால் ஏற்படும் சூழல் மாசாக்கல், வாகனங்களிலிருந்து வெளியேறும் பதார்த்தங்கள், மாசாக்கிகள், வளி மாசடைதல், எண்ணெய் சிந்துதல், நீர் மாசடைதல், பச்சை வீட்டு விளைவு, ஓசோன் படை சிதைவடைதல், அமில மழை, கதிர் வீசலால் ஏற்படும் தீமையான விளைவுகள்,

காடழித்தல், சூழல் மாசடைதலைக் கட்டுப்படுத்தலின் அவசியமும் நடவடிக்கைகளும் ஆகிய 16 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124455).

9308

சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும். க.சிவகரன். இணுவில்: தாரணி வெளியீடு, இணுவில் மேற்கு, 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: நீரஜா அச்சகம், காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்).

(4), 50 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20.5x14.5 சமீ.

சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும், நிலவளம் தொடர்பான சூழற் சீர்கேடுகளும் பாதுகாப்பும், நீர் மாசுபடுதல் தொடர்பான பிரச்சினைகளும் பாதுகாப்பும், வளி மாசடைதலும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும், அயனக் காடழிப்பும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளும், நகராக்கம் தொடர்பான சூழற் பிரச்சினைகள், விவசாயம் தொடர்பான சூழற் பிரச்சினைகளும் புதிய நடைமுறைகளும், கைத்தொழில் மயமாக்கலினால் ஏற்பட்ட சூழற் பிரச்சினைகள், உயிர்ப் பல்வகைமையும் சூழற் பாதுகாப்பும், சூழற் பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய நடவடிக்கைகள், சியற்றல் வெளியீடு, இலங்கையில் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள், நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி ஆகிய 13 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 202667).

9309

சூழலும் அபிவிருத்தியும்: நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய எண்ணங்களும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளும். மா.செ.மூக்கையா. திருச்சிராப்பள்ளி 5: பார்த்திபன் வெளியீடு, திருவானைக் கோவில், 1வது பதிப்பு, 1996. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xiii, 170 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இயற்கைச் சூழலைப் பற்றியும், மனித நடவடிக்கைகளினால் அது மாசுறுவது பற்றியும் பல சர்வதேச மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளதோடு அவற்றில் ஆராயப்பட்ட விடயங்கள் அறிக்கைகளாகவும் வெளியிடப்பட்டுள்ளன. இவை பற்றிய சில கருத்துக்களை இந்நூலில் ஆசிரியர் 16 கட்டுரைகளாக வழங்கியுள்ளார். சூழலும் அபிவிருத்தியும் பற்றிய சிந்தனைகள், நிலம் மாசுபடுவதால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள், வளி மாசடைதல் சார்ந்த பிரச்சினைகள், கடற் பிரதேசங்களில் சூழல் மாசாக்கம், விவசாய மூலவளங்கள் சார்ந்த சூழல் பிரச்சினைகள், விருத்திபெறும் நாடுகளின் சூழல் பிரச்சினைகளும் வடக்கின் பங்களிப்பும், வளிமாசடைதல் - இலங்கையின் அனுபவங்கள், தென்னாசிய நாடுகளின் அபிவிருத்திப் போக்குகள், விருத்திபெறும் நாடுகளும் விவசாய கொள்கை மாற்றங்களும்-வங்காள தேசத்தின் அனுபவங்கள், அபிவிருத்தியும் சுகாதார சேவைகளின் வளர்ச்சியும், குறைவிருத்தியும் குறைந்த வாழ்க்கைத்தரத்தின்

பரிமாணங்களும், விருத்தியுற்ற நாடுகளின் விவசாயக் கொள்கைகள், உலக வங்கியும் குறைவிருத்தி நாடுகளின் விவசாய அபிவிருத்தியும், வர்த்தகம், வரி என்பவற்றிற்கான பொது ஒப்பந்தமும் வர்த்தக பேரங்களும், விருத்திபெறும் நாடுகளிலிருந்து மருத்துவர்களின் வெளியேற்றம்-ஒரு மூலவள விரயம், இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. பேராதனை பல்கலைக் கழகத்தின் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான நூலாசிரியர், வவுனியா, வடமாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளராகவும் பணியாற்றியவர். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 16041).

மேலும் பார்க்க: 9424

370 கல்வியியல்

9310

அழகியற் கல்வி. *சபாரத்தினம் ஜெயராசா. யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

(5), 93 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 *சமீ.*

இந்நூலில் இந்திய மரபில் அழகியற் கல்வி, இந்துக் கல்வி மரபும் தர்ம அழகியலும், இந்திய அழகியற் கல்வியில் ரசக் கோட்பாடு, தமிழ் மரபில் அழகியற் கல்விச் சிந்தனைகள், சிங்களப் பாரம்பரியத்தில் அழகியற் கல்விச் சிந்தனைகள், மேலைநாட்டு அழகியற் கல்விச் சிந்தனைகள், பின்-நவீனத்துவமும் கல்வியும், அழகியலும் ஆற்றுகையும், அழகியற் கல்வியில் மார்க்சிசமும் நவமார்க்சிசமும், அழகியலும் கலையாக்கச் செயல்முறையும் ஆகிய பத்து இயல்களில் அழகியற் கல்வியின் அடிப்படைகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135710).

9311

ஆசிரியத்துவமும் பால்நிலை அறிகையும். *தெ.மதுசூதனன் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 7: அகவிழி, 3, டொறிங்டன் அவென்யூ, 1வது பதிப்பு, மார்ச் 2007. (கொழும்பு 6: டெக்னோபிரின்ட், 55, டாக்டர் ஈ.ஏ.கூரே மாவத்தை).*

193 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 *சமீ.,* ISBN: 978-955-1674-01-4.

பாடநூல்களில் பால்நிலை ஒரு விமர்சனப் பார்வை: சமூகக் கல்விப் பாடநூல் களில் பால்நிலை எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதை நிறுவுதல் என்ற தலைப்பில் முதலாவது கட்டுரையையும், தமிழ்ப்பாட நூல்களில் பால்நிலை வேறுபாடு என்ற தலைப்பில் இரண்டாவது கட்டுரையையும் இந்நூல் உள்ளடக்கி யுள்ளது. ஆசிரியப் பணிகளில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்: ஒரு பால்நிலைக் கண்ணோட்டம் என்ற தலைப்பில் தொடர்ந்த நான்கு கட்டுரைகளும்

இடம்பெற்றுள்ளன. இன்று பெண் ஆசிரியர்கள் பால்நிலை ரீதியாக பல்வேறு அறைகூவல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். ஆசிரியப் பணியில் உள்ள பெண்கள் ஏற்றத்தாழ்வுகள், பாரபட்சங்கள், சுரண்டல்கள், வன்முறைகள் போன்றவற்றை எதிர்கொள்ளவேண்டியவர்களாக உள்ளார்கள். இவற்றை வெளிப்படுத்தும் நோக்கிலே இந்த நான்கு கட்டுரைகளும் அமைந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196591).

9312

ஆசிரியர் இயல். சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(2), 25 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21x14 சமீ.

அறிவுலக நிர்மாணிகளாகிய ஆசிரியர் அனைவருக்கும் சமர்ப்பணமாக்கப்பட்டுள்ள இந்நூல் ஆசிரியத்துவம் பற்றிச் சுருக்கமாக விளக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 89749).

9313

ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2005 வழிகாட்டி நூல். பி.உமாசங்கர். கொழும்பு 10: பி.உமாசங்கர், விரிவுரையாளர், ஸ்ரீலங்கா தொழில் நுட்பக் கல்லூரி, 3வது பதிப்பு, ஜூலை 2005. (கொழும்பு: கே.ஜே.என்டர்பிரைசஸ்).

iv, 75 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 28x20.5 சமீ., ISBN: 955-98622-3-5.

இலங்கையின் தகவல்கள், உலகின் முக்கிய தகவல்கள், விளையாட்டுக்கள், மருத்துவமும் விஞ்ஞான தொழில்நுட்பவியலும், விண்வெளி அறிவியல், சுற்றாடலும் சமூகவியலும், சினிமாத்துறை, சர்வதேச ரீதியிலான முக்கிய விடயங்கள், பல்துறை விடயங்கள், அண்மைக்கால விடயங்கள் ஆகிய பத்துப் பிரிவுகளின்கீழ் பொது அறிவுத் தகவல்கள் இந்நூலில் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156754).

9314

ஆரம்பக் கல்வி. ச.நா.தணிகாசலம்பிள்ளை. யாழ்ப்பாணம்: கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை, சுபஸ்தான், 672, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, ஒக்டோபர் 2008, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (கொழும்பு 6: கே.வி.எல். பிரிண்டர்ஸ், 146-2/1, காலி வீதி).

xvi, 104 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-50250-2-7.

ஆரம்பக்கல்வியெனும் அத்திவாரம், ஆரம்பக் கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சி களும், ஆரம்பக்கல்வி சார்ந்த தேர்ச்சிகள், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டம்,

தேசியக் குறிக்கோள்கள், அடிப்படைத் தேர்ச்சிகள், ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், ஆசிரியர்கள் தேர்வும் பயிற்சியும், ஆரம்பக்கல்விப் பாடசாலைகள், ஆரம்பக் கல்வி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், புதிய கல்விச் சீர்திருத்தங்கள், அதிபர் முகாமைத்துவம், ஆரம்பக்கல்வி பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு, ஆரம்பக் கல்விப் பாடசாலை வகுப்பறை ஒழுங்குகள், ஆரம்ப வகுப்பறையும் வளப்பிரயோகமும், பின்னடைவும் மெல்லக்கற்போரும், குறைபாடுகளை இனங்காணாமை, போக்குவரத்துக் கஷ்டம், ஆரம்பக் கல்விப் பாடத்திட்ட நடைமுறைகள், ஆரம்பக் கல்வியும் மாணவர் சமுகமளிக்காமையும், குழுக்கற்கை, கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் சமூகத்தை ஈடுபடுத்தல், சமூகத்தவர்களது உதவி, ஆரம்பக்கல்வி கற்பிக்கப்படும் பாடசாலைகளில் மேலெழும் பிரச்சினைகள், ஆசிரியருக்கு கல்வி உளவியல் எவ்வகையில் உதவுகின்றது, ஆரம்பப் பிரிவினர்க்குப் பொருத்தமான கற்பித்தல் முறைகள், கல்விச் சிந்தனையாளர்கள் சிலரின் ஆரம்பக்கல்வி பற்றிய கருத்து, வீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப் பருவ விருத்தி, ஆரம்பக்கல்வியும் தர உறுதிப்பாடும், அபிவிருத்தி என்றால் என்ன? புதிய கல்வி மறுசீரமைப்பின் அடிப்படையில் நவீன கற்றல் கற்பித்தல் முறைமைகள், ஆரம்பக் கல்வியின் தரத்தை உயர்த்துதல் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை இந்நூல் விரிவாகக் கூறுகின்றது. இந்நூலாசிரியர், ச.நாகமுத்து தணிகாசலம்பிள்ளை, 1996இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெற்றவர். வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றியவர். அவரது அனுபவ வெளிப்பாடு இந்நூலில் துலக்கமாகத் தெரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 206729).

9315

இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்: கல்வியியல் கட்டுரைகளின் தொகுப்பு. ஆனந்தமயில் நித்திலவர்ணன். யாழ்ப்பாணம்: திருமதி நிஷாந்தினி நித்திலவர்ணன், இல.10, வளாக வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜூலை 2008. (யாழ்ப்பாணம்: குரு பிறின்ரேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).

viii, 65 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

மாற்றத்திற்குள்ளாகும் போட்டிப் பரீட்சைகளும் பரீட்சார்த்திகள் விருத்திசெய்ய வேண்டிய திறன்களும், இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வியில் நவீன மாற்றங்கள், தேசிய ஆற்றலையும் அபிவிருத்தியையும் அதிகரிக்க அனைவருக்கும் விஞ்ஞானக் கல்வி காலத்தின் தேவை, இலங்கையின் ஆசிரியர் கல்வியில் எதிர்நோக்கப்படும் சவால்கள், பாடசாலைகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி, ஆசிரியர்களும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமும், கல்வித் தொழில் நுட்பமும் கற்றல்-கற்பித்தல் செயற்பாடும், கட்டுருவாக்க கற்றல் கொள்கை, தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை: சில அவதானிப்புகள், பரீட்சைக்குத் தயாராவதற்கான சில அடிப்படைக் குறிப்புகள், கல்வி என்பது என்ன? சில நவீன சிந்தனைகள் ஆகிய 11 கட்டுரைகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்

பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ். பல்கலைக்கழகத்தின் கல்வியியல் துறையில் உதவி விரிவுரையாளர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 200227).

9316

ஒடுக்கப்பட்டோர் கல்வி: மலையகக் கல்வி பற்றிய விடயஆய்வு. தை.தனராஜ். கொழும்பு 6: இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை, இல.11, இராஜ சிங்க வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2008. (கொழும்பு 6: டெக்னோ பிரின்டர்ஸ், 55, கலாநிதி ஈ.ஏ. குரே மாவத்தை).

106 பக்கம், தகடு, விலை: ரூபா 200.00, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1810-06-1.

மலையக மக்களின் கல்வி பற்றிய ஆய்வு நூல். மலையக மக்களின் வரலாற்றுப் பின்னணி, மலையகத்தில் உரிமைப் போராட்டங்களும் தொழிற்சங்கங்களின் தோற்றமும் மலையகக் கல்வியின் எதிர்காலம் போன்ற இயல்களின் ஊடாக மலையகக் கல்வியின் பன்முகப் பார்வையை முன்வைக்கின்றது. ஆரம்ப கட்டங் களில் தொழிலாளர்களே தமது தோட்ட லயன்களில் திண்ணைப் பள்ளிக்கூட சாயலில் பாடசாலைகளை அமைத்தனர். பின்னர் மிஷனரிகளும் சமய நிறுவனங்களும் சில பாடசாலைகளை ஆரம்பித்தன. ஆயினும் மலையகக் கல்வி மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் இன்றுவரை அணுகப்பட்டு வந்துள்ளது என்பதை ஆசிரியர் வாரலாற்றுக் குறிப்புகளினூடாக இவ்வாய்வில் நிறுவுகிறார். பேராசான் கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் நினைவுப்பேருரையாக 22.06.2008இல் நிகழ்த்தப்பட்ட உரையின் நூல்வடிவம். இந்நூல் அறிமுகம், கல்வி என்றால் என்ன, கல்வியின் சமூகவியல், தொழிற்பாடுசார் நோக்கும் முரண்பாடுசார் நோக்கும், தாராண்மைவாத நோக்கில் கல்வி, ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி- ஒரு மாதிரிகை, சகலருக்கும் கல்விக்கான முன்னெடுப்புகள், ஜொம்ரியன் மாநாடு, உலகக் கல்வி மன்றம், மலையக மக்களின் வரலாற்றுப் பின்னணி, மலையகத்தில் உரிமைப் போராட்டங்களும் தொழிற்சங்கங்களின் தோற்றமும், மலையகக் கல்வி, மலையகக் கல்வியின் எதிர்காலம், முடிவுரை ஆகிய அத்தியாயங்களினூடக விரிந்து செல்கின்றது. நூலாசிரியர் திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்தின் முதுநிலை விரிவுரையாளர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 203004).

9317

கல்விச் சமூகம். ஏ.எல்.நௌபீர். இறக்காமம்: Centre for Education Revival Irakkamam (CERI), 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

xvi, 160 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0952-02-1.

கல்விச் சமூகம் பற்றிய ஏ.எல்.நௌபீர் அவர்களின் கட்டுரைகளைக் கொண்டதாக இந்நூல் அமைந்துள்ளது. அறிவுச் சமூகத்தின் தேவை, நமது பாடசாலைகள்: ஒரே புள்ளியை நோக்கி நகரும் முரண்பட்ட மூன்று தரப்பினர், நமது பாட

சாலைகள்: பெற்றோர், அதிபர் இணைவுகளும் விடுபடல்களும், மாணவர்களின் வீட்டு வேலை: பெற்றோர், ஆசிரியர் கவனக் குவிப்பு அவசியம், இன்றைய கல்வி பற்றிய செல்நெறிகளும் எமக்கான கல்வியும், ஒழுக்கக் கல்வியும் பின்னடைவிலிருந்து மீள்தலும், 21ஆம் நூற்றாண்டுக் கல்வி இலக்கு: எமது பின்புலமும் இருப்பும், எமது பாடசாலைகளில் கழிவுகளை முகாமை செய்தல், முஸ்லீம் சமூகம்: கல்வி, புலமைப் பரிசில்கள் மரபும் மாற்றமும் போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தின் கல்வியறிவு வளர்ச்சியில் ஆசிரியரின் அக்கறை கட்டுரைகளில் பிரதிபலிக்கின்றது. கல்வி மேம்பாட்டின் பங்காளர்களது வகிபாகங்கள் குறித்து கவனயீர்ப்புச் செய்யும் இந்நூல் இப்பங்காளர்களின் இன்றைய நிலைமைகளை விமர்சனரீதியில் பகுப்பாய்வு செய்கின்றது. ஆதம் லெப்பை நௌபீர் 1973இல் இறக்காமத்தில் பிறந்தவர். சமுர்த்தி முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். 1999இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236915).

9318

கல்விச் சீர்மியம். சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: பேராசிரியர் சபா.ஜெயராசா, கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெலவேலி, 1வது பதிப்பு, 2002. (யாழ்ப்பாணம்: போஸ்கோ ஆர்ட்ரோன் பிறின்டேர்ஸ், நல்லூர்).

(3), 104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

கல்விச் சீர்மியம் (Educational Counselling) தொடர்பான அனைத்துக் கூறுகளையும் ஒன்றிணைத்துத் தமிழில் வெளிவரும் ஒரு முன்னோடி நூலாக இது அமைந்துள்ளது. தனியாள் செயற்பாடுகள், சீர்மியம் என்ற எண்ணக்கரு விளக்கம், கல்விசார் ஆற்றுப்படுத்தல், கல்வியில் தரக்காப்பீடும் இடர்சிக்கிய மாணவர்களும், கல்வியில் உளநலன், தொடர்தொழில் ஆற்றுப்படுத்தல், இலங்கையும் தொடர் தொழில் ஆற்றுப்படுத்தலும், தீர்வுகளை நோக்கிய உளச்சிகிச்சை முறைகள், பிரச்சினை விடுவிக்கும் சீர்மிய நடவடிக்கை, சீர்மியச் செயல்முறை, சீர்மியச் செயல்முறையின் படிநிலைகள், சீர்மியச் செயல்முறையின்போது எதிர்கொள்ளப் படும் பிரச்சினைகளும் மீள்வதற்கான நுட்பங்களும், செவிமடுத்தல் நுட்பங்கள், உளக் குலைவு மேலைத்தேச உளவியல் அணுகுமுறைகளின் அபத்தங்கள், ஆளுமை நடையியலும் சீராக்கலும் ஆகிய 15 தலைப்புகளில் கல்விச் சீர்மியம் பற்றிய ஆழமான கருத்துக்கள் இந்நூலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131661).

9319

கல்வித் திட்டமிடல். சபா.ஜெயராசா. யாழ்ப்பாணம்: அபிவிருத்தி நிறுவன வெளியீடு, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: முரசொலி பப்ளிக்கேஷன்ஸ்,)

60 பக்கம், விலை: ரூபா 14.00, அளவு: 20.5x14 சமீ.

கல்வியின் ஒரு துறையாக அமைவது கல்வித்திட்டமிடல். கல்வியியல், பொருளியல், திட்டமிடல் உபாயங்கள் என்ற முப்பொருள்களைக் கோவைப்படுத்தும் அகல்விரி பண்புடையதாகக் கல்வித் திட்டமிடல் விளங்குகின்றது. இத்துறையின் தத்துவங்களை உள்ளடக்கித் தமிழில் வெளியிடப்படும் முதலாவது நூலாக இந்நூல் கல்வியியலாளர்களால் கருதப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 117788).

9320

கல்வியியலில் விடய ஆய்வு. பாலசுப்பிரமணியம் தனபாலன். யாழ்ப்பாணம்: திருமதி கர்ணி தனபாலன், துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, ஜூலை 2002. (யாழ்ப்பாணம்: டெக்னோவா ஒப்செட் பிரின்டர்ஸ், 717 காங்கேசன்துறை வீதி).

(2), 98 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூலில் கல்வியியல் விடய ஆய்வுகள் தொடர்பாக அடிப்படை விடயங்கள் ஆய்வு அணுகுமுறைகள் ஆய்வுத்திறன்களை வளர்த்தல் தொடர்பான வழிகாட்டல்கள் முன்மொழியப்பட்டுள்ளன. மேலும் கற்றல்-கற்பித்தல் முறையாக விடய ஆய்வின் பரிமாணங்கள், விசேடமாக கல்வி முகாமைத்துவ நவீன செல்நெறிகளில் விடய ஆய்வுக் கற்கைகளின் முக்கியத்துவம் என்பன எடுத்து விளக்கப்படுவதுடன் மாதிரி விடய ஆய்வுக் கற்கைகளும் விடைகளுக்கான வழிகாட்டல்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக இதுவரை நிகழ்ந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை விடய ஆய்வுக் கற்கை பரீட்சை வினாத்தாள்களும் அவற்றுக்கான விடைக்குறிப்புகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நான்கு இயல்களில் கல்வியியலில் விடய ஆய்வு, விடய ஆய்வு எண்ணக் கருக்கள், விடய ஆய்வில்-ஆய்வுத்திறன், ஆக்கத்திறன், கற்றல் - கற்பித்தல் முறையாக விடய ஆய்வு, கல்வி முகாமைத்துவ செல்நெறிகளில் விடய ஆய்வு, இலங்கையின் கல்வி நிர்வாக முகாமைத்துவ வளர்ச்சி ஆகிய தலைப்புகளில் நான்கு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133659).

9321

கிராமியம்-கல்வி-மேம்பாடு: சமூகவியல் பார்வைகள். இ.இராஜேஸ்கண்ணன். உடுப்பிட்டி: சாத்வீக சுருதி, இமையாணன் கிழக்கு, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (உடுப்பிட்டி: ஆகாயம் பதிப்பகம், இமையாணன் கிழக்கு).

(5), 102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4900-00-4.

கிராமிய வாழ்வின் அசைவியக்கத்தின் ஆதாரவிசையான கல்வி, இதிலுள்ள 10 கட்டுரைகளினதும் மையப்பொருளாகவுள்ளது. கிராமியச் சமூகவியல், கல்வியின் சமூகவியல் ஆகியவற்றினைத் தன் ஆய்வார்வத்துறையாக வரித்துக்கொண்ட இராஜேஸ்கண்ணனின் தெளிந்த பார்வையும் பகுப்பாய்வுத்திறனும் இக்கட்டுரைகளில் முழுமையாகப் பளிச்சிடக்காணலாம். இந்நூலில் கல்வியும் கிராமிய மேம்பாடும்: ஒரு கல்வியின் சமூகவியல் தரிசனம், உட்படுத்தல் கல்வி: மனப்பாங்கு

மாற்றமும் சவால்களும், ஆசிரிய முன்மாதிரிகளும் தலைமைத்துவமும், இளையோர் பண்பாடும் சமூக விலகலும்: நிகழ் போக்குகளும் மாற்றத்திற்கான உபாயங்களும், கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்: நிலைபேறும் மாற்றமும், யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும், போரின் பிந்திய கிராமிய மேம்பாட்டில் சனசமூக நிலையங்கள், பேண்தகு மேம்பாட்டில் சமூக வலுவூட்டலின் வகிபாகம், உலகமயமாக்கமும் மேம்பாடும், முரண்பாடு: முகாமையும் உருமாற்றமும் ஆகிய தலைப்புகளில் அவ்வப்போது எழுதப்பட்ட 10 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236664).

9322

குழந்தைக் கல்விச் சிந்தனைகள். சபா. ஜெயராசா. யாழ்ப்பாணம்: பொஸ்கோ வெளியீடு, நல்லூர், 1வது பதிப்பு, 2001. (நல்லூர்: பொஸ்கோ பதிப்பகம்).

(4), 103 பக்கம், விலை ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

கல்விச் செயல்முறையிலும் கருத்தியலிலும் விசைகொண்ட மாற்றங்களும் அபிவிருத்திகளும் நிகழ்ந்து வருகின்ற இன்றைய காலகட்டத்திலே இந்நூல் ஒரு பயன்மிக்க புலமைச் செயற்பாடாக அமைந்துள்ளது. குழந்தைக் கல்விக் கலைத் திட்டத்தை நன்கு கட்டமைப்புச் செய்வதற்குரிய சிந்தனைகள் பலவற்றை நூலாசிரியர் நன்கு திட்டமிட்டுத் தொகுத்து வழங்கியுள்ளார். ஜோன் ஹென்றி பெஸ்டலோசி, ஜோன் பிரட்ரிக் கேர்பார்ட், பிரெட்ரிக் புரொபல், மரிய மொன்ரிசோரி அம்மையார், ஜி.ஸ்ரான்லி ஹோல், அல்பிரட் பீனே, ஜீன் பியாசே, புறூனர், பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை, அழ.வள்ளியப்பா, சோமசுந்தரப் புலவர், சிறாரைக் கேடுறுத்தல் தொடர்பான சமூக உளவியல் காட்டுருக்களின் மதிப்பு, சிறார் கல்வி தொடர்பான மாற்றுவகைச் சிந்தனை, புலன் தழுவிய கற்றல், விளங்கும் திறன் வளர்ச்சி, அசைவுக் கல்வி, பாலர் கல்வியில் இசையாக்கல், சிந்தனையும் காரணங் காணலும், பேச்சுத்திறன், மனவெழுச்சி நடத்தை, பாலர் கதைகள் ஆகிய 22 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131100).

9323

குழந்தைகள் உலகம். நா.செல்லப்பா. யாழ்ப்பாணம்: வண்ணார்பண்ணை வடகிழக்கு சனசமூக நிலையம், நீராவியடி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1972. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

(3), 201 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 4.00, அளவு: 18.5x13 சமீ.

பாலர் கல்வி பற்றிய சமகால முக்கியத்துவத்தையும், வரலாற்றுப் பின்னணியையும், அதன் சமூகப் பயன்பாட்டையும், இந்நூல் அழகாக விபரிக்கின்றது. குழந்தைகள் இல்லம் அன்றும் இன்றும், மொன்ரிசோறி அமைப்பு, உடல் அவயவப் பயிற்சியும் உடல் அசைவுத் திறமை வளர்ச்சியும், இந்திரியப் பயிற்சியும் சங்கீதமும், அறிவுப் பயிற்சி, புதிய குழந்தை-புதிய மனிதன் ஆகிய அத்தியாயங்களில் இந்நூல் விரிவாக

எழுதப்பட்டுள்ளது. பாலர் கல்வி பற்றி இலங்கையில் விழிப்புணர்வு ஏற்பட்டிருந்த காலகட்டத்தில் வெளியிடப்பட்ட முன்னோடி நூல்களுள் முக்கியமானதாக இந்நூல் கருதப்பட்டிருந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40439).

9324

சமகாலக் கல்வி வளர்ச்சி. சபா.ஜெயராசா. கொழும்பு 7: அகவிழி வெளியீடு, 3, டொறிங்டன் அவெனியூ, 1வது பதிப்பு, மார்கழி 2006. (கொழும்பு 6: டெக்னோ பிரின்ட், 55, ஈ.ஏ.குரே மாவத்தை).

56 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 21x15 சமீ.

21ம் நூற்றாண்டில் காலடி பதித்து நிற்கும் இலங்கையின் கல்வித் துறையில் கல்விசார் கொள்கைகளும் நடைமுறைகளும் பன்னாட்டு ரீதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அமையவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. உலக சந்தையின் அழுத்தங்களுக்கு ஏற்றவாறு இயங்கத் தொடங்கிவிட்ட இன்றைய கல்வித்துறை, மனித வளம் உள்ளிட்ட இயற்கை வளங்களைப் பராமரிக்கமுடியாத சுரண்டலுக்கு உள்ளாகும் நிலையால் பாதிக்கப்படுவதாகவும், உலகம் தழுவிய நுகர்ச்சிப் பண்டமாக கல்வி மாற்றம்பெற்றுள்ளதாகவும் கூறும் இந்நூல், இலங்கையில் அதிக பணத்தை உள்வாங்கி, குறைந்தளவு மக்களுக்கு நன்மை பயக்கும் பணியினை வழங்குவதாகக் குற்றஞ்சாட்டுகின்றது. இவற்றிற்கான மாற்றத்தினை நோக்கிய விழிப்புணர்வினை இந்நூல் வழங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196595).

9325

சீரிய சிந்தனை: விசேட கல்வி அடிப்படைகள். இந்திராதேவி செல்வநாயகம், ஆறுமுகம் ரவீந்திரன். யாழ்ப்பாணம்: தேசிய கல்வியியல் கல்லூரி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, 98 பக்கம், படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

விசேட கல்வி ஓர் அறிமுகம், உடல் ஊனமுறுதலும் அதனைத் தாழ்த்துவதற்கான வழிவகைகளும், பார்வை இழப்பும் பார்வையற்றவர்களுக்கான கல்வியும், பொதுவான உளவளர்த்தியுடையோர், உட்படுத்தற் கல்வி, தனியாள் ஆய்வும் விடய ஆய்வும் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இத்துறை தொடர்பான அடிப்படைத் தளமொன்றை படிப்போர் மனதில் உருவாக்க இந்நூல் வழிசெய்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 191957).

9326

புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும். இந்திரா லிலாமணி கினிகே (ஆங்கில மூலம்), எம்.எச்.எம்.யாக்கூத் (தமிழாக்கம்).

பாதுக்கை: கல்வி வாண்மைத் தேர்ச்சி விருத்தி மையம், மீப்பே சந்தி, 1வது பதிப்பு, மார்ச் 2008. (நுகேகொடை: வரையறுக்கப்பட்ட தீபானி அச்சு/வெளியீட்டு (தனியார்) கம்பெனி, 464, ஹைலெவல் வீதி, கங்கொடவில).

vi, 136 பக்கம், விலை: ரூபா 290., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-1853-03-7.

சிறந்த பொதுக்கல்வி என்பது யாது, புதிய சகத்திரத்திற்கு புதியதொரு கலைத்திட்ட நோக்கு, புதிய சகத்திரத்தில் பாடசாலையை நாடிவரும் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டம், புதிய சகத்திரத்தின் முதலாவது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்ட மறுசீரமைப்பு -கனிஷ்ட இடைநிலை, புதிய சகத்திரத்தின் முதலாவது இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்ட மறுசீரமைப்பு - சிரேஷ்ட இடைநிலை, பாடசாலையின் சிறப்பான ஒரு பணி-சிந்தனைத்திறன் விருத்தி, சமூகத்திறன் விருத்தி, சுயதிறன் விருத்தி, புதிய சகத்திரத்தில் களமிறங்கும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், ஆசிரியர் வகிபாகத்தின் விரிகை, நிலை மாற்ற ஆசிரியர் வகிபாகம், கற்றல்-கற்பித்தலை விரிவுபடுத்தும் கருவிகள், தேசிய கல்வி நிறுவக கலைத்திட்ட அபிவிருத்திப் பணி, புதிய சகத்திரத்தின் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வெற்றிக்காக கலைத்திட்டத் தலைவர்களை விருத்தி செய்தல், கலைத்திட்ட மறுசீரமைப்புகளின் வெற்றிக்காக மாற்றமடையவேண்டிய பரீட்சை முறை ஆகிய 15 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. புதிய சகத்திரத்தின் முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பு-2007ம் ஆண்டு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் தேசிய கல்வி நிறுவக விஞ்ஞான, தொழில்நுட்பபீட, கலைத்திட்ட அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் நாயகமாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234189).

9327

பெற்றோர்களே பிள்ளைகளே. திருநாவுக்கரசு கமலநாதன். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 743, காங்கேசன்துறை வீதி, யாழ்.இந்துக் கல்லூரிக்கு முன்பாக).

(5), 106 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19.5x13.5 சமீ.

பிள்ளைகளுக்கான பாடசாலைகளை நம்பிக்கையுடன் தெரிவுசெய்தல், பாடசாலைகளை தெரிவுசெய்யும் தற்போதைய நடைமுறைகள், பாடசாலைகளை நம்பிக்கையுடன் தெரிவுசெய்யும் வழிமுறைகள், வெற்றிகரமான கற்றலுக்கான பாதைகள், கற்றல் நுட்பங்கள், வெற்றிகரமான கற்றலை மட்டுப்படுத்தும் காரணிகள், வாசிப்புப்பழக்கம், SQ3R வாசிப்பு முறைமை, இலகு வாசிப்புக்கான துரித வழிகள் ஆகிய தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கல்வியில் நம்பிக்கையையும் அதன்மூலம் வாழ்க்கையில் பெருவிருத்தியையும் அடைவதற்கு இந்நூல் உதவுகின்றது. கலாநிதி தி.கமலநாதன், தேசிய கல்வியியற் கல்லூரியில் பணியாற்றியவர். புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236454).

370.1 கல்வி நிறுவனங்கள், மாணவர் சங்கங்கள்

9328

சங்கமம்: ஒரு வரலாற்றின் காவியம். *த.சரத்பாபு, பா.தனபாலன் (இதழாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய், 1வது பதிப்பு, நவம்பர் 2005. (மானிப்பாய்: கணினியியல் கல்லூரி,* College of Computer Technology, *சின்னப்பா வீதி, நவாலி தெற்கு).*

xx, *228 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 500., அளவு:* 29x20 *சமீ.*

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் வரலாற்றுத் தொகுப்பு இதுவாகும். வாழ்த்துரை, வாழ்த்துச் செய்திகள், இதழாசிரியர் உரை, பாடசாலை மரபுரிமைகள், கலாநிதி தி.கமலநாதன்-வாழ்வும் பணியும், கல்லூரிக் கீதம், கல்லூரி வரலாறு, தீவகக் கல்வி வலயம், யாழ்ப்பாணக் கல்வி வலயம், தென்மராட்சிக் கல்வி வலயம், வடமராட்சிக் கல்வி வலயம், வலிகாமம் கல்வி வலயம், கிளிநொச்சி கல்வி வலயம், விளம்பரங்கள் ஆகிய 14 தலைப்புகளில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158864).

9329

நாவலர் பெருமான் ஏவலின் பேரில் இணுவில்குடி வேங்கடாசலம் ஐயர் ஸ்தாபித்த இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம் (இணுவில் இந்துக் கல்லூரி) வரலாறு. *ச.வே.பஞ்சாட்சரம், மா.ந.பரமேஸ்வரன், இ.விக்னேஸ்வரன். இணுவில்: பழைய மாணவர்கள், இணுவில் இந்துக் கல்லூரி, 2வது பதிப்பு, 2000, 1வது பதிப்பு, 1981. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x15 *சமீ.*

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வரலாறு பற்றிக் கூறும் சர்ச்சைக்குரிய சிறு நூல் இதுவாகும். இப்பாடசாலை, ஆறுமுக நாவலரின் ஏவலின்பேரில் இணுவில் வேங்கடாசலம் ஐயர் கட்டியதான பாடசாலை என்ற வரலாற்றை நியாயப்படுத்தும் வகையில் ஆதாரங்களுடன் இச்சிறுநூலில் பதிவுசெய்துள்ளார்கள். இப்பாடசாலை அம்பிகைபாகர் என்பவரின் குடும்பச் சொத்தாக இருந்ததென்ற கருத்தை இந்நூல் மறுக்கின்றது.

9330

மட்டக்களப்பு பிரதேச நவீன இலக்கிய வளர்ச்சியும் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியும். *செ.யோகராசா. மட்டக்களப்பு: மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரி, 1வது பதிப்பு, நவம்பர் 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 *சமீ.*

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியின் கலைவிழா 10.11.2005 அன்று நடைபெற்றபோது, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறைத் தலைவரான செ.யோகராசா அவர்கள் ஆற்றிய சிறப்புரையின் நூல்வடிவம். மட்டக்களப்புப் பிரதேச இலக்கிய வளர்ச்சிக்கு, குறிப்பாக நவீன இலக்கிய

வளர்ச்சிக்கு மேற்படி ஆசிரியர் கல்லூரியும், அதன் மாணவர்களும் ஆற்றிய பணிகள் பற்றிய விதந்துரைப்பாக இவ்வுரை அமைந்துள்ளது.

9331

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி: 175ஆவது ஆண்டு மலர். *மலர்க்குழு. யாழ்ப்பாணம்: வேம்படி மகளிர் கல்லூரி, 1வது குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).*

liv, *365 பக்கம், தகடுகள், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 26x19 *சமீ.*

திரு. பொன்னம்பலம் விஜயகுமாரன், திருமதி சாந்தநாயகி வீரசிங்கம், திருமதி சிவாம்பிகை பொன்னம்பலம் ஆகியோரை மலராசிரியர்களாகக் கொண்டு வெளிவந்துள்ள பாடசாலை சிறப்பு மலர் இது. பிரித்தானிய காலனிததுவ காலத்தில் Rev.Dr. Peter Percival *(1803-1882) அடிகளார் 1838இல் பெண்களுக்காக இக் கல்லூரியை ஸ்தாபித்திருந்தார்.* The Torch Bearer *2013 என்ற ஆண்டுமலர்த் தலைப்புடன் இதுவும் வெளிவந்துள்ளது. மேற்படி கல்லூரி 1925இல் தன் முதலாவது கல்லூரி மலரை* Miss Scowcroft *என்பவரை முதலாவது மலராசிரியராகக் கொண்டு வெளியிட்டிருந்தது.*

9332

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை: இருபத்தைந்தாவது ஆண்டு மலர். *மலர்க்குழு. ஜேர்மனி:* Tamilischer Bildungsverein, Deutschland e.V, Postfach *1646*, *59159* Kamen, *1வது பதிப்பு, ஜுன் 2014. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

98 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 30x21 *சமீ.*

1989ஆம் ஆண்டில் தை 18இல் டோட்முண்ட் கரித்தாஸ் நிறுவன உதவியுடன் தொடக்கப்பட்ட ஜேர்மன் தமிழ்க்கல்விச் சேவை தனது இருபத்தைந்தாவது ஆண்டை வெள்ளிவிழாவாகக் கொண்டாடிய வேளையில் வெளியிடப்பட்ட சிறப்பு மலர். இருபத்தைந்து ஆண்டுக்காலத்தில் ஜேர்மன் தமிழர் சமூகத்தில் தமிழ்க்கல்வி ஏற்படுத்திய மாற்றங்களை இம்மலர் ஒரு ஐந்தொகையாகக் காட்டுகின்றது. ஜேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் பணிகள் பல்பரிமாணம் கொண்டவை. அவை தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்குவதுடன் மட்டும் நிற்கவில்லை. தமிழ்மொழிப் பொதுப்பரீட்சையொன்றை ஒவ்வொரு ஆண்டும் நடத்திச் சான்றிதழ் வழங்கல், கல்விக் கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றை நடத்துதல், வேற்றுமொழி ஆசிரியர்களையும் இணைத்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், மாணவர் கருத்துக்களம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகளை மாணவர்களிடையே ஊக்குவித்தல், பயிற்சிப் புத்தகங்கள், சிறுவர் நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைத் தயாரித்தல், வெளியிடல், அதன் மூலம் இரண்டாம் தலைமுறை தமிழ் எழுத்தாளர்களை புகலிடத்தில் உருவாக்குதல் என நீண்ட பணிகளை முன்னெடுத்துவந்துள்ளது. இம்மலரின் வெளியீட்டுக் குழுவில் பொ. ஸ்ரீஜீவகன், கலாதேவி மகேந்திரன், வயிரமுத்து சிவராஜா,

அம்பலவன் புவனேந்திரன், பொன்னையா புத்திசிகாமணி, கிளி சிறீஜீவகன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

380 வர்த்தகம், தொடர்புகள், போக்குவரத்து

381 வர்த்தகம்

9333

இடைநிலை வர்த்தகப் புவியியல்: வியாபாரப் பொருள்களும் உலக வர்த்தகமும். *எல்.இடட்டிலித் தாம்பு (ஆங்கில மூலம்), சோ.செல்வநாயகம் (தமிழாக்கம்). இலங்கை: வெளியீட்டுப் பிரிவு, இலங்கை அரசகரும மொழித் திணைக்களம், கொழும்பு 7, 1வது பதிப்பு,1962. (இலங்கை: அரசாங்க அச்சகம், கொழும்பு).*

ix, *436 பக்கம், வரைபடங்கள், விலை:* 21x13.5 *சமீ.*

இந்நூல் An Intermediate Commercial Geography: Part One: Commodities and World Trade *என்ற தலைப்பில்,* L.Dudley Stamp *அவர்கள் எழுதி லண்டன்* Longmans, Green and Co *நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூலின் தமிழாக்கம். புதுப் புவியியல், புவியமைப்பு, காலநிலையும் வானிலையும், உலகின் பிரதான காலநிலைப் பிரதேசங்கள், மனிதனின் பரம்பலும் தொழில்களும், தானியவகைகள், ஏனையத் தாவர உணவுப்பொருள்கள், இறைச்சி, பாற்பண்ணை விளைவு, மீன் முதலியன, நெசவுக் கைத்தொழிலுக்கான மூலப்பொருள்கள், ஏனையத் தாவர மூலப்பொருள்கள், வலுப்பொருள்கள், உலோகங்கள், உள்நாட்டுப் போக்குவரத்து, கப்பற் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து ஆகிய பதினைந்து இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85105).*

391.7 அணிகலன்கள், உடல் அலங்காரங்கள்

9334

நீங்கள் அழகாக இருக்கப் புது இரகசியம். *புஷ்பராணி யோகராசா. யாழ்ப்பாணம்: சசிகலா வெளியீடு, 36/11, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1980. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி, சுண்டிக்குளி).*

(3), 48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 4.50, அளவு: 21.5x13.5 *சமீ.*

இயற்கையும் அழகும், காவியங்களும் அழகும், பொருள்களும் அழகும், அழகின் முக்கியத்துவம், அழகின் இருப்பிடம், தோல், சருமம் பொன்நிறமாகும் இரகசியம், பொன் மேனியைப் பேணும் முறை, தலைமயிர், நெற்றி அழகு, கண் அழகு, மூக்கு அழகு, மீசை தாடி அழகு, உதட்டின் அழகு, பல்லழகு, காது அழகு, முக அழகு, இடைப்பட்ட அங்க அழகு, கீழ் அங்க அழகு ஆகிய 19 அத்தியாயங்களில்

இந்த அழகியல் நூல் சித்திர விளக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 88603).

392.5 திருமணங்கள், சடங்கு முறைமைகள்

9335

கல்யாணப் பொருத்தங்கள். *பொ.சங்கரப்பிள்ளை. கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1980. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).*

xii, *68 பக்கம், விலை: ரூபா 8.00, அளவு:* 21x14 *சமீ.*

இந்நூல் கல்யாணப் பொருத்தங்கள் பற்றிய ஒரு சோதிட நூலாகும். சோதிடத்தில் நம்பிக்கையில்லாவிட்டால் கல்யாணப் பொருத்தங்கள் பார்க்க வேண்டியதில்லை என்று கூறும் ஆசிரியர், திருமணப் பொருத்தத்திற்கு சோதிட அடிப்படையிலான விளக்கங்கள் என்ன? அனுபவச் சான்றுண்டா? இவற்றின் அடிப்படையில் கல்யாணம் செய்யலாம் அல்லது செய்யக்கூடாது என்று சொல்லுமளவிற்கு இவை முக்கியமானவையா என்ற கேள்விகள் பலவற்றை எழுப்பி இந்நூல்வழியாக அவற்றிற்கு விடை காணமுயல்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83955).

9336

சைவ இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும். *நா.மகேசன். அவுஸ்திரேலியா: நா.மகேசன், ஓம் முருகா கழகம், சிட்னி, 3வது பதிப்பு, 2014,1வது பதிப்பு, மார்கழி 1998, இணையப் பதிப்பு, செப்டெம்பர் 2006. (அச்சகவிபரம் தரப்படவில்லை).*

(8), 72 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 *சமீ.*

சென்னையில் 14.7.2014இல் அமரரான திருமதி ஜானகி ஆனந்தவேலு ஆரணி, அவர்களின் நினைவாக மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ள இந்நூலின் மூல ஆசிரியர் நாகலிங்கம் மகேசன் புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் பிரதேசத்தில் வாழ்ந்துவருபவர். சைவ சமயத்தவர் பின்பற்றும் இறுதிச்சடங்கு நடைமுறைகளை புலம்பெயர் தேச அனுபவங்களைக் கருத்திலெடுத்து இந் நூலில் பதிவுசெய்திருக்கிறார். சடங்குகளுடன் தொடர்புள்ள பிரார்த்தனைப் பாடல்களும் தரப்பட்டுள்ளன.

9337

தமிழர் மணமும் தாலியும். *இ.சி.கந்தைய ஆச்சாரியார். தெல்லிப்பழை: அறிவுச் சுடரகம், வறுத்தலைவிளான், 1வது பதிப்பு, மே 1973. (தெல்லிப்பழை: குகன் அச்சகம்).*

(6), 39 பக்கம், விலை: ரூபா 2., அளவு: 22x14 *சமீ.*

திருமணத்தில் முக்கியமான மாங்கல்யத்தின் தத்துவத்தையும் அதன் முக்கியத்து வத்தையும் இந்நூலில் வறுத்தலைவிளான் பண்டிதர் விசுவகலாமணி இ.சி. கந்தைய ஆச்சாரியார் அவர்கள் விளக்கியுள்ளார். விஸ்வமலர் வெளியீட்டுத் தொடரில் ஐந்தாவது நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 155733).

9338

மங்கல தரிசனம்: சைவசமய மங்கலச் சடங்குகள். ஆய்வுப் பிரிவு. கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தின ஜோதி சரவணமுத்து மாவத்தை).

viii, 77 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

இந்துக்கள் தம் பிறவிப் பயனை அடைதற் பொருட்டு மேற்கொள்ளும் கிரியைகளை பூர்வம், அபரம் என இரண்டாக வகுக்கின்றனர். பூர்வக் கிரியைகள் பிறப்பு முதல் திருமணம் வரையாகச் செய்யப்படுபவை. அபரக்கிரியைகள் மரணத்தின் பின்னர் செய்யப்படுபவை. இந்நூல் இந்துக்கள் கடைப்பிடித்து ஒழுகும் பூர்வக் கிரியைகள் பற்றிக் கூறுகின்றது. சாந்தி முகூர்த்தம், பிள்ளைப்பேறு, துடக்குக் கழிவு, பெயரிடுதல், குழந்தையைக் கோயிலுக்குக் கொண்டு போதல், காது குத்துதல், சோறூட்டல், முதற் பல் முளைத்தல், ஏடு தொடக்குதல், தீட்சை, பூப்புனித நீராட்டு, திருமண நிச்சயம், திருமணப்பதிவு, பொன்னுருக்கல், மணப்பந்தல் என இன்னோரன்ன கிரியைகள் பற்றியும் இக்கிரியைகள் ஆற்றப்படும் முறை, அதற்கான காரணம் என்பனவற்றை விளக்கமாகக் கூறும் வகையில் அமைந் துள்ளது. மேலும், பல்வேறு விழாக்கள், மங்கல கிரியைகளுக்குப் பயன்படும் பொருட்களும் விளக்கங்களும், தேங்காய் உடைப்பதன் தத்துவம் ஆகியனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. நூலின் பிற்பகுதியில் திருமுறை வழிபாட்டுக்கு ஏற்ற திருமுறைகளும், மங்கள வழக்குகள் பற்றி கண்ணதாசன் கூறிய அர்த்தமுள்ள இந்து மதக் கருத்துகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

395 நாட்டார் வழக்காற்றியல்

9339

வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக (மட்டக்களப்பு நாட்டார் வழக் காற்றியல் கட்டுரைகள்). சித்திரலேகா மௌனகுரு (பதிப்பாசிரியர்). செங்கலடி: மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்-இலங்கை, வந்தாறு மூலை, 1வது பதிப்பு, 2004. (கல்முனை: கோல்டன் ஒப்செட் அச்சகம்).

xi, 221 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறையினரால் 2000ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23,24ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட இருநாட் கருத்தரங்கில் வாசிக்கப் பட்ட கட்டுரைகளில் பெரும்பாலானவற்றின் தொகுப்பு இது. இக்கருத்தரங்கின்

நோக்கம், மட்டக்களப்பு நாட்டார் வழக்கியலின் ஒரு கூறான வாய்மொழி மரபுகள் பற்றி ஆராய்வதுடன் இவ்வாய்மொழி மரபுகளை வரலாற்றுடன் இணைத்து நோக்குவதும் மட்டக்களப்பின் சமூக, அரசியல், பண்பாட்டு வரலாற்றை விளங்கிக் கொள்வதில் அவை வகிக்கக்கூடிய பங்கினைப் பரிசீலிப்பதுமாகும். மட்டக் களப்புச் சமூகம், அதன் வரலாறு ஆகியவை குறித்து, ஆய்வு செய்வதில் நாட்டார் வழக்காற்றியலையும் வாய்மொழி மரபுகளையும் பயன்படுத்தும் முறையியல் பற்றிய விவாதங்களைத் தூண்டும் நோக்கில் இத்தொகுப்பு அமைந்துள்ளது.

398 கிராமிய இலக்கியங்கள், நாட்டுக்கூத்துக்கள்

9340

அல்லிராணிக் கோட்டை: நாட்டுக்கூத்து. கபிரியல் ஞானப்பிரகாசம் தேவதாசன் (புனைபெயர்: பாஷையூர் தேவதாசன்). மன்னார்: முசலிப் பிரதேச சபை, முத்தரிப்பு, சிலாவத்துறை, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (மன்னார்: வாழ்வுதயம், பிரதான வீதி).

xxiii, 64 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 29.5x21 சமீ.

மன்னார் மாவட்டத்தில் முசலி முத்தரிப்பு என்னுமிடத்தில் அழிபாடுகளின் மத்தியில் காணப்படும் அல்லிராணிக் கோட்டையையும், கிளிநொச்சி மாவட்டத்தில் மண்டைக் கல்லாறு பாலத்திற்கும் பூநகரிக்கும் இடையில் அமைந்திருக்கும் அரசபுர அல்லிராணி தடாகத்தையும் கருப்பொருளாகக் கொண்டு எழுந்த நாட்டார் கதையொன்றை ஈழத்தின் பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்து வடிவில் இந் நூல் வழங்குகின்றது. அரச அங்கீகாரம் பெற்ற தமிழ் சிங்கள ஆங்கில மொழி பெயர்ப்பாளரான நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பகுதிநேர மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றியவர். இலங்கை கலாசார அமைச்சினால் கலாபூசணம் விருது வழங்கப்பெற்றவர்.

9341

அவாந்தி கதைகள்: சீன நாடோடிக் கதைகள். எச்.எம்.பி.முஹிதீன். கொழும்பு 13: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1970. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231 ஆதிருப்பள்ளித் தெரு).

66 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 16.5x10.5 சமீ.

தவறு என்னுடையது, ஒரு பசுவை விற்பது, மன்னிப்பு, மீன் மரத்தில் ஏறும், சூரியனா சந்திரனா?, சந்திரன், ஒரே பரிகாரம், எல்லாத் திசைகளிலும், உள்ளே இருப்பது நல்லதல்ல, ஈடு பண்ணுதல், தாகமுற்ற சிறுபை, மனைவியும் ரொட்டியும், அதன் வால் மூட்டையில் இருக்கிறது, நல்ல உபதேசம், மோதிரம், கடினமான கேள்விகள், இரும்புப் பாத்திரம் புத்திரன் பெற்றது ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட இந்த நாடோடிக் கதைகள் முன்னர் வீரகேசரி வார வெளியீட்டில் தொடராக வெளியிடப்பட்டவை. இக்கதைகளின் நாயகன் நஸ்ருதீன் அவாந்தி சீன நாட்டின் முஸ்லிம் பகுதியைச் சேர்ந்தவன் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124933).

9342

ஆசைக் கவிதைகள்: நாட்டுப் பாடல்கள். தமிழரசி சிவபாதசுந்தரம் (பதிப்பாசிரியர்). லண்டன்: தமிழரசி சிவபாதசுந்தரம், 18 Elms Gardens, Harrow, HAO 2RU, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2014. (சென்னை 600 017: சிக்ஸ்த்சென்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், 10/2 (8/2), பொலிஸ் குவாட்டர்ஸ் சாலை, தியாகராய நகர்).

192 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 150., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-83067-09-1.

இத்தொகுப்பில் சுருக்கமாக எழுதப்பட்ட 90 நாட்டாரியல் கட்டுரைகள் உள்ளன. அனைத்தும் ஈழத்து நாட்டுப்பாடல்களை விளக்குவதாயுள்ளன. இப்பாடல்களை நூலாசிரியரின் தந்தையார் பண்டிதர் மு.ஆறுமுகனார் அவர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் 1936ஆம் ஆண்டு முதல் தேடித்தொகுத்துப் பதிந்து வைத்திருந்தார். அத்தகைய தேட்டமான 3000க்கும் அதிகமான நாட்டுப்பாடல்களில் கைக்கெட்டிய பாடல்களை சுவையான இலக்கியநயம்மிக்க விளக்கங்களுடன் இக்கட்டுரைகளில் ஆசிரியர் பதிவுசெய்திருக்கிறார்.

9343

இம்மனுவல் நாட்டுக்கூத்து. ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (புனைபெயர்: செகராசசிங்கம்). யாழ்ப்பாணம்: ஆ.தேவசகாயம்பிள்ளை, 885/2, கடற்கரை வீதி, பாஷையூர், 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

xii, 102 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

புலவர் செகராசசிங்கம் எனப் பொதுவாக அழைக்கப்படும் முத்தாரக் கவிஞர், பாஷையூர் கூத்துப் புலவர், ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை இயற்றிய நாட்டுக் கூத்து. கிறிஸ்தவக் கூத்து மரபுக்கென திட்டவட்டமான அமைப்பு உண்டு. புலவர் அவர்கள் அந்த மரபு தவறாது பாத்திரங்களை தோற்றுவித்து, அந்த மரபுக்குரிய கதைப் பின்னலின் அடிப்படையில் கிறிஸ்தவத்தின் மேன்மையை நிலைநாட்டும் இந்த நாடகத்தை எழுதியுள்ளார்.(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115412).

9344

இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள். எஸ்.முத்துமீரான். சென்னை 600017: நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி, (கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்), தியாகராய நகர், 1வது பதிப்பு, மே 2007. (சென்னை 600002: உதயம் ஒப்செட்).

120 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-50199-1-0.

இன்று நூலுருவில் உள்ள பல்வேறு தாலாட்டுப் பாடல் பற்றிய ஆய்வு நூல்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து இஸ்லாமிய தாலாட்டுப்பாடல் பற்றிய கருத்தியலை

இந்நூலில் ஆழமாக விதைத்துள்ள முத்துமீரான், அம்பாறை மாவட்டம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், காலி, மாத்தறை, பொலன்னறுவை, அனுராதபுரம் முதலிய இடங்களில் கள ஆய்வு செய்து பதினாறு தாலாட்டுப்பாடல்களை உரிய விளக்கங்களுடன் இந்நூலில் பதிவுசெய்துள்ளார். இஸ்லாமிய இறை சிந்தனையை வாய்மொழிவாயிலாக வழங்குவதுடன், உறவுகள், விலங்குகள், பறவைகள், விளையாட்டுக்கள், மங்கல நிகழ்வுகள் போன்ற இன்னோரன்ன விடயங்களும் இப்பாடல்களுக்குள் பொதிந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 199090).

9345

ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள். கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 57/5, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, ஆனி 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

xxi, 199 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-51110-0-3.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கி.விசாகரூபன் இந்நூலில் தெய்வக் கதைகள், பேய்க் கதைகள், மந்திரக் கதைகள், மனிதப்பண்புக் கதைகள், அரச கதைகள், விலங்குக் கதைகள் ஆகிய ஆறு பிரிவுகளின் கீழ் ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து வழங்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205799).

9346

எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம். கீத்தாம்பிள்ளை (மூலம்), சு.வித்தியானந்தன் (பதிப்பாசிரியர்). மன்னார்: மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் வெளியீடு, 1வது பதிப்பு, ஆனி 1964. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, மெயின் வீதி).

xvi, 166 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21x14 சமீ.

மன்னாரைச் சேர்ந்த மாதோட்டப் புலவர் கித்தாம்பிள்ளை பாடிய கத்தோலிக்க நாட்டுக்கூத்துப் பிரதியின் நூலுருவாக்கம் இதுவாகும்.

9347

செம்மனத்தான்: நாட்டுக்கூத்து. மு.சிங்கராயர். யாழ்ப்பாணம்: பிரேமரஜனி சிங்கராயர், தமிழ்மதி, 955/9, கடற்கரை வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2007. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

xi, 81 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

ஆசிரியர் முடியப்பு சிங்கராயர் இலக்கியத் துறையில் ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் உடையவர். யாழ்ப்பாணத்தில் பாஷையூரில் பிறந்த இவர் 20 வயதில் எழுத்துத்துறையில் புகுந்தவர். தூது போ தென்றலே, வியாகுல அன்னை வெண்பா, மடு அன்னை பிள்ளைத்தமிழ் ஆகிய மறைத்தத்துவம் பொதிந்த தமிழ்

இலக்கியப் படைப்புகளை வழங்கிய சிங்கராயரின் கைவண்ணத்தில் மலர்ந்த மற்றொரு படைப்பு இது. நாட்டார் வழக்கியலில் வழங்கிவந்த அருளப்பர் வரலாற்றை நாட்டுக்கூத்து வடிவில் ஆசிரியர் தந்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 186186).

9348

திருகோணமலை மாவட்ட கிராமியப் பாடல்கள். ச.அருளானந்தம் (புனைபெயர்: கேணிப்பித்தன்). திருகோணமலை: அருள் வெளியீட்டகம், 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (கொழும்பு 6: A B Creator and Publisher, Station Road).

147 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-4568-15-0.

திருகோணமலை மாவட்டத்தில் வழக்கிலிருந்ததும், தற்போதும் வழக்கிலிருப் பவையுமான நாட்டார் பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. வாழ்த்துப்பாடல், தாலாட்டுப்பாடல், சாய்ந்தாடம்மா, சப்பாணி கொட்டல், கிட்டியடித்தல், கோலாட்டம், ஊஞ்சற் பாட்டு, வேடிக்கைப் பாடல், மலையக மக்களின் வாழ்வியல், கறுப்புக் கோட்டுக் கங்காணி, ஏற்றப்பாட்டு, ஏர்ப்பாட்டு, இருகால் தலை மூன்று, மாரி மழை பெய்ய வேணும், மழையே வா, மழை பொழிந்தது, களையெடுத்தல், அருவி வெட்டல், அறுவடைப் பாடல், நெல்லுக் குற்றும் பாடல், விறகொடிக்கப் போதல், கோப்பிப்பழம், மீன் பிடித்தல், துள்ளுதையா என் மனது, பரிகாசப்பாடல், மாட்டுவண்டி, அம்பாப்பாட்டு, காதற் பாட்டு, பல்சுவைப் பாட்டு, ஒப்பாரிப் பாட்டு ஆகிய தலைப்புகளில் இவை தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 232996).

9349

நீதித் தலைவர்கள் இருவர் (சிம்சோன்-இப்தா): கூத்து இசை நாடகம். ம.யேசுதாசன். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, டிசம்பர் 2005. (யாழ்ப் பாணம்: ஏ.சீ.எம்.பிரஸ், 464, ஆஸ்பத்திரி வீதி).

xiv, 62 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 955-9262-29-7.

ஆசிரியர், இசைக்கலைஞர், நாடக நெறியாள்கை வல்லுநர் எனப் பல பரிமாணங் களுடையவர் அண்ணாவியார் யேசுதாசன். பைபிள் கதைகளை அடிப்படையாகக் கொண்டு சிம்சோன், இப்தா ஆகிய இரு கதாநாயகர்களின் நாடகங்களை இந் நூலில் வழங்கியுள்ளார். தென்மோடி நாட்டுக்கூத்தாக அமையும் "மானம் காத்த மறவன்" என்ற முதல் நாடகத்தின் இஸ்ரேல் மைந்தன் சிம்சோன் தன் பரம எதிரிகளான பெலஸ்தியரை அழிப்பதற்குக் கர்த்தரால் அனுப்பி வைக்கப்பட்டவன். இஸ்ரேலரின் மானம் காத்த மைந்தனாகப் போற்றப்படுகிறான். இசை நாடகமாக அமைந்த "சத்தியசோதனை" என்ற இரண்டாவது நாடகம் இஸ்ரேலரின் நீதித் தலைவனாகிய இப்தா தமது எதிரிகளாகிய அம்மோனியரை எதிர்த்து வெற்றி கொண்டபோதும் ஒரு சத்திய சோதனைக்கு உள்ளாகவேண்டி ஏற்படுகின்றது.

இரண்டு நாடகங்களும் துன்பியல் நாடகங்களாக அமைகின்றன. அறம்-மறம், உண்மை-பொய்ம்மை போன்ற எதிரெதிர் பண்புகளின் விளைவுகளை நாடகாசிரியர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 177054).

9350

புனித கிறிஸ்தோப்பர்: நாட்டுக்கூத்து. நீ.மிக்கோர்சிங்கம். யாழ்ப்பாணம்: ஞானப் பிரகாசம் மதுரவாசகம், 22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், பிரதான வீதி).

viii, 128 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

பாஷையூர்ப் புலவர் மதுரகவி நீ.மிக்கோர்சிங்கம் யாழ்ப்பாணத்தின் இசை நாடகக் கூத்து மற்றும் அரங்கியல் உலகில் பிரபல்யமானவர். அலேசு, சத்தியவந்தன், கண்டி அரசன், வீரபாண்டிய கட்டபொம்மன், ஆயுள்வேத வாகடசாமிநாதர், ஞானரூபன் ஆகிய நாட்டுக்கூத்துகளையும், திருச்செல்வர், புனித அந்தோனியார், மதியானந்தன், ஆனந்தசீலி, பரமபிதாவின் பத்துக்கட்டளை ஆகிய இசை நாடகங்களையும் எழுதியவர். கிறிஸ்தவ இறையியலின் பின்னணியில் புனித கிறிஸ்தோப்பரின் வாழ்வின் சில சம்பவங்களைத் தேர்ந்து நாட்டுக்கூத்துருவில் வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233905).

400 மொழியியல்

491.2 சமஸ்கிருத மொழி

9351

அக்ஷர போதினி. ச.பஞ்சாட்சர சர்மா. யாழ்ப்பாணம்: சர்வானந்தமய பீடம், கந்தசாமி கோவிலடி, இணுவில், சுன்னாகம், 2வது பதிப்பு, பெப்ரவரி 2008, 1வது பதிப்பு, ஏப்ரல் 2001. (சுன்னாகம்: சிறீ வித்யா கம்பியூட்டர் பிரஸ், கந்தசாமி கோவிலடி, இணுவில்).

76 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

ஒலியெழுத்து, வடிவெழுத்துக்களின் வேறுபாடு மாத்திரமன்றி அவற்றைக் கற்பிக்கும் பழைய போதனாமுறைகளும் வடமொழிப் பயிற்சிக்குத் தடையாக இருந்துவந்துள்ளன. இம்முறையிலிருந்து விலகிப் பாலபாடம் எழுதிய முதல்வர் பருத்தித்துறைப் பஞ்சாங்க கணிதர் சுப்பிரமணிய சாஸ்திரி. அவருக்குப் பின்னர் வியாகரண சிரோமணி தி.கி.சீதாராமசாஸ்திரி, கலாநிதி கா.கைலாசநாதக் குருக்கள் ஆகியோர் தேவநாகரியிலும், பிரம்மஸ்ரீ தி.நடனசபாபதி சர்மா கிரந்தத்திலும் பாலபாடங்களை வெவ்வேறு வழிகளைக் கையாண்டு எழுதி வெளியிட்டனர். இவர்களின் வழிகளிலிருந்து முற்றிலும் வேறான புத்தம்புதிய முறையில் ஆக்கப் பட்டது அக்ஷர போதினி என்னும் இந்நூல். நான்கு படிகளைக்கொண்ட இந்

நூலில் முதற்படியில் இருமொழிகளுக்கும் பொதுவான உச்சரிப்புள்ள 25 எழுத்துக்களும், 200 சொற்களும் 30 வாக்கியங்களும் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு எழுத்துக்கும் சொல்லுக்கும் பக்கத்தில் கிரந்தத்திலும் தமிழிலும் எழுத்துக்களும் சொற்களும் தரப்பட்டுள்ளன. சிறப்பெழுத்துக்களையும் சிறப்பு மெய்யெழுத்துக்களையும் அறிமுகஞ்செய்யும் இரண்டாம் மூன்றாம் படிகளில் 500க்கு மேற்பட்ட சொற்களும் 100 வாக்கியங்களும் வந்திருக்கின்றன. இந்நூலில் கூட்டெழுத்துக்கள் நான்காம் படியில் விளக்கப்படுகின்றன. இலகுவானவை முதலிலும் கஷ்டமானவை பின்னுமாக இனம்பிரித்து இவை விளக்கப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196451).

9352

பஞ்சதந்திர லப்த ப்ரணாசம். பூ.தியாகராஜ ஐயர். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, பங்குனி 1965. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி).

xiv, 120 பக்கம், விலை: ரூபா 3.75, அளவு: 21.5x14 சமீ.

வடமொழியில் விஷ்ணுசர்மா எழுதிய பஞ்சதந்திரம் என்ற நூலின் நான்காவது தந்திரமான லப்த ப்ரணாசம் என்ற பகுதியினை இலங்கைக் கல்விப்பகுதியினர் க.பொ.த.உயர்தர வகுப்புக்கும், பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுக்கும் உரிய பாடநூல்களுள் ஒன்றாக்கியுள்ளனர். அதற்கேற்ப பஞ்சதந்திரக் கதைகள் தமிழில் வடமொழிச் சுலோகங்களுடனும், இலக்கணக் குறிப்புகளுடனும் இந்நூலில் தமிழாக்கம் செய்து தரப்பட்டுள்ளது. முன்னுரை, நூல் வரலாறு, கதைச் சுருக்கமும் உட்பொருளும், குறிப்புச் சொல் விளக்கம், ஆகியவற்றுடன் தவளையரசும் கரும்பாம்பும், சிங்கமும் கழுதையும், யுதிஷ்டிரன் என்ற குயவன், சிங்கமும் நரிக்குட்டியும், பெண்ணின் சாகசம், நந்தனும் வரருசியும், புலித்தோல் போர்த்த கழுதை, ஏமாந்த பெண்ணும் ஏமாந்த நரியும், மணி கட்டிய ஒட்டகம், நரியின் தந்திரம், வெளியூர் சென்ற நாய் ஆகிய பதினொரு கதைகளும் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தின் சம்ஸ்கிருத விரிவுரையாளராகப் பணியாற்றியவர் வியாகரண சிரோமணி பூ. தியாகராஜ ஐயர் அவர்கள். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119434).

491.48 சிங்கள மொழி

9353

சிங்கள எழுத்துப் பயிற்சி. கதுறுகமுவே நாகித்த தேரோ, எஸ்.ஜே.யோகராஜா. மாகொள: தர்சக வெளியீடு, 430, நுங்கமுகொட, களனி, 1வது பதிப்பு, மாசி 1997. (மாகொள: புபுது பிரின்டர்ஸ், 97/1, மாகொள).

xii, 76 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 955-9432-01-X.

தமிழ்மூலம் சிங்களம் கற்பதற்கான வழிகாட்டி நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122801).

9354

தமிழ் சிங்கள அகராதி. *கே.என்.டீ.பீரிஸ் (தலைமைத் தொகுப்பாசிரியர்), எஸ். விஜயசூரிய, எஸ்.வேலாயுதபிள்ளை, எம்.எச்.எம்.யாக்கூத், கே.பீ.பீரிஸ் (துணை ஆசிரியர்கள்). கோட்டை: பங்களிப்பிலான அபிவிருத்திக் கழகம், 51, தளவத்து கொட வழி, மிரிஹானை, 1வது பதிப்பு, 1994. (கொழும்பு: திபனீ பிரின்டர்ஸ்).*

(14), 418 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 *சமீ.,* ISBN: 955-9140-09-04.

தமிழ் சிங்கள அகராதி. *கே.என்.டீ.பீரிஸ் (தலைமைத் தொகுப்பாசிரியர்), எஸ். விஜயசூரிய, எஸ்.வேலாயுதபிள்ளை, எம்.எச்.எம்.யாக்கூத், கே.பீ.பீரிஸ் (துணை ஆசிரியர்கள்). கோட்டை: பங்களிப்பிலான அபிவிருத்திக் கழகம், 51, தளவத்து கொட வழி, மிரிஹானை, 3வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1994, 2வது பதிப்பு, 2000. (மஹரகம: தரஞ்ஜீ பிரின்டர்ஸ், 506, ஹைலெவல் வீதி, நாவின்ன).*

(16), 418 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 *சமீ.,* ISBN: 955-9140-09-04.

சீடா அமைப்பினால், இலங்கைக்கான சுவீடன் தூதுவர் அலுவலகத்தின் உதவி நன்கொடையுடன் இவ்வகராதி வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114601, 199381).

494.8 தமிழ் மொழி

9355

ஈழத்துத் தமிழியல்சார் தமிழ் ஆய்விதழ்கள்: ஒரு கண்ணோட்டம். *செ.யோகராசா. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

40 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21x15 *சமீ.,* ISBN: 955-8564-13-3.

இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க தமிழியல் ஆய்விதழான "தமிழ் உலகு" வெளியீட்டு விழாவின்போது 11.10.2003 அன்று நிகழ்த்தப்பட்ட உரையின் விரிவான வடிவம். கலாநிதி செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறைத் தலைவராவார். 37வது தமிழ்ச்சங்க வெளியீடாக இது வெளிவருகின்றது. ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின் மனோநிலை தமிழ் ஆய்விதழ்களின் வருகைக்கு சாதகமற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடும் ஆசிரியர், ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தின்-ஆங்கிலேயரது ஆட்சியின் பெறுபேற்றினால் உருவான-உயர் வருமானம் தரும் உத்தியோக மோகத்திலிருந்து விடுபடமுடியா நிலையும் அதிலிருந்து உருவான எமது சமூகத்தின் பெரும்பான்மையினரது இயல்பும் தமிழ்சார் கற்கைநெறி தொடக்கம் தமிழ்சார் ஆய்வு, ஆய்விதழ் வளர்ச்சி என்பன வரைக்கும் பெருந் தடையாக இருந்து வந்துள்ளன என்கிறார்.

9356

சிந்தாமணி நிகண்டு: மூலமும் உரையும் அகராதியும். *ச.வயித்தியலிங்கம் (மூலம்), வ.ஜெயதேவன், இரா.பன்னிருகைவடிவேலன் (பதிப்பாசிரியர்கள்). சென்னை 600096: நோக்கு, 259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, கொட்டிவாக்கம், 1வது பதிப்பு, 2013. (சென்னை 600 005: கணபதி பிராசஸ்).*

158 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21x14 *சமீ.,* ISBN: 978-81-908490-4-3.

தமிழ் மொழியில் அகராதிகளின் அறிமுகத்துக்கு முன்னர், அகராதியின் பணியை செய்யுள் உருவிலமைந்த நிகண்டுகளே நிறைவேற்றிவந்தன. தமிழ் அகராதித் துறையில் முன்னோடியானவையும் காத்திரமானவையுமான பல முயற்சிகளில் ஈடுபட்டவர்களாக ஈழத்தவர்கள் இருந்துள்ளனர் என்பதற்கு இந்த நிகண்டு ஆதாரமாகின்றது. வல்வெட்டித்துறை ச.வைத்தியலிங்கம் அவர்களால் இந்நிகண்டு ஆக்கப்பெற்றது. உலகளாவியரீதியில் தமிழ் மொழியில் இதுவரை 35 நிகண்டுகள் வரை கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாக சிந்தாமணி நிகண்டும் அமைந்துள்ளது. இந்நூலின் மூலப்பதிப்பு, சென்னை தண்டையார்பேட்டை G.R. *கிருஷ்ணசாமிப்பிள்ளையவர்களால், இலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் தாது வருடம் (1876) சித்திரை மாதம் பதிப்பிக்கப்பட்டது. 137 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவரும் இப்புதிய தமிழகப்பதிப்பில் பதிப்பாசிரியர்களால் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளடக்கம், பதிப்புரை ஆகியன இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. முதற் பதிப்பில் காப்புச் செய்யுள், அவையடக்கச் செய்யுள், சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் சந்தி பிரிக்கப்பெறாமல்இருந்தன. இப்பதிப்பில் அவை அவ்வாறு சந்தி பிரிக்கப்பெறாமலும், படிப்பவர்களுக்கு எளிமையாக இருக்கும் பொருட்டு, அச்செய்யுள்களின் கீழ் சந்தி பிரித்தும் தரப்பட்டுள்ளன. நிகண்டுச் செய்யுள்கள் சந்தி பிரிக்கப்பெறாமல் ஒரு பக்கத்திலும் அதன் பின்புறம் அவற்றுக்கு உரையும் முதல் பதிப்பில் இடம்பெற்றிருந்தன. ஆனால் இப்பதிப்பில் ஒவ்வொரு நிகண்டுச் செய்யுளும் சந்தி பிரிக்கப்பெற்று அச்செய்யுளின் அடியிலேயே அதன் உரை அமைக்கப்பெற்றுள்ளது. இப்பதிப்பின் இறுதியில் இந்நிகண்டில் பொருள் கூறப்பட்டுள்ள சொற்கள் அனைத்தும் (3088 சொற்கள்) பயன்பாட்டு எளிமை கருதி அகராதிவடிவில் தரப்பட்டுமுள்ளன.*

9357

சீராக்கம் வேண்டாமா? *ஆ.கந்தையா. நுகேகொடை: கலாநிதி ஆ.கந்தையா, சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம். நாவலை, 1வது பதிப்பு, மார்ச் 1988. (சென்னை 2: காந்தளகம், 834, அண்ணாசாலை).*

(4), 41 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 21.5x17.5 *சமீ.,* ISBN: 955- 95173-1-7.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இணங்க தமிழ்நாட்டில் 13 தமிழ் எழுத்துக்கள் சீராக்கஞ்செய்யப்பட்டன. அந்த எழுத்துக்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தமிழ்நாட்டில் அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுத்தது. அதனைத் தொடர்ந்து சிங்கப்பூரிலும் இச்சீராக்கம் நடைமுறைக்கு வந்தது. இலங்கையிலும்

மலேசியாவிலும் இச்சீராக்கம் பற்றிய கருத்துவேறுபாடுகள் இடம்பெற்றதால் நடைமுறைக்கு வரத் தாமதமாயிற்று. இந்நிலையில் நவீன கணனியுகத்தில் இத்தகைய சீராக்கத்தின் முக்கியத்துவத்தை ஆராய்ந்து சீராக்கத்தின் அவசியம் பற்றி இந்நூல் குறிப்பிடுகின்றது. வரலாற்றுப் பின்னணி, பதின்மூன்று எழுத்துக் களின் சீராக்கம், தமிழ்நாட்டில், சிங்கப்பூரில், இலங்கையில், மலேசியாவில், ஏனைய நாடுகளில், முடிவுரை, குறிப்புகள், ஆகிய 9 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பழைய வடிவமும் புதிய வடிவமும் பற்றிய பின்னிணைப்பும் நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. இந்நூல் பின்னர் 1990இல் இரண்டாவது பதிப்பாக அவுஸ்திரேலியா, சிட்னியிலிருந்து நடனாலய வெளியீடாகவும் வெளியிடப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 80739).

9358

தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியும் வரலாறும் (கட்டுரைத் தொகுப்பு). செ.யோகராசா, க.சண்முகலிங்கம் (தொகுப்பாசிரியர்கள்). கொழும்பு 7: இந்து சமய, கலாசார, அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1996. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

ii, 112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

1996 அக்டோபர் 4,5,6ம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்ட பத்தில் நடைபெற்ற ஆய்வுக் கருத்தரங்கிற்கெனத் தொகுக்கப்பட்ட கையேடு. பல்வேறு இதழ்களிலும் வெளியாகிய தமிழ் ஆய்வு முயற்சிகள் பற்றிய கட்டுரை களை இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. (மூலப்பிரசுர நூல் தலைப்பு விபரம் அடைப்புக்குறிக்குள் உள்ளன). ஏ.வீ.சுப்பிரமணிய ஐயரின் முகவுரை (நூல்: தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி), கலாநிதி க.கைலாசபதி அவர்களின் முன்னுரை (நூல்: மண்ணும் மனித உறவுகளும்), ஆராய்ச்சி- முனைவர் இராமசுந்தரம் (நூல்: முற்போக்கு இலக்கியத்திறன்), தமிழில் கால ஆராய்ச்சியும், அதன் பின்புலங்களும்- ம.மதியழகன் (நூல்: தமிழியல் ஆய்வு வரலாறு), சிறுகதை ஆய்வுகள் - டாக்டர் ம.திருமலை (நூல்: தமிழ்ச் சிறுகதை-நேற்றும் இன்றும்), தமிழியல் ஆய்வு-நேற்று இன்று நாளை -முனைவர் கி.நாச்சிமுத்து (நூல்: தமிழ் உலா- தொகுதி 1), ஈழத்துத் தொல்பொருளியலும், தமிழியலும்-வி.சிவசாமி எம்.ஏ. (நூல்: பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு மலர்), இலங்கையில் தமிழ்ச் சாசனவியல் ஆராய்ச்சியின் வளர்ச்சி-செ.குணசிங்கம் பி.ஏ. (நூல்: நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவுமலர்), செய்யத்தக்கன-புலவர் இரா.இளங்குமரன் (நூல்: சுவடிப்பதிப்பு வரலாறு), தமிழிலக்கிய வரலாற்றின் பிரச்சினை மையங்கள் - பேரா. கார்த்திகேசு சிவத்தம்பி (நூல்: தமிழ் இலக்கிய வரலாறு-வரலாறெழுதியல் ஆய்வு), தமிழ் ஆராய்ச்சி-நேற்று, இன்று, நாளை- டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியன் (நூல்: கலைமகள் தீபாவளி மலர் 1991), தமிழ் ஆய்வின் வளர்ச்சியும் வரலாறும்- நூலடைவு ஆகிய கட்டுரைகள் இத் தொகுப்பில் தேடித்தொகுக்கப்பட்டுள்ளன.

9359

தமிழ் எழுத்தின் தோற்றம்: ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு. பரமு புஷ்பரட்ணம். யாழ்ப்பாணம்: யாழ். மாவட்ட செயலகம், 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்).

vii, 126 பக்கம், புகைப்படம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ.

தமிழ் எழுத்தின் தோற்றம்-ஒரு மீள் வாசிப்பு, இலங்கைத் தமிழ்ச் சாசன ஆராய்ச்சியில் அண்மையில் கண்டுபிடித்த கந்தளாய்ச் சாசனம் பெறும் முக்கியத்துவம், ஆகிய இரண்டு முக்கிய கட்டுரைகளை இணைத்து ஒரு அறிமுக உரையுடன் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை எழுதுவதற்கு அடிப்படை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்ட பெரும்பாலான தொல்லியற் சின்னங்கள் ஆசிரியரின் தொல்லியல் ஆய்வின்போது கிழக்கிலங்கையில் கந்தளாய் என்ற இடத்திலிருந்தும், வட இலங்கையில் பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள பரமன்கிராய், கௌதாரிமுனை, மண்ணித்தலை, கல்முனை போன்ற இடங்களில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். 2004ம் ஆண்டுக்கான வடக்கு கிழக்கு மாகாண அரசின் சாகித்தியப் பரிசினை பல்துறை நூலுக்காகப் பெற்றது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 213627).

9360

தமிழ் மொழி ஆராய்ச்சி: கட்டுரைத் தொகுப்பு-1. சு.ஞானப்பிரகாசர். யாழ்ப்பாணம்: ஞானப்பிரகாசர் ஆச்சிரமம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்).

vi, 80 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

பன்மொழிப் புலவர், நல்லூர்ச் சுவாமி சு.ஞானப்பிரகாசர் அவர்கள் எழுதிப் பிரசுரமான தமிழ் மொழி ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பு. இந்நூலில் தமிழும் ஆரிய மொழிகளும், தமிழில் உள்ள நிறச் சொற்கள், பூனையும் பூசையும், பனையின் பெயர்கள், ஏடர்- இண்டர் (அண்டர்)-இடையர், தமிழிற் சகர முதற் சொற்கள், பொய்யும் மெய்யும், தமிழ்ப் பாஷையின் விசித்திரங்கள், இலங்கைக் கத்தோலிக்க மிஷனரிமாரும் தமிழும், குடஞ்சுட்டு ஆகிய பத்து தமிழியல் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28856).

9361

தமிழ் மொழி இலக்கியமும் இலக்கணமும். எஸ்.தில்லைநாதன். சென்னை 600002: காந்தளகம், 834, அண்ணாசாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (சென்னை: காந்தளகம்).

344 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 17.5x12.5 சமீ.

இரு பகுதிகளைக்கொண்ட இந்நூலின் முதற்பகுதி இலக்கியமாகவும், இரண்டாம் பகுதி இலக்கணமாகவும் அமைகின்றன. ஏழு இயல்களைக்கொண்ட முதலாம் பகுதியில் பாட்டும் தொகையும், காவியங்களும் பிரபந்தங்களும், புராண இதிகாச இலக்கியங்கள், திருமுறை இலக்கியம், இலக்கிய வரலாற்றுச் செல்நெறிகள், தமிழில் நாடகமும் கூத்தும், தமிழரல்லாதோரின் தமிழ்மொழிப்பணிகள் ஆகிய தலைப்புகளில் விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இலக்கணம் பற்றிக்கூறும் பகுதி இரண்டில், திராவிட மொழிக் குடும்பம், இலக்கண வரலாறு, பதங்கள், முதனிலை எழுத்துகள், பெயர்ச்சொற்கள்-திணை, பால் உணர்த்துதல்கள், வேற்றுமைகள், சொற்பாகுபாடு, வினைச்சொற்கள், வினைச்சொல் ஆக்கம், சார்பெழுத்துகள், தன்வினையடியிலிருந்து பிறவினை முற்றுகளும் எச்சங்களும் ஆக்கப்பெறுதல், சொற்றொடர், புணர்ச்சி வகை, யாப்பு, கவிதையின் பண்புகள் ஆகிய 15 இயல்களில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. துறைநீலாவணையைச் சேர்ந்த இந்நூலாசிரியர் சைவப்புலவர் எஸ்.தில்லைநாதன் கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104384).

9362

தமிழ் வழி. கா.வை.இரத்தினசிங்கம். யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1991. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

62 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.

கொக்கூர் கிழான் கா.வை.இரத்தினசிங்கம் எழுதிய இந்நூல், வடமொழியும் தமிழும் இணைந்து கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்த இன்றைய நடைமுறைத்தமிழில் உள்ள வடமொழிச் சொற்களுக்குச் சமமான தூய தமிழ்ச் சொற்களை பட்டியலிட்டுத் தருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83978).

9363

தொடர்பாடல் மொழி நவீனத்துவம்: பிராந்திய தமிழ் மொழியியல் மாநாட்டு நிகழ்வுகள். எம்.ஏ.நுஃமான் (பதிப்பாசிரியர்). கொழும்பு 2: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 21, வொக்ஷோல் வீதி, 1வது பதிப்பு, ஜூன் 1993. (கொழும்பு 2: ராஜன் பிரின்டர்ஸ், 31, கியூ ஒழுங்கை).

xii, 227 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 160., அளவு: 22x14 சமீ., ISBN: 955-9233-00-9.

தொடர்பாடல் மொழி நவீனத்துவம் என்ற பொதுத் தலைப்பில் 1992 மே மாதம் 7,8,9ஆம் திகதிகளில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் மொழி வளர்ச்சி பற்றிய பிராந்தியத் தமிழ் மொழியியல் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். அறிமுகம், அமைச்சரின் உரை, மற்றும் இ.அண்ணாமலை அவர்களின் Languages of Developing Societies என்ற தலைப்பிலான தொடக்க உரை என்பவற்றைத் தொடர்ந்து ஆய்வுக்

கட்டுரைகள் நான்கு பகுதிகளாகப் பிரித்துப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மொழி மாற்றமும் மொழி வளர்ச்சியும் என்ற முதலாம் பகுதியில், மொழி வளர்ச்சி: இலக்கணத் தூய்மையும் மொழித் தூய்மையும் (எம்.ஏ.நுஃமான்), புதிய தமிழ் இலக்கணம்: அதனை தேவையும் சிக்கல்களும் (அ.சண்முகதாஸ்), தற்காலத் தமிழ் இலக்கணம்: அதன் தேவையும் பிரச்சினைகளும் (கே.திலகவதி), தற்காலத் தமிழின் இலக்கண இயல்பு (செ.வை.சண்முகம்), மொழிப் புதுமையாக்கத்தில் அகராதியின் பங்கு (இ.அண்ணாமலை) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தொடர்பாடலும் மொழியும் என்ற இரண்டாம் பகுதியில் தற்காலச் செய்திப் பரிமாற்றத்தில் தமிழ் சமுதாய மொழியியல் ஆய்வு (கி.கருணாகரன். வ.ஜெயா), தமிழிலே தொடர்பாடல்: இன்று நாம் எதிர்நோக்கும் சில பிரச்சினைகள் (சி. தில்லைநாதன்) ஆகிய கட்டுரைகளும், கலைச்சொல்லாக்கம் என்ற மூன்றாவது பகுதியில் தமிழில் கலைச்சொல்லாக்கம் (இராம சுந்தரம்), கலைச்சொற்களின் தொடர்பாடல் திறனும் புதுமையாக்கமும்(எல்.இராமமூர்த்தி) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. தமிழ் மொழி கற்பித்தல் என்ற இறுதிப் பகுதியில் தமிழில் இரட்டை வழக்கும் கற்பித்தல் பிரச்சினைகளும் (கி.அரங்கன்), தமிழ் கற்பித்தலில் மேனாட்டுச் செல்வாக்கு (சுப.திண்ணப்பன்), சொற்புணர்ச்சியும் மொழி கற்பித்தலும்: லகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி ஓர் ஆய்வு (சுபதினி ரமேஷ்), இலங்கையில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றலும் கற்பித்தலும் (சு.சுசீந்திரராஜா, இ.கயிலைநாதன்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102581).

9364

வல்வை ச.வயித்தியலிங்கம் இயற்றிய சிந்தாமணி நிகண்டு: மூலமும் உரையும். ச.வயித்தியலிங்கம் (மூலம்), பா.மீனாட்சிசுந்தரம் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, மீள்பதிப்பு, 2013, 1வது பதிப்பு, 1876. (கொழும்பு 13: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் பிரின்டர்ஸ், 94, பரமானந்த விகாரை மாவத்தை).

iv, 142 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.

அகராதி என்பது நவீன யுகத்திலேயே மேலைத்தேய வழிவந்து தமிழுக்கு அறிமுகமானது. அதற்கு முன்பு அகராதியின் பணியை செய்யுள் உருவிலமைந்த நிகண்டுகளே நிறைவேற்றிவந்தன. தமிழ் அகராதித் துறையில் முன்னோடி யானவையும் காத்திரமானவையுமான பல முயற்சிகளில் ஈடுபட்டவர்களாக ஈழத்தவர்கள் இருந்துள்ளனர் என்பதற்கு இந்த நிகண்டு ஆதாரமாகின்றது. ஆறுமுக நாவலரின் சமகாலத்தவரும், அவரையொத்த தமிழ்ப் பணிகளில் ஆளுமையோடு ஈடுபட்டு உழைத்தவருமான வல்வெட்டித்துறை ச.வைத்தியலிங்கம் அவர்களால் இந்நிகண்டு ஆக்கப்பெற்றது. உலகளாவியரீதியில் தமிழ் மொழியில் இதுவரை 35 நிகண்டுகள் வரை கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றாக சிந்தாமணி நிகண்டும் அமைந்துள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியர் பா.மீனாட்சி சுந்தரம், வல்வெட்டித்துறை அரும்பொருள் காப்பகத்தின் காப்பாளராவார். இந்

நூலின் மூலப்பதிப்பு, சென்னை தண்டையார்பேட்டை G.R.கிருஷ்ணசாமிப் பிள்ளையவர்களால், இலட்சுமி விலாச அச்சுக்கூடத்தில் தாது வருடம் (1876) சித்திரை மாதம் பதிப்பிக்கப்பட்டது.

494.8(1) தமிழ் இலக்கணம்

9365

அடிப்படை இலக்கணம்: ஆண்டு 10,11. சு.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1989, 1வது பதிப்பு, 1983, 2வது பதிப்பு, 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B A தம்பி வீதி).

viii, 154 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20.5x13.5 சமீ.

பண்டிதர் சு.வேலுப்பிள்ளை (சு.வே.) அவர்களின் இந்த இலக்கண நூல், 1986ஆம் ஆண்டு கல்வியமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையம் வெளியிட்ட ஆண்டு 9,10,11க்குரிய தமிழ் மொழிப் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டது. எழுத்து, சொல், சொல்லாக்கம், பெயர்ச்சொல், வேற்றுமை, வினைச்சொல், தெரிநிலை வினைவகை, குறிப்பு வினைவகை, பொது வினைகள், துணைவினையும் பிறவும், இடைச்சொல், உரிச்சொல், சொற்றொடர், புணர்ச்சி, வாக்கியம் அல்லது முற்றுத் தொடர்மொழி, வாக்கியத்தின் அகத் தொடர்புகள், வாக்கிய வகைகள், சிறப்பான சில அணிகள் (சொல்லணிகள், பொருளணிகள்) ஆகிய 18 அலகுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81017).

9366

இலக்கண வரம்பு: மகாவித்துவான் சி.கணேசையர் அவர்களின் இலக்கணக் கட்டுரைகள். ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

viii, 219 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22.5x15.5 சமீ., ISBN: 978-955-9233-26-8.

வித்துவசிரோன்மணி சி.கணேசையர் (1.4.1878-8.11.1958) இலங்கையின் யாழ்ப் பாணத்தில் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் பிறந்தவர். சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரின் மாணவர். ஆராய்ச்சிகளும் கண்டனங்களும் எழுதிய வகையிலும், குறிப்பாக தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கு விளக்கக் குறிப்பு எழுதியவர் என்ற வகையிலும் ஈழத்தின் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளின் இலக்கிய வளர்ச்சியில் இவர் பங்களிப்பு இலங்கையிலும் தமிழகத்திலும் விதந்து போற்றப்படுகின்றது. இவர் மதுரைத் தமிழச்சங்க வெளியீடான செந்தமிழ் மற்றும் பிற வெளியீடுகளான ஈழகேசரி, வித்தகம், செந்தமிழ்ச் செல்வி, கலாவல்லி ஆகிய பத்திரிகைகளில் பல்வேறு கட்டுரைகளை எழுதியுள்ளார். அவற்றுள் செந்தமிழ், ஈழகேசரி ஆகியவற்றில் இவர் எழுதிய இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள்

இருபது இந்நூலில் இடம்பெறுகின்றன. தொனி, வடசொல், யாப்பருங்கலக் காரிகை யுரைத்திருத்தம், வடமொழி முதுமொழியன்றோ? போலி எழுத்து, ஆறனுருபு பிறிதுருபேற்றல், தொகைநிலை, சிறுபொழுது, அளபெடை, பிறிதுபிறி தேற்றல், தொல்காப்பியச் சூத்திரப் பொருளாராய்ச்சி, இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித்தொகையும், சிறுபொழுதாராய்ச்சி, சேனாவரையருரைப் பதிப்பும் பிழை திருத்தமும், தொல்காப்பியத்தின் றொன்மை, இயற்கைநவிற்சியும் செயற்கைப் புனைவும், மெய்ப்பாடு, செந்தமிழ், இலக்கண வரம்பு, தொல் - பொருள்- உவமவியல்: சில விளக்கவுரைக் குறிப்புகள் ஆகிய இருபது கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. பின்னிணைப்புகளாக, கணேசையர் தன் ஐயங்கள் சிலவற்றை வெளிப்படுத்திய சில ஆராய்ச்சி என்ற தலைப்பிலான குறிப்புக்கள் இரண்டும், இலக்கணக் கொள்கைக் கட்டுரைகளிலே கணேசையரின் அணுகுமுறை என்ற தலைப்பில் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை எழுதிய கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

9367

இலக்கணத் தேறல்: சுருக்க வினா-விடை ஆண்டு 6-11க்கு ஏற்றது. சு.பா.காசிநாதன். யாழ்ப்பாணம்: சு.பா.காசிநாதன், திருநெல்வேலி, 2வது பதிப்பு, செப்டெம்பர் 1993, 1வது பதிப்பு, ஏப்ரல் 1993. (கொழும்பு 13: பிரின்டெல் மீடியா, 283, புளுமெண்டால் வீதி).

(2), 32 பக்கம், விலை: ரூபா 34.50, அளவு: 21.5x14.5 சமீ.

ஆண்டு 6 முதல் 11 வரையிலான மாணவர்களுக்கு ஏற்றது. நூலாசிரியர் யாழ்ப் பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114550).

9368

இனிக்கும் இலக்கணம் (வினா-விடை அடிப்படையிலான விளக்கம்): எழுத்ததிகாரம். அ.அப்துல் அஹத். கொழும்பு 10: கொடகே பொத் மெதுர, எஸ்.கொடகே சகோதரர்கள், இல.675, பி.டி.எஸ். குலரத்ன மாவத்தை, 1வது பதிப்பு, 2002. (வெல்லம்பிட்டிய: சத்துர அச்சகம், 142, அவிஸ்ஸாவெல்ல வீதி).

ii, 56 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-20-5977-1.

இந்நூல் க.பொ.த. சாதாரண, உயர்தர மற்றும் உயர் பரீட்சைகளுக்கேற்றவகையில் தயாரிக்கப்பட்டது. தமிழ் இலக்கணம்-பொது, எழுத்தியல், பதவியல், புணரியல் ஆகிய நான்கு பிரிவுகளுக்குள் கேள்வி-பதில் வடிவில் தமிழ் இலக்கண வினாக் களுக்கான விடைகள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தரப்பட்டுள்ளன. அ.அப்துல் அஹத் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. 35 ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் பெற்றவர். கல்வியமைச்சின் சீடா பிரிவின் கீழ் இயங்கிவந்த ஆசிரிய பயிற்சி நிலையத்தின் முழுநேர விரிவுரையாளராகவும் அதன் இயக்குநராகவும் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204304).

9369

தண்டியலங்காரம்: மூலமும் உரையும். அ.குமாரசுவாமிப் புலவர் (உரையாசிரியர்), கு.அம்பலவாணபிள்ளை (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: கு.அம்பலவாணபிள்ளை, சுன்னாகம், 2வது பதிப்பு, 1926, 1வது பதிப்பு, 1903. (சிதம்பரம்: ச.விசுவநாதபிள்ளை, தருமபரிபாலகர், வித்தியாநுபாலனயந்திரசாலை).

(8), 232 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13.5 சமீ.

ஐவகை இலக்கணங்களான எழுத்து, சொல் பொருள், யாப்பு அணி என்பவற்றில் அணியிலக்கணத்தை விளக்கி 946-1070 காலகட்டத்தில் தண்டி என்பவரால் எழுதப்பட்டது தண்டியலங்காரமாகும். காவியதர்சம் என்ற சம்ஸ்கிருத நூலைத் தழுவி எழுதப்பட்ட தண்டியலங்காரத்தில் இலக்கணத்தை இயற்றிய தண்டி-ஆசிரியரே இலக்கணத்துக்கான உரை மேற்கோள்களாகத் தாமே பாடல்களையும் இயற்றி உரையுடன் இணைத்திருந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அக்கிராசனாதி பதியும் பாலைவனத்தம் ஜமீன்தாருமாகவிருந்த ராஜராஜஸ்ரீமாந் இராமநாதபுரம் பொ.பாண்டித்துரைத் தேவரவர்கள் விரும்பியவாறு தண்டியலங்காரத்துக்கு உரையினை 1903இல் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் புதுக்கி எழுதியிருந்தார். முதற்பதிப்பு வெளிவந்ததன் பின்னர் புலவரவர்கள் உரையில் சில திருத்தங்களைச் செய்து வைத்திருந்தார். அதனை அவரது மகனார் கு.அம்பலவாணபிள்ளை அவர்கள் 1926இல் மீளவும் இரண்டாவது பதிப்பாக பதிப்பித்திருக்கிறார். உபக்கிரமணிகை, தண்டியலங்காரம் மூலமும் உரையும் (தற்சிறப்புப் பாயிரம், பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல்), அருஞ்சொற்றொடர்ப் பொருள் கோள், அருஞ்சொற்பொருள்கோள், விஷயக் கிரமசூசிகை, அரும்பதவகராதி, சூத்திரக் கிரமசூசிகை ஆகிய அத்தியாயங்களாக இந்நூல் பிரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

9370

தண்டியலங்காரம்: மூலமும் உரையும். அ.குமாரசுவாமிப் புலவர் (உரையாசிரியர்), தி.இராசகோபாலன் (பதிப்பாசிரியர்). சென்னை 600005: ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, அஞ்சல் பெட்டி 2989, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (சென்னை 5: மணி மறுதோன்றி அச்சகம்).

xxii, 212 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 17.5x12 சமீ.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் 1903இல் எழுதிய தண்டியலங்காரத்துக்கான உரையின் மீள் பதிப்பு இதுவாகும். பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பிரிவாக தண்டியலங்காரத்தின் மூல நூல் இருந்தது. அந்நூலுக்கான உரையை குமாரசுவாமிப் புலவரவர்கள் 1903இல் இராமநாதபுரம் பொ.பாண்டித்துரைத் தேவரவர்களின் விருப்பத்திற் கிணங்க எழுதிப்பிரசுரித்திருந்தார். தமிழகத்திலிருந்து புலவர் தி. இராசகோபாலன் மீளப் பதிப்பித்துள்ள இந்நூல், யாழ்ப்பாணத்துப் புலவரின் படைப்பினை தமிழக வாசகருக்கு அறிமுகப்படுத்துகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 152789).

9371

தமிழ் உரைநடைத் தெளிவு. க.சொக்கலிங்கம், வாசுகி சொக்கலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, திருத்திய 3வது பதிப்பு, 2012, 1வது பதிப்பு, 1999, 2வது பதிப்பு, 2000. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xiv, 138 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-336-5.

க.பொ.த.சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டும் தமிழ் உரைநடை தொடர்பான கைந்நூல். வாக்கியத்திலே சொல்லொழுங்கு, எழுவாய், பயனிலை அமையவேண்டிய முறைமை, தோன்றா எழுவாய், தோன்றாப் பயனிலை, தோன்றாச் செயப்படுபொருள், எழுத்துகளுக்கு ஒலியே அடிப்படை, ஆக்கச் சொற்கள், திரிசொற்கள், வேர்ச்சொற்கள், சொற்கள் சொற்றொடர்களின் அமைப்பில் புணர்ச்சிபெறும் இடம், சொற்களில் இடைவெளி விடலும் குறியீடு களும், வழுவமைதி எனப்படும் மயக்கம், மரபு பேணுதல், நடையியல் ஆகிய பிரதான 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எழுத்தாளர்கள் உருவாக்கிய சில உவமை உருவகங்கள், கல்விப்பணி தொடர்பான கலைச்சொற்கள் சில, சில வடசொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் ஆகிய பின்னிணைப்புகளும் காணப்படுகின்றன.

9372

தமிழ் மொழி கற்பித்தல்: மொழியியலாளர் நோக்கு. இரத்தினமலர் கயிலைநாதன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இரத்தினமலர் கயிலைநாதன், 1வது பதிப்பு, மார்கழி 1999. (யாழ்ப்பாணம்: ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்).

xi, 196 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x14 சமீ.

இலங்கைப் பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பித்தல் தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கிய ஈழத்துக் கல்வியியலாளர்களின் 11 ஆய்வுக்கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. எம்.ஏ.எம்.நுஃமான், திருமதி பார்வதி கந்தசாமி, சு.சுசீந்திரராஜா, திருமதி சுபதினி ரமேஷ், திருமதி இரத்தினமலர் கயிலைநாதன் ஆகியோர் தனித்தும் இணைந்தும் இக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். ஆரம்ப வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல், ஐந்தாம் வகுப்பு மாணவர் தமிழ் மொழிப் பயிற்சிகளில் சில அவதானிப்புகள், தமிழ் மொழி கற்றல்-கற்பித்தலில் ஒத்த கருத்துள்ள சொற்களும் எதிர்க் கருத்துள்ள சொற்களும், மரபுத் தொடர்கள், லகர ஈற்றுப் புணர்ச்சி பற்றி ஓர் ஆய்வு, பாடநூல்களில் பேச்சுத் தமிழும் எழுத்துத் தமிழும், பேச்சுத்தமிழ் பற்றிய மனப்பாங்குகளும் ஆரம்ப வகுப்புகளில் தமிழ் மொழி கற்பித்தலும் - மூன்று அணுகுமுறைகள், மொழியியலும் மொழி பயிற்றலும், மொழியியலும் மொழிப்பாடநூல் தயாரித்தலும், மொழி மாற்றமும் மொழி கற்பித்தலும், இலங்கையில் தமிழை இரண்டாவது மொழியாகக் கற்றலும் கற்பித்தலும் ஆகிய விடயங்கள் இக்கட்டுரையின் பிரதான கருக்களாக அமைந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129741).

9373

தமிழ் மொழியில் இலக்கணச் சிறப்பு. எஸ்.தில்லைநாதன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7 (ப.எ.4), தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆஃப்செட்).

xvi, 192 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 17.5x12 சமீ.

துறைநீலாவணையைப் பிறப்பிடமாகக் கொண்ட சைவப்புலவர் சா.தில்லை நாதன், தமிழ் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் புலமைமிக்கவர். பயிற்றப்பட்ட முதலாம்தர தமிழ் ஆசிரியரான இவர் பின்னாளில் பட்டிருப்பு கல்வி வலயத்தில் போரதீவுப்பற்றுக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். மண்டூர் ஆலயத்தின் அறங்காவலர் சபை உறுப்பினருமாவார். இந்நூலில் திராவிட மொழிக் குடும்பம், இலக்கண வரலாறு, பதங்கள், முதனிலை எழுத்துக்கள், பெயர்ச் சொற்கள் திணை, பால்உணர்த்துதல், வேற்றுமைகள், சொற்பாகுபாடு, வினைச்சொற்கள், வினைச்சொல் ஆக்கம், சார்பெழுத்துக்கள், தன்வினையடி யிலிருந்து பிறவினை முற்றுகளும் எச்சங்களும் ஆக்கப்பெறுதல், சொற்றொடர், புணர்ச்சி வகை, யாப்பு, கவிதையின் பண்புகள் ஆகிய 15 தலைப்புகளில் தமிழ் இலக்கியத்தின் சிறப்பினை இந்நூலில் பதிவுசெய்திருக்கிறார். ஆசிரியர் ஏற்கெனவே "தமிழ்மொழியில் இலக்கியச்சிறப்பு" என்னும் நூலையும் சமகாலத்தில் வெளியிட்டுள்ளார். மேலும் பார்க்க: நூல்தேட்டம் பதிவிலக்கம் 5762. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 180543).

9374

தமிழ் மொழியும் இலக்கணமும். பாலசிங்கம் பாலகணேசன். யாழ்ப்பாணம்: பா.பாலகணேசன், தமிழ்த்துறை விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 2011. (யாழ்ப்பாணம்: சத்தியா பிறின்டெர்ஸ், 153/11 நாவலர் வீதி).

xii, 132 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.

முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும், க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் உதவக்கூடிய வகையல் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திராவிட மொழிக் குடும்பமும் தமிழும், தமிழின் கிளைமொழிகள், தற்காலத் தமிழின் ஒலியன் அமைப்பு, போலி எழுத்துக்கள், மாத்திரை, சுட்டெழுத்துக்கள், முதநிலை எழுத்துக்கள், இடைநிலை மெய்மயக்கம், ஈற்றுநிலை எழுத்துக்கள், புணரியல், தமிழின் இரட்டை வழக்கு, சொல்லும் சொற்கூறுகளும், பெயர்ச்சொல், வேற்றுமைகள், ஆகுபெயர், தொடரியல், வினைச்சொல், வினை காலம் உணர்த்துதல், வாக்கியம், உசாத்துணை ஆகிய 20 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234581).

9375

நன்னூல் உதாரண விளக்கம். நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை (மூலம்), க.வீரகத்தி (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நான்காவது அனைத்துலகத் தமிழராய்ச்சி மகாநாட்டு நினைவு வெளியீடு, ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலை, 4வது பதிப்பு, ஜனவரி 1974, 1வது பதிப்பு, 1912. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்).

ix, 38 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணத்துப் புலவர் நாவலர் கோட்டம் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் 1902இல் வெளியிட்ட அபிதானகோசம் தமிழ்க் கலைக்களஞ்சியத்துக்கான முன்னோடியாகும் . 1883இல் எழுதிய இலங்கைச் சரித்திர சூசனம் வரலாற்றுத் துறையில் இலங்கையில் எழுதப்பட்ட முன்னோடி நூலாகக் கருதப்படுகின்றது. மருத்துவத்துறையில் இவர் எழுதிய வைத்திய விசாரணி இன்றும் விதந்து போற்றப்படும் ஒரு நூலாக உள்ளது. அவர் 1912இல் வெளியிட்ட நன்னூல் உதாரண விளக்கம் பண்டிதர் க.வீரகத்தியின் (1858-1917) பதிப்புரையுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி வெளியிடப்பட்டிருந்தது. நன்னூல் 13ஆம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91177).

9376

பாஷை இலக்கணம், இலக்கியம் கற்பித்தல். சி.கணபதிப்பிள்ளை (நூலாசிரியர்), சி.சதாசிவம் (பதிப்பாசிரியர்). உரும்பிராய்: பண்டிதமணி நூல்வெளியீட்டுச் சபை, உரும்பிராய் மேற்கு, 1வது பதிப்பு, ஜூலை 1994. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

iv, 62 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 60., அளவு: 18x12.5 சமீ.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.க. அவர்கள் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தலைமைத் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். ஆசிரிய, மாணவர்களோடு-சாதாரண பாடசாலை மாணவர்களோடு கற்பித்தல் வழிகளில் ஈடுபட்டு உழைத்தவர். பாஷை, இலக்கணம், இலக்கியம் என்ற துறைகள் பற்றிய தமது கருத்துக்களை பேச்சு, கட்டுரை வழியாக ஏற்கெனவே பதிவுசெய்துள்ளவர். அவரது கட்டுரைகளின் தேர்ந்த தொகுப்பு இந்நூலாகும்.

9377

யாப்பிலக்கண மரபில் கலிப்பா. கிருஷ்ணபிள்ளை விசாகரூபன். யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 56/5, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், 1வது பதிப்பு, 2007. (யாழ்ப்பாணம்: ஸ்மார்ட் பிரின்டர்ஸ், 717, காங்கேசன்துறை வீதி).

(3), 50 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 17.5x12.5 சமீ.

யாப்பியலில் ஆசிரியப்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்ற நால்வகைப் பா மரபுகளுண்டு. தமிழ் இலக்கண மரபில் கலி என்பது பாடல்கள் அமையும் ஒரு யாப்பு முறையாகும். கலி என்பதற்கு ஓசை மிகுதி எனவும் பொருள்கொள்வர். இதனால் கலிப்பா என்பது ஓசை நயம் மிக்க பாடல் எனப்படும். இந்நூலில் கலிப்பா பற்றிய பொது அறிமுகம் முதலாம் இயலிலும், கலிப்பா வகைகளும் அவற்றின் வடிவ அமைப்பும் இரண்டாவது இயலிலும் விளக்கப்பட்டுள்ளன. இவ்வியலில் தொல்காப்பியமும் கலிப்பாவும், ஒத்தாழிசைக்கலி, கலிவெண்பாட்டு, கொச்சகக் கலிப்பா, உறழ்கலிப்பா ஆகிய பாவகைகளும் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. இறுதியாக அமையும் மூன்றாவது இயலில் கலிப்பாவும் அதன் பிற்கால மாற்றமும் பற்றி விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205787).

9378

யாப்பிலக்கணம். விசாகப் பெருமாளையர். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 3வது பதிப்பு, 1962, 1வது பதிப்பு, 1938, 2வது பதிப்பு, 1954. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(2), 56 பக்கம், விலை: 75 சதம், அளவு: 18.5x12.5 சமீ.

இந்நூல் 19ம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த வித்துவமணி திருத்தணிகை விசாகப் பெருமாள் ஐயர் அவர்களால் வினா-விடை வடிவில் இயற்றப்பட்டது. யாப்பிலக்கணம் கற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில அமைந்த இந்நூல் தமிழகத்தில் பல பதிப்புகளைக் கண்டது. யாழ்ப்பாணம், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் பிரவேசப் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்யும் இலங்கை மாணவர்களுக்கேற்ற வகையில் சில திருத்தங்களைச் செய்து வைத்திருந்த மா.பீதாம்பரம்பிள்ளை அவர்களது வேண்டுகோளின்படி அத்திருத்தங் களுடன் 1938இல் ஈழகேசரி அதிபர் நா.பொன்னையா அவர்கள் இந்நூலின் முதற்பதிப்பை இலங்கையில் தனது பதிப்பகத்தின்மூலம் வெளியிட்டார். அதன் மூன்றாவது பதிப்பே இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98030).

494.8(2) தமிழ்ப் பாடநூல்கள்

9379

செந்தமிழ்ப் பயிற்சி மாலை: ஏழாம் எட்டாம் பொதுத் தராதரப் பத்திர ஆயத்த வகுப்புகளுக்குரியது. சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு. கோப்பாய்: செல்வி சௌந்தரம் சந்தனநங்கை கந்தப்பு, விரிவுரையாளர், மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை, 4வது பதிப்பு, 1966, 1வது பதிப்பு, டிசம்பர் 1956. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்-புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

xii, 260 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21x13.5 சமீ.

இந்நூலில் எழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள், விளக்கங்கள், கட்டுரைகள் என ஆறு இயல்களாக வகுத்து தமிழ் மொழிப் பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. எழுத்துகள் என்ற முதலாவது பகுதியில் எழுத்தும் பயனும், தமிழ் எழுத்துக்களின் வகை, குறில் நெடில் விளக்கம், எழுத்துக் குடும்பம், நன்றாக உச்சரிப்போம், எழுத்தின் ஒலி அளவு, எழுத்தொலி குறுகியும் கூடியும் ஒலித்தல், எழுத்துப் போலி, எழுத்துக்களின் நிலை, மெய்கள் ஒன்றோடொன்று சேருதல், ணகர னகர வேறுபாடு, றகர ரகர வேறுபாடு, லகர ழகர வேறுபாடு, திசை மொழிகள், சில வடமொழிக்கேற்ற தமிழ்ச் சொற்கள் ஆகிய 15 உப பிரிவுகளில் இவ்விடயம் விளக்கப்பட்டுள்ளது. சொற்கள் என்ற பகுதியில், சொல் சொல்வ தென்ன, இடுகுறிப்பெயர்-காரணப் பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர், ஆகுபெயர் இன்னோரன்ன 16 தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. சொற் றொடர்கள் என்ற பகுதியில் இரட்டைச் சொற்கள், அடுக்குச் சொற்கள், சிலேடை மொழிகள், சொற் புணர்ச்சி, இணைச் சொற்றொடர் முதலான 10 தலைப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. வாக்கியங்கள் என்ற பகுதியில் வாக்கியம், தன்கூற்று-பிறன்கூற்று, நிறுத்தற் குறிகள், திருத்தமான தமிழ் ஆகிய நான்கு விடயங்களும், விளக்கங்கள் என்ற பகுதியில் இவர்கள் யார், கதை படிப்போம், மொழி வளர்ச்சி, கம்பர் காட்டும் காட்சி, காட்டில் பொங்கும் இசையமுது, களிமண்ணின் உபயோகம், தலை ஏன் நரைக்கவில்லை, அடிமைத் தொழிலில் அரசியார், சுவைக் கவிதைகள் ஆகிய பத்துத் தலைப்புகளிலும் விளக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியான கட்டுரைகள் என்ற பிரிவில் கதையாக்கஞ் செய்வோம், கடிதம் எழுதுவோம், கட்டுரை எழுதுவோம் ஆகிய மூன்று விடயங்கள் விளக்கப் பட்டுள்ளன. ஆறு இயல்களிலும் மொத்தம் 58 உப தலைப்புகளில் விடயங்கள் வகுத்து விளக்கப்பட்டுள்ளன.

9380

தமிழ் அமுதம்: மூன்றாம் புத்தகம். அ.சே.சுந்தரராஜன். சுன்னாகம்: அ.சே. சுந்தரராஜன், ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், 1வது பதிப்பு, 1956. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 106 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21.5x14 சமீ.

பாடசாலை மாணவர்களுக்கு தமிழ்ச் சுவையை உண்டாக்கத்தக்க செய்யுட் பகுதிகளைத் தேர்ந்து அவரவர் தரத்துக்கேற்ப வரிசைப்படுத்தித் தெளிவான உரையுடன் தமிழ் அமுதம் தொடரில் ஐந்து புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஆறாம் வகுப்புத் தொடங்கி படிப்படியாக மேல்வகுப்புகளில் உபயோகப் படுத்தக்கூடிய வகையில் இச்செய்யுள்களும் அவற்றுக்கான பொழிப்புரைகளும் வகுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் இது மூன்றாவது புத்தகமாகும். நூலாசிரியர் அ.சே.சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி ஆசிரிய ராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104673).

9381

தமிழ் 1997: உரைநடைத் தொகுப்பு: க.பொ.த. உயர்தரம். சாந்தையூரான் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 11: பிரைற் புக் சென்டர், எஸ்.27, 1வது தளம், த.பெ.எண் 162, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).

112 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 20x13.5 சமீ.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119054).

9382

தமிழ் இலக்கிய வினாவிடை. பொன்.கந்தசாமி. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 1வது பதிப்பு, ஜூலை 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி).

112 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சைக்குரிய தமிழ் இலக்கியம்-செய்யுள் தொகுப்பு, உரைநடைத் தொகுப்பு, கம்பராமாயணம் மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம், பாரதச் சுருக்கம் அணி இலக்கண எடுத்துக்காட்டு என்பவற்றுக்குரிய மாதிரி வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் மாணவர்கள் பரீட்சையிற் சித்தியடையக்கூடிய முறையிலே எழுதப்பட்டுள்ளது. இடம் சுட்டி விளக்கல், இலகுவான வசன நயங்கள், நடைகள், அணி இலக்கண எடுத்துக் காட்டுகள் என்பன தெளிவாகவும் நடைநலம் பொருந்தவும், எளிதில் மனதில் பதியக்கூடியதாகவும் உள்ளன. வித்துவான் பொன். கந்தசாமி யாழ்ப்பாண மாவட்டத்தில், மாதகலைச் சேர்ந்தவர்.

9383

தமிழ் இலக்கியத் தொகுப்பு: அ-பாடத்திட்டம். கல்வி வெளியீட்டுத் திணைக்களம். கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 1வது பதிப்பு, 1972. (கொழும்பு: இலங்கைப் பல்கலைக்கழக அச்சகம்).

viii, 265 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணத் தேர்வுக்கான தமிழ் இலக்கிய அ-பாடத்திட்டத்துக்கு அமைவாக 1973ஆம் ஆண்டு டிசம்பரிலும் அதன் பின்னரும் நடைபெறும் பரீட்சைகளுக்குப் பயன்படுத்தக்கூடியதாக எழுதப்பட்டுள்ள பாட நூல். இத்தொகுப்பின் ஆக்கத்திற்கு ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக கலாநிதி ஆ.சதாசிவம், கலாநிதி க.கைலாசபதி, அல்ஹாஜ் எம்.எம்.உவைஸ், ஜனாப் சமீம், ஆகியோர் இயங்கியுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104690).

9384

தமிழ் இலக்கியம்: செய்யுட்டொகுதி விளக்கமும் உரைநடைத் தொகுதி விளக்கமும் (1967-1968). இலக்கிய ஆசிரியன். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, இல. 400, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, அச்சகம், இல. 400, காங்கேசன்துறை வீதி).

232 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 21x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணத் தேர்வுக்கான தமிழ் இலக்கிய பாடத்தின் ஒரு குறித்த தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டது. நூலாசிரியர் பெயர் தரப்படவில்லை. இலக்கிய ஆசிரியன் என்ற பொதுப் புனைபெயரில் மறைந்திருந்து இந்நூலை எழுதியுள்ளார். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87012).

9385

தமிழ் செயல்நூல்: தரம் 4. இ.இராசதுரை. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2002. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(3), 133 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 160.00, அளவு: 24.5x19 சமீ.

நான்காம் தரத்துக்குரிய 25 தமிழ்மொழிப் பயிற்சிகளைக் கொண்ட தமிழ்மொழிச் செயல்நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 139100).

9386

தமிழ் மஞ்சரி: முதற் புத்தகம். நுல் வெளியீட்டுக் குழு. சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 8ஆம் பதிப்பு, 1951. (சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்).

(3), 88 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை. அளவு: 21x14 சமீ.

செய்யுட் பாகம், வசன பாகம் என இரு பாகங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. செய்யுட்பாகம்- கடவுள், நீதிப் பகுதி, காதைப் பகுதி, இனிய பகுதிகள், தனிப் பாடல்கள் என ஐந்து பாடங்களையும், வசனபாகம் - திருக்குறள், குசேலர், வாய்மை, ஆதிரை, ஹிமாசலம், நெப்போலியன், படிக்காசுப் புலவர், இன்சொல், மாலைச் சூரியன் என இன்னோரன்ன 12 பாடங்களையும் உள்ளடக்கியது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129239).

9387

தமிழ் மலர்: ஆறாம் வகுப்பு. நூல் வெளியீட்டுக் குழு. கொழும்பு: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 5வது பதிப்பு, 1971, 1வது பதிப்பு, 1965, 2வது பதிப்பு, 1966, 3வது பதிப்பு, 1967, 4வது (திருத்திய) பதிப்பு, 1970. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்).

x, 224 பக்கம், விலை: ரூபா 1.40, அளவு: 21.5x14 சமீ.

1965ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆறாந் தமிழ் மலர் திருத்திய பதிப்பாக வெளிவந்துள்ளது. முன்பு 30 பாடங்களாக இருந்த நூல், திருத்திய பதிப்பில் 27 பாடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளன. நளன் சரிதம் கதையாகவும் பாடல்களாகவும் திருத்திய பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. பாட்டுகளுக்கு அரும்பத உரைகளும் பொழிப்புரைகளும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114765).

9388

தமிழ் மொழி: உரைநடைத் தொகுப்பு. சி.தில்லைநாதன், குமாரசுவாமி சோமசுந்தரம் (ஆலோசகர்கள்). கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி, 1வது பதிப்பு, 1996. (கொழும்பு 12: குமரன் புத்தக இல்லம், 201, டாம் வீதி).

161 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

க.பொ.த.உயர்தர தமிழ் மொழி புதிய பாடத்திட்டத்தில் பயன்படுத்தக்கூடிய இவ்வுரைநடைத்தொகுப்பு நூலில் 15 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆசிரியர் பற்றிய குறிப்பு, அரும்பத விளக்கம், பிரதான கருத்துக்களின் தொகுப்பு, விசேட விளக்கக் குறிப்புகள் மற்றும் பயிற்சிகள் என்பன நூலின் சிறப்பம்சங் களாகும். திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரை (ஆறுமுகநாவலர்), தமிழ் பாஷைக்கு உள்ள குறைகள் (பாரதியார்), தமிழர் கொள்கை (மறைமலை அடிகள்), மகாகவி பாரதியார் (வ.ரா.), கல்வி (திரு. வி.க.), இலக்கியச் சுவை (சுவாமி விவேகானந்தர்), ஆசிரியரை அடைந்தது (உ.வெ.சாமிநாதையர்), தமிழும் பிற மொழியும் (பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை), பண்பாடு (ராஜாஜி), ஓய்வுநேரம் (சி.என்.அண்ணாதுரை), தம்பிக்கு கடிதம்-1 (மு.வரதராசனார்), பாட்டும் ஓசையும் (சி.செல்வநாயகம்), பகீரதப் பிரயத்தனம் (பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை), கலையும் காட்சியும் (ஏ.எம்.ஏ.அஸீஸ்), பிணைக்கப்பட்ட கடனை விட வெளிமுதலீட்டை வரவேற்பதே நலம் (ஏ.என்.சிவராமன்) ஆகிய தலைப்புகளில் பிரபல இலக்கியவாதிகளின் ஆக்கங்கள் இந்நூலின் கட்டுரைப் பகுதிகளாகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123394).

9389

தமிழ்மொழிப் பரீட்சைச் சித்திக்கு இலகுவழி: இலக்கணமும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும். பொன் கந்தசாமி. யாழ்ப்பாணம்: பொன் கந்தசாமி, சரவணபவ இல்லம், மாதகல், 1வது பதிப்பு, ஜூலை 1964. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

84 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21x14 சமீ.

மாதகல் கல்விமான் வித்துவான் பொன். கந்தசாமி அவர்கள் எழுதியுள்ள இந் நூல், க.பொ.த. உயர்தர பரீட்சைகளுக்குரியது. தமிழ்மொழிப் பாடத்தின் பரீட்சை வினாக்களுக்கு இலகுவான முறையில் விடை எழுதுவதற்கேற்ற வகையில், செய்யுள்களைப் பதச்சேதம் செய்து, பொருள் அறிந்து உரைநடை எழுதுவதற்கும்,

பொருட் சிறப்புகளையறிவதற்கும், செய்யுள்களில் வரும் தொகைச் சொற்கள், எச்சங்கள், முடிக்குச் சொற்கள் என்பனவற்றிற்கு இலக்கண முடிபுகள் கூறுவதற்கும், கட்டுரைப் பயிற்சி பெறுவதற்கும் ஆங்காங்கு தகுந்த பயிற்சிகள் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன.

9390

மழலைத் தமிழ் அமுதம்: அரிவரிப் புத்தகம்: பாலர் பிரிவு. இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீதர் வெளியீடு, 2வது திருத்திய பதிப்பு, 1987.(யாழ்ப்பாணம்: சுவர்ணா அச்சகம்).

32 பக்கம், படங்கள், விலை: ரூபா 10., அளவு: 21.5x17.5 சமீ.

பாலர் பிரிவுக் குழந்தைகளுக்கான சித்திர வண்ணப்படங்களுடன் கூடிய அரிவரிப் புத்தகம் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 80588).

500 தூய விஞ்ஞானங்கள்

500 தூய விஞ்ஞானம்

9391

அறிவியல் பேழையில் ஒரு சில மணிகள். அநு.வை.நாகராஜன். யாழ்ப்பாணம்: வைரமான் வெளியீடு, சங்கராபரணம், தென் மயிலை, தெல்லிப்பழை, 1வது பதிப்பு, மே 2005. (கொழும்பு 12: நிஸான் பிரின்ரேர்ஸ்).

viii, 60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x18 சமீ., ISBN: 955-98393-5-7.

இந்நூல் வானியல், உயிரியல்-தாவரவியல், அறிவியற் பாதையிற் புதிய கண்டு பிடிப்புகள் ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் பதினெட்டு அறிவியல் கட்டுரைகளைத் தரம்பிரித்து வழங்குகின்றது. வானியல் என்ற பிரிவின்கீழ் வானிற் காணும் கருந்துவாரம், ஓசோன் வாயுவும் அதன் பயன்பாடுகளும், வானலைகளில் பண்பலைகள், கேளா ஒலியும் அதன் பரம்பலும், மிகையொலியும் அதன் பரம்பலும், மிகையொலி வானூர்தி-சுப்பர்சோனிக் ஆகிய ஆறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தொடரும் பிரிவான உயிரியல், தாவரவியல் என்ற பிரிவில் முதலை கண்ணீர் வடிக்குமா?, மனிதனுக்கு தோழனடி நாய், கணத்துக்குக் கணம் நிறம் மாறும் பச்சோந்தி, தோட்டக்கலையில் பொன்சாய் தாவரங்கள், சூழலை மாசுபடுத்தும் தாவரங்கள், புலாலுண்ணும் தாவரங்கள் ஆகிய ஆறு கட்டுரைகளும், அறிவியற் பாதையில் புதிய கண்டுபிடிப்புகள் என்ற பிரிவின் கீழ் நவீன அறிவியற் கண்டுபிடிப்புகளில் ஒலிநாடாப் பேழை, அதிசய மனிதன் ரோபோ, சாதனை பலபுரியும் கனியமே யுரேனியம், பயன்தரும் லேசர் ஒலி, அறிவியல் உலகில் ஒரு அற்புதக் கண்டுபிடிப்பு ரேடியம், வண்ணப்பூச்சரமாய்ச் சொரியும் மத்தாப்பு ஆகிய ஆறு கட்டுரைகளுமாக சுவாரஸ்யமான மாணவர்களுக்கான அறிவியல்

கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 155835).

9392

விஞ்ஞான விளக்கம். 9ஆம் வகுப்பு. செ.வேலாயுதபிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1983, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 பீ.ஏ.தம்பி ஒழுங்கை).

(2), 77 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 8.20, அளவு: 21x14 சமீ.

க.பொ.த. பாடத்திட்டப்பகுதியில் உள்ள விஞ்ஞானக் கல்வியை அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளுடன் தொடர்பபடுத்தி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. பதார்த்தங் களிடையே தாக்கம், ஒலியைக் கேட்டல்-ஒலிப்பதிவு, தாவரங்களின் தொழிற்பாடு, உடலின் தொழிற்பாடு, இயக்கம், எரிதலும் வெப்பமும், அணுக்கள் மூலக்கூறுகள், எளிய பொறிகள், மின்னோட்டம், ஒளித்தெறிப்பு, சனத்தொகையும் உணவும், உலோக அரிப்பு ஆகிய 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2048).

510 கணிதம்

9393

கணிதம்: தொடை: தரம் 10-11. எஸ்.கே.சுந்தரசெல்வன். யாழ்ப்பாணம்: செல்வமதி வெளியீட்டகம், செல்வமதி, ஆவரங்கால், புத்தூர், 1வது பதிப்பு, புரட்டாதி 2007. (யாழ்ப்பாணம்: செல்வமதி பதிப்பகம், ஆவரங்கால், புத்தூர்).

40 பக்கம், விலை: ரூபா 80.,அளவு: 21.5x15 சமீ.

கணித பாடத்தின் தொடை என்ற பாடப்பரப்பில் சுயகற்றலுக்கு ஏற்ற வகையில் விடயங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். தொடை பற்றிய அடிப்படை விதிகளுடன் தொடை தொடர்பான கடந்தகால பரீட்சை வினாக்களையும் இந்நூல் உள்ளடக்கி யுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 188949).

9394

விரைவாக கணிப்பது எப்படி? 6-11ம் ஆண்டு. தா.நாகரட்ணம். பளை: T. திருச்செல்வநாதன், விஷ்ணு அகம், கண்டி வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: புதிய சித்ரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).

(4), 70 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20.5x13.5 சமீ.

மனக்கணிதப் பயிற்சிகளை உள்ளடக்கிய இந்நூல் படிமுறையில் விரைவாகக் கணிப்பதை பயிற்சிகளின் மூலம் மாணவர்கள் பயில வழிசெய்கின்றது. கணினி என்னும் கல்குலேட்டர் இல்லாமல் கணிதப்பயிற்சி செய்ய இந்நூல் வழி

வகுக்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83950).

519 பிரயோக கணிதம்

9395

க.பொ.த. உயர்தர வகுப்புக்கான பிரயோக கணிதம்: நிலையியல். கார்த்திகேசு கணேசலிங்கம். கொழும்பு 6: சாயி கல்வி வெளியீட்டகம், 155 கனால் வீதி, 2வது பதிப்பு, ஜனவரி 1998, 1வது பதிப்பு, மார்ச் 1997. (சென்னை: இளம்பிறை புக்மேக்கர்ஸ், 375 -8, ஆர்க்காடு ரோட்).

(2), 180 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் விசை இணைகர விதி, விசைப் பிரிப்பு, புள்ளி ஒன்றில் தாக்கும் பல ஒருதள விசைகளின் விளையுள், புள்ளி ஒன்றில் தாக்கும் ஒரு தள விசைகளின் சமநிலை (விசை முக்கோணி, விசை முக்கோணியின் மறுதலை, லாமியின் தேற்றம்), சமாந்தர விசைகள் திருப்பம் இணை, உராய்வு, ஒருதள விசைகளின் கீழ் விறைப்பான உடலொன்றின் சமநிலை, மூன்று விசைகள், ஒருதளவிசைத் தொகுதி, மூட்டிய கோல்கள், சட்டப்படல், புவியீர்ப்பு மையம், விசைகளிற்கான காவிப் பிரயோகமும் முப்பரிமாண விசைகளும் ஆகிய விடயங்கள் கொண்ட 11 இயல்களில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124467).

520 வானியல் விஞ்ஞானம்

9396

இந்துக் கணித வானியல் மரபு. ச.முகுந்தன். யாழ்ப்பாணம்: குருஷேத்திரா வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2011. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

xx, 231 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-5341-0-1.

நுழைவாயில் தொடங்கி, சிந்துவெளி நாகரீகத்தில் கணிதவியல், வேத இலக்கியங் களில் இந்து வானியற் சிந்தனைகள் (கல்பசூத்திரங்கள், பக்ஷாலி ஓலைச்சுவடி), சித்தாந்த காலகட்டம் (முதலாம் ஆரியபட்டர், வராஹமிஹிரர், பிரம்மகுப்தர், முதலாம் பாஸ்கரர், லாலா, வரேஸ்வரர், ஸ்ரீபதி, இரண்டாம் பாஸ்கரர்), கேரள கணித வானியல் மரபின் எழுச்சி (மாதவர், பரமேஸ்வரர், நீலகண்ட சோமயாஜி, புதுமனை சோமயாஜி), பிரயோக வானியலும் அவதானிப்பு நிலையங்களும் (வானியல் உபகரணங்கள், சவாய்-ஜெய்சிங், சாம்ராட் இயந்திரம், சஷ்டாம்சம், தக்ஷனோத்திரபீட இயந்திரம், ஜயபிரகாசம், நாடீவலயம், இராமயந்திரம், சங்கர இயந்திரம், இராசி வலய இயந்திரங்கள்), பழந்தமிழ் இலக்கியங்களில் இழையோடியுள்ள வானியல்-கணிதம் தொடர்பான சிந்தனைகள், அண்டவியல் ஆய்வுகளின் முன்னோடிகளான திருமூலரும் மணிவாசகரும் ஆகிய எட்டு

இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234249).

527 விண்வெளிப்பயணம்

9397

மண்ணில் இருந்து விண்ணுக்கு. க.இந்திரகுமார். கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி எண் 160, 1வது பதிப்பு, டிசம்பர் 1973. (கொழும்பு 14: Express Newspapers Ltd., 185, Grand Pass Road).

(2), 188 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 7.50, அளவு: 22x14.5 சமீ.

பள்ளியில் படிக்கும் விஞ்ஞானப் பாடங்களுக்கும், பத்திரிகைகளில் படிக்கும் விஞ்ஞானம் சம்பந்தமான செய்திகளுக்கும் தெளிவுபடுத்தும் பின்னணிக் கருவி போல விளங்கும் நூல் இது. விண்வெளி சகாப்தம் உலகில் உதயம், பிரபஞ்சத்தில் நாம் எங்கே, வாழ்வுதரும் வளிமண்டலம், புவியீர்ப்பை மீறுவதானால், றொக்கற்றின் இயக்கம், நவீன ரொக்கட் யுகம் பிறந்தது, ஹிட்லரின் வீழ்ச்சியும் அமெரிக்காவின் அதிர்ஷ்டமும் போன்ற இன்னோரன்ன 40 இயல்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 38827).

530 பௌதிகம்

9398

உயர்தர மாணவர் மீட்டல் பௌதிகம். அ.கருணாகரர். யாழ்ப்பாணம்: அ. கருணாகரர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1988. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).

176 பக்கம், விலை: ரூபா 45., அளவு: 21x13.5 சமீ.

இருபது அலகுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அலகும் சுருக்கக் குறிப்பு களாக விளக்கப்பட்டுள்ளன. தளமேற்பரப்பில் ஒளித்தெறிப்பு, கோளவாடிகள், தளமேற்பரப்பில் ஒளி முறிவு, வில்லைகள், கண், ஒளியியற் கருவிகள், அலை இயக்கம், அடிப்புக்கள், வலிந்த அதிர்வு, பரிவு, அதிர்வெண் துணிதல், நிலையான அலைகள், வெப்பம், திண்ம, திரவ, வாயு விரிவுகள், கலோரியளவியல், ஆவியமுக்கம், ஈரப்பதனியல், வெப்பக் கடத்து திறன், கதிர்வீசல், இயக்கவியல், நேர்கோட்டியக்கம், புவியீர்ப்பு இயக்கம், விசை, உந்தம், கணத்தாக்கு, வேலை, வலு, சத்தி, பரிமாணம், வட்ட இயக்கம், எளிய இசை இயக்கம், நிலையியல், விசைகள், பொறிகள். உராய்வு, நீர்நிலையியல், ஆக்கிமிடீசின் தத்துவம், அமுக்கம், சடப்பொருளின் இயல்புகள், மீள்தன்மை, பாகுநிலை, மேற்பரப்பிழுவிசை, நிலை மின்னியல், ஓட்ட மின்னியல், கலங்கள், மின்னோட்டத்தினால் ஏற்படும் காந்த விளைவுகள், மின்சுற்றுத் தத்துவங்கள், மின்னோட்டத்தினால் ஏற்படும் வெப்ப, இரசாயன விளைவுகள், மின்காந்தத் தூண்டல் ஆகிய விடயங்கள் இந்

நூலில் குறிப்புரைகளாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84628).

9399

நவீன பௌதிகம் பாகம் 1: பொறியியலும் சடப் பொருள்களின் இயல்புகளும். இ.வே.இலகுப்பிள்ளை, இரத்தினா தனபாலசிங்கம். கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

(4), 343 பக்கம், விலை: ரூபா 5.50, அளவு: 21x13.5 சமீ.

மாற்றங்களும் அளத்தலும், அடர்த்தியும் சாரடர்த்தியும், அமுக்கம், விசைகள், திருப்பம், புவியீர்ப்பு மையம், வேலை, சக்தி, வலு, பொறிகள், உராய்வு, இயக்க வியல், மூலக்கூற்று தொழிற்பாடு ஆகிய எட்டு பிரதான இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 2036).

9400

பௌதிகவியல்: பொறியியல் 1. மாரிமுத்து கருணாநிதி. யாழ்ப்பாணம்: மா. கருணாநிதி, 54, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, 1வது பதிப்பு, 2005. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், நல்லூர்).

(4), 44 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 60., 20x14.5 சமீ.

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) வகுப்பில் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்கள், பௌதிகவியலின் ஒரு அலகாகிய பொறியியலை பரந்துபட்ட அளவில் விளங்கிக்கொள்ள வேண்டியுள்ளது. இந்நூல் அதற்கான துணைநூலாக அமைகின்றது. நடைமுறை சார்ந்த வினாக்களே பெருமளவில் பரீட்சைகளில் கேட்கப்படுவதால் இந்நூல் அவ்வழியிலேயே பயிற்சிகளை வழங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 157020).

9401

பௌதிகவியல்: பொறியியல் பாகம் 1: க.பொ.த. உயர்தரம். கணேசன் சிவலிங்கம். யாழ்ப்பாணம்: க.சிவலிங்கம், பெரியமணல், காரைநகர், 1வது பதிப்பு, ஜனவரி 1999. (அச்சிட்ட இடம் தரப்படவில்லை: நவயோக அச்சகம்).

72 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x15 சமீ.

இந்நூல் மாணவர்களின் சுயகற்றலை ஊக்குவிப்பதற்காகவும், கற்றலின் பெறுமதியை உணர்த்துவதற்காகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் அமைந்துள்ள வினாக்கள் பௌதிகத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், அன்றாட வாழ்வில் பௌதிகத்தின் அடிப்படைத் தத்துவங்களையும், அன்றாட வாழ்வில் பௌதிகத்தின் பிரயோகங்களையும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் சிந்திக்கத்தூண்டும் சிறு கேள்விகளாக 35 வினாக்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

மேலும் பார்க்க: 9857

537 இலத்திரனியல்

9402

இலத்திரனியல் வித்துக்கள். சி.அம்பிகாவரன். கரவெட்டி: சி.அம்பிகாவரன், விக்னேஸ்வரா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1984. (கரவெட்டி: கலாலயா பதிப்பகம், நெல்லியடி).

(6), 54 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 15.00, அளவு: 20.5x13.5 சமீ.

தற்போது இலங்கையில் கல்விப் பாடத்திட்டத்தில் எட்டாம் வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கு இலத்திரனியல் பற்றிய ஆரம்ப அறிவும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இத்துறையில் தமிழில் நூல்கள் இல்லாத குறையைப் போக்கும்வகையில் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அடிப்படை இலத்திரனியல் எண்ணக்கரு, இலத்திரனியல் உபகரணங்கள்ஆகியவற்றின் தொழிற்பாடுகள் என்பன பற்றியும் எளிய இலத்திரனியல் உபகரணங்களைக் கொண்டு ஒரு டிரான்ஸிஸ்டரில் இயங்கும் வானொலியை தயாரிக்கும் செய்முறை பற்றியும் விரிவாக இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. நூலாசிரியர், யாழ் மாவட்ட விஞ்ஞான சேவைக்காலப் பயிற்சி ஆலோசகராகப் பணியாற்றுபவர். Supplementing school science equipment using local resources in Sri Lanka என்ற விடயம் பற்றிய கட்டுரைக்காக பொதுநல நாடுகளின் விஞ்ஞான, கணித, கல்வியாளர் அவையினால் (CASME) 1981ஆம் ஆண்டு விருதுடன் பரிசளிக்கப்பெற்றுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225985).

9403

ஒடியோ அம்பிளிபயர் டேப்ரெக்கோடர். ஏ.ஜீவராஜ். கொழும்பு: ஸ்ரீ தேவா பப்ளிக் கேஷன்ஸ், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (கொழும்பு 10: லின்ராஜ் பிரின்டர்ஸ், 133, முதலாவது டிவிஷன், மருதானை).

iv, 72 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 80., அளவு: 21x14.5 சமீ.

இலத்திரனியல் துறைசார் அனுபவம்மிக்க ஆசிரியரால் எழுதப்பட்ட செய்முறைப் பயிற்சி நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 123813).

9404

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அடிப்படை இலத்திரனியல். எஸ். ரெஜினோல்ட் ஜெயக்குமார், எஸ்.நிமலன், பீ.ரவிராஜன். யாழ்ப்பாணம்: TPS Publishers, அன்னை அகம், புலோலி தெற்கு, புலோலி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. (கொழும்பு 6: ஈ.எஸ்.பிரின்டர்ஸ், 257/1E, காலி வீதி, வெள்ளவத்தை).

vi, 184 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x14 சமீ.

குறைகடத்திகள், P-N சந்தி இருவாயிகள், திரான்சிற்றர், ஒருங்கிணைந்த சுற்றுக்கள் ஆகிய நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பேராசிரியர் க. குணரத்தினம் அவர்களின் ஆலோசனையுடன் எழுதப்பட்டுள்ள இந்நூல் க. பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அடிப்படை இலத்திரனியல் அறிவை வழங்குகின்றது. இந்நூலாசிரியர்களான எஸ்.ரெஜினோல்ட் ஜெயக்குமார் காலி-ஸாஹிறாக் கல்லூரியிலும், எஸ்.நிமலன் நோர்வேயின் Tromso பல்கலைக் கழகத்திலும், பீ.ரவிராஜன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பணியாற்று கின்றனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 131806).

540 இரசாயனம்

9405

அசேதன இரசாயனத்தின் மின்னல் வழிகாட்டி: க.பொ.த.உயர்தரம் பல்தேர்வு வினாக்கள். T.நாகரத்தினம். யாழ்ப்பாணம்: தி.திருச்செல்வநாதன், 195, 3வது குறுக்குத் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 1989. (யாழ்ப்பாணம்: சித்ரா அச்சகம், 664 ஆஸ்பத்திரி வீதி).

40 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 21.5x14 சமீ.

இரசாயனபாடப் பரீட்சையின்போது மிக இலகுவாகப் பதிலளித்து சிறந்த பெறுபேற்றை அடைவதற்கு இலகுவான முறையில் குறிப்புகளையும், விவரங் களையும் உள்ளடக்கிய வினா வடிவிலமைத்துச் சரியான விடையை துரிதமாகக் கண்டு பதில் எழுதிக்கொள்ளும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81151).

9406

அசேதன இரசாயனம். ஆ.மகாதேவன். தெல்லிப்பழை: ஆ.வாமதேவன், குரும்ப சிட்டி, 2வது பதிப்பு, நவம்பர் 1989, 1வது பதிப்பு விபரமில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலக்ஷ்மி அச்சகம், 222 (76), ஆஸ்பத்திரி வீதி).

(4), 96 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 21.5x14 சமீ.

இந்நூலில் S தொகுப்பு மூலகங்கள், ஒட்சியேற்றமும் தாழ்த்தலும், P தொகுப்பு மூலகங்கள் அறிமுகம், கூட்டம் iii மூலகங்கள், கூட்டம் iv மூலகங்கள், கூட்டம் v மூலகங்கள் (நைதரசன், அமோனியா, நைத்திரிக் அமிலம்), கூட்டம் vi மூலகங்கள் (கந்தகம், ஐதரசன் சல்பைட்டு, கந்தக ஈரொட்சைட்டு, சல்பூரிக் அமிலம்), கூட்டம் vii மூலகங்கள் -அலசன்கள், ஐதரசன், தாண்டல் மூலகங்கள், வளி, கடல் வளம், உலோகப் பிரித்தெடுப்பு-இரும்பு, அசேதன உப்புக்களின் பண்பறி பகுப்பு ஆகிய 14 இயல்களில் அசேதன இரசாயனத்தின் (Inorganic Chemistry) கூறுகள் விளக்கப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81134).

9407

அசேதன இரசாயனம்: வினா-விடைகள்: பயிற்சி வினாக்கள். தம்பையா சத்தீஸ்வரன். தெல்லிப்பழை: தம்பையா நல்லம்மா, கட்டுவன், 1வது பதிப்பு, வைகாசி 1990. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், 295/7, காங்கேசன்துறை வீதி).

(2),78 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 20.5x13.5 சமீ.

பொது வினாக்களும் விடைகளும், பயிற்சி வினாக்கள், S தொகுப்பு, ஆவர்த்தன இயல்புகள், P தொகுப்பு, பரீட்சை மாதிரி வினாக்கள், சில பயிற்சிகளுக்கான விடைகள், ஆசிரியர் முடிவுரை ஆகிய எட்டு பிரிவுகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81029).

9408

அடிப்படை இரசாயனம் பகுதி 1. தம்பையா சத்தீஸ்வரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, ஆவணி 1989, 2வது பதிப்பு, பங்குனி 1992. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம்).

(3), 106 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20.5x13.5 சமீ.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் இரசாயனவியலாளரான த. சத்தீஸ்வரன், க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பயன்படும்வகையில் இந்நூலை எழுதியுள்ளார். அடிப்படை எண்ணக்கருக்கள், இரசாயனச் சேர்க்கை விதிகள், வாயு விதிகள், சாரணுத்திணிவு, சார்மூலக்கூற்றுத் திணிவு, சமவலுத் திணிவு, வலுவளவு, சாரணுத்திணிவு துணிதல், இரசாயனச் சூத்திரங்கள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119852).

9409

இரசாயன அறிவை அளவிடுங்கள்: பயிற்சிகள். ம.பரமானந்தன், அ.குலேந்திரன், பொ.மனோகரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 400, காங்கேசன் துறை வீதி, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 400, காங்கேசன்துறை வீதி).

ii, 374 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்களான ம.பரமானந்தன், அ.குலேந்திரன், பொ.மனோகரன் ஆகியோரின் கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட இரசாயன வியல் பாடத்துக்கான பயிற்சிகளை உள்ளடக்கிய நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85194).

9410

சேதன இரசாயனம்: க.பொ.த. உயர்தரம் பல்தேர்வு வினாக்களும் மாற்றீட்டுத் தாக்கங்களும் விளக்க விடைகளும். P.R.A. ஜோசப். கொழும்பு 6: சாயி கல்வி வெளியீட்டகம், 155, கனல் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (சென்னை 17: மாணவர் நகலகம்).

iii, 104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14 சமீ.

பரீட்சை வழிகாட்டியாக உருவாக்கப்பட்டிருக்கும் இந்நூல் உயர் வகுப்பு சேதன இரசாயனவியல் பாடத்தின் பரீட்சை வினாக்களுக்கு விரிவான விடைகளைத் தருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123921).

9411

பொது இரசாயனம் பகுதி 2: ஆவர்த்தன அட்டவணை. தம்பையா சத்தீஸ்வரன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, 1994, 1வது பதிப்பு, 1990. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன் துறை வீதி).

(4), 66 பக்கம், விலை: ரூபா 70.00, அளவு: 21x14 சமீ.

இந்நூல் ஆவர்த்தன விதி, ஆவர்த்தன அட்டவணை, ஆவர்த்தன இயல்புகள், அணுப்பருமன் (அணு ஆரை), அயனாக்கற் சக்தி, மின்னெதிர் இயல்பு, இலத்திரன் நாட்டச் சக்தி, அணுக்கனவளவு, உருகுநிலை, கொதிநிலை, மேலதிக பயிற்சி வினாக்கள், பயிற்சி வினாக்களின் விடைகள் ஆகிய பிரிவுகளின் கீழ் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119708).

9412

பௌதிக இரசாயனம்: கணிப்புக்களும் பயிற்சிகளும். ஏ.மகாதேவன். தெல்லிப்பழை: வீ.கே.ஸ்கந்தமூர்த்தி, உதயதாரகை கல்விச் சேவை, குரும்பசிட்டி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம்தரப்படவில்லை. (ஏழாலை: மகாத்மா அச்சகம்).

(4), 52 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21x14 சமீ.

இரசாயனவியலின் ஒரு பகுதியாகிய, பௌதிக இரசாயம் என்னும் பாடப்பரப்பில் காணப்படும் கணிப்பீடுகள் தொடர்பான பயிற்சி நூல். வெப்ப இரசாயனம், வாயுக்கள், அவத்தைச் சமநிலை, இரசாயனச் சமநிலை, அயன் சமநிலை, மின் இரசாயனம், இரசாயன இயக்கவியல் ஆகிய ஏழு இயல்களில் எழுதப்பட்டுள்ள இந்நூலின் பயிற்சிகளுக்கான விடைகள் இறுதியில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81145).

550 புவியியல் விஞ்ஞானம்

551 சூறாவளி

9413

பன்னிரண்டு மணிநேரம். *நீலவண்ணன் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).*

164 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், விலை: ரூபா 7.60, அளவு: 18.5x12.5 *சமீ.*

1973 நவம்பர் 23ம் திகதி இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் முக்கியமாக மட்டக்களப்பில் பெருஞ்சூறாவளி வீசியது. அக்கொடிய சூறாவளியினால் மட்டக்களப்பில் ஏற்பட்ட அனர்த்தங்களை செங்கை ஆழியானும், செம்பியன் செல்வனும் நேரில் கண்டு கேட்டு எழுதிய Neo Journalism *வகையிலமைந்த நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 321).*

551.47 சுனாமி

9414

ஒரே நாளில் வாழ்வு. *அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்று பதிப்பகம்,* Green Breeze Publishers, 59,1/1, Highlevel Road, Kirulapane, *1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

xii, *72 பக்கம், விலை: ரூபா 100., அளவு:* 19x13 *சமீ.*

இது இலங்கையில் 2004 மார்கழியில் ஏற்பட்ட சுனாமி பற்றியதொரு அனுபவ கதையாடல். 2005ஆம் ஆண்டின் முற்பகுதியில் முன்னாள் அமைச்சராகவிருந்த நஜீப் மஜீத் அவர்களின் மேலதிக செயலாளராகவிருந்த அல்ஹாஜ் செய்யது அஹமட் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அவரது அமைச்சகத்திலிருந்து ஆசிரியரால் பெறப்பட்ட பத்திரிகைச் செய்திகள், ஆவணங்களிலிருந்து தேர்ந்த குறிப்புகளின் அடிப்படையில் நூலாசிரியரினால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அன்றையதினம் இறந்துபோன அனைத்து ஆத்மாக்களுக்கும் சமர்ப்பணமாக்கப் பட்ட இந்நூலின் தொடக்கமே "சுனாமி என்றால்... ஊழல், லஞ்சம், களவு, பொய்ப்பித்தலாட்டம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, மிருகத்தனம், சுரண்டல், வியாபாரம், மோசடி, அராஜக மற்றும் ஏமாற்று அரசியல் இன்னோரன்ன..." என்று தொடங்குகின்றது.

மேலும் பார்க்க: 9657

570 உயிரியல்

9415

உயிரியல் அறிவை அளவிடுங்கள்: பயிற்சிகள். ஆர்.கே. இராஜசேனன், ஏ. குலேந்திரன், எம்.பரமானந்தன். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 400, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 400, காங்கேசன்துறை வீதி).

viii, 218 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 3.50, அளவு: 21x14 சமீ.

உயிரியல் பாடவிதானத்தில் அடங்கிய முக்கியத்துவங்களையும் ஆற்றல்களையும் விதிகளையும் சுலபமாக அறிந்துகொள்ளும்வண்ணம் இந்நூலின் அலகுகளும் வினாக்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. உயிரும் அவற்றின் இயல்புகளும், பச்சைநிறத் தாவரங்களின் போசணை, உணவு, உணவுக் கால்வாயும் அதனுடன் சம்பந்தமான சுரப்பிகளும், சமிபாடு, அங்கிகளிற் கடத்தல், சுவாசித்தல், கழிதல், தாவரங்களும் விலங்கினங்களும் அசைதல், அசைவின் இயைபாக்கம், இனப் பெருக்கம், புத்துயிர்ப்பு, தாவரங்களில் வளர்ச்சி, கூர்ப்பும் பரம்பரையும், பொருளாதார முக்கியத்துவமுள்ள தாவரங்களும் விலங்குகளும், அன்றாட வாழ்க்கையில் நுண்ணுயிர்களின் பங்கு, விசேட போசணை முறை, கூட்டுறவு வாழ்க்கை, மண் உண்டாகுதல், சூழலியல், கதிர் தொழிற்பாடுடைய வீழ்ச்சி, இயற்கையின் சமநிலை ஆகிய 22 இயல்களாக இவை வகுக்கப்பட்டுள்ளன. 5 மாதிரி வினாத்தாள்களும், க.பொ.த.பரீட்சை வினாக்களும் பின்னிணைப்பாக வழங்கப்பட்டுள்ளன. மாணவர் தாமே தாம் அறிந்தவற்றை அளவிடவும் பாட விதானத்தை மீட்டுக்கொள்ளவும் உதவும் வகையில் இந்நூல் வடிவமைக்கப் பட்டுள்ளது. நூலாசிரியர்கள் மூவரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் களாவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84690).

9416

உயிரியல் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும். வி.கே.கணேசலிங்கம். கொழும்பு: க.வி.குகாதரன், 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 6: பரணன் அசோஷியேற்ஸ், 403 1/1, காலி வீதி).

vii, 113 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 29x21 சமீ., ISBN: 978-955-98185-7-1.

இரு பாகங்களைக் கொண்ட இந்நூலின் முதலாம் பாகமான உயிரியல் விஞ்ஞானம் (Biological Science) உயிரினத் தோற்றம், கூர்ப்புக் கொள்கைகள், இயற்கைத் தேர்வு, இசைவாக்கம், இயற்கைச் சமநிலை, மனிதனும் இயற்கையும், இயற்கை வளங்கள், விவசாயம், விலங்கு வேளாண்மை, தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், பூச்சிப் பீடைகளைக் கட்டுப்படுத்தல், உலக சூழல் மாசடைதல், மாசடைதலைக் கட்டுப்படுத்தல், வளர்ப்பு மிருகங்கள், சிறிய அளவில் சுற்றாடலை மாசாக்கல், விலங்குகளின் அழிவு, மருத்துவ நோயாக்கிகள், கூட்டமாய் வாழும் பிராணிகள், மனித இனத்தின் தோற்றம் ஆகிய 19 இயல்களைக்கொண்டது. இரண்டாம் பாகமாகிய தொழில்நுட்பம் (Technology), உயிரியலும் தொழில்நுட்பமும், மனித

உயிர் வாழ்க்கையும் உயிரியல் தொழில்நுட்பமும், மரபணு மாற்றம்பெற்ற உணவுகள், பொறியியல் தொழில்நுட்பம், மரபியல் பொறிமுறை, மருத்துவ தொழில்நுட்பம், சக்தி தொழில்நுட்பம், போக்குவரத்து தொழில்நுட்பம், பாதுகாப்பு தொழில்நுட்பம், வானசாஸ்திர தொழில்நுட்பம், வானூர்தித் தொழில்நுட்பம், இலத்திரனியல் தொழில்நுட்பம், மீள் சுழற்சி தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு தொழில்நுட்பம், கணினி மூலம் கல்வி: ஒரு புரட்சி, மரபணு முறையில் இனங் காணல், ஆகிய 16 தலைப்புகளில் விடயங்களை உள்ளடக்கியது. சமாதான நீதவானான பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், பருத்தித்துறை, கந்த உடையார் ஒழுங்கையைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 174276).

9417

க.பொ.த.உயர்தர வகுப்புக்கான உயிரியல் பகுதி 3B: தொழிற்படும் தாவரம். எம்.பி. செல்லவேல். கொழும்பு 6: சாயி எடியூகேஷனல் பப்ளிக்கேஷன், 155/2, கனால் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1999. (சென்னை 600017: Students Offset Services and Adyar Student Xerox).

(2), 154 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 160., அளவு: 24x18.5 சமீ.

பதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக, 2000ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் பயன்படுத்தக்கூடிய வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130565).

9418

நவீன உயிரியல் (பகுதி 2) ஜீ.சீ.ஈ. சாதாரண பாடநூல் இரண்டாவதாண்டு. கே.இராஜசேனன், எம்.பரமானந்தன், ஏ.குலேந்திரன். கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248 காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 1967. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

294 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

தாவரங்களினதும் விலங்குகளினதும் அசைவுகள், அசைவு இயைபாக்கம், இனம் பெருக்கல், புத்துயிர்ப்பு, வியத்தமும் வளர்ச்சியும், கூர்ப்பு, நுண்ணங்கிகள், மண், தாவர வளர்ச்சியைத் தாக்கியம் சூழற் காரணிகள், தத்தம் சூழலில் தாவரங்களும் விலங்குகளும், அங்கிகளிடையே காணப்படும் போட்டி, பேணுதல், உயிரினங்களின் பாகுபாடு ஆகிய 13 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84673).

9419

மனித வரலாற்றினை எழுதிவரும் மரபணுக்கள்: மீளாய்வு. தனபாக்கியம் குணபால சிங்கம். லண்டன்: தனபாக்கியம் குணபாலசிங்கம், 1வது பதிப்பு, 2013. (விசுவமடு: நிசா ஆர்ட்ஸ், முல்லைவீதி).

vi, *68 பக்கம்*, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14.5 சமீ.

உயிர்களின் மறுபிறப்புக் கோட்பாடுகளை மதங்கள் மட்டுமின்றி, எம்மிடையே இன்று வாழும் பலருக்கும் ஏற்படும் முற்பிறப்பு நினைவுகள், காட்சிகள் என்பனவும் உறுதிசெய்துள்ளன. இந்த வகையில் அவரவர் தன்னிச்சையாகச் செயற்பட்ட வினைகளின்படி இறைவனால் மரபணுக்கள் மாற்றியமைக்கப்படுகின்றது எனும் உண்மை புலனாகின்றது என்றுகூறும் ஆசிரியர், மரபணுக்களுக்கும் பல்வேறு பக்கங்களும், வாழ்க்கைச் சிக்கல்களும் உள்ளன என்று இந்நூலில் விபரிக்கிறார். இப்புதிய மரபணுவியல் கண்ணோட்டத்தில் ஆசிரியர் தமிழ்-சிங்கள இன வரலாற்றினை நெறிப்படுத்தவும் முனைந்திருக்கிறார்.

580 தாவரவியல்

9420

இலங்கை வளமும் தால விலாசமும். *க.சோமசுந்தரப் புலவர். யாழ்ப்பாணம்: கீழைநாடு கல்விப் பட்டதாரிகள் சங்கம்,* Pundit and Vidwan Graduates Association, *1வது பதிப்பு, ஆவணி 1950. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், வண்ணார் பண்ணை).*

viii, *24 பக்கம்*, புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் கீழைநாடு பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் செ.இளையதம்பி, சோ.இளமுருகனார் ஆகியோரால் வெளியிடப்பட்டுள்ளது. தாலம் என்பது பனையையும், விலாசம் என்பது அழகு, வினோதம், விளையாட்டு ஆகியவற்றையும் குறித்து நிற்கின்றது. அவ்வகையில் தால விலாசம் என்ற இந்நூல் பனை பற்றியும், அதன் பல்வேறு பயன்கள் பற்றியும் அரிய தகவல்களை கலிவெண்பாவடிவில் தருகின்றது. 1940இல் வெளிவந்த தாலவிலாசம் என்ற தனது நூலின் முன்னுரையில், நவாலியூர் க. சோமசுந்தரப்புலவரவர்கள், தாலவிலாசம் என்ற பெயரில் முன்னர் ஒரு நூல் ஏட்டுப்பிரதியாக இருந்ததாகவும், அது செந்தமிழ்ப் புலமைமிக்க ஒருவரால் கலிவெண்பாவினால் பாடப்பட்டிருந்ததெனவும் அதனை வாய்ப் பாடமாகத் தனது தந்தை அறிந்திருந்தாரென்றும் குறிப்பிடுகிறார். அதில் சில வெண்பா அடிகளைத் தனக்குத்தன் தந்தை சிறுவயதில் கூறியிருந்தாரென்றும்- அந்நூல் பனை பூமியில் உண்டான வகையையும், அதன் பயன்களையும், அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் முறைகளையும் அத்தமிழ் நூல் தொகுத்துக் கூறியதாகவும் மேலும் குறிப்பிடுகின்றார். பின்னாளில் அந்த மூல ஏட்டுப் பிரதியைப் பெற்றிருந்த James Ferguson *என்ற ஆங்கிலேயர், அதனை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து நூலுருவில் வெளியிட்டிருந்ததாகவும். கொழும்பு நூதனசாலையிலிருந்த அந்த ஆங்கில மொழிபெயர்ப்பையும், தன் தந்தையார் கூறிய வெண்பா அடிகளையும் கொண்டு தால விலாசத்தை மீண்டும் புலவரவர்கள் தமிழுக்குக் கொண்டுவந்து அதனை நூலுருவாக்கியுள்ளதாகவும் அந்த முகவுரையில் அறியமுடிகின்றது. தால விலாசம் என்ற பெயரில் நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர் 1940இல் வெளியிட்ட நூல் பற்றிய விபரத்தை நூல்தேட்டம் பதிவு*

இலக்கம் 6526இல் காணலாம். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85138).

9421

உயர்தர தாவரவியல் பாகம் 2A. *ம.சிவபாலராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).*

(3), 320 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 12.50, அளவு: 21.5x14 *சமீ.*

க.பொ.த. (உயர்தர) வகுப்புக்குரிய பரீட்சைத் துணை நூல். இந்நூலின் முதல் அத்தியாயம் தாவர பாகுபாட்டியலாகும். எஞ்சிய 11 அத்தியாயங்களும் உடற்றொழிலியல் பற்றியனவாகும். நீரும் தாவரங்களும், தாவரங்களின் கனிப்பொருட் போசணை, பசளைகள், தாவரங்களிலிருந்து நீரிழப்பு, ஒளித்தொகுப்பு, தாவரங்களில் நைதரசன் அனுசேபமும் கொழுப்பு அனுசேபமும், உணவுச் சேமிப்பு, நொதியங்கள், சுவாசம், வளர்ச்சி, உறுத்துணர்ச்சியும் தாவர அசைவுகளும் ஆகிய தலைப்புகளில் இவை ஒவ்வொரு அத்தியாயத்திலும் விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தாவரவியல் (Demonstrator) *செய்முறைப் போதனாசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135025).*

9422

க.பொ.த. உயர்தர தாவரவியலுக்கான தொழிற்படும் தாவரம் பகுதி 1. *எம். பீ. செல்வவேல். கொழும்பு 6:* Sai Educational Publications, 155, Canal Road, *1வது பதிப்பு, ஜனவரி 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

(2), 184 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 135., அளவு: 22x14 *சமீ.*

1997இலிருந்து க.பொ.த. உயர்தர தாவரவியல் பரீட்சைக்குச் சிபார்சுசெய்யப் பட்டுள்ள பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட நூல் இது. பாடத்திட்டத்தில் காணப்படும் தொழிற்படும் தாவரம் (Functional Plant) *என்ற அலகின்கீழ் தாவர உடற்றொழிலியல் ஆராயப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தில் தொழிற்படும் தாவரம் ஒன்பது அலகுகளைக் கொண்டதாயினும் முதல் ஐந்து அலகுகளே இந்நூலில் இடம்பெற்றுள்ளன. தாவரங்களுக்கு நீரின் முக்கியத்துவம், தாவர நீர்க்கலத் தொடர்பு, நீர் கடத்தப்படும் பாதை, மேல்நோக்கிய நீர்க்கடத்துகை, இலைவாயின் அமைப்பும் தொழிற்பாடும், ஆவியுயிர்ப்பு, நொதியங்கள், போசணை, ஒளித் தொகுப்பு என்னும் பகுதிகள் இந்நூலில் பாடத்திட்ட மட்டத்திலும் அதற்குச் சற்று அப்பாலும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 203977).*

9423

கண்டல்களும் உவர் வளரிகளும். *கே.எஸ்.குகதாசன். தொண்டமானாறு: வெளிக்கள நிலையம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2000. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).*

(3), 86 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 23.5x18.5 *சமீ.*

தொண்டமானாற்று நீரேரியையும் அதனை அண்டிய பகுதிகளிலுள்ள தாவரங்களையும் ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. உயிரியல் மாணவர்களும் ஆர்வமுள்ள பிறரும் வெளிக்கள ஆய்வுகளுக்குப் பன்படுத்தத்தக்க நூல் இது. கண்டல்களையும் அவற்றுடன் ஈட்டங்களாகவுள்ள சில தாவர இனங்களையும் இனம்காண இக்கைநூல் உதவுகின்றது. கண்டல்களின் பரம்பலை விளக்கப் படங்களுடன் எடுத்துரைப்பதும், கண்டல் தாவரங்களின் வாழிடங்களினதும் இயல்புகளை விளக்குவதும் இந்நூலின் மற்றுமொரு நோக்கமாயுள்ளது. எமது பிரதேசங்களில் கண்டல்களின் வாழிடங்கள் குழம்பிப் போயுள்ளமைக்கான காரணங்களை ஆராய்ந்து அதனை மீள வளமாக்குவதற்கான தேவையையும் இந்நூல் வலியுறுத்துகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 210405).

9424

கண்டலும் சூழலும். *ஏ.சி.எம்.நியாஸ் (இயற்பெயர்: அப்துல் காதர் முஹம்மது நியாஸ்). இலங்கை: இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியம்,* IOCN, *இலங்கைக் கிளை, 1வது பதிப்பு, ஜூலை 2011. (கொழும்பு: கருணாரத்ன அன் சன்ஸ்).*

ix, *130 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 22.5x15 *சமீ.,* ISBN: 978-955-0729-00-5.

இந்நூல் இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒன்றியத்தின் (IOCN) *இலங்கை அலுவலகத்தினூடான எதிர்காலத்துக்கான கண்டல்* (MFF) *நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி அனுசரணையுடன் கடல் மற்றும் கரையோர வன பாதுகாப்பு ஸ்தாபனம்* (MCRCF) *செயற்படுத்தும் புத்தளம் மற்றும் மன்னார் மாவட்ட தமிழ் பேசும் சமூகத்திற்குத் தேவையான அறிவையும் தகவல்களையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் கண்டலைப் பாதுகாத்தல் என்னும் நிகழ்ச்சித் திட்டத்தினால் வெளியிடப்பட்டது. கண்டல் என்றால் என்ன, கண்டல் சார்ந்த தாவரங்கள் என்றால் என்ன, கண்டல் தாவரங்களும் வற்றுப்பெருக்கு நில வலயங்களும், கண்டற் சூழல் தொகுதி, கண்டல் காடுகளின் பரம்பல், கண்டல் தாவர இனங்கள், கண்டல் தாவரங்களின் இசைவாக்கங்கள், கண்டல் தாவரங்களை இனங்காணல், இலங்கையில் பிரதானமாகக் காணப்படும் கண்டல்சார்ந்த தாவர இனங்கள், கண்டற் சூழலின் உயிரினப் பல்வகைமை, கண்டல் தாவரங்களின் முக்கியத்துவங்கள், இலங்கையில் கண்டல் காடுகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் ஆகிய 12 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற நூலாசிரியர், 1980 முதல் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தில் பணியாற்றுகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 226057).*

9425

குறுந்தாவரம் (பொன்சாய்). சி.ரவீந்திரநாத், அ.சுந்தரலிங்கம். சென்னை 600098: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41-B, சிட்கோ இன்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (சென்னை 600094: ஐயனார் ஒப்செட், 10, சுப்பராவ் நகர் 2வது தெரு, சூளைமேடு).

x, 90 பக்கம், விளக்கப்படங்கள், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x13.5 சமீ., ISBN: 81-234-0818-8.

கலாநிதி சி.ரவீந்திரநாத், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடாதிபதியாவார். அ.சுந்தரலிங்கம் இளைப்பாறிய மட்டக்களப்பு வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தராவார். இவர்கள் இருவரும் இணைந்து உருவாக்கியுள்ள இந் நூல் சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் தோன்றிய ஒரு தாவர வளர்ப்பு முறையான Bonsai எனப்படும் குறுந்தாவரம் பற்றிய தாவரவியல்சார்ந்த பல தகவல்களை வழங்குகின்றது. குறுந்தாவரம் பற்றிய ஓர் அறிமுகம், குறுந்தாவர வளர்ப்பு முறை (மண், உரம், நீரிடல், நோய்கள், குறுந்தாவரங்கள் வளர்ப்பதற்கு உகந்த இடங்கள், மீள்நடுகை, குறுந்தாவரங்களாக வளர்ப்பதற்கு ஏதுவான தாவரவகைகள், குறுந்தாவரங்களைப் பெறும் வழிகள்), குறுந்தாவர வளர்ப்பிற்குத் தேவையான உபகரணங்கள் (உபகரணங்கள், குறுந்தாவர வளர்ப்பில் பாசியின் பயன்பாடு, நிலத்தை மூடக்கூடிய ஏனையவை, மாதிரி குறுந்தாவர வகைகள்), குறுந்தாவர வளர்ப்பு பற்றிய சந்தேகங்களும் அவற்றிற்கான விடைகளும், குறுந்தாவர வளர்ப்பிற்குப் பொருத்தமான தாவர வகைகளும் அவற்றைக் குறுந் தாவரமாக வளர்ப்பதற்குப் பயன்படுத்தும் பொதுவான நடைமுறைகளும் ஆகிய ஐந்து பிரதான இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 178175).

9426

தாவரவியல்: க.பொ.த.(உயர்தர) வகுப்புக்குரியது பகுதி 1. ம.பரமானந்தன், பொ.சிவானந்தன் (ஆசிரியர்கள்). கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248 காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு மே 1967. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).

(8), 622 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 15., அளவு: 20.5x14 சமீ.

தாவரவியல் தொடர்பான இப்பாடநூல் வித்துத் தாவரங்களின் உடலமைப்பும் அவற்றின் தொழில்களும், வேர், தண்டு, பூ, பழங்களும் வித்துக்களும், பதியமுறை இனப்பெருக்கம், கலம், பிரி இழையங்கள், இழையங்கள், முதலுடல், அங்கங்கள், துணையுடல், நீரும் தாவரங்களும், போசணை, சுவாசித்தல், வளர்ச்சியும் அசை தலும் ஆகிய 17 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85187).

590 விலங்கியல்

9427

இழையவியல்: உயர்தர விலங்கியல் உசாத்துணை நூல்வரிசை 4. மோ.மேரின் அல்போன்ஸ். யாழ்ப்பாணம்: மோ.மேரின் அல்போன்ஸ், பரி.யோவான் கல்லூரி, 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன் துறை வீதி).

52 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 28x22 சமீ.

யாழ்ப்பாணம், பரி.யோவான் கல்லூரியின் விஞ்ஞானமாணி ஆசிரியரான மோ. மேரின் அல்போன்ஸ் எழுதிய நான்காவது பாடநூல் இதுவாகும். விலங்கியல் கற்கும் உயர்தர வகுப்பு விஞ்ஞான மாணவர்களின் இழையவியல் (Histology) உப பாடநூல் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 111300).

9428

உயர்தர விலங்கியல் பரீட்சை வழிகாட்டி. எம்.பி. செல்லவேல். கொழும்பு 6: சாயி எடியூகேஷனல் பப்ளிக்கேஷன், 155/2, கனால் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1994. (சென்னை 600024: A R Prints, 375, 8, ஆர்க்காடு சாலை).

(2), 76 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24x18.5 சமீ.

க.பொ.த. உயர்தர விலங்கியல் பாடத்திட்டத்திற்கெனக் கல்விப் பகுதியினரால் சிபார்சு செய்யப்பட்ட நூல்களையும், தற்போது வெளிவந்துள்ள பல ஆங்கில விலங்கியல் நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு இம்மாதிரி வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 10 வினாப்பத்திரங்களில் ஒன்பது வினாப் பத்திரங்களுக்கு விடைகள் வழங்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103780).

9429

உயர்தர விலங்கியல்: ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்புப் பாடநூல்: பகுதி 4: சூழலியல் முளையவியல் கூர்ப்பு. கே.சங்கர ஐயர், எஸ்.செல்வநாயகம். கொழும்பு 6: விஜய லட்சுமி புத்தகசாலை, 248 காலி வீதி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1969. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

234 பக்கம், படங்கள், விலை: ரூபா 7.25, அளவு: 20.5x13.5 சமீ.

க.பொ.த. உயர்வகுப்பு விலங்கியல் பாடத்திட்டத்திற்கேற்ப வெளியிடப்படும் உயர்தர விலங்கியல் நூலின் நான்காம் பாகம் இதுவாகும். சூழலியல், விலங்குச் சாகியம், வாழ்க்கை முறைகள், நன்னீர்ச் சூழலியல், ஒரு தென்னந்தோப்பில் வாழக்கூடிய விலங்குகள், சிறப்பான விலங்குத் தொடர், நிறங்கொள்ளல், முளையவியல், அம்பியொக்சுசின் முளையவியல், தவளையின் முளையவியல், கோழிக்குஞ்சின் முளையவியல், முலையூட்டிகளின் முளையவியல், கூர்ப்புக்

கொள்கை ஆகிய 13 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85191).

9430

உயர்தர விலங்கியல்: ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்புப் பாடநூல்: திருத்திய பதிப்பு: பகுதி 2. கே.சங்கர ஐயர், சீ.இராமநாதன், எஸ்.செல்வநாயகம். கொழும்பு 6: விஜயலட்சுமி புத்தகசாலை, 248, காலி வீதி, வெள்ளவத்தை, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1974, 1வது பதிப்பு, மே 1968. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

(2),208 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 12.00, அளவு: 21x13.5 சமீ.

விலங்கியலின் குழியவியல் (Cytology), பிறப்புரிமையியல் (Genetics), இழைய வியல் (Histology) ஆகிய பிரதான பாடங்களை இத்தொகுதி உள்ளடக்குகின்றது. குழியவியலில் கலம், கலப்பிரிவு: புணரிப் பிறப்பு ஆகிய விடயங்களையும், பிறப்புரிமையியலில் மென்டலும் மென்டலின் விதிகளும், கொல் பரம்பரை யலகுகள், மடங்கு எதிருருக்கள், ஒன்றையொன்று தாக்கல், இலிங்கத் துணிபும் இலிங்கமிணைந்த தலைமுறையுரிமையும், இணைப்பும் குறுக்குப் பரிமாற்றமும், தலைமுறையுரிமையாதலின் நிறமூர்த்தக் கொள்கை, விகாரம், பரம்பரையியலின் பொருளாதார முக்கியத்துவம் ஆகிய விடயங்களும், இழையவியலில் பாகுபாடு: மேலணி இழையம், தொடுப்பிழையம், தசையிழையம், நரம்பிழையம், இனப் பெருக்கவிழையம், சாயமிடுதலும் நிரந்தரத் தயாரிப்புகள் ஆக்கலும் ஆகிய விடயங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85171).

9431

கடல் ஆமைகள்: உயிரியலும் இனத்தின் பேணுகையும் அவற்றின் வளர்ப்பு முறைகளும். கா.சித்திரவடிவேலு. தொண்டமானாறு: தொண்டமானாறு வெளிக்கள நிலையம், 1வது பதிப்பு, ஜுன் 1996. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

22 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 28x22.5 சமீ.

வடபுலத்தில் அருகிவரும் உயிரினமான, கடல் ஆமைகளின் வாழ்வியல் மற்றும் பேணுகை பற்றிய விழிப்புணர்வினை ஊட்டும் நூல். அறிமுகம், பாகுபாடு, பொருளாதார முக்கியத்துவம், உருவவியலும் உடற்றொழிலியலும், உணவுப் பழக்கங்களும் ஆயுளும், துணைதேடலும் புணர்ச்சியும், கூடு கட்டல், இரை கௌவுதலும் பாதுகாப்புப் பொறிமுறையும், தகுந்த முறையில் பயன்படுத்தலும் பேணலும், வளர்ப்பு ஆகிய பத்து இயல்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131648).

9432

கரப்பான்: மாதிரி முள்ளந்தண்டிலி. எம்.சி.பிரான்சீஸ். யாழ்ப்பாணம்: மாசில் பதிப்பகம், ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிர மணிய அச்சகம், 63, பீ.ஏ. தம்பி வீதி).

(2), 60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 12.50., அளவு: 21x14 சமீ.

உயிரியல் விஞ்ஞான, குறிப்பாக விலங்கியல் கற்கும் உயர்தர வகுப்பு மாணவர் களின் பயன்பாட்டுக்கு உகந்த உப பாடநூல். முள்ளந்தண்டிலிகள், கரப்பான் புறவுருவ அமைப்பு, புறத்தோற்படையும் புறவன்கூடும், தசைத் தொகுதியும் அசைவுகளும், வாயுறுப்பும் சமிபாட்டுத் தொகுதியும் சமிபாடும், குருதிச் சுற்றோட்டத் தொகுதி, சுவாசத் தொகுதி, கழிவுத் தொகுதி, நரம்புத் தொகுதி, இனப்பெருக்கத் தொகுதி ஆகிய 10 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2104).

9433

புதிய உயர்தர விலங்கியல் பகுதி 2. கே.சங்கரஐயர். யாழ்ப்பாணம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1987. (யாழ்ப்பாணம்: பிதா என்டர்பிரைஸஸ்).

(2), 130 பக்கம், படங்கள், விலை: ரூபா 25.00, அளவு: 21x14 சமீ.

புதிய ஜீ.சீ.ஈ.உயர்தர வகுப்புப் பாடநூலாக வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் கரப்பான் பூச்சி, தேரை ஆகிய இரு உயிரினங்கள் பற்றிய விலங்கியல் மாணவர் களுக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. வெளியமைப்பு, தோல், சமிபாட்டுத் தொகுதி, சுற்றோட்டத்தொகுதி, சுவாசத் தொகுதி, சிறுநீர் சனனித் தொகுதி, நரம்புத் தொகுதி, வன்கூட்டுத் தொகுதி, தசைத் தொகுதி ஆகிய தனித்தனிப் பிரிவு களில் இவை விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81170).

9434

முளையவியல்: உயர்தர விலங்கியல் உசாத்துணை நூல்வரிசை 3. மோ.மேரின் அல்போன்ஸ். யாழ்ப்பாணம்: மோ.மேரின் அல்போன்ஸ், பரி.யோவான் கல்லூரி, 1வது பதிப்பு, 1995. (சாவகச்சேரி: சோதி அச்சகம்).

48 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 75., அளவு: 27.5x22 சமீ.

ஐந்து அலகுகளாகப் பிரிக்கப்பட்டு, உயர்தர பாடத்திட்டத்திற்கமைய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அறிமுகம் என்ற முதலாவது அலகில் புணரிப் பிறப்பு, கருக்கட்டல், பிளவு, புன்னுதானாதல், அங்கப்பிறப்பு ஆகிய விருத்தியின் ஆரம்ப நிலைகள் பற்றிய அடிப்படைத் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. 2வது அலகில் தேரை/ தவளையின் விருத்தி-புன்னுதானாதலின் இறுதிவரை, பொரித்தல் தொடக்கம் உருமாற்றம் வரை குடம்பியில் ஏற்படும் வெளித்தோற்ற மாற்றங்கள் விளக்கப்பட்டுள்ளன. 3வது அலகில் கோழி முட்டையின் சிறப்பியல்புகள், கோழியின் முதிர்மூலவுரு மென்சவ்வுகளினது உருவாக்கமும் தொழில்களும்

விளக்கப்பட்டுள்ளன. 4வது அலகில் மனிதனின் முதிர் மூலவுரு மென்சவ்வுகள் பற்றிய எளிய அறிவு மனித முளையம் உட்பதித்தலும் சூல்வித்தகித்தலும் பற்றி விளக்கப்படுகின்றது. 5ஆவது இயலில் மனிதனின் இனப்பெருக்கச் சக்கரத்தினதும் கர்ப்பத்தினதும், ஓமோன் கட்டுப்பாடு பற்றி விபரிக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 110789).

மேலும் பார்க்க: 9446

600 தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானம்

610 மருத்துவம்

9435

சமூக மருத்துவம்: ஓர் அறிமுகம். *அன்புச்செல்வி ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: டாக்டர் திருமதி அன்புச்செல்வி ஸ்ரீதரன், 651, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 2007. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி பிரின்டர்ஸ், 1227, காங்கேசன்துறை வீதி).*

(4), 124 பக்கம், விலை: ரூபா 220., அளவு: 20.5x14.5 *சமீ.*

சமூக மருத்துவம் பற்றிய அறிமுகத்தை வழங்கும் இந்நூல் தினசரியை, வியாதி உண்டாகாமல் தடுப்பதற்குரிய உபாயங்கள், திரவத் திரவிய விஞ்ஞானம் ஆகிய தமிழ்த் தலைப்புக்களைத் தொடர்ந்து Health, Epidemiology, Medical certificates and death, Infectious disease of Epidemiology, Immunizing Agents, Principles of prevention of communicable diseases, Prevention of Non Communicable diseases, Antenatal care, Family Planning, Rabies, Breast feeding, Purification of water, Occupational health, Epidemiologic Methods, Research Project, Food poisoning, Sexually transmitted disease *ஆகிய ஆங்கிலத் தலைப்புகளில் அமைந்த 23 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 190520).*

612 உடற்கூற்றுத் தொழிலியல்

9436

பிரயோக உடற்றொழிலியற் சொற்றொகுதி: தமிழ்-ஆங்கிலம். *அ.சின்னத்தம்பி. கண்டி: ஊற்று பிரசுரம், மருத்துவ வெளியீடு-2, 154, கொழும்பு வீதி, 1வது பதிப்பு, 1974. (கொழும்பு 10: ஓட்டோ அச்சகம்).*

(3), 180 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 22x14.5 *சமீ.*

இந்நூல் தமிழ்மூலம் பிரயோக உடற்றொழிலியல் (Applied Physiology) *கற்பவர் களுக்கும் கற்பிப்பவர்களுக்கும் உதவும் வகையில் பேராசிரியர் அ.சின்னத்தம்பி*

அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்-ஆங்கில சொற்களின் (Glossary) தொகுதி யாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114720).

613 பொது உடல்நலவியல்

9437

ஆரோக்கிய வாழ்வுக்குச் சில ஆலோசனைகள். வி.ரி.இளங்கோவன். புங்குடுதீவு 3: மூலிகை வெளியீடு, சிகரம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1986. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B.A. தம்பி வீதி).

iv, 32 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 12.5x18.5 சமீ.

மூலிகை சஞ்சிகையின் ஆசிரியர் வி.ரி.இளங்கோவனின் சுகாதாரக் கருத்துக்கள் அடங்கிய நூல். மூலிகை வெளியீட்டுத் தொடரில் இரண்டாவது நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85132).

9438

புதிய சுகாதாரக் கல்வி தரம் 9. எஸ்.செல்வநாயகம், எஸ்.பிரான்சிஸ். யாழ்ப் பாணம்: மாசில் பதிப்பகம், ஈச்சமோட்டை வீதி, 1வது பதிப்பு, தை 1981. (யாழ்ப்பாணம்: ஸ்ரீசுப்பிரமணிய அச்சகம்).

(2), ix, 83 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 10., அளவு: 21x13.5 சமீ.

இந்நூல் உணவும் பயனும், போசாக்கின்மை, உணவில் தொற்றல் அல்லது அழுக்குப் படல், உயிர்வாழ்வதற்கு நீர், உயிர்வாழ்வதற்கு வளியின் அவசியம், தொற்றுநோய்கள் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2063).

613.7 யோகக்கலை

9439

இலகுவான ஆசன செய்முறை. ஸ்வாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி. யாழ்ப் பாணம்: திவ்ய ஜீவன சங்கம், நல்லூர், 1வது பதிப்பு, 1995. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

60 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

யோக ஆசன செய்முறைப் பகுதியை இரு பாகங்களாக ஆசிரியர் வெளியிட்டுள்ளார். வயது வேறுபாடின்றி ஆண்-பெண், இளையோர்-முதியோர் என இருபாலாரும் செய்யக்கூடிய எளிய ஆசனங்களை முதலாம் பகுதியாகிய இந்நூலில் எழுதி யுள்ளார். சூரிய நமஸ்காரம், பத்மாசனம், வச்சிராசனம், புஜங்காசனம் போன்ற

மற்றைய ஆசனச் செயன்முறைகள் இரண்டாவது பாகமான சிதானந்த யோகாசனச் செய்முறை -22 என்ற நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 224351).

9440

சிதானந்த யோகாசன செய்முறை 22. ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி, திவ்விய ஜீவன சங்கம், நல்லூர், 3வது பதிப்பு, ஏப்ரல் 1994. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

(24), 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

யோகாசன கலாநிதி ஸ்வாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களினால் எழுதப்பட்டுள்ள இந்நூல், பரப்பிரம்மத்தின் தத்துவம், முன்னுரை, யோகமார்க்கம், வாழ்த்துரை, அணிந்துரை, பாராட்டுரை, நல்லுரை ஆகியவற்றுடன், சிறார்க்கு நல்கும் தேன் அமுது. சுவாமி ஸ்ரீ சிவானந்தராச்சிரமத்தில் தீட்சை பெற்றார் சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி, அம்மா என்ற சொல்லின் தத்துவம், யோகாசனமும் பெண்களும், முடிவுரை ஆகிய பிரிவுகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக ஒன்றே குலம் ஒருவனே தேவன், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், Yoga Asanas, சூரிய நமஸ்காரத்தின் தத்துவம் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 103106).

9441

யோகாசனமும் உடல்நலமும். சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சே.சிவசண் முகராஜா, 199/1, கில்னர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜூலை 2004. (யாழ்ப்பாணம் பாரதி பதிப்பகம், 430, கே.கே.எஸ்.வீதி).

(2), 20 பக்கம், விளக்கப் படங்கள், விலை: ரூபா 40., அளவு: 20.5x15 சமீ.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று கூறப்படுகின்ற எண்வகை யோகத்தில் ஆசனம் மூன்றாவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆசனம் என்றால் இருக்கை என்று பொருள். இந்தத் தூல சரீரத்தைச் சரியான இருக்கைமுறையில் பழக்கப்படுத்துவதே ஆசனப் பயிற்சியின் நோக்கமாகும். அவ்விதம் பழக்கப்படுத்துவதன் மூலம் நோயற்ற வாழ்வு வாழ முடியும். யோகசாஸ்திரங்களில் ஆசனங்கள் நூற்றெட்டு வகையாகக் கூறப் பட்டுள்ளன. இவற்றுள் இலகுவானதும் உடல்நலத்துக்கு உதவக்கூடியதுமான சில ஆசனங்கள் பற்றி இந்நூலில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. பதுமாசனம், வஜ்ராசனம், புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பச்சிமோத்தாசனம், மயூராசனம், பாதஹஸ்தாசனம், திரிகோணாசனம், ஹலாசனம், சிரசாசனம், ஏகபாதாசனம், சர்வாங்காசனம், மச்சாசனம், சாந்தியாசனம் ஆகிய 15 ஆசன வகைகள் பற்றித் தனித்தனி இயல்களில் இந்நூல் சுருக்கமாக விளக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 152059).

614 பொதுச் சுகாதாரம்

9442

சுகாதார சேவையாளரின் கைநூல்: ஏனையோரும் பயன்படுத்தக்கூடியது. வே.கிருஷ்ணராஜா. யாழ்ப்பாணம்: தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், 1வது பதிப்பு, ஆடி 1988. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி).

(7), 242 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 58.00, அளவு: 24x18.5 சமீ.

உடலமைப்பும் உடலியலும், நோய்க் காரணிகள், உடம்பின் பாதுகாப்பு முறைகள், நோய் பரவல், நோய் தடைமுறைகள், பிரசவம், நோயாளி பரிசோதனை, மருந்துகள், நோயாளி பராமரிப்பு, நோய்கள், அறிகுறிகளும் அவற்றின் அர்த்தமும், பயிற்சிக்குரிய செயல்முறைகள், பிரச்சினைகளும் நடவடிக்கைகளும் ஆகிய பதின்மூன்று அத்தியாயங்களில் இந்நூல் விரிவான உப பிரிவுகளுடன் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84990).

9443

சுகாதார போதினி: உடனலவியலும் உடற்றொழிலியலும். ச.அ.தர்மலிங்கம், இ.தர்மலிங்கம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 5வது பதிப்பு, 1967, 1வது பதிப்பு, 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

150 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

ஆறாம் ஏழாம் வகுப்புகளுக்குரிய வகையில் தெளிவான விளக்கப்படங்களுடன் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85464).

9444

சுகாதாரக் கல்வி: பத்தாந்தரம். எஸ்.வி.பி.பிள்ளை. யாழ்ப்பாணம்: தேசிய கல்வி வெளியீடு, 1வது பதிப்பு, 1978. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

(3), 120 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23.5x18 சமீ.

க.பொ.த. வகுப்புகளுக்கு ஏற்றதாக, 1978அம் ஆண்டில் கல்வி அமைச்சு வெளியிட்ட சுகாதாரக் கல்விப் பாடத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட நூல். வளியும் நீரும், கழிவுப் பொருள்களை அகற்றுதல், உணவும் போசணையும், குருதி, பொதுசன உடல்நலம் ஆகிய பிரதான பிரிவுகளின்கீழ் இந்நூலின் பாடப்பரப்பு அடங்கியுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85154).

9445

சுகாதாரம்: சரீர சாஸ்திரம் அடங்கியது. ஆ.வீ.சோமசுந்தரம். யாழ்ப்பாணம்: ஆ.வீ.சோமசுந்தரம், தத்துவ சாஸ்திர ஆசிரியர் (Science Master), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 9வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).

xii, 228 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.50, அளவு: 21x14 சமீ.

இலங்கையின் வித்தியாபிரசுர சபையினரால் 2.8.1955இல் அங்கீகாரம் பெற்ற பாட நூல். சுகம், நோய், நமது தேகம், இரத்தம், பவனம் அல்லது காற்று, சுவாசித்தல், தண்ணீர், ஆகாரம், சீரணம், உணவு, சமையல், பானங்கள், பிளிகையும் தசிரகோளங்களும், தேகத்திலுண்டாகும் அழிவும் கழிவு பதார்த்தங்களும், சருமம், நீராடல், ஆடை, தேகாப்பியாசம், இளைப்பாறுதல், பழக்க வழக்கங்கள், பஞ்சேந்திரியங்கள், வீடுகள், எங்கள் சத்துருக்கள், ஒட்டு வியாதிகளும் தொற்று வியாதிகளும், வியாதிக் கிருமிகளை அழித்தல், சில சாதாரண நோய்கள், குழந்தை களை நிர்வகித்தலும் நோயாளிகளைப் பாதுகாத்தலும், ஆபத்து வேளையில் ஆரம்ப சிகிச்சை, கடை மருந்துகளும் மூலிகைகளும் ஆகிய 29 தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85197).

மேலும் பார்க்க: 9139

615.942 நஞ்சூட்டலும் சிகிச்சைமுறையும்

9446

நச்சுப் பாம்புகளும் அவற்றின் கடிகளும் தீர்வும். அ.சின்னத்தம்பி, தி.இராஜேந்திரன். யாழ்ப்பாணம்: காங்கேசன்துறை வைத்திய வெளியீடு, காங்கேசன்துறை, 1வது பதிப்பு, 1983. (காங்கேசன்துறை: சந்திரா அச்சகம்).

(2), 42 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 10., அளவு: 18.5x12.5 சமீ.

பேராசிரியர் அ.சின்னத்தம்பி, வைத்திய கலாநிதி தி.இராஜேந்திரன் ஆகியோர் எழுதிய இந்நூல் அயன மண்டல நச்சுப்பாம்புகள் பற்றியதாகும். சித்தவைத்தியர் களிடமும் பொதுமக்களிடமும் நச்சுப் பாம்புகள் பற்றியும் அவற்றினால் தீண்டப் பட்டால் மேற்கொள்ளவேண்டிய அவசர சிகிச்சை பற்றியும் போதிய அறிவை வளர்க்கும் நோக்கில் எழுதப்பட்டது. ஏற்கெனவே காங்கேசன்துறை வைத்திய வெளியீடுகள் தொடரில் அறுவை வைத்திய நலம் பேணற் கைநூல் என்ற தலைப்பிலான நூல் ஒன்று வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114761).

மேலும் பார்க்க: 9470

616 நோய்கள்

9447

இருதய நோய்களும் தடுக்கும் முறைகளும். ச.இராசரத்தினம். யாழ்ப்பாணம்: ச.இராசரத்தினம், பிரசாந்தி, கொக்குவில், 1வது பதிப்பு, நவம்பர் 1976. (யாழ்ப் பாணம்: சாந்தி அச்சகம்).

24 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 21.5x14 சமீ.

டாக்டர் ச.இராசரத்தினம் இலங்கை அரசினர் வைத்தியசேவையிலிருந்து ஓய்வு பெற்றவர். "தாயும் பிள்ளையும்" என்ற நூலின் ஆசிரியர். ஈழநாடு வார இதழில் தொடராக வெளிவந்த இருதய நோய் பற்றிய கட்டுரையின் நூல்வடிவம் இதுவாகும். ஒருவரை இருதய நோய்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய வாழ்க்கை முறைகளையும் உணவு வகைகளையும் நோய்களையும் இந்நூல் விபரிக்கின்றது. இந்நூலின் விற்பனை நிதி முழுமையாக திருநெல்வேலியில் கட்டப்பட்டு வந்த பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா பிரார்த்தனை மண்டபத்திற்கு வழங்கப்படும் என்ற குறிப்பும் நூலில் காணப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102383).

9448

ஒட்சிடனெதிரிகள் மூலமாகப் புற்றுநோய்த்தடுப்பு. வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா. இலங்கை: டாக்டர் வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

x, 146 பக்கம், படங்கள், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 955-98900-2-6.

புற்றுநோயின் நிகழ்வு வீதம், கலம் (உயிரணு) ஒன்றின் அடிப்படைக் கட்டமைப்பு, புற்றுநோய், கட்டில்லா மூலவேர்களும் ஒட்சிடனெதிரிகளும், பொதுவான வகைப் புற்றுநோய்கள், புற்றுநோய்க்கெதிரான மற்றும் ஒட்சிடனெதிரி மூலிகை வகைகள் ஆகிய ஆறு அத்தியாயங்களில் ஒட்சிடனெதிரிகள் மூலமாக புற்றுநோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இந்நூலில் விளக்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196692).

9449

காக்கை வலிப்பு பற்றி பேசுவோம். நிமால் சேனநாயக்கா (சிங்கள மூலம்), அரியராணி அரியரத்தினம் (தமிழாக்கம்). இரத்மலான: சர்வோதய விஸ்வலேகா வெளியீடு, 41, லும்பினி அவென்யூ, 1வது பதிப்பு, 2000. (இரத்மலான: சர்வோதய விஸ்வலேகா அச்சகம், 41, லும்பினி அவென்யூ).

xiv, 123 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 955-599-209-6).

எப்பிலெப்சி எனப்படும் காக்கை வலிப்பு பற்றிய மருத்துவ விளக்கத்தை வழங்கும் நூல். பேராதனைப் பலகலைக்கழக மருத்துவ பீடத்தின் தலைவரான பேராசிரியர் நிமல் சேனநாயக்கவின் ஆங்கில, சிங்கள நூலின் தமிழாக்கம் இதுவாகும். தமிழ் மொழிபெயர்ப்பாளர் கொழும்பு மருத்துவபீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். நூலின் கருத்தை எளிதில் விளங்கிக்கொள்ள ஜயஸ்ரீ சேமகேயின் கருத்தோவியங்கள் உதவுகின்றன. இந்நூல் நோயின் மருத்துவ நோக்கத்தைவிட கூடுதலாக, அதன் சமூக, கலாச்சார, உளவியல் பாதிப்புக்களை அதிகம் விளக்கி தீர்வுகாண விளைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131301).

9450

காச நோய்: சமூக அணுகுதல். சி.யமுனானந்தா. யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா, மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி, மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம், பண்ணை, 2வது பதிப்பு, மார்ச் 2011, முதற்பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிறின்ரேர்ஸ், காங்கேசன்துறை வீதி).

v, 99 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-52458-0-7.

காசநோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட இந்நூல், யாழ்ப்பாண சுகாதாரப் பகுதியின் மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரியான டாக்டர் சி.யமுனானந்தா அவர்களின் மற்றுமொரு மருத்துவ நூற்படைப்பாகும். காசநோயும் சுவாச ஆரோக்கியமும், நுரையீரலில் ஏற்படும் காசநோய், நுரையீரல் அல்லாத பகுதிகளில் ஏற்படும் காசநோய், சிறுவர்களில், பெண்களில் ஏற்படும் காசநோய், காசநோயும் சலரோகமும், காசநோயும் புகைத்தலும், காசநோயும் மதுபானமும், காசநோயும் போஷாக்கும், காசநோயும் எய்ட்ஸ் நோயும், முதியவர்களில் காசநோய், மருந்திற்கு எதிர்ப்புத் தன்மையுடைய காசநோய், காசநோயினை ஆய்வுகூடங்களில் கண்டறிதல், ஆய்வுகூடங்களில் தரம்பேணுதலும் கட்டுப்பாடும், காசநோய்க்கான சிகிச்சை, தொய்வு நோயினை காசநோயிலிருந்து பிரித்தறிதல், காசநோய் பற்றிய விழிப்புணர்வு ஆகிய தலைப்பு களில் எழுதப்பட்ட இந்நூலின் இறுதியில் சமூகத்துக்குச் செய்தியைக் கொண்டு சேர்க்கும் விழிப்புணர்வுப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. போதிய விளக்கப் படங்களுடன் கூடிய நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 217067).

9451

சில நோய்களும் ஆலோசனைகளும். எஸ்.பீ.ஆர்.சீர்மாறன். திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சுகாதார நிலையம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1994. (ஏழாலை: மஹாத்மா அச்சகம்).

xix, 105 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

நமது சூழலில் உள்ள பொதுவான நோய்களும் அவற்றைத் தடுப்பதற்கான அல்லது குணப்படுத்தலுக்கான ஆலோசனைகளும் இந்நூலில் காணப்படுகின்றன. இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற் பாகத்தில் குழந்தையின் உடலும் உள்ளமும், தடுப்பூசிகள், வயிற்றோட்டம், ஏற்புவலி, நியுமோனியா, மூளைக்காய்ச்சல், பற்கள், உடன்காயம் (Traumatic Injuries) ஆகிய எட்டு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பாகத்தில் நோய்த்தடுப்பு பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. நீர், கொலரா, கல்லடைசல், சுவாசத் தொகுதி, புகைபிடித்தல், வாய்ப் புற்றுநோய், மார்புப் புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், கோமா, நீரிழிவு, இரத்த சோகை, இரத்ததானம் ஆகிய 12 விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. விஞ்ஞானரீதியான ஆலோசனைகளும் இந்நூலில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

நூலாசிரியர் வைத்திய கலாநிதி சீர்மாறன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்திய அலுவலராகப் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104898).

9452

நீரிழிவு நோய்: ஓர் அறிமுகம். கருணாகரன் வித்தியன், சிவமாலா வித்தியன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6-5/3ஏ, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, புரட்டாதி 2010. (கொழும்பு 6: ஆர்.எஸ்.ரி.என்டர்பிரைசஸ், 114, டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை).

iv, 58 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 16.5x12 சமீ.

இந்நூலில் நீரிழிவு நோய் என்றால் என்ன?, நீரிழிவு நோயின் அறிகுறிகளும் அதன் விளைவுகளும், நீரிழிவு நோயை இனங்காணுதல், நீரிழிவு நோய் உருவாகு வதற்கான காரணங்கள், நீரிழிவு நோயின் சிகிச்சை (வாழ்க்கை முறைகள், குளிசை மருந்துகள், இன்சுலின் ஊசி மருந்து), நீரிழிவு நோயினால் உருவாகும் உயிருக்கு ஆபத்தான பாதிப்புகள், நீரிழிவு நோயாளர்கள் கவனிக்கவேண்டிய பிற விடயங்கள், நீரிழிவு நோயைத் தடுத்தல் ஆகிய பிரதான விடயங்களை இந்நூல் விபரிக்கின்றது. மீரா பதிப்பகத்தினரின் 89ஆவது வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218242).

618 பெண்நோயியல், மகப்பேற்று மருத்துவம்

9453

இளம் பெண்ணோயியல். அ.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: Daniel Chapman Vaitilingam Commemoration Committee, 1வது பதிப்பு, 1982. (யாழ்ப்பாணம்: திருமகள் அச்சகம், சுன்னாகம்/யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்/யாழ்ப்பாணம்: கலா நிலையம்).

(8), 422 பக்கம், விலை: ரூபா 35., அளவு: 22x14.5 சமீ.

பெண்ணின் கூபகவுறுப்புக்களின் கட்டமைப்பியல், வயிற்றுச் சுவரினதும் கூபகத் தளத்தினதும் தாங்கல் செய்யும் கட்டமைப்புகள், பெண்ணின் சலப்பையும் ஊறித்தாரையும் ஊறித்தரும் சலப்பை, கூபகக் குருதிக் கலன்களும் நிணையக் கலன்களும் நரம்புகளும், முளையவியலும் பெண்ணின் பிறப்புறுப்புகளின் தழைப்பும் வளர்ச்சியும், பாலினப் பகுப்பைத் திட்டப்படுத்தல், இனப்பெருக்கமும் பரியகமும், நரம்பு அகச்சுரப்பி-பித்துயித்தறி-சூலக ஓமோன்கள் ஆகியவற்றினது ஒருங்கிணை வினையங்கள், வளர்ச்சிப் பக்கவமும் இளமைக் காலமும், கருக் கட்டலும் கற்பநிலையும், பெண்ணின் பிறப்புச் சுவட்டினதும் சூலகங்களினதும் பிறழ் உருவாக்கங்களும் தழைப்புகளும், அல்மாதயிரிவுயா, கருப்பை-யோனி இவற்றில் நிகழும் பிறழ்வுகளும் சாரக வகைகளும், இடர்மாதயிரிவு, பாலினவுந்தல் களும் மணம் புரிதலும், விறைப்பம், யோனி பிரிவுகள், நாரிவலி, ஊறுநீரி

அறிகுறிகள், ஊறுநீர் அடக்கலாமை, மலடும் (கருவளமின்மை) குறை கருவளமும், கருப்ப தடுங்கோள், மலடாக்கம் ஆகிய 23 தலைப்புகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இந்நூலின் இரண்டாம் பிரிவு மூப்புற்றோர் பெண்ணோயியல் என்ற தலைப்பில் 1984இல் வெளியாகியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 82392).

9454

தாயும் பிள்ளையும். ச.இராசரத்தினம். யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி ச.இராசரத்தினம், பிரசாந்தி, கொக்குவில், 2வது பதிப்பு, 1974, 1வது பதிப்பு, 1934. (கொக்குவில்: சோதிடப்பிரகாச அச்சியந்திரசாலை).

(16), 88 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 5.00, அளவு: 21.5x14 சமீ.

இலங்கைத் தமிழரால் எழுதப்பட்ட மகப்பேற்று மருத்துவம் தொடர்பான முன்னோடி நூல். கை வைத்தியமுறைகளையும் கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகளையும் பாட்டி வைத்திய முறைகளையும் சாடி, முப்பதுகளில் நவீன மருத்துவத்துறையை மக்கள் மத்தியில் பரப்பும் சமூக அக்கறையுடன் இந்நூல் எழுதப்பட்டது. பிரசவகாலம், கர்ப்போற்பத்திக்கு உதவும் அவயவங்களும் தொழில்களும், கர்ப்பவதியில் ஏற்படும் மாறுதல்கள், போலிக் கர்ப்பம், கர்ப்பவதி கவனிக்கவேண்டியவை, கர்ப்பவதியில் ஏற்படும் சில பிணிகள், காலங்கழித்தும் வயிற்றுள் சிசு, வயிற்றுள் இறங்கும் சிசு, பிரசவகாலம் வந்தெய்தியதும், பிரசவத்துக்குப் பிள்ளை எடுக்கும் காலம், நஞ்சுக்கொடி வெளிவர எடுக்கும் நேரம், பிரசவம் நடக்கும் பொழுதும் பின்பும், தாய்க்கு ஏற்படும் நோய்கள், பிள்ளை பிறந்தவுடன், பிள்ளையை நீராட்டல், நாபிக்கொடி, காலமாகாது பிறக்கும் குழந்தை, பிள்ளையின் பால், பால் கொடுக்கும் முறை, தாயின் பாலை இழந்த சேய், பிள்ளையின் மற்றைய தேவைகள், பிள்ளையின் வளர்ச்சி, பால் மறப்பித்தல், பிள்ளைக்கு ஏற்படும் நோய்கள், பிறவியில் ஏற்படும் குறைகள், யார் இந்தப் பிள்ளை, தேர்ந்தெடுக்கும் திருமணம், கர்ப்பமும் நீரழிவும், கர்ப்பமும் சயரோகமும், ஆணா அல்லது பெண்ணா, பாட்டியின் பிடியிலிருந்து தாயை விடுவிக்க இவை, மலடு, தேவையற்ற பிள்ளை, தொற்றுநோய்த் தடுப்பு முறைகள் ஆகிய 34 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118889).

மேலும் பார்க்க: 9457

618.92 குழந்தைகள், சிறுவர் மருத்துவம்

9455

குழந்தை வளர்ச்சி. வ.மா.கருணாகரன். யாழ்ப்பாணம்: திருமதி வ.மா.கருணாகரன், குழந்தை வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1995. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).

142 பக்கம், படங்கள், அட்டவணை, விலை: ரூபா 58.50, அளவு: 21x13.5 *சமீ.*

க.பொ.த. உயர்வகுப்பு மாணவர்களின் குழந்தை வளர்ச்சி என்ற பாடவிதானத்திற் கேற்ப உருவாக்கப்பட்ட இந்நூலில், இனப்பெருக்கத்திற்கு உதவும் உடலுறுப்பு களும் தொழில்களும், குழந்தைப் பராமரிப்பு, பாலர் பாடசாலை, உளரீதியான பிரச்சினைகளும் நடைமுறைக்கு விதிவிலக்கான பழக்கங்களும், குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களும் பரிகாரமும், கட்டிளமைப் பருவம், உணவு ஆகிய விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 120837).

618.97 மூப்பியல் மருத்துவம்

9456

முதியோரைப் பராமரிக்கும் அறிவியல். *வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா. இலங்கை: வைத்திய கலாநிதி வசந்தி தேவராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

(29), 177 பக்கம், புகைப்படங்கள், பின்னிணைப்புகள், விலை: ரூபா 350., அளவு: 29x22 *சமீ.,* ISBN: 955-98900-3-4.

இந்நூல் மூப்பியல் மருத்துவத்துக்கோர் அறிமுகம், வயது முதிர்கையில் ஏற்படும் உடல்ரீதியான மாற்றங்கள், முதியோர்களுக்கேற்படும் பொதுவான பிரச்சினைகள், உளநலத்தைப் பாதிக்கும் பிரச்சினைகள், அல்சைமர் நோய், வயது முதிர்ந்தோரைச் செயலுறச் செய்யும் உத்திகள், மருத்துவமனைகளும் வீட்டுப் பராமரிப்பும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 196623).

9457

மூப்புற்றோர் பெண்ணோயியல். *அ.சின்னத்தம்பி. யாழ்ப்பாணம்: பேராசிரியர் அ.சின்னத்தம்பி, 1வது பதிப்பு, 1984. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).*

(6), 194 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 22x14.5 *சமீ.*

இந்நூலில் வயது மூப்படைந்த பெண்களைப் பாதிக்கும் நோய்கள் பற்றியும் அவற்றுக்குரிய சிகிச்சை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. நோயாளியைச் சோதித்தல், ஈனலுறுப்புகளின் காயங்களும் புரைகளும், ஈனலுருறுப்புகளின் இறக்கம், வல்வம் பரீனம் ஆய பரப்புகளில் தோன்றும் ஏணியாக்கள், மதன நோய்கள், கருப்பையின் இடம்பெயர்தல்கள், சாரகத் தோற்றப்பாடுகள், ஈனலுறுப்புகளில் நிகழ் அழற்சிகள், கருப்பைக் கழுத்தழற்சியும் அரிப்பும், கருப்பையகவணியழற்சி, குருதிக் கருப்பை, கீழ்க் கருப்பைக் கழுத்துவழி கானாக்கம் இல்லாக் கருப்பை ஆதியன, எக்காள (கருக்குழாய்) சூலகவழற்சி, கூபகப் பரிவிரிய அழற்சியும் கலவவழற்சியும், ஈறை கவட்டுத் தூபக்கிள் வாதை, வல்வச் சிறைப்பைகளும் புதுக் கழலையங்களும், யோனிச் சிறைப்பைகளும் புது வளர்ச்சிகளும், கருப்பை நார்த் தசையோமாக்கள்,

கருப்பைக் காசினோமாக்கள், கருப்பையடற் காசினோமா, சாக்கோமா, கோறியன் காசினோமா, கரப்பையகவணியொசிவு (வாதை), சூலகக் கழலையங்கள் ஆகிய 23 தலைப்புக்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் முன்னைய பகுதி இளம் பெண்ணோயியல் என்ற தலைப்பில் 1982இல் வெளியாயிற்று.

619 கீழைத்தேய மருத்துவம்

9458

செகராசசேகர வைத்தியத் திறவுகோல். நாகரத்தினம் கணேசலிங்கநாதன். மகரகம: ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, 1வது பதிப்பு, 2009. (திருக் கோணமலை: அஸ்ரா பிரின்டர்ஸ்).

535 பக்கம், விலை: ரூபா 800., அளவு: 14.5x22 சமீ.

யாழ்ப்பாண இராச்சியத்தின் சிம்மாசனப் பெயராகவும், வழிவழிவந்த பெயராகவும் கொள்ளப்படும் செகராசசேகரம் தனித்துவ மன்னர் ஆட்சியாக மாத்திரம் அல்லாது தனித்துவ மருத்துவ முறைகளையும் கொண்டியங்கியிருந்துள்ளது. அரசனே வைத்தியனாகவும் இருந்துள்ளான் என்பர் வரலாற்றாய்வாளர். மன்னன் செகராச சேகரன் காலத்தில் பல்வேறு வைத்திய நூல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் முக்கியமானதாகக் கருதப்படும் செகராசசேகரம் 1932இல் ஏட்டுருவிலிருந்து அச்சுவேலி த.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களின் முயற்சியால் அச்சுவாகன மேறியது. அந்நூலுக்கான விளக்கமாக இத்திறவுகோல் அமைகின்றது. நூலாசிரியர் வைத்திய கலாநிதி நாகரத்தினம் கணேசலிங்கநாதன் வட்டுக்கோட்டை, சிவன் கோவிலடிடைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 220086).

619.1 சித்த மருத்துவம்

9459

அனுபவமுள்ள குடிநீர் வகைகள். ஏ.சி. இராசையா. யாழ்ப்பாணம்: அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்திய சங்கம், 259, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஆவணி 1955. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம்).

viii, 40 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 21.5x14 சமீ.

அனுபவமுள்ள குடிநீர் வகைகள். ஏ.சி.இராசையா. யாழ்ப்பாணம்: வைத்திய கலாநிதி வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி, கந்தையா வளவு, 259, நாவலர் வீதி, கந்தர்மடம், 2வது பதிப்பு, ஜனவரி 1985, 1வது பதிப்பு, ஆவணி 1955. (சாவகச்சேரி: திருக்கணித அச்சகம், மட்டுவில்).

(16), 40 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 10.00, அளவு: 21.5x13.5 சமீ.

இது பிரபல வைத்தியரும் அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்தியச் சங்கக் காரியதரிசியும் தமிழாசிரியரும் கஸ்தூரியாரின் மருகர் பண்டிதர் க.முத்துக்குமாரு

அவர்களின் மாணவருமாகிய வைத்தியாச்சாரி ஏ.சி.இராசையா அவர்களின் அனுபவத் தொகுப்பு. இதன் முதற்பதிப்பு 1955இல் அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தின் இரண்டாவது பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. கர்ப்பிணிகளுக்கும் சிறுவர்களுக்குமான பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள், குடிநீர் வகைகள் பற்றியும், சின்னமுத்து, பொக்குளிப்பான் போன்ற நோய் களுக்கான சிகிச்சை மற்றும் குடிநீர் வகைகள் பற்றியும் 136 தலைப்புகளில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 1வது பதிப்பு, 118682. 2வது பதிப்பு, 83514).

9460

இராசசேகரம்: சிங்கை அரசர்களினதும் அரச பரம்பரை மருத்துவர்களினதும் கையாட்சியான மருந்து குடிநீர் வகைகள். உ.இ.ம.இளவரசர் இராஜசேகரம். சுழிபுரம்: பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த மருத்துவ சங்கம், மூளாய், திருத்திய மூன்றாவது பதிப்பு, 2012, 1வது பதிப்பு, 1984, 2வது பதிப்பு, 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(9), 51 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ.

இது ஒரு மூலிகை மருத்துவ நூல். சுதேச மருத்துவத்திற்கும், சுதேச மருத்துவ மாணவர்களுக்கும் பயனுள்ள தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. நூலாசிரியர் 1969இலிருந்து வட இலங்கை சுதேச வைத்திய அதிகாரசபையின் பணிப்பாளர் களுள் ஒருவராகக் கடமையாற்றியவர். இலங்கா சித்தாயுர்வேத கல்லூரியின் விரிவுரையாளராகவும், பரீட்சகராகவும் பணியாற்றியவர். 1970 முதல் அகில இலங்கைச் சித்த வைத்திய சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் ஐவரில் ஒருவராகப் பணியாற்றினார்.

9461

கட்டு வைத்தியம். சே.சிவசண்முகராஜா. சுன்னாகம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், கந்தரோடை, 1வது பதிப்பு, மார்ச் 2000. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

(2), 44 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

கட்டு வைத்தியம் என்னும் சிகிச்சைப் பிரிவு, சித்த மருத்துவத் துறைகளில் இரணசிகிச்சைப்பிரிவில் அடங்குகிறது. காலனியாதிக்க காலங்களிலும் விரணங் களுக்குச் சிகிச்சையளிக்கும் பிரிவானது கட்டு வைத்தியம் என்ற பெயருடன் இணுவில், பருத்திக்கலட்டி, நல்லூர், வடலியடைப்பு போன்ற இடங்களில் சில சித்த வைத்தியர்களால் சிறப்பாகக் கையாளப்பட்டு வந்தது. இந்நூல் யாழ்ப்பாணத் தமிழில் எழுதப்பட்டிருந்த கட்டு வைத்தியம் தொடர்பான ஒரு ஓலைச்சவடியின் அச்சுப்பதிப்பாகும். ஏட்டுப்பிரதியின் எழுத்தாளரின் பெயரோ, வைத்தியரின் பெயரோ அறியப்படவில்லை. ஏட்டிலுள்ள அளவைகளை தற்கால அளவைக்கு மாற்றியதுடன், சிகிச்சைமுறைகளை வகைப்படுத்தியும் இந்நூலில் வைத்தியகலாநிதி சிவசண்முகராஜா வழங்கியுள்ளார். நூலின் இறுதியில் கலைச்சொற்றொகுதி

ஒன்றும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 130083).

9462

குணபாடம்: மூலிகையியல் பாகம் 1. *விவியன் சத்தியசீலன். யாழ்ப்பாணம்: குணபாடப் பிரிவு, சித்த மருத்துவத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2003. (யாழ்ப்பாணம்: திருவள்ளுவர் அச்சகம், 593 நல்லூர்).*

xvi, *380 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு:* 20.5x14.5 *சமீ.*

திருமதி விவியன் சத்தியசீலன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றுபவர். உணவும் போஷாக்கும், இலைக் கஞ்சியும் அதன் மருத்துவப் பயன்களும், தங்கம்-செம்பு-வங்க சத்துள்ள மூலிகைகள், மருத்துவ மூலிகைகளின் வேறு பெயர்கள், மருத்துவப் பழமொழிகள், யாழ்ப்பாண மாவட்டத்தில் மூலிகைகளின் பரம்பல், மருந்துக்குப் பயன்படும் வேர்கள், திரிகடுகு-திரிபலை சேரும் மருந்துகளின் விபரம், மருந்துக்குப் பயன்படும் தரைகீழ் தண்டுகள், இலைகள், மலர்கள், கட்டைகள், விதைகள், பழங்கள், சமூலங்கள், கட்டைகள், புற்றுக்கள், பிசின்கள், ரெசின்கள் ஆகிய விடயங்களை உள்ளிட்ட பல தகவல்களை இந்நூல் தனது 23 அத்தியாயங்களிலும் உள்ளடக்கு கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135406).

9463

குலசேகரம்: பெரிய பரிகாரியார் பரம்பரையினரின் அனுபவ விடவைத்தியம். *தண்டிகை குலசேகரம்பிள்ளை (இயற்பெயர்: கலாநிதி கே.பாலசுப்பிரமணியம்). யாழ்ப்பாணம்: பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்திய சங்கம், 1வது பதிப்பு, ஜுன் 1985. (குரும்பசிட்டி: அம்பிகா அச்சகம்).*

(3), 38 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 19.5x13.5 *சமீ.*

பெரிய பரிகாரியார் ஞாபகார்த்த சித்த வைத்தியர் சங்கத்தின் செயலாளரான நூலாசிரியர் இலங்கா தமிழ் வைத்திய ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராகவும் சேவையாற்றியவர். இந்நூலில் விஷஜந்துக்களால் ஏற்படும் மரணங்களைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள் கூறப்பட்டுள்ளன. விஷப்பாம்புகளைக் கண்டறியக் கூடியதாகவும், விஷங்களை இனங்காணக்கூடியதாகவும், முதலுதவி, விஷம் பரவுவதைத் தடுக்க ஆரம்ப சிகிச்சை, பிரதான சிகிச்சை எல்லாவற்றையும் சாதாரண வாசகரும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83949).

9464

சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கைநூல். *பொன்னம்பலம் இராமநாதன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: லங்கா சித்த ஆயுர்வேத*

மருத்துவக் கல்லூரி, 2வது பதிப்பு, ஏப்ரல் 1994, 1வது பதிப்பு, ஐப்பசி 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

ix, *36 பக்கம், தகடு, விலை: ரூபா 50., அளவு:* 21x14.5 *சமீ.*

நூலாசிரியர் வைத்திய கலாநிதி பொ.இராமநாதன், யாழ்.மாநகரசபையின் சித்த மருத்துவ நிலையத்தின் பிரதம வைத்திய அதிகாரியாவார். லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ள இந்நூலில் முதற் பகுதியில் வைத்திய சாஸ்திரங்களில் குறிப்பிடப்படும் செய்கைகளும் (Actions) *அவற்றிற்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்பதங்களும், வைத்தியர்களால் உபயோகிக்கப்படும் சில குறியீடுகள் ஆகிய இரு அத்தியாயங்களும் தரப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் பிரதான மருந்துவகைகள் சில விபரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆசவ அரிஷ்டங்கள், தைலங்கள், குவாதங்கள், குளிகைகள், சூரணங்கள், பஸ்பங்கள், கல்கங்களும் லேகியங்களும் இரசம் சேர்ந்த மருந்துகள் ஆகிய எட்டு விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளன. மூனறாம் பகுதியில் ஆயுர்வேத முறையில் உள்ள சில கஷாயங்கள், சில குறிப்பிடத்தக்க செய்கைகளுக்குரிய மூலிகைகள், மருத்துவ அளவைகள், விடமுறிவுக்கு நம்நாட்டு மருத்துவம் ஆகிய விடயங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104892).*

9465

சித்த மருத்துவ வாகடம் 2. *சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: சித்த மருத்து வளர்ச்சிக் கழகம், 199/1, கில்னர் ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 2008. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

vi, *22 பக்கம், விலை: ரூபா 40., அளவு:* 18.5x12 *சமீ.*

ஏட்டுப் பிரதிகளான கட்டு வைத்தியம், சித்த மருத்துவ வாகடம் ஆகிய இரண்டு நூல்களையும் அச்சிட்டுப் பிரசுரித்த நூலாசிரியர் சித்த மருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா தனது மூன்றாவது முயற்சியாக இந்நூலைப் பதிப்பித்துள்ளார். இருபாலையில் பிரசித்திபெற்ற வைத்தியராக இருந்த த. பொன்னையா அவர்களின் பத்தாம் இலக்க ஏட்டுக்கட்டில் உள்ள விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கோளைக்குக் கைகண்ட நெய், கிரந்தியிருமல் தொய்வுக்கு நெய், கோளைக்கு நெய் என்றவாறாகத் தொடரும் 54 சித்த மருத்துவ வாகடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 195793).

9466

சித்த மருந்து முறையியல். *பொன்னம்பலம் இராமநாதன். யாழ்ப்பாணம்: அகில இலங்கை அரசசேவை சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2000. (யாழ்ப்பாணம்: ஏழாலை மஹாத்மா அச்சகம், இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்).*

xxiv, *242 பக்கம், விலை: இந்திய ரூபா 250., அளவு:* 22.5x15 *சமீ.*

பகுதிகளில் எழுதப்பட்டுள்ளது. முதலாம் பகுதி சித்த மருந்துகளின் அட்டவணை (மருந்து வகை, குடிநீர், சூரணம், மாத்திரை/குளிகை, இலேகியம்/இளகம், மெழுகும் குழம்பும், மணப்பாகு (Syrup), *எண்ணெய்/தைலம், செந்தூரம், பற்பம், கறுப்பு, புற மருந்துகள்), மருந்துச் சரக்குகளின் சுத்தி (தாவர இனம், விலங்கினம், தாது இனம்) ஆகிய இரு விடயங்களை உள்ளடக்கியது. இரண்டாவது பகுதி மருத்துவம் சார்ந்த சில முக்கிய விடயங்களை விளக்குகின்றது. இதில் மூலிகைகளிலிருந்து சாறு எடுக்கும் முறைகள், கூட்டுச் சரக்குகள், மருத்துவக் கலைச் சொற்கள் (வடமொழி/தென்மொழி), தமிழ் எண்கள், சீந்தில் சர்க்கரை எடுக்கும் முறை, புடங்களின் வகைகள், மருத்துவ அளவைகள், எந்திரங்கள், வெடியுப்புச் செய்நீர் தயாரிப்பு முறை, சீலை மண் செய்தல், மாத்திரைக்கட்டு, தோலா இயந்திரம், தாது இனச் சரக்குகளுக்குச் சுருக்குக் கொடுத்தல், அனுபானம் (தேன்/தாய்ப்பால்). மருந்துகளைப் பழக வைத்தல், ஐந்திணை நிலங்கள், ஐம்பூதத் தலங்கள், காயகற்பம், மருந்துசார்ந்த இயல்கள் ஆகிய பல்வேறு விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 130590).*

9467

சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்: ஓர் குறிப்பு வழிகாட்டி. *வி.முத்தையா ஜோன். பருத்தித்துறை: டாக்டர் வி.முத்தையா ஜோன், இளைப்பாறிய ஆசிரியர், கற் கோவளம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1972. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம்).*

xiv, 228 +xiv, *புகைப்படம், விலை: ரூபா 6.00, அளவு:* 18.5x12 *சமீ.*

சித்தர், பெருமிதம், சிங்கை நகரிற் சித்த வைத்தியம், அண்டபிண்ட அமைப்பு, தமிழ் வைத்திய நூலாசிரியர் பதினெண்மர், திருமூலர் தமிழ் செய்தமை, உடலமைப்பு, எலும்புக்கூடு, உடற்கூறுகள்-தலை, மூளை-பெருமூளை-கண், பட்சவாதம், சீரண உறுப்புகளும் தொழிலும், அன்னாசயம், குன்மம், சிறுகுடல், கிறாணி, பித்தாசயம்-கல்லீரல்-பித்தப்பை, செங்கமாரி, செங்கமாரிச் சிகிச்சை, பித்தவாயு, தலைவலி, சூரியகபாலம், உப அங்கம்-பீலிகை, பெருங்குடல், குடகிரி, குடல்வாதம், குடல் பிதுக்கம்-அண்டவாயு, கணயம், நீரழிவு, மேகம் மேகரணம், ஆரம்ப மேகரணம் அல்லது கொறுக்கு, விருக்கம், சலாசயம், இரத்தாசயம் -மாரடைப்பு, இரத்த ஓட்டம், மாரடைப்பு, சுவாசாசயம், அசுத்த நிவாரணிகள் சம்பந்தப்பட்ட நோய், சயரோகம் குணங்குறிகள், தொய்வு, இருமல் ரோக ஆரம்ப சிகிச்சை, சுவாதம்-சளிச்சுரம், சருமம், சரீரத்தின் சீதோஷ்ணம், சுரம், நோய்களின் ஒடுக்கம், மண்ணீரல், இரத்த அமுக்கம், இரத்தவாதம், இரத்த பித்தம், புற்றுவல்மீகம், புற்றின் வகை, புற்றுரோக நிவாரணம், ஒளிச்சிகிச்சை, வாதம்-றுமாற்றிசம், சோர்வாதத்துக்கு எரிதைலம், உதிரிவாதங்கள், பஞ்சகர்மங்களாவன, பிடரிவாதம், தோள்பட்டைவாதம், இடுப்புவாதம் அல்லது இடுப்புப் பிடிப்பு, எண்பது வாதத்திற்கும் சிகிச்சை, நடுக்கவாதம், மவுனத்திற்கு மகாவல்லாதி குதிவாதம், கால்நோ பூச்சு, அழல்வாதம்- விறைப்புவாதம், கைகால் எரிவிற்கு மகாவாத தைலம், பொசிநேயப் பொட்டளி, நயனவிதி, சிகிச்சை குறை, குருடனும்

பார்வைபெற, அறுசுவைப் பயன்கள், நோயணுகா திருக்க ஆகிய தலைப்புகளில் ஆசிரியரின் மருத்துவ தகவல்களை இந்நூலில் பதிவுசெய்துள்ளார். இந்நூல், டாக்டர் கே.எஸ்.கார்த்திகேசு தலைமையில் வடமராட்சி தமிழ் வைத்திய சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14746).

9468

செகராசசேகர வைத்தியம். *ஏழாலை ஐ.பொன்னையாபிள்ளை (பதிப்பாசிரியர்). திருகோணமலை: மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம், சுகாதார அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, 2000. (திருகோணமலை: பதிப்பகத் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாண அரசு).*

xvi, *227 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21.5x14 *சமீ.*

1380-1414 காலகட்டத்தில் யாழ்ப்பாண சிங்கைநகரை ஆட்சிசெய்த செகராசசேகரன் காலத்தில் வடமொழியிலிருந்து தமிழில் பாவடிவில் மொழிபெயர்ப்புச் செய்யப் பட்ட சித்த வைத்திய நூல். செய்யுள் உருவில் அமைந்த இந்நூலின் அத்தியாயங்கள், வியாதி வரும் வகை, உணவுவகை, நாடி விதி, வாத பித்த கரம், பித்த சிலேட்டு மத்தின் குணமும் மருந்தும், என இன்னோரன்ன 18 தலைப்புகளிலும், சன்னி விதி என்ற தலைப்பின்கீழ் சன்னி பதின்மூன்றின் குணமும் மருந்தும், மூல வியாதியின் குணமும் மருந்தும், விக்கலின் குணமும் மருந்தும் என இன்னோரன்ன பதினைந்து தலைப்புகளிலும் இச்செய்யுள்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. மல்லாகம், திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலையில் 1935 இல் இந்நூல் முதற்பதிப்புக் கண்டது. 2000ஆம் ஆண்டில் மீள்பதிப்புக்கண்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 161199).

9469

முறிவு நெரிவு மருத்துவம். *பிரேமா சிவசண்முகராஜா (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், 199/1, கில்னர் லேன், 1வது பதிப்பு, மாசி 2008. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).*

iv, *14 பக்கம், விலை: ரூபா 40., அளவு:* 18.5x12.5 *சமீ.*

பாரம்பரியச் சிறப்புமிக்க சித்த மருத்துவ முறைகளைச் சேகரித்து, தொகுத்து வழங்கும் பணியின் ஒருகட்டமாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் அடிபட்ட நோ, வீக்கம், முறிவு, நெரிவுக்குப் பற்று, முறிவு-வெட்டுக்காயங்களுக்கு, மரத்தால் விழுந்த நோவுக்கு, எலும்பு முறிவு, பிசகுதலுக்கு, முறிவு நெரிவுக்கு மருந்து, பற்று, நோவுக்கு ஒற்றடம், நோவுக்குப் பற்று, சிங்கித் தைலம், மஞ்சள் எண்ணெய் இன்னோரன்ன 24 வைத்திய முறைகள் விபரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 195797).

9470

விஷ வைத்தியம். க.ஸ்ரீதரன். யாழ்ப்பாணம்: வைத்தியர் க.ஸ்ரீதரன், 651, காங்கேசன் துறை வீதி, 1வது பதிப்பு, தை 2009. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சாயி பிரின்டர்ஸ், 1227, காங்கேசன்துறை வீதி).

102 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ.

இந்நூலில் முகவுரை, முன்னுரை, அறிமுகம் ஆகியவற்றைத் தொடர்ந்து நிதானம் எனும் ஆரூடம், திரட்டுப்பாகம் மந்திரம், சிகிச்சை, தாது வகுப்பு, தாவர வகுப்பு, அமுதாகாரம், விசர்நாய் கடி வைத்தியம், விஷ முதலுதவி முறைகள், மருந்துச் சரக்குகளின் சுத்தி முறைகள் ஆகிய தலைப்புகளில் விஷக்கடி வைத்தியத்துக்கான சிகிச்சை முறைகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204779)

மேலும் பார்க்க: 9136

630 விவசாயமும் அது சார்ந்த துறைகளும்

9471

இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசம்: விவசாய வளமும் பயன்பாடும். இராசரத்தினம் சிவச்சந்திரன். யாழ்ப்பாணம்: அகிலம் வெளியீடு, இல. 7, ரத்தினம் ஒழுங்கை, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, மார்ச் 1996. (யாழ்ப்பாணம்: ஜோசப் பாலா, மணிஓசை அச்சகம், 12, சென். பற்றிக்ஸ் வீதி).

96 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

வட-கிழக்குப் பிரதேசங்களின் விவசாயவளம் மற்றும் பயன்பாடு பற்றி முக்கியமாக இந்நூல் பேசுகின்றது. மனித வளம் (குடித்தொகைப் பண்புகள்), விவசாய வளமும் நீர்வளமும், விவசாயத் தொழில்துறைக்கான விரிவாக்கம், எமக்குப் பொருத்தமான மாற்றுச் சக்திவளம், வன்னிப் பிரதேச விவசாயப் பிரச்சினைகளும் அபிவிருத்தியும் ஆகிய தலைப்புகளில் இந்நூல் பல்வேறு பொருளாதார, விவசாய, புவியியல் விபரங்களைத் தருகின்றது. இரா. சிவச்சந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவிவியல்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றியவர். 1972இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் துணை விரிவுரையாளராகத் தன் பணியைத் தொடங்கியவர். 1975-78 காலகட்டத்தில் களனிப் பல்கலைக்கழகத்திலும், 1979 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தன் பணியைத் தொடர்ந்தவர். 1972இல் ஊற்று அறிவியல் ஏட்டின் உருவாக்கத்தில் முக்கிய பங்களிப்புச் செய்திருந்த இவர், பூரணி இலக்கிய இதழினதும், 1975இல் அகிலம் என்னும் சமூக அறிவியல் ஏட்டினதும் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118328).

9472

ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் பாகம் 1. மு.கந்தசாமி. சுன்னாகம்: யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம், மருதனாமடம், 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 160 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 85., அளவு: 21x14 சமீ.

ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம்: அறிமுகம், பீடை கொல்லிகளால் ஏற்படும் தீமைகள், பீடைப்பூச்சிகள், பூச்சிக் கூட்டங்கள், பிரதான பூச்சிப் பீடைகளை இனம்காணல், பண்பாட்டு முறை பீடைக்கட்டுப்பாடு, பொறிமுறை, பௌதிக முறைக் கட்டுப்பாடுகள், பீடை எதிர்ப்புச் சக்தியுள்ள பயிர் வர்க்கங்கள், சட்டமூலம் பீடைகளைக் கட்டுப்படுத்தல், உயிரியல் முறைக் கட்டுப்பாட்டில், பயிர் பாதுகாப்பில் தாவரச் சேர்வைகளின் பயன், பயிர் பாதுகாப்பில் வேம்பின் பயன், பயிர் பாதுகாப்பில் கனிப்பொருள் கலவையின் பயன், களஞ்சியப் பீடைகளை கட்டுப்படுத்தல், இரசாயன முறைக் கட்டுப்பாடு, பூச்சிநாசினி சிபாரிசுகள் ஆகிய 16 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115352).

9473

களைகள். இர.சந்திரசேகரன். கொழும்பு: இர.சந்திரசேகர சர்மா, விண்மதி வெளியீடு, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, G/L/ ½, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(3), 28 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-95269-1-x.

களைகள் (Weeds) காணப்படும் இடங்கள், களைகளை அழித்தல், களைகளை அழிக்கமுடியாமல் இருப்பதற்குக் காரணம், உடைந்த தண்டுப் பகுதிகள் மூலம் பரவும் களைகள், வேர்த்தண்டுக் கிழங்குகள் மூலம் பரவும் களைகள், தண்டுக் கிழங்குகள் மூலம் பரவும் களைகள், முகிழ்கள் மூலம் பரவும் களைகள், ஓடு கொடிகள் மூலம் பரவும் களைகள், குடுமிகள் மூலம் பரவும் களைகள், சிறிய பாரமற்ற வித்துக்கள் மூலம் பரவும் களைகள், விலங்குகள் மூலம் பரவும் களைகள் ஆகிய 11 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன், இ.ஸ்ரீமதனின் தெளிவான விளக்கப்படங்களுடன் கூடிய நூல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 118968).

9474

காய்கறிப் பயிர் இனவிருத்தி. வை.அருள்நந்தி. செங்கல்லடி: கலாநிதி வை. அருள்நந்தி, விவசாய பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஜனவரி 2000. (கொழும்பு 6: நியூ கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 501/2, ஹொட்டேல் சிலோன் இன், காலி வீதி).

x, 76 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-96743-0-7.

அறிமுகம், காய்கறிப் பயிர்களின் பூவகைகள், பால் பாகுபாட்டுடன் தொடர்புடைய காரணிகள், இயற்கை அயன் மகரந்தச் சேர்க்கை, பூக்களின் உயிரியல், கலப்பினப் பிறப்பாக்கலின் தொழில்நுட்பம், காய்கறித் தாவரங்களின் இனவிருத்தி முறைகள், கலப்புப் பிறப்பாக்கம், கலப்பினப் பிறப்பாக்கத் தாவரங்களின் சோதனை, பிற்கலப்பு, இலிங்கமில்லா முறை இனப்பெருக்கத்தையுடைய தாவரங்களின் இனவிருத்தி, தாவரத் தொகையொன்றை முன்னேற்றுதல், உள்ளக விருத்தி, தன்விருத்தியும் தொகைவிருத்தியும், மீள்தேர்வு, காய்கறிப் பயிர்களின் இதரத்துவ விருத்தி, விகாரங்களின் மூலமான இனவிருத்தி, தாவர இனவிருத்தியில் புதிய நுட்பங்கள் ஆகிய இயல்களின் வழியாக விரிவாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அட்டவணைகள், அனுபந்தங்கள், விளக்கப்படப் பட்டியல்கள் என்பன பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131501).

9475

நாட்டிற்கு நயம் தருவன: விவசாயக் கைந்நூல். பொன்னையா மாணிக்கவாசகர். நீர்வேலி: வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, 1975. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 50, கண்டி வீதி, சுண்டிக்குளி).

(8), 260 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

விவசாய விரிவாக்க உத்தியோகத்தராகக் கடமையாற்றிய மேலைப்புலோலியூர் பொன்னையா மாணிக்கவாசகர் எழுதிய நூல். யாழ். குடாநாட்டின் தோற்றலும் யாழ். மாவட்ட மண்ணின் மாண்பும், யாழ். மாவட்ட நீர்வளமும் விநியோகமும், சிறுதோட்ட உளவு இயந்திரங்கள், நெல் வேளாண்மை, சிறுதானியம் (சோளம், இறுங்கு, குரக்கன், சாமை, பனிச்சாமை, வரகு, தினை), கிழங்கினம் (சிறுவள்ளி, கொடிவள்ளி, மரவள்ளி, வத்தாளை, சட்டிக்கரணை, உழவர்க்கு உகந்த உருளைக் கிழங்கு), சரக்கு வகை (மிளகாய், செஞ்சுடர் சந்தக்கா, சிறுவெங்காயம், பெரிய வெங்காயம், கடுகு, கொத்தமல்லி, வெந்தயம், சீரகம்), பருப்பு இனப் பயிர்கள் (துவரை), சர்க்கரை இனப் பயிர் (சீனிபீற்), எண்ணெய்ப் பயிர் (சோயா அவரை, நிலக்கடலை, சூரியகாந்தி, எள், முத்தாமணக்கு), தும்புப் பயிர்கள் (சணல், புளிமஞ்சி, பருத்தி), மரம் நாட்டு விழா, அறியாமையாலும் அவதானக் குறைவாலும் ஆபத்து விளையும், அரசாங்க உத்தரவாத கொள்வனவுத் திட்டத்தின் விலைப் பட்டியல், அளவைகள் ஆகிய 15 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85166).

9476

பசளைகளும் அவற்றின் பயன்பாடும்: கைநூல். நூல் வெளியீட்டுக் குழு. யாழ்ப்பாணம்: திட்டமிடற் பணியகம், செயலகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1985. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம்).

24 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.*

யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்டச் செயலாளருமான வை.மு.பஞ்சலிங்கம் அவர்களின் பணிக்காலத்தில் இக்கைநூல் வெளியிடப்பட்டது. 1985இல் செப்டம்பர் 23-29ஆம் திகதிகளில் தேசிய உரவாரம் கொண்டாடப்பட்ட வேளையில் அதன் நினைவாகவும், மக்களிடையே உரப்பாவனை தொடர்பான விழிப்புணர்வினை ஊட்டும் வகையிலும் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. விவசாயப் போதனாசிரியர் வ.கதிரமலை, விவசாய விரிவாக்க உதவிப் பணிப்பாளர் செ.கிருஷ்ணபிள்ளை, விவசாய ஆராய்ச்சித் துறைப் பணிப்பாளர் த.குகதாசன், விவசாய ஆராய்ச்சியாளர் க.தேவசபை ஆகியோரின் கூட்டு முயற்சியில் இந்நூல் உருவாகியுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85470).

636.5 கோழிப்பண்ணை

9477

கோழி வளர்ப்பு. *கு.சதாசிவமூர்த்தி. சாவகச்சேரி: திருமதி கு.சதாசிவமூர்த்தி, சங்கத்தானை, 1வது பதிப்பு, மே 1993. (யாழ்ப்பாணம்: சு.வே.அச்சகம், 104, கஸ்தூரியார் வீதி).*

(2), 64 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 10., அளவு: 20.5x14 *சமீ.*

வடபகுதியில், இலங்கை அரசின் பொருளாதாரத் தடையின் விளைவாக ஏற்பட்ட பத்திரிகைத்தாள் தட்டுப்பாட்டுக் காலகட்டத்தில் வெளியிடப்பட்ட நூல். பயிற்சிக்கொப்பித் தாளில் (கோட்டுத்தாள்) அச்சிடப்பட்டுள்ளது. நூலாசிரியர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அறிவியல்ரீதியாக கோழிவளர்ப்புப் பற்றிக் கற்போர் மட்டுமன்றி, பாரம்பரிய ரீதியாக, பொதுவான கோழிவளர்ப்பில் ஈடுபட்டுள்ளோரும் இந்நூலை வாசித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்குடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. கோழிவளர்ப்பு, கோழி வளர்ப்பிலுள்ள பிரச்சினைகள், கோழி வளர்ப்பு முறைகள், கோழி இனங்கள், வளர்ப்புக் கோழிகளைத் தெரிதல், இறைச்சி உற்பத்திக்கான கோழிகளைத் தெரிதல், அடைவைத்தல், நாட்குஞ்சு வளர்த்தல், கோழிகளைப் பராமரித்தல், கோழியின் இனப்பெருக்கத் தொகுதி, கோழியின் சமிபாட்டுத் தொகுதி, கோழியின் வீடமைப்பு, கோழி உணவும் உணவூட்டலும், கோழி நோய்கள், பொதுவான கோழிவளர்ப்பு ஆகிய 15 தலைப்புகளில் இந்நூல் விரிவான தகவல்களைத் தருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 106040).

9478

கோழிப்பண்ணை. *ஏ.ஐ.சின்னையா. வட்டுக்கோட்டை: ஏ.ஐ.சின்னையா, பயிர்ச் செய்கைப் போதனாசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, 1வது பதிப்பு, ஜனவரி 1968. (யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா அச்சகம்).*

vi, *104 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.00, அளவு:* 18.5x13 *சமீ.*

1968 முதல் நடைமுறைக்கு வந்த க.பொ.த. சாதாரண தரப் பயிர்ச்செய்கைப் பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட நூல். கோழி வளர்ப்பின் வரலாறும் நோக்கமும், கோழிகளின் பொருளாதார வகுப்புப் பிரிவுகள், கோழி வளர்ப்பு முறைகள், கோழி இனங்கள், புறொய்லர் உற்பத்தி, கோழிகளின் வீடமைப்பு, கோழிகளின் உணவு, கோழி உணவுப் பொருட்கள், முட்டையிடும் கோழிகளைப் பராமரித்தல், அடைகாப்பு, ஒருநாட் பராயமுடைய குஞ்சுகளைப் பராமரித்தல், கோழிகளைத் தாக்கும் நோய்கள், வைரசு நோய்கள், பற்றீரியா நோய்களும் பங்கசு நோய்களும், ஒட்டுண்ணி நோய்கள், போஷாக்குக் குறைவினால் ஏற்படும் நோய்கள், கோழிகளைத் தாக்கும் சில ஒட்டுண்ணிகள், கோழிகளின் தன்னினம் உண்ணும் இயல்பு, பண்ணையிலிருந்து தகுதியற்ற கோழிகளை விலக்குதல், கனகூள உறையுள்ளில் கோழி வளர்த்தல், கோழிப்பண்ணைப் பொருளியற் கருத்துக்கள், கலைச்சொல் அட்டவணை ஆகிய 22 தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84656).

642 உணவும் பரிமாறலும்

9479

உணவும் போசணையும். *வசந்தி அரசரத்தினம், சறோஜினி பேரானந்தன். யாழ்ப்பாணம்: சறோஜினி பேரானந்தன், 17(53) நாயன்மார் வீதி, நல்லூர், 1வது பதிப்பு, 2006. (யாழ்ப்பாணம்: மலர் பதிப்பகம், 28ஏ மடம் வீதி).*

xii, *277 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 750., அளவு:* 29.5x22.5 *சமீ.*

போசணைச் சத்துக்கள், காபோவைதரேற்றுக்கள், புரதங்கள், இலிப்பிட்டுக்கள், உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருள்கள், சமிபாடும் அகத்துறிஞ்சலும், அனுசேபம், போசாக்கின் தத்துவம், விலங்குகளிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் பெறப்படும் உணவுகள், வேறுபட்ட வயதினருக்கும் உடல்நிலைகளுக்கும் தேவையான போசணைகள், நோயியல் போசாக்கு, சமூகப் போசணை, உணவைப் பாதுகாத்தல், உணவுப் பொருள்களுக்கான ஆய்வுகூடப் பரிசோதனைகள், உணவு வகைகளும் பாகஞ்செய்யும் முறைகளும், உணவுத் தயாரிப்பின் விஞ்ஞானத் தத்துவங்கள், க.பொ.த.உயர்தர பாடத்திட்டத்தில் உணவும் போசணையும், ஆகிய பிரதானமான 18 பிரிவுகளில் விடயங்கள் தரப்பட்டுள்ளதுடன் க.பொ.த. உயர்தர வினா-விடையும், இறுதி இயலில் வழங்கப்பட்டுள்ளன. பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் உயிர் இரசாயனவியல்துறையின் பேராசிரியராவார். திருமதி சறோஜினி பேரானந்தன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மனைப்பொருளியல் விரிவுரையாளராவார். வடமாகாணத் தமிழ் இலக்கிய விழா 2006ம் ஆண்டுக்கான இலக்கியப்பரிசை வென்ற நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158831).

9480

உள்ளூர் உணவு செய்முறைகள். மூளாய் மாதர் உற்பத்திக் குழு. சுழிபுரம்: சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், மூளாய், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1990. (மானிப்பாய்: சாந்தினி அச்சகம்).

26 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

17.10.1990 இல் மூளாய் உற்பத்திக் குழுவினால் லயன்ஸ் கிளப் ஆதரவில் நடந்த கிராமிய சந்தையில் மாதர்களினால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் செய்முறைகளை நூல்வடிவில் வெளியிட்டுள்ளார்கள். ஒடியல்மா ரொட்டி, பனம்பூரான் குழம்பு என்று பல்வேறு பிரதேச உற்பத்திகளைக்கொண்டு தயாரிக்கப் படக்கூடிய உணவுவகைகள் இச்செய்முறை நூலில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84613).

9481

சமையல் முறைகள்: முதலாம் பாகம். ஆர்.அயூப் (தொகுப்பாசிரியர்). யாழ்ப் பாணம்: அஸ்மின் வெளியீடு, 43, பழைய மார்க்கெட், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: சாந்தி அச்சகம்).

48 பக்கம், விலை: ரூபா 9.75, அளவு: 18.5x12.5 சமீ.

தமிழ், முஸ்லிம், இந்திய சமையல் முறைகள் அடங்கியது. சமையலில் அனுபவம் குறைந்தவர்களை மனதில் இருத்தி வைத்து, 74 வகையான உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் வழிமுறைகள் இந்நூலில் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69276).

9482

சமையற் கலை. யசோதா துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, தை, 1989. (யாழ்ப்பாணம்: சுவர்ணா பிரிண்டிங் வேர்க்ஸ், 295/7, காங்கேசன்துறை வீதி).

(7), 101 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

இல்லத் தலைவியர்க்கும், கல்லூரிகளில் மனைப் பொருளியல் கற்கும் மாணவர் களுக்கும் பயன்தரும் பல விடயங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இனிப்பு வகைகள், பாயச வகைகள், புதிய சர்பத் வகைகள், சிற்றண்டி வகைகள், துவையல் வகைகள், பச்சடி வகைகள், சட்னி வகைகள், வற்றல் வகைகள், பொரியல் வகைகள், ஊறுகாய் வகைகள், புடிங் வகைகள், பிஸ்கட் வகைகள், அவல் வகைகள், வடை வகைகள், கேக் வகைகள், ஐஸ்கிரீம் வகைகள், ஜாம் வகைகள் என 102 வகையான உணவுப் பண்டங்கள் செய்யப்படும் வழிமுறைகள் இந் நூலில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 85152).

9483

சைவ கேக் பிஸ்கட் வகைகள். சங்கவி (தொகுப்பாசிரியர்). இலங்கை: ஆசிரியர், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி). (5), 51 பக்கம், விலை: ரூபா 75.00, அளவு: 21.5x14 சமீ.

முட்டை மற்றும் மாமிசம் சேர்க்கப்படாத கேக் மற்றும் தின்பண்டங்களைத் தயாரிப்பது எப்படி என்பதை இந்நூல் விளக்குகின்றது. பால் சோளக் கேக், பாம்பே கேக், பிஸ்கட் கேக், பேரீந்து உருளைக் கேக், தேனீர் வேளைக் கேக், உற்சவகால கேக், சான்விச் பிஸ்கட்டுகள், சொக்கிளெற் பிஸ்கட்டுகள், வற்றாளைக் கிழங்கு பிஸ்கட், இஞ்சி குக்கீஸ் என வகைவகையான 50 தின்பண்டங்களின் தயாரிப்பு முறைமையை இந்நூல் விளக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120506).

646 தையற் கலை, உடையலங்காரம்

9484

தையல் கலையின் நுட்பங்கள்: பகுதி 1. அருந்ததி துரைராசா. கொழும்பு 6: திவியா கலைக்கூடம், பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு: கனவு நிலையம்).

x, 94 பக்கம், தகடுகள், விலை: ரூபா 275., அளவு: 22 x14.5 சமீ.

நூலாசிரியை 1996 முதல் கொழும்பில் தையல் கலைக்கூடத்தை நடத்தி வருகிறார். 2005ம் ஆண்டு ஜப்பான் பல்கலைக்கழகத்தின் கௌரவ நிபுணத்துவப் பட்டம் பெற்றவர். குழந்தைகளுக்கான ஆடை, சிறுவர்களுக்கான உள்ளாடைகள், யோக் சட்டை, குழந்தைகளின் ஆடை, பெட்டிக்கோட், சிறுவர் சிறுமியரின் பாடசாலைச் சீருடை, சிறுவர்களுக்கான அரைக்காற் சட்டை, பாவாடை, உள்பாவாடை, 6 துண்டு, 8 துண்டு பாவாடை, இறுக்கமான பாவாடை மடிப்புகளுடன் காற்சட்டை வடிவிலான பாவாடை, ஸ்பிரிங் பாவாடை, குடைவெட்டுப் பாவாடை, சாதாரண பாவாடை, வீட்டில் அணியும் ஆடை, இரவு உடை, பிஜாமா, பிஜாமாவின் மேற்பகுதி, பாவாடைக்குப் போடும் மேற்சட்டை, பஞ்சாபி, குறுகிய சல்வார், அகலமான காற்சட்டை, புஸ்சல்வார், சல்வார் மேற்பகுதி, பெண்களுக்குரிய சீருடை, மெகி சட்டை, தையல் இயந்திரங்களின் வகைகள், தையல் உபகரணங்கள், இயந்திரங்களின் பகுதிகள் என்பன இந்நூலில் உள்ளடங்கியுள்ளன. அளவு கோல்களும், வர்ணப் புகைப்படங்களும் உள்ளடக்கியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 214831).

9485

தையற் கலையின் நுட்பங்கள்: பகுதி 2. அருந்ததி துரைராசா. கொழும்பு 6: திவியா கலைக்கூடம், பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, 2009. (கொழும்பு: கனவு நிலையம்).

iv, *94 பக்கம், தகடுகள், விலை: ரூபா 300., அளவு:* 21.5 x14.5 *சமீ.,* ISBN: 978-955-50249-1-2.

சாறி பிளவுஸ் கட்டிங் பற்றிய இந்நூலின், முக்கிய அளவுகோல்களாக பெண்கள் அணியும் சட்டை, புடவையின் மேற்சட்டை, நான்கு டாட் சாரி பிளவுஸ், பின் ஓப்பனிங் சாரி பிளவுஸ், சைன்ரிபிக் சாரி பிளவுஸ், வெல்வெட் சாரி பிளவுஸ், மூன்று டாட் ஸ்லீவ்லெஸ் பிளவுஸ், மூன்று டாட்டுடன் பின் ஓப்பனிங் கதர்ஸ் ஸ்லீவ், மூன்று டாட் உள்ள பின் ஓப்பனிங் பிளவுஸ், லைனிங் பிளவுஸ், யு கழுத்துடன் முக்கால் சிலீவ்ஸ், கற்றோரி சோலி, முழுப்பாவாடை சட்டை, லூரப் பின் ஓப்பனிங் பிளவுஸ், அளவு சட்டை வைத்துத் தைக்கும் முறை, பெண் களிற்கான உள்ளாடை, பெண்களின் அலுவலக பாக், பெண் நோயாளியின் படுக்கை உடை, ஏப்ரன் என்பன பற்றிய தையல் நுணுக்கங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. நூலாசிரியை 1996 முதல் கொழும்பில் தையல் கலைக் கூடத்தை நடத்தி வருகிறார். 2005ம் ஆண்டு ஜப்பான் பல்கலைக்கழகத்தின் கௌரவ நிபுணத்துவப் பட்டம் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 214835).

646.7 உடல் வாகு, சிகையலங்காரம்

9486

சிகையலங்காரம். *பவானி ஆழ்வாப்பிள்ளை. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, கடற்கரைத் தெரு, 4வது பதிப்பு, ஜனவரி 2005, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளுமெண்டால் வீதி).*

viii, *62 பக்கம், படங்கள், விலை: ரூபா 270., அளவு:* 22.5x14.5 *சமீ.*

சிகையலங்காரமானது ஒவ்வொருவரின் முகத்தின் அமைப்பிற்கும் நெற்றியின் பரிமாணத்திற்கும், உயரத்திற்கும் ஏற்றதாக அமைந்தால் மட்டுமே சிறப்புப் பெறுகின்றது என்ற கூறும் நூலாசிரியர், மேற்கூறிய அங்க அமைப்புகளை நோக்காது சிகையலங்காரம் மேற்கொள்ளுமிடத்து ஒவ்வொருவரின் முக அமைப்பும் நேரெதிராக மாற்றமடைந்து அவலட்சணமான தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றது என்கிறார். ஆகவே சிகையலங்காரமானது மிகவும் நுட்பமான முறையில் ஆழமாகச் சிந்தித்துச் செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்று கூறி, இந்நூலில் 60 வகையான சிகையலங்காரக் குறிப்புகளை இந்நூலில் விளக்கியுள்ளார். தமிழ் அறிவியலுக்குப் புதிய வரவாகையால் சிகையலங்காரம் பற்றிய துறைசார் சொற்பதங்களை தமிழுக்கு மாற்றித்தரும் முயற்சியில் ஈடுபடாமல், எளிமை கருதி ஆங்கிலத்திலேயே கையாண்டுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 188877).

649 குழந்தைப் பராமரிப்பு

9487

கிராமியப் போஷாக்கு (1). ஆர்.எஸ். வானகுரு (தொகுப்பாசிரியர்). கொழும்பு: போஷாக்கு ஜனசக்திப் பிரிவு, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு, 1வது பதிப்பு, டிசம்பர் 1990. (கொழும்பு: அரசாங்க அச்சகக் கூட்டுத் தாபனம்).

iii, 60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21 சமீ.

போஷாக்கு ஜனசக்திப் பிரிவுப் பணிப்பாளரான நூலாசிரியர் இலங்கையில், போஷாக்குக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதற்கான கைநூல் தொடரில் முதலாவதாக வெளியிட்டுள்ள நூல் இது. பிரசாத் குமார் உதயரத்னவின் விளக்கப் படங்களுடன் வெளிவந்துள்ள இந்நூலுக்கான நிதியுதவியை நோறாட் (NORAD) நிறுவனம் வழங்கியுள்ளது. இந்நூலில் போஷாக்குப் பிரச்சினை (R.K.M. ரத்நாயக்க), கர்ப்பிணித் தாயின் போஷாக்கு (நாரத வர்ணசூரிய), தாய்ப்பால் அத்தியாவசியமானது (C.C.De சில்வா), தாய்ப்பாலுடன் பொருத்தமான மேலதிக உணவு வழங்கல் (பிரியாணி சொய்சா), உங்கள் குழந்தைகளுக்குச் சமநிறை உணவு (எஸ்.வாமதேவன், பீ.சோமலிங்கம்), போஷாக்கைப் பரிசோதித்தல் (எஸ்.ஏ.வீரசிங்க), நோய்த் தடுப்பு சக்தி ஏற்றுதல் (மாலனி த சில்வா), வயிற்றோட்டமும் வாய்மூலம் மீள நீரளித்தலும் (ஹிரந்தி விஜயமான்ன), புழுக்களால் ஏற்படும் நோய்களும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் (நாரத வர்ணசூரிய), சுற்றாடல் சுகாதாரமும் போஷாக்கும் (நிமல் ஹெட்டி ஆராச்சி), பிள்ளைகள் பெறுவதற்கான கால இடைவெளி (ஹிரந்தி விஜயமான்ன), குறைந்த செலவில் நிறைந்த போஷாக்குப் பானம் (வில்லியம் அல்விஸ்) ஆகிய கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 90491.

650 முகாமைத்துவம், அலுவலக நிர்வாகம்

9488

உற்பத்தித் திறன் ஊடாக உயரிய செல்வம். சி.கோணேஸ்வரன். கொழும்பு 14: சி.கோணேஸ்வரன், சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர், இலங்கை கூட்டுறவு முகாமை நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, 127, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(8), 123 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 25x18 ச.மீ.

அரசதுறை, கல்வித்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் தனியார் துறைகளில் உள்ளவர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான செயலமர்வுகளுக்காகவும் பல்வேறு தரத்திலுள்ள மாணவர்கள் உற்பத்தித் திறனை அறிந்துகொள்வதற்காகவும் தயாரிக்கப்பட்ட 15 விடயக் குறிப்புகள் இவை. இக் குறிப்புக்கள் உற்பத்தித் திறனை அறிமுகம் செய்வதுடன் ஆரம்பித்து பல்வேறு உற்பத்தித் திறன் உத்தி

களையும் அவற்றைப் பயன்படுத்தும் முறையையும் விளக்குகின்றது. உற்பத்தித் திறனை மேம்படுத்த பல்வேறு வழிகளிலும் நேரம் பயன்படுவதால் நேர முகாமை என்ற தலைப்பின்கீழ் பல்வேறு வினைத்திறன் விடயங்களும் எடுத்தாளப் பட்டுள்ளன. இறுதியாக ஒரு சம்பவ ஆய்வும், 40 குறும் வினாக்களும் இணைக்கப் பட்டுள்ளன. இக்கைந்நூலை சரிவரக் கற்பவர்கள் இக்குறும் வினாக்களுக்கு இலகுவாக விடைபகர முடியுமாயின் உற்பத்தித் திறன் தொடர்பிலான பல விடயங்களை அறிந்துகொண்டவராவார்கள். மொத்தத் தரக் கட்டுப்பாடு என்ற விடயத்தின்கீழ் நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளும் வினைத்திறனுடன் எவ்வாறு இணைந்து செயற்பட வேண்டுமென்பது விளக்கப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28409).

9489

பயனுறுதிமிக்க தொடர்பாடலும் கூட்ட நுட்பங்களும். சி.கோணேஸ்வரன். கொழும்பு 7: Sri Lanka Institute of Credit Management (SLICM), 84, Alliance House, Ward Place, 1வது பதிப்பு, பெப்ரவரி, 2001. (கொழும்பு 7: SLICM)

(7), 164 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 25x18 சமீ.

ஆங்கில மொழிபெயர்ப்புடன் எழுதப்பட்டுள்ள இந்நூல், தொடர்பாடல் அறிமுகம், எழுத்து மூலத் தொடர்பாடல், வாய்மூலத் தொடர்பாடல், கட்புலத் தொடர்பாடல், கூட்டத் தொடர்பாடல், வியாபாரத் தொடர்பாடல், அட்டவணை-இலக்கங் களினூடாகத் தொடர்புகொள்ளல், மனிதக் குழுக்கள், நவீன தொடர்பாடல் நுட்பங்கள், மனம், உடல், ஆத்மாவுடனான தொடர்பாடல், ஆகிய பத்து அத்தியாயங்களில் பயனுறுதிமிக்க தொடர்பாடல் முறைகள் பற்றி விளக்குகின்றது. பின்னிணைப்புகளாக நாடகப் பாங்கு (Role Play), தொடர்பாடல் முறைகள், சுய மதிப்பீட்டுப் பயிற்சிகள், குழுநிலைக் கலந்துரையாடலுக்கான குறும் வினாக்கள் என்பன தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130300).

9490

பொது நிதி அலுவலக முகாமைத்துவம். நாகமணி இராசநாயகம், ஜெயலட்சுமி இராசநாயகம் (இணை ஆசிரியர்கள்). யாழ்ப்பாணம்: ஜே.ஆர்.திறன், 140, சேர். பொன் இராமநாதன் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர் பிரின்டர்ஸ், 15/2B, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்).

viii, 432 பக்கம், விலை: ரூபா 650., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-98239-6-4.

அரச அலுவலகங்கள் வினைத்திறனும் விளைதிறனும் பயனுறுதியும் மிக்க சேவையினை வழங்கவேண்டிய தார்மீக கடப்பாடு உடைய மையங்களாகும். இவ்வலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள், சுற்று நிருபங்கள், அலுவலக நடை முறைகள், அரசியல்அமைப்புக்கள், வர்த்தமானி என்பவற்றை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமானதாகும். இவை அனைத்திலும் உள்ள முக்கியமான

விடயங்களைத் தொகுத்து பொதுநிதி அலவலக முகாமைத்துவம் என்ற இந்நூல் இலங்கை கணக்காளர் சேவையைச் சேர்ந்த சிரேஷ்ட கணக்காளர் திரு.நாகமணி இராசநாயகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் ஆகியோரால் உருவாக்கப்பட்டுள்ளது. அலுவலக நடைமுறைகள், அலுவலக ஒழுங்கமைப்பு, அதிகாரக் கையளிப்பு, பணியாளர் உறவுகள், செயல்திறன் மதிப்பீடு, செயல்திறன் அபிவிருத்தியில் 5S, அலுவலக இடவசதி, அலுவலக கைந்நூல், புள்ளிவிபரங்களை சேகரித்தலும் பதிவும், படிவ முகாமை, கடிதம், அறிக்கை, தகவல் தொடர்பு, பொதுமக்கள் உறவுகள், பணியாளர் முகாமை, பதிவுச்சுவடிகள் முகாமை, கோவை நடை முறைகள், கூட்டங்கள், தொழிற்சங்கங்களும் அவற்றின் உரிமைகளும், சிறு குறிப்புகள், அலுவலக தாபன நடைமுறைகள், ஆட்சேர்ப்பு நடைமுறைகளும் நியமனங்களும், லீவு, ஆசிரியர்களுக்கான லீவு, விசேட நோய்களுக்கான லீவு, பழைய மாணவர் சங்கம், பாடசாலை கல்விச் சுற்றுலா, இடமாற்றங்கள், சம்பளங்கள், புகையிரத ஆணைச்சீட்டுக்கள், கடமையின் பொருட்டு உள்நாட்டு-வெளிநாட்டுப் பிரயாணங்கள், கடன்களும் முற்பணங்களும், குற்றங்கள், மேலதிக நேரம், விடுமுறை, விடுமுறைச் சம்பளங்கள், அரச இல்லங்கள், பொது நடத்தைகள், தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கான சலுகை, ஊழியர்களுக்கான தொடர்பாடல் வசதி, அரசியல் உரிமைகள் பிரயோகித்தல், தண்டனைகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், அரச வாகனப் பயன்பாடு, பேணப்படும் முக்கிய படிவங்கள், நிதிப் பிரமாணங்கள், மாகாணசபைச்சட்டம் ஆகிய தலைப்புகளில் 46 பிரிவு களின்கீழ் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236971).

9491

மனித வள முகாமைத்துவம்: அடிப்படை எண்ணக் கருக்கள். தனேஸ்வரி ரவீந்திரன். வரணி: தனேஸ்வரி ரவீந்திரன், கஜகீத் வெளியீடு, வரணி வடக்கு, 1வது பதிப்பு, மே 2003. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர். டொட் கொம் ஒப்செட் பிரிண்டர்ஸ், 288B, பலாலி வீதி).

(6), 162 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x15 சமீ.

இந்நூலானது மனிதவள முகாமைத்துவம் பற்றிய அடிப்படையான எண்ணக் கருக்களையும் மனிதவள முகாமைத்துவ நுட்பங்களையும் விரிவாக அறிந்துகொள்ள உதவும் வகையில் எழுதப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு மட்டுமன்றி அலுவலர் களுக்கும் முகாமையாளர்களுக்கும் மனிதவள முகாமைத்துவம் பற்றிய ஒரு ஆழமான அறிவைப்பெற இந்நூல் உதவுகின்றது. மனிதவள முகாமைக்கான அறிமுகம், சமமான வேலைவாய்ப்பு சந்தர்ப்பம், வேலைப் பகுப்பாய்வு, மனிதவளத் திட்டமிடல், ஆட்சேர்த்தலும் தெரிவுசெய்தலும் ஐக்கியப்படுத்தலும், பயிற்சி யளித்தலும் அபிவிருத்தியும், முகாமைத்துவ அபிவிருத்தி, ஊழியரின் செயற்திறனை மதிப்பிடுதல், தொழில் முகாமையும் தொழில் அபிவிருத்தியும், மொத்தப்பணிக் கொடுப்பனவு முகாமைத்துவம் ஆகிய 10 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 136803).

9492

முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம். *தேவராஜன் ஜெயராமன். யாழ்ப்பாணம்: ஸ்ரீராம் பப்ளிக்கேஷன்ஸ், 392/2, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1993. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).*

iv, *131 பக்கம், விலை: ரூபா 100., அளவு:* 21x14 *சமீ.*

பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி, திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களின் முகாமைத்துவக் கற்கை நெறிக்குரிய நூல் இதுவாகும். இவ்வறிமுக நூலின் ஆசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ விரிவுரையாளராவார். இந்நூல் முகாமைத்துவம், முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கருவின் விருத்தி, திட்டமிடல், ஒழுங்கமைப்பு, ஊழியரிடல், வழிநடத்துதல், தலைமைத்துவம், தொடர்பாடல், கட்டுப்படுத்தல் ஆகிய ஒன்பது இயல்களில் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 97744).

மேலும்பார்க்க: 9018, 9493, 9510-11

657 கணக்கியல்

9493

அடிப்படை முகாமைக் கணக்கீடு. *D.சாம். யாழ்ப்பாணம்: டானியல் ஞாபகார்த்த நிறுவனம்* (Daniel Memorial Institute), *233, 336, ஸ்டான்லி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (யாழ்ப்பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).*

(5), 210 பக்கம், விலை: ரூபா 270., அளவு: 21.5x14 *சமீ.*

புதிய பாடத்திட்டத்திற்கமைவாக முகாமைக் கணக்கீட்டு (Management Accountancy) *அடிப்படை விடயங்களையும் அதிக பயிற்சிகளையும் உள்ளடக்கியதாக வெளிவரும் பயிற்சி நூல். முகாமைக் கணக்கீட்டின் அறிமுகம், பாதீடு, பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு விகிதங்கள் ஆகிய நான்கு இயல்களை உள்ளடக்கியது. நூலுடன் மேலதிக பயிற்சிகளை உள்ளடக்கிய* Flopy Disc *ஒன்றும் கணனிப் பாவனைக்காக வழங்கப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132206).*

9494

இலங்கை கணக்கீட்டு நியமங்களும் அதன் பிரயோகங்களும்: 1994 திருத்தப் பட்டதன்படி. *கே.யோகராஜா. கொழும்பு 13: கே.யோகராஜா, இல.24, புதிய செட்டித் தெரு, 1வது பதிப்பு, ஜுன் 1999. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403, 1/1, காலி வீதி).*

(3), 101 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 *சமீ.*

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (Sri Lanka Accounting Standards) -அறிமுகம், கணக்கியல் கொள்கைகள், இருப்புக்கள், பெறுமான தேய்விற்கான கணக்கீடு, காசு பாய்ச்சல் கூற்று, குறித்த காலத்திற்கான தேறிய இலாபம் அல்லது நட்டம், அடிப்படைத் தவறு, கொள்கையில் ஏற்படும் மாற்றம், ஆராய்ச்சி, அபிவிருத்திச் செலவு, நிகழத்தக்கவை, ஐந்தொகை திகதிக்குப் பிந்திய நிகழ்ச்சிகள், நடைமுறை, நடைமுறை அல்லாத சொத்துக்களின் வகைப்படுத்தல், ஆதனம், பொறி, உப கரணம் ஆகிய பத்து தலைப்புகளில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. கலைச்சொற்றொகுதியும், உசாத்துணை நூல்களின் பட்டியலும் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன.

9495

உயர் கணக்கீடு: 1997 க.பொ.த. உயர்தர பரீட்சை வினா-விடை. கு.கலைச் செல்வன். கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403- 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1997.(கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403- 1/1, காலி வீதி).

80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x14 சமீ.

கணக்கியல்துறை மாணவர்களுக்கான நூல்வரிசையில் உயர்கணக்கீடு தொடர்பான இந்நூல் க.பொ.த. உயர்தர வகுப்பின் 1997ம் ஆண்டு பாடத்திட்டத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 123931).

9496

உயர் கணக்கீடு: இலாப நோக்கற்ற நிறுவனங்களின் முடிவுக்கணக்குகள். கு.கலைச்செல்வன், க.அன்பழகன். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1996. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

64 பக்கம், விலை: ரூபா 47.50, அளவு: 21.5x14.5 சமீ.

மாணவர்கள் சுயமாகவே கற்றுத் தேர்வுறும் வகையில் எழுதப்பட்ட இந்நூல் ஆசிரியரின் உயர் கணக்கீட்டு நூல்வரிசையில் மூன்றாவது நூலாகும். நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். க.அன்பழகன் கொழும்புப் பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவனாவார். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119033).

9497

உயர் கணக்கீடு: ஒற்றைப் பதிவும் தீயழிவும் அலகு 1. கு.கலைச்செல்வன். கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403- 1/1, காலி வீதி, 3வது பதிப்பு, ஜனவரி 1997, 1வது பதிப்பு, 1990, 2வது பதிப்பு, 1995. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403- 1/1, காலி வீதி).

(2), 126 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 *சமீ.*

கணக்கியல்துறை மாணவர்களுக்கான நூல்வரிசையில் உயர்கணக்கீடு அலகு 1 நூல் இதுவாகும். ஒற்றைப் பதிவும் தீயழிவும் (Single Entry System and Insurance Claim) *என்ற பிரிவு இந்நூலில் விளக்கப்படுகின்றது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119712).*

9498

உயர் கணக்கீடு: காசுப் பாதீடு காசுப் பாய்ச்சல் கூற்று: அலகு 7-2. *கு.கலைச் செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஜுன் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

(2), 88 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 955-8143-00-6.

காசுப்பாதீடு (Cash Budget) *விளக்கம், காசுப்பாதீடு பயிற்சிகள், காசுப்பாய்ச்சல்* (Cash Flow) *கூற்று அறிமுகம், நேர்முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றினை அறிக்கையிடல், நேரில் முறையில் காசுப் பாய்ச்சல் கூற்றினை அறிக்கையிடல், காசுப்பாய்ச்சல் கூற்று பயிற்சிகள் ஆகிய ஆறு இயல்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார்.*

9499

உயர் கணக்கீடு: வங்கி இணக்கக் கூற்று அலகு 4. *கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48*B*, புளுமெண்டால் வீதி).*

(2), 74 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 955-96305-7-1.

மாணவர்கள் சுயமாகவே கற்றுத் தேர்வுறும் வகையில் எழுதப்பட்ட இந்நூல் ஆசிரியரின் உயர் கணக்கீட்டு நூல்வரிசையில் நான்காவது அலகாகும். பரீட்சையில் பொதுவாகக் கேட்கப்படும் வங்கி இணக்கக்கூற்று Bank Reconciliation Statement *கேள்விகளில் பயன்படுத்தப்படும் நான்கு வகையான வினா அமைப்புகளையும் நான்கு இயல்களில் தனித்தனியான பயிற்சிகளினூடு விளக்கும் இந்நூல் கடந்த காலப் பயிற்சி வினாக்களையும் மாதிரி வினாக்களையும் பிற்பகுதியில் தருகின்றது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123868).*

9500

உயர் கணக்கீடு: வழுக்களைத் திருத்தலும் தொங்கல் கணக்கும் அலகு 2. *கு.கலைச்செல்வன். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L.1-14, *டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை,* F.L.1-14, *டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

56 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 21.5x14.5 *சமீ.*

மாணவர்கள் சுயமாகவே கற்றுத் தேர்வுறும் வகையில் எழுதப்பட்ட இந்நூல் கணக்கீட்டுத் துறையில் வழுக்களை (Errors) *திருத்துவது என்பதையும் தொங்கல் கணக்குகளை* (Suspense Accounts) *விளங்கிக்கொள்வது எப்படி என்பதையும் இலகுநடையில் விளக்குகின்றது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119868).*

9501

உயர்தரக் கணக்கியல் பகுதி 2. *வீ.சுந்தரேஸ்வரன். மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 1வது பதிப்பு, ஜனவரி 1992. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).*

iv, *180 பக்கம், விலை: ரூபா 75., அளவு:* 21x14 *சமீ.*

இந்நூல் பங்குடமை, திணைக்கள (பகுதிக்கடை) கணக்குகள், ஒப்படைக் கணக்குகள், கூட்டுமுயற்சிக் கணக்கு, தற்சமனாக்கும் பேரேடு (கட்டுப்பாட்டுக் கணக்கு), நிறைவியல் பதிவுகள், இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் கணக்கு ஆகிய ஏழு அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் வீ.சுந்தரேஸ்வரன் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி ஆசிரியரும் பகுதித் தலைவருமாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91615).

9502

கணக்கியல் கோட்பாடுகளும் நியமங்களும். *இ.இரத்தினம். யாழ்ப்பாணம்: இ.இரத்தினம், விரிவுரையாளர், 12/1, ரயில்வே வடக்கு வீதி, கந்தர்மடம், 1வது பதிப்பு, 1994. (யாழ்ப்பாணம்: நியு ஈரா அச்சகம்).*

(4), 99 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 21x14.5 *சமீ.*

இலங்கை கணக்கீட்டு நியமம், கணக்கியல் எண்ணக்கரு, கணக்கியல் அடிப் படைகள், கணக்கேடுகள், மூல ஆவணங்கள், பேரேடுகள், பரீட்சைமீதி, முடிவுக் கணக்குகள், கணக்கியல் சமன்பாடு, உற்பத்திக் கணக்கு, ஐயக் கடன் ஏற்பாடு, மீளப்பெற்ற அறவிடமுடியாக்கடன், பெறுமானத் தேய்வு, நிறுவனம் ஒன்றின் சொத்துக்கள், பொறுப்புகள், செலவினங்கள், வருமானங்கள், கணக்கியல் தொடர்பாகக் காசுமுறையும் அட்டுறு முறையும், வியாபாரக் கழிவும் காசுக்கழிவும், தகவல் பெறும் ஒரு மூலமாகக் கணக்கியல், கணக்கியல் சூழல், கணக்கியல்

உள்ளீடுகளும் வெளியீடுகளும், கணக்கீட்டுச் செய்முறையைப் பாதிக்கும் காரணிகள், இலங்கை கணக்கீட்டு நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் பிரதான உந்துசக்திகள், நிதிக் கூற்றுக்கள், பங்குடமை, வரையறுத்த கம்பெனி, கூட்டு முயற்சி, ஒப்படை வியாபாரம், மாற்றுண்டியல், கட்டுப்பாட்டுக் கணக்கு, கிளைகள் கணக்கு, வருமானங்களினதும் செலவீடுகளினதும் விபரங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் இலாபநட்டம் காணும் முறை ஆகிய விரிவான தலைப்புகளின்கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத் துறையின் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103016).

9503

கணக்கீடு பகுதி 1. நாகலிங்கம் யோகராசா. கொழும்பு 6: அஸ்ரன் பதிப்பகம், 92. மனிங் பிளேஸ், 3வது பதிப்பு, 2006, 1வது பதிப்பு, 2003, 2வது பதிப்பு, 2004. (அச்சக விபரம் தரப்படவில்லை).

271 பக்கம், விலை: ரூபா 196., அளவு: 21x14 சமீ.

கணக்கீடும் கணக்கீட்டுச் சூழலும், கணக்கீட்டின் மூலங்கள் (கணக்கீட்டுச் சமன்பாடு), இரட்டைப்பதிவுக்கான அறிமுகம் (இரட்டைப்பதிவு, பேரேடு), கணக்கீட்டு உள்ளீடுகளைப் பதிதல் (காசேடு, சில்லறைக்காசேடு, நாளேடுகள், நாட்குறிப்பேடுகள்), பரீட்சை மீதியும் வழுக்களும் (வெளிக்காட்டா வழுக்கள், வெளிக்காட்டும் வழுக்கள், வழுக்களும் கட்டுப்பாட்டுக் கணக்கும், வழுக்களும் இலாபநட்டக் கணக்கும், ஒப்படை வினாக்கள்), வங்கிக் கணக்கிணக்கக் கூற்று, கட்டுப்பாட்டுக் கணக்கு ஆகிய விடயத் தலைப்புகளில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கேற்ற வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 166144).

9504

கம்பனிக் கணக்குகளும் நிதிப் பாய்ச்சல் கூற்றுகளும். எஸ்.கே.பிரபாகரன். பருத்தித்துறை: அன்னை வெளியீடு, வியாபாரி மூலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1998. (கொழும்பு 6: கார்த்திகேயன் பிரின்டர்ஸ்).

(4), 140 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x15 சமீ.

க.பொ.த. உயர் வகுப்பு மாணவர்களுக்கு முக்கியமானதோர் அலகாக கம்பனிக் கணக்கு அமைகின்றது. அவ்வகையில் கம்பனிக் கணக்குகள் தொடர்பான கொள்கைகள் பயிற்சிகளை இலகு வழியில் வழங்கி மாணவர்களின் உயர்ந்தபட்ச பெறுபேறுகளுக்கு இந்நூல் வழிசமைக்கின்றது. இந்நூல், அறிமுகம், பங்கு வழங்கல் கணக்குகள், மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளின் மீட்பு, கம்பனி முடிவுக் கணக்குகள், நிதிப்பாய்ச்சல் கூற்றுக்கள், பின்னிணைப்புகள் (கடந்தகால வினாக்கள்), சில குறிப்புரைகள் ஆகிய ஏழு இயல்களில் எழுதப்பட்டுள்ளது. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட எஸ்.கே.பிரபாகரன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

1991இல் முகாமைத்துவத் தொழில் நிருவாகமாணிச் சிறப்புப்பட்டத்தைப் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126868).

9505

கிரயக் கணக்கீடு: அலகு 2. *எஸ்.சுமந்திரன். கொழும்பு 6: எஸ்.சுமந்திரன், 11/8, பரக்கும்பா இடம், வெள்ளவத்தை, 2வது பதிப்பு, நவம்பர் 1997, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (கொழும்பு 6: நியு கார்த்திகேயன் பிரின்டர்ஸ், 501/2, ஹொட்டேல் சிலோன் இன், காலி வீதி).*

90 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 60., அளவு: 21x14 *சமீ.,* ISBN: 955-96189-0-3.

மேந்தலைகள், கூலிக்கிரயம், ஊழியப் புரள்விகிதம், கூலிக் கொடுப்பனவு முறைகள், மிகையூதியத் திட்டம், மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு, சம்பளப் பட்டியல் தயாரித்தல், பின்னிணைப்புகள் ஆகிய எட்டுத் தலைப்புகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126860).

9506

கிரயக் கணக்கீடு: அறிமுகமும் பொருட்கிரயமும். *கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 1997. (கொழும்பு 6: அட்மிரல் கிராப்பிக்ஸ், 403- 1/1, காலி வீதி).*

v, *87 பக்கம், விலை: ரூபா 90., அளவு:* 21.5x14 *சமீ.,* ISBN: 955-96303-2-0.

மாணவர்கள் சுயமாகவே கற்றுத் தேர்வுறும் வகையில் எழுதப்பட்ட இந்நூல் ஆசிரியரின் உயர் கணக்கீட்டு நூல்வரிசையில் ஆறாவது நூலின் முதல் அலகாகும். நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126846).

9507

நவீன கணக்கீட்டுக் கோட்பாடுகளும் மீளமைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களும். *க.யோகராஜா, கு.கலைச்செல்வன். கொழும்பு 6: பிரில்லியன்ட் பப்ளிக்கேஷன்ஸ், இல.49, பெர்னாண்டோ வீதி, வெள்ளவத்தை, 8வது பதிப்பு, ஒக்டோபர் 2011, 1வது பதிப்பு, மே 1997. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

v, *225 பக்கம், விலை: ரூபா 500., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-50848-9-5.

2012ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் மறுசீரமைக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டதாக இந்நூல் அமைகின்றது. இலகு மொழி நடையில் அமைந்த வசனங்கள், நடைமுறை உதாரண விளக்கங்கள், உடனடி அறிவுத்தேடலை நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவியாக சிறிய கணக்கீட்டு

அகராதி என்பன இந்நூலின் சிறப்பம்சங்களாகும். க.பொ.த. உயர்தர கணக்கீட்டுப் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், பல்கலைக்கழக, தொழில்நுட்ப, தொழில்சார் கணக்கியல் பரீட்சைகளுக்குத் தயாராகும் மாணவர்களின் தேவையைக் கருத்திற் கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. சொல்லகராதி, கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கணக்கீட்டு நியமத்திற்கோர் அறிமுகம், வேலைச் சட்டகம், நிதிக்கூற்றுகளைத் தயாரித்து வழங்கல் (இலங்கைக் கணக்கீட்டு நியமம் 01), இருப்புக்கள் (இ.க.நி. 02), காசுப்பாய்ச்சல் கூற்று (இ.க.நி. 07), கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழக்குகள் (இ.க.நி. 08), அறிக்கையிடும் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் (இ. க. நி. 10), ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் (இ.க.நி. 16), குத்தகைக் கணக்கீடு (இ.க.நி. 17), வருமானம் (இ.க.நி. 18), ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புகள், மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள் (இ.க.நி. 37), அருவகச் சொத்துக்கள் (இ.க.நி. 38) ஆகிய 14 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 229280).

9508

பங்குடமைக் கணக்கு. எஸ்.கே.பிரபாகரன். யாழ்ப்பாணம்: அன்னை வெளியீடு, வியாபாரி மூலை, பருத்தித்துறை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (பருத்தித்துறை: சரசு அச்சகம்).

100 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

இந்நூல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் படிமுறை செய்முறைப் பயிற்சி மூலம் மாணவர்கள் கணக்கியலில் முழுமையாகப் பயிற்சிபெற்றுத் தேற உதவும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான பிரபாகரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ தொழில்நிர்வாகமாணிப் பட்டத்தைப் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 126842).

9509

பெறுமானத் தேய்வு சொத்து முடிவுறுத்துதல் வழுக்களைத் திருத்துதல் அலகு 2. கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 2வது பதிப்பு, ஜூன் 1999, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

(2), 116 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21.5x14 சமீ.

பெறுமானத் தேய்வு (Depreciation), நிலையான சொத்து அகற்றுதல் (Disposal of Fixed Assets), பெறுமானத் தேய்வு-சொத்து அகற்றல்- பயிற்சிக் கணக்கு, வழுக்களைத் திருத்துதல் (Ractification of errors), பயிற்சி வினாக்கள் ஆகிய ஐந்து பிரிவுகளின் கீழ் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க

கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129966).

9510

முகாமைக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம்: விகிதப் பகுப்பாய்வு. *கு.கலைச்செல்வன். கொழும்பு 6: கு.கலைச்செல்வன், எம்.ஓ.டீ. ஸ்டடி சென்டர், 33, பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1999. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

(2), 76 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21.5x14 *சமீ.*

இந்நூல் முகாமைக் கணக்கீடு (முகாமைக் கணக்கீட்டின் பயன்பாடு, முகாமைக் கணக்கீடும் நிதிக் கணக்கீடும், நிதிக் கூற்று ஆய்வும் வியாக்கியானம் கூறலும்), கணக்கீட்டு விகிதங்கள் (திரவத்தன்மை விகிதங்கள், இலாபத் தன்மை விகிதங்கள், செயற்பாட்டு விகிதங்கள், இணைப்பு விகிதங்கள், முதலீடு விகிதங்கள்), விகிதப் பகுப்பாய்வுப் பயிற்சிக் கணக்குகளும் விடைகளும், கடந்த காலப் பரீட்சை வினாக்கள் ஆகிய நான்கு பிரிவுகளின்கழ் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் குமாரசுவாமி கலைச்செல்வன் ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்தவர். கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பணியாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129976).

9511

முகாமைக் கணக்கீடு அலகு 3. *எஸ்.சுமந்திரன். யாழ்ப்பாணம்: எஸ்.சுமந்திரன், வசந்த வாசா, இளவாலை வடக்கு, இளவாலை, 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. (கொழும்பு: நியூ கார்த்திகேயன் பிரைவேட் லிமிட்டெட்).*

(5), 127 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 *சமீ.,* ISBN: 955-96189-1-1.

முகாமைக் கணக்கீடு, நிதிக் கூற்றுகளின் பகுப்பாய்வு, விகிதப் பகுப்பாய்வு, விகித வகைகள் (இலாபத்தன்மை விகிதம், கடன் தீர்க்கும் தன்மை விகிதம், முதலீட்டு விகிதம்), கூட்டப்பட்ட பெறுமதி, பாதீடு (பாதீட்டுச் செய்முறையின் படிமுறை, பாதீட்டின் வகைகள், காசுப் பாதீடு, பிரதான பாதீடு தயாரித்தல்), காசுப்பாய்ச்சல் கூற்று (காசுப்பாய்ச்சல் கூற்றுத் தயாரித்தல்) ஆகிய விடயங்களை இந்நூல் விரிவாக விளக்குகின்றது.

700 கலைகள், நுண்கலைகள்

மேலும் பார்க்க: 9071

730 சிற்பக்கலை

9512

இந்து விக்கிரகக் கலை மரபில் சிவ வடிவங்கள். ப.கோபாலகிருஷ்ண ஐயர். கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 13: யுனைட்டெட் மேர்ச்சன்ட்ஸ் பிரின்டர்ஸ், 94, பரமானந்த விகாரை மாவத்தை).

xxxix, 665 பக்கம், விலை: ரூபா 600., அளவு: 23x15 சமீ.

ஒன்பது இயல்களைக் கொண்டமைந்த இந்நூல் மூல நூல்களின் மரபும் சிவ விக்கிரகவியல் வரலாறும், படிமவகைகள், விக்கிரகக் கலை, சிவ விக்கிரகங்கள் அமைக்கும் முறை, சிற்பக் கலைஞர் தகைமை, சிவனது பல்வேறு படிமங்கள் ஆகிய பல்வேறு விடயங்களை உள்ளடக்குகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு இதுவாகும். அறிமுகம், மூல நூல்களின் மரபும் சிவ விக்கிரகவியல் வரலாறும், படிம வகைகள், விக்கிரகக் கலை, சிற்பக் கலைஞன், சிவனது தெய்வ வரலாற்றியல், பல்வேறு தோற்றங்களில் சிவனின் வடிவமைப்பு, சிவனின் வடிவங்கள் வளம்படுத்திய பண்பாட்டுத் துறைகள், நிறைவாகச் சில சிந்தனைகள் ஆகிய ஒன்பது இயல்களில் இந்நூல் ஆக்கம்பெற்றுள்ளது. பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியராவார்.

791 நாட்டியக் கலை

9513

இந்திய நடனங்கள். சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xii, 267 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 900., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-659-354-9.

இந்து கலாச்சாரம் தொடர்பாக இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வெளியிடும் தொடரின் 2வது தொகுதி 2002இல் இந்து கலாச்சாரம்: நடனங்களும் ஓவியங்களும் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது. இந்து சமுதாயத்தில் வளர்ச்சிபெற்ற நடனம், ஓவியம், என்னும் கலைகளைப் பற்றிய புரிந்துணர்வையும் தெளிவான விளக்கத்தினையும் ஏற்படுத்தும் வகையில் அமைந்த 19 கட்டுரைகள் அந்நூலில் வி.சிவசாமி, சி.பத்மநாதன். இரா.கலைக்கோவன், குடவாயில் பாலசுப்பிரமணியன், ந.வேல்முருகு ஆகிய ஐவராலும் எழுதப்பட்டிருந்தன. இந்திய நடனங்கள் என்ற இந்நூல் முன்னைய நூலின் நடனம் சார்ந்த கட்டுரை களையும், புதிய சில கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக 12 கட்டுரைகளுடன் குமரன் பதிப்பகத்தின் 540ஆவது பிரசுரமாக வெளியிடப்பட்டுள்ளது. இப்பதிப்பில் நடன வகைகள்/சி.பத்மநாதன், பரத நாட்டியம் (பரத நாட்டிய சாஸ்திரம்/

வி.சிவசாமி, பரத நாட்டியம்/வி.சிவசாமி, பரத நாட்டியம்: அடவுகளும் நிகழ்ச்சிக் கிரமங்களும்/ராகினிதேவி, அபிநயம் ஹஸ்தாபிநயங்கள்/ராகினிதேவி), கதக்களி நடனம் (கதக்களி நடனம்: ஓர் அறிமுகம்/வி.சிவசாமி, கதகளி அரங்கியல்/ராகினிதேவி), கேரளத்து நாட்டிய நாடகங்கள்/ராகினிதேவி, ஒடிசி நடனம்/ராகினிதேவி, குச்சுப்புடி நடனம்/வி.சிவசாமி, யகஷகானம்/வி.சிவசாமி, மணிப்புரி நடனம்/வி.சிவசாமி, கதக் நடனம்/சி.பத்மநாதன், கர்நாடகத்துக் கோவில்களும் நடனக் கலையும்/சி.பத்மநாதன், தமிழகத்தில் நடனக்கலை: பல்லவர்-பாண்டியர் காலம்/இரா கலைக்கோவன், கிராமிய நடனங்கள்/ராகினிதேவி ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

792 அரங்கியல், நாடகக்கலை

9514

அரங்கு: அரங்கியல் தொடர்பான கட்டுரைகளின் தொகுப்பு. *க.திலகநாதன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

96 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-423-2.

இந்நூலில் நாடகம் எனும் எண்ணக்கருவும், செய்கையும் செய்கைக்கான பின் புலமும், கிராமியக் கலைகளும் செந்நெறிக் கலைகளும், தமிழர் நாடகக்கலை, அரங்கினூடே கற்றல் கற்பித்தல் ஓர் அனுபவப் பகிர்வு, நாட்டிய சாஸ்திரம்:சில குறிப்புகள், சீன மரபுவழி நாடக அரங்கு: ஒரு சிறு அறிமுகம், நீர்வேலி வசந்தன் கூத்து: ஒரு சிறுகுறிப்பு, அரிஸ்ரோட்டிலின் நாடக சிந்தனைகள், அரங்க கட்டடக் கலை, அரங்கில் ஊமமும் உரையாடலும், நெறியாள்கையும் நெறியாளரும், நாடகப் படைப்பாக்க செல்நெறிகள் ஆகிய 12 கட்டுரைகள் உள்ளடங்குகின்றன. நூலாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைச் சிறப்புப் பாடநெறியாகப் பயின்று அதில் இளங்கலைமாணிச் சிறப்புப் பட்டம் பெற்றவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் துறையில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அத்துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

9515

கல்யாணி. *அவைக்காற்றுகைக் குழு. சுன்னாகம்: கல்யாணி, அவைக்காற்றுகைக் குழு, மருதனாமடம், 1வது பதிப்பு, 2000. (யாழ்ப்பாணம்: அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்).*

194 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 *சமீ.*

இது நாடக அரங்கியலுக்கான ஒரு வெளியீடு. மனக்கோலம், கத்தோலிக்க மகிடிக் கூத்து, அரங்கும் ஒலியும், அரங்கியலும் வாழ்வியலும், செர்ரிப் பழத் தோட்டம், நாடகத்தூடு உளநல மேம்பாடும் உள சிகிச்சையும், பெண்மை கொல்லோ பெருமையுடைத்து, களமும் காட்சியும், மாணவர் அரங்கு, கல்யாணியில் உங்கள்

மனப்பதிவுகள், ஒதெல்லோ-மதிப்பீடு, அரங்கியற் பதங்கள், குறுவினா-விடை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 13 படைப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130235).

9516

கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு: நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான உதவி நூல். கோகிலா மகேந்திரன். தெல்லிப்பழை: கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஜனவரி 1997. (மருதனாமடம்: அம்மா அச்சகம், இணுவில்).

viii, 33 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 40., அளவு: 18x12.5 சமீ.

கிரேக்கத்தின் மூத்த நாடக ஆசிரியர் எனக் கருதப்படும் ஈஸ்கிலஸ் (Aeschylus, கி.மு.525-456) முதல் புதிய மகிழ்நெறியின் உருவம் எனப்படும் மெனாண்டர் (Menander, கி.மு. 343-292) வரையான சில முக்கிய நாடகாசிரியர்களின் பங்களிப்புக் களை இந்நூல் சுருக்கமாக அறிமுகம் செய்கின்றது. நாடக-அரங்கியல் வரலாற்றில் ஈடுபாடுகொண்ட பொது வாசகரைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்டுள்ள இந் நூல் க.பொ.த. உயர்தரம், வட இலங்கைச் சங்கீத சபை ஆகியவற்றின் நாடகமும் அரங்கியலும் கற்கை நெறியைப் பயில்பவர்களுக்குப் பெரிதும் பயன்படவல்லது. கலை இலக்கியக் களத்தின் எட்டாவது வெளியீடு இது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 72ஆவது ஆண்டு நிறைவின் நினைவாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 119084).

9517

சற்பிரசாத வாசாப்பு: ஒரு வரலாற்றுப் பார்வை. ச.யேசுதாசன். முருங்கன்: புனித சூசையப்பர் ஆலய மேய்ப்புப்பணி சபை, கற்கிடந்த குளம், 1வது பதிப்பு, மே 2009. (வவுனியா: வாணி அச்சகம், இல.61B, 1ம் குறுக்குத் தெரு).

xix, 129 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

வாசாப்பு என்பது வசனம் கலந்த பாட்டு எனப் பொருள்பெறும். வாசாப்பு - வாசகப்பாவின் மருவிய வடிவம் என்பர். இந்நூல் மனுவேற் புலவரின் சற்பிரசாத வாசாப்பு என்ற நாடக நூல் பற்றிய ஆய்வாகும். சற்பிரசாத வாசாப்பு-உள்ளக நோக்கும் அரங்கேற்ற மரபுகளும் (சூழலும் பின்னணியும், சற்பிரசாத வாசாப்பின் கதைச்சுருக்கம், பாத்திரங்களும் பணிகளும், சற்பிரசாத வாசாப்பின் தனித்துவம், ஏட்டின் அமைப்பு, களரி அமைப்பும் சம்பிரதாய நிகழ்வுகளும், வார் வளைதல், அரங்கேற்றத்திற்கான முன்னாயத்த முயற்சிகள், அரங்கேற்றம் முடிந்ததும் முன்னெடுக்கப்படும் கொண்டாட்டம், பாரம்பரிய நம்பிக்கைகள்), வாசாப்பு வரலாற்றில் நினைக்கப்படவேண்டியவர்கள்(ஆதித்த நாடார் மனுவேல் புலவர், பிறஞ்சி சம்பாய்வ புலவர், ஆதித்த நாடார் மனுவேல் மடுத்தீன் எனப்படும் முத்தையா புலவர், ஆதித்த நாடார் மனுவேல் மடுத்தீன் எபிலோனியா, சூசைப் பிள்ளை தொம்மை, தொம்மை பாக்கியநாதன், அந்தோனி சில்வா பிரான்ஸீஸ் சில்வா, அந்தோனி சில்வா பிலிப்பு சில்வா), சற்பிரசாத வாசாப்பு ஏட்டில்

உள்ளவை (சான்றோர் விருது நாடகம் சற்பிரசாத வாசாப்பு, பொது மங்களம்) ஆகிய பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்திலுள்ள கற்கிடந்தகுளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர், 2006-2008 காலப் பகுதியில் சொலிடார் நிறுவனத்தின் இணைப்பாளராக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றியவர். இறையியல்,மெய்யியல்மாணிப் பட்டப் படிப்பினை நிறைவுசெய்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234597).

9518

தமிழ்க் கூத்துக் கலை: வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல். சி.மௌனகுரு. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 2010. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

164 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-422-5.

இந்நூல் ஏழு பிரிவுகளை உள்ளடக்கியது. முன்னுரைகள், தமிழ் ஒபெரா அறிமுகம், ஆட்ட அறிமுகம், வடமோடி நாடகங்களிற் கையாளப்படும் தாளக்கட்டுக்கள், பாடல்கள், விரிவுரைகளுக்கான தலைப்புக்கள், தமிழ் நடன (கூத்து) இசை நாடகத்திற்கான 3 வருடப் பாடத்திட்டம் ஆகிய பிரிவுத் தலைப்புகளில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. சீன ஜப்பானிய ஒபெரா வகைகள் உலக மேடைகளில் இராஜநடைபோடுவதைப் போல, தமிழ் ஒபெராவும் உலக அரங்கில் நடைபோட முதல் விதை நோர்வேயின் தலைநகரமான ஒஸ்லோவில் 2009 ஆவணி மாதம் 30ஆம் திகதி ஒஸ்லோ இசை கலாசாரக் கல்லூரியில் பேராசிரியர் சி.மௌன குருவின் தலைமையில் போடப்பட்டது. இதன் பின்புலத்தில் நடன ஆசிரியை தமிழினி சிவலிங்கம், இசை ஆசிரியை வாசுகி ஜெயபாலன் ஆகியோர் இருந்துள்ளனர். இந்நூலின் முதற்பதிப்பினை நோர்வேயிலுள்ள ஒஸ்லோ இசை கலாச்சாரக் கல்லூரி 2010இல் வெளியிட்டிருந்தது.

9519

திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம். அ.யேசுராசா. தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, இணை வெளியீடு, லண்டன்: தமிழியல், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600005: மணி ஒப்செட்).

260 பக்கம், விலை: இந்திய ரூபா 225., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-93-82033-31-8.

திரைப்பட, நாடகத்துறை, கலைப்பதிவுகளைக் கொண்ட அ.யேசுராசாவின் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. சிறுகதை, கவிதை, இலக்கிய, திரைப்பட, நாடக விமர்சனம், பத்தி எழுத்து, மொழிபெயர்ப்பு, இதழியல், தொகுப்பு முயற்சி எனப் பல்துறைகளிலும் கவனத்திற்குரிய ஆளுமை யாகத் திகழ்பவர் அ.யேசுராசா. கலைத்துவமற்ற பிரச்சாரப் படைப்புகள், பெரிதும்

போற்றப்பட்ட எழுபதுகளில், கலைத்துவத்துக்கும் நவீன போக்குகளுக்கும் அழுத்தம் கொடுத்த ஈழத்துச் சிறுசஞ்சிகை வரலாற்றில் தவிர்க்கப்பட முடியாத "அலை-சஞ்சிகை"யை வெளிக்கொண்டு வந்ததில் இவரது பங்களிப்பு உயர்வானது. கவிதை, தெரிதல் ஆகிய இரு சிறுசஞ்சிகைகளின் ஆசிரியராகவும் இருந்துள்ளார். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான திசை வார இதழின் துணை ஆசிரியராகவும் பணியாற்றியவர். இதுவரை ஆறு நூல்களை வெளியிட்டுள்ள இவர், நான்கு இலக்கியத் தொகுப்புக்களின் உருவாக்கத்திலும் பங்கேற்றவர்.

9520

நாடகமும் அரங்கியலும். கந்தையா ஸ்ரீகந்தவேள். யாழ்ப்பாணம்: தெஸ்பியன் கல்வி நிலையம், காங்கேசன்துறை வீதி, இணுவில், 1வது பதிப்பு, மே 1997. (இணுவில்: அம்மா அச்சகம், மருதனார் மடம்).

iv, 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

க.பொ.த.உயர் வகுப்பிற்குரிய 250 குறுவினா-விடைகளைக்கொண்ட நூல். நூலாசிரியர் யாழ்/ மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஆசிரியராவார். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120516).

9521

பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவும் ஈழத்து நாடக மரபும். சி.மௌனகுரு. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

iv, 36 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-415-7.

பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா அவர்கள் ஈழத்து நாடக உலகில் முக்கியமான ஓர் ஆளுமை. இந்த ஆளுமையின் தாக்கம் ஈழத்து நாடக உலகை வெகுவாகப் பாதித்துள்ளது. 1960களில் ஈழத்துத் தமிழரின் நாடக மூலமான கூத்தினது மீள்கண்டுபிடிப்பும், அதன் செம்மைப்பாடும் பேராசிரியர் சரச்சந்திராவின் நேரடித் தாக்கத்தின் விளைவுகளாகும். அவரது ஆளுமை மறைமுகமாக 1970 களுக்குப் பின் வந்த தமிழ் நாடகத்திற் தீவிர செயற்பாட்டாளர்களாக விளங்கிய இளம் தலைமுறையினரைப் பாதித்தது. ஆய்வறிவாளர் மத்தியில் கலைஞராகவும், கலைஞர் மத்தியில் ஆய்வறிவாளராகவும் விளங்கிய இவர், மனிதர்களுடைய அன்பையும், சௌஜன்யத்தையும், ஒற்றுமையையும் வேண்டிய மிகப்பெரும் மனிதாபிமானி. அவர் பற்றிய அறிமுகம் தமிழ் மக்களுக்கு மிக அவசியம். இந் நூல் அதனைச் செய்துள்ளது. இந்நூல் இரண்டு கட்டுரைகளைக் கொண்டது. ஒன்று பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவும் ஈழத்து நாடக மரபும் என்ற சி.மௌன குருவின் கட்டுரை. இரண்டாவது, மறைந்த பேராசிரியர் சரச்சந்திரா அவர்களின் நினைவை யொட்டி இலங்கை வானொலியில் கிழக்குப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதியாகப் பணியாற்றிய கலாநிதி சி.மௌனகுருவுடனான ஒரு

உரையாடல். இலங்கைத் தேசிய நாடகங்கள் என்ற தொனிப்பொருளில் இவருடன் உரையாடியவர் எஸ்.எழில்வேந்தன்.

9522

வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு: கட்டுரைத் தொகுப்பு. தே.தேவானந்த். யாழ்ப்பாணம்: செயல்திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2005. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டேர்ஸ்).

vii, 132 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x14 சமீ., ISBN: 955-98711-1-0.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் நிதி அனுசரணையுடன் வெளியிடப்பட்ட நூல். புதிய கல்விச் சீர்திருத்தமும் சிறுவர் அரங்கும், ஆரம்பப் பாடசாலை கற்பித்தலில் சிறுவர் அரங்கு, சிறுவர் நாடக அரங்கில் மனித மேம்பாடுகள், ஆரம்ப பாடசாலை ஆசிரியரும் சிறுவர் அரங்க அறிவு அனுபவமும், கலைச் செயற்பாடுகளும் சிறுவர் உளவியலும், சிறுவர் தேவைகளும் நாடகங்களும் அரங்க முயற்சிகளும்: இருப்பவையும் இருக்க வேண்டியவையும், யுத்தத்தின் விளைவுகளும் சிறுவர் அரங்கும், ஆரம்பப் பாடசாலைகளில் கல்வியில் சிறுவர் அரங்கை ஊக்கு வித்தல், சிறுவர் அரங்கில் அளிக்கை முறைமைகள், வரும் இடர்காண் கல்வி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

793 திரைப்படக்கலை

9523

கலைத்துவ சினிமா. வடிவேல் இன்பமோகன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxiv, 165 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-659-320-4.

மேலை நாடுகளில் காலத்துக்குக் காலம் பல குழுக்கள் தோன்றி சினிமாவிற்கு பல கலைத்துவ அம்சங்களை வழங்கியுள்ளன. இந்நூல் அச்சினிமாக் குழுக்கள் பற்றியும் அவை சினிமாவின் கலைத்துவத்தை அதிகரிப்பதற்கு ஆற்றிய பங்களிப்பு களைப் பற்றியும் விவாதிக்கின்றது. அறிமுகம், ஹொலிவுட் சினிமா (ஆரம்பகால ஹொலிவுட் சினிமா, ஹொலிவுட் சினிமாவில் ஒலி, வர்ணத்தின் அறிமுகம், புதிய ஹொலிவுட் சினிமா), ஜெர்மனிய வெளிப்பாட்டுவாதச் சினிமா, பிராஞ்சிய சினிமா (பிராஞ்சிய மனப்பதிவுவாத சினிமா, பிராஞ்சிய சர்ரியலிச சினிமா, பிராஞ்சிய புதிய அலை சினிமா), மொண்டாச் சினிமா: சோவியத் ரசியாவின் பங்களிப்பு, இத்தாலிய நவயதார்த்தவாத சினிமா ஆகிய ஆறு இயல்களில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தனது இளமாணிப் பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப்பட்டத்தையும்

கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர் வ.இன்பமோகன். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் அழகியல், நாட்டார் கலை, சினிமா என்பவற்றில் ஈடுபாடு உடையவர். இவர் மரபுக்குப் பின் மட்டக்களப்பில் நாடகங்கள், இந்தியக் கலையும் ரசனையும், ஆகிய நூல் களை ஏற்கெனவே எழுதியுள்ளார்.

796 உடற்பயிற்சி, விளையாட்டுகள்

9524

பதினைந்தாவது தமிழர் விளையாட்டு விழா 2012 - பாரிஸ். *தமிழர் புனர்வாழ்வுக் கழகம். பிரான்ஸ்: தமிழர் புனர் வாழ்வுக்கழகம், இணை வெளியீடு, பிரான்ஸ்: உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், 1வது பதிப்பு, ஜூலை 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

128 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 *சமீ.*

பிரான்சில் இயங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், அங்கு இயங்கும் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்துடன் இணைந்து வருடாந்தம் முன்னெடுத்துவரும் தமிழர் விளையாட்டு விழா நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவை. அவ்வகையில் 2012இல் அமைந்த 15ஆவது ஆண்டு நிகழ்வினையொட்டி வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். முக்கிய பிரமுகர்களின் ஆசியுரைகள், வர்த்தக விளம்பரங்களுக்கிடையே சில கட்டுரைகளும் காணப்படுகின்றன. புலம்பெயர் மண்ணில் சைவக்கிரியைகளின் ஆற்றல், ஆலயமும் ஆலய வரலாறும், பிரான்சில் ஈழத்தமிழர்களின் கல்விச் செயற்பாடுகள், பொதுப்பணியும் சமூக நலனும் தமிழின் முதல் வடிவம் கூத்து, இனப்படுகொலைகள், பிரான்சின் ஈழத்தமிழர் களின் ஆரம்பகாலம் பற்றிய குறிப்புகள், தமிழர் விளையாட்டுவிழாவின் வழித்தடம், தொழிற்சங்கமும் தொழிலாளர் நலனும், உடல் உள ஆரோக்கியமும் விளையாட்டும், புலம்பெயர் வாழ்வும் தமிழர் விளையாட்டு விழாவும், புலத்தில் நாடகங்கள், புலத்தில் படைப்பாளிகள், முயன்று பாருங்கள் வாழ்வில் உயர்வுவரும் ஆகிய தலைப்புகளில் அமைந்த பல்துறைசார்கட்டுரைகளும் காணப்படுகின்றன.

800 இலக்கியம்

801.(1) சிறுவர் பாடல்கள், கவிதைகள்

9525

கடலும் காவிரியும்: சிறுவர் பாடல். *ச.அருளானந்தம். திருகோணமலை: அருள் வெளியீடு, 37/7, மத்திய வீதி, உவர்மலை, 2வது பதிப்பு, ஒக்டோபர் 1998, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 13: வீ.ஆர்.ஜீ.கே. பதிப்பகம்).*

24 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x17.5 *சமீ.*

சிந்தனையைத் தூண்டுவதும், இயற்கைக் காட்சிகளை விபரிப்பதுமான 18 சிறுவர் பாடல்களின் தொகுப்பு. 18 பாடல்களும் கடலுடன் தொடர்புபட்டன. கடலும் அலையும், கடலும் காட்சியும், கடலும் மனிதனும், கடலும் மழையும், கடலும் தம்பியும், கடலும் தூண்டிலும், கடலும் வலையும், கடலும் பருந்தும், கடலும் உயிரும், கடலும் தொழிலும், கடலும் நீரும், கடலும் கரையும், கடலும் உப்பும், கடலும் காற்றும், கடலும் தரையும், கடலும் செயலும், கடலும் சிறுவரும், கடலும் காவிரியும் என அவற்றின் தலைப்புகள் அமைந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 128042).

9526

குழந்தைக் கவி அமுதம். *தர்மேந்திரா. யாழ்ப்பாணம்: தர்மா வெளியீடு, 28, கலைமகள் வீதி, அரியாலை, 1வது பதிப்பு, மார்ச் 1991. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201, டாம் வீதி).*

xvi, *25 பக்கம், விலை: ரூபா 25.00, அளவு:* 18x12.5 *சமீ.*

பாலகவியான ஆசிரியர் தன் 10 வயதில் ஐந்தாம் ஆண்டு மாணவனாக இருந்த வேளையில் பாடிய 40 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மாம்பழம், பாடசாலை, பறவை, நல்லூர்க் கந்தன் கோவில், அம்மா, உழவுத் தொழில், பசு, பூனை, வாழை, மலர், சைக்கிள் வண்டி, காகம், காலைப்பொழுது, சேவல், எருது, வீடு, இரவு, கமம், பந்து, வெண்ணிலா, பனை, என் துக்கம், மழை, பாட்டி, கல்வி கற்றிடுவோம், காற்று, பட்டம், முருகன், ஆகாய விமானம் என இவரது பாடல் களின் கருக்களும் தன் வயதுக்கேற்ற சிறுவரின் சிந்தனைப்போக்கிற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 81944).

9527

குழந்தைப் பாடல்கள். *இளங்கம்பன் பழநி. யாழ்ப்பாணம்: குலபதி ஆறுமுகம் கந்தையா, அஷ்டலட்சுமி வெளியீடு, சிவா பிறின்டர்ஸ், கைதடி, 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63* B A *தம்பி ஒழுங்கை).*

32 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 25., அளவு: 20x14 *சமீ.*

எதையும் பேசும், எதனோடும் பேசும் கற்பனை மிக்க குழந்தைகள் தம்மைச் சுற்றியுள்ள அனைத்தோடும் உறவாட முனைவது இயல்பே. இயற்கை-செயற்கை என எல்லாப் பொருள்களோடும் உறவாட நினைக்கும் குழந்தையின் தொடர் பாடலுக்கு இக்கவிதைகள் பக்கத் துணையாகின்றன. குழந்தைகளின் கற்பனா சக்தியையும், மேலான உணர்வுகளையும் மனதில் பதியம்வைக்க இப்பாடல்கள் உதவுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 116104).

9528

சந்தனப் பொட்டுச் சுந்தரம்பிள்ளை. பா.சத்தியசீலன். மானிப்பாய்: ச.கலாதேவி, கலைவண்ணம், சின்னப்பா வீதி, நவாலி, 1வது பதிப்பு, டிசம்பர் 1979. (யாழ்ப் பாணம்: விக்னேஸ்வரா அச்சகம்).

12 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 1.20, அளவு: 20.5x16.5 சமீ.

சிறுவர்களுக்கான வேடிக்கைக் கதைப்பாடல். ரமணி என அழைக்கப்படும் ஓவியர் வை.சிவசுப்பிரமணியத்தினதும், க.இராசரெத்தினம் அவர்களதும் கை வண்ணத்தில் அமைந்த சித்திரங்களுடன் வெளிவந்துள்ளது. நவாலியூர்க் கவிஞர் பண்டிதர் பா.சத்தியசீலன், ஈழத்துக் குழந்தைப் பாடல் இயற்றுவதில் தனக் கெனவொரு தனியான இடத்தை வகித்தவர். நகைச்சுவை உணர்வுமிக்கதும் குழந்தைகளின் சிந்தனை வெளிப்பாட்டுக்கு ஊக்கசக்தியாகவும் களமாகவும் அமையத்தக்க பல பாடல்களை எளிய நடையில் அமைத்து வழங்கியவர். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44593).

9529

சிறுவர் குரல் அமுதம். சிதம்பரபத்தினி (இயற்பெயர்: பத்தினியம்மா திலகநாயகம் போல்). யாழ்ப்பாணம்: திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல், மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை வீதி, வண்.வடமேற்கு, ஆனைக்கோட்டை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், இல.424, காங்கேசன் துறை வீதி).

xiv, 30 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54502-1-8.

சிறுவர்களுக்கேற்ற பாடல்களின் தொகுப்பு இது. முதலையும் குரங்கும், கீரியும் மனிதனும், சிங்கமும் முயலும், பொறுமையின் பரிசு போன்ற பரம்பரை வழிவந்த கதைப் பாடல்களும், சமயச் சொற்பொழிவுகளின்போது கேட்கப்பெறும் பாம்பும் முனிவரும் என்ற கதைப்பாடலும் குறிப்பிடத்தக்கவை. நாயும் பூனையும் என்ற பாடல் தாயன்பு இனம்கடந்து தொழிற்படும் ஓர் அற்புதத்தைச் சொல்கின்றது. மாலையிற் கடற்கரை என்ற பாடல் இறுதியாக அமைந்து இத்தொகுதியை நிறைவுசெய்கின்றது. இயற்கை பற்றிய அற்புதமான கவிதை இது. அனைத்துப் பாடல்களிலும் பிள்ளைகளின் அனுபவப் பரப்புக்குள் வரக்கூடிய செய்தி களையே கவனமாகத் தேர்ந்து பொதித்து வைத்திருக்கின்றார் அனுபவம்மிக்க இந்நூலாசிரியர்.

9530

சிறுவர் செய்யுள்: பைபிள் கதைகள். பாவலவன். (இயற்பெயர்: பா.சத்தியசீலன்). யாழ்ப்பாணம்: பாக்ஸ் கிறிஸ்ரி, அமைதி அருள் மையம், 1வது பதிப்பு, 1991. (ஆனைக்கோட்டை: மஞ்சரி பதிப்பகம்).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x14.5 சமீ.

இனிதாய் அமைந்தது எம் இறைவனின் படைப்பே, ஆதாம் இனிமேல் இப்பூமி

அழகாய் இருக்காது உனக்கு, கனியும் நெஞ்சம் இல்லாமல் கனியைப் படைத்துப் பயன் என்ன, பெட்டகம் ஒன்றைச் செய் நோவா பிரளயம் ஒன்று வருகிறது, பழியால் கட்ட நினைத்திட்ட பாபெல் கோபுரம் ஆகிய ஐந்து தலைப்புகளின் கீழ் பைபிள் கதைகள் செய்யுள் உருவில் இடம்பெற்றுள்ளன. சிறுவர்களுக்கேற்ற சந்தப் பிரிப்புடன் எளிய நடையில் பாவலவன் பா. சத்தியசீலன் இச்செய்யுள்களை இயற்றியுள்ளார். சிறுவர்களுக்கேற்ற எளிய நடையில், அந்த அதிசயமான பாத அணிகள், பன்றியாரை வென்றுவிட்ட பாட்டியம்மா, உயிர் காத்த ஓவியம், குளப்படியும் குளப்படியும் போன்ற சிறுவர்கதைகளை கவிதையுருவில் இவர் ஆக்கியுள்ளார். இவற்றில் உயிர் காத்த ஓவியம் என்ற பாடல் ஒரு பாட்டுக் கூத்து உருவில் ஆக்கப்பட்டுள்ளது. கவிஞர் பா.சத்தியசீலன், ஆனைக்கோட்டை நவாலியைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 86548).

9531

சின்னச் சின்னப் பாட்டு: சிறுவர் பாடல்கள். ச.அருளானந்தம். திருகோணமலை: அருள் வெளியீடு, 37/7 மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜனவரி 2000. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(3) 24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 40., அளவு: 21x15 சமீ.

பட்டம் கட்டி ஆடுவோம் என்ற பாடலில் தொடங்கி, எங்கள் அதிபர் என்ற பாடல் ஈறாக, 23 சிறுவர் பாடல்களின் தொகுப்பு இந்நூலாகும். பாடல்களுக்குப் பொருத்தமான சித்திரங்களை ஆசிரியரின் மகன் அருள்பாஸ்கரன் வரைந்து உதவியுள்ளார். பள்ளிச் சிறுவர்க்கான பாடல்களை இயற்றுவதில் வல்லவர் கவிஞர் ச.அருளானந்தம். "ஏற்கெனவே அவர் இயற்றி வெளிவந்த பாடல்கள் சிறுவர்களின் மனதில் புத்துணர்ச்சியையும் புது மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவ தோடு வேகமாகச் சிந்திக்கவும் செயற்படவும் வைத்துக்கொண்டு இருப்பதை எல்லோரும் நன்கறிவோம்" என இந்நூலுக்கான அணிந்துரையில் உடுவை தில்லை நடராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129705).

9532

செந்தமிழ் சிறுவர் பாடல். பத்மா இளங்கோவன். சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, மார்ச் 2014. (சென்னை 77: மணி ஒப்செட்).

64 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 24x18 சமீ., ISBN: 978-93-83051-26-7.

பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி வி.ரி.இளங்கோவனின் துணைவியாரான நூலாசிரியை, பிரான்சில் பரிசு என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகை ஒன்றினை நடத்தியவர். தமிழ்நாடு கு.சின்னப்ப பாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்திற்கான விருதினை 2012இல் பெற்றவர். சிறுவர் இலக்கிய வரிசையில் பத்மா இளங்கோவனின் ஆறாவது நூல் இது.

9533

செந்தமிழ் மழலைப் பாடல். பத்மா இளங்கோவன். சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, மார்ச் 2014. (சென்னை 77: மணி ஒப்செட்).

64 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 24x18 சமீ., ISBN: 978-93-83051-27-4.

பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி வி.ரி.இளங்கோவனின் துணைவியாரான நூலாசிரியை, பிரான்சில் பரிசு என்ற பெயரில் சிறுவர் சஞ்சிகை ஒன்றினை நடத்தியவர். தமிழ்நாடு கு.சின்னப்ப பாரதி இலக்கிய அறக்கட்டளையின் சிறுவர் இலக்கியத்திற்கான விருதினை 2012இல் பெற்றவர். சிறுவர் இலக்கிய வரிசையில் பத்மா இளங்கோவனின் மற்றுமொரு வரவாக இந்நூல் அமைகின்றது.

9534

பாப்பாவுக்குப் பத்துப் பாடல்கள். த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B A தம்பி வீதி).

24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 5., அளவு: 18x13.5 சமீ.

பாடு பாப்பா, ஆசை, பொங்கல், ஊஞ்சல், வண்ணப் பறவைகள், ஆறு, மீன்கள், கரும்பு, எம்நாடு, கிளியும் பூனையும் முதலிய 10 தலைப்புகளில் அமைந்த பாடல்கள். இவற்றுள் ஒன்று கதைப்பாடலாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86985).

9535

பாலர் பாட்டு தொகுதி 3. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, வைகாசி 1987, 1வது பதிப்பு, 1985. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B A தம்பி வீதி).

44 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 7.30, அளவு: 21.5x14 சமீ.

பிள்ளைகள் கண்டும் கேட்டும் பழகும் பூ, மழை, வண்டி, கப்பல், முதலிய பொருள் பற்றிய பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கதைப்பாடல் நான்கும், விடுகதைக் கவிதை ஒன்றும் இடம்பெற்றுள்ளன. ஆசிரியராகவும் அதிபராகவும் பல்லாண்டு காலம் பணியாற்றிய அனுபவத்தின் பயனாகப் பாலர்களின் உளவியல்புகளுக்கேற்ற பாடல்களை இந்நூலாசிரியர் வெகு அற்புதமாக இயற்றியுள்ளார். பாலர்களின் நிலையில் நின்று அவர்களே பாடும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்களில் இசையும் அசைவும் ஒன்றுகூடி வருவதால் ஆரம்பவகுப்பு மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86988).

9536

விரியும் மொட்டுக்கள். சு.வள்ளியம்மை (தொகுப்பாசிரியர்). சாவகச்சேரி: திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை, வளர்பிறை, அமிர்தாம்பிகை வித்தியாலயம் அருகாமை, கண்டி வீதி, நுணாவில் கிழக்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2004. (சாவகச்சேரி: நியூ செந்தில் பிரின்டர்ஸ், கச்சாய் வீதி).

xi, 23 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x15 சமீ.

சிறுவர்களுக்கான புதிய பழைய பாடல்கள் நூலுருவிலும், அப்பாடல்கள் பதிவு செய்யப்பட்டு ஒலிப்பேழை, இறுவெட்டுகளிலும் இணைத்து வெளியிடப் பட்டுள்ளது. சிறுவர்களுக்கான பாடல்களை ஆசிரியர்கள் பாடிப்பயிற்சி பெற்றுக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கும் வகையில் வள்ளியம்மை ஆசிரியையினால் இம்முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறைவன் துதிப்பாடல், ஆண்டவர் திருத்தலம், கடவுள் ஒன்றே, சிறுவர் கீதம், வெள்ளைப் பூனைக்குட்டி, வண்ணக் கிளியே, உயிரெழுத்துக்கள், பைங்கிளி, கும்மியடித்திடுவோம், காலிலே பாதணி, விளையாட்டு முற்றம், அம்புலி மாமா, வட்ட நிலா, காட்டுக்குள்ளே காட்சி யொன்று, பட்டம் பறக்குது, உயிரெழுத்தானவன், பாட்டுப்பாடுவேன், சின்னஞ் சிறிய சிறுவர், மழை பொழியுது, மத்தளம் நான் அடிப்பேன், நாம் ஊஞ்சல் ஆடுவோம், ஆடுவோம் பாடுவோம், பயிற்சி செய்வோம் நாம் ஆகிய 23 பாடல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. பல்வேறு சிறுவர் பாடலாசிரியர்களால் இயற்றப் பட்ட இப்பாடல்களை திருமதி சு.வள்ளியம்மை தொகுத்திருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 153178).

801.(2) சிறுவர் நாடகங்கள்

9537

ஆச்சி அச்சாப்பாட்டி: சிறுவர் நாடக கதைத் தொகுப்பு. கனகர் இரத்தினம் கமலநாதன். யாழ்ப்பாணம்: திருமதி இராஜபத்மினி கமலநாதன், 24/5, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (யாழ்ப்பாணம்: கக்ஸ்ரோன் Caxton பிரின்டர்ஸ், 3/1 நவீன சந்தைக் கட்டிடம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).

xi, 109 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 270., அளவு: 20x14.5 சமீ.

ஆசிரியர் எழுதிய சிறுவர் நாடகங்களுள் பூனை வைத்தியர், வானத்து ராசாவே, இனி எல்லாம் சரி, சிங்கராசா தங்கராசா, எனக்கும் வலிக்கும், ஆச்சி அச்சாப்பாட்டி, கடற்கன்னி ஆகிய ஏழு நாடகங்களை இந்நூலில் வழங்கியுள்ளார். நாடகங் களுக்கான மூலக்கதைகளும் இணைக்கப்பட்டுள்ளன. இவை, ஒரு கதையிலிருந்து நாடகம் எவ்வாறு உருவாகின்றது என்பதை வாசகருக்கு உணர்த்துகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 226216).

9538

எல்லாம் மண். பிரியா மகாலிங்கசிவம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: நாடக மன்றம், சைவ மங்கையர் வித்தியாலயம், 23, உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, மே 2012. (கொழும்பு 6: விகடன் அச்சகம், 541/2சீ, காலி வீதி, வெள்ளவத்தை).

(8), 150 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14.5 சமீ.

கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய நாடக மன்றத்தினர் 2009ஆம் ஆண்டிலிருந்து தாம் மேடையேற்றிய நாடகப் பிரதிகளைத் தொகுத்து இந் நூலில் வழங்கியிருக்கின்றனர். இவற்றை சிறுவர் நாடகங்கள், சமூக நாடகங்கள், இலக்கிய நாடகங்கள் என மூன்று வகைக்குள் பிரித்தடக்கியுள்ளனர். சிறுவர் நாடகங்கள் வழமையான கற்பனாவாத தேவதைக் கதைகளை அடியொற்றியிராமல், அவற்றை நிராகரித்து- நடப்புலகின் அவலங்களையும் யதார்த்தங்களையும் அவர்களது பார்வையில் உணரச்செய்து அவ்வுலகை அவர்கள் எதிர்கொள்ளும் பக்குவத்தை அவர்களிடம் தோற்றுவிக்க முனைகின்றன. சிறுவர் நாடகப் பிரிவில் அகந்தை கொண்ட மயிலார், கற்றுக்கொண்ட பாடங்கள், தந்திரங்களும் இராஜ தந்திரங்களும் ஆகிய மூன்று நாடகங்களும், சமூக நாடகப் பிரிவில் எல்லாம் மண், உயிரின் செலவு, ஒட்டிக்கொண்ட ஒவ்வாமைகள், சம்காரம், ஈரந்தேடும் இதயங்கள் ஆகிய ஐந்து நாடகங்களும், இலக்கிய நாடகங்கள் என்ற மூன்றாவது பிரிவில் கவரி வீசிய காவலன், கர்ணன் ஆகிய இரு நாடகங்களும் இடம் பெற்றுள்ளன.

9539

தப்பி வந்த தாடிஆடு. சி.மௌனகுரு. திருநெல்வேலி: நாடக அரங்கக் கல்லூரி, 1வது பதிப்பு, மார்ச் 1987. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

xvi, (8), 60 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 18.5x12.5 சமீ.

1989இன் சிறந்த நாடகத்திற்கான தேசிய சாகித்திய மண்டலப் பரிசை வென்ற நாடகம் தப்பி வந்த தாடி ஆடு. யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள, சென் ஜோன் பொஸ்கோ ஆரம்பப் பாடசாலையில் 1985இல் நூலாசிரியரின் நெறியாழ்கையில் முதலில் மேடையேற்றம் கண்டது. தப்பி வந்த தாடி ஆடு, வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள் என இரண்டு நாடகங்கள் இந்நூலில் உள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118845).

801.(4) சிறுவர் சிறுகதைகள்

9540

சிறுவர் சிந்தனைக் கதைகள். அனு வை. நாகராஜன். தெல்லிப்பழை: வைரமான் வெளியீட்டகம், சங்கராபரணம், தென் மயிலை, 1வது பதிப்பு, மே 2002. (கொழும்பு 12: நிசான் பிரின்டர்ஸ், 64 என், பீர் சாஹிபு வீதி).

vi, (14), 58 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 24x17.5 சமீ.

சிறுவர் கதைத் தொகுதி. சிரித்திரன் சுந்தர் நினைவு இலக்கிய விழாவில் 2002ம் ஆண்டுக்கான விருதுபெற்ற நூல்களில் இதுவும் ஒன்று. மேலும் இந்நூல் வடகிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் விருதும் பாராட்டும் பெற்றது. மிகவும் நல்ல பிள்ளை, அதுதானே பார்த்தேன், எனக்கும் இரண்டு பசுக்கள் ஆயின, இசைப் புலவனும் இடையனும், வால் மட்டும் நுழையவில்லை, பால் கொக்கு போல் இருக்கு, இப்படித்தான் தின்றேன், நிறைந்த பொருள், உங்களுக்காக ஒளித்து வைத்தேன், மலை தூக்கிய மாவீரன், விகடகவி, தயிருண்டிக்கு மட்டும் இடமுண்டு. இறைத்தது போதும், பவளக்கொடி ஆகிய தலைப்புகளில் எழுதப் பட்ட 14 கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132847).

9541

சிறுவர்களுக்கான அபூர்வக் கதைகள். அ.யோண் யோட்ஜ். கொழும்பு: அ.யோண் யோட்ஜ், 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

86 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

பழையகால மக்களது கலாசாரம், பண்பாடு மற்றும் வாழ்க்கைமுறை முதலிய வற்றை இதிலுள்ள சிறுவர் கதைகள் ஓரளவு வெளிப்படுத்துகின்றன. யோண் யோட்ஜ் சுகாதாரப் பரிசோதகராக 34 ஆண்டு அனுபவம் பெற்றவர். சேவை ஓய்வின் பின்னர் மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 220036).

9542

சிறுவர்களுக்கான சிந்தனை விருந்து: கதைத் தொகுதி. பீ.பீ.அந்தோனிப்பிள்ளை. மன்னார்: நித்தியா புத்தகசாலை, 25, புதிய பேருந்து நிலையம், 1வது பதிப்பு, மார்கழி 2001. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(3), 62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 71.50, அளவு: 21.5x14.5 சமீ.

இந்நூலில் சிறுவர்களுக்கான நல்வழிகாட்டும் இருபது சிறுகதைகள் நேர்மைக்குப் பரிசு, தாய்ப்பாசம், பிள்ளைகள் படிப்பித்த பாடம், பழைய முத்திரை, ஆளைக் கண்டு மயங்காதே, பெருந்தன்மை, எங்களுக்கும் காலம் வரும், அனுபவம் தந்த பாடம், சொத்தும் பாசமும், அனுபவம் சிறந்த ஆசான், தியாகம், அடக்கம், உயர்த்தும் ஒழுக்கம், பாடசாலைச் சிரமதானம், ஆமையும் முயலும், எது உயர்ந்த தொழில், நல்ல மனப்பான்மை, தனக்கு வந்தால் தெரியும், நட்பு, பிறர் சினேகம் ஆகிய தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132062).

9543

பலே பலே வைத்தியர். கே.விஜயன். கொழும்பு 6: VI PROMO Publication, 23/49, மயூரா பிளேஸ், ஹவலொக் ரோட், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: டிசைன் லப், 190, ஜோர்ஜ் ஆர்.டி.சில்வா மாவத்தை).

vi, 98 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52598-0-4.

யாழ். இளம் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் பங்கேற்று பரிசுபெற்றதன் மூலம் இலக்கிய உலகிற்குள் நுழைந்தவர் விஜயன். வீரகேசரி பத்திரிகையின் விவரணப்பகுதி ஆசிரியராகப் பணியாற்றியவர். சுடர் ஒளி, ஞானம் போன்ற இதழ்களிலும் தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர்க்கான இருபது கதைகளைக் கொண்டுள்ள கதைத் தொகுதி இது. குட்டிக்கரணமடித்த குண்டுப் பயில்வான், பலே பலே வைத்தியர், தாத்தா மகா கில்லாடி, பூதம் காத்த பூமி, பண்டிதரின் பரலோக யாத்திரை, மல்லன் ஒரு மரமண்டையன், நரியார் மணி கண்டன், சூரியனைப் பிடித்து விட்டார்கள் என்பனபோன்ற தலைப்புகளில் அமைந்த இவ்விருபது கதைகளிலும் பெரும்பாலான கதைகள் மலையாள மொழியின் மூல வடிவங்கள் மற்றும் டல்ஸ்டாயின் சிறுவர்களுக்கான குட்டிக் கதைகள் என்பனவாகும். சிறுவர்களின் இயல்பான வாசிப்பை ஊக்கவிக்கும் வகையில் சுவாரஸ்யமாக எழுதப்பட்டுள்ளன.

9544

பாபா சொன்ன கதைகள். மதிவதனி சரவணபவன் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம்-தாவடி, பிள்ளையார் கோவிலடி, தாவடி, கொக்குவில், 1வது பதிப்பு, சித்திரை 1991. (யாழ்ப்பாணம்: பா.நித்தியானந்தன், நித்தி அச்சகம்).

(8), 92 பக்கம், விலை: ரூபா25., அளவு: 18.5x12.5 சமீ.

ஸ்ரீ சத்யசாயி பாபா தனது சொற்பொழிவுகளிடையே "ஒரு சின்ன உதாரணம்" என்று கூறிவிட்டு ஒரு கதைமூலம் பெரிய படிப்பினைகளைப் போதிப்பார். பாலவிகாஷ் பள்ளிகளில் பயிலப்படும் இத்தகைய கதைகளின்பால் சிறுவர் களிடையே காணப்படும் ஆர்வம் காரணமாக இத்தொகுப்பினை ஆசிரியர் தொகுத்திருக்கின்றார். இந்நூலில் அத்தகைய 42 கதைகள் தொகுக்கப்பெற்றுள்ளன. இறைவன் எல்லாரிடத்தும் இருக்கின்றார், இறைவன் எதற்கு மதிப்புக் கொடுக் கின்றார், இறைவனின் பரீட்சை, இறைவனிடம் கேட்கவேண்டியது, இறைவன் எப்போது உதவுவார், இறைவன் எப்படிக் கொடுப்பார், ஈஸ்வர சங்கற்பம், தளராத தெய்வபக்தி போன்ற இன்னோரன்ன பொருத்தமான தலைப்புகளில் இக்கதைகள் சுவையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84134).

9545

மாண்டம் வென்றது: மாணவருக்கான நன்னெறிக் கதைகள். அருட்சகோதரி யதீஸ்வரி. தெல்லிப்பழை: அருட்சகோதரி யதீஸ்வரி, துர்க்காபுரம் மகளிர் இல்லம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2011. (மல்லாகம்: ராம்நெற்.கொம்).

160 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 20.5x14.5 சமீ.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் துறவுவாழ்வுவாழ்ந்துவரும் அருட்சகோதரி யதீஸ்வரி குழந்தைகளுக்கான நன்னெறி புகட்டும் கதைகளைக்கொண்ட இந் நூலை எழுதியுள்ளார். துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளின் அரங்கக்கலை வளர்ச்சியில் இவர் பாரிய பங்களிப்பை வழங்கிவருபவர். தேவஸ்தான வெளியீடாக வெளிவரும் அருள்ஒளி ஆன்மீக மாத இதழில் சிறுவர்களுக்கான நற்சிந்தனைகளை தொடர்ச்சியாக வழங்கிவரும் அருட்சகோதரி யதீஸ்வரி அவற்றில் தேர்ந்த 51 கதைகளைத் தொகுத்து இந்நூலை ஆக்கிச் சிறுவர் இலக்கியத்துக்குத் தன் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

801.(5) சிறுவர் நாவல்கள்

9546

உலகம் சுற்றிய பலூன் தம்பி. யதுர்சன் பிரதீப் குமார். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

16 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-04.

இளந்தலைமுறையினரின் எழுத்தார்வத்தையும், வாசிப்பு ஆர்வத்தையும் ஒரே வேளையில் வளர்த்தெடுக்கும் முயற்சியாக இச்சிறுவர் நூல் வெளியிடப்பட்டுள்ளது. பலூனில் உலகைச் சுற்றிய சிறுவனின் கதை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 192962).

9547

சங்கீதன்: சிறுவர் நாவல். க.தங்கராஜா (புனைபெயர்: ஆலையூரான்). திருக் கோணமலை: திருமதி. கோ.தங்கராஜா, 1வது பதிப்பு, 2006. (வத்தளை: கிறிப்ஸ் பிரின்டேர்ஸ், 70/7, கனல் வீதி, ஹெந்தளை).

v, 64 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 25x19.5 சமீ., ISBN: 955-99552-0-9.

இச்சிறுவர் நாவல், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுனாமி சிறுவர் நூல் வெளியீட்டுச் செயற்றிட்டத்தில் 2005/2006 அனுசரணையுடன் வெளியிடப்பட்டது. அமரர் க.தங்கராஜா அவர்கள் ஆலங்கேணிப் பாடசாலை, வந்தாறுமூலை மத்திய கல்லூரி, மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம், பேராதனைப் பல்கலைக்கழகங்கள் ஆகிய கல்வி நிறுவனங்களில் கற்றுத்தேர்ந்தவர். சிறந்ததொரு ஆசிரியராகவும், அதிபராகவும் திருகோணமலை, வவுனியா மாவட்டங்களில் பணியாற்றியவர். இந்நாவல் சிறுவருக்கென விறுவிறுப்பான கதையம்சத்துடன் எழுதப்பட்டது. நிலாவெளிக் கிராமத்தின் இயற்கை அழகையும், மக்களின் வாழ்வுமுறையினையும், சிறுவர்தம் மன இயல்பினையும், சுனாமியின் தாக்கத்தினால் பின்னர் சின்னாபின்னமான அம்மக்களையும், சுனாமியில் அல்லலுற்ற அக்கிராமத்தின் சிறார்களின் மனத் துடிப்பையும் அவர்களைக் கொடுமைப்படுத்தும் சமூகப் பெருச்சாளிகளையும்

இந்நாவலில் வெளிச்சம் பாய்ச்சிக் காட்டுகின்றார். சிறுவர்களிடையே துணிச்சலை வளர்த்தெடுத்துச் செல்வதையும், அவர்கள் தாங்களே சிந்தித்துச் செயலாற்றுவதையும் இந்நாவலில் காணலாம். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 217239).

9548

சொர்க்கவனம். சுதாகினி டெஸ்மன் றாகல். கொழும்பு: கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, 8ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (அத்துள்கோட்டை: ஏ.எஸ்.அச்சுப் பதிப்பகம், 656 கோட்டை வீதி).

iv, 16 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21.5 சமீ., ISBN: 978-955-9117-29-2.

தாய் நாட்டின் மரபுரிமை பிள்ளைகளுக்கே என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அரச ஊழியர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டித் தொடர் -2013க்காகத் தேர்வு செய்யப்பட்டு அச்சிடப்பட்ட சிறுவர் கதை நூல் இது. கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்களான திருமதி சுபாசினி கிருபாகரன், சுபாசினி கேசவன் ஆகியோர் முறையே பதிப்பாசிரியராகவும் உதவிப்பதிப்பாசிரியராகவும் செயற் பட்டுள்ளனர். முழுமையாக காட்டு விலங்குகளைக் கதாபாத்திரங்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சிறுவர் கதை. சொர்க்கவனத்தில் கர்வத்துடன் திரிந்த மயில் அக்காவைத் திருத்தி வழிக்குக் கொண்டுவரும் கதை.

9549

மாவீரன் புள்ளிமான்: சிறுவர் நாவல். ஓ.கே.குணநாதன். அவுஸ்திரேலியா: பாடும் மீன் பதிப்பகம், 1, Petra Court, Epping, Victoria 3076, இணை வெளியீடு, மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, மார்கழி 2004. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

106 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 955-8715-20-4.

25ஆவது பிரியா பிரசுரமாக வெளிவந்துள்ள நூல். 2004ம் ஆண்டிற்கான இலங்கை சாஹித்திய மண்டலப்பரிசு பெற்ற சிறுவர் இலக்கியநூல் இது. ஓ.கே.குணநாதனின் சிறுவர் நாவல்களில் பெரும்பாலும் சிறுவர்களே பாத்திரங்களாக அமைகின்றார்கள். எமது சமூகத்திலே காணப்படும் சில கொடுமைகளையும் சிறுவர்களுக்குச் செய்யப்படும் அநீதிகளையும் எதிர்த்துப் போராடுகின்றார்கள். துணிகரமான செயல்களைப் புரிகின்றார்கள். வெற்றிபெறுகின்றார்கள். இந்த நாவலும் அத்தகைய தொன்றே. ஒரு கதையை எழுதி அதற்குப் பல முடிவுகளைக் கொடுத்து சிறுவர்களைச் சிந்திக்க வைக்கவும், சுயமாகத் தீர்மானங்களை எடுக்கவைக்கும் வகையிலும் எழுதியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 217249).

9550

மூன்று நண்பர்களும் பெரிய அலையும். திமொதி செனவிரத்ன (ஆங்கில மூலம்), புஷ்பா சிவகுமாரன் (தமிழாக்கம்). கொழும்பு: பொப்சிக்கல்ஸ் புக்ஸ், 1வது பதிப்பு. 2005. (அச்சக விபரம் தரப்படவில்லை).

18 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 140., அளவு: 20x20 சமீ., ISBN: 955-8897-10-8.

சிறுவர்களுக்கான கற்பனைக் கதை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 215800).

801.(6) சிறுவர்க்கான கட்டுரைகள்

9551

சிந்தனைத் துளிர்கள்: தரம் 6-11. செம்பியின் செல்வி. கோப்பாய்: மலர் சின்னையா, விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, 1வது பதிப்பு, பங்குனி 2003. (யாழ்ப்பாணம்: கங்கை ஒப்செற் பிறின்டேர்ஸ், பெருமாள் கோவிலடி, நாவலர் வீதி).

(4), 72 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20.5x14.5 சமீ.

தரம் 6 முதல் 11 வரையிலான மாணவர்களின் சிந்தனை விருத்தியை கருத்திற் கொண்டும், அவர்களது கட்டுரை எழுதும் ஆற்றலை விரிவு படுத்தும் நோக்கிலும் அமைந்த 21 கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைத் தொகுதியில் உள்ள கட்டுரைகளின் வடிவம் நீண்ட அறிகை வீச்சுக் கொண்டது. ஆழ்ந்த அகவயப்பாங்கிலிருந்து செறிவான புறவயப் பாங்கு வரையிலான நெடும் வீச்சுக் கொண்டது. எளிமையான இலகுநடையிலிருந்து இறுக்கமான, சிக்கலான கடின நடைவரை விரிந்த எல்லைகளைக் கொண்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135917).

9552

சிறுவர் கட்டுரை மாலை: ஆண்டு 4-5. த.நாகேஸ்வரன். சாவகச்சேரி: க.சிவசங்கர நாதன், உரிமையாளர், சிவம் மெடிக்கல்ஸ் ஸ்ரோர்ஸ் அன் புத்தகசாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1994. (சாவகச்சேரி: து.பீற்றர், உரிமையாளர், அ.ரா.ச. அச்சகம்).

36 பக்கம், விலை: ரூபா 24.50, அளவு: 20.5x14 சமீ.

ஆண்டு 4-5 வகுப்புகளில் கற்கும் மாணவர்களிடையே கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்க்கும் விதத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 117243).

9553

சிறுவர் கட்டுரைகள்: ஆண்டு 5. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 2வது பதிப்பு, தை 1990, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63 B.A தம்பி வீதி).

48 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 15., அளவு: 20.5x13.5 சமீ.

ஆண்டு ஐந்தில் கற்கும் மாணவர்களின் தேவைக்கு ஏற்ப எழுதப்பட்ட 33 சிறுவர் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. நான் விரும்பும் தொழில், நான் பார்த்த திருவிழா, எனது கிராமம், எனது பாடசாலைப் பரிசளிப்பு விழா, தைப்பொங்கல் என இன்னோரன்ன தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85823).

சிறுவர் கட்டுரைகள்: ஆண்டு 5. த.துரைசிங்கம். யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, திருத்திய பதிப்பு, ஜுன் 1998, 2வது பதிப்பு, ஜனவரி 1990. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

58 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 21.5x14 சமீ.

ஆண்டு ஐந்தில் கற்கும் மாணவர்களின் தேவைக்கு ஏற்ப எழுதப்பட்ட 50சிறுவர் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. முன்னைய பதிப்பில் இடம் பெற்றுள்ள 33 கட்டுரைகளுடன், மேலதிகமாக சில புதிய கட்டுரைகளையும் இணைத்து, 50 கட்டுரைகளுடன் இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85823).

9554

சிறுவருக்கேற்ற மாதிரிக் கட்டுரைகள். தேவதாசன் ஜெயசிங். நீர்கொழும்பு: தாசன் வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

28 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 20.5x14.5 சமீ.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் இதுவரை 75 நூல்களுக்கு மேல் எழுதி வெளியிட்டவர். தாசன் வெளியீட்டகம் என்ற அமைப்பினை கண்டியிலும் நீர்கொழும்பிலும் நடத்துபவர். வரவேற்புரை, நல்லொழுக்கம், காலைக்காட்சி, மாலைக்காட்சி, கடற்கரைக்காட்சி, தொலைக்காட்சி, ஆரோக்கிய வாழ்வு, கல்விச் செல்வம், ஒன்றுபட்டால் வாழ்வு உண்டு, விஞ்ஞான விந்தைகள், நன்றி மறவேல், பாவேந்தர் பாரதிதாசன், சுவாமி ஞானப்பிரகாசர், அன்னை தெரேசா, சுவாமி விபுலானந்தர், பாரதியார், சோமசுந்தரப் புலவர், தந்தை தாய் பேண், பருவத்தே பயிர் செய், நன்றியுரை ஆகிய 20 தலைப்புகளின்கீழ் இந்நூலிலுள்ள கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 136794).

9555

வித்தகன் விபுலானந்தன்: சிறுவர் ஆய்வு இலக்கியம். ச.அருளானந்தம் (இயற்பெயர்: கேணிப்பித்தன்). திருகோணமலை: அருள் வெளியீட்டகம், இல. 37/7, மத்திய வீதி, உவர்மலை, 1வது பதிப்பு, ஜுலை 2011. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

vi, 88 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-52535-0-5.

ஈழத்தின் கிழக்கிலங்கையின் காரைதீவு மண் பெற்றெடுத்த மகன் சுவாமி விபுலானந்தர். இவரது கல்விப்புலமையையும் சமூகத்துக்கு ஆற்றிய பணிகளையும், அவரது ஏனைய சிறப்புகளையும் தக்க சான்றுகளுடன், புகைப்படச் சான்றுகளுடன் தெளிவுறக்கூறும் நூல் இது. சிறுவர் ஆய்வு இலக்கிய நூலாகப் படைக்கப்பட்டுள்ள இந்நூல் சிறுவர்களுடன் பெரியோருக்கும் ஏற்றவகையில் உருவாக்கப்பட்டுள்ளது. சுவாமி விபுலானந்தரின் பல்வேறு சமூக வகிபாகங்கள் இலக்கிய நயத்துடன் இந்நூலின் வழியாகப் பதிவுபெறுகின்றது. சுவாமி விபுலாநந்தர் வாழ்ந்த சமகாலச் சூழல் ஆங்காங்கே நினைவூட்டப்படுகின்றது. ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் நிலவிய சமயத்தோடு இணைந்த கல்வி முறைமை, தொழில் நிலைமைகள், ஆட்சிமுறை போன்றவற்றை விளங்கிக்கொண்டாலே சுவாமியவர் களின் வாழ்வியல் பணிகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும் என்பது ஆசிரியரின் எண்ணமாகக் கொள்ளலாம்.

801.(7) சிறுவர்க்கான பலவின நூல்கள்

9556

சின்னஞ்சிறு கிளியே. செ.யோகநாதன். சென்னை 600017: தமிழோசை பதிப்பகம், 84, ஹபிபுல்லா சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (சென்னை 600017: தமிழோசை அச்சகம், 84, ஹபிபுல்லா சாலை, தியாகராய நகர்).

xvi, 312 பக்கம், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

செ.யோகநாதனின் சிறுவர் இலக்கிய நூலாக வெளிவந்துள்ள இந்நூலில் குழந்தை களுக்கான 28 கதைகள், 2 நாடகங்கள், 5 பாடல்கள் ஆகியன சித்திரங்களுடன் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 103543).

894.8(1) தமிழ்க் கவிதைகள்

9557

அக்குரோணி. மன்னார் அமுதன். மன்னார்: மன்னார் எழுத்தாளர் பேரவை, புனிதவளனார் மாணவர் இல்லம், 130, வைத்தியசாலை வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2011. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 ஸ்டேஷன் வீதி).

xiv, 86 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-53168-0-4.

விட்டு விடுதலை காண் கவிதைத்தொகுதியை வழங்கிய ஆசிரியரின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். சமகால சமூகம், அரசியல், காதல், சாதியம் எனப் பல்வேறு தொனிப்பொருள்களில் இவரது கவிதைகள் வெளிப்படுகின்றன. மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் தன் முயற்சியை மேற்

கொண்டுள்ளார். சமூகச் சீர்கேடுகள், இன்றைய விலையேற்றம், வறுமைநிலை, தமிழின் அவலக்கதி, வரலாறு-காவியம் பற்றிய தொடுகை என்று வித்தியாசமான கோணங்களில் இயற்றப்பட்ட இவரது ஐம்பது கவிதைகள் இத்தொகுப்பில் காணப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 218673).

9558

அக்னிப் பிரவேசம்: தமிழ்க் கவிதைத் தொகுதி. நவீனன் (இயற்பெயர்: வி.ஐங்கரன்). ரஷ்யா: வைகறை வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 45, Smolensk, 214019, 1வது பதிப்பு, ஆடி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

70 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

சார்ள்ஸ் என்ற புனைபெயரில் தன் பள்ளிக்காலம் முதல் கவிதைத்தளத்தில் பயணித்துவரும் ஐங்கரன், பின்னாளில் நவீனன் என்ற புனைபெயரிலும் கவிதைகள் எழுதிவருபவர். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தற்போது அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் மருத்துவத்துறையில் பணியாற்றுகின்றார். இத்தொகுதியில் நிமிர்ந்தெழும் மானத்தின் வீரம், ஊற்று, விழிப்பு, தீப ஒளியேற்றுவீர் விடியலுக்காய், என்ன பதில், தாய் மண்ணை நேசித்த அறிவாளி, தீமோர்-புதிய விடியல் நட்சத்திரம், புத்துணர்வின் பிரசவம், என் பேனாவும் என் துயரும், நினைவழியா சென்னை நிமிடங்கள், ஒரு உட்பவிப்பின் முதல் வரிகள், போர்க் கோல மனம், உதிக்கும் விடியலில் நீ ஒரு செஞ்சுடர், என்னோடு என்னாக, உரத்துக் கூறுங்கள் உரிமையுள்ளவரே, பதினாறாவது வயதும் நானுமாய், உன் வரவை வேண்டி, என்னை எரிக்கும் நான், புதிய சோதரி, இறுதியல்ல இனி ஆரம்பமே, அக்னிப் பிரவேசம் ஆகிய தலைப்புகளில் வரைந்த 21 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9559

அங்கவை கவிதைகள். அங்கவை.(இயற்பெயர்: அருணாசலம் கணேசாள்). கொழும்பு 10: கவிதா பப்ளிக்கேஷன்ஸ், 27-2/2, ஜயந்த வீரசேகர மாவத்தை, 1வது பதிப்பு, மே 1975. (அச்சக விபரம் தரப்படவில்லை).

128 பக்கம், விலை: ரூபா 4.75, அளவு: 17.5x12.5 சமீ.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 1975 மே 30, 31ம் திகதிகளில் நடத்தும் தேசிய ஒருமைப்பாட்டுக்கான எழுத்தாளர் மாநாட்டின் நினைவையொட்டி வெளியிடப்படும் நூல். ஈழத்துக் கவிதை உலகில் கடந்த 20 வருடங்களாகத் தடம்பதித்துவந்த வைத்திய கலாநிதி (செல்வி) அருணாசலம் கணேசாள் அவர்களின் கவிதைகள் இவை. வாழ்த்துப் பாடல்கள் 11, தத்துவப் பாடல்கள் 14, கலையுலகம் சார்ந்த பாடல்கள் 14, பல்சுவைப் பாடல்கள் 14, மெல்லிசைப் பாடல்கள் 9 என மொத்தம் 62 பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87001).

9560

அந்த முழு நிலாக் காலம் (கவிதைத் தொகுப்பு). தி.சுதாகர். வவுனியா: தி.சுதாகர், 117/1, மில் வீதி, உக்குளாங்குளம், 1வது பதிப்பு, மார்கழி 2004. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xix, 76 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 955-98993-0-9.

எண்ணங்களை எளியநடையில் துல்லியமாக புதுக்கவிதை வரிகளில் வடித்திருக்கிறார். இதிலுள்ள சில புதுக்கவிதைகளின் சொற்சேர்க்கைகள், சொல்லடுக்குகள், என்பன சந்தங்களுக்கு அப்பால் நிற்கும் ஆத்ம உயிர்ப்புத் தடமாகின்றன. யதார்த்தங்கள் சில கவிதைகளில் தத்ரூபமாக வெளிக்காட்டப்பட்டுள்ளன. வாழ்வில் வெறுப்புற்றவராகச் சில கவிதைகள் படைக்கப்பட்டுள்ளன. சமூக மாற்றத்துக்கான அறைகூவலாகவும் வாசிப்போருக்கு நம்பிக்கையும் உற்சாகமும் தருவதாகவும் இக்கவிதைகள் இருந்திருப்பின் மேலும் வாசகரைக் கவர்ந்திருக்கும். இந்நூலுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி விரிவான அணிந்துரை வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 188850).

9561

ஆசிரியன் ஓர் அட்சய பாத்திரம். வாகரைவாணன். யாழ்ப்பாணம்: வாகரைவாணன், பழனம், உடுவில் தெற்கு, உடுவில், மானிப்பாய், 1வது பதிப்பு, ஐப்பசி 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம், 330, காங்கேசன்துறை வீதி).

vi, 30 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 20., அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் ஆசிரியத்துறை பற்றிய விமர்சனங்களாக இந்நூலில் உள்ள அனைத்துக் கவிதைகளும் அமைந்துள்ளன. ஆசிரியன் நேற்று-இன்று-நாளை என்ற முதலாவது கவிதை சமகால ஆசிரியரின் நிலையை வலியுறுத்துகின்றது. Vocation-not an Avocation, ஆசிரியன் ஓர் அட்சய பாத்திரம், பாரதி வாழ்க்கையில் சில பக்கங்கள், வித்தகர் விபுலாநந்தர் வாழ்க்கைச் சித்திரம், ஓடம் ஒருநாள் ஓடும் ஆகிய தலைப்புகளில் மற்றைய வசன கவிதைகள் சுவையாக எழுதப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 89437).

9562

இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாம். யோ.புரட்சி. கொழும்பு 6: மலையக வெளியீட்டகம், இல.57, மஹிந்த பிளேஸ், 1வது பதிப்பு, வைகாசி 2013. (கிளிநொச்சி: கரிகணன் பதிப்பகம், இல. 175ஏ, கரடிப்போக்குச் சந்தி).

xii, 76 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-9084-26-6.

வலிகள் நிறைந்த வரிகளாக அமைகின்றது இக் கவிதைத் தொகுப்பு. இனிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை என்ற அளவில் போர்க்கால பதிவுகளும் அவைசாராத பிற கருப்பொருள்களில் அமைந்த கவிதைகளுமாக 50 தலைப்புகளில் பல்வேறு

விடயங்களை தன் கவிதையின் களமாக்கியிருக்கின்றார். பிறப்பு, திருமணம், முதல் பிரசவம், தாய், தந்தை, கல்லறை என்று மனித தத்துவத்தை விளக்கும் வகையில் கவிதைகளைக் கோர்வைப்படுத்தியிருக்கிறார். இக்கவிதைகள் பல்வேறு ஊடகங்களிலும் முன்னதாக வெளிவந்து கவன ஈர்ப்பைப் பெற்றவை. பல கவிதைகள் புனர்வாழ்வு முகாம்களிலும் தடுப்பு முகாம்களிலும் வைத்து இவரால் எழுதப்பெற்றவை. முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளுவர்புரம் கிராமத்தைச் சேர்ந்த புரட்சி, வள்ளுவர்புரம் பாரதி மகாவித்தியாலயத்தில் கல்விகற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233314).

9563

இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும். ந.சத்தியபாலன். யாழ்ப்பாணம்: அம்பலம் குழுமம், 41, இராஜ வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஜனவரி 2009. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரிண்டர்ஸ், 545, பருத்தித்துறை வீதி, நல்லூர்).

vi, 63 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 18x12 சமீ.

சத்தியபாலனின் 42 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். அழைப்பு, ஏன், நான், சிறகடிப்பு, பாறையுடன் பேசுதல், காவல், கூத்து, இன்னுமொரு நாள், இருள் கவ்வ இரத்தமாய்க் கிடந்த ஒரு காலைப்பொழுது பற்றி, இருளில் அசைகின்ற உருக்கள், நிலை, விடுதலையாகி, நெடியோடு வீசும் காற்று, அர்த்தம், தழும்புகள், பிறப்பு, தோளணைத்த கைகளுக்கு, ஒரு புழுக்கூட்டின் கதை, காணல், முடிவிலியான ஒரு துயரிசை குறித்து, கண்ணே உறங்குறங்கு, மூன்று பொம்மைகள், கலையும் பொழுது, தரிசனம், ஒரு பின்மாலைப் பொழுதில், தன்னுலகு, மழை, நடுப்பகலும் நண்டுக்கோதும் அண்டங்காகமும் ஒரு உறைந்த மனிதனும், பிழைக்கத் தெரிந்தவன் நீ, வேரடி மண்ணில், வெளிகளும் மூலைகளும், காடு, தரிசனம், கறைபடும் ரகஸ்யங்கள், கூடழிந்த ஒரு பறவைக் குஞ்சின் கதை, இருப்பு, காற்றோடு கலப்போம், இரண்டு பேர், தீய்தல், வலி, நிறைவு, கனவு, பின்னுரை ஆகிய 43 தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 202678).

9564

இருளினைக் கிழித்து தெருவினில் இறங்கு. லோ.சிநேகலதா (புனைபெயர்: சூர்யா). யாழ்ப்பாணம்: ஞானவைரவர் இந்து இளைஞர் மன்றம், கைதடி நுணாவில், 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).

(5), 25 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 20.5x13.5 சமீ.

மேதினம், புதுமைகள் செய்திடுவோம், எழுந்திடு இன்றே, அட சொல் தோழா, அழியா வரங்களோ, வளமாய் வாழ முடியாதோ, வந்துவிட்டோம், சரித்திரம் புதிதாய் படைத்திடுங்கள், யுத்தமதைத் திணிக்காதே, எழுந்துவா நிமிரலாம், உரமேறிய உணர்வுகள், இனிய தோழனே, குடிமக்கள், ஜனநாயகம், பாட்டாளி,

இனி ஒரு விதி சமைப்போம், சோஷலிசம், அபேட்சகன், வேண்டாம் வெளிநாடு, காலம் வரவேண்டும், துர்ப்பாக்கிய நிலை, இந்திய வம்சாவளியினர், தேசத்துக் குரியவர்கள், நம்மவர்கள், அரசியல்வாதி ஆகிய தலைப்புக்களில் அமைந்த உணர்ச்சிக் கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84625).

9565

இழப்புக்களையும் இழப்போம்: ஹைக்கூ கவிதைத் தொகுதி. சார்ள்ஸ். யாழ்ப்பாணம்: வசந்தம் பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, மாசி 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 24., அளவு: 20x13.5 சமீ.

ஹைக்கூ வடிவிலமைந்த நூறு கவிதைகளின் தொகுப்பு. சார்ள்ஸ் என்ற புனை பெயரில் எழுதிவரும் வளரும் இளம் படைப்பாளியான ஐங்கரன், முன்னர் அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினிலே, உறக்கம் தேடும் உலகிற்காய், உனக்குள்ளேயே உள்ளிருப்பு ஆகிய கவிதை நூல்களை வழங்கியவர். சமகால அரசியல், சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களை வெளிப் படுத்தும் கவிதைகள் இவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 80275).

9566

இளைஞர் விருந்து. மு.நல்லதம்பி. வட்டுக்கோட்டை: வட்டுக்கோட்டை இளைஞர் மன்றம், 1வது பதிப்பு, 1958.(யாழ்ப்பாணம்: ஸ்ரீகாந்தா அச்சகம்).

ix, 115 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

வட்டுக்கோட்டை முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி அவர்கள் எழுதிய பாடல்களின் தொகுப்பு. அச்சமற்ற வாழ்வையும், மேலோர் நச்சிடும் பண்பையும் உண்மையின் உயர்வையும் இளைஞர்கள் வாழ்வின் குறிக்கோளாகக் காத்திடல் வேண்டும் என்கிறார். கவிஞர்களின் வறுமையைக் கோடிட்டுக்காட்டும் இவர் புலவர்க்குதவிய அன்புள்ளம் கொண்ட செல்வந்தர்களையும் மறந்துவிடவில்லை. புலவரவர்கள் காலத்திற்கு ஏற்ற இனிய சந்த அமைப்புகளோடு உரிய சொற்களால் இயற்கையின் எழிலைக் குழைத்து உயரிய செய்யுள்களாக இவற்றை ஆக்கியிருக்கின்றார். இந் நூலுக்கு விரிவான முகவுரையொன்றினை பண்டிதர் க.மயில்வாகனனார் வழங்கியிருக்கிறார். பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் சிறப்புப் பாயிரம் பாடியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39327).

9567

இன்றைய வண்ணத்துப் பூச்சிகள். கெக்கிராவ ஸஹானா. சென்னை 600012: மாங்குயில் பதிப்பகம், 142, சச்சிதானந்தம் தெரு, கொசப்பேட்டை, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600018: மாஸ் டைப்போகிராபிக்).

96 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ.

சுய அனுபவப்பிழிவாக வெளிவந்துள்ள இக்கவிதைத் தொகுப்பின் வாயிலாக ஸஹானா ஈழத்து முஸ்லிம் பெண் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவராக இனம்காணப்படுகிறார். தன் சூழலினூடாக பெண்ணினம் சந்திக்கும் பிரச்சினைகளின் உணர்வு வெளிப்பாடாக, ஆதங்கமாக இவரது கவிதைகள் அமைகின்றன. ஆணாதிக்கம் கட்டவிழ்த்துவிடும் வக்கிரங்கள் இவரது கவிதைகளில் இனம் காணப்பட்டு காட்சிப்படுத்தப்படுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236554).

9568

உதிரப் பூக்கள்: கவிதைத் தொகுதி. சந்திரசேகரம் கயூகரன். யாழ்ப்பாணம்: சந்திரசேகரம் கயூகரன், 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

ix, 89 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 190., அளவு: 22x14.5 சமீ.

ஹைக்கூ கவிதைகள், குறுங்கவிதை, கதைசொல்லும் கவிதை என மூன்று பிரிவுகளில் இவ்விளம் கவிஞனின் கவிதைகள் இந்நூலில் வழங்கப்படுகின்றன. நூலாசிரியர் வடபுலத்தின் ஹாட்லிக் கல்லூரியின் மாணவனாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 227671).

9569

உப்புக் கரிக்கும் உதடுகள். இ.சிவதர்சினி. யாழ்ப்பாணம்: இ.சிவதர்சினி, குப்பிளான் தெற்கு, குப்பிளான், 1வது பதிப்பு, ஆவணி 2005. (யாழ்ப்பாணம்: லலிதா கிராப்பிக்ஸ், அங்களப்பாய், இணுவில் கிழக்கு).

xxii, 72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 120., அளவு: 20.5x14.5 சமீ.

இது ஆசிரியரின் முதலாவது கவிதைத் தொகுப்பு. தீக்குளித்துக்கொண்டிருக்கும் தனது தேசத்தின் சமகால நிகழ்வுகளும் பெண்ணியச் சிந்தனைகளும் தன்னைப் பாதித்த இன்னோரன்ன பல நிகழ்வுகளுமே தன் கவிதைகளின் மூலப்பொருள் என்கிறார் சிவதர்சினி. சமாதானம், வேலை நிறுத்தம், கலாச்சாரச் சீரழிவு, சீதனக் கொடுமை, பாதிப்புற்றோர் நட்பு என்பனவாக இவரது கவிதைக் கருக்கள் விரிந்து செல்கின்றன. மொத்தம் 52 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156149).

9570

உயிர் மூச்சு: கவிதைத் தொகுப்பு. நெடுந்தீவு லக்ஸ்மன் (இயற்பெயர்: நா.இலட்சுமணராசா). நெடுந்தீவு 10: நெடுந்தீவு லக்ஸ்மன், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2003. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xii, 68 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 17x12 சமீ.

வரண்ட பூமியான நெடுந்தீவு, ஆயுத கலாசார அரசியல்போக்கால் இருண்டதீவாக விளங்கிய ஒரு காலத்தில் நெடுந்தீவு பற்றிய செய்திகளை ஊடகங்கள் மூலம் வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதற்காகத் துணிச்சலோடு பணியாற்றிய ஒரு சிலருள் நெடுந்தீவு லக்ஸ்மன் முக்கியமானவர். சிறந்த கவிஞரான இவரது கவிதைகளிலும் தான் சார்ந்த தமிழ்ச் சமூகத்திற்காக ஒரு செய்தி சொல்லும் பாங்கும் காணப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 151651).

9571

உயிர்ச் சுமர். ஜே.எஸ்.ராஜ். யாழ்ப்பாணம்: தமிழ் இலக்கிய மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

viii, 55 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-54232-0-5.

பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு பொருண்மைகளில் வெளிவந்த சிறியதும், நீண்டதுமான 31 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. பெண் விடுதலை, முதுமை வாழ்வு, காதல், நட்பு, ஏமாற்றம், விரக்தி மற்றும் சமகால வாழ்வியல் சூழல் என்று கவிதைகளின் பாடுபொருள் விரிவானவை. தாய்த்தீவு, புது வசந்தம், பெண்ணியம், முதுமையின் முகவரி, காதல் கற்கள், நட்புக்காக, ஏமாற்றம், அநாதைப் பிணங்கள், தொலைபேசி, வெறுமை, இறுதித் தீர்ப்பு, சிதையாத கனவு, முகவரித் தேடல், நரகப் பிரபஞ்சம், தாய்முகம், நியாயம், பெண்ணே புறப்படு, கல்லறை, நீதிவான், அதிர்ஷ்டம், தேர்தல், கண்ணீர்க் கல்லறை, நட்பு, மணமாலை, மனிதப் பிரசவம், கிடைக்காத விடிவு, நிம்மதியைத் தேடி, மரணத்தின் மதிப்பீடு, ஏக்கங்கள், முதல் சந்திப்பு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225904).

9572

உன் ஓரவிழி வீச்சிலிருந்து. என்.சுந்தா. மன்னார்: என்.சுந்தரராஜன், 1வது பதிப்பு, மார்ச் 2010. (மன்னார்: ஸ்கை பிரின்டர்ஸ், புனித செபஸ்தியார் வீதி).

xix, 180 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 320., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-97603-2-0.

காதற் கவிதைகளால் அத்திவாரம் கொண்டு காதற் கற்களால் எழுந்து நின்று தன்னுள் காதற் கவிதைகளை ஓவியமாய்த் தீட்டி அழகுபடுத்திக்கொண்ட காதற் கோட்டை இந்த கவிதைத் தொகுப்பு. காரிகையர் கண்கள் அழகானவை. இளைய மகளிர் இளமை துள்ளியோடும் கண்கள் ஓரவீச்சுக்கள் சுகம் இனிமையானது. கடைக்கண் வீச்சு உதிர்ந்த அந்தக் காரிகையர் குறும்புச் சிரிப்பும் அழகானது. இவற்றில் தொக்கிநிற்கும் உணர்வுகளும் இனிமையானவை. மொத்தத்தில் ஓரவிழி வீச்சு என்பது இனிமையானது. இதனால் இத்தொகுப்பு அழகாக "உன் ஓரவிழி வீச்சிலிருந்து" எனவானது. போர்க்களம் கண்ட ஒரு மண்ணிலிருந்து

முகிழ்ந்துள்ள வித்தியாசமான மலர் இந்நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 216742).

9573

உன் பெயர் குறிக்கும் எழுத்துகளில்: கவிதைகள். ஏ.பீ.சம்சுனா. சம்மாந்துறை: வாழும் கலை இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (சாய்ந்த மருது: டிசைன் வேர்ள்ட்).

xxiii, 84 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44015-0-1.

அன்புள்ள அன்னைக்கு என்ற தலைப்பில் தொடங்கி, உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில் என்ற தலைப்புக் கவிதை ஈறாக 32 கவிதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. பல காதல் கவிதைகளுடன், அன்னை, கிராமம், பெண், சீதனம், பள்ளிக்கூடம், கண்ணீர் என வேறும்பல உணர்வுக்கவிதைகளையும் வடித்திருக்கிறார். ஆதம்பாவா சம்சுனா, மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரியில் பயின்றவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியில் இளம் கலைமாணித் தேர்வை பூர்த்திசெய்தவர். சம்மாந்துறையில் தன் ஆசிரியப் பணியை மேற்கொள்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 238063).

9574

உனை நீயே செதுக்கு (கவிதைகள்). இ.சபா (புனைபெயர்: சொற்சிற்பி). மட்டக்களப்பு: எய்ம் பப்ளிஷர்ஸ், வம்மிகேணி வீதி, செட்டிபாளையம், 1வது பதிப்பு, மார்ச் 2013. (யாழ்ப்பாணம்: கவிதரன் பிரின்டர்ஸ், வளக்கம்பறை, சுழிபுரம்).

xiv, 92 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 200., அளவு: 14.5x10.5 சமீ., ISBN: 978-955-53369-2-5.

சுயமுன்னேற்றம், மானிட மேம்பாடு ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ள எளிமையான கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சேவையாளன், உறுதி, முடியும்வரை, உண்மைதான், எடுத்துக்காட்டு, தொடர் பிணைப்பு, விவேகம், ஏமாறாதே முதலான 90க்கும் மேற்பட்ட தலைப்புகளில் எழுதப்பெற்ற குறுங்கவிதைகள் இவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 232851).

9575

எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும். யோ.புரட்சி. கொழும்பு 6: இலண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகம், 9-2/1, நெல்சன் இடம், 1வது பதிப்பு, மாசி 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 681, காங்கேசன்துறை வீதி).

x, 54 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 200., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-41105-0-2.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வள்ளுவர் புரம் கிராமத்தில் பிறந்தவர் யோகநாதன் புரட்சி. இவர் வடித்த 50 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

கவிதை வடிக்கப்பட்ட காலம், இடம், நேரம் என்பவற்றையும் பாடலுடன் இந் நூலில் குறித்து ஒரு பதிவுப்புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார். இவரது பாடல்கள் சில தமிழக பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்களின் குரலில் ஒலிப்பதிவாகியுமுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 236572).

9576

என் பேனாவின் நிதர்சனம். சமரபாகு சீனா உதயகுமார். கொழும்பு 6: மீரா பதிப் பகம், 1வது பதிப்பு, செப்டெம்பர்2013. (மஹரகம: தரஞ்சி பிரின்ட்ஸ், நாவின்ன).

108 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-53921-6-7.

சீனா உதயகுமாரின் இந்தக்கவிதைத் தொகுதியில் உள்ள இருபத்தியொரு கவிதைகளில் அனேகமான கவிதைகள், "ஞானம்" சஞ்சிகையில் பிரசுரமானவை. ஒரு தொகுப்பாக ஒன்று சேர வாசிக்கும் போது இக்கவிதைகளில் ஒரு பொதுமைப் பாட்டைக் காணமுடிகிறது. அதேவேளை இக்கவிதைகளின் பாடுபொருட்களை வகுத்தும் தொகுத்தும் சிலபரிமாணங்களை நோக்கமுடிகிறது. இக்கவிதைத் தொகுதியில் உள்ள அத்தனை கவிதைகளும் புதுக்கவிதைகள். இத்தொகுதியில் உள்ள சீனா உதயகுமாரின் கவிதைகள் பலவும் போர் இலக்கியம் சார்ந்த கவிதை களாகக் காணப்படுகின்றன. போரின் அவலங்களையும் கொடுமைகளையும் துன்ப துயரங்களையும் இக்கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. அநேகமாக இறுதிப் போரின் பிந்திய விடயங்களை, போர் தந்த பரிசுகளை, போர் விட்டுச் சென்ற கேள்விகளை, இன்றும் பலரிடம் நிழலாடும் சந்தேகங்களை மர்மங்கள் வெளிக்காதா என்ற வேணவாவை, ஏக்கங்களை, பாடுபொருட்களாகக் கொண்டவையாகவே அதிகம் விளங்குகின்றன. சீனா உதயகுமார், வல்வெட்டித் துறையில் சமரபாகு என்ற இடத்திலுள்ள கூனன் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 238083).

9577

என் விழி வழியே: கவிதைத் தொகுப்பு. அ.தனுராஜ் (புனைபெயர்: அழகு தனு). மட்டக்களப்பு: அ.தனுராஜ், அம்பிளாந்துறை, கொக்கட்டிச் சோலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2013. (மட்டக்களப்பு: ஜெயஸ்ரீ பிரின்டர்ஸ்).

x, 47 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 130., அளவு: 21x15 சமீ.

அ.தனுராஜ், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாடகத்துறை முகிழ் நிலை ஆசிரியராகக் கற்று, யாழ்ப்பாணம் / புனித ஹென்றியரசர் கல்லூரியில் உள்ளகப் பயிற்சி ஆசிரியராகக் கடமையாற்றி வருபவர். 2012இல் நெஞ்சத்து வரிகள் என்ற கவிதைத் தொகுப்பை வெளியிட்டவர். இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 234463).

9578

எண்ணைத் தீயில் எறிந்தவள். அஷ்ரஃப் சிஹாப்தீன். வத்தளை: யாத்ரா, 37, ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, மாபோளை, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2008. (கொழும்பு 14: டலன்ட் கிராப்பிக்ஸ், 83B, பாபாபிள்ளை வீதி)

xxiv, 102 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 18x13 சமீ., ISBN: 955-8448-01-4.

"காணாமல் போனவர்கள்" என்ற கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதியுள்ள மேலும் சில கவிதைகளைக்கொண்ட இரண்டாவது கவிதைத் தொகுதி இதுவாகும். யாத்ரா- கவிதை இதழின் ஆசிரியரான இவர், துணிச்சல் மிக்கவொரு கவிஞராக ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே கருதப் படுபவர். ஈழத்து முஸ்லிம்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் இவரது கவிதைகள் சிறப்பானவை. பேச்சுவார்த்தைகள் தொடங்கி அந்த நினைவு வரையிலான 50 கவிதைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 219427).

9579

எஸ்.பாயிஸா அலி கவிதைகள். எஸ்.பாயிஸா அலி. கிண்ணியா: கிண்ணியா நெட் வெளியீட்டகம், குறிஞ்சாகேணி 03, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ்).

90 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-54284-0-8.

கிண்ணியாவிலிருந்து முகிழ்ந்துள்ள பெண்கவிஞர் ஒருவரின் நவீன கவிதைகள். கவிதைக்குத் தேவையான பொருத்தமான வார்த்தைகளை மட்டும் தேர்ந்து பயன்படுத்தியிருப்பது அவரது விரிந்த தமிழறிவுக்குச் சான்றாகின்றது. மரபுக் கவிதை மன்னர்கள் நிறைந்த ஒரு மண்ணிலிருந்து அதே செழுமையுடன் நவீன கவிதை வடிவத்தில் பிரகாசிக்கிறார் பாயிஸா அலி.

9580

ஏணி: கவிதை ஓவியத் தொகுப்பு. மானியூர் ரட்ணேஸ்வரன். யாழ்ப்பாணம்: நுண் கலை மன்றம், தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2002. (யாழ்ப்பாணம்: ரெக்னோவோ அச்சகம்).

iv, 72 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கதிர்காமு ரட்ணேஸ்வரன். மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில் பயின்று அங்கேயே ஆசிரியப்பணியில் இணைந்தவர். பின்னாளில் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். கலை உலகில் கவிதை-ஓவியம் இரண்டு துறைகளிலும் தான் கொண்ட திறமைகளைப் பயன்படுத்தி 37 தலைப்புகளில் இந்நூலை வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133133).

9581

ஏற்றம் பெருக வந்தாய்(கவிதைத் தொகுப்பு). நீர்வை தி.மயூரகிரி. நீர்வேலி: தி.மயூரகிரி, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2013. (யாழ்ப்பாணம்: ஷாம்பவி அச்சகம்).

v, 60 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

எழுத்தாளர் கோப்பாய் சிவம் அவர்களுடைய அகவை அறுபதுகாண் நிகழ்வை யொட்டி கவிஞர் பிரம்மஸ்ரீ தி.மயூரகிரி சர்மா அவர்கள் வெளியிட்ட கவிதைத் தொகுதி. தான் படித்துச் சுவைத்த, அனுபவித்த சமூக வாழ்வியலோடு தொடர்பு பட்டதும் ஆன்மீகத் துறைசார்ந்ததுமான விடயங்களை உள்ளடக்கிய 32 தலைப்புகள் கொண்ட கவிதைகளின் தொகுப்பாக இதனை ஆக்கியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233389).

9582

ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள். கருணாகரன். சென்னை 600005: கருப்புப் பிரதிகள், 855, பப்பு மஸ்தான் தர்கா, இலாயிட்ஸ் சாலை, திருவல்லிக் கேணி, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (சென்னை: ஜோதி என்டர்பிரைசஸ்).

126 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21.5x14 சமீ.

1963இல் இலங்கையின் வடக்கே இயக்கச்சியில் பிறந்த கருணாகரன், ஊடகவி யலாளராகவும் கவிஞராகவும் பத்தி எழுத்தாளராகவும் அறியப்பட்டவர். ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல், ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புகள், பலியாடு, எதுவுமல்ல எதுவும் ஆகிய நூல்களை ஏற்கெனவே வழங்கியவர். கருணாகரனின் மற்றுமொரு கவிதைத் தொகுப்பே இந்நூலாகும். கவிதைகள் பலவும் போர் இலக்கியம் சார்ந்த கவிதைகளாகக் காணப்படுகின்றன. போரின் அவலங்களையும் கொடுமைகளையும் துன்ப துயரங்களையும் இக்கவிதைகள் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. இவரது கவிதைகள் சிங்களம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் ஏற்கெனவே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234953).

9583

கங்கையில் மிதந்துவரும் மனிதக் கவிதைகள். சுரேந்தர் தருமலிங்கம் (புனைபெயர்: ஈழகணேஷ்). இலங்கை: புதுக் கவிஞர் அணி, 1வது பதிப்பு 1990. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x13.5 சமீ.

ஈழகணேஷ் எழுதிய புதுக்கவிதைகளின் தொகுப்பு இது. சமகாலப் பிரச்சினை களை நறுக்குத் தெறித்த ஒருசில வார்த்தைகளின் மூலம் சுவையான புதுக் கவிதைகளாக்கித் தந்துள்ளார். தேம்ஸ் நதிக் கரை வரை, இதழ்கள் பேசியது, மனிதப் புல், மூன்றாவது யாழ்ப்பாணம், தேசத்துக்குள், அரசியல், அழுத முகங்களில், அமைதியாய் பறந்த வதந்திகள், தேர்தல் கண்ணோட்டம், காதலி

இல்லாத கவிதை, இப்போதே இறந்துவிட்ட எதிர்காலத் தலைவர்கள், யாவருக்கும் புகலிடம், கங்கையில் மிதந்துவரும் மனிதக் கவிதைகள், புறாக்களைப் பறக்கவிட்டு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91861).

9584

கடலின் கடைசி அலை: கவிதைத் தொகுதி. பொலிகையூர் சு.க.சிந்துதாசன். உடுப்பிட்டி: அலைகரை வெளியீடு, ஆகாயம் பதிப்பகம், இமையாணன், 1வது பதிப்பு, நவம்பர் 2013. (நெல்லியடி: தமிழ்ப் பூங்கா பதிப்பகம்).

128 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-44886-0-1.

ஈழப் போரின் இறுதிக்கட்டத்தில் (2009) வன்னியில் வாழ்ந்த ஆசிரியர் முன்னதாக "ஓரிடம்" என்ற கவிதைத் தொகுதியை 2004இல் வெளியிட்டவர். கடலின் கடைசி அலை என்ற இத்தொகுதியில் இவரது 53 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான ஈழத்துக் கவிதைகளின் அகநிலைச் சித்திரிப்பாக இவை அமைந்துள்ளன. போரினால் ஏற்பட்ட மனித அழிவுகள், அலைக்கழிவுகள், சிறுமைகள், சிதைவுகள் பற்றிப் பேசுகின்றன. மொத்தத்தில் மரணத்துள் வாழ்ந்து மீண்ட ஒரு கவிஞனின் காயங்களை இத்தொகுதி பதிவு செய்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234488).

9585

கடவுளுக்கு ஒரு கடிதம். வாகரைவாணன். யாழ்ப்பாணம்: வாகரை வாணன், பூம்பொய்கை, இணுவில் கிழக்கு, இணுவில், 1வது பதிப்பு, மார்ச் 1983. (யாழ்ப் பாணம்: புனித வளன் கத்தோலிக்க அச்சகம்).

(6), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

வாகரைவாணனின் கவிதைகள், மனித குலம், மனித வாழ்வு, மானிட ஒற்றுமை என்றவாறான மானிடத்தை நோக்கிய சிந்தனைகளாக விரிகின்றன. கடவுளுக்கு ஒரு கடிதம், வானம் ஒரு சட்டி, கன்னியர்க்கினிய கச்சான் காற்றே, பாரதிக்கு நூற்றாண்டாம், கிண்ணமும் ஏந்துவான் கீதையும் பாடுவான், சூறாவளியே நீ சுகம்தானா?, அன்னை நாடு, விருட்சங்களுக்கும் வியர்க்கும், எட்டையபுரத்து இடி, கடற்கரைப் பூக்கள், கடவுளே, பொங்கலாம் பொங்கல், சோசலிச சுகம், தைப்பாவை, இந்த மனிதர்கள் இப்படித்தான் ஆகிய தலைப்புகளில் இம்மரபுக் கவிதைகள் விரிகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 120913).

9586

கடற்கரைப் பூக்கள். வாகரைவாணன். யாழ்ப்பாணம்: வாகரைவாணன், பூம் பொய்கை, இணுவில் கிழக்கு, இணுவில், 1வது பதிப்பு, ஏப்ரல் 1983. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

60 பக்கம், விலை: ரூபா 5., அளவு: 18x12.5 சமீ.

வாகரைவாணனின் கவிதைத் தொகுதி. கடவுளுக்கு ஒரு கடிதம், வானம் ஒரு சட்டி, கன்னியர்க்கினிய கச்சான் காற்றே, பாரதிக்கு நூற்றாண்டாம், கிண்ணமும் ஏந்துவான் கீதையும் பாடுவான், சூறாவளியே நீ சுகம்தானா? விருட்சங்களுக்கும் வியர்க்கும், எட்டயபுரத்தின் இடி, கடற்கரைப் பூக்கள், ஓ ஓ மனிதர்களே, கடவுளே, பொங்கலாம் பொங்கல், தைப்பாவை, இந்த மனிதர்கள் இப்படித்தான், சித்திரைப் பாவை, பனிப்போரும் பிணிப்போரும், மனித மேகங்கள், தேர், கூட்டுச்சேராக் கொள்கை, பனித்துளி, இளந்தளிர்கள், இரவில் உதித்த சூரியன் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129246).

9587

கண்ணீர்ப் பயணங்கள்: கவிநூல் பாகம் 1. ம. யாழ் ஆன்சிலின். கிளிநொச்சி: தமிழ்த் தாய் வெளியீடு, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2004. (கிளிநொச்சி: நிலா பதிப்பகம்).

(20), 97 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 125., அளவு: 21.5x14.5 சமீ.

மிருசுவில் வடக்கு திரு ம.ஆன்சிலின் அவர்களின் முதலாவது கவிதைத் தொகுப்பு. ஒரு போராளியின் வாக்குமூலம் என்பதில் தொடங்கி பதவிகள் ஈறாக 50 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கவிதைத் தலைப்புகள் பெரும்பாலும் சுருக்கமாக, குப்பிகள், கண்ணீர், கொடுமைகள், தோழர்கள், மீட்போம், புத்தன், துரோகம், விழிகள் என ஒற்றைச்சொற்களில் அமைக்கப் பட்டிருந்தாலும், அச்சொற்களின் ஆழம் கவிதைகளை வாசிக்கும்போது தெளிவாக-அழுத்தமாகப் புரிகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 150943).

9588

கம்பதாசன் கவிதைத் திரட்டு. கம்பதாசன் (மூலம்), சிலோன் விஜயேந்திரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 4: அல்லயன்ஸ் கம்பெனி, 244, R.K.Mutt Road, தபால்பெட்டி எண் 617, மயிலாப்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 1987. (சென்னை 5: பிஸ்மி பிரின்டர்ஸ்).

xxiv, 304 பக்கம், விலை: இந்திய ரூபா 25.00., அளவு: 18x12.5 சமீ.

தமிழகத்தின் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் திண்டிவனம் பகுதியில் உள்ள உலகாபுரம் கிராமத்தில் பிறந்த அப்பாவு என்ற இயற்பெயர் கொண்ட, கவிஞர் கம்பதாசன் (15.9.1916-23.5.1973) எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. கம்பதாசன் எழுதிய 372 கவிதைகளை இத்தொகுப்பில் சேர்த்து வழங்கியுள்ளார் சிலோன் விஜயேந்திரன். ஏற்கெனவே விஜயேந்திரன் இவரது படைப்புகளை கம்பதாசன் திரை இசைப் பாடல்கள், கம்பதாசன் காவியங்கள், கம்பதாசன் சிறுகதைகள், கம்பதாசன் நாடகங்கள், கம்பதாசன் கவிதா நுட்பங்கள்ஆகிய தலைப்புகளிலும் தொகுத்ததுடன் கம்பதாசனின் வாழ்வை கவிஞர் கம்பதாசன் வாழ்வும் பணியும் என்ற நூலின் மூலமும் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியிருந்தார். தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த யாழ்ப்பாணத்தவரான

விஜயேந்திரன் 1946இல் பிறந்தவர். 16வது வயதிலேயே எழுத்துத்துறைப் பிரவேசம் கண்டவர். இலக்கியவாதியாக மட்டுமன்றி தமிழகத்தின் திரைப்பட நடிகராகவும் இருந்து 65க்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் வில்லன் வேடமேற்று நடித்தவர். நவரச தனிநடிப்பிலும் புகழ்பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 99802).

9589

கருநாவு. ஆழியாள் (இயற்பெயர்: மதுபாஷினி ரகுபதி). சென்னை 600106: மாற்று, எண் 101, எச். பிளாக், முத்துமாரியம்மன் கோவில் தெரு, எம்.எம்.டி.ஏ. காலனி, அரும்பாக்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600106: அண்ணாமலை அச்சகம்).

80 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 18x10 சமீ., ISBN: 978-81-924400-3-3.

ஈழத்தின் திருகோணமலையில் பிறந்து, தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் ஆழியாள் ஆங்கில இலக்கியத்தில் முதுமாணிப்பட்டம் பெற்றவர். நவீன தமிழ் இலக்கியம் சார்ந்து தீவிர வாசிப்பும் தேடலும் மிக்கவர். "உரத்துப் பேச" என்ற இவரது கவிதைத்தொகுதி 2000ம் ஆண்டில் வெளியாகியது. ஐந்தாண்டு இடைவெளியில் இரண்டாவது தொகுப்பாக "துவிதம்" வெளிவந்திருந்தது. பின்னர் 6 ஆண்டு இடைவெளியில் வெளிவரும் இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியே "கருநாவு". புலம்பெயர்ந்த வாழ்புலத்தின் பின்னணியில் உருவான படைப்புக்களே இத்தொகுப்பிலும் இடம்பெறுகின்றன. வாழ்வியல் இருப்பு, பெண்ணின் இருப்பு சார்ந்த அம்சங்கள் கவிதைகளைக் கட்டமைப்பதில் முக்கியம்பெறுகின்றன. கவிதைகள், தீர்க்கமான வார்த்தைகளால் இறுக்கத்துடன் முகத்தில் அறைவது போன்ற வீரியத்துடன் வெளிவந்துள்ளன.

9590

கரை தேடும் அலை. பெரிய நீலாவணை ம.புவிலக்சி. கொழும்பு 13: டிசைன் லாப், 190 ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொட்டாஞ்சேனை, 1வது பதிப்பு, மார்ச் 2011. (கொழும்பு 13: டிசைன் லாப், 190 ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை).

xiii, 58 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-0634-00-2.

"உள்ளக்கிடக்கைகள்" என்ற முதலாவது கவிதைத் தொகுதியை 2009இல் வழங்கிய பெரிய நீலாவணையைச் சேர்ந்த ம.புவிலக்சியின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு இது. நினைவலைகள், மீனவன், நட்பு, இதயச் சிறைக்குள், கவலை, நிகரில்லாதவள், இதய வாழ்த்து, போன்ற பல தலைப்புகளில் எழுதப்பட்ட 55 கவிதைகள் இந் நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. கவிதையும் இந்தத் தொகுப்பும் என்ற தலைப்பில் கவிஞர் திமிலைத்துமிலன் கருத்துரை வழங்கியுள்ளார்.

9591

கல்லறை நெருஞ்சிகள்: கவிதைத் தொகுப்பு. மைத்ரேயி சபாரட்ணம் பிரேம்ராஜ். ஊர்காவற்றுறை: காவலூர் இலக்கிய வட்டம், நாரந்தனை, 1வது பதிப்பு, 2004. (யாழ்ப்பாணம்: ராம் பிறின்ரேர்ஸ் கிரப்பிக்ஸ், பலாலி வீதி).

ix, 32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x13.5 சமீ., ISBN: 955-8853-00-3.

ஊர்காவற்றுறை கரம்பொன் கிராமத்தில் 1960இல் பிறந்தவர் மைத்ரேயி. பெற்றோர் சபாரட்ணம்-தர்மதேவி தம்பதியினர். சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உயர்கல்வி கற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் பட்டப்படிப்பை மேற்கொண்டார். 1980-83களில் இவர் பல கவிதைகள் எழுதி அலை, புதுசு சஞ்சிகைகளின் மூலம் அவற்றை இலக்கிய அரங்கேற்றினார். முகம் மறுக்கப் பட்டவர்கள், ஊரிலிருந்து ஒரு கடிதம், பிரகடனம், கல்லறை நெருஞ்சிகள், காத்திருத்தல், பெண் இனமே, உயிர்ப்பு, நாமும் மனிதராய் ஆகிய கவிதைகளுடன் சில மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் இவர் இத்தொகுதியில் சேர்த்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204049).

9592

கவிதைச் சுரங்கம். நவ.பாலகோபால். கிளிநொச்சி: கிளிநொச்சி இலக்கிய வட்ட வெளியீடு, 1வது பதிப்பு, 1976. (யாழ்ப்பாணம்: கூட்டுறவு அச்சகம்).

(2), 38 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட நவரத்தினராசா பாலகோபால், யாழ். பரி.யோவான் கல்லூரி மாணவர். இக் கவிஞர் அவ்வப்போது எழுதிய 32 பாடல்களின் தொகுப்பு இது. பாட வந்தேன், உலகுயிர்க் காவலன், உழைப்பின் பெருமை, முன்னேறி வாராய், உயிர்த் தமிழ், ஆதி பெண்ணில் அந்தம் மண்ணில், இணக்கசபை, அன்பே தெய்வம், நாகரீக நங்கை, மழை வருகுதடி, பாடு கிளியே, இவைகள் இன்பம், கங்கையரை நோக்க மங்கையரை நீக்கு, அனுபவி, அழுகின்றான், தேன் வண்டு, கன்னி நான் விரும்பேன், ஆணையிட்டேன் அணையாதே, காண்பதற்கு முன்னர், அவசர முத்தம், கவிஞனும் காதலியும், மயங்கிடும் மாது, மங்கையின் மையல், அஞ்சும் மனந்திறப்பாய், யாது செவ்வாய், தட்டித் திறக்கின்றாள், மனமே நீ மந்தி, நங்கை இணைந்தது, இவையென நான் இல்லையே, எங்கு என் பங்கு, பாயும் இன்பம், காதலி என்னைக் காதலி, கன்னியர் சொத்தா கவிதை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84650).

9593

கவிதைத் துளிர். அனுஷானி அழகராஜா. யாழ்ப்பாணம்: அனுஷானி அழகராஜா, 1வது பதிப்பு, ஐப்பசி 2003. (யாழ்ப்பாணம்: பத்மாஸ் கணினி ஸ்தாபனம்).

34 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 20x14 சமீ.

இக்கவிதைத் தொகுப்பில் இயற்கை, நாட்டு நடப்பு, மொழி முதலிய அம்சங்கள் பாடுபொருளாகவிருக்கின்றன. மரபுக் கவிதையின் சாயல் இருப்பினும் இவரது கவிதைகள் புதுக்கவிதை வடிவத்துடனேயே இணங்கிச் செல்கின்றன.

அனுஷானியின் முதலாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 186623).

9594

கவிதைப் பூக்கள். கண்ணையா (இயற்பெயர்: முனிசாமி இராமையா). வவுனியா: முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடு, 1வது பதிப்பு, மாசி 1993. (வவுனியா: வல்லிபுரம் பிரின்டிங் வேர்க்ஸ்).

(10), 46 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x13.5 சமீ.

வன்னி மண் தந்த இக்கவிஞர் 20.10.1942இல் பிறந்தவர். வவுனியா பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளராகப் பணியாற்றியவர். வவுனியா ஓயார் சின்னக்குளத்தைச் சேர்ந்தவர். 1962 முதல் கவிதைகளை படைக்கத் தொடங்கிய இவர், பத்திரிகைகள், லண்டன் பீ.பீ.சி. தமிழோசை, இலங்கை வானொலி, வெரித்தாஸ் வானொலி ஆகியவற்றில் இவர் எழுதி வழங்கி அவ்வப்போது ஒலிபரப்பான 46 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156245).

9595

களத்தீ: கவிதைத் தொகுதி 1. வேலணையூர் சுரேஷ். யாழ்ப்பாணம்: சரண்யா பதிப்பகம், 1வது பதிப்பு, கார்த்திகை 1992. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம்).

40 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20x14 சமீ.

போராட்ட மண்ணில் வாழும் இளங் கவிஞன் ஒருவனின் மனதிலே எழக்கூடிய நியாயமான உணர்வுகள் இத்தொகுதியில் இடம்பெறும் கவிதைகள் மூலம் புலப்படுத்தப்படுகின்றன. ஈழ மண்ணையும் அம்மண்ணுக்காகப் போராடுபவர் களையும் உணர்வுதெறிக்கப் பாடும் இக்கவிஞன் "நான் பேசும் மொழியன்றோ/ நற்றமிழ் என் விழியன்றோ/ஏற்றம்கொண்டு உலகினிலே/போற்றி வந்த மொழி யன்றோ/ இன்று.../சீர்கெட்ட படையாலே/சீரழிந்து போவதனைப் / பார்த்திருக்க முடியவில்லை/ஆதலால்.../நான் எழுதப் போகின்றேன்" என்று தொடக்கக் கவி பாடுவது பொருத்தமாக அமைகின்றது. யமனுக்குச் சவால் விடவும், பூ உதிர்வுக்கு நியாயம் கற்பிக்கவும் முனைகின்ற கவிஞன் நிகழ்கால நடைமுறைகளை நன்கு உள்வாங்கிக் கவிதை படைக்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 90209).

9596

காலக் குயில்: கவிதைத் தொகுப்பு. மானிலா. யாழ்ப்பாணம்: மணி ஓசை, 12, சென்.பற்றிக்ஸ் வீதி, 1வது பதிப்பு, மே 1993. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம்).

40 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 17x12 சமீ.

என் கவிதைகளில் பொய்மைக் கருத்துகளுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க நான் விரும்பவில்லை. நான் தரிசித்த பிரச்சினைகளின் மையமே இக் காலக்குயில் என்னும் கவிமலர் என்று கூறும் கவிஞர், இக்கவிமலர் சமுதாய

அழுத்தங்களை அகற்றுவதில் ஆர்வப்படுகின்றது என்கிறார். தேசத்தின் அவல நிலை, சமுதாயத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள், காதல், பெண்களின் எழுச்சிகள் போன்ற பலதரப்பட்ட கருத்துக்களைத் தாங்கி இக்கவிதை நூல் நம் கைகளை அடைந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 92812).

9597

காலத்தின் புன்னகை. சித்தாந்தன். யாழ்ப்பாணம்: குலன் வெளியீட்டகம், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில், 1வது பதிப்பு, மே 2000. (வவுனியா: வவுனியா வடக்கு ப.நோ.கூ.சங்கப் பதிப்பகம், புதுக்குடியிருப்பு).

xi, 48 பக்கம், விலை: ரூபா 65., அளவு: 21x13 சமீ.

சித்தாந்தன் புதிய கவிஞர். புதிய உணர்வுமுறையுடையவர். மாறுதலான கவிதை குறித்துச் சிந்திப்பவர். அமைதியும் அந்த அமைதிக்குள் உள்ளியக்கமும் கொண்டவர். மொழியை சித்தாந்தன் பயன்படுத்தும் முறைமையினூடாக இவரின் கவிதைகள் புதிய வெளிப்பாட்டையும் புதிதான உணர்வுமுறையினையும் இனங்காட்டுகின்றன. சித்தாந்தன் கவிதைகளிலுள்ள சொற்களின் அமைவுகள் புதிய படிமங்களை மனதில் நிகழ்த்துகின்றன. புதிய காட்சிகளை விரிக்கின்றன. புதிய உணர்வினைக் கிளர்த்துகின்றன. இத்தகைய புதிய கவிதைமுறைமை 90களின் பின்னான ஈழத்துக்கவிதைகளில் அதிகமாகத் தொனிக்கத் தொடங்கியுள்ளன. -கருணாகரன் (முன்னுரையில்).

9598

காலப் பிரசவம்: கவிதைத் தொகுதி. தென் புலோலியூர் பரா. ரதீஸ். யாழ்ப்பாணம்: அகில இலங்கை இளங்கோ கழகம், தென் புலோலி, 1வது பதிப்பு, தை 2011. (வவுனியா: வாணி கணினிப் பதிப்பகம், 61 B, முதலாம் குறுக்குத் தெரு).

72 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19.5x12.5 சமீ.

தென்புலோலியின் பிரபல நாடகக்கலைஞர் க.ப.பரராஜசிங்கத்தின் மகனான ரதீஸ், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைச் சிறப்புக் கலைப்பட்டதாரி. மரபுசார் நாடகப் படைப்பாற்றலில் வல்லவரான இவர் "அவன் ஒரு மெழுகுவர்த்தி" என்ற கவிதைத் தொகுப்பின்வழியாக அறிமுகமானவர். இரண்டாவது கவிதைத் தொகுதியாக இந்நூல் அமைகின்றது. கவிதைகளில் அடிப்படையான மனித நேயம் அவரது கவிதைகளுக்கு அடிநாதமாக விளங்குகின்றன. சிறுமை கண்டு பொங்கும் குணமும், இயற்கை ரசனையும் கூடவே காணப்படுகின்றன. கவிதை களின் பாடுபொருளும் அதன் உருவ நேர்த்தியும் கச்சிதமாக அமைந்துள்ளன. சொன்ன செய்திகளை விட சொல்லாத செய்திகளை ஊகிக்கச் செய்வதில் இவரது கவிதைகள் வெற்றிகொள்கின்றன. மொத்தம் 29 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மல்லிகையே, காலப்பிரசவம், அக்காளை, தங்கச்சி, பேசவை, ஏன் படித்தோம் நாம் தமிழை, ஊழ்வினை வந்து சேர்ந்திற்று, கிராமத்துப் பெண், என் காதல் தேசமே, விதியே சொல்லு, மூல வேர்கள், சிறுமலர், சாகாவரம், மாண்டார் விருது, பரிசு, பெறுதல், சாதித்தீ, விஞ்ஞானம் வந்திற்று, கொள்ளி,

நியாயமா? விட்டுவிடு, சொல்ஏர் உழவா, நோக்கமென்ன, வியாபாரம், மௌனத்தின் ஓசை, ஊமையாய், திரும்பிப்பார், சொல்லிவிடு, நரிகள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

9599

காற்று வெளியிடையே. க.யோகேஸ்வரன் (புனைபெயர்: நெடுந்தீவு யோகேஸ்). யாழ்ப்பாணம்: இசைத்துறை வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, மே 2013. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரின்டர்ஸ்).

56 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 20x12 சமீ.,

இசைத்துறையில் மூன்றாம் ஆண்டு மாணவரான க.யோகேஸ்வரன், குரலிசை பட்டப்படிப்பை பயின்றுவருபவர். ஒரு இசைக் குழுவினைத் தொடர்ந்து நடத்தி வரும் இவர் மெல்லிசை, சாஸ்திரீய இசை, சினிமா இசை, நாட்டார் இசை என பல்வேறு வடிவங்களில் தனது இரசிகர்களுக்கு வழங்குபவர். இவரது கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. புனித யாத்திரை, அப்பன்வாழ்ந்த பூமி, வெளிச்சப்பொறி, விடுதிப் பையன், சொல் அரங்கம் என இவரது கவிதைகள் இந்நூலில் விரிகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 234741).

9600

காற்றோடு பேசுதல்: புதுக் கவிதைத் தொகுதி. நவீனன் (இயற்பெயர்: வி.ஐங்கரன்). ரஷ்யா: வைகறை வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 45, Smolensk, 214019, 1வது பதிப்பு, மாசி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

68 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14 சமீ.

சார்ள்ஸ் என்ற புனைபெயரில் தன் பள்ளிக்காலம் முதல் கவிதைத்தளத்தில் பயணித்துவரும் ஐங்கரன், நவீனன் என்ற புனைபெயரிலும் கவிதைகள் எழுதிவருபவர். சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அங்கு கல்விகற்ற வேளையில் தொடங்கி அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினிலே, உறக்கம் தேடும் உலகிற்காய் போன்ற கவிதைத் தொகுதிகளை வழங்கியவர். தற்போது அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் மருத்துவத்துறையில் பணியாற்றுகின்றார். புதுக் கவிதைத் துறையில் தீவிர ஈடுபாடுகொண்ட நவீனனின் கவிதைகளின் மற்றுமொரு தொகுப்பாக இது வெளிவந்துள்ளது. இவர் ரஷ்யாவில் உயர்கல்வியின் நிமித்தம் தங்கியிருந்த வேளையில் இத்தொகுதி வெளிவந்துள்ளது. தீச்சுவாலை வரிகள், உயிர்ப்பு, துளிரும் புதிய முகிழ்கள், உம் சுவாச மூச்சு எம் சுதந்திர வீச்சு, துயரங்கள் தீரும் நாளும் விரையும், மௌன வாக்குமூலம், ஒரு முழு இரவில் முடிவுற்ற அடக்கு முறை, நன்றியுள்ள ஜீவன்கள், உயிர்வாழ்வின் பேனாக்கள், விலங்கினை உடைத்தெழும் மன உறுதி, கவிதைக்கு ஏது எல்லை, காற்றோடு பேசுதல், கருகிய கருமேனி பிளவுண்ட இதயம், வரலாறு உனை விடுதலை செய்யும், புதிதாய் எழுதப்படும் புறநானூறு, புதுமையான விடியல், இலையுதிர்க்கால உதயம், உதைக்கும் காலுக்கு முத்தம், 1948 நவம்பர் 15, உண்மைகள் உயிர்க்கும் நாள்

விரையும், அவளில்லாத இன்றைய இன்றுடன், நம்பிக்கை ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 22 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9601

கிறுக்கல்கள் சித்திரமாகின்றன. பி.அமல்ராஜ். மன்னார்: பி.அமல்ராஜ், இல.66, பெரியகமம், 1வது பதிப்பு, ஜனவரி 2011. (வவுனியா: சூரியா அச்சகம்).

xvi, 76 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14.5 சமீ.

தியாகம் அவள் பெயர், நீதான் அவள், நீ-நட்பு-காதல், முதிர்கன்னி, செத்தா போய்விட்டேன், கல்லறைக் கனவு, எனது ஆட்டோகிராப், ஒரு ரயில் பயணம், முள்ளிவாய்க்கால் முடிவுரை, தமிழ் சுதந்திரம், ஊர்ப்பக்கம், பயணங்கள் முடிவதில்லை, ஒரு காதல் காவியம், அடங்காத காதல், கொன்று விடுங்கள், மொட்டைமாடிக் காதலும் முடிந்துபோன கற்பனையும், கடற்கரைக் காதல், புதுமைப் பெண்ணும் தோற்றுப்போன ஆணும் ஆகிய 18 தலைப்புகளில் இவரது கவிதைகள் உள்ளன. பெரும்பாலானவை காதல் கவிதைகளாக அமைந்துள்ளன. கவிஞர் பிரான்சிஸ் அமல்ராஜ் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசத்தில் வஞ்சியன்குளம் என்ற சிற்றூரில் பிறந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218774).

9602

குமுறல்: கவிதைகள். சுபாஷினி பிரணவன். யாழ்ப்பாணம்: சுபாஷினி பிரணவன், தேஜஸ் வெளியீடு, 45, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

x, 90 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 380., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-41359-0-1.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பட்டதாரியான சுபாஷினி பிரணவன் எழுதிய கவிதைகளின் தொகுப்பு. அம்மாவில் தொடங்கி, என்னால் முடியவில்லை அம்மா என்ற கவிதை வரையிலான 53 கவிதைகள் இதயக் குமுறல்களாக இந்நூலில் எதிரொலிக்கின்றன. முன்னர் பகிர்வு என்ற கவிதைத் தொகுதியின் வழியாக (ஜெ.சுபாஷினி 2006) இலக்கிய உலகில் அறிமுகமானவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236786).

9603

குறிஞ்சி நாடன் கவிதைகள். குறிஞ்சிநாடன் (இயற்பெயர்: க.வெள்ளைச்சாமி). கண்டி: ஞானம் பதிப்பகம், 19/7, பேராதனை வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

104 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20x14 சமீ.

மலையகக் கவிஞர் தமிழ்மணி குறிஞ்சி நாடன் கண்டியைச் சேர்ந்தவர். கனவு காண்பது மனிதரின் இயல்பென்பர். குறிஞ்சிநாடனும் கனவு காண்கிறார்- தன்

கவிதைகளின் வழியாக. எமது நாட்டில் ஏமாற்றும் சுரண்டலும் ஏற்றத்தாழ்வும் அறியாமையும் இன மோதல்களும் ஒழிந்ததும் நேர்மையும் சமாதானமும் ஒற்றுமையும் சமத்துவ நீதியும் ஓங்கியதுமான மானிடம் பயனுறத்தக்க ஓர் உலகினைக் கனவு காண்கிறார். மலையகம் சகல வாய்ப்புகளும் வளங்களும் பெற்று மேம்படும் ஒரு நிலையினை அவர் அவாவுகின்றார்.

9604

சிவகாமி தமிழ்: பல்வகைப் பாடல் தொகுப்பு. சு.செல்லத்துரை. தெல்லிப்பழை: சு.செல்லத்துரை, தலைவர், தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஜூலை 2012. (யாழ்ப்பாணம்: அச்சக விபரம்தரப்படவில்லை)

114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5ஓ15 சமீ.

எண்ணம், சமர்ப்பணம், சாற்றுகவி ஆகியவற்றுடன், சிவகாமி தமிழ், பொதுநலம், சான்றோர் நலம், பக்தி நலம், கீதமும் கீர்த்தனமும், ஊர்மாண்பு, கவியரங்கம், பாயிரப்பா, அரங்கக்கலை ஆகிய தலைப்புகளில் தொகுக்கப்பெற்ற பல்வகைப் பாடல்களின் தொகுப்பு இந்நூலாகும். இணுவில்-இளவாலை திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரையின் இரண்டாம் ஆண்டு நினைவு வெளியீடு.

9605

சுட்டுவிரல் (கவிதைத் தொகுதி). வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கமம். பருத்தித்துறை: வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கமம், 1வது பதிப்பு, 2001. (பருத்தித்துறை: தமிழ்ப் பூங்கா அச்சகம்).

(4), 24 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கமத்திலே அங்கத்தவர்களாக இருக்கும் சில இளைய கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து வழங்கும் முயற்சி இது வாகும். தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மாவட்டரீதியில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்ற தென் பொலிகை குமாரதீபனின் அறுவடை காலத்து மழை என்ற கவிதை முதலாவதாக இடம்பெறுகின்றது. தொடர்ந்து, நிலவிழி நீரை நிதந்தூவுகின்றோம், என்று வரும் விடிவு, போர்வைக்குள் வாழ்வு, வாழ்வு இனித்திடுமோ? எறிகணை, உயிர்வலைகள் அகலவில்லை, தமிழ் இனம், குதறப்பட்ட தேசமதில், சரியான தவறு, அதிசயம், ஒளி மறைந்து போனது, விருப்பத்தின் கர்ப்பம் ஆகிய 13 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133156).

9606

சுடுகாட்டு ரோஜா (கவிதை). இ.சபா (புனைபெயர்: சொற்சிற்பி). மட்டக்களப்பு: எய்ம் பப்ளிஷர்ஸ், வம்மிகேணி வீதி, செட்டிபாளையம், 1வது பதிப்பு, மார்ச் 2011. (முல்லைத்தீவு: வசந்தம் பிரின்டர்ஸ், முல்லைப்பட்டணம்).

80 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 130., அளவு: 16.5x12.5 *சமீ.,* ISBN: 978-955-53369-0-1.

கவிதைத்துறையில் 15 ஆண்டுகள் ஈடுபட்ட நிலையில் இக்கவிஞரின் முதலாவது கவிதைத் தொகுதியாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஒருமனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே அவனை எது ஆள்கின்றது, அவனது அடிமன அந்தரங்கம் என்ன என்பதன் தேடலின் மிகச்சிறிய பகுதியே இக்கவிதைகளாகும். யாப்பிலக் கணத்திலிருந்து கொஞ்சம் விடுதலை பெற்று உணர்வுரீதியாகப் பொருளுணர்த்தும் வகையில் புதுக்கவிதை, வசனகவிதை, ஹைக்கூ என பலவித பாணிகளிலும் வாசகரை இக்கவிதைகள் அணுகுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 220348).

9607

சுதந்திரன் கவிதைகள். *சுதந்திரன். தமிழ்நாடு: ஓவியா பதிப்பகம், இல. 9-6-18/2, ஒட்டாரி தெரு, வத்தலகுண்டு 642202, 1வது பதிப்பு, டிசம்பர் 2010. (சென்னை: கிரேஸ் கிராப்பிக்ஸ்).*

64 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 20.5x13.5 *சமீ.*

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் சுதந்திரன், சுடர், சுதந்திரன் ஆகிய இதழ்களில் எழுதிய 31 மரபுக் கவிதைகளின் தொகுப்பு இதுவாகும். தமிழ் மண்ணையும் தமிழரையும் நேசித்த ஒரு கவிஞனின் குரலாக இது வெளிவந்துள்ளது. நெஞ்சில் குமைந்துகொண்டிருக்கும் வேதனைகளையும் குமுறல்களையும் அழகிய கவிதைகளாக வடித்துள்ளார். போர்க்காலத் தாக்கங்கள் பற்றிய உணர்வின் வெளிப்பாடு சில கவிதைகளில் காணப்படுகின்றன. இவரது கவிதைகள் கனலைக் கக்குவதுடன் அறிவுரைகளும் ஊக்க மாத்திரைகளும் சில கவிதைகளில் ஊடுருவியுள்ளன.

9608

சூழ்வினைச் சிலம்பு: கவிதைகள். *ஜீவா நாவுக்கரசன். (இயற்பெயர்: சி.கந்தசாமி). யாழ்ப்பாணம்: பாக்கியம் கந்தசாமி, நவாலி, மானிப்பாய், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1991. (சென்னை 600024: ஏ.ஆர்.பிரிண்ட்ஸ், 375-8, ஆற்காடு சாலை).*

120 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 18x12.5 *சமீ.*

ஜீவா நாவுக்கரசன் என்ற பெயரில் கலை இலக்கிய உலகில் அறியப்பெற்ற அமரர் சி.கந்தசாமி அவர்களின் மறைவின் ஓராண்டு நிறைவின் நினைவுக்காக வெளியிடப் பட்ட அவரது தேர்ந்த கவிதைகளின் தொகுப்பு. பல்வேறு பொருள் குறித்து அவ்வப்போது இவர் தீட்டிய கவி மலர்கள் இவை. இலக்கியம், சமயம், சமுதாய சீர்திருத்தம், அரசியல், மக்கள் சேவை போன்ற கருப்பொருள்களில் இக்கவிதைகள் அமைகின்றன. அமரர் கந்தசாமி கவிதைகளுடன் பொருள் பொதிந்த பல கட்டுரை களையும் எழுதியிருக்கிறார். தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன உதயதாரகை வார இதழிலும்பிற வார ஏடுகளிலும் வெளியாகியுள்ளன. சிறந்த பேச்சாளரும்

நடிகருமான இவரும் இவரது துணைவியாரும் பல வானொலி நாடகங்களில் பங்கேற்றிருக்கின்றனர். நல்லதோர் வீணை, கவரிமான் ஆகியன குறிப்பிடத்தக்க சில மேடை நாடகங்களாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87998).

9609

தமிழ்த் தென்றல்: யாதுமூரானின் கவிதைகள்: கவிதைத் தொகுதி 1. யாதுமூரான் (இயற்பெயர்: வே.நவமோகன்). யாழ்ப்பாணம்: பொற்கமலதேவி பதிப்பகம், திருநெல்வேலி கிழக்கு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1992. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி).

28 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 20.5x13.5 சமீ.

கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களின் அணிந்துரையுடன் கூடிய இக்கவிதைத் தொகுதியில், தங்கத் தமிழினம் தலைநிமிர்ந்திடும், இனியவளே என் இதயமே, மூத்தவூர் மங்கைக்கோர் வாழ்த்து, சின்னவள் சிரிக்கிறாள், பொழுதொன்று புலர்கிறது, எம் அம்மா, கன்னியின் உள்ளம் கண்ணனுக்கே, (ெ)நஞ்சையே கண்டுகொண்டேன், புரட்சி மகனே எழுச்சி கொள்ளடா, உன் அழகை விமர்சிக்க..., உலகத் தமிழ் அகதிகள், நல்லைநகர் நாவலர் பிறந்திலரேல், மணிக்கவிகள், கடலான ஓர் காதல் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 14 கவிதைகள் இத் தொகுதியில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86811).

9610

தற்கொலைக் குறிப்பு: போர்க்காலப் பதிவுகள். நிந்தவூர் ஷிப்லி. அம்பாறை: நிந்தவூர் ஷிப்லி, 50, ஹாஜியார் வீதி, நிந்தாவூர் 18, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்ஸ்).

xx, 78 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-51608-0-3.

முதல் கவி என் அன்னைக்கே எனத் தொடங்கி கனவுகள் பூத்துக் குலுங்கும் அதிகாலை என்ற கவிதை ஈறாக இந்நூலில் தன் 30 கவிதைகளை வழங்கியிருக்கிறார் நிந்தவூர் ஷிப்லி. என் தேசத்தில் இது கிளையுதிர் காலம், எனக்குப் பின்னால் இன்னொரு துப்பாக்கி, இரத்த சாசனம், தீர்வின் அவசரம் சொல்லும் கரை யொதுங்கிய சடலம் என இவரது கவிதைகளில் ஈழத்தின் போர்க்காலச் சூழல்கள் விரிவாகப் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 213170).

9611

தாயுமானவர்: கவிதைக்கொத்து. பொன் பாக்கியம். சுழிபுரம்: பண்டிதை திருமதி பொன்.பாக்கியம், கந்தகோட்டம், சுழிபுரம் கிழக்கு, 1வது பதிப்பு, ஜனவரி 2012. (சங்கானை: திருமொழி அச்சகம்).

28 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

பண்டிதை திருமதி பொன்.பாக்கியம் அவர்களின் கவிதைத் தொகுப்பு. யாழ். சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 39 ஆண்டுகள் பயிற்றப்பட்ட ஆசிரியையாகவும், தமிழ்ப் பண்டிதராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றவர். தனது 21ஆவது வயதில் தமிழ்ப்பணியாற்றத் தொடங்கிய இவர், பண்டிதர் அ.ஆறுமுகம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோரிடம் பயின்று தன் தமிழறிவை விருத்திசெய்துகொண்டவர். சிறந்த சொற்பொழிவாளர்.

9612

தீ தின்ற தமிழர் தேட்டம்: யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு. என்.செல்வராஜா (தொகுப்பாசிரியர்). ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள், பிரித்தானியக் கிளை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

110 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-0-954944-10-0.

இந்தக் கவிதைத் தொகுப்பு, தமது மனதுக்கு நெருக்கமானதொரு அறிவாலயத்தை அநியாயமாகப் பறிகொடுத்த ஒரு இனத்தின் வலிமிகுந்த வரிகளைக் கொண்டுள்ளது. பல்துறை சார்ந்தவர்களாலும், பல்வேறு இலக்கியத்தரம் கொண்டவர்களாலும் அவ்வப்போது எழுதப்பட்டவை. இத்தொகுப்பில் ஈழத்தின் முதுபெரும் கவிஞர் களான முருகையன், எம்.ஏ.நுஹ்மான், சோ.பத்மநாதன், பண்டிதர் வீரகத்தி, சு.வில்வரத்தினம் போன்றோரின் கவிதைகளும் உள்ளன. சாம்பல் குவியலின் நடுவே நின்று தீ தின்ற நூல்களின் பக்கங்களின் கருகிய நெடியைச் சுவாசித்தபடி எழுதப்பட்ட ஒரு அமெரிக்கப் பயணியின் கவிதையும் இதில் அடங்கியுள்ளது. தாயக மண்ணில் வாழ்ந்துவரும் மாணவச் சமூகத்தை நோக்கி யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதை எழுதுங்கள் என்றதும் தாம் நேரில் காணாத போதிலும் கேள்விஞானத்தில் அதனைக் கவிதையாக எழுதிய சாதாரண பள்ளி மாணவரின் கவிதைகளும் உண்டு. புலம்பெயர்ந்து வாழ்ந்தபோதும் மனதில் மாறாத வலிகளைச் சுமந்து நிற்கும் புகலிடக் கவிஞர்கள் யுகசாரதி- கருணானந்தராஜா, இளைய அப்துல்லாஹ், வேதா இலங்காதிலகம், நகுலா சிவநாதன் போன்றோரின் கவிதைகளும் இதில் அடங்குகின்றன. மொத்தத்தில் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு ஊடகங்களிலும் வெளியாகிய கவிதைகளை தரம்பிரித்துத் தேர்வு செய்யாமல், அவரவரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முடிந்தவரை நிறைவை நோக்கிய ஒரு தொகுப்பாகத் தேடித் தொகுத்து ஒரே நூலில் பதிவுசெய்துள்ளார்.

9613

துடிக்கும் விழிகள்: கவிதைத் தொகுப்பு. வை.கஜேந்திரன். மன்னார்: வசந்தி-வைர முத்து, 10/38, 1ம் ஒழுங்கை, எழில் நகர், 1வது பதிப்பு, பங்குனி 2014. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 681, காங்கேசன்துறை வீதி).

xxii, 78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-41112-0-2.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட வை.கஜேந்திரன், பின்னாளில் புலம்பெயர்ந்து மன்னாரில் எமில் நகரில் வசிப்பவர். தின மகுடி என்ற சிறுசஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர். விழிகள் என்ற கவிதைத்

தொகுப்புடன் ஈழத்து கவிதை உலகுக்கு அறிமுகமானவர். இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு. இந்நூலில் இடம்பெற்றுள்ள இவரது 42 கவிதைகளும் ஓர் சராசரி இளைஞனின் உணர்ச்சிகளின் வெளிப்பாடாக அமைகின்றன. பல கவிதைகளில் நாட்டின் தற்போதைய நிலைப்பாடும், அது இளைய சமுதாயத்திற்கு ஏற்படுத்தும் பாதிப்பும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும் பேசப்படுகின்றன. தமிழுணர்வு, கல்வி, தம்பி, இளைஞனே, ஆறு, நானும் கவிஞன், கல்லூரி கனவுகள், புதியவன், பிறந்தான், அவள், விழியில், காதல் தோழி, நினைத்து, உன்னைத்தவிர, காதல் அம்பு, தினம் என இவரது கவிதைத் தலைப்புகள் சிக்கனமாக அமைந்துள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236907).

9614

துயரம் சுமக்கும் தோழர்களாய்: கவிதைத் தொகுப்பு. குறிஞ்சிவாணன். திருக் கோவில்: வி.பி.எம்.வெளியீட்டகம், பிரதான வீதி, சாகாமம், 1வது பதிப்பு, ஜுன் 2011. (அக்கரைப்பற்று: மல்ட்டி ஒப்செட் அச்சகம்).

88 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 18x12.5 சமீ.

தென்கிழக்கிலிருந்து வெளிவந்துள்ள இந்நூலை எழுதியவரும் மலையகத்தின் பதுளை மாவட்டத்தில், தெமோதரையிலுள்ள நெதர்வில் தோட்டத்தில் பிறந்த வருமான குறிஞ்சிவாணன் ஊவா மாகாணத்தின் மூத்த கவிஞராவார். தெமோதரை மணியம் என்றும் அறியப்பெற்றவர். 1963 முதல் எழுதிவரும் இவர், அக்கரைப்பற்று-சாகாமத்தில் வாழ்ந்து வருகிறார். இந்நூலிலுள்ள இவரது மரபுக் கவிதைகளின் பாடுபொருளாகப் பெருந்தோட்ட மக்களின் துயரமே அமைகின்றது. மலையக மக்களின் வறுமை, சம்பளப்பற்றாக்குறை, வீடற்ற நிலை, போஷாக்கின்மை, சமூக அமைப்புகளின் உதாசீனம், தோட்ட அதிகாரிகளின் அடாவடித்தனம், அரசியல் சுரண்டல்கள் என இவரது கவிதைகளின் பாடுபொருள் பலவாக விரிகின்றன. மொத்தம் 51 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

9615

தூது போ தென்றலே. மு.சிங்கராயர். யாழ்ப்பாணம்: தமிழ் மதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2000. (யாழ்ப்பாணம்: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

(6), 46 பக்கம், தகடு, விலை: ரூபா 65., அளவு: 22x14.5 சமீ.

மரபுவழிக் கவிதைகள் படைப்பதில் ஆர்வம் மிக்கவரான பாஷையூர் சிங்கராயரின் கவித்துவப் புலமையை இத்தூது இலக்கியம் பதிவுசெய்கின்றது. அழகான, இனிமையான, தெரிவுசெய்த சொற்களை அடுக்கிக் குதூகலத்துடன் குழந்தை யேசுவுக்குத் தூது விடும் கலைஞராக இங்கே தன்னை இனம்காட்டுகின்றார். ஈழத்துக் கிறிஸ்தவ தமிழிலக்கியத்திற்கு புதியதொரு வருகையாக இந்நூல் அமைகின்றது. 1938இல் பிறந்த சிங்கராயர், 20 வயதிலேயே இலக்கியத்துறையில் தடம் பதித்தவர். "பாசையூரானைப் பாடு" என்ற கவிதைத் தொகுதியை 1992இல் வழங்கிய இவரது மற்றுமொரு நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 203979).

9616

நகரவீதிகளில் நதிப்பிரவாகம்: கவிதைகள். ஷெல்லிதாசன். யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், நல்லூர்).

xvi, 100 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-13-8.

திருகோணமலைக் கவிஞர் ஷெல்லிதாசனின் 69 கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. 31வது ஜீவநதி வெளியீடாக இந்நூல் மலர்ந்துள்ளது. பந்தலுக்குள் பனிமழை, கண்ணில் ஒரு கங்கையாறு, நோட்டுக் களின் நோட்டம், கேளுங்கள் தரப்படும், மண் புதைத்த மனிதங்கள், குருதிப் புனல், அடிமையின் மோகம், பரம்பரையை ஏப்பமிடும் பாரம்பரியம், பொம் மலாட்டம், காவலாளியின் கலக்கம், விழித்துக்கொள், நாடிப் பிடித்த நைலோன் வலைகள், அர்த்தசாமத்து முனிகள், நீதிக்குச் சவால்விடும் நிர்வாணங்கள் என இன்னோரன்ன தலைப்புகளில் எமது மண்ணில் புரையோடிப்போயுள்ள சமூக அவலங்களை தன் கவிதைகளின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236157).

9617

நகுநயம் மறைத்தல். கு.றஜீபன். யாழ்ப்பாணம்: சித்தி விநாயகர் நூல்நிலையம், ஏழாலை மேற்கு, 1வது பதிப்பு, சித்திரை 2011. (யாழ்ப்பாணம்: சாய்ராம் பிரின்டர்ஸ்).

34 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12 சமீ.

கவிஞரின் ஐந்தாவது கவிதைத் தொகுதியாக வெளிவந்துள்ள நூல். தொல்காப்பியம்-பொருளதிகாரத்தில் வரும் மெய்ப்பாட்டியலில் அகத்திணையின் களவொழுக்கத்தில் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகள் எவை என்பதைத் தொல்காப்பியர் தெளிவாக்கும் வகையில் "புதுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல் நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு தகுமுறை நான்கே ஒன்றென மொழிப" என்று ஒரு சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார். ஒரு பெண்ணின் மனதில் காதல் உணர்வு தோன்றியபின் அதனை நாணத்தின் மேலீட்டால் அவள் மறைக்க முயல்தலையே நகுநயம் மறைத்தல் என்பர். இங்கு ரஜீபன் தொல்காப்பியரின் வழிமுறையில் தான் வாழும் காலச் சூழலில் ஏற்படும் நிகழ்வுகள் மாற்றங்கள் என்பவற்றை படம்பிடித்து சிருங்கார ரசத்தினூடு தன் கவிதைகளில் அள்ளி வழங்குகின்றார். இங்கு மரபிலக்கிய வகைமைக்கு புத்திலக்கிய வடிவத்தை இவர் வழங்குகின்றார்.

9618

நற்பண்பும் நபிமொழியும். அ.மு.அப்துல் கஹ்ஹார். கிண்ணியா: கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், 1வது பதிப்பு, டிசம்பர் 1992. (திருகோணமலை: விஸ்டம் அச்சகம்).

50 பக்கம், விலை: ரூபா 50.00, அளவு: 18x14.5 சமீ.

திருகோணமலை மாவட்டத்தின் சின்னக் கிண்ணியாவைப் பிறப்பிமாகக் கொண்டவர் அ.மு.அப்துல் கஹ்ஹார். 1954முதல் தொடர்ந்து எழுதிவரும் இவர் வள்ளல், அண்ணல்தாசன், ஆனாக்கானா, கிண்ணியூரான், மாஞ்சோலைக் கவிராயர், கிண்ணியா ஏ.எம்.ஏ. கஹ்ஹார் எனும் புனைபெயர்களில் தன் கவிதைப் படைப்புகளை ஊடகங்களில் வெளியிட்டவர். கிண்ணியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இலிகிதராகப் பணியாற்றும் இவரது இஸ்லாமிய சமயக் கருத்துக்களை பிரதிபலிக்கும் இஸ்லாமிய இலக்கியம் இதுவாகும்.

9619

நாணலின் கீதை. செம்பியன் செல்வன். யாழ்ப்பாணம்: எஸ்.முருகானந்தன், அபிராமி பதிப்பகம், 17, ஜும்மா பள்ளிவாசல் வீதி, 1வது பதிப்பு, ஜுன்1982. (யாழ்ப்பாணம்: அபிராமி அச்சகம், 17, ஜும்மா பள்ளிவாசல் வீதி).

xii, 42 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 17.5x12.5 சமீ.

அபிராமி பதிப்பகத்தின் முதல் வெளியீடாக ஆத்மாவின் இதயக் கதவுகளைத் தட்டியெழுப்பும் உள்ளொளி உணர்வூற்று உருவகச் சித்திரங்களாக நாணலின் கீதையின் படைப்புக்கள் அமைந்துள்ளன. தத்துவார்த்த சிந்தனைகளாக மாத்திரம் அமையாது, அழகிய அர்த்தபூர்வமான கவிதை நடையில் இவை எழுதப் பட்டுள்ளன. ஒரு கிளிஞ்சலின் கீதம், முள்ளும் மலரும், துடுப்பில்லாத படகு, வலைக்கண்ணிகள், முட்கள் ஒடியும் ஓசைகள், சந்நிதி குண்டம், சிரிப்புப் பிரசாதம், இருளின் ஒளி, புல்லின் பூக்கள், நாணலின் கீதை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69066).

9620

நான் மறைய வேண்டும். ப.விக்ரம் தீபநாதன். மன்னார்: அருவம் வெளியீடு, எழுதூர், 1வது பதிப்பு, வைகாசி 2009. (கொழும்பு 12: Happy Digital Centre, Digital Offset Press, No 75, 1/1 Sri Sumanatissa Mawathe).

66 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 26x17.5 சமீ., ISBN: 978-955-51688-1-0.

மன்னார் மாவட்டத்திலிருந்து வெளியாகிய கவிதைத் தொகுப்பு இது. உலகம் உருவானது இங்கே என்ற தலைப்புடன் தொடங்கி 39 தனித்துவமான கவிதை களைக் கொண்ட தொகுதியாக மலர்ந்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் வாழ்ந்து மறைந்த புலவர்களுள் ஒருவர் குப்பையர் என்ற மனுவேல் மொறாயஸ் (1833-1878). அவர் எழுதிய நாடகங்களுள் சந்தொம்மையார் வாசகப்பாவும் ஒன்று. இது மன்னார் மக்களால் பெரிதும் கவரப்பட்டது. அதிலுள்ள சில பாடல்களும் இத்தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளன. உலகின் சமூகப் பிரச்சினைகளை அவதானித்து அதன் காரணமான சமூகத்தைக் கண்டித்தும் எச்சரித்தும் பின் அதற்கான தீர்வினையும் இந்தக் கவிஞர் முன்வைக்கின்றார். நூலாசிரியர் ஒரு அக்யுபஞ்சர் வைத்தியராவார். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒழிந்திருக்கும் நான் என்ற அகந்தை மறைந்துவிடவேண்டும். அதுவே உலக விடுதலைக்கு

வழி என்கிறார் இக்கவிஞர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 209851).

9621

நிலவுப்பொழுதின் நினைவலைகள். வவுனியா சுகந்தினி (இயற்பெயர்: திருமதி சந்திரமோகன் சுகந்தினி). வவுனியா: வவுனியா தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2012. (வவுனியா: சன் பீம் கிரியேஷன்ஸ், இல.107, 1வது மாடி, பேருந்து நிலையக் கட்டடத் தொகுதி).

54 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ.

வவுனியா வெளிக்குளத்தைச் சேர்ந்த சுகந்தினி தனது அனுபவத்தையும் கற்பனையையும் இணைத்து இக்கன்னிக் கவிதைத் தொகுதியை வழங்கியுள்ளார். தாய், அன்பு, இயற்கை, காதல், உறவு, போதைப்பொருள், சீதனம், சேமிப்பு, என்று 27 தலைப்புகளில் இவரது கவிதைகள் விரிகின்றன. என் அன்னையே என்ற கவிதையில் தாய்ப்பாசத்தைக் கொட்டித் தீர்க்கிறார். பெண்ணைப்பற்றிய கவிதையில் காதல் கைகூடாவிட்டாலும், கணவன் கைவிட்டாலும் கல்வி கைகொடுக்கும் என்கிறார். போதைப்பொருள் பாவனைக்கு எதிரான கவிதையில் குடியைக்கெடுக்கும் குடியைக் கைவிடுங்கள் என்று ஒட்டுமொத்த பெண்ணினத்தின் சார்பாகவும் ஆண்களிடம் வேண்டுகோள் விடுகின்றார்.

9622

நிறுத்திய சிந்துகள். சுசி தமிழினி. (இயற்பெயர்: நா.யோகராஜா). யாழ்ப்பாணம்: நா.யோகராஜா, சிவமஹால், மாலி சந்தி, கரவெட்டி, 1வது பதிப்பு, ஜூலை 1982. (யாழ்ப்பாணம்: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி-கரவெட்டி).

40 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 18x12.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகத்துறை இறுதி வருட மாணவரான நா.யோகராஜா, வடமராட்சியின் கரவெட்டியைச் சேர்ந்தவர். புதுமைக் கருத்துக்களையும், புதிய உலகத்தையும் அவாவிநிற்கும் கிருதயுகக் கவிஞர். நிறுத்திய சிந்துகள் சமகால ஈழத்துத் தமிழ்ச் சமூகத்தை நன்கு பிரதிபலிப்பதாக அமைகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85108).

9623

நிஜங்களின் நிழல்கள். நெடுந்தீவு லக்ஸ்மன். (இயற்பெயர்: நா.இலட்சுமணராசா). யாழ்ப்பாணம்: நா.இலட்சுமணராசா, 26, சிவன் வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆனி 2009. (யாழ்ப்பாணம்: கங்கை பிறின்டேர்ஸ், 781, சிவலிங்கப் புளியடி, கே.கே.எஸ் வீதி).

xi, 57 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 20.5x14.5 சமீ.

நெடுந்தீவு லக்ஸ்மனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இது. உதயன், சஞ்சீவி, தினக்குரல், வீரகேசரி, சுடரொளி ஆகிய பத்திரிகைகளிலும் சிறுசஞ்சிகைகளிலும் அவ்வப்போது வெளியாகிய இவரது கவிதைகளின் தேர்ந்த தொகுப்பு இதுவாகும்.

(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205066).

9624

நெஞ்சம் கனிந்தது. திமிலைக் கண்ணன். மட்டக்களப்பு: இராஜம் பிரசுரம், திமிலைத் தீவு, 1வது பதிப்பு, வைகாசி 1971. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

32 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 19x12.5 சமீ.

திமிலைக்கண்ணன் இறையருள் பற்றிப்பாடும் கிழக்கிலங்கையின் ஆன்மீகக் கவிஞராக அறிமுகமானவர். இவரது கவிதைகள் ஆத்மஜோதி, விவேகி உள்ளிட்ட ஈழத்துச் சிறுசஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. இக்கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாகவும் ஆசிரியரின் முதலாவது நூலாகவும் இது வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 8345).

9625

நெஞ்சின் நெருடல்கள். சி.பற்குணம். சென்னை 600002: தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சவுத் ஏஷியன் புக்ஸ், 6, தாயார் சாஹிப் இரண்டாவது சந்து, 1வது பதிப்பு, ஜனவரி 1997. (சென்னை 600005: R.K.L.Printers).

72 பக்கம், விலை: இந்திய ரூபா 20., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-9476-00-9.

இலக்கியவாதியும் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களப் பணிப்பாளருமான அமரர் சி.பற்குணத்தின் கவிதைகள் இவை. அவர் 1.4.1996இல் அமரத்துவமடைந்த பின்னர் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. விநாயகர் துதி, விண்பா விண்ணப்பம், ஒளிவளர் விளக்கே, கந்தனுக்கு வாழ்த்து, மமதையில் உவகை போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. மனிதநேயமற்ற கொடுமைகளினால்- பொருளாதார, ஏற்றத் தாழ்வுகளினால்- சாதி வேறுபாடுகளினால்- சமூக, அரசியல் போராட்டங்களினால் மக்கள் அனுபவித்த துன்பங்களை நேரடியாகக் கண்டவர். ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களில் இளம்பிராயத்தில் கலந்துகொண்டவர். இத்தகைய அனுபவப் பின்னணியே இவரது கவிதைகளுக்குப் பகைப்புலமாக அமைகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122505).

9626

நெருப்பு மழை. மு.வே.யோ.வாஞ்சிநாதன். யாழ்ப்பாணம்: தமிழ்த் தாய் பதிப்பகம், 1வது பதிப்பு, ஆடி 1992. (யாழ்ப்பாணம்: தமிழ்த் தாய் பதிப்பகம்).

x, 152 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 19.5x13.5 சமீ.

கவிஞர் வாஞ்சிநாதன் இயற்றிய 81 கவிதைகளின் தொகுப்பு. விடுதலைப் போராட்டம் சார்ந்த இக்கவிதைகள் இளையோர் மனதில் விடுதலைக்கான

பொறியை பதியம் வைக்கின்றன. இந்தியச் சிறையில் இருந்தவேளையில் கவிஞர் எழுதிய கடன் என்ற கவிதையுடன் இத்தொகுதி தொடங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87134).

9627

பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக்கச்சேரி. அல்லை க.வ.ஆறுமுகம். (புனைபெயர்: ஈழமாஜினி). யாழ்ப்பாணம்: பண்டிதர் அல்லை க.வ. ஆறுமுகம், முதலாம் வட்டாரம், அல்லைப்பிட்டி, 1வது பதிப்பு, டிசம்பர் 1993. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

xvi, 59 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக் கச்சேரி, சமைப்போரும் சுவைப்போரும், வெந்நீரும் நெருப்பை அவிக்கும், என் செயலும் இறைவன் செயலும், புலமையின் பள்ளி பெண், கரும்பு தின்னக் கூலி: கைவழியக் கேட்கின்றார், தவிக்கிறது தார்மீகம் சிரிக்கிறது மனச்சாட்சி, பெட்டி உரசியும் குச்சி தீப்பற்றும், சீதனச் சாத்தான், ஏனோ முடியவில்லை என்பனபோன்ற தலைப்புகளில் அமைந்த கவிதைகளின் தொகுப்பு இது. 70 வயதைத்தாண்டியும் இளமைச் சுறுசுறுப்புடன் இயங்கிவரும் முதிய இளைஞரான ஆசிரியரின் முதலாவது கவிதைத் தொகுதி "அடைப்புக்குறிகள்" என்ற பெயரில் 1987இல் வெளிவந்தது. இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியாகும். கவிஞரின் இலக்கியப் பணியைப் பாராட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினர் 1991இல் பத்தாயிரம் ரூபாவை ஆசிரியருக்கு அன்பளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத்தொகுதியிலுள்ள கவிஞரின் கவிதைகள் 1987க்குப்பின்னர் முரசொலி, திசை, சஞ்சீவி ஆகிய பத்திரிகைகளில் எழுதப் பெற்றவையாகும். தலைப்புக்கவிதை பணத்துக்குப் பெறப்படும் பொருளுக்குள்ள மவுசு அதே பொருள் இலவசமாக வழங்கப்படும் போது இருப்பதில்லை என்ற தொனிப்பொருளில் அமைந்துள்ளது. பெரும்பாலான கவிதைகள் கவிஞர் கண்டவற்றையும் செய்திகளாகக் கேட்ட வற்றையும் செய்தி விமர்சனமாகக் கவிதைப்பாணியில் வடித்துள்ளார். "நாட்டில் நடப்பதாய் நான் கேள்விப் பட்டதனை/நம்பாமல் நானே சென் றுண்மையென்று கண்டதையே/உள்ளதை உள்ளபடி ஒலிக்கும் முரசொலிக்கு/செய்தி விமர்சனம் போல் செய்யுளில் அனுப்பிவைத்தேன்" என்று இதனை எங்கள் பெண்கள் துணிந்துவிட்டார் என்ற கவிதையில் அவரே குறிப்பிட்டுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 101982).

9628

பனைமரக் காடு. ஈழபாரதி (இயற்பெயர்: எட்வேட் நிக்சன்). சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2 சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2014. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ்).

62 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81322-35-2.

இலங்கையில் நெடுந்தீவைச்சேர்ந்தவர் ஈழபாரதி. தற்போது தமிழகத்தில் புலம் பெயர்ந்து வாழ்கிறார். புதுக்கோட்டை தனியார் தொழிற்கல்வி நிலையமொன்றில் ஆசிரியராகப் பணியாற்றும் இவர் எழுதி, தமிழகத்தின் சிற்றிதழ்களான இனிய நந்தவனம், ஏழைதாசன், மின்மினி ஆகியவற்றில் பிரசுரமான ஹைக்கூ பாணியில் அமைந்த கவிதைகளின் தொகுப்பு இந்நூலாகும். பக்கங்கள் தோறும் பொருத்தமான படங்களுடன் கவர்ச்சிகரமாக வடிவமைப்புக் கண்டுள்ளது. 20.8.2014 அன்று ஆசிரியரின் திருமண விழாவன்று இந்நூலும் வெளியிடப்பெற்றுள்ளது.

9629

பாதை புதிது: கவிதைகள். மு.சடாட்சரன். கல்முனை: நவீனன் வெளியீடு, 69 D, பிரதான வீதி, பெரிய நீலாவணை 01, 1வது பதிப்பு, நவம்பர் 2012. (சாய்ந்தமருது: டிசைன் வேர்ள்ட் பிரின்டர்ஸ்).

(24), 71 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44061-0-0.

அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணைப் பகுதியில் வாழும் கவிஞர் சடாட்சரனின் கவிதைத் தொகுதி. இளைப்பாறிய பாடசாலை அதிபரான இவரது 42 கவிதைகள் கொண்ட இத்தொகுதியில் பாடுபொருட்களாக விலங்கினம், இயற்கை, நிலம், சூழல் போன்ற சம்பிரதாயமான விடயங்கள் மாத்திரமன்றி ரயில் வாழ்க்கையின் இனிமை, மழைக்காலம், போன்ற விடயங்களும் இவரது பார்வைக்கு எட்டுகின்றன. கவிதைகள் அனைத்தும் கட்டுக்கோப்புடன் சொற் செட்டும் நீரோடை போன்ற ஆற்றொழுக்கும் செயலின் விளைவை ஈற்றில் காட்டியும் கவித்துவமாய் முடிகின்றன. ஏற்கெனவே மேட்டுநிலம் என்ற இவரது சிறுகதைத்தொகுதி வெளிவந்து பாராட்டைப்பெற்றது. சிறந்த கவிதைத் தொகுதிக்கான 2012ஆம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய விருது, இந்நூலுக்கு 11.9.2013 அன்று கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில்வைத்து வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

9630

பாரதி பாடல்கள் (க.பொ.த. சா.த. பரீட்சை 1962-1964) உரை விளக்கம். வை.ஏ.மூர்த்தி. யாழ்ப்பாணம்: சி.ச.குமாரசுவாமி, சண்முகநாதன் புத்தகசாலை, 2வது பதிப்பு, பெப்ரவரி 1962, 1வது பதிப்பு. ஜனவரி 1961. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).

(6), 72 பக்கம், விலை: சதம் 90.,அளவு: 18.5x12.5 சமீ.

சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாரததேசம் பாடல்கள், நடிப்புச் சுதேசிகள் பாடல்கள், சுதந்திரப் பெருமை பாடல்கள், சுதந்திரதேவியின் துதி பாடல்கள், புதுமைப்பெண் பாடல்கள், தொழில் பாடல்கள், தமிழ்த்தாய் பாடல்கள், தமிழ் பாடல்கள், மூன்று காதல் பாடல்கள், வெண்ணிலாவே பாடல்கள், முரசு பாடல்கள் என்பவற்றுடன் அவற்றக்கான உரைவிளக்கமும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87006).

9631

பூபாளத்துப் பூக்கள். மானிலா. வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஜனவரி 2001. (வவுனியா: விஜயலட்சுமி அச்சகம், பண்டாரிக்குளம்).

xiii, 40 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 18x13 சமீ.

யாழ்ப்பாணத்திலிருந்து 1988 முதல் எழுதத் தொடங்கியவர் மானிலா. காலக் குயில் என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொகுதியை முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்டவர். தொடரும் ஓர் காத்திருப்பு, புது வாழ்வைத் தேடி, மௌனம், இதயத்தைத் தேடி, என் சுவாசமே, எப்போதும் இப்படித்தான், விடியல்கள் உன் வசம் போன்ற இன்னோரன்ன 29 தலைப்புகளில் இக்கவிதைத் தொகுப்பு விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 197166).

9632

பேசுர்க: கவிதைகள். கு.றஜீபன். ஏழாலை: சித்தி விநாயகர் நூல் நிலையம், 1வது பதிப்பு, ஜனவரி 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

53 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 17.5x12 சமீ.

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர். சைவ சித்தாந்தத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றவர். கலாசார உத்தியோகத்தராகப் பணியாற்றுகின்றார். பத்தாண்டுகளுக்கும் மேலாக கவிதைகள் எழுதிவருகின்றார். 2000இல் இவரது முதலாவது கவிதை நூல் மௌனத் துயில் என்ற தலைப்பில் வெளிவந்தது. தொடர்ந்து வலிகளைத் தாங்கி (2004), ஒரு நதியின் தேடல் (2006) ஆகியவை வெளிவந்தன. இது இவரது நான்காவது நூலாகும். 30 கவிதைகளைக் கொண்ட கையடக்க நூலாக இது வெளிவந்துள்ளது.

9633

மண்ணில் வேரோடிய மனசோடு: கவிதைத் தொகுதி. அப்துல் காதர் அஸீம் (புனைபெயர்: யாழ். அஸீம்). கொழும்பு 10: ஸூபைதா பதிப்பகம், 228/1, ஜூம்ஆ மஸ்ஜித் வீதி, மாளிகாவத்தை, 1வது பதிப்பு, நவம்பர் 2012. (தெகிவளை: ஏ.ஜே. பிரின்ட்ஸ், இல. 44, ஸ்டேஷன் வீதி).

xxvii, 125 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-54621-0-5.

கலாபூஷணம் அ.கா.அஸீம், தமிழ் கதைஞர் வட்டத்தின் சிறந்த சிறுகதைக்கான விருதினையும் முன்னர் பெற்றவர். வீச்சும் வீரியமும், சொல்லாட்சியும் மிக்க இவரது கவிதைகளின் மூலம் ஈழத்துக் கவிதை உலகிலும் தற்போது தடம்பதித் துள்ளார். இவரது கவிதைகளில் இதயத்தைத் தொடும் வார்த்தைப் பிரயோகங்கள், சொற்சிக்கனம், சொற்திரட்டு, இறுக்கம் என்பனவற்றின் திருப்திகரமான பிரயோகங்களும் காணப்படுகின்றன. இதயத்தில் என்னைச் சுமந்தவளுக்காக என்ற தலைப்பில் தொடங்கி உரத்துப் பேச ஒரு ஒட்டகம் இல்லையே என்ற

இறுதிக் கவிதை வரையிலுமான 23 கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அகதி வாழ்வின் அத்தனை துயரங்களையும் சுமைகளையும் இக்கவிதைகள் தருகின்றன.

9634

மயான காண்டம்: பிந்திய பதிப்பு. *கிரிஷாந், பிரியாந்தி, கிருபா, லிங்கேஸ். யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன், உடுப்பிட்டி, 1வது பதிப்பு, மே 2014. (உடுப்பிட்டி: ஆகாயம் பதிப்பகம்).*

54 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 19x12 *சமீ.,* ISBN: 978-955-4900-04-2.

ஆகாயம் பதிப்பகத்தின் முதல் வெளியீடு. சித்தாந்தன், தானா விஷ்ணு, யாத்ரிகன் ஆகியோரின் தொகுப்பு முயற்சியில் உருவான கவிதைத் தொகுப்பு. ஈழத்தமிழர்களின் வாழ்க்கையில் மையமாக இருந்தபோர் ஓய்ந்து துயரத்தையூட்டும் நிகழ்வுகளாக எஞ்சியிருக்கின்ற சூழலில் கடந்த காலத்தின் எரியும் வலியைப் பேசுகின்ற கவிதைக் குரல்கள் இவை. யுத்தம் ஒரு புனித போர்வையினால் சுற்றப்பட்டு நம்பிக்கைகளாலும் நிச்சயங்களாலும் வடிவமைக்கப்பட்டிருந்த காலத்தின் நினைவுகள் நம்பிக்கைகளாகவோ நிச்சயங்களாகவோ அமையாது, அவநம்பிக்கைகளினதும் நிச்சயமின்மைகளினதும் பெருவெளியாக எஞ்சியிருப் பதை இக்கவிதைகள் பதிவுசெய்கின்றன. யுத்தகாலத்தில் புறம் நின்ற மனிதர்களின் குரல்கள் உள் நின்ற மனிதர்களின் குரல்களை தீவிரமாக எதிர்ப்பதையும் இக் கவிதைகள் பதிவுசெய்கின்றன. உள்-புறநிலைப் பார்வைகளின் கலப்புத் தொகுப்பாக இக்கவிதைத் தொகுதியை குறிப்பிடலாம்.

9635

மரணம் வாழ்வின் முடிவல்ல: அகிலன் கவிதைகள். *சார்ள்ஸ் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: வசந்தம் பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, மே 1990. (யாழ்ப்பாணம்: புதிய சித்திரா பதிப்பகம், 664, ஆஸ்பத்திரி வீதி).*

40 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x10.5 *சமீ.*

5.5.1970 அன்று பிறந்த அகிலன் திருச்செல்வம் 10.5.1989 அன்று இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் கொலைசெய்யப்பட்டார். அவரது மரணத்தின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது நண்பர்களால் தொகுக்கப்பெற்ற அகிலனின் கவிதை களைக் கொண்டதாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. என் வித்தியாசமான வளுக்கு, எங்கள் மரணம், நீ, நாளையாவது நிரந்தரமாகட்டும், மீண்டும் நான் உயிர்ப்பேன், இனி அரும்பமுடியாத ஒரு பூமரம், மரணம் வாழ்வின் முடிவல்ல, எனது தனிமையை நீக்குவாயா, நினைவும் கனவும் இல்லாத ஒரு நிலையில், என்காதலியே ஆகிய தலைப்புகளில் இக்கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 81765).

9636

மாண்புறும் மாநபி. பி.ரி.அஸீஸ். கிண்ணியா: பாத்திமா ருஷ்தா பதிப்பகம், பெரியதும்முனை, கிண்ணியா 7, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (கிண்ணியா: பாத்திமா ருஷ்தா பதிப்பகம்).

81 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20x14.5 சமீ.

இக்கவிதைத் தொகுதியின் ஆசிரியர் கிண்ணியாவைச் சேர்ந்த தேசகீர்த்தி பி.ரி. அஸீஸ் அவர்களாவார். இந்நூல் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி, அவர்களது மான்மியங்கள் பற்றிப் புகழ்பாடும் கவிதைகளால் ஆனது. பெருமானார் (ஸல்)அவர்கள் பேணிய வாழ்வு பற்றியும், அன்னாரின் மான்மியம் பற்றியும் இக்கவிதைகள் புகழ்பாடுகின்றன.

9637

முதல் கனவு. ம.பகீரதன். வவுனியா: மனோகரன் பகீரதன், மகாறம்பைக்குளம், 1வது பதிப்பு, வைகாசி 2011. (வவுனியா: சூரியா அச்சகம்).

99 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய உயர்தர வகுப்பின் கலைத்துறை மாணவனான ம.பகிரதன் தான் கடந்த மூன்றாண்டுகளாக எழுதிச் சேர்த்த கவிதைகளை இந்நூலின் வழியாக ஈழத்து வாசகரிடம் சேர்ப்பித்துள்ளார். இது இவரது முதல் நூல் முயற்சியாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218777).

9638

மூங்கில் கூடை: கவிதைகள். கோ.கிசோகுமார். கொழும்பு: மலையகக் கல்வி அபிவிருத்தி மன்றம், இணை வெளியீடு, தலவாக்கல்லை: தலவாக்கலை தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 11: அறிவொளி கிரபிக்ஸ், 189, செட்டியார் தெரு).

xiv, 77 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 22.5x14.5 சமீ., ISBN: 978-955-97102-4-0.

மலையக இளம் படைப்பாளியான கிசோகுமார், நுவரெலிய டிரைட்டன் தோட்டப் பாடசாலையிலும், கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்திலும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் டிப்ளோமாக் கல்வியை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பெற்ற பின்னர் நுவரெலிய மெராயா தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். மூங்கில் கூடை, மலையக மக்களின் வாழ்வியலை பிரதிபலிக்கும் கவிதைகளைக் கொண்டது. மலையக மக்களின் வாழ்வு நிலை, வறுமை, சமூக ஊழல்கள், சிறுவர் உழைப்பு, உலகமயமாதல், தாய்ப்பாசம், காதல் என்று அவரது பார்வை விரிகின்றது.

9639

வருடிய இளமைக் காற்று: கவிதைத் தொகுப்பு. J.R.மயூரன். மன்னார்: மன்னார் தமிழ்ச் சங்கம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2010. (மன்னார்: ஸ்கை அச்சகம்).

xxii, 106 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 230., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-52528-0-5.

மன்னார் சாவற்கட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் து.சு.மயூரன். இவரது 75 தேர்ந்த பலவினக் கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. புகழ் உமக்கே, யாரவள், தாயின் புகழ் தரணி அறிய, வருடிய இளமைக்காற்று, நட்பு, காதல் துடிப்பு, உன்னையே நம்பி, காதல் துளிகளில் இருந்து, இறப்பில்லா சமாதானம், வாழ்க்கையில் எல்லாம் வரும், இசையினில் வாழ்வு, போதும் பெண்ணே என இன்னோரன்ன தலைப்புகளில் இக்கவிதைகள் தொடர்கின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 216743).

9640

வானம் விழுந்த நெல்வயல். கை.சரவணன். யாழ்ப்பாணம்: கைசன் வெளியீட்டகம், அளவெட்டி மத்தி, அளவெட்டி, 1வது பதிப்பு, புரட்டாதி 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், இல.424, காங்கேசன்துறை வீதி).

vi, 78 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54659-0-8.

கை.சரவணன் தொன்னூறுகளின் பிற்பகுதியில் எழுதத் தொடங்கியவர். இக் கவிதைத் தொகுதியே இவரது முதலாவது கவிதைத் தொகுதியாகும். இவரது கவிதைகள் காலத்தின் இயக்கத்தினையும் அதன் நிலைப் புள்ளியறுந்த மனத்தையும் பாடுபொருளாகக் கொண்டவை. போர் மறைத்துப்போன சாதாரண மனிதர்களின் மறைப்பேதுமற்ற வாழ்வினையும் சமூக அசைவியக்கத்தினையும் இவர் படிமங் களாகக் காட்சிப்படுத்துகின்றார். போருக்குப் பின்னான உடனடிப் படைப்புகள் என்ற வகையில் இக்கவிதைத் தொகுதி வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 228957).

9641

விபுலாநந்தக் கவிமலர். அருள் செல்வநாயகம். (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப் பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

xxiii, 128 பக்கம், தகடுகள், விலை: ரூபா 3.25, அளவு: 21.5x14 சமீ.

நூலாசிரியர் மட்டக்களப்பு குருமண்வெளியைச் சேர்ந்தவர். விபுலாநந்த இலக்கியம் என்ற ஒரு இலக்கியத்தை இனம்கண்டு, சுவாமி விபுலாநந்தர் பற்றிய பல நூல்களையும், விபுலாநந்தரின் கையெழுத்துப் பிரதியாகவிருந்த பல கட்டுரை, கவிதைகளையும் தேடித் தொகுத்துத் தனி நூல்களாக வெளியிட்டவர். அவ் வகையில் இந்நூல் சுவாமி விபுலாநந்தரின் நாநலங் கனிந்த, உணர்ச்சியின் உறைவிடமான, வளமார்ந்த இலக்கியச் சுவைமிக்க கவிதைகளைக் கோவை செய்து விபுலாநந்த இலக்கியத்தின் ஆறாவது தொகுதியாக வெளியிட்டுள்ளார். அடிகளார் ஒப்பற்ற கவிஞர். உலக முதல்வனான இறைவனை, தெய்வங்கள்

உறையும் கோயில்களை, மனதில் இடம்கொண்ட பெரியார்களை, பரமஹம் சதேவரின் அருள்வாக்குகளை என்று பல்வேறு பாடல்களையும் பிற மொழிப் பாடல்களின் மொழிபெயர்ப்புகளையும் இவர் நமக்கு வழங்கியுள்ளார். இவை அனைத்தையும் நான்கு பகுதிகளாக வகுத்து இந்நூலில் வழங்கியுள்ளார். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87168).

9642

வெண்பனிச் சுவடுகள்: கவிதைத் தொகுதி. நவீனன் (இயற்பெயர்: வி.ஐங்கரன்). ரஷ்யா: வைகறை வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 45, Smolensk, 214019, 1வது பதிப்பு, மார்கழி 1998. (அச்சக விபரம் தரப்படவில்லை).

100 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14 சமீ.

சார்ள்ஸ் என்ற புனைபெயரில் தன் பள்ளிக்காலம் முதல் கவிதைத்தளத்தில் பயணித்துவரும் ஐங்கரன், நவீனன் என்ற புனைபெயரிலும் கவிதைகள் எழுதி வருபவர். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அங்கு கல்வி கற்ற வேளையில் தொடங்கி அணையாத அறிவாலயம், விடியலின் கானம், இன்னமும் இருட்டினிலே, உறக்கம் தேடும் உலகிற்காய் போன்ற கவிதைத் தொகுதிகளை வழங்கியவர். தற்போது அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் மருத்துவத்துறையில் பணியாற்றுகின்றார். இத்தொகுதியில் ஒரு காலை ஒரு மடல் விரிப்பு, வெண்பனிச் சுவடுகள், மௌனித்த மாஸ்கோவின் தெருக்கள், விலங்கு களை முறித்தெழுந்த மாந்தர்களாய், விலைபோகும் வீரத்தின் விளைநிலமே, உள்மன யாத்திரை, விழித்துக்கொள்ளும் அவள் முகம், கேள்விக்குறியல்ல முற்றுப்புள்ளியே, மனவிதைப்பு, மானிட எச்சத்தின் மரணிப்பில் எவருக்குச் சுதந்திரம், நிகழ்கால வேண்டுதல், உயிர்த்தெழுவீர் உரிமை மீட்கவே, மலரிடை வெளியும் மனமும், யுகப்பிரவேசம், விடியாத விடியல்கள், இதய முகாரி, விழுதுகளுக்கு விதையுண்டு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 17 புதுக் கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்துள்ளன.

9643

வைகை. வை.க.தவமணிதாசன். யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன் துறை வீதி, 1வது பதிப்பு, மே 1994. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம்).

viii, 64 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 21.5x14.5 சமீ.

எம்மூர், என்னாலே, பூமாது கருவுற்று, வேள்விப் பொங்கல், தை இருபத்தாறு, முழுப்பிழை, வைகை, பௌத்த தர்மம், மரண வாசல்கள், விற்பனைக்குண்டு, எம்மண் முகாம், ஔவை சிலை, கிளாலியில், விறகுச்சுமை போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் எழுதப்பெற்ற கவிதைகள் இந்நூலை அழகுபடுத்துகின்றன. இக்கவிதைத் தொகுதியில் விஞ்ஞானக் கருத்துக்களை உட்பொருளாகக் கொண்ட சில கவிதைகள் உள்ளன. எயிட்ஸ் நோய் பற்றி ஓர் போர்க்கள நிலையை வைத்துக் கவிதை செய்துள்ளார். ஔவையார் அணுக்கொள்கை ஒரு புதிய நோக்கிலமைந்த கவிதையாக இருக்கின்றது. சமூக சமத்துவம் பற்றிக் குறிப்பிடும்போது, "சமத்து

வத்தைப் பிளாவினிலே வளர்த்தாய் வாழி" என்னும் அடிகள் அக்கருத்தை உள்ளத்தில் ஆழ ஊன்றி விதைக்கின்றது. 1974 மாசியில் எழுதிய அசல் அரிசி, நாம் பட்ட உணவுப் பஞ்சத்தை நினைவூட்டுகின்றது. கவிஞர் கந்தசாமி தவமணி தாசன் நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை, வேலணை மத்திய மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். குண்டசாலை விவசாயப் பயிற்சிக் கல்லூரியில் பயின்றவர். விஞ்ஞானப் பயிற்சி பெற்ற இவர் அநுராதபுர மாவட்டத்தில் ஆசிரியப் பணியைத் தொடங்கியவர். பின்னாளில் யாழ். இந்துக் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணிபுரிகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118686).

894.8(2) தமிழ் நாடகங்கள்

9644

இலட்சியத்தை அடைதல். அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை. யாழ்ப்பாணம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, 30, கடைச்சாமி வீதி, நீராவியடி, 1வது பதிப்பு, 2013. (யாழ்ப் பாணம்: கங்கை பிரின்டர்ஸ், 781, சிவலிங்கப்புளியடி, காங்கேசன்துறை வீதி).

viii, 148 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

பாடசாலைகளில் நாடகத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய ஐந்து நாடகங்களையும், 7 கட்டுரைகளையும், இலட்சியத்தை அடைதல் என்ற தலைப்பிலான ஒரு சிறுகதை யினையும் உள்ளடக்கிய தொகுப்பு இது. ஆசிரியரின் 28ஆவது நூல் இதுவாகும். நாடகங்கள் யாழ்ப்பாணத்துப் பிராந்திய பேச்சு வழக்கில் அமைந்துள்ளன. சமூகப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டும் கருப்பொருளைக் கொண்டவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233162).

9645

சதியா விதியா? (சமூக நாடகம்). க.கயிலாயநாதன். வட்டுக்கோட்டை: க.கயிலாய நாதன், கந்த கோட்டம், 1வது பதிப்பு, 1986. (காரைநகர்: பாலா அச்சகம்).

(5), 88 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

க.கயிலாயநாதன் (1922-1993) ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க தொரு படைப்பாளியாக வாழ்ந்து மறைந்தவர். வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வராகவும், இலங்கைக் கல்விச் சேவையில் பாடசாலை அதிபராகவும், பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கில விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். ஷேக்ஸ்பியரின் அவலச்சுவை நாடகமான ஒதெல்லொ (Othello) என்ற நாடகக் கதையைக் கருவாகக் கொண்டு, தமிழ் மரபிற்கும் தற்காலத்திற்கும் ஏற்றவாறு மாற்றியமைத்து இலக்கியச் செழுமையுடன் இந்நாடகத்தை எழுதியுள்ளார்.

(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 116082).

9646

செங்கடல். இன்பராஜன். யாழ்ப்பாணம்: நாடகப் பிரதியாக்கப் பகுதி, திருமறைக் கலாமன்றம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 58 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 955-9262-03-3.

கிறிஸ்துவ இறையியல் கருத்துக்களைப் பொதிந்து வைத்துள்ள இந்த வசன நாடகம் பைபிள் கதைகளின் சில சம்பவங்களைக் கருவாகக் கொண்டமைந்தது. நூலுக்கான சித்திரங்களை எஸ்.டி.சாமி வரைந்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 105168).

9647

நாளை நல்ல நாள்: வானொலி நாடகத்தொகுப்பு. பா.சிவபாலன். யாழ்ப்பாணம்: பா.சிவபாலன், 214/4சி, இராமநாதன் வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (யாழ்ப் பாணம்: ரெக்னொவா அச்சகம்).

x, 110 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஒலிபரப்பப்பட்ட எட்டு வானொலி நாடகங்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. நாளை நல்ல நாள், கோலங்கள், அவசரக் காதல், காணி நிலம் வேண்டும், கிட்டாதாயின் வெட்டென மற, பேர் சொல்ல வேண்டும், தானாடாவிட்டாலும், கல்யாணிக்குக் கல்யாணம் ஆகிய தலைப்புகளில் இந்நாடகங்கள் வெளிவந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131400).

9648

படிப்பினை. நூல் வெளியீட்டுக் குழு. வவுனியா: அரங்காலயா பண்பாட்டுக் குழு, 1வது பதிப்பு, கார்த்திகை 2002. (வவுனியா: Lotusse Printers, 358, மன்னார் வீதி).

x, 45 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 95., அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் போர்ச் சூழலின் பாதிப்பினால் குழந்தைகளிடையேயும் இளை யோரிடையேயும் ஏற்படும் மன அழுத்தங்களினால் ஏற்படும் மன அவலத்திலிருந்து மீட்டெடுக்க அரங்கியலை துணையாகக் கொண்டு பல நாடக, பண்பாட்டுக் குழுக்கள் உருவாக்கப்பட்டு இளையோர்களிடையே நாடகங்களை பயிற்றுவித்து மேயேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். வடகிழக்கு மாகாண கல்வித்திணைக் களமும் கடந்த காலங்களில் ஆரோக்கியமான நாடகப் போட்டிகளை நடாத்தி இளையோரை ஊக்குவித்து வந்தது. வடக்கில் இயங்கிய அவ்வமைப்புகளில் ஒன்றான அரங்காலயா பண்பாட்டுக் குழுவினரின் நான்கு நாடகங்களை இந் நூலில் அவர்களே தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். ஒற்றுமையே எங்கள் வாழ்வு, முயன்று பார்ப்போம், திருந்துவதற்கு இடம்கொடுப்போம், குட்டி முயலார் ஆகிய

தலைப்புகளில் எழுதப்பட்ட நான்கு நாடகங்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 133551).

9649

பொறுப்பனோ யான். ம.ந.கடம்பேசுவரன். சுன்னாகம்: அவைக்காற்றுகைக் குழு, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2004. (யாழ்ப்பாணம்: ஸ்ரீராம் பிறின்ரேர்ஸ், 250, பலாலி வீதி, கந்தர்மடம்).

vii, 256 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x15 சமீ.

கலைவாரிதி பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் அவர்கள், கலித்தொகை, புற நானூறு போன்ற சங்ககால இலக்கியங்களின் பாடல்களைச் சிந்தனைக் குரியதாக்கியும், பின்புலமாகக் கொண்டும் சீரிய சிந்தனைப் பொருளை கருத்திற் கொண்டும் நாடகமாக்கி அவ்விலக்கியங்களின் தூய்மை சிறிதேனும் சிதை வடையாத வண்ணம் தனது கற்பனை வளத்தினால் புதுப்பொலிவைக் கொடுத்து உருவாக்கியுள்ளார். அவரது படைப்புகளான "பொறுப்பனோ யான்" உள்ளிட்ட நான்கு நாடகங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 158856).

9650

பொன்னாடை. ஜுனைதா ஷெரீப். (இயற்பெயர்: கே.எம்.எம்.ஷெரீப்). காத்தான்குடி: கே.எம்.எம்.ஷெரீப், 1வது பதிப்பு, மே 1988. (மட்டக்களப்பு: புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்).

153 பக்கம், விலை: ரூபா 23.00, அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 955-95096.

இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்ட வானொலி நாடகத் தொகுப்பு. சாஹித்திய மண்டலப் பரிசுபெற்றநூல். வானொலி மேடை நாடகங்கள் எழுதுவது எப்படி என்ற கட்டுரையை முதலாவது இயலில் வழங்கி, அடிமை, சக்கரம் சுழல்கிறது, பொன்னாடை, இப்படியும் மனிதர்கள், கனவுகள் கலைக்கப் படுகின்றன, மிச்சம் ஒரு எச்சம், வழிகாட்டி, பெரிய மனிதன், கபுறு வெட்டி ஹயாத்து ஆகிய ஒன்பது மேடை நாடகங்களைத் தொடர்ந்து இடம்பெறச் செய்துள்ளார். 1967 முதல் நூற்றுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி இலங்கை வானொலியில் ஒலிபரப்பியவர் ஜுனைதா ஷெரீப். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84114).

894.8(3) தமிழ்க்கவிதை/இசை நாடகங்கள்-காவியங்கள்

9651

அன்பு மொழி. மனோன்மணி வரதராசா. கனடா: மனோன்மணி வரதராசா, 1வது பதிப்பு, 2011. (கனடா: கிரபிக் லாண்ட், ரொரன்டோ).

68 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

இந்நூலிலுள்ள கவிதைகள் அன்னை தெரெசாவின் வாழ்க்கையை சிறு காவியமாகப் பாடுகின்றன. அன்னை திரேசா பிறப்பு, அக்னெசு வாழ்ந்த வீடு, தந்தையார் மரணம், அக்னெசுவின் துறவு, புகையிரதப் பயணம், கல்கத்தா நகரம், அக்கினெசு திரேசாவாக மாறிய கதை, ஆசிரிய சேவையில் அன்னை திரேசா, 1948 மார்கழி மாதம், இரண்டாம் உலகப் போர், ஊரடங்கு நேரம், வைத்தியசாலையின் பாராமுகம், வீதியோரம் வேதனை, தொழுநோய் மருத்துவம், சாந்தி நகர் (தொழு நோயாளர் குடியேற்றம்), தாய் இல்லம், குழந்தைக் காப்பகம், இளம்பெண்கள் காப்பகம் (இதய மன்றம்), அன்னை திரேசா இளவரசி டயானாவுடன், 1984இல் பாப்பரசர் சந்திப்பு, அமெரிக்காவில் 300 பெண்கள் முன், அன்னையிடம் தஞ்சம் அடைந்தோர், சேவை அடையாளம், அன்னை திரேசாவின் சேவை, அன்புப் பணியாளர் சபை மகிமை, அன்னை திரேசாவின் வாழ்வு நிகழ்வுகள், பொது நீதிகள், தாயன்பு, இயற்கை அன்னையின் ஆற்றாமை, ஊழ்வினை ஆகிய தலைப்புகளில் இக்காவியம் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 226478).

9652

எழிலி: காவியம். ச.வே.பஞ்சாட்சரம். செட்டிகுளம்: பாலன் வெளியீடு, 1வது பதிப்பு, மார்கழி 1962. (யாழ்ப்பாணம்: தமிழ் நாடு அச்சகம், நாவலர் வீதி).

iv, 70 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம், "செந்தாமரை மலரே" என்ற தலைப்பில் தன் முதல் கவிதையை "அல்லி" என்னும் மாத சஞ்சிகையில் எழுதியதன் மூலம் ஈழத்து இலக்கியத்துறையில் கால் பதித்தவர். இலக்கண அமைதியும் மரபு தவறாத அமைப்பும் சந்த இன்பமும் சங்ககால இலக்கியங்களின் ஈடுபாட்டின் காரணமாக மனங்கொண்ட வலுவான சொற்களும் இழைய எழுதுவதில் இவர் புலமைமிக்கவர். தனது இலக்கிய உலகப் பிரவேசத்தின் ஐந்தாண்டுக்காலத்தில் வெளியான காவியமே எழிலி என்ற இந்த நூலாகும். பள்ளிவிட்டுப் பைங்கிளிகள், பிள்ளையில்லாப் பெருந்துயர், அழுதாரைத் தொழுது, செழியர் கையில் கிளியள், நன்றி நினைந்த நவ்வி, விரிந்தமலர் விழைந்த செயல், நூலுங் கசந்ததடி, காதல் வேகம், வஞ்சிக் கடலில் வழங்கிய பேச்சு, தென்றல் புயலாய் வந்தது, சூழ்ச்சியில் வீழ்ச்சி, முறைகண்டு திகில், காதலா கடமையா, கனவில் வந்த காரிகை, துயரில் துணிவு, ஓடாதே இன்பமே, சந்தனச் சாம்பல் ஆகிய 17 அத்தியாயங்களில் இக்காவியம் இயற்றப்பட்டுள்ளது. 1965இல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற நூல் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69104).

9653

ஏழை நிலா: குறுங்காவியம். செ.குணரத்தினம் (புனைபெயர்: அமிர்தகழியான்). மட்டக்களப்பு: செ.குணரத்தினம், 1வது பதிப்பு, ஜனவரி 1993. (மட்டக்களப்பு: வளர்மதி அச்சகம், 28, லோயிட்ஸ் அவென்யூ).

(8), 52 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18.5x12.5 சமீ.

ஆசிரியரின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு. நெஞ்சில் நிறைந்த நிலா, கனிந்த காதல், ஏழை நிலா, பூமியிலே அவளெனக்கு ஆகிய நான்கு குறுங்காவியங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு, மட்டிக்களி கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியர் திருமணத்தின் பின்னர் அமிர்தகழியில் வாழ்ந்தவர். மட்டக் களப்பு கலாசாரப் பேரவையின் இலக்கிய மணி விருதினையும், இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் தமிழ்மணி என்னும் விருதினையும் பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102831).

9654

காத்தவன் காவியம். தேவதாசன். யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணக் கத்தோலிக்க இலக்கியக் கழகம், 1வது பதிப்பு, 1987. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).

xviii, (2), 86 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

பாரத வித்து, ஈழத்தின் முத்து, இறைவனின் சொத்து ஆகிய மூன்று பாகங்களில் பாடப்பெற்றுள்ள காவியம் இதுவாகும். கவிஞர் தேவதாசன், பாஷையூரைச் சேர்ந்தவர். யாழ்.பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில், தொழிலாளர் கல்வி நிறுவனத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டவர். கண்டிக் கச்சேரியில் பணியாற்றியவர். மாத்தளை இலக்கிய வட்டத்தின் முன்னாள் தலைவராகப் பணியாற்றியவர். மலையக மக்களின் துயரங்களைப் பாவடிவில் தந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 78029).

9655

சாவித்திரி சபதம்: பாட்டும் உரையும். வே.கனகசபாபதி. யாழ்ப்பாணம்: யாழ் இலக்கியவட்ட வெளியீடு, 1வது பதிப்பு, மாசி 1982. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

xxviii, 359 பக்கம், தகடு, விலை: ரூபா 50., அளவு: 21x14.5 சமீ.

1966ம் ஆண்டு இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட யாழ். இலக்கிய வட்டத்தின் 28ஆவது பிரசுரம். வடமொழியில் வழங்கும் வியாச பாரதத்தில் வனபர்வத்தில் ஓர் உபகதையாகக் கூறப்பட்டுள்ள சாவித்திரி கதையை விரிவானதொரு காவியமாக்கியிருக்கிறார் புலவர் வே. கனகசபாபதி. சாவித்திரியின் கற்பின் மகிமையைப் பேசும் கதை இது. பஞ்ச பாண்டவர் வனவாசம் செய்தபோது, யுதிஷ்டிரன் தங்கள் நிலைமையைக் குறித்துக் கவலையுடன் இருந்தவேளையில் மார்க்கண்டேய முனிவர் அவனுக்கு எப்படி சாவித்திரி தன் கற்பின் மகிமையால் சத்தியவானின் உயிரை மீளப்பெற்றாளோ அப்படியே திரௌபதியும் தனது கற்பின் மகிமையால் பாண்டவரின் துயர மெல்லாவற்றையும் நீக்கிச் சுகவாழ்வை உண்டாக்குவாளென்று ஆறதல் கூறுவதற்காக சாவித்திரி கதையைச் சொல்வதாக வரலாறுண்டு. பாயிரச் சருக்கம், உற்பத்திச் சருக்கம், சுயம்வரச் சருக்கம், திருக்கலியாணச் சருக்கம், மனையறச்

சருக்கம், மறலிவரு சருக்கம், மீட்சிச் சருக்கம், துறவுச் சருக்கம், முடிசூட்டுச் சருக்கம் ஆகிய ஒன்பது சருக்கங்களைக் கொண்டுள்ள இக்காவியம் எழுநூற்றொரு விருத்தப்பாக்களால் ஆனது. நால்வகைப் பொருள்களையும் பல்வகை நயங்களும் பொலியக் கூறிச்செல்லும் இக்காவியத்தை இயற்றிய புலவர் கனகசபாபதி, யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 68889).

9656

சிலம்பு சிரித்தது. இ.நாகராஜன். யாழ்ப்பாணம்: இ.நாகராஜன், 1வது பதிப்பு, ஜனவரி 1969. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம்).

(3), 78 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

சங்க இலக்கிய கதாபாத்திரங்களின் பின்னணியில் இயற்றப்பட்ட கவிதை நாடகம் இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84648).

9657

சுனாமி காவியம்: காவியத் தொகுப்பு. ரீ.எல். ஜவ்பர்கான். காத்தான்குடி: இலக்கியக் கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (ஓட்டமாவடி: கோல்மாஸ்டர் அச்சகம், எம்.பீ.சீ.எஸ்.வீதி).

100 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 19.5x13 சமீ., ISBN: 978-955-50740-0-1.

சுனாமி தின்ற உயிர்களுக்குக் காணிக்கையாக்கப்பட்டுள்ள இக்காவிய நூல், அலைகளாய் பொங்கிய அழிவுகள், உடல்களால் நிரம்பிய மருத்துவமனைகள், உதவிப்பணியில் உள்ளங்கள் இணைவு, பாகுபாடின்றிப் பதறிய உயிர், உதவிக்காய் குவிந்துவந்த உலக நிறுவனங்கள், அகதிகளாய் பெருக்கெடுத்த அப்பாவிகள், நிர்க்கதியோர் மகிழ நிவாரண வருகை, ஆண்டுகள் மூன்று அகன்று புதிய வாழ்க்கை, நிர்க்கதியோருக்கு நிரந்தரத் தொழில்கள், நிரந்தர வீடுகள் நிர்மாணம் ஆகிய 10 தலைப்புகளில் பாடப்பெற்றுள்ளது. 2004 மார்கழியின் ஆழி அலை அழிவுகளின் அவலங்கள் புகைப்படங்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

9658

தோட்டுப்பாய் மூத்தம்மா (குறுங்காவியம்). பாலமுனை பாறுக். பாலமுனை 3: பர்ஹாத் வெளியீட்டகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (சாய்ந்தமருது: டிசைன் வேர்ள்ட்).

88 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-99311-2-6.

1987இல் பதம் என்ற கவிதைநூலின் வாயிலாக இலக்கிய உலகில் அறிமுகமானவர் பாலமுனை பாறூக். தொடர்ந்து சந்தனப்பொய்கை என்ற கவிதைத் தொகுதியின் மூலம் இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகள் சிலவற்றைக் கவிதையாக வடித்துப் பிரபல்யமானவர். தனது கொந்தளிப்பு என்ற முதலாவது குறுங்காவியத்தை 2010இல் வழங்கிய இவ்வாசிரியரின் நான்காவது நூலாக வெளிவரும் மற்றுமொரு

குறுங்காவியம் இது. இக்காவியத்தில் பொருத்தமற்ற திருமண முயற்சியினால் முஸ்லிம் குடும்பப்பெண்ணான செய்னம்புவுக்கு ஏற்படும் மனப்போராட்டமும், விவாகரத்தும், மறுமணம்முடித்தலும் ஆகிய விடயங்கள் பாடுபொருளாக அமைந்துள்ளன. முஸ்லிம்களின் பண்பாட்டுக் கோலங்களைப் பதிவுசெய்யும் வகையில் இக்குறுங்காவியத்தில் முஸ்லிம்களின் திருமணச்சடங்கு முறைமை, மையத்துச் சடங்கு, பிறப்புச் சடங்கு, பூப்படைதற் சடங்கு, பெண்பிள்ளைச் சுண்ணத்துச் சடங்கு ஆகிய விடயங்களை மிகவும் சுவைபடப் பதிவுசெய்திருக் கிறார். பலநூறு வருடங்களாக பேணப்பட்டுவந்த சோனகப் பண்பாட்டின் வாழ்வியலை அதில் பெண் பெற்றிருந்த வகிபாகத்தை அவள் அடைந்த வெற்றி தோல்விகளை இக்குறுங்காவியம் மிகக்கச்சிதமாகப் பதிவாக்கியிருக்கிறது.

9659

பரமபிதாவின் பத்துக் கட்டளைகள்: இசை நாடகம். நீ.மிக்கோர்சிங்கம். யாழ்ப்பாணம்: பிரகாஷ் மன்றம், பாஷையூர், 1வது பதிப்பு, 2009. (யாழ்ப்பாணம்: அன்னை அச்சகம், பிரதான வீதி, குருநகர்).

(7), 104 பக்கம், புகைப்படம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

மதுரகவி நீ.மிக்கோர்சிங்கம் யாழ்ப்பாணத்தின் இசை நாடகக் கூத்து மற்றும் அரங்கியல் உலகில் பிரபல்யமானவர். கிறிஸ்தவ இறையியல் கூறுகளில் ஒன்றை பிரதிபலிக்கும் இவ்விசைநாடகம் அவரது மைந்தன் பிரகாசநாதரினால் வெளியிடப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205315).

894.8(4) தமிழ்ச் சிறுகதைகள்

9660

அனுராதா கதைகள்: சிறுகதைத் தொகுப்பு. அனுராதா பாக்கியராஜா. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2013. (கொழும்பு 11: எஸ்.என்.எம்.ஆர். கிராப்பிக்ஸ்).

x, 92 பக்கம், விலை: ரூபா 280., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-0195-13-8.

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியை வதிவிடமாகக் கொண்டவர் அனுராதா. 1968இல் எழுத்துத்துறைக்குள் நுழைந்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தெரிவுசெய்யப்பட்ட நிலையக் கலைஞராக இருப்பவர். வாய்ச்சொல் வீரர்கள், என்று தணியும் இந்தத் தாகம், தாய் மனம், தியாக தீபம், தருமம் தலைகாக்கும், வெளிநாட்டு மாப்பிள்ளை, கண் திறந்தது, பூர்வஜென்ம பந்தமோ, அவஸ்தைப்படும் அப்பாவிகள், ஜெயந்தி, கனவுகள் கலைந்தபோது ஆகிய 11 கதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது ஆரம்ப காலப் படைப்புக்கள் எஸ்.அனுராதா எனவும் , திருமணத்தின் பின் அனுராதா பாக்கிய ராஜா என்ற பெயரிலும் இலக்கிய உலகை அலங்கரித்துள்ளன. இலங்கை

வானொலி இவரது எழுத்தாற்றலுக்கு விளைநிலமாகியுள்ளது. புரவலர் புத்தகப் பூங்காவின் 34ஆவது நூலாக இது வெளிவந்துள்ளது.

9661

ஆணிப்பொன்: சிறுகதைத் தொகுப்பு. கல்குடா க.பரமானந்தராஜா. மட்டக்களப்பு: எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், 64 கதிர்காமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, 2009. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

141 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-8715-55-0.

அவன் இவனில்லை, ஆறாத ரணங்கள், எனக்கு மட்டும், விடிவில்லா மனங்கள், தவறுகள் திருத்தப்படுகின்றன, ஒரு விடிவெள்ளி உதயமாகின்றது, தாய்மை, ஆணிப்பொன், இனிவரும் உதயம், வெள்ளைப்புறா ஒன்று, சாம்பல் மேட்டில் பூத்த அத்திவாரங்கள், தாயகம், நினைவே நீ கலையாதே, வீடு ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 14 கதைகள் இதில் அடங்கியுள்ளன. கிழக்கிலங்கையின் கல்குடா வைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் பழைய மாணவர். கிழக்குப் பல்கலைக் கழகத்தித்தின் கலைமாணிப் பட்டதாரி. கல்குடா தொகுதியில் உள்ள மயிலங்கரச்சை மலைமகள் வித்தியால யத்தில் அதிபராகக் கடமையாற்றுகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 212815).

9662

ஆயுத வரி: சிறுகதைகள். அ.இரவி. தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2013. (சென்னை 600029: மைக்ரோ பிரின்ட், நெல்சன் மாணிக்கம் தெரு, அமிஞ்சிகரை).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 130., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81969-78-6.

யாழ்ப்பாணம் அளவெட்டியில் 1960இல் பிறந்த அ.இரவி, தெல்லிப்பழை, மகாஜனக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து 1982இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சென்று, தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்று 1986இல் பட்டதாரியானவர். பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் 1992இல் அரங்கியலில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றார். 1995இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்று பத்தாண்டுக்காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். புதுசு, சரிநிகர், புலம், ஒரு பேப்பர் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் இவரும் ஒருவர். லண்டனில் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணியாற்றியவர். தனது 20ஆவது வயதில் எழுதத் தொடங்கிய அ.இரவி, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பாராட்டையும் பெற்றவர். இந்நூலில் ஜனநாயக வரி என்ற தலைப்பில் நிலாந்தனின் அறிமுகமும், நெருப்பில் பற்றியெழ நெய்யிட்டோர் என்ற தலைப்பில் ஆசிரியரின் உரையும், தொடர்ந்து அ.இரவியின் ஆயுதவரி, கானல் வரி, எழுந்த ஞாயிறு விழுந்ததன் பின், அதிகாரி, சக பயணி ஆகிய ஐந்து சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன.

9663

இப்படி எத்தனை நாட்கள்: சிறுகதைத் தொகுப்பு. நா.க.தங்கரத்தினம் (புனைபெயர்: நகுலன்). யாழ்ப்பாணம்: சிவச்செல்வி வெளியீடு, கலை அகம், கலைநகர், சித்தங்கேணி, 1வது பதிப்பு, டிசம்பர் 1968. (கொழும்பு 13: ரெயின்போ பிரிண்டர்ஸ், 231, ஆதிருப்பள்ளித் தெரு).

150 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

வாழ்வு மலருமா? (சிந்தாமணி 9.4.1967), புதிய மனிதன் (தினகரன் 26.5.1968), குடியிருந்த கோயில் (வீரகேசரி 17.6.1968), தோட்டியின் இரத்தம் (ஈழநாடு 24.7.1966), இப்படி எத்தனை நாட்கள் (தினகரன் 9.2.1967), பிரிவு (வீரகேசரி 25.10.1967), உயர்ந்தவன் (விவேகி தை-மாசி 1966), இலட்சியம் (ஈழநாடு 15.8.1965), வாழப் பழகிக்கொள் (வீரகேசரி 4.11.1968), குடும்ப கௌரவம் (ஜோதி 8.7.1968), படிப்பினை (ஜோதி 8.12.1967) ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. 1965இல் வெளிவந்த கன்னிப்பெண் என்ற இவரது முதலாவது சிறுகதைத் தொகுதியைத் தொடர்ந்து இவ்விரண்டாவது நூல் வெளிவந்துள்ளது. சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த இவர், நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18886).

9664

இப்படியுமா?: சிறுகதைகள். வி.ரி.இளங்கோவன். சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (சென்னை 49: ஜெமினி ஒப்செட் பிரின்டர்ஸ், வில்லிவாக்கம்).

(8), 136 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-922530-3-9.

வெயிலும் பனியும், தண்ணீரும் எண்ணெயும், ஒரு நிர்வாகசபை கூடுகிறது, இப்படியுமா? கடிதம் சொன்ன கதை, வேட்கை, திறப்பு விழா, பிறழ்வு, ஒளிக்கீற்று, தீயை வளர்க்கிறார், ஒப்பரேஷன், அப்பா வருவார், ஏன் இடம் மாறினான், கிழக்கு நோக்கிய மேற்கு மனிதன், காத்திருந்த புன்னகை, கடை வாசலில் ஆகிய 16 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9665

இல்லத்தரசி. அன்புமணி (இயற்பெயர்: இரா.நாகலிங்கம்). மட்டக்களப்பு: அன்பு வெளியீடு, ஆரையம்பதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம்).

vi, 166 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18.5x12.5 சமீ.

1952 முதல் எழுதிவந்த அன்புமணியின் முதலாவது சிறுகதைத் தொகுதி இதுவாகும். இல்லத்தரசி (வீரகேசரி 27.2.1968), தாய்மை (சிந்தாமணி 21.7.1969),

சிலை ஒன்று (சிந்தாமணி 8.5.1969), பொன்னித்தாய் (தினகரன், 20.9.1964), பூர்ணிமா (சிந்தாமணி 2.7.1968), போனால் வராது (வீரகேசரி 16.5.1969), பெரிய மனிதர் (தினகரன் 25.2.1965), காதற் பெண் (தினகரன் 12.2.1966), காதலுக்குக் கண் (வீரகேசரி 9.7.1968), மூன்று பெண்கள் (வீரகேசரி 28.10.1968), பித்தம் தெளிந்தது (வீரகேசரி 17.2.1963), பாடும் மீன் (வீரகேசரி 12.1.1958) ஆகிய 12 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 110409).

9666

இவன்தான் மனிதன்: சிறுகதைகள். சூசை எட்வேட். திருகோணமலை: இந்திரா எட்வேட், 1004, அன்புவழிபுரம், 1வது பதிப்பு, 2013. (திருகோணமலை: அஸ்ரா பிரின்டர்ஸ்).

216 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-0469-23-9.

வீரகேசரி, தினக்குரல், ஞானம், பூங்காவனம், ஜீவநதி, மல்லிகை ஆகிய ஊடகங்களில் வெளியாகிய ஆசிரியரின் 15 சிறுகதைகளின் தொகுப்பாக இந் நூல் வெளிவந்துள்ளது. இவன்தான் மனிதன், பக்தர்கள் செய்த பாவம், எது மனித சாதி, மனிதம் மலர்க, மாயை, தாழ்வு மனச் சிக்கலால், காரியவாதி, குருவிப்பாடம், விமோசனம் வருமா, அர்த்தமுள்ள வாழ்வு, பாழாய்ப் போன பொன்விழா, நாயாகிப் போனவன், பிரம்மச்சாரி ஆகிறார், வரலாற்றுப் பயணம், சரித்திரத்தில் ஒரு பதிவு ஆகிய 15 தலைப்புகளில் இக்கதைகள் எழுதப்பட்டுள்ளன. சமூகக் குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் என்ற வேணவா இக்கதைகளின் நோக்கமாகின்றது. இவன்தான் மனிதன் என்ற கதை - அருமைநாயகத்தைப்போல வாழ்ந்து தியாகியாக வேண்டும் என்ற உணர்வை ஊட்டுகின்றது. பக்தர்கள் செய்த பாவம், எது மனித ஜாதி என்பன சாதிக்கொடுமையைச் சாடுகின்றன. அந்தோனியாரையும் பறையனாக்கிவிட்டார்களே என்ற கதையில் தெரேசம்மாளின் புலம்பல் கதை சாதியச் சிந்தனைக்குரியது. மனிதம் மலர என்ற கதையின் தியாகுவின் பாத்திரம் மானிட தரிசனத்தின் உயர்வாகப் படைக்கப்பட்டுள்ளது. மாயையின் பாத்திரம் சிவகுமாரியின் உணர்ச்சிப் போராட்டமாகும். காரியவாதி, தங்கை மீது கொண்ட கோபுவின் அன்பின் வெளிக்காட்டுகையாகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234754).

9667

இறுக்கம்: சிறுகதைகள். ஸபீர் ஹாபிஸ். (இயற்பெயர்: மௌலவி அல்ஹாபிஸ் எம்.யூ.எம்.ஸபீர்). கொழும்பு: அல்ஹுதா பப்ளிக்கேஷன்ஸ், 1வது பதிப்பு, ஜூலை 2011. (கொழும்பு: ஹாபிஸ் கம்பியூட்டர் சென்டர்).

98 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 20.5x14.5 சமீ.

இது உலகளாவிய முஸ்லிம் சமூகத்திற்கெதிரான பேரினவாதிகளின் அத்துமீறல் களின் பதிவாகும். இன்றைய முஸ்லிம் சமூகத்திற்கெதிரான அராஜகச் செயற்பாடு களையும், அவற்றின் மீதான முஸ்லிம்களின் துயர வாழ்வையும் சுருக்கமாகச்

சொல்லும் பணியை இந்த இறுக்கம் சிறுகதைகள் மேற்கொண்டுள்ளன. முஸ்லிம் சமூகத்தின் மீதான போலித்தன்மையற்ற அனுதாபத்தை ஏற்படுத்துவதும், முஸ்லிம் சமூகம் தன்னைத் திருத்திக்கொள்வதற்கான கடமையை உணர்த்துவதுமாகும். வரலாற்றுத்துயர், நன்றிகெடல், தொப்பி, றியாஸின் டைரி, அஃறிணையின் அலறல், பரிசு, அராஜகம், பலி, வாழ்தலுக்கான அழுதல், முஸ்லிமின் ஆயுதம் ஆகிய 10 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 229812).

9668

ஈழத்துச் சிறுகதைகள். சிற்பி (இயற்பெயர்: சி.சரவணபவன்) (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: தமிழருவிப் பதிப்பகம், கந்தரோடை, 1வது பதிப்பு, 1958. (சென்னை: மாருதி அச்சகம், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை).

162 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

கடற்கரைக் கிளிஞ்சல்கள் (இலங்கையர்கோன்,ஈழகேசரி-1954), வெள்ளம் (இராஜ அரியரத்தினம், ஈழகேசரி-1944) மனிதன் (க.தி.சம்பந்தன், கலைமகள்-1950), குருவின் சதி (தாழையடி சபாரத்தினம், ஆனந்தன்-1954), அவன் (க.இராஜநாயகன், மறுமலர்ச்சி-1948), ஒரு பிடி சோறு (கனகசெந்திநாதன், ஈழகேசரி-1945), பிள்ளையார் கொடுத்தார் (வரதர், ஆனந்தன்-1953), தோணி (வ.அ.இராசரத்தினம், ஈழகேசரி-1954), வாழ்வு உயர்ந்தது (சகிதேவி தியாகராஜா, சுதந்திரன்-1955), கங்காகீதம் (சி.வைத்தியலிங்கம், கிராம ஊழியன்-ஆண்டு?), உப்பிட்டவரை (கே. டானியல், சுதந்திரன்-1954), பதவி துறந்தார் (செ.கணேசலிங்கன்-புதிய கதை) ஆகிய 12 சிறுகதைகளின் தொகுப்பு. ஈழத்தின் படைப்பாளிகளின் கதைகளை மாத்திரம் உள்ளடக்கி வெளிவந்த முதலாவது சிறுகதைத் தொகுதியாக இது ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. நூலின் இறுதியில் கதாசிரியர்கள் பற்றிய குறிப்புகளும் தொகுப்பாசிரியரால் தரப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18412).

9669

உளநெறிக் கதைகள். சபா.ஜெயராஜா. மருதனார்மடம்: அம்மா வெளியீடு, இணுவில், 1வது பதிப்பு, 1997. (இணுவில்: அம்மா அச்சகம்).

iv, 86 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 18.5x12.5 சமீ.

செவ்வந்தி ஏமாற்றம், இரண்டு அணில்கள், முரண் சுருதிகள், அவனும் பாவையும், இழந்த இலுப்பை மரநிழல், மண்பாவை, சிறுவனின் ஓவியம், காற்றும் பனை ஓலையும், பசுக்கன்றும் மனிதனும், மாடுமலைத்தோட்டம், வண்டுர் அனுபவம், ஆசிரியர் நந்தவனம் ஆகிய 12 கதைகளை இந்நூல் கொண்டுள்ளது. ஒருவர் தம்மைத்தாமே நெறிகை செய்து, மனக்கோல உராய்வுகளை இனங்கண்டு உளச்சுகம் தேடும் உபாயங்களுள் ஒன்றாக உளநெறிக் கதைகள் உருவாக்கப் பட்டுள்ளன. சிறுகதை நுட்பங்களும் உளவியல் நுட்பங்களும் ஒன்றுகலந்து உருவாக்கப்பட்ட ஒரு புதிய வடிவமாக இக்கதைகள் அமைகின்றன. கதைகளின் நிறைவில் ஒருவரது உள்ளத்தைக் கிளறவும், மனவெழுச்சி சார்ந்த உளச்சம

நிலைகளை உருவாக்கவும், தாக்கங்களைச் சுமந்து அறிகைக் கட்டமைப்பைப் பலப்படுத்தவும் வல்ல வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய விடைகளைத் தேட முற்படுதல் உள்ளத்தை நெறிப்படுத்தும் அறிகைச் செயல்முறையைப் பலப்படுத்தும். இவற்றுக்குரிய சரியான விடைகள் ஒவ்வொருவரதும் உள இயல்புகளுக்கு ஏற்றவாறு வேறுபடும். இக்கதைகள் பரிசோதனை முயற்சியாக வீரகேசரி வார இதழில் முன்னர் வெளிவந்தன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118924).

9670

எல்லை வேம்பு: சிறுகதைகள். கண.மகேஸ்வரன். மட்டக்களப்பு: உஷா சிவதாசன், ஆசிரியர், உதயம் வெளியீடு, 65, லேடி மனிங் டிரைவ், 1வது பதிப்பு, ஜூலை 1994. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).

vi, 108 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 18x12 சமீ.

ஈழத்துப் படைப்பாளி, கண.மகேஸ்வரன் எழுதிய பதின்மூன்று சிறுகதைகளின் தொகுப்பு இது. 13ஆவது உதயம் பிரசுரமாக வெளிவந்த நூல். (ஒளி 7, கதிர் 1, ஜூலை 1994). பிராயச்சித்தம், சொந்தங்கள், தண்டனை, காலங்கள் மாறும், வதந்தி, எல்லை வேம்பு, அது ஒரு டிசம்பர் காலை, விமோசனம், வருத்தம், அக்கினிக் குளியல், அந்தியில் ஓர் உதயம், கர்வம், பிள்ளை மனம் பித்து ஆகிய 13 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156241).

9671

ஒடுக்கப்பட்டவர்கள். தெணியான். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மே 2010. (வத்தளை: பேஜ் அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்).

192 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-9396-43-7.

குடிமை, இப்படியும் ஒரு தர்மம், சமூகங்கள் மாறும்போது, உள் அழுகல், மூன்று தலைமுறைகள், காமாளை, எப்படியும் பெரியவன்தான், மாத்துவேட்டி, காதுகுத்து, கரையை நோக்கி, அவர்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள், எல்லைக் கோடுகள், சன்மானம், கொழும்பு, வாத்தியார்தான் செத்துப்போனார், பொருந்தாத தீர்மானங்கள், காலத்தால் சாகாதது, காவல் அரண்கள், இன்னுமா? மாற்றம் வந்துவிட்டது, அசல் யாழ்ப்பாணத்து மனிதன், இவன் மிச்சம் நல்லவன், வரப்புகள் உயரா, உயர்மானம், வெளியில் எல்லாம் பேசலாம் ஆகிய தலைப்புகளில் அமைந்த 25 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கால ஓட்டத்துடன் சாதியம் எவ்வாறு யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தில் தொழில்பட்டு வந்துள்ளது என்பதை இக்கதைகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.

9672

ஒருவருக்காக அல்ல: சிறுகதைகள். து.வைத்திலிங்கம். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆனி 2009. (வத்தளை: பேஜ்

அன்ட் இமேஜ், 202/2B, ரோயல் பேர்ள் கார்டன்ஸ்).

vi, 211 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-9396-31-4.

யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்தவர் துரையப்பா வைத்திலிங்கம். 19.01.1939இல் பிறந்த இவர் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். எழுதுவினைஞராக வாழ்க்கையைத் தொடங்கிய வைத்திலிங்கம், 1973இல் இலங்கை நிர்வாக சேவைக்குத் தெரிவாகி நாட்டின் பல பாகங்களிலும் கடமையாற்றி, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகி ஓய்வுபெற்றவர். கடமையின் நிமித்தம் சமூகத்தின் பல மட்டங்களைச் சேர்ந்தவர்களோடும் தொடர்புகளைப் பேணிய ஆசிரியர் தனது அனுபவங்களை புனைகதைகளுக்கு அடித்தளமாக்கியவர். இந்நூலில் சக்தியின் மகிமை, பிரேமையின் பரிசு, செந்நாக்குகள், எழுச்சியின் குரல், கொள்ளிக்கடன், கலாவதி கறுப்பு, ஆண் என்ற உறவு, உயிரின் பாதி, அஸ்தமனம், நச்சு மரம், கிழக்கு வெளுக்கிறது, கர்மவாதி, மீண்டும் மலரும் பூ, பரிவின் விலை, கால்கள் உள்ளன, நவமக்கா, பலவீனங்கள், பிராயச்சித்தம், பிறந்தநாள்வாழ்த்து, நேற்றைய இரவுகளும் நாளைய பகல்களும், தவறுகள் வாழ்கின்றன, கனவுகள் கலைகின்றன, ஊமைக்காதல், ஒருவருக்காக அல்ல ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட ஆசிரியரின் 24 கதைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. பெரும் பான்மையானவை அறுபதுகளில் எழுதப்பட்டவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236606).

9673

ஓ கே குணநாதன் நகைச்சுவைக் கதைகள். ஓ.கே.குணநாதன். மட்டக்களப்பு: பிரியா பிரசுரம், 64, கதிராமர் வீதி, அமிர்தகழி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1993. (கொழும்பு 14: நிரோஷன் பிரின்டர்ஸ், 103 B, பாபா புள்ள பிளேஸ்).

64 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 45., அளவு: 18.5x13 சமீ.

இந்நூலில் குணநாதன் அவ்வப்போது எழுதிப் பிரசுரமான கஞ்சத்தனம், வேட்பாளர் மனசு, அவருக்கு ஒரு ஆசை, ஆங்கில மேதை, வேலை வேண்டும், இலக்கண மேதை, வெடில் மாணிக்கம், சிரிப்பு வழக்கு, புதுமைப் பரிசு, நடையா இது நடையா? ஆகிய பத்து நகைச்சுவைக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 14.11.1960இல் பிறந்த நூலாசிரியர், மட்டக்களப்பு, அமிழ்தகழியைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 111056).

9674

கம்பதாசன் சிறுகதைகள். கம்பதாசன் (மூலம்), சிலோன் விஜயேந்திரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600005: ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, 1வது பதிப்பு, மார்ச் 1988. (சென்னை 600005: எஸ்.கே.ஆர்ட் பிரின்டர்ஸ், திருவல்லிக்கேணி).

(4), 146 பக்கம், விலை: இந்திய ரூபா 12., அளவு: 17.5x12.5 சமீ.

தமிழகத்தின் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் திண்டிவனம் பகுதியில் உள்ள

உலகாபுரம் கிராமத்தில் பிறந்த அப்பாவு என்ற இயற்பெயர் கொண்ட, கவிஞர் கம்பதாசன் (15.9.1916-23.5.1973) எழுதிய சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இதில் மறைந்த நட்சத்திரம், நினைவு முகம், ஒன்பதாம் நம்பர் கட்டில், விதி, முத்துச் சிமிக்கி, கடவுளின் விரோதி, புதுவெள்ளம், மௌனச் சிரிப்பு, தியாகம், தந்தை, குழந்தை உள்ளம், வெகுமதி, பலி, வழிகாட்டி, குழந்தையின் மதம், ஞானஸ்தன், முதல் முத்தம் ஆகிய 17 கதைகள் இடம் பெற்றுள்ளன. ஏற்கெனவே விஜயேந்திரன் இவரது படைப்புகளை கம்பதாசன் திரை இசைப் பாடல்கள், கம்பதாசன் காவியங்கள், கம்பதாசன் கவிதைத் திரட்டு, கம்பதாசன் நாடகங்கள், கம்பதாசன் கவிதா நுட்பங்கள்ஆகிய தலைப்புகளிலும் தொகுத்ததுடன் கம்பதாசனின் வாழ்வை கவிஞர் கம்பதாசன் வாழ்வும் பணியும் என்ற நூலின் மூலமும் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியிருந்தார். தமிழகத்தில் வாழ்ந்து மறைந்த யாழ்ப்பாணத்தவரான விஜயேந்திரன் 1946இல் பிறந்தவர். 16வது வயதிலேயே எழுத்துத் துறைப் பிரவேசம் கண்டவர். இலக்கியவாதியாக மட்டுமன்றி தமிழகத்தின் திரைப்பட நடிகராகவும் இருந்து 65க்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் வில்லன் வேடமேற்று நடித்தவர். நவரச தனிநடிப்பிலும் புகழ்பெற்றவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 99450).

9675

கயமை மயக்கம். தி.ச.வரதராஜன் (புனைபெயர்: வரதர்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், புத்தகசாலை, 226 காங்கேசன்துறை வீதி).

xvi, 152 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18x13 சமீ.

டாக்டர் மு.வரதராசனாரின் சிறப்புரையுடன் கூடிய சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். மாதுளம் பழம் (சுதந்திரன்), உள்ளுறவு (ஆனந்தன்), வேள்விப் பலி (மறுமலர்ச்சி), கயமை மயக்கம் (ஆனந்தன்), உள்ளும் புறமும் (புதுவருட மலர்), பிள்ளையார் கொடுத்தார் (ஆனந்தன்), வீரம் (தினகரன்), வெறி (யாழ். எழுத்தாளர் சங்க மலர்), கற்பு (மத்திய தீபம்), ஒரு கணம் (தினகரன்), புதுயுகப் பெண் (கலைச் செல்வி), வாத்தியார் அழுதார் (ஆனந்தன்) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. அடைப்புக்குறிக்குள் வெளியிடப்பட்ட இதழின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. கதைகளை மட்டுமல்லாமல் கதை எழுதும் கதாசிரியரின் குடும்பத்தையும் கதையின் பாத்திரமாகக் காட்டியுள்ளமை இக்கதைத்தொகுதியின் சிறப்பாகும். அவ்வகையில் அமைந்ததாக வீரம், ஒருகணம் ஆகிய இரு கதைகளைக் குறிப்பிடலாம். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 3125).

9676

கருவறைக்கு வெளியே. கவிதா. சென்னை 600078: டிஸ்கவரி புக் பலஸ், பாண்டிச்சேரி விருந்தினர் இல்லத்திற்கு அருகாமையில், கே.கே.நகர், 1வது பதிப்பு, மே 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

96 பக்கம், ஓவியங்கள், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-925627-1-1.

நோர்வேயில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்துப் படைப்பாளி கவிதாவின் சிறு கதைகளின் தொகுப்பு இது. இருளுக்குப் புகுமுன் என்னும் தலைப்பில் குழந்தைப் போராளிகள் பற்றியும் அவர்களின் சமூகப் போராட்டங்கள், உணர்வுகள் பற்றியதுமான ஆழமான முன்னுரையுடன் தனது சிறுகதைகளை இந்நூலில் பதிவுசெய்கின்றார். நாங்களும் துவககு வைச்சிருக்கவேணும் அம்மா, உஷ்- இதெல்லாம் வெளியே சொல்லக்கூடாது, நெருப்பின் நிறம் கறுப்பு, உங்கள் பெயர் என்ன?, தனிமை என்னும் பெருவெளி, மண்புழு, கரடி பொம்மை, சுருக்குப் பாவாடைக்காரி, துன்பம் நேர்கையில், பயணம், கதறலின் வாடை, பாண்டிபஜார் குட்டிராஜா, வீடு-மரம்-மனிதம் ஆகிய 13 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9677

கனவு மெய்ப்படும். செ.யோகநாதன். சென்னை 600114: வேல் பப்ளிக்கேஷன்ஸ், 110, கல்லூரி வீதி, பழவந்தாங்கல், 1வது பதிப்பு, டிசம்பர் 1989. (சென்னை 600024: ஜென்னி ராம் பிரஸ், 28, தெற்கு சிவன் கோவில் வீதி).

iv, 200 பக்கம், விலை: இந்திய ரூபா 18., அளவு: 17.5x12.5 சமீ.

ஈழத்துப் படைப்பிலக்கியவாதி செ.யோகநாதனின் சிறுகதைத் தொகுதி. தீக்குள் விரலை வைத்தால், நீயும் நானும், திரைகள், மாயை, மூடுதிரை, செங்கமலம், வேதம் புதிது, கன்னிகா, வானமும் கடலும் போல, சோளகம், தர்மங்கள், வளைவு, மகாராணி மீண்டும் வருவாள், இனிவரும் விடுதலை ஆகிய 14 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 93213).

9678

கிழிசல்: சிறுகதைத் தொகுப்பு. எஸ்.வேல் அமுதன். தெல்லிப்பழை: வேல் வெளியீட்டகம், வல்லம்புலம் ஒழுங்கை, மாயெழு, குரும்பசிட்டி மேற்கு, 1வது பதிப்பு, நவம்பர் 2013. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xxii, 150 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-50119-1-4.

2003ஆம் ஆண்டு முதல், ஓலை, ஞானம், செங்கதிர், தினக்குரல், மல்லிகை, ஜீவநதி, இணுவில் ஒலி, வீரகேசரி ஆகிய ஊடகங்களில் வெளிவந்த வேல் அமுதன் எழுதிய 75 குறுங்கதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. வேல் அமுதன் தனது 75ஆவது அகவையின் நினைவாக 75 கதைகளை இத்தொகுப்பில் திரட்டியிருக்கிறார். சங்கப்பலகை (நூலகம், 1948), இலங்கை அறிவு இயக்கம் (அறிவகம், 1970), தமிழ் கதைஞர் வட்டம் (தகவம், 1974), வள்ளுவர் மாமன்றம் (1983), வேல் வெளியீட்டகம் (வேகம், 1983), மதி கலைஞர் வட்டம் (மகவம், 1983), இளம் கலைஞர் வட்டம் (1983), வேல் அமுதன் திருமண ஆலோசனையகம்

(1995) ஆகியவற்றின் பின்னணியில் இருந்து வந்த வேல் அமுதனின் இலக்கியப் பணி குறிப்பிடத்தகுந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234966).

9679

குழந்தை ஒரு தெய்வம். காவலூர் இராசதுரை. சென்னை 14: தமிழ்ப் புத்தகாலயம், 393 பைகிராப்ட்ஸ் (Pycrofts) சாலை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1961. (சென்னை 14: வ.விஜயபாஸ்கரன், சரஸ்வதி பிரஸ், பைகிராப்ட் சாலை).

xvi, 95 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 18x13 சமீ.

பேராசிரியர் கா.சிவத்தம்பியின் முன்னுரையுடன் கூடிய சிறுகதைத் தொகுப்பு. சரஸ்வதி வெளியீடு என்ற தொடரில் நான்காவதாக வெளியிடப்பட்டுள்ளது. தேவகிருபையை முன்னிட்டு வாழும், பிள்ளையார் பிடிக்க, நாயிலும் கடையர், தொட்டாற்சுருங்கி, குழந்தை ஒரு தெய்வம், பேடி, வீழ்ச்சி, கல்வி, மோதிரம், பிரிய தத்தத்தினாலே ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட பத்துச் சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. தினகரன், வீரகேசரி, உதயன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமானவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35166).

9680

குறுங்கதை நூறு. செம்பியன் செல்வன். (இயற்பெயர்: ஆ.இராஜகோபால்). யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, அமலமரித் தியாகிகள் குருமடம், கொழும்புத் துறை, 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (யாழ்ப்பாணம்: மணி ஓசை அச்சகம், 12, பட்ரிக்ஸ் வீதி).

(4), 82 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 18.5x12.5 சமீ.

அமிர்த கங்கை இதழின் ஆசிரியராகப் பணியாற்றிய செம்பியன் செல்வனின் நூறு குறுங்கதைகளின் தொகுப்பு. வாசகர்களின் தீர்க்கமான சிந்தனைக்கு இக்கதைகள் ஊக்க மாத்திரைகளாகின்றன. நான் வெளியீட்டு வரிசையில் ஏழாவது நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118658).

9681

கொம்புத் தேன்: குட்டிக்கதைகள் 100. ச.வே.பஞ்சாட்சரம். கனடா: சில்வர் பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம், மிசிசாக, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (கனடா: சில்வர் பிறின்ற் ஹவுஸ் பதிப்பகம், மிசிசாக).

xx, 52 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் எழுதிய 100 குட்டிக் கதைகளின் (கடுகுக் கதைகள்) தொகுப்பு இது. 28.11.1939இல் இணுவில் கிராமத்தில் ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்த ஆசிரியர், வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளை ஆகிய பெற்றோரின் இரண்டாவது மகனாவார். இணுவில் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, உடுவில் ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, திருநெல்வேலி பரமேஸ்வரா

கல்லூரி (தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கற்றுத் தேர்ந்தவர். யாழ். இந்துக்கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, கண்டி புசல்லாவ பரிசுத்த திருத்துவக் கல்லூரி, கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சேவைக்காலத் தமிழ்ப் பாட வகுப்புகளை நடத்தியுள்ளார். 1955இல் கவிதை எழுத ஆரம்பித்த இவரது முதல் கவிதை 1957இல் அல்லி மாத சஞ்சிகையில் வெளிவந்தது. 1962இல் வெளிவந்த எழிலி என்ற நூலுக்கு 1965ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசும் கிடைத்தது. இவரது தமிழ் இலக்கணப் பூங்கா என்ற நூல் இதுவரை நான்காம் பதிப்புவரை வெளிவந்து 5500 பிரதிகளுக்கும் அதிகமாக விற்பனையாகியுள்ளது. 2002ம் ஆண்டு இலங்கை கலை இலக்கியப் பேரவையால் நடத்தப்பட்ட பேரவையின் அவ்வாண்டிற்கான கவிதைக்கான பரிசு ச.வே. பஞ்சாட்சரம் கவிதைகள் தொகுதி 1 என்ற நூலுக்கு வழங்கப்பட்டது. பத்துக்கு மேற்பட்ட இலக்கியப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுள்ள இவர், கவிதைகள் மட்டுமன்றி சிறுகதை, நாவல், பாநாடகம், சிறுவர் பாடல்கள், பக்திப் பிரபந்தங்கள் என்பனவற்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். தேச விடுதலைப் போராட்டத்தை நியாயபூர்வமானதாகவும், அறத்தின் பாற்பட்டதாகவும் கண்டு, அதனை ஊக்கியும், வாழ்த்தியும் பாடி வருகின்றார். பிரபாகரப் பெரும் காப்பியம் என்ற பெருநூலை 47 படலங்களில் 1300 மரபுக் கவிதைகளாக எழுதி மூன்று பாகங்களாக புலிகளின் குரல் வானொலியில் பாடி ஒலிபரப்பியிருந்தார். அதைவிட 30 வரையிலான மாவீரரின் வீர காவியங்களையும் 20க்கும் மேற்பட்ட எழுச்சிப்பாடல்களும் ச.வே.ப. அவர்கள் இதுவரை பாடியுள்ளதோடு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுப் பிரிவினரிடமிருந்து மூன்றுமுறை பரிசில்களையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

9682

கொழுத்தாடு பிடிப்பேன்: தேர்ந்தெடுத்த சிறுகதைகள். அ. முத்துலிங்கம் (மூலம்), க.மோகனரங்கன் (தேர்வும் தொகுப்பும்). தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600005: மணி ஒப்செட்).

486 பக்கம், விலை: இந்திய ரூபா 390., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-81969-86-1.

அ.முத்துலிங்கத்தின் தேர்ந்த 45 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளி வருகின்றது. இதில் குதம்பேயின் தந்தம், ஒரு சாதம், வம்ச விருத்தி, வடக்கு வீதி, பூமாதேவி, யதேச்சை, ஒட்டகம், கொழுத்தாடு பிடிப்பேன், அடுத்த புதன்கிழமை உன்னுடைய முறை, மொசு மொசுவென்று சடைவைத்த வெள்ளை முடி ஆடுகள், தாத்தா விட்டுப்போன தட்டச்சு மெசின்,போரில் தோற்றுப்போன குதிரைவீரன், பூமத்திய ரேகை, எந்த நிமிடத்திலும் பறிபோகும் வேலை, மகாராஜாவின் ரயில்வண்டி, நாளை, தொடக்கம், ஆயுள், விருந்தாளி, அம்மாவின் பாவாடை, கறுப்பு அணில், எதிரி, ஐந்தாவது கதிரை, தில்லை அம்பலப் பிள்ளையார்

கோவில், ராகு காலம், தாழ்ப்பாள்களின் அவசியம், புவியீர்ப்புக் கட்டணம், வேட்டை நாய், புகைக் கண்ணர்களின் தேசம், சுவருடன் பேசும் மனிதர், மயான பராமரிப்பாளர், அமெரிக்கக்காரி, குதிரைக்காரன், மெய்க்காப்பாளன், ஐந்து கால் மனிதன், புளிக்கவைத்த அப்பம், எங்கள் வீட்டு நீதவான், தீர்வு, எல்லாம் வெல்லும், மூளையால் யோசி, சூனியக்காரியின் தங்கச்சி, நிலம் எனும் நல்லாள், ரயில் பெண், ஓணானுக்குப் பிறந்தவன், எலிமூஞ்சி ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தின் கொக்குவில் கிராமத்தில் 1937இல் பிறந்த முத்துலிங்கம் கொழும்புப் பல்கலைக்கழத்தில் விஞ்ஞானப்படிப்பை முடித்தபின் இலங்கையில் பட்டயக் கணக்காளர் படிப்பையும், பிரித்தானியாவில் பட்டய நிர்வாகக்கல்வியையும் பூர்த்தி செய்தபின்னர் இலங்கை, ஆபிரிக்கா மற்றும் பல நாட்களில் ஐ.நா.நிறுவனத்திற்காகப் பணியாற்றியவர். 2000இல் ஓய்வுபெற்று கனடாவில் வாழ்கின்றார்.

9683

சங்கமம்: சிறுகதைத் தொகுதி. செ.கணேசலிங்கன். சென்னை: பாரி நிலையம், 59 பிராட்வே, 1வது பதிப்பு, டிசம்பர் 1961. (சென்னை 14: மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு).

136 பக்கம், விலை: இந்திய ரூபா 2.00, அளவு: 18.5x13 சமீ.

நல்லவன், ஒரே இனம் ஆகிய முதலிரண்டு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்ட செ.கணேசலிங்கனின் மூன்றாவது சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இதில் சங்கமம், கவலை இல்லாதவன், பெண், வெறித்த பார்வை, புயல், போராட்டம், மேற்கு வேலி, வியாபாரம், உயிர், பொழுதுபோக்கு, மரணத்தின் அணைப்பில், கற்பு எங்கே, காணிக்கை ஆகிய 13 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40964).

9684

சம்பந்தன் சிறுகதைகள். சம்பந்தன் (மூலம்), செங்கைஆழியான், செம்பியன்செல்வன் (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடு, 82, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1998. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

146 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 19x12.5 சமீ.

ஈழத்துச் சிறுகதைத்துறையின் வளர்ச்சிக்கு உரமூட்டிய திருமூலர்களுள் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோருடன் க.ஞானசம்பந்தனும் இணைந்து போற்றப்படுகின்றார். 1913இல் பிறந்த இவர் சம்பந்தன் என்ற பெயரில் படைப் புலகில் தன் 25ஆவது வயதில் அறிமுகமாகியவர். பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளையின் மாணவர். பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியவர். 1930-1950 காலகட்டத்தில் இவர் எழுதிய பத்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. மகாலட்சுமி (கலைமகள்), மதம் (கலைமகள்), சலனம் (கலைமகள்), விதி (கலைமகள்/கதைக்கோவை), தூமகேது (கலைமகள்), இரண்டு ஊர்வலங்கள்

(மறுமலர்ச்சி), அவள் (மறுமலர்ச்சி), துறவு (கலைமகள்), சபலம் (கலைச்செல்வி), பிரயாணி (ஈழகேசரி) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

9685

சிறக்கச் சில கதைகள்: நீலாம்பாள் நடராஜா நினைவு வெளியீடு. *என்.சிறிரஞ்சன் (தொகுப்பாசிரியர்), த.மயூரநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: என்.சிறிரஞ்சன், 66, 3/3, டேவிட்சன் வீதி, 1வது பதிப்பு, மே 2013. (தெகிவளை:* TG, *6*A, *1/1 பெரேரா ஒழுங்கை).*

vii, *78 பக்கம், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x15 *சமீ.,* ISBN: 978-955-44468-0-9.

வாழ்வில் சுய முன்னேற்றம் காணும் வழிவகைகளைத் தரும் இந்நூல் சிறுவரும் வளர்ந்தோரும் இணைந்து வாசித்துப் பயன்பெறத்தக்கவகையில் எழுதப்பெற்ற சிறுகதைகளைக் கொண்டது. ஆங்கில மூலத்திலிருந்து பெறப்பட்டவையும், தமிழ் இதொபதேச, பஞ்சதந்திரக் கதைகளை மாத்திரம் நம்பியிராமல், வென்றவர்கள் தோற்றவர்கள் என பலரினது வாழ்வினையும் அறிந்து அதன்மூலம் படிப்பினைப்பெற வைப்பதான கற்பனைக் கதைகளையும் கொண்டதாக இந் நூல் அமைகின்றது. இக்கதைகள் அனைத்தினதும் ஒரே நோக்கம வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதாகவே உள்ளது. கதை முடிவில் உபதேசமும் பொருத்தமான குறளும் மு.வரதராசனாரின் எளிய உரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும் காணப் படுகின்றன. இலகு வாசிப்பு நூலாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள 35 நீதிக் கதைகளும் பல்வேறு நூல்கள், சஞ்சிகைகள், மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். கணிசமானவை ஆங்கில மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. எமக்கு முன்னுள்ள சவால்களை எதிர்கொண்டு அவற்றைச் சரியாகப் புரிந்துகொண்டு அறிவியல் உண்மைகளை உரிய முறையில் பின்பற்றி உன்னதமான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவக்கூடிய சிறுகதைகளை இத்தொகுப்பில் காணமுடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233210).

9686

சென்றிடுவீர் எட்டுத்திக்கும்: பரிசுபெற்ற பன்னிரண்டு சிறுகதைகள். *கே.எஸ். சுதாகர். அவுஸ்திரேலியா: அக்கினிக்குஞ்சு வெளியீடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (சென்னை 600094: மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ், 20/2, சக்காரியா காலனி, 1வது தெரு, சூளைமேடு*

176 பக்கம், விலை: இந்திய ரூபா 150.,அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 978-93-81322-32-1.

இலங்கையிலிருந்து 1995 முதல் புலம்பெயர்ந்து, தற்போது அவுஸ்திரேலியாவில், மெல்பேர்ண் நகரில் வாழும் ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளி சுதாகரின் முதலாவது சிறுகதைத் தொகுதி 2007இல் எங்கே போகின்றோம் என்ற தலைப்புடன் வெளிவந்தது. அதன் பின்னரான கடந்த எட்டு வருடங்களில் வெளியான இவரது கதைகளுள் பரிசுபெற்ற பன்னிரு கதைகள், சுதாகரின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பான இந்நூலில் இடம்பெற்றுள்ளன. விளக்கின் இருள், இரண்டு

சம்பவங்கள், இருவேறு பார்வைகள், காட்சிப்பிழை, ஒரு கடிதத்தின் விலை, சேர்ப்பிரைஸ் விசிட், பறக்காத பறவைகள், ஒரு வகை உறவு, அசலும் நகலும், கற்றுக்கொள்வதற்கு, எதிர்கொள்ளல், புதிய வருகை ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. முன்னர் அக்கினிக்குஞ்சு இணையத்தில் இவை பிரசுரமானவை. யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்த கே.எஸ்.சுதாகர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியலாளராகப் பட்டம் பெற்றவர். இவரது முதல் சிறுகதை 1983இல் ஈழநாடு பத்திரிகையில் வெளியாகியது. கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், பத்தி எழுத்து. ஆகிய துறைகளில் எழுதிவரும் இவரது படைப்புகள் ஈழநாடு, முரசொலி, சிந்தாமணி, உதயம், உள்ளம், அக்கினிக் குஞ்சு, பாலம், கலப்பை, ஞானம், யுகமாயினி, தென்றல், செம்மலர் ஆகியவற்றில் வெளியாகியுள்ளன. நோர்வே தமிழ்ச்சங்கம், ஈழம் தமிழ்ச்சங்கம் (மெல்பேர்ண்), அவுஸ்திரேலியா, மரத்தடி-இணையம், இலண்டன் பூபாள ராகங்கள், ஞானம் (2006), தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியவை நடத்திய சிறுகதைப் போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளார்.

9687

சே குவெரா இருந்த வீடு: சிறுகதைத்தொகுப்பு. யோ.கர்ணன். சென்னை 24: வடலி வெளியீடு, டி 2/5, டி.என்.ஹெச பி. தெற்கு சிவன் கோவில் தெரு, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

126 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x14 சமீ.

இந்நூல் திரும்பி வந்தவன், தமிழ்க்கதை, திரும்பி வந்தவள், கதைகதையாம் காரணமாம், அரிசி, சீட்டாட்டம், வேதாளத்திற்கு சொன்ன கதை, சோசலிசம், பாலையடிச் சித்தர், பாவமன்னிப்பு, சேகுவேரா இருந்த வீடு, ஐயனின் எஸ்.எல். ஆர், இரண்டாவது தலைவர் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 13 சிறுகதைகளை உள்ளடக்கியுள்ளது. நாலாம் கட்ட ஈழப்போரின் யுத்த சாட்சிகளுள் ஒருவரான யோ.கர்ணனின் இயற்பெயர் யோகநாதன் முரளி. படைப்பிலக்கியத்தின் கவிதை, சிறுகதை, குறும்படம் போன்ற தளங்களில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இயங்கிவருபவர். இவரது முன்னைய சிறுகதைத்தொகுதி தேவதைகளின் தீட்டுத் துணி என்ற தலைப்பில் வெளியானது.

9688

சேற்றில் மலர்ந்த தாமரைகள்: சிறுகதைத் தொகுப்பு. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். யாழ்ப்பாணம்: இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், 29, ஜம்மா பள்ளிவாசல் ஒழுங்கை, 1வது பதிப்பு, மார்ச் 1982. (யாழ்ப்பாணம்: செட்டியார் அச்சகம்).

(4), 70 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 18x12.5 சமீ.

வ.அ.இராசரத்தினம் அவர்களின் அறிமுகத்துடன் வெளிவந்திருக்கும் இச்சிறு கதைத் தொகுப்பில் திருமதி பரமேஸ்வரி யேசுதாசன் எழுதிய சேற்றில் மலர்ந்த செந்தாமரை, திரு.த.யோகராசா எழுதிய கைமாறு, திரு. செல்வ சபாநாதன் எழுதிய புதுரீச்சர் பள்ளிக்கூடம் போறா, திரு. சி.வி.குணசேகரம் எழுதிய ஒரு

ஆசிரியர் அதிபராகிறார், செல்வி ச.மேரி பெயாற்றிஸ் எழுதிய எதிர்பார்ப்புகள், திருமதி இரஞ்சனி தருமலிங்கம் எழுதிய அவளுக்கு வயது வந்துவிட்டது, திருமதி கோகிலாதேவி மகேந்திரராசா எழுதிய நாளைய உலகின் நாயகர்கள் ஆகிய ஏழு கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124695).

9689

சொக்கன் சிறுகதைகள். சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: நயினை கி.கிருபானந்தா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம்தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xvi, 114 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19.5x14.5 சமீ.

மாற்றம் (அமிர்தகங்கை, தை 1986), மைத்திரி (தாயகம், ஜுன்1986), அழைப்பு (ஆலயமணி, ஆனி 1988), கனவுகள் கலையட்டும் (புத்தெழில், புரட்டாதி 1988), பப்பி (கட்டுரைக் கோவை, 1988), கோடு (ஞாயிறு தினக்குரல், 12.10.1997), சந்திப்பு (சஞ்சீவி, 9.10.1999), முதியோர் வாழ்க (சஞ்சீவி, 10.1.1998), கிழவரும் கிழவியும் (வலம்புரி, 5.3.2004), அப்பாவுக்கு அறளை (வீரகேசரி, 15.4.2004) ஆகிய 10 சிறுகதைகளைக் கொண்ட நூல். மூதறிஞர் சொக்கன் (கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம்), 1944ஆம் ஆண்டில் தனது 14ஆவது அகவையில் தியாகம் என்ற வீரகேசரி சிறுகதையுடன் எழுத்துலகில் பிரவேசித்தவர். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 152945).

9690

டொமினிக் ஜீவாவின் ஐம்பது சிறுகதைகள். டொமினிக் ஜீவா. கொழும்பு 13: மல்லிகைப் பந்தல், 201-1/1 ஸ்ரீ கதிரேசன் வீதி, 2வது பதிப்பு, மார்ச் 2004, 1வது பதிப்பு, நவம்பர் 1996. (கொழும்பு 13: யூ.கே.பிரின்டர்ஸ், 98ஏ, விவேகானந்தா மேடு).

viii, 392 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 955-8250-26-0.

1960ஆம் ஆண்டுக்கான இலங்கை சாஹித்திய மண்டல ஆக்க இலக்கியப் பரிசினை முதன்முதலாகப் பெற்றுக்கொண்ட பெருமைக்குரியவரான மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 50 சிறந்த சிறுகதைகளின் தொகுப்பு இது.

9691

தரிசனம்: சிறுகதைத் தொகுதி வெளியீடு 2012. செல்வசுகுணா (தொகுப்பாசிரியர்). பருத்தித்துறை: வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை, 1வது பதிப்பு, ஜனவரி 2012. (பருத்தித்துறை: எஸ்.பீ.எம். அச்சகம், வி.எம்.வீதி).

viii, 151 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-53921-1-2.

வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையின் வெளியீடாக வெளிவந்துள்ள சிறுகதைத் தொகுப்பு இது. அப்பிரதேச இலக்கியவாதிகளை ஊக்குவிக்கும் வகையில் அவர்களது சிறுகதைகளையும் அவர்களது புகைப்படம் உள்ளிட்ட

வாழ்க்கைக் குறிப்புகளையும் பதிவுசெய்துள்ளனர். இப்படியும் சிலபேர் (புலோலியூர் செ. கந்தசாமி), கோழிக்கறி (குந்தவை), சந்தனம் அக்காவின் பேத்தி (தெணியான்), நல்ல விருந்து (க.நவம்), பிணம் தின்னிகள் (வல்வை ந.அனந்தராஜ்), சவாரி (க.சின்னராஜன்), சுமை (இ.திருத்துவராஜா), யசிமொட்டோவின் ஊதாநிற மீன்கள் (பரன்), இன்னுமோர் உலகம் (கொற்றை பி.கிருஷ்ணானந்தன்), ஆண்மை (அனாதரட்சகன்), முற்றுப்புள்ளியும் சில வினாக்களும் (வசந்தி தயாபரன்), அழியாத தடங்கள் (புலோலியூர் ஆ.இரத்தினவேலோன்), பட்டமரம் (சத்திய மலரவன்), புது வசந்தம் (த.லோகநாயகி), காலங்கள் வரைந்த கோலங்கள் (கி. நவநீதன்), கனவுதேசம் (தென் பொலிகை குமாரதீபன்), சொத்து (சீனா உதயகுமார்) முதலிய கதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் தொகுப்பாசிரியர் செல்வி எஸ்.செல்வசுகுணா, அப்பிரதேசத்தின் கலாச்சார உத்தியோகத்தராவார்.

9692

திசைகாட்டி மரம்: ஈழத்து சிறுகதைகள். வடலி குழுவினர். சென்னை 600078: வடலி வெளியீடு, எண் 6/13, சுந்தரர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

126 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

இலங்கையில் தினக்குரல் பத்திரிகையுடன் இணைந்து சென்னை வடலி பதிப்பகம் மேற்கொண்ட இளம் படைப்பாளிகளுக்கான சிறுகதைப் போட்டியில் பரிசுக் குரியவையாகத் தேர்ந்த கதைகளின் தொகுப்பு இதுவாகும். இனியும் முட்செடிகள் முளைக்கலாம், வெறி, விபச்சாரி, எச்சங்களும் மிச்சங்களும், பைத்தியக்காரியா நான்? மூத்த மாப்பிள்ளை, மனிதம், கைபேசி, மனசு பேசுது, திசைகாட்டி மரம், அம்மம்மா சொன்ன கதை, திருந்திய உள்ளங்கள், குறும்புக்கார பெண் ஆகிய 13 கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கதைகளுடன் கதாசிரியர்களின் பெயர் முகவரியும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236732).

9693

திருக்குறள் கதைகள்: இன்பத்துப்பால் 1161-1250. கே.வி.குணசேகரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2005. (சென்னை 600004: Sri Murugan Offset).

xx, 280 பக்கம், விலை: இந்திய ரூபா 75., அளவு: 18x12.5 சமீ.

ஆசிரியர், கல்வியாளர், என்ற ஆளுமைக்கு அப்பால் படைப்பிலக்கியத்துறையிலும் தன் தடம்பதித்துவரும் நூலாசிரியர் கந்தர் வைத்திலிங்கம் குணசேகரம் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றுகிறார். தமிழர்களின் வாழ்வியல் நூலாகிய திருக்குறளில் உள்ள 1330 குறள் பாக்களுக்கும் பொருத்தமான விளக்கமளிக்கும் வகையில் சிறுகதைகளை எழுதவேண்டும் என்ற முனைப்பில் உருவான பல தொகுதிகளுள் இதுவும் ஒன்றாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 166064).

9694

நந்தியின் சிறுகதைகள். நந்தி (மூலம்), தே.தேவானந்த் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: புனைவகம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xx, 460 பக்கம், விலை: ரூபா 1200., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-0350-07-0.

நந்தி என்ற புனைபெயரின் வழியாக ஈழத்து புனைவிலக்கிய உலகில் நன்கு அறியப்பெற்றவர் பேராசிரியர், வைத்திய கலாநிதி அமரர் செல்லத்துரை சிவஞான சுந்தரம் (30.3.1928-4.6.2005). அவர் எழுதிய 49 சிறுகதைகளையும் தனி நூலாகத் தொகுத்து இப்பெருநூல் வெளிவந்துள்ளது. பின்னிணைப்புகளாக, ஊர்நம்புமா, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம் ஆகிய நந்தியின் நான்கு சிறுகதைத் தொகுதிகள் தொடர்பாக வெளிவந்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. நந்தி பற்றிய நினைவலைகள் என்ற இறுதிப் பிரிவில், இறப்பு என்பது முடிவல்ல (கார்த்திகேசு சிவத்தம்பி), புனைகதை இலக்கியத்துக்குப் புகழ்சேர்த்த படைப்பாளி (என்.சோமகாந்தன்), பல்துறை பேரறிஞர் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (மயிலங் கூடலூர் பி.நடராசன்) ஆகிய தலைப்புகளில் நந்தியின் ஆளுமை பற்றி எழுதப் பெற்ற மூன்று படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

9695

நாவேந்தன் கதைகள். நாவேந்தன் (மூலம்), அசலகேசரி (பதிப்பாசிரியர்). சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, மார்ச் 2014. (சென்னை 77: மணி ஒப்செட்).

154 பக்கம், விலை: இந்திய ரூபா 140., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-83051-24-3.

நாவேந்தன் இலங்கையில் பழந்தமிழ் இலக்கியத்தை அழகு தமிழில் எளிமையாகப் பேசும் தமிழரசுக் கட்சியின் மேடைப் பேச்சாளராகப் புகழ்பெற்றவர். தமிழரசுக் கட்சியின் ஆரம்பம் முதல் அதன் இளைஞர் அணியில் முக்கியஸ்தராகப் பணியாற்றியவர். சுதந்திரன் பத்திரிகையின் முக்கிய எழுத்தாளராகப் பரிணமித்தவர். சிறுகதைகள், கட்டுரைகள் என எழுதிக் குவித்தவர். இவரது சங்கப்பலகை என்ற பத்திரிகையில் நக்கீரன் என்ற பெயரில் அரசியல் கட்டுரைகளை வழங்கியவர். நற்றமிழுக்கு நாவேந்தன் என்று புகழப்பெற்ற இவரது தேர்ந்த 26 சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழரசுக்கட்சியின் தலைவர்களாகவிருந்த அ.அமிர்தலிங்கம், செ.இராசதுரை ஆகியோரின் சமகால நண்பராக விளங்கிய நாவேந்தன் ஆசிரியராகவும், முதலாம்தர அதிபராகவும் கல்வித்துறையில் பணியாற்றியவர். ஓய்வின் பின் யாழ். மாநகரசபையின் பதில் முதல்வராக சிலகாலம் பணியாற்றியவர். வாழ்வு, தெய்வமகன் ஆகிய இரு தொகுதிகளிலும் இடம்பெற்ற சிறுகதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது. சகோதரி, அகலிகை, நம்பிக்கை, துறவியின் காதலி, உழைப்பு, சலனம், விழிப்பு, வாழ்வு, ஒருசொட்டுக் கண்ணீர், ஆசை மயக்கம், போட்டி ஒழிந்தது, பெண், காதல்

வென்றது, தவறு, சுடலையாண்டி ஆகிய கதைகள் வாழ்வு என்ற கதைத் தொகுதியிலிருந்தும், திரை, உணர்ச்சி, பிரசவம், இடைவெளி, கேள்விக்குறி, கடவுள் சாட்சி, அழியாதது, காதல் ஒரு பொய், ஆண்மை, தெய்வ மகன், உலகப்பன் ஆகிய கதைகள் தெய்வ மகன் என்ற சிறுகதைத் தொகுதியிலும் இருந்து பெறப்பட்டுள்ளன.

9696

நாளைய தீர்ப்புகள்: சிறுகதைகள். பன்.பாலா. கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஜூலை 2012. (கொழும்பு: அப்பிள் கிரியேஷன்ஸ்).

x, 70 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-0195-08-4.

பன். பாலாவின் எட்டு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு இதுவாகும். மனித வாழ்வியலை, மனித விழுமியங்களைத் தொட்டுச்செல்லும் இக்கதைத்தொகுதி புரவலர் புத்தகப் பூங்காவின் 29ஆவது நூலாக வெளிவந்துள்ளது. 1970களில் தமிழ் இலக்கிய உலகால் ஈர்க்கப்பட்டவர் பன்.பாலா. சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஊவா மாகாணத்தில் தியத்தலாவையை வாழ்விடமாகக் கொண்டவர். இவரது கதைகளுக்காக 2006-2007 கனகசெந்திநாதன் கதாவிருது, ஊவா மாகாணத் தமிழ் சாகித்திய விழாவில் இலக்கிய விருது என்பனவற்றைப் பெற்றுக்கொண்டவர்.

9697

நானாக நான். சிதம்பரபத்தினி பத்தினியம்மா திலகநாயகம்போல். ஆனைக் கோட்டை: திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல், மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை வீதி, வண் வடமேற்கு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

xxii, 190 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54502-0-1

இந்நூலில் தமிழ் இலக்கியத்துறையில் ஆளுமைமிக்க பெண் படைப்பாளிகளுள் ஒருவரான சிதம்பரபத்தினியின் காணாமல் போனவன், பொடியனும் போய் விடுவானா? இருந்தும் இல்லாத..., தண்ணீரிலே தாமரைப்பூ, நெஞ்சிலே மூண்ட தீ, மெய்தான் அரும்பி..., மாம்பழத்து வண்டு, தேடிவந்த செல்வம், சோதனை யாருக்கு? பாபுஜி வந்தாச்சு.., அறிவியல் அறியுமா? காலத்தின் கோலமாய்..., நானான நானில்லையே ஆகிய 13 சிறுகதைகளும், தொடுவானம் என்ற குறுநாவலும் இடம்பெற்றுள்ளன. தனது சுயத்தை இழந்து பல்வேறு சமுதாய விலங்குகளால் சிறைப்பிடிக்கப்பட்ட யாழ்ப்பாணத்துச் சமூகத்தை விமர்சிப்பதாயும், அழுக்கு களைத் தூய்மைப்படுத்த அறைகூவல் விடுவதாயும் இழந்துவிட்ட உரிமைகளை, பண்பாடுகளை மீண்டும் பெற உத்வேகம் தருவதாகவும் இக்கதைகள் அமைந் துள்ளன. இலங்கை நிர்வாக சேவையில் முதல்தர அதிகாரியாக, யாழ். மேலதிக அரசாங்க அதிபராக, பதில் அரசாங்க அதிபராக உயர்பதவிகளை வகித்து இளைப் பாறியவர் இந்நூலாசிரியர். இவரது கலை இலக்கியப் பங்களிப்புக்காக நல்லூர் பிரதேச செயலகம் 2011இல் கலைஞானச் சுடர் விருதினை வழங்கியிருந்தது.

9698

நிலவும் நினைவும். சிற்பி (இயற்பெயர்: சி.சரவணபவன்). சிதம்பரம்: திரு.கோ. சுந்தரமூர்த்தி, 50, வடக்குத் தேர் வீதி, 1வது பதிப்பு, மே 1964. (சென்னை 1: ராஜன் எலெக்ட்ரிக் பிரஸ், 7, கங்குராம செட்டித் தெரு).

vi, 136 பக்கம், விலை: இந்திய ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

கலைச்செல்வி சஞ்சிகையின் கௌரவ ஆசிரியராக விளங்கிய சிற்பி- சி.சரவணபவன் அவர்களின் முதலாவது சிறுகதைத் தொகுதி இது. இதில் பிறந்த மண், கோவில் பூனை, நிலவும் நினைவும், திருட்டுப்பணம், நீலப்பட்டு, வெறி முறிந்தது, காதல் பலி, உயிரோவியம், நிறைவு ஆகிய சிறுகதைகள் அடங்கியுள்ளன. இந்நூலுக்கான கருத்துரையை சிற்பியின் ஆதர்ச எழுத்தாளரான எழுத்தாளர் அகிலன் வழங்கி யுள்ளார். 28.2.1933இல் பிறந்த நூலாசிரியர் யாழ்ப்பாணம், திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

9699

நினைவு நல்லது வேண்டும்: சிறுகதைத் தொகுப்பு. ப.விஷ்ணுவர்த்தினி. யாழ்ப் பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, ஆவணி 2013. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ் பிரின்டர்ஸ், நல்லூர்).

xiv, 93 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-4676-09-1.

இச்சிறுகதைத் தொகுப்பில், சொந்தமில்லாத பந்தங்கள், திருப்பம், நினைவு நல்லது வேண்டும், ஊமைக்காயம், மெழுகுவர்த்தி, கடவுளின் குழந்தைகள், எந்தையும் தாயும், விட்டுக்கொடுப்பு, விழித்திரு, நாதியில்லாப் பிறவியிலே, மறப்பேனோடி, விட்டில்கள் ஆகிய 12 கதைகள் இடம்பெற்றுள்ளன. 28ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் ஆசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். இதிலுள்ள சொந்தமில்லாத பந்தங்கள் என்ற கதை 2010இல் உதயன் பத்திரிகையின் 25ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெற்ற சிறுகதைப் போட்டியில் மூன்றாம் பரிசைப் பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் உளவியல்துறையில் பட்டம்பெற்ற பரணீதரன் விஷ்ணுவர்த்தினி ஜீவநதி இலக்கியக் குடும்பத்தைச் சேர்ந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233247).

9700

பகவானின் பாதங்களில்: சிறுகதைத் தொகுப்பு. மு.கனகராசன். மானிப்பாய்: மு.கனகராசன், அருளகம், ஆஸ்பத்திரி ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1980. (கொழும்பு 2: வட் பிரின்ட், 96, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

121 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13.5 சமீ.

மு.கனகராசனின் தேர்ந்த சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். இதில் பகவானின் பாதங்களில், நிவேதனம், தீபத்தை நோக்கி, உயிர்ப்பு, புடம், சாளரங்கள், சுண்டுவிரல் மெட்டி, தீ, கல்யாணிகள், நாய்கள், முழுவியளம் ஆகிய தலைப்புகளில்

அவ்வப்போது கலைச்செல்வி, வீரகேசரி, விவேகி, ஈழநாடு, சுதந்திரன், அஞ்சலி, மல்லிகை, தேசபக்தன் ஆகிய இதழ்களில் வெளியாகியவை. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118848).

9701

பிறந்துவிட்ட புதுயுகத்தில்: உருப்பெறும் உணர்வுகள் (சிறுகதைத் தொகுப்பு). சந்திரா தனபாலசிங்கம். மானிப்பாய்: சந்திரா தனபாலசிங்கம், சாயி இல்லம், மாப்பியன் மில் லேன், சுதுமலை தெற்கு, 1வது பதிப்பு, ஆவணி 2013. (யாழ்ப் பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ், இல.424, காங்கேசன்துறை வீதி).

xii, 112 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-44401-0-4.

சந்திராவின் 19 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இது. பிறந்துவிட்ட புது யுகத்தில், உருப்பெறும் உணர்வுகள், சில மனிதர்கள், விதிவழிப் பயணங்களில், மூன்றாவது அதிசயம், துன்பப்பட்டோர் பேறுபெற்றோர், கிழக்கு வெளுக்கும், மதுரபாவ விந்தைகள், ஆச்சி நல்லூர் போகிறாள், சங்கரியப்பா, யாவும் கற்பனை யல்ல, இது ஒரு தொடர்கதை, திறந்தாய் வாழி, யோசிக்கவேண்டியுள்ளது, யோகினி, ஞானோதயம், கல்லும் கதை சொல்லும், யுக அவதாரன், அணில் முதுகில் கோடுகள் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இவரது முன்னைய சிறுகதைத்தொகுப்பு "உருப்பெறும் உணர்வுகள்" என்ற தலைப்பில் 2001இல் வெளிவந்தது. (நூல்தேட்டம் பதிவிலக்கம் 1597). (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234135).

9702

பிறைப் பூக்கள். அ.ஸ.அப்துஸ்ஸமது (தொகுப்பாசிரியர்). பாணந்துறை: இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகம், ஹேனமுல்லை, 1வது பதிப்பு, மே 1979. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

185 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 21.5x14 சமீ.

நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகா நாடு இலங்கையில் மூன்றுநாள் விழாவாக 1979, ஜுன் 29, 30 மற்றும் ஜுலை 1ம் திகதிகளில் நடைபெற்ற வேளையில் ஈழத்து முஸ்லிம் சிறுகதை மலராக இந் நூல் ஈழத்து முஸ்லிம் சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளை உள்ளடக்கி யதாக வெளியிடப்பட்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள ஈழத்து இஸ்லாமிய சிறுகதைகளை கொத்தன் வி.எம்.இஸ்மாயில், அ.ஸ.அப்துஸ்ஸமது, ஜுனைதா ஷெரீப், எம்.ஐ.எம். தாஹிர், எம்.பி.எம். நிஸ்வான், எஸ்.எல்.எம். ஹனிபா, வை. அஹமத், எஸ். முத்துமீரான், நாவல்நகர் ப.ஆப்தீன், கொழும்பு எம். ஏ. றஹீமா, திக்குவல்லை கமால், கலைவாதி கலீல், எம்.ஐ.எம். முஸம்மில், மருதூர் அலிக்கான், எம்.எச்.எம்.அஷ்றஃப், நயீமா சித்தீக், எம்.எச்.எம்.ஷம்ஸ், மருதூர்கனி, எம்.ஏ.எம்.ஏ. வாஹித், வேதாந்தி, அக்கரையூரன், மொயின் சமீன், மருதூர் ஏ.மஜீத், நீள்கரை நம்பி, மருதூர் வாணன், எம்.எல்.எம்.மன்சூர், மாத்தறை ஹஸீனா வஹாப் ஆகியோர் எழுதியிருக்கிறார்கள். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 20538).

9703

மண்ணின் கனவுகள். துவைத்திலிங்கம். யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், இணை வெளியீடு, கொக்குவில் கல்யாணி பிரசுரம், கலைச்சோலை, செம்பியன் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கொக்குவில்: அபிராமி அச்சகம், செம்பியன் ஒழுங்கை).

(7), 180 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 21x14 சமீ.

ஈழத்து முன்னோடி சிறுகதைப் படைப்பாளிகளுள் ஒருவரான துரையப்பா வைத்திலிங்கம் (துவை) எழுதிய 19 சிறுகதைகளின் தொகுப்பு. 1939இல் பிறந்த இவர்அரச நிர்வாக சேவையில் உயர்பதவி வகுத்த சிறிய எண்ணிக்கையான தமிழர்களுள் ஒருவர். யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவர். யாழ்ப்பாணம், கலட்டியில் பிறந்த இவர், தாவடி-கொக்குவிலை புகுந்த மண்ணாகக் கொண்டவர். இத்தொகுப்பில் சுட்டிப்பிள்ளையார் (வீரகேசரி 1976), முறைப்பெண்(சுதந்திரன் 1970), கனவுகள் கலைகின்றன (வீரகேசரி 1977), சலனம் (வீரகேசரி 1977), மௌனம் (வீரகேசரி 1977), கிணறு (ஈழநாடு 1985), இன்றொரு நாள் போதுமா (ஈழநாடு 1986), முற்பகலும் பிற்பகலும் (1984), தீர்ப்பு (வீரகேசரி 1982), ஒரு காகிதப்பூ கருக்கட்டுகிறது (வீரகேசரி 1980), நியாயங்கள் (சிரித்திரன்), நிதர்சனங்கள் (உதயன் 1986), எங்கே போகின்றோம், பிரபல்யம், ஆலடி வயிரவர், உறவுகளும் எல்லைக் கோடுகளும், கண்ணாடிக்கு எத்தனை முகங்கள், தூரத்து நட்சத்திரங்கள், எதிரொலி ஆகிய தலைப்புகளில் இதிலுள்ள சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120846).

9704

மண்ணின் முனகல்: சிறுகதைகள். கே.ஆர்.டேவிட். கொழும்பு 13: கு.வி.அச்சக வெளியீடு, 58, கிறின் லேன், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2012. (கொழும்பு 13: கு.வி.அச்சகம்).

xii, 132 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14.5 சமீ.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாகத் தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் ஒரு நம்பிக்கையுடன் பல தளங்களில் இயங்கி வருபவர் கே.ஆர்.டேவிட். அறுபதுகளிலேயே சிறுகதை உலகில் பரிச்சயமான இவரது பெயர் பூண்டு லோயாத் தோட்டமொன்றில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த வரலாறு அவளைத் தோற்று விட்டது என்ற நாவல் வெளிவந்ததன் பின்னர் மிகவும் பிரபல்யமானது. மண்ணின் முனகல் என்ற இந்நூலில் இவரது தேர்ந்த சிறுகதைகளான ஊர்வலம் செல்கிறது, கஸ்தூரி, இதயங்கள் கரைகின்றன, அதிர்வு, பாண் போறணை, உணர்வுகள் கட்டுடைத்தால், மிசின் பெட்டி, நாய் மூளை, சிறைக்கதவுகள் திறந்து கிடக்கின்றன, கண்ணீர் கொந்தளிக்கும், மண்ணின் முனகல், நான் கேவலமானவன் அல்ல ஆகிய பன்னிரு கதைகள் இடம்பெற்றுள்ளன. அடிமட்ட மக்களின் வாழ்வியலில் உள்ள துயரங்கள் இவரது மனிதத்தைக் குத்த

அந்தத் துடிப்புகளின் படிமங்களாக இவரது கலைப் படைப்புக்கள் உருவம் பெற்றிருக்கின்றன.

9705

மறுமலர்ச்சிக் கதைகள். செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா), (தொகுப்பாசிரியர்). திருகோணமலை: கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு-கிழக்கு மாகாணம், 1வது பதிப்பு, டிசம்பர் 1997. (திருகோணமலை: அச்சகத் திணைக்களம், வடக்கு-கிழக்கு மாகாணம், லவ் லேன், உப்புவெளி).

x, 103 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 24.5x15.5 சமீ.

மறுமலர்ச்சி என்ற ஈழத்துச் சஞ்சிகை 1946ம் ஆண்டு பங்குனி மாதம் வெளிவரத் தொடங்கியது. 1948 வரை 24 இதழ்கள் வெளியாகின. குறுகிய கால இதழான போதிலும், ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் என்றொரு காலக் கணிப்பிற்கு இவ்விதழ் வித்தூன்றியது. மறுமலர்ச்சியின் ஆசிரியர் குழுவில் தி.ச.வரதராசன் (வரதர்), கா.மதியாபரணம், நாவற்குழியூர் நடராசன், ச.பஞ்சாட்சர சர்மா, க.இ.சரவணமுத்து ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ஈழத்து இலக்கியப் புனைகதைத் துறையின் மறுமலர்ச்சிக் காலகட்டத்துச் சிறுகதைகளில் சிறப்பானவை என ஆசிரியர் கருதிய 25 சிறுகதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. இவற்றை எழுதிய காலகட்டம் 1946-48 என்பதையும் எழுதியவர்கள் தமது இளம் வயதில் இவற்றை ஆக்கியுள்ளனர் என்பதையும் இச்சிறுகதைத் தொகுதியைப் படிப்பவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156269, 123916).

9706

முட்புதரில் பூத்த புதுமலர்: கிறிஸ்தவ சிறுகதைகள். எஸ்.சி.இரத்தினசிங்கம் (புனைபெயர்: இந்துமதி). யாழ்ப்பாணம்: ராதவல்லி வெளியீடு, 1வது பதிப்பு, வைகாசி 2006. (யாழ்ப்பாணம்: சுரபி பதிப்பகம், 267, நாவலர் வீதி).

40 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 50., அளவு: 21.5x14.5 சமீ.

அணிந்துரை, வாழ்த்துரை, பதிப்பரை, ஆசிரியர் உரை ஆகியவற்றைத் தொடர்ந்து, ஜெபவல்லமை, யார் பாவி, சளைக்காத ஜெபவீரர், விசுவாசக் கப்பல், கல்லறைப் பூக்கள், முட்புதரில் பூத்த புதுமலர், மாசில்லாத அன்பு, ஊழியம் ஆகிய எட்டு கிறிஸ்தவ மதம்சார்ந்த கதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. அரியாலை மேற்கில் 1936இல் பிறந்தவர் எஸ்.சி.இரத்தினசிங்கம். 1957இல் நில அளவைத் திணைக்களத்தில் இணைந்து1990இல் ஓய்வுபெற்றவர். 1960இல் நினைவு என்ற சிறுகதைமூலம் இலக்கிய உலகில் அறிமுகமானவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 165507).

9707

முடிவில் தொடங்கும் கதைகள். கெக்கிறாவ ஸஹானா. (இயற்பெயர்: ஏ.எஸ். ஜஹனாறா). கெக்கிறாவ : ஏ.எஸ்.ஜஹனாறா (கெக்கிறாவ ஸஹானா), 32/21,

செக்குபிட்டிய தெற்கு, செக்குபிட்டிய, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்ட்ஸ், 44 ஸ்டேஷன் வீதி).

ix, *89 பக்கம், விலை: ரூபா 175., அளவு:* 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-51679-5-6.

விஞ்ஞான, ஆங்கில, தமிழ்மொழி ஆசிரியையாகப் பணியாற்றும் கெக்கிறாவ ஸஹானா வட-மத்திய மாகாணத்தில் இருந்து ஈழத்துப் படைப்புலகச் சூழலுக்கு காத்திரமான இலக்கியப் பங்களிப்பினை வழங்கிவருபவர். கோடரிக் காம்புகள், முடிவில் தொடங்கும் கதைகள், சுவர்கள், பார்வை, திரை, பனிக்கட்டி உருகிடின், பிச்சைக்காரன், கறுப்பும் வெள்ளையும், சங்கிலித் தொடர், பெண்மை-உண்மை, காட்டு நெடுவான நிலவு, சாக்கடை மேடையில் ஒரு மாநாடு ஆகிய தலைப்பில் இவரால் அவ்வப்போது எழுதப்பெற்ற பன்னிரு கதைகள் இந்நூலை அலங்கரிக் கின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233367).

9708

முரண்பாடுகள். *இதயராசன். கொழும்பு 6: தேசிய கலை இலக்கியப் பேரவை, இல. 571/15, காலி வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2010. (கொழும்பு 6: எஸ்.பிரின்ட்).*

xvi, *108 பக்கம், விலை: ரூபா 250., அளவு:* 21.5x14 *சமீ.,* ISBN: 978-955-8637-30-2.

இந்நூல் இதயராசனின் 15 சிறுகதைகளின் தொகுப்பு. பத்துச் சதம், ஜெயா, நம்பிக்கை, செய்வினை, முரண்பாடுகள், கனகலிங்கம், தபால், தர்மபுரம், மரங் கொத்தி, வெள்ளைச்சி, விஷகடி வைத்தியம், தியாகம், வைரவி ஆச்சி, மைதானம், விதைப்பு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. நல்ல மனிதருள் உறைந்துகிடக்கும் போராட்ட உணர்வை வெளிப்படுத்துகின்ற கதை நம்பிக்கை. போரின் பயனாக அங்கவீனமான ஒரு பெண் தன் வாழ்வைச் சமூகப் பயன் மிக்கதாக அமைப்பதற்குக் காட்டும் மன உறுதியைக் கூறுகின்ற இக்கதை இக்காலத்தின் தேவை உணர்ந்து எழுதப்பட்டது. இனத்துவேஷம் படமெடுத்தாடும் ஒரு சமூகச் சூழலில் மக்களுக்கு நிதானத்தை ஊட்டும் வகையில் அமைந்துள்ள ஜெயா என்ற கதை சிங்களத்துக்கு மொழிபெயர்க்கப்படவேண்டும் என்று பேராசிரியர் சி.சிவசேகரம் இந்நூலில் முன்மொழிகின்றார். வெள்ளைச்சி, விஷகடி வைத்தியம், ஆகிய கதைகள் உச்சமான இலக்கியச் செழுமையைப் பெற்றன. முரண்பாடுகள், நம்பிக்கை, ஜெயா ஆகியன கோட்பாட்டுச் செழுமை மிக்கனவாயுள்ளன. மொத்தத்தில் இச்சிறுகதைத் தொகுப்பு வன்னிப் பிரதேசத்தின் குருதிதோய்ந்த சமவாழ்வின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றமாகக் காட்சியளிக் கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 214560).

9709

மௌனங்கள் கலையும்போது. *வின்சென்ட் பற்றிக்ஸ் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: நான் வெளியீடு, அமலமரி தியாகிகள் சபை, 1வது பதிப்பு, நவம்பர் 1985. (யாழ்ப்பாணம்: சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி).*

50 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 5.00, அளவு: 21x14 சமீ.

நான் உளவியல் சஞ்சிகை வெளியீட்டாளர்களின் முயற்சியில் உருவான சிறுகதைத் தொகுப்பு இதுவாகும். மாறியது நெஞ்சம் (கமலா இளங்கோவன்), மௌனங்கள் கலையும்போது -1 (யாழ். பாலன்), மௌனங்கள் கலையும்போது -2 (ஆனந்தி செந்தில், ஏழாலை), மௌனங்கள் கலையும்போது -3 (வளவை வளவன்), உன்னை பிரிகின்றேன் (இ.ஸ்ரலின், உரும்பிராய்), மௌனங்கள் கலையும்போது -4 (றிமா), மௌனங்கள் கலையும்போது -5 (ஜெனகமகள் சிவஞானம்), மௌனங்கள் கலையும்போது -6 (சௌந்தரன்), ஒரு மேதையும் ஒரு பேதையும் (ஆனந்தி செந்தில்), சுருதி மாற்றம் (ஜெனகமகள் சிவஞானம்) ஆகிய சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 83503).

9710

வடக்கே போகும் மெயில். சூரன் ஏ.ரவிவர்மா. தெகிவளை: காயத்ரி பப்ளிக் கேஷன்ஸ், தபால் பெட்டி எண் 64, 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (தெகிவளை: காயத்திரி அச்சகம்).

80 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-8741-64-1.

வடமராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகக் குரல்கொடுத்துப் போராடிய சூரன் அவர்களின் முதல் பேரனான ஏகாம்பரம் ரவிவர்மாவின் சிறுகதைத் தொகுதி. 16 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மக்களின் அகவாழ்வின் நெருக்கடிகளையும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் நுட்பமான முறையில் சொல்லும் கதைகள் இவை. பெரும்பாலானவை இன முரண்பாட்டையும், யுத்த விளைவுகளையும் தொட்டுச்செல்பவை. கிராமியப் பண்பாட்டுக் கோலங்களையும் படம்பிடித்துக்காட்டுகின்றன. தீவிரவாதத்தை அடக்க முற்படுபவர்களினால் அப்பாவிகள் எவ்வாறெல்லாம் பாதிப்புக்குள்ளாகின்றார்கள் என்பதை உணர்வுபூர்வமாகத் துணிவோடு ஆசிரியர் சொல்லியிருக்கிறார். பதினாறு கதைகள் கொண்ட இத்தொகுப்பின் தலைப்புக்கதை வடபகுதியில் வாழும் மக்கள் பற்றியது. வடபகுதி மக்கள் ஒரு ஒட்டுண்ணி வாழ்க்கையையே காலம்காலமாக பின்பற்றி வாழ்ந்து வருகிறார்கள் என்பதை குறியீட்டுக் கதையாகக் காட்டியுள்ளார். போனால் போகட்டும் என்ற கதையில் வரும் வேலுச்சட்டம்பியார் சைக்கிளையும் இயந்திரத்தையும் தொலைத்துவிட்டு சங்கடப்பட்டுவிட்டு "மனிசனே போறான் இடையில் இது என்ன பெரிசா" என்று மனதை சமாதானப் படுத்துகிறார். மரணங்கள் மலிந்த பூமியின் சாமானியனின் குரலாக இது அமைகின்றது. மகளும் பேரப்பிள்ளையும் வயதான பேத்தியாருக்குப் பணிவிடை செய்வதும் சின்னச்சின்ன ஆசைகளைச் சுமந்து வாழ்வதும் பொன்னுக்கிழவி என்ற கதையினூடாக பதியப்படுகின்றது. மிலேனியம் அப்பா, என்னைத் தெரியுமா, செல்லாக்காசு, கொக்குவெடி ஆகிய கதைகள் நகைச்சுவை உணர்வைத் தூண்டும் வகையில் உள்ளன. மரண பயத்துடன் நாட்களைக்கடத்தும் அப்பாவி மக்களின் உணர்வுகளை தாலி பாக்கியம் கதையில் காட்டுகின்றார். இவரது கதைகள் வாசகரைத் தனது உணர்வோடு ஒன்றிணைத்து கூடவே அழைத்துச்

செல்வதாக அமைந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233654).

9711

வண்டி முன்னாக மாடு பின்னாக (உருவகக் கதைகள்). ச.வே.பஞ்சாட்சரம். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2012. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

xvi, 128 பக்கம், விலை: இந்திய ரூபா 55., அளவு: 18x12.5 சமீ.

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்கள் அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதிவந்த நாற்பது உருவகக்கதைகள் இந்நூலில் தொகுக்கப்பெற்றுள்ளன. வந்தேறிகளின் வஞ்சனைகள் என்ற கதை போன்ற சமகால அரசியல் நெடிமிகுந்ததும், அவ்வரசியல் யதார்த்தங்களை நாசூக்காக உருவகப்படுத்துவதும் இந்நூலிலுள்ள உருவகக் கதைகளின் சிறப்பாக அமைகின்றன. சமூகப் பிரச்சினைகளை விலங்குப் பாத்திரங்களின் ஊடாக அணுகியும் ஆசிரியர் அலசியுள்ளார். சுன்னாகம், இணுவில் மேற்கைச் சேர்ந்த ச.வே.பஞ்சாட்சரம் தனது 23ஆவது வயதில் (1962) பாடிய எழிலி என்ற காவியத்துக்காக 1965இல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றவர். யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியராக இருந்த வேளையில் தொன்னூறுகளில் தனக்கென இலக்கிய வேட்கைகொண்ட ஒரு மாணாக்கர் பரம்பரையையே உருவாக்கியிருந்தவர்.

9712

வாழ்க்கைப் பயணம்: சிறுகதைத் தொகுப்பு. முருகேசு ரவீந்திரன். யாழ்ப்பாணம்: நண்பர்கள் வட்டம், யாழ்.இந்துக் கல்லூரி உயர்தரம் 1985, 1வது பதிப்பு, ஏப்ரல் 2012. (கொழும்பு: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).

115 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-54221-0-9.

இந்நூலில் ரவீந்திரன் எழுதிய பாசம், மாற்றம், பிறந்த மண், சின்ன அரும்பு, புள்ளிக்கோழி, அந்திமம், மீட்சி, வேதனை, வாழ்க்கைப் பயணம், தயக்கம், மறக்க முடியெல்லை, இதம் ஆகிய தலைப்புகளிலான 12 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகப் பணியாற்றும் முருகேசு இரவீந்திரன், எழுத்துத் துறையிலும் ஆர்வம் மிக்கவர். காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். 1993இல் வானொலியில் ஒலிபரப்பாகிய நாளைய சந்ததி நிகழ்ச்சியில் கலந்து சிறப்பித்த ரவீந்திரன் 1994இல் வானொலி நாடகக் கலைஞராகத் தேர்வுசெய்யப்பட்டார். கல்விச் சேவையில் வாராந்தம் ஒலிபரப்பாகும் ஆய்வரங்கம் நிகழ்ச்சியை நடத்துவதில் வெற்றிகண்டவர். வீரகேசரியின் ஒப்பு நோக்காளராகப் பணியாற்றிய இவர், 1997இல் வானொலியின் பகுதி நேர அறிவிப்பாளராகிப் பின் 1999இல் செய்தி வாசிப்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டவர்.

(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 225889).

9713

விரல்களற்றவனின் பிரார்த்தனை. அஷ்ரஃப் சிஹாப்தீன். வத்தளை: யாத்ரா வெளியீடு, 37, ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, தன்கந்த ரோட், மாபோல, 1வது பதிப்பு, ஜனவரி 2013. (தெகிவளை: ஏ.ஜே.பிரின்டர்ஸ், 44, ஸ்டேஷன் வீதி).

xx, 127பக்கம், விலை: ரூபா 300., அளவு: 19.5x14 சமீ., ISBN: 978-955-8448-08-3.

ஆசிரியரின் அண்மைக்காலச் சிறுகதைகளின் தொகுப்பு. நாய்ப்பாசம், வெள்ளை வேன், வைத்தியம், சட்டத்தால் ஆகாதது, பூனைக்காய்ச்சல், டல் கோப்பி, விரல்களற்றவனின் பிரார்த்தனை, அவ்வெண்ணிலவில், அறுபத்தைந்தாம் கலை, அது, ரமளானில் ஒரு பகலுணவு, ஆசியாவின் அதிசயம், சுபியானின் சாகசங்கள், கல்லும் கனியாகும், பட்டாக்கத்தி மனிதர்கள், நம்பிக்கைத் துரோகம் ஆகிய 16 கதைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233370).

9714

விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள். A.M.ரியாஸ் அஹமத். கொழும்பு 2: மூன்றாவது மனிதன் பதிப்பகம், 37/14 வொக்சோல் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஜனவரி 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xi, 128 பக்கம், விலை: ரூபா 160., அளவு: 21.5x14.5 சமீ.

இச்சிறுகதைத் தொகுதியில், விலங்கு நடத்தைகள், தறு, கிருஷ்ணபிள்ளை, குரங்குகளின் ராஜ்ஜியத்தில் ஓணான்கள், படகு அல்லது ஜெயபால், பாம்புகள், பச்சைக்கொலை, மழுங்கடிக்கப்பட்ட விதைகள், குளங்கள், கூண்டுகள், சந்தன, மந்திரச் சேவல்கள் விலங்குகள் மிருகங்கள், செருப்பு, மாயமான், கடலாமைக் குஞ்சுகள் ஆகிய தலைப்புகளில் அமைந்த பதினாறு சிறுகதைப் படைப்புகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 132488).

9715

வேட்டைத்தோப்பு: சிறுகதைகள். கருணாகரன். சென்னை 600 024: கயல் கவின் புக்ஸ், 28, (பழைய எண் 20), டாக்டர் அம்பேத்கர் சாலை, கோடம்பாக்கம், 1வது பதிப்பு, ஜனவரி 2014. (சென்னை 600 005: சாய் தென்றல் பிரிண்டர்ஸ்).

191 பக்கம், விலை: ரூபா 170., அளவு: 21.5x14 சமீ.

வேட்டைத்தோப்பு, கலசம், வேட்டை, நெருப்புக்காடு, வாசல்கள் ஆயிரம், உடைவு, காலம், கண்ணில் முளைத்த முள்வனம், வம்சக் கனவு, கருமையில் படரும் ஒளி, படகு, எலிகள் வாழ்ந்த புத்தகக் கட்டுகள், தேவன் வருவார், பரிசு ஆகிய 14 கதைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. இதில் வேட்டைத் தோப்பு என்ற கதை முன்னர் பனங்காடு என்ற பெயரில் பிரசுரமானது. வம்சக் கனவு, காலம், கண்ணில் முளைத்த முள்வனம், கருமையில் படரும் ஒளி ஆகிய

கதைகள் பிரஹலாத ஹேமந்த் என்ற புனைபெயரிலும், வேட்டை என்ற கதை காஞ்சனா என்ற புனைபெயரிலும் பிரசுரமானவை. கிளிநொச்சியில் வாழும் முன்னாள் போராளியான கருணாகரன் உணர்வுகளைத்தூண்டும் தன் கவிதை களாலும் நன்கு அறியப்பெற்றவர். இவரது படைப்புகளில் நமது மண்ணின் மக்களின் தெளிவாகப் புலப்படாத சில காட்சிப்படிமங்கள் துலக்கமாக விவரிக்கப் பட்டிருக்கும். போர்க்காலத்தில் எழுதப்பெற்ற கதைகள் இவை. போர் தீவிரம் பெற்றிருந்த ஒரு காலத்தில்- வன்னியில் எல்லா வழிகளும் பயணங்களும் பாதைகளும் போர்க்களத்திற்கே என்று திணிக்கப்பட்டிருந்த ஒரு தருணத்தில் அது பற்றிப் பேசுவதற்கே அஞ்சிய வேளைகளில் உருவாகிய உள்ளக் குமுறல்களே இங்கு சிறுகதைப் படைப்பிலக்கியப் பதிவுகளாகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236585).

894.8(5) தமிழ் நாவல்கள், குறுநாவல்கள்

9716

அசோகனின் வைத்தியசாலை (நாவல்). நடேசன். அவுஸ்திரேலியா: N&S Nadesans PTY (Australia), 9, Prospector Court, Wheelers Hill, Victoria 3150, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (தமிழ்நாடு: கருப்பு பிரதிகள், B.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை 600005).

404 பக்கம், விலை: இந்திய ரூபா 300., அளவு: 22.5x14.5 சமீ.

அசோகச் சக்கரவர்த்தி மிருகங்களுக்காக ஒரு வைத்தியசாலையை நிறுவியிருந்தார் என்பது வரலாறு. இந்நூலின் தலைப்பு இதனைப் பிரதிபலிக்கின்றது. ஒரு மிருகவைத்தியசாலையில் பணிபுரியும் சிவாவின் அனுபவங்களே இந்நாவலின் கதையம்சம். பொதுவாகத் தமிழில் பேணப்பட்டுவரும் தமிழ்ச் சமூகம் பற்றிய புனித அடையாளங்களையும் இயல்புகளையும் இந்நாவல் மறுக்கின்றது. இதில் வருகின்ற தமிழ்ப் பாத்திரங்கள், தாங்கள் வாழ்கின்ற காலத்தின், சூழலின் நிலைமைகளின் தாற்பரியங்களை ஏற்றும் அனுசரித்தும் விலகியும் மறுதலித்தும் ஒத்தோடியும் வாழ்கின்றன. மிருகவைத்தியசாலை ஒரு அறியப்படாத தனியுலகம். நோயுற்ற மிருகங்கள் வந்தபடியே உள்ளன. அவை ஒவ்வொன்றும் தெளிவான குணங்கள் கொண்ட ஆளுமைகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களுக்கும் அவற்றுக்குமான உறவும் பல உள்ளோட்டங்களைக் கொண்டது. மேலைத்தேய வாழ்நிலை, தமிழ்ச் சமூகத்தில் இது ஒரு மாயையாகக் கூட தோற்றமளிக்கலாம். இக்கதைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிச் செல்லும் இந்நாவல் ஒரு கட்டத்தில் இரண்டு எண்ணங்களை நோக்கிச் செலுத்துகின்றது. ஒன்று-இந்த வாழ்க்கை மனிதர்களால் மட்டும் ஆனது அல்ல. மிருகங்களும் கூட வாழ்க்கையின் பிரஜைகளே என்ற பார்வை. இன்னொன்று இங்கே மிருகங்கள் எனச் சொல்லப்பட்டிருப்பவை உண்மையிலேயே ஐந்தறிவு மிருகங்கள் தானா என்ற எண்ணம். இவ்விரு கோணங்களும் இந்நாவலை இருவேறு வாசிப்புச் சாத்தியங்களை நோக்கிச் செலுத்துகின்றன. அதுவே இந்நாவலின் அழகியலின்

வெற்றி. நொயல் நடேசன், தனது வண்ணாத்திக்குளம் என்ற முதல் நாவலின் மூலமே ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பெற்றவர். இந்நாவல் ஆங்கிலத்தில் Butterfly Lake என்ற பெயரிலும் சிங்களத்தில் சமணலவெவ என்ற பெயரிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வெளிவந்த இரண்டாவது நாவலான "உனையே மயல் கொண்டு" ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அசோகனின் வைத்தியசாலை இவரது மூன்றாவது நாவலாகும்.

9717

ஆயுத எழுத்து: நாவல். சாத்திரி (இயற்பெயர்: கௌரிபால் சிறி). தமிழ்நாடு: திலீபன் பதிப்பகம், 1வது பதிப்பு, 2015. (தமிழ்நாடு: அச்சக விபரம் தரப்படவில்லை).

392 பக்கம், விலை: இந்திய ரூபா 400., அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம், மானிப்பாயில் பிறந்த கௌரிபால் சிறி, 1984ஆம் ஆண்டு தனது பாடசாலைப் பருவத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்போடு தன்னை இணைத்துக் கொண்டதன் மூலமாக ஈழ விடுதலைப் போரின் அங்கமானவர். 2001ஆம் ஆண்டுவரை பதினேழு வருடங்கள் அந்த அமைப்பின் பல பிரிவுகளிலும் உள்நாட்டு வெளிநாட்டு கட்டமைப்பிலும் பணியாற்றியுள்ளார். சாத்திரி என்கிற புனைபெயரில் பல வருடங்களாக தனது போராட்ட கால அனுபவங்களையும் சிறுகதைகளாகவும் கட்டுரைகளாகவும் தொடர்ச்சியாக ஒருபேப்பர் உள்ளிட்ட ஊடகங்களில் எழுதி வருகிறார். அவரது போராட்ட அனுபவங்களில் சில இங்கே ஆயுத எழுத்தாக நாவல் உருவில் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக இலங்கையில் சுதந்திர தமிழீழத்திற்காக ஆயுதப் போராட்டம் நடந்து முடிந்திருக்கும் நிலையில், அப்போராட்டத்தில் நேரடித் தொடர்புகொண்டிருந்த சாத்திரி தான் கண்டறிந்த, கேட்டறிந்த, பார்த்துணர்ந்த முக்கியமான பல சம்பவங்களை இந் நாவலில் பதிவுசெய்திருக்கிறார். 1983ம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடங்கும் இந்நாவலில் பெயரற்ற கதாநாயகனாகத் தன்னையே உருவகப்படுத்தி விடுதலைப் போராட்டம் சார்ந்த வாக்குமூலமாகச் சம்பவங்களைச் சொல்லியிருக்கிறார்.

9718

இருட்டு மனிதர்கள். முருகேசு நந்தகுமார். வவுனியா: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், 1வது பதிப்பு, ஐப்பசி 2013. (வவுனியா: அகரம் பிரிண்டர்ஸ், கந்தசுவாமி கோவில் வீதி).

128 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 17.5x12.5 சமீ., ISBN: 978-955-44699-0-7.

ஈழத்தின் சமகால சமூக நிலைமைகளை ஆவணப்படுத்தும் வரலாற்றுக் குறு நாவலாக இது எழுதப்பட்டுள்ளது. கொள்ளைகளைத் தடுப்பதற்காக விழிப்புக் குழுக்களாக இயங்கிய அனைவருக்கும் இந்நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236919).

9719

உம்மத்: நாவல். ஸர்மிளா ஸெய்யித். தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600005: மணி ஒப்செட்).

431 பக்கம், விலை: இந்திய ரூபா 350., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82033-21-9.

கிழக்கிலங்கையின் ஏறாவூர் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் ஸர்மிளா ஸெய்யித். இதழியல், கல்வி முகாமைத்துவம், உளவியல் துறைகளில் பயின்றவர். சமூகச் செயற்பாட்டாளரான இவர் ஊடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர். சிறகு முளைத்த பெண் என்ற கவிதைத் தொகுப்பின்வழியாக 2012இல் முதல் நூலை வெளியிட்ட இவரது இரண்டாவது நூலும் முதலாவது நாவலும் இது. உம்மத் - போருக்குப் பிந்தைய ஈழத்தின் இருண்ட காலங்களில் பெண்கள் படும் பாடுகளின் கதை. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த யுத்தம் மனிதர் களிடையே திணித்த அவலத்தையும் நெருக்கடிகளையும் சொல்லும் கதை. இந்நாவல் மூன்று பெண்களின் துயர இருப்பையும் அதிலிருந்து மீள்வதற்காக அவர்கள் மேற்கொள்ளும் போராட்டங்களையும் கதை நிகழ்வுகளாகக் கொண்டி ருக்கிறது. தவக்குல், யோகா, தெய்வானை என்ற மூன்று பெண் முனைகளிலிருந்து நாவல் உருவகம் கொள்கின்றது. தன்னார்வத் தொண்டாற்றும் தவக்குல் எதிர்கொள்வது மத அதிகாரத்தின் கோபத்தையும் அச்சுறுத்தல்களையுமே. போராளியான யோகாவை விரட்டுவது குடும்பத்தினரின் உதாசீனமும் புலனாய்வுப் பிரிவினரின் சந்தேகப் பார்வையும், தெய்வானையை அலைக்கழிப்பது முன்னாள் போராளி என்ற அடையாளமும் ஆகும். இந்த மூன்று பெண்களும் அவரவர் துயரத்தை மீறி அடுத்தவருக்கு ஆறுதலாகின்றனர். போருக்குப் பிந்தைய காலமும் மனிதர்கள் மீண்டெழுவதற்குப் பாதகமாகவே இருக்கின்றது என்பதை வலியுறுத்திச் சொல்கிறது உம்மத். இஸ்லாமிய அடிப்படைவாதம், தமிழ்த் தேசியவாதம், சிங்களப் பேரினவாதம் என்று எல்லா வாதங்களும் முடக்கியிருக்கும் இலங்கைச் சூழலில் இந்த உண்மையைச் சொல்ல அசாத்தியமான துணிச்சல் வேண்டும். அந்தத் துணிவு நாவலாசிரியருக்கு இயல்பாகவே உள்ளது. (உம்மத் என்ற அரபுச்சொல் சமூகம், மனிதக் கூட்டம் என்று பொருள்படும்).

9720

ஊழிக் காலம்: நாவல். தமிழ்க்கவி (இயற்பெயர்: தமயந்தி சிவசுந்தரலிங்கம்). சென்னை 600051: தமிழினி, 63, நாச்சியம்மை நகர், சேலவாயல், 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 14: பாவை பிரிண்டர்ஸ்).

xxx, 319 பக்கம், விலை: இந்திய ரூபா 270., அளவு: 23x15 சமீ.

தமிழ்க்கவி- ஈழவிடுதலைப் போரில் தன்னையும் இணைத்துக்கொண்ட ஒரு மூத்த எழுத்தாளர். ஈழப்போரில் உயிரை ஈந்த இரண்டு மாவீரர்களின் தாய். இவரது முதலாவது நாவல் இனி வானம் வெளிச்சிடும் என்ற பெயரில் 2002இல் வெளியாகியது. ஊழிக்காலம் என்ற இந்த நாவல், மன்னார் வட்டக்கண்டல்

தொடங்கி முள்ளிவாய்க்கால் வட்டுவாகல் வரையான ஈழத்தமிழரின் துயரப் பயணம். 2009இன் இறுதி யுத்தகாலத்தில் இறுதிநாள் வரை தன் பிள்ளைகளோடும் பேரப்பிள்ளைகளோடும் நிலையற்று ஓடிய, அந்த ஊழிக்கால நாட்களை அனுபவ பூர்வமாகவும் விமர்சனபூர்வமாகவும் இந்நாவலில் எழுதியிருக்கிறார். போராட்டக் காலத்தினூடே, களத்தினூடே நிகழ்ந்த சம்பவங்கள் இதில் விரிகின்றன. தனது வாழ்க்கை அனுபவங்களையே, தான் நடந்த பாதையில் கண்டவைகளையே இந்நாவலில் காட்சிப்படுத்துகிறார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் அந்தக் கணங்களை ஆவணப்படுத்தியுள்ள ஒரு முக்கிய இலக்கிய முயற்சி இதுவாகும்.

9721

ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். ச.வாமதேவன். யாழ்ப்பாணம்: டேவிட் லிகோரி, மீரா வெளியீடு, 38, வேம்படி வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1992. (யாழ்ப் பாணம்: லக்ஷ்மி அச்சகம், 37, கண்டி வீதி).

(8), 100 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 19x13 சமீ.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த ச.வாமதேவனின் முதலாவது நாவல் இதுவாகும். திக்கொன்றாகப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகமே இந்நாவல். துரை, தமிழ் வாமன், போன்ற புனைபெயர்களில் கட்டுரைகளையும் சிறுகதைகளையும் எழுதியவர் வாமதேவன். சுதந்திரன் பத்திரிகையில் இவரது பெரும்பான்மையான ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அப்பத்திரிகையின் யாழ்ப்பாண நிருபராகவும் பணியாற்றியவர். நாடக உலகிலும் நடிகராக இருந்து அனுபவம் பெற்றவர். ஈச்சமோட்டை கதிரொளி நாடக மன்றத்தின் பல நாடகங் களிலும், வரணியூரானின் அசட்டு மாப்பிள்ளை நாடகத்தின் முக்கிய பாத்திரத்திலும் இவர் நடித்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 84947, 108132).

9722

கணையாழி. ரஜனி (இயற்பெயர்: K.V.S.வாஸ்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி எண் 160, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1971. (கொழும்பு 14: Express Newspapers Ltd., 185, Grand Pass Road).

149 பக்கம், விலை: ரூபா 1.90, அளவு: 18x13.5 சமீ.

இந்நாவல், மித்திரனில் தொடராக வெளிவந்தபின் நூலுருவானது. சென்னை நகரின் பயங்கரக் குற்றவாளியான ஜம்பு, தேசத்துரோகியும் கடத்தல்காரனுமான மூர்த்தியையும் அவனது கூட்டத்தையும் சுட்டுக்கொன்றும் சட்டத்தின் பிடியில் அவனது கூட்டத்தினரை சிக்கவைத்தும் நாட்டைப்பாதுகாக்கிறான். ரஜனியின் பிரபல கற்பனைக் கதாபாத்திரமான துப்பறியும் நிபுணர் சரத்பாபுவும் இந்நாவலில் வருகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120893).

9723

சதாசிவ லீலா சரித்திரம். சு.பொன்னம்பலம். கொழும்பு: சு.பொன்னம்பலம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1929. (கொழும்பு: மெய்கண்டான் அச்சியந்திரசாலை, 99, ஆதிருப்பள்ளித் தெரு).

(4), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

வசன கவிதைகளாக வளரும் இந்நாவல், 1929இல் எழுதப்பெற்று வேலணை இளந்தமிழ்ச் சரவணனாரின் சிறப்புரையையும் கொண்டமைந்துள்ளது. இந் நூலில் இயற்கையின் வழியெழுந்த தெய்வக் காதலை, நேரே காணலாம். நாவலின் கதாநாயகன் சதாசிவன் என்ற இளைஞன், அரச சேவையில் இணைந்து கண்டியில் வசிப்பவன். (முற்பிறப்பின்) முன்னைத் தொடர்பின் ஊழ்வினை காரணமாக லீலா என்னும் அருங்குணம் கொண்ட சிங்கள இளம்பெண்ணைச் சந்திக்கிறான். இவர்கள் இருவரிடையே வளரும் இறுக்கமான காதல்- இடம், பொருள், காலம், குலநலன் ஆகியவற்றை மீறி தெய்வீகக் காதலாக மலர்கின்றது. குலத்துங்க முதலியார் சதாசிவத்திற்கு விருந்து கொடுத்தல், காதலர் கல்யாணஞ்செய்ய வாக்களித்தல், சதாசிவம் தகப்பனுக்குக் கடிதமெழுதல், வயித்திலிங்கர் மகனுடைய காகிதம் வாசித்துக் கோபம் கொள்ளல், வயித்திலிங்கர் தமிழர் பெருமை கூறல், சிங்களரைக் குறைகூறல், வயித்திலிங்கர் மனைவி மகன் பக்கம் பேசிச் சில நியாயங்கூறல், வயித்திலிங்கர் மகனுக்குக் காகிதமெழுதுதல், சதாசிவம் காகிதம் வாசித்துக் கிலேசமுறல், சதாசிவத்தாலெல்லோர்க்கும் கலக்கம், வயித்திலிங்கரும் மனைவியும் வருத்தச்செய்தியறிதல், வயித்திலிங்கரும் மனைவியும் கண்டிக்குச் செல்லல், வயித்திலிங்கரும் மனைவியும் மகனைக் காணுதல், வயித்திலிங்கரும் மனைவியும் குலத்துங்கர் வீடு செல்லல், கல்யாணம் சோடினையாரவாரங்கள், மணமகன் பெண் வீட்டிற்கு வருதல், கல்யாண மண்டபம், எல்லோரும் விருந்துண்ணல், கூட்டங்குலைந்து சனங்கள் போதல், ஆகிய தலைப்புகளில் இந்நாவல் விரித்துச் செல்லப்படுகின்றது. சுதந்திரத்துக்கு முந்தைய தமிழ்-சிங்கள சமூக உறவு பற்றிய புரிந்துணர்வூட்டும் வகையில் இந்நாவல் அமைந்துள்ளது.

9724

சாம்பவி. செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10 ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2003. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

108 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 150., அளவு: 19x14 சமீ.

மூன்று குறுநாவல்களின் தொகுப்பு. இத்தொகுப்பில் அடங்கியுள்ள "மீண்டும் ஒரு சீதை", கலைமகள் அமரர் ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் பரிசுபெற்றது. "யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று" கணையாழி அமரர் தி.ஜானகிராமன் குறுநாவல் போட்டியில் பரிசு பெற்றது. "சாம்பவி", கணையாழியில் இரு இதழ்களில் தொடராக வெளிவந்த குறுநாவல். மூன்றும் போர்க்கால அவலங்களிலே பிறந்தவை. சாம்பவி ஒரு பெண்போராளியின் கதை. தமிழீழவிடுதலைப் போராட்டம் தோற்றம்பெற நேர்ந்தமைக்கான காரணிகள் கலாரூபமாக விபரிக்கப்பட்டுள்ளது.

1956,1958,1974,1983களில் இடம்பெற்ற இனக்கலவர வன்செயல்கள் எவ்வாறு சாம்பவியைப் பாதித்தன என்றும் அவள் போராளியாக மாறநேர்ந்த காரணமும் இந்நாவலில் விபரிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தால் கைதுசெய்யப்படும் காதலியின் தூய்மை பற்றிச் சந்தேகிக்கும் காதலன் பற்றிய கதை மீண்டும் ஒரு சீதை. ஒரு கிராமம் தன் போர்க்கால அவலங்களைக் கூறுவதாக, யாழ்ப்பாணக் கொட்டடிக் கிராமத்தைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135875).

9725

திருக்குறள் உரைகதை (நாவல்) வடிவில். கேவி.குணசேகரம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிறின்ரேர்ஸ், 424, காங்கேசன்துறை வீதி).

304 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 21x14 சமீ., ISBN: 978-955-44186-0-8.

திருக்குறளுக்கு விளக்கத்தை நாவல் வடிவில் எழுதும் முயற்சியின் வெளிப்பாடாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஏற்கெனவே 1330 குறள் வெண்பாக்களுக்கும் ஏற்ற தனித்தனிச் சிறுகதைகளை எழுதி வெளியிட்டவர் இவர். அறத்துப்பால் (பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், வாழியல்), பொருட்பால் (அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல்), காமத்துப் பால் (களவியல், கற்பியல்) ஆகிய இயல்களினூடாக இந்நாவல்வழிக் குறள் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 233641).

9726

தீம்தரிகிட தித்தோம். செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: யாழ். இலக்கிய வட்டம், 1வது பதிப்பு, ஜுன் 1988. (யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம்).

xii, 80 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 17x12.5 சமீ.

செம்பியன்செல்வனை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த "அமிர்தகங்கை" என்ற சஞ்சிகையில் தொடராக வெளிவந்த நாவல் இது. யாழ். இலக்கிய வட்டத்தின் 40வது வெளியீடாக நூலுருவானது. சுரேந்திரன் தன் அலுவலகத்தில் பணியாற்றும் சிங்களப்பெண் சோமாவைக் காதலிக்கிறான். ஜுன் மாதம் நடைபெற்ற காலிமுகத்திடல் சத்தியாக்கிரகத்தினால் கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கின்றது. அதன் விளைவாக அவர்களது காதலும் வெடித்துச் சிதறுகிறது. 1956ம் ஆண்டு தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகள் இன்றைய இனப்பிரச்சினைகளை எவ்வாறு உருவாக்கின என்பதே இந்த நாவல் தரும் சமூகச் செய்தியாகும்.

9727

நஞ்சுண்டகாடு. குணா கவியழகன். சென்னை 600014: அகல், 348ஏ, டி.டி.கே. சாலை, இராயப்பேட்டை, 1வது பதிப்பு, மே 2014. (சென்னை: மணிஆப்செட்).

144 பக்கம், விலை: இந்திய ரூபா 135., அளவு: 21.5x14 சமீ.

"ஏணைப்பிறை" என்ற தலைப்புடன் இந்நாவல் 2004இல் எழுதப்பட்டு 2006களில் வன்னியில் வெளியிடப்பட்டிருந்தது. ஈரோஸ் அமைப்பின் முக்கியஸ்தராகவிருந்த க.வே.பாலகுமாரனின் விரிவான முன்னுரையுடன் அன்று வெளிவந்திருந்தது. விரிவான வாசகர் பார்வைக்காக மீண்டும் இந்நாவல் பிறிதொரு தலைப்பில் அச்சிடப்பட்டுள்ளது. இக்கதைசொல்லி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர். இறுதிநாட்கள் வரை வன்னியில் வாழ்ந்தவர். 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான நாட்களில் இராணுவத் தடுப்பு முகாம் என்ற முள்வேலிக்குள் அடைபட்டிருந்தார். பின்னர் விடுதலையாகி ஐரோப்பிய நாடொன்றில் அரசியல் அடைக்கலம் பெற்று வாழ்கின்றார். ஈழப்போரிலக்கியத்தின் ஒரு பரிமாணத்தைப் பதிவுசெய்யும் இந்நூல், ஈழத்தின் நஞ்சுண்டகாடு காட்டுப் பகுதியில் பயிற்சிபெறச் செல்லும் இளைஞர் குழுவொன்றின் அனுபவங்கள், மனிதநேய உணர்வுகள் என்பனவற்றின் பின்னணியில் ஒரு நாவலாக மலர்ந் துள்ளது. சுகுமார் என்ற போராளியின் குடும்ப வாழ்வில் ஏற்பட்ட அவலங்கள், கரும்புலியாகி தற்கொடைத் தாக்குதலில் தன் உயிரை ஈகம்செய்த அப்போராளியின் குடும்பத்தினர் எதிர்கொண்ட அவல வாழ்வு என்பன இந்நாவலின் இறுதிப் பகுதியை நகர்த்திச் செல்கின்றன.

9728

நாளை. காவலூர் எஸ்.ஜெகந்நாதன். சென்னை 600 017: நர்மதா பதிப்பகம், 1, வியாசராவ் தெரு, தியாகராய நகர், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1982. (சென்னை 600042: நாதன் அன் கோ).

172 பக்கம், விலை: இந்திய ரூபா 10., அளவு: 18x12.5 சமீ.

1976இல் இலக்கிய உலகில் தனது சிறுகதைகள் வழியாகவும், மித்திரன் வாரமலர் வழியே வெளியான கண்ணீர் கங்கைகள் என்ற நாவலுடனும் இலக்கிய உலகைத் திரும்பிப் பார்க்கவைத்தவர் காவலூர் எஸ்.ஜெகந்நாதன். பின்னர் தினகரனில் இவரது அந்தப்புரங்கள் என்ற தொடர்நாவல் வெளியாகியது. தொடர்ந்து 1981இல் விடியும் என்ற நாவலை எழுதி இலக்கிய உலகில் பாராட்டைப் பெற்றிருந்தார். நாளை இவரது நான்காவது நாவல். இலங்கை அரசியல் வரலாற்றில் விடுதலைப் போராட்டம் மேலெழத் தொடங்கிய காலகட்டத்தில் இந்நாவல் எழுதப்பட்டது. இந்நாவலுக்கான முன்னுரையை தமிழகப் படைப்பாளி வல்லிக்கண்ணன் வழங்கியுள்ளார். சப்த தீவுகளில் ஒன்றான அனலைதீவை வாழ்விடமாகக் கொண்டவர் இவர்.(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 2023).

9729

நான் உன்னைத் தேடுகிறேன். மொழிவாணன். கொழும்பு: நீரஜா பப்ளிக் கேஷன்ஸ், 248/83, ஆட்டுப்பட்டித் தெரு, 1வது பதிப்பு, 1978. (கொழும்பு: மொடர்ன் அச்சகம், 192, செட்டியார் தெரு).

62 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 18x12.5 சமீ.

மர்மக் கதைச் சக்கரவர்த்தி என்று ஈழத்தமிழ் வாசகர்களால் அழைக்கப்படும் மொழிவாணனின் துப்பறியும் நாவல் இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86997).

9730

நான் நீதியின் பக்கம். க.அருள் சுப்பிரமணியம். மட்டக்களப்பு: உதயம் வெளியீடு, 65 லேடி மனிங் டிரைவ், நவம்பர் 1991. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியன் அச்சகம், 65, லேடி மனிங் டிரைவ்).

(2), 152 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 18x12.5 சமீ.

அருள் சுப்பிரமணியம் திருகோணமலையைச் சேர்ந்தவர். சிறந்த சிறுகதை, நாவல் இலக்கியவாதியான இவரது ஐந்தாவது நாவல் இது. அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற இவரது முதலாவது நாவல் 1974இல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றது. நான் கெடமாட்டேன், அக்கரைகள் பச்சையில்லை ஆகிய நாவல்கள் வீரகேசரி பிரசுரங்களாக வெளிவந்தன. சூரசம்ஹாரம் 1983இல் ஆனந்த விகடனில் 23 வாரங்கள் தொடராக வெளிவந்திருந்தது. தியாகங்கள் பாரமா என்ற இவரது முதலாவது சிறுகதை மலர் சஞ்சிகையில் வெளிவந்திருந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120834).

9731

பயணம் தொடர்கிறது. நாவண்ணன். மட்டக்களப்பு: தொண்டன் வெளியீட்டுத் திட்டம், சமூகத் தொடர்பு நிலையம், தபால் பெட்டி எண் 44, 1வது பதிப்பு, நவம்பர் 1988. (மட்டக்களப்பு: புனித செபஸ்தியார் அச்சகம்).

(9), 161 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 17.5x12.5 சமீ.

1956-61 வரையிலான அரசியல் போராட்ட வரலாற்று நாவல். தொண்டன் சஞ்சிகையில் 20 மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்தது. இலங்கையைக் களமாகவும், ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளின் ஆரம்பக் கட்டத்தில் நடந்த அகிம்சைப் போராட்டத்தினைக் கருவாகவும் கொண்டு ஒரு குடும்பக் கதையைப் பிரதேச வாசனையுடன் நாவலாகப் படைத்திருக்கிறார். 1956இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம், 1958இல் நடைபெற்ற இனக் கலவரம் ஆகியவற்றின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் அரசியற் செய்திகளை இடையிடையே செருகி, அழகுமணி என்னும் போராளியை முக்கிய பாத்திரமாக்கி நாவலின் கதையை நாவண்ணன் நகர்த்திச் செல்கிறார்.

9732

பாசக் குரல். அருள் செல்வநாயகம். சென்னை 4: கலைமகள் காரியாலயம், தபால் பெட்டி எண் 604, மயிலாப்பூர், 1வது பதிப்பு, நவம்பர் 1963. (திருவிடை மருதூர்: The Madras Law Journal Branch Press).

124 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 18.5x12.5 சமீ.

சோழர் படையெடுப்பால் தோல்வியுற்று பாண்டியநாட்டைவிட்டு வெளியேறி ஈழத்தில் தஞ்சமடைந்த சுந்தரபாண்டியன் 5ம் மிகுந்தனின் அமைச்சனாகிய கீர்த்தியின் மகள் மித்திரையின் காதலைப் பெறுகிறான். கரந்துறை வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து இறுதியில் மித்திரையை மணந்து கௌரவம் பெறுகிறான். 10-11ம் நூற்றாண்டு தென்னிந்திய ஈழவரலாற்றுப் பின்னணியில் அமைந்த நாவல். 25 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. வீரம் விளையாடியது, அமைச்சர் புறப்பட்டார், பாசம் பிறந்தது, விடுதலை செய்யுங்கள், தணியாத காதல், அன்புக் கட்டளை, விலங்கு இறுகியது, ராசராசன் போர்முரசு, ஈழத்துப் படையெடுப்பு, ஜனநாதபுரம் எழுந்தது, ஓலை பறந்தது, தேவியின் காணிக்கை, திருவுருவ விழா, ஒற்றர்கள் சந்திப்பு, ஆறுதற் கரம், கதவு திறந்தது, திட்டம் பிறந்தது, முத்திரை மோதிரம், சிறையிலே கண்ணீர், சந்தேக நிழல், துன்ப முடிவு, படை புறப்பட்டது, உறுகுணை தப்பியது, விசாரணை மன்றம், பாசக் குரல் ஆகிய அத்தியாயத் தலைப்புகளில் வீரகேசரி வாரமலரில் பிரதி ஞாயிறுதோறும் சரித்திரத் தொடர்கதையாக வெளியாகிய இது ஈழத்துப் புராதன நகரமான பொலன்னறுவையை கதைக்களனாகக் கொண்டது. நூலாசிரியர் மட்டக்களப்பு, குருமண்வெளியைச் சேர்ந்தவர்.

9733

பாவ விமோசனம்: குறுநாவல். ஏரம்பு சரவணபவன். டென்மார்க்: ஏரம்பு சரவணபவன், 1வது பதிப்பு, மார்ச் 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

xiv, 48 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-53564-1-1.

சின்னக்கிளி என்ற தனது அக்காவுக்குச் (திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை) சமர்ப்பணமாக்கப்பட்டுள்ள இக்குறுநாவல், எதிர்பார்த்திராத அவரது மரணத்தின் பாதிப்பில் எழுந்துள்ளது. ஏரம்பு சரவணபவன் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வசித்து வருகின்றார்.

9734

பிரிவுக்குள் பிணைப்பு. ஹிதாயத்துல்லாஹ் மீர்சா. நிந்தவூர் 07: மீர்சா பதிப்பகம், 105, தபாலக வீதி, 1வது பதிப்பு, ஜுன் 2010. (நிந்தவூர்: அஷாஸ், பிரதான வீதி).

xi, 103 பக்கம், விலை: ரூபா 325., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-52414-1-0.

இந்நாவலின் கருப்பொருளாக பொருளாதார சீரமைப்புக்கான கொள்கைப் பிரகடனம், சமூகங்களிடையே ஒற்றுமை என்பன கையாளப்பட்டுள்ளன.

இந்த சமூக ஒற்றுமையைப் பொறுத்தளவில், பிறவியிலேயே இரு சமூகங்களுக் கிடையேயும் ஒற்றுமை கலந்திருந்தது என்பதை நிரூபிக்கச் சில சான்றுகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. 18 அத்தியாயங்களில் விரியும் இந்நாவல் கிழக்கிலங்கையின் மக்கள் பற்றியதொரு சமூக ஆவணமாகின்றது.

9735

பூவிதழில் புன்னகை. ஜமுனாராணி நடராஜா. கொழும்பு 13: வே.நடராஜா, 57, பரமானந்த மாவத்தை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1992. (கொழும்பு 15: பிரஸ்டிஜ் பிரஸ், 660, அளுத்மாவத்தை வீதி).

xiv, 186 பக்கம், விலை: ரூபா 85., அளவு: 18x12 சமீ.

தனது இளம் பராயம் தொட்டு இலக்கிய ஈடுபாடுகொண்ட ஜமுனாராணி சிதம்பரப்பிள்ளை, திருமணத்தின் பின்னர் ஜமுனாராணி நடராசாவாகி தனது இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்தவர். தினபதி பத்திரிகையின் வார இதழான சிந்தாமணி இதழின் உதவி ஆசிரியையாகச் சிலகாலம் பணியாற்றியவர். இந்நாவல் ஜமுனாவின் முதலாவது நூலுருப்பெற்ற நாவலாகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 93471).

9736

மத்தாப்பு. கனக செந்திநாதன் (பதிப்பாசிரியர்). குரும்பசிட்டி: சன்மார்க்கசபை, 1வது பதிப்பு, ஜனவரி, 1962. (பருத்தித்துறை: கலாபவன அச்சகம், வியாபாரிமூலை).

80 பக்கம், படங்கள், விலை: ரூபா 1., அளவு: 18.5x12.5 சமீ.

இ.நாகராஜன், கனக.செந்திநாதன், சு.வேலுப்பிள்ளை, குறமகள், எஸ்.பொன்னுத் துரை, ஆகிய ஐவரும் இணைந்து எழுதிய குறுநாவல். வீரகேசரியில் தொடர் கதையாக வெளியிடப்பட்டு பின்னர் நூலுருவாக்கப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119474).

9737

மீண்டும் வருவேன் (நாவல்). செங்கை ஆழியான் (இயற்பெயர்: க.குணராசா). யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10ஏ, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

iv, 164 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 17x12.5 சமீ., ISBN: 978-955-1624-03-3.

இரண்டரை தசாப்தங்களுக்கு மேலாகப் பின்தங்கிய புராதன வன்னிக் கிராமப் புறங்களிலும் குடியேற்றக் கிராமங்களிலும் பணி நிமித்தம் வாழ்ந்தவர் செங்கை ஆழியான். அந்த மக்களோடு ஒட்டி உறவாடியவர். சூதுவாதற்ற அக்கிராம மக்களது உயர்ந்த மானிடநேயம் மனுக்குலம் உள்ளவரை நினைவில் கொள்ளத் தக்கது என்கிறார். இலகுவில் நம்பமுடியாத எவராலும் சாதாரணமாக ஜீரணிக்க முடியாத மனிதர்கள் அக்கிராமங்களில் வாழ்வதாகக் கூறும் ஆசிரியர், அறுகுவெளிக் கிராமத்தின் மானிட இயக்கத்தை அங்கு தொழில்நிமித்தம் பணியாற்றச் சென்ற விதானையார் காந்தலிங்கம் மூலமும், கரந்துறைய அக்கிராமத்திற்கு வந்துசேர்ந்த ஈழப்போராளி சபாலிங்கன் மூலமாகவும் அவர்களின் நோக்கில் இந்நாவலில்

காட்டியிருக்கிறார். ஈழப் போராட்டத்தினை முன்னெடுத்த நாற்பத்திரண்டு இளைஞர்களில் சபாலிங்கனும் ஒருவன். உறவுமுறையில் ஆசிரியரின் கூடப்பிறந்த சகோதரியின் மகன். அவனுடைய ஆரம்பகாலப் போராட்ட வாழ்வின் ஒரு சிறு புள்ளியை இந்நாவலில் சபாலிங்கன் வடிவில் ஆசிரியர் இட்டுள்ளார். முதுபெரும் ஈழத்துப் படைப்பாளி செங்கைஆழியான் தான் வாழ்ந்து உணர்ந்த ஒரு கிராமத்தின் கதையையே மீண்டும் வருவேன் என்ற நாவலில் உணர்வுபூர்வமாகச் சொல்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 192954).

9738

முப்பத்தேழாம் நம்பர் வீடு. ஏ.ஸீ.ஜரீனா முஸ்தபா (புனைபெயர்: ஏ.சீ.கமருன் நிசா). மாவனல்ல: எக்மி பதிப்பகம், 19, கமந்தெனிய வீதி, கிரிங்கதெனிய, 1வது பதிப்பு, பெப்ரவரி 2011. (மாவனல்ல: FAST Graphics, 31 ஜீ, ஹசன் மாவத்தை).

xx, 88 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-1825-07-2.

ஒரு அபலையின் டயறி, இது ஒரு ராட்சஷியின் கதை, ரோஜாக் கூட்டம் ஆகிய நூல்களை எழுதி வழங்கியவர் புறக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஏ.ஸீ.ஜரீனா முஸ்தபா. முஸ்லிம் சமூகம் சார்ந்த விழுமியங்களையும், இஸ்லாமிய பண்பாட்டையும், வழிநடத்தல்களையும் தனது நாவல்களில் தீவிரமாகப் புகுத்தும் ஏ.ஸீ.ஜரீனா முஸ்தபாவின் மற்றுமொரு நாவல் இதுவாகும். பில்லி சூனியத்துக்காகத் தன் பணத்தையும் ஈமானையும் (இறை நம்பிக்கை) இழந்தவர்களின் கதை இது. 1985இல் ஒரு முடிவில் ஓர் ஆரம்பம் என்ற நாடகப்பிரதியொன்றை இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவைக்கு எழுதியதன்மூலம் எழுத்துலகில் பிரவேசித் தவர். ஏ.ஸீ.ஜரீனா முஸ்தபா என்ற புனைபெயருள் மறைந்திருந்து வானொலி, முஸ்லிம் சேவையிலும், தினகரன், சிந்தாமணி, மித்திரன் போன்ற பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் சிறுகதை, நாவல், கவிதை கட்டுரை வடிவில் வெளியாகி யுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 226917).

9739

யுக சந்தி. வி.கே.ரட்ணசபாபதி (புனைபெயர்: மணிவாணன்). கொழும்பு: வீரகேசரி பிரசுரம், த.பெட்டி எண் 160, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1972. (கொழும்பு 14: Express Newspapers Ltd., 185, Grand Pass Road)

(2), 176 பக்கம், விலை: ரூபா 2.25, அளவு: 18.5x12.5 சமீ.

தினகரனில் தொடராக வெளிவந்த இந்நாவல் இலங்கையின் கோரமான இன வெறியின் இரத்தக்கறை படிந்த ஒரு சகாப்தத்தின் பின்னணியிலே வாழத்துடிக்கும் மக்களின் உணர்ச்சிப் போராட்டங்களை மையமாகக் கொண்டு மலர்ந்தது. 1958 இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டு தருமபுர விவசாயக் கிராமத்தில் குடியேறி பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய பூரணம், கனகம், சிவபாதம் ஆகி யோரைச் சுற்றிக் கதை பின்னப்படுகிறது. வஞ்சிக்கப்பட்ட தங்கை கனகேசின் வாழ்க்கை அநாதரவாகி விடும் என்பதற்காக சிவபாதத்தின் காதலை ஏற்க

மறுக்கிறாள் கனகம். ஆசிரியை பூரணம் இடமாற்றம் பெற்றுச் சென்றபின் அவள்தான் தன் தாய் என்பதை அறிந்து கொள்கிறான் சிவபாதம். பல்வேறு உணர்வுப் போராட்டங்களுக்கிடையில், ஈழத்து விவசாயக் கிராமமான தர்மபுரத்தை கதைத் தளமாகக் கொண்டு கதை சுவையாக நகர்த்தப்படுகிறது.

மேலும்பார்க்க: 9920

894.8(6) பொது இலக்கியக் கட்டுரைகள், திறனாய்வு

894.8(61) தமிழ் இலக்கியப் பாடநூல்கள்

9740

இலக்கிய மஞ்சரி : மூன்றாம் புத்தகம். வ.நடராஜன், கனக செந்திநாதன். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1979. (யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, பிரதான வீதி).

(4), 44 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 2.00, அளவு: 19x12.5 சமீ.

இந்நூலில் தமிழ் முரசு, கண்ணன் - விளையாட்டுப் பிள்ளை, தாலாட்டு, ஆடிப்பிறப்பு, மலர்கள், காந்தித் தாத்தா, குழந்தையின் வேண்டுகோள், ஔவைக் கிழவி, இறைவன் செயல், வாய்மண் வாய்மண், முயலும் வேட்டைநாயும், உடல் நலம் பேணல், பன்றியின் புத்திமதி, காற்று, வாக்குண்டாம் ஆகிய 15 பாடங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இப்புத்தகம் இலங்கைக் கல்வித் திணைக் களத்தினரால் இலங்கைப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் துணைப்பாட நூலாக உபயோகிக்கத் தகுந்ததென 1978ஆம் ஆண்டு தொடக்கம் அங்கீகரிக்கப் பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124693).

9741

இலக்கிய வினா-விடைப் பூங்கா. ச.வே.பஞ்சாட்சரம். யாழ்ப்பாணம்: எஸ். கணபதிப்பிள்ளை, திறனாய்வு நிலையம், 230, நாவலர் வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1988. (யாழ்ப்பாணம்: வஸ்தியான் அச்சகம்).

(2), 88 பக்கம், விலை: ரூபா 19.50, அளவு: 21.5x14 சமீ.

பத்தாம் பதினொராம் வகுப்புகளில் தமிழ் இலக்கியத்தைப் பாடமாகக் கற்கும் மாணவர்களின் பரீட்சைத் தேவையைக் கருத்திற்கொண்டு இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்கள், நளவெண்பா, பெரியபுராணம், முதலான காவியங்கள், இலக்கியச் சுவை மலிந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள் என்பன பற்றிய முன்னறிவை வளர்த்தெடுக்கும் வகையில் யாழ்.இந்துக் கல்லூரித் தமிழ்த்துறை ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் இந்த வினா-விடைத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. (இந்நூல்

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85737).

9742

இலக்கியப் பொய்கை: எட்டாம் வகுப்பு. *அ.ஸ.அப்துஸ் ஸமது. அக்கரைப்பற்று: பிறைப்பண்ணை வெளியீடு, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: கு.வி.தம்பித்துரை, கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி).*

(5), 144 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 18.5x12.5 *சமீ.*

கல்விப் பகுதியினரின் இலக்கியப்பாடத் திட்டத்திற்கேற்ப எழுதப்பெற்றது. முதலாம் பகுதி கவிதைப் பிரிவாகவும் இரண்டாம் பகுதி உரைநடைப் பிரிவாகவும் வகுத்துத் தரப்பட்டுள்ளது. கவிதைப் பகுதியில் என் இறைவன், தமிழின் சிறப்பு, உமறு கத்தாப் ஈமான் கொள்ளல், சுலைமான் நபியும் விறகுவெட்டியும், கண்ணகி வழக்குரைத்தல், சிற்றில் சிதைத்தல், சுட்ட பழமா? சுடாத பழமா?, புதுக் கவிதைகள் (கிளி, பலத்தின் இரகசியம், நெஞ்சின் அலைகள், மனத்திறன் வேண்டும், போகின்ற பாரதமும்), செய்யிதத்துப் படைப்போர், கலன்கள் கண்ட காவலன், பிர்தெவ்ஸி (கவிதை நாடகம்), நீதிப் பகுதி (திருக்குறள், சீறாப்புராணம், மாநபி மணிமொழிகள், பழமொழி, இனியவை நாற்பது), நள-தமயந்தியர் பிரிவு, றஹ்மான் கண்ணி, சுவை மஞ்சரி ஆகிய 15 தலைப்புகளில் பாடங்கள் தரப்பட்டுள்ளன. உரைநடைப் பகுதியில், கற்றாய்ந்தொழுகு (ஐ.எல்.எம்.மஷூர்), இமாம் அபஹனிபாவின் அறிவுத்திறன் (எம்.அப்துல் வஹாப்), கவிதையில் உவமை (கா.அப்துல் கபூர்), முற்காலத்து இஸ்லாமிய நாடுகளில் விஞ்ஞானம் (ஏ.டபிள்யூ. மயில்வாகனம்), பேரறிஞர் ரி.பி.ஜாயா (ஏ.ஏம்.ஏ.அஸீஸ்), கடற்கரையிலே உமறுப்புலவர் (ரா.பி.சேதுப்பிள்ளை), கொழும்புத் திட்டம் (ரி.இப்றாலெப்பை), இஸ்லாமியரும் தமிழும் (சு.வித்தியானந்தன்), மொகலாய ஓவியம் (எம்.எஸ்.ஏ.அஸீஸ்), வனம்புகச் சீதையின் மனத்துடிப்பு (பொ.கிருஷ்ண பிள்ளை), நாகரிகம் (அ.ஸ.அப்துஸ் ஸமது) ஆகிய 11 கட்டுரைகளின் உரைப் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87013).

9743

ஈழத்து தமிழிலக்கிய வரலாறு: க.பொ.த.உயர்தரம். *செல்வசிங்கம். யாழ்ப்பாணம்: எஸ்.அருட்குமாரன், 126/4, பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு, 2வது பதிப்பு, மார்ச் 2000, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1999. (யாழ்ப்பாணம்: கங்கை கொம்பியூட்டர் பிரின்ட், நாவலர் வீதி).*

38 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 19x15.5 *சமீ.*

க.பொ.த.உயர்தர தமிழ் மொழி பாடப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுப்பாட வழிகாட்டி. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129570).

9744

கட்டுரை மஞ்சரி: ஆண்டு 9, 10, 11. சாந்தையூரான். கொழும்பு 11: பிறைற் கல்விக் குழு, பிறைற் புக் சென்டர், எஸ்.27, 1வது தளம், த.பெ.எண் 162, கொழும்பு மத்திய சந்தை கூட்டுத் தொகுதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

76 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 26.5x20 சமீ.

அனைவருக்கும் கல்வி, இருபத்தோராம் நூற்றாண்டில் கம்பியூட்டர் யுகம், வீதி விபத்தும் அதனைத் தடுக்கும் வழிமுறைகளும், சுற்றாடல் பாதுகாப்பு, துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற இன்னோரன்ன 36 தலைப்புகளில் எழுதப்பட்ட கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119145).

9745

கட்டுரை மஞ்சரி: பகுதி 2: 10ம் 11ம் ஆண்டு. சு.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1989 (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம், 63, B A தம்பி வீதி).

iv, 64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை., அளவு: 20.5x13.5 சமீ.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்பு ஆண்டு 10, 11 மாணவர்களின் கட்டுரை எழுதும் ஆற்றலை வளர்ப்பதற்கும் அவர்களுக்கு அத்துறையில் வழிகாட்டு வதற்குமாக பல ஆண்டுகளாக 40 கட்டுரை மஞ்சரி என்ற நூல் ஆசிரியரால் பல பதிப்புகளாக வெளிவந்தவண்ணமுள்ளது. அவை 300 சொற்கள் அடங்கிய கட்டுரைகளுக்கு முன்னுரிமை வழங்கிவந்துள்ளது. இந்நூல் அத்தொடரின் இரண்டாம் பகுதியாக வெளிவந்துள்ளது. இதில் க.பொ.த. தேர்வில் கேட்கப்படும் மற்றொரு கேள்விப் பிரிவான அண்ணளவாக 100 சொற்கள் கொண்ட கட்டுரை களை வடிவடைக்கும் பயிற்சிகள் இடம்பெறுகின்றன. நடைமுறை வாழ்க்கை யோடு பின்னிப் பிணைந்ததாகவும், மாணவரின் பிற்கால வாழ்க்கைக்கு உதவும் பயனுள்ள கருத்துக்களை எதிர்பார்த்தும் இக்கட்டுரைப் பிரிவில் உள்ள கேள்விகள் அமைவது வழமை. கடிதம், அறிக்கை, விளக்கம், துண்டுப்பிரசுரம், அறிவுரை, விளம்பரம் ஆகிய அறுவகை வடிவங்களில் இக்கட்டுரைகள் அமைகின்றன. இந்நூல் இத்தகைய 100சொற் கட்டுரை வடிவங்களுக்குத் தம்மை மாணவர் பரிச்சயப்படுத்திக்கொள்ள உதவுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85837).

9746

கட்டுரைக் கதிர்: தரம் 12-13. புலவர் இளங்கோ. கொழும்பு 6: உமா பதிப்பகம், 23, 3/3 அறத்துசா ஒழுங்கை, 1வது பதிப்பு, நவம்பர் 2012. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

268 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-1162-44-3.

இந்நூலில் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கும் ஏனைய பரீட்சைகளுக்கும் தோற்று வோருக்குப் பயன்தரும் வகையில் வாசிப்புப் பழக்கம், நூற்பதிப்புத்துறை, தமிழ் இலக்கிய வரலாறு, சிறுவர் இலக்கியம் இன்னோரன்ன விடயங்களில் எழுதப்பட்ட 60 தமிழ் இலக்கியக் கட்டுரைகளும், ஈழத்துத் தமிழறிஞர்கள் பற்றிய 70 குறிப்புக் களும் அடங்கியுள்ளன.

9747

கட்டுரைக் கலசம்: தமிழில் கட்டுரைகள் எழுதுவது எப்படி. எம்.எஸ்.ஸ்ரீதயாளன். கொழும்பு 13: துணைப்பாடநூல் வெளியீட்டுப் பிரிவு, கு.வி.அச்சகம், 58, கிறீன் லேன், 1வது பதிப்பு, 2009. (கொழும்பு 13: கு.வி.அச்சகம்).

xix, 400 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21.5x15 சமீ.

ஸ்ரீதயாளனின் கட்டுரைக்கலசம், தரம் 9-11 மாணவர்களுக்கும் க.பொ.த. தேர்வு நாடிகளுக்கும் உகந்த வகையில் 100 எடுத்துக்காட்டுகளுடன் உருவாக்கப் பட்டுள்ளது. கட்டுரைகள், கடிதங்கள், அறிக்கைகள், செவ்விகள், உரையாடல், நாடகம், மாதிரிப்பயிற்சிகள், விளக்கங்கள் என பல்வேறு வழிகாட்டிகளுடன் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளரான நூலாசிரியர், கல்வி, இந்து கலாசார, தேசிய அமைச்ச கங்களில் பணியாற்றியவர். பாடநூல் வளவாளராக இருந்த அனுபவம் மிக்கவர்.

9748

கதாபாத்திரங்களின் குணப்பண்புகள்: க.பொ.த. சாதாரண தரம். சு.இந்திரராசா. கோப்பாய்: சு.இந்திரராசா, சமூகக் கலை மன்ற வெளியீடு, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1971. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ காந்தா அச்சகம்).

ix, 88 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 19x12.5 சமீ.

சங்க இலக்கிய கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை விளக்கி எழுதக் கோருவது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழிலக்கிய பாடத்தில் ஓர் வினாவாகும். இந்நூலில் குணப்பண்புகள் என்றால் என்ன என்பதை விளக்கி, தருமர், கர்ணன், திருதராட்டிரன், துரியோதனன், வீமன், அருச்சுனன், திரௌபதி, கைகேயி, இராமன், வசிட்டன், தசரதன், மந்தரை ஆகிய கதாபாத்திரங்களின் குணாம்சங்களை 12 கட்டுரைகளில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான நடையில் விளக்கியுள்ளார். இவற்றுக்கு ஆதார நூல்களாக ஆ.முத்துத்தம்பிப் பிள்ளையின் பாரதச்சுருக்கம், கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சிப் படலம், கைகேயி சூழ்வினைப் படலம் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளார். ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87014).

9749

கம்பர் கவிதைக் கோவை: இரண்டாம் பாகம். அ.சே.சுந்தரராஜன் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 1வது பதிப்பு, 1952. (தமிழ்நாடு: சாரதாவிலாச பிரஸ், கரிக்காரத் தெரு, கும்பகோணம்).

x, 136 பக்கம், விலை: இந்திய ரூபா 2.50, அளவு: 21.5x14 சமீ.

கம்பராமாயணத்தின் சாரமாக வெளிவந்த நூல். கம்பராமாயணத்திலிருந்து மாணவர் விரும்பிப் படித்து இன்புறத்தக்க சில செய்யுட்பகுதிகளைத் தெரிவு செய்து, அந்தச் செய்யுட்பகுதிகளையும் அவற்றிற்கான குறிப்புரைகளையும் இணைத்து 1950இல் முதலாம் பாகம் வெளிவந்தது. முதல் மூன்று காண்டங்களின் தேர்ந்த செய்யுள்களும் விளக்கமும் அதில் இடம்பெற்றிருந்தன. இவ்விரண்டாம் பாகத்தில் கிட்கிந்தா-சுந்தர காண்டங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல் யாழ். பரமேஸ்வரா கல்லூரித் தலைவர் சு.நடேசபிள்ளை அவர்களின் முன்னுரை யுடன் கூடியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 114842).

9750

கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம் திருவடிசூட்டுப் படலம்: க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குரியது. க.சொக்கலிங்கம். யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய பொத்தகக் களஞ்சியம், 235, காங்கேசன்துறைச் சாலை, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (யாழ்ப்பாணம்: சிறி சுப்பிரமணிய அச்சகம், 63, பீ.ஏ. தம்பி வீதி).

vi, 160 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 17.5x12.5 சமீ.

1996 தொடக்கம் க.பொ.த. உயர்தர தேர்வுக்குரிய பாடநூல்களுள் ஒன்றாக விதிக்கப்பட்டுள்ள இராமாயணத்தின் ஒரு பகுதி இதுவாகும். கைகேயி தசரதனிடம் பெற்ற வரங்களாலே இராமன் காடாளவும் தான் அரசாளவும் நேர்ந்த கொடுமை யைப் பொறுக்கமுடியாத பரதன் இராமனைத் தேடிக் கானகம் செல்கிறான். சித்திரகூடமலையில் அவனைக் கண்டு மீண்டும் வந்து நாடாள வேண்டுகின்றான். ராமன் அதனை மறுக்கவே அவனது பாதுகைகளைப் பெற்றுவந்து நந்திக்கிரா மத்திலே அவை (பாதுகைகள்) செங்கோல் நடாத்தத் தான் துறவு மேற்கொள்வது மாகிய சம்பவங்களை திருவடிசூட்டுப்படலம் விவரிக்கிறது. ஆசிரியர், இப் படலத்தின் 141 பாடல்களையும் தந்து அவற்றுக்கான பதப் பிரிப்பையும் தொடர்ந்து பாடற்பொழிப்பையும் தருவதுடன், ஒவ்வொரு பாடலிலுமுள்ள அருஞ்சொற் களுக்குப் பொருளும் சிறுவிளக்கங்களும் தந்து பாடல்களை எளிதில் மாணாக்கர் புரிந்துகொள்ள வைத்துள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130143).

9751

கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம் கைகேயி சூழ்வினைப் படலம். பொன்.முத்துக்குமாரன் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, 1964. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).

(4), 248 பக்கம், விலை: ரூபா 3.50, அளவு: 20.5x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்ட உரையுடன் கூடியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87008).

9752

கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும்: விளக்கவுரை. க.வேந்தனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 4வது பதிப்பு, 1969, 1வது பதிப்பு, 1964, 2வது பதிப்பு, 1965, 3வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம்).

(6), 428 பக்கம், விலை: ரூபா 4.50, அளவு: 20.5x14 சமீ.

1969-1971 காலப்பகுதிக்குரிய க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குரிய பாடத் திட்டத்திற்கு அமைவாக எழுதப்பட்டது. விளக்கவுரை எழுதியுள்ள பண்டிதர் வித்துவான் க.வேந்தனார், யாழ். பரமேசுவராக் கல்லூரியின் தமிழ் விரிவுரை யாளராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85173).

9753

கம்பராமாயணம்: கும்பகருணன் வதைப்படலம். அ.சே.சுந்தரராஜன் (பதிப்பாசிரியர்). சுன்னாகம்: அ.சே.சுந்தரராஜன், கல்லூரி அகம், இராமநாதன் கல்லூரி, 1வது பதிப்பு, 1956. (அச்சக விபரம் தரப்படவில்லை).

120 பக்கம், விலை: இந்திய ரூபா 1.50, அளவு: 21x14 சமீ.

இலங்கை முன்னாள் அமைச்சரும், யாழ். பரமேஸ்வரா கல்லூரித் தலைவருமான சு.நடேசபிள்ளை அவர்களின் முன்னுரையுடன் கூடியது. கும்பகர்ணன் வதைப் படலத்தின் கதைத் தொடர்பு முதலாவதாகவும் அதனைத் தொடர்ந்து, செய்யுள் களின் மூலம், உரை என்பன அடுத்ததாகவும் தரப்பட்டுள்ளன. பாடபேதங்கள், பயிற்சி வினாக்கள், ஆராய்ச்சி வினாக்கள், மாதிரி வினாக்கள் என்பன நூலை முக்கியத்துவமாக்குகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87083).

9754

கம்பராமாயணம்-குறளில் உணர்ச்சிவளம்: இரண்டாம் புத்தகம். இரத்தினம் நவரத்தினம். யாழ்ப்பாணம்: சிவதொண்டன் நிலையம், காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை, 1வது பதிப்பு, 1958. (சென்னை 18: ஜுப்பிட்டர் பிரஸ்).

88 பக்கம், விலை: ரூபா 1.60, அளவு: 18.5x13 சமீ.

திருக்குறளில், இராமாயணத்தின் சாரமாக விளங்கும் ஒழுக்கமுறைமைகள் யாவும் அமைந்திருப்பதை இந்நூல் பதிவுசெய்கின்றது. இவ்விரு பெரு நூல்களையும் இயற்றிய இரு பெரும் புலவர்களும், அறம் - பொருள் - இன்பம் ஆகிய உலகியற் பொருள் மூன்றினையும் பற்றி விவரித்துப் பேசும் பகுதிகள் பல தம்முள் ஒத்த கருத்தினைக் கொண்டுள்ளதை இவ்விரு நூல்களையும் ஒப்புநோக்கும் ஆராய்ச்சி யாளர்கள் எளிதில் கண்டுகொள்வர். வள்ளுவர் கூறும் குறள் கருத்துக்கு ஒப்பவே கம்பராமாயணத்தில் வரும் கதாபாத்திரங்களும் விளங்குகின்றன என்பதை சீதை- வாழ்க்கைத் துணைநலம், இராமன்-அறன் வலியுறுத்தல், இராமனும் சீதையும்- ஊழ், தசரதர்- மக்கட்பேறு, இலட்சுமணன்- அன்புடைமை, பரதன்- பண்புடைமை,

இராவணன்- புகழ், குகன்- பெரியாரைத் துணைக் கோடல், விபீஷணன்- தெரிந்து தெளிதல், அனுமான்- பொச்சாவாமை, திருவள்ளுவரும் கம்பரும் கருதும் நன்மக்களின் வாழ்க்கை வழித்துறை ஆகிய பதினொரு இயல்களில் ஆசிரியர் தனித்தனி அத்தியாயங்களின் வழியாக விளக்குகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98557).

9755

கம்பராமாயணம்: சுந்தரகாண்டம்: காட்சிப் படலமும் நிந்தனைப் படலமும். க.வேந்தனார் (உரையாசிரியர்). யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, காங்கேசன்துறை வீதி, 3வது பதிப்பு, 1979, 1வது பதிப்பு 1961, திருத்திய 2வது பதிப்பு 1962. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(6), 380 பக்கம், விலை: ரூபா 12., அளவு: 21 x14 சமீ.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை 1979-1980ஆம் ஆண்டுகளுக்கான இலக்கியம் (அ) பாடத்திட்டத்திற்கமைவாக எழுதப்பட்ட இவ்விளக்கவுரை, கம்பராமாயணத்தின் சுந்தரகாண்டத்தில் வரும் காட்சிப் படலம் (இராமபிரானின் தூதனாகிய அனுமான் சீதாதேவியை அசோகவனச் சிறையில் கண்ட நிகழ்ச்சியைக் கூறும் பகுதி), நிந்தனைப்படலம் (காமவேட்கையால் அறிவழிந்து அருவருக்கத் தக்க மொழிகளைக் கூறித் தன்னை இரக்கின்ற இராவணனைச் சீதாதேவியார் வஞ்சின மொழிகளால் வைதுரைக்கும் செயலைக்கூறும் பகுதி) ஆகிய இரு படலங்களில் உள்ளடங்கிய "மாடு நின்றவம் மணிமலர்" எனத்தொடங்கும் செய்யுள் முதல், "அறிந்தா ரன்ன முச்சடை" என்று தொடங்கும் செய்யுள் வரையுள்ள 159 செய்யுள்களுக்கானது.

9756

காம தகனம்: கந்தபுராணம், உற்பத்திக் காண்டம். க.வீரகத்தி (உரை விளக்கம்) யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, வைகாசி 1966. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

196 பக்கம், விலை: ரூபா 3.75, அளவு: 21x14 சமீ.

கந்தபுராணம்- உற்பத்திக்காண்டத்தின் காமதகனப் படலம், மோனநீங்கு படலம், தவங்காண் படலம், மணம்பேசு படலம், வரைபுனை படலம், கணங்கள் செல் படலம் ஆகியவற்றை உள்ளடக்கியது. 1967-68க்குரிய க.பொ.த. உயர்தர தமிழ் பாடத்திற்குரிய செய்யுட் பகுதிக்கு இசைவாக வெளியிடப்பட்ட உப பாடநூல். நூலாசிரியர் பண்டிதர் க.வீரகத்தி, கரவெட்டி வாணி கலைக்கழகத்தின் இயக்குநராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 140612).

9757

சிலப்பதிகாரம்: கடலாடு காதை, கானல்வரி. கம்பராமாயணம்: வாலி வதைப்படலம். சரஸ்வதி சிவலிங்கராஜா. யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, 148/1,

ஸ்ரான்லி வீதி, 2வது பதிப்பு, தை 1990, 1வது பதிப்பு, ஆனி 1988. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், 51, இரண்டாம் குறுக்குத் தெரு).

72 பக்கம், விலை: ரூபா 24.50, அளவு: 21x14 சமீ.

இந்நூல் சிலப்பதிகாரத்தில் வரும் கடலாடு காதை, கானல்வரி ஆகிய பகுதிச் செய்யுள்களின் உரைக் குறிப்புகளையும், கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலப் பகுதிச் செய்யுள்களையும் அவற்றுக்கான உரைக்குறிப்புகளையும் அரும்பொருள் அகராதிப் பிரிவுடன் வழங்குகின்றது. இந்நூல் பட்டப்படிப்பு மாணவர்களின் தமிழ் இலக்கியப் பாடத்திற்கான உதவி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா மானிப்பாய் உடுவில் மகளிர் கல்லூரியின் தமிழாசிரியை யாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85323).

9758

செய்யுட் கோவை: க.பொ.த.உயர்தரம் தமிழ். த.துரைசிங்கம். கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, ஆவணி 2009. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1.14 டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

v, 198 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ.

முன்னாள் கல்விப்பணிப்பாளர், இலக்கிய வித்தகர் கவிஞர் த.துரைசிங்கம் அவர்களின் இந்நூல் 2009ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. நூலறிமுகம், பதவுரை, பொழிப்புரை, குறிப்பு, அரும்பதப் பொருள் என்பன அடங்கியது. பொருத்தமான மாதிரி வினாக்களையும் உள்ளடக்கியது. குறுந்தொகை, புறநானூறு, சிலப்பதிகாரம், சுந்தரர் தேவாரம், பெரியாழ்வார் திருமொழி, தேம்பாவணி, பாரதியார் கவிதைகள், உமர் கய்யாம் பாடல்கள், கம்பதாசன் கவிதை, பிச்சமூர்த்தி கவிதை, மஹாகவி கவிதை, நீலாவணன் கவிதை, புரட்சிக் கமால் கவிதை, நற்றிணை, மணிமேகலை, சீறாப் புராணம், தனிப்பாடல் திரட்டு, பாரதிதாசன் கவிதைகள், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை கவிதை, முருகையன் கவிதை, சுபத்திரன் கவிதை, குறிஞ்சித் தென்னவன் கவிதை, மாதிரி வினாக்கள ஆகிய 23 தலைப்புகளில இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9759

தமிழ் இலக்கிய அமைப்புக் கட்டுரைகள். செ.கதிர்காமத்தம்பி. கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 340, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளூமெண்டால் வீதி).

86 பக்கம், விலை: ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

நூலாசிரியர் யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியில் ஆசிரியராகப் பணி யாற்றுபவர். இந்நூலில் க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவர்களின் பயன் பாட்டிற்கென ஆசிரியரால் எழுதப்பட்ட 17 மாதிரிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கம்பராமாணக் காட்சிகள், நளவெண்பா, இஸ்லாமிய கலையும்

பண்பும், நாலடியார், மாதரும் மலர்ப் பொய்கையும், ஆசாரக் கோவை, சிரிக்கத் தெரிந்த பாரசீகர், பெரியபுராணம், கர்ணனும் கும்பகர்ணனும், இலங்கை வளம், கலையின் விளக்கம், சீறாப் புராணம், நீதிக்குப்பின் பாசம், கங்கையில் விடுத்த ஓலை, ஒன்றுக்கு ஆயிரம் ஆயிரம், செய்னம்பு நாச்சியார் மான்மியம், நன்றிப் பெருக்கு ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

9760

தமிழ் இலக்கிய வினா விடை: க.பொ.த. சாதாரண பரீட்சைக்குரியது 1965-1967. பொன்.கந்தசாமி. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை வெளியீடு, 234, காங்கேசன்துறை வீதி, திருத்திய 2வது பதிப்பு, 1965, 1வது பதிப்பு, 1965. (யாழ்ப் பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

120 பக்கம், விலை: ரூபா 1.75, அளவு: 21x14 சமீ.

மாதகல், பொன். கந்தசாமி அவர்களால் எழுதப்பெற்ற இந்நூல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சைக்குரிய விபுலாநந்த ஆராய்வு, கம்பராமாயணம்-அயோத்தியா காண்டம் (மந்தரை சூழ்ச்சிப்படலம்-கைகேயி சூழ்வினைப்படலம்), பாரதியார் பாடல்கள், பாரதச் சுருக்கம் என்னும் நூல் களுக்குரிய மாதிரி வினா விடைகள் பரீட்சைச் சித்திக்குரிய முறையிலே எழுதப் பட்டுள்ளன. விபுலானந்த ஆராய்வுச் செந்தமிழ்க் கட்டுரைகள் இலகுவான வசனநடையில் மாணவர்கள் கிரகித்துக்கொள்ளும் முறையிலே அமைந்துள்ளன. இன்னும் இடஞ்சுட்டி விளக்குதல், பொழிப்புரைகள், இலகுவான வசன நடைகள், நயங்கள், அணியிலக்கண எடுத்துக்காட்டுகள் என்பன தெளிவாகவும், நடைநலம் பொருந்தவும், எளிதிலே மனதிற் பதியவும் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87011).

9761

தமிழ் இலக்கியத் தொகுப்பு: கம்பராமாயணம்: கைகேயி சூழ்வினைப் படலம். கோ. வாகீசன். வவுனியா: கோ.வாகீசன், வவுனியா வடக்கு, 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2009, 1வது பதிப்பு, மே 2009. (வவுனியா: இன்னொவேட்டிவ் பிரின்டிங் சேர்விஸஸ்).

(3), 128 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

தேசியகல்வி நிறுவனத்தின் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், 2009ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. உயர்தர புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் இந் நூல் எழுதப்பட்டுள்ளது.

9762

தமிழ்ப் பா வடிவங்களை விளங்கிக்கொள்ளல். ம.இரகுநாதன். யாழ்ப்பாணம்: எழில் பதிப்பகம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2009. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரின்டர்ஸ் பிரைவேற் லிமிட்டெட், 424, காங்கேசன்துறை வீதி).

x, 107 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-52012-0-9.

பேராசிரியர் கலாநிதி ம.இரகுநாதன் எழுதியுள்ள இந்நூல் தமிழ் இலக்கியத்தைக் கற்கும் உயர் கல்வி மாணவர்களுக்கு தமிழ்ப்பாவடிவங்களை எளிய வடிவில் அறிமுகப்படுத்துகின்றது. செய்யுளும் யாப்பும் என்ற அறிமுகத்துடன் தொடங்கும் இந்நூலில், செய்யுள் உறுப்புக்கள் (எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை), பாவகைகள் (குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா), ஆசிரியப்பா (நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா), கலிப்பா (வண்ணக ஒத்தாழிசை, அம்போதரங்க ஒத்தாழிசை, நேரிசை ஒத்தாழிசை, வெண்கலிப்பா, கலிவெண்பா, கொச்சகக் கலிப்பா), வஞ்சிப்பா, பாவினம் (வெண்பாவினம்: குறட்டாழிசை, வெண்டாழிசை, வெள்ளைச் செந்துறை, வெண்டுறை, வெளிவிருத்தம்), ஆசிரியப்பாவினம் (ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்), கவிப்பாவினம் (கலித் தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், கட்டளைக்கலிப்பா, கட்டளைக்கலித்துறை), வஞ்சியினம் (வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்), புதிய செய்யுட்கள் (சிந்து, கும்மி) ஆகிய 11 இயல்களில் தமிழ்ப்பாவடிவங்கள் தெளிவாக விளக்கப் பட்டுள்ளன.

9763

திருக்குறள்: அங்கவியல். பாலசுப்பிரமணியம் பத்மநாதன். யாழ்ப்பாணம்: சித்திர பவனம், ஏழாலை வடக்கு, ஏழாலை, 1வது பதிப்பு, ஜூலை 2009. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

vi, 111 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 22x15 சமீ., ISBN: 978-955-51740-1-5.

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் 2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள தமிழ் மொழி-புதியபாடத்திட்டத்தில் திருக்குறளிலே-அங்கவியலில் உள்ள அமைச்சு தொடக்கம் அவை அஞ்சாமை வரையான பத்து அதிகாரங்கள் விதிக்கப்பட்ட பாடப்பரப்புக்களுள் அடங்குகின்றன. தரம் 12 மாணவர்களுக்கு அமைச்சு, சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, தூது ஆகிய அதிகாரங்களும், தரம் 13 மாணவர்களுக்கு மன்னரைச் சேர்ந்தொழுகல், குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை ஆகிய அதிகாரங்களும் உரிய திருக்குறள் பாடப்பரப்புகளாக விதிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இலகுவாக விளங்கிக்கொள்வதற்கு ஏற்ற வகையில் இந்நுல் ஆக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் உள்ள பத்துக் குறட்பாக்களுக்கும் பதப்பிரிப்புகளும் பொழிப்புரையும் விளக்கமும் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்துக்குமான வினாக்களும் அவற்றுக்குப் பொருத்தமான விடைகளும் வழங்கப்பட்டுள்ளன. திருக்குறளுக்கு பொருள் எழுதும் முறையும் சிறப்பு எழுதும் முறையும் இந்நூலில் காட்டப்பட்டிருக்கின்றது. பயிற்சி வினாக்களும் இந் நூலில் காணப்படுகின்றன.

9764

திருக்குறள் ஒழிபியல். எஸ்.சிவநிர்த்தானந்தா (புனைபெயர்: எஸ்.எஸ்.ஆனந்தன்). கொழும்பு: எஸ்.சிவநிர்த்தானந்தா, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: கௌரி அச்சகம், 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

(4), 56 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 22x14 சமீ.

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான உப பாடநூல். இதில் திருக்குறள் ஒழிபியலில் வரும் பத்து அதிகாரங்களுக்குமான விளக்கம் தரப்பட்டுள்ளது. குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணுடைமை, குடிசெயல்வகை, உழவு, நல்குரவு ஆகிய பத்து விடயத் தொகுப்புகள் இடம்பெறுகின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122689).

9765

நள வெண்பா: சுயம்வர காண்டம். புகழேந்திப் புலவர் (மூலம்), நூல் வெளியீட்டுக் குழு (உரையாக்கம்). சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1962. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

x, 90 பக்கம், விலை: ரூபா 1.00., அளவு: 18.5x12.5 சமீ.

புகழேந்திப் புலவர் இயற்றிய நளவெண்பாவின் சுயம்வர காண்டம் என்ற பகுதி உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஆரிய, திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தினரால் பிரவேச வகுப்புக்கான இலக்கியநூலாக இது தேர்வுசெய்யப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 117711).

9766

பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு: தமிழ்மொழி 2 இரண்டாம் பகுதி. தமிழ் வளர்ச்சிக் கழகம். காரைநகர்: தமிழ் வளர்ச்சிக் கழகம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (காரைநகர்: பாலா அச்சகம்).

42 பக்கம், விலை: ரூபா 7.50, அளவு: 21.5x14 சமீ.

க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கென விசேட மாகத் தயாரிக்கப்பட்டதும், உதிஷ்டிரன், வீமன், அருச்சுனன், வீஷ்மர், விதுரன், திரௌபதி, குந்திதேவி, திருதராஷ்டிரன், துரியோதனன், கர்ணன், விகர்ணன், துரோணர், அபிமன்யு, சகுனி, கிருஷ்ணன் என்னும் பதினான்கு பாத்திரங்களின் குணவியல்பு பற்றிய விபரங்களை உள்ளடக்கியதுமான நூல் இது.

9767

மாணவர் கட்டுரைக் கதம்பம்: ஆண்டு 3,4,5. ஆனந்தா-சாரங்கா. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு,

செப்டெம்பர் 1998. (கொழும்பு 6: விக்னேஸ் ஸ்தாபனம், 30 நிஹால் சில்வா மாவத்தை, கிருலப்பனை).

viii, *64 பக்கம், விலை: ரூபா 75., அளவு:* 24x18.5 *சமீ.*

நூலாசிரியர்கள் இருவரும் சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்தவர்கள். இனிய தமிழ் மொழி என்ற தலைப்பில் தொடங்கி, அழைப்புக் கடிதம் ஈறாக 64 தலைப்புகளில் மாணவர்களுக்கான மாதிரிக் கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129821).

9768

வெளிவாரி முதற் கலைத் தேர்வு: தமிழ் தொகுதி 1: கம்பராமாயண வாலி வதைப்படலம்: கோடை நாடகம். *கே.நடராஜா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜூலை 1998. (கொழும்பு 12: பேர்பெக்ட் பிரின்டர்ஸ்).*

104 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21.5x14 *சமீ.*

இலங்கையில் வெளிவாரி ரீதியாக முதற்கலைத்தேர்வு தமிழ்ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான நூல். பொருளுரை, விளக்கவுரை, மாதிரி வினா-விடைகள், வழிகாட்டல் குறிப்புகள் ஆகியன இந்நூலில் அடங்கியுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129493).

894.8(62) இலக்கிய வரலாறுகள்

9769

இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள். *சாரல்நாடன் (இயற்பெயர்: கருப்பையா நல்லையா). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

x, *214 பக்கம், விலை: ரூபா 700., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-426-3.

மலையக அறிமுகம், மலையக இலக்கியம், தோற்றம்பெறும் மலையகச் சிறுகதை, வளர்ச்சிகண்ட எண்பதுகளில் மலையகம், மலையகப் பாடலாசிரியர்கள், மலையகப் பாடல்கள் 1940-1960, மலையகக் கவிதைகள், மலையகக் கட்டுரைகள், மலையகத் தமிழ் நாவல்கள், மலையக நாடகங்கள், ஆங்கில/மலையாள மொழி களில் மலையக வாழ்வு ஆகிய 11 தலைப்புகளில் மலையக இலக்கிய முயற்சிகள் பற்றி அமரர் சாரல்நாடன் தகவல்களைப் பதிவுசெய்துள்ளார். பின்னிணைப்பாக மலையகம் தொடர்புள்ள தமிழ் இதழ்கள், மலையகத்தில் வெளியான நூல்கள், மலையகக் கவிதை நூல்கள், மலையக இலக்கிய ஆளுமைகள் சில ஆகிய விரிவான நான்கு பட்டியல்கள் இடம்பெறுகின்றன.

9770

ஈழத் தமிழரின் போர்க்காலம்: இலக்கியங்கள், ஆய்வுகள், பதிவுகள். *என்.செல்வ ராஜா. கனடா: அகிலன் திருச்செல்வம் 25வது ஆண்டு நினைவு வெளியீடு, அகிலன் அசோஷியேற்ஸ்,* P.O.Box 3, Station-F, *ரொறன்ரோ, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2014. (கனடா: அகிலன் அசோஷியேற்ஸ்).*

96 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 23x15.5 *சமீ.,* ISBN: 978-0-9685364-4-5.

இந்நூலில் மூன்று கட்டுரைகள் உள்ளன. முதலாவது கட்டுரை "ஈழத் தமிழரின் போர்க்காலப் பிரசுரங்களும், போராட்ட இலக்கியங்களும்" என்பதாகும். இது நவம்பர் 2012இல் வெளிவந்த ஞானம் இதழின் போர் இலக்கியச் சிறப்பிதழுக்கென எழுதப்பட்டது. சுதந்திரத்துக்கு முன்னதாகவிருந்து, முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலான காலகட்டத்தில் எழுதப்பட்ட போர்க்காலப் பிரசுரங்களின் விரிவான தொரு அறிமுகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இரண்டாவதாக இடம்பெறும் "ஈழமண்ணில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு: நூல்வழிப் பதிவுகள் பற்றியதொரு தேடல்" என்ற கட்டுரை தமிழர் தகவல் (கனடா) 22ஆவது ஆண்டு மலருக்கென பெப்ரவரி 2013இல் எழுதப்பெற்றது. 1987-1990 காலகட்டத்தில் இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த வேளையில் நடந்தேறிய நிகழ்வுகள் பற்றிய நூல்வழிப் பதிவுகளே இக்கட்டுரையாகும். இத்தொகுப்பிலுள்ள மூன்றாவது கட்டுரை "ஈழத்தின் வடபுலப்பெயர்வும் அது தொடர்பான இலக்கியங்களும்" என்பதாகும். ஈழத்தின் வடபகுதியில் தளம்கொண்டுள்ள பலாலி இராணுவ முகாமிலிருந்து பெருமெடுப்பில் வலிகாமம் பிரதேசத்தை நோக்கிய படைநகர் வொன்றை நடத்தத் திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு முகம்கொடுக்க இயலாமல் 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலிகாமம் பகுதியிலிருந்து மக்கள் அனைவரும் தாம் வாழ்ந்த வீடுவாசல் களையும் தேடிய தேட்டங்களையும் கைவிட்டு பயத்தோடும் பரிதவிப்போடும் குடாநாட்டைவிட்டு, பாரிய இடப்பெயர்வொன்றை (exodus) *மேற்கொண்டார்கள். உலகின் எந்தவொரு இனத்திற்கும் வரலாற்றில் ஏற்பட்டிராததும் பாரிய எடுப்பில் இடம்பெற்றதுமான இந்த அவல நிகழ்வில் ஏறத்தாள ஐந்து இலட்சத்தி இருபத்தி ஐயாயிரம் மக்கள் கையில் எடுக்கக்கூடிய பொருட்களுடன் குடும்பம் குடும்பமாக ஒரே நாளில் புறப்பட்டு சேரிடம் அறியாது மூன்று நாட்களாக உண்ண உணவின்றி மரநிழல்களில் தங்கிக் கூட ஓய்வெடுக்கும் வாய்ப்பின்றி ஒருவழிப்பயணத்தை மேற்கொண்ட அந்தக் கையறுநிலை ஈழப்போராட்ட வரலாற்றில் ஒரு பாரிய திருப்பத்தை ஏற்படுத்தியது. அது தொடர்பாக வெளிவந்த நூலியல் பதிவுகளின் தொகுப்பினையே இக்கட்டுரை தாங்கி வருகின்றது. ஞானம் இதழில் டிசம்பர் 2004இல் இக்கட்டுரை முதலில் வெளிவந்தது.*

9771

ஈழத்து முச்சந்தி இலக்கியம். *செ.யோகராசா. மட்டக்களப்பு: மகுடம் பப்ளிக் கேஷன்ஸ், 90 பார் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (மட்டக்களப்பு: வனசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி).*

xiii, 82 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-44939-0-2.

தமிழில் அண்மைக்காலமாக முச்சந்தி இலக்கியம் என்ற பெயரில் கவனத்துக் குள்ளாகிவரும் வாய்மொழிப்பாடல் வகையைப் பற்றிய அறிமுகமாக இந் நூல் அமைகின்றது. புது வகையான பாடல் மரபு, பாடு பொருள், வரலாற்று முக்கியத்துவம் ஆகிய மூன்று இயல்களில் இந்நூல் முச்சந்தி இலக்கியம் பற்றிப் பேசுகின்றது. பொதுவாக இயற்கை அநர்த்தங்கள், ஊர் நிகழ்வுகள், அன்றாட அனுபவங்கள், சமூகச் சார்பு, அரசியற் சார்பு, வசைபாடுதல், அறம்பாடுதல் போன்ற வடிவங்களில் இவை எம்மிடையே காலம்காலமாக வழங்கிவந்துள்ளமையை ஆசிரியர் ஆய்வுபூர்வமாக விளக்குகின்றார்.

9772

தமிழ் இலக்கிய வரலாறு. பாலசிங்கம் பாலகணேசன். கல்வியங்காடு: கக்ஸ்ரொன் பிரின்டேர்ஸ், 1/1, பருத்தித்துறை வீதி, நல்லூர் சந்தைக் கட்டிடம் (மேல்மாடி), 1வது பதிப்பு, 2012. (கல்வியங்காடு: கக்ஸ்ரொன் பிரின்டேர்ஸ், 1/1, பருத்தித்துறை வீதி).

x, 126 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 20.5x14 சமீ.

தமிழ் இலக்கிய வரலாற்றை பொதுவாகவும், ஈழத்து இலக்கிய வரலாற்றினைக் குறிப்பாகவும் ஆய்வுசெய்யும் இந்நூல் பன்னிரு அத்தியாயங்களில் எழுதப் பட்டுள்ளது. தமிழ் இலக்கிய வரலாறு அறிமுகம், சங்க காலம் (தொன்மை முதல் கி.பி.250 ஆண்டுகள் வரை), சங்கமருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர்கால இலக்கியங்களும் அவற்றின் போக்குகளும், ஐரோப்பியர் காலம், ஆகிய ஏழு அத்தியாயங்களும் தமிழ் இலக்கியத்தை பொதுவாகத் தரிசிக்கின்றன. யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் அல்லது யாழ்ப்பாணத்தரசர் காலம் (கி.பி.1216-1621), போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் ஆகிய ஐந்து அத்தியாயங்களும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றி ஆய்வு செய்கின்றன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234585).

9773

தெரிந்துகொள்ள வேண்டிய தெவிட்டாத தகவல்கள்: தமிழக, ஈழத்து இலக்கிய வரலாறுகள், வினா-விடைகள். குணரட்ணம் ஐங்கரன் (தொகுப்பாசிரியர்). முருங்கன்: குணரட்ணம் சத்தியப் பிரியா, உயரிய பேரார்வ கல்லூரி, 1வது பதிப்பு, ஆனி 2009. (வவுனியா: ஆகாஷ் பிரிண்டர்ஸ்).

(12), 104 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட நூலாசிரியர் முருங்கன் உயரிய பேரார்வக் கல்லூரியின் சிரேஷ்ட தமிழ் ஆசிரியராகப் பணியாற்றுபவர். பழம்பெரும் தமிழ் நூல்களின் கருத்துக்களையும் இலக்கிய வரலாறுகளையும் வினா-விடை வடிவில் இந்நூலில் மாணவர்கள் புரிந்துகொள்ளும்

வகையில் எளிமையாக வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205865).

9774

பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும். சி.பத்மநாதன், க.இரகுபரன், ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xxxii, 672 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 22.5x15 சமீ., ISBN: 978-955-9233-23-7.

1992ஆம் ஆண்டுமுதல் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், வருடாந்த இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்குகளை நடத்திவருகின்றது. 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ம் திகதிமுதல் மூன்றுநாட்கள் தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும் என்ற தலைப்பில் இவ்வாய்வரங்கு இடம்பெற்றது. இவ்வாய்வரங்கின்போது, தென்னிந்திய, மலேசிய, இலங்கை அறிஞர்களால் 19 அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்ட60 கட்டுரைகளில் 30 கட்டுரைகளுக்கு மேல் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இலக்கியமும் கலையும் என்ற பிரிவில் தமிழ் இலக்கியப் போக்கில் பாரதி (க.பஞ்சாங்கம்), பாரதியும் வடமொழியும் (வி. சிவசாமி), நவீனத்துவமும் பாரதியும் (எம்.ஏ.நுஃமான்), ஆங்கிலேயர் காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரின் தமிழ்ப்பணி (எஸ்.ஜெபநேசன்), 19ஆம் நூற்றாண்டில் தமிழ் அச்சுப் பண்பாடும் புத்தக உருவாக்கமும் (வீ.அரசு), நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வின் தோற்றம் (க.பஞ்சாங்கம்), அறிவுப் பரவலும் திருச்சதிரின் மீட்டுருவாக்கமும் (சபா ஜெயராசா), பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தென்னிந்திய இசையின் வளர்ச்சி (மீரா வில்லவராயர்), தென்னிந்திய இசையின் பொற்காலம் (க.இரகுபரன்), தமிழில் தூது இலக்கியம் (றூபி வலன்ரீனா பிரான்சீஸ்), தமிழ் நூல்களின் சிங்கள மொழிபெயர்ப்பு முயற்சிகள் (தம்மிக்க ஜயசிங்க), தமிழ் அகராதித்துறை வளர்ச்சியில் சதுரகராதி (செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்), நவீனமயமாக்கல் சூழலில் ஈழத்தின் தமிழ் மொழி (செ.யோகராஜா) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமூகமும் சமயமும் என்ற பிரிவில், ஆங்கிலேய காலனிய ஆட்சியும் இந்திய தேசியமும் (இ.முத்தையா), மரபுவழிக் கல்வியைப் பாதுகாக்க முயன்ற நிறுவனங்கள் (ஈஸ்வரநாதபிள்ளை குமரன்), பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவமரபுக் கல்வி (சிவகௌரி சிவகுருநாதன்), 19ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சூழலில் நாத்திக இயக்கம் (வீ. அரசு), இலங்கையில் இராமகிருஷ்ண மிஷன் (வ.குணபாலசிங்கம்), தோட்டத் தொழிலாளர் குடியேற்றத் திட்டமும் மலேசியத் தமிழர் வாழ்வியலும் (கிருஷ்ணன் மணியம்), மலேசியத் தமிழ்க் கல்வி வளர்ச்சி (கிருஷ்ணன் மணியம்), பிரித்தானியராட்சிக் கால மட்டக்களப்பில் சைவ மறுமலர்ச்சி (நா.வாமன்), பிரித்தானியராட்சிக் காலத்தில் மலாயா இந்தியர்களிடையே ஏற்பட்ட கலாசார மறுமலர்ச்சி (எஸ்.குமரன்), பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும் (க. பஞ்சாங்கம்), தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கமும் பெண்களும் (செ.யோகராசா), இந்து மதம் சார்பான ஈழத்துப் பத்திரிகைகள் (செல்வகுமாரி சிவலிங்கம்),

ஆங்கிலேயர்கால ஈழத்துச் சைவசமய வளர்ச்சியில் சைவ நிறுவனங்களின் பங்களிப்பு (கந்தையா அருந்தவராஜா), பிரித்தானியராட்சியில் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் எழுச்சி (றமீஸ் அப்துல்லா), பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் தோன்றிய இந்து சமய நூல்கள் (சுகந்தினி சிறி முரளிதரன்), தருமபுர ஆதீனம் (வசந்தா வைத்தியநாதன்), இந்திய வரலாற்று வரைவியலின் புதிய நோக்கு (அனுசூயா சேனாதிராஜா) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அறிவும் ஆளுமையும் என்ற பிரிவில் இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரிகளும் ஆறுமுக நாவலரும் (சி.பத்மநாதன்), சைவ சமய மறுமலர்ச்சியில் ஆறுமுக நாவலர் (ப. கோபாலகிருஷ்ண ஐயர்), நாவலர் பணிகளில் நவீனத்துவம் (ஸ்ரீ பிரசாந்தன்), நவீனத்துவ சமய சமுதாய உருவாக்கத்தில் வள்ளலாரின் பங்கும் பணியும் (கலைவாணி இராமநாதன்), பகவான் ரமணரிஷியின் ஆன்மீக வாழ்க்கையும் அவரது தத்துவச் சிந்தனைகளும் (ஏ.என்.கிருஷ்ணவேணி), சுதந்திரம் பற்றிய நோக்கு நிலையில் சுவாமி விவேகானந்தர் - சுப்பிரமணிய பாரதியார் (சாந்தி கேசவன்), ஆனந்த குமாரசுவாமி (கி.சச்சிதானந்தம்), தமிழ்ப் பதிப்புத்துறையில் சி.வை. தாமோதரம்பிள்ளையின் ஆளுமை (ஸ்ரீ பிரசாந்தன்), இந்தியத் தாந்திரீகம் பற்றிய புரிதலில் சேர் ஜோன் வூட் றொவ் (ச.முகுந்தன்), தமிழ்ச் சமூகத்தில் மார்க்சியத்தின் அறிமுகம்: சிங்காரவேலரை முன்வைத்து (ந.முத்துமோகன்), சுவாமி விபுலானந்தர் (சு.துஷ்யந்த்), இந்து மதத்தின் நவீனமயவாக்கத்தில் சுவாமி விவேகானந்தர் (விக்னேஸ்வரி புவிநேசன்), ஸ்ரீ அரவிந்தர் (சாந்தி நாவுக்கரசன்) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

894.8(63) சங்க இலக்கியங்கள் தொடர்பானவை

9775

அகநானூறு: களிற்றுயானை நிரை. சி.கணேசையர் (உரையாசிரியர்), எஸ். சிவலிங்கராஜா (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: தனலட்சுமி புத்தகசாலை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, மே 2002. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி).

xxx, 365 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21.5x14 சமீ.

வித்துவசிரோமணி சி.கணேசையர் உரை எழுதிய அகநானூறு பாடல்களின் களிற்றுயானை நிரை என்ற பகுதியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா பதிப்பித்து இந்நூலுருவில் வெளிக்கொணர்ந்துள்ளார். ஐம்பதுகளில் ஈழகேசரி பத்திரிகையில் தொடராக எழுதப்பட்ட உரைகளின் நூலுருவே இதுவாகும்.

9776

அட்டமி நிலவு: இலக்கிய நயம். கே.வி.குணசேகரம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர, 1வது பதிப்பு, மார்ச் 2012. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

(3), 85 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 20x14.5 சமீ.

பழந்தமிழ் நூல்களான முத்தொள்ளாயிரம், பழமொழி 400, நற்றிணை, குறுந் தொகை, மற்றும் தமிழ்ப்புலவர்களின் தனிப்பாடல்களைத் தேர்ந்து அவற்றுக்கு எளிய நடையில் இலக்கிய நயம்கூறி விளக்கப்படுத்துகின்றார். சில இடங்களில் கதைகளின் வாயிலாகவும் தன் கருத்தை வெளியிடுகின்றார். இவை முன்னர் தினமுரசு வாரமலரில் வெளிவந்தவையாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 233645).

9777

அருச்சுனன் தவநிலைச் சருக்கம்: வில்லி பாரதம்-ஆரணிய பருவம். ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை. யாழ்ப்பாணம்: செ.சிவகுருநாதன், நாயன்மார்கட்டு, 2வது பதிப்பு, தை 1944. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை).

(4), 94 பக்கம், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x14 சமீ.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும் இந்து சாதனப் பத்திரிகையாசிரியருமான ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர் வரலாறு முதலியவற்றுடன் கூடிய நூல். வில்லிபுத்தூரர் இயற்றிய பாரதத்தின் ஆரணிய பருவத்தின் (காண்டம்) முதற் சருக்கமாகிய அர்ச்சுனன் தவநிலைச் சருக்கம் சிறந்த கவிகளால் சிவபரத்து வத்தை நன்கு எடுத்துக் கூறுவதாகும். இந்நூலின் முன்னைய பதிப்பு விபரம் நூலில் குறிப்பிடப்படவில்லை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98786).

9778

ஔவை குறள்: மூலமும் தெளிவுரையும். ஆய்வுப் பிரிவு. கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 13: கௌரி அச்சகம், ஆட்டுப்பட்டித் தெரு).

x, 103 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

தமிழ்மொழியில் பெண்பாற் புலவர் வரிசையில் ஔவையார் முதன்மையானவராகக் கருதுவர். தமிழ் வரலாற்றறிஞர்கள் ஔவையார் என்ற பெயரில் சங்ககாலம், மற்றும் 10ம், 16ஆம் நூற்றாண்டுகளில் இதே பெயரில் மூவர் வாழ்ந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார்கள். சங்ககால ஔவையார், கடையெழு வள்ளலான அதியமான் நெடுமாள் அஞ்சியிடம் நெல்லிக்கனி பெற்றவர். பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஔவையார் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நீதி நூல்களை இயற்றியவர். சமய இலக்கியங்கள் தோற்றம்பெற்ற பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் எழுதியதே ஔவை குறள். சைவ, வைணவ சமயங்கள் பிரபல்யம் பெற்றிருந்த அக்காலத்திலேயே சமகாலத்தில் கம்பரும் வாழ்ந்ததாகக் குறிப்பிடுவர். தத்துவ ஞான நூலாகவும், சைவ சமயக் கருத்துக்களை விளக்கும் வண்ணமாகவும் ஔவை குறள் அமைந்துள்ளது. திருவள்ளுவரின் திருக்குறளைப் போன்று வீட்டு நெறிப்பால் (100 குறட்பாக்கள்), திருவருட்பால் (100 குறட்பாக்கள்), தன்பால்

(110 குறட்பாக்கள்) என்ற முப்பிரிவுகளில் இரு அடிகள் கொண்ட மொத்தம் 310 குறட்பாக்களால் அமைக்கப்பட்டுள்ளது.

9779

கண்ணகையும் தன்னகையும். வெற்றிமகன் (இயற்பெயர்: வெற்றிவேல் விநாயக மூர்த்தி). மட்டக்களப்பு: முத்தமிழ்ப் பண்ணை, 2, வன்னியனார் தெரு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1993. (மட்டக்களப்பு: புனிதவளனார் கத்தோலிக்க அச்சகம்).

(8), 64 பக்கம், தகடு, விலை: ரூபா 35., அளவு: 21.5x14 சமீ.

சிலப்பதிகாரம் பற்றிய செய்யுள் இலக்கிய விமர்சனமாக இந்நூல் அமைகின்றது. சிலப்பதிகாரச் சிறப்பு, கண்ணகையும் தன்னகையும், கண் நகை, தன் நகை, கண்ணின் பெருமையில் கம்பர் காட்சி, புகார் நகரம், திருமணச் சிறப்பு, கண்ணகையின் பண்பு, அணிகலன்கள், கண்ணகையும் கோவலனும், மாதவி நடன அரங்கேற்றம், மாதவியும் கோவலனும், கண்ணகை நிலை, கணவனைப் பிரிந்த சீதையின் நிலை, சமூக நடைமுறைகள் வேறுபடுகின்றன, இந்திர விழா, கானல்வரி, கானல்வரி எதிர்ப்பாட்டு, கண்ணகை மனைக்குக் கவலையுடன், மக்கள் இலக்கியம், மதுரை நோக்கி வழிநடை, மதுரைகாண் முற்கூறு, மனம் மாற்றிய மாதவி கடிதம், மாதவி வீட்டில் மனையறம், மறுவாழ்வு, கோவலன் தன்குறைகாட்டி வருந்துதல், கண்ணகை தன்னகை, மனப்பயங்கொடா மதுரைச் சிறப்பு, சதிசெய்யும் சந்தர்ப்பம், அரசன் கட்டளை அநீதியல்ல, கோவலன் கொலை, கோவலன் கொலை கொற்றவையாக்கியது, விம்மியழும் வீரக்குரல், தன்னகை காட்டிக் கண்ணகை போட்டி, கண்ணகை தன்னகை காட்டிய நீதி, தன்னகை நிகழ்வால் கண்ணகை தெய்வம், இளங்கோவின் இனிய வேண்டுகோள், முடியுரையும் முடிவுரையும் ஆகிய தலைப்புகளினூடாக சிலப்பதிகாரக் கதை இந்நூலில் மீள்பார்வைக்குட்படுத்தப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 131114).

9780

சிலம்பு மேகலை. பா.சிவராமகிருஷ்ணன். கொழும்பு 13: ஞான குருபர நிலையம், 82/5 ஆட்டுப்பட்டித் தெரு, 1வது பதிப்பு, டிசம்பர் 1970. (கொழும்பு 13: ஆனந்தா அச்சகம், 82/5, ஆட்டுப்பட்டித் தெரு).

64 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18.5x13 சமீ.

ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கதையாலும் காலத்தாலும் தொடர்பு கொண்டவை. மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியான கதைப்போக்கைக் கொண்டது. முன்னையது கண்ணகி, கோவலன், மாதவி வரலாறு கூற, பின்னையது கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது. இவ்விரு காப்பியங்கள் பற்றியும் அவ்வப்போது ஆசிரியர் எழுதி, பத்திரிகைகளிலும் சிறப்பு மலர்களிலும் வெளியிட்ட கட்டுரைகளில் தேர்ந்த 11 கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் கோவலன் நிலை, கோவலன் காட்டிய பழி, சிலப்பதிகாரம் காட்டும் நுதல்விழி நாட்டத்து இறையோன், சிலப்பதிகாரம் காட்டும் முருகப்

பெருமான், சிலப்பதிகாரம் காட்டும் சூரிய வழிபாடு, இரட்டைக் காப்பியங்கள் கூறும் இந்திரவிழா, சிலப்பதிகாரம் காட்டும் புராண இதிகாசங்கள், மணிமேகலை காட்டும் புராண இதிகாசங்கள், கண்ணகி திருமணம், இளங்கோ கண்ட இன்னிசைக் கருவிகள், மணிமேகலை காட்டும் பௌத்த நெறி ஆகிய தலைப்பு களில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 77315).

9781

தமிழ்ப் பா வடிவங்கள்: பல்லவர்கால இலக்கியங்களின் யாப்பு வடிவங்கள் பற்றி ஆய்வு. அ.சண்முகதாஸ். யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1வது பதிப்பு, 1982. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vi, 137 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x20.5 சமீ.

வரலாறும் இலக்கியப் பின்னணியும், ஆசிரியப் பாவின் வளர்ச்சி நிலைகள், வெண்பாவும் அதன் வளர்ச்சி நிலைகளும், கலிப்பாவும் அதன் வளர்ச்சி நிலை களும், பாவினம் பிறந்தது, பாவினங்களின் வளர்ச்சி, யாப்பு வடிவங்களில் நாட்டுப்பாடற் செல்வாக்கு ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் பல்லவர்கால இலக்கியங்களின் யாப்பு வடிவங்கள் பற்றி ஆராய்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69734).

9782

திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள். இராமசாமி சிறீஸ்கந்தராசா. கொழும்பு 6: இ.சிறீஸ்கந்தராசா, 93, பீட்டர்சன் ஒழுங்கை, ஈ 15, பீட்டர்சன் தொடர்மாடி, வெள்ளவத்தை, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2001. (கொழும்பு 6: ரெக்னோ பிரிண்டர்ஸ், 58, 2/1 காலி வீதி, வெள்ளவத்தை).

(2), 89 பக்கம், விலை: ரூபா 135., அளவு: 21.5x14.5 சமீ.

சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் தலைமகனாகிய அம்பலவாணரின் பேரனான நூலாசிரியர் தமிழ் இலக்கியப் பரம்பரையில் வந்தவர். திருக்குறள் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவு மிக்கவர். நூலாசிரியர், 1999-2001 கால கட்டத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடல்களில் திருக்குறளை ஒவ்வொரு அதிகாரமாக ஆய்வுசெய்து உரையாற்றியிருந்தார். அவற்றின் எழுத்துப்பிரதி கனடா முரசொலியின் வார வெளியீட்டில் தொடர்ச்சியாகப் பதிவாகியிருந்தது. அவ்வுரைகளின் தேர்ந்த தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 134781).

9783

பதிற்றுப்பத்து: ஆராய்ச்சியுரை. சு.அருளம்பலம். காரைநகர்: அ.சிவானந்தநாதன், 1வது பதிப்பு, 1960. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம்).

xxiv, 424 பக்கம், விலை: ரூபா 6.50, அளவு: 22.5x14.5 சமீ.

பழையவுரை, ஒப்புமைப் பகுதி, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலியவற்றுடன் மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தவரும் காலி அரசாங்க உயர்தர கலாசாலையின் முன்னைநாள் தலைமையாசிரியருமான பண்டிதர் சு.அருளம்பலவனார் இவ்வாராய்ச்சியுரையை இயற்றியுள்ளார். பண்டைத் தமிழ்சங்க இலக்கியங்களுள் பதிற்றுப்பத்து முக்கியமானது. சேர அரசர் பதின்மர்மீது நல்லிசைப்புலவர் பதின்மரால் பாடப்பெற்ற பப்பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளின் தொகுப்பே பதிற்றுப்பத்தாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 39229).

9784

பாரத நவமணிகள். சி.கணபதிப்பிள்ளை. சாவகச்சேரி: செந்தமிழ் மன்ற வெளியீடு, சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்கள், தென்மராட்சி, கொடிகாமம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1959. (யாழ்ப்பாணம்: அர்ச். பிலோமினா அச்சகம், 102, பெரிய தெரு).

94 பக்கம், விலை: ரூபா 1.75., அளவு: 18x12.5 சமீ.

பாரத நவமணிகள். சி.கணபதிப்பிள்ளை. சாவகச்சேரி: செந்தமிழ் மன்ற வெளியீடு, தென்மராட்சி, கொடிகாமம், 2வது பதிப்பு, ஒக்டோபர் 1980, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1959. (யாழ்ப்பாணம்: திருக்கணித அச்சகம், சாவகச்சேரி).

(7), 84 பக்கம், தகடு, விலை: ரூபா 6.00., அளவு: 18x12.5 சமீ.

பண்டிதமணியின் தென்மராட்சிச் சீடர்களான மாணவர்களால், அவரது தமிழ்ப் படைப்புகளை நூல்வடிவில் வெளியிடும் நோக்கோடு 1959இல் உருவாக்கப்பட்ட அமைப்பே செந்தமிழ் மன்றமாகும். அவர்களது முதற்படைப்பாகிய இந்நூல் பண்டிதமணியின் கட்டுரைகளுடன் 28.8.1959இல் வெளியிடப்பட்டது. மகா பாரதம், வில்லி பாரதம், கண்ணன் காட்டும் வழி, மந்திராலோசனை, கண்ணன் சூழ்ச்சி, கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம், தரும வேறுபாடு, தருமத்தின் இன்றியமையாமை, கீதாபோதம் ஆகிய ஒன்பது உரைகள் இதில் அடங்குகின்றன. இந்நூலில் இடம்பெற்றுள்ள முதல் ஐந்து கட்டுரைகளும் இலங்கை வானொலி உரைகளாகும்.

9785

முப்பானூற் சுருக்கம். வி.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: வி.வேலுப்பிள்ளை, கோப்பாய், 1வது பதிப்பு, குரோதன ஆண்டு சித்திரை மாதம் 1925. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலை).

245 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 21x13.5 சமீ.

திருக்குறளின் முப்பாலினதும் சுருக்க விளக்கமாக அமையும் இந்நூலில் அறத்துப் பால் என்ற முதற்பிரிவில் பாயிரம் (நூல்வரலாறு, கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, அறன் வலியுறுத்தல்), இல்லறவியல் (இல்வாழ்க்கைச் சிறப்பு, அன்புடைமை, விருந்தோம்பல், நடுவுநிலைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, அழுக் காறாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், ஈகை), துறவறவியல் (அருளுடைமை,

தவம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, நிலையாமை, துறவு, மெய்ஞ்ஞானம்) ஆகியன உள்ளடக்கப்படுகின்றன. பொருட்பால் என்ற இரண்டாம் பிரிவில் அரசியல்(அரசன், மானம், கல்வி, பெரியாரைத் துணைக்கோடல், வினைசெயல் வகை, செங்கோன்மை, ஊக்கமுடைமை), அங்கவியல் (அமைச்சு, மன்னரைச் சேர்ந்தொழுகல், பொருட்சிறப்பு, நல்குரவு, பொருள்செயல் வகை, நட்பு, பகை, வியபிசாரம், கள்ளுண்ணல், சூது, மருந்து) ஆகியனவும் மூன்றாம் பிரிவான காமத்துப்பால் என்ற பிரிவில் களவு, கற்பு ஆகியனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 129393).

894.8(64) சமகால இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகள்

9786

அழியாத தடங்கள். வி.ரி.இளங்கோவன். சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (சென்னை 49: ஜெமினி ஒப்செட் பிரின்டர்ஸ், வில்லிவாக்கம்).

(8), 104 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-81-922530-4-6.

இந்நூல் தமிழ் கலை இலக்கியப் பகைப்புலத்தில் பணியாற்றி அழியாத தடங்களைப் பதித்த சிலர் பற்றிய ஆசிரியரின் மனப்பதிவுகளையும், ஆசிரியரின் பிற இலக்கியக் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது. பத்திரிகைத்துறையில் ஒரு சாதனை மாது (அன்னலட்சுமி இராஜதுரை பற்றிய பதிவுகள்), கலைத்தாகம் மிகக்கொண்ட கலையரசின் வாரிசு (ஏ.ரகுநாதன்), சென்னை சி.எல்.எஸ். கருத்தரங்கும் பயனுள்ள சந்திப்புகளும், சீனாவில் என்ன நடக்கிறது, கலாநிதிக்கு வி(சர்) தான், பிரான்ஸ் நாட்டில் தமிழ் சிற்றிதழ்கள் பத்திரிகைகள், ஈழத்துக் கவிதைப் பாரம்பரியத்தில் தீவகம், தமிழ் மக்களின் மதிப்பிற்குரிய தமிழ்ச் சுருக்கெழுத்தின் தந்தை (சி.இராமலிங்கம்), விடுதலைப் போராட்ட வீரர் நாமக்கல் கவிஞர், டானியல் பாதையும் தலித் இலக்கியப் பார்வையும், சர்வதேசப் புகழ்பெற்ற பொதுவுடமைத் தத்துவ ஆசான் தோழர் சண்முகதாசன், பாரம்பரிய மருத்துவத்துக்கு சரபோஜி ஆற்றியபணி, புலம்பெயர்ந்த எம்மவர் பண்பாட்டு வாழ்வியலில் வழக்கொழிந்து வரும் சொற்பதங்கள், உலகம் போற்றும் தமிழ்ப் பேரறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி ஆகிய 14 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9787

ஆய் தமிழ். வாகரைவாணன் (இயற்பெயர்: ம.அரியரத்தினம்). நாவற்குடா: வாகரைவாணன், ஆரணியகம், 479/3, புதிய கல்முனை வீதி, 1வது பதிப்பு, புரட்டாதி 2001. (மட்டக்களப்பு: ஜெஸ்கொம் ஒப்செற் அச்சகம், இல.1, யேசு சபை வீதி).

iv, 52 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 20.5x15 சமீ.

1971இன் ஆரம்பத்தில் தனது முதல் கவிதை நூலைத் தமிழகத்தில் வெளியிட்ட வாகரைவாணன் இதுவரை முப்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். எந்தவிதத் தத்துவக் கோட்பாடுகளுக்குள்ளும் தன்னைத் தள்ளிவிடாமல் தனி ஒருவராக சுதந்திரமான சிந்தனைகளோடு இலக்கியப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வாகரைவாணன் சிறுவர் இலக்கியத்துக்கான (சின்னச் சின்னப் பூக்கள்) இலங்கை அரசின் சாகித்திய விருதினை 1998இலும், கவிதைக்கான வடகிழக்கு மாகாண சபையின் விருதினை மட்டக்களப்புக் காவியம் என்ற நூலுக்காக 2001இலும் பெற்றுக்கொண்டவர்.இவரது மூன்று நூல்கள் (பாலர் தமிழ்ப்பாட்டு, அருளாளர் அந்தோனியார், கிறிஸ்து காவியம்) யாழ். இலக்கியப் பேரவையின் பரிசைப் பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில், வாகரையைப் பிறப்பிடமாகக் கொண்ட வாகரைவாணன், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் வித்துவானும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் ஓய்வுபெற்ற தமிழாசிரியரு மாவார். ஆய் தமிழ் என்ற இந்நூல் வாகரைவாணனின் இலக்கிய ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும்.

9788

ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள் சில. கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: கே.எஸ்.சிவகுமாரன், 21, முருகன் பிளேஸ், 1வது பதிப்பு, ஜூலை 1998. (கொழும்பு 13: செவ்வந்தி அச்சகம், 130, குணானந்த மாவத்தை).

vi, 154 பக்கம், விலை: ரூபா 175., அளவு: 20x13.5 சமீ.

பத்தி எழுத்துக்களும் பல்திரட்டுகளும் என்ற தொடரில் மூன்றாவது நூலாக இது வெளிவந்துள்ளது. 1980 இறுதிவரையிலுமான ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள் சிலவற்றின் மீதான ஆசிரியரின் திறனாய்வுப் பார்வையாக இந் நூல் வெளிவந்துள்ளது. இதில் 48 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. தேனருவி, செய்தி, தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி வார வெளியீடு போன்ற பத்திரிகைகளில் 1963 முதல் 1988 வரையிலுமான காலப்பகுதியில் இப்பத்தி எழுத்துக்கள் வெளிவந்திருந்தன.

9789

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி. க.அருணாசலம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2012. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

(6), 86 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 400., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-659-301-3.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி பற்றி பேராசிரியர் க.அருணாசலம் எழுதிய பின்வரும் ஏழு கட்டுரைகளின் தொகுப்பு இந்நூலாகும். ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி (1970-2000), புதுக்கவிதை: சில குறிப்புகள், புகலிடக் கவிதைகள்: சில குறிப்புகள், இ.முருகையனின் வெறியாட்டு (பாட்டுக்கூத்து): ஒரு சில குறிப்புகள், இ.சிவானந்தனின் கவிதைகள்: சில குறிப்புகள், தமிழோவியன் கவிதைகள்: சில

குறிப்புகள், கவிதைச் சுடர் அன்பு முகையதீன் கவிதைகள்: ஒரு நோக்கு ஆகிய கட்டுரைகளே அவையாகும். க.அருணாசலம் தனது இளங்கலைமாணி, முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

9790

உலகத்துக்கு ஒன்று. கா.பொ.இரத்தினம். சென்னை 90: தமிழ்மறைப் பதிப்பகம், எச் 12/9 கலாச்சேத்திரக் குடியிருப்பு, பெசன் நகர், 1வது பதிப்பு, ஐப்பசி 1993. (சென்னை 14: மூவேந்தர் அச்சகம், இராயப்பேட்டை).

viii, 192 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 17.5x12 சமீ.

1965 முதல் இலங்கைப் பாராளுமன்றில் 18 ஆண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றியவர் கா.பொ.இரத்தினம். தமிழ்ப் பண்டிதரான பேராசிரியர் கா.பொ.இரத்தினம் கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியில் 12 ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், திருக்குறள் செல்வர், தமிழ்ச்சான்றோர் போன்ற அடைமொழிகளிலும் தமிழகத்தவரால் போற்றப்படுபவர். ஈழத்து அரசியலில் இருந்து ஒதுங்கித் தமிழகத்தில் கல்வித்துறையில் பின்னாளில் பணியாற்றிவந்தவர். பண்டிதர் கா.பொ.இரத்தினம் எழுதிய 29 கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்மறையின் தனி மாண்பு, உலகத்துக்கு ஒன்று, தமிழ் மறை, புரட்சிக் களஞ்சியம், நிறைவிளக்கு, ஏர்ப்பின்னது உலகம், நாடும் நல்லாட்சியும், வெற்றிக்கு வழி, பெற்றதாய், சிறைமீட்பு, அளவைகளும் அடையாளங்களும், சுடும் சுடும் சுடும், தற்கொலை, மலரினும் மெல்லியது, நோயற்ற வாழ்வு, அறஞ்சாரா வறுமை, அறப்போரும் தமிழ்மறையும், மரங்கள், பொருளாதாரம், நோயும் தீயும், கெடும் கெடும், உன்னைக் காதலிக்கிறாயா, தீதும் உண்டோ, திருக்குறளை விளக்கும் நூல்கள், ஒரு குறளில் முப்பால், திருவள்ளுவர் தொடர் ஆண்டு, தலைமை உரை, திருவள்ளுவரிடம் செல்க, உலகத்து மக்களே வாரீர் ஆகிய தலைப்புகளில் இத் தமிழ்மறைக் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104886).

9791

உள்ளும் வெளியும்: ஈழம் மற்றும் புகலிடப் படைப்பிலக்கிய ஆய்வுக்கட்டுரைகள். சு.குணேஸ்வரன். யாழ்ப்பாணம்: புத்தகக் கூடம் (BookLab), திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஜனவரி 2014. (யாழ்ப்பாணம்: ஆகாயம் பதிப்பகம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி)

115 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-51949-2-1.

ஈழத்து இலக்கியமும் இரசனையும்-நாவல், அ.முத்துலிங்கத்தின் "உண்மை கலந்த நாட்குறிப்புகள்", ஆதவனின் "மண்மனம்" நாவல்-ஒரு பார்வை, ஷோபாசக்தியின் "கொரில்லா", "ம்", அண்மைக்கால இலங்கைப் படைப்புக்களில் எஸ்.ஏ.உதயனின் நாவல்கள், புகலிடத் தமிழ் புனைகதைகளின் வடிவம், உயிரின் வாசம் - "பெயரிடாத நட்சத்திரங்கள்", அதிகாரத்தில் அகப்பட்ட காலமும் வாழ்வும்- தீபச்செல்வனின்

"கூடார நிழல்" கவிதைகள் குறித்து, ஈழத் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்க் கல்வி ஆகிய ஒன்பது கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236911).

9792

எதிர்ப்பிலக்கியம்: ஒரு கலாச்சார ஆயுதம். சிராஜ் மஷ்ஹூர். கொழும்பு 10: முஸ்லிம் சமூக அரசியல் படிப்பகம், 181/01, மாளிகாகந்த வீதி, வைற் பார்க், 1வது பதிப்பு, டிசம்பர் 2003. (அச்சக விபரம் தரப்படவில்லை).

35 பக்கம், விலை: ரூபா 50., அளவு: 21x15 சமீ.

எதிர்ப்பு ஒரு இன்றியமையாத் தேவை, எதிர்க்கும் உரிமை (Right of Resistance), எதிர்ப்பின் தன்மை: நேரடி எதிர்ப்பும் மறைமுக எதிர்ப்பும், எதிர்ப்பிலக்கியம், எதிர்ப்பிலக்கியத்தின் மூலக்கூறுகள், எதிர்ப்பின் ஊடகமாக ஈசாப்பிய மொழி (Aesopic Language), எதிர்ப்பு எழுத்தாளர்கள், தமிழில் எதிர்ப்பு இலக்கியம், எதிர்ப் பிலக்கியத்தின் எல்லையும் அதன் வரலாற்றுப் பணியும், எதிர்ப்பிலக்கியத்தின் தேவையும் அது வேண்டிநிற்கும் உணர்நிலைகளும்: சில முக்கிய மேற்கோள்கள், எதிர்ப்புக் கவிதைகள், நிறைவாக ஆகிய 12 இயல்களில் Resistance Literature என்னும் எதிர்ப்பிலக்கியம் பற்றிய கருத்துக்கள் தமிழ் இலக்கியப் பகைப்புலத்தில் நின்று இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 139525).

9793

ஒரு விமர்சகரின் இலக்கியப் பார்வை. கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2013. (சென்னை 94: ஆதிலட்சுமி ஆப்செட்).

vi, 98 பக்கம், விலை: இந்திய ரூபா 45., அளவு: 17.5x12 சமீ.

1953களில் எழுத்துப்பணியை ஆரம்பித்து, ஊடகவியலாளர், அறிவிப்பாளர், திறனாய்வாளர், கவிஞர், சிறுகதை எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் எனப்பல தளங்களில் இயங்கியவர் கே.எஸ்.சிவகுமாரன். 2011இல் அவர் வழங்கிய மலரும் நினைவுகள் பற்றிய பதிதையுடன் தொடங்கும் இத்தொகுப்பில், எனது நூல்கள் சிலவற்றின் அறிமுகம், எனது கவிதைகள் சில, திறனாய்வாளர் க.கைலாசபதி, சிவகுருநாதனும் நானும், ஈழத்து உடன் நிகழ்கால இலக்கியம்-சில அவதானிப்புகள், அண்மைக்கால திறனாய்வின் முக்கியத்துவம், பஹார் ஆப்தீனின் முன்னைய கதைகள், தி.ஞானசேகரனின் சிறுகதைகள், கோகிலா மகேந்திரனின் உளவியல் சார்ந்த கதைகள், மாலின் என்பவரின் கண்டனம், கொழும்பில் நான் பார்த்த மேடை நாடகங்கள், பார்வையாளர் பிரச்சினைகள், என் மனங்கவர்ந்த சில நாடகங்கள், பாதை தெரியுது பார் திரைப்படம், களிப்பூட்டல் அருவருக்கத்தக்க ஒன்றல்ல, இளங்கோவின் கவித்துவத்திலுள்ள பாவனாசக்தி ஆகிய 17 படைப்புக்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9794

கணபதியே வருவாய். நவாலியூர் நா.சச்சிதானந்தன். யாழ்ப்பாணம்: திருமதி சுகந்தகுமாரி யோகசுந்தரம், கந்தர்மடம், 1வது பதிப்பு, டிசம்பர் 1994. (ஏழாலை: மஹாத்மா அச்சகம், ஏழாலை மேற்கு).

xxxvii, 102 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 20.5x14.5 சமீ.

பல்துறை எழுத்தாளரான இந்நூலாசிரியர் அவ்வப்போது எழுதிப் பிரசுரமான தேர்ந்த கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். The Metaphysics of Maha Sivarathri, The Erotic and the Ascetic, The acoustics of Yoga ஆகிய மூன்று ஆங்கிலக் கட்டுரைகளுடன், கணபதியே வருவாய், ஸங்கீதானந்தம், இராகம் தாளம் பல்லவி, ஆன்மீகத்தின் ஆரம்பம் எங்கே? சோதிடத்துக்குள் ஒரு சூட்சுமம், உணர்ச்சி அலைகளைத் தோற்றுவிக்கும் இசை வடிவங்கள், நடிப்பும் நடனமும் சங்கீதமும் ஆன்மீகமும் இவை நாலுங்கலந்த கதகளி, கருணை, அறிதுயிலும் அனுபவமும், சத்தமெல்லாம் சங்கீதமாமோ, ஆகிய தமிழ்க் கட்டுரைகளுமாக மொத்தம் பன்னிரண்டு கட்டுரைகளும், அவற்றை எழுதப்பயன்படுத்திய நூல்களின் பட்டியலும், தமிழ் ஆங்கில பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கட்டுரைகளும், வானொலி ஒலிபரப்புகளும் பற்றிய பட்டியலொன்றும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 109491).

9795

கலை இலக்கியப் பார்வைகள். கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6-5/3A, எட்வேர்ட் அவென்யூ, ஹவ்லொக் டவுன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (மஹரகம: தரஞ்சி பிரிண்டர்ஸ், நாவின்ன).

vi, 122 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-53921-7-4.

ஆசிரியர் கே.எஸ். சிவகுமாரன் மீரா பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடும் 15ஆவது நூல் இது. இந்நூல் இலக்கியத்துக்கு அப்பால், நாடகம், சினிமா, உலக இலக்கியங்கள் என்று 26 கட்டுரைகளின் வழியாக, ஒரு விரிந்த பரப்பில் நூல் அறிமுகங்களாகவும், விமர்சனங்களாகவும் வாசகருடன் பேசவிளைகின்றது. மீரா பதிப்பகத்தின் 102ஆவது வெளியீடு இது.

9796

காணாமற்போன ஒட்டகை: கதையும் கதைகூறும் கவிதைகளும். அப்துல் காதர் லெப்பை (மூலம்), அமீர் அலி (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xxii, 92 பக்கம், விலை: ரூபா 450., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-383-9.

இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. அப்துல் காதர் லெப்பையின் முதலாவது ஆக்கமாகக் கருதப்படும் காணாமற்போன ஒட்டகை என்ற கதையின் முற்பகுதிகள் நூலில் முதல் எட்டு அத்தியாயங்களில் இடம்பெற்றுள்ளன. கையெழுத்துப்

பிரதிகள் முழுமையாகக் கிடைக்காத நிலையில் கிடைத்தவற்றைக்கொண்டு பதிப்பாசிரியரான புலவரின் மகனார் அதனை அச்சுவாகனமேற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்கதை இயம்பும் கவிதைகள் சில தேடித் தொகுக்கப் பெற்று கதைகூறும் கவிதைகளாக, இரண்டாவது பகுதியில் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டாம் பகுதியில் முதலில் கவிஞரால் மொழிபெயர்க்கப்பெற்ற 13 பாரசீகக் கவிதைகளும் மேலும் நான்கு கவிதைகளுமாக 17 கவிதைகள் இடம் பெற்றுள்ளன. பெரும்பாலானவை 1960களில் இவரால் எழுதப்பட்டவை. கடந்த அரைநூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியத் தடங்களை அறிந்துகொள்வதற்கும் இஸ்லாமிய இலக்கியத் தனித்துவங்களை கண்டறிவதற்கும் அக்காலத்தைய தமிழ் மொழி ஆசிரியத்துவத்தின் வழியாக எழும் விழுமியங்களைப் பதிவு செய்வதற்கும் காத்தான்குடிக் கவிஞர் அப்துல் காதர்லெப்பையின் (1913-1984) எழுத்துக்கள் காலச்சுவடுகளாகும். கவிஞரின் மகனான கலாநிதி அமீர் அலி, அவுஸ்திரேலியா மேர்டொக் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமுறை முகாமைத்துவத் துறையில் விசேட விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

9797

காவிய மணம். கா.பொ.இரத்தினம். சென்னை: தமிழ்மறைப் பதிப்பகம், எச். 15/11, கலாஷேத்திரக் குடியிருப்பு, பெசன்ட் நகர், 1வது பதிப்பு, ஆனி 1990. (சென்னை 600086: சாலை அச்சகம், திருவீதியான் தெரு, கோபாலபுரம்).

(2), 182 பக்கம், விலை: இந்திய ரூபா 16., அளவு: 17.5x12.5 சமீ.

ஞாயிறு, செந்தமிழ், கதிரொளி முதலிய ஏடுகளில் வெளிவந்த தமிழ் இலக்கியக் கட்டுரைகளையும், இலங்கை வானொலியில் நிகழ்த்தப்பட்ட உரைகளையும், புதிய சில கட்டுரைகளையும் உள்ளடக்கி இந்நூல் வெளிவந்துள்ளது. காவிய மணம், கற்பனை விந்தை, பட்டினப் பாலை, பாரியும் மாரியும், நோயும் தீயும், ஐம்பெருங் காப்பியங்கள், முத்தொள்ளாயிரத்தில் மூன்று, கொடுமனக் கூனி, பாண்டிக் கோவை, வச்சத் தொள்ளாயிரத்தில் மிச்சம், பிரபந்தங்கள், அரைச் செய்யுள்கள், நாராய் நாராய், சொல்லடியே, கதிரைச் சிலேடை வெண்பா, பூமணக்கும் ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட 16 கட்டுரைகள் இதில் அடங்கு கின்றன. ஈழத்தவரான பேராசிரியர், முனைவர் கா.பொ.இரத்தினம், வேலணையைச் சேர்ந்தவர். 1952இல் தமிழ் மறைக் கழகத்தை நிறுவி அதன் ஆயுள் தலைவராக இருந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 100366).

9798

கிராமக் கவிதைவளமும் சிந்தனைக் கட்டுரைகளும். க.இ.சரவணமுத்து (புனைபெயர்: சாரதா). யாழ்ப்பாணம்: க.இ.சரவணமுத்து, 1வது பதிப்பு, கார்த்திகை 1993. (கொழும்பு 14: ஸ்ரார்லைன் பிரிண்டர்ஸ், 213, கிராண்ட்பாஸ் ரோட்).

xi, 140 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 21.5x14 சமீ.

கிராம ஊழியன் பத்திரிகையில் ஆரம்பித்து, ஈழகேசரிப் பண்ணையில் வளர்ச்சி பெற்ற சாரதா ஒரு மறுமலர்ச்சி எழுத்தாளர். இரட்டையர், மகேஸ்வரன் போன்ற

வேறு புனைபெயர்களிலும் எழுதிவந்துள்ள இந்நூலாசிரியரின் நீண்டகால எழுத்துப் பணியின் ஓர் அறுவடையாக இக்கட்டுரைத் தொகுதி அமைகின்றது. கிராமக் கவிதைகள் (10), புதுமைத் தமிழ், இலக்கியமாவது யாது, இலக்கியக் கல்வி, கவியும் கற்பனையும், கற்பனையும் பாரதியும், புதிய ஆத்திசூடி, புரட்சிக் கவிதை, பாட்டுந் திருத்தமும், பகுத்தறிவாகுமா, பெண்களுக்கு ஆபரணம் தேவையா, தமிழுக்கு ரோமன்லிபி, விற்பதற்கோ கொள்வதற்கோ, தண்டனை, முத்தொள்ளாயிரக் காதல் (2), இலக்கிய நோக்கில் புலவர் வறுமை, எங்களூர் வைத்தியர்கள், மினக்கட்டான் வேம்பு, வைக்கற் பட்டடை நாய், சிந்தனைப் பட்டறை, பழமொழி இலக்கியம் ஆகிய 31 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103280).

9799

கே. எஸ். சிவகுமாரன் ஏடுகளில் திறனாய்வு / மதிப்பீடுகள் சில. கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6, 5/3ஏ, எட்வேர்ட் அவென்யூ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2011. (மஹரகம: தரஞ்சி பிரின்ட்ஸ், நாவின்ன).

96 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-53607-0-8.

கே.எஸ்.சிவகுமாரன் தொடர்பான ஓர் அவதானிப்பு (கிழக்கு மண் இணையத்தளம்), சோமகாந்தனின் பத்தி எழுத்து, பத்தி எழுத்தும் சண் அங்கிளும், இனிய உறவுகள் எழுச்சியுறட்டும் (சோமகாந்தம் நூலில் இடம்பெற்றது), சிற்பியும் நானும், தெளிவத்தை ஜோசப்பும் நானும், செங்கை ஆழியானின் எழுத்தும் எண்ணமும், கிடுகுவேலி-ஒரு நோக்கு, ஈழத்துப் பரிசுக்கதைகள், மு.கனகராசனின் புடம், நாவேந்தனின் வாழ்வு, சிற்பி சிவசரவணபவன், திருகோணமலையிலிருந்து ஒரு பெண்பாற் புலவர், இவன் ஒரு... (இரவுநேரப் பூபாளம் நூலுக்கான அணிந்துரை), தமிழ்க் கலைகள் யாழ்ப்பாணத்தில் மலர்ச்சி பெறுகின்றன, கொழும்பு நாடகமேடை மீண்டும் சலசலப்பை ஏற்படுத்துகின்றது, தகவற் பெட்டி (மல்லிகை திரட்டு), கொழும்புத் தமிழ்ப் பெண்களின் ஓவியக் கண்காட்சி, Information Super Highway வந்துவிட்டது, யாழ்ப்பாணச் சமுதாயத்தின் முன்னைய தோற்றம், தென்றலின் வேகம்- மற்றுமோர் இஸ்லாமியப் பெண்மணியின் எழுத்தாற்றல், தர்மசேன பத்திராஜாவின் புதிய சிங்களத் திரைப்படம், திரையும் திறனாய்வும், கே.விஜயனின் பலே பலே வைத்தியர், கல்வியியல்: தமிழாக்க நூல் பயன்தருவது, 1970களில் கொழும்பு மேடை நாடகங்கள் ஆகிய தலைப்புகளில் அமைந்த 26 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

9800

கே. எஸ். சிவகுமாரன் கண்களூடாக 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலை/ இலக்கியப் போக்குகளின் பதிவுகள், திறனாய்வு. கே.எஸ்.சிவகுமாரன். கொழும்பு 6: மீரா பதிப்பகம், 291/6, 5/3ஏ, எட்வேர்ட் அவென்யு, 1வது பதிப்பு, மார்ச் 2013. (மஹரகம: தரஞ்சி பிரின்ட்ஸ், நாவின்ன).

xiv, 234 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 18.5x12 சமீ., ISBN: 978-955-53921-5-0.

1996 வைகாசியில் புதிய பயணம் என்ற தனது நூலுடன் மீரா பதிப்பகத்தை தொடக்கிவைத்தவர் புலோலியூர் இரத்தினவேலோன். காலக்கிரமத்தில் பதிப்புத் துறையில் தீவிர வளர்ச்சிகண்ட கொழும்பு, மீரா பதிப்பகம் தனது நூறாவது நூலாக இதனை வெளியிட்டுள்ளது. கடந்த ஐந்து அல்லது ஆறு தசாப்தங்களுக்கு முன்னதான கே.எஸ்.சிவகுமாரனின் திறனாய்வுப் பார்வையை இந்நூல் பதிவு செய்கின்றது. இலக்கியம், திரைப்படம், நாடகம், தொடர்பாடல் எனப் பல்வேறு துறைகளிலும் இத்திறனாய்வுப் பார்வை அகலித்துச் சென்றுள்ளதை இந்நூலில் உள்ள கட்டுரைகளை வாசிப்போர் புரிந்துகொள்ளலாம்.

9801

சமூக ஜோதியின் சங்கநாதம்: சொற்பொழிவுகள். எம்.ஏ.றபீக். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2012. (கொழும்பு 13: விக்ரம் பிரிண்டர்ஸ், 19, வூல்பெண்டால் ஒழுங்கை).

xxv, 133 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-0195-10-7.

மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த சமூகஜோதி எம்.ஏ.றபீக் அவர்களின் 31 சொற்பொழிவுகளின் தொகுப்பு இதுவாகும். பல்வேறு விழா அரங்குகளிலும் இவர் நிகழ்த்திய ஆசியுரைகள், வாழ்த்துரைகள், சிறப்புரைகள், வரவேற்புரைகள், அறிமுக உரைகள், நன்றியுரைகள், தலைமையுரைகள் என்பன இங்கு தொகுக்கப் பெற்றுள்ளன. அடுக்குமொழி, கவர்ச்சிகரமான கவிதைநயம், அவ்வப்போது தேவைக்கேற்ப சுவையான சம்பவப் பகிர்வுகள், சினிமாப்பாடல்கள் என தமிழகத்தின் தி.மு.க.கால சொற்பொழிவுப்பாணியை இவரது உரைகள் மீள் நினைவுறுத்துகின்றன. அரசியல்சாராச் சொற்பொழிவாளர்கள் பட்டியலில் இடம்பெறத்தக்கவர் எம்.ஏ.றபீக். புரவலர் புத்தகப் பூங்காவின் 31ஆவது நூலாக இது வெளிவந்துள்ளது.

9802

சித்ரமுத்துப் பிள்ளைக் கவி. கிருஷ்ணதாசன் (ஆசிரியர்), ச.கார்த்திகேசு (பதிப்பாசிரியர்). கொழும்பு 2: அருளொளி பதிப்பகம், 31/21 டோசன் வீதி, 1வது பதிப்பு, 1971. (கொழும்பு 2: அருளொளி அச்சகம், 31/21 டோசன் வீதி).

(3), 48 பக்கம், தகடு, விலை: ரூபா 1.00, அளவு: 18x12.5 சமீ.

தமிழிலக்கியத்தில் பிரபந்த வகைகளில் ஒன்று பிள்ளைத்தமிழ். இது கடவுள், குரு, வள்ளல் முதலானவரை குழந்தையாகக் கொண்டு காப்பு முதலாகப் பத்துப் பருவங்களமைத்துப் பாடப்பெறுவதாகும். தனது ஞானதேசிகனான தவத்திரு சித்ரமுத்தடிகளை குழந்தையாகக் கொண்டு இந்த ஆண்பாற்பிள்ளைத்தமிழ் இலக்கியத்தை கவிமணி கிருஷ்ணதாசன் அமைத்துள்ளார். காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை என்ற வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்து உறுப்புக்களைக் கொண்டுள்ளது. அருளொளி வெளியீட்டுத் தொடரில் நான்காவது வெளியீடாக இந்நூல் அமைகின்றது. தவத்திரு சித்ரமுத்தடி களினால் தொடக்கிவைக்கப்பெற்ற அருளொளி இயக்கத்தின் 25ஆவது ஆண்டு

வெள்ளிவிழாவின்போது வெளியிடப்பெற்றது.நூலாசிரியர் கிருஷ்ணதாசன் மலேசியாவில் தைப்பிங் பிரதேசத்தில் வசித்துவருகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87314).

9803

சிறுகதை எழுத விரும்புவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள். வரதர் (இயற்பெயர்: தி.ச.வரதராஜன்). யாழ்ப்பாணம்: வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1992. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி).

36 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 16.5x10.5 சமீ.

சிறுகதைப் பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்ளும் இலக்கிய நாட்டம் கொண்டவர்களுடன் தன் சிறுகதைத்துறை அனுபவ வெளிப்பாடுகளை இந் நூல்வழியாகப் பகிர்ந்து கொள்கின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85537).

9804

செங்கை ஆழியான் நாவல்கள்: ஒரு திறனாய்வு நோக்கு. கந்தையா முருகதாசன். யாழ்ப்பாணம்: இலங்கை இலக்கியப் பேரவை வெளியீடு, 1வது பதிப்பு, டிசம்பர் 2006. (அச்சக விபரம் தரப்படவில்லை).

182 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 21.5x14.5 சமீ.

இவ்வாய்வில் 1960-2003 காலப்பகுதிக்குரிய செங்கை ஆழியானின் நாவல்கள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. செங்கை ஆழியானின் ஆளுமை உருவாக்கம் (இலக்கியமும் படைப்பாளியும், வாழ்வும் எழுத்தும், கல்லூரிக்காலம், பல்கலைக்கழகச் சூழல், செங்கை ஆழியானின் படைப்புக்கள்), செங்கை ஆழியானின் நாவல்களில் பொருளாதாரப் பிரச்சினைகள் (அறிமுகம், வர்க்கங் களின் தோற்றமும் வறுமையும், செங்கை ஆழியான் நாவல்களில் வறுமை, சீதனம், சுரண்டலும் சமூக ஊழல்களும்), செங்கை ஆழியான் நாவல்களில் சாதியம் (அறிமுகம், ஈழத்தில் சாதியம் தொடர்பான நாவல்கள், செங்கை ஆழியானின் நாவல்களில் சாதியம்), செங்கை ஆழியான் நாவல்களில் புலப்பெயர்வு சார் சிக்கல்கள் (புலம்பெயர்வு), செங்கை ஆழியானின் வரலாற்று நாவல்கள் (வரலாறு என்றால் என்ன, வரலாற்று நாவல்கள், தமிழில் வரலாற்று நாவல்கள், ஈழத்தில் வரலாற்று நாவல்கள், செங்கை ஆழியானின் வரலாற்று நாவல்கள்), செங்கை ஆழியான் நாவல்களில் படைப்பாளுமை (கதை மாந்தர் படைப்பு), நிறைவுரை ஆகியஆறு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட எம்.பில் தேர்வுக்கானஆய்வு இதுவாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 192958).

9805

தமிழ் அமுதம். க.மயில்வாகனம். யாழ்ப்பாணம்: வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம், பண்ணாகம், சுழிபுரம், 1வது பதிப்பு, ஏப்ரல் 1994. (யாழ்ப்பாணம்: கு.வி.அச்சகம், 386, மணிக்கூட்டு வீதி).

(8), 42 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 24.5x19 சமீ.

பழந்தமிழர் பண்பாடு, நுண்கலைகளும் தமிழரும், பரிசிலரும் புரவலரும், பழந்தமிழ் இலக்கியங்களில் அறத்தின் நிழல், சேக்கிழார் செய்யுள் இன்பம், பண்டைத் தமிழகத்தாரின் பொழுது போக்குகள், இசைக்கலை, அடியார் அடிச் சுவட்டில், குறிஞ்சிக் கலியுள் ஒரு குறுநாடகம், வந்தனன் வாழி தோழி ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட செந்தமிழ் இலக்கியக் கட்டுரைகள் இந்நூலில் அடங்கியுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120921).

9806

தமிழ் மொழியியல், இலக்கிய, பண்பாட்டு ஆய்வுக் கட்டுரைகள். அ.சண்முகதாஸ் (மூலம்), எஸ்.சிவலிங்கராஜா, செல்வி. எஸ்.சிவசுப்பிரமணியம் (பதிப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: பேராசிரியர் சண்முகதாஸ் 61ஆவது பிறந்தநாள் நினைவுக் குழு, தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2001. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவைகள் நிலையம்).

xvi, 697, புகைப்படங்கள், விலை: ரூபா 1000., அளவு: 20.5x27.5 சமீ.

பேராசிரியர் நா.சுப்பிரமணியன், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, திரு. எம்.ரகுநாதன். பி.செங்கதிர்ச்செல்வன், கே.விசாகரூபன், இ.இரத்தினம், கே.அருந்தாகரன், செல்வி எஸ்.சிவசுப்பிரமணியம் ஆகியோரை நூல்வெளியீட்டுக் குழுவினராகக் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை வெளியிட்டுள்ள இத்தொகுப்பில், பேராசிரியர் சண்முகதாஸ் பற்றிய வாழ்கைக் குறிப்புகளும், தொடர்ந்து ஆறு பிரிவுகளின்கீழ் அவர் எழுதிய தமிழ்/ஆங்கிலக் கட்டுரைகளும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. மொழியியல் (7 ஆங்கிலக் கட்டுரைகள், 8 தமிழ்க் கட்டுரைகள்), ஜப்பானியத் தமிழ் உறவு (9 ஆங்கிலக் கட்டுரைகள், 3 தமிழ்க் கட்டுரைகள்), தமிழ் இலக்கியம் (2 ஆங்கிலக் கட்டுரைகள், 12 தமிழ்க் கட்டுரைகள்), தமிழ் இலக்கணம் (5 தமிழ்க் கட்டுரைகள்), சமயமும் பண்பாடும் (1 ஆங்கிலக் கட்டுரை, 9 தமிழ்க் கட்டுரைகள்), நாட்டார் வழக்காற்றியல் (2 ஆங்கிலக் கட்டுரைகள், 2 தமிழ்க் கட்டுரைகள்) ஆகிய துறைகளில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய 60 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 130938).

9807

தமிழ் யாத்திரை. எ.எம்.எ.அஸீஸ். கொழும்பு: எ.எம்.எ.அஸீஸ், 1வது பதிப்பு, ஜனவரி 1968. (சென்னை 1: கமர்ஷியல் பிரின்டிங் அன்ட் பப்ளிஷிங் ஹவுஸ்).

(2), 200 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

கோலாலம்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட தமிழறிஞர் எ.எம்.எ.அஸீஸ் அவர்கள், பின்னர் தினகரன் பத்திரிகையில் தொடராக எழுதிவந்த 21 கட்டுரைகளின் தொகுப்பு. தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய பார்வைகளின் பதிவாகவும், நேர்முக வர்ணனையாகவும் இவை அமைகின்றன. சமூக சேவைகளினாலும் சிந்தனையினாலும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தப் பாடுபட்ட ஒருசில முஸ்லிம் தலைவர்களில் எ.எம்.எ.அஸீஸ் 20ம் நூற்றாண்டின் முக்கியமானவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118854).

9808

தமிழர் மருத்துவம் அழிந்துவிடுமா?. வி.ரி.இளங்கோவன். சென்னை 600109: யுனிக் மீடியா இன்டகிரேட்டர்ஸ், இல.8, ஆறாவது சந்து, 8ஆவது பிரதான சாலை, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயில், 1வது பதிப்பு, மே 2012. (சென்னை 49: ஜெமினி ஒப்செட் பிரின்டர்ஸ், வில்லிவாக்கம்).

70 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 978-81-922530-2-2.

புலம்பெயர்ந்து பிரான்சில் வாழும் இளங்கோவன், தாயகத்தில் புங்குடுதீவைச் சேர்ந்தவர். இந்நூலில் பாரம்பரிய மருத்துவம் பற்றி இவரால் அவ்வப்போது எழுதப்பெற்ற 18 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. உடல்நலம் காக்கும் பாரம்பரிய மருத்துவம், நமது நலம் பேணுவதற்கு நம் முன்னோர் வழங்கிய செல்வம் சுதேச வைத்தியம், மக்கள் வழக்கில் மருத்துவப் பழமொழிகள், ஆடம்பரக் குதூகலங்கள் அவசியமானவையா? முருங்கை வளர்த்து முழுப்பயன் பெறுங்கள், உணவில் கறிவேப்பிலை சேருங்கள், மருத்துவப் பயன் நிறைந்த துளசி, ஆரோக்கியமற்ற சமூகத்தால் ஒரு புதிய சமுதாயத்தை படைத்திட முடியாது, புற்றுநோய் ஆரம்ப அறிகுறிகளை அறிந்து கொள்ளுங்கள், தேனின் மகத்துவம், இன்றைய இளைஞர்களும் போதைவஸ்துக்களும், சித்தர்களில் சிறந்த சிவவாக்கியர், தாய்ப்பால் கொடுக்கத் தவறாதீர், பாலர் உளநலம் பேணுங்கள், நிறைந்த பயன்தரும் நெல்லிக்காய், நீரிழிவா? வயிற்றோட்டத்திலிருந்து குழந்தைகளைக் காப்பாற்றுங்கள், பிலிப்பைன்சில் மூலிகை வைத்தியம்-எம்மவர் சேவைக்குப் பாராட்டு ஆகிய தலைப்புகளில் அமைந்த இக்கட்டுரைகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்தவையாகும்.

9809

தமிழின் நவயுகம்: பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்: ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2011. ஸ்ரீ பிரசாந்தன், தேவகுமாரி ஹரன் (பதிப்பாசிரியர்கள்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

viii, 160 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 25x17.5 சமீ., ISBN: 978-955-9233-20-6.

1992ஆம் ஆண்டுமுதல் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், வருடாந்த இந்து சமய தமிழிலக்கிய ஆய்வரங்குகளை நடத்திவருகின்றது. 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் 14ம் திகதிமுதல் மூன்றுநாட்கள் தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும் என்ற தலைப்பில் இவ்வாய்வரங்கு இடம்பெற்றது. இவ்வாய்வரங்கின்போது, தென்னிந்திய, மலேசிய, இலங்கை அறிஞர்களால் 60 கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. அந்நிகழ்வு நாளில் இம்மலரும் விநியோகிக்கப் பட்டது. இதில் பல்வேறு நூல்களிலுமிருந்து தேர்ந்த 15 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் (க.கைலாசபதி), தமிழ் நவீனத்துவத்தின் முன்னோடிகள் (பாலா), தமிழ்ப் பண்பாட்டின் மீள் கண்டு பிடிப்பும் நவீனவாக்கமும் மேற்குலகின் பங்கும் பணியும் (கா.சிவத்தம்பி), புதிய துறைகளில் உரைநடை (நா.வானமாமலை), தமிழும் அகராதியும் (எஸ்.வையாபுரிப் பிள்ளை), பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கியம் (எஸ்.வையாபுரிப்பிள்ளை), பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் வளர்ச்சி (பொ.பூலோகசிங்கம்), பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கண நூல்கள் (மயிலை சீனி.வேங்கடசாமி), பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அச்சுப் பண்பாடும் புத்தக உருவாக்கமும் (வீ.அரசு), கிறிஸ்தவ மிஷனரிமார் தமிழுக்கு ஆற்றிய பணி (கே.ஈ.மதியாபரணம்), பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாடகம் (அ.ச.ஞானசம்பந்தன்), தென்னிந்திய இசையின் பொற்காலம் (க.இரகுபரன்), நவீனமயமாக்கல் சூழலில் ஈழத்தில் தமிழ்மொழி (செ.யோகராசா), நாவலர் பணிகளில் நவீனத்துவம் (ஸ்ரீ பிரசாந்தன்), நவீனத்துவமும் பாரதியும் (எம்.ஏ.நுஃமான்) ஆகிய கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

9810

தவத்திரு தனிநாயக அடிகளாரின் படைப்புகள். தவத்திரு தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு. சென்னை 600094: தவத்திரு தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு, 4, சௌராஷ்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு, இணை வெளியீடு, சென்னை 600108: பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, 2வது பதிப்பு, ஜுன் 1993, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2013. (சென்னை: ஈகிள் பிரஸ்).

viii, 397 பக்கம், விலை: இந்திய ரூபா 200., அளவு: 21.5x15 சமீ.

இத்தொகுப்பில் தனிநாயகம் அடிகளார் எழுதிய ஒன்றே உலகம், திருவள்ளுவர், சங்க காலத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு, தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும், தமிழ்த்தூது ஆகிய ஐந்து ஆக்கங்கள் முழுமையாக இடம் பெற்றுள்ளன. ஒன்றே உலகம் என்ற நூல், தனிநாயகம் அடிகளார் பல்வேறு நாடுகளுக்கும் பயணம் செய்தவேளை அவ்வந்நாடுகளில் கிடைக்கப்பெற்ற சுவையான பல தகவல்களைக் கண்டறிந்து அடிகளார் எழுதிய நூலாகும். ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, தென் அமெரிக்கா, சோவியத் ஒன்றகம், இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, வத்திக்கான் நகர், கிரேக்க நாடு, போர்த்துக்கல், ஐரோப்பாவின் சிறு நாடுகள், ஆப்பிரிக்கா, கிழக்கு ஆப்பிரிக்கா, நடுகிழக்கு நாடுகள், தாய்லாந்து, கம்போதியா, வியட்நாம், பர்மா, இந்தோனேசியா ஆகிய 21 நாடுகளின் தலைப்புகளில் தனித்தனி இயல்களில் சுவையான

பிரயாண இலக்கியமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. திருவள்ளுவர் என்ற இரண்டாவது நூல், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளையின் அன்னையார் பெயரில் அமைந்த சொர்ணம்மாள் அறக்கட்டளையில் அடிகளார் நிகழ்த்திய சொற்பொழிவு ஆகும். இந்நூல் வள்ளுவரும் கிரேக்க ஒழுக்க இயலும், வள்ளுவரும் உரோமிய ஒழுக்க இயலும், வள்ளுவரும் புத்தரின் ஒழுக்க இயலும் ஆகிய மூன்று பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது. மூன்றாவது ஆக்கம், சங்ககாலத்தில் விரிவாகும் ஆளுமையின் இயல்பு என்ற கட்டுரையாகும். நான்காவதாக அமைந்த கட்டுரை தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும் என்ற பெயரில் அமைந்த தந்தை செல்வா நினைவுப்பேருரையாகும். இது தந்தை செல்வா அறங்காவல் குழுவினால் 1980இல் வெளியிடப்பட்ட சிறு நூலாகும். இறுதியாக அமைந்தது தமிழ்த்தூது என்ற அடிகளாரின் கட்டுரைக் கொத்து. இதில் தமிழ்த்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள், மலரும் மாலையும், காப்பியக் கவிஞர் வீரமாமுனிவர், தமிழ் நாட்டின் ஆசிரியர் வேதநாயகம்பிள்ளை, செந்தமிழ் வளர்ச்சி, தமிழரும் அவர்தம் கவின் கலைகளும், தமிழ்கூறும் நல்லுலகம் ஆகிய எட்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

9811

நம்பிக்கைகளுக்கு அப்பால்: கட்டுரைகள். மு.புஷ்பராஜன். தமிழ்நாடு: காலச்சுவடு பதிப்பகம், 669 கே.பி.சாலை, நாகர்கோவில் 629001, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (சென்னை 600005: மணி ஒப்செட்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 125., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-93-82033-24-0.

எண்பதுகளில் ஈழதேசிய விடுதலைப் போராட்டம் வீறுகொண்டு எழுந்தபோது அதனை இலக்கியக் கோட்பாடு, ரசனை மற்றும் விமர்சன தளங்களில் பதிவுசெய்த படைப்பாளி மு.புஷ்பராஜன். ஆரவார இலக்கியச் சந்தையிலிருந்து வெகுதூரம் விலகி இருப்பவர். மு.தளையசிங்கம், ஏ.ஜே.கனகரட்னா ஆகியோரின் சூழலில் தன் சமூக இலக்கியப் பார்வையைச் செதுக்கிக்கொண்டவர். இந்நூலில் அவர் எழுதிய பல்வேறு கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. புதிய திராட்சை இரசமும் பழைய சித்தையும், சங்காரம் இரு பார்வைகள், அதிகார ஆட்சியும் ஒரு நாவலும், லஜ்ஜா நாவலும் தஸ்லிமா நஸ்ரினும், நம்பிக்கைகளுக்கு அப்பால், கரோல்ட் பின்ரா, ஏஜே: சில நினைவுச் சிதறல்கள், சு.ரா., செழியன் கவிதைகள், பிறீடா: ஒரு துன்பியல் நாடகம், மக்டலின் சகோதரிகள், எம்.எஸ்.என்றொரு மீரா, மண்ணின் சாரம் செறிந்த கவிஞர் தா.இராமலிங்கம், யோபுவும் மாவோவும், சோகம் தோய்ந்த ஒரு கடலோரத்தின் வாழ்வுகள், ஜெயமோகனும் இயல்விருதும், லண்டன்: சீரிய நாடக அரங்க அளிக்கைகள்-சில அவதானங்கள், மூடிக் கிடக்கும் கதவுகளின் பின்னால், சிம்மாசனங்கள் இழந்த கடவுள்கள் ஆகிய 19 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236450).

9812

நல்லை நாவலன் கோவை. கந்த முருகேசன் (மூலம்), மு.கந்தையா, வ.சிவராஜ சிங்கம் (உரையாசிரியர்கள்). புலோலி: எஸ். ஏகாம்பரநாதன், புலோலி தெற்கு, 1வது பதிப்பு, ஜூலை 1999. (கொழும்பு 12: பேஜ் செட்டர்ஸ், மெசெஞ்சர் வீதி).

ix, 357 பக்கம், 2 புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ.

ஈழத்துப் பெரியார் (தமிழ்த் தாத்தா) தென்புலோலியூர் கந்தமுருகேசனார் ஆறுமுக நாவலர் மீது பாடிய கோவை ப்பிரபந்தம் இதுவாகும். இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையாவும் பிள்ளைக்கவி வ.சிவராஜசிங்கமும் இணைந்து கந்தமுருகே சனாரின் கோவைக்கு உரையெழுதியுள்ளனர். கந்தமுருகேசனார் சைவத்தின் மீது ஆரம்பத்தில் பற்றுறுதி கொண்டிருந்த வேளையில் நாவலர் மீதும் ஆர்வம் கொண்டு அவர் பற்றிய தேடலில் ஈடுபட்டிருந்தார். அவ்வேளையிலேயே இவ் வாழ்ந்தகன்ற கோவையைப் பாடும் ஆர்வம் அவருக்கேற்பட்டது. பின்னாளில் மத நம்பிக்கையற்றிருந்த வேளையிலும், நாவலர் தம் பண்புகளால் ஈர்க்கப்பெற்ற வராகவே கந்தமுருகேசனார் இருந்துள்ளார். அதன் வெளிப்பாடாகவே நல்லை நாவலன் கோவை சாத்தியமாயிற்று. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 127948).

9813

நவீனத்துவம்-தமிழ்-பின்நவீனத்துவம். கார்த்திகேசு சிவத்தம்பி. சென்னை 600002: மக்கள் வெளியீடு, 49, உனிசு அலி சாகிப் தெரு, எல்லிசு சாலை, 1வது பதிப்பு, நவம்பர் 2001. (சென்னை 600005: தேவா ஆப்செட்).

216 பக்கம், விலை: இந்திய ரூபா 70., அளவு: 21.5x14 சமீ.

பேராசிரியரின் பல்வேறு படைப்பாக்கங்களுள் தேர்ந்த கட்டுரைகளின் தொகுப்பாயமைந்த இந்நூலில், தமிழில் நவீன இலக்கியம் என்ற பொதுத் தலைப்புக்குள் வரக்கூடியதாக அவரால் எழுதப்பெற்ற ஒன்பது கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. நவீன தமிழிலக்கியத்தின் சமூகப் பின்புலம்: ஒரு இலக்கிய வரலாற்றுச் சுருக்கம், பாரதியின் மகாவித்துவச் சாதனை: தமிழிலக்கியப் பரப்பிற் பாரதி பெறும் முக்கியத்துவம் பற்றிய ஒரு குறிப்பு, தமிழ் இலக்கிய வரலாற்றில் இதழ்கள்: விரிவான ஆய்வுக்கான முன் குறிப்புகள் சில, நவீன தமிழிலக்கிய வரலாற்றில் மணிக்கொடி: வரன்முறையான மதிப்பீட்டின் அத்தியாவசியம், தமிழிலக்கியத்தின் நவீன காலம் இன்னும் தொடர்கிறதா?, தமிழில் பின் நவீனத்துவம் பற்றிப் பேசப்படுவதன் முன்: தமிழில் நவீனத்துவம் குறிக்கும் தொகுநிலை அர்த்தங்கள் பற்றிய ஒரு ஒப்புநோக்குக் குறிப்பு, அண்மைக்காலத்து மேனாட்டு இலக்கிய விமர்சனம்: ஓர் அறிமுகக் குறிப்பு, மார்க்சியமும் இலக்கிய விமர்சனச் சமகாலச் செல்நெறியும், பின்னவீனத்துவம்: அதன் சிந்தனைப் பின்புலம், கலை, இலக்கிய, அரசியற் பரிமாணங்கள் ஆகியன பற்றிய ஒரு அறிமுக விமர்சிப்பு ஆகிய ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

9814

படைப்பின் கதவுகள்: இலக்கியக் கட்டுரைகள். த.அஜந்தகுமார். கரவெட்டி: புதிய தரிசனம், வதிரி, 1வது பதிப்பு, ஐப்பசி 2013. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா, நெல்லியடி).

vi, 126 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21 x15 சமீ., ISBN: 978-955-53043-7-5.

சிறுகதைகள் பற்றிய பார்வைகள், படைப்பு-படைப்பாளி-விமர்சனம், பொது ஆகிய மூன்று பிரிவுகளின்கீழ் எழுதப்பட்ட 26 இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். உதயன் பத்திரிகையின் ஞாயிறு சூரியகாந்தியில் ஒரு சோம்பேறியின் பக்கம் என்ற தலைப்பில் 2012-2013 காலகட்டத்தில் எழுதப் பட்டவையும், ஜீவநதி சஞ்சிகைக்காக எழுதப்பட்டவையுமான கட்டுரைகள் இவை. ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சூழலில் பல்துறைப் படைப்பாளியாக அறியப்பட்ட தருமராசா அஜந்தகுமார், தனித்துத் தெரியும் திசை என்ற ஆய்வு நூலையும், ஒரு சோம்பேறியின் கடல் என்ற கவிதைத் தொகுதியையும் முன்னர் வெளியிட்டவர்.

9815

பல்வேறு நாவல்களைப் பற்றிய சுவையான கண்ணோட்டம். கே.எஸ்.சிவகுமாரன். சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2013. (சென்னை 94: ஸ்கிரிப்ட் ஆப்செட்).

viii, 112 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 17.5x12.5 சமீ.

நாவல் இலக்கியங்களும் கருப்பொருள்களும், சரித்திர நாவல்கள், பயங்கர மர்ம நாவல்கள், சிருங்கார நாவல்கள், துப்பறியும் நாவல்கள், துப்பறியும் கதையாகத் தோன்றி மெலோட்ராமாவாக (Melo Drama) மாறும் திரைப்படம், ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி - சில்லையூர் செல்வராசனின் நூல் பற்றிய மதிப்பீடு, ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியம்-நா.சுப்பிரமணியத்தின் நூல் பற்றிய மதிப்பீடு, நாவல் முன்னோடிகள், இலக்கியத் தழுவல், பிரக்ஞை ஓட்டம்/நனவோடை, சிறுகதை இலக்கியம், அவுஸ்திரேலியாவில் ஈழத்துச் சிங்களப் பெண் படைப்பாளர்கள், The Asian Film Centre, The Outsider Colin Wilson, எளிமையான ஆங்கில நடை- Richard Wright, மர்லின் மன்றோ மறைந்துவிட்ட கடந்த அரை நூற்றாண்டு, கப்ரியேல் கார்ஸியா மாகுவெஸ் ஆகிய 18 தலைப்புகளில் ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

9816

பல்வேறு பயன்தரும் பனைமரம். கா.விசயரத்தினம். ஐக்கிய இராச்சியம்: Nunaaviloor K.Wijeyaratnam, 35, Southborough Road, Bickley, Bromley, Kent, BR1 2EA, 1வது பதிப்பு, வைகாசி 2014. (சென்னை 600094: பிவிஆர் ஆப்செட்).

xvi, 196 பக்கம், விலை: இந்திய ரூபா 135., அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-9575862-1-5.

இந்நூலில் பல்வேறு பயன்தரும் பனைமரம், சங்க இலக்கியங்களில் விலங்குகளும் பறவைகளும், தீந்தேன் தரும் தேனீக்கள், மண்ணின் மாண்பும் மரத்தின் மாட்சியும், ஐந்திணைகளில் அமைந்துள்ள 14 வகைக் கருப்பொருட்கள், தேசத்துக்குப் பொருத்தமான தொழில்நுட்ப முறைகள், தொல்காப்பியம்-அகநானூறு-சிலப் பதிகாரம் காட்டும் கரணவியல், ஆண்-பெண் பேதம் பேசும் தமிழிலக்கியப்பாங்கு, உலக அரங்கில் நேர்மையும் தலைமையும், கலப்புத் திருமணங்கள், இயமராசன் தமிழனுக்கு அளித்த வரம், ஐக்கிய நாடுகள் அமைப்பு, உலக நெறியான மனித நேயம், குடும்பமும் ஒற்றுமையும், கல்வியின் வருங்காலம், பூவுலகைப் படித்தல், சொர்க்கம் தரும் சுகம், இலக்கியஞ்சார்ந்த போட்டிகள், மனிதநேயத் தொடர்புகள், சொர்க்கம்-நரகம்-மறுபிறப்பு: கற்பனையா நிஜமா?, உலக சமாதானம் பேசும் இலக்கியங்கள், மகப்பேற்றிலும் மகத்தான உலக சாதனை படைக்கும் பெண்கள், மனித உரிமைகள் அன்றும் இன்றும், சனப்பெருக்கம் உலகிற்கோர் ஏற்றம் ஆகிய 24 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

9817

மலையகக் கவிதையின் தனித்துவம். செ.யோகராசா. பத்தனை: தமிழ்ச்சங்கம், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, 1வது பதிப்பு, மார்ச் 2002. (அச்சக விபரம் தரப்படவில்லை).

8 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

பத்தனை: ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்ச்சங்கம் ஒழுங்குசெய்த ஆண்டுவிழா 11.3.2002 அன்று நடைபெற்ற வேளையில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் மொழியியல்துறைத் தலைவரான செ.யோகராசா அவர்கள் ஆற்றிய சிறப்புரையின் எழுத்து வடிவம் இது.

9818

மறுவளம். செ.கிருஷ்ணமூர்த்தி. கிளிநொச்சி: மகிழ் வெளியீடு, 754, கனகராசா வீதி, திருநகர் வடக்கு, 1வது பதிப்பு, மார்ச் 2013. (சென்னை 600005: கருப்புப் பிரதிகள், 855, பப்பு மஸ்தான் தர்கா, இலாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி).

135 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 21.5x14 சமீ.

அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் ஒருவரின் கடந்தகால வாழ்க்கை நினைவுகளாக எழும் கிருஷ்ணமூர்த்தியின் எழுத்துக்கள் கலை, இலக்கியப் படைப்பாளி ஒருவரின் பார்வையாகவும், இலக்கியம் மற்றும் சினிமா சார்ந்த ரசனையாளர் ஒருவரின் சமகால வெளிப்பாடாகவும் இதிலுள்ள கட்டுரைகள் அமைகின்றன. இந்நூலில் தொலைந்துபோன நாட்கள் (மரணம் எனக்கு மிக அருகில், ஆளுக்கொரு தேதி, வீரமணி ஐயரின் முதல் மரணம்), சிந்தனைக்குச் சில (சில நடிகர்கள் நாடகம் போடுகிறார்கள், வரலாறு மறைக்கும் உண்மைகள், இயந்திரத்தோடு வாழ்தல், காணி-நிலம் வேண்டும், கொண்டாட்டங்கள்), எனது நூலகம் (லெ.முருகபூபதியின் சுமையின் பங்காளிகள், கே.எஸ்.சுதாகரின் எங்கே போகிறோம், உனையே மயல் கொண்டு, சி.புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம், மல்லிகை 44ஆம் ஆண்டு மலர்-ஓர் பார்வை),

மறைந்தும் மறையாதோர், மக்களுக்காக வாழ்ந்த மகத்தான மனிதன், சுஜாதா ஓர் எழுத்து (கனவு)த் தொழிற்சாலை), சினிமா (காமராஜ், பெரியார், காந்தி எனது தந்தை Gandhi my father, இந்தியாவின் இருண்ட பக்கங்கள் இரண்டு, தாரெ ஜமீன் பார் Taare Zameen Par, பூ, சிந்தனையில் ஊடுருவும் குறும்படங்கள், சுப்ரமண்யபுரம், தசாவதாரம்), நேர்காணல் (மணிவிழாக் காணும் முருகபூபதியுடன் நேர்காணல்) ஆகிய ஆறு பிரிவுகளில் 26 கட்டுரைகளைத் தொகுத்து ஆசிரியர் எமக்கு வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 234957).

9819

வாசிப்பதும் வாசிக்கப்படுவதும்: இன்றைய இலக்கிய விமர்சனப் போக்குகள். மு.பொன்னம்பலம். தெகிவளை: மு.பொன்னம்பலம், 1வது பதிப்பு, 2012. (கொழும்பு: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).

(2), 100 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18x12.5 சமீ., ISBN: 978-955-92257-1-3.

வாசிப்பதும் வாசிக்கப்படுவதும், சோ.ப. வின் தென்னிலங்கைக் கவிதை தொடர்பாக சமகாலச் சிங்களக் கவிதை பற்றி ஒரு கலந்துரையாடல், சோ.ப.வின் தென்னிலங்கைக் கவிதை பற்றிய ஒரு பார்வை, தேடலும் விமர்சனங்களும் தொடர்பாக இலக்கியமும் தனித்துவமும், வானைக் காட்டுங்கள் சிறகு விரிக்க, உருவகமும் ஒப்பீட்டுவமையும், இனிவரும் திறனாய்வு, 60களிலிருந்து வீறிட் டெழுந்த ஈழத்து விமர்சனப் போக்கு தமிழகத்தவருக்கும் பின்னுதைப்பாக இயங்கிற்று, ஈழத்து கலை இலக்கிய உலகில் ஏற்பட்ட புதிய திருப்பங்கள், அரசியலும் தமிழ்க் கவிதையும், சு.ரா.மரணம் தொடர்பாக- சந்திரனும் சனி வளையங்களும் ஆகிய தலைப்புகளில் மு.பொ. அவர்களால் எழுதப்பட்ட பதினொரு இலக்கியக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

894.8(65) இலக்கிய நூல் தொகுப்பும், மீள்பதிப்பும்

9820

இருபாலைச் சேனாதிராய முதலியார் ஆக்கிய ஆக்கங்கள் சிலவற்றின் தொகுப்பு. இருபாலைச் சேனாதிராய முதலியார் (மூலம்), யோகேஸ்வரி சிவப்பிரகாசம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: ஜீவநதி, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, கார்த்திகை 2011.

xx, 126 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ.

19ம் நூற்றாண்டில் வாழ்ந்த இருபாலைச் சேனாதிராய முதலியார் மிகச்சிறந்த வித்துவானாகவும், அரசியல் அதிகாரம் மிக்கவராகவும் விளங்கியவர். ஆறுமுக நாவலரின் ஆசிரியரான இவரிடம் ஐரோப்பிய மிஷனரிமாரும் தமிழ்கற்றதாக குறிப்புண்டு. அவரது ஆக்கங்கள் சிலவற்றின் தொகுப்பான இந்நூலை தொகுப் பாசிரியர் மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். முதற்பகுதியில் நீராவியடி வீரகத்தி விநாயகர் கலிவெண்பாவும் (வித்துவான் நா.சுப்பையாபிள்ளையின் உரையுடன்

கூடியது), வெளியீட்டுரை, உரைப்பாயிரம், கலிவெண்பா- உரையுடன் ஆகியவை காணப்படுகின்றன. இரண்டாவது பகுதியில் நல்லை வெண்பாவும் (வித்துவான் க.முருகேசபிள்ளையின் குறிப்புடன் கூடியது), முகவுரை, நூலாசிரியர் வரலாறு, சிறப்புப் பாயிரம், நல்லை வெண்பா-குறிப்புரையுடன் ஆகிய அம்சங்கள் காணப் படுகின்றன. மூன்றாம் பகுதியில் நல்லை நகர்க் கந்தன் பேரிற் பாடிய திருவூஞ்சல், நல்லூர்க் கந்தர் கலிவெண்பா, கண்ணகை பேரிலூஞ்சல், நல்லைக் குறவஞ்சி ஆகியனவும் அடங்கியுள்ளன. இரண்டாம் பகுதியிலிருக்கும் நூலாசிரியர் வரலாறு சேனாதிராய முதலியார் பற்றிய பலதரப்பட்ட விடயங்களையும் தருவனவாய் அமைந்திருக்கின்றன.

894.8(7) பலவினத் தொகுப்பு

9821

அர்த்தங்கள் ஆயிரம். எஸ்.ஜெகதீசன். இளவாலை: எஸ்.ஜெகதீசன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1979. (யாழ்ப்பாணம்: ஆர்.எஸ்.அச்சகம்).

(6), 176 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

எண்ணங்களின் கொத்தளிப்பு, உணர்ச்சிகளின் மோதல் நிறைந்த சந்திப்புகளின் தொகுப்பு நூல் இதுவாகும். ஈழநாடு நிருபராகப் பணியாற்றிய வேளையில் தான் கண்ட பல்வேறு பிரமுகர்களுடனான நேர்காணல்களை சுவையாகத் தொகுத்து இந்நூலை ஆக்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 155641).

9822

குவர்னிகா: 41வது இலக்கியச் சந்திப்பு மலர். இலக்கியச் சந்திப்புக் குழு (தொகுப்பாளர்கள்). தமிழ்நாடு: கருப்பு பிரதிகள், B.55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை 600005, 1வது பதிப்பு, 2013. (சென்னை 600005: ஜோதி என்டர்பிரைசஸ்).

808 பக்கம், விலை: இந்திய ரூபா 550., அளவு: 21.5x15 சமீ.

யுத்த மறுப்பையும் அமைதிக்கான வேட்கையையும் சாதிய எதிர்ப்பையும் பெண் விடுதலையையும் விளிம்புப் பால்நிலையினரின் குரலையும், வஞ்சிக்கப்பட்ட மாந்தரின் பாடுகளையும் பேசும் பெருந்தொகுப்பாக 41ஆவது இலக்கியச் சந்திப்பு மலர் வெளியிடப்பெற்றுள்ளது. இலக்கியச் சந்திப்பு, இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கிய வாசகர் கொண்ட சிறு குழுவொன்றினால் 1988ம் ஆண்டு ஜெர்மனியில் ஹேர்ண் நகரத்தில் தொடங்கப்பட்டது. தொடர்ந்த 25 வருடங்களில் 40 சந்திப்புகளை ஐரோப்பாவிலும், கனடாவிலும் நிகழ்த்தியிருந்தது. 41ஆவது சந்திப்பை 2013 ஜூலை 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தியவேளை இக்கட்டுரைத் தொகுப்பு வெளியிடப் பட்டுள்ளது. 12 நாடுகளிலிருந்து எழுதப்பட்ட 75இற்கும் அதிகமான ஆக்கங்கள், கட்டுரைகள், கதைகள், நேர்காணல்கள், கவிதைகள் ஆகிய நான்கு பிரிவுகளுக்குள்

அடக்கப்பட்டு தொகுக்கப்பெற்றுள்ளன. குவர்னிகா (Guernica) - பிக்காசோவினால் வரையப்பெற்ற பிரபல ஓவியமாகும். ஸ்பானிய உள்நாட்டுப் போரின்போது, 26.4.1937இல் ஜெர்மனிய வான்படை, ஸ்பெயினின் பாஸ்க் மாவட்டத்திலுள்ள சிற்றூரான குவர்னிகாவின் மீது குண்டுவீசியது. 5000 அப்பாவி மக்கள் இருமணி நேர குண்டுவீச்சால் பாதிக்கப்பட்ட சம்பவத்தை பிக்காசோ சிம்பாலிச வகைசார்ந்த கன்வஸ் ஓவியமாகத் (25x11 அடி நீள அகலத்தில்) தீட்டியிருந்தார். பாப்லோ பிக்காசோ ஸ்பெயினில் மெலேகா என்ற ஊரில் பிறந்தவர் என்பது குறிப் பிடத்தக்கது.

9823

தமிழோடு அவாவுதல். பா.துவாரகன் (தொகுப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: சுகர்யா வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2013. (யாழ்ப்பாணம்: நோபிள் பிரிண்டர்ஸ், ஆஸ்பத்திரி வீதி).

108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 20.5x14 சமீ.

இந்நூல், 2008 முதல் 2009 வரையான காலகட்டத்தில் மதுரைப் பண்டிதர் அமரர் க. நாகலிங்கம் அவர்களுடன் தான் மேற்கொண்ட உரையாடல்களின் (நேர்காணல்) வழியாக தமிழ் இலக்கணத்தினதும் தமிழ் இலக்கியத்தினதும் முக்கியத்துவம் குறித்த தெளிவான பார்வையை இந்நூலில் தொகுத்து வழங்கியிருக்கிறார். மொழியின் பயன்பாடு, இலக்கணத்தின் அவசியம், தமிழ்மொழியின் தற்போதைய நிலை மற்றும் தேவைகள் குறித்த பண்டிதரின் விரிவான பார்வையை இந் நூலிலிருந்து ஒரு சுவாரஸ்யமான நேர்காணல் வடிவத்தில் பெற்றுக்கொள்ள முடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234878).

9824

பூந்துணர்: பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் தொகுப்பு மலர் 2014. பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். லண்டன்: Eelavar Literature Academy of Britain (ELAB), Century House, 35 Brandreth Court, Harrow, Middlesex, HA1 2JU, 1வது பதிப்பு, 2014. (லண்டன்: அச்சக விபரம் தரப்படவில்லை).

176 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 978-873265-19-2.

நல்ல கலை இலக்கியங்களை வளம்படுத்தவெண்ணி கலையார்வம் கொண்டவர் களால் 2006இல் லண்டன் கொலிண்டேல் பகுதியில் உருவாக்கப்பட்டது தான் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம். எழுத்தாளர்களின் ஒருங்கிணைப்பினால் மாதாமாதம் இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி அதன்மூலம் பெறப்பட்ட இலக்கிய வடிவங்களை புடம்போட்டு கனகச்சிதமாக பூந்துணர் என்னும் நூலாக வெளியிட்டுள்ளனர். 2007இல் முதலாவது தொகுதி வெளிவந்துள்ளது. இந்த நான்காவது தொகுப்பில் சீதாதேவி மகாதேவாவின் ஆறு ஆக்கங்களும், நுணா விலூர் கா.விசயரத்தினம் அவர்களது ஒன்பது ஆக்கங்களும், பேராசிரியர் கோபன் மகாதேவாவின் பதினொருஆக்கங்களும், எஸ்.கருணானந்தராஜாவின் ஏழு

ஆக்கங்களும், திருமதி தயா கருணானந்தராஜாவின் ஒரு ஆக்கமும், செல்வி உமா மகாதேவாவின் ஒன்பது ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. படைப்பாளிகளின் பெயரின் கீழ் அவ்வப்படைப்பாளிகளின் ஆக்கங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. படைப்பாளி பற்றிய விபரக்குறிப்பும் காணப்படுகின்றன. இறுதிப்பிரிவில் முல்லை அமுதன், ஐ.தி.சம்பந்தன், பொன் பாலசுந்தரம், உஷா நாகசாமி, நூலக வியலாளர் என்.செல்வராஜா ஆகியோரின் விமர்சன/அறிமுகக் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. இதிலுள்ள கட்டுரைகள் பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் அவ்வப்போது ஒழுங்குசெய்த சந்திப்புகளில் படிக்கப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

9825

ஜீவநதி நேர்காணல்கள். க.பரணீதரன், த.கலாமணி (தொகுப்பாசிரியர்கள்). யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, தை 2011. (யாழ்ப்பாணம்: சதாபொன்ஸ்).

viii, 84 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20.5x14.5 சமீ.

ஜீவநதி வெளியீட்டு வரிசையில் ஆறாவது நூல். ஈழத்து இலக்கியத்தின் பல்துறைசார் அறிஞர்கள் பதினைந்துபேரின் நேர்காணல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இந் நேர்காணல்களினூடாக சமகால கலை இலக்கிய விவகாரங்கள் குறித்து வினாக்கள் எழுப்பப்பட்டு பிரமுகர்களின் விரிவான கருத்துக்கள் பெறப்பட்டுள்ளன. பேராசிரியர் சபா ஜெயராசா, கவிஞர் சேரன், பேராசிரியர் சி.மௌனகுரு, கவிஞர் சோ.பத்மநாதன், செங்கை ஆழியான், கல்வயல் வே.குமாரசுவாமி, தெணியான், பேராசிரியர் ம.இரகுநாதன், கே.எஸ்.சிவகுமாரன், அருட்திரு இராசேந்திரன் ஸ்ரலின், மேமன்கவி, யோகேஸ்வரி சிவப்பிரகாசம், அந்தனி ஜீவா, குறமகள், அஸ்மின் ஆகியோரின் நேர்காணல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 217962).

மேலும் பார்க்க: 9330

899 பிறமொழி இலக்கியங்கள்

899.(1) பிறமொழிக் கவிதைகள்

9826

உன்னை வாசிக்கும் எழுத்து. ஜமால் ஜுமா (அறபு மூலம்), நினா பஸ்ஸத் (ஆங்கில மூலம்), அஷ்ரஃப் சிஹாப்தீன் (தமிழாக்கம்). வத்தளை: யாத்ரா வெளியீடு, 37, ஸ்ரீ சித்தார்த்த மாவத்தை, தன்கந்த ரோட், மாபோல, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 50 பக்கம், படங்கள், விலை: ரூபா 120., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-8448-02-1.

டென்மார்க்கில் வசிக்கும் ஈராக்கியக் கவிஞர் ஜமால் ஹுமாவின் புத்தகங்களின் புத்தகம் என்ற நெடுங் கவிதையின் ஆங்கிலவழித் தமிழாக்கம் இதுவாகும். 2004 பொதுத் தேர்தல் காலத்தில் தினகரன் வார இதழில் இரண்டு வாரங்கள் தொடராக வெளிவந்து இடநெருக்கடி காரணமாக தொடர்ந்து வெளிவரவில்லை. பின்னாளில் யாத்ரா மே-ஆகஸ்ட் இதழ்களில் 2004 இதழ்களில் முழுமையாக வெளிவந்தது. விரிந்த வாசகர் பரப்பினைக் கருதி நூலுருவில் வெளிவந்துள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 219423).

9827

வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய கவிதைகள். சி.குமாரலிங்கம். யாழ்ப்பாணம்: சி.குமாரலிங்கம், 149, செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர். பிரின்டர்ஸ், 21, சட்டநாதர் வீதி, நல்லூர்).

(6), vi, 42 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 ச.மீ., ISBN: 978-955-51477-4-3.

22 வருடங்களில் 37 நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியர், 154 சொனட் (Sonnet) கவிதைகளையும் எழுதியிருக்கிறார். இத்தாலியில் 13ம் நூற்றாண்டில் அறிமுகமான இக்கவிதைவடிவம் பின்னர் ஐரோப்பாவெங்கும் பரவியது. ஷேக்ஸ்பியரின் கவிதைகளில் இடம்பெற்றுள்ள பல சொற்கள் இன்று வழக்கொழிந்துவிட்டன. ஷேக்ஸ்பியர் எழுதிய கவிதைகளின் மொழிபெயர்ப்பாக இந்நூல் அமைகின்றது. தனது நண்பன் ஒருவனையும், அவன் காதலித்த கறுப்பினப் பெண்ணையும் பற்றி இக்கவிதைகள் பேசுகின்றன. மனிதநேயம், சமூகநீதி, மனோதத்துவம், இயற்கை, சூழல் என்பன பற்றியும், சுற்றுச் சூழல் மனிதனின் அற்ப ஆசைகளுக்காக மாசுபடுத்தப்படுவதையும் தன் கவிதைகளிலே அழகாக விபரிக்கிறார். வங்கி மேலாளரான சி.குமாரலிங்கம், இலக்கியத்திலும் ஈடுபாடுகொண்ட முற்போக்குச் சிந்தனையாளர்.

899.(2) பிறமொழி நாடகங்கள்

9828

சொபக்கிளிசின் மன்னன் ஈடிபசு. சொபக்கிளிசு (கிரேக்க மூலம்), இ.இரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு 4: செய்யுட்களம், 149/3, காலி வீதி, 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (தெல்லிப்பழை: குகன் அச்சகம், காங்கேசன் துறை வீதி).

xii, 64 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 22x14 சமீ.

முகவுரை, இயற்பெயர் விளக்கம், தீபசின் தொல்கதை, மன்னன் ஈடிபசு ஆகிய நான்கு பிரிவாக கிரேக்க நாடகமான இந்நூல் விரிகின்றது. தீபசு நாட்டின் மன்னன் இலயசு, இராணி யோகதா. அந்நாட்டின் தெய்வ வாக்குப்படி இவர்களுக்குப் பிறக்கப் போகும் ஆண் குழந்தை தன் தந்தையைக் கொன்று ஆட்சியைக்

கைப்பற்றி, தாயை மறுமணம் செய்வான் என்று சொல்லப்படுகின்றது. மன்னன் இலயசு அவ்வாக்கினை நம்பி தனக்குப் பிறந்த ஆண் மகனை காட்டு மலையில் கைவிட்டு விடுகிறான். அக்குழந்தையை ஓர் இடையன் கண்டெடுக்கிறான். குழந்தை பல கைகள்மாறி இறுதியில் கொரிந்து நகருக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அந்நகரை ஆளும் மன்னனிடம் குழந்தை ஈடிபசு என்ற பெயருடன் வளர்கின்றது. முன்னர் அவனுக்கிடப்பட்ட தெய்வ வாக்கு, அங்கும் மீண்டெழ, அவனை அது வருத்துகிறது. அன்பான தந்தையை (வளர்ப்புத்தந்தை) பிரிந்து, ஈடிபசு அந்த நாட்டை விட்டே வெளியேறுகின்றான். கானக வழியில் ஒரு கிழவனும் அவனது ஏவலர்களும் எதிர்கொள்கின்றனர். இடையில் ஏற்பட்ட பிணக்கில் கிழவனையும் ஏவலர்களையும் கொல்கிறான். இறுதியில் தீபசு நாட்டுக்கே அவனறியாமல் வந்து சேர்கிறான். அங்கே அந்நாட்டை சிபிஞ்சு என்ற கொடியவன் வல்லாட்சி புரிந்துவருகிறான். ஈடிபசு, சிபிஞ்சு அளிக்கும் புதிர்களை விடுவித்து அவனது அசுர பிடியிலிருந்து நாட்டைக்காப்பாற்றுகிறான். அங்கு கைம்பெண்ணாக இருந்த அரசியான யோகதாவையே மணக்கிறான். பல பிள்ளைகளைப் பெற்று பல்லாண்டு வாழும் தருணத்தில் தீபசை பஞ்சமும் நோயும் வாட்டுகிறது. மன்னன் இலயசைக் கொன்றவன் தண்டிக்கப்படவில்லை யாதலில் தெய்வநிந்தனைக்கு நாடு உள்ளாகிவிட்டதென்று மீண்டும் குறி சொல்லப் படுகின்றது. அப்போது தானே அப்பணியை முன்னெடுக்க மன்னன் ஈடிபசு முயல்கையில் தானே அந்த குற்றவாளி என்றுணர்கிறான். தன் மனைவியே தன் தாயென்றும் காட்டில் கொன்ற கிழவனே தன் தந்தையென்றும் அறிந்துகொள் கின்றான். நாட்டின் நன்மைக்காகவும், தான் செய்த தவறுக்காகவும் தானே தன் கண்களைக் குருடாக்கி நாடு துறக்கிறான். பின்னர் ஏதென்சில் அவன் முதுமையில் இறக்கிறான். இதுவே மன்னன் ஈடிபசுவின் கதை. நாடகாசிரியர் சொபக்கிளிசு, நாடகத்தில் கதையை ஈடிபசு மன்னன் காலத்தில் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து (கதையின் இடைநடுவில்) தொடங்கி, முன்கதையை உரையாடல்களின் மூலம் நகர்த்துகின்றார். பின்னர் இலயசைக் கொன்றவன் யாரெனக் கண்டறியும் நிகழ்காலத்தில் கதை வந்தடைந்து ஈடிபசின் பின்னாளைய செயற்பாடுகளாக நாடகத்தின் பின்பகுதி பயணிக்கின்றது. கிரேக்க அறிஞர் அரிஸ்டோட்டில் விதந்துபோற்றிய நாடகக்கதை என்ற வகையில் இது மிகப் பழமையும் மதிப்பும் பெற்ற நாடகம் என்ற வரலாற்றுக் கணிப்பைப் பெற்றது.

9829

மன்னன் ஈடிப்பஸ்: கிரேக்க நாடகம். சோபோகிலிஸ் (கிரேக்க மூலம்), ஈ.எப். வாட்லிங் (ஆங்கில மூலம்), குழந்தை ம.சண்முகலிங்கம் (தமிழாக்கம்). யாழ்ப் பாணம்: கனிமொழி வெளியீட்டகம், மடம் ஒழுங்கை, கல்வியங்காடு, 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. (யாழ்ப்பாணம்: முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர்).

(2), 65 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

சோபோகிலிஸ் எழுதிய அவலச் சுவை கொண்ட கிரேக்க நாடகமான மன்னன் ஈடிப்பஸ் E.F.Watling அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. இந் நாடகத்தின்

ஆங்கிலவழித் தமிழாக்கம் இந்நூலாகும். விதியின் கைகளில் ஆட்டுவிக்கப்படுகின்ற மனித அவலம்தான் இதனுடைய தொனிப்பொருள். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 120511).

9830

வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய ரோமியோவும் ஜூலியட்டும். சி.குமாரலிங்கம். யாழ்ப்பாணம்: சி.குமாரலிங்கம், 149, செம்மணி வீதி, நல்லூர், 1வது பதிப்பு, டிசம்பர் 2013.(யாழ்ப்பாணம்: சத்தியா பிரிண்டர்ஸ், 153/11 நாவலர் வீதி).

52 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14 ச.மீ., ISBN: 978-955-51477-3-6.

காதலும் துன்பியலும் நிறைந்த நாடகமான ரோமியோவும் ஜூலியட்டும் நூலாசிரியரின் பார்வையில் இங்கு விமர்சிக்கப்படுகின்றது. நாடக கதாபாத்திரங்கள், நாடகம் திரைக்குப் பின்னர் உள்ள குழுப்பாடலுடன் ஆரம்பமாகின்றது, பொது வீதியில் முதல் காட்சி ஆரம்பமாகிறது, ரோமியோ தற்கொலை செய்துகொள்ளுதல், ஜூலியட்டும் மரணமடைதல், ஜூலியட்டை மணக்க விரும்பும் பாரிஸ் பிரபு, கம்பரும் ஷேக்ஸ்பியரும், கம்பரும் பாரதியாரும், ஷேக்ஸ்பியரின் பின்புலம், றோமியோவின் காதல் பாடல், ஷேக்ஸ்பியரின் வரலாறு, ஷேக்ஸ்பியரும் கார்ல் மார்க்சும், மார்லோ கிரிஸ்டோப்பர் ஷேக்ஸ்பியர் காலத்து நாடகாசிரியர், ரோமியோ ஜூலியட் டூயட் பாடல், ஜூலியட்டின் மரணம் பற்றிய பிழையான தகவல்கள், Dydeny Finkelstein, சுதந்திரமாதலும் கலையும், ஷேக்ஸ்பியர் வரலாற்றுத் தொடர்ச்சி ஆகிய தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது. வங்கி மேலாளரான சி.குமாரலிங்கம், இலக்கியத்திலும் ஈடுபாடுகொண்ட முற்போக்குச் சிந்தனையாளர். இவரது அன்னையார் மீசாலை வீரசிங்கம் கல்லூரியின் தாபகர அமரர் வேதாரணியம் வீரசிங்கம் அவர்களின் பூட்டி என்பதும், தந்தையார் அமரர் மு.சின்னத்தம்பி அவர்கள் மேற்படி பாடசாலையின் முதல் 40 ஆண்டுக்கால அதிபராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

899.(4) பிறமொழிச் சிறுகதைகள்

9831

சந்தன மரம். அ.மு.பாறூக். கொழும்பு 14: புரவலர் புத்தகப் பூங்கா, இல.25, அவ்வல் சாவியா வீதி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2013. (கொழும்பு 11: எஸ்.என். எம்.ஆர். கிராப்பிக்ஸ்).

x, 72 பக்கம், விலை: ரூபா 270., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-0195-12-1.

புரவலர் புத்தகப் பூங்காவின் 33ஆவது வெளியீடாக கிழக்கு மாகாணத்தின் மருதமுனையைச் சேர்ந்த அ.மு.பாறூக் எழுதிய பிறமொழிக் கதைகள் இடம் பெற்றுள்ளன. காலனாய் வந்த கனிகள் (ஆங்கில மூலம் ஜி.நேருஜா), பெண்மையின் சீற்றம் (ஆங்கில மூலம் புண்ணியகாந்த விஜயநாயக்க), மேஜர் தந்த பரிசு (ஆங்கில மூலம் ஏ.பார்த்தலோமியஸ்), சந்தன மரம் (ஆங்கில மூலம் பிரிஸ்ஸில்லாபெரெரா), தாகுரின் கிணறு (இந்தி மூலம் பிரேம்சந்த்), ராணி ஞானம் பெற்றாள் (ஆங்கில

மூலம் சாவித்திரி உடவத்தை), இந்துமா (-), உண்மை வென்றது அவலட்சணம் அம்பலம் (ஆங்கில மூலம் போதிஸ்ரீ சாஸ்திரி), மீனா பீடி சுற்றிக்கொண்டிருக்கிறாள் (ஆங்கில மூலம் பாத்ராஜி மகிந்த ஜெயதிலக்க), தோல்வியின் மறுபக்கம் (ஆங்கில வடிவம் பி.எம்.ஜெயதிலக்க), வரட்சியும் வசந்தமும் (ஆங்கில மூலம் டி.எல். சிறிமன்ன). இம்மொழிபெயர்ப்புகள் ஏற்கெனவே தினக்கதிர், தினக்குரல் ஆகிய இதழ்களில் வெளிவந்தவை. மனிதநேயமும் சமூக மேம்பாடும் இக்கதைகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

9832

பர்மிய பிக்கு சொன்ன கதைகள். *மவுங் ரின் ஔவுங் (ஆங்கில மூலம்), சோ. பத்மநாதன் (தமிழாக்கம்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xix, *236 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 550., அளவு:* 18x12 *சமீ.,* ISBN: 978-955-659-334-8.

Maung Htin Aung *(மவுங் ரின் ஔவுங்) ஆங்கிலத்தில் (1966இல்) எழுதிய* Burmese Monk's Tales *என்ற நூலின் தமிழாக்கம், ஓவியர் ஆசை இராசையாவின் ஓவியங்களுடன் வெளிவந்துள்ளது. பர்மாவின் (பின்னைய மியன்மார்) வடபகுதியை 1852-1877 காலகட்டத்தில் ஆண்ட மன்னர் மிந்தோனின் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்தவர் திங்கசார் சாயதவ் என்ற சிரேஷ்ட பௌத்த மதகுரு. நாடுமுழுக்க அவர் அடிக்கடி மேற்கொண்ட பயணங்களின்போது தனது மதப்பிரச்சாரங்களில் அவர் கூறிய நகைச்சுவைமிக்க கதைகளின் மூலம் பிரபல்யம் அடைந்தவர். திங்கசார் கூறிய இக்கதைகள் பர்மிய மக்கள் மத்தியில் வாழ்மொழிக்கதைகளாக வழக்கில் இருந்துவந்தன. பர்மியப் பிக்கு சொன்ன கதைகள் பௌத்த நீதிக்கதைகளின் பிறிதொரு கிளையாக இப்பொழுது தமிழுக்கு வந்து சேர்ந்திருக்கிறது. சோ.பத்மநாதன் மொழிபெயர்த்துள்ள இந்நூலில் திங்கசார் சாயதவ் கூறிய 58 கதைகளும், வேறு பிக்குகள் கூறிய சில நாடோடிக்கதைகளும் இடம்பெற்றுள்ளன. ஜாதகக் கதைகளிலிருந்து வேறுபட்ட பர்மிய நாடோடிக் கதைப்பாங்கில் அமைந்தவை இவை. பௌத்த துறவிகளின் மத ஒழுக்கத்துக்குப் புறம்பான வாழ்க்கையை கேலியுடன் கிண்டல் செய்யும் பல கதைகளும், மக்களின் மூட நம்பிக்கையையும், மதகுருக்களின் பாலியல் நடத்தையையும் எள்ளல் சுவையுடன் வெளிப்படுத்தும் கதைகளும் இத்தொகுப்பில் உள்ளன.*

899.(5) பிறமொழி நாவல்கள், குறுநாவல்கள்

9833

சிட்டுக் குருவிகள். *ஆர்.ஆர்.சமரக்கோன் (சிங்கள மூலம்), சரோஜினிதேவி அருணாசலம் (தமிழாக்கம்). கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கோ, 217 ஒல்கொட் மாவத்தை, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு: வரையறுக்கப்பட்ட எம்.டி.குணசேன அன் கொம்பனி அச்சகம், 217 ஒல்கொட் மாவத்தை).*

xiv, ***195** பக்கம்,* விலை: ரூபா ***72.50**, அளவு:* 18x12 *சமீ.,* ISBN: 955-21-0602-8.

1971ஆம் ஆண்டின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற "கே குருல்லோ" என்ற சிங்கள நாவலின் தமிழாக்கம். இந்நாவலில் கதாசிரியர் நந்தசேனவையும் அவரது மனைவி சுமனாவதியையும் குடும்பத் தலைவர்களாகவும் நான்கு பிள்ளைகளின் பெற்றோராகவும் சித்திரிக்கின்றார். பாசத்தையும் கடமையையும் கலந்தூட்டி வளர்த்து பிள்ளைகளை ஆளாக்குகின்றார்கள். ஆனால் பிள்ளைகள் வளர்ந்ததும் பெற்றோரைக் கைவிடுகின்றனர். அவர்களது தாய்மை உணர்வுகளைக் காயப்படுத்துகின்றனர். ஐந்தறிவு சிட்டுக்குருவிகள் சிறகுமுளைத்ததும் கூட்டை விட்டுப் பறந்து விடுகின்றன. ஆறறிவு மனிதக் குருவிகளும் அதையே செய்கின்றன. பிள்ளைகளினால் சுகம் காணாத பெற்றோரின் பாத்திரப்படைப்பு இந்நாவலின் அடிநாதமாகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 210344).

9834

பிள்ளைகளின் வீடு. *மெரில் காரியவசம் (சிங்கள மூலம்), சின்னையா கனகமூர்த்தி (தமிழாக்கம்).கொழும்பு 7: சமூக, கலாசார ஒருங்கிணைப்பு அமைச்சு, **255** பௌத்தாலோக மாவத்தை, 1வது பதிப்பு, 1991. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).*

viii, ***223** பக்கம்,* விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14.5 *சமீ.*

முன்னாள் பாராளுமன்ற அகலவத்தைத் தொகுதி மக்கள் பிரதிநிதியும், போதனா வைத்தியசாலைகள், மகளிர் விவகார பிரதி அமைச்சருமான வழக்குரைஞர் மெரில் காரியவசம் அவர்களால் சிங்களத்தில் எழுதப்பட்ட தருவன்கே கெதர சிங்கள நாவலின் தமிழாக்கம். நூலின் மொழிபெயர்ப்பாளரான நோர்வூட் சின்னையா கனகமூர்த்தி, சிவனொளிபாதமலைத் தொடரிலமைந்த வெஞ்சர் தோட்டத்தில் பிறந்தவர். மத்துகம மத்திய மகா வித்தியாலயம், ஹட்டன் ஹைலன்ட்ஸ் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விகற்று, மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற்றவர். தலவாக்கலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, ஆசிரியர் சேவைக்களப் பயிற்சிப் பிரிவு ஆகிய வற்றில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். மலையகச் சிறுகதைத் தொகுப்பான கதைக்கனிகள் என்ற நூலை சிங்களத்தில் மொழிபெயர்த்தவர் இவர்.(இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 202725).

900 புவியியல், வரலாறுகள்

901 பொது வரலாறுகள், பாடநூல்கள்

9835

உயர்தர வகுப்புகளுக்குரிய புது உலக சரித்திரம் 1789-இன்று வரை. வி.இ. நிக்கலஸ். யாழ்ப்பாணம்: வி.இ.நிக்கலஸ், வரலாற்றுத்துறை விரிவுரையாளர், பயிற்சிக் கல்லூரி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).

xv, 464 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 7.75, அளவு: 21.5x14.5 சமீ.

அமெரிக்க சுதந்திரப் புரட்சி, புரட்சிக்கு முந்திய பிரான்சு, கைத்தொழிற் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சியின் வரலாறு, நெப்போலியன் பொனபாட், வியன்னா மாநாடும், ஐரோப்பிய மாநாட்டு முறையும், ஐரோப்பாவில் தாராண்மைவாதமும் நாட்டின் வாதமும், அண்மைக் கிழக்கு நாடுகளின் பிரச்சினை, இத்தாலியின் ஐக்கியம், மூன்றாம் நெப்போலியனும் இரண்டாம் பேரரசும், செர்மனியின் ஐக்கியம், ஐரோப்பாவின் ஆள்புலப் படர்ச்சி, அமெரிக்க ஐக்கிய இராச்சியங்களின் எழுச்சி, நவயுகத்தின் பிரதான இயக்கங்கள், ஜெர்மன் பேரரசின் உண்ணாட்டு வரலாறு, மூன்றாவது பிரெஞ்சுக் குடியரசு, ஐரோப்பாவின் புதுப் பேரரசுவாதம், தூரகிழக்கில் ஐரோப்பியர், அண்மைக்கிழக்கு நாடுகளின் பிரச்சினை, முதல் உலகப் போருக்கு வழிகாட்டிய சர்வதேச உறவுகளும் நிகழ்ச்சிகளும், முதலாம் உலகப் போர், வேர்சைச் சமாதானமும் சர்வதேச சங்கமும், இரசியாவில் சீர்திருத்த புரட்சி இயக்கங்கள், ஐரோப்பிய ஆட்புலங்களின் சுதந்திர இயக்கங்கள், ஈருலகப் போர்களின் இடையாண்டுகள், இரண்டாம் உலகப் போர், உலக சமாதானம் ஆகிய 27 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூல் 8 தேசப்படங் களையும் உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104916).

9836

உலக சரித்திர வினாவிடை. இ.தர்மலிங்கம். சுன்னாகம்: தனலக்குமி புத்தகசாலை, 1வது பதிப்பு, 1938. (சுன்னாகம்: திருமகள் அச்சியந்திரசாலை).

80 பக்கம், விலை: சதம் 50., அளவு: 21x14 சமீ.

பாடசாலை மாணவர்களுக்கான உலக வரலாறு பற்றிய தகவல்கள், கேள்வி -பதில்களாக இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

9837

உலக சரித்திரம்: 1500-1948 ஜீ.சீ.ஈ. வகுப்புக்குரியது. மு.இளையதம்பி. யாழ்ப் பாணம்: மு.இளையதம்பி, 2வது பதிப்பு, 1962, 1வது பதிப்பு, 1958. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(3), 316 பக்கம், விலை: ரூபா 5.00, அளவு: 21.5x14.5 சமீ.

தற்கால ஆரம்பமும் நவீன மாற்றங்களும், புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம், புதிய இராச்சியங்களின் எழுச்சி, முப்பதாண்டு யுத்தம், இங்கிலாந்து (1485-1688),

17ஆம் நூற்றாண்டில் சில ஐரோப்பிய நாடுகளின் நிலைமை, இந்தியாவில் மொகலாயர் ஆட்சி, ருஷியாவும் மகாபீற்றர் செய்த தொண்டுகளும், பிரஷ்யாவின் எழுச்சி, இங்கிலாந்தில் ஹனோவ மன்னர்களின் ஆட்சி, பிரித்தானியரும் அமெரிக்க குடியேற்ற நாடுகளும், பிரான்சியப் புரட்சியும் ஐரோப்பிய யுத்தமும், அதன் பயன்களும், கைத்தொழிற் புரட்சி, சுதந்திர உணர்ச்சியும் தேசிய இயக்கமும் (1815-1848), இத்தாலியின் தேசிய ஒற்றுமை, ஜேர்மனி ஐக்கியம்பூண்ட வரலாறு, இந்தியா, ருஷியா, சுதந்திர ஆட்சிபெற்ற பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகள், 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளின் சாம்ராச்சியப் பெருக்கம், ஆசிய கீழ்த்திசை நாடுகள், அமெரிக்க ஐக்கிய நாடுகளும் உள்நாட்டுப் போரும், கீழ்த்திசைப் பிரச்சினை, முதலாம் உலக யுத்தம் (1914-1918), சர்வதேச சங்கம், ருஷியா, இரண்டாம் உலக யுத்தம் ஆகிய 27 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69329, 114771).

9838

எட்டாந்தரச் சரித்திரச் சுருக்கம். இ.தர்மலிங்கம். சுன்னாகம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 1வது பதிப்பு, 1970. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

viii, 216 பக்கம், புகைப்படம், வரைபடம், விலை: ரூபா 3.75, அளவு: 21x13.5 சமீ.

புதிய பாடத்திட்டத்திற்கும், சரித்திரம் கற்பித்தற்குரிய வழிகாட்டிக்கும் அமைவாக எழுதப்பெற்ற நூல். இந்நூல் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை, 1817-1818 ஆங்கிலேயரின் ஆதிக்கமும் உள்நாட்டுக் கலகங்களும், 1818-1850 வரை (கோல்புருக் சீர்திருத்தம், 1848ஆம் ஆண்டுக் கலகம்), இலங்கையும் உலகமும் (கைத்தொழிற் புரட்சி), இலங்கையும் உலகமும் (பிரான்சு-பிரான்சிய அரசியற் புரட்சியும் ஐரோப்பிய யுத்தங்களும்), எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, போக்குவரவும், தபால் தந்தி முறைகளும், கல்வி கலாசார முன்னேற்றம், நவீன ஐரோப்பா, ஐரோப்பாவின் விரிவு, சீனா, யப்பான் உன்னத நிலையை அடைதல், ஐக்கிய அமெரிக்க நாடுகள் உன்னத நிலையை அடைதலும் அவற்றின் ஆதிக்கம் பரவுதலும், இலங்கையின் அரசியல் வளர்ச்சி, இலங்கையும் உலகமும், முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் ஐரோப்பா, இரண்டாவது உலக மகா யுத்தம், பிரித்தானியப் பொதுநல அரசு ஆகிய 17 அலகுகளில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இ.தர்மலிங்கம், சரித்திர கதா வாசகம், இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும், சரித்திரச் சுருக்கம் vi-vii, இலங்கைச் சரித்திர வினா-விடை, உலக சரித்திர வினாவிடை, குடிமையியல் 6-8, முதலிய நூல்களின் ஆசிரியராவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 104661).

9839

ஐம்பது நாடுகளை அறியுங்கள். சு.துரைசிங்கம். சுன்னாகம்: பாமா பதிப்பகம், 118 ஸ்டேஷன் வீதி, சுன்னாகம் கிழக்கு, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி).

(5), 52 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 41.00, அளவு: 18x13 *சமீ.*

அவுஸ்திரேலியா, அவுஸ்திரியா, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, இலங்கை, ஈரான், ஈராக், எகிப்து, ஐக்கிய அமெரிக்கா, கனடா, கயானா, கம்போடியா, கிறீஸ், கியூபா, கிழக்கு ஜேர்மனி, சவூதி அரேபியா, சிங்கப்பூர், சீனா, சுவீடன், செக்கோசிலாவேக்கியா, சோமாலி, தாய்லாந்து, துருக்கி, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, நேபாளம், நைஜீரியா, நோர்வே, பர்மா, பாக்கிஸ்தான், பிரித்தானியா, பிரான்ஸ், பிரேசில், பிலிப்பைன்ஸ், பூட்டான், பெல்ஜியம், போர்த்துக்கல், போலந்து, மலேசியா, மாலைதீவு, மெக்சிக்கோ, மேற்கு ஜேர்மனி, யப்பான், யூகோசிலாவியா, லிபியா, வங்காளதேசம், வியட்நாம், ரூசியா, ஸ்பெயின் ஆகிய ஐம்பது நாடுகள் பற்றிய விளக்கக் குறிப்பினை இந்நூல் வழங்குகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85765).

9840

புது முறைச் சரித்திரம்: ஆறாந்தரம். *நாரந்தனை ஆ.சபாரத்தினம். யாழ்ப்பாணம்: கு.வி.தம்பித்துரை, கலைவாணி புத்தக நிலையம், இல.10, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1969.(யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, பிரதான வீதி).*

xvi, *230 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 3.75, அளவு:* 18x12.5 *சமீ.*

இலங்கைக் கல்வி அமைச்சு வெளியிட்ட, திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்ட மாகிய சரித்திர பாட வழிகாட்டியைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டது. மூன்று தவணைகளுக்கும் உரிய பாடங்கள் அத்தவணைக்குரிய பிரிவில் விளக்கப்பட்டு மீட்டற் பயிற்சியும் ஒவ்வொரு தவணைக்குரிய பாட முடிவிலும் தரப்பட்டுள்ளது. நூலில் இடம்பெற்ற 26 படங்களின் அட்டவணையும் 11 தேசப்படங்களின் அட்டவணையும் நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124888).

910 பொதுப் புவியியல்

9841

ஆரம்ப மக்கட் புவியியல். *ஜே.எச்.ஜீ.லெபன் (ஆங்கில மூலம்), எம்.ரசீக் (தமிழாக்கம்). கொழும்பு 3: கல்வி வெளியீட்டுத் திணைக்களம், 58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை, 1வது பதிப்பு, 1970. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்).*

xiv, *205 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 21x14 *சமீ.*

An Introduction to Human Geography என்ற தலைப்பில் J.H.G.Lebon அவர்கள் எழுதி லண்டன் Hutchinson and Co நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட மக்கட் புவியியல் நூலின் தமிழாக்கம். புவியியலின் தொன்மரபும் இக்காலக் கோட்பாடும், கால நிலையும் மனிதனும், மானிடப் புலப்பெயர்ச்சிகளும் காலநிலையும், மன்பதையின் பொருளாதாரங்கள், சமநிலைப் பிரச்சினை ஆகிய ஐந்து பிரதான இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85102).

9842

இலகுமுறை இலங்கைப் புவியியல். எஸ்.குமரையா. வேலணை: சி.சரவணபவான், 1வது பதிப்பு, 1966. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

(8), 232 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.50, அளவு: 21.5x14 சமீ.

உருவமும் நிலையமும், தரையியல், காலநிலை, இயற்கைத் தாவரம், பயிர்ச் செய்கை, கனிப்பொருள் வருவாய், கைத்தொழில்கள், போக்குவரத்து வசதிகள், குடிப்பரம்பல், வர்த்தகம், பொது, இலங்கைப்பட பயிற்சிகள் ஆகிய 12 பாடங்கள் இந்நூலில் வினா-விடை வடிவத்தில் விளக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்கு முன்னர் விரைவாக பாடத்தினை மீட்டுப்பார்ப்பதற்கு இந்நூல் துணைபுரிகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85116).

9843

இலங்கை: புவியியல் வளம் மக்கள். எல்.சி.கே. குக்கு (மூலம்), கா.குலரத்தினம் (பதிப்பாசிரியர்), சோ.நடராசன் (தமிழாக்கம்). இலங்கை: அரச கரும மொழித் திணைக்களம், கொழும்பு, 1வது பதிப்பு, 1959. (இலங்கை: அரசாங்க அச்சகம்).

xii, 410 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலண்டன் பல்கலைக்கழகத்தின் புவியியல் அறிஞரான குக்கு அவர்கள் எழுதிய மூலநூலினை திருத்தியும் புதுக்கியும் இலங்கைப் புவியியல் என்ற பெயரில் கா.குலரத்தினம் அவர்கள் எழுதியிருந்தார். அந்நூலின் தமிழாக்கத்தினை சோ. நடராசன் அவர்கள் மேற்கொண்டிருந்தார். இலங்கைப் பாடசாலைகளில் தமிழ் மொழி மூலக் கற்கைநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டவேளையில் மொழி பெயர்க்கப்பட்ட பல்வேறு நூல்களுள் இதுவும் முக்கியமானதொன்று. வரலாற்றுப் புவியியல், பௌதிகப் புவியியல், பொருளாதாரப் புவியியல் மக்கட் புவியியல், ஆகிய பிரதான நான்கு பகுதிகளைக் கொண்ட இந்நூலின் ஐந்தாம் பகுதி, நூற் சுருக்கமாக அமைகின்றது. இலங்கையின் இயற்கைப் பிரதேசங்கள், முடிவுரை ஆகியன இப்பிரிவில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91106).

9844

இலங்கைப் புவியியல்: க.பொ.த. சாதாரண தர வகுப்புக்குரியது. க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, 5, சீனியர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1963. (யாழ்ப்பாணம்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி).

188 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.75,அளவு: 18x12.5 சமீ.

க.பொ.த. சாதாரண வகுப்பிற்கு ஏற்ற முறையில் புதிய கலைச்சொற்களைக் கையாண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளது. புவியியல் பற்றிய விபரங்களை தெளிவாக விளக்குவதற்காக ஆங்காங்கு விளக்கப்படங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 24342).

9845

எட்டாந்தரப் புவியியல். வி.கந்தவனம். சுன்னாகம்: வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம், 2வது பதிப்பு, 1970, 1வது பதிப்பு, 1968. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

ix, 168 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x13.5 சமீ.

இந்நூல் புதிய பாடத்திட்டத்திற்கும் வழிகாட்டிக்கும் அமைய ஆக்கப்பெற்றது. முதலாம் பருவத்திற்குரிய பாடங்களாக புவியின் அசைவுகளும் பருவ வேறுபாடு களும், அகல-நெடுங்கோடுகள், இலங்கைப் புவியியல், நெல் வேளாண்மை, வியாபாரத் தானிய வகைகள், இலங்கையின் வணிகப் பயிர்கள், இலங்கையின் விளைபொருட்கள், பருத்திப் பயிர்ச்செய்கை ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் பருவத்திற்கான பாடங்களாக காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள், உலகின் காலநிலைப் பிரதேசங்கள், இலங்கையின் நீர்ப்பாசன முறைகளும் காணி அபிவிருத்தியும், விலங்கு வேளாண்மை-இறைச்சி, பால், மீன்பிடித் தொழில், காடுகளும் காட்டுத் தொழில்களும் ஆகிய பாடங்கள் அடக்கப்பட்டுள்ளன. மூன்றாம் பருவத்துக்குரிய பாடங்களாக இலங்கையின் கைத்தொழில்கள், இரும்பு உருக்குக் கைத்தொழில், நீர் மின்சக்தி, உலகின் குடிப்பரம்பல், உலகின் பிரதான வியாபாரப் பாதைகள், இலங்கையின் குடியிருப்புகள் ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 50 விளக்கப்படங்களுக்கான அட்டவணை இறுதியில் தரப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98799).

9846

ஏழாந்தரப் புவியியல். க.குணராசா (புனைபெயர்: செங்கை ஆழியான்). யாழ்ப் பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1970. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234 காங்கேசன்துறை வீதி).

115 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 24x18.5 சமீ.

இலகுவாகவும் தெளிவாகவும் மாணவர்களுக்கு புவியியற் கல்வியைப் புரிய வைக்கும் வகையிலும் அவர்களுக்குத் தேவையான படப்பயிற்சித் தேவையை பூர்த்திசெய்யும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ள நூல். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84696).

9847

சுற்றாடற் புவியியல். க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், கல்வியங் காடு).

(5), 268 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13.5 சமீ.

1995ஆம் ஆண்டிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் புதியதொரு பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ் வகையில் சுற்றாடல் புவியியல் (Environmental Geography) என்ற பாடநெறிக்கான உபபாடநூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. சூழல், கண்டங்களும் சமுத்திரங் களும், புவியியற் செயற்படும் அகவிசைகள், பாறைகளும் மண்வகைகளும், புறவிசைகள், நீர், வளி ஆகிய ஏழு பிரிவுகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119685).

சுற்றாடற் புவியியல். க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய இரண்டாம் பதிப்பு, 1999, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (யாழ்ப்பாணம்: டினேஷ் அச்சகம், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு).

(5), 266 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 21x14 சமீ.

திருத்திய இப்பதிப்பு, ஸ்ரீலங்கா வெளியீடாக வெளியிடப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 128529).

சுற்றாடற் புவியியல். க.குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, திருத்திய நான்காம் பதிப்பு, 2007, 3வது பதிப்பு, 2001, 2வது பதிப்பு, 1999, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1995. (அச்சக விபரம் தரப்படவில்லை).

276 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 300., அளவு: 21.5x15 சமீ., ISBN: 955-1013-03-4.

அத்தியாயத் தலைப்புகள் மாற்றப்பட்டு திருத்திய பதிப்பாக 22 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த நான்காம் பதிப்பு வெளிவந்துள்ளது. ஞாயிற்றுத் தொகுதி, புவித் தொகுதி, புவியிற் செயற்படும் அகவிசைகள், பாறை வகைகளும் மண்வகைகளும், புறவிசைகள், நீர், வளி ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் புதிய பல தகவல்களுடன் வெளிவந்துள்ளது. நூலியல் தகவல் பகுதியில் முதற்பதிப்பு ஜனவரி 1998 என்று குறிப்பிடப்பட்டுள்ளமை தவறாகும். இந்நூலின் முதற்பதிப்பு ஒக்டோபர் 1995இல் வெளிவந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 184505).

9848

செய்முறைப் புவியியல். I.S. ஜெகன். சுன்னாகம்: திருமதி சுதா ஜெகன், ஜன்சி மஹால், ஊரெழு கிழக்கு, சுன்னாகம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2004. (யாழ்ப்பாணம்: உயர்கல்விச் சேவை நிறுவனம்).

vii, 72 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 26x18.5 சமீ.

க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்புகளில் புவியியல் கற்கும் மாணவர்களின் தேவையைக் கருத்திற்கொண்டு தேசப்படத்தின் அறிமுகம், நிலத்தோற்ற அம்சங்களை இனங்காணுதல், படங்களைப் பெருப்பித்தலும் சிறுப்பித்தலும், தேசப்பட அமைப்பும் விளக்கமும், புள்ளியியல் வரைவிலக்கணம் ஆகிய ஐந்து அத்தியாயங்களில் இந்நூல் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் உலகப்படப் பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 139079).

9849

செய்முறைப் புவியியல்: பகுதி 1. S.T.B.ராஜேஸ்வரன். யாழ்ப்பாணம்: திருமதி கௌரி ராஜேஸ்வரன், 1வது பதிப்பு, ஒக்டோபர் 1997. (தெகிவளை: நியூட் குரூப், 28, எபனேசர் இடம்).

xix, 160 பக்கம், வரைபடங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 29.5x21.5 சமீ.

அளவுத் திட்டத்தின் பொருளும் முக்கியத்துவமும், படங்களைப் பெருப்பித்தலும் சிறுப்பித்தலும், தரைத்தோற்ற அம்சங்களை வெளிப்படுத்தல், சாய்வு ஆய்வு, வலைப்பின்னல் ஆய்வு, இடம்சார் பரம்பல் மதிப்பீடு, ஆரம்ப நில அளவை ஆகிய ஏழு இயல்களை உள்ளடக்கியுள்ள நூல். இந்நூலாசிரியர் யாழ்.பல்கலைக் கழகத்தின் புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தையும் நெதர்லாந்திலுள்ள விமான அளவீடு, புவி விஞ்ஞானங்களுக்கான சர்வதேச நிறுவனத்தில் தொலைவு உணர்வு நுட்பமுறைகளினூடாக புவி வெளியுருவவியலில் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். 1979ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிவருகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124499).

9850

செய்முறைப் புவியியல்: ஜீ.சீ.ஈ.(உயர்தரம்). த.தியாகராசா. யாழ்ப்பாணம்: உயர்கல்வி வெளியீட்டகம். 124, பிரதான வீதி, கொழும்புத்துறை, 2வது பதிப்பு, ஆனி 2005, 1வது பதிப்பு, வைகாசி 1966. (யாழ்ப்பாணம்: லக்கி பிரின்டர்ஸ்).

84 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 275., அளவு: 27.5x21 சமீ.

இந்நூல் பட எறியங்கள் (தேசப்படங்களும் எறியங்களும், எறியங்களின் பாகுபாடு, எறியங்களின் அமைப்பு முறையும் இயல்புகளும், எறியங்களைத் தெரிவுசெய்தல்), வரைபடங்கள் (புவியியல் தரவை வரைபடங்களில் அமைத்தல், கோட்டு வரை படம், பல்கோட்டு வரைபடம், பார் வரைபடங்கள், பரப்பு விளக்கப்படங்கள், பரம்பற் படங்கள், சித்திர வரைபடங்கள், அமைய நாட்ட அளவீடுகள், பிரிகை அளவீடுகள், மீடிறன் வரைபடங்கள்), நில அளவீடு (நில அளவீடு அன்றும் இன்றும், சங்கிலி நில அளவீடு, மாதிரிப் பயிற்சிகள்), பட வேலை (தேசப்படங்களும் அவற்றின் அடிப்படைகளும், தேசப்படங்களைப் பெருப்பித்தலும் சிறுப்பித்தலும், சம உயரக் கோட்டமைப்புகளும் நில உருவங்களும், மாதிரிப்படம் அமைத்தல், படம் அமைத்தல் இடவிளக்க மாதிரிப்பயிற்சிகள்) ஆகிய நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டுள்ளது. சம உயரக் கோட்டுப்படம், உலகப் படத்திற் குறித்தல் என்பன பின்னிணைப்புகளாகத் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 190386).

9851

தற்காலப் புவியியல்: ஆறாம் தரம். த.தியாகராசா. யாழ்ப்பாணம்: மனோகரி கல்வி வெளியீட்டகம், கொழும்புத்துறை, 2வது பதிப்பு, வைகாசி 1969, 1வது பதிப்பு, தை 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235. காங்கேசன் துறை வீதி).

(2), 184 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.75, அளவு: 20.5x13.5 சமீ.

நூலாசிரியர், ஆறாம் வகுப்பின் மூன்று தவணைகளுக்கும் உரிய பாடங்களைப் பிரித்து மூன்று பிரிவுகளாக விளக்கியுள்ளார். முதலாம் தவணைப்பிரிவில் புவி, பொது ஆசியா அறிமுகம், ஆசியாவின் குடியடர்த்தியும் இயற்கைப் பிரிவுகளும், ஆசியாவின் காலநிலை, தேயிலை பயிரிடுவோர், மீன்பிடிப்போர் அல்லது சேனைப் பயிர்ச்செய்கை அல்லது யாழ்ப்பாணக் கமக்காரன் ஆகிய பாடங்களும், இரண்டாம் தவணைப்பிரிவில் இந்தியாவும் பாக்கிஸ்தானும், தென்கிழக்கு ஆசியா, சீனாவும் அயல்நாடுகளும், யப்பான், இலங்கையில் நெற்செய்கை, இறப்பர்ச் செய்கை, இரத்தினக் கற்கள், உப்பு ஆகிய பாடங்களும், மூன்றாவது தவணைப் பிரிவில் இரசிய சைபீரியா, மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, அவுஸ்திரேலியாவின் தரைத் தோற்றம், செம்மறியாட்டு வளர்ப்பு, கோதுமை விளையும் பகுதி, கிழக்கு மாகாணங்கள், நியூசிலாந்து, தென்னைச் செய்கை, எமது காரீயம், எமது சீமெந்துத் தொழில் ஆகிய பாடங்களும் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85441).

9852

நவீன புவியியல். எம்.ஏ.எம்.இஸ்திகார். பேருவளை: அல் கலாம் பதிப்பகம், 26/2, யூசுப் அவென்யூ, சீனக்குடா, 1வது பதிப்பு, ஜுன் 1997. (கொழும்பு 13: குவிக்கிராப்பிக்ஸ் பிரின்ட், 5-1/20, நவீன சந்தை, கொட்டாஞ்சேனை).

(7), 72 பக்கம், விலை: ரூபா 65.00, அளவு: 21.5x14.5 சமீ.

இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதலாவது பகுதியில் தொலைத்தொடர்பு வலைப்பின்னல், போக்குவரத்து வலைப்பின்னல், குடியிருப்பு, நகராக்கம், கைத்தொழில், சனத்தொகை, பசுமைப்புரட்சி, D.B.Grigg இன் விவசாய வகைப்பாடு ஆகிய அத்தியாயங்களும், இரண்டாவது பகுதியில் சூழல், தொகுதி, நிலச்சரிவு, விவசாயம் தொடர்பான சூழல் பிரச்சினைகள், விலங்கின அழிவு, சூழல் பாதுகாப்பு, சூழல் மாநாடு ஆகிய அத்தியாயங்களும் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 15 இயல்களில் இந்நூல் நவீன புவியியல் பற்றிப் பேசுகின்றது. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 124463).

9853

படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது. க.குணராஜா. யாழ்ப்பாணம்: அன்பு வெளியீடு, இல.5, சீனியர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஏப்ரல் 1965. (யாழ்ப்பாணம்: நாமகள் அச்சகம்).

(7), 104 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.60, அளவு: 21.5x14 சமீ.

Projection எனப்படும் எறியங்கள், படவரைகலையில் பயன்படுத்தப்படும் வகை முறைகளை இந்நூல் விளக்குகின்றது. அகலநெடுங்கோடுகள் எனும் கற்பனைக் கோடுகள், எறியங்கள், உச்சியெறியங்கள், கூம்பெறியங்கள், உருளையெறியங்கள், எறியங்களைத் தெரிவுசெய்தல் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 134578).

9854

பௌதிகப் புவியியல்: சூழற் புவியியல். த.தியாகராசா. யாழ்ப்பாணம்: உயர்கல்வி வெளியீட்டகம், 124, பிரதான வீதி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, ஆவணி 2003. (யாழ்ப்பாணம்: ராம் பிரின்டர்ஸ், 51, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி).

iv, (2), 152 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 150., அளவு: 20.5x14 சமீ.

இந்நூல் க.பொ.த. உயர்தர வகுப்பு புவியியல் பாடத்திட்டத்தின் பிரிவு 2க்குரிய சூழற் புவியியலைத் தழுவி எழுதப்பட்டது. சூழலும் மனிதனும், புவித்தொகுதி, உயிர்த் தொகுதியும் சுற்றாடற் சமநிலையும், தரைத்தோற்ற அம்சங்களும் இயல்புகளும், புவியின் அகவிசைகளும் விளைவுகளும், புவியின் புறவிசைகளும் செயற்பாடுகளும், இலங்கையின் புவிச்சரிதவியற் பின்னணி, நீர், வளிக்கோளம், புவியிற் சூழற் சீர்கேடுகளும் மாற்றங்களும், சூழற் பாதிப்பும் பாதுகாப்பும், நிலையான அபிவிருத்தி, சமய சிந்தனையும் சியற்றில் கூற்றும் ஆகிய 13 அத்தியாயங் களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 190390).

மேலும் பார்க்க: 9333

910.(1) அபிவிருத்திப் புவியியல்

9855

அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள். க.குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1985. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

63 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 9.50., அளவு: 21x14 சமீ.

செங்கை ஆழியான்-க.குணராசா, பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றியவர். அவரது துணைவியார் திருமதி கமலா குணராசா கொக்குவில் இந்துக் கல்லூரியின் புவியியல் ஆசிரிய ராகவும், யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாள ராகவும், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையின் அதிதிப் போதனாசிரியராகவும், புவியியல் ஆலோசக ஆசிரியராகவும் பணியாற்றியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 00733).

9856

அபிவிருத்திப் புவியியல்: க.பொ.த. (உயர்தரம்). எஸ்.ஐ.எம்.ஹம்ஸா. (புனைபெயர்: திக்குவல்லை ஹம்ஸா). கொழும்பு 10: எஸ்.ஐ.எம்.ஹம்ஸா, B53- 2/3, தேசிய வீடமைப்புத் திட்டம், 4வது பதிப்பு, ஓகஸ்ட் 1995, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1984, 2வது பதிப்பு, டிசம்பர் 1984, 3வது பதிப்பு, மே 1987. (கொழும்பு 13: பசிபிக் அச்சகம்).

viii, 78 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 60., அளவு: 22x14 சமீ.

அபிவிருத்திப் பொருளியல் (Development Geography) பற்றிய இந்நூல் அபிவிருத்தி என்பதன் வரைவிலக்கணம், அபிவிருத்திப் பின்னணியில் உலக நாடுகள், அபிவிருத்தியை அளத்தல்,அபிவிருத்திப் பரம்பலும் இடைவெளியும் அபிவிருத்தி யின் பெறுபேறுகள் ஆகிய ஐந்து இயல்களில் எழுதப்பட்டுள்ளன. பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரியான நூலாசிரியர், சமூகக்கல்வி ஆலோசகராகவும், உயர்தரப் புவியியல் ஆலோசகராகவும், வெலிகம அறபா மத்திய கல்லூரி அதிபராகவும் கடமையாற்றிய பின் தற்போது மகரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகப் பணியாற்றி வருகின்றார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119204).

9857

அபிவிருத்திப் புவியியல்: பொருளியல்: ஜீ.சீ.ஈ. உயர்வகுப்புக்குரியது. சபா ஜெயராசா. கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு, 7, 57ஆம் ஒழுங்கை, உருத்திரா வீதி வழி, 1வது பதிப்பு, 1980. (கொழும்பு 12: சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்).

64 பக்கம், விலை: ரூபா 6.00, அளவு: 18.5x12 சமீ.

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடவிதானத்தை யொட்டி இந்நூல் அபிவிருத்திப் புவியியலின் பொருளியல் அம்சம் பற்றிய விரிவான அறிவை அவர்களுக்கு வழங்கும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 28201).

911 பிரயாண நூல்கள், வழிகாட்டிகள்

9858

உலக நாடுகள் வரிசை: இலங்கை. ஆசிரியர் குழு, மானா மக்கீன் (உதவி). சென்னை 40: குட் புக்ஸ் பப்ளிக்கேஷன்ஸ், பிளாக் நம்பர் AA-96, பிள்ளையார் கோவில் எதிரில், அண்ணா நகர், இணை வெளியீடு, சென்னை 600017: மணிமேகலைப் பிரசுரம், தபால் பெட்டி எண் 1447, இல.7, தணிகாசலம் சாலை, தியாகராய நகர், 1வது பதிப்பு, 2001. (சென்னை 14: பி.வி.ஆர். ஆப்செட்).

160 பக்கம், விலை: இந்திய ரூபா 35., அளவு: 18.5x12.5 சமீ.

பழமை வாய்ந்த இலங்கை வரலாறு, இலங்கையின் பழங்குடியினர், கண்ணைக் கவரும் இயற்கை வளங்கள், சிங்களவர்களும் சிங்க உறவும், நாகரிகத்தின் அடையாளமாய் நகரங்கள் இரண்டு, சீகிரியாவின் இயற்கை அழகு, சிங்களவர்கள் பாண்டியனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம், தமிழர்களும் இந்து மதமும், அந்நியர்கள் ஆட்சியில் ஏற்பட்ட விளைவுகள், இலங்கையின் பணக்கார வர்க்கம், கேட்காமலே கிடைத்த சுதந்திரம், கஷ்டத்தில் ஆழ்த்திய கருப்பு ஜூலை, அடுத்தடுத்து வந்த ஜனாதிபதிகள், ஆடம்ஸ்பீக் ஒரு புனிதத்தலம், கொழும்பு மாநகரத்தைப் பற்றிய சில உண்மைகள், அடிமைத்தீவில் அடிமைகள் இருக்கிறார்களா?, நூறு ஆண்டுகளைக் கடந்த மியூசியம், கண்ணைக் கவரும் கடற்கரைகள், பேய் நடனத்தைப் பார்க்கலாம், தென்கோடி தெவுந்துறைக் காட்சிகள், சில புனித இடங்கள், அடங்காக் குதிரையும் அடங்கிய மனிதனும், யாழ்ப்பாண நகரில் மனதைக் கவரும் இடங்கள், புகழ்பெற்ற புத்தரின் பற்கோயில், இலங்கையில் மாபெரும் திருவிழாக்கள் ஆகிய 25 தலைப்புகளின் கீழ் இலங்கைக்குப் பயணிக்கும் உல்லாசப்பயணிகளுக்கு உதவும் பல வரலாற்றுப் பின்னணித் தகவல்களையும், அறிந்திருக்கவேண்டிய சில அடிப்படைத் தகவல்களையும் இந்நூல் கொண்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 224722).

9859

வட இந்திய பயண அனுபவங்கள். தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

vii, 114 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 300., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-8354-33-9.

ஞானம் பதிப்பகத்தின் 27ஆவது வெளியீடாகவும், 3வது பயண இலக்கியமாகவும் இந்நூல் வெளிவந்துள்ளது. நூலாசிரியர் இந்நூலில் இருவிதமான நோக்கில் நம்மைத் தம்முடன் அழைத்துச் செல்கிறார். ஒன்று அவருடன் உள்நின்று இயங்கும் ஆத்ம ஞானம். அவ்வழியில், அவர் பக்திப் பரவசத்துடன் தாம் தரிசித்த தலங்கள் எல்லாவற்றிற்கும் நம்மையும் அழைத்துச் செல்கின்றார். கங்காஸ்நானம், திரிவேணி சங்கம ஸ்நானம், கேதார்நாத், பத்ரிநாத், காசி விசவநாதர் தரிசனம் ஆகியவை பற்றி அவர் விபரிக்கின்றபோது நாமும் ஸ்நானம் செய்து, தரிசனம் காணும் பேறு பெறும் வகையில் அவர் விபரித்துச் செல்கின்றார். மற்றையது ஒரு யாத்திரிகன் என்ற தளத்தைத் தாண்டி ஒரு படைப்பாளியின் மனோபாவத்துடன் அவர் இவ்விலக்கியத்தைப் படைத்துள்ளார். புராண இதிகாச சம்பவங்களையும் பொருத்தமுற விபரித்துச் செல்லும் அவர், செல்லும் வழி, தூரம், பிராணஊடகம், தங்குமிட வசதி, முதலிய விடயங்களையும் ஆங்காங்கே பதிவுசெய்கிறார். இப்பயண இலக்கியம் டில்லியையும் அதனைச் சூழவுள்ள வரலாற்று முக்கியத்து வமான இடங்களான தாஜ்மஹால், ஜெய்ப்பூர் அரண்மணை, ஆக்ரா கோட்டை, கிருஷ்ணரின் ஜனனபூமியான மதுரா ஆகிய இடங்கள் பற்றியும் அங்கே ஆசிரியரின் அனுபவங்களையும் பதிவு செய்கின்றது.

912 தேசப்படங்கள்

9860

உலகப் படப் பயிற்சிகளும் சமஉயரக் கோட்டுப் பயிற்சிகளும் வரைபடப் பயிற்சிகளும். அங்கையற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை. யாழ்ப்பாணம்: திருமதி அங்கையற்கண்ணி சிவப்பிரகாசபிள்ளை, ஆசிரியை, இராமநாதன் கல்லூரி, மருதனாமடம், சுன்னாகம், 1வது பதிப்பு, 1961. (யாழ்ப்பாணம்: கு.வி.தம்பித்துரை, கலைவாணி அச்சகம், 10, பிரதான வீதி).

(3), 62 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 3.00, அளவு: 28.5x22.5 சமீ.

உலகப்படம், சம உயரக் கோட்டுப்படம் மற்றும் வரைபடம் முதலியவற்றில் பயிற்சிகளைக்கொண்ட இந்நூல் பிரதானமாகப் பல்கலைக் கழகத் தொடக்கத் தேர்வு, உயர்தரப் பாடசாலைத் தராதரப் பத்திரத் தேர்வு வகுப்பு மாணவர் களுக்குப் பயன்படக்கூடியவகையில் ஆக்கப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 84698).

915 பிரதேசப் புவியியல்

9861

கனகராயன் ஆற்று வடிநிலம்: ஒரு புவியியல் ஆய்வு. சுபாஜினி உதயராசா. யாழ்ப்பாணம்: சுபாஜினி உதயராசா, சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, டிசம்பர் 2009. (யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர். பதிப்பகம், 72, பலாலி வீதி, திருநெல்வேலி).

xiv, *230 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 600., அளவு:* 20x14.5 *சமீ.,* ISBN: 978-955-52092-0-5.

வன்னிப் பிரதேச அபிவிருத்தியின் உயிர்நாடியான நீர்வளத்தின் பெரும்பகுதியை கனகராயன் ஆற்று வடிநிலமே வழங்குகின்றது. வன்னியை வளம் செய்யும் நீர்த்தேக்கங்கள்,விவசாயத்திற்கு ஏற்ற வளமான நிலங்கள் என்பன கனகராயன் ஆற்று வடிநிலத்திலேயே அமைந்துள்ளன. இந்நூல் கனகராயன் ஆற்றுவடிநிலம் பற்றிய ஒரு விரிவான பார்வையை வழங்குகின்றது. இந்நூல் ஆசிரியரின் முது தத்துவமாணிக்கான ஆய்விற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறைக்கு வழங்கப்பட்டது. இவ்வாய்வு ஆய்வுப் பிரதேச அறிமுகம், ஆய்வு முறையியல், கனகராயகன் ஆற்று வடிநிலத்தின் பௌதிக புவியியல் பின்னணி, கனகராயன் ஆற்று வடிநிலத்தில் காணப்படும் குடியேற்றத் திட்டங்களும் நிலப்பயன்பாடும், ஆய்வுப்பிரதேச சமூக பொருளாதார மதிப்பீடு, பிரச்சினைகளும் தீர்வுகளும், கருதுகோள் பரிசீலனையும் அபிவிருத்திக்கான ஆலோசனையும் ஆகிய ஏழு இயல்களில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 218430).

920 வாழ்க்கை வரலாறு, ஞாபகார்த்த மலர்கள்

9862

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்: தொகுதி 1. *த.துரைசிங்கம் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: உமா பதிப்பகம், 23, 3/3 அறத்துசா ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, கு.டு.1-14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).*

xii, *300 பக்கம், விலை: ரூபா 400., அளவு:* 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-1162-48-1.

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரான நூலாசிரியர் சிறுவர் நூல்களையும், பாட நூல்களையும் ஏராளமாக வெளியிட்டவர். இந்நூலில் 17ஆம் நூற்றாண்டு முதல் ஈழத்தில் வாழ்ந்து மறைந்த அறுபது தமிழ் அறிஞர்களின் அரும்பணிகளை இளம் தலைமுறையினருக்கு ஏற்றவகையில் சுருக்கமாகப் பதிவுசெய்திருக்கிறார். இப்பெரியார்கள் பற்றி ஏராளமான தனி நூல்களும் கட்டுரைகளும் வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புகளும் கட்டுரைகளும் ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகச் சூழலில் வெளிவந்துள்ளபோதிலும், ஒரே நூலில் மாணவர்கள் இவர்களைப்பற்றி அறிந்து கொள்ள இந்நூல் உதவுகின்றது.

920.01 துறைசாரா வாழ்க்கை வரலாறுகள்

9863

மருந்தற்ற வாழ்வு. *தொகுப்பாளர்கள். தெல்லிப்பழை: பசுபதி இராசதுரை குடும்பத்தினர், தெல்லிப்பழை கிழக்கு, 1வது பதிப்பு, ஜனவரி 2004. (கொழும்பு 6: விகடன் பதிப்பகம், 541/2 காலி வீதி).*

(6), 56பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14 சமீ.

அமரத்துவமடைந்த பசுபதி இராசதுரை (24.9.1928-02.12.2013) அவர்களின் நினைவாக வெளியிடப்பெற்றுள்ள இந்நினைவு மலர் முழுமையாக நோயற்ற வாழ்வுக்கான இயற்கை வைத்தியம் பற்றிப் பேசுகின்றது. இறப்பதற்கு அழகான தருணங்கள் என்ற ஓசோவின் குறிப்புடன் தொடங்கும் இந்நூல், ஐயாவின் கதை என்ற தலைப்பில் அன்னாரின் மருமகனான காசிநாதர் ஞானதாஸ் எழுதிய வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும், இயற்கை உணவு, உபவாசம், இயற்கைச் சிகிச்சை, நோயும் சிகிச்சையும் ஆகிய விடயங்களைக்கொண்ட சிறு கட்டுரை களையும் விளக்கப்படங்களுடன் அடக்கியுள்ளது.

920.1 ஊடகவியலாளர், ஒலிபரப்புத்துறையினர்

9864

என் எழுத்தாயுதம்: ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு. என்.வித்தியாதரன். யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம், 20 கல்லூரி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2014. (யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம், 20 கல்லூரி வீதி).

xx, 556 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 20.5x14.5 சமீ.

தனது ஊடகத்துறை வரலாற்றில் சுமார் இரண்டரை தசாப்தங்களை உதயன், சுடர் ஒளி பத்திரிகைகளை நெறிப்படுத்தும் ஆசிரிய பீடத்தின் முக்கிய பொறுப்புக் களில் செலவிட்டவர் என்.வித்தியாதரன். அவரது ஊடகத்துறை அனுபவங்களாக மாத்திரம் இந்நூல் அமையவில்லை. இது ஒரு கருத்துருவாக்கியின் சுயசரிதை எனலாம். தமிழ்த் தேசிய இனத்தின் சொந்த வரலாற்றில் ஒரு காலகட்டத்தைத் தனது வாழ்வினூடாக வித்தியாதரன் பதிவுசெய்திருக்கிறார். தான் ஊடகப் பணியாற்றிய கடைசி 25 ஆண்டுகள் தவறான புரிதல்களினால் ஏற்படுகின்ற அரசியல் இடைவெளிகளை மனிதர்கள் துப்பாக்கிக் குண்டுகளால் நிரப்பிய காலம். வித்தியாதரனின் வெற்றிகள் என்பவை-வெல்லமுடியாத மனங்களையும் தேடிச்சென்று தட்டிய அவரது துணிவினாலும், துப்பாக்கிகளையும் மீறி மனிதர்களது மனங்களைத் திறக்கும் அவரது பண்பினாலுமே சாத்தியமாகின்றன என்கிறார் இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய திருச்சிற்றம்பலம் பரந்தாமன். ஊடகப்பணியாற்ற விரும்பும் அனைவரும் படிக்கவேண்டியதொரு நூல் இது.

9865

நினைவுப் பெருவெளி: ஒரு பெண் பத்திரிகையாளரின் மனப்பதிவுகள். அன்னலட்சுமி இராஜதுரை. கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (கொழும்பு 14: எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் பிரைவேட் லிமிட்டெட், 185, கிராண்ட்பாஸ் வீதி).

288 பக்கம், தகடுகள், விலை: ரூபா 300., அளவு: 22x14.5 சமீ., ISBN: 978-955-0811-01-4.

வீரகேசரி நிறுவனத்தில் நீண்டகாலம் பணியாற்றிய பத்திரிகையாளரான அன்னலட்சுமி இராஜதுரை அவர்களின் மலரும் நினைவுகள் இங்கு பக்கம் தோறும் சுவையாக விரிகின்றன. யாழ். புகையிரத நிலையத்தில், வளமாய் வாய்த்த ஊர், ஆரம்பக் கல்விக்கு ஊர்ந்து சென்ற காலம், செங்குந்தா இந்துக் கல்லூரியில், வாசிப்பு மோகம், எழுத எழுந்த ஊக்கம், கேசரியில் கால் பதித்தேன், வீரகேசரி ஆசிரியர் கே.வி.எஸ். வாஸ், மாணவர் கேசரி, ஆசிரியர் பகுதியில் நிர்வாக அதிபரின் தனிக்கவனம், கேசரியின் நூல் வெளியீட்டு முயற்சி, எம்.ஜி.ஆரின் இலங்கை வருகை, நிர்வாகம் கைமாறியது, 1983ஆம் ஆண்டின் ஆடிக்கலவர அனர்த்தம், எழுத்தாற்றலும் வாசிப்பும், ஆசிரியபீட சகோதரர்கள், திரைப்படங் களின் செல்வாக்கு, பத்திரிகையில் ஒவ்வொரு துறைக்கும் தனிப்பக்கங்கள், இரவு நேரப் பத்திரிகைப் பணியின் பெறுமானம், பெண்களுக்கு வாக்குரிமை, கணினி தொழில்நுட்பத்திற்குள் பிரவேசம், பத்திரிகை விளம்பரங்கள், ஆடிக் கலவரம் உணர்த்திய உண்மை, பெண்கள் கல்வியும் தொழில்களும், பீஜிங் உலகப் பெண்களின் மாநாடு, தேசியப் பத்திரிகைகளின் பங்கும் பணியும், 75ஆவது ஆண்டு நிறைவு விழா, நேர்காணல்கள், மறக்கமுடியாத சந்திப்புக்கள் சம்பவங்கள் சில, உலகத் தமிழ் செம்மொழி மாநாடு-2010, கலைக்கேசரி, வானொலி அனுபவம், சரியான நேரத்தில் சரியான பதில் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 227075).

9866

மணிவிழா மலர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம் (மலையன்பன்). மனுவல் ஜேசுதாசன் (மணிவிழாக் குழு மலர் ஆசிரியர்). கனடா: ஆர்.என்.லோகேந்திரலிங்கம் மணிவிழாக் குழு, ரொரன்டோ, 1வது பதிப்பு, 2013. (கனடா: ஜே.ஜே.பிரின்டர்ஸ், ரொரன்டோ).

74 பக்கம், விண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 27x21.5 சமீ.

கனடாவில் வெளிவரும் உதயன் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 60ஆவது அகவை நிறைவின்போது 09.06.2013 இல் ஏற்பாடு செய்யப்பட்ட மணிவிழாவின்போது வெளியிடப்பட்ட மலர். யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த லோகேந்திரலிங்கம் இலங்கையில் அக்கினி, மாற்று, கீற்று ஆகிய பெயர்களில் சஞ்சிகைகளை நடத்தியவர். மலையன்பன், யாழினி ஆகிய புனைபெயர்களில் கவிதைகள், சிறுகதைகள் எழுதிவந்தவர். கனடாவில் 1991இல் வெளிவந்த காலத்தின் பதிவுகள் என்ற கவிதைத் தொகுப்பில் இவரது 10 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. கனடாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் 1993இல் புன்னகை என்ற மாத இதழைத் தொடங்கி சில காலம் நடத்தினார். 1994இல் சூரியன் என்ற பெயரில் ஒரு வாரப் பத்திரிகையை தொடங்கிப் பின்னர் மூன்று ஆண்டுகளில்அது நின்று போக உதயன் என்ற

பெயரில் புதிய பத்திரிகை ஒன்றினைத் தொடங்கி இன்றளவில் நடத்தி வருகின்றார். உதயன் 10ஆவது ஆண்டிலிருந்து அவ்வமைப்பின் பெயரால் விருதுகளும் வழங்கி வருகின்றார்.

9867

மௌனமாய்ப் பொழியும் மாமழை: நூலகவியலாளர் என்.செல்வராஜா சேவை நயப்பு மலர். *க.குமரன் (தொகுப்பும் பதிப்பும்).கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை).*

x, *278 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 25x17.5 *சமீ.,* ISBN: 978-955-659-449-2.

ஈழத்துத் தமிழ் மக்களின் நூல் பண்பாட்டை வளம்படுத்துவதில் ஒரு நிறுவனத்திற் கீடாக செயற்பட்டு வருபவர் நூலகவியலாளர் என்.செல்வராஜா. தனது நூல்தேட்டம் தொகுதிகளினூடாக ஈழத்து நூல்களை இவர் பட்டியலிட்டதன் மூலம் அவற்றைப்பற்றிய விபரங்களை இன்றும் எம்மால் உயிர்ப்புடன் வைத்திருக்க முடிகின்றது. தமிழகம் உட்பட மொத்த தமிழ்ச் சூழலிலேயே இவரைப்போன்ற நூல்நலன் சார்ந்த செயற்பாட்டாளர் வேறொருவரும் இல்லை எனலாம். நூல் உலகின் அனைத்து மட்டங்களிலும் முழு வீச்சுடன் இயங்கி வருபவர். பயிற்றப் பட்ட, புதிய சிந்தனைகளைக்கொண்ட, அப்புதிய சிந்தனைகளை நூலகச் சூழலில் அமுல்படுத்திய நூலகர் என்ற வட்டத்திற்கும் அப்பால் எழுத்தாளனாக, வெளியீட்டாளனாக, நூல்களை வெளியிட உதவும் இணைப்பாளனாக, நூல் தொகுப்பாளனாக, வாசகனாக, விமர்சகனாக, ஆவணக் காப்பாளனாக என நூல் உலகின் அனைத்து மட்டங்களிலும் தீவிரமாக இயங்கும் நூல்நேசர் இவர். இத்தகைய அற்புதமான நூல் உலகு சார்ந்த செயற்பாட்டாளனின் சேவையினை நயக்கும் மலர் இது. இம்மலர் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதி நூலகவியலாளர் என். செல்வராஜா பற்றிய அறிமுகத்தையும், இரண்டாம் பகுதி அவரின் பணிகள்பற்றிய பலரது கட்டுரைகளையும், மூன்றாம் பகுதி அவரின் எழுத்துக்கள் பற்றிய கட்டுரைகளையும் நான்காம் பகுதி அவருடனான நேர்காணல்களையும், ஐந்தாம் பகுதி அவருடைய எழுத்துக்கள் மற்றும் அவர் பற்றிய கட்டுரைகள், செய்திகள், நேர்காணல்கள் ஆகியவை பற்றிய விபரங்களையும் இம்மலர் கொண்டுள்ளது.

மேலும் பார்க்க: 9028

921 மெய்யியலாளர்

922 சமயத் தலைவர், சிந்தனையாளர்

9868

ஆறுமுக நாவலர். இராஜ இராஜேஸ்வரன் தங்கராஜா. யாழ்ப்பாணம்: பிரச்சாரப் பகுதி, திறனாய்வுக்கழகம், சர்வாலயம், 5, செட்டித் தெரு, நல்லூர், 2வது பதிப்பு, 1993, 1வது பதிப்பு, 1991. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சகம், யாழ்.சைவ பரிபாலன சபை, 450, காங்கேசன்துறை வீதி).

46 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x17 சமீ.

ஆறுமுகநாவலரின் வாழ்வும் பணிகளும் பற்றிச் சுருங்கக் கூறும் நூல். நூலாசிரியர், நியாயவாதி மூதறிஞர் ஸ்ரீ சரவணமுத்து தங்கராஜா - திருமதி நடேஸ்வரி தங்கராஜா ஆகியவர்களின் புத்திரனாவார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103108).

9869

இ.நமசிவாயம்: அவரது வாழ்க்கையும் காலமும் திருக்கேதீச்சரப் புனருத்தாரணத் திருப்பணியும். சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 14: வீரகேசரி வெளியீடு, Express Newspapers (Ceylon) Ltd., No.185, Grandpass Road, 1வது பதிப்பு, ஏப்ரல் 2013. (கொழும்பு 14: Express Newspapers (Ceylon) Ltd., No.185, Grandpass Road).

272 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x17.5 சமீ., ISBN: 978-955-0811-05-2.

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைவராகவிருந்த அமரர் இ.நமசிவாயம் அவர்களின் (11.4.1912-18.7.2011) நூற்றாண்டு விழா நினைவாக வெளியிடப் பெற்ற மலர். பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றுள்ள இம்மலரில் வாழ்த்துரை, நினைவுரைகளுடன், அமரர் இ.நமசிவாயம் அவர்கள் பற்றித் தமிழ் ஆங்கில மொழிகளில் எழுதப்பட்ட கட்டுரைகளையும், அமரர் இரா நமசிவாயம் எழுதிய 6 சமயக் கட்டுரைகளையும் (பொலிகண்டிக் கந்தவனம், சைவத்திருக்கோயில்களில் நிகழும் பூஜைகளும் அவற்றின் மொழியும், பிரகிருதி மாயை, Saiva Siddhantha in the Light of Modern Science and Cosmology, Saiva Periyar Sivapathasundaranar, Priesthood in Sri Lanka) உள்ளடக்கிய 21 ஆக்கங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

9870

இலங்கையில் ஓர் இல்லற ஞானி: சிவத்திரு க.இராமச்சந்திரனார் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு. நா.முத்தையா. நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலையம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 1974. (நாவலப்பிட்டி: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்).

viii, (10), 94 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

Religious Digest என்ற ஆன்மீகச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர் சிவத்திரு க.இராமச்சந்திரனார். குருதேவர் சுவாமி சிவானந்தஜீ மகராஜ் 1950இல் இலங்கை வந்தவேளை அவரை வரவேற்று உபசரித்தவர் அவரது அணுக்கத் தொண்டரான

திரு. க.இராமச்சந்திரனார். 1936 முதல் அவர் குருதேவரின் தீவிர பக்தராக இருந்தவர். இவரது வாழ்வும், தன் வாழ்நாளில் மேற்கொண்ட ஆன்மீகப் பணிகளும் ஆத்மஜோதி ஆசிரியர் நா.முத்தையா அவர்களின் பார்வையில் இந்நூலில் பதிவாகியுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 97931).

9871

இலங்கையில் சுவாமி விவேகானந்தர். ச.அம்பிகைபாகன் (இணைக்காரியதரிசி). யாழ்ப்பாணம்: விவேகானந்த சுவாமிகள் நூற்றாண்டு விழாச் சபை, வைத்தீஸ்வர வித்தியாலயம், 1வது பதிப்பு, மே 1963. (யாழ்ப்பாணம்: சி.ச.குமாரசுவாமி, அதிபர், ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

vi, 60 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கையில் விவேகானந்த சுவாமிகள் நூற்றாண்டு விழா (1863-1963) கொண்டாடப்பட்ட வேளை வெளியிடப்பெற்ற நூல். அமெரிக்காவில் இந்து மதம், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளது வரவு, கொழும்பில் விவேகானந்த சுவாமிகள், யாழ்ப்பாணத்தில் விவேகானந்த சுவாமிகள், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளும் கிறிஸ்தவர்களும், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கு ஓர் ஞாபகச் சின்னம், ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் அவதார மகிமை, கொழும்பு மாநகரவாசிகள் சமர்ப்பித்த வந்தனோபசாரப் பத்திரம், யாழ்ப்பாண மக்கள் வாசித்தளித்த வரவேற்புபசாரப் பத்திரம், கொழும்பில் நிகழ்த்திய பிரசங்கம், யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய பிரசங்கம் ஆகிய கட்டுரைகள் இந்நூலில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டுரைகள் இந்து சாதனப் பத்திரிகையின் மீள்பிரசுரங்களாகும். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 134627).

9872

குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும். மு.கந்தையா. யாழ்ப்பாணம்: கீரிமலைக் குழந்தைவேற் சுவாமிகள் சமாதித் தர்மபரிபாலன சபை, 1வது பதிப்பு, ஆனி 1965. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(2), 137+77 பக்கம், தகடுகள், விலை: ரூபா 3.00, அளவு: 21.5x13.5 சமீ.

பிரதான விடயதானம் முதற் பிரிவிலும் அத்துவித முத்திநெறி இரண்டாம் பிரிவிலுமாக இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அணிந்துரை, முகவுரை, குருநெறி, யாழ்ப்பாணமும் குருவிலட்சியமும், கடையிற் சுவாமிகள், மண்டைதீவிற் கடையிற் சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகளின் சமாதி, குழந்தைவேற் சுவாமிகளின் பாடல்கள், அருளம்பல சுவாமிகள், அருளம்பல சுவாமிகளின் வசனமும் பாடல்களும், சமுதாயத்திற் குருபரம்பரையின் செல்வாக்கு, ஆளவந்த அண்ணல் ஆகிய அத்தியாயங்கள் காணப்படுகின்றன. அத்துவித முத்திநெறி என்ற இரண்டாம் பிரிவில் சீடாசாரம், வசனம், ஏதுசொரூபங் காரியமவதிபல லட்ஷணம், அஷ்டப் பிரமாணத்தின் திஷ்டாந்த தாஷ்டாந்த உரை, சீவன் முத்தரியல்பு, ஸ்ரீ பரமகுருசுவாமிகள் பேரில்

சிஷ்யர்கள் சொல்லிய குருதோத்திரம், ஸ்ரீ கடையிற் சுவாமிகள் பேரில் சிஷ்யர்கள் சொல்லிய குருதோத்திரம், கடையிற் சுவாமிகள் குருபூசைத்தினத்தன்று மண்டை தீவு அன்பர்களால் வழக்கமாகப் படிக்கப்பட்டுவரும் பாடல்களிற் சில, ஆரம்பம் கரணசுத்தி, பரமகுருசுவாமி (சேர்.பொன். அருணாசலம் வெளியிட்டவை), குரு வணக்கம், அகராதிச் சரணமாலை, இழந்த மணிகளில் எஞ்சியதொன்று, ஸ்ரீ அருளம்பல சுவாமிகள் பேரில் வைத்திலிங்கமவர்களின் பாடல் ஆகியவையும் தொகுக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 80712).

9873

சிவத்தமிழ்ச் செல்வி: தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்க்கை வளம். த.சண்முக சுந்தரம். தெல்லிப்பழை: சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மணிவிழாச் சபை, துர்க்காபுரம், 2வது பதிப்பு, ஜுன் 2009, 1வது பதிப்பு, தை 1985. (கொழும்பு 11: அனுஷ் பிரின்டர்ஸ்).

xvi, 73 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிவபதப்பேற்றின் ஓராண்டு நினைவாக அவரது வாழ்க்கை வரலாறு கூறும் இந்நூல் மீள்பதிப்பாக வெளியிடப் பட்டுள்ளது. 23 ஆண்டுகளுக்கு முன்னர் 1985இல் அவரது மணிவிழா வெளியீடாக தெல்லிப்பழை குகன் அச்சகத்தால் அச்சிடப்பெற்று, இந்நூல் முதற்பதிப்பினைக் கண்டிருந்தது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பெற்றோர், ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, ஆசிரிய கலாசாலையும் ஆசிரியப்பணியும், ஆற்றிய பேருரைகள், பெற்ற பட்டங்கள், விருதுகள், துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் உருவாக்கம் என்று பல விடயங்கள் இந்நூலில் வரலாற்றுப் பதிவாகியுள்ளன. நூலாசிரியர் த.சண்முகசுந்தரம் மாவிட்டபுரத்தைச் சேர்ந்தவரான தம்பு உபாத்தியாயரின் புதல்வர். பிரபல எழுத்தாளரான இவர், ஆசிரியராக, அதிபராக, பன்னூலாசிரியராக, பத்திரிகை ஆசிரியராக எனப் பல்வேறு பரிமாணங்களில் அறியப்பெற்றவர். இவரது "வாழ்வுபெற்ற வல்லி" என்ற மாருதப் பிரவிகவல்லி நாடக நூல் அரச சாகித்திய மண்டலப் பரிசினைப்பெற்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 208784).

9874

சிவதர்ம சீலர் சித.மு.ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் நூறாவது ஆண்டு ஜயந்தி மலர். மு.உமாசங்கரி (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சி.முத்துக்குமாரன், 411/2, காங்கேசன்துறை வீதி, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1989. (யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச அச்சகம், 450, காங்கேசன்துறை வீதி).

48 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

இலங்கைச் சைவ மக்களின் பெருமைக்குரிய ஸ்தாபனங்களான யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, இந்துசாதனம், யாழ். இந்துக் கல்லூரி ஆகிய இம்மூன்றும் நூற்றாண்டு விழாவை நடாத்தும் வேளையில் இம்மூன்று ஸ்தாபனங்களுடன்

இணைந்து ஆக்கபூர்வமான பணிகள் பல புரிந்து பெருந்தொண்டாற்றிய வண்ணார் பண்ணை, உயர்திரு சித. மு.ப.சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் நூற்றாண்டு ஜயந்தி தினமும் 09.09.89 அன்று நினைவுகூரப்பட்டது. அதன் நினைவாக இம்மலரும் வெளியிடப்பட்டது.

9875

தவத்திரு மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவு மலர். மு.கணபதிப்பிள்ளை (மலர் ஆசிரியர்). கொழும்பு: மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவுவிழாக் குழுவினர், 1வது பதிப்பு, 1975. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xxiii, 202 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22.5x15 சமீ.

நல்லூர் ஆறுமுகநாவலருக்குப் பின்னர் அவர் காட்டிய நெறிக்கும், தமிழ் மொழிக்கும், கல்வி வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் அயராது உழைத்து வந்தவர்களுள் மகாதேவ சுவாமிகள் ஒரு தனி இடத்தினை வகிக்கின்றார். இந் நூல் அவரது நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் முகமாக அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரைகளுடன் வெளிவருகின்றது. வாழ்த்துரைகளுடன், நடைமுறைத் தமிழ் இயக்கம் (அறிமுகம்), மு.கணபதிப்பிள்ளை (நுழைவாயில்), க.கி.நடராஜன் (மலர் வாழ்த்து), வடிவேற் சுவாமிகள் (மகாதேவ குருமணி தோத்திரம்), சி.கணபதிப்பிள்ளை (யாருக்கும் இனியவர்), கு.முத்துக்குமார சுவாமிப் பிள்ளை (தவத்திரு மகாதேவ சுவாமிகள் புகழ்மாலை), ஐ.வைரவநாதன் (நான் கண்ட மகாதேவ சுவாமிகள்), பொ.கந்தையா (மகாதேவ மாமுனிவன் திருவடிக்கண் சாத்திய ஒருபா ஒருபஃது), சோ.சிவபாதசுந்தரம் (மகாதேவ சுவாமிகள்), செ.சிவப்பிரகாசம் (குரு மகாதேவர் வாழ்க), இ.திருநாவுக்கரசு (மெய்க்கீர்த்தி நுதலிய மடல்), இ.மாணிக்கம் (மகாதேவ சுவாமிகள் காலம்), வே.செல்லையா (மகாதேவ சுவாமிகள் மாண்பு), சோ.தியாகராசபிள்ளை (கரம் கூப்பித் தொழுகின்றோம்), க.கிருஷ்ணபிள்ளை (மகாதேவ சுவாமிகளை மறத்தலுமாமோ), நடைமுறைத் தமிழ் இயக்கம் (கரம்பொன் தந்த திருத்தொண்டர் சுவாமி மகாதேவா), க.நவரத்தினம் (இசையும் வாழ்க்கையும்), செ.தனபாலசிங்கன் (செத்தபின் சிவலோகமா? இல்லை வாழ்கிறபோதே வைகுண்டம் சிவலோகம்), தெல்லியூர் செ.நடராசா (கரம்பொன் ஈன்ற முத்து-ஆன்மீக வள்ளல் மகாதேவ சுவாமிகள்) ஆகியோரின் ஆக்கங்கள் மலரைச் செழுமைப்படுத்துகின்றன. நூலின் பின்னிணைப்பாக கொழும்புத்துறை ஹே.சுப்பிரமணிய ஐயர் இயற்றியதும் தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை பதிப்பித்ததுமான ஆத்மவிசாரம் என்ற நூலின் இரு பாகங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

9876

பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள். நா.ஞானகுமாரன். பருத்தித்துறை: யாழ்ப்பாணத்து சுவாமிகள் சபை, வியாபாரி மூலை, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 12: குமரன் அச்சகம், 201 டாம் வீதி).

xiv, 68 பக்கம், தகடு, விலை: ரூபா 50., அளவு: 21x14 சமீ., ISBN: 955-9158-00-7.

யாழ்ப்பாணத்திலுள்ள வதிரியில் அவதரித்த ஆத்மஞானி அருளம்பல சுவாமிகளின் வாழ்வும் பணிகளும் பற்றிய செய்திகளை இந்நூல் வழங்குகின்றது. மகாகவி சுப்பிரமணிய பாரதியினால் "ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்து சாமி" என்று போற்றப்பெற்ற அருளம்பல சுவாமிகள் வியாபாரிமூலையில் 1942இல் சமாதியடைந்தார். சமாதியெய்திய ஐம்பதாவது ஆண்டை நினைவுகூர்ந்து இந்நூல் வெளியிடப்பட்டது. கலாநிதி நாகநாதன் ஞானகுமாரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 86922).

9877

முப்பெரும் சித்தர்கள். *நா. முத்தையா. ஏழாலை: ஆத்மஜோதி நிலையம், 2வது பதிப்பு, 2005, 1வது பதிப்பு, 1973. (யாழ்ப்பாணம்: ஜய்ராம் பிரின்டர்ஸ், 351, மணிக்கூண்டு வீதி).*

xx, *96 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 120., அளவு:* 20.5x14.5 *சமீ.*

சித்தர்கள் சாதாரண மக்களால் செய்யமுடியாத பல அரிய செயல்களைச் செய்வார்கள். அவற்றை அற்புதங்களாகப் பொதுமக்கள் போற்றுவர். சித்தர்கள் அட்டமா சித்திகள் எனப்படும் எட்டுவகைச் சித்திகள் பெற்றிருப்பார்கள் எனப் புராணங்கள் கூறும். திருமூலர் தொடங்கி குதம்பைச் சித்தர் கோரக்கர் வரை தமிழ்நாட்டில் சித்தர்கள் பதினெண்மர் இருந்தனரென்று கருதப்படுகின்றது. இவர்களுக்குப் பின்னர் இவர்கள் வழியைப் பின்பற்றிய பல சித்தர்கள் தமிழகத்தில் தோன்றியிருக்கின்றார்கள். அத்தகைய சித்தர்களில் நால்வர், ஈழத்துக்கு வந்து சித்துக்கள் நடத்தி, ஈழத்தின் வடக்கே யாழ்ப்பாணத்தில் நீராவியடியிலும் மேற்கே கொழும்பு முகத்துவாரத்திலும் கிழக்கே காரைதீவிலும் மோனநிலை எய்தினார்கள். அவர்களே முறையே கடையிற் சுவாமிகள், நவநாதசித்தர் பெரிய ஆனைக்குட்டி சுவாமிகள், சித்தானைக் குட்டி சுவாமிகள்ஆகியோராவர். அந்நால்வருள் கடைசி மூவரைப் பற்றியது இந்நூலாகும். ஐம்பது சுவைமிகு அத்தியாயங்களினூடாக இச்சித்தர்களின் வரலாற்றையும் அவர்கள் மேற்கொண்ட சித்துகளையும் தேடித் தொகுத்து இந்நூலை ஆத்மஜோதி ஆசிரியர் நா.முத்தையா அவர்கள் ஆக்கியிருக் கின்றார். இந்நூல் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் முன்னுரையுடன் கூடியது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 204792).

9878

யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும். *சிவதொண்டர். மட்டக்களப்பு: அ.செல்லத்துரை, சிவதொண்டன் நிலையம், செங்கலடி, 1வது பதிப்பு, 1991. (மட்டக்களப்பு: கீன் அச்சகம், முனை வீதி).*

viii, *322 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 65., அளவு:* 21.5x15 *சமீ.*

ஆசான் அருளால் ஆசானாயினார், அப்பனும் அடியார்களும், ஞானத்தின் திருவுருவும் நமையாண்ட அருள் உருவும், சிவதொண்டு ஆகிய நான்கு பிரிவுகளின் கீழ் இந்நூல யோக சுவாமிகளின் ஆன்மீக வாழ்வைப் பதிவுசெய்கின்றது.

சிவதொண்டன் நிலையத்தாரினதும், யோகசுவாமிகளின் சீடர்களாலும் இணைந்து தொகுக்கப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 106430).

9879

யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜீ அவர்கள் திவ்ய வாழ்க்கை வரலாறு. எஸ்.இலக்குமி. கண்டி: திவ்ய ஜீவன சங்கம், சச்சிதானந்த தபோவனம், தன்னக்கும்பரை, 1வது பதிப்பு, 1962. (யாழ்ப்பாணம்: விவேகானந்தா அச்சகம்).

liii, 440 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x12.5 சமீ.

கண்டி திவ்ய ஜீவன சங்கத்தின் சார்பாக பண்டிதை எஸ்.இலக்குமி அவர்கள் எழுதியுள்ள வாழ்க்கை வரலாற்று நூல். இமயஜோதி ஸ்ரீ சிவானந்தரின் சீடர்களுள் ஒருவரான ஸ்ரீ சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களின் வாழ்வும் பணிகளும் பற்றியதாக நான்கு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. முதற்பாகம் சுவாமிகளின் திவ்விய வாழ்க்கை வரலாறு என்ற தலைப்பில் அறிமுகம், வீட்டிற் கல்வி, துறவற நாட்டம், 1950இல் அகில இந்திய யாத்திரை, இலங்கையில் யோகிராஜ், தோட்டப் பகுதிகளில் பணிகள் ஆகிய உப தலைப்புகளில் விபரிக்கப் பட்டுள்ளது. இரண்டாம் பாகம் சுவாமிகளின் அருளுரைகளை உள்ளடக்குகின்றது. மூன்றாம் பாகம் அவரது பாடல்களையும், நான்காம் பாகம் அவரது பணிகள் தொடர்பான பத்திரிகைச் செய்திகளையும் தொகுத்து வழங்குகின்றது. பின்னிணைப்பு களாக வாழ்த்துரைகளும், கட்டுரைகளும், சுவாமிகள் சார்ந்த பணிகள் தொடர்பான புகைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 22747).

923 சமூகவியல்துறை சார்ந்தோர்

9880

வல்லவரும் நல்லவரும். எஸ்.பி.கிருஷ்ணன். சாவகச்சேரி: பாபு வெளியீடு, கண்ணன் கொட்டேஜ், மட்டுவில் தெற்கு, 1வது பதிப்பு, மே 1976. (யாழ்ப்பாணம்: நாவலன் பதிப்பகம், 535 பருத்தித்துறை வீதி, நல்லூர்).

(4), 50 பக்கம், விலை: ரூபா 2.00, அளவு: 18x12.5 சமீ.

வீரகேசரி, தினகரன், ஈழநாடு நாளிதழ்களில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு. இதில் ஆசிரியர் தான் தரிசிக்கும் நல்லார் சிலரையும் வல்லார் சிலரையும் பற்றிய வாழ்வும் பணிகளும் இடம்பெற்றுள்ளன. கு.வன்னியசிங்கம், ந.அருணாசலம் (அதிபர்), அறிஞர் அண்ணாத்துரை, வ.உ.சிதம்பரபிள்ளை, சுபாஷ் சந்திரபோஸ், மார்ட்டின் லூதர் கிங், போன்றோரின் வரலாற்றுச் சித்திரங்களை இக்கட்டுரைகள் உள்ளடக்கியன. உள்ளம் கவர்ந்த ஆசிரியப் பெருந்தகை, அண்ணா என்ற மூன்றெழுத்து, இரத்தத்தைக் கொடுங்கள் விடுதலை தருகிறேன், வாழ்க தமிழ் மகன் புகழ், தமிழினத்தைத் தட்டியெழுப்பிய பாவேந்தர், வெள்ளையனே

வெளியேறு என்ற வீரத் தமிழன், தூக்கு மேடை ஏறவும் தயார், அறப்போர் வெற்றி கண்டது அமெரிக்காவில் ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. இந்நூலுக்கான அணிந்துரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் வழங்கியிருந்தார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 35207).

923.1 பெண்ணியவாதிகள்

9881

இன்னொரு நூற்றாண்டுக்காய். சாரல்நாடன். கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, ஆனி 1999. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 53 பக்கம், விலை: ரூபா 75., அளவு: 19x12.5 சமீ.

1920 களில் இலங்கையில் வாழ்ந்த ஒரு தமிழ்ப் பெண்ணின் அரசியல் வாக்குரிமைச் சிந்தனைகள் பற்றிக் கூறும் இந்நூலின் நாயகி, நல்லம்மாவை உரிய முறையில் வெளிக்கொணர சாரல்நாடன் பல தளங்களில் உழைத்துள்ளார். ஆய்வுகள் பல செய்துள்ளார். பெண் வைத்தியராகிய நல்லம்மா பெண்களது வாக்குரிமைக்கு ஏனைய பல பெண்களுடன் இணைந்து ஒத்துழைத்து தீவிரமாகப் போராடியுள்ளார். நல்லம்மா பற்றிய இந்நூல் இரு பகுதிகளைக் கொண்டது. முதற்பகுதி அவரது கருத்தோட்டத்தில் நல்லம்மாவின் பங்கு எத்தகையது என்பதை விளக்குகின்றது. அறிமுகம், பெண் வைத்தியர், சமுதாயப் பணியில் பெண்கள், மகளிர் வாக்குரிமைச் சங்கம், காலப்பின்னணி, பெண்கள் முன்னேற்றம், சர்வஜன வாக்குரிமை, நிறைவாக, அடிக்குறிப்புகள் ஆகிய தலைப்புகளில் இப்பகுதி வடிவமைக்கப் பட்டுள்ளது. இரண்டாம் பகுதி பின்னிணைப்பாக, நல்லம்மாவினால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட இந்திய இல்வாழ்க்கை, ஸ்திரிகளும் வாக்குரிமைகளும் ஆகிய இரு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 18548).

923.2 அரசியல் துறையினர்

9882

அஷ்ரஃப்பின் அந்த ஏழு நாட்கள். அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 3: மில்லேனியம் வெளியீட்டகம், 417- 2/1, காலி வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2001. (கொழும்பு 3: மில்லேனியம் வெளியீட்டகம், 417- 2/1, காலி வீதி).

xxiv, 9-288 பக்கம், விலை: ரூபா 245., அளவு: 21.5x14 சமீ., ISBN: 955-8669-00-8.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் நிறுவனத் தலைவரான அமரர் M.H.M.அஷ்ரஃப் (1948-2000) அவர்களின் இறுதிக்காலத்தில், இடம்பெற்ற மக்காவுக்கான அவரது பயணத்தையும் அதன் பின்னணியில் அமைந்துவிட்ட அரசியலையும் இந்நூல்

விபரிக்கின்றது. நூலாசிரியர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர். முன்னர் 1999இல் கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம் என்ற தலைப்பில் அஷ்ரஃப் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்.

9883

25,00,000 மக்கள் தலைவர். குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் (தொகுப்பாசிரியர்). கண்டி: இரா.கனகரத்தினம், 1வது பதிப்பு, டிசம்பர் 1959. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194ஏ, தட்டா தெரு).

(8), 120 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x13.5 சமீ.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் சா.ஜே.வே.செல்வநாயகம் அவர்களின் அரசியல் வாழ்க்கை பற்றிய நூல். சமஷ்டிக் கட்சி அமைத்து வடக்கு கிழக்கு மலையக மக்களை ஒன்றிணைத்து அவர் பெருந்தலைவரான வரலாற்றையும் அவரது அரசியல் நோக்குகளையும், கருத்துகளையும் இத்தொகுப்பு பதிவு செய்கின்றது. தந்தை செல்வாவின் கருத்துக்களை பல்வேறு உரைகளிலிருந்தும் எடுத்து இந்நூல் தொகுத்து வழங்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 5730).

9884

சேர் பொன் இராமநாதன். ஈழவேந்தன். கொழும்பு: ஈழவேந்தன், 1வது பதிப்பு, 1966. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தா மேடு).

(6), 16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x13 சமீ.

26.11.1930இல் தன் எண்பதாவது அகவையில் மரணமடைந்த சேர். பொன் இராமநாதனின் பல்துறைப் பணிகள் பற்றி ஆசிரியர் அவ்வப்போது சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழநாடு, செய்தி, விவேகானந்தன் முதலான இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் சிறு தொகுப்பாக இக்கட்டுரை வெளிவந்துள்ளது. சேர் பொன் இராமநாதனின் இறுதிக்கால அரசியல் பணிகள் பற்றி அவ்வளவாகப் பேசப்படுவதில்லை என்ற குறைபாட்டைப் போக்கும் வகையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இராமநாதனுடைய கருத்துக்களையும் கூற்றுக்களையும் இக்கால அரசியல் பின்னணியிற் பதித்துத் தமிழ் மக்களைத் தம் வீழ்ச்சி குறித்து ஆசிரியர் சிந்திக்கவும் செய்துள்ளார். யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பிறந்த ஈழவேந்தன், சென் ஜோன்ஸ் கல்லூரியில் கற்றுத் தேர்ந்தவர். இலங்கை மத்திய வங்கியில் தொழில்புரிந்து வந்த வேளையில் மத்தியவங்கி தமிழ் ஊழியர்சங்கத்தைத் தொடங்கி அதன் தலைவராக விளங்கினார். பின்னர் தந்தை செல்வாவின் தமிழரசுக்கட்சியில் இணைந்துகொண்ட இவர், காவலூர் நவரத்தினம் தமிழரசுக் கட்சியுடன் கொண்ட கருத்து முரண்பாடு காரணமாகத் தமிழர் சுயாட்சிக் கட்சியை உருவாக்கியபோது அதில் தன்னையும் இணைத்துக்கொண்டவர். பின்னர் ஆயுதப் போராட்டக் குழுவான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் சேர்ந்து திம்புப் பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்துகொண்டார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறிய போது காசி ஆனந்தன் போன்றோருடன் இந்தியாவுக்குச் சென்று தமிழகத்தில்

தங்கியிருந்து அரசியல்பணிகளில் ஈடுபட்டவர். அங்கிருந்து பின்னர் இந்திய அரசினால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர். பின்னர் இலங்கைப் பாராளு மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டபோது நியமனப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினரானவர். தற்போது கனடாவில் வாழ்ந்து வருகின்றார்.

9885

சேர் பொன் இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். சொக்கன் (இயற்பெயர்: க.சொக்கலிங்கம்). யாழ்ப்பாணம்: பரமேஸ்வரா கல்லூரி இயக்குநர் சபை வெளியீடு, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஏப்ரல் 1976. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்).

viii, (2), 76 பக்கம், தகடுகள், விலை: ரூபா 2.75, அளவு: 21.5x14 சமீ.

சேர். பொன்னம்பலம் இராமநாதனின் 125ஆவது ஜயந்தி தினத்தை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. 1973இல் ஈழநாடு வார இதழில் "ஈழத்துச் சனகர்" என்ற தலைப்பில் தொடராக வெளிவந்த இக்கட்டுரைத்தொடர், சேர். பொன் இராமநாதனின் வாழ்க்கை வரலாறு பற்றிய பல செய்திகளைக் கொண்டுள்ளது. அக்கட்டுரைத் தொடரின் புதுக்கிய பதிப்பாக- தனிநூலாக இது வெளிவந்துள்ளது. இராமநாதன் இலங்கையின் ஈடில்லாப் புதல்வன், இராம நாதனின் பாரம்பரியம், பிறப்பு வளர்ப்பு, இராமநாதன் கற்ற கல்வியும் கல்வி வழிகாட்டிகளும், இராமநாதன் நியாயவாத, சட்ட நிரூபணசபை உறுப்பினர், இராமநாதனின் ஆத்மஞானம், இராமநாதனின் கல்விப் பணிகள், இராமநாதனின் வாழ்க்கைத் துணைவி, இராமநாதனின் குணநலன்களும் பல்துறை ஆற்றல்களும், சமகாலப் பெரியோர்கள், இராமநாதன் வாழ்த்தும் வாக்கும், ஆகிய 10இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளதுடன் நூலின் இறுதியில் இராமநாதன் இயற்றிய நூல்கள் பற்றிய பட்டியலும் தரப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 69501).

9886

தமிழ் அமிர்தம்: முதற் பாகம். தமிழ் மகன் கருணாநிதி (ஆசிரியர்), இ.பேரின்பநாயகம் (சிறப்பாசிரியர்), மு.பாஸ்கரன் (துணை ஆசிரியர்). சுன்னாகம்: வி.தர்மலிங்கம், தமிழர் கூட்டணி இணைச் செயலாளர், அறிவாலயம், கந்தரோடை, 1வது பதிப்பு, டிசம்பர் 1974. (சுன்னாகம்: திருமகள் அழுத்தகம்).

(16), 74 பக்கம், விலை: ரூபா 4.00, அளவு: 21.5x14 சமீ.

ஈழத்தின் பிரபல அரசியல்வாதியும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான நாவலர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் வரலாற்றை இந்நூல் பதிவுசெய்கின்றது. ஆற்றல் அரசு, பண்ணாகம் தந்த பண்புடை அண்ணா, அப்பாவின் பிள்ளை, பல்கலைக் கழகத்தில் பைந்தமிழ்த் தொண்டு, தந்தையைச் சந்தித்தார், இந்தி அரக்கி எதிர்ப்பும் இளைஞர் அமிரும், பட்டம் பெற்றார் சட்டம் படித்தார், தனிப்பெருந் தலைவருடன் வாதிட்ட தமிழ் இளவல், மாவிட்டபுரத்தில் மறத்தமிழர் கூட்டம், கற்களை வென்றன சொற்கள், காங்கிரஸ் பிளந்தது கட்சி பிறந்தது, தியாகிகளின் திருக்

கூட்டம், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, சிங்கத்துக்கு எதிராகச் சங்கநாதம், மரணம் கொடுத்த மனக்கலக்கம், முன்னணியில் முதல் தலைவர், அரிசி விலையும் அரசியல் நிலையும், வீட்டுக்கு வந்த வீராங்கனை, காதலா கடமையா, ஐம்பத்தாறில் அமோக வெற்றி, செந்தமிழ் மொழி காக்கச் சிந்தினார் செந்நீர், திருமலையில் எரிமலை, இறங்கி வந்தார் இலங்கைப் பிரதமர், குறுநில மன்னரா சோழர் வழித்தோன்றலா?, பண்பு குலைந்தது பதவி நிலைத்தது, சிறீயை அழித்தார் சிறையை அணைத்தார், வவுனியா மகாநாடும் வகுப்புக் கலவரமும், கடலைக் கடந்த கடமையாளன், அநீதி கண்டார் ஆவேசம் கொண்டார் என்றவாறாக அ.அமிர்தலிங்கம் அவர்களின் அரசியல் வாழ்க்கைப் பயணத்தை உணர்வுபூர்வமாக இந்நூல் பதிவுசெய்கின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37987).

9887

தமிழரசுத் தந்தை. குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் (தொகுப்பாசிரியர்). கண்டி: எஸ்.எம்.ஐவுபர், எம்.ஏ.சுல்த்தான், 74/2, பிறவுண்றிக் வீதி, 1வது பதிப்பு, ஜுன் 1960. (கொழும்பு 12: சுதந்திரன் அச்சகம், 194 ஏ, தட்டா தெரு).

82 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 21x14 சமீ.

தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வா அவர்களின் வாழ்வியல் பணிகள் பற்றிய செய்திகளையும், அவ்வப்போது அவர் உதிர்த்த முக்கிய கருத்துக்களையும் திரட்டி இருபத்தைந்து லட்சம் மக்கள் தலைவர் என்ற நூலை 1959இல் வெளியிட்டிருந்த குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களின் பணியின் தொடர்ச்சியாக இந்நூல் தந்தை செல்வா என்றழைக்கப்படும் சா.ஜே.வே.செல்வ நாயகம் அவர்கள் பற்றிய மேலும் சில குறிப்புகளுடன் வெளிவந்துள்ளது. (இந் நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 37984).

9888

பண்புயர் மனிதர் பாக்கீர் மாக்கார்: எதிரணியினரின் நடுநிலைப் பார்வை. ஏ. இக்பால். வேர்வலை: பேசும் பேனா பேரணி. 26/6, ஷெய்க் முஸ்தபா பள்ளி வீதி, 1வது பதிப்பு, ஜுலை 1990. (கொழும்பு 2: கிரஸன்ட் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட், 90 ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை).

xxxii, 136 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 22x14.5 சமீ.

முன்னாள் சபாநாயகரும், முதலாவது முஸ்லிம் ஆளுநரும், முன்னாள் அமைச்சருமான தேசமான்ய அல்ஹாஜ் எம்.ஏ.பாக்கீர் மாக்கார் அவர்களுடைய வாழ்வும் பணிகளும்பற்றிய ஒரு நடுநிலைப் பார்வை. பேருவளையில் பிறந்த இவர் உள்ளூராட்சி அரசியலில் நுழைந்து நகரசபைத் தலைவராகி, பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகிப் படிப்படியாக அரசியலில் முன்னேறியவர். களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக இருந்தவேளையில் மக்களின் செல்வாக்கைப் பெற்ற மனிதாபிமானம் கொண்டவர். கிழக்கிலங்கையின் சூறாவளித் தாக்குதலின் போது வீடிழந்தவர்களுக்கு 100 வீடுகளை ஈராக்

நாட்டின் உதவியுடன் கட்டிக்கொடுத்து, அப்பிரதேசத்தை சதாம் ஹுசெய்ன் கிராமம் என்று பெயரிட்டு வைத்தவர். இப்பெரியாரின் அமரத்துவமான வாழ்வு இந்நூலில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. வைகறைக் கும்மிருட்டு, உதய ஒளிக்கீற்று, மலையடிவார மாணிக்கம், பட்டைதீட்டிய பளபளப்பு, ஊரைச்சுற்றிய ஒளி, ஒளிபரப்பிய பகலவன் என இன்னோரன்ன 15 அத்தியாயத் தலைப்புகளில் கவிஞர் ஏ.இக்பால் இந்நூலை வழங்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 108123).

923.3 பொருளியலாளர்கள்

923.4 சட்ட அறிஞர்கள்

9889

சட்ட வல்லுநர் செ.இரங்கநாதன் கியூ.சீ.அவர்களின் பன்முகப் பணிகள். இ.க.கந்தசுவாமி. கொழும்பு 6: இ.க.கந்தசுவாமி, 7. 57ஆம் ஒழுங்கை, 1வது பதிப்பு, மாசி 2001. (கல்கிஸ்ஸை: ஐடியல் பிரின்ட்).

16 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x15 சமீ.

சட்ட வல்லுநர் அமரர் செ.இரங்கநாதன் அவர்களின் பன்முகப் பணிகளை நினைவுகூர்ந்து அவரைப் பாராட்டும் வகையில் தமிழவேள் கந்தசுவாமி (கொழும்புத் தமிழ்ச்சங்கச் செயலாளர்) அவர்கள் எழுதிய சிறுநூல் இது. 9.2.2001 அன்று அவரது உருவப்படம் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட போது இந்நூல் வெளியிடப்பட்டது. அமரர் இரங்கநாதன் கொழும்பு இராமகிருஷ்ண சங்கத்தின் முகாமைத்துவ சபையின் உறுப்பினராகப் பல ஆண்டுகள் சேவையாற்றியதுடன், கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் அரிய பங்காற்றியுள்ளார். சட்டத்துறையில் பல்வேறு குழுக்களிலும் அங்கம் வகித்த இவர் தமிழ்மொழி, சமயம், கல்வி, சமூக சேவை ஆகிய துறைகளில் ஆற்றிய சேவைகள் இந்நூலில் நினைவுகூரப்பட்டுள்ளன.

923.5 பொது நிர்வாகத்துறையினர்

923.6 சமூக சேவகர்கள்

9890

ஐக்கியதீபம்: வீரசிங்கம் நினைவு மலர். து.சீனிவாசகம் (ஆசிரியர்). யாழ்ப்பாணம்: வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை வெளியீடு, வட பகுதி கூட்டுறவுச் சம்மேளனம், பிரதான வீதி, 1வது பதிப்பு, ஐப்பசி 1965. (யாழ்ப்பாணம்: வட மாகாண கூட்டுறவு அச்சகமும் வெளியீட்டுச் சபையும்).

32 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26.5x20.5 சமீ.

வடபகுதி கூட்டுறவுச் சம்மேளனத்தின் அதிகாரபூர்வ வெளியீடான ஐக்கிய தீபம் சஞ்சிகை, தனது இதழொன்றினை (மலர் 21, இதழ் 2, ஐப்பசி 1965) கூட்டுறவுத் தந்தை அமரர் வி.வீரசிங்கம் (7.7.1892-5.12.1964) அவர்களின் நினைவு மலராக வெளியிட்டிருந்தது. வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையைத் தோற்றுவித்து அதன் தலைவராக தன் இறுதிக்காலம் வரை 27 ஆண்டுகள் சேவையாற்றியவர். கூட்டுறவு இயக்கத்துக்கு எடுத்துக்காட்டாக இருந்த இவரது சேவைத்திறனை அறிந்த கூட்டுறவாளர்கள் 21.5.1955இல் அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தை நிறுவியபோது அதன் முதலாவது தலைவராக நிமித்தனர். இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக 30 ஆண்டுகள் பணியாற்றியவர். அனுதாபச் செய்திகளுடன் அமரர் வீரசிங்கம் பற்றிய கவிதைகள், கட்டுரைகள் என்பன இவ்விதழில் இடம்பெற்றுள்ளன.

9891

நீங்காத நினைவுகள்: தமிழ்த்தொண்டர் ஐ.தி.சம்பந்தனின் நினைவுத் தடங்கள். *ஐ.தி.சம்பந்தன். லண்டன்: சுடரொளி வெளியீட்டுக் கழகம், 15 ருத்லண்ட் வீதி, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xxiv, *211 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-0-9555359-9-4.

ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல், தொழிற்சங்க வரலாற்றுச் சுவடுகளைத் தேடிச் செல்லும் ஒரு ஆய்வாளனின் பார்வையில் ஐ.தி.சம்பந்தன் என்ற பெயர் இடைக்கிடையே சிக்கிக்கொள்ளும். தமிழரசுக்கட்சியின் அரசியல்களமாகட்டும், சன்சோனி உள்ளிட்ட இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு ஆணைக்குழுக் களின் அறிக்கைகளாகட்டும், எரிந்துபோன யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் தொடக்கப்பட்ட கொடித்தினப் பணிகளாகட்டும், ஆங்காங்கே இந்தப் பெயர் முக்கிய இடங்களில் எட்டிப்பார்க்கவே செய்யும். இவரது சமூக வாழ்வின் முக்கிய சில பக்கங்களை இந்த நூல்வழியாக சுயசரிதை வடிவில் ஐ.தி.சம்பந்தன் அவர்கள் வழங்கியிருக்கின்றார். தனது மனதில் இடம் கொண்டவர்கள் பற்றியும் ஆங்காங்கே அவர்களுடனான தனது தொடர்புகளையும் குறிப்பிடுகின்றார். இலங்கை, தமிழகம், புகலிடம் என இவரது தொடர்புகள் விரிந்துள்ளதை இந்நூல்வழியாகப் புலப்படுத்துகின்றார்.

923.61 விடுதலைப் போராளிகள்

9892

தமிழீழ ஈகச்சுடர் அன்னை பூபதி. *மலர்க்குழு. யாழ்ப்பாணம்: மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தொடர்பகம், 1வது பதிப்பு, 1992. (யாழ்ப்பாணம்: தாசன் அச்சகம், மகேந்திரா வீதி).*

48 பக்கம், தகடு, விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 *சமீ.*

மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக சாகும்வரை உண்ணாநிலையிலிருந்து உயிர்நீத்தவர் அன்னை பூபதி (திருமதி பூபதி கணபதிப்

பிள்ளை 3.11.1932-19.4.1988). மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராகப் பணியாற்றியவர். போர் நிறுத்தம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து அன்னையர் முன்னணியினர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்த வேளையில் 1988 மார்ச் 19 இல் தான் சாகும்வரை உண்ணா நோன்பைத் தொடங்கிய பத்து பிள்ளைகளுக்குத் தாயாரான அன்னை பூபதி, கோரிக்கைகள் இந்திய இராணுவத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் தன் அகவை 56இல், 1988 ஏப்ரல் 19இல் மரணத்தைத் தழுவினார். அன்னை பூபதியின் நினைவுநாள் தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள் என்று பின்னாளில் நினைவு கூரப்பட்டது. இந் நூல் அன்னை பூபதியின் மறைவின் நான்காவது ஆண்டை நினைவுகூர்ந்து வெளியிடப்பட்டுள்ளது. அன்னை பூபதி பற்றிய ஏழு ஆக்கங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. அநீதிக்கு சவால் விடுத்த அன்னை பூபதி, புரட்சியின் புயல்தான் அன்னை பூபதி, தமிழீழ மண் சிவந்தது, அன்னை பூபதி மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம், அன்னை பூபதி, பூபதியே நீ புதைக்கப்படவில்லை, தமிழர் இதயமெங்கும் வேரோடிவிட்ட விருட்சம் ஆகிய தலைப்புகளில் இந் நூல் படைப்புக்களை உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 94696).

923.7 கல்வியியலாளர்கள்

9893

அடிச்சுவடுகள். இளவாலை செ.இராசநாயகம். கனடா: மரியநாயகி (இராஜேஸ்வரி) இராசநாயகம், ரொரன்ரோ, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2011. (கனடா: பென்குயின் கிராப்பிக்ஸ்).

xv, 248 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

எங்கள் அருந்தவச் செல்வமகன், இளவாலைத் தாய் மண்ணுக்கு வாழ்த்து, அன்னையின் அணைப்பில் அகரம் எழுத, எந்தையுடன் கென்றியரசர் கல்லூரியில், அன்னையின் ஆசியுடன் ஆசிரியனாக, அழகு நிறை நாவலப்பிட்டி, உலக முடிவைக்கண்டு ஓடும் தொடருந்து, தூய உறவும் நேய நட்பும், தந்தை செல்வாவின் முன், எதிர்ப்பின் குரலை எதிரொலித்தமை, கதிரேசனோடு கலந்துறை வாழ்வில், அல்லி அரசாட்சியுடன், சந்தியில் ஒரு திடீர் இடமாற்றம், சந்தியில் மீண்டும் ஒரு திருப்பம், நாடகத்தில் நாற்றுமேடை, வளனார் பெயரில், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன், கூப்பன் மறைவின் கொடுந்துயரம். என இன்னோரன்ன தலைப்புகளில் ஆசிரியர் தன் வாழ்வுப்பயணத்தை இந்நூலில் சுவையாக இலக்கிய நயத்துடன் பதிவுசெய்திருக்கிறார். ஆசிரியர் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரியில் கற்று அங்கு ஆசிரியப்பணியாற்றியவர். கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் இவர் அங்கும் சில்வர் ஸ்பிரிங்ஸ் பார்க் வாசிப்பு வட்டம்,

ரொரன்ரோ தூய ஆரோக்கிய அன்னைப் பங்குப் பணிச்சபை ஆகியவற்றின் தலைவராகவும் பணியாற்றுகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 227631).

9894

ஆறுமுக நாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும். *சி.செல்லையாபிள்ளை (மூலம்), இரா.வை.கனகரத்தினம் (பதிப்பாசிரியர்). புங்குடுதீவு: அன்புதாசன் வெளியீடு, 2வது பதிப்பு, மார்ச் 1996. 1வது மூலப் பதிப்பு, 1914. (சென்னை 5: கவிக்குயில் அச்சகம்).*

xxviii, *232 பக்கம், விலை: ரூபா 600., அளவு:* 18x12.5 *சமீ.*

பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் அணிந்துரையும், கலாநிதி வித்துவான் க.ந.வேலன் அவர்களின் சிறப்புப்பாயிரமும், இந்நூலின் பதிப்பாசிரியர் இரா. வை கனகரத்தினம் அவர்களின் விரிவான பதிப்புரையும் கொண்டதாக இந் நூல் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் மூலப்பதிப்பு, 1914இல் சி. செல்லையாபிள்ளை அவர்களால் எழுதப்பட்டு "யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சரித்திரச் சுருக்கமும் அவர்களியற்றியருளிய தனிப் பாமாலையும்" என்ற தலைப்பில் (நூல்தேட்டம் பதிவிலக்கம் 7862) கொழும்பு கொம்பனித்தெரு, மீனாம்பாள் அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப் பட்டிருந்தது. நாவலர் மறைவுக்குப் பின்னர் அவர் பற்றி வெளிவந்த ஆரம்பகால நூல்களுள் இது முக்கியமான ஒரு பிரசுரமாகக் கருதப்படுகின்றது. அருணாசலக் கவிராயர் 1898 இல் பாடிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர் 1919இல் எழுதிய சற்குரு மணிமாலை ஆகிய நாவலரியல் நூல்களுடன் இந்நூலும் முக்கியமானதாகக் கணிக்கப் பெற்றிருந்தது. 1914இல் வெளியான மூல நூலின் மீள்வருகையாக இந்நூலை நாவலர் பற்றிய மேலதிக தகவல்களுடன் வெளியிட்டுள்ளனர். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123644).

9895

கிழக்குப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள். *செ.யோகராஜா. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

32 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 *சமீ.*

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துடனும் வளர்ச்சியுடனும் ஏறத்தாழ 19 ஆண்டுகளாகத் தொடர்புபட்டிருந்து தற்போது ஓய்வுபெற்றுள்ள பேராசிரியர் சி.மௌனகுருவின் பல்கலைக்கழகத்து வாழ்க்கை இந்நூலில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் ஒரு காலகட்ட வரலாறாகச் சொல்லப்படுகின்றது. பேராசிரியர் செ.யோகராஜா கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழித்துறைத் தலைவராவார்.

9896

சேவைநலன் பாராட்டு மலர்: அருட்தந்தை கலாநிதி டொமினிக் சாமிநாதன், பேராசிரியர் சி.மௌனகுரு. *விழா ஏற்பாட்டுக் குழு. இலங்கை: கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, 2012. (அச்சக விபரம் தரப் படவில்லை).*

iv, *38 பக்கம்,* விலை: *குறிப்பிடப்படவில்லை,* அளவு: 21x15 *சமீ.*

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர் சி.மௌனகுரு, ஒப்பீட்டுச் சமயத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அருட்தந்தை கலாநிதி டொமினிக் சாமிநாதன் ஆகிய இருவருக்கும் மேற்படி பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தினர் சேவைநலன் பாராட்டு விழாவொன்றினை 2012இல் நடத்தினர். அதையொட்டி வெளியிடப்பெற்ற இம்மலரில், உபவேந்தர், பீடாதிபதி ஆகியோரின் வாழ்த்துச் செய்திகளும், "பேராசிரியர் சி.மௌனகுருவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அவரது தடங்களும்" (பேராசிரியர் செ.யோகராசா), "அருட்தந்தை கலாநிதி டொமினிக் சுவாமிநாதன் அடிகள்" (ரூபி வலன்ரினா) ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. விழா ஏற்பாட்டுக் குழுவில் ம.வர்ணகுலசிங்கம், பே.சச்சிதானந்தம், வ.இன்பமோகன், அருட்தந்தை அ.அ.நவரெட்ணம், க.சுரேஷ், கு.ரவிச்சந்திரன், எஸ்.சந்திரகுமார், எம்.சிவாஜி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

9897

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். *க.க.உதயகுமார் (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: கொழும்புத் தமிழ்ச் சங்கம், 7, 57வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2011. (கொழும்பு 6: ஹரே பிரின்டர்ஸ், 36, புகையிரத நிலைய வீதி).*

vi, *48 பக்கம்,* விலை: *குறிப்பிடப்படவில்லை,* அளவு: 20x14.5 *சமீ.*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வாழ்வும் பணியும் பற்றிய இந்த நூல் கொழும்புத் தமிழச்சங்கத்தின் நாவலர் விழாவினையொட்டி வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ மதத்தைப் பரவாமல் தடுக்க முயன்றதால் கிறிஸ்தவர்களுக்கும், சைவசமயத்தில் சீர்திருத்தம் செய்ய முனைந்ததால் சைவ சமயத்தவர்களுக்கும், ஊழல்களை எதிர்த்துப் போராடியதால் அரச அதிகாரிகளுக்கும் எதிரியானவர் நாவலர். ஆயினும் அவரது தூய பணியால் இன்றும் பேசப்படுபவர். 18.12.1822இல் பிறந்து 57 வருட காலமே வாழ்ந்து 5.12.1879இல் மரணித்தவர் ஆறுமுக நாவலர். அவரது வாழ்வும் பணியும் இந்நூலில் விரிவாகப் பேசப்படுகின்றது. டிசம்பர் 2011இல் கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்திய நாவலர் விழாவின்போது வெளியிடப்பட்ட நூல் இது. இந்நூலைத் தொகுத்தவர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கல்விக் குழுச் செயலாளராவார். நாவலர் ஓர் அறிமுகம், நாவலர், கலைக்களஞ்சியத்தில் நாவலர், ஆறுமுக நாவலர் நூற்பட்டியல், நாவலரும் ஈழத்தமிழ் இலக்கியமும், ஆறுமுக நாவலர் எழுதிய குட்டிக்கதை, ஆறுமுக நாவலர் பற்றி அமரர் கல்கி, நாவலர் வாழ்வில் அறிஞர்கள், ஆறுமுக நாவலர் பதிப்பு நெறிமுறை, நாவலரைப் பற்றிய நூல்கள், நாவலருக்கு முத்திரை வெளியீடு, நாவலர் கையெழுத்து மாதிரி ஆகிய 12 உப தலைப்புகளில் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

9898

பேராசிரியர் அல்லாமா உவைஸ் (இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசை இல. 19). *எஸ்.எச்.எம்.ஜெமீல். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

56 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-408-9.

இலங்கையின் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசையில் 19ஆவது நூலாக 20ம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த மறுமலர்ச்சிச் சிந்தனையாளரும் தமிழறிஞருமான பேராசிரியர் அல்லாமா மகுமூது லெவ்வை முகம்மது உவைஸ் (1922-1996) அவர்களின் வாழ்வும் பணிகளும் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆரம்பம், ஆரம்பக் கல்வி, உயர் கல்வி, ஆய்வுகள், இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், நல்லதொரு குடும்பம், பல்கலைக்கழகப் பணி, நூல்வெளியீடுகள், என்றும் நிலைத்திடும் பணி ஆகிய 9 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப் புகளாக, பேராசிரியர் உவைஸ் வாழ்வில் முக்கிய திகதிகள், பேராசிரியர் உவைஸ் எழுதிய, பதிப்பித்த, மொழிபெயர்த்த நூல்கள், பேராசிரியர் உவைஸ் பற்றிய நூல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

924 மொழியியலாளர்கள்

9899

செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரவேற்பிள்ளை. *க.சி.குலரத்தினம், திரு. வி. கலியாணசுந்தர முதலியார். பருத்தித்துறை: கதிரைவேற்பிள்ளை கலாமன்றம், கதிரைவேற்பிள்ளை வீதி, மேலைப் புலோலி, 1வது பதிப்பு, ஜூலை 1969. (கொழும்பு 13: இரஞ்சனா அச்சகம், 98, விவேகானந்தர் மேடு).*

(6), 50 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 *சமீ.*

தமிழறிஞர் நா.கதிரைவேற்பிள்ளை (1874-1907) யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் வந்து, தமிழ்ப்பணிக்கும் சைவப்பணிக்கும் தன்னை அர்ப்பணித்தவர். தமிழுக்கு அகராதியொன்றை தொகுத்து வழங்கியவர். இவரது சுப்பிரமணிய பராக்கிரமம் என்ற நூலின் அடிப்படையிலேயே பழநி தண்டாயுதபாணி கோயிலில் சித்திரங்கள் தீட்டப்பெற்றன. பல்வேறு தலபுராணங்களைப் பாடிய இவர் பின்னாளில் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவராகவும் இருந்துள்ளார். தமிழக சட்டப்பேரவைத் தலைவராக புலவர் கா.கோவிந்தன் சேவையாற்றிய வேளையில், புகழ்பெற்ற பருத்தித்துறை மண்ணின் மைந்தன் செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரைவேற்பிள்ளை அவர்களுக்கு தமிழகத்தில் சிலை வைக்கும் பணி தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. அவ் வேளையில் கன்னித் தமிழ் வளர்த்த அவரை நினைவுகூர்ந்து இந்நூல் இலங்கையில் எழுதி வெளியிடப்பட்டது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 9065).

9900

தமிழ்மொழிப் புலமை விருத்திக்கு வடமராட்சிப் புலமையாளர்களின் பங்களிப்பு. *க.இரகுபரன். பருத்தித்துறை: நிறுவுநர் அமரர் வேலாயுதம்பிள்ளை தின வெளியீடு, வேலாயுதம் மகா வித்தியாலயம், 1வது பதிப்பு, ஓகஸ்ட், 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).*

40 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 *சமீ.*

22.8.2012 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்ற நிறுவுநர் தின நினைவுப் பேருரை இதுவாகும். நூலாசிரியர் ஒலுவில், தென்கிழக்குப் பல்கலக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

926 பிரயோக விஞ்ஞானிகள், மருத்துவர்கள்

9901

இலங்கையில் வைத்தியர் அலிஸ்டி புவர் மற்றும் முன்னோடிகளான சில பேகர் பெண் வைத்தியர்களும். *டிலோரெய்ன் புறோஹியர் (ஆங்கில மூலம்), கந்தையா சர்வேஸ்வரன் (தமிழாக்கம்). கொழும்பு 5: சமூக விஞ்ஞானிகள் சங்கம், 12, சுலைமான் டெரஸ், 1வது பதிப்பு, 1997. (கொழும்பு: கருணாரத்ன அன் சன்ஸ்).*

66 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 955-9102-20-6.

பெண்களின் வரலாற்றை மீட்டெடுத்தல் என்ற அடிப்படையில் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வு இது. பொருளாதார, சமூக படிநிலைகளில் கீழ்நிலை உத்தியோகங்களிலேயே பங்களிப்பு நல்கும் வாய்ப் பினைப் பெற்றிருந்த பெண்களின் ஒரு சாரார் தனித்துவமானதும் சமூக கௌரவம் மிக்கதுமான வைத்தியத்தொழிலில் 19ம் நூற்றாண்டுகளிலேயே வெற்றிகரமாக ஈடுபட்டதெப்படி என்பதை இந்நூல் ஆராய்கின்றது. இலங்கையில் 1870இல் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1892இலேயே பெண்கள் அனுமதிக்கப் பட்டனர். வைத்தியர் அன்ட்றோஸ் நெல் இன் சகோதரியும் 1890இன் ஆரம்பப் பகுதிகளில் வைத்தியராகப் பணியாற்றியவருமான வினிபிரெட் நெல், மற்றும் வைத்தியர் ஆர்.எல்.ஸ்பிட்டெல் இன் துணைவியார் வைத்தியர் கிளாரிபெல் வான் டோட் ஸ்பிட்டெல், இலங்கையின் முதற் பெண் மருத்துவர் அலிஸ் டி புவர், என ஒரு மறக்கப்பட்ட பட்டியல் இந்நூல் வழியாகப் பதிவுபெறுகின்றது. மருத்துவர் அலிஸ் டி புவர் அவர்களின் சகோதரியின் பேத்தியின் வழியாக இந் நூல் உருவாகியுள்ளது. 19ஆம் நூற்றாண்டில் நவீன இலங்கையின் உருவாக்கத்தில் முக்கிய பங்கேற்ற பேர்கர் சமூகத்திலிருந்தே இந்த வைத்தியர்கள் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132811).

9902

உலகின் முதலாவது வைத்திய மிஷனரி வண. டாக்டர் ஜோன் ஸ்கடர் கதை. நாவேந்தன். யாழ்ப்பாணம்: தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாண ஆதீனம், 1வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 2: ஆர்னோல்ட் இன்டர்நெஷனல் பிரின்டிங் ஹவுஸ், 169/1 யூனியன் பிளேஸ்).

30 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

ஒளிமிக்க மசாசூசெட்ஸ் மாநிலம், யாழ்ப்பாண வருகை, இறைவன் அழைத்த ஒருவர், டாக்டரும் போதகரும், நற்செய்திப் பணி, பண்டத்தரிப்பு ஊற்றுவாய், கிறிஸ்தவ போதகரும் முஸ்லிம் தீவிரவாதியும், அற்புதங்கள் நிறைந்த அதிசய வாழ்க்கை, அன்றும் இன்றும், பரம்பரைப் பழக்கம், நிறைவுபெற்ற நினைவுகள் ஆகிய அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ள இச்சிறுநூலின் இறுதியில் உசாத்துணை நூல்கள், நூலாசிரியரின் விருப்புரை ஆகியனவும் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 105709).

9903

தமிழ் மருத்துவம் காவலன். இ.கனகலிங்கம். யாழ்ப்பாணம்: இலங்கா தமிழ் மருத்துவ ஆராய்ச்சி மன்றம், சுன்னாகம், 1வது பதிப்பு, 2014. (யாழ்ப்பாணம்: ஈ.எஸ்.பிரின்ட்).

104 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ.

உயர் இராச மதிப்பிற்குரிய இளவரசர் இராஜசேகரத்தின் மருத்துவப்பணிகள் பற்றிய நூல் இதுவாகும். இலங்கா தமிழ் மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் தவிசாளராக 1972 இலிருந்து பணியாற்றியது முதலாக, இவர் ஆற்றிய மருத்துவப் பணிகளை அவருடன் உடன் பணியாற்றிய இ.கனகலிங்கம் அவர்களால் இந் நூல்வழியாகப் பதிவுசெய்யமுடிந்துள்ளது. வயாவிளானைச் சேர்ந்த மருத்துவர் இராமலிங்கம் கனகலிங்கம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் பயின்று டீ.ஏ.எம். பட்டம் பெற்றவர். 1965 முதல் தொடர்ந்து 28 ஆண்டுகள்அரசசேவை சித்தாயுர்வேத சங்கத்தின் செயலாளராகவும் பின் 25.12.2004இல் இளைப்பாறும் வரை தலைவராகவும் பணியாற்றியவர்.

927 கலைஞர்கள்

9904

கலைத்தவசி: குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர். மலர்க் குழு. மன்னார்: முருங்கன் முத்தமிழ் கலாமன்றம், 1வது பதிப்பு, 2012. (மன்னார்: ஜே.எஸ். பிரின்டர்ஸ்).

296 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 24.5x18.5 சமீ., ISBN: 978-955-4609-00-6.

மன்னார் பிரதேசத்தில் கலைப்பணிக்கு அருஞ்சேவையாற்றிய கலைஞர் குழந்தை என கலையுலகில் அழைக்கப்படும் செ.செபமாலையின் கலைப்பணியை கௌரவிக்கும் முகமாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. அவரது 50 ஆண்டுகாலப் பணிகளினது ஐந்தொகையாக இம்மலர் அமைகின்றது. குழந்தை மாஸ்டரின் மகனான அருட்பணி செ.அன்புராசா அடிகளாரின் முயற்சியால் உருவாக்கப்பட்ட முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் வெளியீடாக இம்மலர் வெளியிடப் பட்டுள்ளது. குழந்தை மாஸ்டர் தான் சார்ந்த பங்குத் திருச்சபையில் ஆர்வமுள்ள பணியாளராக, கல்விப் புலத்தில் ஆசிரியராக, அதிபராக, கலையுலகில் நாடக, நாட்டுக்கூத்து நடிகனாக, எழுத்தாளராக, நெறியாளனாகப் பணியாற்றியவர். இவர் ஒரு சிறந்த கவிஞனாகவும் தன்னை இனம்காட்டியவர். இம்மலரில் இவருடன் பழகியவர்கள் கட்டுரை, கவிதை, ஆய்வுகளாகத் தமது மனப்பதிவைப் பகிர்ந்துகொண்டுள்ளனர். குழந்தை மாஸ்டர் ஊடகங்களுக்கு அவ்வப்போது வழங்கிய நேர்காணல்களும் இடம்பெற்றுள்ளன. 1982இல் முருங்கனில் இடம் பெற்ற பாராட்டுவிழாவிலும், 2009இல் பிரான்சில் நடைபெற்ற பாராட்டுவிழாவின் போதும் வெளியிடப்பட்ட மலர்களிலிருந்து தேர்ந்த கட்டுரைகளும் இதில் மீள்பதிவுக்குள்ளாகியுள்ளன.

927.92 நாடகக் கலைஞர்கள்

9905

அரியாலையூர் நாடக ஆளுமைகள். ப.ஸ்ரீஸ்கந்தன். சென்னை 26: வடலி வெளியீடு, 8ஏ, அழகிரி நகர் 4வது தெரு, லட்சுமிபுரம், வடபழநி, 1வது பதிப்பு, அக்டோபர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

128 பக்கம், புகைப்படங்கள், அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-0-9919755-1-8.

நடிப்பு, எழுத்துருவாக்கம், நெறியாழ்கை, பத்திரிகை எழுத்தாளர், பன்னூலாசிரியர், நிகழ்ச்சித் தொகுப்பாளர் போன்ற பல்துறை ஆற்றல் கொண்டவர் ப.ஸ்ரீஸ்கந்தன். யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவர். தற்போது கனடாவில் வங்கி ஒன்றின் முகாமையாளராகப் பணியாற்றுகின்றார். அரியாலையூரைத் தளமாகக் கொண்டு உருவாகி வளர்ந்த நாடக ஆளுமைகள் பலரை இந்நூலில் இனம்கண்டு அவர்கள் பற்றிய பல தகவல்களைப் பதிவுசெய்திருக்கிறார். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234384).

9906

பாலச்சந்திரன் என்றொரு கலை ஆளுமை. தா.சண்முகநாதன் (புனைபெயர்: சோக்கெல்லோ சண்முகம்). கனடா: மொன்றியல் இரா.நடராஜா, 5871, Victoria Avenue, Suite 222, Montreal, Quebec, 1வது பதிப்பு, 2011. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

viii, 178 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

1973இல் அண்ணை ரைற் என்ற தனி நடிப்பு முயற்சியின்மூலம் ஈழத்துக் கலை உலகில் அறிமுகமாகியவர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் பாலச்சந்திரன் (கே.எஸ்.பாலச்சந்திரன் 10.7.1944-26.2.2014) பின்னாளில் புலம்பெயர்ந்து கனடாவில் வசித்த அவரது வாழ்க்கை வரலாறு இந்நூலாகும். அவர் உயிருடன் இருந்த வேளையில் வெளியிடப்பெற்றது. இலங்கையிலும், புகலிடத்திலும் மேடை, நாடக, வானொலி, திரைப்பட, தொலைக்காட்சி நாடகக் கலைஞராகத் தம் திறமையை வெளிக்காட்டியவர். இலக்கியத்துறையிலும் பரிணமித்த இவரது கரையைத் தேடும் கட்டுமரங்கள் (2009), நேற்றுப்போல் இருக்கின்றது (2011) ஆகிய இரு நூல்களும் பிரபல்யமானவை. வாடைக்காற்று, நாடு போற்ற வாழ்க, அவள் ஒரு ஜீவநதி, சர்மிளாவின் இதயராகம், Blendings ஆகிய திரைப் படங்களில் முக்கிய பாகமேற்று நடித்தவர். அமுதன் அடிகளார் அறக்கட்டளை விருது, கனடா தமிழர் தகவல் விருது, உலக பண்பாட்டியக்க விருது, உதயன் சர்வதேச விருது, சுயாதீன கலை திரைப்பட இயக்கத்தின் வாழ்நாள் விருது உள்ளிட்ட பல விருதுகளை தன் வாழ்நாளில் பெற்றவர். இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள சோக்கெல்லோ சண்முகமும் மூத்த ஈழத்துக் கலைஞர் களுள் குறிப்பிடத்தக்கவர். தனது 24வது வயதில் கோமதியின் கணவன் என்ற சமூக நாவலை எழுதி வெளியிட்டவர். இலங்கை அரசின் கலாபூஷணம் விருது, மற்றும் தேசத்தின் கண், சமாதான நட்சத்திரம் போன்ற விருதுகளையும் பெற்றவர். மேடைப் பேச்சாளராகவும், நடிகராகவும், வானொலிக் கலைஞராகவும், வில்லிசைக் கலைஞராகவும் தாயகத்திலும், புலம்பெயர்நாடுகளிலும் அறியப் பெற்றவர். ஒரு கலைஞனின் பார்வையில் மற்றொரு கலைஞனின் வாழ்க்கை வரலாறு இந்நூலில் விரிவாகப் பதிவுபெற்றுள்ளது.

928 இலக்கிய அறிஞர்கள், புலவர்கள்

9907

அந்தனி ஜீவாவின் அரைநூற்றாண்டு அனுபவங்கள்: ஒரு வானம்பாடியின் கதை. *அந்தனி ஜீவா. யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு, கலை அகம், அல்வாய் வடமேற்கு, அல்வாய், 1வது பதிப்பு, வைகாசி 2014. (யாழ்ப்பாணம்: மதி கலர்ஸ், நல்லூர்).*

xii, *92 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு:* 20.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-4676-16-9.

35ஆவது ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ள நூல். ஜீவநதி சஞ்சிகையில் 20 மாதங்கள் தொடராக வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு. ஆசிரியரின் 70ஆவது அகவையை முன்னிட்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் அந்தனி ஜீவா துணிச் சலுடன் பல கருத்துக்களை முன்வைக்கின்றார். அனைத்தும் தன் வாழ்வனுபவங் களினூடாகக் கண்டுகொள்ளப்பட்டவை. மலையக இலக்கியம், மலையக வாழ்வு என்பவற்றுடன் நில்லாது, ஈழத்து இலக்கியம், ஈழத்து நாடகங்கள், சிற்றிதழ்கள்,

இலக்கிய விழாக்கள், இலக்கியகர்த்தாக்கள், இருட்டடிப்புக்கள் என ஒரு விரிந்த பரப்பினுள் இவரது பதிவுகள் காணப்படுகின்றன.

9908

அஸீஸும் தமிழும். ஏ.எம்.நஹியா. நிந்தவூர் 5: இக்ரஃ வெளியீட்டகம், 233 கிட்டங்கி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 1991. (கொழும்பு 12: குமரன் அச்சகம்).

x, 213 பக்கம், விலை: ரூபா 130., அளவு: 21x14 சமீ.

ஈழத்து முஸ்லிம் தமிழ் அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் (1911-1973) அவர்கள் தன் வாழ்நாளில் தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றிய பதிவாக எழுந்துள்ள இந் நூல், சூழல் ஆக்கிய தமிழறிஞன், மொழிக் கொள்கை, முஸ்லிம்களின் தாய்மொழி, முஸ்லிம்களின் கல்வி மொழி, அறபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ், தமிழ் மொழி ஞானம், இராமாயண மோகம், சிங்களம் மட்டும் சட்டம், தமிழர்-முஸ்லிம் ஐக்கியம், ஸாஹிறாவில் தமிழ்ப்பணி, மகாநாடுகளில் அஸீஸ், ஆய்வியல் வழிகாட்டி, அறிஞர் அறிமுகம், முஸ்லிம் பத்திரிகை ஆய்வும் தேடுகையும், அறபு -தமிழ் அகராதி, இஸ்லாமிய இலக்கியங்களுக்கு பாடநூல் அந்தஸ்து, மொழி பெயர்ப்பும் வெளியீடும், கட்டுரையாசிரியர், பன்னூலாசிரியர், பிரயாண இலக்கிய கர்த்தா, தமிழ் அபிமானி ஆகிய 21 தலைப்புகளின்கீழ் அவரது பணிகளை விபரிக்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 103022).

9909

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துச் செம்மல்கள் பாகம் 1. சிவபாதம் கணேஷ்குமார். குப்பிழான்: கற்பகம் கலைக்கூடம், 1வது பதிப்பு, செப்டெம்பர் 2011. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரின்டர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி).

xii, 214 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 20.5x15 சமீ.

இந்நூலில் இலக்கியவாதிகள், சமயவாதிகள், கலைச்சேவைக்காய் வாழ்வை அர்ப்பணித்தோர், பல்துறை ஆளுமைமிக்கோர் என பல்வேறு பிரமுகர்களின் வாழ்வும் பணியும் பற்றிய கட்டுரைகளை காணமுடிகின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி, ஜீ.எஸ்.வசந்தகுலசிங்கம், அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத், ஸ்ரீமதி விமலா யோகநாதன், பி.எஸ்.ஆறுமுகம்பிள்ளை, எம். திருநாவுக்கரசு, வி. கோதண்டபாணி, பி.வைத்தியநாத சர்மா, தம்பிலுவில் வில்லியம்பிள்ளை, கவிஞர் எம்.எம்.லெப்பை, உதுமான், மௌலவி தாசீன், வி.அம்பலவாணர், என்.ஆர். கோவிந்தசாமி, ரி.இரத்தினம், வி.தட்சணாமூர்த்தி, என்.ஆர்.சின்னராஜா, கே.சங்கரசிவம், ரி.நித்தியானந்தன், பொன் ஆத்மானந்தா, கீதாஞ்சலி கே. நல்லையா, கலைச்செல்வன் ஊரம் சுப்பையா, வி.ராஜரத்தினம், குமாரசுவாமிப் புலவர், செய்கு அலாவுத்தீன் புலவர், வரகவி வி.கே.கிருஷ்ணபிள்ளை, இசைப் புலவர் என்.சண்முகரத்தினம், புத்துவாட்டி எஸ்.இரத்தினம், புத்துவாட்டி எஸ். என்.சோமசுந்தரம், கோடையிடி அ.மயில்வாகனம், எஸ்.உருத்திராபதி, கோடையிடி தம்பாபிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேரா.கா.கைலாச நாதக் குருக்கள், வித்துவசிரோமணி சி.கணேசையர், ஆத்மஜோதி முத்தையா,

எஸ்.செல்லத்துரை, எஸ்.இராசையா, சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள், பண்டிதர் வி.சி.கந்தையா, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், காசிவாசி செந்தி நாதையர், தனிநாயகம் அடிகள், தாவீது அடிகள், என்.தங்கம், கவிஞர் எம்.சி. எம்.சுபைர், எம்.எச்.எம்.அஷ்ரஃப், பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், என்.காமாட்சி சுந்தரம், எஸ்.கே.இராசா, எஸ்.சுப்பையாபிள்ளை, வி.கணபதிப்பிள்ளை, வி. உருத்திராபதி, பிரம்மஸ்ரீ ச.வைத்தீஸ்வர ஐயர் ஆகிய 54 பிரமுகர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களை இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது. (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 228268).

9910

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு (இரண்டாம் பாகம்). சி.அப்புத்துரை. இலங்கை: தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம், 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: கீதா பதிப்பகம்).

312 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 800., அளவு: 18.5x13 சமீ., ISBN: 978-955-50192-8-6)

20ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இறுதிவரை வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கைச் சரிதத்தை ஆண்டுரீதியாக வரிசைப்படுத்தி அவர்களின் இலக்கியப்பணி பற்றிய முழுமையான தகவல்களை வரலாற்றுக் குறிப்புகளுடன் இந்நூல் தருகின்றது. இணுவை அம்பிகைபாகர், வேலணை கந்தப்பிள்ளை, புலோலியூர் நா.கதிரைவேற்பிள்ளை, மாதகல் ஏரம்பையர், புலோலியூர் முத்துக் குமாரசுவாமிக் குருக்கள், அக்கரைப்பற்று தாண்டவர் வேலன், நல்லூர் சிற். கையலாயபிள்ளை, அச்சுவேலி தம்பிமுத்துப் புலவர், உடுப்பிட்டி ஆறுமுக உபாத்தியாயர், புலோலி வ.குமாரசுவாமிப் புலவர், மல்லாகம் நமச்சிவாயப் புலவர், கொக்குவில் கணபதிப்பிள்ளைச் சட்டம்பியார், சாவகச்சேரி பொன்னம்பல பிள்ளை, திருகோணமலை த.கனகசுந்தரம்பிள்ளை, நீர்வேலிச் சிவப்பிரகாச பண்டிதர், சரவணை ம.தம்பு உபாத்தியாயர், திருகோணமலை த.சரவணமுத்துப் பிள்ளை, வேலணை க.இராமலிங்கம்பிள்ளை, சொற்கலைப் புலவர் சுவாமி ஞானப்பிரகாசர், மதுரகவிப் புலவர் சூசைப்பிள்ளை, நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர், தென்கோவை கந்தையாபிள்ளை, அப்துல் மஜீதுப் புலவர், யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதர், வேலணை தில்லைநாதப் புலவர், அக்கரைப்பற்று முஹமத் காசிம் ஆலிம், கச்சாயூர் புலவர் சின்னையனார், செந்தமிழ்க் கவிஞர் சு.நடேச பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கரணவாய் செவ்வந்திநாத தேசிகர், மூதூர் உமறு நெய்னாப் புலவர், நவாலியூர் சோ.இளமுருகனார், வேலணைப் பண்டிதர் பொ.ஜெகந்நாதன், நயினாதீவு கு.ப.சரவணபவன், வித்தியாரத்தினம் சோ.நடராசா, விழிசிட்டிச் சிவசுப்பிரமணியம், கவிஞர் சேக்க மரைக்கார், வன்னியூர்க் கவிராயர், மகாகவி து.உருத்திரமூர்த்தி, கவிஞர் புரட்சிக்கமால், கவிஞர் சௌகத் கமால் ஆகிய 41 பேர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பினை இந் நூல் சிறப்பாகப் பதிவுசெய்கின்றது. மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்த பண்டிதர் அப்புத்துரை, 1964இல் மழலைச் செல்வம் என்ற சிறுவர் பாடல் தொகுப்பை முதலாவதாக வெளியிட்டார். இதுவரை 30க்கும்

அதிகமான நூல்களை இவர் எழுதி வெளியிட்டிருக்கிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 219432. இந் நூலின் முதலாம் பாகத்திற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4885)

9911

இலங்கைத் தமிழறிஞர்களின் தமிழ்ப்பணிகள் (க.பொ.த. உ/த). பாலசுப்பிரமணியம் பத்மநாதன். யாழ்ப்பாணம்: சித்திர பவனம், ஏழாலை வடக்கு, ஏழாலை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

v, 74 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 22x14 சமீ.

பேராசிரியர்கள் க.கைலாசபதி, சு.வித்தியானந்தன், க.கணபதிப்பிள்ளை, ம.மு.உவைஸ், வி.செல்வநாயகம், சுவாமி விபுலாநந்தர், தனிநாயகம் அடிகள், ஆ.சதாசிவம் ஆகிய தமிழறிஞர்கள் பற்றிய விரிவான எட்டுக் கட்டுரைகளும், மேலும் 36 தமிழறிஞர் பற்றிய சிறு குறிப்புகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவர்களுள் பாவலர் துரையப்பாபிள்ளை, சி.கணேசையர், ஆறுமுக நாவலர், அ.செ.முருகானந்தன், இளங்கீரன், வரதர் (தி.ச.வரதராசன்), சிவசம்புப் புலவர், மாதகல் மயில்வாகனப் புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், ஈழத்துப் பூதந்தேவனார், மங்களநாயகம் தம்பையா, கவிஞர் அப்துல் காதிர்லெப்பை, மஹாகவி து.உருத்திரமூர்த்தி, சித்திலெப்பை, சி.வை.தாமோதரம்பிள்ளை, வ.அ.இராசரத்தினம், இணுவைச் சின்னத்தம்பிப் புலவர், அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவர், இலங்கையர்கோன், சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், அரசகேசரி, நந்தி, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப் புலவர், நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர், யாழ்ப்பாணம் பதுறுதீன் புலவர், சி.வி.வேலுப் பிள்ளை, சில்லையூர் செல்வராசன், கே.டானியல், நீலாவணன், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கே.கணேஷ், சுவாமி ஞானப்பிரகாசர், வித்துவான் F.X.C. நடராசா, கவிஞர் எம்.சி.எம்.சுபைர் ஆகிய பெரியார்கள் இடம்பெற்றுள்ளனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 200045).

9912

எழுத்தாளர் கல்கி. கா.பொ.இரத்தினம் (பதிப்பாசிரியர்). சென்னை 14: பழனியப்பா பிரதர்ஸ், 1வது பதிப்பு, ஏப்ரல் 1966. (சென்னை 14: செந்தமிழ் அச்சகம்).

(8), 120 பக்கம், தகடு, விலை: இந்திய ரூபா 2.50, அளவு: 18.5x12.5 சமீ.

மலாயாப் பல்கலைக்கழகக் கருத்தரங்கில் கல்கி- ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களது பன்முக இலக்கியஆளுமைகள் பற்றித் தமிழறிஞர் ஐவர் வழங்கிய உரைகளின் எழுத்துருவே இந்நூலாகும். உயர்நிலைப் பள்ளிப் படிப்பைக்கூட முற்றிலும் முடிக்காத தமிழ் எழுத்தாளர் கல்கியைப் பற்றி ஆங்கில மொழிக்கல்வியில் தேர்ந்து பட்டங்கள் பல பெற்ற ஐந்து பன்னாட்டுத் தமிழ் அறிஞர்கள் ஆராய்ந்து பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொண்ட ஆய்வுரைகள் இவை. மலேசியா, தமிழ் நேசன் பத்திரிகை ஆசிரியரும் மலாயாத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான முருகு சுப்பிரமணியம் (கல்கியின் பத்திரிகை உலகப்பணி),

இலங்கை அரசகரும மொழித்திணைக்களத்தின் ஓய்வுபெற்ற தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவரும், கொழும்பு தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவருமான கா.பொ. இரத்தினம் (கல்கியின் சிறுகதைகள்), மலாயாப் பல்கலைக்கழகப் பேராசிரியரான தமிழ்த்தூது தனிநாயக அடிகளார் (கல்கியின் வரலாற்று நாவல்கள்), சிங்கப்பூர் நாட்டு மொழி பண்பாட்டுக் கழகத்தின் தமிழ்ப் பகுதித் தலைவரரான வை. திருநாவுக்கரசு (கல்கியின் சமூக நாவல்கள்), கோலாலம்பூர் மலாயாப் பல்கலைக் கழக விரிவுரையாளரான ஈ.ச.விசுவநாதன் (கல்கியின் பொன்னியின் செல்வன்) ஆகிய ஐவரும் மலாயாப் பல்கலைக்கழகத்தில் இவ்வுரையை வழங்கியிருந்தனர். ஈழத்துத் தமிழறிஞரான பண்டிதர் கா.பொ.இரத்தினம், உலகத் தமிழ் மன்றத் தலைவராகப் பணியாற்றிய வேளையில் தொகுத்த நூல் இதுவாகும்.

9913

எனது இலக்கியத் தடம்: முதலாம் பாகம். தி.ஞானசேகரன். கொழும்பு 6: ஞானம் பதிப்பகம், 3B, 46வது ஒழுங்கை, 1வது பதிப்பு, டிசம்பர் 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

iv, 250 பக்கம், விலை: ரூபா 500., அளவு: 20x14 சமீ., ISBN: 978-955-8354-43-8.

ஞானம் பதிப்பகத்தின் 26ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள நூல். ஞானம் சஞ்சிகையின் ஆசிரியரான வைத்திய கலாநிதி தியாகராஜ ஐயர் ஞானசேகரன் அவர்கள் இந்நூல்வழியாகத் தனது இலக்கியப் பயணத்தை படிமுறையாக விளக்கிச் செல்கின்றார். முன்னர் ஜீவநதி இலக்கியச் சஞ்சிகையில் தொடராக இது வெளிவந்தது.

9914

கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தியின் இலக்கியத் தடங்கள். செ.யோகராசா. மட்டக்களப்பு: மட்/பன்குடாவெளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, பன்குடாவெளி, 1வது பதிப்பு, 2010. (அச்சக விபரம் தரப்படவில்லை).

20 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

மட்/பன்குடாவெளி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் நினைவுப் பேருரையாக நிகழ்த்தப்பட்ட உரையின் எழுத்து வடிவம் இதுவாகும். கலாநிதி செ.யோகராசா, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறைத் தலைவராவார். மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வியியலாளர்களுள் ஒருவரான கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி, வெற்றிமகன் என்ற பெயரில் இலக்கிய உலகில் அறியப்பெற்றவர். சைவ நீதியும் சமய வாழ்வும், பஞ்சாமிர்தப் பாகு, மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம், விவேகானந்த தத்துவ வித்துக்கள், ஆறாம் அறிவின் சிந்தனைக் கோவை போன்ற பல நூல்களை எழுதியவர்.

9915

கவிஞர் கம்பதாசன் வாழ்வும் பணியும். சிலோன் விஜயேந்திரன். சென்னை 4: அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ.எண் 617, மயிலாப்பூர், 1வது பதிப்பு, டிசம்பர் 1986. (சென்னை 17: T K Qulity Printers).

176 பக்கம், தகடுகள், விலை: ரூபா 15., அளவு: 17.5x12 சமீ.

தமிழகத்தின் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் திண்டிவனம் பகுதியில் உள்ள உலகாபுரம் கிராமத்தில் பிறந்த அப்பாவு என்ற இயற்பெயர் கொண்ட, கவிஞர் கம்பதாசன் (15.9.1916-23.5.1973) என்ற பெருங் கவிஞனை தமிழகமே மறந்துவிட்ட நிலையில் அவரது வாழ்க்கை வரலாற்றையும், அவரது மகத்தான கவித்திறனையும் காவியப் புலமையையும் முதன்முதலாக முழுமையாக அடையாளப்படுத்திய பெருமை ஈழத்தவரான கவிஞர் சிலோன் விஜயேந்திரனுக்கேயுரியது. கவிஞர் கம்பதாசன் வாழ்வும் பணியும், கம்பதாசன் குடும்பம், சென்னை விஜயம், பள்ளிப் படிப்பு, முதல் திரைப்படப் பிரவேசம், பாரதிதாசனும் கம்பதாசனும், திரைப்படப் பாடற் பணி, முற்போக்குச் சிந்தனையாளர் கம்பதாசன், கவிஞர் நோக்கில் கவிஞர், இசைமேதை நௌஷாத்தும் கம்பதாசனும், சித்ராவின் காதல், கம்பதாசனின் திரைப்படச் சாதனைகள், கம்பதாசனுக்கு வந்த சோதனைகள், கம்பதாசன் எழுதிய இலக்கிய நூல்களும் இன்றைய தலைமுறையினரும், கம்பதாசனின் இறுதி நாட்கள், பழகியோர் பார்வையில் கம்பதாசன், மக்கள் கவி கம்பதாசனின் முற்போக்கு முரசு, கம்பதாசனின் பல்துறைப் பாக்களும் அவற்றின் பாங்கும், கம்பதாசன் காவியத்திறன் (வேளை வந்தது, புத்தர் புனர் ஜென்மம், கனவு, காணிக்கை, இரத்த ஓவியம், கற்கனி), கம்பதாசன் இசைத்தமிழ் இன்பம், கவிதாதேவியை மறக்காத கம்பதாசன், நூல் முடிவுரை ஆகிய 22 இயல் தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 99806).

9916

குருகவி ம.வே.மகாலிங்கசிவம்: வரலாறும் ஆக்கங்களும். பா.மகாலிங்கசிவம். யாழ்ப்பாணம்: பட்டப்படிப்புகள் கல்லூரி, ஸ்ரான்லி வீதி, 1வது பதிப்பு, ஆவணி 2007. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், காங்கேசன்துறை வீதி).

xiii, 84 பக்கம், தகடுகள், விலை: ரூபா 150., அளவு: 20.5x15 சமீ.

நூலாசிரியர் மகாலிங்கசிவம் தனது தந்தையின் (புலவர் ம.பார்வதிநாதசிவம்) தந்தையாராகிய குருகவி ம.வே.மகாலிங்கசிவம் பற்றிய தகவல்களைக்கொண்டு தொகுத்துள்ள நூல் இது. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஈழ மண்டலச் சதகம் என்ற பிரபல நூலின் ஆசிரியரும், சிதம்பரத்தில் நாவலர் நிறுவிய பாடசாலையின் அதிபராகப் பணியாற்றியவருமான உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளையின் ஐந்து புதல்வர்களில் மூன்றாவது மகனே குருகவி ம. வே.மகாலிங்கசிவம். ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகப் பணியாற்றிய இவர் தனது பதினோராவது வயதில் பழனிப் பதிகம் பாடிய குருகவி ம.வே. மகாலிங்கசிவம், பண்டிதமணியின் வாயால் குருகவி என்று பெயர்பெற்றவர். இவரது ஆக்கங்களான பன்னிரு கவிதைகள், சிறுகதைகள் ஆகியனவும், குருகவி பற்றிய ஒன்பது கட்டுரைகள், நான்கு கவிதைகள் என்பனவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது அறிவையும் புலமையையும் அவர் காலத்திலேயே கண்டுணர்ந்த பல பெரியார்களின் எட்டுக் கட்டுரைகள் இத்தொகுப்பில் சிறப்பிடம் பெற்றுள்ளன. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், க.சி.

குலரத்தினம், மட்டுவில் கா.சிவபாலன், பண்டிதை அமிர்தாம்பிகை, வேலணை மருதையினார், புங்குடுதீவு கு.வி.செல்வத்துரை, முதலியோரின் பன்முகப்பட்ட கட்டுரைகளின் வழியே குருகவி ம.வே.மகாலிங்கசிவம் பற்றிய பல தகவல்களை இந்நூல்வழியாக அறியமுடிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 192417).

9917

சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம். சே.சோமசுந்தரம்பிள்ளை, சு.சிவபாதசுந்தரம் (மூலம்), வடகோவை அ.சிவகுருநாதன் (பதிப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: சபாபதி நாவலர் ஞாபக நிலையம், வடகோவை, 1வது பதிப்பு, ஜனவரி 1955. (சென்னை: வித்தியாநுபாலன யந்திரசாலை, நெ. 300, தங்கசாலை வீதி).

(2), 60 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x12.5 சமீ.

சபாபதி நாவலரின் மருமகனாகிய வடகோவை அ.சிவகுருநாதன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற இந்நூலில், சபாபதி நாவலர் பற்றி ஸ்ரீமத் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதிய குறிப்புரையுடன் தொடங்கும் முதலாவது கட்டுரையுடன், நாவலரை நேரில் கண்டு பழகிய திருமயிலை தமிழ்ப் பண்டிதர் அமரர் சே. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய வரலாற்றுக் கட்டுரையும், திராவிடப் பிரகாசிகைக்கு பேராசிரியர் சு.சிவபாதசுந்தரனார் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதி வழங்கப்பட்ட சபாபதி நாவலர் பற்றிய வரலாற்றுக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

9918

சுன்னாகத்தின் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள். சு.துரைசிங்கம். சுன்னாகம்: பாமா வெளியீடு, 118 ஸ்ரேசன் ஒழுங்கை, சுன்னாகம் கிழக்கு, 1வது பதிப்பு, ஜனவரி 2008. (சுன்னாகம்: கிருஷ்ணா பிரின்டர்ஸ், கலாநிதி சுப்பிரமணியம் வீதி).

40 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 60., அளவு: 19.5x13.5 சமீ.

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையமும் சிவன் முன்பள்ளியும் இணைந்து வழங்கிய ஆதரவில் உருவாக்கப்பட்டது இந்நூல். வரலாற்றாய்வாளர்களின் கருத்துப்படி சுன்னாகம், கந்தரோடையில் அநுராதபுரக் காலத்திற்கு முன்பே ஒரு நாகரீக வளர்ச்சி காணப்பட்டது. ஈழத்துப் பூதன்தேவனார் தொடக்கம், உலகத் தமிழ் வளர்ச்சியில் முன்னணி வகித்தவர்கள் ஈழத்தமிழர். யாழ்ப்பாணத்து அரசகேசரி, பரராசசேகரன் போன்றோருக்கும் பின் தமிழ் வளர்த்த ஊராக சுன்னாகமே கருதப்படுகின்றது. இந்நூலில் சுன்னாகத்தின் சிறப்பும், அதன் பெயருக்குரிய காரணமும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சுன்னாகம் தந்த இயற்கைப் புலவர்கள், கவிராயர்கள், பண்டிதர்கள் போன்றோரை இந்நூல் வெளிச்சத்துக்குக் கொண்டுவருகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 199041).

9919

செங்கை ஆழியானின் வாழ்வும் படைப்புகளும். *ரேணுகா பிரதீபகுமார் (தொகுப் பாசிரியர்). இரத்மலானை: கலாநிதி ரேணுகா பிரதீப்குமார், பிரணவம், 23/4ஏ, ரஜமாவத்தை, 1வது பதிப்பு, ஜனவரி 2007. (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).*

156 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22.5x14.5 *சமீ.*

செங்கை ஆழியானின் மணிவிழா 25.1.2001 அன்று நடந்தவேளையில் மணி விழா மலரை வெளியிடத் தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன. மணிவிழாவுக்கெனக் கட்டுரைகளைப் பெறாது, செங்கை ஆழியானின் பணிகள் குறித்துக் காலத்திற்குக் காலம் வெளிவந்த கட்டுரைகளைத் தொகுத்து, 31.12.2006 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில், அவரது அகவை 65 பாராட்டு விழா நடைபெற்ற வேளையில் இம்மலர் வெளியிடப்பட்டது. இதில் பல்வேறு பிரமுகர்களின் பார்வையில் செங்கை ஆழியானுடைய வாழ்வும் பணிகளும் பதிவுசெய்யப் படுகின்றன. சு.வித்தியானந்தன், நா.சுப்பிரமணியம், கனக செந்திநாதன், எஸ். பொன்னுத்துரை, அ.சண்முகதாஸ், கா.சிவத்தம்பி, டொமினிக் ஜீவா, சுந்தரம் டிவகலாலா, எஸ்.பத்மநாதன், அநு.வை.நாகராஜன், ஆ.கோகுலன், ஏ.ஜே. கனகரத்தினா, சிற்பி சிவசரவணபவன், பொ.பாலசுந்தரம்பிள்ளை, கே.எஸ். சிவகுமாரன், எஸ்.எம்.ஜே.பைஸ்தீன், து.வைத்திலிங்கம், தி.வேலாயுதம்பிள்ளை, செ.சிவஞானசுந்தரம், சிரித்திரன் சுந்தர், எஸ்.சிவலிங்கராஜா, இ.பாலசுந்தரம், பொ.சண்முகநாதன், சோ.பத்மநாதன், ம.இரகுநாதன், சு.சபாரத்தினம், கே. சிவராஜா ஆகியோர் பாராட்டுரை வழங்கியவர்களாவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 184412).

9920

த.ஆனந்தமயில் அவர்களது வாழ்க்கைப் பதிவுகள். *மலர்க்குழு. யாழ்ப்பாணம்: த.ஆனந்தமயில் குடும்பத்தினர், 1வது பதிப்பு, 2012. (யாழ்ப்பாணம்: குரு பிரின்டர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி).*

64 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 *சமீ.*

அமரர் த.ஆனந்தமயில் அவர்களின் மறைவின் 31ஆம் நாள் நினைவினையொட்டி வெளியிடப்பெற்ற நூல். இதில் அவரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாகத் தொகுக்கப்பட்டுள்ளது. புகைப்பட ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. அவரது படைப்புக்களான பக்திப் பாமாலைகள், சிறுவர் பாடல்கள் என்பவற்றுடன், "அம்மாவரை அவன்" என்ற அவரது குறுநாவலொன்றும் இடம்பெற்றுள்ளன. குறுநாவல், அவரது தாயின் மறைவு வரையான அவரது சொந்த வரலாற்றைப் பிரதிபலிக்கின்றது.

9921

நானோ இதற்கு நாயகமே: வாழ்வோவியம். *சிதம்பரபத்தினி (இயற்பெயர்: பத்தினியம்மா திலகநாயகம் போல்). யாழ்ப்பாணம்: திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போல், மெதடிஸ்ட் மிஷன் பாடசாலை வீதி, வண்.வடமேற்கு,*

ஆனைக்கோட்டை, 1வது பதிப்பு, டிசம்பர் 2012. (யாழ்ப்பாணம்: கரிகணன் பிரிண்டர்ஸ்).

x, *220 பக்கம், தகடுகள், விலை: ரூபா 600., அளவு:* 20.5x14 *சமீ.,* ISBN: 978-955-54502-2-8.

நூலாசிரியர் பத்தினியம்மா திலகநாயகம் போல் நாவல்-சிறுகதையாசிரியராகவும், கவிஞராகவும், கட்டுரையாசிரியராகவும் ஊடகங்கள் வாயிலாக அறியப்பெற்றவர். சமூக சேவை உதவி ஆணையாளராக, சிறுவர் நன்னடத்தை உதவி ஆணை யாளராக, வட கிழக்கு கல்வி பிரதிச் செயலாளராக, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக எனப் பல்வேறு பதவிகளையும் வகித்தவர். இந்நூல் இவரது வாழ்க்கைச் சரிதையாகும். கதைவழி வாழ்க்கை வரலாற்று நூலாக அமைந்துள்ள இச் சுயசரிதை பற்றிய அணிந்துரையில், யாழ். பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி, பேராசிரியர் வி.பி.சிவநாதன் "எல்லாவற்றுக்கும் மேலாய் இணை பிரியாதவர்களாக இருப்போம் என்ற உணர்ச்சிச் சபதம், கணவனை இழந்தபோது பரிதவிக்கும் உள்ளமாக -நானோ இதற்கு நாயகமே என்ற இந்நூல் அமைந்துவிட்டது. இது ஒரு புதிய நாவல் வடிவமாக கதைகூறும் இலக்கியமாகிவிட்டது" என்று குறிப் பிடுகின்றார். பெண்கள் தமது பாதுகாப்பையும் வளர்ச்சியையும் மற்றவர்களின் பொறுப்பில் விடாமல் தாமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்ற நெறியை இவரது வாழ்வின் படிப்பினையாக இந்நூல் புகட்டுகின்றது.

9922

நினைவலைகள். *நீர்வை பொன்னையன்.கொழும்பு: இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம், 1வது பதிப்பு, ஜுன் 2012. (கொழும்பு 6: ஆர்.எஸ்.ரி.என்டர் பிரைஸஸ், 114, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்தை).*

355 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14.5 *சமீ.,* ISBN: 978-955-1810-19-1.

முற்போக்கு அரசியல் களத்திலிருந்து எழுத்துத் துறைக்குள் பிரவேசித்தவர் நீர்வை பொன்னையன். தனது அரசியல், கலை, இலக்கியச் செயற்பாடுகளில் தன் நினைவுத்தடத்தில் உள்ளவற்றில் சிலவற்றை இந்த நூலில் தந்துள்ளார்.

9923

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. *செ.யோகராசா. கொழும்பு 6: தமிழ்ச்சங்கம், இல.7, 57வது ஒழுங்கை, உருத்திரா மாவத்தை, 1வது பதிப்பு, டிசம்பர் 2007. (அச்சக விபரம் தரப்படவில்லை)*

ii, *150 பக்கம், தகடு, விலை: ரூபா 150., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-8564-15-8.

இலக்கிய ஆய்வாளர் வரிசையில் முக்கிய இடம்பெற்ற பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை (1899-1986) மரபுவழியில் தமிழ் இலக்கியத்தைச் செழுமைப்படுத்தியவர். அவர் பற்றிய எளிமையான அறிமுகமாக இந்நூல் அமைகின்றது. காலமும் சூழலும், வாழ்க்கை வரலாறு, இலக்கியம், சமயம், கல்வி, வகிபாகம் ஆகிய அத்தியாயங்களில் விரியும் இந்நூல் அடிக்குறிப்பு, பின்னிணைப்பு என்பவற்றையும்

கொண்டது. நூலாசிரியர், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளராவார். இலங்கைத் தமிழர் வாழ்வும் வகிபாகமும் தொடரில் தமிழ்ச்சங்க வெளியீடாக வரும் நான்காவது நூல் இதுவாகும்.

9924

மட்டக்களப்பில் கண்ணதாசன். சிதம்பரப்பிள்ளை தர்மகுலசிங்கம். மட்டக்களப்பு: சுவைத்திரள் வெளியீடு, 481, பார் வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 2003. (மட்டக்களப்பு: வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி).

vi, 64 பக்கம், புகைப்படம், விலை: (விசேட பதிப்பு) ரூபா 200., (சாதாரண பதிப்பு) ரூபா 100., அளவு: 20x14.5 சமீ.

கவிஞர் கண்ணதாசனின் நினைவுதினம் 17.10.2003 அன்று நினைவுகூரப்பட்ட வேளையில் கண்ணதாசன் பற்றி ஆசிரியர் பல்வேறு காலகட்டங்களில் எழுதிப் பிரசுரமான 21 கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை வெளியிட்டுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையும் கண்ணதாசனும், மட்டக்களப்பில் கண்ணதாசன், ஆத்திகனாக கவிஞர் கண்ணதாசன், நளவெண்பாவும் கண்ணதாசனும், திரைப்படப் பாடல்களில் முன்னணியில் கண்ணதாசன், காவியமாமணி அகளங்கனின் கருத்தியல், தென்றலையும் வாடையையும்.., கம்பனும் கண்ணதாசனும், இளங்கோ அடிகளும் கண்ணதாசனும், வள்ளலாரிடம் பாடல் ரியூன், கண்ணதாசனின் கவிதை அழகு, விக்டர் ஹியூகோவும் கண்ணதாசனும், திறமைகளை வரவேற்று அஞ்சலித்த கண்ணதாசன், இயேசு காவியம் படைத்த சாதனையாளர், யாத்ராவும் கவிஞர் கண்ணதாசனும், திருவள்ளுவரும் கண்ணதாசனும், கவிஞர் வைரமுத்துவும் கண்ணதாசனும், கண்ணதாசனின் அழகான தமிழ்நடை, கேள்வி-பதிலில் கண்ணதாசன், நினைவுக்குள் நீந்ததும் கவிஞரின் வரிகள், கவிஞர் கண்ணதாசனுக்கு இதய அஞ்சலி ஆகிய 21 தலைப்புகளில் இக்கட்டுரைகள் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 137161).

9925

மறுமலர்ச்சி தந்த பஞ்சாட்சரம். ப.சிவானந்த சர்மா (தொகுப்பாசிரியர்). சுன்னாகம்: சர்வானந்தமய பீடம், இணுவில், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013.(இணுவில்: கஜானந்த் பிறின்டேர்ஸ், மானிப்பாய் வீதி).

152 பக்கம், புகைப்படம், விலை: ரூபா 400., அளவு: 25x17.5 சமீ.

அமரர் பிரம்மஸ்ரீ ச.பஞ்சாட்சர சர்மா அவர்கள் இலங்கையின் ஆரம்பகாலச் சிறந்த சஞ்சிகையான மறுமலர்ச்சியின் ஆசிரியராக இருந்தவர். அவரது வாழ்க்கை வரலாறு, பணிகள், ஆக்கங்கள், வம்ச வரலாறு யாவற்றையும் இந்நூலில் தொகுத்துத் தந்திருக்கிறார் அவரது மகனான கோப்பாய் சிவம் (ப.சிவானந்த சர்மா). பிரம்மஸ்ரீ பஞ்சாட்சர சர்மாவின் 50 ஆக்க இலக்கியக் கட்டுரைகள், அவர் பற்றிய பிற அறிஞர்களின் விதப்புரைகள், அவரது ஆக்க முயற்சிகளின் பட்டியல், சமூகப் பங்களிப்புகள், அவருக்குப் பிரமுகர்கள் எழுதிய கடிதங்கள் போன்றவையும் இந்நூலில் அடங்கியுள்ளன.

9926

மனுவல் ஜேசுதாசன் மணிவிழா மலர். இ.பாலசுந்தரம் (மணிவிழா மலர் ஆசிரியர்). கனடா: மனுவல் ஜேசுதாசன் மணிவிழாக் குழு, 1வது பதிப்பு, மே 2008. (கனடா: ஜே.ஜே.பிரின்ட்).

(2), 84 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x13.5 சமீ.

தொன்னூறு நாட்களுள் என்ற நாவலின் ஆசிரியர் மனுவல் ஜேசுதாசன், ஆர். என்.லோகேந்திரலிங்கம் மணிவிழா மலரின் மலராசிரியராகவும் பணியாற்றியவர். கனடாவில் ஸ்கார்பரோவில் வாழும் இப்படைப்பாளியின் மணிவிழாவை முன்னிட்டு இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. மணிவிழாக் குழுவில் திரு.பொ. கனகசபாபதி, கவிஞர் வி.கந்தவனம், திரு.கதிர் துரைசிங்கம், பேராசிரியர் இ.பாலசுந்தரம், திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கம், திரு.எஸ்.ஜே.சோதி, திரு. வே.இந்திரசிகாமணி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6331).

9927

வாரித் தமிழ் வழங்கும் வள்ளல் பண்டிதர் மு.ஆறுமுகன் நூற்றாண்டு விழா மலர் 1914-2014. தமிழரசி சிவபாதசுந்தரம் (பதிப்பாசிரியர்). லண்டன்: தமிழரசி சிவபாதசுந்தரம், 18 Elms Gardens, Harrow, HAO 2RU, 1வது பதிப்பு, 2014. (லண்டன்: ஜே.ஆர். அச்சகம்).

224 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14 சமீ.

பண்டிதர் மு.ஆறுமுகனார் அவர்களின் நூற்றாண்டு நினைவாக அவரது மகளான தமிழரசி சிவபாதசுந்தரம் அவர்கள் தொகுத்து வழங்கியுள்ள மலர். தொடுத்த முத்துக்கள் என்ற பிரிவில் பண்டிதர் மு.ஆறுமுகன் எழுதிய 30 கட்டுரை, பாமலர்ப் படைப்புக்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. பண்டிதர் மு.ஆறுமுகனார் பற்றிப் பல்வேறு அறிஞர்களும் வழங்கிய கருத்துக்கள் 23 தலைப்புக்களில் இரண்டாவது பிரிவில் இடம்பெற்றுள்ளன. பண்டிதர் ஆறுமுகனார் புங்குடுதீவின் முதற் பண்டிதர் என்ற பெருமைக்குரியவர். புங்குடுதீவின் முத்துடையார் வழித் தோன்றலான நீலயினார் முத்துக்குமார் அவர்களுக்கும் ஆறுமுகம் நாகம்மை அவர்களுக்கும் ஐந்தாவது மகனாக 12.3.1914இல் பிறந்தவர். தனது 18ஆவது வயதில் 1932இல் பயிற்சிபெற்ற ஆசிரியரானவர். அவரது வாழ்வும் பணியும் இந்நூலின் படைப்புக்களின் வாயிலாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

940 ஐரோப்பிய வரலாறு

9928

ஐரோப்பா தேச வரலாற்றுக் குறிப்புகள்: க.பொ.த.உயர் தரத்திற்குரியது. கார்த்திகேசன் கமலநாதன். சாவகச்சேரி: தபனியா வெளியீட்டகம், தபனி வாசா, மீசாலை கிழக்கு, மீசாலை, 1வது பதிப்பு, பங்குனி 2009. (சாவகச்சேரி: ஆதவன் பக்க வடிவமைப்பு, ஐயா கடையடி, சாவகச்சேரி வடக்கு).

xvi, 104 பக்கம், விலை: ரூபா 180., அளவு: 20x14.5 சமீ.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி வரலாற்று ஆசிரியரான சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் சி.கா.கமலநாதன், தென்மராட்சி வரணி மாசேரிக் கிராமத்தில் 29.9.1971இல் பிறந்தவர். 1991இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையில் இணைந்து பட்டம் பெற்றவர். ஐரோப்பிய நாடுகளையும், அந்நாடு களுடன் தொடர்பான நதிகள், கடல்களையும் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை இந்நூல் 75 தலைப்புகளின்கீழ் தாங்கி வெளிவந்துள்ளது. நெதர்லாந்து, நேப்பிள்ஸ், பசுபிக் சமுத்திரம், சுவீடன், உரோம் எனத் தொடரும் தலைப்புக்களின் கீழ் இத்தகவல்கள் பதியப்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 205684).

954.93 இலங்கை வரலாறு

9929

இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை. கந்தையா குணராசா, கமலா குணராசா. யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 75/10A, பிறவுன் வீதி, 1வது பதிப்பு, ஏப்ரல் 2008. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

vi, 340 பக்கம், விளக்கப்படங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 600., அளவு: 22x14 சமீ., ISBN: 978-955-1624-06-4.

இலங்கையின் வரலாற்றை ஆதிக் குடியேற்றங்களிலிருந்து தொடங்கி இந் நூலில் எளிய நடையில் வழங்கியுள்ளார்கள் செங்கை ஆழியான் க.குணராசாவும் அவரது துணைவியாரும். சிங்கள மக்களின் வரலாற்றைக்கூறும் ஆவணங்களான மகாவம்சம், சூளவம்சம் மற்றும் இது சார்ந்த ஏனைய இலக்கியப் பனுவல்களும், யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை விபரிக்கும் யாழ்ப்பாண வைபவ மாலை, வையாபாடல் என்பனவும், முத்துத்தம்பிப்பிள்ளை முதலாக சுவாமி ஞானப் பிரகாசர் வரை ஆக்கிய வரலாற்று நூல்களும், நவீன வரலாற்று ஆசிரியர்களது கருத்துக்களும் கவனத்திற்கு எடுக்கப்பட்டு இலங்கைச் சுருக்க வரலாறு ஆக்கப்பட்டுள்ளது. இலங்கையின் ஆதிக் குடிகளும் ஆரம்பக்குடியேற்றங்களும், இலங்கையின் வரலாற்று உதயகால மன்னர்கள், இலங்கையின் புகழ்பூத்த மன்னன் தேவநம்பியதீசன், சேனன், குத்திகன், எல்லாளன் -தமிழ் மன்னர்களின் ஆட்சி, துட்டகாமினி மன்னன், துட்டகாமினிக்குப் பின்னர், மகாசேனன், ஸ்ரீமேக வண்ணன், தாதுசேனனும் காசியப்பனும், அக்கபோதி மன்னர்கள், மானவர்மன் பரம்பரையினரின் ஆட்சி, உத்தரதேசமும் உக்கிரசிங்கனும், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆட்சியும் அதன் பின்னரும், சோழராட்சியில் இலங்கை, விஜயபாகு மன்னன், மகா பராக்கிரமபாகு, நிசங்கமல்லன், கலிங்கத்து மாகன், யாழ்ப்பாண இராஜதானி, தென்புலம் பெயர்ந்த தலைநகர்கள், கோட்டை இராஜதானியும் கண்டி இராஜ தானியும், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், சுதந்திர இலங்கை ஆகிய 25 அத்தியாயத் தலைப்புகளில் இந்நூல் விரிகின்றது.

9930

இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்: கி.பி. 700-1300. சி.பத்மநாதன். கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, நவம்பர் 2006. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

Lii, iv, 584 பக்கம், விலை: ரூபா 1000., அளவு: 23x14.5 சமீ., ISBN: 955-9233-10-6.

இந்நூல் இலங்கையில் 13ஆம் நூற்றாண்டு இறுதி வரை எழுதப்பட்ட தமிழ்ச் சாசனங்களைப் பற்றியது. இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய மூலங்களிலே சாசனங்கள் முதன்மையானவையும் பிரதானமானவையுமாகும். அவற்றுட் பெரும்பாலானவற்றின் வாசகங்களும் அவற்றைப் பற்றிய விளக்கங்களும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்களும் பூர்வாங்க வெளியீடுகளும், அனுராதபுர காலத்துச் சாசனங்கள், சோழர் காலத்துச் சாசனங்கள், பொலன்னறுவைக் காலத்துச் சாசனங்கள் -1: பிரமதேயங்களின் சாசனங்கள், பொலன்னறுவைக் காலத்துச் சாசனங்கள் -2, பொலன்னறுவைக் காலத்துச் சாசனங்கள் -3: படைவீரரின் சாசனங்கள், பொலன்னறுவைக் காலத்துச் சாசனங்கள் -4: அரசரின் பிரகடனங்களும் கோயிற் சாசனங்களும் ஆகிய பிரதான ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 199508).

9931

இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு. ரொபர்ட் நொக்ஸ் (மூலம்), திருவேணி சங்கமம் (தமிழாக்கம்), சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xliv, 328 பக்கம், விலை: ரூபா 550., அளவு: 23x15 சமீ.

An Historical Relation of the Island Ceylon என்ற தலைப்பில் பிரித்தானியரான ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) என்பவரால் அவரது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட சமகால கண்டி இராச்சியம் பற்றிய நூலின் தமிழாக்கம் இதுவாகும். கண்டி இராச்சிய மன்னன், அவனது அரசாங்கம், அங்கு வாழ்ந்த மக்கள், அவர்களது வழமைகள், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள், விவசாய முறை, உற்பத்தியாகும் உணவு தானியங்கள், கைவினைப் பொருட்கள், மந்தைகள், வீட்டு வளர்ப்புப் பறவைகள், வனங்களிலும் வயல்களிலும் நீர்நிலைகளிலும் சஞ்சரிக்கின்ற பறவைகள், காட்டு மிருகங்கள், புல் பூண்டு வகைகள், மரஞ்செடிகள், மருந்து மூலிகைகள், மருத்துவ முறைகள், காய்கனி வர்க்கங்கள், சுவாத்திய நிலைகள், நிலவளம், நீர்வளம் ஆகிய பல்வேறு விடயங் களைத் தரும் நூலாக இது அமைகின்றது. கிழக்கிந்திய வர்த்தக கம்பெனியின் கப்பலொன்றின் அதிபராகவிருந்த தந்தையாருடனும் வேறு சில பிரித்தானிய அலுவலர்களுடனும் வாணிபநோக்கில் இலங்கை வந்தவர் ரொபர்ட் நொக்ஸ். கொட்டியாராத் துறைமுகத்திலே இவர்களது கப்பல் தரையிறங்கியது. இவர்கள் கண்டி அரசனான இரண்டாம் இராஜசிங்கனின் கட்டளைப்படி ஒற்றர்களாகக்

கருதிக் கைதுசெய்யப்பட்டார்கள். இருபது ஆண்டுகள் திறந்தவெளிச் சிறைக் கைதியாகவிருந்த பின்னர் ரொபர்ட் நொக்ஸ் நுவரகலாவிய ஊடாகத் தப்பியோடித் தமிழர் வாழும் வன்னிப் பிரதேசத்துக்கு வந்துவிடுகிறார். அங்கு சிலரின் உதவியுடன் ஒல்லாந்தரை அடைந்து அவர்களின் உதவியுடன் நாடு திரும்புகின்றார். அவ் வேளையில் தனது கண்டி இராச்சிய அனுபவங்களை இந்நூலாக ரொபர்ட் நொக்ஸ் எழுதிவைத்திருக்கிறார்.

9932

இலங்கையின் சுருக்க வரலாறு. எச்.டபிள்யூ. கோடிறின்றன் (ஆங்கில மூலம்), இ.இரத்தினம் (தமிழாக்கம்). கொழும்பு: அரசகரும மொழி வெளியீட்டுக் கிளை, திருத்திய 2வது பதிப்பு, 1939. (கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சகம்).

xviii, 182 பக்கம், வரைபடம், விளக்கப் படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

லண்டன் மாக்மிலன் கம்பெனி வெளியீடாக முன்னர் வெளிவந்த ஆங்கில மூல நூலின் தமிழாக்கம் இதுவாகும். மூல நூலாசிரியர் எச்.டபிள்யூ. கோடிறின்றன் முன்னை இலங்கையின் குடிச்சேவையினராவார். முன்னைநாள் இலங்கைத் தொல்பொருளியல் ஆணையாளர் ஏ.எம்.ஒகாது அவர்கள் எழுதிய தொல் பொருளியல் பற்றிய 12ஆவது அதிகாரத்தையும் உள்ளடக்கியது. தொடக்கம்: இலங்கை பௌத்தத்தைத் தழுவல், துட்டகாமனியிலிருந்து சீகிரிய காசபன் வரை கி.மு.3ஆம் நூறிலிருந்து கி.பி. 6ஆம் நூறு வரை, பதினொராம் நூற்றாண்டில் நடந்த சோழர் வெற்றிவரை உள்ள நடுக்கால அரசாட்சி, பொலநறுவை மன்னர் 1070-1215, தம்பதெனிய, கம்பளை மன்னர்கள் 1215-1412, கோட்டைக் குல முறையும் அதன் போர்த்துக்கேய நேயரும் 1412-1551, சீதாவகையினதும் போர்த்துக் கலினதும் எழுச்சி 1551-1635, போர்த்துக்கேயர் ஆணையின் வீழ்ச்சி 1635-1656, இடச்சுக்காரர் வெற்றி 1656-1796, பிரிட்டிசார் பாலனம் 1796-1805, பிரிட்டிசார் பாலனம் 1805-1833, தொல்பொருளியல் : 1833இன் பின் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் ஆகிய 12 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 14181).

9933

ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு. ஆறுமுகம் சின்னத்தம்பி. வரணி: வித்துவான் ஆறுமுகம் சின்னத்தம்பி, தம்பான், வரணி வடக்கு குறிச்சி, 1வது பதிப்பு, ஜுன் 1994. (கரவெட்டி: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி).

viii, 148 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

வரணியூர் பண்டித வித்துவான் ஆ.சின்னத்தம்பி இயற்றிய இந்நூல், பண்டைய இலக்கிய நூல்களின் ஆதாரங்களுடன் ஈழநாடு ஒரு காலத்தில் குமரிக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது எனவும், அது பின்னர் ஏற்பட்ட கடல்கோள் காரணமாகத் தனித் தீவாகியது எனவும், குமரிக்கண்டத்து மக்கள் தமிழரே என்பதால் ஈழத்து மக்களும் தமிழரே எனவும் நிறுவ முற்படுகின்றார். "பஃறுளியாற்றுடன் பன்மலை

யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள" என்னும் சிலப்பதிகாரச் செய்யுளடி மூலம் குமரி எனப் பெயர் வழங்கப்பெற்ற ஒரு பெரிய மலையும் பஃறுளியாறும் கடலுக்குள் அமிழ்ந்தன எனக் காண்கிறார். இக்கடல் கோள் காரணமாகவே குமரிக்கண்டம் சிதைவுற்று தமிழ் நாட்டின் தென் கோடியில் ஈழம், இராமேஸ்வரம் உள்ளிட்ட தீவுகள் ஏற்பட்டன எனக் குறிப்பிடுகிறார். தொல்லியல் ஆதாரங்களன்றி, வரலாற்றுத் தரவாக இந்நூலில் இலக்கியச் சான்றுகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. பூர்வகாலம்: குமரிநாடும் ஈழமும், சங்ககால ஆரம்பம், ஈழமும் வரலாறும், விசயன் வருகையும் ஸ்ரீலங்காவும், படை எழுச்சிகளும் விளைவும், கலிங்க மாகன் படைஎழுச்சி, ஈழமும் தமிழர் ஆதிக்கமும் ஆகிய ஏழு இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பண்டிதர் இ.நவரத்தினம் எழுதிய நூலாசிரியர் வரலாறு நூலின் முகவுரையாகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 105206).

9934

எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது. ரோஹண விஜேவீர (சிங்கள மூலம்), மக்கள் விடுதலை முன்னணி (தமிழாக்கம்). கொழும்பு 10: நியமுவா வெளியீடு, வெளியீட்டுப் பிரிவு, மக்கள் விடுதலை முன்னணி, 198/19, பஞ்சிகாவத்தை வீதி, 1வது தமிழ்ப் பதிப்பு, ஓகஸ்ட் 2007.(அச்சக விபரம் தரப்படவில்லை).

xxii, 168 பக்கம், விலை: ரூபா 200., அளவு: 21x14 சமீ.

ஜே.வி.பி.இயக்கத்தின் தலைவர் தோழர் ரோஹண விஜேவீர (Patabendi Don Nandasiri Wijeweera – 14.7.1943-13.11.1989) அவர்கள் ஏப்ரல் 1971 கிளர்ச்சியின்போது கைதுசெய்யப்பட்டவர்களை விசாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட குற்றவியல், நீதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சமர்ப்பித்த வரலாற்று சிறப்புமிக்க அறிக்கை இதுவாகும். இந்நூலின் சிங்கள மூலமான முதற்பதிப்பு ஒக்டோபர் 1977இல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து ஏப்ரல் 1978, மே 2003, ஓகஸ்ட் 2007 ஆகிய காலங்களில் மீள்பதிப்புக்குள்ளானது. ஆகஸ்ட் 2007 சிங்கள மூலநூல் தனது ஐந்தாம் பதிப்பைக் கண்ட வேளையில் அதன் தமிழ்மொழிபெயர்ப்பும் வெளியிடப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 48438).

9935

பண்டைய ஈழம்: வரலாற்று விளக்கம். வே.க.நடராசா. யாழ்ப்பாணம்: சேது நூலக வெளியீடு, 1வது பதிப்பு, ஆனி 1966. (யாழ்ப்பாணம்: தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி-கரவெட்டி).

(6), 184 பக்கம், வரைபடம், விலை: ரூபா 3.75, அளவு: 21.5x14 சமீ.

ஆரியர் வருகை, பௌத்தம் பரவியமை, மௌரிய நாகரிகத்தின் பாதிப்பு, துட்ட காமணி, வட்டகாமணி, மகாசேனன், குப்தப் பண்பாட்டின் செல்வாக்கு, தாதுசேனன், பல்லவப் பண்பாட்டின் செல்வாக்கு, வசபன், ஸ்ரீமேகவண்ணன், காசியப்பன், சிலாகாலன், மகாயான பௌத்தம் பரவியமை, இரண்டாம் மொகல்லானன், அக்கிரபோதி மானவர்மன், தென்னிந்திய அரசியற் தொடர்புகளும்

விளைவுகளும், சோழராட்சியின் விளைவுகள், இறுதிக்கால அனுராதபுர மன்னர்கள், அனுராதபுரக்கால அரசியல்முறை, பாசன வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, கட்டிடத்துறை வளர்ச்சி, விஜயபாகுவும் விடுதலை இயக்கமும், விஜயபாகுவின் ஆட்சி, மகாபராக்கிரமபாகு இலங்கை அரசனாதல், அவனது சாதனைகள், வெளிநாட்டுப் போர்கள், அவனது பாசனப்பணிகள், நிசங்க மல்லன், பொலன்னறுவையின் வீழ்ச்சி, பொலன்னறுவைக்கால பொருளியல் வளர்ச்சி, பௌத்தத்தின் வளர்ச்சி, கட்டிடக்கலை வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி, தம்பதெனிய அரசின் வீழ்ச்சி, தம்பதெனிய-கம்பளைக்கால இலக்கிய வளர்ச்சி, யாழ்ப்பாண இராச்சியம், ஆறாம் பராக்கிரமபாகு, இடைக்காலப் பொருளியல் நிலைமைகள், பௌத்த கலை வளர்ச்சி ஆகிய முக்கிய வரலாற்று அறிவினை 41 இயல்களின் இந்நூல் வழங்குகின்றது. தேர்வு, மாதிரி வினாத்தாள்கள் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 13878).

9936

மகாவம்சம் ஒரு மீளாய்வு. தம்பு கனகசபை. கனடா: தம்பு கனகசபை, 1வது பதிப்பு, 2013. (கனடா: பாஸ்ட் பிரின்ட்).

83+75 பக்கம், விலை: ரூபா 400., அளவு: 21x14 சமீ.

இந்நூல் மகாவம்சம் பற்றி தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் Mahavamsa a Review என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ளது. மகாவம்சம், தீபவம்சம், அட்டகதா ஆகியவைகளின் விபரங்களை ஒழுங்குடன் உள்ளடக்கி கவிதை வடிவில் பாளி மொழியில் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் மகாநாமதேரரினால் எழுதப்பட்ட நிகழ்வேடாகும். கி.மு.483 இலிருந்து கி.பி.362 வரையிலான காலத்து சிறிலங்காவின் விபரங்களை இந் நூல் கொண்டுள்ளது.

954.93(1) இலங்கை வரலாறு-பாடநூல்கள்

9937

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்: முதலாம் பாகம்: கி.பி.1505 வரை. மு.இளையதம்பி. காரைநகர்: மு.இளையதம்பி, சரித்திர ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி, 5வது பதிப்பு, 1968, 1வது பதிப்பு, 1955, 2வது பதிப்பு, 1957, 3வது பதிப்பு, 1961, 4வது பதிப்பு, 1967. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(5), 127 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 2.25, அளவு: 17.5x12.5 சமீ.

இந்நூலின் இரண்டாம் பாகம் 1505-1796 காலகட்டத்துக்குரிய வரலாற்றை விளக்கி எழுதப்பட்டிருந்தது. பின்னர் 1955இல் இந்த முதலாம் பாகம் வெளிவந்துள்ளது. கி.பி. 1505 வரையுள்ள இலங்கைச் சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் இலகுவான வசன நடையில் ஆசிரியர் எழுதி

யுள்ளார். ஒவ்வொரு அத்தியாயத்தின் கீழும் அப்பியாசங்களும் வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. பூர்வீக இலங்கை, சிங்களரின் வருகை, பௌத்த சமயமும் அது இலங்கைக்கு வந்த வரலாறும், தமிழரின் வருகை, எல்லாளனும் துட்டகை முனுவும், கீர்த்திபெற்ற சிங்கள மன்னர்கள், குப்தர் ஆளுகையும் இலங்கையி லேற்பட்ட கலை வளர்ச்சியும், நிர்வாக அமைப்பும் வாழ்க்கை முறையும், சிங்கள அரசர்கள் (கி.பி 460-496), யாழ்ப்பாணம், தென்னிந்தியாவில் பல்லவரின் ஆட்சி, இலங்கையில் சோழ அரசர்களின் ஆதிக்கம், சோழ அரசர்களுக்குப் பின் ஆண்ட சிங்கள அரசர்கள், நிர்வாக முறையும் மக்களின் வாழ்க்கையும், பிற்காலச் சிங்கள அரசர்களும் சிங்கள அரசின் வீழ்ச்சியும் போன்ற இன்னோரன்ன தலைப்புகளில் இந்நூலில் வரலாறு விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியர் யாழ்ப்பாணம் கொட்டடியில் வசித்தவர்.

9938

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்: 1800-இக்காலம்: ஏழாம் வகுப்புக்கேற்றது. எஸ்.எப்.டி.சில்வா. கொழும்பு: ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கம்பெனி, 111, டாம் வீதி, 1வது பதிப்பு, 1954. (கொழும்பு: G.P.D.Jinadasa and Sons Printing Works, 279, டாம் வீதி).

312 பக்கம், வரைபடம், விலை: ரூபா 3.00, அளவு: 18.5x12 சமீ.

பிரித்தானிய பரிபாலனத்தில் கரையோர மாகாணங்கள், பிரித்தானிய பரிபாலனத்தில் இலங்கை ஒன்றாதல், விவசாயமுறை மாற்றங்களும் அபிவிருத்தியும், பிரித்தானியர் காலத்தில் அரசியல் அதிகார அபிவிருத்தி, தேசோத்தாரண சேவைகள், இக்கால உலகம், பொருளாதாரப் புரட்சி, மகா அரசியற் புரட்சிகள், நெப்போலியனின் ஆட்சியில் பிரான்சீய சாம்ராச்சியம், தேசிய இன உணர்ச்சி விருத்திக்காலம் 1815-1848, பிரித்தானிய பொதுநலவமைப்பு, ஆசியாவில் தேசிய இன உணர்ச்சி வளர்தல், ஐக்கிய அமெரிக்கா வல்லரசாக வந்தமை, முதலாவது உலக மகா யுத்தம், புதிய முறை அரசாங்கங்களின் தோற்றம், இரண்டாவது உலகமகா யுத்தம் ஆகிய 16 தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. நூலாசிரியர் எஸ். எப்.டி.சில்வா உதவி வித்தியாதிபதியாக இலங்கையில் பணியாற்றியவர். (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 217911).

9939

இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பிய சரித்திரமும் கி.பி.1453-1796: ஜீ.சீ.ஈ. வகுப்புக் குரியது. மு.இளையதம்பி. யாழ்ப்பாணம்: மு.இளையதம்பி, ஓய்வுபெற்ற துணை அதிபர், காரைநகர் இந்துக் கல்லூரி, 1வது பதிப்பு, 1969. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், 234, காங்கேசன்துறை வீதி).

(4), 396 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 6.50, அளவு: 21x14.5 சமீ.

பயிற்றப்பட்ட ஆங்கில முதலாம் தராதரப் பத்திரம்பெற்ற ஆசிரியரான இளைய தம்பி எழுதிய இந்நூல், கி.பி.1453க்கும் 1796க்கும் இடைப்பட்ட காலப் பகுதியிலுள்ள இலங்கைச் சரித்திரத்தின் போர்த்துக்கீசர் கால (1505-1658),

ஒல்லாந்தர்கால (1658-1796) வரலாற்றையும், அதே காலத்தில் (1453-1796) உலகத்தின் ஏனைய பாகங்களில் ஏற்பட்ட சம்பவங்களையும் எடுத்துக்கூறுகின்றது. ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களும் தேசப்படங்களும் ஏனைய படங்களும் இந்நூலை ஒரு தரமான பாடநூலாகக் காட்டுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 85112).

9940

நம் முன்னோரளித்த அருஞ்செல்வம் 3: இலங்கைச் சரித்திரம்: 1796ம் ஆண்டு துவக்கம் இக்காலம் வரை. ஜீ.சீ.மெண்டிஸ் (ஆங்கில மூலம்), நவாலியூர் சோ.நடராஜன் (தமிழாக்கம்). கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை, 1வது பதிப்பு, 1945. (கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரீஸ் கம்பெனி, குமார வீதி, கோட்டை).

iii, 56 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னரான காலகட்டத்து இலங்கை வரலாறு இந்நூலில் மூன்று பிரிவுகளின்கீழ் சுருக்கமாக விபரிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிக்கப்படல் 1796-1837 என்ற முதற்பிரிவில் உள்ள நான்கு அத்தியாயங்களில், பிரிட்டிஷார் வந்த காலத்தில் இலங்கையின் நிலைமை (கண்டி ராச்சியத்தின் அரசாங்க நிலை, டச்சுக் கிழக்கிந்திய கம்பெனி அரசாங்கம், கிராம வாழ்க்கை), கண்டி ராச்சியத்தின் வீழ்ச்சி (கண்டிக்கு எதிராக நடந்த முதல் யுத்தம், கண்டியைக் கைப்பற்றுதல், கண்டிக் கலகம் 1817-1818), இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி பலப்படுதல் (கோட்டைகள், வீதிகள், பிரதானிகளும் சிவில் சேர்விசும், புத்த சமயம்), தற்காலத்துக்கேற்ற அரசாங்க முறை உருவாகுதல் (கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி, முடிக்குரிய குடியேற்ற நாட்டரசாங்கம் 1802-1832, கோல்புரூக் சீர்திருத்தம், நீதிமன்றச் சீர்திருத்தம், சமூகச் சீர்திருத்தம், இராசகாரியம் ஒழிதல்) ஆகிய விடயங்கள் விரிவாக விளக்கப் பட்டுள்ளன. நாட்டின் அபிவிருத்தி என்ற இரண்டாம் பிரிவில் உள்ள மூன்று அத்தியாயங்களிலும் தோட்டங்கள் திறத்தல், நீர்ப்பாசன முறைகளைப் புனருத் தாரணஞ்செய்தல், போக்குவரத்துச் சாதனம், தோட்டங்கள் திறந்ததால் உண்டான வேறு பயன்கள் ஆகிய விடயங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. சமூக அரசியல் சீர்திதருத்தங்கள் என்ற மூன்றாவது பிரிவில் தலைமைக்காரரும் குடிகளும், மத்திய வகுப்பினர், அரசியல் சீர்திருத்தம் ஆகிய மூன்று இயல்களில் விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102484).

9941

நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்: மூன்றாம் பாகம்: இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும். ஜீ.ஸி.மெண்டிஸ், எஸ்.ஏ.பேக்மன். கொழும்பு: கொழும்பு அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிற்றெட், 84, பிரதான வீதி, பெட்டா, 4வது

பதிப்பு, 1968, 1வது பதிப்பு, 1951, 2வது பதிப்பு, 1955, 3வது பதிப்பு, 1965. (கொழும்பு: அப்போத்திக்கரிஸ் கம்பெனி லிமிட்டெட்).

xiii, *368 பக்கம், வரைபடங்கள், படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 18x12.5 *சமீ.*

1936ஆம் ஆண்டில் வித்தியாபகுதியினர் வெளியிட்ட புதிய சரித்திர பாடத்திட்டத்துக் கமைய இந்நூல் பகுதிகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. முதற்பகுதி, 1796ம் ஆண்டு தொடக்கம் இலங்கைச் சரித்திரம் மூன்று பாகங்களில் விபரிக்கப் படுகின்றது. இலங்கையில் பிரித்தானிய ஆட்சி தாபிக்கப்படல் என்ற முதலாம் பாகம் 1796-1837 ஆண்டு காலத்திற்குரியது. இதில் பிரித்தானியர் வந்த காலத்தில் இலங்கையின் நிலைமை, கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல், இலங்கையில் பிரித்தானிய ஆட்சி பலப்படுதல், தற்கால அரசாங்கமுறை உருவாதல் ஆகிய நான்கு அத்தியாயங்களும், நாட்டின் அபிவிருத்தி என்ற இரண்டாம் பாகத்தில் தோட்டங்கள் அபிவிருத்தியாதல், நீர்ப்பாசன முறைகள் புனருத்தாரணமாதல், போக்குவரத்து சாதனங்கள், தோட்டங்கள் திறந்ததால் ஏற்பட்ட வேறு பயன்கள் ஆகிய விபரங்கள் பேசப்படுகின்றன. சமுதாய அரசியல் சீர்திருத்தங்கள் என்ற மூன்றாம் பாகத்தில் தலைமைக்காரரும் குடியானவரும், மத்திய வகுப்பினர், அரசியற் சீர்திருத்தங்கள் ஆகிய மூன்று விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நூலின் இரண்டாம் பகுதி 1796ம் ஆண்டு தொடக்கம் இரண்டாம் உலகமகாயுத்தம் வரையிலானது. இதில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட மகா மாற்றங்கள், விஞ்ஞானம், கல்வி, மனித ஷேமாபிவிருத்தி, பிரான்சீய அரசியற் புரட்சியும் ஐரோப்பிய யுத்தங்களும், ஐரோப்பாவில் லிபரல், தேசியக் கொள்கைகளின் தோற்றம், ஜெர்மனியிலும் இற்றலியிலும் ஒற்றுமை, 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரான்ஸ், இங்கிலாந்து என்பவற்றின் நிலைமை, கிழக்கு, தென் கிழக்கு ஐரோப்பா, பிரித்தானிய ஏகாதிபத்தியம்-சுதந்திர டொமினியன்களின் வளர்ச்சி, இந்தியா மற்றும் குடியேற்ற நாடுகளில் பிரித்தானிய ஏகாதிபத்தியம், ஆப்பிரிக்கா, இந்து சமுத்திரத் தீவுகள், பசிபிக் சமுத்திரத் தீவுகள் என்பவற்றில் ஐரோப்பிய ஆதிக்கம் பரவல், தூரகிழக்கு நாடுகள், அமெரிக்க நாடுகள், முதலாவது உலக மகாயுத்தக் காரணங்களும் அதன் நிகழ்ச்சிகளும், சமாதான இயக்கமும் அதன் முறிவுகளும் ஆகிய இயல்களுமாக மொத்தம் இருபத்தைந்து இயல்களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது.

9942

நான்காம் வகுப்புச் சரித்திர பாட வாசகம். *வை.முத்துக்குமாரசுவாமி. கொழும்பு: வை.முத்துக்குமாரசுவாமி, ஆசிரியர், சென். ஜோசப் கல்லூரி, 3வது திருத்திய பதிப்பு, 1955, 1வது பதிப்பு, 1950. (யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம்).*

(7), 98 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 1.00, அளவு: 21.5x14 *சமீ.*

நான்காம் வகுப்பின் மூன்று தவணைகளுக்கும் ஏற்றவாறு பிரிக்கப்பட்டு 17 பாடங்களாக வரலாற்றுத் தகவல்கள் இந்நூலில் தரப்பட்டுள்ளன. 1ம் தவணையில் நம் நாட்டின் பழைமை, ஸ்ரீபாதம் -நம் தேசிய மலை, நம் நாட்டுப் பழைய

ஊர்கள்- கதிர்காமம், திருகோணமலை, மாதோட்டம், வட இலங்கைத் தலை நகரங்கள் என்பன தரப்பட்டுள்ளன. வன்னி, மட்டக்களப்பு, அநுரதபுரம், பொலநறுவை, கண்டி எனப்படும் மகாநுவரை, கொழும்பு என்பன 2வது தவணைப் பாடங்களாகத் தரப்பட்டுள்ளன. பண்டைத் தலைநகர அரண்கள், சரித்திர சம்பந்தமான இடங்கள் சில, போக்குவரவுச் சாதனங்கள், போர்முறைகள், மக்கள் வாழ்க்கை முறைகள் என்பன 3வது தவணைப் பாடங்களாகத் தரப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 98796).

9943

படிமுறைச் சரித்திரம்: இலங்கையும் உலகமும், கி.பி.1235 வரை: ஆறாம் வகுப்பு. *வி.இ.நிக்கலஸ். யாழ்ப்பாணம்: வி.இ.நிக்கலஸ், வரலாற்றுத்துறை விரிவுரையாளர், பயிற்சிக் கல்லூரி, கொழும்புத்துறை, 1வது பதிப்பு, மார்கழி 1968. (யாழ்ப்பாணம்: ஆசீர்வாதம் அச்சகம், 32 கண்டி வீதி).*

viii, *250 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 3.75, அளவு:* 21x15 *சமீ.*

கல்வி அமைச்சின் (1967) புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வழிகாட்டியைத்தழுவி எழுதப்பட்டது. திரு.வி.இ.நிக்கலஸ் அவர்கள் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் வரலாற்று விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

9944

புது முறைச் சரித்திரம்: ஏழாந்தரம். *நாரந்தனை ஆ.சபாரத்தினம். யாழ்ப்பாணம்: கு.வி.தம்பித்துரை, கலைவாணி புத்தக நிலையம், இல.10, பிரதான வீதி, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1969.(யாழ்ப்பாணம்: கலைவாணி அச்சகம், இல.10, பிரதான வீதி).*

xvi, *210 பக்கம், வரைபடங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 5., அளவு:* 21x15.5 *சமீ.*

இலங்கைக் கல்வி அமைச்சு வெளியிட்ட, திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்ட மாகிய சரித்திர பாட வழிகாட்டியைத் தழுவி இந்நூல் எழுதப்பட்டது. மூன்று தவணைகளுக்கும் உரிய பாடங்கள் அத்தவணைக்குரிய பிரிவில் விளக்கப்பட்டு மீட்டற் பயிற்சியும் ஒவ்வொரு தவணைக்குரிய பாட முடிவிலும் தரப்பட்டுள்ளது.

954.93(2) இலங்கை இனப்பிரச்சினை வரலாறு

9945

அடுத்தது என்ன, தேசிய சமாதானப் பேரவையின் கருத்தரங்கு. *துஷால் தம்மிக்க விதானகே (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதானப் பேரவை, 12/14, புராண விகாரை வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2008. (பொல்கஸ் சோவிட்ட:* New Ferrine Printers Limited, No.19, Saumya Uyana, Halpita*)*

(14), 75 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.,* ISBN: 978-955-1274-40-5.

இரண்டு தசாப்த யுத்தம், ஐந்து ஆண்டு போர் நிறுத்தம் அடுத்தது என்ன என்ற கேள்விக்குப் பதில் பெறும் வகையில் இலங்கை தேசிய சமாதானப் பேரவை 21.2.2007இல் ஒரு கருத்தரங்கினை கொழும்பில் நடத்தியிருந்தது. அக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. இக்கருத்தரங்க நிகழ்ச்சித்திட்டத்தின் ஆலோசனைக்குழுவில் கலாநிதி ஜெஹான் பெரேரா, உபாலி அத்தநாயக்க, எஸ்.பி.நாதன் ஆகியோர் பணியாற்றியிருந்தனர். போர் நிறுத்த ஒப்பந்தம் அவசியமா, நாம் நலம்பெற வேண்டும், நாம் மார்தட்டிப் பேசுவது எதனைப்பற்றி, சமாதானத்தை அடைவது எவ்வாறு, நாட்டில் சமாதானம் மலரவேண்டும், உயிரைக் காப்போம், போரினால் ஒருபோதும் தீர்வுகாண முடியாது, உதவிபுரிய முடியாவிட்டால் தீமையாவது செய்யாதிருப்போமாக, சமாதானத்தை அடைவதற்கான அரிய சந்தர்ப்பம், திடமான நடவடக்கைகளை மேற்கொள்ள வேண்டும், என்பன போன்ற தலைப்புகளில் பன்னாட்டு இராஜ தந்திரிகள், தூதுவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தேரர்கள் போன்றோரின் உரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

9946

அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளும் இந்திய வம்சாவளி தமிழ்மக்களும். பி.பி. தேவராஜ் (நிர்வாக ஆசிரியர்). கொழும்பு 6: சமூக நிலைமாற்ற மன்றம், 24-1/1, ஈஸ்வரி வீதி, 1வது பதிப்பு, 2006. (கொழும்பு: ட்ரீம் ஸ்டேஷன்).

x, 91 பக்கம், அட்டவணைகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

பிரதேச அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு, தேசிய ஒருமைப்பாடு, பலமட்ட அதிகாரப் பகிர்வு, பிராந்திய/மாகாண மட்டங்களில் சிறுபான்மையினர் பங்கு பற்றுதல், அதிகளவு அதிகாரப் பகிர்வும் பலமிக்க இரண்டாவது பிரதிநிதித்துவ சபையும், நிர்வாக அதிகாரப் பகிர்வு, நுவரெலிய மாவட்டத்திற்கென ஒரு சுயநிர்ணய மாவட்ட கவுன்சில், உள்ளூராட்சி அமைப்புக்கள் மூலமாக சுயநிர்ணய ஏற்பாடு, சுதந்திரமாக தீர்மானம்செய்ய அதிகாரங்கள், இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கான கலாச்சார கவுன்சில், சிறுபான்மை சமூகங்களுக்கான தேசிய ஆணைக்குழு, அமைப்புக்கள் அதிகாரங்கள் செயற்பாடுகள் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக இலங்கையில் காணப்படும் இந்திய வம்சாவளித் தமிழர் பற்றிய குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரங்கள், அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் சபைக்கு ஒத்தாசை புரிவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பெரும்பான்மை அங்கத்தவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் சில பகுதிகள் என்பன சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44743).

9947

அமைதியான இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறையின்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு. சுதந்திர தொழிற்சங்க அபிவிருத்திக்கான நிலையம். கொழும்பு 6: பெண்கள்

கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

xiii, *9 பக்கம்,* விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையுடன் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்ற ஐவரின் பங்களிப்புடன் ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட ஐந்து நூல்களில் ஒன்று இதுவாகும். பேராசிரியர் குமார் டேவிட்டின் ஆய்வுரை யொன்றுக்கு அமைய தயார் செய்யப்பட்டது. மொழிபெயர்ப்பினை இந்திராணி கோவிந்தசாமி, ஏ.ஜே.கனகரத்தினா, கே.நடேசன், வைரமுத்து சுந்தரேசன் ஆகியோர் இணைந்தும் தனித்தும் மேற்கொண்டார்கள். இக்கைநூல் தொடர்பாக ஜீ.வீ.டீ.திலக்சிறியின் அறிமுகத்துடன் வெளியிடப்பட்டுள்ள இச்சிறுநூலில் நாம் இன்னொரு யுத்தத்தைச் சந்திக்க வேண்டும் என்பதை மீண்டும் சிந்தித்துப் பார்ப்போம், சமஷ்டி ஆட்சிமுறை இனப்பிரச்சினைக்கான தீர்வாகும் ஆகிய இரு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40415).

9948

இலங்கை அரசியல் வரலாறு: ஒரு நோக்கு. *சிவா சுப்பிரமணியம். கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு, 1வது பதிப்பு, மார்ச் 2013. (கொழும்பு 11: பூபாலசிங்கம் புத்தகசாலை, 202, செட்டியார் தெரு).*

iv, *57 பக்கம்,* விலை: ரூபா *225.,* அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-9396-58-1.

சுதந்திர இலங்கையில் இடம்பெற்ற பண்டா-செல்வா ஒப்பந்தம், இந்திய வம்சா வளியினரின் பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டமை, சோல்பரி அரசியலமைப்பின் 29வது சரத்தின் நீக்கம் போன்ற பிரதான நிகழ்வுகள் பற்றிய இன்றைய சந்ததியினர் முழுமையாகத் தெரியாதவர்களாக இருக்கும் குறை பாட்டை நீக்கும் நோக்கத்துடன் எழுதப்பட்ட ஐந்து கட்டுரைகளை இந்நூல் கொண்டுள்ளது. தமிழ் மக்களின் விமோசனத்திற்கு புதிய பாதை என்ற கட்டுரை தவிர எஞ்சியவை தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானவை. நூலாசிரியர் ஒரு மூத்த ஊடகவியலாளர். இடதுசாரிச் சிந்தனை இயக்கம் சார்ந்த பின்புலத்தில் வளர்ந்து வந்தவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 234773).

9949

இலங்கை: தேசிய இனப்பிரச்சினை. *சமுத்திரன். பெங்களூர் 560 038: காவ்யா, 8, சாஸ்திரி நகர், 2வது குறுக்கு, 2வது பதிப்பு, நவம்பர் 1985, 1வது பதிப்பு, 1983. (தமிழ்நாடு: வண்ணம், வாணியம்பாடி).*

88+14 *பக்கம்,* விலை: இந்திய ரூபா *8.,* அளவு: 17.5x12 சமீ.

தனது மாணவப் பருவத்திலிருந்தே இருபது வருடங்களுக்கும் மேலாக இடதுசாரி அரசியலில் ஈடுபட்டு வந்தவர் சமுத்திரன். 1977க்குப் பின்னர் தமிழ்மக்களின்

விடுதலைப்போராட்டத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராக இருந்துவந்த இவர் தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சித்து வந்துள்ளார். விடுதலைப் போராட்டத்தில் வெகுஜனப் பங்குபற்றலை ஊக்குவிக்கும் பரந்த தமிழ் மக்கள் விடுதலை இயக்கத்தின் தேவையை வலியுறுத்தும் இந்நூல் 1983ம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் போராட்டக் குழுக்களின் உருவாக்கச் சூழலில் எழுதப்பட்டது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 95721).

9950

இலங்கைத் தமிழர் வரலாறும் இன்றைய நிலையும். பூ.ம.செல்லத்துரை. மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், 1வது பதிப்பு, மே 1999. (மட்டக்களப்பு: ஈஸ்ரன் கிராப்பிக்ஸ், 205/2, பார் வீதி).

xii, 132 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 22x14.5 சமீ.

நூலாசிரியர் கிழக்கிலங்கையின் பெரியபோரதீவைச் சேர்ந்தவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புக் கிளைச் செயலாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட நிர்வாகச் செயலாளராகவும் கடமையாற்றியவர். தாயகம், நேர்வழி, சமநீதி, தேனாடு ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றியவர். இலங்கைத் தமிழரின் வரலாற்றுப் பக்கங்கள் சிலவற்றைத் தனது பார்வையில் இந்நூலில் பகிர்ந்துகொள்கின்றார். குமரிக்கண்டமும் இலங்கையும், இலங்கையின் பழங்குடி மக்கள், சிவனொளிபாதமலையும் சைவமும், விஜயன் தமிழன், சிங்கள வரலாற்றாரிசிரியர்கள் இழைத்த முக்கியமான தவறு, இலங்கையின் பூர்வீக குடிகள் யார்? இலங்கை அரசியலோடு தொடர்புடைய கலிங்கம், சுமேரியர் இலங்கைத் தமிழர்களே, திராவிடர்களே பௌத்தத்தைத் தழுவி சிங்களவரானார்கள், கிழக்கிலங்கையில் தமிழராட்சி, உலக மொழிகளின் தாய் தமிழே, இலங்கை அரசியலில் தமிழ் மொழி, ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் வட பகுதியில் தமிழாட்சி இருந்தது, நாகர்கள் உண்டாக்கிய பௌத்தம், மாந்தையில் மலர்ந்து மாநிலமெங்கும் மணம்பரப்பிய தமிழர் நாகரிகம், தமிழ் செமத்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததா?சிங்கக் கொடி சிங்களவர்களுடையதா? சிங்களவர்கள் இழந்த உரிமைகள் யாவை? துட்டகாமினி-எல்லாளன் யுத்தம் தமிழ்-சிங்கள யுத்தமா?சிங்களத் தலைவர்களும் இணைப்பாட்சியும் ஆகிய இருபது தலைப்பு களில் இந்நூல் விரிவாக எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 132852).

9951

இலங்கையில் 16000 தமிழர் கப்பலேறிய கதை. செ.வைத்திலிங்கம். கொழும்பு: செ.வைத்திலிங்கம், 1வது பதிப்பு, 1966. (கொழும்பு 14: சென். ஜோசப் அச்சகம்).

68 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 19x14 சமீ.

1956-1958 காலகட்டங்களில் இலங்கையில் நடைபெற்ற அடக்குமுறை சார்ந்த அரசியல் வன்முறை 1958இல் இனக்கலவரமாக வெடித்தது. கொழும்பிலிருந்து 16000 தமிழர்கள் கடல்வழியாக வடபுலத்திற்கு பாதுகாப்புத்தேடிச் சென்ற

அன்றைய அரசியல் நிகழ்வுகளை இந்நூல் தமிழில் பதிவுசெய்கின்றது. இத்தகைய நூலொன்றை ஆசிரியர் ஆங்கிலத்திலும் எழுதிப் பிரசுரித்திருக்கிறார். தார்சி விட்டாச்சி எழுதிய எமர்ஜென்சி 58 வெளிவந்த காலத்தில் இந்நூலும் வெளிவந்திருக்கிறது. திரு வைத்திலிங்கம் 1962இல் இலங்கையின் தமிழருக் கெதிரான அரசியல் போக்கைக் கண்டித்து லண்டன் சென்று மகாராணியாரை சந்தித்து அறிக்கையிட்டமையும் குறிப்பிடத்தக்கது. மிக மூத்த அரசியல் தலைவர் களான சா.ஜே.வே.செல்வநாயகம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆகிய இருவரது ஒற்றுமையற்ற தவறான அரசியல் போக்குகளால் தமிழ்மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிப் போவதை 1960களிலேயே கண்டு கொதித்தெழுந்த நூலாசிரியரின் ஆணித்தரமான பதிவுகள் இவை.

9952

இலங்கையின் பொறுப்புக்கூறல் மீது செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு அறிக்கை. நிபுணர் குழு. ஜெனீவா: செயலாளர் நாயகத்தின் நிபுணர்கள் குழு, ஐக்கிய நாடுகள் சபை, 1வது பதிப்பு, மார்ச் 2011. (கொழும்பு 10: குளோப் பிரிண்டிங் வேர்க்ஸ், இல.5, ஸ்டோர்க் பிளேஸ்).

xix, 271 பக்கம், படங்கள், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21.5 சமீ.

இவ்வறிக்கை 31 மார்ச் 2011இல் வெளியிடப்பட்டது. இதில் ஆணை, கட்டமைப்பு மற்றும் வேலைத்திட்டம், மோதலின் வரலாற்று மற்றும் அரசியல் பின்னணி, குற்றஞ்சாட்டப்படும் மீறல்களின் தன்மையும் அளவும், குற்றச்சாட்டுக்களின் சட்ட மதிப்பீடு, பொறுப்புக்கூறலுக்கான இலங்கையின் அணுகுமுறை, பொறுப்புக் கூறலுக்கான மேலும் தடைகள், முடிவுரைகள், பரிந்துரைகள் ஆகிய பிரிவுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக, செயலாளர் நாயகம் மற்றும் இலங்கை ஜனாதிபதியின் கூட்டு அறிக்கை (மே 23, 2009), தொடர்புகள்-விளக்கக்குறிப்புகள்-தொடர்பாளர் மற்றும் தொடர்புகளின் பட்டியல், செய்மதிப் படிமங்கள்-விளக்கக்குறிப்புகள்- செய்மதிப் படிமங்களின் பட்டியல் ஆகியனவும், வன்னியிலுள்ள வைத்தியசாலைகள் பற்றிய விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. செப்டெம்பர் 2008, ஜனவரி 2009 காலகட்ட யுத்த முன்னரங்குகள், யுத்தத்தின் இறுதிக்கட்டங்களிலான யுத்த சூனிய வலயங்கள், இரண்டாவது யுத்த சூனிய வலயத்தில் மார்ச் 2008இல், புதுமாத்தளன் வைத்தியசாலை அருகேயான உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்புகள், ஏப்ரல் 2009இல் 2வது யுத்த சூனிய வலயத்தில் ஷெல்வீச்சால் அழிக்கப்பட்ட உள்ளக இடம்பெயர்ந்த மக்கள் தங்கும் கொட்டகை, புதுமாத்தளன் வைத்தியசாலை, இரண்டாவது யுத்த சூனிய வலயத்தில், மார்ச் 2009இல், உடலுறுப்புகள் துண்டிக்கப்பட்ட குழந்தை, பொதுமக்கள் இறப்பு, ஏப்ரல் 2009இல் சிறுவர் வைத்தியசாலை ஆகியன புகைப்படங்களாகவும், வரைபடங்களாகவும் சேர்க்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 6641).

9953

இனப்படுகொலை: தமிழீழமும் இந்தியாவின் பாதுகாப்பும். ஒருங்கிசைந்த ஆய்வுக்கான தமிழ் நடுவம். லண்டன்: ஒருங்கிசைந்த ஆய்வுக்கான தமிழ் நடுவம், 1வது பதிப்பு, ஜுன் 2013. (சென்னை 600014: எஸ்.வி.பிரிண்ட்ஸ், எண் 47, ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி தெரு).

76 பக்கம், விலை: இந்திய ரூபா 80., அளவு: 21x13.5 சமீ.

வரலாற்று ரீதியில் இந்தியா மீது அச்சம் கொண்டுள்ள சிங்கள ஆட்சியாளர்கள், இந்தியாவுக்கு எதிரான தமது யுத்தத்தை ஈழத்தமிழர்களின்மீது காலம் காலமாகத் தொடுத்து வந்திருக்கிறார்கள் என்பதை இந்நூல் போதிய வரலாற்று ஆதாரங் களுடன் உறுதிப்படுத்த முனைகின்றது. 21ம் நூற்றாண்டின் இனப்படுகொலைக்கு குறியீடாக அமைந்துவிட்ட முள்ளிவாய்க்கால் படுகொலைகள்கூட இவ்வகையில் சிந்திக்கப்படவேண்டியதே என்று கருதும் நூலாசிரியர், வரலாறு, இராஜதந்திரம், அரசியல் பொருளாதாரம், புவிசார் அரசியல் போன்ற அனைத்துக் கண்ணோட்டங் களையும் இணைத்து இந்நூலை ஒன்பது இயல்களில் அறிவியல்ரீதியாக எழுதி யுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை மாணவனாகவும், விரிவுரையாளராகவும் இருந்த இந்நூலாசிரியர், தற்போது புலம்பெயர்ந்து தமிழ கத்தில் வாழ்ந்து வருகின்றார்.

9954

ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை. பி.இரயாகரன். பிரான்ஸ்: சமர் வெளியீடு, 32, Rue Trouillet Derel, 92600, Asnieres Sur-Seine, 1வது பதிப்பு, டிசம்பர் 2004. (சென்னை 600024: எமில் பிரிண்டர்ஸ், 63, என்.எஸ்.கே.சாலை, கோடம் பாக்கம்).

(4), 204 பக்கம், விலை: இந்திய ரூபா 70.00, அளவு: 21.5x14 சமீ.

இலங்கையில் யுத்த நிறுத்தம் ஒன்று காணப்பட்டு, புரிந்துணர்வு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட 2002 காலகட்டத்தைத் தாண்டிய இரண்டாண்டுகள் கழிந்த நிலையில் எழுதப்பட்ட இந்நூலில் சமகால இலங்கை எப்படி மறுகாலனியாதிக்கத்தினுள் சென்றுவிட்டது என்பதை ஆதாரங் களுடன் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாய்வு மூன்று பகுதிகளைக் கொண்டது. சமாதானமா யுத்தமா இது யாருக்காக? மக்களுக்காகவா மூலதனத்துக்காகவா? என்ற கேள்விகளையெழுப்பி இந்நாடகம் சோகமான முடிவை நோக்கி நகர்த்தப் படுவதாக முதல் பகுதி விமர்சிக்கின்றது. சமாதானம் என்ற உலகமயமாதல் நிகழ்ச்சிநிரல் பற்றி இரண்டாம் பகுதி விபரிக்கின்றது. இப்பிரிவில் சிங்கள இனவாத அரசு திட்டமிட்ட வகையில் தேசியத்தின் அனைத்துப் பண்பியல் கூறுகளையும் அழிக்கின்றது எனவும், மேட்டுக்குடி வெள்ளையரின் சுற்றுலாக்கள் பற்றியும், அவர்களின் வீடுகளுக்கே சென்று சேவகம் செய்யக் காத்திருக்கும் தேசியம் பற்றியும், மக்களைக் குடிகாரர்களாக்கி, இலங்கைஅரசே அவர்களுக்குக் கல்வியை மறுப்பதைத் தேசியமயமாக்குவது பற்றியும், சமூகச் சீரழிவினால் உருவாகும் சிதைந்த பண்பாட்டின் ஆழமான எதிர்விளைவுகள் பற்றியும்,

இலங்கையில் ஊடுருவிப் பாயும் ஏகாதிபத்தியத்தின் பெருநிதிகள் பற்றியும், அத்துமீறும் அமெரிக்கத் தலையீடு பற்றியும் இவ்வியல் விரிவாகப் பேசுகின்றது. மூன்றாம் பகுதி இனம்கடந்த அரசியல் விபச்சாரம் மக்களின் முதுகில் சவாரி செய்கின்றது என்ற தலைப்பில் அரசியல் தலைவர்களான சந்திரிகா-ரணிலுக் கிடையில் உள்ள அதிகாரப் போட்டி, கூட்டணிக்குள் புலிகளின் அதிகாரப் போட்டி, முஸ்லிம் காங்கிரசுக்குள் நடந்த அதிகாரப் போட்டி, ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்குச் செங்கம்பளம் விரிக்கும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான புலிகளின் தீர்வுத்திட்டம் பற்றியும், சந்தர்ப்பவாதத்துடன் கூடிய பிழைப்புவாதம் பற்றியும், பன்னாட்டுச் சிதைவுகள் தமிழினத்தையே அழிக்கும் நிலைபோன்ற இன்னோரன்ன விடயங்களையும் விளக்கிநிற்கின்றது.

9955

ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை: செய்திக் கட்டுரைத் தொகுதி. கலைச்சுடர் என்.இராமச்சந்திரா. யாழ்ப்பாணம்: அருள்சுரபி பதிப்பகம், தாளையடி வீதி, திருநேல்வெலி, 1வது பதிப்பு 2009. (யாழ்ப்பாணம்: பிள்ளையார் அச்சகம், நல்லூர்).

x, 88 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 17.5x12.5 சமீ.

வீரகேசரி பத்திரிகையின் வேலணை நிருபராக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேல் பணியாற்றி வரும் நூலாசிரியர், வடமராட்சியின் அல்வாயை பிறப் பிடமாகவும், மண்டைதீவைப் புகுந்த இடமாகவும் கொண்டவர். 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் வீரகேசரி நாளிதழிலும் வார மலரிலும் பிரசுரமான இவரது கட்டுரைகளில் சிவலவும் ஒரு கவிதையும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 208958).

9956

ஒரு விவரணக் கருத்துரை: பேச்சுவார்த்தைகளின் கட்டமைப்புக்கள், நடை முறைகள் பற்றிய கருத்தரங்குத் தொடர்கள்: சில படிப்பினைகளும் சிந்தனை வெளிப்பாடுகளும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (ஆங்கில மூலம்), கேதீஸ் லோகநாதன் (ஒருங்கிணைப்பாளர்). கொழும்பு 7: மாற்றுக் கொள்கை களுக்கான நிலையம், 32/3, பிளவர் வீதி, 1வது பதிப்பு, 2000. (கொழும்பு: அச்சக விபரம் தரப்படவில்லை).

(4), 66 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ., ISBN: 955-8037-26-5.

கொழும்பு- இலங்கை மன்ற நிறுவனத்தில் 13 வைகாசி 2000, 27 வைகாசி 2000 ஆகிய திகதிகளில் நடைபெற்ற கருத்தரங்க நிகழ்வுகள் தொடர்பான விவரணக் கருத்துரை. இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான நோர்வேயின் பங்களிப்புடன் தொடங்கப்பட்ட பேச்சுவார்த்தைக் காலகட்டத்தின் தொடக்கத்தில் பேச்சுவார்த்தைகளின் கட்டமைப்பு, செயன்முறை என்பவற்றின் பல்பரிமாண அம்சங்களை ஆராய்வதின் அவசியம் உணரப்பட்டது. அவ்விடயங்களை விளங்கிக்

கொள்ளும் நோக்கில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் இருபகுதிகளைக் கொண்டதொரு கருத்தரங்கை 2000ஆம் ஆண்டு வைகாசியில் நடத்தியது. தொழிற்படக்கூடிய செயல்திறன் மிக்க தொகுப்பொன்றைக் கண்டறியும் முயற்சியில் இக்கருத்தரங்கின் ஒரு பகுதி கட்டமைப்பையும், மறுபகுதி செயன்முறையையும் தமது இலக்காகக் கொண்டிருந்தன. இத்தொடக்கச் செயற்பாடு, ஆனையிறவு வீழ்ச்சியுற்ற தருணத்தில் அரசாங்க அனுசரணையுடனான போரில் கால்வைப்பு நிலைமை தீவிரமாக்கப்பட்டு, ஊடகத்தணிக்கை மிகத்தீவிரமாக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கின் பலனாக கண்டறிந்த கருத்துக்களின் தொகுப்பாக இந்நூல் அமைகின்றது.

9957

கண்ணீர் சிந்தும் சொர்க்கபுரி: வரலாறு மற்றும் முரண்பாட்டினூடான ஒரு பயணம். விக்டர் ஐவன் (ஆங்கில மூலம்), சென்தன் செல்வராஜா, எஸ்.கணேசன் (தமிழாக்கம்). கொழும்பு: Embassy of the Federal Republic of Germany, 1வது பதிப்பு, செப்டெம்பர் 2008. (மஹரகம: ராவய பதிப்பகம், இல.83, பிலியந்தல வீதி).

200 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-1468-17-0.

இந்த வெளியீட்டில் "ராவய" என்ற சிங்களமொழிப் பத்திரிகையின் ஆசிரியரான விக்டர் ஐவன், இலங்கையின் இனக்கலவரத்தின் வரலாற்றுரீதியான கூர்ப்பினை மிகவும் காத்திரமான வகையில் காட்டுகின்றார். தற்போதைய நெருக்கடியுடன் தொடர்புபட்டுள்ள பிரதான சம்பவங்களில் புகைப்படரீதியான ஒரு பொழிப்பினை வழங்குகின்ற வகையில் சுமார் 190 வருடங்களுக்கும் மேலானதொரு நீண்ட காலப்பகுதியை இப்புத்தகம் கடந்து செல்கின்றது. பிரச்சினையின் அதன் எல்லாச் சம்பவங்களுடனும் இணைத்துச் செல்கின்ற அந்தப் பாதை தொடர்பில் வாசகர் தனது கவனத்தைச் செலுத்துமாறு அவர் கோருகின்றார். அறிமுகம், முகவுரை ஆகியவற்றுடன் தொடங்கும் இந்நூல் பிரபுத்துவ முறையிலிருந்து முதலாளித்துவ முறைக்கு, மறுசீரமைப்புக்கான போராட்டம், சுதந்திரம் பெறுதல், நீதி நிர்வாகம் சீர்குலைவு ஆகிய நான்கு விரிவான அத்தியாயங்களினூடாக இந்நூல் விரிகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 206018).

9958

கதிர்காமத்திற்கு நடைப்பயணம். சுனில் குணசேகர (ஆங்கில மூலம்), லோரன்ஸ் துரைராஜா (தமிழாக்கம்). கொழும்பு 8: இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், 2. கின்சி ரெறஸ், 1வது பதிப்பு, 2007. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

65 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ.

இக்கட்டுரையானது 2004ஆம் ஆண்டு மார்கழி மாதம் கொழும்பு, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தினால் "மாறுநிலை/உருவாக்கம்: இலங்கைத் தமிழரின் தேசியம் பற்றிய ஒரு கருத்தரங்கு" என்ற தலைப்பில் நடாத்தப்பெற்ற

மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது. இம் மகாநாடு அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வேயின் முகவரகத்தின் (NORAD-Norwegian Agency for Development Cooperation) நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் இலங்கை கற்கைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு செயற்றிட்டமாகும். சிங்கள தேசியவாதம் பற்றிய சமூகவியல், அரசியல் ஆய்வுகள் அளவிலும், பண்பிலும் குறிப்பிடத்தக்களவு மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கும் நிலையில் தமிழ் தேசியவாதம் சில காலங்களாக ஆய்வுக்குட்படாத ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் மேற்கொள்ளப் பட்ட மிக முக்கிய ஆய்வுகள்கூடத் தமிழ்மொழியில் மாத்திரமே காணப்படுகின்றன. எனவே இலங்கைத் தமிழரின் தேசியவாதம் பற்றிய சிக்கல்களையும் பண்புகளையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு முக்கிய தேவையை இந்நூல் வலியுறுத்துகின்றது.

9959

காலத்தின் தேவை: அரசியல் வேலை. தர்மரட்ணம் சிவராம் (புனைபெயர்: தராக்கி டி.சிவராம்) (மூலம்), சண்.தவராஜா (தொகுப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: சிவராம் நினைவுப் பணிமன்றம், தமிழ்ச் சோலைப் பதிப்பகம், 1வது பதிப்பு, 2013. (சுவிட்சர்லாந்து: சேகர் தமிழ்ப் பதிப்பகம்).

xvi, 236 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

தமிழ் மக்களின் போராட்ட நியாயங்களை சிங்கள மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்ற கருத்துடன் ஆங்கில மொழியில் தமிழ் இனச்சாயல் அற்ற நிலையில் எழுதும் ஒரு ஊடகவியலாளராக 90களின் முற்பகுதியில் எழுத்துப் பணியை ஆரம்பித்தவர் சிவராம். குறுகிய காலத்திலேயே சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் போராட்ட நியாயங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவகையில் தெரிவிக்கும் தகுதி படைத்தவராக மாறினார். தராக்கியின் முக்கியமான 31 அரசியல் கட்டுரைகளை இந்நூல் உள்ளடக்குகின்றது.

9960

தேசியப் பிரச்சினை: அனைத்தும் அரச அதிகாரம் பற்றியதே. ஜயம்பதி விக்கிரம ரட்ண. கொழும்பு: இலங்கைத் தமிழரசுக் கட்சி, கொழும்பு மாவட்டக் கிளை, 1வது பதிப்பு, ஏப்ரல் 2014. (யாழ்ப்பாணம்: சிவராம் பதிப்பகம், கல்லூரி வீதி).

27 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிறுவுநர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் 37வது வருட நினைவுநாளை ஒட்டிய நிகழ்வின் போது 26.4.2014 அன்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ணவினால் நிகழ்த்தப்பட்ட உரை. "பல்லின, பல சமய யூகோஸ்லாவியாவை ஆதிக்கம் செலுத்த முனைந்து சேர்பியர்கள் தமது நாட்டில் சேர்பியர் அற்ற பாகங்களை இழந்து (அவர்களது புனித தலங்கள் காணப்பட்ட கொசோவோ உட்பட) அவர்களுடைய வரலாற்றுப் பெரும்பான்மை யுடைய பாகத்துக்குள் முடக்கப்பட்டார்கள். தெற்காசியாவின் சேர்பியர்கள் சிங்களவரே" என்ற தயான் ஜெயதிலகவின் கூற்றை எடுத்துக்காட்டி, முன்மொழிவு

களை தயாரிப்பதிலும் விட அரசமைப்பை உருவாக்குவது மிகச் சிக்கலானது. 1994 முதல் 2000 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு சீர்திருத்த நடவடிக்கைகளையொத்த முயற்சிகளிலும் பார்க்க, புதிய வடிவத்திலான ஓர் அரசமைப்பை உருவாக்க முயல்வது இப்போதைய நிலையில் சாலச்சிறந்தது என்பதை ஆசிரியர் வலியுறுத்துகின்றார்.

9961

நிலையான சமாதானத்துக்கு சமஷ்டித் தீர்வு. ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான தமிழ்பேசும் மக்களின் அரங்கு. கொழும்பு 13: ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான தமிழ்பேசும் மக்களின் அரங்கு, 161, ஜிந்துப்பிட்டி வீதி, 1வது பதிப்பு, மார்ச் 2003. (பொறல்லை: சீயா அச்சகம்).

16 பக்கம், விலை: ரூபா 10., அளவு: 21x13.5 சமீ.

இலங்கையில் சமாதான முயற்சிக்குத் தடையாக உள்ள சகல காரணிகள் பற்றியும் மக்கள் தெளிவாக அறிந்திருக்கவேண்டும். அப்போதுதான் சகல தடைகளையும் அகற்றி நியாயமான அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுமாறு தங்கள் அரசியல் தலைமையை மக்கள் வற்புறுத்த முடியும். அதே நேரம், நியாயமான அரசியல் தீர்வு பற்றிய தெளிவான சிந்தனை மக்களிடம் இருக்க வேண்டியதும் அவசியம். இவ்விரு நோக்கங்களையும் மனதில் இருத்தி இப்பிரசுரத்தை கொழும்பிலிருந்து, ஜனநாயகத்துக்கும் சமாதானத்திற்குமான தமிழ்பேசும் மக்களின் அரங்கு என்ற அமைப்பினர் தமது முதலாவது பிரசுரமாக வெளியிட்டுள்ளனர்.

9962

பெறுபேறற்ற யுத்தமும் அதில் மனித இழப்புகளும். ஜெகன் பெரேரா (ஆங்கில மூலம்), இந்திரா கோவிந்தசாமி (தமிழாக்கம்). கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்பட வில்லை). (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48B, புளுமெண்டால் வீதி).

ix, 54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையுடன் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்ற ஐவரின் பங்களிப்புடன் ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட ஐந்து நூல்களில் ஒன்று இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40415).

954.93(3) இனங்கள், மக்கள் குழுமங்கள், இன உறவுகள்

9963

அறிவுத்துறையில் முஸ்லிம்கள். A.M.அபூபக்கர். கல்முனை: பொய்கை வெளியீடு, வாகித் லொட்ஜ், சாய்ந்தமருது 3, 1வது பதிப்பு, ஜுன் 1966. (மட்டக்களப்பு: கத்தோலிக்க அச்சகம்).

(6), 125 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18x12.5 சமீ.

மத்தியகால முஸ்லிம்களுள் அறிவியல் துறையை வளர்த்துப் பணியாற்றிய சில முஸ்லிம் அறிஞர்களைப் பற்றிக் கூறுவதே இந்நூலின் நோக்கமாயுள்ளது. அறிவியலின் பல துறைகளிலும் ஈடுபட்டவர்களை தனித்தனித் துறைவாரியாகப் பிரித்து, அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம், அவர்களின் கண்டுபிடிப்புகள், நூல்கள் என்பவை பற்றிய விபரங்களைப் பதிவுசெய்துள்ளார். மத்திய கால முஸ்லிம்கள், மருத்துவம், இரசாயனம், புவியியல், வரலாறு, வானியலும் பௌதிகமும், உயிரியல், கணிதம், தத்துவம், இலக்கியம், கல்லூரிகளும் நூலகங்களும், இஸ்லாமியச் சிறு கலைகள் ஆகிய தலைப்புகளில் இந்நூலின் அத்தியாயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87072).

9964

இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள். சந்தியாபிள்ளை கீதபொன்கலன். பண்டாரவளை: கலை இலக்கிய மன்றம், லியோ மார்கா ஆஸ்ரம், 121/1, புனித தோமையார் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2004. (சென்னை 600014: தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை).

352 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 1500., அளவு: 22.5x14.5 சமீ.

அருட்தந்தை ச.கீதபொன்கலன் அவர்கள் வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி, சரிநிகர், நவமலையகம் மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இதுவாகும். மக்கள் இயக்கங்கள், பெருந்தோட்டத்துறையும் தனியார் மயமும், மலையகமும் அரசியலும், தீராத பிரஜாவுரிமையும் தீர்க்காத சட்டங்களும், காணி வீட்டு உரிமையின் மீதான சவால்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தங்களும் சம்பள உடன்படிக்கைகளும், மலையகத் தமிழ்ப் பெண் களின் அரசியல் வலுவூட்டல், மலையகத்தை மலடாக்கும் குடும்பக் கட்டுப்பாடு, மலையகத் தமிழ்ச் சிறுவர்களுக்கு எட்டாத உரிமைகளும் கிட்டாத முன்பள்ளிக் கல்வியும், மலையகத்தில் முதியோர் எதிர்கொள்ளும் சவால்கள், தொழிலாளர் உரிமையும் தென்னிலங்கைத் தமிழரின் சுயநிர்ணய உரிமையும், மலையகத் தமிழ் மக்களுக்கு சவாலாக உள்ள மேல் கொத்மலைத் திட்டம், சர்வதேச அரங்கில் மலையகம், உலக சமூக மாமன்றம், ஆகிய 14 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக ஒரு குடும்பத்தின் பிரஜாவுரிமைப் பத்திரம், உலக சமூக மாமன்றத்தின் கொள்கைகள் என்பன இணைக்கப்பட்டுள்ளன. இந்நூல் 2000 அக்டோபர் 25ம் திகதியில் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில், அரசாங்கப் பாதுகாப்பில், தடுத்துவைக்கப்பட்டிருந்த வேளையில், ஊர்மக்களின் திட்டமிட்ட இனவெறித் தாக்குதலுக்குள்ளாகிக் கொல்லப்பட்ட 29 தமிழ் இளைஞர்களுக்கும் காணிக்கையாக்கப்பட்டுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 36339).

9965

இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம். *கலகா பெ.தங்கராசா. கண்டி: கலகா பெ.தங்கராசா, மாலதி வெளியீட்டு இல்லம், 57, அம்பிட்டிய வீதி, 1வது பதிப்பு, 1968. (கொழும்பு 10: ஒட்டோ பிரின்டர்ஸ்).*

(9), 33 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14 *சமீ.*

இலங்கை இந்தியர், இலங்கை அரசியலும் இந்தியர் நிலையும், இந்தியர் சமுதாயம் ஆகிய மூன்று பிரதான தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இலங்கை இந்தியர் என்ற முதலாம் இயலில் பழங்கால வரலாறு, போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்கள், கண்டி மன்னர்கள், ஆங்கிலேயர் காலம், மலைநாட்டு இந்தியர் தோட்டங்களில் தொழில்புரிய வந்த வரலாறு, அக்கால வைத்திய வசதிகள், இந்தியர் வருகையைத் தடைசெய்தல், இலங்கை இந்தியப் பிரச்சினை, வாஜ்பாய்-சேனநாயக்க பேச்சுவார்த்தை, இரப்பர் தோட்டங்களுக்குத் தொழிலாளர் வருகை, இந்தியர் பாக்கிஸ்தானியர் சட்டம், நாடற்றவராதல், இந்தியருக்குத் தனித்தேர்தல் தொகுதி, ஸ்ரீமா பண்டாரநாயக்க தேசிய அரசாங்கம், இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தம் ஆகிய விடயங்கள் பேசுபொருளாகின்றன. இரண்டாவது இயலில் சென்னை அரசின்கீழ் இலங்கை, காலனியாட்சி, மாட்சிமை தங்கிய அரசசபை, கோல்புருக் கமரன் வருகை, புதிய சட்டசபையும் நீதிமன்றமும், பொதுஜன வாக்குரிமை, புதியதோர் சட்டசபை, இந்தியர் பிரதிநிதித்துவம், டொனமூர், சோல்பரி கமிஷனர்களின் வருகை, இந்தியர் வாக்குரிமை பறிபோதல் ஆகிய விடயங்கள் பேசப்படுகின்றன. இந்தியர் சமுதாயம் என்ற மூன்றாவது இயலில் இந்தியரின் வாழ்க்கைப் பிரச்சினை, இலங்கை இந்திய காங்கிரஸ், தொழிற்சங்கப் பிளவு, பிரசாவுரிமைச் சட்டம், இலங்கையின் சுதந்திரம், குடியிருப்பு, தோட்டத் தொழிலாளர்களும் உள்ளூராட்சி மன்றங்களும், இந்தியத் தொழிலாளர் குடியேற்றும் சபை, சம்பள நிர்ணய சபை, தொழிலாளர் கல்வி, தொழில் கோடுகள் (கோர்ட்டுகள்) போன்ற விடயங்கள் பேசப்பட்டுள்ளன. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 10724).

9966

இலங்கையின் இன உறவுகள் சமூக வரலாற்று சூழமைவு. *லக்ஷிரி பெர்னாண்டோ (ஆங்கில மூலம்), வைரமுத்து சுந்தரேசன் (தமிழாக்கம்). கொழும்பு 6: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 58, தர்மராம வீதி, 1வது பதிப்பு, (ஆண்டு விபரம் தரப்படவில்லை). (கொழும்பு 13 : யுனி ஆர்ட்ஸ், 48*B, *புளுமெண்டால் வீதி).*

ix, *35 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு:* 22x14.5 *சமீ.*

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரணையுடன் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக கோட்பாட்டு நிபுணத்துவம் பெற்ற ஐவரின் பங்களிப்புடன் ஆங்கில மூலத்தில் எழுதப்பட்ட ஐந்து நூல்களில் ஒன்று இதுவாகும். இந்நூல் விடயஅறிமுகத்துடன், நாம் ஒருவரை ஒருவர் எவ்வாறு புரிந்துகொள்கிறோம், இனத்துவ அடையாளம் என்பது என்ன?, இனக்குழுக்களின் தோற்றமும் பண்பும், இன முரண்பாட்டின்

மூலங்கள், இன மீளிணக்கப்பாட்டிற்கும் சமாதானத்துக்குமான சாத்தியப்பாடுகள், முடிவுரை ஆகிய ஆறு இயல்களை உள்ளடக்கியுள்ளது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 40415).

9967

கண்ணுக்கு எட்டிய தொலைவில். லசந்த விஜயரத்தின (தொகுப்பாசிரியர்). கொழும்பு 6: இலங்கை தேசிய சமாதான பேரவை, 12/14, புராண விகாரை வீதி, 1வது பதிப்பு, 2007. (கொழும்பு: டனிஸ் டெவலப்மன்ட் கோபரேஷன்).

xix, 93 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x15 சமீ., ISBN: 978-955-1274-33-7.

சுனாமி நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் பொருட்டும், கிழக்கிலங்கையின் நிலவரத்தைக் கண்டுவரும் நோக்குடனும் தெற்கிலிருந்து சென்ற ஊடகவியலாளர் குழுவின் தரிசனங்கள் இக்கட்டுரைகளில் பிரதிபலிக்கின்றன. இனஉறவைக் கட்டி எழுப்பி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்போம் (எஸ்.பி.நாதன்), களக் குறிப்பு (சமன் செனெவிரத்ன), ஆசிரியர் குறிப்பு (லசந்த விஜயரத்ன), நாட்டில் நல்வாழ்வைக் கட்டியெழுப்புவதென்றால் (ஆரிதாச கொடித்துவக்கு), சமாதானமாக ஒன்றிணைந்து போரிடுவோம் (எம்.பி.சந்திரபால), சமாதான ஒப்பந்தத்துக்கு மாற்று அணுகுமுறை தேவை (P.D.லியனகே), திருகோணமலையிலிருந்து பாதுகாப்புப் படையினரை வெளியேற்றல் (K.W.குணவர்த்தன), கிழக்கு விஜயத்தில் நான் பெற்ற அனுபவங்கள் (D.J.விஜயசிங்க), சமாதானம் இல்லாத சமாதானம் (L.Y.சுஜித்குமார), யுத்தத்தின் பலாபலன்களை அனுபவிக்கும் கிழக்கு மக்கள் (ஜயதிஸ்ஸ தென்னக்கோன்), சுனாமி நிவாரணம் பகிர்ந்தளிப்பதில் கிழக்கு மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் (W.P.தர்மசேன), சமாதானத்தின் தாமதத்தை கிழக்கில் பார்த்தோம் கேட்டோம் (பந்துல குணசேகர), சுதந்திரத்துக்கு இடமளித்தலும் சமாதானமும் (T.K.சுகததாச), கிழக்குச் சூழலின் யதார்த்தத்தை சரியாகப் புரிந்துகொள்வோம் (மாவடவில சாந்த தேரோ), குச்சவெளி பின்தங்கிய கிராமத்தைப் பார்வையிடல் (ஜஸ்டின் கொடிகார), போராட்டம் மிலேச்சத்தன மானது (மொரகல சுமணரங்சி மகாநாயக்க தேரர்), தெற்கு ஊடகவியலாளர்களின் கிழக்குச் சுற்றுப்பயணம் (லசந்த விஜயரத்ன), தெற்கின் செய்தியாளர்கள் காணாத திருகோணமலை (அசோக்க சந்திரசேன), இனவாத நிலை உருவாவதன்மூலம் அதிகாரப் போட்டி அதிகரிக்கின்றது (சாந்த மகிந்தபால), கிண்ணியாவில் பெண்கள் (எஸ்.தர்மலிங்கம்) ஆகிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 210258).

9968

கிழக்கு முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக ஒன்றிணைய வேண்டும். எம்.ஐ.எம். முஹியத்தீன். கொழும்பு 10: அகில இலங்கை முஸ்லீம் ஆவணவாக்கல் நிலையம் (All Ceylon Muslim Documentation Centre), 57ஏ, நொறிஸ் கனால் வீதி, 1வது பதிப்பு, மே 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(6), 104 பக்கம், விளக்கப்படங்கள், அட்டவணைகள், புகைப்படங்கள், விலை: ரூபா 250., அளவு: 29.5x21 சமீ., ISBN: 978-955-50783-5-1.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று வாழ்விடங்கள், கிழக்கு மாகாணம், உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய கிழக்கு முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகள், சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்ட கிழக்கிலங்கை முஸ்லிம்களின் காணிகள், கல்முனை நிர்வாக மாவட்டம், அக்கரைப்பற்று, நுரைச்சோலை சுனாமி வீட்டுத் திட்டம், இலங்கை-இந்திய உடன்படிக்கையின் பின் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள், இலங்கை அரசியல் யாப்பின் 13வது திருத்த அமுலாக்கம், மூதூர் முஸ்லிம் இனச் சுத்திகரிப்பும் போர்க்குற்ற நடவடிக்கைகளும், பொத்துவில் முஸ்லிம்கள் படுகொலை, காணிஅபிவிருத்திச் சட்டமும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும், சிங்கள ஆட்சியாளர்களினால் கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி, கிழக்கில் முஸ்லிம் பெரும்பான்மை மாகாணசபை, கிழக்கு முஸ்லிம் அரசியலில் உடனடி மாற்றம் அவசியம் ஆகிய 14 தலைப்புகளின் வழியாக இந்நூலில் கிழக்கு முஸ்லிம்களுக்குள் அரசியல் ரீதியான ஒற்றுமையின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது.

9969

தமிழருள் மறைந்த அரசகுலம். ஏ.ஈ.சீ.இராசரெத்தினம். மன்னார்: கிராம முன்னேற்றச் சங்கம், கற்கடந்த குளம், முருங்கன், 1வது பதிப்பு, ஜுன் 1973. (மன்னார்: வீ.ஆர்.டொமினிக், மன்னார் அச்சகம்).

(20), 206 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 17x13 சமீ.

சான்றார் எனப்படும் வட இந்திய திராவிட சமூகத்தினரின் ஆதி வரலாறு பற்றிக் கூறும் இந்நூல் மைசூரில் சான்றார் ஆட்சி, கன்னடத்தை ஆட்சிசெய்த சான்றார் வம்சம், சோழ வம்ச நாடார்களின் வரலாறு, பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் எழுச்சி, பாண்டிய நாட்டில் நாடார் மன்னர்களின் வீழ்ச்சி, சேர நாட்டில் சான்றார்களின் அரசு, இலங்கையில் சான்றார் ஆட்சி, துராவ எனப்படும் சிங்களச் சான்றார்கள், தமிழர் மத்தியில் சாதி முறை, இலக்கியத்தில் சான்றார் வம்சம், சான்றாரைப்பற்றி ஐரோப்பிய இந்திய அறிஞர்கள், சான்றார் சூரிய குலத்தவரா? சாதியிலுள்ள பட்டங்களும் தொழில்களும் உட்பிரிவுகளும், 20ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டுக்குத் தொண்டாற்றிய நாடார் குலத்தவர் ஆகிய பதினைந்து இயல்களில் சான்றார் வம்சத்தை ஆய்வுக்குட்படுத்துகின்றது. (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2730).

9970

தமிழன் எங்கே. மு.கணபதிப்பிள்ளை. கொழும்பு 2: ஈழமணி நூற் பதிப்பகம், 60, குமாரன் இரத்தினம் வீதி, 2வது பதிப்பு, 1961, 1வது பதிப்பு, 1958. (கொழும்பு 2: கொமர்ஷியல் ஹவுஸ் லிமிட்டெட்).

(13), 68 பக்கம், விலை: ரூபா 1.50, அளவு: 18x12.5 சமீ.

தென்புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை அவர்கள் தன் பன்மொழி ஆய்வின் பயனாக தமிழர் வரலாறு பற்றிய பல்வேறு தகவல்களைத் தொகுத்து விரிவான

தொரு ஆய்வை மேற்கொள்ள உதவும் வகையில் இந்நூலைப் படைத்துள்ளார். நூல் வெளியிடப்பட்ட காலகட்டத்தில் இவர் குறிப்பிட்ட தமிழ்-தமிழன்-தமிழகம் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் புதினமாகவும் புதிய திசைநோக்கி தமிழ் ஆய்வுகளை நகர்த்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் இந்நூலுக்கு பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை வழங்கிய சால்புரை கோடிட்டுக் காட்டுகின்றது. ஆசிரியர் புரட்சிகரமான புதுமைக் கருத்துக்களையும் சிந்தனை ஓட்டத்தையும் இந்நூலில் சிறு தலைப்புகளினூடாக விபரிக்கின்றார். இராவணன் யார், மூநாடு எது, முத்தொள்ளாயிரமா மூத்தொள்ளாயிரமா, தொல்காப்பியர் பிறப்பகம், தம்பரட்டா-தாமிரபரணி தேசம், என்பன போன்ற பல்வேறு குறுந்தலைப்புகளில் தகவல்கள் இந்நூலில் பொதிந்துள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87015).

9971

தோழமையுடன் ஒரு குரல்: முஸ்லிம் தேசியமும் தமிழ் முஸ்லிம் உறவுகளும். வ.ஐ.ச. ஜெயபாலன். United Kingdom: எழுநா ஊடக நிறுவனம், 4, Kettering Road, Isham, Kettering, NN14 1HQ, 1வது பதிப்பு, ஜுன் 2013. (சென்னை 6000005: சுவடி).

163 பக்கம், விலை: இந்திய ரூபா 100., அளவு: 21.5x14 சமீ. ISBN: 978-93-80244-68-6.

ஈழத்தின் முக்கிய கவிஞர்களுள் ஒருவராக அறியப்பட்ட வ.ஐ.ச.ஜெயபாலன் ஒரு சமூக ஆய்வாளராக நின்று எழுதிய சில கட்டுரைகள் இந்நூலில் தொகுக்கப் பட்டுள்ளன. ஈழத்து முஸ்லிம் மக்கள் தொடர்பாக அவர் எழுதிய 15 கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. முடிவுறாத ஆய்வுகளும் முடிவுறாத கனவுகளும், தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும், முஸ்லிம் மக்களும் விடுதலைப் புலிகளும், தமிழர் பிரச்சினைக்கு அரசும் முஸ்லிம்கள் பிரச்சினைக்கு புலிகளும் தீர்வை முன்வைக்க வேண்டும், முஸ்லிம் மக்களும் ஒரு சில கனவுகளும், முஸ்லிம் மக்களும் ஒரு சில சிந்தனைகளும் மலையக மக்களும், முஸ்லிம் மக்களும் மலையக மக்களும், முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும்: தமிழ் மக்களே தலைவர்களே உங்கள் பதில் என்ன?, ஜனாதிபதிக்கு ஓர் பகிரங்கக் கடிதம், முஸ்லிம் காங்கிரசும் அதன் வரலாற்றுக் கடமையும், தமிழர்களே வடபகுதி முஸ்லிம்களை வரவேற்கத் தயாராகுங்கள், வரலாறும் புதிய வரலாறும், கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ, ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம், தம்பி சற்று மெலிந்ததனால் அண்ணன் தானடிமை கொள்ளலாமோ? ஆகிய தலைப்புகளில் இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும் என்ற நூலின் முன்னுரையும், பதிப்புரையும் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

9972

பண்டைத் தமிழர்: நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுக்கட்டுரைகள். சுவாமி ஞானப்பிரகாசர் (மூலம்), ஜெ.அரங்கராஜ் (தொகுப்பாசிரியர்). United Kingdom: எழுநா ஊடக நிறுவனம், 4, Kettering Road, Isham, Kettering, NN14 1HQ, 1வது பதிப்பு, ஜுன் 2013. (சென்னை 6000005: சுவடி).

200 பக்கம், விலை: இந்திய ரூபா 120., அளவு: 21x14 சமீ. ISBN: 978-93-80244-95-2.

இந்நூல் சுவாமி ஞானப்பிரகாசரின் பண்டைத்தமிழர் என்ற பிரபல்யமான கட்டுரையுடன், பூனையும் பூசையும், பனையின் பெயர்கள், தண்ணீரும் எண்ணெயும், 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ் நாட்டெல்லை, தமிழ்ப் பாஷையின் விசித்திரங்கள், தமிழில் உள்ள நிறச் சொற்கள், தவறான மனப்பதிவைத்தரும் சரித்திரக் குறிப்புகள், பழையவற்றில் பழைய குறள் வெண்பாக்கள், பண்டைய மக்களின் பொது இருப்பிடம், குடஞ்சுட்டு, இலக்கணமும் இலக்கியமும் ஆகிய மற்றைய கட்டுரைகளுமாக மொத்தம் 12 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பண்டைத்தமிழர் என்ற பிரதான கட்டுரை, ஒரு புதிய கொள்கை, தமிழரின் முன்னைய இருப்பிடக் கொள்கைகள், மத்திய தரைக்கடலைச் சூழ்ந்த நாடுகளில் தமிழரின் முன்னோர், ஒத்த ஐதீகங்களும் பழக்க வழக்கங்களும், பழங்கால எழுத்துமுறை, மேற்காசியாவிலும் ஐரோப்பாவிலும் தமிழ் இடப்பெயர்கள், குறிப்பான தெய்வ வழிபாடுகள், பணியர்களும் பண்டு தேசமும், பரத கண்ட தமிழர் நாகரிகம் ஆகிய ஒன்பது உபதலைப்புகளைக்கொண்டது. இது உலகின் ஆதித் தாய்மொழியாகத் தமிழினை முன்வைத்து, தமிழர்தம் ஆதித் தாயகமான நடுநிலக் கடற் பகுதியிலிருந்து சிந்துவெளிக்குப் பரவிப் பின்னர் தென்னிந்தியாவை வந்தடைந்தார்கள் என்னும் கருத்தை நிறுவும் வகையில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ் என்ற சஞ்சிகையிலே தொடராக எழுதிவந்த கட்டுரையாகும். தொகுப்பாசிரியர் முனைவர் ஜெ.அரங்கராஜ் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தன் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற இவர், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் செந்தமிழ் மாத ஆய்விதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

9973

மலையக அரசியல் செல்நெறியும் மலையக மக்களும். சுகுமாரன் விஜயகுமார். கொழும்பு: அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு, 1வது பதிப்பு. 2013. (கொழும்பு 6: ஸ்ரீ டிஜிட்டல் பிரஸ்).

54 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x14.5 சமீ.

24.8.2013இல் நிகழ்த்தப்பட்ட அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த பதினான்காவது நினைவுப் பேருரை இதுவாகும். இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த சுகுமாரன் விஜயகுமார் ஒரு சமூக விஞ்ஞான ஆய்வாளராவார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானச் சிறப்புப்பட்டம் பெற்றவர். 60களில் ஹட்டன் பிரதேசத்தை மையமாகக் கொண்டு மலையகத்தில் ஏற்பட்ட சமூக பண்பாட்டு விழிப்புணர்ச்சிக்கும் கல்வி மீது ஏற்பட்ட ஆர்வத்திற்கும் அடித்தளமாக நின்றவர் அமரர் இர.சிவலிங்கமாவார். அவரது பெயரில் நிகழ்த்தப் பெறும் இவ்வாய்வுரை அறிமுகம், மலையக மக்களா அல்லது இந்திய மக்களா?, பிரித்தானியர் இலங்கையில் ஏற்படுத்திய மாற்றங்களும் மலையகத் தொழிலாளர்கள் வருகையும், 1931ஆம் ஆண்டுவரையான இந்தியர்களின் அரசியலும் நடேசையரின் பணிகளும், மலையகத் தமிழரின் அரசியல் எழுச்சியின் படிகள்: 1931-1947, சர்வசன வாக்குரிமையும் மலையக மக்களின் அரசியலும், வாக்குரிமையின்

விளைவுகள், வாக்குரிமை பறிப்பின் தொடக்கம், இலங்கை இந்திய காங்கிரஸ் யாருக்கானது?, சோல்பரி குழுவும் மலையக மக்களும், சுதந்திர இலங்கையும் மலையக மக்கள் மீதான ஒடுக்கு முறைகளும் 1947-1971, பிரஜாவுரிமை மறுப்பும் அதற்கு எதிரான போராட்டங்களும், தொழிற்சங்கங்களும் மலையக அரசியலும் 1947-1977, இடதுசாரி அரசியலும் மலையகமும் 1947-1977, தொண்டமானின் தொழிற்சங்க இராச்சியம் ஐக்கிய தேசியக் கட்சி வசமாதல், மலையக தேசியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும், தொழிற்சங்க வாதம், தேசியவாதம் மற்றும் பாராளுமன்ற வாதம்: 1993இல் இருந்து இன்றுவரை, இன்றைய மலையகமும் எதிர்கால மலையகமும், முடிவுரை ஆகிய உபதலைப்புகளில் விரிந்துள்ளது.

9974

முஸ்லிம்களின் மத்தியில் குடிவழி முறை. எஸ்.அப்துல் றாஸீக். சம்மாந்துறை: சம்மாந்துறை குடிமரைக்காயர் சம்மேளனம், 1வது பதிப்பு, நவம்பர் 2012. (சம்மாந்துறை: ரோஸ் பிரின்டர்ஸ், 20, செலான் வங்கி வீதி).

xvii, 135 பக்கம், விலை: ரூபா 300., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-54813-0-4.

1949இல் எடுக்கப்பட்ட சம்மாந்துறை பெரிய பள்ளியாசலின் தோற்றத்தை முன்னட்டையில் தாங்கி வெளிவந்துள்ள சமூக வரலாற்று ஆய்வு. முஸ்லிம்கள் மத்தியில் குடிவழி முறை: தோற்றமும் தொடர்ச்சியும், பள்ளிவாசல்கள் உதயம், குடிவழி மரைக்கார் சபைகள், கணக்கன் கத்தர குடி, மாமனாபோடி குடி, தேன்முதலி குடி, பெரிய வெள்ளரசன் குடி, சின்ன வெள்ளரசன் குடி, சங்கதி குடி, இராசாம்புள்ள குடி, சுல்தான்புள்ள குடி, கோசப்பா குடி, சேனைக்குடி, பெரிய படையான்குடி, பெரிய படையாண்ட குடி, ஆதம்பட்டாணி குடி ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1960இல் ஆசிரியர் நியமனம்பெற்று பின்னாளில் அதிபராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் கலா பூஷணம் எஸ்.அப்துல் றாசிக். இவர் சம்மாந்துறை கலை இலக்கிய வரலாற்றின் நிறுவனமயப்படுத்தப்பட்ட கலாபிவிருத்திக் கழகத்தின் ஆலோசகராகவும், மஜ்லிஸ் அஷ்ஷூராவின் செயலாளர் நாயகமாகவும் கடமையாற்றியவர். தற்போது சம்மாந்துறைப்பிரதேச மத்தியஸ்த சபையின் தவிசாளராகப் பணியாற்றுகிறார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236541).

9975

வரலாற்றைத் தொலைத்த தமிழர்: மெசொபொத்தேமியாவிலிருந்து ஈழம் வரை. நிவேதா உதயராயன். சென்னை: கிரீன் புக்ஸ், 8ஏ, அழகிரி நகர் 4வது தெரு, லட்சுமிபுரம், வடபழநி, 1வது பதிப்பு, 2014. (சென்னை:அச்சக விபரம் தரப்பட வில்லை).

64 பக்கம், விலை: இந்திய ரூபா 40., அளவு: 21.5x14 சமீ.

சுமேரியர் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுவரும் நூலாசிரியர் கடந்த 27 ஆண்டுகளாக புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்துவருபவர். 14 ஆண்டுகளாக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பட்டறை ஆசிரியராகவும் தமிழ்ப்பள்ளி அதிபராகவும்

சேவையாற்றுபவர். வரலாறு என்றால்/எதைப்பற்றி எழுதுவது வரலாறு?/மாந்த வரலாறு/பனிக்காலமும் மாந்த இடப்பெயர்வும்/ மெசொப்பொத்தேமியா/ விவசாயம்/ பொறிமுறையாக்கப்பட்ட நீர்ப்பாசனம்/ கட்டடக்கலை/ சீகுராட்/ கூனிபோம் எழுத்து வடிவம்/ இயற்கை வழிபாடு/ சுமேரியர் இடப்பெயர்வு/ சிந்துவெளி நாகரிகம்/ சுமேரியர் தான் தமிழர் ஆகிய தலைப்புகளில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

9976

வன்னியர். *சி.பத்மநாதன். பேராதனை: சி.பத்மநாதன், வரலாற்றுத்துறை, இலங்கைப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, கார்த்திகை 1970. (யாழ்ப்பாணம்: சைவப் பிரகாச அச்சியந்திரசாலை).*

111 பக்கம், விலை: ரூபா 2.50, அளவு: 21.5x14 *சமீ.*

இரண்டு பகுதிகளைக் கொண்ட இந்நூலின் முதலாம் பகுதியில் வன்னியரின் தோற்றம் (இலக்கியத்தில் வன்னியர், தென்னிந்திய வரலாற்றில் வன்னியர்), தென்னகத்து வன்னிமைகள், ஈழத்து வன்னிமைகள் I *(தமிழ் சிங்கள அரசுகளில் வன்னிமைகள், வன்னி நாடுகளின் தோற்றம், திருமலை வன்னிமைகள், முக்குவ வன்னிமைகள்- மட்டக்களப்பு வன்னிமையும் புத்தளத்து வன்னிமையும்), ஈழத்து வன்னிமைகள்* II *(தோற்றுவாய், அடங்காப்பற்றில் வன்னியர் குடியேற்றம்) ஆகிய நான்கு அத்தியாயங்களும், இரண்டாம் பகுதியில் பரராச சேகர மகாராசாவின் திருப்பணி கூறும் பட்டயம், கயிலை வன்னியனார் மட தர்மசாதனப் பட்டயம், நல்ல மாப்பாண வன்னியனின் ஓலை, வன்னியர் மடாலய தர்மஸாஸனப் பட்டயம் ஆகிய நான்கு அத்தியாயங்களுமாக மொத்தம் எட்டு அத்தியாயங்களில் வன்னியர் பற்றிய விரிவான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 87304).*

9977

விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும். *ஏ.பீர்முகம்மது. கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2013. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *64 பக்கம், விலை: ரூபா 300., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-413-3.

விபுலாநந்த அடிகளார் முஸ்லிம்களின் அறிவுசார் விடயங்கள் பலவற்றில் மிகவும் அக்கறை கொண்டவராயிருந்தார். அவர்களது கல்வி நிலையை மேம்படுத்துதல், அறபு-தமிழ் அகராதியொன்றைத் தயாரித்தல், நாட்டுப்புறப்பாடல்களைப் பாதுகாத்தல், என்பன அவற்றுள் முக்கியமானவையாகும். அவர் வலியுறுத்திய தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையிலான உறவின் அவசியத்தை இந்நூலில் ஆசிரியர் நிறுவமுனைகின்றார். விபுலாநந்தரின் பன்முக ஆளுமை, அடிகளார் பற்றி, பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பார்வையில் அடிகளார், அடிகளாரை அண்மித்திருந்த சூழல், கிழக்கிலங்கையும் அரசியல் நிலைப்பாடுகளும், விபுலாநந்தரின் வாழ்வுமுறை, சிவாநந்தா வித்தியாலயம், அடிகளாரிடம்

பாடங்கேட்ட முஸ்லிம்கள், நட்புறவும் சமூகத் தொடர்பும், அறிஞர் அஸீஸ் அவர்களின் அநுபவப் பகிர்வு, அடிகளாரும் அறபு மொழியும், விபுலாநந்தர் காலத்து முஸ்லிம் பிரபலங்கள், அவிழ்க்கப்படாத முடிச்சு, நிரூபிக்கப்பட்ட ஆளுமை, இலங்கையில் இறுதியாகக் கலந்துகொண்ட பொது நிகழ்வு, முடிவல்ல-தொடரவேண்டிய பெரும்பணி அகிய 16 தலைப்புகளில் இவ்வாய்வு விரிகின்றது. நூலாசிரியர் கல்முனை ஸாஹிறாக் கல்லூரியின் மாணவர். அதே கல்லூரியில் கணித விசேட ஆசிரியராயும், அதிபராயும் பணியாற்றியவர். கல்விப்பணிப் பாளராக ஓய்வுபெற்றவர்.

9978

வேளாளர் நாகரிகம். சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்). பல்லாவரம்: மறைமலை அடிகள், 2வது பதிப்பு, ஜூலை 2007, 1வது பதிப்பு விபரம் அறியமுடிய வில்லை. (அச்சக விபரம் தரப்படவில்லை).

(10), 92 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18x13 சமீ.

இந்தியாவில் ஆரியர் குடியேற்றத்திற்கு முன் செழித்துத் தழைத்திருந்த வேளாளர் நாகரிகம் பற்றி இந்நூல் ஆராய்கின்றது. தமிழ்மொழியையும், சிவ வழிபாட்டையும், கட்டிக்காத்த அவர்களது நாகரிகம், இயல்பாய் அமைந்த இரக்க சுபாவத்தினால் பின்னாளில் பிழைப்புக்காக வந்தேறிய குடிகளான ஆரியருக்கு உதவியளித்து அவர்களையும் அந்தமண்ணில் நிலைகொள்ளவைத்த வரலாறு இந்நூலில் பல்வேறு சங்க நூல்களின் ஆதாரங்களுடன் விளக்கப்படுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 4493).

9979

ஸ்ரீ லங்காவில் முஸ்லிம்கள்: இருப்பும் உறவும். அனிஸ்டஸ் ஜெயராஜா. கொழும்பு 6: பூங்காற்று பதிப்பகம், Green Breeze Publishers, 59,1/1, Highlevel Road, Kirulapane, 1வது பதிப்பு, பெப்ரவரி 2012. (அச்சக விபரம் தரப்படவில்லை).

xii, 56 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 18.5x12.5 சமீ.

இலங்கைவாழ் முஸ்லிம் மக்கள் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய நூல். பல்வேறு வரலாற்று நூல்களையும், பத்திரிகைச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்ட அண்மைக்காலத் தகவல்களையும் உள்ளடக்கியது. நூலாசிரியர் முன்னர் சுனாமி பற்றி ஒரே நாளில் வாழ்வு என்ற நூலை எழுதியவர்.

954.93(4) பிரதேச வரலாறு

9980

அனலைத் தென்றல்:சிறப்பு வெளியீடு. வெளியீட்டுக் குழு. பிரான்ஸ்: அனலைதீவு மக்கள் ஒன்றியம், பாரிஸ், 1வது பதிப்பு, ஜூன் 2014. (அச்சக விபரம் தரப்பட வில்லை).

24 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

அனலைதீவு மக்கள் ஒன்றியத்தில் பாரிஸ் கிளை 22.06.2014 அன்று நடத்திய ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட சிறப்பு மலர். வாழ்த்துரைகள், ஆசியுரைகளுடன், அனலைதீவு: ஒரு பார்வை என்ற தலைப்பில் அசலகேசரி எழுதிய விரிவான கட்டுரையும், திருமதி மகேஸ்வரன் சுசீலாதேவி, வி. ரி.இளங்கோவன், சிவசாந்தி நடராசா, அசலை, அனலை ஆறு இராசேந்திரம், சக்தி அ.பாலஐயா ஆகியோரின் அனலைதீவு சார்ந்த கவிதைகளும், அனலைதீவு தல புராணங்கள் பற்றிய ஆக்கங்களுக்கான சுட்டியொன்றும், 1871-1981 கால கட்டத்துக்கான அனலைதீவின் குடித்தொகை கணிப்பு அட்டவணையொன்றும், தீவின் வரைபடமும் இடம்பெற்றுள்ளன.

9981

உடப்பு: தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று. வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 1வது பதிப்பு, 2014. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

xvi, 286 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 650., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-439-3.

இந்நூல் உடப்பூரின் வரலாறு, கலை, கலாச்சாரம், பண்பாடுகள், மரபுகள் போன்ற வற்றை ஆராய்வதுடன், அவற்றின் பரிணாம வளர்ச்சி அதில் உடப்பு ஊரவரின் பங்களிப்பு என்பவற்றையும் விபரிக்கின்றது. மேலும், இவ்வம்சங்களைப் பிரதிபலிக்கும் புகைப்பட ஆவணங்களும் இந்நூலை அலங்கரிக்கின்றன. அறிமுகம்: வடமேல் கரைத் தமிழர் வரலாறு, ஆதி வரலாறும் உடப்பூரும், இறைபக்தியும் குலதெய்வமும், ஈடில்லாத் தொழில்கள், உலவும் வாழ்வியல் சடங்குகள், ஊர்த்திருவிழாக்கள், எளிமைமிகு கிராமிய வழிபாடு, ஏற்றம் தரு கல்வி, ஐவர் கதையும் ஆடித் திருவிழாவும், ஒன்றிணைக்கும் நாட்டாரிலக்கியங்கள், ஓங்கி உலகளந்த எங்கள் தமிழ்மொழி, ஔவை வழி எங்கள் மொழி ஆகிய 12 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கலாநிதி வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஓர் முதுநிலை விரிவுரையாளர். உடப்பூரில் கல்விகற்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக இளமாணி சிறப்புப் பட்டம் பெற்றவர்.

9982

கச்சதீவு: அன்றும் இன்றும். ஏ.சூசை ஆனந்தன். யாழ்ப்பாணம்: நடமாடும் துவிச்சக்கரவண்டி மீன் வணிகர் மன்றம், பலாலி வீதி, திருநெல்வேலி, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1995. (யாழ்ப்பாணம்: ஸ்ரீனா அச்சகம்).

x, 74 பக்கம், வரைபடங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 22x14.5 சமீ.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல்துறை விரிவுரையாளரான சூசை ஆனந்தன் எழுதியுள்ள நூல். கச்சதீவு அதன் புவியியல் பின்னணி, கச்சதீவு உரிமைப் பிரச்சினையும் வரலாற்றுப் பின்னணியும், கச்சதீவு உரிமை தொடர்பான கோரிக்கைகளும் எதிர்க் கோரிக்கைகளும், 1974ஆம் ஆண்டு உடன்படிக்கை,

1976ஆம் ஆண்டு உடன்படிக்கை, 1983இன் பின்னர் வட பகுதிக் கடற்பரப்பில் ஏற்பட்ட நிகழ்வுகள், சுமுகமான தீர்வை நோக்கி ஆகிய பிரதான தலைப்புகளின்கீழ் கச்சதீவு பற்றி இந்நூல் விரிவாக ஆராய்கின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 115971).

9983

காலத்தை வென்றுநிற்கும் கந்தரோடை. சே.சிவசண்முகராஜா. யாழ்ப்பாணம்: கலாநிதி சே.சிவசண்முகராஜா, 199/1, கில்னர் ஒழுங்கை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2013. (கோண்டாவில்: சிவரஞ்சனம் ஒப்செட் பிரின்டர்ஸ், பலாலி வீதி).

xvi, 139 பக்கம், தகடுகள், விலை: ரூபா 450., அளவு: 20.5x14.5 சமீ., ISBN: 978-955-44239-3-0.

கந்தரோடைப் பிரதேசத்தில் குடியேறியிருந்த பூர்வகுடிகளான மக்கள், பண்பாட்டில் முன்னேறியவர்களாக கிறிஸ்துவுக்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளிலிருந்தே பிற நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டவர்களாகவும், உலோகத்தின் உபயோகத்தை அறிந்தவர்களாகவும் வாழ்ந்திருந்தனர் என்று வரலாற்றாசிரியர் கா.இந்திரபாலா குறிப்பிட்டுள்ளார். அத்தகு தொன்மைவாய்ந்த கந்தரோடைப் பிரதேசம் பற்றிய பின்னைய மற்றும் சமகால பிரதேச வரலாற்றை இந்நூல் பதிவுசெய்கின்றது. நுழைவாயில், அறிமுகம், கந்தரோடையின் அயற்கிராமங்கள், கந்தரோடை பெயர்க்காரணம், நீர்வளம், வழுக்கையாறு, கந்தரோடையிலுள்ள குறிச்சிகள், கந்தரோடை மக்கள், கல்விச் செல்வம், கந்தரோடையில் மகாத்மா காந்தி, ஆலயங்கள், கந்தரோடையில் புதைபொருள் ஆய்வுகள், கந்தரோடை மன்னர், கந்தரோடையும் பௌத்தமதச் சின்னங்களும், பொதுவான விடயங்கள் சில, கந்தரோடை மண்ணின் புகழ்பூத்த மாந்தர்கள், முடிவுரை ஆகிய 17 இயல்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. கந்தரோடைக் கிராமத்துக் கோயில்களின் ஊஞ்சல் பாக்களும், பாடசாலை கீதங்களும், பின்னிணைப்புகளாகத் தரப் பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234400).

9984

சீரிணுவைத் திருவூர். மூ.சிவலிங்கம் (தொகுப்பாசிரியர்). யாழ்ப்பாணம்: இணுவில் சைவத் திருநெறிக் கழகம், இணுவில், 1வது பதிப்பு, மே 2004. (யாழ்ப்பாணம்: யோகநாதன் கிராப்பிக்ஸ் அன்ட் ஒப்செட் பிரின்டர்ஸ், காங்கேசன்துறை வீதி, இணுவில்).

xxv, 428 பக்கம், தகடுகள், புகைப்படம், விலை: ரூபா 500., அளவு: 21x14.5 சமீ.

இணுவில் கிராமத்தின் கோயில்கள், கலைகள், பண்டைய மக்களின் பக்திநெறி, அவர்களை வழிநடாத்திய சித்தர்கள், அருளாளர்கள், கல்விமான்கள் ஆகியோரின் சிறப்பு, அவர்கள் உருவாக்கி வழிநடத்திய சமய சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், இணுவிலில் வளர்ந்த கலைகள், நாடக, நாட்டிய மரபுகள் என்பனவற்றை விரிவாக உள்ளடக்கிய பிரதேச வரலாற்று நூல் இதுவாகும். ஒவ்வொரு கோவிலுக்கும் தனித்தனியாக 21 அத்தியாயங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன், அந்தணப்

பெரியார்கள், இணுவில் பெரிய சந்நியாசியார், தவயோகி, இணுவில் சச்சிதானந்த சுவாமிகள், சின்னத்தம்பிப் புலவர், காரைக்கால் சுவாமியார் எனப்படும் அம்பல வாணர் சுவாமியார், அன்னை சாத்திரம்மா, போன்றோர் உள்ளிட்ட பல பெரியார்களுக்கும் தனித்தனி அத்தியாயங்கள் வழங்கி விரிவாக ஆராய்ந்துள்ளார். இணுவில் சைவத் திருநெறிக்கழகம், இளந்தொண்டர் சபை, திருநெறிய தமிழ் மறைக் கழகம், இந்து மகாசபை, இந்து இளைஞர் பேரவை, பரமானந்தக் களம், சிவகாமி அன்னதான சபை, இணுவில் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம் ஆகிய நிறுவனங்களும் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன. இணுவில் கலைமரபும் கல்விமரபும் பேணிய நிறுவனங்களான திண்ணைப்பள்ளிகள், இராமநாதன் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீடம், இணுவில் இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி, மருதனார் மடம் இறையியல் கல்லூரி ஆகியனவும் சிறப்புற விளக்கப்பட்டுள்ளன. மகாவித்துவான் ந.வீரமணி ஐயர், லயஞான குபேரபூபதி வி.தெட்சணாமூர்த்தி போன்றோர் பற்றிய சிறப்புத் தகவல்களும் தனி இயல்களாகத் தரப்பட்டுள்ளன. இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட மூ.சிவலிங்கம் வாழ்க வளமுடன், இல்லறம் சிறந்திட வாழ்க, இறையருட் செல்வர்கள் போன்ற பல நூல்களை ஏற்கெனவே வழங்கியவர். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 140439).

9985

சுவிற்சர்லாந்தும் தமிழர்களின் குடியேற்றமும். பொன்னம்பலம் முருகவேள். சுவிட்சர்லாந்து: வள்ளுவன் பதிப்பகம், Bumplizstrasse 48, 3027 Bern, 1வது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

271 பக்கம், வண்ணப் புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19.5 சமீ.

இலங்கையின் வடபுலத்தில் உள்ள பூநகரியிலிருந்து சுவிட்சர்லாந்துக்குப் புலம் பெயர்ந்து சென்றவர் இந்நூலாசிரியர். 25 ஆண்டுகளின் முன் தான் வந்தடைந்த கதையையும் இதன் தொடர்ச்சியாக சுவிட்சர்லாந்தின் புலம்பெயர் வாழ்க்கை அனுபவங்களையும் அந்நாட்டில் தமிழ் வளர்ச்சிப்பணிகள் பற்றியும் 42 அத்தியாயங் களில் இந்நூலில் பல்வேறு பின்னணித் தகவல்களுடன் பதிவுசெய்திருக்கிறார். தன் பதிவுகளுக்கு ஆதாரமான ஏராளமான புகைப்பட ஆவணங்களையும் இந் நூலில் சேர்த்திருக்கிறார்.

9986

தென்னங்கீற்று கலைமாலை 10 சிறப்புமலர்: புங்குடுதீவு மக்கள் ஒன்றியம், பிரான்ஸ்: சிறப்பு மலர். மலர் வெளியீட்டுக் குழு. பிரான்ஸ்: புங்குடுதீவு மக்கள் ஒன்றியம், 1வது பதிப்பு, ஒக்டோபர் 2013. (பிரான்ஸ்: அச்சக விபரம் தரப்பட வில்லை).

72 பக்கம், வண்ணப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 26x19 சமீ.

புங்குடுதீவு மக்கள் ஒன்றியத்தின் பிரான்ஸ் அமைப்பின் 12ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட 10ஆவது கலை மாலை நிகழ்வின் போது வெளியிடப்பெற்ற மலர். புங்குடுதீவு வரலாறு, அடுத்த தசாப்தத்தில் புங்குடுதீவு, பெரியவாணரும் சின்னவாணரும், வாணர் தாம்போதி, ஆகிய கட்டுரைகளுடன் மண்ணின் மைந்தர்கள் 2013 என்ற சிறப்புக் கட்டுரையும் இடம்பெற்றுள்ளது. இதில் புங்குடுதீவுப் பிரமுகர்களான தியாகு வாத்தியார் (வை. குமாரசுவாமி), சட்டத்தரணி எஸ்.கே.மகேந்திரன், ஆசிரியர் இலங்கையர் கனகசபை அரியரெத்தினம், ஆசிரியை மோகனசுந்தரம் மகாலெட்சுமி, மு.தளைய சிங்கம், அ.ந.தம்பிராசா, கிராமசேவையாளர் தளையசிங்கம், தபால் ஊழியர் தியாகராஜா, ஆசிரியர் சு.யோ.பூராசா, நவரெத்தினம் பாலசுப்பிரமணியம், வெலிச்சோர் கந்தசாமி, ஏ.பசுபதி, கந்தையா திருநாவுக்கரசு, ஆசிரியர் க. ஐயாத்துரை, தம்பிராசா சங்கரராசா, நாகலிங்கம் பாலச்சந்திரன், தம்பையா விநாயகமூர்த்தி, கோபாலபிள்ளை மணிமாறன், செல்லத்தம்பி அதிபர் (வேலுப் பிள்ளை கதிர்காமர்), வித்துவான் பொன். அ.கனகசபை, சின்னத்தம்பி குமாரதாஸ், கந்தையா சண்முகலிங்கம், பரநிருபசிங்கம் பாலசுப்பிரமணியம், அதிபர் தில்லையம்பலம் சதாசிவம், ஏ.சிவலிங்கம், கு.வி.செல்லத்துரை, வித்துவான் சி.ஆறுமுகம், சு.வில்வரெத்தினம், ஆசிரியர் இ.க.செல்வரத்தினம், ஆசிரியர் இராமலிங்கம் குலசேகரம்பிள்ளை, கண்ணையா மாஸ்டர் (அ.க.கந்தையா), அதிபர் ச.சொக்கலிங்கம், ஆ.நமசிவாயம், ஆசிரியர் கந்தையா ஐயாத்துரை, அதிபர் சு.சபாரத்தினம் ஆகியோர் பற்றிய பெறுமதிவாய்ந்த வரலாற்றுக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

9987

தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரமலையும். பரமு புஷ்பரட்ணம். கந்தரோடை: நிறுவுநர் அம்பலவாணர் கந்தையா நினைவுப் பேருரை, யாழ்/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, கந்தரோடை, சுன்னாகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2001. (யாழ்ப்பாணம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி).

60 பக்கம், விளக்கப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ.

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கருள் ஒருவரான அம்பலவாணர் கந்தையா (16.6.1869-3.8.1951) அவர்கள் மறைவின் 50 ஆண்டுகளை நினைவு கூர்ந்து, அவர் தாபித்திருந்த தமிழ்ப் பாடசாலையினால் ஒழுங்குசெய்யப்பட்ட நிறுவுநர் நினைவுப் பேருரை 3.8.2001 அன்று நிகழ்த்தப்பட்டது. அச்சிறப்புரையினை ஆற்றியவர் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் பரமு புஷ்பரட்ணம் அவர்கள். அவரது உரையின் நூல்வடிவம் இதுவாகும்.

9988

நானும் என் தாய்மண்ணும். மேரி புஷ்பம் மருது கந்தப்பு. நெடுந்தீவு: ஹோட்டல் சமுத்ரா, 1வது பதிப்பு, மாசி 2014. (யாழ்ப்பாணம்: மெகா டிஜிட்டல்).

xii, 28 பக்கம், தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20.5x14.5 சமீ.

இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள சப்த தீவுகளுள் ஒன்றான நெடுந்தீவு பற்றிய நூல் இது. பசுந்தீவு, பசுத்தீவு, பால்தீவு என்று முன்னர் வழங்கிய காரணப் பெயர்களுடன் ஒல்லாந்தர் ஆட்சியில் டெல்ப் Delft என்ற பெயரையும் தாங்கியிருந்தது. இந்நூலில், என் தாய் மண், பாரம்பரிய விளையாட்டுக்கள், பசுத்தீவா பசுந்தீவா, சுயமுயற்சி, விவசாயம், மண்ணின் மைந்தர்கள், மத வழிபாடு, கடற்போக்குவரத்து, கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு, பொற்காலம், நினைவுச் சின்னங்கள், எனது நிலைப்பாடு ஆகிய தலைப்புகளின் கீழ் தன் தாய்மண்ணின் சிறப்புகளையும் தன் மண்மீது கொண்ட பிணைப்பினையும் இணைத்து இந்நூலை உருவாக்கியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 236003).

9989

நெய்தல்: நீர்கொழும்பு வாழ்வும் வளமும். லெ.முருகபூபதி (தொகுப்பாசிரியர்). நீர்கொழும்பு: நீர்கொழும்பு இலக்கிய வட்டம், 99/5, அலஸ் வீதி, 1வது பதிப்பு, பெப்ரவரி 2015. (கொழும்பு 6: குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை).

xiv, 214 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 400., அளவு: 21.5x14.5 சமீ.

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் (முன்னாள் விவேகானந்த மகா வித்தியாலயம்) 60 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலர், நீர்கொழும்புடனும் கல்லூரியுடனும் தொடர்புடைய அறிஞர், ஆர்வலர்களின் நினைவுகளைக் கட்டுரைகளாகவும், கதைகளாகவும் சுமந்து வரும் இம்மலரில் நினைவுப் பகிர்வு, சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என நான்கு பிரிவுகளில் மொத்தம் 29 படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

9990

பருத்தித்துறை ஊராம். வீ.பீ.ரகுவரன். பருத்தித்துறை: வீ.பீ.ரகுவரன், தேடல் வெளியீடு, பிராமணர் வீதி, தும்பளை, 1வது பதிப்பு, ஜூலை 2012. (பருத்தித்துறை: தீபன் பிரின்டர்ஸ், வீ.எம்.வீதி).

vii, 250 பக்கம், விளக்கப்படங்கள், படங்கள், விலை: ரூபா 750., அளவு: 24.5x18 சமீ., ISBN: 978-955-53921-3-6.

பருத்தித்துறை நகர் பற்றிய சமூக வரலாற்று ஆய்வு நூல். பருத்தித்துறை நகரின் சமூக வரலாற்றுப் பின்னணி, பண்டிதர் க.ஏரம்பமூர்த்தி வாத்தியாருடனான நேர்காணல் (1994), திரு.து.குலசிங்கம் அவர்களுடனான நேர்காணல், பருத்தித் துறைச் சந்தை, ஆலயங்கள், வாழ்க்கை முறை, பாடசாலை மரபுகள், விளையாட்டு மரபுகள், நாடக மரபுகள், நினைக்கப்படுவர், பண்டிகைகளும் கொண்டாட்டங் களும், வீடு முதல் காடு வரை, பலதும் பத்தும், மரபுகளும் மாற்றங்களும், முடிவுரை ஆகிய 15 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக, வாழ்வியல் பாடல்கள், பருத்திநூல்-பருத்திப்புடவை தயாரிப்புத் தொழில், பருத்தித்துறையில் சாயமிடல்-அலங்காரக் கலைஞர்கள், பருத்தித்துறை தொடர்பாக திரு. எம்.சிறிபதி அவர்களின் கருத்து ஆகிய நான்கு விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன. (இந்

நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 234549).

9991

பூநகரிப் பூங்கா. பொன்னம்பலம் முருகவேள் (பதிப்பாசிரியர்). சுவிட்சர்லாந்து: வள்ளுவன் பதிப்பகம், Bumplizstrasse 48, 3027 Bern, 1வது பதிப்பு, 2013. (அச்சக விபரம் தரப்படவில்லை).

146+(54) பக்கம், வண்ணத் தகடுகள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தையும் பெருநிலப்பரப்பையும் இணைக்கும் தொடக்க வாயிலாக அமைந்த பிரதேசம் பூநகரியாகும். தொல்லியல் வரலாற்றுப் பழமைமிக்க இப்பிரதேசத்தின் வரலாற்றை விளக்கும் கட்டுரைகள், கவிதைகள் மற்றும் சுவிற்சர்லாந்தில் புலம்பெயர்ந்து வாழும் பதிப்பாசிரியரின் தந்தையார் வைத்திய கலாநிதி அமரர் க.பொன்னம்பலம் அவர்களின் விரிவான ஞாபகார்த்த பதிவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கிய நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது.

9992

மருதமுனையின் வரலாறு: ஆள்சார் கண்ணோட்டம். முஹம்மதுத் தம்பி முஹம்மது நௌபல் (மூலம்), எம்.எம்.மிஹ்ழார் (பதிப்பாசிரியர்). மருதமுனை: ஆயிஷா வெளியீட்டகம், 1வது பதிப்பு, 2012. (மருதமுனை: அப்னா அச்சகம்).

x, 54 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21x14.5 சமீ., ISBN: 978-955-54169-2-4.

மருதமுனைக் கிராமத்தைச் சேர்ந்த நூலாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வியாபார நிர்வாகமாணி சிறப்புப்பட்டம் பெற்றவர். பட்டதாரி ஆசிரியராக மருதமுனை கமஃஅல்மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் சிறிதுகாலம் பணியாற்றியவர். இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்வாங்கப்பட்டு அட்டாளைச்சேனை, பொத்துவில், ஓட்டமாவடி பிரதேச செயலகங்களில் பணியாற்றிய பின்னர், கல்முனை பிரதேச செயலாளராகப் பணியாற்றுகின்றார். இந்நூலில் ஆள்சார்கண்ணோட்டத்தின் வழியாக (individual perspective) மருதமுனையின் சமூக வரலாற்றை படம்பிடித்துக்காட்டுகின்றார். அவ்வகையில் மருதமுனை மண்ணின் மக்களான செயினுலாப்தீன் முகைதீன்பாவா (1951), செய்யது சாலி மௌலானா பாரிமௌலானா (1943), முகம்மது காசிம் மரைக்கார் அஹமது முகைதீன் (1945), செய்யது முஹம்மது முஹம்மது பழீல் (1938), முகம்மது சம்சுதீன் ஐயூப் (1936), இப்றாலெவ்வை முகம்மது இஸ்மாயில் (1931), அசனார் லெவ்வை தாவுத்லெவ்வை மரைக்கார் (1932), செயின் மௌலானா மசூர் மௌலானா (1932), ஆதம்பாவா அப்துல் ரஹீம் (1925), ஆதம்சாஹ் ஹபீப் முகம்மது (1920), ஆதம்பாவா பக்கீர் முகைதீன் (1917), சுலைமாலெவ்வை அலியார் ஹாஜியார் (1896), மீராலெவ்வை இப்றாலெவ்வை (1833) ஆகியோர் பற்றிய வாழ்க்கை வரலாறு கொண்ட 13 கட்டுரைகளுடன், மருதமுனையிலிருந்து வெளிவந்த முனைமலர் சஞ்சிகையில் வெளியிடப்பட்ட நூலாசிரியர் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

9993

வன்னி: வரலாறும் பண்பாடும். கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் (பதிப்பாசிரியர்). நோர்வே: கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம், 1வது பதிப்பு, ஜூலை 2014. (சென்னை 600026: குமரன் வெளியீட்டாளர்கள், இல.3, மெய்கை விநாயகர் தெரு, வடபழநி)

xx, 655 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x19 சமீ., ISBN: 978-82-303-2572-8.

இலங்கையின் வன்னி மாவட்டம் பற்றிய வரலாறு, பண்பாடு பற்றிப் பல்வேறு அறிஞர்களாலும் எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்நூல், தொல்லியலும் வரலாறும், சமூகமும் வாழ்வியலும், சமய நெறிகளும் பண்பாடும் என மூன்று அடிப்படைக் கூறுகளை மையப்படுத்துகின்றது. தொல்லியலும் வரலாறும் என்ற முதலாவது பிரிவில், சி.பத்மநாதன் (வன்னியில் நாகர் உருவாக்கிய அரசு, மாதோட்ட நகரம், அடங்காப்பற்று வன்னிபங்கள்), ப.புஷ்பரட்ணம் (வன்னியின் வரலாறும் பண்பாடும்: அண்மைக்கால தொல்லியற் கண்டுபிடிப்புகளைச் சிறப்பாகக் கொண்ட ஆய்வு), பொ.இரகுபதி (ஈழத்தில் வன்னி என்ற சொல்வழக்கு), ஜெயமோகன் (வரலாற்றெழுத்தின் வரையறைகள்), சிவ.தியாகராஜா (வரலாற்றுக்கு முற்பட்ட வன்னிப் பண்பாடு), செல்லையா கிருஷ்ணராஜா (போர்த்துக்கீச ஒல்லாந்தர்கால யாழ்ப்பாணம்: வன்னி வாணிபத் தெருக்கள்), சி.க.சிற்றம்பலம் (வரலாற்றுக் காலத்திற்கு முந்திய வன்னிநாட்டின் தொல்லியற் சான்றுகள்), மு.நித்தியானந்தன் (ஜே.பி.லுயிஸ் வன்னியின் ஆவணச் சிற்பி), கா.இந்திரபாலா (The Origin of the Tamil Vanni Chieftaincies of Ceylon), ச.அனித்தா (பிரித்தானியர்கால வன்னி இராச்சியம்), அருணா செல்லத்துரை (பண்டாரவன்னியன்), தி.திபாகரன் (வன்னி பெருநிலப் பரப்பில் ஆய்வுக்குட்படுத்த வேண்டிய தொல்லியல் மையங்கள்), செல்வி ஜெயரூபி (யாழ்ப்பாண இராசதானிக் காலத்தில் வன்னிமைகள்), அம்பலவாணர் மயூரன் (பாலியாற்றங்கரைக் குடியிருப்பும் அதன் வளர்ச்சிப் போக்கும்-வரலாற்றுரீதியான பார்வை), ஆகியோரின் ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. சமூகமும் வாழ்விலும் என்ற பிரிவில் சரத் விமலபண்டார கோட்டகம (Birds of Vanni District), கே.குகபாலன் (வன்னிப் பிரதேசத்தின் அண்மைக்கால மாற்றங்களும் மீள்குடியேற்றங்களும்), கந்தையா சண்முகலிங்கம் (ஜே.பி.லுயிஸ் இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு என்றநூல் பற்றிய அறிமுகம்), ச.சத்தியசீலன் (இலங்கையில் தமிழ்ப் பாரம்பரியப் பிரதேசங்களும் அரச குடியேற்றத்திட்டங்களும்), சூசை ஆனந்தன் (வன்னிப்பிரதேச மீன்பிடித் தொழில்), இரா.சிவச்சந்திரன் (வன்னிப்பிரதேசம்: விவசாய அபிவிருத்தியும் நீர்வளப் பயன்பாடும்), நா.சண்முகலிங்கன் (வேரோடு பிடுங்குதலும் மீள்நடுதலும்: வன்னிக் குடும்பங்களின் சமூக நிலை), த.கிருஷ்ணமோகன் (இலங்கையின் வன்னிப் பிரதேச சட்டசபைப் பிரதிநிதித்துவம்), சுபாஜினி உதயராஜா (பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள்), எஸ்.உதயகுமார், ஞா.கீதாவினி (பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலை), க.கிருஷ்ணராஜா (குடியேற்றத்திற்குப் பின்னரான அபிவிருத்திக்குரிய சமூகநிலை), எஸ்.சிவதாஸ்

(வன்னி ஆன்மா), ஜோசப் பாலா (வளங்கொண்ட வன்னிப்பிரதேசத்தின் வாழ்வியல் அனுபவங்கள்), வின்சன்ற் பற்றிக் (மனிதம் மலரட்டும்), சிவாஜினி சிவசங்கர் (வன்னி மாவட்ட வனம்), சி.தமயந்தி (வன்னி மாவட்ட வளர்ச்சிப் படிகளில் நாடாளுமன்ற நடவடிக்கைகள்) ஆகியோரின் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இறுதிப் பிரிவான சமய நெறிகளும் பண்பாடும் என்ற பகுதியில் நா.சுப்பிரமணிய ஐயர் (வன்னிப்பிரதேச தமிழ் இலக்கியம்), பார்வதி கந்தசாமி (வன்னியின் பெண்மையின் பக்கங்கள்), உ.சேரன் (மொழியால் அமைந்த நிலம்), த.சிவபாலு (வன்னிப்பிரதேசம்: தனித்துவமும் பண்பாடும்), ம.இரகுநாதன் (வன்னிப்பிரதேச நாவல்கள்), முல்லைமணி வி.சுப்பிரமணியம் (வன்னி நாட்டார் இலக்கியம்), நா.யோகேந்திரநாதன் (வன்னிச் சிறுதெய்வ வழபாடு), இ.அனுஜா (திருக்கேதீஸ்வரம்), ச.இராசேஸ்வரன் (வற்றாப்பளைக் கண்ணகித் தெய்வம்), ம.க.அருள்பிரகாசம் (தூய மடுமாதா திருத்தல வரலாறு), எஸ்.கஜானா (வன்னியில் சமய நிலை), வ.ஐ.ச.ஜெயபாலன் (ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்- நெடுங்கவிதை) ஆகியோரின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

மேலும் பார்க்க: 9251, 9256, 9330

954.93(5) தொல்லியலாய்வு

9994

இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள். *பரமு புஷ்பரட்ணம். யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம், புத்தூர் கிழக்கு, புத்தூர், 1வது பதிப்பு, ஜனவரி 2001. (தஞ்சாவூர் 7: திருவள்ளுவர் கொம்பியூட்டர் பிரின்டர்ஸ் அன்ட் புக் மேக்கர்ஸ், 141, ஜே.டீ.கொம்ப்ளெக்ஸ், ஈஸ்வரி நகர், மருத்துவக் கல்லூரி வீதி).*

xii, *219 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு:* 20.5x14 *சமீ.*

முன்னுரை, இந்திய நாணயங்களும் இலங்கைத் தமிழர்களும், பிராமி எழுத்துப் பொறித்த தமிழர் நாணயங்கள், பண்டைய காலத்தில் தமிழ் மன்னர்கள் வெளியிட்ட நாணயங்கள், வட இலங்கை அரசுகால நாணயங்கள், நல்லூர் இராசதானி கால நாணயங்கள், நாணயங்களும் தமிழர் வரலாறும், ஆகிய ஏழு பிரதான இயல் களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 135727).

மேலும் பார்க்க: 9987

972.91 கியூபா வரலாறு

9995

கியூபா புரட்சிகர யுத்தம். *ஏர்னெஸ்ரோ ஷே குவேரா (மூலம்), மறுமலர்ச்சிக் கழகம் (தமிழாக்கம்). யாழ்ப்பாணம்: மறுமலர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1984. (யாழ்ப்பாணம்: புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்).*

(4), 112 பக்கம், விலை: ரூபா 25., அளவு: 21.5x14 *சமீ.*

கியூபா அமெரிக்காவுக்கு அண்மையிலிருக்கும் மத்திய அமெரிக்க நாடாகும். பல்கலைக்கழக மாணவரான பிடல் காஸ்ரோவும் அவரது நண்பர்களும் 1953இல் மொனகாடோ என்ற இடத்து இராணுவ முகாம் மீது முறையான கணிப்பீடு அற்றுத் தாக்குதல் நடத்தித் தோற்றனர். பின்னர் 1959இல் முறையான இராணுவ உபாயங்களுடன், அரசியல் தெளிவுடன் புரட்சிசெய்து இன்றைய கியூபாவை தாபித்தனர். இந்நூல் கியூபாப் புரட்சி பற்றிய விரிவான தகவல்களை வழங்குகின்றது. இலங்கையில் ஆயுதப் போராட்டம் முனைப்புக் கொண்டிருந்த வேளையில் விடுதலைப் போராளிகளுக்கு அறிவூட்டும் ஒரு நடவடிக்கையாக இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வை யிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 118850).

999 இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப் படைப்புகள்

999 பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புகள்

9996

அயலகத் தமிழ் இலக்கியம்: இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தமிழ்ச் சிறுகதைகள், கவிதைகள்-ஒரு தொகுப்பு. *சா.கந்தசாமி. (தொகுப்பாசிரியர்). இந்தியா: சாகித்திய அகடெமி வெளியிடு, இரவிந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது டில்லி 110001, 1வது பதிப்பு, 2004. (சென்னை 14: வெங்கடேஸ்வரா ஆப்செட் பிரிண்டர்ஸ்).*

328 பக்கம், விலை: இந்திய ரூபா 150., அளவு: 22.5x15 *சமீ.,* ISBN: 81-260-1717-1.

இந்திய, மலேசிய ஈழத்து எழுத்தாளர்களின் தேர்ந்த சிறுகதை, கவிதைப் படைப்புக்களைத் தாங்கி வெளிவந்திருக்கும் இந்திய நூல் இது. இலங்கைப் படைப்பாளிகளான இலங்கையர்கோன் (சக்கரவாகம்), வ.அ.இராசரத்தினம் (தோணி), கே.டானியல் (கொடும்பாவி), எஸ்.பொன்னுத்துரை (அணி), மு. தளையசிங்கம் (இரத்தம்), க.சட்டநாதன் (உலா), செ.கணேசலிங்கன் (அக்காவிற்கு அன்பளிப்பு), டொமினிக் ஜீவா (பாதுகை), செ.யோகநாதன் (பூங்கோதை), சாந்தன் (குயில் வீடு), மாத்தளை சோமு (சொந்த சோதரர்கள்), ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் (அவன் ஒரு இனவாதி), குமார் மூர்த்தி (பயணம்), அ. முத்துலிங்கம் (வடக்கு வீதி), உமா வரதராஜன் (மாலைசூடிகள்), அந்தனி ஜீவா (புருட் சலட்) ஆகிய 16 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் மலேசியப் படைப்பாளிகளான சை.பீர்முகம்மது, ரெ.கார்த்திகேசு, வீ.செல்வராஜ், சாமி மூர்த்தி, மா.சண்முகசிவா, அரு.சு.ஜீவானந்தன் ஆகியோரது கதைகளும், சிங்கப்பூர் படைப்பாளிகளான சே.வெ.சண்முகம், புதுமைதாசன், இராம கண்ணபிரான், நா.கோவிந்தசாமி, உதமான் கனி, மா.இளங்கண்ணன் ஆகியோரது கதைகளும் இடம்பெற்றுள்ளன. கவிதைகளைப் பொறுத்தவரையில் மஹாகவி (தேரும்

திங்களும்), முருகையன் (அகிலத்தின் மையங்கள்), நீலாவ(ண்)ணன் (துயில்), தர்மு சிவராம் (விடிவு முதலிய கவிதைகள்), வ.ஐ.ச.ஜெயபாலன் (நெடுந்தீவு ஆச்சிக்கு), அ.யேசுராஜா (அறியப்படாதவர்கள் நினைவாக), சேரன் (இரு காலைகளும் ஒரு பின்னிரவும்), எம்.ஏ.நுஃமான் (புகைவண்டிக்காகக் காத்திருத்தல்), சி.சிவசேகரம் (பயணம்), கி.பி.அரவிந்தன் (இருப்பிடம் தேடி), சிவரமணி (எனது விடுதலை), இளவாலை விஜயேந்திரன் (இறப்பதெப்படி), சு.வில்வரத்தினம் (இயற்கையால் எழுதியது), சோலைக்கிளி (வானம்பூட்டி), அர்ச்சுனா (ஒரு அகதி விண்ணப்பம்), தமயந்தி (நீ நான் நமது கனவு) ஆகியோரது கவிதைகளும், மலேசியக் கவிஞர்களான இராஜகுமாரன், எம்.கே.அகமது கபீர், கரு.வேலுசாமி ஆகியோரின் கவிதைகளும், சிங்கப்பூர் கவிஞர்களான லதா, கனிமொழி ஆகியோரின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்கொண்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 185462).

9997

இலங்கைப் பயணக்கதை: இதயம் பேசுகிறது. மணியன். சென்னை 14: மணியன் பதிப்பகம், 7, ஹனுமந்தராவ் ரோடு, பாலாஜி நகர், 1வது பதிப்பு, ஏப்ரல் 1979. (சென்னை: தி இதயம் பிரின்டர்ஸ்).

120 பக்கம், புகைப்படங்கள், சித்திரங்கள், விலை: இந்திய ரூபா 5.00, அளவு: 20.5x13.5 சமீ.

ஆனந்த விகடன் வார இதழில் தொடராக வெளிவந்த மணியனின் இலங்கைப் பயணக்கதையின் நூல்வடிவம். இலங்கை பற்றியும் இலங்கைத் தமிழர் பற்றியும் தமிழகப் பத்திரிகைகள், ஊடகங்கள் பாராமுகமாக இருந்த 70களின் நடுக் கூறுகளில் துணிச்சலுடன் இலங்கைத் தமிழர் பற்றி எழுதி உலக அரங்கில் அவர்கள் பற்றிய தேடலை உருவாக்கியவகையில் இந்நூல் முக்கியத்துவம் பெறுகின்றது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 44520).

9998

இலங்கையின் கதை. ம.இராதாகிருஷ்ணபிள்ளை. சென்னை 4: அல்லயன்ஸ் கம்பெனி, 244, R.K.Mitt Road, தபால் பெட்டி இல. 617, மயிலாப்பூர், 2வது பதிப்பு, டிசம்பர் 1987, 1வது பதிப்பு, ஏப்ரல் 1946. (சென்னை 600014: சுந்தரம் பிரின்டிங் வேர்க்ஸ்).

104 பக்கம், விலை: இந்திய ரூபா 8., அளவு: 18.5x12.5 சமீ.

நூலாசிரியர் எம்.ராதாகிருஷ்ணபிள்ளை (1911-1974) 1936இல் மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் போராட உறுதிபூண்டவர். 1944ஆவது வயதிலேயே மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பச்சையப்பன் அறநிலைய ஆட்சிக்குழுவின் தலைவராகவும் பணியாற்றியவர். இந்திய விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்டிருந்த அண்டை நாடான இலங்கை பற்றிய வரலாற்றையும் புரிதலையும் தமிழகத்தினருக்கு

ஏற்படுத்தும் நோக்கோடு இந்நூலை இவர் எழுதியிருக்கிறார். (இந்நூல் யாழ்ப் பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 99863).

9999

ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்கான உலகத் தமிழர் மாநாட்டு மலர். மலர்க் குழு. தஞ்சாவூர்: உலகத் தமிழர் பேரமைப்பு, 1வது பதிப்பு, மார்கழி 2009. (அச்சக விபரம் தரப்படவில்லை).

520 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 27.5x20.5 சமீ.

2009 டிசம்பர் 26. 27ம் திகதிகளில் தமிழகத்தில் தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரமைப்பின் ஏழாம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளியிடப் பட்ட சிறப்பு மலர் இதுவாகும். மலர்க்குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர் அறிவரசன், க.சச்சிதானந்தன், தமிழ்க்கனல், தி.அழகிரிசாமி, குணத்தொகையன், பூங்குழலி, மணிமொழி, தமிழ் வேங்கை ஆகியோர் பணியாற்றியிருக்கின்றனர். முருகர் குணசிங்கம், கா.இந்திரபாலா, ஏகநாயகிவல்லி சிவராசசிங்கம், க. கைலாசபதி, கா.சிவத்தம்பி, த.செயராமன், இளங்குமரனார், சி.அ.யோதிலிங்கம், வே.பிரபாகரன், பழ நெடுமாறன், ச.பொட்டு, கு.முத்துக்குமார், முருகதாசன், லசந்த விக்கிரமதுங்க, மறவன்புலவு க.சச்சிதானந்தம், உள்ளிட்ட ஏராளமான தமிழக-இலங்கைப் பிரமுகர்களின் 88 படைப்புக்கள் இம்மலரை அலங்கரிக் கின்றன. ஈழவிடுதலைப் போராட்டத்தின் பயணத்தை பகிரும் அரிய பல புகைப்படங்களும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

10000

ஈழத் தமிழர்களின் அவலங்கள். மு.சதாசிவம். ஈரோடு 638004: உலகத் தமிழியக்கம், 7 வள்ளியம்மை 2ஆம் தெரு, பெரிய வலசு, 1வது பதிப்பு, 2009. (சிதம்பரம் 1: காக்ஸ்டன் பிரின்டர்ஸ், 7/46, வடக்கு வீதி).

92 பக்கம், விலை: இந்திய ரூபா 50., அளவு: 21x14 சமீ.

தமிழகத்தைச் சேர்ந்த பன்மொழிப்புலவர் பேராசிரியர் முனைவர் மு.சதாசிவம், ஈழத்தமிழர்களின் 26 படைப்பிலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் ஈழத்தமிழர்களின் இனவாத அவலங்கள் தொடர்பாக அவ்வந்நூலாசிரியர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை அல்லது பாத்திரங்கள் கூறுவதாகக் குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்து இந்நூலை உருவாக்கியுள்ளார். இந்திய அமைதிப் படை உள்ளிட்ட இலங்கை இராணுவ அட்டகாசங்கள், இன அழிப்பு அவலம் போன்றவை இங்கு தமிழக வாசகர்களுக்காகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

முன்னைய பதிவுகள் பின்னிணைப்பு

10A01

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 3: சுதேசத் தலைமைகள்: கி.பி. 1750 - கி.பி. 1895. *அருணா செல்லத்துரை. கொழும்பு 8: அருணா வெளியீட்டகம், ஏ 15, 1/1, மனிங் ரவுண் வீடமைப்புத் திட்டம், மங்கள வீதி, 2வது பதிப்பு, 2011, 1வது பதிப்பு, 2005. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48B, புளுமெண்டால் வீதி).*

xix, *146 பக்கம், வண்ணப்படங்கள், விலை: ரூபா 350., அளவு:* 22x14.5 *சமீ.,* ISBN: 955-96159-8-X.

அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு, பண்டாரவன்னியன்-குருவிச்சி நாச்சியார் நாடகம் ஆகிய நூல்களைத் தந்த அருணா செல்லத்துரையின் மற்றுமொரு படைப்பு இது. இந்நூலின் வருகை அடங்காப்பற்று பிரதேசத்தின் வரலாற்றை வெளிக்கொண்டுவரும் முயற்சியில் மற்றுமொரு மைல்கல்லாகக் கருதப்படுகின்றது. இந்நூலின் முதற் பாகம் அடங்காப்பற்று (வன்னி) வரலாறு கி.மு.-கி.பி. என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. இரண்டாம் பாகம் வெளிவராத நிலையில் ஏற்கெனவே 2002இல் வெளிவந்திருந்த அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு (நூல்தேட்டம் பதிவு இலக்கம் 1966) இத்தொகுதியின் இரண்டாம் பாகமாகக் கருதப்படுகின்றது. 2011இல் வெளியாகியுள்ள இம்மீள்பதிப்பில், அடங்காப்பற்று பாரம்பரியங்கள், முல்லைத்தீவில் முஸ்லிம்கள், சுதேசத் தலைமைகள், காட்டுராசா (வழக்கறிஞர் ப.லிங்கஜோதியின் குறிப்புகள்), வன்னிக்கும் ஏனைய நாடுகளுக்கும் உள்ள கலாசார ஒற்றுமை, நினைவு மலர் 1979, கமுகஞ் சண்டைப் பாடல் (தொகுப்பு - முல்லைமணி 1979), கதிரவேலு ஐயாறு (திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்), வினாசித்தம்பிப் பெரியவர் (அரியான்பொய்கை), ஆகிய தலைப்புகளில் இந்நூலின் அத்தியாயங்கள் விரிந்துள்ளன. பின்னிணைப்புகளாக வேலன் ஐயாறு, பரமலிங்கம் ஆகிய குடும்பப் படங்களும், சர்வதேச, சீன வாசகர்களுக்கான குறிப்புகளும் காணப் படுகின்றன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3980)

10A02

இந்த நாடு உருப்படாது. *செங்கைஆழியான். யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி, 1வது பதிப்பு, 1989. (யாழ்ப்பாணம்: கமலம் பதிப்பகம், 82, பிரவுண் வீதி).*

vi, *103 பக்கம், தகடு, விலை: ரூபா 25. அளவு:* 19.5x13.5 *சமீ. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119388).*

தம் வயல்களில் உழைக்கவும் வருவாய் பெறவும் மனித உரிமைகளுடன் வாழவும் முடியாது, அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு கிராம மக்களில் சிலர் தமது அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக இடையறாது முயற்சிப்பதும் அந்த

முயற்சியில் வெற்றியடையாவிடினும் மாற்றுத் திட்டமொன்றின் மூலம் தம் வாழ்வைச் சீர்செய்வதும் இந்த நாவலின் பிரதான பொருளாகவுள்ளது. 1977ம் ஆண்டுப் பகைப்புலத்தைக்கொண்ட இது 1983இல் எழுதப்பட்டது. இந்நாவல் "தீராச்சுமைகள்" என்ற பெயரில் வீரகேசரி வாரமலரில் வெளிவந்தது. "மண்ணின் தாகம்" என்ற பெயரில் மீரா பதிப்பக வெளியீடாகவும் 1989இல் வெளியிடப்பட்டது. இப்பதிப்பிற்கான நீண்ட முன்னுரையை பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் 21.1.1983இல் எழுதியுள்ளார். (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 119388). (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1409)

10A03

இந்து சமய வினாவிடை: புதிய க.பொ.த.(சா/த) வகுப்புக்குரியது. முத்துக்குமாரு மகேந்திரா (புனைப்பெயர்: இளங் கலைஞன்). யாழ்ப்பாணம்: மாலதி வெளியீடு, 3வது திருத்திய பதிப்பு, ஒக்டோபர் 2005, 2வது பதிப்பு, 1995, 1வது பதிப்பு, 1983. (சாவகச்சேரி: பொதிகை கொம்பியூட்டர் கிராப்பிக்ஸ்).

(3), 62 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 20.5x14 சமீ.

புதிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்புக்குரியதாக வெளியிடப்பட்டுள்ள சைவ சமயபாட வினாவிடைத் தொகுப்பு இது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 157057). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8130)

10A04

இந்து மக்களுக்கு ஒரு கையேடு. அகில இலங்கை இந்து மாமன்றம் (தொகுப்பு). கொழும்பு 2: அகில இலங்கை இந்து மாமன்றம், 91/1, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, 3வது பதிப்பு, ஒக்டோபர் 2010, 2வது பதிப்பு, ஏப்ரல் 2006, 1வது பதிப்பு, 2001. (கொழும்பு 13: யுனி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட், 48B, புளுமெண்டால் வீதி).

(24), xii, 260 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x14 சமீ.

2001இல் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் தொகுக்கப்பெற்ற இந்நூல் அம்மன்றத்தின் பொன்விழா வெளியீடாக 2006இல் மீள்பிரசுரம் பெற்றிருந்தது. மீண்டும் 17.10.2010 அன்று அமரர்கள் உயர்திரு கந்தையா தர்மலிங்கம், திருமதி தர்மலிங்கம் பெரியநாயகி ஆகியோரின் நினைவு வெளியீடாக 2010இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்து மக்களுக்கு நாளாந்த வாழ்வில் தமது சமய அனுட்டானங்களுக்கும், நாளாந்த சைவத்துவ வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிப்பதற்கும் உதவும் வகையிலும் சிவதொண்டர் அணியில் இணைந்து சேவையாற்றுபவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. வழிபாட்டியல், வாழ்வியல், கிரியையியல், விரதவியல், சிராத்தவியல், ஆசௌசவியல், தத்தவவியல், திருமுறையியல் ஆகிய எட்டு இயல்களின்கீழ் 34 தலைப்புகளில் இந்நூல் தொகுக்கப்பெற்றுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 4095)

10A05

இந்துக் கோயில்கள் கட்டடங்களும் சிற்பங்களும். சி.பத்மநாதன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, 2வது பதிப்பு, டிசம்பர் 2009, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xxiv, 497 பக்கம், வண்ணத் தகடுகள், விலை: ரூபா 600., அளவு: 22.5x15.5 சமீ.

2000ஆம் ஆண்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு முன்னதாக டிசம்பர் 2001இல், இந்து கலாச்சாரம்: கோயில்களும் சிற்பங்களும் என்ற பெயரில் வெளிவந்திருந்தது. இந்து ஆலயங்களுக்கும் சிற்பக்கலைகளுக்கும் இடையே உள்ள தொடர்பையும் இந்து சமயப் பண்பாட்டின் முக்கியத்துவத்தையும் அதிநுட்பமாக ஆய்வுக்குட்படுத்தும் அறிமுகம் உள்ளிட்ட 17 கட்டுரைகளில் 10 கோயில்களின் கட்டிடக்கலை பற்றியதும், 6 கோயில் சிற்பங்கள் பற்றியதும், 1 எல்லோரா குகைக்கோயில் பற்றியதுமாக அப்பதிப்பில் இடம்பெற்றிருந்தன. அந்நூலின் திருத்திய மறு பதிப்பு, மேலதிக மூன்று புதிய கட்டுரைகளுடனும் மேலதிக வண்ணப்படங்களுடனும் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரண்டாம் பதிப்பில் சி.பத்மநாதன் எழுதிய மௌரியர்கால கட்டுமானங்களும் சிற்பங்களும், சமயப் பெருநெறிகளும் கலைகளும், குப்தர் காலத்துக் கோயில்கள், வாதாபி சாளுக்கியர் காலத்துக் கோயில்கள், தக்கிணத்துக் குடபோகங்களும் மலைதளிகளும், சோழர் காலத்துக் கோயில்கள், கஜுராஹோ ஆலயங்கள், கலிங்கத்துக் கோயில்கள், கல்யாணிச் சாளுக்கியர் கலைப்பாணி, ஹொய்கலர் கலைப்பாணி, விஜயநகரக் கலைப்பாணி, நாயக்கர் கலைப்பாணி, நாயக்கர்காலச் சிற்பக்கலை ஆகிய 13 கட்டுரைகளும், இரா கலைக்கோவன் எழுதிய பல்லவர்காலக் கட்டடக் கலை, பல்லவர் காலச் சிற்பக்கலை ஆகிய 2 கட்டுரைகளும், வி.வேதாச்சலம் எழுதிய முற்காலச் சோழர் சிற்பக்கலை, ஜெ.சேதுராமன் எழுதிய சோழர்காலத்துச் செப்புத் திருமேனிகள், எம்.நளினி எழுதிய சோழர்காலச் சிற்பக்கலை, ராஜு காலிதாஸ் எழுதிய விஜயநகர காலச் சிற்பக்கலை ஆகிய நான்கு கட்டுரைகளுமாக மொத்தம் 19 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1065)

10A06

இலக்கியத் தென்றல். சு.வித்தியானந்தன். கல்ஹின்ன: கல்ஹின்ன தமிழ் மன்றம், 1வது பதிப்பு, கார்த்திகை 1953. (கண்டி: அருணா அச்சகம், 42, ஹீல் வீதி).

142 பக்கம், விலை: ரூபா 3.00, அளவு: 18.5x12.5 சமீ.

கல்ஹின்ன தமிழ்மன்றத்தின் 2வது வெளியீடாகவும் மன்றத்தின் முதலாவது தமிழ் வெளியீடாகவும் 1953இல் வெளியான இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றின் சில பகுதிகளை 6 தலைப்புகளில் விளக்குகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பு, தமிழ் இலக்கண நூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு, ஈழநாட்டுப் பெரியார் தமிழ்மொழிக்காற்றிய தொண்டு, 20ம் நூற்றாண்டுத்

தமிழ்க்கவிதை ஆகிய ஆறு தலைப்புக்களில் பல அரிய தகவல்களை இந்நூல் வழங்குகின்றது. பின்னிணைப்பாக புலவர் அகரவரிசை, நூல் அகர வரிசை, பத்திரிகை அகரவரிசை ஆகியனவும் தரப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றியவர் அமரர் சு.வி. அவர்கள். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5744. இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 91180).

10A07

இலகு தமிழ் இலக்கண வினாவிடை: தரம் 6-11. ஜோ.அல்பிரட் விஜிதா (தொகுப் பாசிரியர்). தெமட்டகொட: திரு, அ.அ.சுரேஷ்குமார், 92, தெமட்டகொட பிளேஸ், 2வது பதிப்பு, ஓகஸ்ட் 2005, 1வது பதிப்பு, ஜூலை 2002. (கொழும்பு 13 : யுனி லங்கா, சென்.அந்தனிஸ் மாவத்தை).

vi, 96 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 21x14 சமீ. ISBN: 955-97876-0-8.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய தொகுத்து எழுதப்பட்ட இந்நூல், தரம் 6-11 மாணவர்களுக்கான தமிழ் இலக்கண வினா-விடைகளைத் தருகின்றது. எழுத்துக்கள், பகுபதம்-பகாப்பதம், ஆகுபெயர், இடைச்சொல், உரிச்சொல், என்பவை உள்ளிட்ட 14 தலைப்புக்களில் தமிழ் இலக்கண வினாக்கள் பிரிக்கப் பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2290. இந் நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 156593)

10A08

இலங்கைப் புவியியல். க.குணராசா. யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு, ஸ்ரீலங்கா புத்தக சாலை, காங்கேசன்துறை வீதி, 21ஆவது பதிப்பு, ஆவணி 1995, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1963, திருத்திய 20வது பதிப்பு, 1988. (யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி).

viii, 268 பக்கம், வரைபடங்கள், விலை: ரூபா 140., அளவு: 21x14.5 சமீ.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கைப் பாடசாலைகளின் தமிழ்மூல புவியியல் மாணவர்களின் ஏகபோக உப பாடநூலாக விளங்கிய நூல் இது. இலங்கையின் அமைப்பியல், இலங்கையின் காலநிலையியல், இலங்கையின் மக்களியல், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகள், இலங்கையின் அபிவிருத்தியியல் ஆகிய 5 தலைப்புகளின் கீழ் இலங்கைப் புவியியல் பதிவுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5828. இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 123408).

10A09

இலங்கையின் அரசியல் யாப்புகள். சி.அ.யோதிலிங்கம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், குமரன் புத்தக இல்லம், இல. 39, 36வது ஒழுங்கை, திருத்திய 3ம் பதிப்பு, 2013, 2வது பதிப்பு, 2004, 1வது பதிப்பு, 1999. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், இல. 39, 36வது ஒழுங்கை).

xvi, *278 பக்கம், விலை: ரூபா 425., அளவு:* 22x14.5 *சமீ.,* ISBN: 955-9429-49-3.

இன்று இலங்கை அரசியல் யாப்பு மாற்றங்களை வேண்டிநிற்கின்ற காலத்திலிருப்பதால், அரசறிவியல் கற்கும் மாணவர்கள் மட்டுமின்றி அரசியல்வாதிகள், சாதாரண பொதுமக்கள் என்போரும் இலங்கையின் யாப்புகளை அறிந்திருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த வகையில் இந்நூல் மாணவர்களை மட்டுமல்லாமல், அரசியல் யாப்பு அறிவின் தேவையை வேண்டி நிற்கின்ற அனைவருக்கும் உதவும். இந்நூலில் அரசியல் யாப்புகள் பற்றிய அறிமுகம், இலங்கையின் அரசியல் வரலாற்றுப் பின்னணி, கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம், குறூ-மக்கலம் அரசியல் சீர்திருத்தம், 1910இலிருந்து 1920 வரை இலங்கையின் அரசியல் நிலை, மானிங் அரசியல் சீர்திருத்தம் (தற்காலிகம்), மானிங்-டிவன்சயர் அரசியல் சீர்திருத்தம், டொனமூர் அரசியல் யாப்பு, சோல்பரி அரசியல் யாப்பு, முதலாவது குடியரசு அரசியலமைப்பு, 2ஆவது குடியரசு அரசியல் யாப்பு, 1978ஆம் ஆண்டின் குடியரசு யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், 1978ஆம் ஆண்டின் குடியரசு யாப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பிற்கான 17ஆவது திருத்தம், அரசியல் யாப்பிற்கான 18ஆவது திருத்தம் ஆகிய 14 பகுதிகளை உள்ளடக்கியது. பின்னிணைப்பாக, இலங்கையின் அரசியல் யாப்புகள்: ஒரு பார்வை என்ற அட்டவணையும் இடம்பெற்றுள்ளது. யாழ். மாவட்டத்தின் குப்பிளானைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியல் துறையில் சிறப்பு கலைமாணிப் பட்டத்தைப் பெற்றவர். கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர் மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 183, 6 A *06).*

10A10

ஈழத்துக் கவிதைக்கனிகள். *சிலோன் விஜயேந்திரன் (தொகுப்பாசிரியர்). சென்னை 600 049: குறிஞ்சி, 20ஏ, டீச்சர்ஸ் கில்டு காலனி, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், 2வது பதிப்பு, 2003, 1வது பதிப்பு, 1991. (அச்சக விபரம் தரப்பட வில்லை).*

344 பக்கம், விலை: இந்திய ரூபா 90., அளவு: 18x12.5 *சமீ.*

ஈழத்தின் இணையற்ற மறுமலர்ச்சிக் கவிதைகளை (1940-1990) மிக அதிக அளவிலும், பழந்தமிழ் மரபையொட்டிப் பாடப்பெற்ற கவிதைகளில் மிகப்பிரபல்ய மானவற்றையும் உள்ளடக்கிய தொகுப்பு ஒன்றை 1991இல் சிலோன் விஜயேந்திரன் வெளியிட்டிருந்தார். இவ்விரண்டாம் பதிப்பில் அதன் எல்லையை நீட்டி 1940-2002 வரையுமான காலகட்டத்தில் வெளியிடப்பட்ட கவிதைகளைக்கொண்டதாக இப்பதிப்பினைப் புதுக்கிய பதிப்பாக வெளியிட்டுள்ளார். ஈழத்து இலக்கியப் பாரம்பரியமும் இன்றமிழ்க்கலைஞர்களும் என்ற விஜயேந்திரனின் கட்டுரை ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றியும், கவிஞர்களின் ஆளுமை பற்றியும் தெளிவான கருத்தைத் தருகின்றது. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1409)

10A11

ஈழம் வளர்த்த நூல். எப்.எக்ஸ்.சி.நடராசா (இயற்பெயர்: பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2012, 1வது பதிப்பு, 1957. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

iv, 50 பக்கம், விலை: ரூபா 250., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-659-345-7.

"ஈழமுந் தமிழும்" என்ற தலைப்பில் 1957இல் எழுதப்பட்ட நூலின் புதுக்கிய மீள்பதிப்பாக ஈழம் வளர்த்த நூல் வெளிவந்துள்ளது. செய்யுள் நூல்கள், வசன நூல்கள், இசை நூல்கள், நாடகங்கள், சோதிடநூல்கள், வைத்திய நூல்கள், தருக்க நூல்கள், நுண்கலை நூல்கள், மாலுமிசாஸ்திர நூல்கள், புலவர் சரித்திர நூல்கள், இலக்கண நூல்கள் என்று 20 பிரிவுகளாக அந்நூல்களை வகைப்படுத்தியும் தந்துள்ளமை சிறப்பம்சமாகும். பிரான்சிஸ் சேவியர் செல்லையா நடராசா என்ற எப்.எக்ஸ்.சி.நடராசா (1911-1997) அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம்பெற்றவர். ஆசிரியராகவும்,ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளராகவும், இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பு அத்தியட்சகராகவும் பணிபுரிந்தவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 1008)

10A12

கட்டுரை மஞ்சரி: 10ம் 11ம் ஆண்டு. சு.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: வட இலங்கை தமிழ்நூற் பதிப்பகம், 10வது பதிப்பு, ஆண்டு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 12: லங்கா புத்தகசாலை, F.L.1/14, டயஸ் பிளேஸ், குணசிங்கபுர).

208 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 21.5x14 சமீ.

நல்ல கட்டுரைகள் எழுதும் ஆற்றலை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் ஆசிரியர் சு.வே. முன்னைய பதிப்பிற் சேர்த்த 40 கட்டுரைகளுடன் மேலதிகமாக 10 கட்டுரைகளையும் சேர்த்து, மொத்தம் 50 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 136796. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8713)

கட்டுரை மஞ்சரி: 10ம் 11ம் ஆண்டு. சு.வேலுப்பிள்ளை. யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, 235, காங்கேசன்துறை வீதி, 7வது பதிப்பு, 1982 (யாழ்ப்பாணம்: ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்).

viii, 154 பக்கம், விலை: ரூபா 30., அளவு: 20.5x13.5 சமீ.

நல்ல கட்டுரைகள் எழுதும் ஆற்றலை மாணவரிடையே வளர்க்கும் நோக்குடன் ஆசிரியர் சு.வே. எழுதிய 40 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. மாணவர் பொருளை மனதிலே நிறுத்திச் சிந்தித்தற்கேற்ற வகையில் பொருள்பற்றிய குறிப்புகள் கட்டுரையின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளன. வரலாறு, விளக்கம், சிந்தனை, வர்ணனை, சொல்லோவியம், மேடைப்பேச்சு, கற்பனை, விமர்சனம், பத்திரிகைக் கட்டுரை, வானொலி நாடக விமர்சனம், தற்சார்புக் கட்டுரை,

உரையாடல், சிறுகதை, சுயசரிதை ஆகிய பண்புகளைக் கொண்ட தனித்தனிக் கட்டுரைகள் இவை. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப் பட்டது. சேர்க்கை இலக்கம் 85809. முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8713)

10A13

சிறீலங்கா தாவர போசன சமையல். புஷ்பாஞ்சலி முருகேசபிள்ளை. கொழும்பு: திருமதி புஷ்பாஞ்சலி முருகேசபிள்ளை, 4வது பதிப்பு, 1996. 1வது பதிப்பு 1971. (கொழும்பு 6: பிறின்ட் கிராபிக்ஸ், 4, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை).

(7), 580 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 750., அளவு: 22x14 சமீ. ISBN: 955-9409-02-6.

தனித் தாவர போசனம் உண்போருக்கு மட்டுமல்லாது, ஏனையோருக்கும், புதிதாகச் சமையல் செய்யத் தொடங்குவோருக்கும், மனையியல் கற்கும் மாணவர் களுக்கும் ஏற்றவகையில் இந்நூல் தயாரிக்கப் பெற்றது. மங்கையருக்குச் சில பயனுள்ள தரவுகள் என்ற முதலாவது பகுதியில் சமையலறையிலே தேவைப்படும் பொருட்கள், அளவைகள், குறியீடுகள், சமையலறைச் சீர், அன்ன உணவைத் தயாரிப்பதற்குச் சுலபமான முறைகள், விசேட தினங்களில் பரிமாறக்கூடிய உணவுத் தொகுப்புகள், பாரம்பரிய அன்ன உணவைப் பரிமாறும் முறை, நூறு பேருக்கு அன்ன உணவைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களின் பட்டியல், உணவில் அடங்கும் கூறுகள் -நிறையுணவு- உணவுப் பொருட்களிலுள்ள ஊட்டச்சத்துக்கள், சில பயனுள்ள குறிப்புகள், சமையல் பக்குவங்களின் சுருக்க விளக்கங்கள், சமையல் பொருட்களின் அகராதி, ஆகிய 10 தலைப்புகளில் முக்கிய விபரங்கள் தரப்பட்டுள்ளன. சமையல் பாகங்கள் என்ற இரண்டாம் பகுதியில் காலை - மாலை ஆகாரங்கள், சோறு ஆக்கும் முறைகள் - சித்திரான்னம், இடியப்ப பிரியாணி, நூடில்ஸ் வகைகள், கறி வகைகள், சுண்டல் வகைகள், சாம்பார் வகைகள் என 31 வகையான பிரிவுகளுக்குள் ஏராளமான உணவுப்பண்டங்களின் தயாரிப்பு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 122672). (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 272)

10A14

சைவ தூஷண பரிகாரம். ஆறுமுக நாவலர் (மூலம்), ஸ்ரீ பிரசாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 4: இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 248, 1/1, காலி வீதி, மீள் பதிப்பு, 2013, 1வது பதிப்பு, 1854. (கொழும்பு 13: கௌரி அச்சகம், இல. 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை).

xxxii, 107 பக்கம், விலை: ரூபா 150., அளவு: 18.5x12.5 சமீ., ISBN: 978-955-9233-29-9.

ஆறுமுக நாவலரால் வெளியிடப்பட்ட பிற சமய கண்டன நூல்களுள், சைவ தூஷண பரிகாரம், சுப்பிரபோதம் ஆகிய இரண்டு நூல்கள் முதன்மையானவை. இவற்றைத் தம் பெயரிலேயே வெளியிட்ட நாவலர், மூன்றாவது முக்கிய நூலான வச்சிரதண்டம் என்ற கண்டன நூலை மட்டும் விநாயகமூர்த்திச் செட்டியார்

என்ற பெயரில் வெளிப்படுத்தினார். இவற்றுள் 1854இல் வெளியிடப்பட்ட சைவ தூஷண பரிகாரமென்னும் இந்நூல் சைவ சமயத்தை இழிவுபடுத்தி அமெரிக்க மிஷனரிமார் வெளியிட்ட குருட்டுவழி, தற்சமயக் காட்சி ஆகிய இரு நூல்களுக்கான மறுப்பாக நாவலரால் எழுதப்பட்டது. விவிலிய மொழிபெயர்ப்பில் ஈடுபட்ட மையால் பெற்ற புலமையைத் தக்கவாறு பயன்படுத்தி அவரால் எழுதப்பெற்ற இந்நூல், கிறிஸ்துவர்களாகி இருந்த பல சுதேசியர்களை மீளவும் சைவத்தின் பாற் படுத்தியது. மதமாற்றத்தைக் கணிசமான அளவில் குறைத்து சைவத்தின் மீள் எழுச்சிக்கு வித்திட்டது. வெஸ்லியன் மெதடிஸ் மிஷனாலேயே 1855இல் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கையில் பாராட்டப்பெற்ற சிறப்பும் உடையது. இந்நூல் பற்றி நாவலர் தனது கருத்தைக் கீழ்வருமாறு குறிப்பிடுகின்றார். "நமது சிவசாத்திரங்களைச் சிறிதும் அறியாதவர்களும், கிறிஸ்துவ பாதிரிகளது பொய்ந் நூலாகிய விவிலிய நூலை முற்றும் வாசியாதவர்களும், தருக்க நூலிலே அற்ப மேனும் பயிலாதவர்களுமாகிய சில சனங்கள் (பாதிரிமார்களின்) அத்தூஷணங்கள் ஒக்குமென்று மதிமயங்கி, கிறிஸ்து சமயப் படுகுழியில் வீழ்ந்து கெடுகின்றார்கள். யாம் அதனைக் கண்டிரங்கி, சைவத்தின்மேல் அப்பாதகர்களால் ஏற்றப்படும் தூஷணங்களாலேயே ஒருவரும் கெடாது சைவத்தின் வழியே நின்று உய்யும் பொருட்டு, அத்தூஷணங்கள் எல்லாவற்றையும் நியாயமாகவே களைந்து மெய்யறிவுச்சுடர் கொளுத்துகின்ற இந்தச் சைவதூஷண பரிகாரம் என்னும் பிரபந்தத்தை, பரமகாருணிகராகிய பரமசிவனது திவ்வியப் பிரசாதத்தினாலேயே செய்தோம்" - ஆறுமுகநாவலர் (உபோற்காதம்). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 5140)

10A15

தமிழ்த்தூது: கட்டுரைக்கொத்து. தனிநாயகம் அடிகள். யாழ்ப்பாணம்: திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, 6வது பதிப்பு, ஜூலை 2013, 5வது பதிப்பு, 1998. 1வது பதிப்பு, 1952. (யாழ்ப்பாணம்: யே.எஸ்.சென்டர்).

xxxii, 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 18.5x13 சமீ.

தனிநாயகம் அடிகளின் தமிழியல் கட்டுரைகளின் தொகுப்பு. தமிழ்த்தூது, சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு, மலரும் மாலையும், காப்பியக்கவிஞர் வீரமாமுனிவர், தமிழ்நாட்டின் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை, தமிழரும் அவர்தம் கவின்கலைகளும், தமிழ்கூறும் நல்லுலகம் ஆகிய ஏழு கட்டுரைகளின் தொகுப்பு. முன்னைய பதிப்புகளில் இடம்பெற்ற செந்தமிழ் வளர்ச்சி என்ற கட்டுரை இப்பகுப்பில் இடம்பெறவில்லை. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 774).

10A16

தமிழன் மாட்சி. தெல்லியூர் எஸ்.நடராசா. கொழும்பு: இளைஞன் பிரசுராலயம், நிர்.2, கிராண்ட்பாஸ் வீதி, 1வது பதிப்பு, 1947. (யாழ்ப்பாணம்: ஸ்ரீ பார்வதி அச்சியந்திரசாலை, 288, ஆஸ்பத்திரி வீதி).

(4), 68 பக்கம், விலை: ரூபா 1.25, அளவு: 21x13.5 சமீ.

தமிழின் பெருமைகூறும் இந்நூலில் ஆசிரியரின் 14 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நாட்டின தோற்றமும் பழமையும், ஆராய்ச்சியும் முத்தமிழ் நாடும், ஐவகை நிலமும் மக்களும், மக்களும் வாழ்க்கையும், ஆட்சியும் பாதுகாப்பும், செல்வ நிலையும் வாணிகமும், முத்தமிழ்ப் பெருமை, நாட்டின் கலைச்சிறப்பு, முத்தமிழ்ச் சங்கங்கள், கடவுட் கொள்கை, புதிய ஆராய்ச்சிகள், தமிழ்ப் பெண்பாலார், இன்றைய தமிழ்நாட்டின் நிலை, தமிழ்நாட்டின் உயர்வழி ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன. தெல்லியூர் செ.நடராசா வீரகேசரி பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பணியாற்றிய வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. (பின்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3971). (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 102627).

10A17

தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம். அமுதன் அடிகள் (மூலம்), இரா.மதிவாணன் (பதிப்பாசிரியர்). சென்னை 600094: உலகத் தமிழர் பதிப்பகம், 4, சௌராஷ்டிரா நகர், 7ஆவது தெரு, சூளைமேடு, 2வது பதிப்பு, ஆகஸ்ட் 2013, 1வது பதிப்பு, ஜூலை 1993. (நாகபட்டினம்: இரா.செல்வராஜ், இனோ மீடியா சென்டர்).

272 பக்கம், வண்ணத்தகடுகள், விலை: இந்திய ரூபா 200., அளவு: 22.5x15 சமீ.

உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தியும், Tamil Culture என்ற ஆங்கில இதழை வெளியிட்டும், பாரெங்கும் சுற்றித் தமிழ் பரப்பியும் தமிழ்த் தொண்டாற்றிய தகைசால் பெருந்தலைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளாரது வாழ்க்கையையும், அவர் ஆற்றிய தொண்டினையும் தமிழுலகம் நன்கறியும் பொருட்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணியினை முழுமையாகத் தொகுத்து, நேர்நின்று, ஆய்வுக் கண்ணோட்டத்தோடு அணுகி மிகத் தெளிவாகத் தேவையான விளக்கங்களுடன் நூலை ஆசிரியர் படைத்திருக் கின்றார். அடிகளாரின் தமிழ்ப்பணி வரலாற்றோடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரலாறும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வரலாறும் பின்னிப் பிணைந்திருப் பதையும் சிறப்பாக இந்நூல் எடுத்துக் காட்டுகின்றது. தனிநாயகம் அடிகளார் என்ற தலைப்பில் 1993இல் வெளியான நூலின் மீள்பதிப்பு இதுவாகும். மூல நூலைவிட மேலதிகமாக வண்ணப் புகைப்படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கத்தோலிக்க சமயகுருவான இந்நூலாசிரியர் அமுதன் அடிகளார் தமிழகத்தின் புன்னைக் காயல் பிரதேசத்தில் 1943இல் பிறந்தவர். வேளாங்கண்ணிக் குரலொலி என்ற பெயரில் சஞ்சிகையொன்றின் ஆசிரியராக 1977-1987 காலகட்டத்தில் பணியாற்றியவர். (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3998).

10A18

திருந்திய அசோகன் (சிறுவர் நாவல்). அந்தனி ஜீவா. கொழும்பு 6: இலக்கியன் வெளியீட்டகம், குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, நவம்பர் 2003. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).

24 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 225., அளவு: 24.5x17.5 *சமீ.,* ISBN: 978-955-1997-31-1.

மலையக வெளியீட்டகத்தின் தாபகர் எழுத்தாளர் அந்தனி ஜீவாவின் மணிவிழா வெளியீடாக ஏழு அத்தியாயங்களில் எழுதி வெளியிடப்பட்ட சிறுவர் நாவலின் மீள்பதிப்பு. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2447)

10A19

நாவலர் பணிகள். *ச.தனஞ்சயராசசிங்கம் (மூலம்), முருகேசு கௌரிகாந்தன் (பதிப்பாசிரியர்). கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2013, 1வது பதிப்பு, 1969. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

xvi, *120 பக்கம், விலை: ரூபா 450., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-379-2.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தின் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளராகப்பணியாற்றிய அமரர் ச.தனஞ்சயராசசிங்கம் (1933-1977) அவர்களின் ஒன்பது கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பு 1969இல் பேராதனைப் பல்கலைக்கழக (அன்றைய இலங்கைப் பல்கலைக்கழகம்) இந்து மாணவர் சங்க வெளியீடாக வெளிவந்திருந்தது. இவ்விரண்டாவது பதிப்பு, பேராசிரியர் மறைந்து 36 ஆண்டுகளின் பின்னர் இவ்விரண்டாவது புதுக்கிய பதிப்பு வெளிவருகின்றது. நாவலருக்கும் விசுவநாதபிள்ளைக்கும் எழுந்த கருத்துப்பரிமாறல், நாவலரின் சைவசமயச் சொற்பொழிவுகளும் உதயதாரகையும், நாவலரின் கல்விப்பணி, நாவலர் நிறுவிய கஞ்சித் தொட்டித் தருமம், நாவலரும் வேளாண்மையும், நாவலரும் கிலமடைந்த கீரிமலைச் சிவன்கோவிலும், நாவலரின் கண்டன மொன்றின் வரலாற்றுப் பின்னணி, Navalar chooses a Tamil Representative, *நாவலர் கலந்துகொள்ள முடியாத விநாயகர் கோவிற் கூட்டம் ஆகிய முன்னைய கட்டுரை களுடன், நாவலர் காலம், நாவலரும் விவிலிய மொழிபெயர்ப்பும், நாவலரும் துவைனம் துரையும், நாவலரும் நல்லூர்க் கோயில் நிர்வாகமும், நாவலர் காட்டிய வழி, பண்டிதமணி எதிர்பார்க்கும் நாவலர் வழக்கின் முடிபுகள்,* Navalar Appeals for State Aid, *ஆகிய கட்டுரைகளுமாக மொத்தம் 16 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஆங்கிலக் கட்டுரைகள் இரண்டும் பின்னிணைப்புகளாகத் தரப் பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 7859)*

10A20

நூலகவியலில் பட்டியலாக்கம். *விமலாம்பிகை பாலசுந்தரம். கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை, 2வது பதிப்பு, 2014, 1வது பதிப்பு, 1992. (கொழும்பு 6: குமரன் புத்தக இல்லம், 39, 36ஆவது ஒழுங்கை).*

viii, *110 பக்கம், விலை: ரூபா 400., அளவு:* 21.5x14.5 *சமீ.,* ISBN: 978-955-659-368-6.

நூலக மேலாண்மைக்கு அடிப்படையானதும் தொழில்நுட்பத்திறன் வாய்ந்ததுமான பட்டியலாக்கச் செயற்பாட்டின் (cataloguing) *வரலாறு, பட்டியலாக்கம், அதன் விதி முறைகள், பயன்பாடு முதலிய பல்வேறு விடயங்களைத் தரும் நூல். பத்து*

அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ள இந்நூல் பட்டியலாக்க விதிமுறைகள்-ஓர் ஆய்வு, விவரணப் பட்டியலாக்கமும் சர்வதேசத் தகைமைசார் நூல்விவரணமும், பருவ இதழ் பட்டியலாக்கமும் கூட்டு நிறுவனமும், கூட்டிணைப்புப் பட்டியல், மத்தியமயமாக்கப்பட்ட பட்டியலாக்கம், வாசகர் தகவல் தேவையும் பகுத்தாய்வு காணும் பட்டியலாக்கமும், நூலகங்களில் எழுத்துப் பெயர்ப்பு முறையும் தமிழ் நூல்களுக்கான பட்டியலாக்கமும், பகுப்பாக்கப் பட்டியலும் அகராதிப் பட்டியலும் -ஒப்பீட்டு நோக்கு, நூலகச் செயற்பாடுகளில் கணினி, கிராமிய நூலகங்களிற் பட்டியலாக்கம் ஆகிய தலைப்புகளில் நூலகப் பட்டியலாக்கம் விளக்கப் பட்டுள்ளது. பின்னிணைப்பாக பயிற்சி உதாரணங்களும், கலைச்சொற்களும் தரப்பட்டுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 009)

10A21

பாலர் மலர். க.இ.க.கந்தசுவாமி. கொழும்பு 06: கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு, 1வது பதிப்பு, 1982. (அச்சக விபரம் தரப்படவில்லை).

44 பக்கம், சித்திரங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21x15 சமீ.

தமிழவேள் க.இ.க.கந்தசுவாமி அவர்கள் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக இருந்தவர். சொல்லறிதல், பொருளறிதல், எழுத்தறிதல், எண்ணக் கருவாக்கம் செய்தல் என்பவற்றிற்கும், அதன் வழியாக அடிப்படையான மொழித் திறன்களை வளர்த்தலுக்குமான இந்நூல் இவரால் முதலில் 1982இல் தமிழ்ச்சங்க வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது. பாலர் கல்வி உளவியலுக்கும் கற்பித்தல் விதிகளுக்கும் இயைய இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. (இந்நூல் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 2046). (பின்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 6338)

10A22

பெண்கள் உலகம். ந.சி.கந்தையாபிள்ளை. சென்னை 01: ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், 53-56 பவளக்காரத் தெரு, 2வது பதிப்பு, மார்ச் 1960, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1947. (சென்னை 1: புரோகிரசிவ் அச்சகம்).

(4), 206 பக்கம், விலை: 12 அணா, அளவு: 18x12 சமீ.

பெண்கள் பெருமை, பெண்கள் போராட்டம், பெண் சமூகம், திருமணம் ஆகிய தலைப்புகளில் ந.சி.க.எழுதிய சிறுநூல்களின் தொகுப்பு இதுவாகும். (இந்நூல் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்தில் பார்வையிடப்பட்டது. சேர்க்கை இலக்கம் 19769). (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 8212).

10A23

பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும். செல்வி திருச்சந்திரன், கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், 2வது பதிப்பு, 1993, 1வது பதிப்பு விபரம் தரப்படவில்லை. (கொழும்பு 3: Fine Arts Graphics, No.22, டீன்ஸ்டோன் பிளேஸ், கொள்ளுப்பிட்டி).

viii, 63 பக்கம், விலை: ரூபா 55., அளவு: 21x14 சமீ.

"பெண்ணுரிமையின் பரிமாணங்களும் பெண்ணடிமையின் விளக்கமும்" என்ற தவறான தலைப்பில் இந்நூல் தொகுதி 4இல் பிரசுரமாகியுள்ளது. பெண்ணுரிமை- ஒரு விளக்கம், பெண்மையின் யதார்த்தமும் கற்பனைவாதமும், பெண் தொழிலாளி, கலைகளில் பெண், இலங்கையின் சிறுகதையில் பெண்மை, பெண் விடுதலை வாதத்தின் பிரச்சினை மையம்- அது ஒரு மேலைத்தேயக் கோட்பாடா? பெண் களின் தொழிற்சங்க ஈடுபாட்டிற்குத் தடையாக நிற்கும் கலாச்சாரப் பண்புகள், ஆண்-பெண் இனவாரியாக அமைந்த வேலைப்பிரிவினை ஆகிய 8 இயல்களில் பெண்ணியம் சார்ந்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிவிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 3173)

10A24

வாசல் ஒவ்வொன்றும். *புதுவை இரத்தினதுரை, கருணாகரன் (தொகுப்பாசிரியர்கள்). கோயம்புத்தூர் 641015: விடியல் பதிப்பகம், 88, இந்திரா கார்டன். 4ஆவது வீதி, 2வது பதிப்பு, மார்ச் 2009, 1வது பதிப்பு, டிசம்பர் 2001. (சென்னை 5: ஜோதி என்ரர்பிரைசஸ்).*

160 பக்கம், விலை: இந்திய ரூபா 60., அளவு: 21.5ஓ14 சமீ.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் இலக்கிய இதழான வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்த பத்தொன்பது படைப்பாளிகளின் 19 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வகையில் இது இரண்டாவது தொகுப்பாகவும் அமைகின்றது. இரு தசாப்தங்களைத் தாண்டி நடந்து கொண்டிருக்கும் யுத்தசூழலின் அவலங்கள், அது மனித வாழ்விலும், மனித விழுமியங்களிலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள், நம்பிக்கை, தோல்வி, வெறுப்பு, கோபம் உள்ளிட்ட மனித உணர்வுகளின் ஆதிக்கம், அவற்றில் தொழிற்படும் தன்மை என்பன பற்றிய இயல்பான வெளிப்பாடுகளாக அமைந்துள்ள கதைகள். எங்கள் பயணம் (கோளாவிலூர் கிங்ஸ்லி), அசோகவனம் அல்லது வேலிகளின் கதை (சாந்தன்), சிறைமீட்பு (விவேக்), அப்பாவும் சமகாலமும் (ந.சத்தியபாலன்), போருள் மனிதர் (உமாதேவன்), அழைப்பு (வசந்தன்), நான் நலம்: மிகுதி நேரில் (நா.யோகேந்திரநாதன்), வீடு என்பது (சத்துருக்கன்), ஒரு மயிலின் மரணம் (ஞானரதன்), வம்சக் கனவு (பிரகலாத ஹேமந்த்), பெப்ரவரி 14 (த.ம.சேந்தன்), முகமற்றவர்கள் (தாமரைச்செல்வி), ஒரு கோப்பை தேனீர் (மலைமகள்), வரை படங்கள் மாறுகின்றன (சு.மகேந்திரன்), மண்புழு (பெருமாள் கணேசன்), காலமுகம் (கருணைரவி), தீப்பிடித்த நினைவோரம் பாயும் ஆறு (முல்லைக் கோணேஸ்), மனவெளி ஓவியம் (பிரதீபகுமரன்), கோடைவழி (வளநாடன்) ஆகிய கதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. (முன்னைய பதிப்பிற்கான நூல்தேட்டம் பதிவிலக்கம் 2654)

பத்தாவது தொகுதி முற்றிற்று

தலைப்பு வழிகாட்டி

அக்குரோணி. 9557

அக்னிகார்ய விளக்கம். 9132

அக்னிப் பிரவேசம்: தமிழ்க் கவிதைத் தொகுதி. 9558

அக்ஷர போதினி. 9351

அகநானூறு: களிற்றுயானை நிரை. 9775

அங்கவை கவிதைகள். 9559

அசேதன இரசாயனத்தின் மின்னல் வழி காட்டி: க.பொ.த.உயர்தரம் பல்தேர்வு வினாக்கள். 9405

அசேதன இரசாயனம். 9406

அசேதன இரசாயனம்: வினா-விடைகள்: பயிற்சி வினாக்கள். 9407

அசோகனின் வைத்தியசாலை (நாவல்). 9716

அட்டமி நிலவு: இலக்கிய நயம். 9776

அடங்காப்பற்று (வன்னி) வரலாறு: பாகம் 3: சுதேசத் தலைமைகள்: கிபி 1750 - கிபி 1895. 10A01

அடிச்சுவடுகள். 9893

அடிப்படை இரசாயனம் பகுதி 1. 9408

அடிப்படை இலக்கணம்: ஆண்டு 10,11. 9365

அடிப்படை முகாமைக் கணக்கீடு. 9493

அடுத்தது என்ன, தேசிய சமாதானப் பேரவையின் கருத்தரங்கு. 9945

அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளும் இந்திய வம்சாவளி தமிழ்மக்களும். 9946

அதிவீரராம பாண்டியரால் பாடப்பட்ட காசி காண்டம். 9199

அந்த முழு நிலாக் காலம் (கவிதைத் தொகுப்பு). 9560

அந்தனி ஜீவாவின் அரைநூற்றாண்டு அனுபவங்கள்: ஒரு வானம்பாடியின் கதை. 9907

அபிவிருத்திப் புவியியல்: உலகப் பாங்குகள். 9855

அபிவிருத்திப் புவியியல்: க.பொ.த. (உயர் தரம்). 9856

அபிவிருத்திப் புவியியல்: பொருளியல்: ஜீ.சீ.ஈ. உயர்வகுப்புக்குரியது. 9857

அமைதியான இலங்கைக்கு சமஷ்டி ஆட்சி முறையின்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு. 9947

அமைதியின் குரல்: சம்பவத் தொகுப்பு. 9242

அயலகத் தமிழ் இலக்கியம்: இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தமிழ்ச் சிறு கதைகள், கவிதைகள்- ஒரு தொகுப்பு. 9996

அர்ச். மத்தேயூ எழுதிய யேசுக் கிறீஸ்து நாதருடைய பரிசுத்த சுவிசேஷம். 9110

அர்த்தங்கள் ஆயிரம். 9821

அரங்கு: அரங்கியல் தொடர்பான கட்டுரை களின் தொகுப்பு. 9514

அரச நிதி. 9292

அரசறிவியல்: எவ்வாறு வினாக்களுக்கு விடை அளிப்பது. 9274

அரசியல் விஞ்ஞான கோட்பாடுகள் நிறுவனங்கள். 9275

அரசியலமைப்பு: ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய. 9300

அரியாலையூர் நாடக ஆளுமைகள். 9905

அருச்சுனன் றவநிலைச் சருக்கம்: வில்லி பாரதம்-ஆரணிய பருவம். 9777

அருள் மிகு ஸ்ரீ கடலாட்சி அம்மன் ஆலய வரலாறு. 9187

அருளாளர் அந்தோனியார். 9111

அல்லாஹ்வின் முழக்கம்: நூறின் அருளின் அறிவின் பிரகாச விளக்கம். 9228

அல்லிராணிக் கோட்டை: நாட்டுக்கூத்து. 9340

அவாந்தி கதைகள்: சீன நாடோடிக் கதைகள். 9341

அழகியற் கல்வி. 9310

அழியாத தடங்கள். 9786

அளவை விளக்கம்: ஒரு தர்க்க நூல். 9045

அளவையியல் மற்றும் மெய்யியல் பல்தேர்வு வினாக்கள் MCQ. 9046

அளவையியல்: வினாவிடைக் களஞ்சியம் பகுதி 2. 9047

அளவையியலும் விஞ்ஞான முறையும்: முதற் பகுதி. 9048

அளவையியலும் விஞ்ஞான முறையும்: இரண்டாம் பகுதி. 9049

அளவையியலும் விஞ்ஞான முறையும்: சிறு குறிப்புகள் பகுதி 1. 9050

அளவையியலும் விஞ்ஞான முறையும்: GAQ வகுப்புக்குரியது: மெய்யியல் 2 கடந்த கால வினா-விடை. 9051

அளவையியற் சுருக்கம்: பகுதி 1. 9052

அளவையியற் போலிகள். 9053

அறநெறிக் காலமும் தமிழகப் பண்பாட்டு மரபுகளும். 9133

அறநெறிப் பாமஞ்சரி. 9063

அறிவியல் பேழையில் ஒரு சில மணிகள். 9391

அறிவுக் களஞ்சியம். 9001

அறிவுத்துறையில் முஸ்லிம்கள். 9963

அறிவுலக சொத்துரிமைச் சட்டமும் உலக மயமாதலில் நூலக தகவல் விஞ்ஞான அபிவிருத்தியும். 9016

அன்பு மொழி. 9651

அனலைத் தென்றல்: சிறப்பு வெளியீடு. 9980

அனுபவமுள்ள குடிநீர் வகைகள். 9459

அனுராதா கதைகள்: சிறுகதைத் தொகுப்பு. 9660

அஸீஸும் தமிழும். 9908

அஷ்ரஃப்பின் அந்த ஏழு நாட்கள். 9882

ஆச்சி அச்சாப்பாட்டி: சிறுவர் நாடக கதைத் தொகுப்பு. 9537

ஆசியத் திருச்சபை வரலாறு: பாகம் ஒன்று (கி.பி.40-1800 ஆண்டுகள் வரை சில பதிவுகள்). 9128

ஆசியாவில் வளர்ப்பு அடிப்படையிலான மீன்பிடித் தொழில்களுக்கான சிறந்த நடைமுறை அணுகுமுறைகள். 9293

ஆசிரியத்துவமும் பால்நிலை அறிகையும். 9311

ஆசிரியர் இயல். 9312

ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2005 வழிகாட்டி நூல். 9313

ஆசிரியன் ஓர் அட்சய பாத்திரம். 9561

ஆசைக் கவிதைகள்: நாட்டுப் பாடல்கள். 9342

ஆண் தலைமை ஆட்சி என்றால் என்ன? 9260

ஆண் நிலை இயல்பு பற்றிய ஆழமான தேடல். 9261

ஆண்டவர் நல்லவர் சுவைத்துப்பார்: சுவை 2. 9112

ஆணிப்பொன்: சிறுகதைத் தொகுப்பு. 9661

ஆதி கிரேக்க மெய்யியல். 9030

ஆபுத்திரனும் அமுதசுரபியும். 9188

ஆய் தமிழ். 9787

ஆய்ந்தறிதல் திறன். 9054

1981-1985 ஆண்டுகளுக்கும் 1990இல் முடிவடையும் காலகட்டத்திற்கும் சோவியத் யூனியனின் பொருளாதார சமூக வளர்ச்சிக்கான வழிகாட்டு நெறிகள். 9281

ஆயுத எழுத்து: நாவல். 9717

ஆயுத வரி: சிறுகதைகள். 9662

ஆரம்ப மக்கட் புவியியல். 9841

ஆரம்பக் கல்வி. 9314

ஆரோக்கிய வாழ்வுக்குச் சில ஆலோசனைகள். 9437

ஆலய வழிபாடும் தத்துவமும். 9134

ஆறுமுக நாவலர். 9868

ஆறுமுக நாவலர் அவர்களின் சரித்திரச் சுருக்கமும் அவர்கள் இயற்றியருளிய தனிப்பாமாலையும். 9894

ஆறுமுகனின் ஆறுபடை வீடுகள். 9189

ஆன்மீக வாழ்க்கைக்கு 101 பயனுள்ள வழி காட்டிகள். 9036

இ.நமசிவாயம்: அவரது வாழ்க்கையும் காலமும் திருக்கேதீச்சரப் புனருத்தாரணத் திருப்பணியும். 9869

இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய். 9562

இடைநிலை வர்த்தகப் புவியியல்: வியாபாரப் பொருள்களும் உலக வர்த்தகமும். 9333

இணுவில் செகராசப் பிள்ளையார் பிள்ளைத் தமிழ். 9200

இது இந்து மதம். 9135

இந்த நாடு உருப்படாது. 10A02

இந்திய அளவையியலில் அனுமானம்: தருக்க சங்கிரக அடிப்படையில். 9055

இந்திய நடனங்கள். 9513

இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்: தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம். 9136

இந்து ஒளி: சிவயோக சுவாமிகள் ஐம்பதாவது குருபூசை சிறப்பிதழ் 2014. 9021

இந்து சமய பாடம்: தொகுப்பு நூல்: இரண்டாம் பாகம். 9168

இந்து சமய பாடம்: பாடத்திட்டம் முற்றும் அடங்கிய முழுநூல்: க.பொ.த. 1971-1973 வகுப்புக்குரியது. 9169

இந்து சமய வினாவிடை: புதிய க.பொ.த. (சா/த) வகுப்புக்குரியது. 10A03

இந்து சமயம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம் பகுதி 1. 9170

இந்து சமயமும் அவைதிக நெறிகளும். 9137

இந்து நாகரிகத்தில் நுண்கலைகள்: பாகம் 1. 9071

இந்து நாகரிகத்தில் வேதங்கள். 9072

இந்து நாகரிகத்திற் கலை. 9073

இந்து நாகரிகம்: இந்து சமயம் ஜீ.சீ.ஈ., உயர்தரம், ஜீ.ஏ.கியு, பீ.ஏ. 9074

இந்து நாகரிகம்: இரண்டாம் பாகம். 9075

இந்து நாகரிகம்: ஈழத்து இந்துமத வரலாறு. 9076

இந்து நாகரிகம்: 852 வினா-விடை: பகுதி 1. 9077

இந்து நாகரிகம்: ஏ.எல். 723 வினா-விடை. 9078

இந்து நாகரிகம் A/L, G.A.Q., B.A. ஈழத்து இந்துமத வரலாறு பாகம் 4. 9079

இந்து நாகரிகம்: க.பொ.த. உயர்தரப் பரீட்சை. 9080

இந்து நாகரிகம்- சில பார்வைகள்: க.பொ.த. உயர்தரம். 9081

இந்து நாகரிகம்: சுருக்க வினாவிடை: க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது. 9082

இந்து நாகரிகம்: சுருக்கமான வினா விடைகள். 9083

இந்து நாகரிகம்: பகுதி 1. 9084

இந்து நாகரிகம்: பாகம் 1: வேதங்கள், குப்தர் காலம், பல்லவர் காலம். 9085

இந்து நாகரிகம் புதிய பாடத்திட்டம்: வினா-விடை. 9086

இந்து நாகரிகம் மாதிரி வினாவிடை: பகுதி 1. 9087

இந்து நாகரிகம்: முதலாம் பாகம். 9088

இந்து நாகரிகம்: வினா-விடை (க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது). 9089

இந்து நாகரிகம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம். 9090

இந்து நாகரிகம்: ஜீ.சீ.ஈ. உயர்தரம்: சிறு குறிப்புகள். 9091

இந்து மக்களுக்கு ஒரு கையேடு. 10A04

இந்து மத வரலாறு பகுதி 1. 9138

இந்து மதப் பொது அறிவு. 9171

இந்து மரபில் வர்ணதர்மமும் சைவசித்தாந்த ஒழுக்கவியலும். 9092

இந்து விக்கிரகக் கலை மரபில் சிவ வடிவங்கள். 9512

இந்து விரதங்களும் உடல்நலமும். 9139

இந்துக் கணித வானியல் மரபு. 9396

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி எட்டு: தி-தோ. 9140

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி ஒன்பது : ந-நௌ. 9141

இந்துக் கலைக் களஞ்சியம்: தொகுதி பத்து: ப-பௌ. 9142

இந்துக் கலைக் களஞ்சியம்: பதினோராம் தொகுதி: ம-மௌ. 9143

இந்துக் கோயில்கள் கட்டடங்களும் சிற்பங் களும். 10A05

இந்துப் பண்பாடு: அன்றும் இன்றும். 9252
இப்படி எத்தனை நாட்கள்: சிறுகதைத் தொகுப்பு. 9663
இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும். 9563
இப்படியுமா?: சிறுகதைகள். 9664
இம்மனுவல் நாட்டுக்கூத்து. 9343
இமயத்தின் குரல்: முதற் புத்தகம். 9144
இயற்கை மூலவளங்களும் பொருளாதார வளர்ச்சியும் (வட பிரதேசம்): ஆறாம் வகுப்புக்குரியது. 9282
இயேசு கானங்கள் (கிறிஸ்தவ கவிதைகள்). 9113
இயேசுவின் பின் செல்லல். 9114
இயேசுவே இறைவன். 9115
இரசாயன அறிவை அளவிடுங்கள்: பயிற்சிகள். 9409
இரட்சணிய யாத்திரிகம்: முதலாவது பருவம்-கடை திறப்புப் படலம்: மூலமும் உரை விளக்கமும். 9116
இரட்சணிய வரலாறு: பரிசுத்த ஏடுகள் பாட நூல் க.பொ.த.(உ.த). 9117
இரண்டாம் சைவ வினாவிடை. 9172
இராசசேகரம்: சிங்கை அரசர்களினதும் அரச பரம்பரை மருத்துவர்களினதும் கையாட்சியான மருந்து குடிநீர் வகைகள். 9460
இருட்டு மனிதர்கள். 9718
இருதய நோய்களும் தடுக்கும் முறைகளும். 9447
25,00,000 மக்கள் தலைவர். 9883
இருபத்தோராம் நூற்றாண்டில் மலையகத் தமிழர் எதிர்நோக்கும் சவால்கள். 9964
இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துச் செம்மல்கள் பாகம் 1. 9909
இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு (இரண்டாம் பாகம்). 9910
இருபாலைச் சேனாதிராய முதலியார் ஆக்கிய ஆக்கங்கள் சிலவற்றின் தொகுப்பு. 9820
இருளினைக் கிழித்து தெருவினில் இறங்கு. 9564
இல்லத்தரசி. 9665
இலக்கண வரம்பு: மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களின் இலக்கணக் கட்டுரைகள். 9366
இலக்கணத் தேறல்: சுருக்க வினா-விடை. 9367
இலக்கிய மஞ்சரி: மூன்றாம் புத்தகம். 9740
இலக்கிய வினா-விடைப் பூங்கா. 9741
இலக்கியத் தென்றல். 10A06
இலக்கியத்தில் சமூகம்: பார்வைகளும் பதிவுகளும். 9253
இலக்கியப் பொய்கை: எட்டாம் வகுப்பு. 9742
இலகு தமிழ் இலக்கண வினாவிடை: தரம் 6-11. 10A07
இலகு முறை இலங்கைப் புவியியல். 9842
இலகுவான ஆசன செய்முறை. 9439
இலங்கை அரசியல் யாப்புக்களின் பரிணாம வளர்ச்சி. 9301
இலங்கை அரசியல் வரலாறு: ஒரு நோக்கு. 9948
இலங்கை அரசியல் வரலாறும் பதின் மூன்றாவது பொதுத் தேர்தலும். 9277
இலங்கை: ஆசியாவின் மலர்ந்துவரும் ஆச்சரியம்: மகிந்த சிந்தனை-எதிர்காலத்திற்கான தொலைநோக்கு. 9283
இலங்கை இந்தியர் சரித்திரச் சுருக்கம். 9965
இலங்கை கணக்கீட்டு நியமங்களும் அதன் பிரயோகங்களும்: 1994 திருத்தப்பட்ட தன்படி. 9494
இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள். 9344
இலங்கை: தேசிய இனப்பிரச்சினை. 9949
இலங்கை: புவியியல் வளம் மக்கள். 9843
இலங்கை மலையகத் தமிழ் இலக்கிய முயற்சிகள். 9769
இலங்கை வளமும் தால விலாசமும். 9420

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்: 1800-இக்காலம்: ஏழாம் வகுப்புக் கேற்றது. 9938

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்: முதலாம் பாகம்: கி.பி.1505 வரை. 9937

இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பிய சரித்திரமும் கி.பி.1453-1796: ஜீ.சீ.ஈ. வகுப்புக்குரியது. 9939

இலங்கைச் சுருக்க வரலாறு: கி.மு.6ஆம் நூற்றாண்டு முதல் 2007 வரை. 9929

இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்: கி.பி. 700-1300. 9930

இலங்கைத் தமிழர் வரலாறும் இன்றைய நிலையும். 9950

இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள். 9994

இலங்கைத் தமிழறிஞர்களின் தமிழ்ப் பணிகள் (க.பொ.த. உ/த). 9911

இலங்கைத் திருச்சபை வரலாறு: க.பொ.த. உயர்தர பாடநூல். 9129

இலங்கைத் திருச்சபைக் காவலராம் யோசேவ் வாஸ் முனிவர் அம்மானை. 9118

இலங்கைத் தீவுடன் ஒரு வரலாற்றுத் தொடர்பு. 9931

இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்: பாகம் 1: கி.பி.1500 ஆண்டுகள் வரை. 9254

இலங்கைப் பயணக்கதை: இதயம் பேசுகிறது. 9997

இலங்கைப் பாராளுமன்ற அரசியலும் பன்னிரெண்டாவது பொதுத் தேர்தலும். 9278

இலங்கைப் புவியியல். 10ய08

இலங்கைப் புவியியல்: க.பொ.த. சாதாரண தர வகுப்புக்குரியது. 9844

இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம். 9290

இலங்கையில் ஓர் இல்லற ஞானி: சிவத்திரு க.இராமச்சந்திரனார் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு. 9870

இலங்கையில் கல்வியின் நவீன போக்குகள்: கல்வியியல் கட்டுரைகளின் தொகுப்பு. 9315

இலங்கையில் சம்பளமும் தொழில் நியதி நிபந்தனைகளும். 9289

இலங்கையில் சுவாமி விவேகானந்தர். 9871

இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசம்: விவசாய வளமும் பயன்பாடும். 9471

இலங்கையில் 16000 தமிழர் கப்பலேறிய கதை. 9951

இலங்கையில் வைத்தியர் அலிஸ்டி புவர் மற்றும் முன்னோடிகளான சில பேகர் பெண் வைத்தியர்களும். 9901

இலங்கையின் அரசியல் யாப்புகள். 10A09

இலங்கையின் இன உறவுகள் சமூக வரலாற்று சூழமைவு. 9966

இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் யாப்புகளும். 9302

இலங்கையின் கதை. 9998

இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாறு. 9255

இலங்கையின் சுருக்க வரலாறு. 9932

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் திட்டமிடல் செய்முறை. 9284

இலங்கையின் பொறுப்புக்கூறல் மீது செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழு அறிக்கை. 9952

இலங்கையின் வெளியுறவுக் கொள்கை: 1948-2010. 9279

இலட்சியத்தை அடைதல். 9644

இலத்திரனியல் வித்துக்கள். 9402

இவன்தான் மனிதன்: சிறுகதைகள். 9666

இழப்புக்களையும் இழப்போம்: ஹைக்கூ கவிதைத் தொகுதி. 9565

இழையவியல்: உயர்தர விலங்கியல் உசாத்துணை நூல்வரிசை 4. 9427

இளம் பெண்ணோயியல். 9453

இளைஞர் விருந்து. 9566

இளைஞரும் அபிவிருத்தியும்: கருத்தரங்க அறிக்கை. 9285

இறந்தபின் எங்கு செல்கின்றோம்? 9093

இறசூல் சதகம். 9229

இறுக்கம்: சிறுகதைகள். 9667
இறை உண்மை (இறையியல் கட்டுரைகள்). 9119
இறை ஞான ஈர்ப்புகள். 9120
இறை தொடுவானம். 9121
இறை விழுமியம்: இறையியல் கட்டுரைகள். 9122
இன்றைய வண்ணத்துப் பூச்சிகள். 9567
இன்னொரு நூற்றாண்டுக்காய். 9881
இனப்படுகொலை: தமிழீழமும் இந்தியாவின் பாதுகாப்பும். 9953
இனிக்கும் இலக்கணம்: எழுத்ததிகாரம். 9368
இஸ்லாம் ஐந்தாம் தரம். 9230
இஸ்லாம்: 9ம் 10ம் தரங்கள். 9231
இஸ்லாம் மதபாடம்: 8ம் வகுப்பு. 9232
இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள். 9233
ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்கான உலகத் தமிழர் மாநாட்டு மலர். 9999
ஈழத் தமிழர்களின் அவலங்கள். 10000
ஈழத் தமிழரின் போர்க்காலம்: இலக்கியங்கள், ஆய்வுகள், பதிவுகள். 9770
ஈழத்து தமிழிலக்கிய வரலாறு: க.பொ.த. உயர்தரம். 9743
ஈழத்து முச்சந்தி இலக்கியம். 9771
ஈழத்துக் கவிதைக்கனிகள். 10A10
ஈழத்துச் சிறுகதைகள். 9668
ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள் சில. 9788
ஈழத்துத் தமிழ் அறிஞர்கள்: தொகுதி 1. 9862
ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள். 9345
ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி. 9789
ஈழத்துத் தமிழியல்சார் தமிழ் ஆய்விதழ்கள்: ஒரு கண்ணோட்டம். 9355
ஈழத்துத் திருப்புகழ். 9201
ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு. 9933
ஈழம் வளர்த்த நூல். 10A11
உங்கள் பொது அறிவு. 9002
உங்கள் பொது உளச்சார்பு. 9003
உடப்பு: தமிழ்க் கலாச்சாரத்தின் ஊற்று. 9981
உணவும் போசணையும். 9479
உதிரப் பூக்கள்: கவிதைத் தொகுதி. 9568
உப்புக் கரிக்கும் உதடுகள். 9569
உம்மத்: நாவல். 9719
உயர் கணக்கீடு: 1997 க.பொ.த. உயர்தர பரீட்சை வினா-விடை. 9495
உயர் கணக்கீடு: இலாப நோக்கற்ற நிறுவனங்களின் முடிவுக்கணக்குகள். 9496
உயர் கணக்கீடு: ஒற்றைப் பதிவும் தீயழிவும் அலகு 1. 9497
உயர் கணக்கீடு: காசுப் பாதீடு காசுப் பாய்ச்சல் கூற்று: அலகு 7-2. 9498
உயர் கணக்கீடு: வங்கி இணக்கக் கூற்று அலகு 4. 9499
உயர் கணக்கீடு: வழுக்களைத் திருத்தலும் தொங்கல் கணக்கும் அலகு 2. 9500
உயர்தர தாவரவியல் பாகம் 2A. 9421
உயர்தர மாணவர் மீட்டல் பௌதிகம். 9398
உயர்தர வகுப்புகளுக்குரிய புது உலக சரித்திரம் 1789-இன்று வரை. 9835
உயர்தர விலங்கியல்: ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்புப் பாடநூல்: பகுதி 4: சூழலியல் முளையவியல் கூர்ப்பு. 9429
உயர்தர விலங்கியல்: ஜீ.சீ.ஈ உயர்தர வகுப்புப் பாடநூல்: திருத்திய பதிப்பு: பகுதி 2. 9430
உயர்தர விலங்கியல் பரீட்சை வழிகாட்டி. 9428
உயர்தரக் கணக்கியல் பகுதி 2. 9501
உயிர் மூச்சு: கவிதைத் தொகுப்பு. 9570
உயிர்ச் சமர். 9571
உயிரியல் அறிவை அளவிடுங்கள்: பயிற்சிகள். 9415
உயிரியல் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும். 9416
உருத்திர கணிகையர் கதாசாரத் திரட்டு. 9145
உலக சரித்திர வினாவிடை. 9836
உலக சரித்திரம்: 1500-1948 ஜீ.சீ.ஈ. வகுப்புக் குரியது. 9837
உலக நாடுகள் வரிசை: இலங்கை. 9858

உலகத்துக்கு ஒன்று. 9790
உலகப் படப் பயிற்சிகளும் சமஉயரக் கோட்டுப் பயிற்சிகளும் வரைபடப் பயிற்சிகளும். 9860
உலகம் சுற்றிய பலூன் தம்பி. 9546
உலகமயமாதல்: வாஸ்கொடகாமா முதல் ஒபாமா வரை. 9286
உலகின் முதலாவது வைத்திய மிஷனரி வண. டாக்டர் ஜோன் ஸ்கடர் கதை. 9902
உலகைச் சூறையாடும் உலகமயம். 9287
உள்ளும் வெளியும்: ஈழம் மற்றும் புகலிடப் படைப்பிலக்கிய ஆய்வுக்கட்டுரைகள். 9791
உள்ளூர் உணவு செய்முறைகள். 9480
உள நெருக்கீடும் மனநலனும். 9043
உளநெறிக் கதைகள். 9669
உற்பத்தித் திறன் ஊடாக உயரிய செல்வம். 9488
உன் ஓரவிழி வீச்சிலிருந்து. 9572
உன் பெயர் குறிக்கும் எழுத்துகளில்: கவிதைகள். 9573
உன்னை வாசிக்கும் எழுத்து. 9826
உனை நீயே செதுக்கு (கவிதைகள்). 9574
ஊடக அனுமானம்: ஓர் அறிமுகம். 9056
ஊழிக் காலம்: நாவல். 9720
எங்கள் ஆசான் அருள்மொழிகள்: யோக சுவாமிகள் தம் அன்பர்களுக்குக் கூறியவை. 9064
எட்டாந்தரச் சரித்திரச் சுருக்கம். 9838
எட்டாந்தரப் புவியியல். 9845
எண்களில் உங்கள் அதிஷ்டம். 9106
எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம். 9346
எதிர்ப்பிலக்கியம்: ஒரு கலாச்சார ஆயுதம். 9792
எதிர்வீட்டு நாயும் என் ஏழை நாயும். 9575
எம்மை அழித்தாலும் எமது குரல் ஓயாது. 9934
எல்லாம் மண். 9538
எல்லை வேம்பு: சிறுகதைகள். 9670
எழிலி: காவியம். 9652
எழுச்சிப் பாதை. 9306
எழுத்தாளர் கல்கி. 9912
என் எழுத்தாயுதம்: ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுப் பகிர்வு. 9864
என் பேனாவின் நிதர்சனம். 9576
என் விழி வழியே: கவிதைத் தொகுப்பு. 9577
என்னைத் தீயில்எறிந்தவள். 9578
எனது இலக்கியத் தடம்: முதலாம் பாகம். 9913
எஸ்.பாயிஸா அலி கவிதைகள். 9579
ஏக்கத்தில் ஆக்கம்: தொகுப்பு. 9243
ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின் கீழ் இலங்கை. 9954
ஏணி: கவிதை ஓவியத் தொகுப்பு. 9580
ஏணிப்படிகள். 9037
ஏழாந்தரப் புவியியல். 9846
ஏழை நிலா: குறுங்காவியம். 9653
ஏற்றம் பெருக வந்தாய் (கவிதைத் தொகுப்பு). 9581
ஐக்கியதீபம்: வீரசிங்கம் நினைவு மலர். 9890
ஐம்பது நாடுகளை அறியுங்கள். 9839
ஐரோப்பா தேச வரலாற்றுக் குறிப்புகள்: க.பொ.த.உயர் தரத்திற்குரியது. 9928
ஒட்சிடனெதிரிகள் மூலமாகப் புற்றுநோய்த் தடுப்பு. 9448
ஒடுக்கப்பட்டவர்கள். 9671
ஒடுக்கப்பட்டோர் கல்வி: மலையகக் கல்வி பற்றிய விடயஆய்வு. 9316
ஒம்புட்சுமானின் பணி. 9305
ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். 9721
ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை: செய்திக் கட்டுரைத் தொகுதி. 9955
ஒரு பயணியின் போர்க்காலக் குறிப்புகள். 9582
ஒரு விமர்சகரின் இலக்கியப் பார்வை. 9793
ஒரு விவரணக் கருத்துரை: பேச்சு வார்த்தைகளின் கட்டமைப்புக்கள், நடைமுறைகள் பற்றிய கருத்தரங்குத் தொடர்கள்: சில படிப்பினைகளும் சிந்தனை வெளிப்பாடுகளும். 9956

ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முகாமைத்துவம் பாகம் 1. 9472
ஒருவருக்காக அல்ல: சிறுகதைகள். 9672
ஒரே நாளில் வாழ்வு. 9414
ஓ கே குணநாதன் நகைச்சுவைக் கதைகள். 9673
ஓடியோ அம்பிளிபயர் டேப்ரெக்கோடர். 9403
ஓயாத கிளர்ச்சி அலைகள்: 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் எழுச்சிகள். 9244
ஔவை குறள்: மூலமும் தெளிவுரையும். 9778
ஔவையார் அருளிய மூதுரை என அழைக்கப்படும் வாக்குண்டாம் மூலமும் உரையும். 9065
க.பொ.த. உயர்தர தாவரவியலுக்கான தொழிற்படும் தாவரம் பகுதி 1. 9422
க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அடிப்படை இலத்திரனியல். 9404
க.பொ.த.உயர்தர வகுப்புக்கான உயிரியல் பகுதி 3B: தொழிற்படும் தாவரம். 9417
க.பொ.த. உயர்தர வகுப்புக்கான பிரயோக கணிதம்: நிலையியல். 9395
க.பொ.த. உயர்தரப் பரீட்சை: கடந்தகால வினாத்தாள்கள்: இந்து சமயம் பகுதி 1-பகுதி 2. 9173
க.பொ.த. ஜீ.சீ.ஈ. (சாதாரணதர) வகுப்புக்குரிய இந்து சமய பாடம். 9174
கங்கையில் மிதந்துவரும் மனிதக் கவிதைகள். 9583
கச்சதீவு: அன்றும் இன்றும். 9982
கட்டு வைத்தியம். 9461
கட்டுரை மஞ்சரி: ஆண்டு 9, 10, 11. 9744
கட்டுரை மஞ்சரி: பகுதி 2: 10ம் 11ம் ஆண்டு. 9745
கட்டுரை மஞ்சரி: 10ம் 11ம் ஆண்டு. 10A12
கட்டுரைக் கதிர்: தரம் 12-13. 9746
கட்டுரைக் கலசம்: தமிழில் கட்டுரைகள் எழுதுவது எப்படி. 9747
கடல் ஆமைகள்: உயிரியலும் இனத்தின் பேணுகையும் அவற்றின் வளர்ப்பு முறைகளும். 9431
கடலின் கடைசி அலை: கவிதைத் தொகுதி. 9584
கடலும் காவிரியும்: சிறுவர் பாடல். 9525
கடவுள் மாமுனிவர் அருளிய திருவாதவூரடிகள் புராணமும் புலவர் ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி அவர்களது படனவிளக்க உரையும். 9202
கடவுளுக்கு ஒரு கடிதம். 9585
கடவுளோடு பேசுதல்: சில ஆன்மீகக் குறிப்புகள். 9038
கடற்கரைப் பூக்கள். 9586
கண்டல்களும் உவர் வளரிகளும். 9423
கண்டலும் சூழலும். 9424
கண்ணகையும் தன்னகையும். 9779
கண்ணீர் சிந்தும் சொர்க்கபுரி: வரலாறு மற்றும் முரண்பாட்டினூடான ஒரு பயணம். 9957
கண்ணீர்ப் பயணங்கள்: கவிநூல் பாகம் 1. 9587
கண்ணுக்கு எட்டிய தொலைவில். 9967
கணக்கியல் கோட்பாடுகளும் நியமங்களும். 9502
கணக்கீடு பகுதி 1. 9503
கணபதி கடாட்சம் (தொகுப்பு நூல்). 9146
கணபதியே வருவாய். 9794
கணினியின் வரலாறு. 9013
கணிதம்: தொடை: தரம் 10-11. 9393
கணிப்பொறி 2000. 9014
கணையாழி. 9722
கதாபாத்திரங்களின் குணப்பண்புகள்: க.பொ.த. சாதாரண தரம். 9748
கதிர்காமத் திருமுருகன்: வரலாற்று ஆய்வு நூல். 9190
கதிர்காமத்திற்கு நடைப்பயணம். 9958
கதிர்காமம் கந்தன் கோவில்: அன்றும் இன்றும். 9191
கந்தசட்டிப்புராணம். 9203

கந்தபுராணம்-யுத்தகாண்டம்: அக்கினி முகாசுரன் வதைப்படலம் உரை. 9204
கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். 9147
கம்பதாசன் கவிதைத் திரட்டு. 9588
கம்பதாசன் சிறுகதைகள். 9674
கம்பர் கவிதைக் கோவை: இரண்டாம் பாகம். 9749
கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம் திருவடிசூட்டுப் படலம்: க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குரியது. 9750
கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம் கைகேயி சூழ்வினைப் படலம். 9751
கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலமும் கைகேயி சூழ்வினைப் படலமும்: விளக்கவுரை. 9752
கம்பராமாயணம்: கும்பகருணன் வதைப் படலம். 9753
கம்பராமாயணம்- குறளில் உணர்ச்சிவளம்: இரண்டாம் புத்தகம். 9754
கம்பராமாயணம்: சுந்தரகாண்டம்: காட்சிப் படலமும் நிந்தனைப் படலமும். 9755
கம்பனிக் கணக்குகளும் நிதிப் பாய்ச்சல் கூற்றுகளும். 9504
கயமை மயக்கம். 9675
கரப்பான்: மாதிரி முள்ளந்தண்டிலி. 9432
கருடபுராணமென்று வழங்குகின்ற ஸ்ரீ கருட புராண வசனம். 9205
கருத்துக் கொலைக்கு இரையானோர். 9028
கருநாவு. 9589
கருவறைக்கு வெளியே. 9676
கரை தேடும் அலை. 9590
கல்யாணப் பொருத்தங்கள். 9335
கல்யாணி. 9515
கல்லறை நெருஞ்சிகள்: கவிதைத் தொகுப்பு. 9591
கல்விச் சமூகம். 9317
கல்விச் சீர்மியம். 9318
கல்வித் திட்டமிடல். 9319
கல்வியியலில் விடய ஆய்வு. 9320
கலசம் 75ஆவது சிறப்பிதழ். 9022
கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தியின் இலக்கியத் தடங்கள். 9914
கலை இலக்கியப் பார்வைகள். 9795
கலைத்தவசி: குழந்தை செபமாலை அவர்களின் கலைப்பணி நயப்பு மலர். 9904
கலைத்துவ சினிமா. 9523
கவிஞர் கம்பதாசன் வாழ்வும் பணியும். 9915
கவிதைச் சுரங்கம். 9592
கவிதைத் துளிர். 9593
கவிதைப் பூக்கள். 9594
கழுகு நிழல்: கட்டுரைத் தொகுதி. 9280
களத்தீ: கவிதைத் தொகுதி 1. 9595
களைகள். 9473
கனகராயன் ஆற்று வடிநிலம்: ஒரு புவியியல் ஆய்வு. 9861
கனவு மெய்ப்படும். 9677
காக்கை வலிப்பு பற்றி பேசுவோம். 9449
காச நோய்: சமூக அணுகுதல். 9450
காணாமற்போன ஒட்டகை: கதையும் கதை கூறும் கவிதைகளும். 9796
காத்தவன் காவியம். 9654
காம தகனம்: கந்தபுராணம், உற்பத்திக் காண்டம். 9756
காய்கறிப் பயிர் இனவிருத்தி. 9474
காலக் குயில்: கவிதைத் தொகுப்பு. 9596
காலத்தின் தேவை: அரசியல் வேலை. 9959
காலத்தின் புன்னகை. 9597
காலத்தை வென்றுநிற்கும் கந்தரோடை. 9983
காலப் பிரசவம்: கவிதைத் தொகுதி. 9598
காவிய மணம். 9797
காற்றில் கலந்தவை. 9123
காற்று வெளியிடையே. 9599
காற்றோடு பேசுதல்: புதுக் கவிதைத் தொகுதி. 9600
காஸி நீதிமன்ற நடைமுறைகளும் செயற் பாடுகளும். 9299

கியூபா புரட்சிகர யுத்தம். 9995
கிரயக் கணக்கீடு: அலகு 2. 9505
கிரயக் கணக்கீடு: அறிமுகமும் பொருட் கிரயமும். 9506
கிராமக் கவிதைவளமும் சிந்தனைக் கட்டுரைகளும். 9798
கிராமியப் போஷாக்கு (1). 9487
கிராமியம்-கல்வி-மேம்பாடு: சமூகவியல் பார்வைகள். 9321
கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு: நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான உதவி நூல். 9516
கிழக்கு முஸ்லீம்கள் அரசியல் ரீதியாக ஒன்றிணைய வேண்டும். 9968
கிழக்குப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள். 9895
கிழிசல்: சிறுகதைத் தொகுப்பு. 9678
கிறிஸ்தவ இல்லற நல்வாழ்வு. 9124
கிறிஸ்து தத்துவம். 9125
கிறுக்கல்கள் சித்திரமாகின்றன. 9601
குடிஇயலும் அரசியலும்: முதலாம் பாகம். 9276
குணபாடம்: மூலிகையியல் பாகம் 1. 9462
குமுறல்: கவிதைகள். 9602
குருகவி ம.வே.மகாலிங்கசிவம்: வரலாறும் ஆக்கங்களும். 9916
குலசேகரம்: பெரிய பரிகாரியார் பரம்பரை யினரின் அனுபவ விடவைத்தியம். 9463
குவர்னிகா: 41வது இலக்கியச் சந்திப்பு மலர். 9822
குழந்தை ஒரு தெய்வம். 9679
குழந்தை வளர்ச்சி. 9455
குழந்தைக் கல்விச் சிந்தனைகள். 9322
குழந்தைக் கவி அமுதம். 9526
குழந்தைகள் உலகம். 9323
குழந்தைப் பாடல்கள். 9527
குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும். 9872
குறிஞ்சி நாடன் கவிதைகள். 9603
குறியீட்டுஅளவையியல். 9057
குறியீட்டு அளவையியல்: பெறுகைமுறை துணைப்பெறுகை. 9058
குறுங்கதை நூறு. 9680
குறுந்தாவரம் (பொன்சாய்). 9425
கே. எஸ். சிவகுமாரன் ஏடுகளில் திறனாய்வு / மதிப்பீடுகள் சில. 9799
கே. எஸ். சிவகுமாரன் கண்களுடாக 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கலை/ இலக்கியப் போக்குகளின் பதிவுகள், திறனாய்வு. 9800
கைத்தொழில் பிணக்குகள் சட்டம். 9294
கொம்புத் தேன்: குட்டிக்கதைகள் 100. 9681
கொழுத்தாடு பிடிப்பேன்: தேர்ந்தெடுத்த சிறுகதைகள். 9682
கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருத்தலம். 9192
கோயிலமைப்பும் கிரியையும் வழிபடு முறையும். 9148
கோழி வளர்ப்பு. 9477
கோழிப்பண்ணை. 9478
சக்தி சிவனின் அருளாட்சி. 9193
சங்கமம்: ஒரு வரலாற்றின் காவியம். 9328
சங்கமம்: சிறுகதைத் தொகுதி. 9683
சங்கீதன்: சிறுவர் நாவல். 9547
சட்ட மறுப்பு. 9295
சட்ட வல்லுநர் செ. இரங்கநாதன் கியூ.சீ. அவர்களின் பன்முகப் பணிகள். 9889
சதாசிவ லீலா சரித்திரம். 9723
சதியா விதியா? (சமூக நாடகம்). 9645
சந்தன மரம். 9831
சந்தனப் பொட்டுச் சுந்தரம்பிள்ளை. 9528
சந்தானமணி. 9107
சபாபதி நாவலர் சரித்திரச் சுருக்கம். 9917
சம்பந்தர் படைப்பாளுமை. 9149
சம்பந்தன் சிறுகதைகள். 9684
சமகாலக் கல்வி வளர்ச்சி. 9324
சமய நோக்கில் தமிழ் இலக்கியச் சிந்தனைகள். 9150
சமரச ஞானக் கோவை. 9094
சமாதான முயற்சிகளில் பால்நிலை பிரதி நிதித்துவம். 9262

சமுதாயங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும். 9234
சமூக அறிவியல். 9245
சமூக மருத்துவம்: ஓர் அறிமுகம். 9435
சமூக ஜோதியின் சங்கநாதம்: சொற் பொழிவுகள். 9801
சமையல் முறைகள்: முதலாம் பாகம். 9481
சமையற் கலை. 9482
சருவஞானோத்தர ஆகம ஞானபாத வசனம். 9095
சற்பிரசாத வாசாப்பு: ஒரு வரலாற்றுப் பார்வை. 9517
சாந்தி மார்க்கம். 9235
சாம்பவி. 9724
சாவித்திரி சபதம்: பாட்டும் உரையும். 9655
சிகையலங்காரம். 9486
சிங்கள எழுத்துப் பயிற்சி. 9353
சிட்டுக் குருவிகள். 9833
சித்த ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் களுக்கான கைநூல். 9464
சித்த மருத்துவ வாகடம் 2. 9465
சித்த மருந்து முறையியல். 9466
சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம்: ஓர் குறிப்பு வழிகாட்டி. 9467
சித்தார்த்தர் (கௌதம புத்தர்). 9130
சித்ரமுத்துப் பிள்ளைக் கவி. 9802
சிதானந்த யோகாசன செய்முறை 22. 9440
சிந்தனைத் துளிர்கள்: தரம் 6-11. 9551
சிந்தாமணி நிகண்டு: மூலமும் உரையும் அகராதியும். 9356
சில நோய்களும் ஆலோசனைகளும். 9451
சிலப்பதிகாரம்: கடலாடு காதை, கானல்வரி. கம்பராமாயணம்: வாலி வதைப் படலம். 9757
சிலம்பு சிரித்தது. 9656
சிலம்பு மேகலை. 9780
சிவகாமி தமிழ்: பல்வகைப் பாடல் தொகுப்பு. 9604
சிவஞானசித்தித் திறவுகோல். 9096
சிவஞானபோதம். 9097
சிவஞான விளக்கம். 9098
சிவத்தமிழ்ச் செல்வம்: தங்கம்மா அப்பாக் குட்டியின் வாழ்க்கை வளம். 9873
சிவதர்ம சீலர் சித.மு.ப. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களின் நூறாவது ஆண்டு ஜயந்தி மலர். 9874
சிவநெறி அடியார்கள். 9151
சிவபெருமானும் சுந்தரமூர்த்தி நாயனாரும். 9152
சிவபெருமானை திருக்கயிலாயத்தில் கண்டேன். 9153
சிவயோக சுவாமிகள் அருளிச்செய்த நற் சிந்தனை: செய்யுள் உரைத் திரட்டு. 9206
சிவயோக சுவாமிகள் நற்சிந்தனையிற் பாடி யருளிய முருகன் திருப்பாடற்றிரட்டு. 9207
சிவில் அரசியல் மற்றும் தொழில் உரிமைகள் தொடர்பான சர்வதேச நியமங்களின் இலங்கை பிரயோகம் பற்றிய விமர்சன மதிப்பீடு. 9296
சிறக்கச் சில கதைகள்: நீலாம்பாள் நடராஜா நினைவு வெளியீடு. 9685
சிறீலங்கா தாவர போசன சமையல். 10A13
சிறுகதை எழுத விரும்புவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள். 9803
சிறுவர் உரிமைகள்: இலகுவான முறையில். 9297
சிறுவர் கட்டுரை மாலை: ஆண்டு 4-5. 9552
சிறுவர் கட்டுரைகள்: ஆண்டு 5. 9553
சிறுவர் குரல் அமுதம். 9529
சிறுவர் சட்டங்கள். 9298
சிறுவர் சிந்தனைக் கதைகள். 9540
சிறுவர் செய்யுள்: பைபிள் கதைகள். 9530
சிறுவர் பொது அறிவு. தரம் 4-7 வரையிலான மாணவருக்குரியது. 9004
சிறுவர்களுக்கான அபூர்வக் கதைகள். 9541
சிறுவர்களுக்கான சிந்தனை விருந்து: கதைத் தொகுதி. 9542
சிறுவருக்கேற்ற மாதிரிக் கட்டுரைகள். 9554
சின்மய தீபம். 9099

சின்னச் சின்னப் பாட்டு: சிறுவர் பாடல்கள். 9531
சின்னஞ்சிறு கிளியே. 9556
சீடோவின் நிழலாக அரசைக் கண்காணித்தல். 9263
சீராக்கம் வேண்டாமா? 9357
சீரிணுவைத் திருவூர். 9984
சீரிய சிந்தனை: விசேட கல்வி அடிப்படைகள். 9325
சீறாப் புராணம்: நபி அவதாரப் படலம். 9236
சுகாதார சேவையாளரின் கைநூல்: ஏனையோரும் பயன்படுத்தக்கூடியது. 9442
சுகாதார போதினி: உடனலவியலும் உடற்றொழிலியலும். 9443
சுகாதாரக் கல்வி: பத்தாந்தரம். 9444
சுகாதாரம்: சரீர சாஸ்திரம் அடங்கியது. 9445
சுட்டுவிரல் (கவிதைத் தொகுதி). 9605
சுடுகாட்டு ரோஜா (கவிதை). 9606
சுதந்திரன் கவிதைகள். 9607
சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத் தமிழ். 9208
சுருதி நூல்முறை: அத்வைத வேதாந்தம். 9100
சுவாமி சதானந்தர் நற்போதனை. 9066
சுவிற்சர்லாந்தும் தமிழர்களின் குடியேற்றமும். 9985
சுற்றாடற் புவியியல். 9847
சுன்னாகத்தின் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள். 9918
சுனாமி காவியம்: காவியத் தொகுப்பு. 9657
சூழ்வினைச் சிலம்பு: கவிதைகள். 9608
சூழல் மாசடைதல். 9307
சூழல் முகாமைத்துவமும் பாதுகாப்பும். 9308
சூழலும் அபிவிருத்தியும்: நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய எண்ணங்களும் அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளும். 9309
செகராசசேகர வைத்தியத் திறவுகோல். 9458
செகராசசேகர வைத்தியம். 9468
செங்கடல். 9646
செங்கை ஆழியான் நாவல்கள்: ஒரு திறனாய்வு நோக்கு. 9804
செங்கை ஆழியானின் வாழ்வும் படைப்புகளும். 9919
செந்தமிழ் சிறுவர் பாடல். 9532
செந்தமிழ் மழலைப் பாடல். 9533
செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரவேற்பிள்ளை. 9899
செந்தமிழ்ப் பயிற்சி மாலை: ஏழாம் எட்டாம் பொதுத் தராதரப் பத்திர ஆயத்த வகுப்புகளுக்குரியது. 9379
செம்மனத்தான்: நாட்டுக்கூத்து. 9347
செய்முறைப் புவியியல். 9848
செய்முறைப் புவியியல்:பகுதி 1. 9849
செய்முறைப் புவியியல்: ஜீ.சீ.ஈ.(உயர்தரம்). 9850
செய்யுட் கோவை: க.பொ.த.உயர்தரம் தமிழ். 9758
சென்றிடுவீர் எட்டுத்திக்கும்: பரிசுபெற்ற பன்னிரண்டு சிறுகதைகள். 9686
சே குவெரா இருந்த வீடு: சிறுகதைத் தொகுப்பு. 9687
சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம்: இரண்டாம் பாகம். 9209
சேக்கிழார் விருந்து. 9210
சேதன இரசாயனம்: க.பொ.த. உயர்தரம் பல்தேர்வு வினாக்களும் மாற்றீட்டுத் தாக்கங்களும் விளக்க விடைகளும். 9410
சேர் பொன் இராமநாதன். 9884
சேர் பொன் இராமநாதன் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம். 9885
சேவைநலன் பாராட்டு மலர்: அருட்தந்தை கலாநிதி டொமினிக் சாமிநாதன், பேராசிரியர் சி.மௌனகுரு. 9896
சேற்றில் மலர்ந்த தாமரைகள்: சிறுகதைத் தொகுப்பு. 9688
சைவ ஆலய வழிபாட்டுமுறை. 9154
சைவ இறுதிச் சடங்கு நடைமுறையும் விளக்கமும். 9336

சைவ கேக் பிஸ்கட் வகைகள். 9483
சைவ சமய பாடம்: ஆறாம் வகுப்பு. 9175
சைவ சமய போதினி: ஐந்தாம் வகுப்பு. 9176
சைவ சமய வினா-விடைத் தொகுப்பு: தரம் 10,11 மாணவர்களுக்கானது. 9177
சைவ சமயம்: அன்றும் இன்றும் இங்கும். 9155
சைவ சித்தாந்த வினாவிடை. 9101
சைவ சித்தாந்தமும் கலையும். 9102
சைவ தூஷண பரிகாரம். 10ய14
சைவ நெறி அல்லது தமிழ் வழக்கு- எதிர்-வேதநெறி அல்லது ஆரிய வழக்கு. 9156
சைவ நெறி: தரம்9. 9178
சைவ போதம். 9186
சைவ போதினி-எட்டாம் வகுப்பு. 9180
சைவ போதினி-நான்காம் வகுப்பு. 9179
சைவ வினாவிடை: முதலாம் இரண்டாம் புத்தகம். 9181
சைவ வினாவிடை: முதற் புத்தகம். 9182
சைவ வினாவிடை: இரண்டாம் புத்தகம். 9183
சைவக் களஞ்சியம்: சைவ சமயக் கட்டுரை களின் தொகுப்பு. 9157
சைவத் திருமுறைத் திரட்டு. 9211
சைவத்தின் தோற்றம். 9158
சைவப் பிரகாசிகை: இரண்டாம் புத்தகம். 9184
சைவப் பிரகாசிகை: ஐந்தாம் புத்தகம். 9185
சொக்கன் சிறுகதைகள். 9689
சொபக்கிளிசின் மன்னன் ஈடிபசு. 9828
சொர்க்கவனம். 9548
சொற்கருவூலம்: உருவாக்கம், பராமரிப்பு, பயன்பாடு. 9017
சோதிட வாசகம்: இரண்டாம் புத்தகம். 9108
சோதிட வினா-விடை. 9109
சோபகிருது வருஷ நவராத்திரி-சிவராத்திரி விரத நிர்ணயம். 9159
ஞானத் தமிழ். 9160
ஞானம் 175ஆவது இதழ்: ஈழத்துப் புலம் பெயர் இலக்கியம்: சிறப்பிதழ். 9023
டொமினிக் ஜீவாவின் ஐம்பது சிறுகதைகள். 9690
த.ஆனந்தமயில் அவர்களது வாழ்க்கைப் பதிவுகள். 9920
தஃவாப் பணியில் பெண்கள். 9238
தண்டியலங்காரம்: மூலமும் உரையும். 9369-70
தப்தர் ஜெய்லானி. 9237
தப்பி வந்த தாடிஆடு. 9539
தம்மபதம்: தமிழ்ப் பதிப்பு. 9131
தமிழ் அமிர்தம்: முதற் பாகம். 9886
தமிழ் அமுதம். 9805
தமிழ் அமுதம்: மூன்றாம் புத்தகம். 9380
தமிழ் 1997: உரைநடைத் தொகுப்பு: க. பொ.த. உயர்தரம். 9381
தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சியும் வரலாறும். 9358
தமிழ் இலக்கிய அமைப்புக் கட்டுரைகள். 9759
தமிழ் இலக்கிய வரலாறு. 9772
தமிழ் இலக்கிய வினாவிடை. 9382
தமிழ் இலக்கிய வினா விடை: க.பொ.த. சாதாரண பரீட்சைக்குரியது 1965-1967. 9760
தமிழ் இலக்கியத் தொகுப்பு: அ-பாடத் திட்டம். 9383
தமிழ் இலக்கியத் தொகுப்பு: கம்பராமாயணம்: கைகேயி சூழ்வினைப் படலம். 9761
தமிழ் இலக்கியம்: செய்யுட்டொகுதி விளக்கமும் உரைநடைத் தொகுதி விளக்கமும் (1967-1968). 9384
தமிழ் உரைநடைத் தெளிவு. 9371
தமிழ் எழுத்தின் தோற்றம்: ஈழத்திலிருந்து தமிழகத்திற்கு. 9359
தமிழ் சிங்கள அகராதி. 9354
தமிழ் செயல்நூல்: தரம் 4. 9385
தமிழ் மக்களின் எதிர்காலம். 9291
தமிழ் மஞ்சரி: முதற் புத்தகம். 9386
தமிழ் மருத்துவம் காவலன். 9903
தமிழ் மலர்: ஆறாம் வகுப்பு. 9387

தமிழ் மொழி ஆராய்ச்சி: கட்டுரைத் தொகுப்பு-1. 9360
தமிழ் மொழி இலக்கியமும் இலக்கணமும். 9361
தமிழ் மொழி: உரைநடைத் தொகுப்பு. 9388
தமிழ் மொழி கற்பித்தல்: மொழியியலாளர் நோக்கு. 9372
தமிழ் மொழிப் பரீட்சைச் சித்திக்கு இலகு வழி: இலக்கணமும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும். 9389
தமிழ்மொழிப் புலமை விருத்திக்கு வடமராட்சிப் புலமையாளர்களின் பங்களிப்பு. 9900
தமிழ் மொழியியல், இலக்கிய, பண்பாட்டு ஆய்வுக் கட்டுரைகள். 9806
தமிழ் மொழியில் இலக்கணச் சிறப்பு. 9373
தமிழ் மொழியும் இலக்கணமும். 9374
தமிழ் யாத்திரை. 9807
தமிழ் வழி. 9362
தமிழ்க் கூத்துக் கலை: வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல். 9518
தமிழ்த் தூது: கட்டுரைக்கொத்து. 10A15
தமிழ்த் தென்றல்: சிறப்பு மலர். 9020
தமிழ்த் தென்றல்: யாதுமூரானின் கவிதைகள்: கவிதைத் தொகுதி 1. 9609
தமிழ்ப் பா வடிவங்கள்: பல்லவர்கால இலக்கியங்களின் யாப்பு வடிவங்கள் பற்றி ஆய்வு. 9781
தமிழ்ப் பா வடிவங்களை விளங்கிக் கொள்ளல். 9762
தமிழர் தகவல்: 23ஆவது ஆண்டு மலர்: இளமுகைச் சுவடு. 9024
தமிழர் தகவல்: 24ஆவது ஆண்டு மலர்: இளங்கதிர்ச் சுவடு. 9025
தமிழர் மணமும் தாலியும். 9337
தமிழர் மருத்துவம் அழிந்துவிடுமா?. 9808
தமிழரசுத் தந்தை. 9887
தமிழருவி 2012. 9026
தமிழருள் மறைந்த அரசகுலம். 9969
தமிழன் எங்கே. 9970
தமிழன் மாட்சி. 10A16
தமிழின் நவயுகம்: பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும்: ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2011. 9809
தமிழீழ ஈகச்சுடர் அன்னை பூபதி. 9892
தமிழோடு அவாவுதல். 9823
தரிசனம்: சிறுகதைத் தொகுதி வெளியீடு 2012. 9691
தவ முனிவனின் தமிழ் மந்திரம். 9161
தவத்திரு தனிநாயக அடிகளாரின் படைப்புகள். 9810
தவத்திரு மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவு மலர். 9875
தற்காலப் புவியியல்:ஆறாம் தரம். 9851
தற்கொலைக் குறிப்பு: போர்க்காலப் பதிவுகள். 9610
தனிநாயகம் என்னும் தமிழ் நாயகம். 10யு17
தாயும் பிள்ளையும். 9454
தாயுமான சுவாமிகள் பாடல்: பொழிப்புரை, குறிப்புரைகளுடன். 9212
தாயுமானவர்: கவிதைக்கொத்து. 9611
தாவரவியல்: க.பொ.த.(உயர்தர) வகுப்புக் குரியது பகுதி 1. 9426
திசைகாட்டி மரம்: ஈழத்து சிறுகதைகள். 9692
திருக்கரைசைப் புராணம். 9213
திருக்குர் ஆன் கட்டுரைகள். 9239
திருக்குறள் அங்கவியல். 9763
திருக்குறள் ஆய்வுரை: பாகம் 1. 9069
திருக்குறள் உரைகதை (நாவல்) வடிவில். 9725
திருக்குறள் ஒழிபியல். 9764
திருக்குறள் ஓவியத்தில் திகழும் வர்ண ஜாலங்கள். 9782
திருக்குறள் கதைகள்: இன்பத்துப்பால் 1161-1250. 9693
திருகோணமலை மாவட்ட கிராமியப் பாடல்கள். 9348
திருந்திய அசோகன் (சிறுவர் நாவல்). 10A18
திருமூலர் திருமந்திரம். 9103
திருவடிப் பெருமை சிந்திப்பரியன. 9162

திருவருட் செற்றம்: செய்யுளுங் குறிப் புரையும். 9214
திருவருட்பயன் மூலமும் உரையும். 9104
திருவாசகப் பதிகங்கள். 9215
திருவாதவூரரும் சைவத் திருநெறியும்: ஆய்வரங்கச் சிறப்புமலர் 2014. 9163
திருவூடல். 9216
திரையும் அரங்கும்: கலைவெளியில் ஒரு பயணம். 9519
தினசரி வழிபாட்டுப் பாடல்கள். 9217
தீ தின்ற தமிழர் தேட்டம்: யாழ்ப்பாண நூலகம் பற்றிய கவிதைத் தொகுப்பு. 9612
தீம்தரிகிட தித்தோம். 9726
துடிக்கும் விழிகள்: கவிதைத் தொகுப்பு. 9613
துடுப்பு. 9044
துயரம் சுமக்கும் தோழர்களாய்: கவிதைத் தொகுப்பு. 9614
துளிர்: உளவியல் கட்டுரைகள். 9031
தூது போ தென்றலே. 9615
தெய்வீக அருட்புகழ். 9218
தெய்வீக வாழ்வு வாழ 500 இறை சிந்தனைகள். 9164
தெய்வீகமும் சமாதானமும். 9219
தெரிந்துகொள்ள வேண்டிய தெவிட்டாத தகவல்கள்: தமிழக, ஈழத்து இலக்கிய வரலாறுகள், வினா-விடைகள். 9773
தென்னங்கீற்று கலைமாலை 10 சிறப்புமலர்: புங்குடுதீவு மக்கள் ஒன்றியம், பிரான்ஸ்: சிறப்பு மலர். 9986
தென்னிந்தியக் குடிகளும் குலங்களும். 9273
தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்: பாகம் 1. 9194
தேசியப் பிரச்சினை: அனைத்தும் அரச அதிகாரம் பற்றியதே. 9960
தையல் கலையின் நுட்பங்கள்: பகுதி 1. 9484
தையற் கலையின் நுட்பங்கள்: பகுதி 2. 9485
தொடர்பாடல் மொழி நவீனத்துவம்: பிராந்திய தமிழ் மொழியியல் மா நாட்டு நிகழ்வுகள். 9363
தொல்லியல் நோக்கில் கந்தரோடையும் கதிரமலையும். 9987
தோட்டுப்பாய் மூத்தம்மா (குறுங்காவியம்). 9658
தோழமையுடன் ஒரு குரல்: முஸ்லிம் தேசியமும் தமிழ் முஸ்லிம் உறவு களும். 9971
நகரவீதிகளில் நதிப்பிரவாகம்: கவிதைகள். 9616
நகுநயம் மறைத்தல். 9617
நகுலேசுவர மான்மியம். 9195
நச்சுப் பாம்புகளும் அவற்றின் கடிகளும் தீர்வும். 9446
நஞ்சுண்டகாடு. 9727
நந்தியின் சிறுகதைகள். 9694
நம் முன்னோரளித்த அருஞ்செல்வம் 3: இலங்கைச் சரித்திரம்: 1796ம் ஆண்டு துவக்கம் இக்காலம் வரை. 9940
நம் முன்னோரளித்த அருஞ்செல்வம்: மூன்றாம் பாகம்: இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும். 9941
நம்பிக்கைகளுக்கு அப்பால்: கட்டுரைகள். 9811
நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள். 9220
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். 9897
நல்லை நாவலன் கோவை. 9812
நவராத்திரி பாமாலை. 9221
நவீன உயிரியல் (பகுதி 2) ஜீ.சீ.ஈ. சாதாரண பாடநூல் இரண்டாவதாண்டு. 9418
நவீன கணக்கீட்டுக் கோட்பாடுகளும் மீளமைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களும். 9507
நவீன புவியியல். 9852
நவீன பௌதிகம் பாகம் 1: பொறியியலும் சடப் பொருள்களின் இயல்புகளும். 9399
நவீனத்துவம்-தமிழ்-பின்நவீனத்துவம். 9813
நள வெண்பா: சுயம்வர காண்டம். 9765
நளோபாக்கியானமும் இதோபதேசமும். 9070

நற்செய்தி பெற்ற நபித் தோழியர். 9240
நற்பண்பும் நபிமொழியும். 9618
நன்னூல் உதாரண விளக்கம். 9375
நாட்டிற்கு நயம் தருவன: விவசாயக் கைந் நூல். 9475
நாடகமும் அரங்கியலும். 9520
நாணலின் கீதை. 9619
நாவலர் பணிகள். 10ய19
நாவலர் பெருமான் ஏவலின் பேரில் இணுவில்குடி வேங்கடாசலம் ஐயர் ஸ்தாபித்த இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயம் (இணுவில் இந்துக் கல்லூரி) வரலாறு. 9329
நாவேந்தன் கதைகள். 9695
நாளை. 9728
நாளை நல்ல நாள்: வானொலி நாடகத் தொகுப்பு. 9647
நாளைய தீர்ப்புகள்: சிறுகதைகள். 9696
நான் உன்னைத் தேடுகிறேன். 9729
நான் நீதியின் பக்கம். 9730
நான் மறைய வேண்டும். 9620
நான்காம் வகுப்புச் சரித்திர பாட வாசகம். 9942
நானாக நான். 9697
நானும் என் தாய்மண்ணும். 9988
நானோ இதற்கு நாயகமே: வாழ்வோவியம். 9921
நிலவுப்பொழுதின் நினைவலைகள். 9621
நிலவும் நினைவும். 9698
நிலையான சமாதானத்துக்கு சமஷ்டித் தீர்வு. 9961
நிறுத்திய சிந்துகள். 9622
நினைவலைகள். 9922
நினைவு நல்லது வேண்டும்: சிறுகதைத் தொகுப்பு. 9699
நினைவுப் பெருவெளி: ஒரு பெண் பத்திரிகை யாளரின் மனப்பதிவுகள். 9865
நிஜங்களின் நிழல்கள். 9623
நீங்கள் அழகாக இருக்கப் புது இரகசியம். 9334
நீங்காத நினைவுகள்: தமிழ்த்தொண்டர் ஐ.தி. சம்பந்தனின் நினைவுத் தடங்கள். 9891
நீதித் தலைவர்கள் இருவர். 9349
நீரிழிவு நோய்: ஓர் அறிமுகம். 9452
நூல்தேட்டம் தொகுதி 9. 9015
நூலகவியலில் பட்டியலாக்கம். 10ய20
நெஞ்சம் கனிந்தது. 9624
நெஞ்சின் நெருடல்கள். 9625
நெய்தல்: நீர்கொழும்பு வாழ்வும் வளமும். 9989
நெருப்பு மழை. 9626
நேற்றுப் போல இருக்கிறது. 9246
நைடத மூலமும் விருத்தியுரையும். 9105
நோக்கிலான பெண்கள். 9264
பக்கவாத்தியங்கள் இல்லாத பாட்டுக்கச்சேரி. 9627
பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும். 9165
பக்தி மலர். 9222
பக்திப் பஜனைப் பாடல்கள். 9223
பகவானின் பாதங்களில்: சிறுகதைத் தொகுப்பு. 9700
பங்குடமைக் கணக்கு. 9508
பசளைகளும் அவற்றின் பயன்பாடும்: கைநூல். 9476
பசுவின் கதை. 9067
பஞ்சதந்திர லப்த ப்ரணாசம். 9352
பஞ்சவர்ணக் கதம்பம். 9005
படவரைகலையில் எறியங்கள்: உயர்தர வகுப்பிற்குரியது. 9853
படிப்பினை. 9648
படிமுறைச் சரித்திரம்: இலங்கையும் உலகமும், கி.பி.1235 வரை: ஆறாம் வகுப்பு. 9943
படைப்பின் கதவுகள்: இலக்கியக் கட்டுரைகள். 9814
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. 9923
பண்டைத் தமிழர்: நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசரின் ஆய்வுக்கட்டுரைகள். 9972

பண்டைய ஈழம்: வரலாற்று விளக்கம். 9935
பண்புயர் மனிதர் பாக்கிர் மாக்கார்: எதிரணியினரின் நடுநிலைப் பார்வை. 9888
பத்திரிகையியல் வழிகாட்டி. 9029
பதிற்றுப்பத்து: ஆராய்ச்சியுரை. 9783
பதின்மூன்றாவது திருத்தமும் தமிழ் மக்களும். 9303
பதினைந்தாவது தமிழர் விளையாட்டு விழா 2012 - பாரிஸ். 9524
பதுவைப் புனிதர் அந்தோனியாரின் வரலாற்றுச் சுருக்கமும் அற்புதங்களின் தொகுப்பும். 9126
பயணங்களில். 9032
பயணம் தொடர்கிறது. 9731
பயனுறுதிமிக்க தொடர்பாடலும் கூட்ட நுட்பங்களும். 9489
பர்மிய பிக்கு சொன்ன கதைகள். 9832
பரமபிதாவின் பத்துக் கட்டளைகள்: இசை நாடகம். 9659
பருத்தித்துறை ஊராம். 9990
பல்வேறு நாவல்களைப் பற்றிய சுவையான கண்ணோட்டம். 9815
பல்வேறு பயன்தரும் பனைமரம். 9816
பலே பலே வைத்தியர். 9543
பன்னிரண்டு மணிநேரம். 9413
பனைமரக் காடு. 9628
பாசக் குரல். 9732
பாதை புதிது: கவிதைகள். 9629
பாப்பாவுக்குப் பத்துப் பாடல்கள். 9534
பாபா சொன்ன கதைகள். 9544
பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு: தமிழ்மொழி 2 இரண்டாம் பகுதி. 9766
பாரத நவமணிகள். 9784
பாரதி பாடல்கள் (க.பொ.த. சா.த. பரீட்சை 1962-1964) உரை விளக்கம். 9630
பாரதி போற்றிய அருளம்பல சுவாமிகள். 9876
பாரதியின் பெண் விடுதலை: இலக்கியம்-கருத்து-காலம். 9265
பாலச்சந்திரன் என்றொரு கலை ஆளுமை. 9906
பாலர் பாட்டு தொகுதி 3. 9535
பாலர் மலர். 10A21
பாவ விமோசனம்: குறுநாவல். 9733
பாஷை இலக்கணம் இலக்கியம் கற்பித்தல். 9376
பிரதேச அபிவிருத்தி: கோட்பாடுகளும் உபாயங்களும். 9288
பிரயோக உடற்றொழிலியற் சொற்றொகுதி: தமிழ்-ஆங்கிலம். 9436
பிரித்தானியர் ஆட்சியும் நவீனமயமாக்கமும். 9774
பிரிவுக்குள் பிணைப்பு. 9734
பிள்ளைகளின் வீடு. 9834
பிறந்துவிட்ட புதுயுகத்தில்: உருப்பெறும் உணர்வுகள் (சிறுகதைத் தொகுப்பு). 9701
பிறைப் பூக்கள். 9702
புத்தாண்டு வாழ்த்துக்கள். 9039
புதிய உயர்தர விலங்கியல் பகுதி 2. 9433
புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும். 9326
புதிய சுகாதாரக் கல்வி தரம் 9. 9438
புது முறைச் சரித்திரம்: ஆறாந்தரம். 9840
புது முறைச் சரித்திரம்: ஏழாந்தரம். 9944
புரையை அகற்றாமல் புற்றுநோய்க்கு வைத்தியமா? 9266
புனித கிறிஸ்தோப்பர்: நாட்டுக்கூத்து. 9350
பூந்துணர்: பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் தொகுப்பு மலர் 2014. 9824
பூநகரிப் பூங்கா. 9991
பூபாளத்துப் பூக்கள். 9631
பூவிதழில் புன்னகை. 9735
பெண் என்றால்: செயற்பாட்டு எழுத்தறிவிற்கான கைநூல் 3. 9267
பெண் விடுதலையும் சமூக விடுதலையும். 9268
பெண்கள் உலகம். 10A22
பெண்களும் தொடர்பு ஊடகங்களும். 9269

பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும். 10A23
பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்திலுள்ள திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம். 9224
பெற்றோர்களே பிள்ளைகளே. 9327
பெறுபேறற்ற யுத்தமும் அதில் மனித இழப்புகளும். 9962
பெறுமானத் தேய்வு சொத்து முடிவுறுத்துதல் வழுக்களைத் திருத்துதல் அலகு 2. 9509
பேசற்க: கவிதைகள். 9632
பேராசிரியர் அல்லாமா உவைஸ் (இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் வரிசை இல. 19). 9898
பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவும் ஈழத்து நாடக மரபும். 9521
பொது அறிவு. 9006-9
பொது அறிவு: கபொ.த. உயர்தரம். 9010
பொது அறிவுப் பூங்கா. 9011
பொது இரசாயனம் பகுதி 2: ஆவர்த்தன அட்டவணை. 9411
பொது உளச்சார்பும் பொது அறிவும். 9012
பொது நிதி அலுவலக முகாமைத்துவம். 9490
பொறுப்பனோ யான். 9649
பொன்னாடை. 9650
போரின் தாக்கத்துடன் வளர்ச்சி: இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல் களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள். 9247
பௌதிக இரசாயனம்: கணிப்புக்களும் பயிற்சிகளும். 9412
பௌதிகப் புவியியல்: சூழற் புவியியல். 9854
பௌதிகவியல்: பொறியியல் 1. 9400
பௌதிகவியல்: பொறியியல் பாகம் 1: க. பொ.த. உயர்தரம். 9401
மகாவம்சம் ஒரு மீளாய்வு. 9936
மங்கல தரிசனம்: சைவசமய மங்கலச் சடங்குகள். 9338
மட்டக்களப்பில் கண்ணதாசன். 9924
மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு: ஓர் அறிமுகம். 9166
மட்டக்களப்பு பிரதேச நவீன இலக்கிய வளர்ச்சியும் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியும். 9330
மண்ணில் இருந்து விண்ணுக்கு. 9397
மண்ணில் வேரோடிய மனசோடு: கவிதைத் தொகுதி. 9633
மண்ணின் கனவுகள். 9703
மண்ணின் முனகல்: சிறுகதைகள். 9704
மணிவிழா மலர்: ஆர்.என். லோகேந்திர லிங்கம் (மலையன்பன்). 9866
மத்தாப்பு. 9736
மதச் சார்பற்ற ஒரு அரசியலமைப்பு சமாதானத்திற்கு இன்றியமையாதது. 9304
மயான காண்டம்: பிந்திய பதிப்பு. 9634
மரணம் வாழ்வின் முடிவல்ல: அகிலன் கவிதைகள். 9635
மருதமுனையின் வரலாறு: ஆள்சார் கண்ணோட்டம். 9992
மருந்தற்ற வாழ்வு. 9863
மலர்ந்த முகம். 9040
மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும். 9041
மலையக அரசியல் செல்நெறியும் மலையக மக்களும். 9973
மலையக மக்களுடைய இனத்துவ இருப்பில் பால்நிலை. 9270
மலையகக் கவிதையின் தனித்துவம். 9817
மழலைத் தமிழ் அமுதம்: அரிவரிப் புத்தகம்: பாலர் பிரிவு. 9390
மறுமலர்ச்சி தந்த பஞ்சாட்சரம். 9925
மறுமலர்ச்சிக் கதைகள். 9705
மறுவளம். 9818
மன்னன் ஈடிப்பஸ்: கிரேக்க நாடகம். 9829
மனம் ஒரு புதிர்: வில்லங்கமும் விளக்கமும். 9033
மனித காந்தம். 9034

மனித வரலாற்றினை எழுதிவரும் மரபணுக்கள்: மீளாய்வு. 9419
மனித வள முகாமைத்துவம்: அடிப்படை எண்ணக் கருக்கள். 9491
மனித வாழ்க்கை விழுமியங்கள். 9042
மனுவல் ஜேசுதாசன் மணிவிழா மலர். 9926
மாண்புறும் மாநபி. 9636
மாணவர் கட்டுரைக் கதம்பம்: ஆண்டு 3.4,5. 9767
மாவீரன் புள்ளிமான்: சிறுவர் நாவல். 9549
மாற்றுச் சிந்தனையும் விரிபடு களமும். 9271
மானிடம் வென்றது: மாணவருக்கான நன்னெறிக் கதைகள். 9545
மின் ஊடகங்களில் பால்நிலை சமத்துவத்தைப் பேண கையாளப்பட வேண்டிய ஒழுக்காற்று விதிகள். 9259
மீண்டும் வருவேன் (நாவல்). 9737
முகாமைக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம்: விகிதப் பகுப்பாய்வு. 9510
முகாமைக் கணக்கீடு அலகு 3. 9511
முகாமைத்துவத்திற்கான தகவல் தொழில் நுட்பம். 9018
முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம். 9492
முட்புதரில் பூத்த புதுமலர்: கிறிஸ்தவ சிறுகதைகள். 9706
முடிவில் தொடங்கும் கதைகள். 9707
முதல் கனவு. 9637
முதியோரைப் பராமரிக்கும் அறிவியல். 9456
முப்பத்தேழாம் நம்பர் வீடு. 9738
முப்பானூற் சுருக்கம். 9785
முப்பெரும் சித்தர்கள். 9877
முரண்பாடுகள். 9708
முளையவியல்: உயர்தர விலங்கியல் உசாத்துணை நூல்வரிசை 3. 9434
முறிவு நெரிவு மருத்துவம். 9469
முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா மீதும் ஸ்ரீ முன்னைநாதர் மீதும் பாடப்பட்ட பிரபந்தங்கள். 9225
முனீசுரவந்தாதி. 9226
முஸ்லிம்களின் மத்தியில் குடிவழி முறை. 9974
மூங்கில் கூடை: கவிதைகள். 9638
மூப்புற்றோர் பெண்ணோயியல். 9457
மூன்று நண்பர்களும் பெரிய அலையும். 9550
மூன்று நூற்றாண்டுகளின் முன்னோடிச் சிந்தனைகள். 9248
மொழியிடைக் கலைச்சொற்கோவை: தகவல் தொழில்நுட்பவியல்: தமிழ்-ஆங்கிலம். 9019
மௌனமாய்ப் பொழியும் மாமழை: நூலகவியலாளர் என்.செல்வராஜா சேவை நயப்பு மலர். 9867
மௌலானா ரூமியின் சிந்தனைகள். 9241
மௌனங்கள் கலையும்போது. 9709
யாப்பிலக்கண மரபில் கலிப்பா. 9377
யாப்பிலக்கணம். 9378
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி: 175ஆவது ஆண்டு மலர். 9331
யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும் (1920களில்). 9249
யாழ்ப்பாண வாழ்வியல். 9256
யாழ்ப்பாணப் பண்பாடு: அன்றும் இன்றும். 9257
யாழ்ப்பாணப் பண்பாடு: மறந்தவையும் மறைந்தவையும். 9258
யாழ்ப்பாணம், இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக் கோயில். 9196
யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க் கையும் வழிகாட்டுதலும். 9878
யுக சந்தி. 9739
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை: இருபத்தைந்தாவது ஆண்டு மலர். 9332
யோகாசனமும் உடல்நலமும். 9441
யோகிராஜ் ஸ்ரீ சுவாமி சச்சிதானந்தஜீ அவர்கள் திவ்ய வாழ்க்கை வரலாறு. 9879
வட இந்திய பயண அனுபவங்கள். 9859
வடக்கே போகும் மெயில். 9710
வண்டி முன்னாக மாடு பின்னாக. 9711

வண்ணை வைத்தீஸ்வர வாலாம்பிகா தோத்திரக் கீர்த்தனம். 9227
வணிகர் வரலாறு. 9250
வரலாற்றைத் தொலைத்த தமிழர்: மெசொபொத்தேமியாவிலிருந்து ஈழம் வரை. 9975
வருடிய இளமைக் காற்று: கவிதைத் தொகுப்பு. 9639
வல்லவரும் நல்லவரும். 9880
வல்லியக்கனும் வல்லிபுரநாதரும். 9197
வல்வை ச.வயித்தியலிங்கம் இயற்றிய சிந்தாமணி நிகண்டு: மூலமும் உரையும். 9364
வலிகாமத்து மண்ணின் மாந்தர்கள். 9251
வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு: கட்டுரைத் தொகுப்பு. 9522
வன்னி: வரலாறும் பண்பாடும். 9993
வன்னியர். 9976
வாசல் ஒவ்வொன்றும். 10A24
வாசிப்பதும் வாசிக்கப்படுவதும்: இன்றைய இலக்கிய விமர்சனப் போக்குகள். 9819
வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக. 9339
வாரித் தமிழ் வழங்கும் வள்ளல் பண்டிதர் மு.ஆறுமுகன் நூற்றாண்டு விழா மலர் 1914-2014. 9927
வாழ்க்கைப் பயணம்: சிறுகதைத் தொகுப்பு. 9712
வாழ்வியல் சமதர்ம கோட்பாடுகளுடன் முரண்பட்டு நிற்கும் மேட்டுநிலை பண்பாட்டுக் கோலங்கள்: ஒரு பெண் நிலை விசாரணை. 9272
வானம் விழுந்த நெல்வயல். 9640
விஞ்ஞான முறை: நிகழ்தகவு, புள்ளி விபரவியல், சிறுகட்டுரைகள். 9059
விஞ்ஞான முறைச் சுருக்கம்: பகுதி 2. 9060
விஞ்ஞான முறையியல்: புதிய பாடத்திட்டம். 9061
விஞ்ஞான விளக்கம். 9ஆம் வகுப்பு. 9392
விஞ்ஞானிகளும் விஞ்ஞான விளக்கங்களும்: அளவையியலும் விஞ்ஞான முறையும். 9062
வித்தகன் விபுலானந்தன்: சிறுவர் ஆய்வு இலக்கியம். 9555
வித்தியாசமானவர்கள். 9035
விபுலாநந்த அடிகளும் முஸ்லிம்களும். 9977
விபுலாநந்தக் கவிமலர். 9641
விரல்களற்றவனின் பிரார்த்தனை. 9713
விரியும் மொட்டுக்கள். 9536
விரைவாக கணிப்பது எப்படி? 6-11ம் ஆண்டு. 9394
வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய கவிதைகள். 9827
வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதிய றோமியோவும் ஜுலியட்டும். 9830
விலங்குகள் தொகுதி ஒன்று அல்லது விலங்கு நடத்தைகள். 9714
விவேகானந்த தத்துவ வித்துக்கள். 9068
விஷ வைத்தியம். 9470
வெண்பனிச் சுவடுகள்: கவிதைத் தொகுதி. 9642
வெளிவாரி முதற் கலைத் தேர்வு: தமிழ் தொகுதி 1: கம்பராமாயண வாலி வதைப்படலம்: கோடை நாடகம். 9768
வேட்டைத்தோப்பு: சிறுகதைகள். 9715
வேதநூற் பாடங்கள்: முதலாம் புத்தகம். 9127
வேளாளர் நாகரிகம். 9978
வைகை. 9643
வைதிக சந்தியாவந்தன விதி. 9167
ஜீவநதி ஏழாவது ஆண்டு மலர். 9027
ஜீவநதி நேர்காணல்கள். 9825
ஸ்ரீ லங்காவில் முஸ்லிம்கள்: இருப்பும் உறவும். 9979
ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமி தேவஸ்தானக் கட்டளைச் சட்டம். 9198

ஆசிரியர் வழிகாட்டி

அகில இலங்கை இந்து மாமன்றம் 9021, 10A04
அகிலன் 9635
அகிலேஸ்வர சர்மா, சி. 9109
அங்கவை 9559
அசலகேசரி 9695
அஞ்சுகம், க. 9145
அடியவன் 9116
அடைக்கலம், சு. 9126
அதிவீரராம பாண்டியனார் 9105, 9199
அந்தோனிப்பிள்ளை, பீ.பீ. 9542
அநவரதவிநாயகமூர்த்தி, வை. 9196
அப்துஸ்ஸமது, அ.ஸ. 9702, 9742
அப்புத்துரை, சி. 9910
அபிவிருத்தி கொள்கை வேலைச் சட்டகம் 9283
அபுசாலி, எம்.எல்.எம். 9237
அபூபக்கர், A.M. 9963
அம்பலவாணபிள்ளை, கு. 9369
அம்பிகாதேவி, சி. 9284
அம்பிகாவரன், சி. 9402
அம்பிகைபாகன், ச. 9871
அமரசிங்க, உபாலி எஸ். 9293
அமல்ராஜ், பி. 9601
அமிர்தகழியான் பார்க்க குணரத்தினம். செ.
அமீன், ஏ.எச்.ஜீ. 9299
அமுதன் அடிகள் 10A17
அமுதன், மன்னார் பார்க்க மன்னார் அமுதன்
அமெரிக்க இலங்கை மிஷன் 9127
அயூப், ஆர். 9481
அர்ச்.சூசைமாமுனிவர் பதிப்பகம் 9110
அரங்கராஜ், ஜெ. 9972
அரங்காலயா பண்பாட்டுக் குழு 9648
அரசரத்தினம், வசந்தி 9479
அரசரெத்தினம், எஸ். 9277-78
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, பார்க்க சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந.
அரியரத்தினம், அரியராணி 9449
அரியரத்தினம், ம. பார்க்க வாகரைவாணன்
அருணகிரிநாதன், சி. 9040
அருணாசலம், க. 9789
அருணாசலம், சரோஜினிதேவி 9833
அருணாசலம், மூளாய் 9106
அருள் சுப்பிரமணியம் பார்க்க சுப்பிரமணியம், க.அருள்
அருள்நந்தி, வை. 9474
அருளம்பலம், சு. 9783
அருளானந்தம், ச. 9348, 9525, 9531, 9555
அல் கர்ழாவி பைஸல் மௌலவி, யூசுப் 9238
அல்போன்ஸ், மோ.மேரின் 9427, 9434
அலி, அமீர் 9796
அலி, எஸ்.பாயிஸா 9579
அவைக்காற்றுகைக் குழு 9515
அழகராஜா, அனுஷானி 9593
அழகு தனு பார்க்க தனுராஜ், அ.
அன்பழகன், க. 9496
அன்புமணி 9665
அனலைதீவு மக்கள் ஒன்றியம் 9980
அஜந்தகுமார், த. 9814
அஸீம், அப்துல் காதர் 9633
அஸீஸ், எ.எம்.எ. 9807
அஸீஸ், பி.ரி. 9636
அஹத், அ.அப்துல் 9368
அஹமத், A.M.ரியாஸ் 9714
ஆலையூரான் பார்க்க தங்கராஜா, க.
ஆழ்வாப்பிள்ளை, பவானி 9486
ஆழியாள் 9589
ஆறுமுக நாவலர் 9172, 9181-83, 10A14
ஆறுமுகம், அல்லை க.வ. 9627

ஆன்சிலின், ம. 9587
ஆனந்த தியாகர், சதாசிவம் 9022
ஆனந்தமயில், த. 9920
ஆனந்தன், எஸ்.எஸ். பார்க்க சிவநிர்த்தானந்தா, எஸ்.
ஆனந்தன், ஏ.சூசை 9982
ஆனந்தா-சாரங்கா 9767
இக்பால், ஏ. 9241, 9888
இடட்டிலித் தாம்பு, எல். 9333
இதயராசன் 9708
இந்திரகுமார், க. 9397
இந்திரராசா, சு. 9748
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் 9338, 9778
இந்துமதி பார்க்க இரத்தினசிங்கம், எஸ்.சி.
இப்ராஹீம், மௌலவி ஏ.எல்.எம். 9234
இரகுநாதன், ம. 9762
இரகுநாதையர், வெ. 9109
இரகுபதி, பொன்னம்பலம் 9197
இரகுபரன், க. 9133, 9137, 9140-43, 9149, 9165, 9213, 9220, 9774, 9900
இரத்தினசிங்கம், எஸ்.சி. 9706
இரத்தினசிங்கம், கா.வை. 9362
இரத்தினதுரை, புதுவை 10ய24
இரத்தினம், இ. 9502, 9828, 9932
இரத்தினம், கா.பொ. 9790, 9797, 9912
இரத்தினம், காஞ்சனா 9008
இரயாகரன், பி. 9287, 9954
இரவி, அ. 9662
இராசகோபாலன், தி. 9370
இராசதுரை, இ. 9385
இராசதுரை, காவலூர் 9679
இராசநாயகம், இளவாலை செ. 9893
இராசநாயகம், நாகமணி 9490
இராசநாயகம், ஜெயலட்சுமி 9490
இராசரத்தினம், ச. 9447, 9454
இராசரெத்தினம், ஏ.ஈ.சீ. 9969
இராசையா, ஏ.சி. 9459
இராதாகிருஷ்ணபிள்ளை, ம. 9998
இராமச்சந்திரன், க. 9094
இராமச்சந்திரா, கலைச்சுடர் என். 9955
இராமநாதக் குருக்கள், அரு. 9159
இராமநாதபிள்ளை, த. 9045
இராமநாதன், கலைவாணி 9092
இராமநாதன், சீ. 9430
இராமநாதன், பொன்னம்பலம் 9464, 9466
இராமையா, மு. பார்க்க கண்ணையா
இராயப்பு, கு. 9014
இராஜகோபால், ஆ. பார்க்க செம்பியன் செல்வன்
இராஜசேகரம், உ.இ.ம. இளவரசர் 9460
இராஜசேனன், ஆர்.கே. 9415, 9418
இராஜதுரை, அன்னலட்சுமி 9865
இராஜேந்திரன், தி. 9446
இராஜேஸ்கண்ணன், இ. 9253, 9321
இருபாலைச் சேனாதிராய முதலியார் 9820
இலக்கிய ஆசிரியன் 9384
இலக்கியச் சந்திப்புக் குழு 9822
இலக்குமி, எஸ். 9879
இலகுப்பிள்ளை, இ.வே. 9399
இலங்கை மன்றக் கல்லூரி 9285
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 9688
இலட்சுமணராசா, நா. பார்க்க நெடுந்தீவு லக்ஸ்மன்
இளங்கோ 9086, 9746
இளங்கோவன், பத்மா 9532-33
இளங்கோவன், வி.ரி. 9437, 9664, 9786, 9808
இளையதம்பி, மு. 9837, 9937, 9939
இன்பமோகன், வடிவேல் 9523
இன்பராஜன் 9646
இஸ்திகார், எம்.ஏ.எம். 9852
ஈழகணேஷ் பார்க்க தருமலிங்கம், சுரேந்தர்
ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் 9223
ஈழபாரதி 9628
ஈழமாஜினி பார்க்க ஆறுமுகம், அல்லை க.வ.
ஈழவேந்தன் 9884
ஈஸ்வரன், வே. 9018
உதயகுமார். அ.சி. 9001
உதயகுமார், க.க. 9897
உதயகுமார், கு. 9048

உதயகுமார், சமரபாகு சீனா 9576
உதயராசா, சுபாஜினி 9861
உதயராயன், நிவேதா 9975
உமாசங்கர், பி. 9313
உமாசங்கரி, மு. 9874
உலகத் தமிழர் பேரமைப்பு 9999
எட்வேட், சூசை பார்க்க சூசை எட்வேட்
எதிரிசிங்க, ரொஹான் 9296
ஐக்கிய நாடுகள் சபை 9952
ஐங்கரன், குணரட்ணம் 9773
ஐங்கரன், வி. 9558, 9565, 9600, 9635, 9642
ஐவன், விக்டர் 9957
ஒருங்கிசைந்த ஆய்வுக்கான தமிழ் நடுவம் 9953
ஔவுங், மவுங் ரின் 9832
கடம்பேசுவரன், ம.ந. 9649
கண்ணையா 9594
கணபதிப்பிள்ளை, சி. 9104, 9376, 9784
கணபதிப்பிள்ளை, த. 9108
கணபதிப்பிள்ளை, நா. 9169, 9174
கணபதிப்பிள்ளை, மு. 9875, 9970
கணபதீஸ்வரக் குருக்கள், ச. 9216
கணேசராஜா, க. 9046, 9055
கணேசலிங்கக் குருக்கள் 9146
கணேசலிங்கநாதன், நாகரத்தினம் 9458
கணேசலிங்கம் க. 9101
கணேசலிங்கம், கார்த்திகேசு 9395
கணேசலிங்கம், கே.ரீ. 9279
கணேசலிங்கம், ப. 9252
கணேசலிங்கம், வி.கே. 9416
கணேசலிங்கன், செ. 9683
கணேசன், எஸ். 9957
கணேசன், கமலினி 9270
கணேசாள், அருணாசலம் பார்க்க அங்கவை
கணேசையர், சி. 9775
கணேஸ்வரன், தி. 9033
கணேஷ், சி. 9076, 9079
கணேஷ்குமார், சிவபாதம் 9909
கதிர்காமத்தம்பி, ஆ. 9193
கதிர்காமத்தம்பி, செ. 9759
கதிரவேற்பிள்ளை, நா. 9105
கதிரித்தம்பி, சி.ஆ. 9188
கந்த சத்தியதாசன், செ. 9077, 9078
கந்த முருகேசன் 9812
கந்தசாமி, சா. 9996
கந்தசாமி, சி. பார்க்க ஜீவா நாவுக்கரசன்
கந்தசாமி, பொன். 9148, 9204, 9382, 9389, 9760
கந்தசாமி, மு. 9472
கந்தசுவாமி, க.இ.க. 9889, 10A21
கந்தப்பு, சௌந்தரம் சந்தனநங்கை 9379
கந்தப்பு, மேரி புஷ்பம் மருது 9988
கந்தவனம், வி. 9845
கந்தைய ஆச்சாரியார், இ.சி. 9337
கந்தையா, ஆ. 9357
கந்தையா, ஆறுமுகம் 9154, 9181
கந்தையா, மு. 9096, 9208, 9224, 9812, 9872
கந்தையாபிள்ளை, ந.சி. 9273, 10A22
கபீர், நய்லா 9266
கம்பதாசன் 9588, 9674
கமருன் நிசா, ஏ.சீ. பார்க்க முஸ்தபா. ஏ.ஸீ. ஜரீனா
கமலசேகரம், க. 9013
கமலநாதன், கனகர் இரத்தினம் 9537
கமலநாதன், கார்த்திகேசன் 9928
கமலநாதன், திருநாவுக்கரசு 9327
கமால், திக்வல்லை 9242
கயிலாயநாதன், க. 9645
கயிலைநாதன், இரத்தினமலர் 9372
கயூகரன், சந்திரசேகரம் 9568
கர்ணன், யோ. 9687
கரவையூர்ச் செல்வம் 9123
கருணாகரர், அ. 9398
கருணாகரன் 9582,9715, 10A24
கருணாகரன், வ.மா. 9455
கருணாநிதி, தமிழ் மகன் 9886
கருணாநிதி, மாரிமுத்து 9400
கருணாலய பாண்டியனார், சிவங் 9214
கல்வி வெளியீட்டுத் திணைக்களம் 9231, 9383, 9387

கலாமணி, த. 9825
கலியாணசுந்தர முதலியார், திரு. வி. 9899
கலை கலாசார பீடம் 9896
கலைச்செல்வன், கு. 9495-9500, 9506-07, 9509-10
கலையார்வன் பார்க்க இராயப்பு, கு.
கலைவாணி புத்தக நிலையம் 9175
கவிதா 9676
கவியழகன், குணா 9727
கனகசபாபதி, வே. 9655
கனகசபை, தம்பு 9936
கனகசெந்திநாதன் பார்க்க செந்திநாதன், கனக
கனகமூர்த்தி, சின்னையா 9834
கனகரத்தினம், இரா.வை. 9894
கனகரத்தினம், குரும்பசிட்டி இரா. 9883, 9887
கனகராசன், மு. 9700
கனகலிங்கம், இ. 9903
கனி, A.M. 9232
கஜேந்திரகுமார், சிவபாதம் 9085
கஜேந்திரன், வை. 9613
கஹ்ஹார், அ.மு.அப்துல் 9618
காசிநாதன், சு.பா. 9367
காசிநாதன், செ.வே. 9030, 9049
கார்த்திகேசு, ச. 9802
காரியவசம், மெரில் 9834
கிசோகுமார், கோ. 9638
கியுபேட், ஆனந்தராஜன் 9274
கிரிதரன், கா.யோ. 9173
கிரிஷாந் 9634
சடாட்சரன், மு. 9629
கிருபா 9634
கிருபானந்தன், சா.பி. 9121
கிருஷ்ணசாமி, வ.
கிருஷ்ணதாசன் 9802
கிருஷ்ணமூர்த்தி, செ. 9818
கிருஷ்ணராஜா, செல்லையா 9254
கிருஷ்ணராஜா, வே. 9442
கிருஷ்ணன், எஸ்.பி. 9880
கினிகே, இந்திரா லிலாமணி 9326
கீத்தாம்பிள்ளை 9346
கீதபொன்கலன், சந்தியாபிள்ளை 9964
குக்கு, எல்.சி.கே. 9843
குகசர்மா, வ. 9160
குகதாசன், கே.எஸ். 9423
குணசேகர, சுனில் 9958
குணசேகரம், கே.வி. 9693, 9725, 9776
குணதிலக, கொட்பிரே 9284
குணநாதன், ஓ.கே. 9549, 9673
குணபாலசிங்கம், தனபாக்கியம் 9419
குணரத்தின, ஆர்.டி. 9048, 9049
குணரத்தினம், செ. 9653
குணராசா, க. 9003, 9054, 9413, 9684, 9705, 9724, 9726, 9737, 9844, 9846-47, 9853, 9855, 9929, 10A02, 10A08
குணேஸ்வரன், சு. 9791
குமரகுரு, அ. 9093
குமரன், க. 9867
குமரையா, எஸ். 9842
குமாரசாமி, சி. 9065
குமாரசாமி, சு. பார்க்க சாமிஜி
குமாரசுவாமிக் குருக்கள், ச. 9159, 9167, 9184-85
குமாரசுவாமிப் புலவர், அ. 9369-70
குமாரலிங்கம், சி. 9286, 9827, 9830
குமாரஸ்வாமிக் குருக்கள், நா. 9198
குருபாவா, சேக் முகையுதீன் 9228
குரும்பசிட்டி சன்மார்க்க சபை 9176
குலரத்தினம், க.சி. 9899
குலரத்தினம், கா. 9843
குலேந்திரன், ஏ. 9409, 9415, 9418
குவெரா, ஏர்னெஸ்ரோ ஷே 9995
குறிஞ்சிநாடன் 9603
குறிஞ்சிவாணன் 9614
கெக்கிராவ ஸஹானா 9567, 9707
கென்றிசன், ச.எரிக் 9275
கேசவதாசன், எஸ்.கே. 9057, 9058
கேசவன், க. 9047, 9051, 9060
கேணிப்பித்தன் பார்க்க அருளானந்தம், ச.
கேதீஸ்வரன், சி. 9019

கொடிகார, சூலனி 9263
கொழும்பு விவேகானந்த சபை 9179-80
கோட்டேகொட, சேபாலி 9263
கோடிறின்றன், எச்.டபிள்யு. 9932
கோணேஸ்வரன், சி. 9488-89
கோப்பாய் சிவம் பார்க்க சிவானந்த சர்மா, ப.
கோபாலகிருஷ்ண ஐயர், ப. 9512
கோவிந்தசாமி, இந்திரா 9962
கோவை நந்தன் 9280
கௌரிகாந்தன், அ. 9249
கௌரிகாந்தன், முருகேசு 9155, 10A19
சக்திவேல், பொன் 9087
சங்கர ஐயர், கே. 9429-30, 9433
சங்கரதாஸ், செ. 9170
சங்கரப்பிள்ளை, பொ. 9335
சங்கவி 9483
சச்சிதானந்தம், சாந்தி 9269
சச்சிதானந்தன், நவாலியூர் நா. 9794
சண்முகசுந்தரம், த. 9873
சண்முகதாஸ், அ. 9781, 9806
சண்முகநாதன், தா. 9906
சண்முகரத்தினம், க. 9032
சண்முகலிங்கம், ஆ. 9011
சண்முகலிங்கம், க. 9255, 9290, 9358
சண்முகலிங்கம், குழந்தை ம. 9829
சண்முகவடிவேல், சிவ. 9162
சத்தியகுமாரன், சிவகடாட்சம்பிள்ளை பார்க்க மாவை வரோதயன்
சத்தியசீலன், பா. 9528, 9530
சத்தியசீலன், விவியன் 9462
சத்தியபாலன், ந. 9563
சத்தீஸ்வரன், தம்பையா 9407-08, 9411
சதாசிவம், சி. 9376
சதாசிவம், மு. 10000
சதாசிவமூர்த்தி, கு. 9477
சந்திரசேகரன், இர. 9473
சந்திரராஜா, A.S.H. 9062
சந்திரராஜா, செ. 9061
சந்திரன், யோ. இரசல் 9114
சபா, இ. 9574, 9606
சபாபதி சோதிடர், செ. 9107
சபாரத்தினம், த. 9029
சபாரத்தினம், நாரந்தனை ஆ. 9840, 9944
சபாரத்தினம், பிரேமினி பார்க்க தாட்சாயணி
சம்சுனா, ஏ.பீ. 9573
சம்பந்தன் 9684
சம்பந்தன், ஐ.தி. 9891
சமரக்கோன், ஆர்.ஆர். 9833
சமரசேகர, சாறுக்க 9297
சமுத்திரன் 9949
சர்வேஸ்வரன், கந்தையா 9901
சரத்பாபு, த. 9328
சரவணபவன், ஏரம்பு 9733
சரவணபவன், கதிர் 9219
சரவணபவன், சி. 9668, 9698
சரவணபவன், மதிவதனி 9544
சரவணமுத்து, க.இ. 9798
சரவணன், கை. 9640
சரஸ்வதி யோகி, ஸ்வாமி ஸ்ரீ சிதானந்த 9439-40
சாத்திரி 9717
சாந்தையூரான் 9178, 9381, 9744
சாம், D. 9493
சாமிஜி 9135
சாமுவேல், குமுதினி 9263
சார்ள்ஸ் பார்க்க ஐங்கரன், வி.
சாரதா பார்க்க சரவணமுத்து, க. இ.
சாரல்நாடன் 9769, 9881
சிங்கராயர், மு. 9347, 9615
சித்தாந்தன் 9597
சித்திரவடிவேலு, கா. 9431
சிதம்பரபத்தினி 9529, 9697, 9921
சிந்துதாசன், பொலிகையூர் சு.க. 9584
சிநேகலதா, லோ. 9564
சில்வா, எஸ்.எப்.டி. 9938
சில்வா, சேன எஸ்.டி. 9293
சிலோன் விஜயேந்திரன் 9115, 9588, 9674, 9915, 10A10
சிவகரன், க. 9308
சிவகாமிநாதன், சோணாசலம்பிள்ளை 9190

சிவகுமாரன், கே.எஸ். 9248, 9788, 9793, 9795, 9799, 9800, 9815
சிவகுமாரன், புஷ்பா 9260, 9550
சிவகுருநாதன், எஸ். 9301
சிவகுருநாதன், வடகோவை அ. 9917
சிவங் கருணாலய பாண்டியனார் பார்க்க கருணாலய பாண்டியனார், சிவங்
சிவச்சந்திரன், இராசரத்தினம் 9471
சிவசண்முகராஜா, சே. 9043, 9136, 9139, 9441, 9461, 9465, 9983
சிவசண்முகராஜா, பிரேமா 9469
சிவசாமி, வி. 9252
சிவசுந்தரலிங்கம், தமயந்தி பார்க்க தமிழ்க்கவி
சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார், நா. 9203
சிவசுப்பிரமணியம், எஸ். 9806
சிவசுப்பிரமணியம், வ. 9100
சிவஞானசுந்தரம், இ.க. 9084
சிவத்தம்பி, கார்த்திகேசு 9813
சிவதர்சினி, இ. 9569
சிவதொண்டர் 9878
சிவதொண்டன் 9095, 9201, 9212
சிவதொண்டன் சபை 9211
சிவநாயகம், எஸ்.டி. 9295
சிவநிர்த்தானந்தா, எஸ். 9764
சிவப்பிரகாச பண்டிதர், ச. 9195
சிவப்பிரகாசபிள்ளை, அங்கையற்கண்ணி 9860
சிவப்பிரகாசம், யோகேஸ்வரி 9820
சிவபாதசுந்தரம், சு. 9186, 9917
சிவபாதசுந்தரம், தமிழரசி 9342, 9927
சிவபாலராசா, ம. 9421
சிவபாலன், பா. 9647
சிவமகாலிங்கம் 9161
சிவயோக சுவாமிகள் 9206-07
சிவராம், தர்மரட்ணம் 9959
சிவராமகிருஷ்ணன், பா. 9780
சிவராஜசிங்கம், வ. 9812
சிவலிங்கம், கணேசன் 9401
சிவலிங்கராஜா, எஸ். 9258, 9775, 9806
சிவலிங்கராஜா, சரஸ்வதி 9757
சிவலோகதாசன், வஸ்தியாம்பிள்ளை 9981
சிவாநந்தன், சபா 9066
சிவானந்த குருமகராஜ், ஸ்ரீ சுவாமி 9144
சிவானந்த சர்மா, ப. 9132, 9925
சிவானந்தன், பொ. 9426
சிற்பி பார்க்க சரவணபவன், சி.
சிறி, கௌரிபால் பார்க்க சாத்திரி
சிறிரஞ்சன், என். 985
சிறிஸ்கந்தராசா, இ. 9005
சிறீஸ்கந்தராசா, இராமசாமி 9782
சின்னத்தம்பி, அ. 9436, 9446, 9453, 9457
சின்னத்தம்பி, ஆறுமுகம் 9933
சின்னத்தம்பி, மா. 9292
சின்னத்தம்பிப் புலவர் 9220
சின்னப்பு, மு. 9108
சின்னையா, ஏ.ஐ. 9478
சின்னையா, மலர் பார்க்க செம்பியின் செல்வி
சிஹாப்தீன், அஷ்ரஃப் 9578, 9713, 9826
சீதா ரஞ்சனி 9028
சீர்மாறன், எஸ்.பீ.ஆர். 9451
சீவரத்தினம், மு.வே. 9250
சீனிவாசகம், து. 9890
சுகந்தினி, சந்திரமோகன் பார்க்க வவுனியா சுகந்தினி
சுசி தமிழினி 9622
சுதந்திர தொழிற்சங்க அபிவிருத்திக்கான நிலையம் 9947
சுதந்திரன் 9607
சுதாகர், கே.எஸ். 9686
சுதாகர், தி. 9560
சுதாகரன், சுரனுதா அன்ரன் 9044
சுதாகினி பார்க்க றாகல், சுதாகினி டெஸ்மன்
சுந்தரம்பிள்ளை, அராலியூர் ந. 9644
சுந்தரம்பிள்ளை, காரை செ. 9073, 9170
சுந்தரசெல்வன், எஸ்.கே. 9393
சுந்தரராஜன், அ.சே. 9380, 9749, 9753
சுந்தரராஜன், என். பார்க்க சுந்தா, என்.
சுந்தரலிங்கம், அ. 9425
சுந்தரலிங்கம், கணபதிப்பிள்ளை 9993
சுந்தரலிங்கம், செ. 9191

சுந்தரேசன், வைரமுத்து 9966
சுந்தரேஸ்வரன், வீ. 9501
சுந்தா, என். 9572
சுப்பிரமணியம், க.அருள் 9730
சுப்பிரமணியம், சிவா 9948
சுமந்திரன், எஸ். 9505, 9511
சுரேந்திரன், சின்னத்தம்பி நோபிள் 9307
சுரேஷ், வேலணையூர் பார்க்க வேலணையூர் சுரேஷ்
சுவாமிநாத சிவாசாரியார், எஸ். 9159
சுவாமிநாத சிவாசாரியார், க. 9159
சூசை எட்வேட் 9666
சூர்யா பார்க்க சிநேகலதா, லோ.
சூரிச் தமிழர் கலாச்சார மன்றம் 9020
செகராசசிங்கம் பார்க்க தேவசகாயம்பிள்ளை, ஆசீர்வாதம்
செங்கைஆழியான் பார்க்க குணராசா, க.
செந்திநாதன், கனக. 9736, 9740
செம்பியன் செல்வன் 9619, 9680, 9684
செம்பியின் செல்வி 9551
செல்லத்துரை, அ. 9064
செல்லத்துரை, அருணா 10ய01
செல்லத்துரை, சு. 9306, 9604
செல்லத்துரை, பூ.ம. 9950
செல்லப்பா, நா. 9323
செல்லையாபிள்ளை, சி. 9894
செல்வகுணபாலன், செ. 9298
செல்வசிங்கம் 9743
செல்வசுகுணா 9691
செல்வநாயகம், அருள் 9641, 9732
செல்வநாயகம், எஸ். 9429-30, 9438
செல்வநாயகம், இந்திராதேவி 9325
செல்வநாயகம், சோ. 9333
செல்வரத்தினம், கே.எம். 9070
செல்வரத்தினம், வி. 9152-53, 9164
செல்வரத்தினம், விசுவலிங்கம் 9036, 9189,
செல்வராஜா, என். 9015, 9612, 9770
செல்வராஜா, சென்தன் 9957
செல்வவேல், எம்.பி. 9417, 9422, 9428
சென்வோர் 9264
செனவிரத்ன, திமொதி 9550
சேனநாயக்கா, நிமால் 9449
சைதன்யா, பிரமச்சாரி வியக்த 9099
சொக்கலிங்கம், க. பார்க்க சொக்கன்
சொக்கலிங்கம், வாசுகி 9371
சொக்கன் 9063, 9075, 9088, 9371, 9689, 9750, 9885
சொபக்கிளிசு 9828-29
சொற்சிற்பி பார்க்க சபா, இ.
சோக்கெல்லோ சண்முகம் பார்க்க சண்முகநாதன், தா.
சோதிலிங்கம், சின்னத்துரை 9071, 9081-82, 9089,
சோமசுந்தரப் புலவர், க. 9420
சோமசுந்தரம், ஆ.வீ. 9445
சோமசுந்தரம், குமாரசாமி 9042, 9388
சோமசுந்தரம்பிள்ளை, சே. 9917
சோமசுந்தரன், வ. 9215
சோமாஸ்கந்தராஜக் குருக்கள் 9072
சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், தியாக. 9134
ஞானகுமாரன், நா. 9876
ஞானசேகரன், தி. 9859
ஞானப்பிரகாசத் தம்பிரான், ஸ்ரீமத். 9098
ஞானப்பிரகாசம், பற்றிக் 9120
ஞானப்பிரகாசர், சு. 9360
ஞானப்பிரகாசர், சுவாமி 9972
ஞானசேகரன், தி. 9023, 9913
டி சில்வா, அமரசிறி 9247
டி சில்வா, நிலக்ஷி 9247
டீ பிலிப், பீலிக்ஸ் 9289
டேவிட், கே.ஆர். 9704
டொமினிக் ஜீவா பார்க்க ஜீவா, டொமினிக்
தங்கரத்தினம், நா.க. 9663
தங்கராசா, கலகா பெ. 9965
தங்கராஜா, இராஜ இராஜேஸ்வரன் 9868
தங்கராஜா, க. 9547
தண்டிகை குலசேகரம்பிள்ளை பார்க்க பாலசுப்பிரமணியம், கே.
தணிகாசலம்பிள்ளை, ச.நா. 9314
தபேந்திரன், வேதநாயகம் 9004, 9010

தமிழ் வளர்ச்சிக் கழகம் 9766
தமிழ்க்கவி 9720
தமிழமுதன் பார்க்க அடைக்கலம், சு.
தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 9524
தர்மகுலசிங்கம், சிதம்பரப்பிள்ளை 9924
தர்மலிங்கம், இ. 9443, 9836, 9838
தர்மலிங்கம், ச.அ. 9443
தர்மேந்திரா 9526
தரங்கனி, ஏ.எஸ்.ஏ. 9171
தராக்கி டி.சிவராம் பார்க்க சிவராம், தர்மரட்ணம்
தருமலிங்கம், சுரேந்தர் 9583
தவத்திரு தனிநாயக அடிகளார் நூற்றாண்டு விழாக் குழு 9810
தவமணிதாசன், வை.க. 9643
தவராஜா, சண். 9959
தனஞ்சயராசசிங்கம், ச. 10A19
தனபாலசிங்கம், இரத்தினா 9399
தனபாலசிங்கம், சந்திரா 9701
தனபாலன், பாலசுப்பிரமணியம் 9320, 9328
தனராஜ், தை. 9316
தனிநாயகம் அடிகள் 10A15
தனுராஜ், அ. 9577
தனேந்திரா. வி.பி. 9119
தாட்சாயணி 9038
திக்கனோவ், என்.ஏ. 9281
திக்குவல்லை ஹம்ஸா பார்க்க ஹம்ஸா, எஸ்.ஐ.எம்.
திட்டமிடற் பணியகம், யாழ்ப்பாணச் செயலகம் 9476
திமிலைக் கண்ணன் 9624
தியாகராசா, த. 9850-51, 9854
தியாகராஜ ஐயர், பூ. 9352
திருச்சந்திரன், செல்வி 9271-72, 10A23
திருச்செல்வம், என்.கே.எஸ். 9194
திருச்செல்வம், எஸ். 9024, 9025
திருஞானசம்பந்தப்பிள்ளை, ம.வே. 9777
திருநாவுக்கரசு, மு. 9300, 9953
திருநீலகண்டன், வே. 9222
திருவேணி சங்கமம் 9931
தில்லைநாதன், எஸ். 9361, 9373
தில்லைநாதன், சி. 9388
திலகநாதன், க. 9514
தீபநாதன், ப.விக்ரம் 9620
துரைசாமி மூப்பனார் 9205
துரைசிங்கம், சு. 9839, 9918
துரைசிங்கம், த. 9534-35, 9553, 9758, 9862
துரைசிங்கம், யசோதா 9482
துரைராசா, அருந்ததி 9484-85
துரைராஜா, எஸ். 9296
துரைராஜா, லோரன்ஸ் 9958
துவாரகன், பா. 9823
தெணியான் 9671
தெய்வநாயகம், எஸ். 9140-41
தென் புலோலியூர் பரா. ரதீஸ் பார்க்க ரதீஸ், தென் புலோலியூர் பரா.
தேவசகாயம்பிள்ளை, ஆசீர்வாதம் 9343
தேவதாசன் 9654
தேவதாசன், கபிரியல் ஞானப்பிரகாசம் 9340
தேவநேசன், சி. 9114
தேவராஜ், பி.பி. 9946
தேவானந்த், தே. 9522, 9694
நகுலன் பார்க்க தங்கரத்தினம், நா.க.
நடராசன், நவாலியூர் சோ. 9130, 9276, 9843, 9940
நடராசா, எப்.எக்ஸ்.சி. 10A11
நடராசா, தெல்லியூர் எஸ். 10A16
நடராசா, நவாலியூர் சோ. பார்க்க நடராசன், நவாலியூர் சோ
நடராசா, பிரான்சிஸ் சேவியர் செல்லையா பார்க்க நடராசா, எப்.எக்ஸ்.சி.
நடராசா, வே.க. 9935
நடராஜன், வ. 9740
நடராஜா, கே. 9768
நடராஜா, ஜமுனாராணி 9735
நடேசன், எஸ். 9291
நடேசன், நவாலியூர் 9262
நடேசன், நொயெல் 9716
நந்தகுமார், முருகேசு 9718
நந்தி 9694

நல்லதம்பி, மு. 9566
நல்லையா, கருப்பையா பார்க்க சாரல்நாடன்
நல்லையா, நவாலியூர் வை. 9209
நவநீதகிருஷ்ணன் தயாளினி 9102
நவமோகன், வே. பார்க்க யாதுமூரான்
நவரத்தினம், இரத்தினம் 9754
நவரத்ன, பீ. 9289
நவீனன் பார்க்க ஐங்கரன், வி.
நஹியா, ஏ.எம். 9908
நாகரட்ணம், தா. 9394
நாகரத்தினம், T. 9405
நாகராஜன், அநு.வை. 9391, 9540
நாகராஜன், இ. 9656
நாகலிங்கம், இரா. பார்க்க அன்புமணி
நாகித்த தேரோ, கதுறுகமுவே 9353
நாகேஸ்வரன், கனகசபாபதி 9222
நாகேஸ்வரன், த. 9552
நாதன், எஸ்.எஸ். பார்க்க சிவகாமிநாதன், சோணாசலம்பிள்ளை
நாவண்ணன் 9731
நாவுக்கரசன், சாந்தி 9142-43, 9163
நாவேந்தன் 9695, 9902
நாஜிம், M.M.M. 9293
நிக்கலஸ், வி.இ. 9835, 9943
நிக்சன், எட்வேட் பார்க்க ஈழபாரதி
நித்திலவர்ணன், ஆனந்தமயில் 9315
நிந்தவூர் ஷிப்லி 9610
நிமலன், அரியபுத்திரன் 9243
நிமலன், எஸ். 9404
நியாஸ், ஏ.சி.எம். 9424
நிலான் பார்க்க கென்றிசன், ச.எரிக்
நீலவண்ணன் பார்க்க குணராசா, க.
நுஃமான், எம்.ஏ. 9363
நுயென், துய் T.T. 9293
நெடுந்தீவு யோகேஸ் 9599
நெடுந்தீவு லக்ஸ்மன் 9570, 9623
நொக்ஸ், ரொபர்ட் 9931
நௌபல், முஹம்மதுத் தம்பி முஹம்மது 9992
நௌபீர், ஏ.எல். 9317
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா சமித்தி 9217
பகீரதன், மனோகரன் 9637
பசுபதி இராசதுரை குடும்பத்தினர் 9863
பஞ்சாட்சர சர்மா, ச. 9351
பஞ்சாட்சரம், அ. 9182
பஞ்சாட்சரம், ச.வே. 9200, 9329, 9652, 9681, 9711, 9741
பண்டார, நிரோஷ் 9301
பண்டித்தசேகர, ரஜித்த 9301
பத்தினியம்மா திலகநாயகம் போல் பார்க்க சிதம்பரபத்தினி
பத்மநாபன், ச. 9203, 6225, 9227
பத்மநாதன், சி. 9133, 9140-43, 9513, 9774, 9869, 9930-31, 9976, 10A05
பத்மநாதன், சுபாஷிணி 9192
பத்மநாதன், சோ. 9832
பத்மநாதன், பாலசுப்பிரமணியம் 9911, 9763
பத்மாவதி, ஆ. 9158
பரணீதரன், க. 9027, 9825
பரமசாமி, சோமசுந்தரம் 9150
பரமானந்தராஜா, கல்குடா க. 9661
பரமானந்தன், ம. 9409, 9415, 9418, 9426
பரமேஸ்வரன், மா.ந. 9329
பழநி, இளங்கம்பன் 9527
பளீல், ஏ.எல்.எம். 9007
பளீல், மௌலவி முஹம்மது 9235
பற்குணம், சி. 9625
பற்றிக், டேவிட் வி. 9037, 9124
பற்றிக்ஸ், வின்சன்ற் 9035, 9041, 9709
பன்.பாலா 9696
பன்னிருகைவடிவேலன், இரா. 9356
பஸ்ஸத், நினா 9826
பஷின், கம்லா 9260
பஹாசின், கம்லா 9261
பாக்கியம், பொன் 9611
பாக்கியராஜா, அனுராதா 9660
பாபு, கணபதிப்பிள்ளை பாலசிங்கம் 9307
பாலகணேசன், பாலசிங்கம் 9374, 9772
பாலகோபால், நவ. 9592
பாலச்சந்திரன், கே.எஸ். 9246

பாலசுந்தரம், இ. 9926
பாலசுந்தரம், விமலாம்பிகை 10A20
பாலசுப்பிரமணியம், கே. 9463
பாலமுனை பாறுக் 9658
பாலேந்திரன், பிரியா 9002
பாவலவன் பார்க்க சத்தியசீலன், பா.
பாறூக், அ.மு. 9831
பாறுக், பாலமுனை பார்க்க பாலமுனை பாறுக்
பாஸ்கரன், மு. 9886
பாஷையூர் தேவதாசன் பார்க்க தேவதாசன், கபிரியல் ஞானப்பிரகாசம்
பிரணவன், சுபாஷினி 9602
பிரதீப் குமார், யதுர்சன் 9546
பிரதீபகுமார், ரேணுகா 9919
பிரபாகரன், எஸ்.கே. 9504, 9508
பிரான்சிஸ், எஸ். 9438
பிரான்சீஸ், அருட்திரு. ச.யோ. 9112
பிரான்சீஸ், எம்.சி. 9432
பிரித்தானிய ஈழவர் இலக்கியச் சங்கம் 9824
பிரியாந்தி 9634
பிரேம்ராஜ், மைத்ரேயி சபாரட்ணம் 9591
பிள்ளை, எஸ்.வி.பி. 9295, 9444
பீட்டர், அம்புறோஸ் 9113
பீர்முகம்மது, ஏ. 9977
பீரிஸ், கே.என்.டீ. 9354
பீரிஸ், கே.பீ. 9354
புகழேந்திப் புலவர் 9765
புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் 9986
புதிய பூமி 9268
புரட்சி, யோ. 9562, 9575
புவிலக்சி, பெரிய நீலாவணை ம. 9590
புறோஹியர், டிலோரெய்ன் 9901
புஷ்பரட்ணம், பரமு 9256, 9359, 9987, 9994
புஷ்பராஜன், மு. 9811
பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் 9259
பெர்னாண்டோ, லக்ஷிரி 9966
பெர்னாண்டோ, ஜீ. அன்டன் 9304
பெரேரா, ஜெகன் 9962
பெனி, யே.ச 9039
பேக்மன், எஸ்.ஏ. 9941
பேணற்று, யோன் 9030
பேரானந்தன், சறோஜினி 9479
பேரின்பநாயகம், இ. 9886
பொன்சேகா, டில்ருக்ஷி 9262
பொன்னம்பலம், சு. 9723
பொன்னம்பலம், மு. 9244, 9261, 9819
பொன்னம்பலவாணர், தி. 9199
பொன்னையன், நீர்வை 9922
பொன்னையாபிள்ளை, ஏழாலை ஐ. 9468
மக்கள் விடுதலை முன்னணி 9934
மகாதேவன், ஆ. 9406, 9412
மகாலிங்கசிவம், பா. 9916
மகாலிங்கசிவம், பிரியா 9538
மகாலிங்கம், சி. 9245
மகேசன், கணபதி 9156
மகேசன், நா. 9336
மகேந்திரன், கோகிலா 9516
மகேந்திரா, முத்துக்குமாரு 9009
மகேஸ்வரலிங்கம், க. 9166
மகேஸ்வரன், கண. 9670
மகேஸ்வரன், வ. 9145
மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டத் தொடர்பகம் 9892
மணியன் 9997
மணிவாணன் பார்க்க ரட்ணசபாபதி வி.கே.
மத்தியு, எஸ்.ஏ.ஐ. 9117, 9129
மதிவதனன். தி. 9138
மதிவாணன், இரா. 10A17
மதுசூதனன், தெ. 9311
மதுபாஷினி பார்க்க ஆழியாள்
மயில்வாகனம், க. 9805
மயூரகிரி, நீர்வை தி. 9581
மயூரநாதன், த. 9685
மயூரன், து.சு. 9639
மலர் சின்னையா பார்க்க செம்பியின் செல்வி
மறுமலர்ச்சிக் கழகம் 9995
மறைமலை அடிகள் 9978
மன்சூர், எம்.ஏ.எம். 9238
மன்னார் அமுதன் 9557
மனோகரன், எம். 9080

மனோகரன், எஸ்.எஸ். 9050, 9052 , 9059
மனோகரன், பொ. 9409
மஷ்ஹூர், சிராஜ் 9792
மாணிக்கவாசக சுவாமிகள் 9215
மாணிக்கவாசகர், பொன்னையா 9475
மாவை வரோதயன் 9251
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 9305, 9956
மானா மக்கீன் 9858
மானிலா 9596, 9631
மிக்கோர்சிங்கம், நீ. 9350, 9659
மிஹ்ழார், எம்.எம். 9992
மீர்சா, ஹிதாயத்துல்லாஹ் 9734
மீனாட்சிசுந்தரம், பா. 9364
முகம்மது, எம்.பி.எச். 9048
முகுந்தன், ச. 9396
முத்துக்குமாரசுவாமி, வை. 9942
முத்துக்குமாரன், பொன். 9751
முத்துக்குமாரு மகேந்திரா 10A03
முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ. 9375
முத்துமீரான், எஸ். 9344
முத்துலிங்கம், அ. 9682
முத்தையா, நா. 9147, 9221, 9870, 9877
முரளிதரன், கார். 9034
முருகதாசன், கந்தையா 9804
முருகபூபதி, லெ. 9989
முருகவேள், பொன்னம்பலம் 9985, 9991
முருகேசபிள்ளை, புஷ்பாஞ்சலி 10A13
முருகேசு சுவாமிகள், ஆர்.கே. 9034
முருகையா, நா. 9151
முருங்கன் முத்தமிழ் கலாமன்றம் 9904
முஸ்தபா. ஏ.ஸீ.ஜரீனா 9738
முஸ்லிம் வாலிபர் இயக்கம் 9239
முஹம்மது, முக்தார் ஏ. 9230
முஹிதீன், எச்.எம்.பி. 9341
முஹியத்தீன், எம்.ஐ.எம். 9968
மூக்கையா, மா.செ. 9288, 9309
மூர்த்தி, வை.ஏ. 9630
மூளாய் மாதர் உற்பத்திக் குழு 9480
மெண்டிஸ், ஜீ.சீ. 9940-41
மெய்கண்டதேவ நாயனார் 9097
மைத்ரேயி சபாரட்ணம் பார்க்க பிரேம்ராஜ், மைத்ரேயி சபாரட்ணம்
மொரட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் 9026
மொழிவாணன் 9729
மொஹிதீன், எம்.என். 9131
மௌதூதி, மௌலானா செய்யித் அபுல் அஃலா 9234
மௌனகுரு, சி. 9518, 9521, 9539
மௌனகுரு, சித்திரலேகா 9265, 9339
மௌனாச்சிரம் 9103
யதீஸ்வரி, அருட்சகோதரி 9545
யமுனானந்தா, சி. 9450
யாக்கூத், எம்.எச்.எம். 9326, 9354
யாதுமூரான் 9609
யாழ். அஸீம் பார்க்க அஸீம், அப்துல் காதர்
யாழ். ஜெயம் பார்க்க ம.விக்டர்
யுகசீலன், வெ. 9083
யுகபாலசிங்கம், வே. 9012, 9053, 9056
யேசுதாசன், ச. 9031, 9517
யேசுதாசன், ம. 9349
யேசுராசா, அ. 9519
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை 9332
யோகநாதன், செ. 9556, 9677
யோகராசா, அனித்தா 9257
யோகராசா, செ. 9330, 9355, 9358, 9771, 9817, 9895, 9914, 9923
யோகராசா, நாகலிங்கம் 9503
யோகராசா, புஷ்பராணி 9334
யோகராஜா, எஸ்.ஜே. 9353
யோகராஜா, க. 9507
யோகராஜா, கே. 9494
யோகராஜா, நா. பார்க்க சுசி தமிழினி
யோகேஸ்வரன், க. பார்க்க நெடுந்தீவு யோகேஸ்
யோட்ஜ், அ.யோண் 9541
யோதிலிங்கம், சி.அ. 9302-03, 10A09
ரகுபதி, மதுபாஷினி பார்க்க ஆழியாள்
ரகுவரன், வீ.பீ. 9990
ரசீக், எம். 9841

ரட்ணசபாபதி வி.கே. 9739
ரட்ணேஸ்வரன், மானியூர் 9580
ரதன், எம்.எம். 9074
ரதீஸ், தென் புலோலியூர் பரா. 9598
ரவிராஜன், பீ. 9404
ரவிவர்மா, சூரன் ஏ. 9710
ரவீந்திரநாத், சி. 9425
ரவீந்திரன், ஆறுமுகம் 9325
ரவீந்திரன், தனேஸ்வரி 9491
ரவீந்திரன், சே. 9309
ரவீந்திரன், முருகேசு 9712
ரஜனி 9722
ரஹ்மான், எம்.ஏ. 9233
ராஜ்,ஜே.எஸ். 9571
ராஜேஸ்வரன், S.T.B. 9849
லிங்கேஸ் 9634
லெப்பை, அப்துல் காதர் 9229, 9796
லெபன், ஜே.எச்.ஜீ. 9841
லோகநாதன், கேதீஸ் 9956
லோகேந்திரலிங்கம், ஆர்.என். 9866
வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம் 9386, 9765
வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கமம் 9605
வடலி குழுவினர் 9692
வடிவேலு, ஆ. 9069
வயித்தியலிங்கம், ச. 9356, 9364
வயித்திலிங்கம், அ. 9226
வரதராசா, மனோன்மணி 9651
வரதர் பார்க்க வரதராஜன், தி.ச.
வரதராஜன், தி.ச. 9675, 9803
வவுனியா சுகந்தினி 9621
வள்ளியம்மை, சு. 9536
வாகரைவாணன் 9111 ,9125, 9561, 9585-86, 9787
வாகீசன், கோ. 9761
வாஞ்சிநாதன், மு.வே.யோ. 9626
வாட்லிங், ஈ.எப். 9829
வாமதேவன், கேதீஸ்வரி 9177
வாமதேவன், ச. 9721
வானகுரு, ஆர்.எஸ். 9487
வாஸ். K.V.S பார்க்க ரஜனி
விக்கிரமரட்ண, ஜயம்பதி 9960
விக்டர், ம. 9118
விக்டர், ஸ்டெலா 9266
விக்னேஸ்வரன், இ. 9329
விசயரத்தினம், கா. 9816
விசாகப் பெருமாளையர் 9378
விசாகரூபன், கிருஷ்ணபிள்ளை 9345, 9377
விசாலாட்சி மாதாஜி, ஸ்ரீ விசுவாம்பா 9202, 9210
வித்தியன், கருணாகரன் 9452
வித்தியன், சிவமாலா 9452
வித்தியாதரன், என். 9864
வித்தியானந்தன், சு. 9346, 10A06
விதானகே, துஷால் தம்மிக்க 9945
விநாசித்தம்பி, சீ. 9218
விநாயகமூர்த்தி, வெற்றிவேல் 9068, 9779
விமலதர்ம, சேரா 9247
வில்சன், ஏ.ஜே. 9276
விவேகானந்தன், திலகா 9267
விவேகானந்தன், வை. 9016
வின்சென்ட் பற்றிக்ஸ் பார்க்க பற்றிக்ஸ், வின்சன்ற்
விஜயகுமார், சுகுமாரன் 9973
விஜயசூரிய, எஸ். 9354
விஜயரத்தின, லசந்த 9967
விஜயன், கே. 9543
விஜயேந்திரன், சிலோன் பார்க்க சிலோன் விஜயேந்திரன்
விஜிதா, ஜோ.அல்பிரட் 10A07
விஜேவீர, ரோஹண 9934
விஷ்ணுவர்த்தினி, ப. 9699
வீரக்கோன், ஜீ. 9294
வீரகத்தி, க. 9375, 9756
வெங்கடேச ஐயர், இ.சி. 9109
வெலிகல, அசங்க 9296
வெள்ளைச்சாமி, க. பார்க்க குறிஞ்சிநாடன்
வெற்றிமகன் பார்க்க விநாயகமூர்த்தி, வெற்றிவேல்

வேதநாயகம், சுந்தரமதி 9187
வேதாசலம், சுவாமி பார்க்க மறைமலை அடிகள்
வேந்தனார், க. 9168-69, 9752, 9755
வேம்படி மகளிர் கல்லூரி 9331
வேல் அமுதன், எஸ். 9678
வேலணையூர் சுரேஷ் 9595
வேலாயுதபிள்ளை, எஸ். 9354
வேலாயுதபிள்ளை, செ. 9392
வேலுப்பிள்ளை, ஆ. 9155
வேலுப்பிள்ளை, சு. 9365, 9745, 10A12
வேலுப்பிள்ளை, வி. 9785
வைத்திலிங்கம், செ. 9951
வைத்திலிங்கம், து. 9672, 9703
றபீக், எம்.ஏ. 9801
றஜீபன், F. 9617, 9632
றாகல், சுதாகினி டெஸ்மன் 9548
றாஸீக், எஸ்.அப்துல் 9974
றெஸீன், என்.எம்.எம். 9299
ஜயவர்த்தன, குமாரி 9244, 9290
ஜவ்பர்கான், ரீ.எல். 9657
ஜனசங்சதய 9242
ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான தமிழ்பேசும் மக்களின் அரங்கு 9961
ஜஹனாறா, ஏ.எஸ். பார்க்க கெக்கிறாவ ஸஹானா
ஜீவராஜ், ஏ. 9403
ஜீவா, அந்தனி 9907, 10A18
ஜீவா, டொமினிக் 9690
ஜீவா நாவுக்கரசன் 9608
ஜுமா,ஜமால் 9826
ஜுனைதா ஷெரீப் 9650
ஜெகதீசன், எஸ். 9821
ஜெகந்நாதன், காவலூர் எஸ். 9728
ஜெகன், ஐ.ஞு. 9848
ஜெமீல், எஸ்.எச்.எம். 9898
ஜெயக்குமார், எஸ்.ரெஜினோல்ட் 9404
ஜெயசிங், தேவதாசன் 9554
ஜெயசீலன், ஜெ.இ. 9128
ஜெயதேவன், வ. 9356
ஜெயபாலன், வ.ஐ.ச. 9971
ஜெயராசா, சபா. 9312, 9318-19, 9322, 9324, 9669, 9857
ஜெயராசா, சபாரத்தினம் 9310
ஜெயராமன், தேவராஜன் 9492
ஜெயராஜா, அனிஸ்டஸ் 9414, 9882, 9979
ஜேசுதாசன், மனுவல் 9866
ஜோசப், P.R.A. 9410
ஜோதீஸ்வரன், பரஞ்சோதி 9090-91
ஜோர்ஜ், ஏ.சீ. 9006
ஜோன், வி.முத்தையா 9467
ஸ்ரீகந்தவேள், கந்தையா 9520
ஸ்ரீகாந்தலட்சுமி, அருளானந்தம் 9017
ஸ்ரீதயாளன், எம்.எஸ். 9747
ஸ்ரீதரன், அன்புச்செல்வி 9435
ஸ்ரீதரன், இராசையா 9390
ஸ்ரீதரன், க. 9470
ஸ்ரீ தாசபிரம்மம், ஸ்ரீமத் பாரத்துவாச பரமஹம்ச 9227
ஸ்ரீபிரசாந்தன் 9133, 9137, 9186, 9366, 9774, 9809, 10A14
ஸ்ரீலங்கா புத்தகசாலை 9067
ஸ்ரீஸ்கந்தராஜா, வசந்தி தேவராஜா 9448, 9456
ஸ்ரீஸ்கந்தன், ப. 9905
ஸ்ரீபன், அ. 9119, 9122
ஸப்வான், திக்குவல்லை 9236
ஸபீர், அல்ஹாபிஸ் எம்.யூ. எம். பார்க்க ஹாபிஸ், ஸபீர்
ஸமது, அ.ஸ.அப்துஸ் பார்க்க அப்துஸ்ஸமது, அ.ஸ.
ஸலபி, எஸ்.எச்.எம்.இஸ்மாயில் 9240
ஸெய்யித், ஸர்மிளா 9719
ஷிப்லி, நிந்தவூர் பார்க்க நிந்தவூர் ஷிப்லி
ஷெரீப், கே.எம்.எம். பார்க்க ஜுனைதா ஷெரீப்.
ஷெல்லிதாசன் 9616
ஹம்ஸா, எஸ்.ஐ.எம். 9856
ஹரன், தேவகுமாரி 9142-43, 9163, 9809
ஹாபிஸ், ஸபீர் 9667
ஹுஸ்னா, M.S.N. 9293

நூல்தேட்டம்

(தொகுதி 11)

நூல்தேட்டத்தின் முதல் பத்துத் தொகுதிகளிலும் இடம்பெறத்தவறிய நூல்களின் விபரங்களை அடுத்து வெளிவரவுள்ள பதினொராவது தொகுதியில் சேர்த்துக்கொள்ள விரும்பும் நூலாசிரியர்கள், பதிப்பாசிரியர்கள், தொகுப்பாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்கள் தங்கள் நூலின் பிரதியொன்றை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:

N.Selvarajah
48 Hallwicks Road, Luton
Bedfordshire, LU2 9BH
United Kingdom
Telephone: (0044) 1582 703 786
E-mail: selvan@ntlworld.com

நூலின் பிரதியை லண்டனுக்கு நேரில் அனுப்பி வைக்க இயலாதவிடத்து கொழும்பிலுள்ள கீழ்க்கண்ட முகவரியிலும் நூல்களை ஒப்படைக்கலாம். காலக்கிரமத்தில் அவை லண்டனுக்கு விமானத்தபால் மூலம் எடுப்பிக்கப்படும்.

V.T. Rajaram
C/1/6, Veluvanarama Govt. Flats
Off Hampden Lane
Wellawatte, Colombo 6

நூல்தேட்டம் தொகுப்புகளின் பிரதான விநியோகஸ்தர்கள்

Mr. P.M.Puniameen
No. 14, Udatalawinna Madige
Udatalavinna 20802
Telephone: 0094 812 493 892
pmpuniyameen@yahoo.com

குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை
கொழும்பு - 6
Telephone: 011 2364550
Email: kumbhlk@gmail.com